ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்
அருளிச்செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

**(ஸ்வாமி மணவாள மாமுனிகள் வ்யாக்யான மூலம், எளிய நடை)**



(ஆசார்ய ஹ்ருதயத்தின் மூலப்பொருளாம் நம்மாழ்வார்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)
www.namperumal.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

அருளிச்செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

(முதல் பகுதி : சூர்ணைகள் 1 – 86)

**(ஸ்வாமி மணவாள மாமுனிகள் வ்யாக்யான மூலம், எளிய நடை)**



(ஆசார்ய ஹ்ருதயத்தின் மூலப்பொருளாம் நம்மாழ்வார்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

## பொதுத்தனியன்கள்

1. ஸ்ரீசைலேச தயா பாத்ரம் தீபக்தியாதி குணார்ணவம்
   யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாத்ரம் முநிம்

**பொருள் –** (ஸ்ரீரங்கநாதன் அருளிச்செய்தது) திருமலையாழ்வாரின் கடாக்ஷத்திற்கு இலக்கானவரும், ஞானம் முதலான எண்ணற்ற குணங்களின் கடலாக விளங்குபவரும், உடையவரிடம் மிகுந்த அன்பு கொண்டவரும், அழகியமணவாளன் என்ற திருநாமம் கொண்டவரும் ஆகிய ஸ்வாமி மணவாளமாமுனிகளை நான் வணங்குகிறேன்.

2. லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
   அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

**பொருள் –** (ஸ்வாமி கூரத்தாழ்வான் அருளிச்செய்தது) மஹாலக்ஷ்மியின் நாயகனான ஸர்வேச்வரன் முதலாகவும்; நாதமுனிகள், ஆளவந்தார் ஆகியோர் நடுவாகவும்; என்னுடைய ஆசார்யன் இறுதியாகவும் உள்ள ஆசார்ய பரம்பரையை நான் வணங்குகிறேன்.

3. யோ நித்யம் அச்யுத பதாம்புஜயுக்ம ருக்ம
   வ்யாமோஹத: தத் இதராணி த்ருணாய மேநே
   அஸ்மத் குரோ: பகவத: தயைக சிந்தோ:
   ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

**பொருள் –** (ஸ்வாமி கூரத்தாழ்வான் அருளிச்செய்தது) எந்த எம்பெருமானார், எப்போதும் அழிவற்றவனாகிய எம்பெருமானின் இரண்டு திருவடித் தாமரைகள் என்னும் செல்வத்தின் மீது கொண்ட ஆசை காரணமாக, அவன் அல்லாத மற்ற விஷயங்கள் அனைத்தையும் புல் போன்று எண்ணினாரோ, அப்படிப்பட்ட எனது ஆசார்யரும், பல உயர்ந்த குணங்கள் உள்ளவரும், கருணைக் கடலாக உள்ளவரும் ஆகிய அந்த உடையவரின் திருவடிகளை நான் உய்யும் உபாயமாகப் பற்றுகிறேன்.

4. மாதா பிதா யுவதய: தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய ந: குலபதே: வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

**பொருள் –** (ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தது) தாய், தந்தை, இளவயதுப் பெண்கள், புத்திரர்கள், செல்வம் ஆகிய இவை அனைத்தும், முறையாக எந்தத் திருவடிகளாகவே உள்ளனவோ - எங்களது குலத்தின் தலைவராக உள்ளவரும், முதன்மையானவரும், வகுள மலர்களால் அலங்கரிக்கப்பட்டவரும், பக்தி என்ற செல்வம் நிறைந்தவரும் ஆகிய நம்மாழ்வாரின் அந்தத் திருவடிகளை எனது தலையால் நான் வணங்குகிறேன்.

5. பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

**பொருள் -** (ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தது) பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், யதிகளின் தலைவரான இராமாநுசர், பக்தி என்ற செல்வம் கொண்ட நம்மாழ்வார் ஆகியோரை நான் எப்போதும் வணங்குபவன் ஆவேனாக.

**விளக்கம் –** இங்கு ஆழ்வார்களின் வரிசையில் உடையவரைக் கூறிய பின்னர், நம்மாழ்வாரைக் கூறியது காண்க. இது ஏன்? ஆழ்வார்களுக்கு சரீரமாக நம்மாழ்வாரையும், அவரது ஒவ்வொரு உறுப்பாக மற்ற ஆழ்வார்களையும் கூறுவது மரபு. இந்த வரிசையில் பூதத்தாழ்வார் = நம்மாழ்வாரின் திருமுடி, பொய்கையாழ்வார் = ஒரு கண், பேயாழ்வார் = மற்றொரு கண், பெரியாழ்வார் = திருமுகம், திருமழிசையாழ்வார் = திருக்கழுத்து, குலசேகராழ்வார் = ஒரு திருக்கரம், திருப்பாணாழ்வார் = மற்றொரு திருக்கரம், தொண்டரடிப்பொடியாழ்வார் = திருமார்பு, திருமங்கையாழ்வார் = திருஉந்தி, உடையவர் = திருவடிகள் என்று கொள்வர்.


Email:sridharan_book@yahoo.co.in

## ஆசார்யஹ்ருதயத் தனியன்கள்

1. ஆசார்ய ஸ்வாந்த வக்தாரம் அபிராமவராபிதம்
ஶ்ரீக்ருஷ்ண தநயம் வந்தே ஜகத்குருவராநுஜம்
த்ராவிடாநாம்நாய ஹ்ருதரம் குருபர்வ க்ரமாகதம்
ரம்ய ஜாமாத்ரு தேவேந தர்சிதம் க்ருஷ்ணஸூநுநா

**பொருள்** - ஆசார்ய ஹ்ருதயம் என்னும் க்ரந்தத்தை அருளிச்செய்தவரும், ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரரும், ஸ்வாமி பிள்ளை லோகாசார்யரின் திருத்தம்பியாரும் ஆகிய ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரை நான் வணங்குகிறேன். ஆசார்ய பரம்பரையில் தொடர்ந்து வந்த தமிழ்வேதமாகிய திருவாய்மொழியின் கருத்தானது, ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரராகிய அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரால் வெளிப்பட்டது.

2. பணவாள் அரவணைப்பள்ளி பயில்பவர்க் கெவ்வுயிரும்
குணபோகம் என்று குருகைக்கதிபன் உரைத்த துய்ய
உணர்பாவி நுட்பொருள் ஒன்று மறியா வுலகறிய
மணவாளன் மாறன் மனமுரைத்தான் வண்முடும்பை வந்தே

**பொருள்** - படங்களுடன் கூடியுள்ள ஆதிசேஷன் மீது சயனித்துள்ள ஶ்ரீரங்கநாதனுக்கு அனைத்து உயிர்களும் அடிமை என்று நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியின் ஆழ்பொருளாகிய நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தை (ஆசார்ய ஹ்ருதயம்), ஏதும் அறியாமல் உள்ள இந்த உலகத்திற்காக முடும்பை என்ற குலத்தில் அவதரித்த அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்தார் .

3. மாதவத்தோன் மாறன் மனம் கூறும் மணவாளன்
தோதவத்தித் தூய்மறையோரான பெற்றார் நீதியினால்
ஆங்கவர் தாள் சேர் பெற்றார் ஆய் மணவாளமுநி
பூங்கமலத் தாள்கள் நெஞ்சே போற்று

**பொருள்** - நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தை வெளிப்படுத்தும்விதமாக அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், இந்த நூலை “பெற்றார்” என்னும் பெயர் கொண்ட ஒரு சான்றோருக்கு அளித்தார். அவர் இதனைத் திருநாராயணபுரத்து ஆய்க்கு அளித்தார். அவர் இதனை ஸ்வாமி மணவாளமாமுனிகளுக்கு அளித்தார். அவர்களுடைய திருவடித் தாமரைகளை எனது மனமாகிய நீ போற்றுவாயாக.

## ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யான அவதாரிகை

**அவதாரிகை** – ச்ரிய: பதியாய் ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரன், நிரதிசயாநந்த மயமான ஸ்ரீவைகுண்டத்திலே, நித்ய நிர்மலஜ்ஞாநாதிகுணாகரராய் ஸ்வச்சந்தாநுவர்த்தி ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதரான நித்யஸூரிகளாலே அநவரத பரிசர்யமாண சரண நளிநனாய்க் கொண்டு எழுந்தருளியிராநிற்க, லீலாவிபூதியிலுள்ளார் அவர்களோபாதி தன்னை யநுபவிக்க ப்ராப்தி யுண்டாயிருக்க இழந்து கிடக்கிறபடியைக் கண்டு அதிவ்யாகுலனாய், இவர்களை யுஜ்ஜீவிப்பிக்கையிலுண்டான நசையாலே, “அசித விசேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரைர்க் கடயிதும் தயமாநமநா:” என்கிறபடியே, கரணகளேபர விதுரராய் அசிதவிசேஷிதராய் அதஏவ போகமோக்ஷ சூந்யராய்க் கிடக்கிற தசையிலே தயமாந மநாவாய்க் கொண்டு, ஸ்வசரணகமல ஸமாச்ரயணோப கரணமான கரணகளேபரங்களைக் கொடுத்து ஜ்ஞான விகாஸத்தையும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்தியையு முண்டாக்கி இந்த ஜ்ஞாநகார்யமான த்யாஜ்யோபாதேய விவேகபரிகரமாக “மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி” என்கிறபடியே, வேத ப்ரதாநத்தைப் பண்ணி,

**விளக்கம்** - பெரியபிராட்டியாரின் நாயகனும், அனைத்திற்கும் எஜமானனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணன் எல்லையற்ற ஆனந்தமயமாக உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், எப்போதும் உள்ளதாகவும் தோஷங்கள் அற்றதாகவும் உள்ள ஞானம் போன்ற பல குணங்களைக் கொண்டவராகவும், ஸர்வேச்வரனாகிய தன்னைக் குறித்த எண்ணத்தை மட்டுமே பின்பற்றிச் செல்லும் ஸ்வரூபம் – இருப்பு – செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டவராகவும் உள்ள நித்யஸூரிகளால் எப்போதும் கைங்கர்யம் செய்யப்படும் திருவடித்தாமரைகளை உடையவனாக எழுந்தருளியுள்ளான். இந்தப் பூமியில் உள்ள


**Email:**sridharan_book@yahoo.co.in

மற்றவர்களும் அந்த நித்யஸூரிகள் போன்று தன்னை அனுபவிக்கும்படியான ஸம்பந்தம் உள்ளவர்கள் என்றாலும், அவர்கள் அதனை அடையப் பெறாமல் இழந்து கிடப்பதைக் கண்டு மிகுந்த வருத்தம் கொண்டான். ஆகவே இவர்களை இந்தத் துக்கத்தில் இருந்து கரையேற்றவேண்டும் என்று ஆசை கொண்டான். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தரபாகம் - 41) – அசித விசேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரைர்க் கடயிதும் தயமாநமநா: – ப்ரளயத்தின் முடிவில் அறிவற்ற அசேதன வஸ்துக்களுக்குச் சமமாகக் கிடக்கும் இந்த ஆத்மாக்களை அவற்றின் இந்த்ரியங்கள் மற்றும் சரீரங்கள் ஆகியவற்றுடன் சேர்க்கவேண்டும் என்று இரக்கம் நிறைந்த திருவுள்ளத்தனாக - என்று கூறுவதற்கு ஏற்ப, இந்த்ரிய சரீரங்கள் அற்றவர்களாக, அறிவற்ற அசேதனம் போன்றவர்களாக, அதன் விளைவாக இன்பங்களையும் மோக்ஷத்தையும் அனுபவிக்க இயலாதவர்களாக இந்த ஆத்மாக்கள் கிடக்கின்றன. அவற்றை நோக்கி இரக்கம் நிறைந்த மனத்துடன் துக்கம் கொள்கிறான். ஆகவே இந்த ஆத்மாக்கள் தனது திருவடித் தாமரைகளைப் பற்றுவதற்கு ஏதுவாக உள்ள இந்த்ரியங்களுடன் சேர்ந்த சரீரங்களை அளிக்கிறான். பின்னர் ஞானத்தை மலரும்படிச்செய்கிறான். செயல்புரிதல், செய்யாமல் இருத்தல் என்பதை ஏற்படுத்தி, ஞானத்தின் காரணமாக “இதனைச் செய்யவேண்டும், இதனைச் செய்யக்கூடாது” என்று பிரித்து அறியும் சக்தியை அளிக்கிறான். தொடர்ந்து ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தரபாகம்) – மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி – பரமகருணை உள்ள ஸர்வேச்வரன் விளக்கு போன்றுள்ள ப்ரமாணமான சாஸ்த்ரங்களை அளித்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப வேத சாஸ்த்ரத்தை அளித்தான்.

**அவதாரிகை** - அநந்தரம் மந்வாதிகளுக்கந்தர்யாமியாய் நின்று, சேதநருடைய விசிஷ்ட வேஷவிஷயமான சாஸ்த்ரத்தை வெளியிட்டருளி, அந்த சாஸ்த்ராப்யாஸம் அநேக யோக்யதாஸாபேக்ஷமாய், சிரகால ஸாத்யமுமாயிருக்கையாலே துஷ்கரமா யிருக்கிற படியைத் திருவுள்ளம் பற்றி தாத்ருசயோக்யதா நிரபேக்ஷத்வதிகளாலே ஸுகரமுமாய் சேதந நிஷ்க்ருஷ்ட வேஷ விஷயமுமான திருவஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யையை ஸ்வயமேவ வெளிப்படுத்தினவளவிலும் கார்யகரமாகாமையாலே, ஓலைப்புறத்திற் செல்லாத ராஜ்யத்தை எடுத்துவிட்டுச் செலுத்திக்கொள்ளும் ராஜாக்களைப்போலே நாமே சென்று திருத்தக் கடவோமென்று ராமக்ருஷ்ணாத்யவதாரமுகேந இவர்களிருக்கிற விடத்திலே தான் வந்து திருத்தப்பார்த்தவிடத்திலும் ஒருவரும் திருந்தக்காணாமையாலே விஜாதீயரான நம்மாலொருபடியாலும் இவர்களைத் திருத்தப் போகாதாயிருந்தது; இனி

இணக்குப் பார்வையிட்டு ம்ருகம் பிடிப்பாரைப்போலே ஸஜாதியரைக் கொண்டே காரியம் கொள்ளுவோமென்று அறுதியிட்டு அதுக்கு, ஆமுதல்வரையுண்டாக்குகைக்காக ஸர்வபூத ஸுஹ்ருத்தான தன்னுடைய நிர்ஹேதுக ப்ரஸாதத்தாலே எங்கும் பார்த்து இலக்குக் காணாமல் வாராநிற்க, அந்தப் பார்வை தனக்குப் பள்ளமடையான தென்திசையிலே யானவளவிலே, "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" என்கிறபடியே ஜந்ம பரம்பரைகளிலே தோள் மாறி நித்யஸம்ஸாரியாய்ப் போருகிற விவர்மேலேபட, அந்த நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷ லப்த திவ்ய ஜ்ஞாந பக்திகரான வாழ்வார், தத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை விசத விசததர விசததமமாக அநுபவித்து அவ்வநுபவ பரீவாஹ ரூபேண பேசுகிற பாசுரமானது சோகவேக ஜநிதமான மாநிஷாதேத்யாதி ச்லோகம் ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே லக்ஷணோபேதமானாப்போலே பகவத்ப்ரஸாதமடியாக ஸர்வ லக்ஷணோ பேதமான ப்ரபந்தமாய்த் தலைக்கட்டிற்று.

**விளக்கம்** - அதன் பின்னர் மநு முதலானவர்களுக்கு அந்தர்யாமியாக நின்று சேதனர்களுடைய சரீரத்துடன் சேர்ந்த ஆத்மாவைக் குறித்த சாஸ்த்ரத்தை வெளியிட்டான். ஆனால் அந்தச் சாஸ்த்ரங்களைக் கற்பதற்குப் பலவிதமான தகுதிகள் தேவை என்பதாலும், அவற்றைக் கற்று அறிவதற்கு நீண்ட நாள்கள் அவசியம் என்பதாலும், அவற்றைக் கற்பது மிகவும் கடினம் என்று திருவுள்ளம் கொண்டான். அதனால் கற்பதற்கு மிகவும் எளிதாகவும், கற்பதற்குத் தகுந்த தகுதி ஏதும் அவசியம் இல்லாமல் உள்ளதாகவும், ஆத்மவிஷயத்தைப் பற்றி மட்டுமே உள்ளதாகவே இருக்கின்ற மந்த்ரமாகிய (அஷ்டாக்ஷரம்) ப்ரஹ்மவித்தையைத் தானே வெளிப்படுத்தினான். இவ்விதம் அஷ்டாக்ஷர மந்த்ரத்தை வெளியிட்டபோதிலும் அது பயன்படாமல் போவதைக் கண்டான். கட்டளைகள் பின்பற்றப்படாமல் உள்ள நாட்டினை தாங்களே நேரில் சென்று திருத்தும் அரசர்கள் போன்று, "நாமே அவர்களுடைய இருப்பிடத்தற்குச் சென்று அவர்களை திருத்திக் கொள்வோம்", என்று திருவுள்ளம் கொண்டவனாக இராமன், க்ருஷ்ணன் முதலான அவதாரங்களை எடுத்து, இவர்கள் உள்ள இடத்திற்கு தானே வந்து திருத்த முயன்றான். அப்போதும் இவர்கள் திருந்தவில்லை. அதனைக் கண்ட ஸர்வேச்வரன், "இவர்களில் ஒருவனாக நாம் இல்லாதவரை இவர்களைத் திருத்த இயலாது. ஆகவே பெண் யானையைக் கொண்டு ஆண் யானையைப் பிடிப்பது போன்று, இவர்களுடைய இனத்தில் உள்ளவர்கள் மூலமே இவர்களைத் திருத்துவோம்", என்று திருவுள்ளம் கொண்டான். அதற்காக "ஆமுதல்வன்" என்று கூறும்படியாக உள்ளவரை

உண்டாக்கும் பொருட்டு, அனைத்து உயிர்களின் நன்மையில் மட்டுமே நோக்கமுள்ள தனது கருணையை எங்கும் படரவிட்டு ஆராய்ந்தபோதிலும் அவனுக்கு ஏற்றபடி யாரும் கிட்டவில்லை. அப்போது ஸர்வேச்வரனுடைய பார்வை தெற்குத்திசையில் சென்றது. அந்தப் பார்வையானது திருவாய்மொழி (2-6-8) – மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து - என்பதற்கு ஏற்ப பல பிறவிகள் இந்த ஸம்ஸாரத்தில் மாறிமாறி உழன்று நித்யஸம்ஸாரியாகக் கிடக்கும் ஸ்வாமி நம்மாழ்வார் மீது பதிந்தது. எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்பட்டதான ஸர்வேச்வரனுடைய அந்தக் கடாக்ஷத்தினால் திவ்யமான ஞானத்தையும் பக்தியையும் ஆழ்வார் அடைந்தார். அப்படிப்பட்ட நிலையை அடைந்த ஆழ்வார் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், ஐச்வர்யங்கள் என்றுள்ள பலவற்றையும் தெளிவாகவும், விரிவாகவும் அனுபவித்தார். அத்தகைய அனுபவங்களை ஆழ்வாரால் தனக்குள்ளே அடங்கி வைக்க இயலாத காரணத்தால், அவை பொங்கிப் பாய்ந்து பாசுரங்களாக வெளிப்பட்டன. அந்தப் பாசுரங்கள், இராமாயணம் பாலகாண்டம் (2-15) – மாநிஷாத் - வேடுவனே! எந்த ஒரு காரணத்தால் நீ சேர்ந்திருந்த அன்றில் பறவைகளில் ஒரு பறவையைக் கொன்றாயோ அதே காரணத்தால் உனது ஆயுள் காலத்தில் அப்படிப்பட்ட சேர்த்திருத்தலை அடையமாட்டாய் – என்று தொடங்குவதான நான்முகன் அருளால் அனைத்து இலக்கணங்களும் ஒருங்கே அமைந்த இராமாயணம் போன்று, ஸர்வேச்வரனுடைய திருவருள் காரணமாக அனைத்து இலக்கணங்களும் நேர்த்தியாக அமையப்பெற்று விளங்கின.

**அவதாரிகை** - இதுதானும், த்ராவிடவேததயா விஸ்தீர்ணமாய் அநேகார்த்த ப்ரதிபாதக மாயிருக்கையாலே, இதில் தாத்பர்யார்த்தம் ஸர்வர்க்கும் ப்ரதிபத்தி விஷயமாகை அரிதென்று பார்த்து, இதிலர்த்த விசேஷங்களையும், இவற்றில் ஆழ்வார் திருவுள்ளக் கருத்தின் ப்ரகாரத்தையும் இவ்வாசார்ய ருசிபரிக்ருஹீதமான அர்த்தமே யெல்லார்க்கும் தஞ்சமென்னு மத்தையும், இவர் தம்முடைய பரமக்ருபையினாலே ப்ரகாசிப்பியா நின்று கொண்டு ஆசார்ய பரம்பரா ப்ராப்தமான இவ்வர்த்தங்கள் எல்லார்க்கும் ப்ரதிபத்தியோக்யமாம்படி அநதிஸங்ரஹாநதி விஸ்தரமாக இவ்வாசார்யஹ்ருதய ப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார். "ஆத்யஸ்ய ந: குலபதே:" என்கிறபடியே வைதிக ஸந்தாநத்துக்கு ப்ரதமாசார்யரான ஆழ்வாரருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துக்களை சொல்லுகையாலேயிறே இப்ப்ரபந்தத்துக்கு ஆசார்யஹ்ருதயமென்று நிரூபகமாய்த்து. இப்ப்ரபந்தத்தில் இவரருளிச் செய்கிற


**Email:**sridharan_book@yahoo.co.in

வாக்யங்களெல்லாம் அருளிச்செயல் சந்தைகளைச் சேர்த்தருளிச் செய்கிறது. மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் பேசின திவ்யஸூக்திகளாகையாலே ஆப்ததமமுமாய் அத்யந்த போக்யமுமா யிருக்கிறவிதுவே தமக்கு அநவரதாபிமதமாகையாலும், முகமறிந்தவன் கோத்தமுத்து பெருவிலையனாமாப்போலே சந்தைகளைத் தாம் சேர்த்த சாதுரியாலே அருளிச்செயலில் ரஸஜ்ஞர்க்கு இதில் அர்த்தத்திலுங் காட்டில் சப்தந்தானே மிகவு மினிதாயிருக்குமென்னு மபிப்ராயத்தாலும். ஆகையாலிப்ப்ரபந்தம் சப்தார்த்தங்க ளிரண்டின் ரஸத்தாலும் விசேஷஜ்ஞ ஜந மநோஹரமாயிருக்கும்.

**விளக்கம்** - இத்தகைய ஆழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியானது தமிழ்வேதம் என்பதால் மிகவும் விரிவாகப் பல பொருள்களை உள்ளடக்கி உரைப்பதாக இருக்கிறது. ஆகவே இதன் ஆழ்பொருள் என்பது அனைவருடைய அறிவுக்கும் எட்டுவது அரிது என்று அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவுள்ளம் பற்றினார். ஆகவே இந்த தமிழ்வேதத்தில் கூறப்படும் அனைத்து ஆழ்பொருள்களையும், அவற்றை எவ்விதம் சிந்தித்து ஆழ்வார் அருளிச்செய்தார் என்பதையும், நம்மாழ்வாருக்கு விருப்பமானவை மட்டுமே அனைவருக்கும் புகலிடம் அளிக்கும் ஆழ்கருத்துக்கள் என்பதையும் தனது உயர்ந்த கருணை காரணமாக அனைவருக்கும் விளக்கவேண்டும் என்று எண்ணினார். அதனால் ஆசார்யபரம்பரை என்னும் ஸ்ரீமந்நாராயணன் தொடக்கமாக வந்துள்ள இந்தப் பரம்பரையில் தொடர்ந்து வந்தபடி உள்ளதான இந்த ஆழ்பொருள்கள் அனைத்தையும் அனைவரும் அறிந்து கொள்வதற்கு ஏற்றபடி, மிகவும் சுருக்காமலும் மிகவும் விரிவுபடுத்தாமலும் இந்த “ஆசார்ய ஹ்ருதயம்” என்ற நூல் மூலம் அருளிச்செய்தார். ஸ்வாமி ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் (5) – ஆத்யஸ்ய ந: குலபதே: - நமது முன்னோராகிய குலத்தின் நாதனாகிய நம்மாழ்வாருடைய – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள வைதிக குலத்தின் முதன்மை ஆசார்யராகிய ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களில், அவருடைய திருவுள்ளத்தில் மலர்ந்த ஆழ்பொருள்களை கூறுவதால் இந்த க்ரந்தம் “ஆசார்ய ஹ்ருதயம்” என்று பெயர் பெற்றது. மயர்வற மதிநலம் அருளிப்பெற்றவர்கள் உரைத்தவை என்ற காரணத்தினால் மிகவும் நம்பத் தகுந்தவையாகவும், மிகவும் இனிமையாகவும் உள்ள திவ்ய ப்ரபந்தங்கள் தம்மால் எப்போதும் விரும்பப்படுவதாக உள்ளதாலும், முத்துக்களின் தன்மைகளை நன்கு அறிந்தவன் கோர்த்த முத்துமாலை மிகுந்த விலைக்கு விற்பனை ஆவது போன்று, சொற்களை தான் ஒன்றாக இணைத்த சாதுர்யத்தால், அருளிச்செயல்களை

ரசிப்பவர்களுக்கு அதன் பொருளைக் காட்டிலும் சொற்களே மிகவும் இனிமையாக இருக்கும் என்று எண்ணியதாலும் இந்த ப்ரபந்தத்தில் இவர் ஆழ்வார் அருளிச்செயல்களில் உள்ள சொற்களைக் கொண்டே தான் அருளிச்செய்த சூர்ணைகளை அமைத்துள்ளார். ஆகவே இந்த நூல், சொற்கள் மற்றும் சொற்களின் பொருள் ஆகிய இரண்டுவிதமான சுவைகளாலும் அறிஞர்களின் மனதிற்கு விரும்பத்தக்க மகிழ்வை அளிப்பதாக இருக்கும்.

1. காருணிகனான ஸர்வேச்வரன் அறிவிலாமனிசர் உணர்வென்னும் சுடர் விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தா வேதவிளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினாலருள் செய்தான்.

**அவதாரிகை** - இதில் முதல் சூர்ணையாலே “ஹர்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீசோ மாநம் ப்ரதீப மிவ காருணிகோ ததாதி” என்கிறபடியே, ஆகஸ்மிக க்ருபாவான ஸர்வேச்வரன் அஜ்ஞரான ஸம்ஸாரி சேதநர்க்கு ஸதஸத் விவேக பரிகரமாக சாஸ்த்ர ப்ரதாநத்தைப் பண்ணி யருளினபடியை அருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தரபாகம்-1) – ஹர்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீசோ மாநம் ப்ரதீப மிவ காருணிகோ ததாதி - கருணைக்கடலாகவும், மூன்று உலகங்களுக்கும் நாயகனாயும் உள்ள ஸர்வேச்வரன் அறியாமை என்ற இருளை நீக்குவதற்காகவும், நன்மை தீமைகளைப் பிரித்து அறியும் விவேகம் ஏற்படுவதற்காகவும் விளக்கு போன்ற ப்ரமாணங்களாகிய சாஸ்த்ரங்களை உண்டாக்கினான் - என்று கூறுவதற்கு ஏற்ப, எந்தவிதமான காரணமும் இன்றி கருணை காண்பிக்கும் ஸர்வேச்வரன், அறியாமையில் மூழ்கியபடி உள்ள ஸம்ஸாரத்தில் உழலும் மக்களுக்கு, நன்மை – தீமை என்பதைப் பகுத்தறியும் அறிவை அளிப்பதற்கு ஏற்ற கருவியாக உள்ள சாஸ்த்ரங்களை அளித்ததை முதல் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (காருணிகனான ஸர்வேச்வரன்) க்ருபா விசிஷ்ட ஸ்வதந்த்ரமென்றபடி. க்ருபாவானானாலும் ஸ்வதந்த்ரனன்றாகில் தான் நினைத்தபடி கார்யம் செய்யப்போகாது; கேவல ஸ்வதந்த்ரனானாலும் ஸம்ஸார மோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவான ஸ்வாதந்த்ர்யம் சேதநோஜ்ஜீவநார்த்தமான க்ருஷிக்கு உறுப்பாகமாட்டாது; ஆனபின்பு

க்ருபாவிசிஷ்டமான ஸ்வாதந்த்ர்யமேயிறே ஸம்ஸாரி சேதநோஜ்ஜீவந விஷயமாக அவன் பண்ணும் க்ருஷிக்கு ஹேதுவாவது; அதவா, ஸர்வேச்வரனென்று ஈசேசிதவ்ய ஸம்பந்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம்; “க்ருபாயோகாச்ச சாச்வதாத்” என்ற வநந்தரம், “ஈசேசிதவ்ய ஸம்பந்தாத் அநிதம் ப்ரதமாதபி” என்கையாலே க்ருபாயோகமும் ஸம்பந்தமும் இரண்டும் ஸம்ஸாரி சேதந ஸம்ரக்ஷணார்த்த ப்ரவ்ருத்தி ஹேதுவிறே. க்ருபாயோகத்துக்கு மேலே ஸம்பந்தம் உத்தமாகையாலே ஸம்பந்த ப்ராதாந்யம் சொல்லிற்றாகிறது. இத்தால், இவை நம்முடையவையன்றோ வென்கிற அபிமாநத்தோடே பரது:க்கா ஸஹிஷ்ணுத்வ ரூபையான க்ருபையும் கூடுகையாலே உத்தரோத்தரம் சேதநோஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணிப் போருமவனென்றதாய்த்து.

**விளக்கம்** – (காருணிகனான ஸர்வேச்வரன்) - கருணை நிறைந்த ஸர்வேச்வரன், கருணையைக் கொண்டு தன்னை அடையாளம் காண்பிக்கலாம்படி உள்ளவன். யாருக்கும் கட்டுப்படாத சுதந்திரமானவன். மிகுந்த கருணை உள்ள ஒருவன் சுதந்திரம் இல்லையென்றால் தான் விரும்பும்படி செயலாற்ற இயலாது; கருணை இல்லாமல் வெறும் சுதந்திரம் மட்டுமே இருந்தால், ஸம்ஸாரத்தில் ஆழ்த்துதல் மற்றும் மோக்ஷம் அளித்தல் ஆகிய இரண்டுக்கும் காரணமான அந்த சுதந்திரம், ஸம்ஸாரத்தில் உள்ளவர்களைக் கரையேற்ற செயலாற்றாமல் இருந்துவிடும். ஆகவே கருணையுடன் கூடிய சுதந்திரம் என்பதே, ஸம்ஸாரம் என்னும் கடலில் சிக்கித் தவிப்பவர்களைக் கரையேற்றும் பொருட்டு அவன் செய்யும் செயல்களுக்கு காரணமாக உள்ளது. அல்லது ஸர்வேச்வரன் என்ற பதம் மூலம் ஏவுதல் மற்றும் ஏவப்படுதல் என்பதான ஸம்பந்தத்தைக் கூறுகிறார் என்றும் கொள்ளலாம். பாஞ்சராத்ர ஆகம நூலான லக்ஷ்மீதந்த்ரத்தில் – க்ருபாயோகாச்ச சாச்வதாத் - நித்யமான கருணையுடன் கூடி உள்ளதாலும் - என்று கூறியதைத் தொடர்ந்து, ஈசேசிதவ்ய ஸம்பந்தாத் அநிதம் ப்ரதமாதபி - ஏவுகிறவன், ஏவப்படுபவன் (பரமாத்மா, ஜீவாத்மா) என்னும் இவர்களுடைய ஸம்பந்தம் கொண்டவள் - என்று கூறுவதால், கருணையுடன் இருத்தல் மற்றும் ஸம்ஸாரிகளுடன் உள்ள ஸம்பந்தம் ஆகிய இரண்டும் ஸம்ஸாரிகள் கரையேறுவதற்காக ஸர்வேச்வரன் செய்யும் செயல்களுக்கான காரணங்கள் ஆகின்றன என்றும் கொள்ளலாம். இங்கு கருணையுடன் இருத்தல் என்பதைத் தொடர்ந்து ஸர்வேச்வரன் என்ற பதம் மூலம், பரமாத்மா-ஜீவாத்மா ஸம்பந்தம் உணர்த்தப்படுவதால், அத்தகைய ஸம்பந்தத்திற்கே முக்கியத்வம் கூறப்படுகிறது என்று கருத்து. இதன் காரணமாகவே ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில், “இவை அனைத்தும் நம்முடைய

உடைமை அல்லவோ?" என்று எண்ணுவதோடு நிற்காமல் துக்கத்தைப் பொறுக்க இயலாததாகிய கருணையுடன் சேர்வதால், மேன்மேலும் ஸம்ஸாரிகள் கரையேறும் பொருட்டு ஸர்வேச்வரன் முயன்றபடி உள்ளான் என்பது தெளிவாகிறது.

**வ்யாக்யானம்** - (அறிவிலா மனிசர்) "அறிவிலா மனிசரெல்லாம்" என்கிறபடியே அஜ்ஞாந தமோயுக்தரான சேதநர். "அந்தம் தம இவாஜ்ஞாநம்" என்னக்கடவதிறே. "ஹார்த்தும் தம:" என்று அஜ்ஞாநத்தைத் தமச்சப்தத்தாலே அருளிச்செய்தாரிறே. இத்தால் அநாத்ய ஜ்ஞாநாந்தகாரத்தாலே அபிபூதராய், அத்தாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம் முதலானவொரு விவேகமுமின்றிக்கே யிருக்கிற ஸம்ஸாரி சேதநரென்கை.

**விளக்கம்** – (அறிவிலா மனிசர்) – திருமாலை (13) - அறிவிலா மனிசரெல்லாம் – என்பதற்கு ஏற்றபடி அறியாமை என்ற இருளில் மூழ்கியவர்கள். விஷ்ணுபுராணம் (6-5-62) – அந்தம் தம இவாஜ்ஞாநம் – அறியாமை என்ற பொருள்களை மறைக்கவல்ல இருள் போன்றது - என்றது காண்க. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (உத்தர பாகம் -1) – ஹார்த்தும் தம: - இருளை அகற்றுவதற்காக - என்று அறியாமையை இருள் என்ற பதம் மூலம் உணர்த்தியது காண்க. ஆகவே எல்லையற்ற காலமாக அறியாமை என்னும் இருளால், "ஆத்மா வேறு, சரீரம் வேறு" என்பது போன்ற பகுத்தறிவு அற்றவர்களாக உள்ள ஸம்ஸாரிகள்.

**வ்யாக்யானம்** - (உணர்வென்னும் சுடர்விளக்கேற்றி) "உணர்வென்னு மொளிகொள் விளக்கேற்றி" என்றும், "ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" என்றும் சொல்லுகிறபடியே தைலவர்த்திகளா லுண்டான அழுக்கன்றிக்கே திணுங்கின தேஜஸ்ஸாயிருக்கிற ஜ்ஞாநமாகிற உஜ்ஜ்வல தீபப்ரகாசத்தை உடைத்தாய். ஜ்ஞாநத்தை விளக்கென்கிறது, ஸ்வபர ப்ரகாசகத்வமாகிற ஸ்வபாவ ஸாம்யத்தாலே. (பிறங்கிருள் நீங்கி) "பிறங்கிருள் நிறங்கெட" என்றும், "பின்னிவ்வுலகினில் பேரிருள் நீங்கி" என்றும் சொல்லுகிறபடியே, மிகுந்த அஜ்ஞாநாந்தகாரம் போய்.

**விளக்கம்** – (உணர்வென்னும் சுடர்விளக்கேற்றி) - மூன்றாம் திருவந்தாதி (94) – உணர்வென்னு மொளிகொள் விளக்கேற்றி - என்றும், இரண்டாம் திருவந்தாதி (1) ஞானச்சுடர் விளக்கேற்றினேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப எண்ணெய் மற்றும் திரி

போன்றவற்றால் உண்டாகும் அழுக்கு இல்லாமல், தூண்டிவிடப்பட்டு எரிவதான சுடர் போன்று ஞானம் என்ற ப்ரகாசமான ஒளியை உடையதாய். ஞானம் என்பது தன்னையும் வெளிப்படுத்திக்கொண்டு, மற்றவற்றையும் வெளிப்படுத்துவதால், அதனை விளக்கு என்று ஒப்புமை கூறுகிறார். (பிறங்கிருள் நீங்கி) - பெரியதிருமொழி (5-7-3) – பிறங்கிருள் நிறங்கெட - என்னும், பெரியாழ்வார் திருமொழி (1-8-10) – பின்னிவ்வுலகினில் பேரிருள் நீங்கி – என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகுதியாகச் சூழ்ந்த இருளை விலக்கி.

**வ்யாக்யானம்** - (மேலிருந்த நந்தா வேதவிளக்கைக் கண்டு) "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்றும், "நந்தாவிளக்கு" என்றும், "வேதவிளக்கினை" என்றும் சொல்லுகிறபடியே, வேதாந்தங்களில் ஸர்வஸ்மாத்பரனாக ப்ரகாசியா நிற்பானுமாய்; நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையனுமாய், வேதைக ஸமதிகம்யனுமான தன்னை, "என் தக்கஞானக்கண்களாலே கண்டு" என்கிறபடியே ஜ்ஞாந சக்ஷுஸ்ஸாலே தர்சித்து.

**விளக்கம்** - (மேலிருந்த நந்தா வேதவிளக்கைக் கண்டு) - பெரியாழ்வார் திருமொழி (4-3) - வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு – என்றும், பெரிய திருமொழி (1-8-1) - நந்தாவிளக்கு - என்றும், திருவாய்மொழி (4-7-10) – வேதவிளக்கினை - என்றும் கூறுவது போன்று, வேதாந்தங்களில் உணர்த்தப்படும் அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ளவனும், எப்போதும் ஒளியுடன் கூடியவனும், எப்போதும் வெளிப்பட்டபடி உள்ள ஞானம் நிறைந்தவனும், வேதங்களால் மட்டுமே அறியப்படுபவனும் ஆகிய ஸர்வேச்வரனாகிய தன்னை, திருவாய்மொழி (4-7-10) - என் தக்கஞானக்கண்களாலே கண்டு - என்று கூறுவதற்கு ஏற்ப ஞானம் என்னும் கண்களால் தரிசித்து.

**வ்யாக்யானம்** - (நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு) "இவையன்றே நல்ல இவையன்றே தீய" என்கிறபடியே, ஸதஸத் விவேகம் பண்ணுகைக்கு. "ஸதஸதீச விவேக்தும்" என்றாரிறே, "நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு" என்கிற விது ஸாமாந்யேந விலக்ஷணா விலக்ஷண விவேகத்தைக் காட்டுமேயாகிலும், இவ்விடத்தில், பகவத்விஷயம் நன்று, ஸம்ஸாரம் தீது என்று விவேகிக்கையைக் காட்டக்கடவது. "நந்தாவேத விளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு" என்கையாலும், விவேக பலமான த்யாக ஸ்வீகார விஷயங்கள் ஸம்ஸார மோக்ஷங்களாகவே மேல்சொல்லுகையாலும், பகவத்

விஷயத்தைக் கண்ட பின்பு ஸதஸத்விவேகம் பண்ணுகையாவது என்னென்னில்? ப்ரதிகோடி கண்டாலொழிய அதின் தோஷம் யதாவாகத் தோற்றாமையாலும், இத்தைப் பற்ற இது நன்று இது தீது என்னும்போது உபயகோடியும் கண்டுகொள்ள வேண்டுகையாலும் சொல்லிற்று.

**விளக்கம்** - (நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு) - பெரியதிருவந்தாதி (3) - இவையன்றே நல்ல இவையன்றே தீய - என்று கூறுவதற்கு ஏற்ப நன்மை தீமைகளைப் பிரித்தறியும் விவேகத்தின் பொருட்டு. ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1) – ஸதஸதீச விவேக்தும் - நல்லது தீயது எவை என்று அறிவதற்கும் - என்று உரைத்தது காண்க. "நல்லதும் தீயதும்" என்ற இந்தச் சொற்றொடர் பொதுவாக "சிறப்புடன் உள்ள பொருள், சிறப்பு இல்லாத பொருள்" என்று பிரித்து அறிவதையே உணர்த்தக்கூடியதாகும்; ஆனால் இங்கு அந்தச் செற்றொடர், "பகவத்விஷயம் என்பது நல்லது, ஸம்ஸாரம் என்பது தீயது" என்று பிரித்து உணர்த்துகிறது. இது எப்படி? காரணம், "நந்தாவேத விளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு" என்று சூர்ணையில் கூறுவதாலும், பகுத்தறிவு காரணமாகத் தள்ளுவதற்கும் ஏற்பதற்கு என்றுள்ள விஷயங்கள் இந்த உலகவாழ்வு மற்றும் மோக்ஷம் ஆகியவையே ஆகும் என்று மேலே உரைக்க இருப்பதாலும் ஆகும். பகவத் விஷயத்தை அறிந்த பின்னர், நன்மைதீமை என்று பகுத்தறிவது என்றால் என்ன? நமக்கு விரோதமாக உளளவற்றைக் கண்டால் மட்டுமே அதில் தீமை உள்ளதை உள்ளது உள்ளபடி அறிய இயலும் என்பதாலும், அவ்விதம் காணவில்லை என்றால் தீமையைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிய இயலாது என்பதாலும், "இதனைப் பற்றினால் இந்த நன்மை உண்டாகும், இந்தத் தீமை ஏற்படும்" என்று உள்ளபோது இரண்டையும் குறித்து அறியவேண்டும் என்பதாலும் ஆகும்.

**வ்யாக்யானம்** - (மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை) "மறையாய் விரிந்த விளக்கை" என்றும், "துளக்கமில் விளக்கம்" என்றும் சொல்லுகிறபடியே, "அகாரோ வை ஸர்வா வாக்" என்கையாலே வேதரூபேண விஸ்த்ருதமாய்த்தது தானென்னும்படி ஸகலவேத காரணமாய், தனக்கொரு காரணமில்லாமையாலே சலநமின்றிக்கே ஸகலார்த்த ப்ரகாசகமாயிருக்கிற அகாரத்தில் நின்று முத்பந்தமாய், தீபாதுத்பந்த ப்ரதீபம் போலே "மாநம் ப்ரதீபமிவ" என்கிறபடியே த்யாஜ்யோபாதே யார்த்தங்களை ஸ்புடதரமாக ப்ரகாசிப்பியா நின்றுள்ள, "பன்னுகலை


**Email:**sridharan_book@yahoo.co.in

நால்வேதம்", "கலைகளும் வேதமும்" இத்யாதியாலே சொல்லப்படுகிற ச்ருதியும் ததுபப்ரும்ஹணங்களுமான சாஸ்த்ரங்களை. "மறையாய் விரிந்த விளக்கை", "துளக்கமில் விளக்கமாய்" என்று அகாரத்தை ஈச்வரனோடே ஸமாநாதிகரித்தது "அ இதி ப்ரஹ்ம" என்கிறபடியே வாச்ய வாசக ஸம்பந்தத்தாலே.

**விளக்கம்** - (மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை) - பெரியதிருமொழி (8-9-4) – மறையாய் விரிந்த விளக்கை - என்றும், திருச்சந்தவிருத்தம் (4) - துளக்கமில் விளக்கம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அகாரோ வை ஸர்வா வாக் – "அ" என்பதே அனைத்து வேதங்களாகவும் விரிந்தது - என்று கூறுவதால், வேதங்களாக விரிவடைந்து நின்றது தானே என்னும்படி அனைத்து வேதங்களுக்கும் காரணமாகவும், "அ" என்பதான தனக்கு வேறு எதுவும் காரணமாக இல்லாததால், அசைவு இன்றி அனைத்து பொருள்களையும் தனக்குள்ளே காண்பித்தபடி நிற்கும் "அ" என்பதில் இருந்து தோன்றியவையாகவும்; விளக்கிலிருந்து வெளிப்படும் பெரிய தீபம் போன்று, ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1) – மாநம் ப்ரதீபமிவ - பெரிய விளக்கு போன்ற சாஸ்த்ரத்தை - என்று கூறுவதற்கு ஏற்ப, தள்ளத்தக்கவை மற்றும் ஏற்கத்தக்கவை என்பதானவற்றை மிகவும் தெளிவாக விளக்கவல்ல, பெரியதிருமொழி (7-8-2) – பன்னுகலை நால்வேதம் – என்றும், பெரியதிருமொழி (2-8-5) – கலைகளும் வேதமும் - என்றும் உள்ள வரிகளால் கூறப்படும் ச்ருதியும், அவற்றின் ஆழ்பொருளை விளக்கவல்ல இதிகாசம் மற்றும் புராணம் என்பதான சாஸ்த்ரங்களை. பெரியதிருமொழி (8-9-4) – மறையாய் விரிந்த விளக்கை - என்றும், திருச்சந்தவிருத்தம் (4) - துளக்கமில் விளக்கமாய் – என்றும் உள்ள வரிகளில் அகாரத்தை ஸர்வேச்வரனோடு ஒப்புமைப்படுத்தி உரைத்தது ஏன் என்றால், அ இதி ப்ரஹ்ம – "அ" என்பது ப்ரஹ்மம் - என்றுள்ள ப்ரமாணத்தின்படி பொருளுக்கும் சொல்லுக்கும் உள்ள ஸம்பந்தம் காரணமாகவே ஆகும்.

**வ்யாக்யானம்** - (நீர்மையினாலருள் செய்தான்) நீர்மை – ஸ்வபாவம்; தன் ஸ்வபாவத்தாலே கொடுத்தானென்கை. அதாவது, தன் சேஷித்வ ஸ்வபாவத்தாலே யென்னுதல், காருணிகனான தன் க்ருபையாகிற ஸ்வபாவத்தாலே என்னுதல், ஸமுச்சயமாதல். பூர்வயோஜனை – நீர்மையினா லென்கிறதற்குப் பூர்வர்களிட்ட, பெரியதிருமொழி (2-8-5) வ்யாக்யாநத்திற்கும், "இந்த உதிரத்தெறிப்பு த்ரைகுண்ய விஷயமானவற்றுக்கு ப்ரகாசகம்" என்றிவர்தாம் மேலருளிச் செய்கிறதற்கும் சேரும்.

நடுவில் யோஜனை, “காருணிகனான” என்றிவர் ப்ரதமத்திலே யெடுத்ததுக்கும், “காருணிகோ ஸர்வேச்வர” என்று பட்டரருளிச் செய்ததற்கும் சேரும். மூன்றாம் யோஜனை, “காருணிகனான ஸர்வேச்வரன்” னென்கிற விடத்தில் சொன்ன இரண்டாம் யோஜனைக்குச் சேரும். ஆக இச்சூர்ணையால் அஜ்ஞரான ஸம்ஸாரி சேதனர் ஜ்ஞாந ப்ரகாசத்தையுடையராய், அந்தவஜ்ஞாநம் நீங்கித் தன்னைக் கண்டு ஸதஸத்விவேகம் பண்ணுகைக்கு உறுப்பாக, ஈச்வரன் சாஸ்த்ர ப்ரதாநம் பண்ணினபடியை தந்நிதாநத்தோடே அருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம்** - (நீர்மையினாலருள் செய்தான்) - நீர்மை என்பது இயல்பாக உள்ளது; அதாவது தன்னுடைய ஸ்வபாவம் காரணமாக இந்தச் சாஸ்த்ரங்களை அளித்தான். இங்கு ஸ்வபாவம் என்பது என்ன? அனைத்து உயிர்களுக்கும் எஜமானனாக நின்று அவற்றை ஏவி தனது செயல்களை முடித்துக்கொள்ளும் ஸர்வேச்வரத் தன்மை ஆகும்; அல்லது மிகுந்த கருணை நிறைந்தவன் என்பதால், தனது கருணை என்னும் தன்மையால் ஆகும்; அல்லது இந்த இரண்டு தன்மைகளாலும் என்றும் கொள்ளலாம். இந்த மூன்றில், முதலாவதான ஸர்வேச்வரத் தன்மை என்பது பெரியதிருமொழி (2-8-5) – என்பதில் உள்ள “நீர்மையினால்” என்று சொல்லுக்கு நம் பூர்வர்கள் அருளிச்செய்த வ்யாக்யானத்தின் பொருளுக்கும், இதே நூலில் (13) – இந்த உதிரத்தெறிப்பு த்ரைகுண்ய விஷயமானவற்றுக்கு ப்ரகாசகம் - என்பதான சூர்ணைக்கும் பொருந்தும். இரண்டாவதாக அருளிச்செய்த கருணைத்தன்மை என்பது, “காருணிகனான” என்று இந்தச் சூர்ணையில் கூறியதற்கும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1) – காருணிகோ ஸர்வேச்வர - கருணை நிறைந்தவனாகிய ஸர்வேச்வரன் அளிக்கிறான் - என்று பட்டர் அருளிச்செய்ததற்கும் பொருந்தும். மூன்றாவது தன்மையாகக் கூறப்பட்ட இரண்டும் கலந்த நிலை என்பது, “காருணிகனான ஸர்வேச்வரன்” என்பதற்கு அருளிச்செய்யப்பட்ட இரண்டாவது பொருளுக்குப் பொருந்தும். ஆகவே இந்தச் சூர்ணையால், அறிவற்றவர்களான ஸம்ஸாரிகள் தங்களுடைய இயல்பான ஞானம் வெளிப்படப் பெற்றவர்களாகவும், அந்த அறியாமை நீங்கி ஸர்வேச்வரனாகிய தன்னை உணர்ந்து, நன்மைதீமைகளைப் பிரித்து அறியும்படி மாறுபவர்களாகவும் ஆவதற்குத் தேவையான சாஸ்த்ரங்களை ஸர்வேச்வரன் அளித்தமை குறித்து, அந்தச் செயலின் காரணத்துடன் விளக்கினார்.

## 2. விவேகபலம் வீடுபற்று.

**அவதாரிகை -** இவ்விவேகத்திற்குப் பலமேதென்னச் சொல்லுகிறது, (விவேகேத்யாதி).

**விளக்கம் –** இப்படிப்பட்ட பகுத்தறிவினால் ஏற்படும் பயன் என்ன என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இப்படி யவன் கொடுத்த சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்தாலே நல்லதும் தீயதும் விவேகிக்கைக்குப் பலம், த்யாஜ்யத்தை விடுகையும் உபாதேயத்தைப் பற்றுகையு மென்கை. த்யாக ஸ்வீகார மென்னாதே வீடுபற்றென்கையாலே “வீடுமின் முற்றவும்”, “அற்றிறைபற்று” என்று ஆழ்வார் பாசுரத்தை யுட்கொண்டருளிச் செய்தமை தோற்றுகிறது.

**விளக்கம் -** அவன் நமக்கு அளித்த சாஸ்த்ரங்கள் மூலம் ஏற்பட்ட ஞானத்தால், “நல்லது எது தீயது எது” என்று பகுத்தறிய இயல்கிறது. இதன் பயன் என்னவென்றால் - கைவிடத்தக்கது எது, ஏற்கத்தக்கது எது என்று அறிவதே ஆகும். “விடுதல், பற்றுதல்” என்று கூறாமல் சூர்ணையில் “வீடு பற்று” என்று ஏன் கூறினார்? இதன் காரணம் நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-2-1) – வீடுமின் முற்றவும் என்றும், (1-2-5) – அற்றிறை பற்று - என்றும் அருளிச்செய்ததைத் திருவுள்ளத்தில் கொண்டதால் ஆகும்.

## 3. த்யாஜ்யோபாதேயங்கள் ஸுகதுக்கங்கள்.

**அவதாரிகை -** த்யாஜ்யோபாதேயங்கள் தாமெவையென்னச் சொல்லுகிறது (த்யாஜ்யேத்யாதி).

**விளக்கம் –** கைவிடத்தக்கதும், ஏற்கத்தக்கதும் எவை என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, “ஸுகீ பவேயம், து:க்கீ மா பூவம்” என்று ஸர்வர்க்கும் துக்கம் அநிஷ்டமாய் ஸுகமிஷ்டமாகையாலே துக்கம் த்யாஜ்யம், ஸுக முபாதேயம் என்கை.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - ஸுகீ பவேயம், து:க்கீ மா பூவம் – சுகம் உள்ளவன் ஆகக்கடவேன், துக்கம் உள்ளவன் ஆகக்கடவேன் அல்லேன் - என்றுள்ள வாக்கியத்தின்படி அனைவருக்கும் துக்கம் என்பது விருப்பம் இல்லாததாகவும், சுகம் என்பது விரும்பப்படுவதாகவும் ஆகிறது. ஆகவே துக்கம் என்பது தள்ளப்படவேண்டிதாய், சுகம் என்பது ஏற்கப்படவேண்டியதாய் உள்ளது.

4. இவற்றுக்கெல்லை இன்புதுன்பளி பன்மா மாயத்தழுந்துகையும், களிப்புங் கவர்வுமற்றுப் பேரின்பத் தின்புறுகையும்.

**அவதாரிகை** - இவைதான் கர்மாநுகுணமாக நின்ற நின்ற நிலைகளிலே யுண்டகையாலே இவற்றின் பரமாவதியைச் சொல்லுகிறது (இவற்றுக் கித்யாதி).

**விளக்கம்** – இப்படிப்பட்ட சுகம், துக்கம் என்பவை அவரவர்கள் செய்த நன்மை மற்றும் தீமை என்ற கர்மங்களின் காரணமாக ஏற்படுவதால், இவற்றின் எல்லைகளை அடுத்து உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, துக்கத்துக்குப் பரமாவதி "இன்பு துன்பளி" என்று தொடங்கி. ஸுக துக்காவஹங்களாய் அநாதியாய் துஸ்தரமாயிருந்துள்ள ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநமான ஜந்மங்களின் நின்றும் ஒருகாலும் நீங்காமைக் குறுப்பானவையாய், பலவகைப்பட்டிருப்பனவாய், அகப்பட்டார் தப்பவரிதாமவையாய் "இன்னமுதெனத்" தோன்றி எத்தனையேனும் அறிவுடையாரையும் கலங்கப் பண்ணுகையாலே ஆச்சர்யங்களா யிருந்துள்ள சப்தாதி விஷயங்களிலே அகப்பட்டு "அழுந்துமா" என்கிறபடியே அநந்தக்லேச பாஜநமான ஸம்ஸாரத்திலே யழுந்துகை. ஸுகத்துக்குப் பரமாவதி "களிப்புங் கவர்வுமற்று" என்று தொடங்கிச் சொல்லுகிற அல்பாஸ்திரத்வாதி தோஷ துஷ்டமான விஷய லாபத்தாலே வரும் கர்வமும் ததலாபத்தாலே வரும் க்லேசமும் கழிந்து ஷட்பாவவிகாரங்களும் நீங்கி சுத்த ஸத்வதயா ப்ரகாசமாயிருக்கிற அப்ராக்ருத விக்ரத்தைப் பெற்று "அந்தமில் பேரின்பம்" என்கிறபடியே அபரிமிதாநந்த மயமான பரமபதத்திலே அடியார்கள் குழாங்களையுடன் கூடி "சுழிபட்டொடுஞ் சுடர்ச்சோதி வெள்ளத்து இன்புற்று" என்கிறபடியே அநவரத பகவத நுபவத்தாலே ஆநந்த நிர்ப்பரனா யிருக்கை யென்கை.

**விளக்கம்** - துக்கத்துக்கான எல்லையை முதலில் அருளிச்செய்கிறார். இது சூர்ணையில் “இன்பதுன்பளி” என்று தொடங்கி உரைக்கப்படுகிறது. இன்பம் மற்றும் துன்பம் வருவதும், கடப்பதற்கு எளிதாக உள்ள ப்ரக்ருதியின் ஸம்பந்தம் மூலம் ஏற்படும் பிறவிகளில் இருந்து விடுபட இயலாமல் உள்ளதற்குக் காரணமாக இருப்பதும், பலவிதமாக உள்ளதும், சிக்கிக் கொண்டவர்கள் தப்புவதற்குக் கடினமாக உள்ளதும், திருவாசிரியம் (3) மற்றும் திருவாய்மொழி (7-1-8) – இன்னமுது – என்று கூறுவதற்கு ஏற்ப உண்டாகி எந்த அளவு அறிவு நிரம்பியவர்களாக இருந்தாலும் அவர்களையும் கலங்கும்படிச் செய்வதால் வியப்பு ஏற்படுத்தும்படியாக உள்ளதும் ஆகிய உலக விஷயங்களில் அகப்பட்டுக்கொண்டு, திருவாசிரியம் (6) - அழுந்துமா – என்பதற்கு ஏற்றபடி எல்லையற்றதான பலவிதமான துன்பங்களுக்குக் காரணமாக உள்ள ஸம்ஸாரத்தில் மூழ்கி இருத்தல் என்பதாகும்.

அடுத்து சுகத்தின் எல்லையை அருளிச்செய்கிறார். திருவாய்மொழி (2-3-10) – களிப்பு – என்று தொடங்கி உரைக்கப்படும் அற்பமாக உள்ள தன்மை, நிலையற்றதாக உள்ள தன்மை முதலான தோஷங்கள் நிறைந்துள்ள புலன்கள் மூலம் கிட்டப்பெறும் இன்பங்களை அடைந்து, அவற்றை அனுபவிப்பதன் காரணமாக உண்டாகும் கர்வம், அவற்றை அனுபவிக்கப் பெறாமல் உள்ளதால் உண்டாகும் துக்கம் ஆகிய இரண்டும் நீங்கப் பெற்று, மற்ற இரண்டு குணங்களும் கலக்காத தூய்மையான ஸத்வகுணம் மட்டுமே நிறைந்ததான, இந்த உலகுடன் தொடர்பில்லாத ஒளி பொருந்திய சரீரத்தைப் பெற்று, திருவாய்மொழி (10-9-11) - அந்தமில் பேரின்பம் – என்பதற்கு ஏற்ப அளவற்ற இன்பங்கள் உள்ளதான பரமபதத்தில் ஸர்வேச்வரனுடைய அடியார்கள் கூட்டத்துடன் கூடி நின்று, திருவாய்மொழி (8-10-5) - சுழிபட்டொடுஞ் சுடர்ச்சோதி வெள்ளத்து இன்புற்று – என்பதற்கு ஏற்ப எப்போதும் ஸர்வேச்வரனை அனுபவித்தபடி உள்ளதால் ஆனந்தம் நிறைந்தவனாக உள்ள நிலையுடன் இருத்தல் என்பதாகும்.

5. அநந்தக்லேச நிரதிசயாநந்த ஹேது – மறந்தேன் அறியகிலாதே உணர்விலேன் ஏணிலேன் அயர்த்தென்றும், உய்யும்வகை நின்றவொன்றை நன்கறிந்தனன் உணர்வினுள்ளே ஆம்பரிசென்றும் சொல்லுகிற ஜ்ஞாத்வய பஞ்சக ஜ்ஞாநாஜ்ஞாநங்கள்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - ஏவம்பூத துக்கமும் ஸுகமும் இவனுக்குண்டாகைக்கு ஹேது ஏதென்னச் சொல்லுகிறது (அநந்தேத்யாதி).

**விளக்கம்** - இப்படியாக உள்ள சுகமும் துக்கமும் உண்டாகக் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, "ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்த க்லேச பாஜநம்" என்கிற ஸம்ஸார ப்ரயுக்த அனந்த துக்கஹேது – "மறந்தேனுன்னை முன்னம்" என்கிற பரவிஷயா ஜ்ஞாநமும், "என்னையறியகிலாதே" என்கிற ஆத்மவிஷயாஜ்ஞாநமும், "ஓடியுமுழன்று முயிர்களே கொன்றேனுணர்விலேன்" என்கிற விரோதி விஷயஜ்ஞாநமும், "பிறவி நோயறுப்பா னேணிலேனிருந்தேன்" என்கிற உபாய விஷயாஜ்ஞாநமும், "ஆழியங்கை யம்மானை யேத்தாதயர்த்து" என்கிற புருஷார்த்த விஷயஜ்ஞாநமுமாகிற ஜ்ஞாதவ்யார்த்த பஞ்சக ஜ்ஞாநாபாவம். "நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷணா" என்கிற பகவத் ப்ராப்தி ரூபமோக்ஷ ப்ரயுக்த நிரதிசய ஸுகஹேது, "நின்னை நெஞ்சிலுய்யும் வகை யுணர்ந்தேன்" என்கிற பரவிஷய ஜ்ஞாநமும், "நின்றவொன்றை யுணர்ந்தேன்" என்கிற ஆத்மவிஷய ஜ்ஞானமும், "அகற்ற நீ வைத்த மாயவல் லைம்புலன்க ளாமவை நன்கறிந்தனன்" என்கிற விரோதி விஷய ஜ்ஞாநமும், "அவனதருளாலுறல் பொருட்டு என்னுணர்வி னுள்ளே யிருத்தினேன்" என்கிற உபாய விஷய ஜ்ஞாநமும், "ஆம்பரிசறிந்து கொண்டு" என்கிற புருஷார்த்தவிஷய ஜ்ஞானமுமாகிற ஜ்ஞாதவ்யார்த்த பஞ்சக ஜ்ஞாநமென்கை. இத்தால் "ஜ்ஞாநாந்மோக்ஷ: அஜ்ஞாநாத் ஸம்ஸார:". ஆகையாலே, "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:, ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தே: ததா ப்ராப்தி விரோதி ச; வதந்தி ஸகலா வேதாஸ்ஸேதிஹாஸ புராணகா:, முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந:" என்கிறபடியே ஸகல சாஸ்த்ர தாத்பர்யமாய் ஆத்மோஜ்ஜீவநத்துக்கு அவச்ய ஜ்ஞாதவ்யமான அர்த்தபஞ்சகத்தையும் அறியாமையும் அறிகையுமே ஸம்ஸார மோக்ஷங்களுக்கு ஹேது வென்றதாயிற்று.

**விளக்கம்** - ஜிதந்தே ஸ்தோத்ரம் – ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்த க்லேச பாஜநம் - மிகவும் கோரமானதும், எல்லையற்ற துன்பங்களுக்கு இருப்பிடமானதும் ஆகிய பிறவிப் பெருங்கடலை - என்று கூறுவதற்கு ஏற்ப பிறவிகளை முன்னிட்டுக் கொண்டு உண்டாகும் எல்லையற்ற துக்கங்களுக்கான காரணம் : பெரியதிருமொழி (6-2-2-) – மறந்தேனுன்னை


**Email:**sridharan_book@yahoo.co.in

முன்னம் – என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் குறித்து அறிவில்லாமையும், திருவாய்மொழி (2-9-9) - என்னையறியகிலாதே – என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்மா குறித்த அறிவில்லாமையும், பெரியதிருமொழி (1-6-6) – ஓடியு முழன்று முயிர்களே கொன்றே னுணர்விலேன் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனைக் கைப்பற்றத் தடையாக உள்ள விரோதிகளைக் குறித்த அறிவில்லாமையும், பெரியதிருமொழி (1-6-1) - பிறவி நோயறுப்பா னேணிலேனிருந்தேன் – என்பதற்கு ஏற்ப அவனை அடைவதற்கான உபாயம் குறித்த அறிவில்லாமையும், பெரியதிருவந்தாதி (82) – ஆழியங்கை யம்மானை யேத்தாதயர்த்து - என்பதற்கு ஏற்ப அடையத்தக்க பேற்றைக் குறித்த அறிவில்லாமையும் ஆகிற அறியத்தக்கதான ஐந்து விஷயங்கள் குறித்த ஞானம் இல்லாமை என்பதே ஆகும். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-59) – நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷணா – நான்முகன் உள்ளிட்டவர்களுடைய உலகங்களில் உள்ள இன்பங்களையும் அற்பம் என்று தள்ளத்தக்க மேன்மையான ஆனந்தமே வடிவம் பெற்றது - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை அடைதல் என்பதான மோக்ஷத்தின் பொருட்டு ஏற்படும் எல்லையற்ற சுகங்களுக்கான காரணம் : பெரியதிருமொழி (6-3-6) - நின்னை நெஞ்சிலுய்யும் வகை யுணர்ந்தேன் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் குறித்த ஞானமும், திருவாய்மொழி (8-8-4) – நின்றவொன்றை யுணர்ந்தேன் – என்பதற்கு ஏற்ப ஆத்மா குறித்த ஞானமும், திருவாய்மொழி (5-7-8) – அகற்ற நீ வைத்த மாயவல் லைம்புலன்க ளாமவை நன்கறிந்தனன் – என்பதற்கு ஏற்ப அவனை அடையத் தடையாக உள்ள விரோதிகள் குறித்த ஞானமும், திருவாய்மொழி (8-8-3) - அவனதருளாலுறல் பொருட்டு என்னுணர்வி னுள்ளே யிருத்தினேன் – என்பதற்கு ஏற்ப அவனை அடையும் உபாயம் குறித்த ஞானமும், திருமாலை (38) – ஆம்பரிசறிந்து கொண்டு – அடைய உள்ள புருஷார்த்தம் குறித்த ஞானமும் என்றுள்ள ஐந்துவிதமான ஞானம் ஆகும்.

இதன் மூலம் ஞானத்தால் மோக்ஷமும், அறியாமையால் பிறவியும் ஏற்படுகிறது என்றாகிறது. ஆகவே, ஹாரித ஸம்ஹிதை (9) - ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:, ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தே: ததா ப்ராப்தி விரோதி ச; வதந்தி ஸகலா வேதாஸ்ஸேதிஹாஸ புராணகா:, முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந: - அடையத்தக்கதான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், அவனை அடையும் ஜீவாத்மாவின் ஸ்வரூபம், அவனை அடைவதற்கான வழி, அவனை அடைவதால் உண்டாகும் பயன், அவனை அடைவதற்குத் தடையாக உள்ள விரோதிகள் ஆகியவற்றை இதிஹாஸ


Email:sridharan_book@yahoo.co.in

புராணங்களுடன் கூடியதான அனைத்து வேதங்களும் கூறுகின்றன. வேதங்கள், வேதங்களுடைய ஆழ்பொருள்கள் ஆகியவற்றை அறிந்த முனிவர்களும் மஹாத்மாக்களும் இவ்விதமே உரைக்கின்றனர் – என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்து சாஸ்திரங்களுடைய ஆழ்பொருளாகவும், ஆத்மாவானது கரையேற அவசியமாக அறிந்து கொள்ள வேண்டியதாகவும் உள்ள இந்த ஐந்து விஷயங்களைக் குறித்து அறியாமை என்பது பிறவிக்குக் காரணம், அறிவது மோக்ஷத்திற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

## 6. இவற்றுக்குக் காரணம் இரண்டிலொன்றினில் ஒன்றுகைகள்.

**அவதாரிகை** - இவ்வஜ்ஞாநாதிகள் தனக்கு அடியேதென்னச் சொல்லுகிறது (இவற்றுக்குக் காரண மித்யாதி).

**விளக்கம்** – இவற்றுக்கு இப்படியாக உள்ள ஐந்து விஷயங்கள் குறித்து அறியாமல் இருப்பதற்கும், அறிவதற்கும் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வர்த்தபஞ்சக அஜ்ஞாநத்துக்குக் காரணம் முத்திறத்து வாணியத்திரண்டி லொன்றுகையாகிற ரஜஸ்தம:ப்ரசுரதை. இவ்வர்த்த பஞ்சக ஜ்ஞாநத்துக்குக் காரணம் முக்குணத்திரண்டவை யகற்றி ஒன்றினில் ஒன்றுகையாகிற ஸத்வ ப்ரசுரதை யென்கை. ரஜஸ்தமஸ்ஸுக்கள் அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ஹேதுவாய், ஸத்வம் யதாஜ்ஞாந ஹேதுவாயிறேயிருப்பது.

**விளக்கம்** – இந்த ஐந்து விஷயங்கள் குறித்து அறியாமல் உள்ள அஜ்ஞானத்திற்குக் காரணம், திருச்சந்தவிருத்தம் (68) – முத்திறந்து வாணியத்து இரண்டில் ஒன்றும் நீசர்கள் - என்பதற்கு ஏற்ப மூன்று குணங்களுக்குள் ரஜஸ் மற்றும் தமஸ் என்ற இரண்டில் ஏதேனும் ஒன்றில் ஆழ்ந்திருப்பதால் ஆகும். இந்த ஐந்து விஷயங்கள் குறித்து அறிவதான ஞானத்துக்குக் காரணம், திருவெழுகூற்றிருக்கை (17) - முக்குணத்து இரண்டவை அகற்றி என்னில் ஒன்றி நின்று - என்று கூறுவதற்கு ஏற்ப மூன்று குணங்களுக்குள் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவற்றை விலக்கி, ஸத்வகுணத்தில் ஒன்றி நிற்பதாகும். ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய இரண்டும் ஒரு பொருளின் தன்மையை வேறுவிதமாக அறிவித்தல் என்பதான அந்யதா ஞானத்திற்கும், பொருளையே மாற்றி உணர்த்தல் என்பதான விபரீத

ஞானத்திற்கும் காரணமாக இருப்பதாகும். ஸத்வம் என்பது உண்மையான ஞானத்துக்குக் காரணமாக இருக்கும்.

7. ஸத்வாஸத்வ நிதாநம் இருள் தரும் அமலங்களாகவென்னும் ஜன்மஜாயமாந கால கடாக்ஷங்கள்.

**அவதாரிகை -** இவற்றுக்கு நிதாநமேதென்னச் சொல்லுகிறது (ஸத்வேத்யதி).

**விளக்கம் -** இவ்விதம் ஒரு சிலர் ஸத்வத்திலும், சிலர் மற்ற இரண்டு குணங்களிலும் நிலை நிற்பதற்கான காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ஸத்வேதரங்களான ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு நிதாநம் "இருள் தருமா ஞாலத்துளினிப் பிறவி" என்கிற அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரத்தில் ஜந்மம். ஸத்வத்துக்கு நிதாநம் "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:" என்கிறபடியே ஜாயமாந காலத்தில் "அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும்" என்கிற நிர்மலத்வகரமான பகவத் கடாக்ஷ மென்கை.

**விளக்கம் -** ஸத்வகுணத்துக்கு எதிர்த்தட்டாக உள்ள ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய இரண்டில் நிலைநிற்பதற்கான காரணம் திருவாய்மொழி (10-6-1) - இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி – என்பதற்கு ஏற்ப உள்ளதான அறியாமை என்பது விளையும் இடமாக உள்ள இந்த ஸம்ஸாரத்தில் உண்டாகும் பிறவி ஆகும். ஸத்வ குணத்திற்கான காரணம் மஹாபாரதம் மோக்ஷபர்வம் - ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: - இந்த உலகில் பிறக்கும்போதே யார் ஒருவன் மதுசூதனனால் கடாக்ஷிக்கப்படுகிறானோ அவன் ஸத்வ குணம் உள்ளவனாக ஞானம் நிரம்பியவனாக ஆகிறான். அவனே மோக்ஷம் பெறும் மனம் உள்ளவன் - என்று கூறுவதற்கு ஏற்ப, பிறக்கும் நேரத்திலேயே திருவாய்மொழி (1-9-9) – அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும் – என்று கூறும்படி தூய்மை அடையச் செய்வதான ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் ஆகும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

8. இவற்றுக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்.

**அவதாரிகை** – இவை தனக்கு மூலமேதென்னச் சொல்லுகிறது – (இவற்றுக்கு மூலமித்யாதி).

**விளக்கம்** - ஸம்ஸாரத்தில் ஏற்படும் பிறவி, பிறக்கும்போதே ஸர்வேச்வரனுடைய அருள் பார்வை ஆகியவை ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இஜ்ஜந்மத்துக்கு மூலம், “சார்ந்தவிரு வல்வினை” என்று ஆத்மாவோடு பிரிக்கவொண்ணாதபடி பொருந்திக் கிடக்கிற ப்ரபலங்களான புண்ய பாபங்கள். இக்கடாக்ஷத்துக்கு மூலம் “தொல்லருள் நல்வினை” என்கிற அவனுடைய ஸ்வாபாவிக க்ருபையாகிற ஸுக்ருதம் என்கை. (இருவல்லருள் நல்வினைகள்) என்றது இரு வல்வினையும் அருள்நல்வினையு மென்றபடி.

**விளக்கம்** - இந்த ஸம்ஸாரத்தில் பிறவி ஏற்படுவதற்கான மூலகாரணம், திருவாய்மொழி (1-5-10) - சார்ந்தவிரு வல்வினை - என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்மாவிடமிருந்து பிரிக்க இயலாதபடி பொருந்திக் கிடக்கும் வலிமையுள்ளதான புண்ணிய பாவங்கள் ஆகும். பிறக்கும்போதே ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் கிட்டுவதற்கான மூல காரணம், திருவாய்மொழி (5-9-10) - தொல்லருள் நல்வினை - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனிடம் இயல்பாகவே அமைந்துள்ள கடாக்ஷம் என்னும் புண்ணியம் ஆகும். சூர்ணையில் “இருவல்லருள் நல்வினைகள்” என்பதன் மூலம், இரண்டு வலிமையான புண்ணிய பாவங்கள் மற்றும் ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் என்பதையும் கூறினார்.

9. கர்மக்ருபாபீஜம் பொய்ந்நின்ற அருள்புரிந்த வென்கிற அவித்யா ஸௌஹார்தங்கள்.

**அவதாரிகை** - இவைதனக்கடி யேதென்னச் சொல்லுகிறது – (கர்மேத்யாதி).

**விளக்கம்** - இரண்டுவிதமான வலிமையான வினைகள் மற்றும் ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் ஆகியவற்றுக்குக் காரணம் என்ன என்று அருளிச்செய்கிறார்.

 Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, கர்மத்துக்கு பீஜம், “பொய்ந்நின்ற ஞானம்” என்கிற அவித்யை; க்ருபைக்கு பீஜம் “அருள்புரிந்த சிந்தை” என்கிற ஸௌஹார்தம் என்கை. “ஈச்வரஸ்ய ச ஸௌஹார்தம்” என்று இவ்வாத்மோஜ்ஜீவநத்துக்கு அவன் க்ருஷி பண்ணுகையில் இழிகைக்கு மூல காரணமாக ஸௌஹார்தத்தைச் சொல்லிற்றே. இஸ் ஸௌஹார்த்த மடியாகவாயிற்று இவ்வாத்ம விஷயமாக அவன் திருவுள்ளத்தில் இரக்கம் பிறப்பது.

**விளக்கம்** - இரண்டு வலிமையான வினைகள் ஏற்படக் காரணம், திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானம் - என்பதற்கு ஏற்ப உள்ள அறியாமை ஆகும். ஸர்வேச்வரனுடைய க்ருபைக்குக் காரணம், இரண்டாம் திருவந்தாதி (59) - அருள்புரிந்த சிந்தை - என்பதில் கூறப்பட்டதான சிநேகம் ஆகும். ஈச்வரஸ்ய ச ஸௌஹார்தம் – ஸர்வேச்வரனுடைய சிநேகமும் – என்றுள்ள வாக்கியம் மூலம் ஆத்மாவைக் கரையேற்ற அவன் செய்யும் முயற்சியில் அவனை ஈடுபட வைப்பதற்கான காரணம் இந்தச் சிநேகமே ஆகும் என்று உரைக்கப்பட்டது. இப்படிப்பட்ட சிநேகமே ஆத்மா குறித்து அவன் தனது திருவுள்ளத்தில் கொள்ளும் இரக்கத்திற்குக் காரணமாகிறது.

10. ஏதந் நிமித்தம் முன்னமே முதல் முன்னமேயான அசிதயநாநாதி ஸம்பந்தங்கள்.

**அவதாரிகை** - இந்த அவித்யா ஸௌஹார்தங்கள் தனக்கு அடியேதென்னச் சொல்லுகிறது (ஏதந் நிமித்த மித்யாதி).

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் உரைத்த அறியாமை மற்றும் ஸர்வேச்வரனுடைய சிநேகம் ஆகியவற்றுக்குக் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஏதச்சப்தத்தாலே இரண்டையும் பராமர்சிக்கிறது. அதாவது - அவித்யைக்கு நிமித்தம், “மூதாவியில் தடுமாறுமுயிர் முன்னமே” என்கிற அநாதியான அசித் ஸம்பந்தம். ஸௌஹார்த்ததுக்கு நிமித்தம், “அடியேனடைந்தேன் முதல் முன்னமே” என்கிற அநாதியான அயந ஸம்பந்தமென்கை. அயந சப்தத்தாலே ஈச்வரனைச் சொல்லுகிறது. நாராயணனிறே. ஆக அநாத்யசித் ஸம்பந்தமடியாக அவித்யையாய் அதடியாக புண்யபாப ரூப கர்மாமாய், அதடியாக அஜ்ஞாந ஹேதுவான ஜந்மமாய், அதடியாக ரஜஸ்தமோ வ்ருத்தியாய், அத்தாலே அர்த்த பஞ்சகஜ்ஞாநாபாவமாய்,

அதடியாக “அஜ்ஞாநாத் ஸம்ஸார:” என்கிறபடியே ஸம்ஸார துக்கம் வரும். அநாத்யயந ஸம்பந்தமடியாக பகவத் ஸௌஹார்தமுண்டாய், அதடியாக க்ருபையுண்டாய், அதடியாக விசேஷ கடாக்ஷ முண்டாய், அதடியாக ஸத்வ வ்ருத்தியுண்டாய், அதடியாக அர்த்தபஞ்சக ஜ்ஞாந முண்டாய், அதடியாக “ஜ்ஞாநாந் மோக்ஷ:” என்கிறபடியே மோக்ஷ ஸுகமுண்டா மென்றதாய்த்து.

**விளக்கம்** - சூர்ணையில் உள்ள “ஏதத்” என்ற பதம் மேலே கூறப்பட்ட அறியாமை மற்றும் சிநேகம் ஆகிய இரண்டையும் உணர்த்துகிறது. அதாவது அறியாமைக்குக் காரணம் திருவிருத்தம் (95) – மூதாவியில் தடுமாறுமுயிர் முன்னமே - என்பதில் உள்ள “முன்னமே” என்னும் சொல் மூலம் உணர்த்தப்படுவதான எல்லையற்ற காலமாக இருந்து வரும் இந்த உலகத்துடனான ஸம்பந்தம் ஆகும். ஸர்வேச்வரனுடைய சிநேகத்திற்குக் காரணம், திருவாய்மொழி (2-2-6) - அடியேனடைந்தேன் முதல் முன்னமே - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக உள்ள ஸர்வேச்வரனுடைய ஸம்பந்தம் ஆகும். சூர்ணையில் உள்ள “அயந” என்ற பதம் ஈச்வரனை உணர்த்துவதாகும்; “நாராயணன்” என்று கருத்து. ஆகவே எல்லையற்ற காலமாக உள்ள உலகின் தொடர்பினால் அறியாமை ஏற்படுகிறது; அந்த அறியாமை காரணமாக புண்ணியபாவ கர்மங்கள் ஏற்படுகின்றன; அந்தக் கர்மங்களின் காரணமாக அறியாமையின் அடிப்படையான பிறவி ஏற்படுகிறது; அந்தப் பிறவி காரணமாக ரஜஸ் மற்றும் தமஸ் குணங்களுடைய மிகுதி ஏற்படுகிறது; அந்தக் குணங்கள் காரணமாக அறியவேண்டியதான ஐந்து விஷயங்கள் குறித்து அறியாமல் உள்ள நிலை ஏற்படுகிறது; இந்த நிலையின் காரணமாக, அஜ்ஞாநாத் ஸம்ஸார: - அறியாமையால் ஸம்ஸாரம் ஏற்படுகிறது - என்பதான ஸம்ஸாரம் உண்டாகி துக்கம் ஏற்படுகிறது என்று கருத்து. எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள நாராயணனுடைய ஸம்பந்தம் காரணமாக அவனுடைய சிநேகம் கிட்டுகிறது; அதன் காரணமாக அவனுடைய க்ருபை ஏற்படுகிறது; அதன் காரணமாக அவனுடைய கடாக்ஷம் உண்டாகிறது; அதன் காரணமாக ஸத்வம் தழைத்து ஓங்குகிறது; அதன் காரணமாக அறியவேண்டிய ஐந்து விஷயங்கள் குறித்த ஞானம் ஏற்படுகிறது; அதன் விளைவாக, ஜ்ஞாநாந் மோக்ஷ: – ஞானத்தால் மோக்ஷம் கிட்டும் – என்பதற்கு ஏற்ப மோக்ஷ சுகம் உண்டாகிறது கருத்து.


**Email:**sridharan_book@yahoo.co.in

11. இவை கிட்டமும் கேட்டுவேளானும்போலே ஒண்பொருள் பொருளல்லாத(வை) என்னாதே நானிலாத யானுமுளனாவனென்கிற ஸாம்யம் பெறத் தின்றூதி அந்தமும் வாழ்வுமாகிற ஹாநி ஸத்தைகளை யுண்டாக்கும்.

**அவதாரிகை** – இவ்வுபய ஸம்பந்தமும் ஆத்மவஸ்துவுக்குச் செய்யுமவற்றைச் சொல்லுகிறது மேல் (இவை என்று தொடங்கி).

**விளக்கம்** - மேலே கூறப்பட்டதான உலகத்துடனான ஸம்பந்தம், நாரயணனுடனான ஸம்பந்தம் ஆகிய இரண்டும் ஆத்மாவுக்கு உண்டாக்கவல்ல தீமைகளையும் நன்மைகளையும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அசித்ஸம்பந்தம் – தன்னோடே சேர்ந்த மாணிக்யத்தை ஒளியறத் தின்று உருவழித்துத் தன்னைப் போலேயாக்கும் கிட்டம்போலே, “அந்நலத் தொண் பொருள்” என்கிற விலக்ஷண ஜ்ஞாந குணகமாய் ஸ்வயம்ப்ரகாசமான வஸ்துவென்று இதின் சீர்மை பாராதே, “இல்லது” என்றும், “யந்நாஸ்தி” என்றும் சொல்லுகிற தன்னோடே, “நானிலாத” என்கிற ஸாம்யம் பெறும்படியாக ஜ்ஞான லேசமறத் தின்று, “அந்தமும் வாழ்வும்” என்கிறவற்றில் அந்தமாகிற ஹாநியை யுண்டாக்கும் – “அஸந்நேவ ஸ பவதி” என்கிறபடியே ஸத்தாஹாநியைப் பண்ணுமென்கை.

**விளக்கம்** – முதலில் உலகத்துடனான ஸம்பந்தம் குறித்து அருளிச்செய்கிறார். ஓர் உலோகக்கட்டியானது தன்னுடன் சேர்ந்த மாணிக்கத்தை அதன் ஒளியை மங்கும் படியாகச் செய்து தன்னைப் போன்று மாற்றுவது போன்று, உலகத்துடனான ஸம்பந்தம் ஆத்மாவுக்குக் கேடு ஏற்படுத்தும். எப்படி? திருவாய்மொழி (1-2-4) – இல்லது - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-12-37) - யந்நாஸ்தி – எந்த ஒரு அசித் வஸ்து இல்லை என்றுள்ள சொல்லால் கூறப்படுகிறதோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான உலகம் என்ற அசித்தான தன்னுடன், திருசந்தவிருத்தம் (65) - நான் இலாத – என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்மாவுக்கு இல்லாத தன்மையானது அதற்கு உள்ளது என்று உரைக்கும்படியான ஒப்புமையை அதற்கு ஏற்படுத்தி, ஞானம் என்பதை முற்றிலுமாக அழித்து, பெரிய திருமொழி (5-7-2) - அந்தமும் வாழ்வும் – என்பதற்கு ஏற்ப முடிவாக உள்ள தாழ்ச்சியை

ஏற்படுத்தும். அதாவது தைத்திரீய உபநிஷத் – அஸந்நேவ – இல்லாத பொருள் ஆகிறான் - என்பது போன்று இருப்பு என்ற நிலைக்கே தீமையை ஏற்படுத்திவிடும்.

**வ்யாக்யானம் -** அயந ஸம்பந்தம் – "கீட: பேசக்ருதா ருத்த: குட்யாந்தரநுசிந்தயந், ஸம்ரம்ப பயயோகேந விந்ததே தத்ஸரூபதாம்" என்கிறபடியே ஏதேனுமொரு கீடத்தைக் கொண்டு வந்து வைத்தூதி ஸ்வஸாம்யாபந்நமாக்கும் வேட்டுவேளானைப் போலே, "பொருளல்லாத வென்னை" என்கிறபடியே ஜ்ஞாநாபாவத்தாலே அவஸ்து சப்த வாச்யமாய்க் கிடக்கிறவிதின் சிறுமை பாராதே ஸ்வரூபேண விபுவான தன்னோடு "பரமம் ஸாம்யமுபைதி" என்கிறபடியே, "உள்ளவுலகளவும் யானுமுளனாவன்" என்று ஜ்ஞாநத்வாரா வரும் விபுத்வ ஸாம்யம் பெறும்படி தன்னிறமாகவூதி வாழ்வாகிற ஸத்தையை யுண்டாக்கு மென்கை. "ஸந்தமேநம் ததோ விது:" என்று பகவத் ஜ்ஞாநாநந்தரம் ஆத்மஸத்தா ஸித்தியாகச் சொல்லிற்றே.

**விளக்கம் -** மாறாக நாராயணனுடனான ஸம்பந்தம் என்பது கீட: பேசக்ருதா ருத்த: குட்யாந்தரநுசிந்தயந், ஸம்ரம்ப பயயோகேந விந்ததே தத்ஸரூபதாம் - குளவியால் கொண்டு வரப்பட்டு அடைக்கப்பட்ட புழுவானது, அச்சம் போன்றவற்றால் அந்தக் குளவியின் உருவத்தை அடைகிறது – என்பதற்கு ஏற்ப, ஏதேனும் ஒரு புழுவைக் கொண்டு வந்து தனது கூட்டில் வைத்து, அதனை ஊதி, தனது உருவத்தை அது பெறுமாறு செய்யும் குளவியைப் போன்று, திருவாய்மொழி (5-7-3) - பொருளல்லாத வென்னை – என்பதற்கு ஏற்றபடியாக ஞானம் இல்லாத காரணத்தால் "இல்லாத பொருள்" என்று கூறப்படுவதான ஆத்மாவை, அவ்விதம் கிடக்கும் காரணத்தால் அதன் தாழ்ந்த நிலையை ஆராயாமல், எங்கும் உள்ளவன் என்று ஸ்வரூபம் கொண்ட ஸர்வேச்வரனாகிய தன்னுடன், முண்டக உபநிஷத் (3-1-1) – பரமம் ஸாம்யமுபைதி – ப்ரஹ்மத்துடன் ஒப்புமை அடைகிறான் – என்று கூறுவதற்கு ஏற்ப, பெரியதிருவந்தாதி (76) – உள்ளவுலகளவும் யானுமுளனாவன் - என்ற பாசுரத்தில் கூறுவதற்கு ஏற்ப, ஞானம் காரணமாக உண்டாகவல்ல எங்கும் பரந்து நிற்கும் தன்மை என்பதுடன் ஒப்புமை ஏற்படும்படியாகத் தனது குணங்களை ஊதி, ஆத்மாவாகிய அது "இருப்பு" என்ற நிலையை ஏற்படுத்தும். தைத்திரீய ஆனந்தவல்லீ – ஸந்தமேநம் ததோ விது: - பரம்பொருளை அறிந்தவன் உள்ளவன் என்றாகிறான் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனைக் குறித்த ஞானம் உண்டான பின்னர் ஆத்மாவானது "உள்ளவன்" என்ற நிலையை அடைகிறான் என்று கருத்து.

12. ஒன்று கூடினதாய்ப் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழவடியே னென்னும தொன்றுமே ஒழிக்க வொழியாதது.

**அவதாரிகை** - இப்படி அநாதியாகச் சொன்ன உபயஸம்பந்தமும் ஆத்மாவுக்கு நித்யமா யிருக்குமோ வென்கிற சங்கையிலே சொல்லுகிறது (ஒன்றித்யாதி).

**விளக்கம்** - இவ்விதம் எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதான உலகத்துடனான ஸம்பந்தம், நாராயணனுடனான ஸம்பந்தம் ஆகிய இரண்டும் ஆத்மாவுக்கு எப்போதுமே இருக்குமோ என்று சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அசித்ஸம்பந்தம், “பெருந்துய ரிடும்பையில் பிறந்து கூடினேன்” என்கையாலே ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்றிக்கே வந்தேறியாய், “வினை பற்றறுக்கும்” என்று ஒரு ஸர்வசக்தி ஸவாஸநமாகப்போக்க, “அடைந்த வருவினையோடல்லல் நோய் பாவம் மிடைந்தவை மீண்டொழிய” என்கிறபடியே நிவ்ருத்தமாய் விடுகையாலே, “திருமாலே நானு முனக்குப் பழவடியேன்” என்னும்படி அநாதியாயிருக்கிற சேஷசேஷி பாவரூப பகவத் ஸம்பந்த மொன்றுமே, “உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது” என்கிறபடியே ஈச்வரனாலும் சேதநனாலும் கழிக்கப் பார்த்தாலும் கழிக்கப் போகாத தென்கை. இத்தால் அசித்ஸம்பந்தம் ஆகந்துகமாய் நிருபாதிக மாகையாலே நித்யமா யிருக்கு மென்றதாயிற்று. ஆனால் ஆகந்துகமான வித்தை அநாதி யென்பா னென் னென்னில்; வந்தேறின காலத்துக்கு அடி தெரியாமையாலே அநாதியென்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலே ஒருநாள் வரையிலே பகவத் ப்ரஸாதத்தாலே அது கழியக் காண்கையாலே வந்தேறி யென்னுமிடம் நிச்சிதமிறே.

**விளக்கம்** - இந்த உலகத்துடனான ஸம்பந்தம் என்பது பெரியதிருமொழி (1-1-1) - பெருந்துய ரிடும்பையில் பிறந்து கூடினேன் - என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்மாவுக்கு இயற்கையாக இல்லாமல், நடுவில் வந்து சேர்ந்ததாகும். ஆகவே அதனைப் பெரிய திருமொழி (11-4-9) - வினை பற்றறுக்கும் - என்பதற்கு ஏற்ப அனைத்து சக்தியும் கொண்ட ஸர்வேச்வரன் வாசனையுடன் நீக்கிவிடும்போது, முதல் திருவந்தாதி (59) - அடைந்த வருவினையோடல்லல் நோய் பாவம் மிடைந்தவை மீண்டொழிய - என்பதற்கு ஏற்ப நீங்கிவிடுகிறது. ஆகவே, திருப்பல்லாண்டு (11) - திருமாலே நானு முனக்குப் பழவடியேன்

- என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக இருந்து வருவதான அடிமை-எஜமானன் என்ற ரீதியில் உள்ள பகவத் ஸம்பந்தம் மட்டும், திருப்பாவை(28) - உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனாலும் நம்மாலும் நீக்க நினைத்தாலும் நீக்க இயலாத ஒன்றாகும். இதன் மூலம் - உலகத்துடனான ஸம்பந்தம் என்பது நடுவில் வந்து சேர்ந்ததாகவும், கர்மம் காரணமாக ஏற்பட்டதாலும் ஒரு காலகட்டத்தில் அழிந்து விடுவதாகும்; ஆனால் நாராயணனுடனான ஸம்பந்தம் என்பது எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதாலும், எந்தவிதமான காரணமும் இன்றி உண்டானதாலும் எப்போதும் அழியாமல் இருக்கும் - என்று உணர்த்தப்பட்டது. ஆனால் நடுவில் வந்து சேர்ந்த உலகத்துடனான ஸம்பந்தம் என்பதை "அநாதி = எல்லையற்ற காலம்" என்று ஏன் கூறவேண்டும்? இதன் காரணம் - எப்போது வந்து சேர்ந்தது என்று அறியாத காரணத்தால், "எல்லையற்ற காலம்" என்று ப்ரமாணங்கள் கூறுவதால் ஆகும். மேலும் ஏதோ ஒரு நாளில் அது ஸர்வேச்வரனுடைய க்ருபை காரணமாகக் கழிந்து விடுவதால், நடுவில் வந்து சேர்ந்தது என்பது உறுதியாகிறது.

## 13. இந்த உதரத்தரிப்பு த்ரைகுண்ய விஷயமானவற்றுக்கு ப்ரகாசகம்.

**அவதாரிகை** – இவ்வயந ஸம்பந்தமே கீழ்ச் சொன்ன சாஸ்த்ர ப்ரதாநத்துக்கு ஹேது வென்கிறது மேல் – (இந்தவித்யாதி).

**விளக்கம்** - இத்தகைய நாராயணன் ஸம்பந்தம் என்பதே முதல் சூர்ணையில் உரைத்தது போன்று, ஸர்வேச்வரன் நாம் கரையேற நமக்கு சாஸ்த்ரங்களை அளித்தற்கான காரணம் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இந்த நாராயணத்வ ப்ரயுக்தமான குடல்துடக்கு, "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்கிறபடியே ஸத்வ ரஜஸ் தமோ ரூப குணத்ரய வச்யரான சேதநரை விஷயமாகவுடைய வேதங்களை ப்ரகாசிப்பிக்கைக்கு ஹேதுவென்றபடி. தம: ப்ரசுரராயும், ரஜய: ப்ரசுரராயும், ஸத்வ ப்ரசுரராயுமிருக்கும் வேதநருடைய ருச்யநுகுணமான புருஷார்த்த - தத்ஸாதநங்களையிறே பூர்வபாகத்தில் பரக்கச்சொல்லுகிறது. ஆகையால் (த்ரைகுண்ய விஷயமானவை) என்கிறது. இத்தால் (நீர்மையினால் அருள் செய்தான்) என்று கீழ்ச் சொன்ன சாஸ்த்ர ப்ரதாநத்துக்கு ப்ரதாந ஹேது ஸம்பந்த மென்றதாயிற்று.

**விளக்கம் -** உதரத் தரிப்பு என்றால் வயிற்றில் தாங்கி இருத்தல் என்பதான சரீர ஸம்பந்தம். “நாரங்கள் என்று கூறப்படும் அனைத்து சேதனர்களுக்கான இருப்பிடம்” என்ற பொருள்படும் நாராயணன் என்ற காரணத்தால் ஏற்பட்டதான உடல்-உயிர் ஸம்பந்தம் போன்ற தொடர்பு என்பதே, ஸ்ரீமத் பகவத்கீதை (3-45) - த்ரைகுண்ய விஷயா வேதா: - வேதங்கள் மூன்று குணங்கள் கொண்ட - என்று கூறுவதற்கு ஏற்ப ஸத்வம்-ரஜோ-தமஸ் என்ற மூன்று குணங்களால் வசப்பட்டு நிற்கும் மனிதர்களை இலக்காக உள்ள வேதங்களை அவன் வெளிப்படுத்தக் காரணமாக உள்ளது என்று கருத்து. தாமஸ குணம் நிறைந்தவர்களாகவும், ரஜோ குணம் நிறைந்தவர்களாகவும், ஸத்வ குணம் நிறைந்தவர்களாகவும் காணப்படும் சேதனர்களுக்கு, அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடியாக உள்ள பேறுகள், அந்தப் பேறுகளை அடைய வைக்கும் உபாயங்கள் ஆகியவற்றை வேதங்களுடைய முற்பாகம் விரிவாக உரைக்கிறது. அதனால்தான் வேதங்களை - த்ரைகுண்ய விஷயமானவை - மூன்று குணங்கள் கொண்ட மனிதர்களை இலக்காக உடையது - என்றார். இதன் மூலம், சூர்ணை (1) – நீர்மையினால் அருள் செய்தான் - என்று கூறப்பட்டபடி, சாஸ்த்ரங்களை வெளிப்படுத்தியதற்கான முதல் காரணம் இவனுக்கு நம்முடன் உள்ள ஸம்பந்தமே என்றாகிறது.

14. வத்ஸலையான மாதா பிள்ளை பேகணியாமல் மண் தின்னவிட்டு ப்ரத்யௌஷத மிடுமாபோலே எவ்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமானவிவனும் ருசிக்கீடாகப் பந்தமும் பந்தமறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே.

அவதாரிகை - இப்படி ஸம்பந்தமடியாகச் செய்தானாகில் மோக்ஷ ஹேதுவான சாஸ்த்ரங்களையே காட்டாதே ஐஹிகபாரலௌகிக போக ஸாதநவிதாயகதயா பந்த ஹேதுவான சாஸ்த்ரங்களையும் காட்டுவானென்னென்னச் சொல்லுகிறது (வத்ஸலை யித்யாதி).

**விளக்கம்** – இவ்விதம் தன்னுடன் நமக்கு உள்ள ஸம்பந்தம் காரணமாகவே அனைத்து சாஸ்த்ரங்களை அவன் வெளியிட்டான் என்றால், மோக்ஷத்திற்குக் காரணமாக உள்ள சாஸ்த்ரங்களை மட்டுமே அல்லவா வெளிப்படுத்தியிருக்கவேண்டும்? இந்த உலக இன்பம், ஸ்வர்க்கம் போன்ற இன்பம் ஆகியவற்றையும், அவற்றைப் பெறும்

உபாயங்களையும் கூறும் காரணத்தால் பந்தப்படுத்தவல்ல சாஸ்த்ரங்களை அவன் ஏன் வெளிப்படுத்தவேண்டும் என்பதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, வாத்ஸல்யயுக்தையான பெற்ற தாயானவள் மண்ணை யாசைப்பட்ட பிள்ளை பேகணியாமல் முந்துற மண்ணைத் தின்னவிட்டுப் பின்னை அதுக்கு மாற்று மருந்திடுமாபோலே, “எவ்வுயிர்க்கும் தாயோன்” என்றும், “தாயிருக்கும் வண்ணமே” என்றும் சொல்லுகிறபடியே ஸகலாத்மாக்களளவிலும் மாத்ருவத் வத்ஸலனான விவனும் சேதநருடைய ருசிக்கீடாக பந்தகங்களையும் தர்சிப்பித்து, பின்னை பந்த நிவர்த்தக பேஷஜமானவற்றையும் தர்சிப்பிக்குமிறே யென்கை. இத்தால் இப்படிச் செய்தது ஸம்பந்த ப்ரயுக்த வாத்ஸல்ய கார்யமாகையாலே ஸம்பந்தக் கொத்தை வாரதென்றதாயிற்று.

**விளக்கம்** - தனது குழந்தையிடம் மிகுந்த வாத்ஸல்யம் கொண்டிருக்கும் ஒரு தாய், தனது குழந்தை மண்ணைத் தின்னவேண்டும் என்று விரும்பும்போது, அதனுடைய மனம் வருத்தம் அடையவிடாமல் மண்ணைத் தின்னவிட்டு, அதன் பின்னர் அதற்கான மருந்தை அளிப்பாள். அதே போன்று திருவாய்மொழி(1-5-3) - எவ்வுயிர்க்கும் தாயோன் – என்றும், பெரியதிருமொழி (11-6-6) - தாயிருக்கும் வண்ணமே - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து ஆத்மாக்களிடத்திலும் அவற்றின் தாய் போன்று வாத்ஸல்யம் நிறைந்த ஸர்வேச்வரன், சேதநர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப பந்தங்களை உண்டாக்கி, தொடர்ந்து அந்தப் பந்தங்களை நீக்கவல்ல வழிகளையும் காண்பித்துத் தருகிறான். இவ்விதம் இவன் செய்வது ஸம்பந்தம் காரணமாக ஏற்படும் வாத்ஸல்யத்தால் ஆகும் என்பதால், ஸம்பந்தம் காரணமாக எந்தவிதமான தோஷமும் வராது என்று கருத்து.

15. அதுதானும் ஆஸ்திக்ய விவேக அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பாரதந்த்ர்யங்களை யுண்டாக்கின வழி.

**அவதாரிகை** - இப்படி வாத்ஸல்யத்தாலே செய்தானாகிலும் குணத்ரய வச்யரான சேதநருக்கு ருச்யநுகுணமான பலஸாதநங்களை விதிக்கிற பந்தக சாஸ்த்ரங்களையும் தர்சிப்பித்தால் அவர்கள் ஸம்ஸரித்தே போகைக்குடலாகாதோ வென்ன அதுவும் க்ரமேண அவர்க ளீடேறுகைக்கு இட்டவழி யென்கிறார் மேல் – (அதுதானு மித்யாதி).

**விளக்கம்** - இவ்விதம் அவர்களிடம் கொண்ட அன்பு காரணமாகச் செய்கிறான் என்றாலும், மூன்று குணங்களுக்கு வசப்பட்டு நிற்கும் மனிதர்களுக்கு, அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப பலன்களை அளிக்கவல்லதான, பிறவியில் கட்டுண்டு கிடக்க வழி செய்யும் சாஸ்த்ரங்களை அளிப்பதால், அந்த மனிதர்கள் அந்த சாஸ்த்ரங்கள் காரணமாகவே பிறவியில் உழன்றபடி உள்ளதற்குக் காரணமாகிவிடும் அல்லவோ என்ற கேள்வி எழலாம். இதற்கு - அப்படிப்பட்ட சாஸ்த்ரங்களை ஏற்படுத்தியது, அவர்களைப் படிப்படியாகக் கரை ஏற்றுவதற்கான வழியே ஆகும் - என்று விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மோசக சாஸ்த்ர மாத்ரத்தை தர்சிப்பியாதே ச்யேநவிதி முதலான பந்தக சாஸ்த்ரங்களையும் தர்சிப்பித்ததுதானும் தம:ப்ரசுரராய் அர்த்தார் ஜநத்துக்காகப் பரஹிம்ஸாசீலராய்த் திரிகிற நாஸ்திகரைக் குறித்த மோக்ஷத்தை விதித்தால், அவர்களுக்கு அது ருசியாமையாலே அந்த பரஹிம்ஸா ரூபமான அபிசார கர்மத்தை, "ச்யேநேநாபிசரந் யஜேத" என்று விதித்து தத்பலஸித்தியாலே அவனுக்கு "சாஸ்த்ரமுண்டு" என்கிற ஆஸ்திக்யத்தை யுண்டாக்கி, ஆஸ்திகனான பின்பு "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்ககாமோ யஜேத" இத்யாதிகளாலே ஸ்வர்க்காதி புருஷார்த்த தத்ஸாதநங்களை விதித்து அவ்வழியாலே ப்ரக்ருத்யாத்ம விவேகத்தை யுண்டாக்கியும் இப்படியாலே அந்ய சேஷத்வ நிவ்ருத்தியை யுண்டாக்கி, அநந்தரம் பரமாத்ம போக வைலக்ஷண்யத்தையும் தத்ப்ராப்தி ஸாதந பக்தியையும் காட்டி, அவ்வழியாலே ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியை யுண்டாக்கியும், அநந்தரம் உபாயாந்தர துஷ்கரத் வாதிகளாலே தளருமளவில் ஸ்வயத்ந நிர்வ்ருத்தி ரூப ப்ரபத்தியிலே மூட்டி ஸ்வரூப யாதாத்ம்ய வேஷமான பாரதந்த்ர்யத்தை யுண்டாக்கியும் இப்படி க்ரமத்திலே ஈடேறுகைக்கு இட்ட வழியிறே என்றபடி. "இவை கிட்டமும் வெட்டுவேளானும் போலே" என்று தொடங்கி இவ்வளவாக, ஸம்ஸார மோக்ஷ காரண பரம்பரைகளிலே சரமாவதிகளான அசிதயந ஸம்பந்தங்கள் ஆத்மவஸ்துவுக்குச் செய்யுமவைகளும், அதில் அசித்ஸம்பந்தம் அநித்யம் அயநஸம்பந்தமே நித்யமென்றும், அந்த அயநஸம்பந்தம் கீழ்ச் சொன்ன சாஸ்த்ர ப்ரதாநத்துக்கு ஹேதுவென்றும், அதில் மோசக சாஸ்த்ரமாத்ரமன்றிக்கே பந்தக சாஸ்த்ரத்தையும் தர்சிப்பித்தது, வத்ஸலனாகையாலே சேதந ருச்யநுகுணமாக வென்றும், அதுதானும் க்ரமத்திலே அவர்கள் உஜ்ஜீவிப்பிக்கைக்கு இட்டவழியென்றும் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** - அதாவது பந்தங்களிலிருந்து வெளியேற்றவல்ல சாஸ்த்ரங்களைத் தொடக்கத்தில் காண்பித்துக் கொடுக்கவல்ல, ச்யேந யாகம் போன்றவற்றை வெளிப்படுத்திக் கொடுப்பது ஏன் என்றால் - தாமஸ குணத்தில் எப்போதும் ஈடுபட்டவராக, பொருள் ஈட்டும் பொருட்டு மற்றவர்களைத் துன்புறுத்தியபடி திரிகின்ற நாஸ்திகர்களுக்கு மோக்ஷ சாஸ்த்ரங்களை வெளிப்படுத்தினால் அவர்களுக்கு அதில் எந்தவிதமான ஈடுபாடும் உண்டாகாது. ஆகவே, மற்றவர்களைத் துன்புறுத்துவதான அபிசாரகர்மத்தை, ஆபஸ்தம்ப ஸூத்ரம் – ச்யேநேநாபிசரந் யஜேத – விரோதிகளை அழிக்க எண்ணுபவன் சியேநம் என்ற பெயர் கொண்ட யாகத்தை நடத்தித் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வானாக - என்று விதித்து, அந்த யாகத்தின் பலனை அவன் அனுபவிப்பதன் மூலமாக அவனுடைய மனதில் “சாஸ்த்ரங்கள் உண்டு” என்ற நம்பிக்கையை ஸர்வேச்வரன் ஏற்படுத்துகிறான். இப்படியாக அவனை ஆஸ்திகனாக்கிய பின்னர், ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்ககாமோ யஜேத - ஸ்வர்க்கம் விருப்புபவன் ஜ்யோதிஷ்டோமம் என்னும் யாகத்தை இயற்றுவானாக - போன்ற விதிகள் மூலமாக ஸ்வர்க்கம் போன்ற பேறுகளை அடைவதற்கு உறுப்பான சாதனங்களை விதிக்கிறான். அதன் மூலம் அவனுக்கு ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறு என்ற விவேகத்தை ஏற்படுத்தி, இந்த விவேகம் பிறந்த பின்னர் ஆத்மா மூலம் கிட்டவல்ல இன்பத்தை உணர்த்துகிறான். அதன் பின்னர் ஸ்வர்க்கம் போன்ற மற்ற இன்பங்களிலிருந்து அவனை விடுவித்து, தொடர்ந்து ஸர்வேச்வரனுடன் கூடியிருத்தல் என்ற இன்பத்தின் மேன்மையை உணர்த்தி, அதனை அடைய வைக்கவல்ல உபாயமான பக்தியைக் காண்பிக்கிறான். அதன் மூலம் “தான் தனக்கே அடிமை” என்பதான அவனுடைய எண்ணத்தை மாற்றி, தொடர்ந்து நிலைநிற்பதற்கு மிகவும் கடினமான உபாயமாக உள்ள பக்தி போன்றவற்றில் ஈடுபட்டு அவன் தளர்ந்து போகும்போது, அவனுடைய முயற்சி இல்லாமல் கிட்டவல்லதான ப்ரபத்தி என்பதில் அவனைத் திருப்புகிறன். அதனைத் தொடர்ந்து ஆத்மாவின் இயல்பான “ஸர்வேச்வரனுக்கு மட்டுமே ஆத்மா வசப்பட்டது” என்பதான நிலையை அவனுக்கு உணர்த்துகிறான். இப்படியாகப் படிப்படியாக அவனைக் கரையேற்ற ஸர்வேச்வரன் செய்யும் செயல்பாடு இதுவாகும். ஆக சூர்ணை (11) - இவை கிட்டமும் வெட்டுவேளானும் போலே - என்று தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய - ஸம்ஸாரம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றுக்குக் காரனமாக உள்ளதான ப்ரக்ருதி ஸம்பந்தம் மற்றும் நாராயண ஸம்பந்தம் ஆகியவை ஆத்மாவுக்குச் செய்யும் செயல்கள் இவை என்றும்;


**Email:**sridharan_book@yahoo.co.in

அவற்றில் ப்ரக்ருதி ஸம்பந்தம் நித்யம் அல்லாதது, நாராயண ஸம்பந்தமே நித்யமானது என்றும்; கீழே உரைத்தது போன்று ஸர்வேச்வரன் சாஸ்த்ரங்களை வெளிப்படுத்த முதன்மையான காரணம் நாராயண ஸம்பந்தமே ஆகும் என்றும்; அந்த சாஸ்த்ரங்களில் மோக்ஷ சாஸ்த்ரங்கள் மட்டும் அல்லாமல் பந்தம் ஏற்படுத்தவல்ல சாஸ்த்ரங்களையும் வெளிப்படுத்தியதன் காரணம், தாய் போன்றவன் என்பதால் அவரவர்களுடைய விருப்பத்திற்கு வெளிப்படுத்தினான் என்றும்; இவ்விதம் அவன் செய்ததும் அவர்களைப் படிப்படியாகக் கரை ஏற்ற அவன் செய்த வழியாகும் என்றும் கூறப்பட்டது.

16. சதுர்விதமான தேஹவர்ணாச்ரமாதிகார பல மோக்ஷ ஸாதந கதி யுக தர்ம வ்யூஹ ரூப க்ரியாதிகளை அறிவிக்கிற பாட்டுப் பரப்புக்குப் பெரிய தீவினில் ஒன்பதாம் கூறும் மானிடப் பிறவியும் ஆக்கைநிலையும் ஈரிரண்டி லொன்றும் இளமையுமிசைவு முண்டாய் புகுவரேலு மென்கிறதுக்குள்ளே விக்நமற நின்றவாநில்லாப் ப்ரமாதியைக் கொண்டு அறக்கற்கை அரிதென்றிறே வேதஸாரோபநிஷத் ஸாரதராநுவாக ஸாரதம காயத்ரியில் முதலோதுகிற பொருள் முடிவான சுருக்கைத் தெய்வவண்டாய் அன்னமாய் அமுதம் கொண்டவன் சாகைகளிலும் ஓதம்போல் கிளர் நால்வேதக் கடலிலும் தேனும் பாலு மமுதுமாக வெடுத்துப் பெரு விசும்பருளும் பேரருளாலே சிங்காமை விரித்தது.

**அவதாரிகை** - இனிமேல் சாஸ்த்ரப்ரதிபாத்யார்த்த விசேஷங்களை ஸங்க்ரஹேண ப்ரதிபாதித்துக் கொண்டு, ஏவம் பூத சாஸ்த்ராப்யாஸம் அநேக யோக்யதாஸாபேக்ஷதயா துஷ்கரமென்று தானே திருவுள்ளம் பற்றி ஈத்ருசாநேகயோக்யதா நிரபேக்ஷத்வேந ஸுகரமாய், சாஸ்த்ரதாத்பர்யமுமான திருமந்த்ரத்தை ஈச்வரன் வெளியிட்டருளின படியை அருளிச்செய்கிறார் “சதுர்விதேத்யாதி” சூர்ணையாலே.

**விளக்கம்** - அடுத்து, சாஸ்த்ரங்களில் உரைக்கப்பட்டவற்றின் ஆழ்பொருளை சுருக்கமாக அருளிச்செய்து, அப்படிப்பட்ட சாஸ்த்ரங்களை அவற்றின் ஆழ்பொருளுடன் அறிவதற்குப் பலவிதமான தகுதிகள் தேவை என்பதால், அந்தச் சாஸ்த்ரங்கள் கற்பதற்கு மிகவும் கடினமாவை என்று தனது திருவுள்ளத்தில் எண்ணினார். ஆகவே இப்படிப்பட்ட தகுதிகள் ஏதும் அவசியம் இல்லாத காரணத்தால், கற்பதற்கு எளியதாகவும், சாஸ்த்ரங்களின் ஆழ்பொருள்களை உள்ளடக்கியதாகவும் உள்ள திருமந்திரத்தை ஸர்வேச்வரன் வெளியிட்ட விதத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - சதுர்விதமான வென்கிறது மேற்சொல்லுகிறவை யெல்லாவற்றிலு மநுவர்த்திக்கிறது; அதாவது – தேவ மநுஷ்ய திர்யக் ஸ்த்தாவராகாரேண நாலு வகைப்பட்ட தேஹம், ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர ரூபேண நாலு வகைப்பட்ட வர்ணம், ப்ரஹ்மசர்ய கார்ஹஸ்த்ய வாநப்ரஸ்த்த ஸந்ந்யாஸாத்மகதயா நாலு வகைப்பட்ட ஆச்ரமம், "அர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ" என்கிற நாலு வகைப்பட்ட அதிகாரம், தர்மார்த்த காம மோக்ஷங்கள் என்கிற நாலு வகைப்பட்ட பலம், ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யங்கள் என்கிற நாலு வகைப்பட்ட மோக்ஷம், கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்திகள் என்கிற நாலு வகைப்பட்ட ஸாதநம், பஞ்சாக்நி வித்யோக்த ப்ரகாரேண வரும் கர்ப்பகதி யாம்யகதி தூமாதிகதி அர்ச்சிராதிகதி யென்கிற நாலு வகைப்பட்ட கதி, க்ருத த்ரேதா த்வாபர கலிகள் என்கிற நாலு வகைப்பட்ட யுகம், "த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞை: த்ரேதாயாம் த்வாபரேர்ச்சயந், யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம்" என்று சொன்ன த்யாந யஜந அர்ச்சந ஸங்கீர்த்தநங்க ளாகிற நாலு வகைப்பட்ட யுகதர்மம், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்தர்களாகிற நாலு வகைப்பட்ட வ்யூஹம், க்ருதாதி யுகங்களில் "பாலின் நீர்மை" இத்யாதிப்படியே சொல்லுகிற ஸித பீத ச்யாம நீலதயா நாலு வகைப்பட்ட ரூபம், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மோக்ஷ ப்ரதத்வங்கள் என்கிற நாலு வகைப்பட்ட க்ரியை.

**விளக்கம்** - "சதுர்விதம் = நான்குவிதம்" என்ற பதத்தை அடுத்துள்ள "தேஹம்" என்று தொடங்கி, "க்ரியை" முடிய உள்ள அனைத்துடனும் சேர்க்கவேண்டும். அதாவது:

- சதுர் தேஹம் - தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள்
- சதுர் வர்ணம் - அந்தணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன்
- சதுர் ஆச்ரமம் - ப்ரம்மசர்யம், க்ருஹஸ்தன், வாநப்ரஸ்தம், ஸ்ந்ந்யாஸம்
- சதுர் அதிகாரி – கீதை (7-16) - அர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ - இழந்த செல்வத்தை மீண்டும் அடைய விரும்புபவன், புதிய செல்வம் விரும்புபவன், ஆத்ம இன்பத்தை விரும்புபவன், என்னை அடைய விரும்புபவன் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்கள்
- சதுர் பலன் - அறம், பொருள், வீடு, இன்பம்


**Email:**sridharan_book@yahoo.co.in

- சதுர் மோக்ஷம் - ஸர்வேச்வரனுடன் ஒன்றாகப் பரமபதத்தில் இருத்தல் (ஸாமீப்யம்), அவன் போன்ற ரூபம் பெறுதல் (ஸாரூபம்), அவனுடைய அனுபவம் பெறுதல் (ஸாயுஜ்யம்)
- சதுர்வித உபாயம் அல்லது சாதனம் - கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி
- சதுர் கதி - பஞ்சாக்நி வித்யையில் கூறப்பட்ட விதத்தில் உண்டாகும் கருவில் புகுதல் (கர்ப்பகதி), யமலோகம் புகுதல் (யாம்யகதி), ஸ்வர்க்கம் போன்றவற்றை அடைதல் (தூமாதிகதி), மோக்ஷம் புகுதல் (அர்ச்சிராதிகதி)
- சதுர் யுகம் – க்ருத, த்ரேதா, துவாபர, கலி யுகங்கள்
- சதுர் தர்மம் - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-2-16) - த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞை: த்ரேதாயாம் த்வாபரேர்ச்சயந், யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம் - க்ருதயுகத்தில் த்யானத்தாலும், த்ரேதா யுகத்தில் யாகத்தாலும், துவாபர யுகத்தில் அர்ச்சனையாலும் எது அடையப்படுகிறதோ, அது கலியுகத்தில் கேசவனுடைய திருநாமத்தை உச்சரிப்பதால் அடையப்படுகிறது - என்பதற்கு ஏற்ப உள்ளதான த்யானம், யாகம், அர்ச்சனை, திருநாம ஸங்கீர்த்தனம் என்னும் நான்கு தர்மங்கள்
- சதுர் வ்யூஹம் - வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன்
- சதுர் ரூபம் - திருச்சந்தவிருத்தம்(44) – பாலின் நீர்மை - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் க்ருதயுகம் போன்ற நான்கு யுகங்களில் கைக்கொள்ளும் வெண்மை, பசுமை, ச்யாமம், நீலம் என்பதான நிறங்கள்
- சதுர் க்ரியை - படைத்தல், காத்தல், அழித்தல், மோக்ஷம் அளித்தல்.

**வ்யாக்யானம்** - ஆதிசப்தத்தாலே மற்றும் சதுர்விதமான ப்ரமேய விசேஷங்களைச் சொல்லுகிறது. வாஸுதேவா துத்பந்நரான கேசவ நாராயண மாதவர்கள், ஸங்கர்ஷணாதுத்பந்நரான கோவிந்த விஷ்ணு மதுஸூதநர்கள், ப்ரத்யும்நாதுத்பந்நரான த்ரிவிக்ரம வாமன ஸ்ரீதரர்கள், அநிருத்தாதுத்பந்நரான ஹ்ருஷீகேச பத்மநாப தாமோதரர்கள் என்கிற நாலு வகைப்பட்ட வ்யூஹாந்தரம், முதலானவை பலவுமுண்டிறே. ஆக இப்படி சதுர்விதமான அர்த்த விசேஷங்களை ப்ரகாசிப்பிக்கிற “பாட்டும் முறையும்” என்கிற பாட்டில் சொல்லுகிற சாஸ்த்ர விஸ்தரத்துக்கு.

**விளக்கம் -** சூர்ணையில் உள்ள "க்ரியாதி" என்பதில் காணப்படும் "ஆதி" சப்தம் மூலம் நான்கு நான்காகப் பிரித்த விதம் கூறுகிறார். அதாவது வாஸுதேவனிலிருந்து வெளிப்பட்ட கேசவன், நாராயணன், மாதவன்; ஸங்கர்ஷணனிடமிருந்து வெளிப்பட்ட கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன்; ப்ரத்யும்நனிலிருந்து வெளிப்பட்ட த்ரிவிக்ரமன், வாமநன், ஸ்ரீதரன்; அநிருத்தனிலிருந்து வெளிப்பட்ட ஹ்ருஷீகேசன், பத்மநாபன், தாமோதரன் - என்றுள்ள நான்கு வ்யூஹத்தில் உள்ள வேறுபாடுகளும்; ஆமோதம், ப்ரமோதம், ஸம்மோதம், வைகுண்டம் என்பதான ரூபத்தில் உள்ள நான்கு வ்யூஹ மூர்த்திகளின் இருப்பிடங்கள் கூறப்பட்டன. இப்படியாக நான்கு விதமான பொருள்களை உணர்த்துவதான நான்முகன் திருவந்தாதி (76) – பாட்டும் முறையும் - என்னும் பாசுரத்தில் கூறப்படுவதான சாஸ்த்ரங்களைக் கற்பதற்கு .........

**வ்யாக்யானம் -** (பெரிய தீவினி லித்யாதி) "நாவலம் பெரிய தீவு" என்கிற போகமோக்ஷ ஸாதநாநுஷ்ட்டாந பூமியாகையாலே த்வீபாந்தரங்களில் உத்க்ருஷ்டமான ஜம்பூ த்வீபத்தில் நவகண்டத்திலும் வைத்துக்கொண்டு வர்ஷாந்தரங்களைப் போலே பௌமமான ஸ்வர்க்க மென்னலாம்படி போக பூமியாயிராதே ஸ்வர்க்க மோக்ஷ ரூபமான பலங்களுக்கு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணுகைக் கீடான ஸ்தலமாய், "காயந்தி தேவா: கில கீதகாநி தந்யாஸ்து யே பாரதபூமிபாகே, ஸ்வர்க்காபவர்க்காஸ்பதமார்க்க பூதே பவந்தி பூய: புருஷாஸ் ஸுரத்வாத்" என்று தேவர்களும் ச்லாகிக்கும்படியான நவமகண்டமான பாரத வர்ஷமும், "துர்லபோ மாநுஷோ தேஹ:" என்றும், "அத்ர ஜந்மஸஹஸ்ராணாம் ஸஹஸ்ரைரபி ஸத்தம, கதாசித் லபதே ஜந்து: மாநுஷ்யம் புண்ய ஸஞ்சயாத்" என்றும் சொல்லுகிறபடியே, "மானிடப் பிறவியந்தோ" என்று துர்லபமாகச் சொன்ன மநுஷ்ய ஜந்மமும், "மாநுஷோ தேஹோ தேஹிநாம் க்ஷணபங்குர:" என்கிறபடியே, "மின்னின் னிலையில மன்னுயி ராக்கைகள்" என்று அஸ்திரமாகச் சொன்ன சரீரத்தினுடைய ஸ்த்தைர்யமும், சாஸ்த்ர ஜ்ஞாநயோக்ய வர்ணங்களில் ப்ரதம கண்யமாய், "குலங்களாய வீரிரண்டிலொன்று" என்கிற ப்ராஹ்மண ஜந்மமும், "தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா" என்கிறபடியே புத்தி கொழுந்துவிட்டு அப்யஸிக்கைக் குறுப்பான "கிளரொளியிளமை" என்கிற பால்யமும், "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்கிறபடியே எல்லாத்துக்கும் இசைவு வேண்டுகையாலே இதில் மூளுகைக் குறுப்பான இச்சையுமுண்டாய், "வேதநூற் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும்" என்று – "சதாயுர்


**Email:**sridharan_book@yahoo.co.in

வை புருஷ:” என்று வேதசாஸ்த்ரோக்தமான ஆயுஸ்ஸு நூறும் மநுஷ்யர்கள் தாங்கள் புகுந்தார்களாகிலுமென்கிற.

**விளக்கம்** - (பெரிய தீவினி லித்யாதி) - பெரியாழ்வார் திருமொழி (3-6-1) - நாவலம் பெரிய தீவு - என்னும் பாசுரத்தில் கூறுவதற்கு ஏற்ப இந்த உலக இன்பம் மற்றும் மோக்ஷம் என்பவற்றை அடையவைக்கும் கர்மங்களை இயற்ற ஏற்றதான பூமியாக உள்ளதால், மற்ற ஆறு த்வீபங்களைக் காட்டிலும் உயர்ந்ததான ஜம்புத்வீபம் (ஏழு த்வீபங்கள் - ஜம்பூ, ப்ளக்ஷ, புஷ்கர, குஸ, க்ரௌஞ்ச, சக, ஸால்மல) என்னும் நாவலம் தீவில்; ஸ்வர்க்க லோகம் என்பதான வெறும் இன்பம் அளிக்கவல்ல இடமாக மட்டும் இல்லாமல், ஸ்வர்க்கம் - மோக்ஷம் என்பதான பலன்களுக்கு ஏற்ற உபாயங்களைக் கைக்கொள்ள வல்ல இடமாகவும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-3-24) - காயந்தி தேவா: கில கீதகாநி தந்யாஸ்து யே பாரதபூமிபாகே, ஸ்வர்க்காபவர்க்காஸ்பதமார்க்க பூதே பவந்தி பூய: புருஷாஸ் ஸுரத்வாத் – ஸ்வர்கம், மோக்ஷம் என்பதான பேறுகளை அடைவதற்கு ஏற்றதாக உள்ள பரதகண்டத்தில், தெய்வத் தன்மையை அடைந்து அது முடிந்தவுடன் மீண்டும் மனிதர்களாக யார் பிறக்கிறாரோ அவர் சிறந்தவர் என்று தேவர்கள் பாடுகிறார்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப, தேவர்களும் போற்றும்படி உள்ளதான ஒன்பது கண்டங்களில் உள்ள ஒன்பதாவது கண்டமான பாரதகண்டத்தில் (ஒன்பது கண்டங்கள் - இளாவ்ருதம், பத்ராச்வம், ஹரிவர்ஷம், கேதுமாலம், ரம்யகம், ஹிரண்மயம், உத்தரகுரு, கிம்புருஷம் மற்றும் பாரதம்); ஸ்ரீமத் பாகவதம் (11-2-21) - துர்லபோ மாநுஷோ தேஹ: - பல சரீரங்கள் எடுக்கின்ற ஆத்மாவுக்கு, ஒரு நொடியில் அழியக்கூடிய மனித சரீரம் கிட்டுவது அரிது – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-3-24) - அத்ர ஜந்மஸஹஸ்ராணாம் ஸஹஸ்ரைரபி ஸத்தம, கதாசித் லபதே ஜந்து: மாநுஷ்யம் புண்ய ஸஞ்சயாத் - ஆத்மாவானது புண்ணியத்தில் மிகுதி காரணமாகவே ஆயிரம் ஆயிரம் பிறவிகளுக்குப் பின்னர் மனிதப் பிறவியைப் பெறுகிறது – என்றும், திருக்குறுந்தாண்டகம் (90) - மானிடப் பிறவியந்தோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப அரிதான மனிதப் பிறவி கிட்டினாலும்; (ஆக்கை நிலையும்) - ஸ்ரீமத் பாகவதம் (11-2-21) - மாநுஷோ தேஹோ

 **Email:**sridharan_book@yahoo.co.in

தேஹிநாம் க்ஷணபங்குர: - நொடிப்பொழுதில் அழியக்கூடிய மனிதப்பிறவி – என்றும், திருவாய்மொழி (1-2-2) – மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப நிலையற்றதாகக் கூறப்பட்ட அந்தச் சரீரம் நிலைநின்றாலும். (ஈர் இரண்டில் ஒன்றும்) – சாஸ்த்ர ஞானத்தைப் பெறுவதற்குத் தகுதியான வர்ணங்களில் முதன்மையானதும், திருச்சந்தவிருத்தம் (90) - குலங்களாய வீரிரண்டிலொன்று - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதும் ஆகிய அந்தணனாகிய பிறந்தாலும். (இளமையும்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-75) - தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா - ஆகவே ஞானம் நிறைந்த ஒருவன் எப்போதும் தனது இளம் வயதிலேயே புகழ்வதற்கு ஏற்றதான செயல்கள் செய்ய முயலவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப ஞானம் கொழுந்து விட்டுக் கற்பதற்கு ஏற்றதான திருவாய்மொழி (2-10-1) - கிளரொளி இளமை - என்று கூறுவது போன்றுள்ள இளமைப்பருவத்துடன் இருந்தாலும். (இசைவும் உண்டாய்) - பெரியதிருவந்தாதி (26) - யானுமென்னெஞ்சு மிசைந்தோழிந்தோம் – ஒன்று கூறுவதற்கு ஏற்ப எந்தச் செயலில் ஈடுபடுவதற்கும் ஆழ்ந்த மனவிருப்பம் அவசியம் என்பதால், அந்தச் செயலில் ஈடுபடுவதற்கான ஆசையும் உண்டானாலும். (புகுவரேலும்) – திருமாலை (3) – வேதநூற் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும் – என்றும், சதாயுர் வை புருஷ: - மனிதன் நூறு வயது உடையவன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப நூறு வயது ஆயுள் பெற்றனர் என்றாலும்.

**வ்யாக்யானம்** - இவ்வாயுஸ்ஸுக்குள்ளே, “அநந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பச்ச காலோ பஹவச்ச விக்நா:” என்றும், “ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி” என்றும் சொல்லுகிறபடியே, சாஸ்த்ராப்யாஸம் பண்ணவொண்ணாதபடி வரும் விக்நங்களுமற்று, “நின்றவா நில்லா நெஞ்சு” என்றும், “சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்” என்றும் சொல்லுகிறபடியே ஒரு விஷயத்தில் அரை க்ஷணமும் நில்லாதே இவனையடர்த்துத் தன் வழியே யிழுக்கும் மநஸ்ஸைக் கொண்டு, “கலையறக் கற்ற மாந்தர்” என்கிறபடியே ச்ருதி ஸ்ம்ருத்யாதி சாஸ்த்ரங்களைத் தாத்பர்யம் கைப்படும்படி அதிகரிக்கை. “ஆமாறறிவுடையாராவதரிதன்றே” என்று தாத்பர்யத்திலே யுற்று நிற்கை, யுக்தமாம்படி அறிவுடையராகை அரிதன்றோ வென்கிறபடியே அரிதென்று திருவுள்ளம் பற்றியிறே.

**விளக்கம்** - (என்கிறதுக்குள்ளே) – இப்படியாகப் பெற்ற இந்த ஆயுளுக்குள்ளே, அதாவது மரணம் அடைவதற்குள். (விக்னமற) – உத்தரகீதை (7-10) - அநந்தபாரம் பஹு வேதிதவ்யம் அல்பச்ச காலோ பஹவச்ச விக்நா: - எல்லையற்ற பல சாஸ்த்ரங்கள் கற்பதற்கு உள்ளன, அறிவதற்கு உள்ள காலம் மிகவும் குறைந்தது, அதில் ஏற்படும் தடைகள் ஏராளம் - என்றும், ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி – மஹான்கள் செய்யும் செயல்களுக்குக்கூட தடைகள் ஏற்படுகின்றன – என்றும் கூறுவதற்கு ஏற்ப சாஸ்த்ரங்களைக் கற்க இயலாதபடி உண்டாகும் தடைகள் ஏதும் இல்லாமல். (நின்றவா நில்லா பிரமாதியைக்கொண்டு)- பெரிய திருமொழி (1-1-4) - நின்றவா நில்லா நெஞ்சு - என்றும், ஸ்ரீமத் பகவத்கீதை (6-34) - சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் – அலைந்து திரியும் தன்மை கொண்டதான மனம் அந்தத் தன்மை காரணமாக எப்படிப்பட்ட வலிமை கொண்டவரையும் கலங்கும்படிச் செய்யும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எந்த ஒரு விஷயத்திலும் அரைநொடிப்பொழுது கூட நிலையாக நிற்காமல் மனிதனை இழுத்துக்கொண்டு தனது வழியில் செல்லும் மனதின் மூலமாக. (அறக்கற்கை) – திருமாலை(7) - கலையறக் கற்ற மாந்தர் - என்று கூறுவதற்கு ஏற்ப ச்ருதி, ஸ்ம்ருதி உள்ளிட்ட சாஸ்த்ரங்களை அவற்றின் ஆழ்பொருளுடன் சேர்த்துக் கற்பது என்பது. (அரிதென்றிறே) - பெரியதிருவந்தாதி (37) - ஆமாறறிவுடையாராவதரிதன்றே - என்று கூறுவதற்கு ஏற்ப ஆழ்ந்த பொருளில் பொருந்தி நிற்பது அரிது என்று திருவுள்ளத்தில் எண்ணியதால்தான் சூர்ணையின் இறுதியில் "பேரருளாலே சிங்காமை விரித்து" _ தனது க்ருபை காரணமாக விரிவாக உரைத்தான் – என்றார்.

**வ்யாக்யானம்** - (வேதஸாரோபநிஷதித்யாதி) "அஸாரமல்ப ஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே ரத்நாகர இவாம்ருதம்" என்று ஸாரதமமான சாஸ்த்ரத்தை பஜிப்பானென்கையாலே வக்ஷ்யமாணத்தின் ஸாரதமத்வத்தை தர்சிப்பிக்கிறார்; (வேதஸாரோபநிஷத்) என்றது பூர்வபாகத்தில் ஸாரமான வேதாந்த மென்றபடி. அயதார்த்த ப்ரதிபாதகமாகையாலே அஸாரமான பாஹ்ய சாஸ்த்ரங்கள் போலன்றிக்கே யதா பூதவாதியா யிருந்ததேயாகிலும், ச்யேநவிதி முதலாக ஜ்யோதிஷ்டோமாதிக ளீறாக ஐஹிக பாரலௌகிக புருஷார்த்த ஸாதநங்களை ப்ரதிபாதிக்கிற பூர்வபாகம், க்ஷுத்ர புருஷார்த்த தத் ஸாதந ப்ரதிபாதக மாகையாலும்

சாஸ்த்ராஸ்திக்யம் ப்ரக்ருத்யாத்ம விவேகம் இவற்றைப் பிறப்பிக்கும் மாத்ரமாகையாலும் அல்ப ஸாரமாயிருக்கும். அங்ஙனன்றிக்கே அநந்த ஸ்திர பல ப்ரஹ்ம ஸ்வரூபாதிகளையும் தத்ப்ராப்தி ஸாதநத்தையும் ப்ரதிபாதிக்கையாலே உபநிஷத் பாகம் ஸாரமாயிருக்கும்.

**விளக்கம்** - (வேதஸாரோபநிஷதித்யாதி) - வைகுண்ட தீக்ஷிதீயம் - அஸாரமல்ப லாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே ரத்நாகர இவாம்ருதம் - சாரம் ஏதும் இல்லாதபடி வேதங்களுக்குப் புறம்பாக உள்ளவற்றையும், அற்பமான பலன் அளிக்கவல்லதான வேதத்தின் முற்பாகத்தையும் (அல்லது கர்மகாண்டம்), வேதங்களின் சாரமாக உள்ள உபநிஷத்துக்களையும், உபநிஷத்துக்களின் சாரமாக உள்ள நாராயண அநுவாகத்தையும் கைவிட வேண்டும்; கடலில் மூழ்கி அமிர்தம் எடுப்பது போன்று நாராயண அநுவாகத்தின் சாரமாகிய விஷ்ணுகாயத்ரியை எடுத்தல் வேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, சாரத்தில் மிகவும் நுண்ணிய பகுதியை எடுத்துப் புஜித்தல் வேண்டும் என்பதை அனுசரித்து, தான் இனி அருளிச்செய்ய உள்ள திருஅஷ்டாக்ஷரத்தின் சீர்மையை உரைக்கிறார். (வேதஸாரோபநிஷத்) - வேதத்தின் பூர்வபாகமாகிய வேதாந்தம். அவை உண்மை அல்லாதவற்றையும் உணர்த்துகின்றன. ஆக சாரம் ஏதும் இல்லாத மற்ற சாஸ்த்ரங்கள் போன்று அல்லாமல், உள்ளதை உள்ளபடிக் கூறுவதாக உள்ளபோதிலும், ச்யேநவிதி தொடங்கி ஜ்யோதிஷ்டோமம் முடிய இந்த உலகில் இன்பம் அடைவதற்கான மார்க்கங்கள், ஸ்வர்கம் போவதற்கான மார்க்கங்கள் மற்றும் இவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து வேதங்களின் முற்பாகம் உரைக்கின்றன; ஆகவே தாழ்ந்த பலன்களைப் பெற்றுத் தரவல்ல வழிமுறைகளை உரைப்பதாலும், சாஸ்த்ரங்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்துதல் மற்றும் சரீரமும் ஆத்மாவும் வெவ்வேறு போன்றதான ஞானத்தை ஏற்படுத்துவதாலும், இந்தப் பூர்வபாகம் அல்பசாரம் என்றே கருதப்படும். இவ்விதம் அல்லாமல் எப்போதும் ஸ்திரமாக உள்ள மோக்ஷம், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் போன்றவற்றையும், இவற்றை அடைவதற்கான வழிமுறைகளையும் உணர்த்துவதால் உபநிஷத் பாகங்கள் வேதங்களுடைய சாரமாக உள்ளன.

**வ்யாக்யானம் -** அது தன்னிலும் அவ்வுபநிஷத்துக்களிற் சொல்லுகிற பரம்ப்ரஹ்ம பரதத்வ பரஞ்ஜோதி: பரமாத்மாதி ஸாமாந்யவாசி சப்தங்களாலும், விசேஷவாசியான சம்பு சிவாதி சப்தங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுகிறான் நாராயணனே யென்று பகவத் பரத்வத்தை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கிற அநந்ய பரமான நாராயணாநுவாகம்

ஸாரதரமா யிருக்கும். அது தன்னிலுங் காட்டில் ஸர்வஸ்மாத்பரத்வத்துக்கு ப்ரதாந லிங்கமான அவனுடைய ஸர்வாந்தராத்மத்வத்தை ப்ரகாசிப்பிப்பதாய், அவ்யாபகமான ஸகல பகவந் மந்த்ரங்களிலும் ச்ரேஷ்ட்டமாயிருக்கிற வ்யாபக மந்த்ர த்ரயத்தையும் ப்ரதிபாதிக்கிற விஷ்ணு காயத்ரி ஸாரதமாம யிருக்கும்.

**விளக்கம்** - (ஸாரதரநுவாக) - அந்த உபநிஷத்துக்களில் கூறப்படும் பரம்ப்ரஹ்ம, பரதத்வம், பரஞ்ஜ்யோதி, பரமாத்மா முதலான பொதுவான சொற்களால் உணர்த்தப்படுபவனும், சிறப்புச் சொற்களாகிய சம்பு, சிவன் போன்றவற்றாலும் உறுதிபட உரைக்கப்படுபவன் நாராயணனே ஆவான் என்று ஸர்வேச்வரனுடைய முதன்மைத் தன்மையை உறுதிபடத் தெளிவாக உரைக்கும் காரணத்தால், அந்த உபநிஷத்துக்களில் நாராயண அனுவாகம் என்பது சாரத்திலும் நுண்ணிய சாரமாக இருப்பதாகும். (ஸாரதம காயத்ரி) - அத்தகைய நாராயண அனுவாகத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவனாக உள்ள ஸர்வேச்வரத் தன்மைக்கு அடையாளமான அனைத்து உயிர்களுக்குள்ளும் நின்று அவற்றைத் தாங்கி இருத்தல் என்பதை உணர்த்துவதும், அவன் எங்கும் பரந்து நிற்பதை நேரடியாக உணர்த்தாமல் இருப்பதான ஸர்வேச்வரனைக் குறித்த மற்ற அனைத்து மந்த்ரங்களைக் காட்டிலும் அவன் எங்கும் வ்யாபித்து நிற்பதைக் கூறுவதால் உயர்ந்ததாக உள்ளதும் ஆகிய விஷ்ணுகாயத்ரி மிகவும் நுட்பமான சாரமாகும்.

**வ்யாக்யானம்** - இப்படியிருந்துள்ள காயத்ரியிலே வ்யாப்யாத்யாஹாராதி ஸாபேக்ஷமான வ்யாபகாந்தரங்களில் வ்யாவ்ருத்தமாகையாலே, “நாராயணாய வித்மஹே” என்று ஆதாரம் தோற்ற ப்ரதமத்திலே ஓதப்படுகிற “ஓத்தின் பொருள் முடிவுமித்தனையே - மாதவன் பேர் சொல்லுவதே யோத்தின் சுருக்கு” என்கிறபடியே வேதாந்த தாத்பர்யமாய், “ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநிச, ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்த்தம்” என்கிறபடியே ஸகல வேத ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை,

**விளக்கம்** - (முதல் ஓதுகிற பொருள் முடிவான சுருக்கை) - இப்படியாக உள்ள விஷ்ணுகாயத்ரியில், எங்கும் வ்யாபித்து நிற்பதை உணர்த்தவல்லதான சொற்களில் இடம் பெறுவதான விஷ்ணு, வாஸுதேவன் என்பதைக் காட்டிலும் வேறுபட்டதாக உள்ளதால், புருஷஸூக்தம் - நாராயணய வித்மஹே - நாராயணனை உபாஸிக்கிறோம் -

என்னும்படி அதிகமான விருப்பு வெளிப்படும்படியும், இரண்டாம் திருவந்தாதி (39) - ஓத்தின் பொருள் முடிவுமித்தனையே - மாதவன் பேர் சொல்லுவதே யோத்தின் சுருக்கு - என்பதற்கு ஏற்ப அனைத்து வேதாந்தங்களின் ஆழ்பொருளாய் உள்ளதும், பாஞ்சராத்ரம் - ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநிச, ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்த்தம் - ருக், யஜுர், ஸாம, அதர்வண வேதங்களிலும் மற்ற இதிஹாஸங்களிலும் உள்ள அனைத்தும் அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் உள்ளே பொதித்துள்ளன - என்பதற்கு ஏற்ப அனைத்து வேதங்களுடைய சுருக்கமாக உள்ளதும் ஆகிய “ஓம் நமோ நாராயணாய” என்பதான திருமந்த்ரத்தை.

**வ்யாக்யானம்** - (தெய்வவண்டாயித்யாதி) வேதஸாரமாய், “தேனும் பாலுமமுதுமாய திருமால் திருநாமம்” என்னும்படி யிருக்கிறவித்தை வேதத்தில் நின்றும் அவன் க்ரஹிக்கிறபோது க்ரஹித்த ப்ரகாரத்தை த்ரிப்ரகாரமாக வர்ணித்தருளிச் செய்கிறார். அதாவது, “தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டா” கையாலே ஷட்பதமானது சாகா ஸஞ்சாரம் பண்ணி மதுவை யெடுக்குமா போலே ஸாரபூத ஸமஸ்தார்த்த போதகதயா ஸர்வ ரஸமான தேன் போலே இருக்கிற வித்தை வேதசாகைகளிலே தேனை க்ரஹிக்குமா போலே க்ரஹித்தபடியும், “அன்னமாயன்றங் கருமறை பயந்தான்” என்கிறபடியே ஹம்ஸ ரூபியானவ னாகையாலே அன்னமானது நீரிலே கலந்து கிடக்கிற பாலை விவேகித் தெடுக்குமாபோலே, “நானும் சொன்னேன் நமரு முரைமின்” என்னும்படி யிருக்கையாலே ஸர்வாதிகாரமான பால் போலேயிருக்கிறவித்தை, “ஓதம் போல் கிளர் வேதநீரிலே” பாலை க்ரஹிக்குமாபோலே க்ரஹித்தபடியும், “அமுதங் கொண்ட பெருமான்” என்கிறபடியே அஸுரபயபீதராய் அமரத்வ ஸாபேக்ஷரான தேவர்களுடைய ரக்ஷணார்த்தமாக க்ஷீராப்தியை மதித்து அம்ருதத்தை வாங்கினாப்போலே ஸம்ஸாரபீதராய் அம்ருதத்வ காமரானவர்களுடைய ரக்ஷணார்த்தமாக விலக்ஷண போக்யமாய் விநாசஹரமு மாகையாலே அம்ருதம்போலே யிருக்கிறவித்தை “நால்வேதக் கடலிலே” அம்ருதத்தை க்ரஹிக்குமாபோலே க்ரஹித்தபடியும் சொல்லுகிறது.

**விளக்கம்** – வேதங்களின் ஸாரமாகவும், பெரிய திருமொழி (6-10-6) - தேனும் பாலுமமுதுமாய திருமால் திருநாமம் - என்னும்படியும் உள்ள இந்தத் திருமந்த்ரத்தை வேதங்களிலிருந்து அவன் எடுத்தான்; இப்படியாக அவன் இந்த ஸாரத்தை எடுத்த முறையை மூன்றுவிதமாக வர்ணித்து அருளிச்செய்கிறார். அவையாவன:


**Email:**sridharan_book@yahoo.co.in

- திருவாய்மொழி (9-9-4) - தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தெய்வவண்டு என்பதால், ஆறுகால்கள் கொண்ட வண்டு ஒன்று பல இடங்களிலும் அலைந்து திரிந்து தேனை எடுப்பது போன்று, அந்தத் தேன் போன்றுள்ள இந்தத் திருமந்த்ரத்தை, வேதங்களாகிய சாகைகளில் இருந்து தேனை எடுப்பது போன்று எடுத்தான்; எடுத்த பின்னர் தனது கருணை காரணமாக விரிவாக உணர்த்தினான்.

- பெரிய திருமொழி (5-7-3) - அன்னமாயன்றங் கருமறை பயந்தான் - என்பதற்கு ஏற்ப ஹம்ஸ வடிவமாக அவதாரம் செய்தவன் என்பதால், அன்னம் ஒன்று நீரில் கலந்து நிற்கும் பாலைத் தனியே பிரித்து எடுக்கும் செயல் போன்று, பெரிய திருமொழி (6-10-6) - நானும் சொன்னேன் நமரு முரைமின் - என்பதற்கு ஏற்ப அனைவருக்கும் ஏற்றபடியான பால் போன்றுள்ள இந்தத் திருமந்த்ரத்தை, திருவாய்மொழி (1-8-10) - ஓதம் போல் கிளர் வேதநீரனே - என்பதற்கு ஏற்ப பாலைப் பிரித்து எடுப்பது போன்று எடுத்தான்.

- பெரிய திருமொழி (6-10-3) - அமுதங் கொண்ட பெருமான் - என்பதற்கு ஏற்ப அசுரர்களைக் கண்டு அச்சம் கொண்டவர்களாக, இறவாமை விரும்பியவர்களாக உள்ள தேவர்களைப் பாதுகாப்பதற்காக திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தது போன்று, ஸம்ஸாரத்தைக் கண்டு அச்சம் கொண்டு மோக்ஷத்தை அடைய விரும்புபவர்களைக் காப்பாற்றுவதற்காக மேன்மை உள்ளதாகவும், இன்பம் அளிப்பதாகவும், ஸம்ஸாரத்தை நீக்குவதால் அமிர்தம் போன்றதாகவும் இருக்கிற திருமந்த்ரத்தை, பெரியாழ்வார் திருமொழி (4-3-11) – நால்வேதக் கடலமுதை - என்பதற்கு ஏற்ப அமிர்தத்தைத் திருப்பாற்கடலிலிருந்து எடுப்பது போன்று எடுத்தான்.

**வ்யாக்யானம் -** ஆக விப்படி வேதஸாரமான வித்தை ஸ்வயமேவ எடுத்து, "அமரர் பெரு விசும்பருளும் பேரருளாளன் – வதரியாச்சிராமத் துள்ளான்" என்கிறபடியே நித்யஸூரிகளுக்கு போக்யமாய் பரமாகாச சப்த வாச்யமான பரமபதத்தைக் கொடுப்பதான நிர்ஹேதுக க்ருபையாலே, "நரநாரணனா யுலகத் தறநூல் சிங்காமை விரித்தவன்" என்கிறபடியே ஸ்ரீபதரிகாச்ரமத்திலே நரநாராயண ரூபேண அவதரித்துத்

தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று ஸ்வரூப சாஸ்த்ரம் ஸங்குசிதமாகாமல் உபதேசாநுஷ்ட்டாநங்களாலே விஸ்த்ருதமாம்படி பண்ணிற்று – (அறக்கற்கை யரிதென்றிறே) என்றத்தோடே அந்வயிக்கிறது.

**விளக்கம்** – இப்படியாக அனைத்து வேதங்களுடைய சாரமாக உள்ள இந்தத் திருமந்த்ரத்தைத் தானாகவே எடுத்து, பெரிய திருமொழி (1-4-4) - அமரர் பெரு விசும்பருளும் பேரருளாளன் வதரியாச்சிராமத் துள்ளான் - என்பதற்கு ஏற்ப நித்யஸூரிகளுக்கு இனியதாக உள்ளதும், “பரமாகாசம்” என்று போற்றப்படுவதும் ஆகிய பரமபதத்தை அளிப்பதாகிய தனது காரணம் இன்றிப் பொங்கிப் பெருகும் க்ருபை காரணமாக, பெரிய திருமொழி (10-6-1) - நரநாரணனா யுலகத் தறநூல் சிங்காமை விரித்தவன் - என்று கூறுவதற்கு ஏற்ப பத்ரிநாத் என்ற திவ்யதேசத்தில் நரநாராயண ரூபமாகத் தானே அவதரித்து, தானே சிஷ்யனும் தானே ஆசார்யனுமாய் நின்று, ஆத்மாவின் ஸ்வரூபத்தை உணர்த்தவல்ல சாஸ்த்ரம் எந்தவிதத்திலும் குறைந்து விடாமல், தனது உபதேச முறைகளால் நன்றாக விரியும்படியாக அருளிச்செய்தான்.

17. முனிவரை யிடுக்கியும் முந்நீர் வண்ணனாயும் வெளியிட்ட சாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விசிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்.

**அவதாரிகை** - ஆக ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே ஸம்ஸாரி சேதநரை உஜ்ஜீவிப்பிக்கைக்காக சாஸ்த்ரத்தையும் சாஸ்த்ர தாத்பர்யமான திருமந்த்ரத்தையும் வெளியிட்டானென்று நின்றது கீழ். இவை யிரண்டையும் வெளியிட்ட ப்ரகாரமென்? அவற்றுக்கு விஷயமேது? என்னுமாகாங்க்ஷையிலே தத்ப்ரகாரங்களையும் தோற்றுவித்துக் கொண்டு விஷயங்களையும் சொல்லுகிறது (முனிவரை யித்யாதி).

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரன் தன்னுடைய கருணை காரணமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள ஜீவாத்மாவைக் கரையேற்றுவதற்காக சாஸ்த்ரங்களையும், அந்தச் சாஸ்த்ரங்களின் ஆழ்பொருளாக உள்ள திருமந்த்ரத்தையும் அருளிச்செய்தான் என்று உரைத்தார். இந்த இரண்டையும் அவன் எவ்வாறு வெளியிட்டான்? அவற்றுக்கான இலக்கு எது? என்று பல கேள்விகள் எழலாம். இதற்கு விடை அளிக்கும் விதத்தில்

அவற்றை எவ்வாறு வெளிப்படுத்தினான் என்பதையும், அவற்றுக்கான இலக்குகள் எவை என்பதையும் இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, "இருள்கள் கடியும் முனிவர்" என்கிற ஸ்மர்த்தாக்களான வ்யாஸாதி ருஷிகளை, "க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும், கோ ஹ்யந்ய: புண்டரீகாக்ஷாத் மஹாபாரத க்ருத் பவேத்" என்கிறபடியே தானாகச் சொல்லலாம்படி அந்தர்யாமியாய் எடுத்து நின்று தந்முகேந வெளியிட்ட சாஸ்த்ரத்துக்கு சேதநருடைய தேஹ விசிஷ்ட வேஷம் விஷயம். "வதரியாச்சிராமத் துள்ளானைக் கருங்கடல் முன்னீர் வண்ணனை" என்கிறபடியே ஸ்ரீபதரிகாச்ரமத்திலே ஸ்வேந ரூபேண நின்று வெளியிட்ட (சாஸ்த்ர) தாத்பர்யமான திருமந்த்ரத்துக்கு சேதநருடைய நிஷ்க்ருஷ்ட வேஷம் விஷயமென்கை. இத்தால் சாஸ்த்ரத்துக்கு தேஹத்திலே நோக்கு, தாத்பர்யத்துக்கு ஸ்வரூபத்திலே நோக்கு என்றதாய்த்து.

**விளக்கம்** - (முனிவரை இடுக்கியும்) – திருவாய்மொழி (10-7-7) – இருள்கள் கடியும் முனிவர் – என்று கூறுவதற்கு ஏற்ப ஸ்ம்ருதிகளின் தலைவர்கள் என்று போற்றப்படும் வ்யாஸர் போன்றவர்களை, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-4-5) - க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும், கோ ஹ்யந்ய: புண்டரீகாக்ஷாத் மஹாபாரத க்ருத் பவேத் - க்ருஷ்ண த்வைபாயனர் என்று திருநாமம் கொண்ட வ்யாஸ முனிவரை அனைத்திற்கும் எஜமானனாக உள்ள நாராயணன் என்றே அறிவாயாக. தாமரை போன்ற திருக்கண்கள் கொண்ட அவன் அல்லாமல் மற்ற யார் ஒருவர் உயர்ந்த மஹாபாரதத்தைச் செய்ய இயலும்? - என்று கூறுவதற்கு ஏற்ப, "இவர் ஸர்வேச்வரன்" என்று தானென உரைக்கும்விதமாக அந்தர்யாமியாக நின்று வ்யாஸர் மூலமாக வெளிப்படுத்திய சாஸ்த்ரத்துக்கு, சரீரத்துடன் கூடிய ஆத்மாவே இலக்காக உள்ளது. (முன்னீர் வண்ணன்) - பெரியதிருமொழி (1-4-10) - வதரியாச்சிராமத் துள்ளானைக் கருங்கடல் முன்னீர் வண்ணனை - என்று கூறுவதற்கு ஏற்ப பத்ரிநாத் க்ஷேத்ரத்தில் தானே சிஷ்யனும் ஆசார்யனுமாக, நரநாராயணனாக அவதரித்து, வெளியிட்ட சாஸ்த்ர ஆழ்பொருளை திருமந்த்ரத்திற்கு, ஆத்ம ஸ்வரூபம் இலக்காக உள்ளது. ஆக சாஸ்த்ரத்தின் இலக்கு சரீரம் என்றும், சாஸ்த்ரத்தின் ஆழ்பொருளான திருமந்திரத்தின் இலக்கு ஆத்மா என்றும் தெளிவாகிறது.

18. தோல்புரையே போமதுக்குப் பழுதிலா யோக்யதை வேணும்; மனமுடையீ ரென்கிற ச்ரத்தையே அமைந்த மர்மஸ்பர்சிக்கு நானும் நமருமென்னும்படி ஸர்வருமதிகாரிகள்.

**அவதாரிகை** - ஏவம் பூதமான விவை யிரண்டும் ஸர்வாதிகாரமோ, அதிக்ருதாதிகாரமோ வென்னச் சொல்லுகிறது (தோல்புரை யித்யாதி).

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட இரண்டும் அனைவராலும் கற்பதற்கு ஏற்றதோ அல்லது குறிப்பட்ட சிலர் மட்டுமே கற்கத் தகுந்ததோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது விசிஷ்ட வேஷ விஷயமாகையாலே ஆந்தரமான ஸ்வரூபத்தி லூற்றமின்றியே மேலெழ தேஹத்திலே நோக்காய் நடக்கிற சாஸ்த்ரத்துக்கு, “பழுதிலா வொழுகலாறு” என்கிறபடியே நெடுகப் போருகிற வம்ச ப்ரவாஹத்திலே உத்பத்தியிலே யாதல், ஆசாரத்திலேயாதல் ஒரு பழுதற்றிருக்கையாகிற யோக்யதை வேணும்; “கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்” என்றும், “ச்ரத்தைவ காரணம் பும்ஸாம் அஷ்டாக்ஷர பரிக்ரஹே” என்றும் சொல்லுகிறபடியே ச்ரத்தாமாத்ரமே அமைந்த ஸ்வரூப ஸ்பர்சியான தாத்பர்யத்துக்கு, “நானும் சொன்னேன் நமருமுரைமின் நமோ நாராயணமே” என்று சொல்லும்படி யோக்யாயோக்ய விபாகமற ஸர்வரு மதிகாரிக ளென்கை. இத்தால் சாஸ்த்ர தாத்பர்யங்களின் அதிக்ருதாதிகாரத்வ ஸர்வாதிகாரத்வங்களை தத்தேது ஸஹிதமாகச் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** - (தோல்புரையே போமது) - சரீரத்தோடு கூடிய ஆத்மாவை இலக்காகக் கொண்டுள்ளது என்பதால், உள்ளே இருக்கும் ஆத்மாவின் ஸ்வரூபத்தில் ஊற்றம் இல்லாமல் மேலே உள்ள சரீரத்தில் இலக்கு வைக்கும் சாஸ்த்ரங்களுக்கு. (பழுதிலா யோக்யதை வேணும்) - திருமாலை (42) - பழுதிலா வொழுகலாறு – என்று கூறுவதற்கு ஏற்ப வழிமுறைகள் தவறாமல் உள்ள குலத்தில் பிறவி எடுத்தல், எந்தவிதமான தவறுதலும் இல்லாமல் ஒழுக்கத்துடன் வாழ்தல் என்பதான தகுதிகள் அவசியமாகிறது. (மனம் உடையீர்) – திருவாய்மொழி (10-5-1) - கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் - என்றும், பாஞ்சராத்ரம் - ச்ரத்தைவ காரணம் பும்ஸாம் அஷ்டாக்ஷர பரிக்ரஹே - ஆடவர்கள் திருஅஷ்டாக்ஷர மந்த்ரம் கற்பதற்குக் காரணம் ச்ரத்தையே ஆகும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ச்ரத்தை என்பது மட்டுமே போதுமானது என்றுள்ளதும், ஆத்மாவை

இலக்காக உடையதும் ஆகிய திருமந்திரத்துக்கு, பெரியதிருமொழி (6-10-6) - நானும் சொன்னேன் நமருமுரைமின் நமோ நாராயணமே - என்பதற்கு ஏற்ப இவர் தகுதியானவர், இவர் தகுதியற்றவர் என்பதான வேறுபாடுகள் இன்றி அனைவருமே தகுதியானவர்கள் ஆவர். இதன் மூலம், சாஸ்த்ரங்கள் அனைவரும் கற்காதபடி இருப்பதற்கான காரணமும், திருமந்த்ரம் அனைவரும் கற்கலாம்படி உள்ளதற்கான காரணமும் அருளிச்செய்யப்பட்டது.

19. சாஸ்த்ரிகள் தெப்பக்கையரைப்போலே இரண்டையு மிடுக்கிப் பிறவிக்கடலை நீந்த ஸாரஜ்ஞர் விட்டத்திலிருப்பாரைப்போலே இரு கையும் விட்டு கரை குறுகும் காலமெண்ணுவர்கள்.

**அவதாரிகை** - இனிமேல் இந்த சாஸ்த்ர நிஷ்டராயும் தாத்பர்ய நிஷ்டராயு மிருக்கும் முமுக்ஷுக்கள் படிகளைச் சொல்லுகிறது (சாஸ்த்ரிகளித்யாதி).

**விளக்கம்** – அடுத்துச் சாஸ்த்ரங்களில் நிலைநிற்பவர்களாயும், சாஸ்த்ரங்களின் ஆழ்பொருளான திருமந்த்ரத்தில் நிலை நிற்பவர்களாயும் உள்ள முமுக்ஷுக்கள் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "ஆத்மா வா அரேத்ரஷ்டவ்யச் ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய", "ஆத்மேத்யேவோபாஸீத", "ஓமித்யாத்மாநம் த்யாயத" என்று ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வக பகவத்ப்ராப்தி ஸாதநமாக பகவ துபாஸநத்தை விதித்து, "அம்ருதஸ்யைஷ ஸேது:", "பலமத உபபத்தே:" என்று பகவானே அதுக்கு பலப்ரதனாகவும் சொல்லும் சாஸ்த்ரத்திலே நிஷ்டரானவர்கள் ஆறு நீஞ்சுவார் தெப்பத்தை ஒரு கையிலே யிடுக்கித் தாங்களும் ஒரு கை துழாவுமா போலே ஸ்வயத்நமும் தத்ஸாத்ய பகவத் க்ருபையுமாகிற உபயத்தையு மவலம்பித்துக்கொண்டு, "பிறவிக்கடல் நீந்துவார்க்கே" என்கிறபடியே ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடக்கத்தேட,

**விளக்கம்** - (சாஸ்த்ரிகள்) - ப்ருஹத் உபநிஷத் - ஆத்மா வா அரேத்ரஷ்டவ்யச் ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய – பரம்பொருளைக் குறித்துக் கேட்கத் தக்கவன், மனனம் செய்யத்தக்கவன், த்யானம் செய்யத்தக்கவன், நேரடியாக காணத் தக்கவன் - என்றும், ப்ருஹத் உபநிஷத் - ஆத்மேத்யேவோபாஸீத - ஆத்மா என்றே


**Email:**sridharan_book@yahoo.co.in

புகழ்ந்து வணங்கவேண்டும் – என்றும், முண்டக உபநிஷத் - ஓமித்யாத்மாநம் த்யாயத – ஆத்மாவையே "ஓம்" என்பதாக த்யானித்து – என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரத்தில் உண்டாகக்கூடிய துன்பத்தை விட்டு நீங்கி ஸர்வேச்வரனை அடைவதற்கான மார்க்கமான ஸர்வேச்வரனை உபாஸித்தல் என்பதை விதித்து; முண்டக உபநிஷத் - அம்ருதஸ்யைஷ ஸேது: - பரம்பொருளே அமிர்தமாகிய மோக்ஷ காரணம் - என்றும், உத்தரமீமாம்ஸை – பலமத உபபத்தே: – அனைத்து பலன்களும் பரம்பொருளிடமிருந்தே கிட்டுகிறது – என்றும் கூறுவதற்கு ஏற்ப உபாஸனைக்கான பலனை அளிப்பது பரம்பொருளே ஆவான் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவ்விதம் கூறும் சாஸ்த்ரங்களில் நிலைநிற்பவர்கள் - ஆற்றில் மிதக்க உதவும் மரக்கட்டை ஏதேனும் ஒன்றை ஒரு கையில் பிடித்தும், மற்றொரு கையால் நீரைத் தள்ளியபடியும் வருவது போன்று – தங்களுடைய முயற்சி மற்றும் தங்கள் முயற்சியால் கிட்டும் பகவானின் கருணை ஆகிய இரண்டையும் பற்றியபடி ஸம்ஸாரக் கடலைக் கடக்க முயல்வார்கள்.

**வ்யாக்யானம்** - ஸ்வயத்நநிஷேத பூர்வகமாக ஆத்மாவின் பகவதேகோபாயத்வத்தை ப்ரதிபாதிக்கிற சாஸ்த்ரஸாரமான திருமந்த்ரஜ்ஞரானவர்கள், ஓடமேறினவர்கள் தீரகமநார்த்தமான ஸ்வயத்நத்தையும் தெப்பத்தையும் கைவிட்டு "கரை குறுகுவது எப்போது" என்று பார்த்துக்கொண்டு அதன் விட்டத்திலே யிருக்குமாபோலே, "விஷ்ணுபோதம்" என்கிறபடியே அக்கரையும் இக்கரையும் ஊடுருவ நின்று ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடத்தும் "வைகுந்த னென்பதோர் தோணியை" ஸம்ஸார நிஸ்தாரகமாகப் பற்றி, தத்ஜ்ஞாந சக்த்யாத்யநு ஸந்தானத்தாலும் ஸ்வபாரதந்த்ர்யத்யநு ஸந்தானத்தாலும் நிர்ப்பரராகையாலே இரண்டு கையும் விடுமாபோலே, ஸ்வயத்நரூபோபாஸநாதியையும் தத்ஸாத்ய பகவத் க்ருபையையும் அவலம்பிக்கையை விட்டு கேவல பகவத் க்ருபையே உத்தாரக மென்றத்யவஸித்து, "கூவிக் கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ" என்றும், "ஆக்கை விடும் பொழுதெண்ணே" என்றும் சொல்லுகிறபடியே பகவத்ப்ராப்தியாகிற கரையைக் குறுகுகைக் கீடான கால சிந்தனை பண்ணா நிற்பர்களென்கை. இத்தால் சாஸ்த்ரஜ்ஞருடையவும் ஸாரஜ்ஞருடையவும் ப்ரபத்தி க்ரமம் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** - (ஸாரஜ்ஞர்) – ஆத்மாவானது தனது முயற்சியைக் கைவிட்டு ஸர்வேச்வரன் ஒருவனை மட்டுமே உபாயமாகப் பற்றும்படியாக இருக்கத்தக்கது என்று சாஸ்த்ரங்களின் ஆழ்பொருளான திருமந்திரம் உணர்த்துகிறது. இப்படிப்பட்ட திருமந்த்ரத்தில்

நிலைநிற்பவர்கள் ஆற்றினைக் கடக்க ஓடத்தில் ஏறியவர்கள் போன்றவர்கள் ஆவர்; அதாவது அவர்கள் ஆற்றைக் கடக்கவேண்டிய தாங்கள் செய்யும் முயற்சி என்று ஏதும் செய்யாமலும், மரக்கட்டை போன்று எதனையும் நாடாமலும், “கரை சேர்வது எப்போது” என்று பார்த்தபடி, அந்த ஓடத்தின் மேல் தளத்தில் அமர்ந்துள்ளது போன்று, ஸ்ரீவிஷ்ணுதர்மம் - விஷ்ணுபோதம் - ஸம்ஸாரத்தைக் கடக்க விஷ்ணு அல்லாமல் வழி இல்லை - என்பதற்கு ஏற்ப, அக்கரையும் இக்கரையும் தொடும் விதம் பரந்து நிற்கும் ஸம்ஸாரப் பெருங்கடலைக் கடக்கவைப்பதான நாச்சியார் திருமொழி (5-4) – வைகுந்தன் என்பதோர் தோணி - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் என்ற தோணியை உறுதியாகப் பற்றி, அவனுடைய ஞானம், சக்தி ஆகியவற்றை எப்போதும் எண்ணியும், தாங்கள் அவனிடம் வசப்பட்டுள்ள நிலையை எண்ணியும் பாரம் அற்றுள்ளவர்களாக இருப்பதால், இரண்டு கைகளையும் விடுவது போன்று, தங்களுடைய முயற்சியால் செய்யப்படும் வாழ்த்து போன்றவற்றையும் அதன் மூலம் உண்டாக்கவல்ல பகவத் அனுக்ரஹம் என்பதைப் பற்றுக் கோலாகப் பற்றுதலைக் கைவிட்டு, பகவத் கருணை என்பது மட்டுமே தங்களைக் கரை ஏற்றவல்ல உபாயம் என்று எண்ணுவர்; இவ்விதம் எண்ணியபடி, திருவாய்மொழி (6-4-9) - கூவிக் கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ - என்றும்; திருவாய்மொழி (1-2-9) – ஆக்கை விடும் பொழுதெண்ணே - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை அடைவதான கரையைக் குறுக்குவதற்குத் தகுதியான காலத்தைக் குறித்துச் சிந்தித்தபடி இருப்பர். இப்படியாகச் சாஸ்த்ரங்களில் நிலைநிற்பவர்கள், திருமந்த்ரத்தில் நிலைநிற்பவர்கள் ஆகியவர்களுடைய சிந்தனைகளில் உள்ள விதங்களை உணர்த்தினார்.

20. இவை ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந் துணரவும், உணர்வைப் பெறவூர மிகவுணரவு முண்டாம்.

**அவதாரிகை** - இவர்களுக்கு இவ்வாகாரங்களுண்டாகைக்கு அடி இன்னதென்கிறது (இவையித்யாதி).

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான அதிகாரிகளுக்கு இத்தகைய தன்மை உண்டாகக் காரணம் இவை என்று அருளிச்செய்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, சாஸ்த்ரிகளானவர்களுக்கு, “உணர்ந்துணர்ந்திழிந்தகன் றுயர்ந்துருவியந்த விந்நிலைமை யுணர்ந்துணர்ந் துணரிலும்” என்கிறபடியே ஆத்ம ஸ்வரூபத்தை ஜ்ஞப்தி மாத்ரமன்றிக்கே நித்யஜ்ஞாந குணகமாய் அந்த ஜ்ஞாநத்தாலே எங்குமொக்க வ்யாபித்து தேஹத்திற்காட்டில் வேறுபட்டிருக்குமதாய் அந்த ஜ்ஞாத்ருத்வ பலாயாத கர்த்ருத்வ (போக்த்ருத்வ) ஸஹிதமாய் பகவச்சேஷமா யிருக்குமென்று ச்ரவண மநநங்களாலே ஸாக்ஷாத்கரிக்கவே ஸ்வயத்நந்தாலே ஸம்ஸாரநிஸ்தரணம் பண்ணத் தேடுகையாகிறவிது உண்டாம். ஸாரஜ்ஞரானவர்களுக்கு ஆத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தை தர்சிப்பிக்கைக்கு உடலாக, “உணர்வு முயிரு முடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயா முணர்வைப் பெறவூர்ந்து” என்கிறபடியே வைஷயிக ஜ்ஞாநமும் ப்ராணனும் சரீரமும் மற்று மபரிச்சேத்யமான ப்ரக்ருதி விகாரங்களும் ப்ரக்ருதியும் ஹேயமென்னு மறிவைப் பெறும்படி நிர்ஹேதுகமாக ஈச்வரன் நடத்த, “மெய்ம்மையை மிகவுணர்ந்து” என்கிறபடியே ஆத்ம ஸ்வரூபத்தை தேஹாதி விலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய் ஜ்ஞாத்ருத்வாதி குணகமாய் ததீய சேஷத்வ பர்யந்த தச்சேஷத்வ யுக்தமாய் தத்காஷ்ட்டையான பாரதந்த்ர்ய யோக்யதைக வேஷமா யிருக்குமென்று உணரவே ஸ்வபரத்தை அவன் மேலே போகட்டு ஸ்வயத்ந ரஹிதரா யிருக்கையாகிற விது உண்டாமென்கை. இத்தால் இவர்களுடைய ஸ்வரூப ஜ்ஞாந தாரதம்யமே கீழ்ச்சொன்ன வாகாரங்கள் இவர்களுக்கு உண்டாகைக்கு ஹேது வென்றதாயிற்று. ஆக “முனிவரை யிடுக்கியும்” என்று தொடங்கி, இவ்வளவாக சாஸ்த்ர தாத்பர்யங்களின் விஷய பேதமும், அதிகாரி பேதமும் அவ்வதிகாரிகளின் ப்ரதிபத்தி பேதமும், அதுக்கடியான ஜ்ஞாந தாரதம்யமும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - சாஸ்த்ரங்களில் ஆழ்ந்து நிற்பவர்களுக்கு: திருவாய்மொழி (1-3-6) - “உணர்ந்துணர்ந்திழிந்தகன் றுயர்ந்துருவியந்த விந்நிலைமை யுணர்ந்துணர்ந் துணரிலும் - என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்ம ஸ்வரூபமானது ஞானம் மட்டும் அல்ல, ஞானம் என்பதைக் குணமாகவும் கொண்டது; அந்த ஞானம் காரணமாக எங்கும் பரவி, சரீரத்தைக் காட்டிலும் வேறாக இருந்து, ஞானத்தைக் குணமாகக் கொண்டுள்ளதால் கர்மம் இயற்றுதல் மற்றும் அதன் பலனை அனுபவித்தல் போன்றவற்றோடு கூடியது; ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ளதால், கேட்டல் மற்றும் எண்ணுதல் ஆகியவற்றால் உணரப்படுகிறது; அதன் காரணமாக தங்களுடைய முயற்சியால் ஸம்ஸாரக் கடலைக் கடக்கும் முயற்சியைத் தேடுதல் என்ற எண்ணம் ஏற்படும். சாஸ்த்ரங்களின் சாரமாக

உள்ள திருமந்த்ரத்தில் நிலை நிற்பவர்களுக்கு: ஆத்மஸ்வரூபத்தின் வேறுபாட்டினை உணர்த்தவல்லதான திருவாய்மொழி (8-8-3) - உணர்வு முயிரு முடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயா முணர்வைப் பெறவூர்ந்து - என்று கூறுவதற்கு ஏற்ப, உலக ஞானமும், உயிரும், சரீரமும், எல்லையில்லாதபடியான ப்ரக்ருதி மாற்றங்களும், ப்ரக்ருதியும் மிகவும் தாழ்ந்தவை என்பதால் கைவிடத்தக்கவை என்னும் அறிவைப் பெறும்படியாக ஸர்வேச்வரன் எந்த ஒரு காரணமும் இன்றி வழி நடத்துகிறான்; ஆகவே திருமாலை (38) - மெய்ம்மையை மிகவுணர்ந்து - என்பதற்கு ஏற்ப ஆத்ம ஸ்வரூபத்தை - சரீரம் போன்றவற்றைக் காட்டிலும் வேறுபட்டது, ஞானம் மற்றும் ஆனந்தமே வடிவானது, அறியும் தன்மை போன்றவற்றைக் குணமாகக் கொண்டது, அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்வதை முடிவாக உடையதான பகவானுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதைத் தன்மையாகக் கொண்டது, அந்த அடிமை நிலைக்கு எல்லையான பகவானுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் மற்றும் இனியதாக இருத்தல் என்பதைத் தனக்குத் தன்மையாகக் கொண்டது - என்று உணர்கிறார்கள்; ஆகவே தங்களுடைய பாரத்தை அந்த ஸர்வேச்வரன் மீது ஏற்றி, தங்களுடைய முயற்சி ஏதும் அற்றவர்களாக இருத்தல் என்ற நிலை ஏற்படும். ஆகவே இவ்விருவர்களுடைய ஆத்மஸ்வரூபம் குறித்து ஞானத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வு என்பதே இவர்களுக்கு மேலே கூறியபடி எண்ணம் ஏற்படக் காரணம் ஆகிறது என்று கருத்து. ஆகவே (சூர்ணை 17) - முனிவரை யிடுக்கியும் - என்பது தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய - சாஸ்த்ரங்கள், சாஸ்த்ரங்களின் சாரமான திருமந்திரம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள், தகுதி வேறுபாடுகள், அதிகாரிகளின் எண்ணத்தில் உள்ள வேறுபாடுகள், அவற்றுக்குக் காரணமாக உள்ள ஞானத்தின் ஏற்றத்தாழ்வுகள் குறித்து உணர்த்தினார்.

## 21. சேஷத்வ போக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள்.

**அவதாரிகை** - ஸ்வரூப ஜ்ஞாநமென்றும் ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநமென்றும் ஆத்ம ஸ்வரூப விஷய ஜ்ஞாநத்திலே தாரதம்யமுண்டிறே. அதில், "பதிம் விச்வஸ்ய", "யஸ்யாஸ்மி" என்றும், "நஹி விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே, ஜாநாத்யே வாயம் புருஷ:" என்றும் ஆத்மாவுக்கு பகவச் சேஷத்வத்தையும் ஜ்ஞாத்ருத்வத்தையும் சொல்லி அந்த ஜ்ஞாத்ருத்வ கார்யமான போக்ருத்வ ப்ரயோஜநமாக, "ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா" என்று


**Email:**sridharan_book@yahoo.co.in

பகவதநுபவத்தையும் சொல்லுகிற சாஸ்த்ர முகத்தாலே ஸ்வரூபத்தை யறியுமளவில் பகவச் சேஷத்வமும் பகவதநுபவ போக்த்ருத்வமுமிறே ப்ரகாசிப்பது. அந்த சாஸ்த்ர தாத்பர்யமான திருமந்த்ரத்தில் உள்புக்காலிறே பாரதந்த்ர்ய போக்யதாரூபமான ஸ்வரூப யதாத்ம்யம் ப்ரகாசிப்பது. இதுவே ஸ்வரூப யாதாத்ம்யமென்னுமிடத்தை யறிவிக்கிறார் மேல் – "சேஷத்வேத்யாதியால்".

**விளக்கம்** - ஆத்மாவின் ஸ்வரூபம் குறித்த ஞானம் என்பதில் ஸ்வரூப ஞானம் (ஆத்மா அடிமையாக உள்ளதைப் பற்றிய ஞானம், ஆத்மா ஸர்வேச்வரனுடன் அனுபவிக்கிறது என்ற ஞானம்) மற்றும் ஸ்வரூப யாதாத்ம்ய ஞானம் (ஆத்மா ஸர்வேச்வரன் வசப்பட்டது என்ற ஞானம், ஆத்மா அனுபவிக்கப்படுபவனாக இருத்தல் என்ற ஞானம்) என்று இருவிதம் உள்ளது. இவற்றில், புருஷஸூக்தம் - பதிம் விச்வஸ்ய - இந்த உலகின் எஜமானன் ஸர்வேச்வரன் - என்றும், யஸ்யாஸ்மி – அவனுக்கு நான் அடிமை - என்றும், ப்ருஹத் உபநிஷத் (6-3-10) - நஹி விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே - ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ள இந்த ஆத்மாவின் ஞானத்திற்கு அழிவு இல்லை - என்றும், ஜாநாத்யே வாயம் புருஷ: - ஆத்மா அறியும் வஸ்து - என்றும் பலவிதமாக ஆத்மாவானது ஸர்வேச்வரனுக்கு அடிமைப்பட்டுளதையும், அறியும் தன்மை கொண்டது என்பது குறித்தும் கூறப்பட்டது; மேலும் இத்தகைய அறியும் தன்மையின் விளைவாக உள்ளதான, "ஸர்வேச்வரனுடன் சேர்ந்து இன்பம் அனுபவித்தல்" என்பதையே பயன் என்று, தைத்திரீயம் - ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா - பரம்பொருளுடன் சேர்ந்து ஆத்மா அனைத்து விருப்பங்களையும் அனுபவிக்கிறது - என்பதான பகவத் அனுபவத்தைச் சாஸ்த்ரம் கூறுகிறது. இப்படிப்பட்ட சாஸ்த்ரங்கள் மூலம் ஆத்மாவின் தன்மை குறித்து அறியும்போது – ஆத்மா ஸர்வேச்வரனுக்கு அடிமைப்பட்டது என்ற நிலையும், ஸர்வேச்வரனுடன் சேர்ந்து இன்பத்தை அனுபவிக்கிறது என்ற நிலையும் – வெளிப்படுகிறது. அப்படிப்பட்ட சாஸ்த்ரங்களுடைய சாரமாகவே உள்ள திருமந்த்ரத்தை அறியும்போது - ஸர்வேச்வரனுக்கு ஆத்மா வசப்பட்டுள்ள நிலையும், ஸர்வேச்வரனால் அனுபவிக்கப்படும் இனிய வஸ்துவாக உள்ள நிலையும் என்பதான ஆத்மாவின் உண்மை நிலைகள் வெளிப்படுகின்றன. இதுவே ஆத்மாவின் ஸ்வரூபம் மற்றும் உண்மை என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** சேஷத்வமாவது இஷ்டவிநியோகார்ஹதா மாத்ரம். பாரதந்த்ர்யமாவது சேஷிக்கு இஷ்டமானபடியே விநியோகப்படுகை. "கட்டிப்பொன் போலே சேஷத்வம், பணிப்பொன் போலே பாரதந்த்ர்யம்" என்னக்கடவதிறே, (ஆகையாலே சேஷவஸ்துவை சேஷிக்கு இஷ்டமானபடியே விநியோகப்படுத்துமது பாரதந்த்ர்யம்?) போக்த்ருத்வமாவது ஜ்ஞாத்ருத்வ பலத்தாலே போகதசையிலே விளைகிற ரஸங்களுக்குத் தான் போக்தாவாகை. போக்யதையாவது பதார்த்த கதமான ரஸவர்ணாதிகள் போக்தாவுக்கே போக்யமாயிருக்குமாபோலே, ஆத்மகதமான ஜ்ஞாநாதிகளும் ஈச்வரனுக்கே போக்யமாயிருக்கை. ஆகையால் இஷ்டவிநியோகார்ஹதா மாத்ரமான சேஷத்வம் போலன்றே, இவ்வஸ்துவை சேஷிக்கு இஷ்டமானபடி விநியோகப்படுத்திக் கொடுக்கிற பாரதந்த்ர்யம்; போகத்தில் ஸ்வார்த்ததா புத்தி ஹேதுவான போக்த்ருத்வம் போலன்றே அந்த போக்ருத்வத்தை சேஷியுடைய ப்ரியோபயோகியாக்கிக் கொடுக்கிற போக்யதை யென்றபடி.

**விளக்கம் -** "சேஷத்வம்" என்றால் ஸர்வேச்வரன் அவனுடைய விருப்பத்தின்படிச் செய்யும் செயல்களுக்குத் தகுதியுடன் இருத்தல் ஆகும். பாரதந்த்ர்யம் என்றால் ஸர்வேச்வரன் அவ்விதம் செய்யும் செயல்களுக்குப் பயன்படும்படியாக இருத்தல் ஆகும். கட்டிப்பொன் போலே சேஷத்வம், பணிப்பொன் போலே பாரதந்த்ர்யம் - கட்டியாக உள்ள தங்கம் என்பது போன்றது சேஷத்வம், ஆபரணங்களாக உள்ள பொன் போன்றது பாரதந்த்ர்யம் - என்பது காண்க. ஆகவே அடிமையாக உள்ள வஸ்துவை எஜமானனுக்கு விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ள விடுவதே பாரதந்த்ர்யம் - ஆகும். "போக்த்ருத்வம்" என்றால், அறியும் தன்மை என்பதன் பயன் காரணமாக, இன்பமாக உள்ள நிலையின்போது ஏற்படும் சுவைகளை அனுபவிப்பவனாக இருப்பதாகும். "போக்யதை" என்றால், ஒரு வஸ்துவில் உள்ள சுவை, நிறம் போன்றவை அந்தப் பொருளை அனுபவிப்பவனுக்கு மட்டுமே இனிமையாக இருப்பது போன்று, ஆத்மாவில் உள்ள ஞானம் போன்ற தன்மைகள் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே இனிமையாக உள்ளதாகும். ஆகவே ஆத்மாவை ஸர்வேச்வரன் தனது செயல்களுக்கு ஏற்றபடியாகப் பயன்படுத்தக் கொள்ள ஏதுவாக உள்ள பாரதந்த்ர்யம் என்பது, ஸர்வேச்வரன் தனது விருப்பத்தின்படி செயலாற்றுவதற்குத் தகுதியாக மட்டுமே உள்ள சேஷத்வம் போன்றது அல்ல என்று கருத்து. இன்பத்தை அனுபவித்தலில் நம்முடைய இன்பம் என்று சொந்தம் கொண்டாடி உண்டாவதற்குக் காரணமாக உள்ள போக்த்ருத்வம் போன்றது அன்று, அந்தப் போக்த்ருத்வத்தை

ஸர்வேச்வரனுடைய விருப்பத்திற்கு ஏற்ப பயன்படும்படி மாற்றிக் கொடுக்கும் போக்யதை என்று கருத்து.

22. ஜ்ஞாந சதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்கு உதயம்.

**அவதாரிகை** - இவ்வர்த்தத்தை ஸ்வரூப யாதாத்ம்ய ப்ரகாசகமான திருமந்த்ரத்திலே தர்சிப்பிக்கிறார் "ஜ்ஞாநேத்யாதியாலே".

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறிய கருத்தை, ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையான ஞானத்தை உணர்த்தவல்ல திருமந்த்ரம் கொண்டு இந்தச் சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, ஆத்மவாசியான மகாரத்திலே "மந – ஜ்ஞாநே" என்கிற தாதுவிலே உதிதமாய் போக்த்ருத்வ ப்ரகாசகமா யிருக்கிற ஜ்ஞாநத்தின் மேலேயிறே, அந்த மகார விவரண ரூபமாய் போக்யதா ப்ரகாசகமான சதுர்த்தியில் ஆநந்தத்துக்கு உதயம்; ப்ரதமாக்ஷரத்தில் சேஷத்வவாசியான சதுர்த்தியின் மேலேயிறே பாரதந்த்ர்ய ப்ரகாசகமான நமஸ்ஸுக்கு உதயமென்கை. இத்தால் ஆத்ம ஸ்வரூபத்தினுடைய சேஷத்வ போக்த்ருத்வங்கள் உதித்திருக்கச் செய்தே அதின்மேலே ஸ்வரூப யாதாத்ம்ய வேஷமாக உதித்தவையாகையாலே சேஷத்வ போக்த்ருத்வங்களில் பாரந்த்ர்ய போக்யதைகளுக்கு நெடுவாசி யுண்டென்றதாயிற்று.

**விளக்கம்** - ஆத்மாவை உணர்த்துவதாக ப்ரணவத்தில் உள்ள "ம" என்ற எழுத்திலே, "மந ஜ்ஞாநே" என்ற தாதுவில் தோன்றியதாகவும், அனுபவிக்கும் தன்மைக்கு விளக்கமாகவும் ஞானம் உள்ளது (இதன் மூலம் போக்த்ருத்வம் கூறினார்); இத்தகைய ஞானத்தின் மேலே உள்ளது எதுவென்றால் – "ம" என்ற எழுத்தின் பொருளை விவரித்துக் கூறுவதும், போக்யதையை விளக்குவதும் ஆகிய "நாராயணாய" என்பதில் உள்ள "ஆய" என்னும் நான்காம் வேற்றுமை மூலம் வெளிப்படும் ஆனந்தம் என்பதாகும் (இதன் மூலம் போக்யதையைக் கூறினார்). (அடுத்த சதுர்த்தி என்று சூர்ணையில் கூறியது, ப்ரணவத்தின் முதல் எழுத்தான "அ" என்பதன் மேல் புணர்ந்து கெட்ட "ஆய" என்ற நான்காம் வேற்றுமை உருபினை ஆகும்). ப்ரணவத்தின் முதல் எழுத்தான "அ" என்பதன்

மூலம், புணர்ந்து கெட்டதான "ஆய" என்னும் நான்காம் வேற்றுமை உருபு, சேஷத்வத்தைக் கூறுகிறது; இதற்கும் மேலே உள்ளது என்னவென்றால் - பாரதந்த்ர்யத்தை வெளிப்படுத்தும் "நம:"என்பதாகும். ஆகவே, ஆத்மஸ்வரூபத்தின் சேஷத்வம் மற்றும் போக்த்ருவத்வம் ஆகிய இரண்டும் வெளிப்படும்போதிலும், அவற்றின் மேலே, ஆத்மஸ்வரூபத்தின் உண்மை நிலையாக உள்ள பாரதந்த்ர்யமும், போக்யதையும் வெளிப்படுகிறது. ஆகவே சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் என்பதைக் காட்டிலும் பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகிய இரண்டிற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு.

**வ்யாக்யானம் -** இந்த யோஜனைக்கு அல்பம் அநுபபத்தியுண்டு. ஷஷ்டியென்கிறவிது முக்ய வ்ருத்தியாலேயாதல் கௌண வ்ருத்தியாலேயாதல் நமஸ்ஸைக் காட்டமாட்டாமையாலே; ஷஷ்ட்யந்த பதமென்கிறதை ஷஷ்டியென்று சொல்லிற் றாகாதோ வென்னில், அது சேராது. நமஸ்ஸு இரண்டு பதமாகையாலும் அதில் உத்தரபதமே ஷஷ்ட்யந்தமாகையாலும்.

**விளக்கம் -** மேலே கூறப்பட்ட கருத்துக்குச் சிறிது பொருத்தமின்மை என்பது உண்டு (குறிப்பு - இங்கு பொருத்தம் இன்மை என்று கூறுவதைப் புரிந்து கொள்ளச் சற்றுக் கடினமாக உள்ளதால் மேலும் விளக்கப்படுகிறது. "நம:" என்பது "நம:" என்று ஒரு எழுத்தாகவும், "ந, ம:" என்று இரண்டு எழுத்துக்களாகவும் பிரித்துப் பொருள் தரவல்லதாகும். முதலில் உள்ளது ஒருமொழி அல்லது தனிமொழி என்றும், அடுத்து உள்ளது தொடர்மொழி என்றும் கூறப்படும். ஒருமொழி அல்லது தனிமொழியாகப் பொருள் கொள்ளப்படும்போது "அகண்ட நமஸ்ஸு" என்றும், தொடர்மொழியாகப் பொருள் கொள்ளப்படும்போது "ஸகண்ட நமஸ்ஸு" என்றும் கூறுவர். இங்கு "ஷஷ்டி" என்று கூறுவது ஆறாம் வேற்றுமை உருபை இறுதியில் வைத்துள்ள "நம:" என்பதில் காணப்படும் "அ:" என்பதை ஆகும். மாறாக "நம:" என்பதைத் தனிமொழியாகக் கொள்ளும்போது, ஷஷ்டி என்பது "நம:" என்றாகி, அதன் இறுதியில் உள்ளது "ம:" என்பதாகிறது. மேலே கூறப்பட்ட கருத்தில், "நம:" என்பதைத் தொடர்மொழியாகக் கொண்டே பொருள் அருளிச்செய்துள்ளார். இந்தப் பொருளில் ஷஷ்டி என்பது மேலே கூறியபடி "ம:" என்பதை உணர்த்தும் அல்லாது, அதன் முன்பாக உள்ள "ந" என்பதைக் காண்பிக்காது. ஆனால் பாரதந்த்ர்யம் என்பது உணர்த்தப்படவேண்டும் என்றால், "என்னுடைய ரக்ஷணத்தில் எனக்குச் சம்பந்தம் இல்லை" என்பது கூறப்படவேண்டும்;


Email:sridharan_book@yahoo.co.in

அதாவது, “ம:” என்பதற்கு முன்பாக உள்ள “ந” என்பதும் சேர்த்து உணர்த்தப்பட வேண்டும். அவ்விதம் உணர்த்தாமல் உள்ள காரணத்தால், மேலே கூறிய கருத்துக்குச் சிறிது பொருத்தம் இன்மை கூறப்படலாம் என்று அருளிச்செய்கிறார்). இந்தப் பொருத்தம் இன்மை என்ன காரணத்தால் வந்தது என்றால் “ஷஷ்டி” என்பதான “நம:” என்பது நேரடியாக ஒரு பொருளை உணர்த்தினாலும், மறைமுகமாக வேறு ஒரு பொருளை உணர்த்தினாலும், நமஸ் என்பதைக் காண்பிக்காமல் உள்ளதால் ஆகும். இவ்விதம் ஏன் கொள்ளவேண்டும்? ஷஷ்டியை இறுதியில் கொண்ட முழுச்சொல்லான “நம:” என்பதையே “ஷஷ்டி” என்று கூறியதாகக் கொள்ளலாமே; “நம:” என்பதன் இறுதியில் உள்ளதான “ம:” என்பதை மட்டும் “ஷஷ்டியின் இறுதியில்” என்று கூறியதாக ஏன் கொள்ளவேண்டும் என்று கேட்கலாம். அவ்விதம் கொள்ளலாகாது. ஏன்? காரணம் “நம:” என்பது இரண்டு எழுத்துக்கள் கொண்டது என்பதாலும், அந்த இரண்டு எழுத்துக்களில் இறுதியாக உள்ளது “ம:” என்பதாலும், “ஷஷ்டியை இறுதியில் கொண்டது” என்பது “ம:” என்பதே ஆகிறது.

**வ்யாக்யானம்** - ஆனால் செய்யவடுப்பதென்னென்னில்; இன்னம் ஒரு யோஜனை சொல்லப்படுகிறது; அதாவது - த்ருதீயாக்ஷரத்தில் “மந – க்ஞாநே” என்கிற தாதுவிலே உத்தமாய் போக்த்ருத்வ ப்ரகாசகமான ஜ்ஞாநத்தின் மேலேயிறே மகார விவரணமான சதுர்த்தியில் சொல்லப்படுகிற போகத்தில் காகாக்ஷி ந்யாயத்தாலே நமச்சப்தத்தாலே கழிக்கப்படுகிற ஸ்வப்ரயோஜநத்வ ப்ரயுக்தமான ஆநந்தத்துக்கு உதயம்.

**விளக்கம்** – இவ்விதம் கொண்டால், “ந” என்பதன் பொருள் அங்கு உணர்த்தப்படுவது எப்படி என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். அதாவது ப்ரணவத்தில் காணப்படும் மூன்றாவது எழுத்தான “ம” என்பது “மந ஜ்ஞாநே” என்ற தாது மூலம் உணர்த்தப்படும் போக்த்ருத்வத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்த “ம” என்பதன் விளக்கமாக “நாராயணா” என்ற பதத்தினைத் தொடர்ந்து காணப்படும் “ஆய” என்ற நான்காம் வேற்றுமையால் (அதாவது “நாராயணுக்காக” என்பது நான்காம் வேற்றுமை) கூறப்படும் இன்பத்தில், “நம:” என்றும் பதம் மூலம் விலக்கப்படுவதான “தனக்கு உரித்தான ஆனந்தம்” என்பது வெளிப்படுகிறது. (அதாவது “நாராயணனுக்காக இருத்தல் என்பது தனக்கு உரித்தான ஆனந்தம்” என்பதும் ஆத்மஸ்வரூபத்துக்கு முரணானதாகும். இதனை போக்த்ருத்வம் வெளிப்படுத்தித் தாங்குகிறது. ஆக இந்தப் போக்த்ருத்வம் என்பது “தனக்கு

உரிய ஆனந்தம்” என்ற தோஷத்தைத் தாங்கி நிற்கிறது. இந்தக் குற்றம் எவ்விதம் கழியும் என்றால், “ஓம்” என்பதற்கும், “நாராயணாய” என்பதற்கும் நடுவில் காணப்படும் “நம:” என்பதை, “நாராயணாய நம:” என்று “நாராயணாய” பதத்துடன் சேர்த்துக் கொள்வதால் ஆகும்). ஆக காகாக்ஷி நியாயம் போன்று “நம:” என்றுள்ள ஒரு சொல்லே மற்றோரிடத்திலும் இணைந்து கொண்டு பொருள் தருகிறது என்று கொள்க.

**வ்யாக்யானம் -** ப்ரதமாக்ஷரத்தில் சேஷத்வவசியான சதுர்த்தியின் மேலேயிறே நஞ்ஞாலே நிஷேதிக்கப்படுகிற ஸ்வரக்ஷணே ஸ்வப்ரவ்ருத்தி ஹேதுபூத ஸ்வாதந்த்ர்ய ப்ரகாசிகையான ஷஷ்ட்டிக்கு உதயமென்கை.

**விளக்கம் -** ப்ரணவத்தின் முதல் எழுத்தான “அ” என்பது புணர்ந்து கெட்டு “ஆய” என்றாகிறது; இது நான்காம் வேற்றுமை ஆகும்; இதன் பொருள் சேஷத்வம் ஆகும். இத்தகைய சேஷத்வம் என்பதற்கு மேலே அல்லவோ (மேலே என்றால் தொடர்ந்து என்று பொருள் கொள்க – அதாவது நாராயணாய என்பதைத் தொடர்ந்து உள்ள நம:), தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் “தன் சுதந்திரம்” என்பதை உணர்த்துகின்ற, “நம:” என்பதில் காணப்படும் “ம:” என்னும் ஆறாம் வேற்றுமை காணப்படுகிறது; இத்தகைய “தன் சுதந்திரம்“ என்பதான விரோதியையே “ந” என்னும் எழுத்து நீக்குகிறது (ஆகவே “நம:” என்பது விளக்கப்பட்டது).

**வ்யாக்யானம் -** இத்தால் சேஷத்வ ப்ரகாசகமான சதுர்த்தியின் மேலே ஸ்வரக்ஷண ஹேதுபூத ஸ்வாத்ந்த்ர்ய வாசியான ஷஷ்டி உதிக்கையாலும், போக்த்ருத்வ ப்ரகாசகமான ஜ்ஞாநத்தின் மேலே போகஸ்வார்த்ததா புத்தி மூலமான ஆநந்தம் உதிக்கையாலும் சேஷத்வ போக்ருத்வங்கள் ஸ்வ விரோத்யுதய ஸஹங்களாயிருக்கும். நமஸ்ஸிலே பாரதந்த்ர்யம் உதித்த பின்பு ஸ்வரக்ஷணே ஸ்வயத்நம் நிவ்ருத்தமாகையாலும், நமச்சப்தாநு க்ருஹீதையான சரம சதுர்த்தியிலே ஈச்வரனுக்கு போக்யமாயிருக்கையே ஆத்மாவுக்கு வேஷமென்று தோற்றின பின்பு ஸ்வப்ரயோஜநம் நிவ்ருத்தமாகையாலும் பாரதந்த்ர்ய போக்யதைகள் ஸ்வ விரோத்யுதய ஸஹங்களன்று. ஆகையால் ஸ்வ விரோத்யுதய ஸஹங்களான சேஷத்வ போக்த்ருத்வங்கள் போலன்றே அத்தை ஸஹியாத படியிருக்கும் பாரதந்த்ர்ய போக்யதைகள் என்றதாயிற்று.

**விளக்கம்** - ஆக சேஷத்வத்தை உணர்த்துவதான நான்காம் வேற்றுமையான "ஆய" என்பதைக் கடந்து, தன்னைத் தானே பாதுகாப்பது என்பதற்குக் காரணமாக உள்ள சுதந்திரத்தை உணர்த்தும் ஆறாம் வேற்றுமையான "நம:" என்பது தோன்றுவதாலும்; போக்த்ருத்வத்தை உணர்த்துவதான ஞானத்தைக் கடந்து, தனக்கு உரிய இன்பம் என்பதை உண்டாக்கும் புத்தி மூலம் ஆனந்தம் தோன்றுவதாலும் - இவை இரண்டும் சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் என்பதான இரண்டு ஆத்மஸ்வரூப விரோதிகள் உண்டாவதற்கு ஆதரவு தருபவைகளாக இருக்கும் (அதாவது சேஷத்வம் மட்டுமே உண்டானால் அதனைக் கடந்து ஏற்படும் விரோதியை விலக்க பாரதந்த்ர்யம் அவசியமாகிறது; போக்த்ருத்வம் மட்டுமே ஏற்பட்டால் அதனைக் கடந்து ஏற்படும் விரோதியை விலக்க போக்யதை அவசியமாகிறது; ஆக இந்த இரண்டைக் காட்டிலும் பாரதந்த்ர்யம், போக்யதை ஆகியவையே மேம்பட்டவை என்கிறார்). "நம:" என்பதன் மூலம் பாரதந்த்ர்யம் வெளிப்பட்ட பின்னர், தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளச் செய்யும் "தன் முயற்சி" என்பது விலக்கப்படுகிறது; "நம:" என்பதுடன் சேர்ந்து நிற்கும் "நாராயணாய" என்பதில் காணப்படும் "ஆய" என்ற நான்காம் வேற்றுமை மூலம் ஸர்வேச்வரனுக்கு இனிமையாக இருத்தலே ஆத்மாவின் தன்மை என்பது வெளிப்பட்ட பின்னர், "தான் தனக்குப் பயனாக உள்ள நிலை" என்பது விலக்கப்படுகிறது - ஆக இதன் மூலம் பாரதந்த்ர்யம், போக்யதை ஆகிய இரண்டும் தங்களுக்கு விரோதிகள் ஏற்படுவதைப் பொறுத்து கொள்ளவதில்லை என்றாகிறது. ஆகவே தங்களுக்கு விரோதிகள் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ளவல்லதான சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் ஆகிய இரண்டைப் போன்றதல்ல, அவ்விதம் தங்களுக்கு விரோதிகள் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ளாத பாரதந்த்ர்யமும், போக்யதையும் என்கிறார்.

23. முளைத்தெழுந்த ஸூர்யதுல்ய யாதாத்ம்யசரமம் விதியில் காணும் ப்ரதம மத்ய தசைகளைப் பகல்விளக்கும் மின்மினியுமாக்கும்.

**அவதாரிகை** - இப்படி ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநதசையில் தோற்றுகிற பாரதந்த்ர்யாதிகள் ஸ்வரூப ஜ்ஞாநதசையில் தோற்றுகிற சேஷத்வாதிகளைத் திரஸ்க்ருதமாக்கும்படி சொல்லுகிறது - (முளைத்தெழுந்த இத்யாதி).

**விளக்கம்** - இப்படியாக ஆத்மஸ்வரூபத்தின் உண்மை நிலையை உணர்த்துவதான ஞானநிலையில் வெளிப்படும் பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகிய இரண்டும், ஆத்மஸ்வரூபத்தின் ஞானநிலையில் வெளிப்படுவதான சேஷத்வம் மற்றும் போக்த்ருவத்வம் ஆகிய இரண்டையும் மறையும்படிச் செய்யும் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, "முளைத்தெழுந்த திங்கள் தானாய்" என்றும், "யதா ஸூர்யஸ் ததா ஜ்ஞாநம்" என்று சொல்லப்பட்ட ஸ்வரூப ஸாக்ஷாத்கார ஜ்ஞாநத்தினுடைய யாதாத்ம்யா வஸ்தையான சரமென்று ஸ்வரூப யாதாத்ம்ய வேஷமாகப் பின்பு சொன்ன பாரதந்த்ர்ய போக்யதைகளைச் சொல்லுகிறது. ஸ்வரூப ஸாக்ஷாத்கார ஜ்ஞாநத்துக்கு சந்த்ரனை த்ருஷ்டாந்தமாக ஆழ்வார் அருளிச்செய்தது நமக்கு பகவத் ப்ரஸாத லப்தமாகையாலே அயத்ந ஸித்தமாகையாலும், அந்த ஜ்ஞாநந்தான் ஆஹ்லாதகரமா யிருக்கையாலுமிறே. இங்கும் "உணர்வைப் பெறவூர மிகவுணரமுண்டாம்" என்று இந்த ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநம் பகவத் ப்ரஸாத லப்தமாகவிறே சொல்லிற்று. "யதா ஸூர்ய:" என்கிறவிதிலே ஸ்வயத்நத்தால் வந்த க்லிஷ்டதை தோற்றிற்றாகிலும் இவ்விடத்தில் அது அவிவக்ஷிதம். ஜ்ஞாநத்தினுடைய ப்ரகாசாதிசயம் சொல்லுகிற மாத்ரமே அபேக்ஷிதம்.

**விளக்கம்** – திருநெடுந்தாண்டகம் (1) - முளைத்தெழுந்த திங்கள் தானாய் - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-62) - யதா ஸூர்யஸ் ததா ஜ்ஞாநம் - சூரியன் எவ்விதம் ப்ரகாசமாக உள்ளதோ அது போன்றே ஞானம் - என்றும் கூறப்படுவதான ஆத்மஸ்வரூபத்தின் உண்மை நிலையை உள்ளது உள்ளபடி உணர்கின்ற ஞானத்தின் முடிவு அல்லது எல்லை எதுவென்றால் - ஆத்மஸ்வரூபத்தின் உண்மை நிலைகளாக, திருமந்த்ரத்தில் உள்ள "நம:" மற்றும் "நாராயணா" என்பதால் கூறப்பட்டதான பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகும். ஆத்மஸ்வரூபத்தை உணர்த்தவல்ல ஞானத்திற்கு ஆழ்வார் சந்த்ரனை எடுத்துக்காட்டாக அருளிச் செய்தமை என்பது - தனக்கு பகவானுடைய திருவருளால் கிட்டியதால் தனது முயற்சி என்று ஏதும் இல்லாமல் கிட்டியதாலும், அத்தகைய ஞானம் மகிழ்வை அளிக்கவல்லது என்பதாலும் ஆகும் அல்லவோ [அதாவது சந்த்ரனுக்குத் தனியாக ஒளி இல்லை, அது சூரியனிடமிருந்தே ஒளியைப் பெறுகிறது, அது போன்று ஆழ்வார் தன்னுடைய முயற்சி ஏதும் இன்றி

ஸர்வேச்வரனுடைய கருணையால் அனைத்தும் பெற்றார் என்று கருத்து]? இவ்விதம் ஆத்மாவுடைய உண்மையான தன்மையை உள்ளது உள்ளபடி உணர்த்தவல்ல ஞானம் என்பது பகவானின் கருணையால் கிட்டுவதாகும் என்று இந்த க்ரத்தத்திலேயே ( சூர்ணை 20) - உணர்வைப் பெறவூர மிகவுணரமுண்டாம் - என்று உரைத்தார் அல்லவோ? யதா ஸூர்ய: - சூரியன் எவ்விதமோ - என்று கூறுவதன் மூலம் இத்தகைய ஞானம் பெறுவதில் தனது முயற்சி காரணமாக ஏற்பட்ட சோர்வு தென்பட்டபோதிலும், இங்கு க்ரந்தத்தை அருளிச்செய்த இவருக்கு அந்தக் கருத்து இல்லை என்று கொள்ளவேண்டும்; ஞானமானது மிகவும் ப்ரகாசமானது என்று உணர்த்தவே உரைப்பதாகக் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம்** - ஏவம் பூதமாயிருந்துள்ள ஸாக்ஷாத்கார ஜ்ஞாநத்தினுடைய யாதாத்ம்யா வஸ்த்தையில் ப்ரகாசிக்கிற பாரதந்த்ர்ய போக்யதைகளாகிற சரமங்கள், “ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந்துணரவும்” என்று கீழ்ச் சொன்ன ந்யாயத்திலே, “விதியில் காண்பார்” என்கிறபடியே சாஸ்த்ர விதி ப்ரகாரேண ச்ரவண மநநாதிகளாகே தர்துக்கம்படுகிற ப்ரதம தசையான சேஷத்வத்தையும் மத்யம தசையான போக்த்ருத்வத்தையும் – பகல் விளக்கும் மின்மினியும் போலே அப்ரயோஜநமாகவும் அல்பப்ரகாசமாகவும் பண்ணுமென்கை.

**விளக்கம்** – இப்படியாக உள்ள ஆத்மஞானத்தின் உண்மை நிலையில் ப்ரகாசிக்கும் பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகிய இறுதி நிலைகள் இரண்டும் செய்வது என்ன என்று அடுத்து அருளிச்செய்கிறார். சூர்ணை 20 - ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந்துணரவும் - என்று கூறப்பட்ட ந்யாயத்தின் அடியொட்டி, திருக்குறுந்தாண்டகம் (18) - விதியில் காண்பார் - என்று கூறுவதற்கு ஏற்ப, சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட விதத்தில் கேட்பது, நினைப்பது போன்றவை மூலம் காணப்படுவதான முதல் நிலையான சேஷத்வத்தையும், நடுவில் உள்ள நிலையான போக்த்ருத்வத்தையும், சூரியன் உள்ளபோது விளக்கும் மின்மினிப்பூச்சியும் முறையே எவ்விதம் பலன் அற்றதாகவும், குறைந்த ஒளியையே அளிப்பதாகவும் உள்ளனவோ – அது போன்று மாற்றிவிடுகின்றன.

**வ்யாக்யானம்** - ப்ரணவோதிதமான ஸ்வரூபத்தினுடைய யாதாத்ம்யத்வேந மத்யம சரம பதங்களிலே பின்பு உதிக்கு மவையாகையாலே பாரதந்த்ர்ய போக்யதைகளை சரமங்க ளென்கிறது. ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியிலே ப்ரதமமேவ சேஷத்வம் உதிக்கையாலும், அநந்தரம் ததாச்ரயவாசியான சரமாக்ஷரத்தில் உத்தர பதத்வயத்தில் பாரதந்த்ர்ய

போக்யதோதயத்துக்கு முன்னே நடுவே ஜ்ஞாத்ருத்வ பலாயாத போக்த்ருத்வம் உதிக்கையாலும் சேஷத்வ போக்த்ருத்வங்களை ப்ரதம மத்யம தசைகளென்கிறது. ஆக இவ்வாக்யத்தால் ஸ்வப்ரயோஜநகந்தா ஸஹங்களாய் ஸ்வசேஷி போகாத்யந் தாநுகூலங்களாய்க் கொண்டு ஸ்வரூபத்தை நிறம் பெறுத்தும் இப்பாரதந்த்ர்ய போக்யதைகள் இவ்வாகாரங்களில்லாத சேஷத்வ போக்த்ருத்வங்களைத் திரஸ்க்ருத மாக்கித் தானே மேலாயிருக்குமென்றதாயிற்று.

**விளக்கம்** - ப்ரணவத்தில் வெளிப்படுகின்ற ஆத்மாவின் உண்மை நிலைகள், "நம:" என்னும் நடுப்பதத்தாலும், "நாராயணா" என்னும் இறுதி பதத்தாலும் பின்னர் வெளிப்படுகின்றன என்பதாலும் (அதாவது ப்ரணவத்தைத் தொடர்ந்து உள்ள திருமந்த்ரத்தின் பகுதியில்), அவை பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதையை வெளிப்படுத்துவதாலும், இந்த இரண்டையும் (பாரதந்த்ர்யம், போக்யதை) சரமம் (இறுதி) என்றார். "ஓம்" என்னும் ப்ரணவத்தின் முதல் எழுத்தான "அ" என்பதில் மறைந்து கிடப்பதான "ஆய" என்னும் நான்காம் வேற்றுமையில், முதலில் சேஷத்வம் வெளிப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, அந்த ப்ரணவத்தின் இறுதி எழுத்தான ஆத்மாவை உணர்த்தும் "ம" என்ற எழுத்தில், ப்ரணவத்தைத் தொடர்ந்து வருவதான "நம:" என்ற பதம் மூலம் பாரதந்த்ர்யம் மற்றும் "நாராயணா" என்னும் பதம் மூலம் போக்யதை ஆகிய இரண்டும் வெளிப்படுகின்றன; ஆனால் அவற்றுக்கு முன்பாக, நடுவில், அறியும் தன்மை காரணமாகப் போக்த்ருத்வம் வெளிப்படுகிறது. இதனால் இவற்றை ப்ரதம தசை (முதல் நிலை - சேஷத்வம்) மற்றும் மத்யம திசை (இடை நிலை - போக்த்ருத்வம்) என்றார். ஆக இந்தச் சூர்ணை மூலமாக, தனது முயற்சி மற்றும் தனக்குப் பயன் போன்றவை ஏதும் சிறிதும் இல்லாமல், தனது எஜமானனாகிய ஸர்வேச்வரனுடைய இன்பத்திற்கு மட்டுமே முழுமையாக உதவி செய்பவையாக நின்று, ஆத்மாவை ப்ரகாசம் பெறச் செய்யும் பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகிய இரண்டும், இத்தகைய தன்மைகள் அற்றதான சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் ஆகிய இரண்டையும் மறையும்படிச் செய்து, தாங்கள் ஓங்கி நிற்கும் என்கிறார்.

21. நாலில் ஒன்று ப்ரவர்த்தகம்; ஒன்று நிவர்த்தகம்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - இப்படியிருந்துள்ள ஸ்வரூப ஜ்ஞாநத்தையும் ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்தையு முடையராய் “சாஸ்த்ரிகள்” இத்யாதி வாக்யத்தில் ப்ரவர்த்தி பரராகவும் நிவ்ருத்தி பரராகவும் சொல்லப்பட்ட அதிகாரிகளுக்கு ப்ரவர்த்தக நிவர்த்தகங்க ளின்னதென்கிறது மேலே – “நாலிலித்யாதி”.

**விளக்கம் -** இப்படியாக உள்ள ஆத்மஞானம் மற்றும் ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றி உணரும் ஞானம் ஆகியவற்றைக் கொண்டவர்களாக, சூர்ணை (19) - சாஸ்த்ரிகள் - என்று கூறியதற்கு ஏற்ப முயல்பவர்களாகவும், முயலாதவர்களாகவும் உள்ள அதிகாரிகளை, அது போன்று முயற்சி செய்ய வைப்பதும், முயற்சி செய்வதில் இருந்து விலக்குவதும் எது என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, சேஷத்வ போக்த்ருத்வங்களும் பாரதந்த்ர்ய போக்யதைகளுமாகிற நாலிலும் வைத்துக் கொண்டு சேஷத்வ போக்த்ருத்வங்களே ஆத்மாவுக்கு ஸ்ரூவபமென்று தர்சித்த சாஸ்த்ரிகளை, போக்த்ருத்வமானது – போக்தாவனவன் போக்ய ஸித்திக்கு யத்நம் பண்ணவேண்டாவோ வென்னும் நினைவாலே போக்யபூத பகவத் விஷய லாபார்த்தமான உபாய ப்ரவ்ருத்தியிலே மூள்விக்கும்.

**விளக்கம் -** சேஷத்வம், போக்த்ருத்வம், பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகிய நான்கில், சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் ஆகிய இரண்டு மட்டுமே ஆத்மஸ்வரூபம் என்று எடுத்துக் கொள்பவர்களான வேதங்களின் வழி நிற்பவர்களை, போக்த்ருத்வம் செய்வது என்னவென்றால் - இன்பத்தை அனுபவிக்கும் ஒருவன் அத்தகைய இன்பம் கிட்டுவதற்கான முயற்சியைச் செய்யவேண்டாமோ என்று எண்ண வைக்கும்; அதன் காரணமாக, இனிமையான ஸர்வேச்வரனை அடைவதற்கான சில முயற்சிகளை அவர்கள் செய்யும்படியாக, அந்தச் செயல்களில் ஈடுபடுத்திவிடும்.

**வ்யாக்யானம்** - பாரதந்த்ர்ய போக்யதைகளையே ஸ்வரூப யாதாத்ம்ய வேஷமென்று தர்சித்த ஸாரஜ்ஞரை, போக்யதையானது “போக்தாவான ஈச்வரனன்றோ ஸ்வபோக்யமான இவ்வஸ்துவைப் பெறுகைக்கு யத்நம் பண்ணுவான்; தத்


Email:sridharan_book@yahoo.co.in

போக்யபூதமான இவ்வஸ்துவுக்கு தல்லாபத்துக்கு யத்நிக்க ப்ராப்தியில்லை” என்னும் நினைவாலே, உபாய ப்ரவ்ருத்தியில் நின்றும் மீள்விக்குமென்கை.

**விளக்கம்** - பாரதந்த்ர்யம் மற்றும் போக்யதை ஆகிய இரண்டு மட்டுமே ஆத்மாவின் உண்மையான தன்மைகள் ஆகும் என்று உணர்ந்தவர்களான வேதங்களுடைய சாரமாகிய திருமந்த்ரத்தில் நிலை நிற்பவர்களை, போக்யதை செய்வது என்னவென்றால் - அனுபவிப்பவனாக உள்ள ஸர்வேச்வரன் அல்லவோ தனக்கு இனிமையாக உள்ள ஆத்மாவைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்வான் என்றும், அவனுக்கு இனிய பொருளாக உள்ள ஆத்மாவுக்கு, தனது பயனுக்காகச் செய்யும் முயற்சிகள் என்று எதனையும் செய்யத் தகுதி இல்லை என்றும் உள்ள நினைவுகளை ஏற்படுத்தி, அவனைப் பெறுவதற்கான உபாயத்தின் அடிப்படையில் செய்யப்படும் செயல்களில் இருந்து விலக்கிவிடும்.

25. முற்பாடர்க்கு க்ரியாங்கமானவை யிரண்டும் செயல் தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வ நிர்ப்பந்தமறுக்கும்.

**அவதாரிகை** - ஆனால் சேஷத்வ போக்த்ருத்வங்கள்தான் இவர்களுக்குமுண்டே; செய்வதென்னென்னச் சொல்லுகிறது – (முற்பாடர்க்கித்யாதி).

**விளக்கம்** – ஆனால் சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் ஆகிய இரண்டும் திருமந்த்ரத்தில் நிலை நிற்பவர்களுக்கும் உண்டு அல்லவோ? அவை இரண்டும் அவர்களுக்குச் செய்வது என்ன என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சாஸ்த்ரிகளென்று ப்ரதமத்தில் சொல்லப்பட்ட உபாஸகர்க்கு போக்த்ருத்வமானது போக்யஸித்திக்குடலான யத்நத்திலே மூட்டுகையாலும், அதுதான் ஆத்ம ஜ்ஞான பூர்வகமாக யத்நிக்க வேண்டுகையாலே சேஷத்வமும் அதுக்கு உறுப்பாகையாலும் உபாஸன ப்ரதமபாவியான கர்மத்துக்கு உத்பத்தியிலே ஸஹகரித்துக் கொண்டுத் ததங்கங்களா யிருக்கிற அவை யிரண்டும், “செயல் தீரச் சிந்தித்து வாழ்வார்” என்கிறபடியே, “இவ்வாத்மா செய்யக்கடவ தொன்றுமில்லை, எம்பெருமானே நிர்வாஹகன்” என்றநுஸந்தித்து உபாயரூப ப்ரவ்ருத்தியில் நிவ்ருத்தரான ப்ரபந்நருடைய


**Email:**sridharan_book@yahoo.co.in

கைங்கர்யரூப ப்ரவ்ருத்தியில் அவனுகப்பைப் பின்சொல்லுமதொழிய, தங்கள் நிர்ப்பந்தத்தைத் தவிர்க்குமென்கை.

**விளக்கம்** – சாஸ்த்ரிகள் என்று கூறப்பட்டவர்களாகிய வேதங்களில் ஆழ்ந்து நிற்பவர்களுக்குப் போக்த்ருவத்வம் என்பது - அனுபவிப்பதற்குரிய இனிமையான பொருள் கிட்டுவதற்கான முயற்சியில் ஈடுபடுத்துவதாலும், அத்தகைய முயற்சி என்பது ஆத்மஞானம் ஏற்படுவதற்கு முன்பாகவே செய்யப்படவேண்டும் என்பதால் அத்தகைய முயற்சிக்கு சேஷத்வம் காரணமாக உள்ளதாலும், அப்படிப்பட்ட உபாசகர்கள் தங்களுடைய உபாஸனைக்கு முன்னரே தோன்றுவதான கர்மத்தின் வெளிப்பாட்டிற்கு உதவி செய்வதால், சேஷத்வம் மற்றும் போக்த்ருத்வம் ஆகிய இரண்டும் கர்மத்தின் அங்கங்களாக இருப்பதாகும். ஆனால் அந்த இரண்டும் திருமந்திரத்தில் நிலை நிற்கும் ப்ரபந்நர்கள் விஷயத்தில் செய்வது என்னவென்றால் - நான்முகன் திருவந்தாதி (88) - செயல் தீரச் சிந்தித்து வாழ்வார் – என்று கூறுவதற்கு ஏற்ப, “இந்த ஆத்மா செய்யக்கூடியது ஏதும் இல்லை, இதனை ஸர்வேச்வரனே நியமித்துக் கொள்வான்” என்று எண்ண வைத்து, உபாயம் என்றுள்ள செயல்களில் ஸர்வேச்வரன் திருவுள்ளம் மகிழ்ந்து ஈடுபட வைக்கும்போது அவ்விதமே செல்லும் அல்லாமல், அந்த இரண்டும் தங்களுடைய செயல்பாடுகளை அவர்கள் மீது திணிப்பது கிடையாது.

**வ்யாக்யானம்** – “பரகதாதிசயா தாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ:” என்கிறபடியே பராதிசயகரத்வ ரூபமான சேஷத்வம் ஸ்வாச்ரயேச்சயா வரும் ஸ்வநிர்ப்பந்தத்தைத் தவிர்க்குமிறே. இனி போக்த்ருத்வம், ஸ்வநிர்ப்பந்தத்தைத் தவிர்க்கையாவது - பாரதந்த்ர்ய போக்யதா ஜ்ஞாநம் பிறந்தவனுடைய போக்த்ருத்வமாகையாலே ஸ்வரஸத்துக்கு உடலன்றிக்கே சேஷி ரஸத்துக்கு உடலாயிருக்கை.

**விளக்கம்** - சேஷத்வம் தனது நிர்ப்பந்தத்தை எவ்வாறு இவர்கள் விஷயத்தில் தவிர்க்கிறது என்றால் - ஸ்ரீபாஷ்யம் - பரகதாதிசயா தாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: - மற்றோரு வஸ்துவுக்கு மேன்மையை ஏற்படுத்தவேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக அமைந்த தன்மை, எந்த ஒரு வஸ்துவுக்கு உள்ளதோ, அந்த வஸ்து

அடிமைப்பட்ட ஒன்றாகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுக்குப் பெருமையை ஏற்படுத்தவல்லதான சேஷத்வம், தான் பற்றி நிற்கக்கூடிய ஆத்மாவின் ஆசை காரணமாக ஏற்படும் தனது நிர்ப்பந்தத்தைத் தவிர்த்துவிடும் அல்லவோ? அடுத்து போக்த்ருவம் தனது நிர்ப்பந்தத்தைத் தவிர்ப்பது எப்படி என்றால் - பாரதந்த்ர்ய ஞானம் மற்றும் போக்யதை குறித்த ஞானம் ஆகிய இரண்டும் ஏற்பட்ட ஒருவனுக்கு உள்ள போக்த்ருத்வம் என்பதால், தனது இன்பத்திற்குக் காரணமாக இல்லாமல், ஸர்வேச்வரடைய இன்பத்திற்குக் காரணமாக அமைவதால் ஆகும்.

**வ்யாக்யானம்** – "ஆநந்தம் அவன் ப்ரீதியைத் துளி ரெழுப்ப" என்கிறபடியே இவனுடைய போக்த்ருத்வம் சேஷியானவன் ப்ரீதிக்கு வர்த்தகமாயிறே இருப்பது. ஆகையிறே, "அஹமந்ந மஹமந்நம்" என்று ஸ்வபோக்யதையை முன்னிட்டு சேஷியை உகப்பிக்க இழிந்தவன், "அஹமந்நாத:" என்று ஸ்வபோக்த்ருத்வத்தையும் புரஸ்கரிக்கிறது. இப்படியல்லாதபோது ஒரு சேதநனோடு அநுபவித்ததாயிராதிறே. இவற்றை யெல்லாத்தையு முட்கொண்டாய்த்து "வ்ருத்தியில் ஸ்வநிர்ப்பந்தமறுக்கும்" என்றருளிச் செய்தது.

**விளக்கம்** - நம்பிள்ளை - ஆநந்தம் அவன் ப்ரீதியைத் துளி ரெழுப்ப - என்று கூறுவதற்கு ஏற்ப ஆத்மாவின் போக்த்ருத்வம் என்பது ஸர்வேச்வரனுடைய ப்ரீதியை வளர்ப்பதற்கே ஆகும். இதனால்தான், தைத்திரீயம் - அஹமந்ந மஹமந்நம் - நான் அவனுக்கு உணவு போன்று இனிமையானவன் இனிமையானவன் - என்று ஜீவாத்மாவாகிய தான், அவனுக்கு இனிமையாக உள்ளதை முன்னிட்டுக் கொண்டு ஸர்வேச்வரனை மகிழ்விக்க முயல்பவன், தைத்திரீம் - அஹமந்நாத: – நான் ஸர்வேச்வரன் என்னும் இனிய வஸ்துவை அனுபவிக்கிறேன் – என்று, தான் இன்பத்தை அனுபவிக்கக்கூடியவனாகவும் உள்ள தன்மையை முன்னிடுகிறான். இவ்விதம் பொருள் கொள்ளவில்லை என்றால், ஒரு சேதநனோடு ஸர்வேச்வரன் கூடி நின்று அனுபவித்தான் என்று கூற இயலாது அல்லவோ? இவை அனைத்தையும் தனது திருவுள்ளத்தில் கொண்ட காரணத்தினால்தான் "வ்ருத்தியில் ஸ்வநிர்ப்பந்தமறுக்கும்" என்று சூர்ணையில் அருளிச்செய்தார்.


Email:sridharan_book@yahoo.co.in

## 26. கர்மகைங்கர்யங்கள் ஸத்யாஸத்ய நிந்யாநித்ய வர்ண தஸ்யாநுகுணங்கள்.

**அவதாரிகை** - இந்த க்ரியாவ்ருத்தி சப்தங்களால் சொன்ன கர்ம கைங்கர்யங்கள் இவர்களுக்கு எதுக்கு அநுகுணமாயிருக்குமென்னச் சொல்லுகிறது – (கர்மேத்யாதி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட "க்ரியா, வ்ருத்தி" என்ற இரு பதங்களால் கூறப்பட்டதான "கர்மம், கைங்கர்யம்" ஆகியவை இந்த இருவருக்கும் (சாஸ்த்ரத்தில் நிலை நிற்பவர், திருமந்த்ரத்தில் நிலைநிற்பவர்) செய்வது என்ன என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார் (இங்கு கர்மம் என்பது சாஸ்த்ரங்களில் "இயற்றப்பட வேண்டும்" என்று விதிக்கப்பட்ட செயல்கள் ஆகும்).

**வ்யாக்யானம்** – அதாவது, கர்மம் அஸத்யமுமாய் அநித்யமுமான வர்ணத்துக்கு அநுகுணமாயிருக்கும்; கைங்கர்யம் ஸத்யமுமாய் நித்யமுமான தாஸ்யத்துக்கு அநுகுணமாயிருக்குமென்கை. வர்ணத்தை அஸத்யம், அநித்யம் என்கிறது ஆத்மாவுக்குள்ள வேஷமல்லாமையாலே ஸதைகரூபமன்றிக்கே ஔபாதிகமுமாய் அநித்யமுமாய் நச்வரமுமான தேஹாவதியாய்ப் போருகையாலே; தாஸ்யத்தை ஸத்யம், நித்யமென்கிறது ஆத்மாவுக்குள்ள வேஷமாகையாலே ஸதைக ரூபமாய் யாவதாத்மாநு வர்த்தி யாகையாலே. வர்ணாநுகுணமென்றது – வர்ணத்துக்குச் சேர்ந்த தென்றபடி. தாஸ்யாநுகுணமென்றதும் அப்படியே.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் "க்ரியை" என்ற சொல் மூலம் உணர்த்தப்பட்ட கர்மம் என்பது பொய்யானதாக, ஒரு சில நாள்களில் அழியக்கூடியதாக உள்ள வர்ணத்திற்கு (சாதி) ஏற்றதாக இருக்கும். "விருத்தி" என்பதால் கூறப்பட்ட கைங்கர்யம் என்பது எப்போதும் உன்மையானதாக, என்றும் அழியாமல் நிலைத்து நிற்பதாக உள்ள அடிமைக்கு ஏற்றதாக இருக்கும். வர்ணத்தை ஏன் அஸத்யம், அநித்யம் என்றார்? காரணம் - ஆத்மாவுக்கு ஏற்றதான ஸ்வரூபம் இல்லாததாலும்; ஒரே தன்மை கொண்டதாக இல்லாமல் ஏதோ ஒரு காரணத்தால் உண்டாகி பின்னர் சில நாட்கள் கழித்து மறைந்து விடக்கூடிய இந்தச் சரீரத்தை நம்பி உள்ளதாலும் ஆகும். அடிமைத்தனத்தை ஏன் ஸத்யம், நித்யம் என்றார்? காரணம் – ஆத்ம ஸ்வரூபத்துக்குச் சேரும்படி உள்ளதாலும், ஒரே தன்மை கொண்டதாக இந்தச் சரீரத்தில் உயிர் நிலைக்கும்வரை தொடர்வதாலும் ஆகும்.

“வர்ண அநுகுணம்” என்றால் “வர்ணத்துக்குச் சேரும்விதத்தில்” என்று பொருள். இது போன்றே “தாஸ்ய அநுகுணம்” என்றால் “அடிமைத்தனத்திற்குச் சேரும்விதத்தில்” என்று பொருள்.

## 27. இவற்றுக்கு விதிராகங்கள் ப்ரேரகங்கள்.

**அவதாரிகை** - இவையிரண்டுக்கும் ப்ரேரங்கள் எவையென்னச் சொல்லுகிறது – (இவற்றுக்கித்யாதி).

**விளக்கம்** - இப்படியாக உள்ள கர்மம் மற்றும் கைங்கர்யம் ஆகிய இரண்டையும் செய்யத் தூண்டுவது எது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “யஜேத, ஜுஹுயாத்” இத்யாதியான சாஸ்த்ரவிதி கர்மத்துக்கு ப்ரேரகம். அசேஷ சேஷதைகரதியாகிற ராகம் கைங்கர்யத்துக்கு ப்ரேரகமென்கை. “பகவதநுபவ ஜநித ப்ரீதிகாரித” மிறே கைங்கர்யம். “உகந்து பணி செய்து” என்னக் கடவதிறே.

**விளக்கம்** - கர்மம் செய்யத் தூண்டுவது, யஜேத - யாகம் செய்யக்கடவன், ஜுஹுயாத் – அவிர்பாகம் இடுவனாக – என்பது போன்ற சாஸ்த்ர விதிகள் ஆகும். கைங்கர்யம் செய்யத் தூண்டுவது, அனைத்துவிதமான கைங்கர்யங்களிலும் ஈடுபடுத்தவல்ல ஆசை ஆகும். சரணாகதி கத்யத்தில் - பகவத் அனுபவ ஜநித ப்ரீதிகாரித - பகவத் அனுபவத்தால் பிறந்த ப்ரீதி – என்பதே கைங்கர்யம் என்று உரைத்தது காண்க. திருவாய்மொழி (10-8-10) - உகந்து பணி செய்து - என்றது காண்க.

## 28. மண்டினாரும் மற்றையாரு மாச்ரயம்.

**அவதாரிகை** - இவற்றுக்கு ஆச்ரயமாரென்னச் சொல்லுகிறது - (மண்டினாருமித்யாதி).

**விளக்கம்** – கர்மம் மற்றும் கைங்கர்யம் ஆகிய இரண்டும் செய்வதற்கு ஏற்றவர்கள் யார் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டினார்” என்று உகந்தருளின நிலங்களிலே அத்யபிநிவிஷ்டரா யிருக்கிற ப்ரபன்னர் கைங்கர்யத்துக்கு ஆச்ரயம். “விளக்கின் விதியில் காண்பார்” என்று கீழிற்பாட்டில் சொன்ன மற்றையாரான உபாஸகர் கர்மத்துக்கு ஆச்ரயமென்கை. இத்தால் கர்ம கர்த்தாக்களையும் கைங்கர்ய கர்த்தாக்களையும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – திருக்குறுந்தாண்டகம் (19) - கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டினார் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் மிகவும் விருப்பத்துடன் வசிக்கும் திவ்யதேசங்களில் ஆழ்ந்த பற்றுதல் வைத்துள்ள ப்ரபன்னர்களே கைங்கர்யத்திற்கு ஏற்றவர்கள் ஆவர். திருக்குறுந்தாண்டகம் (18) - விளக்கின் விதியில் காண்பார் - என்ற பாசுரத்தில் கூறப்பட்ட மற்ற உபாஸகர்கள் அனைவரும் கர்மத்திற்கு ஏற்றவர்கள் ஆவர். இதன் மூலம் கைங்கர்யம் மற்றும் கர்மம் ஆகியவற்றுக்குத் தகுதியானவர்களை உரைத்தார்.

29. அருள் முடிய நிறுத்தி அடைய நின்றதும் நல்லதோரருள் தன்னாலே நன்று மெளியனாகிறதும் விஷயம்.

**அவதாரிகை** - இவற்றுக்கு விஷயமேதென்னச் சொல்லுகிறது – (அருள்முடிய வித்யாதி).

**விளக்கம்** – கர்மம் மற்றும் கைங்கர்யம் ஆகிய இரண்டையும் இயற்றுவதற்கான இலக்கு எது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “எத்தவம் செய்தார்க்கும் அருள் முடிவதாழியான் பால்” என்கிறபடியே ஆச்ரயண பலஸித்தி தன்னுடைய ப்ரஸாதத்தாலேயாம்படி, “தன் மூர்த்தி நிறுத்தினான் தெய்வங்களாக” என்கிறபடியே தனக்கு தநுபூதரான தேவதைகளை நிறுத்தி “அவரவர் விதிவழி யடைய நின்றனர்” என்கிறபடியே ஆச்ரயிக்கிற சேதநர் வித்யுக்த ப்ரகாரேண ஆச்ரயித்து பலம் பெறும்படி தேவதாந்தர்யாமியாய் நின்றவிடம் கர்மத்துக்கு விஷயம்; “நல்லதோரருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம்” என்றும், “கருத்துக்கு நன்று மெளியனாய்” என்றும் சொல்லுகிறபடியே கேவல ஸ்வ க்ருபையாலே அத்யந்த

ஸுலபனாய்க் கொண்டு அர்ச்சாவதாரமாய் நிற்கிறவிடமே கைங்கர்யத்துக்கு விஷய மென்கை.

**விளக்கம்** – நான்முகன் திருவந்தாதி (2) - எத்தவம் செய்தார்க்கும் அருள் முடிவதாழியான் பால் - என்று கூறுவதற்கு ஏற்ப, எந்தத் தெய்வங்களை அண்டினாலும் கிட்டவல்ல பயன் என்பது ஸர்வேச்வரனாகிய தன் மூலமாகவே ஆகும் என்னும் விதத்தில், திருவாய்மொழி (5-2-8) - தன் மூர்த்தி நிறுத்தினான் தெய்வங்களாக - என்பதற்கு ஏற்றபடி, தனக்குச் சரீரமாக உள்ள மற்ற தெய்வங்களை ஏற்படுத்தினான்; திருவாய்மொழி (1-1-5) - அவரவர் விதிவழி யடைய நின்றனர் - என்பதற்கு ஏற்ப அந்தந்த தேவதைகளை அண்டி நின்று, விதிக்கப்பட்ட கர்மங்கங்களை இயற்றி, அதன் மூலம் பயன் பெறும்படியாகத் தான் அந்த தெய்வங்களின் அந்தர்யாமியாக நிற்பதே கர்மத்தின் இலக்கு ஆகும் (உதாரணமாக, வேதவரிகளில் வரும் இந்த்ரன், அக்னி போன்ற தேவதைகளின் அந்தர்யாமி என்று கருத்து). திருமாலை (10) - நல்லதோரருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம் - என்றும், திருவாய்மொழி (3-6-11) - கருத்துக்கு நன்று மெளியனாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தனது க்ருபை என்பதால் மட்டுமே அடைவதற்கு மிகவும் எளியவனாக அர்ச்சாவதாரமாக நிற்கும் நிலையே கைங்கர்யத்துக்கு இலக்கு ஆகும்.

30. இவற்றாலே ஸாதாரண மஸாதாரண மென்னும்.

**அவதாரிகை** – இவ்வோ நிலைகளை விஷயமாக வுடைத்தாகையாலே கர்ம கைங்கர்யங்கள் இப்படி சொல்லப்பட்டன என்கிறார் - (இவற்றாலே யித்யாதி).

**விளக்கம்** – அந்தர்யாமியாக நிற்கும் ஸர்வேச்வரனை இலக்காகக் கொண்டது கர்மம் என்றும், அர்ச்சையாக நிற்கும் ஸர்வேச்வரனை இலக்காகக் கொண்டது கைங்கர்யம் என்றும் உள்ளதால், கர்மம் மற்றும் கைங்கர்யங்கள் குறித்து இவ்விதம் கடந்த சூர்ணையில் உரைக்கப்பட்டன என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி தேவதாந்தர்யாமியையும் அர்ச்சாவதாரத்தையும் விஷயமாகவுடைய இவ்வாகாரங்களாலே ஸாதாரண விக்ரஹ விசிஷ்டனை விஷயமாக

வுடைய கர்மத்தை ஸாதாரணமென்றும், அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனை விஷயமாக வுடைய கைங்கர்யத்தை அஸாதாரணமென்றும் சொல்லுமென்கை.

**விளக்கம்** – இவ்விதம் அனைத்து தெய்வங்களுக்கும் அந்தர்யாமியாக உள்ள நிலையையும், அர்ச்சையாக உள்ள நிலையையும் விஷயமாகக் கொண்டதான கர்மம் மற்றும் கைங்கர்யம் என்பவை - நான்முகன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு அந்தர்யாமியாக நிற்பது கொண்டு மிகவும் பெரிய சிறப்பு அற்ற நிலை என்பதால், அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனைக் குறித்து இயற்றப்படும் கர்மங்களும் சிறப்பு ஏதும் இல்லாதது என்றும்; திவ்யமங்களமான திருமேனியாக அர்ச்சையுடன் கூடிய நிலை என்பதால், அர்ச்சையாக நிற்கும் ஸர்வேச்வரனைக் குறித்துச் செய்யப்படும் கைங்கர்யங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை என்றும் கருத்து.

31. ஜாத்யாச்ரமதீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள்போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்.

**அவதாரிகை** - இவ்வஸாதாரண ஸேவையிலே அதிகரித்தார்க்கு ஸாதாரணமானவதில் அந்வயம் தன்னடையே கழியும்படியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் - (ஜாத்யாச்ரமேத்யாதி).

**விளக்கம்** – இப்படியாகச் சிறப்புள்ள கைங்கர்யத்தில் ஈடுபட்டவர்களுக்கு, சிறப்பற்றதான கர்மங்களுடைய சேர்க்கை என்பது தானாகவே கழிந்துவிடும் என்பதைத் தக்க உதாரணத்தோடு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ஸ்வகர்ம ப்ராஹ்மணஸ்ய அத்யயநம், அத்யாபநம், யஜநம் யாஜநம், தாநம் ப்ரதிக்ரஹணம், தாயாத்யம் ஸிலோஞ்ச்ச: அந்யச்ச அபரிக்ருஹீதம், ஏதாந்யேவ க்ஷத்ரியஸ்ய அத்யாபந யாஜந ப்ரதிக்ரஹணாநி பரிஹார்யாணி; தண்டயுத்தாதிகார:, க்ஷத்ரியவத் வைச்யஸ்ய, தண்டயுத்தவர்ஜம் க்ருஷி கோ ரக்ஷண வாணிஜ்யாதிகம் க்ராஹ்யம்” என்கையாலே, அத்யயநாத்யாபந யஜந யாஜந தாந ப்ரதிக்ரஹ ரூப ஷட்கர்மமும் ப்ராஹ்மணனுக்கு கர்த்தவ்யமாய், க்ஷத்ரிய வைச்யர்களுக்கும் அத்யாபநாதி த்ரயமொழிய அத்யயநாதித்ரயமே கர்த்தவ்யமாய்,


Email:sridharan_book@yahoo.co.in

அவர்கள் தங்களுள்ளும் தண்டயுத்தங்கள் க்ஷத்ரியனுக்கு அஸாதாரணமாய், க்ருஷி கோ ரக்ஷண வாணிஜ்யங்கள் வைச்யனுக்கு அஸாதாரணமாய், "சுச்ரூஷா சூத்ரஸ்ய இதரேஷாம் வர்ணாநாம்" என்கையாலே சூத்ரனுக்கு த்ரைவர்ணிக சுச்ரூஷையே தர்மமாய், இப்படி தத்தஜ்ஜாத்யநுகுணமாக ஒருவனுக்கு உபாதேயமானது ஒருவனுக்கு த்யாஜ்யமாய்க் கொண்டு தர்மங்கள் பேதித்திருக்குமிறே.

**விளக்கம்** - ஆபஸ்தம்ப ஸூத்ரம் - ஸ்வகர்ம ப்ராஹ்மணஸ்ய அத்யயநம், அத்யாபநம், யஜநம் யாஜநம், தாநம் ப்ரதிக்ரஹணம், தாயாத்யம் ஸிலோஞ்ச்ச: அந்யச்ச அபரிக்ருஹீதம், ஏதாந்யேவ க்ஷத்ரியஸ்ய அத்யாபந யாஜந ப்ரதிக்ரஹணாநி பரிஹார்யாணி; தண்டயுத்தாதிகார:, க்ஷத்ரியவத் வைச்யஸ்ய, தண்டயுத்தவர்ஜம் க்ருஷி கோ ரக்ஷண வாணிஜ்யாதிகம் க்ராஹ்யம் - ஒரு அந்தணனுக்கான கர்மங்கள் என்னவென்றால் வேதம் ஓதுதல் ஓதுவித்தல், யாகம் செய்தல் செய்வித்தல், தானம் அளித்தல் அளிக்கும்படிச் செய்தல், தாயபாகம் கொண்டு கிட்டிய செல்வம் கதிர்நெல் சேககரித்தல், மற்றவர்களால் எடுத்துக்கொள்ளப்படாத பழங்கள் மற்றும் கிழங்குகளை விரும்புதல் ஆகும்; இந்த ஆறில் வேதம் ஓதுவித்தல், யாகம் செய்வித்தல், தானம் செய்வித்தல் என்று மூன்றுடன் சேர்ந்து, தண்டித்தல் மற்றும் யுத்தம் செய்தல் ஆகியவை க்ஷத்ரியனுக்கு மட்டுமே உரியவை ஆகும்; க்ஷத்ரியனுக்குக் கூறப்பட்ட தண்டித்தல் மற்றும் போர் செய்தல் ஆகியவை நீங்கலாக உள்ள மற்ற மூன்றும் (அதாவது வேதம் ஓதுவித்தல், யாகம் செய்வித்தல், தானம் செய்வித்தல்), வைசியனுக்கு உரிய கர்மங்கள் ஆகும்; இந்த மூன்றுடன் சேர்ந்து பயிர் செய்தல், பசுக்களைக் காத்தல் மற்றும் வியாபாரம் செய்தல் ஆகிய மூன்றும் வைசியனுக்கு மட்டுமே உரியதாகும் – என்று கூறியது காண்க. ஆக வேதம் ஓதுதல் ஓதுவித்தல், யாகம் செய்தல் செய்வித்தல், தானம் செய்தல் செய்வித்தல் ஆகிய ஆறும் அந்தணர்களுக்கு உரிய கர்மங்கள்; இவற்றில் வேதம் ஓதுவித்தல், யாகம் செய்வித்தல், தானம் செய்வித்தல் ஆகிய மூன்றும் க்ஷத்ரியன் மற்றும் வைசியன் ஆகிய இருவருக்கும் உரிய கர்மங்கள்; இவர்கள் இருவரில், போர் செய்தல் மற்றும் தண்டித்தல் ஆகிய இரண்டும் க்ஷத்ரியனுக்கு மட்டுமே உரிய கர்மங்கள்; பயிர் செய்தல், பசுக்களைக் காத்தல், வியாபாரம் செய்தல் ஆகியவை வைசியனுக்கு மட்டுமே உரிய கர்மங்கள் ஆகும். மேலும் ஆபஸ்தம்ப ஸூத்ரம் - சுச்ரூஷா சூத்ரஸ்ய இதரேஷாம் வர்ணாநாம் – அந்தணர், க்ஷத்ரியர், வைசியர் ஆகிய மூவரும் அந்தந்த காரியங்களைச் செய்யும்போது, அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளை இயற்றுதலே மற்ற

வர்ணமாகிய சூத்திரர்களுக்கு உரிய கர்மம் ஆகும் – என்பதால், மற்ற வர்ணத்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தலே சூத்திரர்களுக்குத் தர்மம் ஆகிறது. இப்படியாக அந்தந்த வர்ணத்தினரின் தர்மங்கள் வேறுபட்டுள்ளன அல்லவோ?

**வ்யாக்யானம்** - ப்ரஹ்மசாரியான தசையில் உபாதேயமான பிக்ஷாசரண ஸாமிதாதாநாதிகள் க்ருஹஸ்தனான தசையில் த்யாஜ்யங்களாய், அக்நிஹோத்ர அதிதி ஸத்காராதிகள் உபாதேயமாகையாலும், வநஸ்த்தனான தசையில், "ஸந்த்யஜ்ய க்ராம்ய மாஹாரம் ஸர்வஞ்சைவ பரிச்சதம்" என்கையாலே பூர்வாச்ரமத்தி லுபாதேயமான க்ராம்யாஹார பரிச்சதாதிகள் த்யாஜ்யமாய், "வஸீத சர்ம சீரம் வா" என்று தொடங்கிச் சொல்லப்பட்ட சர்ம சீரவஸநத்வ ஜடிலத்வ ச்மச்ருலோம நகதாரண வந்யாஹாரங்கள் உபாதேயமாகையாலும், ஸந்நயாஸியான தசையில் பூர்வாச்ரம உபாதேயமான அக்நிஹேத்ராதிதி ஸத்காராதிகளும் ஜடிலத்வாதிகளும் த்யாஜ்யமாய், "அநக்நி ரநிகேதஸ் ஸ்யாத்" இத்யாதிப்படியே அநக்நித்வா நிகேதத்வா ஸஹாயத்வாதிகள் உபாதேய மாகையாலும் ப்ரத்யாச்ரமம் தர்மம் பேதியா நின்றதிறே.

**விளக்கம்** - ப்ரஹ்மசாரியாக உள்ளபோது பிக்ஷை எடுத்தல், ஸமித்தைச் சேகரித்தல் என்றுள்ள தர்மங்களை, அவன் க்ருஹஸ்தனாகும்போது கைவிட்டு, அக்னிஹோத்ரம் மற்றும் விருந்தினர் உபசாரம் என்பவை கைக்கொள்ளத்தக்கவைகளாக உள்ளன; வானப்ரஸ்தனாக உள்ள நிலையில், மநுஸ்ம்ருதி - ஸந்த்யஜ்ய க்ராம்ய மாஹாரம் ஸர்வஞ்சைவ பரிச்சதம் - கிராமத்தில் உள்ள அனைத்து உணவு, ஆடை ஆபரணங்களை கைவிட்டு – என்று கூறுவதற்கு ஏற்ப க்ருஹஸ்தனாக உள்ளபோது ஏற்கத்தக்கதான கிராமத்தில் உள்ள உணவுவகைகள் மற்றும் அலங்காரங்கள் ஆகியவை கைவிடத் தக்கதாகவும், மநுஸ்ம்ருதி - வஸீத சர்ம சீரம் வா – தோல் அல்லது மரவுரி அணியவேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப மரவுரி அணிதல், சடை வளர்த்தல், தாடி மற்றும் நகங்கள் வளர்த்தல், காட்டில் கிட்டும் உணவுகளை உட்கொள்ளுதல் போன்றவை ஏற்கத்தக்கதாக உள்ளன; ஸந்நயாஸியாக உள்ளபோது க்ருஹஸ்தன் மற்றும் வானப்ரஸ்தன் ஆகிய நிலைகளில் உள்ள அக்னிஹோத்ரம், விருந்தினர் உபசாரம் போன்றவை தள்ளத்தக்கவையாகவும், மநுஸ்ம்ருதி – அநக்நி ரநிகேதஸ் ஸ்யாத் - அக்னி இல்லாமலும், வீடு இல்லாமலும் இருத்தல் வேண்டும் – என்பதற்கு ஏற்ப அக்னிகார்யம் இல்லாமலும், வீடு இல்லாமலும், துணை ஏதும் இல்லாமலும் இருத்தல் வேண்டும் என்று

உள்ளது. இப்படியாக ஒவ்வொரு ஆச்ரமங்களிலும் உள்ள தர்மங்கள் வேறுபட்டுள்ளன அல்லவோ?

**வ்யாக்யானம்** - ஜ்யோதிஷ்டோமாதிகளிலே தீக்ஷித்தவனுக்கு வர்ணத்ரயாச்ரம சதுஷ்டய ஸாதாரணமாய் அசுரணே ப்ரத்யவாயதயா அவச்ய கர்த்தவ்யமாய்ப் போரும் நித்யகர்மம் அநநுஷ்டேயமாய், ஜ்யோதிஷ்டோமாதி தர்மமே அநுஷ்டேயமாகையாலே தீக்ஷையிலே தர்மம் பேதித்திருக்குமிறே.

**விளக்கம்** – ஜ்யோதிஷ்டோமம் போன்ற யாகங்களை இயற்றும் பொருட்டு அதற்கான அனுமதியைக் கைக்கொண்டவனுக்கு, மூன்றுவிதமான வர்ணங்கள் மற்றும் நான்குவித ஆச்ரமங்கள் ஆகியவற்றில் உள்ளவர்கள் அவசியமாகச் செய்யவேண்டிய அன்றாட கர்மங்களை இயற்றாமல் விடுவதும், ஜ்யோதிஷ்டோமம் போன்றவை மட்டுமே பின்பற்றவேண்டும் என்பதும் விதிக்கப்பட்டது என்பதால், தீக்ஷை பெற்ற பின்னர் தர்மங்கள் வேறுபட்டுள்ளன அல்லவோ?

**வ்யாக்யானம்** - ஆக இப்படி ப்ராஹ்மணாதி ஜாதிகளிலும் ப்ரஹ்மசர்யாத் யாச்ரமங்களிலும் ஜ்யோதிஷ்டோமாதி தர்மாந்தர தீக்ஷைகளிலும் பேதிக்கும் தர்மங்கள் போலே அஸாதாரண விக்ரஹ ஸஹிதேச்வர விஷயமாகையாலே அஸாதாரணமாய், அதஏவ, "அத்தாணிச்சேவகம்" என்று அந்தரங்க ஸேவையாயிருக்கிற கைங்கர்யத்திலே அதிகரித்தவர்களுக்கு தேவதாந்தர்யாமி விஷயமாய் தச்சரீர பூத தேவதாத்வாரா ததாராதநமாகையாலே ஸாதாரணமாயிருந்துள்ள கர்மம் உறங்குவான் கைப்பண்டம் போலே தன்னடையே நழுவுமென்கை. இத்தால் வர்ணாச்ரமாதி நிஷ்ட்டர்க்கு தத்ததிகாராநுரூப தர்மமொழிய அநநுகுணாமானது த்யாஜ்யதயா கழிக்கப்படுமா போலே ஸ்வரூப யாதாத்ம்ய தர்சிகளானவர்களுக்கு தததநுரூப தர்மமொழிய அதநுரூபமானது த்யாஜ்யமாய் தன்னடையே விட்டுக் கழியுமென்றதாயிற்று. இப்படியிருக்கச் செய்தே சிஷ்டர்கள் அநுஷ்ட்டித்துப் போருகிறது - ஸ்வாநுஷ்ட்டாநத்தைப் பின்சென்று லோகம் நசிக்கவொண்ணாதென்னு மாந்ரு சம்ஸ்யத்தாலேயிறே. "யதி ஹ்யஹம் ந வர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித:, மம வர்த்மாநு வர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வச:; உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்மசேதஹம்,


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா:" என்கிறபடியே பரார்த்தமாகவிறே இவர்களு மநுஷ்ட்டிப்பது.

**விளக்கம்** - ஆகவே இப்படியாக அந்தணன் முதலான வர்ணங்களிலும், ப்ரஹ்மசர்யம் முதலான ஆச்ரமங்களிலும், ஜ்யோதிஷ்டோமம் போன்றதான வேறுபட்ட தர்மங்கள் கொண்ட தீக்ஷை நிலைகளிலும் தர்மங்கள் வேறுபட்டு, அந்தந்த கட்டங்களில் சில சில கர்மங்கள் தாங்களாகவே மறைகின்றன. இதே போன்று - கைங்கர்யம் என்பது, தனக்கே உண்டான திவ்யமங்கள விக்ரஹம் என்பதுடன் கூடிய ஸர்வேச்வரன் விஷயமாக உள்ளதால் சிறப்பு வாய்ந்ததாகவும், திருப்பல்லாண்டு (8) – அத்தாணிச் சேவகமும் - என்பதற்கு ஏறப அவனுக்குச் செய்யப்படும் அந்தரங்கத் தொண்டாகவும் உள்ளதால், அத்தகைய கைங்கர்யத்தில் நிலை நிற்பவர்களுக்கு, தேவர்களுடைய அந்தர்யாமியாக ஸர்வேச்வரன் உள்ள அந்தர்யாமி நிலை என்பதற்கு விஷயமாகவும், ஸர்வேச்வரனாகிய தனது சரீரமாக உள்ள தேவர்கள் மூலம் தனக்குச் செய்யப்படும் ஆராதனம் என்பதாகவும் உள்ளதால் அதிக மேன்மை அல்லாத கர்மங்கள், உறங்கும் ஒருவனிடம் உள்ள பொருள் போன்று தாங்களாகவே மறைந்துவிடும் என்று கருத்து. இதன் மூலம், நான்குவிதமான வர்ண தர்மங்கள், நான்குவிதமான ஆச்ரம தர்மங்கள் போன்ற தர்மங்களில் ஆழ்ந்து நிற்பவர்களுக்கு, அந்தந்த வர்ணாச்ரம தர்மங்கள் அல்லாமல் மற்ற தர்மங்கள், தாங்களாகவே விலக்கப்படுவது போன்று – ஆத்மஸ்வரூபத்தினை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களுக்கு அதற்குரிய தர்மங்கள் அல்லாமல் மற்ற அனைத்தும் கைவிடத் தக்கதான தர்மங்களாகவே அகன்றுவிடும். இவ்விதம் உள்ளபோதிலும் ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி அறிந்தவர்கள், அன்றாடம் கர்மங்களை இயற்றுவது ஏன் என்றால், தங்களுடைய நடவடிக்கைகளைக் கண்டு மற்றவர்களும் கர்மம் இயற்றாமல் இருக்கக்கூடாது என்பதால் ஆகும். இதனைக் கீதையில் பகவான் கீழே உள்ளது போன்று உரைத்தமை காண்க:

- (3-23) – யதி ஹ்யஹம் ந வர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித:, மம வர்த்மாநு வர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வச: – பார்த்தா! நான் எனது கர்மங்களில் ஈடுபடாமல் இருந்தால் பெருத்த தீமை உண்டாகும். காரணம், மனிதர்கள் அனைத்து விதங்களிலும் என்னுடைய வழியைப் பின்பற்றியபடியே உள்ளனர்.

- (3-24) - உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்மசேதஹம், ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா: - நான் கர்மம் இயற்றாவிட்டால் இந்த உலகில் உள்ள அனைவரும் சீர்குலைந்து போவர். இப்படிப்பட்ட பேரழிவை நானே உண்டாக்கியவன் ஆகிவிடுவேன். இந்த மனிதர்களைக் கொன்றவனாகவும் ஆகிவிடுவேன்.

மேலே உள்ள வரிகளுக்கு ஏற்ற, மற்றவர்களுக்காக அல்லவோ இவர்கள் தங்களுடைய தர்மங்களைச் செய்தபடி உள்ளனர்!!

32. ஸாதந ஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திக ளென்று துறைவேறிடுவித்தது.

**அவதாரிகை** - இந்த கைங்கர்ய நிஷ்ட்டர்க்கு கர்ம நிஷ்ட்டரோடு சேர்த்தியில்லாமையைச் சொல்லுகிறது – (ஸாதநேத்யாதி).

**விளக்கம்** - பகவத் கைங்கர்யத்தில் நிலைநிற்பவர்களுக்கு, கர்மங்களில் ஆழ்ந்து நிற்பவர்களுடன் எந்தவிதமான சேர்த்தியும் இல்லாமை என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸாதநத்தில் முதலடியான கர்மமும் ஸாத்யத்தில் முடிந்த நிலையான கைங்கர்யமும் - இந்த நெடுவாசி யறிந்தவர்களை, "நீங்கள் வர்ணதர்மிகள், நாங்கள் தாஸவ்ருத்திகள்" என்று உறவறுத்துத் துறைவேறிட்டுப் போகப் பண்ணிற்றென்கை. அதாவது, திருவயிந்திரபுரத்திலே "வில்லிபுத்தூர்ப் பகவர்" என்பாரொருவர், எல்லாருமொரு துறையில் அநுஷ்ட்டாநம் பண்ண, தனியே ஒரு துறையிலே அநுஷ்ட்டாநம் பண்ணுவாராய், ஒருநாள் அநுஷ்ட்டாநம் பண்ணி மீளாநிற்கச் செய்தே இருந்த ப்ராஹ்மணர், "ஜீயரே! எங்கள் துறையிலே அநுஷ்ட்டாநம் பண்ணவாராதொழிகிறதென்?" என்ன; "விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிண:, அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி:" என்று துறை வேறிட்டுப் போனாராய்த்து.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - பேற்றினை அடையவைக்கும் உபாயங்களில் முதல் நிலையான கர்மம் மற்றும் அந்தப் பேற்றினை அடைந்த வழிகளின் எல்லை நிலமாக உள்ள கைங்கர்யம் ஆகிய இரண்டும், இந்த இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அறிந்தவர்களை, "நீங்கள் வர்ணாச்ரமத்தின் தர்மங்களில் நிற்பவர்கள், நாங்கள் கைங்கர்யத்தில் வளர்பவர்கள்" என்று உறவுகளை அறுத்துக்கொண்டு போகச்செய்தது. இதற்கு ஒரு நிகழ்வைக் கூறுகிறார். திருவயிந்திரபுரத்தில் வில்லிபுத்தூர்ப்பகவர் என்னும் ஒருவர், அன்றாடம் அனைவரும் ஒரு இடத்திற்குத் தங்களுடைய காலைக்கடன்களை முடிக்கச் செல்லும்போது, தான் வேறு ஒரு இடத்திற்குச் செல்வது வழக்கம் ஆகும். அப்போது அங்கு வந்த ஒரு சில அந்தணர்கள் அவரிடம், "ஜீயரே! நாங்கள் செல்லும் இடத்திற்கு நீவிர் வராமல் இருப்பதன் காரணம் என்ன?", என்றனர். இதற்கு அவர், "விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிண:, அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி: - நாங்கள் விஷ்ணுவிற்குக் கைங்கர்யம் செய்யும் வைஷ்ணவர்கள், நீங்கள் வர்ணாச்ரம விதிகளுக்கு உட்பட்டுக் கர்மம் செய்யும் அந்தணர்கள்; கைங்கர்யம் செய்தபடி உள்ள எங்களுக்கு, கர்மங்கள் செய்தபடி உள்ள உங்களுடன் எந்தச் சேர்த்தியும் இல்லை", என்று உரைத்துச் சென்றார்.

33. வேதவித்துக்களும் மிக்க வேதியரும் ச்சந்தஸாம் மாதாவாலும் அதுக்குத் தாயாய்த் தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்குமது இவருக்கும் ச்ரேஷ்ட்ட ஜந்மம்.

**அவதாரிகை** - கீழ் (ஜாத்யாதிகளில் பேதிக்கும் தர்மங்கள் போலே) என்ற வித்தாலே ஸூசிதமான அதிகார பேதத்துக்கும் துறைவேறிட்டுப் போகும்படியான நெடுவாசிக்கும் ப்ரகாசகமான கர்ம கைங்கர்ய நிஷ்ட்டரிருவர்க்கு முண்டான ஜந்மாதி விசேஷத்தை தர்சிப்பிப்பதாகக்கோலி, ப்ரதமம் ஜந்ம விசேஷத்தைச் சொல்லுகிறது – (வேதவித்துக்க ளித்யாதி).

**விளக்கம்** – சூர்ணை (31) - ஜாத்யாதிகளில் பேதிக்கும் தர்மங்கள் போலே - என்பதில் குறிப்பால் உணர்த்தப்பட்ட அதிகார வேற்றுமை மற்றும் கடந்த சூர்ணையில் மற்றொரு இடத்திற்குச் சொல்லுதல் என்றுள்ள வேற்றுமை ஆகிய இரண்டிற்கும் மேலும் விளக்கம் அளிக்கத் திருவுள்ளம் பற்றினார். ஆகவே, கர்மத்தில் நிலை நிற்பவர்கள், கைங்கர்யத்தில் நிலைநிற்பவர்கள் என்ற இருவருக்கும் இடையே உள்ள பலவகையான விசேஷங்களை


**Email:**sridharan_book@yahoo.co.in

எடுத்துரைக்கத் திருவுள்ளம் கொண்டவராக, முதலில் இருவருக்கும் இடையே உள்ள பிறவியின் விசேஷத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “யேச வேதவிதோ விப்ரா:” என்கிற வேதவித்துக்களான பூர்வபாக நிஷ்ட்டர், “காயத்ரீம் ச்சந்தஸாம் மாதா” என்கிறபடியே ச்சந்தஸ்ஸுக்களுக்கு மாதாவா யிருக்கிற காயத்ர்யுபதேசத்தாலே பிறப்பிக்குமது, கர்ம நிஷ்ட்டர்க்கு ச்ரேஷ்ட்ட ஜந்மம்.

**விளக்கம்** - மஹாபாரதம் - யேச வேதவிதோ விப்ரா: - எந்த அந்தணர்கள், வேதத்தின் பூர்வபாகத்தை அறிந்தவர்களோ - என்று கூறுவதற்கு ஏற்ப, வேதங்களுடைய முற்பாகத்தை நன்றாக அறிந்து, அதில் மட்டுமே நிலைத்து நிற்கும் நிஷ்டர்கள், தைத்திரீயத்தில் - காயத்ரீம் ச்சந்தஸாம் மாதா - சந்தஸ் அனைத்திற்கும் காயத்ரீயே தாய் ஆவாள் - என்பதற்கு ஏற்ப, சந்தஸ்ஸுகளுடைய தாயாக உள்ள காயத்ரி உபதேசம் மூலம் உண்டாகும் பிறப்பு என்பது (அதாவது யஜ்ஞோபவீதம் தரித்த பின்னர் ஏற்படுவது இரண்டாவது பிறப்பு என்பர்) கர்மங்களில் நிலைநிற்கும் தங்களுக்கு உயர்ந்த பிறப்பு என்று கொள்வர்.

**வ்யாக்யானம்** - “யோசாத்யாத்மவிதோ ஜநா:” என்கிற மிக்க வேதியரான வேத தாத்பர்ய வித்துக்கள், “ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணா நிச, ஸர்வ மஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம்” என்று ஸகல வேதஸங்க்ரஹ மாகையாலே அந்த காயத்ரிக்கும் மாத்ருபூதமாய், “பெற்ற தாயினுமாயின செய்யும்” என்கிறபடியே சரீரோத்பாதிகையான மாதா மாத்ரமன்றிக்கே உஜ்ஜீவநத்துக் குறுப்பான ஜ்ஞாநத்தை யுண்டாக்கும் திருமந்த்ரோபதேசத்தாலே பிறப்பிக்குமது கைங்கர்ய நிஷ்ட்டர்க்கு ச்ரேஷ்ட்ட ஜந்மமென்கை. “ஸஹி வித்யாதஸ் தம் ஜநயதி தச்ச்ரேஷ்ட்டம் ஜந்ம” என்கையாலே கேவல ஜந்மமென்னாதே ச்ரேஷ்ட்ட ஜந்மமென்கிறது.

**விளக்கம்** – மஹாபாரதம் - யோசாத்யாத்மவிதோ ஜநா: – எந்த ஒருவன் வேதாந்தங்களை அறிந்துள்ளானோ – என்பதற்கு ஏற்ப வேதங்களுடைய தாத்பர்யம் அல்லது சாரமாக உள்ள வேதாந்தம் அறிந்தவர்கள், பாஞ்சராத்ரம் - ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணா நிச, ஸர்வ மஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம் – ருக்,

யஜுர், ஸாமம், அதர்வண வேதங்கள் மற்றும் இதிகாச புராணங்கள் அனைத்தும் அஷ்டாக்ஷர மந்திரத்தில் பொதிந்து உள்ளன - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்து வேதங்களுடைய சாரமாக உள்ளதால் காயத்ரிக்குத் தாய் போன்று, பெரியதிருமொழி (1-2-9) - பெற்ற தாயினுமாயின செய்யும் - என்பதற்கு ஏற்ப சரீரம் உண்டாவதற்குக் காரணமாக இருந்த தாய்தந்தையாக மட்டும் அல்லாமல் கரையேறுவதற்குத் தேவையான ஞானத்தையும் அளிப்பதான திருமந்த்ர உபதேசம் பெற்ற பின்னர் உண்டாகும் பிறப்பை, கைங்கர்யத்தில் நிலைநிற்கும் தங்களுக்கு மிகவும் உயர்ந்த பிறப்பு என்று கொள்வர். ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் - ஸஹி வித்யாதஸ் தம் ஜநயதி தச்ச்ரேஷ்ட்டம் ஜந்ம - ஆசார்யன் ஞானத்தால் ஒருவனுக்குப் பிறவி அளிக்கிறான், அந்த ஞானத்தால் ஏற்படும் பிறவியே ஒருவனுக்கு மிகவும் உயர்ந்த பிறவி – எனறு கூறுவதன் காரணமாக "ஜன்மம்" என்று மட்டுமே கூறாமல், "ச்ரேஷ்ட ஜன்மம் = உயர்ந்த பிறவி" என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - அது வர்ணாநுகுணமான விதிநிஷேதங்களுக்கும் ததநுரூபாநுஷ்ட்டாநத்துக்கும் ததநுகுண பலப்ராப்திக்கும் உறுப்பாகையாலே அவர்களுக்கு ச்ரேஷ்ட்ட ஜந்மம். இது ஸ்வரூபாநு ரூபமான விதிநிஷேதங்களுக்கும் ததநுரூபாநுஷ்ட்டாநத்துக்கும் ததநுரூப பலப்ராப்திக்கும் உறுப்பாகையாலே இவர்களுக்கு ச்ரேஷ்ட்ட ஜந்மம்.

**விளக்கம்** – கர்மங்களில் நிலைநிற்பவர்களுக்கு - முதலில் கூறிய பிறப்பு என்பது அவரவர்களுடைய வர்ணங்களுக்குத் தகுதியான விதிவிலக்குகள், அந்தந்த வர்ணத்திற்குத் தேவையான நடத்தைகள், அதற்கு ஏற்ப பலன்களை அடைதல் ஆகியவற்றை அடைவதற்குக் காரணமாக உள்ளதால் அவர்களுக்கு அது சிறந்த பிறப்பு ஆகிறது, கைங்கர்யத்தில் நிலைநிற்பவர்களுக்கு – இரண்டாவதாகக் கூறிய பிறப்பு என்பது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்குத் தகுதியான விதிவிலக்குகள், ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்ற விதிகள், அதற்கான பலனை அடைதல் ஆகியவற்றுக்குக் காரணமான பிறப்பு என்பதால், அவர்களுக்கு இந்தப் பிறவி சிறந்ததாக உள்ளது.

34. அந்தணர் மறையோரென்றும் அடியார் தொண்டரென்றும் இவர்களுக்கு நிரூபகம்.

**அவதாரிகை** - இப்படி ச்ரேஷ்ட்ட ஜந்மாக்களான இருவர்க்கும் நிரூபகங்கள் இன்ன தென்கிறது - (அந்தணாரித்யாதி).

**விளக்கம்** - இப்படியாகச் சிறந்த பிறவிகள் கொண்ட இவர்கள் இருவருக்கும் பெயர்கள் இன்னவை என்று அருளிச்செய்கிறார் (நிரூபகம் என்றால் ஒரு பொருளை இன்னது என்று உணர்த்தவல்ல தனித்தன்மை).

**வ்யாக்யானம்** – அதாவது, “சாதியந்தணர்”, “துணை நூல் மார்வி னந்தணர்”, “தீயோம்புகை மறையோர்”, “நந்தாவண்கை மறையோர்” என்று விசேஷண பூத சரீரத்வாரா வந்த வர்ணமும், தத்ப்ரயுக்தமான வைதிகத்வமும் அவர்களுக்கு நிரூபகம்.

**விளக்கம்** - இவர்களில் வேதங்கள் கூறுவதிலும், கர்மங்களிலும் நிலை நிற்பவர்களுக்கு திருமாலை (43) - சாதியந்தணர், பெரியதிருமொழி (1-5-9) - துணை நூல் மார்வி னந்தணர், பெரியதிருமொழி (7-9-7) - தீயோம்புகை மறையோர், பெரியதிருமொழி (6-7-8) - நந்தாவண்கை மறையோர் – என்றும் உள்ளவற்றில் கூறுவதற்கு ஏற்ப, சரீரம் காரணமாக உண்டான ஜாதி மற்றும் அதன் காரணமாக வந்த வேதமார்க்கத்தில் நிற்பது என்பது நிரூபகம் ஆகிறது.

**வ்யாக்யானம்** - “திருமாலடியார்”, “அணியரங்கன் திருமுற்றத்தடியார்”, “திருமாலுக்குரிய தொண்டர்”, “திருநாரணன் தொண்டர்” என்று ஆத்மவஸ்துவுக்கு ஜ்ஞாநாநந்தங்களிற் காட்டில் அந்தரங்க நிரூபகமான சேஷத்வமும் தத்ப்ரயுக்த கிஞ்சித்கரத்வமும் இவர்களுக்கு நிரூபகமென்கை.

**விளக்கம்** - வேதங்களில் உள்ள சாரத்தைக் கூறும் திருமந்திரத்திலும், கைங்கர்யத்திலும் எப்போதும் நிலைநிற்பவர்களுக்கு, திருவாய்மொழி (5-9-11) - திருமாலடியார், பெருமாள் திருமொழி (1-10) - அணியரங்கன் திருமுற்றத்தடியார், திருவாய்மொழி (6-9-11) - திருமாலுக்குரிய தொண்டர், திருவாய்மொழி (3-7-4) - திருநாரணன் தொண்டர் - என்றும் உள்ளவற்றில் கூறுவதற்கு ஏற்ப, ஆத்மாவுக்கு ஞானம் மற்றும் ஆனந்தங்களைக்

காட்டிலும் முக்கியமான இலக்கணமாகக் கூறப்படும் அடிமைத்தனமும், அதன் அடியாக உள்ள கைங்கர்யமும் நிரூபகம் ஆகிறது.

35. ஒரு தலையில் க்ராம குலாதி வ்யபதேசம் குலந்தருமென்னும் மாசிற் குடிப்பழியென்று பதியாகக் கோயிலில் வாழுமென்பார்கள்.

**அவதாரிகை** - கேவலம் இவையோ நிரூபகம். க்ராம குலாதி வ்யபதேசங்களுமில்லையோ? என்னச் சொல்லுகிறது - (ஒருதலையிலித்யாதி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் உள்ளது போன்ற தன்மைகள் கொண்டு மட்டுமே அந்தந்த பிரிவினர் உணர்த்தப்படுவார்களா? அல்லவே, பெரும்பாலானவர்கள் அவர்களுடைய குலம், கிராமம் போன்றவற்றைக் கொண்டும் கூறப்படுகிறார்கள் அல்லவோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார் (குறிப்பு - ஒரு சிலர் தங்களுடைய பெயருக்கு முன்பாகத் தங்களுடைய குலப்பெயர், ஊரின் பெயர் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்வதை இங்கு அருளிச்செய்கிறார்).

**வ்யாக்யானம்** – அதாவது, கர்மநிஷ்ட்டரென்று சொல்லப்பட்ட வொருதலையில் சரீராநுபந்திகளான க்ராம குலாதிகளையிட்டு வ்யபதேசிக்கும் அந்த வ்யபதேசத்தை, கைங்கர்ய நிஷ்ட்டரான மற்றைத் தலையிலுள்ளவர்கள், “குலந்தரும்” என்கிறபடியே திருமந்த்ர ஸித்த பகவத் ஸம்பந்த ஜ்ஞாந ப்ரயுக்தமாய், “மாசில் குடி” என்று சேஷத்வ விரோதியான அஹங்காராதிக ளில்லாமையாலே நிர்தோஷமா யிருக்கிற இக்குலத்துக்கு அவத்யகரமென்று கருதி, “வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்”, “கோயில் வாழும் வைட்டணவன்” என்று பகவதந்வயமுள்ள தேசஸம்பந்தத்தையிட்டு வ்யவஹரிப்பர்க ளென்கை. இது பகவத் ஸம்பந்தத்தையிட்டும், பகவதீய ஸம்பந்தத்தையிட்டும் வ்யபதேசிக்கு மதுக்குமுபலக்ஷணம். “ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோநைவ க்ராம குலாதிபி: விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி” என்னக் கடவதிறே.

**விளக்கம்** – கர்மங்களில் நிலைநிற்பவர்கள் தங்களுடைய பெயர்களுக்கு முன்பாகச் சரீரஸம்பந்தம் காரணமாக ஏற்பட்ட குலம் மற்றும் கிராமங்களைக் கூறும் அடைமொழிகளைச் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் கைங்கர்யத்தில் மட்டுமே


Email:sridharan_book@yahoo.co.in

நிலைநிற்பவர்கள் செய்வது என்ன? பெரியதிருமொழி (1-1 9) - குலம் தரும் - என்பதற்கு ஏற்ப, திருமந்திரத்தின் மூலம் அறியப்பட்ட பகவத்ஸம்பந்த ஞானம் காரணமாக வந்ததும், மூன்றாம் திருவந்தாதி (10) - மாசில் குடி - என்பதற்கு ஏற்ப அடிமைத்தனத்திற்கு விரோதியான "நான், என்னுடையது" என்ற சிந்தனை இல்லாத காரணத்தால் தோஷம் இல்லாமல் உள்ளதும் ஆகிய பாகவதர்குலம் என்பதற்கு, தாங்கள் அந்தக் குலத்தின் பெயரை அடைமொழியாகச் சேர்த்துக்கொண்டால், அந்தக் குலத்தின் பெயருக்கு இழுக்கு உண்டாகும் என்று கருதுவார்கள். ஆகவே அவ்விதம் செய்யாமல், நாச்சியார் திருமொழி (8-9) - வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் - என்றும், பெரியாழ்வார் (5-1-3) – கோயில் வாழும் வைட்டணவன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுடைய தொடர்பு கொண்டுள்ள திவ்யதேசத்தின் பெயர்களைச் சேர்த்துக் கொண்டு உரைப்பார்கள் என்று கருத்து. இவ்விதம் அந்த திவ்யதேசத்தின் பெயர் கொண்டு உரைப்பது என்பது அங்குள்ள பகவானின் திருநாமம் என்ற ஸம்பந்தம் மற்றும் பகவத் ஸம்பந்தம் கொண்ட பொருள்களில் ஸம்பந்தம் ஆகியவற்றையும் குறிப்பதாகும். பரமைகாந்தி தர்மம் - ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோநைவ க்ராம குலாதிபி: விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி - பரமஞானியானவன் தனது குலம் மற்றும் கிராமம் ஆகியவற்றைக் கொண்டு கூறத்தக்கவன் அல்லன்; பகவானுடைய ஸம்பந்தம் கொண்டு மட்டுமே கூறத்தக்கவன் ஆவான்; காரணம், பரம ஞானிக்கு அனைத்தும் அவனே ஆவான் – என்றது காண்க.

36. விப்ரர்க்கு கோத்ர சரண ஸூத்ர கூடஸ்த்தர் பராசர பாராசர்ய போதாயநாதிகள்; ப்ரபந்ந ஜந கூடஸ்த்தர் பராங்குச பரகால யதிவராதிகள்.

**அவதாரிகை** - இனி உபயருடையவும் கூடஸ்த்தரைச் சொல்லுகிறது - (விப்ரர்க்கித்யாதி).

**விளக்கம்** - அடுத்து இந்த இரண்டு பிரிவினர்களுக்கும் மூலபுருஷர்கள் யார் என்பதை அருளிச்செய்கிறர்.

**வ்யாக்யானம்** – அதாவது, அந்தணர் மறையோர் என்கிற ப்ராஹ்மணர்க்கு கோத்ர கூடஸ்த்தர் பராசராதிகள்; கோத்ரமாவது = அபத்ய ஸந்ததி. "ஸந்ததிர் கோத்ர ஜநந குலாந்யபி ஜநாந் வயௌ" என்னக் கடவதிறே. அந்த கோத்ரந்தான் அநேகமாய், தத் தத் கூடஸ்ததரான வஸிஷ்ட்ட காச்யப பரத்வாஜ வத்ஸ ப்ரப்ருதிகள் பலருண்டாகையாலே

பராசராதிகளென்கிறது. சரண கூடஸ்த்தர் பாராசர்யாதிகள். சரணங்களாவன - வேதசாகைகள்; தத்த்யாயிகளையும் கௌணமாக சரண சப்தத்தாலே சொல்லக் கடவது. "சரண சப்த: காடக காலாபாதி சாகாவிசேஷேஷு முக்ய:, ததத்யாயிஷு புருஷேஷு கௌண:" என்கையாலே இவ்விடத்தில் சாகைகளைச் சொல்லுகிறது. ஸர்வ சாகைகளுக்கு ப்ரதாந ப்ரவர்த்தகன் பாராசர்யனாயிருக்கச் செய்தேயும், பின்பு தத்தச்சாகைகளுக்கு தனித்தனி ப்ரவர்த்தகரான கட கலாப கண்வாதிகளு முண்டாகையாலே பாராசர்யாதிகளென்கிறது. ஸூத்ர கூட்ஸ்த்தர்கள் போதாயநாதிகள். ஸூத்ரமாவது – கர்மாநுஷ்ட்டாந ப்ரதிபாதகமான கல்பம். "சீக்ஷாயாம் வர்ணசிக்ஷா" என்று தொடங்கிச் சொல்லிவருகிறவளவிலே, "கல்பேநுஷ்ட்டாநமுக்தம்" என்றதிறே. அதுதானும் பலவாய் தத்தத் கர்த்தாக்களான ஆபஸ்தம் பாச்வலாயநாதிகளு முண்டாகையாலே போதாயநாதிகளென்கிறது. ஆக, இவர்கள் விப்ரர்கள் கூடஸ்த்த புருஷர்கள்.

**விளக்கம்** - வேதங்களில் கூறப்பட்டுள்ள கர்மங்களில் நிலைநிற்கும் அந்தணர்களுடைய குலத்திற்கு மூலபுருஷர்கள் பராசரர் முதலானவர்கள் ஆவர். கோத்ரம் என்பது அந்தக் குலத்தின் பரம்பரை என்று பொருள். அமரகோசத்தில் - ஸந்ததிர் கோத்ர ஜநந குலாந்யபி ஜநாந் வயௌ - ஸந்ததி, கோத்ரம், பிறவி, குலம், அபிஜநம், அந்வயம் என்பவை ஒரே பொருள் - என்றுள்ளது காண்க. அப்படிப்பட்ட கோத்ரங்கள் பல உள்ளன. அந்தந்த கோத்ரத்திற்கு ஆதிபுருஷர்கள் என்று வசிஷ்டர், காச்யபர், பரத்வாஜர், ஸ்ரீவத்ஸர் என்று பலரும் உள்ளதால் "பராசரர் முதலானவர்கள்" என்றார். மேலும் அந்தணர்களுடைய சரணத்திற்கு மூலபுருஷார்கள் பாராசர்யர் (பராசரமுனிவரின் புத்திரர், வியாசர்) முதலானவர்கள் ஆவர். சரணம் என்பது வேதத்தின் சாகைகள் மட்டும் அல்லாமல், அந்தந்த சாகைகளுடன் தொடர்புள்ள புருஷர்களையும் குறிக்கும். ஆனால் அவ்விதம் கூறப்படும்போது "சரண" என்ற பதம் சாகைகளையே குறிக்கிறது. அனைத்து வேதசாகைகளையும் இந்த உலகம் எங்கும் பரவச் செய்பவர்களின் தலைவராக வியாஸர் உள்ளபோதிலும், அதன் பின்னர் ஒவ்வொரு சாகையாகத் தனித்தனியே பரவும்படிச் செய்தவர்கள் கடர், கலாபர், கண்வர் என்று பலர் ஆகையால் "பாராசர்யர் முதலானவர்கள்" என்கிறார். அந்தணர்களுக்கு ஸூத்ரத்திற்கான ஆதிபுருஷர்கள் போதாயனர் போன்றவர்கள் ஆவர். ஸூத்ரம் என்றால் அன்றாடம் இயற்றவேண்டிய கர்ம விதிமுறைகள் குறித்த கல்பம் ஆகும். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-18) - சீக்ஷாயாம் வர்ணசிக்ஷா - சிக்ஷை என்னும் வேத அங்கத்தில் எழுத்துக்களுடைய உச்சரிப்பு முறை

கூறப்படுகிறது - என்று தொடங்கிக் கூறும்போது, ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-18) - கல்பேநுஷ்ட்டாநமுக்தம் - கல்பஸூத்ரத்தில் கர்ம அனுஷ்டான முறை கூறப்படுகிறது - என்று உரைத்தார். அத்தகைய கல்பங்களும் பலவாக, அந்தந்த ஸூத்ரங்களை ஏற்படுத்தியவர்கள் ஆபஸ்தம்பர், ஆச்வலாயனர் என்று பலர் உண்டு என்பதால், "போதாயனர் போன்றவர்கள்" என்றார். ஆக இப்படிப்பட்டவர்கள் அந்தணர்களுக்கு மூல புருஷர்கள் ஆவர்.

**வ்யாக்யானம்** – "அடியார், தொண்டர்" என்கிற ப்ரபந்ந ஜனங்களுக்கு கூடஸ்த்தர், "பத்யு: ச்ரிய: ப்ரஸாதேந ப்ராப்த ஸார்வஜ்ஞ்ய ஸம்பதம், ப்ரபந்ந ஜந கூடஸ்த்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குசம்" என்கிற நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் தொடக்கமான ஆழ்வார்களும், எம்பெருமானார் முதலான ஆசார்யர்களுமென்கை. கூடஸ்த்தராகிறார் – மூலபூதரிறே. உபதேசாநுஷ்ட்டாநங்களாலே ப்ரபத்தி மார்க்கத்தைத் தலைப்பெறுத்தி வளர்த்தவர்களாகையாலே இவர்கள் ப்ரபந்ந ஜந கூடஸ்த்தர்களென்கிறது.

**விளக்கம்** – "அடியார்கள், தொண்டர்கள்" என்று கொண்டாடப்படும் ப்ரபந்நர்களுக்கு மூல புருஷர்கள் - பராங்குசாஷ்டகம் (4) - பத்யு: ச்ரிய: ப்ரஸாதேந ப்ராப்த ஸார்வஜ்ஞ்ய ஸம்பதம், ப்ரபந்ந ஜந கூடஸ்த்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குசம் - ஞானம் என்ற செல்வம் கொண்டவரும் ப்ரபந்நர்களுடைய மூலபுருஷரும் ஆகிய நம்மாழ்வாரை நான் சரணம் அடைகிறேன் - என்பதற்கு ஏற்ப உள்ள நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் தொடக்கமாக உள்ள ஆழ்வார்கள் மற்றும் எம்பெருமானார் தொடக்கமாக உள்ள ஆசார்யர்கள் ஆவர். கூடஸ்தர் என்றால் மூலமாக உள்ளவர்கள். உபதேசங்கள், தாங்கள் பின்பற்றும் விதிமுறைகள் ஆகியவற்றால் ப்ரபத்தி வழியை நிலைநிறுத்தி வளர்த்தவர்கள் என்பதால் இவர்கள் ப்ரபந்நர்களுடைய மூலபுருஷர்கள் என்கிறார்.

39. அத்யயநஜ்ஞாநா நுஷ்டாநங்களாலே ப்ராஹ்மண்யமாகிறாப்போலே சந்தங்களாயிரமுமறியக் கற்றுவல்லாரானால் வைஷ்ணவத்வ ஸித்தி.

**அவதாரிகை** - இனி இரண்டுதலைக்கும் ப்ராஹ்மண்ய வைஷ்ணவத்வ ஸித்திஹேது நியமங்களை தர்சிப்பிக்கிறார் - (அத்யயநே த்யாதியால்).

**விளக்கம் -** மேலே கூறப்பட்ட இரண்டு பிரிவினர்களில் ஒரு பிரிவினர் அந்தணர் ஆவதும், மற்றொரு பிரிவினர் வைஷ்ணவர் ஆவதும் எப்போது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" என்கிறபடியே ப்ரதமம் வேதத்தை ஆசார்யோச்சாரணா நூச்சாரண முகேந அக்ஷரராசிக்ரஹணம் பண்ணுகையாகிற ததநுரூபமான அநுஷ்டாநமுண்டானால் ப்ராஹ்மண்யம் ஸித்திக்குமாபோலே,

**விளக்கம் -** ஸ்வாத்யாயோத்யேதவ்ய: - வேதங்கள் கற்கப்பட வேண்டியவை ஆகும் - என்பதற்கு ஏற்ப முதலில் வேதங்களை ஆசார்யன் உச்சரிக்கும் முறை மூலமாக எழுத்துக்களுடைய தொகுப்புகளை அறிந்து கொள்ளுதல் என்னும் செயலைச் செய்யவேண்டும். அடுத்து மீமாம்ஸ சாஸ்த்ரம் கேட்பது மூலமாக வேதவாக்கியங்களில் பொதிந்துள்ள ஆழ்பொருளை அறியும் ஞானம் உண்டாகுகிறது. பின்னர் அதற்கு ஏற்றபடி ஒழுக்கங்கள் உண்டாகும்போது அந்தணன் ஆகும் தன்மை உண்டாகிறது. இதே போன்று …..

**வ்யாக்யானம் -** "சந்தங்களாயிரம்" என்கிறபடியே ச்சந்தோரூபமாய் ஸஹஸ்ர சாகையாயிருக்கிற திருவாய்மொழியை, "அறியக் கற்று வல்லார் வைட்டணவர்" என்கிறபடியே, "அத்யேதவ்யம் த்விஜ ச்ரேஷ்டை: வேதரூபமிதம் க்ருதம்" என்கிற ப்ரகாரத்திலே ஆசார்யோச்சாரணா நூச்சாரணமுகேந அப்யஸிக்கையாகிற அத்யயநத்தைப் பண்ணி, உபதேசமுகத்தாலே ததர்த்த ஜ்ஞாநம் பிறந்து ததநுரூபமாக அநுஷ்ட்டிக்கவும் வல்லாரானாலாய்த்து வைஷ்ணவத்வம் ஸித்திப்பதென்கை.

**விளக்கம் -** திருவாய்மொழி (10-9-11) - சந்தங்களாயிரம் - என்பதற்கு ஏற்றபடி வேதங்களுடைய ரூபமாகவே ஆயிரம் சாகைகள் கொண்டதான திருவாய்மொழியை, திருவாய்மொழி (5-5-11) - அறியக் கற்று வல்லார் வைட்டணவர் - என்பதற்கு ஏற்ப, அத்யேதவ்யம் த்விஜ ச்ரேஷ்டை: வேதரூபமிதம் க்ருதம் - வேதரூபமாகச் செய்யப்பட்ட இந்தத் திருவாய்மொழி அந்தணர்களால் அத்யயனம் செய்யத்தக்கது - என்று கூறும் விதத்தில், ஆசார்யனுடைய உச்சரிக்கும் முறை மூலமாக அறிதல் என்ற அத்யயனம் செய்யவேண்டும். பின்னர் உபதேசம் மூலமாகத் திருவாய்மொழியின் ஆழ்பொருளை

அறிந்து, அதற்கு ஏற்றபடி நடத்தல் வேண்டும். அப்போது வைஷ்ணவன் ஆகும் தன்மை ஏற்படுகிறது.

38. இந்தவுட்பொருள் கற்றுணர்ந்து மேலைத்தலைமறையோ ராகாதாரை அயற்சதுப்பேதிமாரென்று உத்பத்தி நிரூபிக்கும்.

**அவதாரிகை** - அந்த வேதாத்யயநாதிகளுடைவர்களுக்கு இந்த வேதாத்தயயநாதிகள் இல்லாதவளவில் வைஷ்ணவத்வாஸித்தி யொழிய ப்ரஹ்மண்யஹாநி இல்லையே யென்னச் சொல்லுகிறது (இந்த வித்யாதி).

**விளக்கம்** – ஒருவர் வேத அத்யயனம் செய்து, அவற்றின் ஆழ்பொருள் அறிந்து, அதன்படி ஒழுக்கத்துடன் நடக்கிறார்; ஆனால் அவர் திருவாய்மொழியை அத்யயனம் செய்யவில்லை என்றால் அவருக்கு வைஷ்ணவனாகும் தன்மை இல்லாமல் போகும் அல்லாமல், அவர் அந்தணர் என்றிருக்க எந்தக் குறையும் இல்லை அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்" என்று உபநிஷத் குஹ்யமான இந்த த்ராவிட வேதார்த்தத்தை, "கற்றுணர்ந்த மேலைத்தலை மறையோர்" என்கிறபடியே ஆசார்யோபதேச முகேந கற்றறிந்த உத்க்ருஷ்டரான வேதாந்திக ளாகாதாரை, "அயல்சதுப்பேதிமார்" என்று, வேதாத்யயந ப்ரயோஜநம் ஈச்வரனை யுள்ளபடி யறிந்து ஸ்வரூபாநுரூப புருஷார்த்தம் கைங்கர்யமென் றிருக்கையா யிருக்க இந்த ஜ்ஞாநபாவத்தாலே நாலு வேதங்களையும் அதிகரித்திருக்கச்செய்தே அந்த வேதத்தோடு தங்களுக்கு ஒட்டின்றி அதுக்கு அசலானவர்களென்று அறுதியிட்டு, "விஷ்ணுபக்தி விஹீநோ ய: ஸர்வசாஸ்த்ரார்த்த வேத்யபி, ப்ராஹ்மண்யம் தஸ்ய த பவேத் தஸ்யோத்பத்திர் நிருப்யதாம்" என்கிறபடியே இவர்கள் ப்ராஹ்மணரல்லரென்று உத்பத்தி ஆராயப்படுமென்கை. "ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் வித்யாதந்யரேதஸம், யோ விஷ்ணும் ஸததம் த்வேஷ்டி தம் வித்யாதந்த்யரேதஸம்" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - கண்ணிநுண்சிறுத்தாம்பு (9) - மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் - என்பதற்கு ஏற்ப உபநிஷத்துக்களுடைய மறைபொருளாக உள்ள தமிழ் வேதமாகிய திருவாய்மொழியின் ஆழ்பொருளை, முதல் திருவந்தாதி (66) - கற்றுணர்ந்த மேலைத்தலை மறையோர் - என்று கூறுவதற்கு ஏற்ப ஆசார்யனிடமிருந்து கற்று அறிந்து கொண்டு, மிகவும் சிறந்த வேதாந்திகள் என்று ஆகாமல் சில அந்தணர்கள் இருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள், திருமாலை(39) - அயல்சதுப்பேதிமார் - என்பதற்கு ஏற்ப வேதங்களைக் கற்று அவற்றின் ஆழ்பொருளை அறிவதன் பயனாவது, ஸர்வேச்வரனை உள்ளபடி அறிந்துகொண்டு, ஆத்மஸ்வரூபத்தின் உயர்ந்த பேறு என்பது அவனுக்குச் செய்யும் கைங்கர்யம் மட்டுமே ஆகும் என்னும் ஞானம் இல்லாமல், நான்கு வேதங்களையும் நன்றாக அறிந்திருந்தாலும், அத்தகைய வேதங்களுடன் தங்களுக்கு ஒட்டுதல் இல்லாத காரணத்தால் அதற்கும் புறம்பானவர்களே ஆகிறார்கள் என்று முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, விஷ்ணுபக்தி விஹீநோ ய: ஸர்வசாஸ்த்ரார்த்த வேத்யபி, ப்ராஹ்மண்யம் தஸ்ய த பவேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம் – யார் ஒருவன் அனைத்து வேதங்களையும் நன்றாக அறிந்தவனாக உள்ளபோதிலும், மஹாவிஷ்ணுவிடம் பக்தி இல்லாமல் இருந்தான் என்றால், அவனுக்கு அந்தணனாக உள்ள தன்மை எற்படாது; அவனுடைய பிறவியானது ஆராயப்படவேண்டும் - என்பதற்கு ஏற்ப, அவர்கள் அந்தணர்கள் அல்லர் என்று கருதப்பட்டு, அவர்கள் பிறவி குறித்து ஆராயப்படும். மேலும் ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் வித்யாதந்யரேதஸம், யோ விஷ்ணும் ஸததம் த்வேஷ்டி தம் வித்யாதந்த்யரேதஸம் - எந்த ஒரு புத்திரன் தந்தையை வெறுக்கிறானோ அவன் வேறு ஒருவனுக்குப் பிறந்தவன் என்று அறியப்படவேண்டும்; யார் ஒருவன் மஹாவிஷ்ணுவை வெறுக்கிறானோ அவன் சண்டாளனுக்குப் பிறந்தவன் என்று அறியப்படவேண்டும் - என்றது காண்க.

**வ்யாக்யானம்** – ஆக “கர்ம கைங்கர்யங்கள்” என்று தொடங்கி இவ்வளவாக இரண்டும் இன்னதுக் கநுகுணமென்றும், இவற்றுக்கு ப்ரேரக ஆச்ரய விஷயபேதங்களும், இவற்றின் ஸாதாரணாஸாதாரணத்வமும், அஸாதாரணாந்வயத்தில் ஸாதாரண நிவ்ருத்தியும், கைங்கர்ய நிஷ்டர்க்கு கர்மநிஷ்ட்டரோடு பொருந்தாமையும், அதுக்கடியான இருவருடையவும் ஜந்மநிரூபக கூடஸ்த பேதங்களும், இருவர்க்கும் ப்ராஹ்மண்ய வைஷ்ணவத்வ ஸித்தி ஹேதுக்களும் த்ராவிட வேதார்த்த ஜ்ஞாநாபாவத்தில் ஸ்வ அதீத வேதாநந்வயராய் நிஹீநத்வ புத்த்யர்ஹராம்படியும் சொல்லிற்று.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - ஆகவே சூர்ணை (26) - கர்ம கைங்கர்யங்கள் – என்று தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய கீழே உள்ள பலவும் கூறப்பட்டது:

- கர்மம் மற்றும் கைங்கர்யம் ஆகிய இரண்டும் இதற்கு, இதற்கு ஏற்றது
- கர்மம் மற்றும் கைங்கர்யம் ஆகிய இரண்டையும் செய்யும்படியாகத் தூண்டுவது இன்னது
- இவை இரண்டுக்கும் அதிகாரிகள் யார்
- இவை இரண்டுக்கும் இலக்கு இன்னது, தனித்தன்மை இன்னது
- கைங்கர்யத்தின் தனித்தன்மை என்பதை ஒட்டிச் செய்யும்போது, பொதுத்தன்மை தானாகவே அகலுதல்
- கைங்கர்யத்தில் ஈடுபட்டவர்களுக்கு, கர்மங்களில் ஈடுபடுபவர்களிடம் பொருந்தாமை
- இதற்கு அடிப்படையாக உள்ள இருவருடைய பிறவி, பெயர், மூலபுருஷர்களில் உள்ள பேதங்கள்.
- இவர்களுக்கு அந்தணனாகும் தன்மை மற்றும் வைஷ்ணவனாகும் தன்மை ஏற்படும் காரணங்கள்
- தமிழ்வேதமாகிய திருவாய்மொழியின் ஆழ்பொருளை அறியாதபோது, தாங்கள் நன்றாகக் கற்ற வேதங்களுடைய தொடர்பும் அற்றுப்போனவர்களாக, இவர்கள் அந்தணர்கள்தானோ என்று பிறவியை ஆராயும்படி உண்டாகும் நிலை.

39. எவ்வுலகத் தெவ்வெவையு மென்கையாலே வேதம் பஹுவிதம்.

**அவதாரிகை** – இனிமேல் "சந்தங்களாயிரம்" என்று திருவாய்மொழிக்குச் சொன்ன வேதத்வத்தை ஸாதிக்கக்கோலி ப்ரதமம் ஏவம்விதமாயிருப்பதொரு வேதமுண்டோ வென்கிற சங்கைக்குப் பரிஹாரம் பண்ணுகிறார் – (எவ்வுலகத்தித் யாதியால்).

**விளக்கம்** – அடுத்து, திருவாய்மொழியில் (10-9-11) - சந்தங்களாயிரம் - என்று திருவாய்மொழிக்கு வேதத்தின் தன்மை கூறப்பட்டது; இதனை உறுதியாக உரைக்கும் விதத்திலும், இப்படிப்பட்ட தன்மை கொண்ட வேதம் உள்ளதா என்று கேட்கும் கேள்விக்கு விடை அளிக்கும் விதத்திலும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ஓதுவாரோத்தெல்லாம் மெவ்வுலகத் தெவ்வெவையும்” என்கையாலே வேதமானது அத்யேதாக்களினுடைய பேதத்தாலும் லோக பேதத்தாலும் பஹுவிதமாயிருக்குமென்கை. ஆகையால் அதிலே இதுவும் ஒருவிதமென்று கருத்து.

**விளக்கம்** – திருவாய்மொழி (3-1-6) - ஓதுவாரோத்தெல்லாம் மெவ்வுலகத் தெவ்வெவையும் – என்று கூறப்படுவதால், வேதமானது அத்யயனம் செய்யும் அதிகாரிகளுக்கிடையே காணப்படும் வேற்றுமை, உலகில் உள்ள வேற்றுமை போன்றவற்றால் பலவிதமாக உள்ளது. ஆகவே அவற்றில் திருவாய்மொழியும் ஒரு விதம் ஆகிறது என்று கருத்து.

40. இதில் ஸம்ஸ்க்ருதம் த்ராவிடமென்கிற பிரிவு ருகாதி பேதம்போலே.

**அவதாரிகை** - ஆனால் ஏகபாஷையா யிருக்கவேண்டாவோ? ஸம்ஸ்க்ருதமும் த்ராவிடமுமாய் அந்யோந்யம் பேதித்திரா நின்றதீ யென்னுச் சொல்லுகிறது – (இதில் இத்யாதி).

**விளக்கம்** – ஆனால் ஒரே போன்ற மொழியில் அமைந்திருக்க வேண்டாமோ? வடமொழி, தமிழ்மொழி என்று ஒன்றுக்கொன்று மாறுபட்ட மொழிகளில் அமையுமோ என்ற கேள்விகளுக்கு இங்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, இப்படி பஹுவிதமான இவ்வேதத்தில் “ஸம்ஸ்க்ருத வேதம், த்ராவிடவேதம்” என்கிற பிரிவு ஸம்ஸ்க்ருத அம்சந் தன்னில் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் என்கிற பிரிவுபோலே யென்கை. இத்தால் வேதராசி ஒன்றாயிருக்கச் செய்தே ஸம்ஸ்க்ருத பாஷா ரூபமான வஸ்து தன்னிலே ருகாதி ரூபேண பலபடியாகப் பிரிந்தாப்போலே பாஷாபேதேதநவும் இப்படி பிரிந்திருக்கு மென்றபடி.

**விளக்கம்** - இப்படியாகப் பலவிதமாக உள்ள வேதத்தில், “வடமொழி வேதம், தமிழ் வேதம்” என்றுள்ள பிரிவு என்பது, வடமொழியில் உள்ள வேதமானது ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் மற்றும் அதர்வண வேதம் என்று பிரிந்துள்ளது போன்றாகும். ஆக, வேதங்களுடைய தொகுப்பு என்பது ஒன்றாகவே இருந்தாலும், வடமொழியில்

உள்ள வேதத்தில் ருக்வேதம் போன்ற பிரிவுகள் உள்ளது போன்று மொழி வேற்றுமை காரணமாகவும் இவ்விதம் பிரிந்துள்ளது என்று கருத்து.

41. செந்திறந்த தமிழென்கையாலே ஆகஸ்த்யமு மநாதி.

**அவதாரிகை** - அப்படி சொல்லலாமோ? ஸம்ஸ்க்ருத பாஷைபோலே த்ராவிட பாஷை அநாதியன்றே, ஆகஸ்த்யமன்றோவிது? என்னச் சொல்லுகிறது – (செந்திறத்த வித்யாதி).

**விளக்கம்** – இவ்விதம் கூற இயலுமோ? வடமொழி என்பது எல்லையற்ற காலமாக இருந்து வருவதாகும். ஆனால் தமிழ் என்பது அவ்விதம் அல்லவே! தமிழானது அகஸ்த்தியரால் ஏற்பட்டது அல்லவோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" என்று ஸம்ஸ்க்ருதத்தோடே ஸஹ படிதமும் ப்ரதமோக்தமுமாகையாலே அகஸ்த்ய ப்ரகாசிதமான மாத்ரங் கொண்டு ஆகஸ்த்யமென்று சொல்லப்படுகிற த்ராவிடமும் அநாதியாயுள்ள தென்கை. இத்தால் அநாதித்வம் ஸம்ஸ்க்ருத த்ராவிட ஸாதாரண மென்றதாய்த்து.

**விளக்கம்** – திருநெடுந்தாண்டகம் (4) – செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி - என்று கூறுவதற்கு ஏற்ப தமிழானது வடமொழியோடு ஒன்றாகவே கூறப்படுவதாலும், வடமொழிக்கு முன்பே உள்ளது என்று கூறப்படுவதாலும், தமிழ் மொழியானது எல்லையற்ற காலமாக உள்ளது என்பது தெளிவாகிறது. அகஸ்த்தியரால் உலகத்தில் விளக்கப்பட்ட காரணத்தால் தமிழானது "ஆகஸ்த்யம்" என்று கூறப்படுகிறது. ஆகவே எல்லையற்ற காலமாக உள்ள தன்மை என்பது வடமொழி மற்றும் தமிழ் ஆகிய இரண்டுக்கும் உள்ளது என்று கருத்து.

42. வடமொழி மறையென்றது தென்மொழி மறையை நினைத்திறே.

**அவதாரிகை** - ஆனால், அந்த பாஷை அநாதியாகிறது; திருவாய்மொழிக்கு வேத தத்வ ப்ரகாசமான வசநமுண்டோ வென்னச் சொல்லுகிறது - (வடமொழியித்யாதி).


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - சரி, தமிழ்மொழி எல்லையற்ற காலமாகவே இருந்து வருகிறது என்று ஆகட்டும். ஆனால் திருவாய்மொழியை "தமிழ்வேதம்" என்று கூறுவதற்கு ப்ரமாணம் உள்ளதா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "மறை" என்று கேவல வேதவாசி சப்தத்தாலே சொல்லவமைந்திருக்க, "வடமொழிமறை" என்று ஸம்ஸ்க்ருத வேதமென்றது – த்ராவிட வேதமுமுண்டென்று நினைத்திறே யென்கை. ப்ரதிகோடியில்லாதபோது இப்படி விசேஷிக்க வேண்டியதில்லையிறே யென்று கருத்து.

**விளக்கம்** - பொதுவாக வேதத்தைக் குறிக்கும்போது "மறை" என்ற சொல் பயன்படுத்தப்படும். திருவாய்மொழி (8-9-8) - வடமொழி மறை - என்று உரைத்தது காண்க. ஆக இங்கு "வடமொழி வேதம்" என்று உரைப்பதன் மூலம், "தமிழ் வேதம்" என்று வேறு ஒன்று உள்ளது என்பது தெளிவாகிறது அல்லவோ? வேறு ஒரு பொருள் இல்லாதபோது இவ்விதம் அடைமொழியாக ஒரு சொல்லுக்குக் கூற வேண்டிய அவசியம் இல்லை அல்லவோ?

43. வேத சதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதினாலும்போலே இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றையெண்மர் நன்மாலைகளும்.

**அவதாரிகை** - ஆனால் அந்த வேதத்துக்கு அங்கோபாங்கங்களுண்டான வோபாதி இதுக்கும் அவை யுண்டோவென்னச் சொல்லுகிறது - (வேத சதுஷ்டயேத்யாதி).

**விளக்கம்** - வேதத்துக்கு அங்கங்கள், உபஅங்கங்கள் என்று பலவும் உள்ளது போன்று திருவாய்மொழி என்னும் தமிழ் வேதத்துக்கும் அது போன்று உண்டோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ருகாதிவேத சதுஷ்டயத்துக்கு சீக்ஷா வ்யாகரண நிருக்தச்சந்த: கல்ப ஜ்யோதிஷங்களாகிற ஆறங்கங்களும், மீமாம்ஸா ந்யாய புராண தர்மசாஸ்த்ராத் யுபாங்கங்க ளெட்டுமா யிருந்துள்ள பதினாலும்போலே, இந்த த்ராவிட வேத சதுஷ்டயத்துக்கும், "இருந்தமிழ் நூல் புலவன் மங்கையாளன்" என்று ஒருவரால்

கரைகாண வொண்ணாதபடி யிருக்கிற த்ராவிட வேதசாஸ்த்ரத்தைக் கரைகண்ட ஜ்ஞாநாதிக்யத்தை யுடையரான திருமங்கையாழ்வாருடைய “கலியன் வாயொலி செய்த பனுவல்” என்று சாஸ்த்ரரூபமான ப்ரபந்தங்களாறும், மற்றையாழ்வார்கள் எண்மருடையவும் விலக்ஷணமான ப்ரபந்தங்களுமென்கை. (நன்மாலைகள்) என்றது, “நய நின்ற நன்மாலை” என்று முதலாழ்வார் ப்ரபந்தத்தி லருளிச்செய்தது எல்லாம் ப்ரபந்தத்துக்கு மொக்குமென்று நினைத்து.

**விளக்கம்** – ருக் முதலான நான்கு வேதங்களுக்கு சீக்ஷை, வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், கல்பம் மற்றும் ஜோதிஷம் என்ற ஆறு அங்கங்கள் உள்ளன; இதே போன்று மீமாம்ஸை, ந்யாயம், புராணம், தர்மசாஸ்த்ரம் போன்றதான எட்டு உப அங்கங்கள் உள்ளன. இப்படியாக உள்ள பதினான்கு அங்கங்கள் போன்று, “தமிழ்வேதம்” என்று போற்றப்படும் இந்த நான்கிற்கும் (நான்கு = நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு ப்ரபந்தங்களான திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம் மற்றும் பெரிய திருவந்தாதி) அங்கங்கள் உள்ளன. அவை என்ன? பெரியதிருமொழி (1-7-10) - இருந்தமிழ் நூல் புலவன் மங்கையாளன் - என்பதற்கு ஏற்ப யாராலும் முழுவதுமாகப் பொருள் உணர இயலாதபடி உள்ள தமிழ்வேதம் என்ற சாஸ்த்ரத்தை முழுவதுமாக அறிந்துள்ள ஞானம் நிரம்பிய திருமங்கையாழ்வாருடைய பெரியதிருமொழி (1-4-10) - கலியன் வாயொலி செய்த பனுவல் - என்பதற்கு ஏற்ப உள்ள சாஸ்த்ரவடிவமான திருமங்கையாழ்வாரின் அருளிச்செயல்கள் ஆறும் (பெரியதிருமொழி, சிறிய திருமடல், பெரிய திருமடல் திருவெழுகூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்) மற்றும் மற்ற எட்டு ஆழ்வார்கள் அருளிச்செய்தவையும் முறையே தமிழ்வேதத்தின் அங்கங்கள் மற்றும் உப அங்கங்கள் ஆகின்றன. சூர்ணையில் உள்ள “நன் மாலைகள்” என்பதன் மூலம், முதல்திருவந்தாதி (57) – நய நின்ற நன்மாலை - என்று முதலாழ்வார் அருளிச்செய்தது, மற்ற ஆழ்வார்களுக்கும் பொருந்தும் என்று உணர்த்தவே ஆகும்.

**வ்யாக்யானம்** – “பொய்ந்நின்ற ஞானமும்” இத்யாதியாலே ஸ்வரூப விரோதியாய் வந்தேறியான தோஷங்களை முதலடியிலே பேசினாப்போலே, ப்ரதமத்திலே, “வாடினேன்” இத்யாதியாலே ஸ்வரூபத்துக்கு வந்தேறியான தோஷங்களைக் கண்டு நொந்து பேசுகையும், பகவத்ப்ராவண்ய ப்ராசுர்யமும், அதில் அர்ச்சாவதாரத்திலூற்றமும், கலவியும் பிரிவும் மாறி மாறி வருகையும், அந்யா(யோ)பதேசப் பேச்சும், இது தன்னில்


Email:sridharan_book@yahoo.co.in

ராத்ரிவ்யஸநம், தூதப்ரேஷணம், அநுகாரம், மடலெடுக்கை, தோழி தாய் மகள் என்னு மவஸ்த்தா த்ரயா பத்திகளும், இந்த்ரிய பயாக்ரோசம், ஈச்வர ஸ்வாதந்த்ர்ய பயம், அஸக்ருத் ப்ரபத்திகரணம், ஆர்த்தியினுடைய கரைபுரட்சிகளும், பரதுக்காஸ ஹிஷ்ணுதையாலே பலகாலும் ஹிதம் சொல்லுகையும் தொடக்கமான கட்டளையாலே மற்றையாழ்வார் ப்ரந்தங்களிலும் காட்டில் இப்ப்ரபந்த சதுஷ்டயார்த்த ஜ்ஞாபகமா யிருக்கையாலே திருமங்கையாழ்வார் ப்ரபந்தங்களை இதுக்கு அங்கங்களென்கிறது; மற்றையாழ்வார் ப்ரபந்தங்களும் ஏததர்த்தாநுஸாரிகளாய், இதிலர்த்த நிர்ணயத்துக்கு உறுப்பாயிருக்கையாலே இதுக்கு உபாங்கங்களென்கிறது. ஆக, "சீக்ஷாயாம் வர்ணசிக்ஷா பதஸமதிகமோ வ்யாக்ரியா நிர்வசோப்யாம் சந்தச் சந்தச்சிதௌ ஸ்யாத் கமயதி ஸமயம் ஜ்யோதிஷம் ரங்கநாத, கல்பேநுஷ்ட்டாந முக்தம் ஹ்யுசித கமிதயோர் ந்யாய மீமாம்ஸயோஸ் ஸ்யாதர்த்த வ்யக்தி: புராண ஸ்ம்ருதிஷு ததநுகாஸ் த்வாம் விசிந்வந்தி வேதா:" என்கிறபடியே அவை அந்த வேதசதுஷ்டயத்துக்கும் உபாகாரகங்களா யிருக்குமாபோலே இவையும் கீழ்ச்சொன்னபடியே இந்த வேதசதுஷ்டயத்துக்கும் உபகாரகங்களா யிருக்குமென்றதாய்த்து.

**விளக்கம்** - திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் - என்பதில் நம்மாழ்வார் ஆத்மஸ்வரூபத்திற்கு இயல்பாக இல்லாமல், பின்னர் வந்து சேர்ந்த தோஷங்களை முதல் அடியில் உரைத்தார். இதே போன்று பெரியதிருமொழி (1-1-1) – வாடினேன் - என்பதன் மூலம், ஆத்மஸ்வரூபத்திற்கு வந்து சேர்ந்த தோஷங்களைக் கண்டு நொந்து உரைத்தல், பகவானிடம் உள்ள காதலின் மிகுதி, அதிலும் அர்ச்சாவதாரத்தின் மீது உள்ள ஆழ்ந்த ஈடுபாடு, அவனுடன் சேர்தலும் பிரிதலும் மாறி மாறி வருதல், மற்றவர்கள் ஆழ்வாரைப் பற்றியும் ஸர்வேச்வரன் பற்றியும் உரைக்கும் உபதேசச் சொற்கள், அதன் காரணமாக இரவில் துன்பம் உண்டாதல், தூது விடுதல், மடல் எடுத்தல், தோழி – தாய் – மகள் – என்று மூன்றுவிதமான நிலைகளை எடுத்தல், இந்த்ரியங்களுக்குப் பயந்து அவனை அழைத்தல், ஸர்வேச்வரனுடைய சுதந்திரத்தன்மை குறித்து பயம் அடைதல், பலமுறை ப்ரபத்தி செய்தல், எல்லையற்ற பிரிவாற்றாமை, மற்றவர்கள் பிரிவாற்றாமை கண்டு தன்னைப் போன்று அவையும் வருந்துவதாக எண்ணி ஆறுதல் உரைத்தல் போன்ற பலவிதமான தன்மைகள் காரணமாக, திருமங்கையாழ்வாருடைய ப்ரபந்தங்கள் அனைத்தும், நம்மாழ்வர் அருளிச்செய்த தமிழ்வேதத்தின் தன்மைகளை நினைவுபடுத்துவதாக உள்ளன; ஆகவே இந்தப் பாசுரங்கள் தமிழ்வேதத்தின் அங்கங்கள்

ஆகின்றன. மற்ற ஆழ்வார்களுடைய பாசுரங்கள் இவற்றின் பொருளை அண்டி கூறப்பட்டவைகளாக, இவற்றுடைய பொருளையே மேலும் உறுதியாக உரைப்பதாக உள்ளதால் அவை இவற்றுக்கு உப அங்கங்கள் என்றாகின்றன. ஆகவே ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் (2-18) - சீக்ஷாயாம் வர்ணசிக்ஷா பதஸமதிகமோ வ்யாக்ரியா நிர்வசோப்யாம் சந்தச் சந்தச்சிதௌ ஸ்யாத் கமயதி ஸமயம் ஜ்யோதிஷம் ரங்கநாத, கல்பேநுஷ்ட்டாந முக்தம் ஹ்யுசித கமிதயோர் ந்யாய மீமாம்ஸயோஸ் ஸ்யாதர்த்த வ்யக்தி: புராண ஸ்ம்ருதிஷு ததநுகாஸ் த்வாம் விசிந்வந்தி வேதா: – ஸ்ரீரங்கநாதா! வேதங்களின் ஆறு அங்கங்களாக – சீக்ஷா, வ்யாகரணம், நிருக்தம், சந்தோவிசிதி, கல்பஸூத்ரம் மற்றும் ஜ்யோதிஷம் உள்ளன. இவற்றில் சீக்ஷை என்பது அக்ஷரங்களின் உச்சரிப்பு முதலானவற்றைக் கூறுகிறது. வ்யாகரணம் மூலம் பதங்களின் இலக்கணமும், நிருக்தி மூலமாக அந்தப் பதங்களின் அர்த்தப் ப்ரயோகங்களும் விளக்கப்படுகின்றன. சந்த சாஸ்த்ரம் மூலமாக – காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், த்ரிஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி மற்றும் ஜகதீ என்னும் ஏழு சந்தஸ்ஸுகள் விளக்கப்படுகின்றன. ஜ்யோதிஷம் மூலம் அனுஷ்டான காலங்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. கல்பஸூத்ரம் மூலம் அனுஷ்டான விதிமுறைகள் கூறப்பட்டன. வைதிக மார்க்கத்திற்கு உபாயமாக உள்ள ந்யாயம், மீமாம்ஸை, புராணங்கள், ஸ்ம்ருதிகள் முதலானவை மூலம் வேதங்களின் ஆழ்பொருள் புலப்படும். இப்படியாக மேலே கூறப்பட்ட பலவற்றாலும் சூழப்பட்டு நிற்கும் வேதங்கள் உன்னை எப்போதும் தேடியபடியே உள்ளன - என்பதற்கு ஏற்ப, அத்தகைய அங்கங்கள் மற்றும் உப அங்கங்கள் ஆகியவை வடமொழி வேதங்களாகிய நான்கு வேதங்களுக்கு உபகாரம் செய்வதாக உள்ளது போன்று, திருமங்கையாழ்வாருடைய பாசுரங்களும், மற்ற ஆழ்வார்களுடைய பாசுரங்களும், தமிழ்வேதமாகிய நம்மாழ்வார் பாசுரங்களுக்கு உபகாரம் செய்வதாகவே உள்ளன என்று கருத்து.

44. ஸகலவித்யாதிக வேதம்போலே இதுவும் திவ்யப்ரபந்த ப்ரதாநம்.

**அவதாரிகை** - வித்யாந்தரங்களில் வேதத்துக்குண்டான ஆதிக்யம் இதுக்குமுண்டோ வென்னச் சொல்லுகிறது - (ஸகலேத்யாதி).

**விளக்கம்** - வடமொழி வேதங்களுக்கு உபகாரங்களாக உள்ள அங்கங்களைக் காட்டிலும் அந்த வேதங்கள் முதன்மையாக உள்ளன; இது போன்று மற்ற ப்ரபந்தங்களைக்

காட்டிலும் நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்கள் முதன்மையாக உள்ளனவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “அங்காதி வேதாச் சத்வாரோ மீமாம்சா ந்யாய விஸ்தர: புராணம் தர்மசாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாச் சதுர்தச:” என்று ஸஹபடிதமாயிருக்கச் செய்தே ஸ்வாங்கோபாங்கங்களான ஸகல திவ்யப்ரபந்தங்களிலும் ஸ்வவைபவத்தாலே இதுவும் மேலாயிருக்குமென்கை.

**விளக்கம்** – அங்காதி வேதாச் சத்வாரோ மீமாம்சா ந்யாய விஸ்தர: புராணம் தர்மசாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாச் சதுர்தச: – ஆறு அங்கங்கள், நான்கு வேதங்கள் மீமாம்ஸை, ந்யாயம், புராணம், தர்மசாஸ்த்ரம் என்று இவை பதினான்கு கலைகள் - என்பதில் கூறப்பட்டது போன்று, வேதங்களானவை தங்களுடைய அங்கங்கள் மற்றும் உப அங்கங்களின் வரிசையில் சமமாகவே வைத்துக் கூறப்பட்டிருந்தாலும், தங்களுடைய வைபவம் காரணமாக அவை அந்த அங்கங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகவே கொள்ளப்படுகின்றன. இதே போன்று நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் நான்கும் திவ்யப்ரபந்தங்கள் எண்ணிக்கையில் ஒன்றாக வைத்துக் கூறப்பட்டாலும், தங்களுடைய வைபவம் காரணமாக மற்ற ப்ரபந்தங்களைக் காட்டிலும் மேலானதாகவே உள்ளன என்று கருத்து.

45. வேதநூல் இருந்தமிழ்நூல் ஆஜ்ஞையாணை வசையி லேதமில் சுருதி செவிக்கினிய ஓதுகின்றதுண்மை பொய்யில்பாடல் பண்டைநிற்கும் முந்தையழிவில்லாவென்னும் லக்ஷணங்க ளொக்கும்.

**அவதாரிகை** – ஆனால், அந்த வேத வைபவத்துக்கு உடலான சாஸ்த்ரத்வ பகவதாஜ்ஞா ரூபத்வ நிர்தோஷத்வ ச்ருதித்வ ஸத்யத்வாநாதி நிதநத்வங்கள் இதுக்குமுண்டோ வென்னச் சொல்லுகிறது – (வேதநூலித்யாதி).

**விளக்கம்** – ஆனால், வேதங்களுடைய ஏற்றத்திற்கு அவை சாஸ்த்ரமாக இருத்தல், ஸர்வேச்வரனுடைய ஆணைகளாக இருத்தல், தோஷம் அற்றதாக இருத்தல், செவி மூலம் கேட்பதால் தொடர்ந்து வருதல், மெய்ம்மையாக இருத்தல் போன்ற பல தன்மைகள்


**Email:**sridharan_book@yahoo.co.in

காரணங்களாக உள்ளன. இது போன்ற தன்மைகள், தமிழ்வேதமாகிய நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்களுக்கு உள்ளதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “வேத நூல்” என்று அத்தை வேதசாஸ்த்ர மென்றாப்போலே இத்தையும், “இருந்தமிழ்நூல்” என்று பெரிய த்ராவிட சாஸ்த்ரமென்கையாலும்; அத்தை “ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா” என்று பகவதாஜ்ஞா ரூபமாகச் சொன்னாப்போலே, இத்தை “ஆணையாயிரம்” என்று ததாஜ்ஞா ரூபமாகச் சொல்லுகையாலும்; அத்தை “வசையில் நான்மறை” என்று விப்ரலம்பாதி தோஷ ரஹிதமென்றாப்போலே, இத்தையும் “ஏதமில் லாயிரம்” என்று நிர்தோஷமாகச் சொல்லுகையாலும்; அத்தை “சுடர்மிகு சுருதி” என்று “ச்ரூயதே இதி ச்ருதி:” என்கிறபடியே பூர்வ பூர்வோச்சாரண க்ரமத்திலே ச்ரவணேந்த்ரியத்தாலே க்ரஹிக்கப்படுமதாகச் சொன்னாப்போலே, இத்தையும் “செவிக்கினிய செஞ்சொல்லே” என்று ச்ராவ்யமாகச் சொல்லுகையாலும்; அத்தை “வேத நூலோதுகின்ற துண்மை” என்று சொல்லுமதிலொரு பொய்யில்லை யென்றாப்போலே, இத்தையும் “பொய்யில் பாடல்” என்று அஸத்ய கந்த ரஹிதமென்கையாலும்; அத்தை “பண்டை நான்மறை”, “நிற்கும் நான்மறை” என்று அநாதியாகவும் மேல் அழிவில்லாததாகவும் சொன்னாப்போலே, இத்தையும் “முந்தையாயிரம்”, “அழிவில்லா வாயிரம்” என்று அநாதியாய் அழிவற்றிருக்குமதாகச் சொல்லுகையாலும் இந்த லக்ஷணங்களெல்லாம் இரண்டுக்கு மொக்குமென்கை.

**விளக்கம்** - கீழே உள்ள பல தன்மைகள் இரண்டுக்கும் பொதுவாக உள்ளதால் இவ்விதம் கூறுவதில் குறையில்லை என்கிறார்.

- திருமாலை(3) - வேத நூல் – என்றுள்ள பாசுரத்தில் அதனை “வேத சாஸ்த்ரம்” என்று கூறுவது போன்று, பெரியதிருமொழி (1-7-10) – இருந்தமிழ்நூல் - என்பதில் இதனைப் பெரிய தமிழ் சாஸ்த்ரம் என்று கூறுவதாலும்.
- பாஞ்சராத்ரத்தில் - ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா - ச்ருதிகள் மற்றும் ஸ்ம்ருதிகள் ஆகியவை என்னுடைய கட்டளைகள் – என்று வடமொழி வேதங்களைப் பகவானின் கட்டளைகளாகக் கூறியது போன்று, திருவாய்மொழி (6-3-11) – ஆணையாயிரம் - என்று இதனையும் பகவானுடைய கட்டளைகளாகவே உரைப்பதாலும்.


Email:sridharan_book@yahoo.co.in

- பெரியதிருமொழி (5-3-2) – வசையில் நான்மறை - என்று வடமொழி வேதமானது வஞ்சித்தல் உள்ளிட்ட தோஷங்கள் ஏதும் அற்றது என்று கூறுவது போன்று, திருவாய்மொழி (1-6-11) – ஏதமில் ஆயிரம் - என்று இதனையும் தோஷம் அற்றது என்று கூறுவதாலும்.
- திருவாய்மொழி - (1-1-7) - சுடர்மிகு சுருதி – என்று, ச்ரூயதே இதி ச்ருதி: - சாதுகளால் கேட்கப்பட்டு வரும் காரணத்தால் ச்ருதி எனப்படுகிறது - என்பதற்கு ஏற்ப முன்பு உள்ளவர்கள் அவர்களுக்கும் முன்பு உள்ளவர்கள் என்று பலரும் உச்சரித்த முறைப்படி காதுகளால் கேட்டு அறியப்படுவது வேதங்கள் ஆகும் என்று உரைப்பது போன்று, திருவாய்மொழி (10-6-11) – செவிக்கினிய செஞ்சொல்லே - என்பதற்கு ஏற்ப இதனையும் கேட்கப்படுவதாகவே உரைப்பதாலும்.
- திருச்சந்தவிருத்தம் (72) – வேத நூலோதுகின்ற துண்மை – என்று வடமொழி வேதங்களில் உண்மைக்குப் புறம்பானவை ஏதும் இல்லை என்பது போன்று, திருவாய்மொழி (4-3-11) - பொய்யில் பாடல் – என்று பொய்யானது திருவாய்மொழியில் விலக்கப்பட்ட ஒன்று என இதனைக் கூறுவதாலும்.
- பெரியதிருமொழி (5-7-1) - பண்டை நான்மறை – என்று எல்லையற்ற காலமாக உள்ளதாகவும், திருவாய்மொழி (6-5-4) - நிற்கும் நான்மறை - என்று அழிவற்றதாகவும் வடமொழி வேதம் கூறப்பட்டது போன்று, திருவாய்மொழி (6-5-11) – முந்தை ஆயிரம் – என்றும், திருவாய்மொழி (9-7-11) - அழிவில்லா வாயிரம் - என்றும் இதனை எல்லையற்ற காலமாக அழிவில்லாமல் உள்ளது என்று கூறுவதாலும்.

46. சொல்லப்பட்டவென்றவிதில் கர்த்ருத்வம் ஸ்ம்ருதி அத்தை ஸ்வயம்பூ படைத்தா னென்றது போலே.

**அவதாரிகை** – ஆனால், அந்த வேதம் போலே இதுவும் அஸ்ம்ருத கர்த்ருகமாயிருக்க வேண்டாவோ? ஆழ்வார் இதுக்கு கர்த்தா வென்கையால் நித்யத்வாபௌருஷேயத்வங்கள் கூடாதீயென்னச் சொல்லுகிறது – (சொல்லப்பட்ட வித்யாதி).


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - இந்த வடமொழி வேதங்கள் யாராலும் செய்யப்படாதவை என்ற தன்மை கொண்டுள்ளது போன்று இந்தத் தமிழ் வேதங்களும் யாராலும் இயற்றப்படாதவை என்ற தன்மை கொண்டிருக்க வேண்டாமோ? ஆனால் நம்மாழ்வார் இதனை அருளிச்செய்தார் என்று கூறும்போது "எப்போதும் இருத்தல், யாராலும் இயற்றப்படாமல் இருத்தல்" போன்ற தன்மைகள், தமிழ் வேதம் என்னும் இதற்குப் பொருந்தது அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "சடகோபன் சொல்லப்பட்டவாயிரம்" என்று இதில் ஆழ்வாருக்குச் சொன்ன கர்த்ருத்வம், "அநாதிநிதநா ஹ்யாஷா வாகுத் ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா" என்று ஸ்ம்ருதி அந்த வேதத்தை ப்ரஹ்மா ஸ்ருஷ்டித்தானென்று சொன்ன வோபாதி யென்கை. ஸ்வயம்பூ ஸ்ருஷ்டித்தானென்னாதே "படைத்தான்" என்றது, "முன்னம் திசைமுகனைத்தான் படைக்க மற்றவனும் முன்னம் படைத்தனன் நான்மறைகள்" என்ற ஆழ்வார் ஸூக்தியையும் தர்சிப்பிக்கைக்காக. அநாதி நிதநமான ஸந்தர்ப்பம் ப்ரஹ்மாவின் வாக்கில்நின்றும் ஆவிர்ப்பவித்த மாத்ரங் கொண்டு ப்ரஹ்மாவுக்கு அதில் சொன்ன கர்த்ருத்வத்தோபாதி இதிலும் ஆழ்வார்க்குச் சொன்ன கர்த்ருத்வமாகையாலே இத்தால் இதனை நித்யத்வாபௌருஷேயத்வ ஹாநி வாராதென்று கருத்து.

**விளக்கம்** - திருவாய்மொழி – (8-10-11) - சடகோபன் சொல்லப்பட்டவாயிரம் - என்று இதனை ஆழ்வார் அருளிச்செய்தார் என்றுள்ள தன்மையானது, அநாதிநிதநா ஹ்யாஷா வாகுத் ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா – எப்போதும் இருந்த வருகின்ற வேதங்கள் நான்முகனால் உணடாக்கப்பட்டது – என்று ஸ்ம்ருதியானது அந்த வடமொழி வேதங்களை நான்முகன் உண்டாக்கினான் என்று கூறுவது போன்றே ஆகும். சூர்ணையில் "ஸ்வயம்பூ ஸ்ருஷ்டித்தான்" என்று கூறாமல், "ஸ்வயம்பூ படைத்தான்" என்றது ஏன் என்றால், பெரியதிருமடல் (10) - முன்னம் திசைமுகனைத்தான் படைக்க மற்றவனும் முன்னம் படைத்தனன் நான்மறைகள் - என்றுள்ள ஆழ்வார் பாசுரத்தை உணர்த்துவதற்காகவே ஆகும். "எப்போதும் இருந்து வருவதாகும்" என்னும் தன்மையுள்ள வேதங்கள், நான்முகன் வாக்கிலிருந்து வெளிப்பட்டவுடன், அதனை மட்டுமே கருத்தில் கொண்டு, நான்முகனுக்கு அவற்றை உண்டாக்கியதில் பங்கு உண்டு என்று கூறுவது போன்று, ஆழ்வாரின் மூலம் இவை உண்டானவை என்று கூறுவதால் மட்டுமே இந்தத் தமிழ் வேதங்களுக்கு

"எப்போதும் இருந்து வருதல், யாராலும் செய்யப்படாதவை" போன்ற தன்மைகளின் பொருந்தாமை என்பது ஏற்படாது.

47. நால்வேதங்கண்ட புராணரிஷி மந்த்ர தர்சிகளைப்போலே இவரையும் ரிஷி முநி கவி யென்னும்.

**அவதாரிகை** – பூர்வ ஸந்தர்ப்ப ப்ரக்ரியையை இவர் தர்சித்துப் பேசினதே யுள்ளதென்னு மிடத்தை அறிவிக்கிறார் (நால்வேதமித்யாதியால்).

**விளக்கம்** - முன்பு பல ரிஷிகளின் சொற்களைக் காணும்போது, அவற்றின் சேர்க்கை என்பது இவர் உரைத்தபடியே உள்ளது என்று நம்மாழ்வார் உரைத்த இடங்களைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "நால்வேதங் கண்டானே" என்னும்படி ஈச்வரன் தானடியில் செய்தாப்போலே நாலு வேதங்களையும் ஸாக்ஷாத்கரித்து, "அஷ்டாதச புராணநாம் கர்த்தா ஸத்யவதீஸுத:" என்கிறபடியே அஷ்டாதச புராணங்களினுடைய ஆநுபூர்வியையும் தர்சித்துச் சொன்ன வேதவ்யாஸ பகவானைச் சொல்லுகிறது.

**விளக்கம்** - "நால்வேதம் கண்ட புராணருஷி" என்று சூர்ணையில் கூறப்படுவது யார்? பெரியதிருமொழி (8-10-1) - நால்வேதங் கண்டானே - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரன், தான் தொடக்கத்தில் அனைத்திற்கும் முன்பாகச் செய்தது போன்று, நான்கு வேதங்களையும் நன்றாக அறிந்த, அஷ்டாதச புராணநாம் கர்த்தா ஸத்யவதீஸுத: - ஸத்யவதியின் புத்திரராகிய வ்யாஸர் பதினெட்டு புராணங்களையும் செய்தார் - என்பதற்கு ஏற்ப, பதினெட்டு புராணங்களையும் முன்னர் அவை இருந்த வரிசையைக் கண்டு உரைத்த வேதவ்யாஸ பகவானைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - "நால்வேதங் கண்டான்" என்கிறவிடத்தில் ஸ்வேந ரூபேண நின்று தர்சித்தமையன்றிக்கே வ்யாஸ ரூபேண நின்று தர்சித்தமைதன்னைச் சொல்லுகிறதென்று இவருக்குக் கருத்தாகவுமாம். "ஸங்கீர்ண புத்தயோ தேவா ப்ரஹ்மருத்ர புரஸ்ஸரா: சரண்யம் சரணம் ஜக்மு: நாராயணமநாமயம்; தைர் விஜ்ஞாப்தகார்யஸ்து பகவாந்


**Email:**sridharan_book@yahoo.co.in

புருஷோத்தம: அவதீர்ணோ மஹாயோகீ ஸத்யவத்யாம் பராசராத்” என்றும், “க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்” என்றும் பகவதாவேச அவதாரதயா பகவான் தானாகச் சொல்லக் கடவதிறே.

**விளக்கம்** - பெரியதிருமொழி (8-10-1) – நால்வேதங் கண்டான் - என்று கூறும்போது, ஸர்வேச்வரன் தன்னுடைய மேன்மையுடன் கூடிய ரூபத்துடன் நின்று பார்த்ததோடு மட்டும் அல்லாமல், வ்யாஸமுனிவரின் ரூபம் எடுத்தும் நின்று பார்த்தான் என்பதே திருமங்கையாழ்வாருடைய திருவுள்ளம் ஆகிறது. ஸங்கீர்ண புத்தயோ தேவா ப்ரஹ்மருத்ர புரஸ்ஸரா: சரண்யம் சரணம் ஜக்மு: நாராயணமநாமயம்; தைர் விஜ்ஞாப்தகார்யஸ்து பகவாந் புருஷோத்தம: அவதீர்ணோ மஹாயோகீ ஸத்யவத்யாம் பராசராத் - கலங்கின அறிவுள்ளவர்களான நான்முகன், சிவன் போன்ற தேவர்கள் அனைவரும் அனைத்து உயிர்களின் புகலிடமாகவும், எந்தவிதமான தோஷமும் அற்றவனாகவும் உள்ள ஸ்ரீமந்நாராயணனைச் சரணம் புகுந்தனர்; அவர்களுடைய விண்ணப்பத்திற்கு ஏற்ப புருஷோத்தமன் ஸத்யவதியின் புத்திரனாக பராசரமுனிவர் மூலம் மஹாயோகியான வ்யாஸமுனிவராக அவதரித்தான் - என்றும், க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் - க்ருஷ்ண த்வைபாயநர் என்னும் திருநாமம் கொண்ட வ்யாஸ பகவானை நாராயணனாகவே அறியவேண்டும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய அவதாரமாகவே உள்ளதால், பகவான் “இது நானே” என்று கூறிக்கொள்வது வ்யாஸமுனிவரை ஆகும்.

**வ்யாக்யானம்** - இப்படியிருந்துள்ள ஸ்ரீவேதவ்யாஸ பகவானை வேதங்களின் பூர்வ ஸித்தாநுபூர்வியை தர்சித்துச் சொன்னபடியாலே, “தர்சநாத் ருஷி: மநநசீலோ முநி: கவி: க்ராந்த தர்சீ” என்கிறவர்த்தங்களை நினைத்துக்கொண்டு, “ச்ரூயதாம் ஸிம்ஹநாதோயம் ருஷே ஸ்தஸ்ய மஹாத்மந: தர்மே சார்த்தேச காமே ச மோக்ஷே ச பரதர்ஷப” என்றும், “ஏவம் விதம் பாரதம் து ப்ரோக்தம் யேந மஹாத்மா, ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸ ரூபீ மஹாமுநி:” என்றும், “ஸாக்ஷால்லோகாத் பாவாமாந: கவிமுக்க்ய: பராசர்ய:” என்றும் ருஷி முநி கவி என்றும் சொல்லிற்றிறே. மந்த்ரதர்சிகளானவர்களை பூர்வ ஸித்த ஸந்தர்ப்பத்தை ஸாக்ஷாத்கரித்துச் சொன்னவர்களென்னுமிடம் தோற்ற “நம ருஷிப்யோ மந்த்ர க்ர்த்ப்ய:” என்றும், “பகவாத் சௌநக முநி:” என்றுமித்யாதிகளிலே ருஷி முநி என்று


**Email:**sridharan_book@yahoo.co.in

சொல்லிற்றிறே. இவர்கள் விஷயத்திலும் கவி சப்த ப்ரயோகமுண்டாகில் வந்த ஸ்த்தலங்களிலே கண்டு கொள்வது.

**விளக்கம்** - இப்படிப்பட்ட வேதவ்யாஸ பகவான், வேதங்கள் முன்பு எவ்விதம் இருந்தன என்று அவைகளை வரிசைப்படுத்திக் கண்டார்; இதன் காரணமாக வேதவ்யாஸரைக் குறித்து, தர்சநாத் ருஷி: மநநசீலோ முநி: கவி: க்ராந்த தர்சீ - காண்பதால் ரிஷி, மனனம் செய்யும் திறனால் முனிவன், நூல்களை ஆராய்வதால் கவிஞன் - என்று கூறப்படும் பொருளை எண்ணியே கீழே உள்ள வரிகளில் உள்ளது போன்று கூறினர்:

- மஹாபாரதம் - ச்ரூயதாம் ஸிம்ஹநாதோயம் ருஷே ஸ்தஸ்ய மஹாத்மந: தர்மே சார்த்தேச காமே ச மோக்ஷே ச பரதர்ஷப – ஜனமேஜயரே! அறம், பொருள், காமம், மோக்ஷம் ஆகிய நான்கிலும் மஹாத்மாவான வ்யாஸரிஷியின் ஸிம்ஹநாதம் போன்ற இது கேட்கப்படட்டும் (ரிஷி என்றது காண்க).

- மஹாபாரதம் - ஏவம் விதம் பாரதம் து ப்ரோக்தம் யேந மஹாத்மா, ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸ ரூபீ மஹாமுநி: – எந்த மஹாத்மாவால் இப்படியாகப் பாரதம் கூறப்பட்டதோ, அந்த வ்யாஸமுனி (முனி என்றது காண்க).

- மஹாபாரதம் – ஸாக்ஷால்லோகாத் பாவாமாந: கவிமுக்க்ய: பராசர்ய: – உலகங்கள் அனைத்தையும் தூய்மையாக்கவல்ல கவிகளில் முதன்மையானவர் வ்யாஸர் (கவி என்றது காண்க).

இப்படியாக இந்த மூன்று வரிகளில் ரிஷி, முனி மற்றும் கவி என்று உரைத்தது காண்க. மந்த்ரங்களில் உள்ளதை ஆராய்ந்து அறிந்து கொண்டு அவற்றை எடுத்துக் கூறியவர்களை, "அவர்கள் முன்பே உள்ளதான சொற்களின் சேர்க்கையை அறிந்து கொண்டு உரைத்தவர்கள்" என்னும் பொருள் விளங்கும்படியாக, நம ருஷிப்யோ மந்த்ர க்ர்த்ப்ய: - மந்த்ரங்களை உரைத்த ரிஷிகளுக்கு நமஸ்காரம் - என்றும், பகவாத் சௌநக முநி: - பகவானாகிய ஸௌநக முனிவர் - என்றும் அவர்களைக் குறித்து "ரிஷி, முனி" போன்ற பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டது; இது போன்று மந்த்ரங்கள் உரைத்த

 **Email:**sridharan_book@yahoo.co.in

இவர்கள் குறித்து “கவி” என்னும் பதமும் பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டதைக் காணலாம்.

**வ்யாக்யானம் -** ஆக இப்படி இவர்களைச் சொன்னாப்போலே த்ராவிடமானவிதின் பூர்வ ஸித்தாநுபூர்வியை ஸாக்ஷாத்கரித்துப் பேசின இவ்வாழ்வாரையும் “ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண த்ருஷ்ண தத்வமிவோதிதம், ஸஹஸ்ர சாகாம் யோத்ராக்ஷித் த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம்” என்றும், “சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம் அஜ்ஞாநாம் ஜ்ஞாந ஜநகம்திந்த்ரிணீ மூல ஸம்ச்ரயம்” என்றும், “உலகம் படைத்தான் கவியாயினேற்கு” என்றும் முன்புண்டான ஸந்தர்ப்பத்தை தர்சித்துப் பேசினவரென்னுமிடம் தோற்ற ருஷி யென்றும், முனியென்றும், கவியென்றும் சொல்லுமென்கை.

**விளக்கம்** – இவ்விதம் இவர்களைக் கூறியது போன்று, தமிழ் வேதமாகிய இவற்றை முன்பே இருந்த விவரங்களை அடியொட்டி அருளிச்செய்த ஆழ்வார் குறித்து கீழே உள்ள வரிகள் காண்க:

- ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-6) - ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண த்ருஷ்ண தத்வமிவோதிதம், ஸஹஸ்ர சாகாம் யோத்ராக்ஷித் த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம் - ஸர்வேச்வரன் குறித்து தமிழில் உள்ள ஆயிரம் பாசுரங்களை உள்ளடக்கிய திருவாய்மொழி என்னும் உபநிஷத்தை யார் அறிந்தாரோ, அப்படிப்பட்டவரும், இந்த உலகில் உள்ள க்ருஷ்ண பக்தி முழுவதும் ஒரு உருவம் எடுத்தது போன்று அவதரித்தவரும் ஆகிய ரிஷியாகிய நம்மாழ்வாரை நமஸ்கரிக்கிறோம்.

- பராங்குச அஷ்டகம் – சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம் அஜ்ஞாநாம் ஜ்ஞாந ஜநகம்திந்த்ரிணீ மூல ஸம்ச்ரயம் - சடம் என்னும் வாயுவை வென்றவரும், அறிவற்றவர்களுக்கு ஞானம் அளிப்பவரும் புளியமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ளவரும் ஆகிய முனிவரான நம்மாழ்வாரை வணங்குகிறேன்.

- திருவாய்மொழி (3-9-10) – உலகம் படைத்தான் கவியாயினேற்கு

இப்படியாக உள்ள வரிகளில் "முன்னர் இருந்து வரும் சொற்களுடைய சேர்க்கையை அனுபவித்து உரைத்தவர்" என்னும் கருத்து வெளிப்படும்படியாக நம்மாழ்வாரையும் வ்யாஸபகவான் போன்றே ரிஷி என்றும், முனி என்றும், கவி என்றும் சொல்வது காண்க.

48. படைத்தான் கவியென்றபோதே இதுவும் யதாபூர்வ கல்பநமாமே.

**அவதாரிகை** - இன்னும் இதினுடைய அநாதித்வ ஸூசகமான தொன்றை தர்சிப்பிக்கிறார் - (படைத்தானித்யாதி).

**விளக்கம்** – மேலும் இந்தத் தமிழ் வேதமானது எல்லையற்ற காலமாகவே இருந்து வருகிறது என்பதை மறைமுகமாக உணர்த்தவல்ல ப்ரமாணத்தைக் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "உலகம் படைத்தான் கவி" என்கையாலே "ஒன்றியொன்றி யுலகம் படைத்தான்" என்கிறபடியே ஒருப்பட்டொருப்பட்டு மேன்மேலும் லோக ஸ்ருஷ்டியைப் பண்ணுமிடத்தில், "ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வ மகல்பயத்" என்கிறபடியே ஸ்ருஷ்டிதோறும் சந்த்ரஸூர்யாதி ஸகல பதார்த்தங்களும் யதாபூர்வ கல்பநமாய் வருமாபோலே த்ராவிட வேதமான இப்ப்ரபந்தமும் ஸ்ருஷ்டிதோறும் யதாபூர்வ கல்பநமாய் வருமென்று தோன்றுமிறே யென்கை.

**விளக்கம்** - திருவாய்மொழி (3-9-10) - உலகம் படைத்தான் கவி - என்று கூறும்போது, திருவாய்மொழி (3-9-10) - ஒன்றியொன்றி யுலகம் படைத்தான் - என்று கூறுகிறார்; இதன் கருத்து - ப்ரளயத்தின் பின்னர் உலகைப் படைக்கும்போது முன்னர் இருந்தது போன்று படைக்கும் ஸர்வேச்வரனைக் குறித்து கவி பாடுபவன் - என்பதாகும். அதாவது மீண்டும் உலகைப் படைக்கும்போது தைத்திரீயத்தில் - ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வ மகல்பயத் - சூரியனையும் சந்த்ரனையும் முன்பு இருந்த கல்பம் போன்றே படைத்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, சந்த்ரன் சூரியன் போன்ற அனைத்து வஸ்துக்களும் முன்னர் இருந்த கல்பத்தில் எவ்விதம் இருந்தனவோ அது போன்றே இருந்து வருவது போன்று, தமிழ் வேதமான இந்த ப்ரபந்தமும், படைப்பு தோன்றும் முன்னர் இருந்த கல்பங்களில் உள்ளது போன்றே மீண்டும் உண்டானது என்று கருத்து.


**Email:**sridharan_book@yahoo.co.in

49. உறக்கந்தலைக் கொண்ட பின்னை மறைநான்குமுணர்ந்த தங்களப்பனொடே யோதின சந்தச்சதுமுகன் சலங்கலந்த வெண்புரிநூல் மானுரி திரிதந்துண்ணும் காமனுடலிருக்கிலங்கு ஜ்யேஷ்ட புத்ராதிகளுக்கு மறை பயந்தாப்போலே ஆதுமில் காலத்தெந்தையான வாய்முதலப்பன் பரமகுருவாய் இராப்பகல் முன்சொல்லக் கற்றனமே யென்றவிவரும் நாவினால் நன்மையாலென்று மோதவல்ல பிராக்களைக் கன்மின்க ளென்று சொல் பயிற்ற, வேதம் ஓதுவாரோத்தாகையாலே ஆதர்வணாதிகள்போலே இதுவும் பேர்பெற்றது.

**அவதாரிகை** - ஏவம்பூதமானவிது பகவத்ப்ரஸாதத்தாலே ஆழ்வாருக்கு ஸித்தித்து ஆழ்வார் ப்ரஸாதத்தாலே இவ்வருகுள்ளார்க்கு உபஜீவ்யமாய் இவரையிட்டு நிரூபிக்கும்படி யானமையை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் - (உறக்கமித்யாதியால்).

**விளக்கம்** - இப்படிப்பட்டதான தமிழ்வேதமாகிய ப்ரபந்தங்கள் ஸர்வேச்வரனுடைய க்ருபை காரணமாக ஆழ்வாருக்குக் கிட்டியது; ஆழ்வாருடைய க்ருபை காரணமாக இங்கு உள்ளவர்கள் கரையேறக் காரணமாக உள்ளது; மேலும் இது இவருடைய திருநாமத்தோடு சேர்த்து உரைக்கப்படுகிறது; இவற்றுக்கு உதாரணங்கள் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “உன்னியயோகத்துறக்கம் தலைக்கொண்ட பின்னை” என்கிறபடியே ஸம்ஹ்ருதி ஸமயத்தில் நாமரூப விபாகாநர்ஹமாய் ஸதவஸ்த்தமாய்க் கிடந்தவித்தை ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே விபக்தமாக்கி மஹதாதி ஸகல தத்வங்களையும் அண்டத்தையும் ஸ்ருஷ்டித்து சதுர்முக ஸ்ருஷ்டிக்கு முன்னாக ஏகார்ணவத்திலே “இவை நல்வழியாய்க் கரை சேரும் விரகேதோ” என்று அநுஸந்திக்கையாகிற யோகநித்ரையைச் செய்த வநந்தரம், “உணர்ந்தாய் மறைநான்கும்” என்கிறபடியே ஸுப்த ப்ரபுத்த ந்யாயத்தாலே ஸம்ஸ்கார கதமாய்க் கிடந்த நாலு வேதங்களையும் ஆநுபூர்வி தப்பாதபடி ஸ்மரித்த.

**விளக்கம்** - பெரியதிருமடல் (8) - உன்னியயோகத்துறக்கம் தலைக்கொண்ட பின்னை - என்பதற்கு ஏற்ப ப்ரளய காலத்தில் பெயர் மற்றும் உருவம் ஏதும் இல்லாமல் (அல்லது பெயர், உருவம் கொண்டு பிரித்துக் காண்பிக்க இயலாமல் ஒன்றாக உள்ள), ஸத் என்பது மட்டுமே உள்ளது என்பது போன்று கிடந்த அனைத்தையும், ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன்


Email:sridharan_book@yahoo.co.in

ஸர்வேச்வரனாகிய தன்னைக் காட்டிலும் வேறாக்கி, மஹத் உள்ளிட்ட அனைத்து தத்வங்களையும் மற்றும் அண்டத்தையும் ஸ்ருஷ்டிக்கிறான்; அதனைத் தொடர்ந்து நான்முகனைப் படைப்பதற்கு முன்பாக ப்ரளய வெள்ளத்தில், "இவை அனைத்தும் நல்ல மார்க்கத்தில் செல்வதற்கான உபாயம் என்னவோ" என்று எண்ணியபடி கிடப்பதான யோகநித்திரையில் உள்ளான். அதன் பின்னர், இரண்டாம் திருவந்தாதி (48) - உணர்ந்தாய் மறைநான்கும் - என்பதற்கு ஏற்ப "விழித்திருக்கும்போது எதனை எண்ணியபடி உள்ளானோ, அதனையே உறங்கி எழுந்த பின்னரும் எண்ணியபடி உள்ளான்" என்ற ஸுப்த ப்ரபுத்த ந்யாயம் காரணமாக, தன்னுடைய நினைவின் காரணமாகவே உள்ளதான நான்கு வேதங்கலையும், அவற்றின் உச்சரிப்பு முறை தவறாதபடி நான்முகனுக்கு உணர்த்துகிறான் (இவ்விதம் நான்முகன் உணர்ந்தான் என்பதையே சூர்ணையில் "மறைநான்கும் உணர்ந்த" என்றார்).

**வ்யாக்யானம்** – "திசைமுகனார் தங்களப்பன்" என்கிறபடியே தனக்கு ஜநகனான ஸர்வேச்வரனோடே, "யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்னும்படி ஓதின "சந்தச் சதுமுகன்" என்கிறபடியே ச்சந்தஸ்ஸை நிரூபகமாகவுடைய சதுர்முகன்,

**விளக்கம்** – (அடுத்து யார் இவ்விதம் உணர்ந்தார்கள் என்ற கேள்விக்கு "நான்முகன்" என்று விடை அருளிச்செய்கிறார்) பெரியதிருமொழி (2-2-7) - திசைமுகனார் தங்களப்பன் - என்பதற்கு ஏற்ப தனது தந்தையான ஸர்வேச்வரனுடன், ச்வேதாஸ்வதர உபநிஷத் – யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை - எந்தப் பரமபுருஷன் நான்முகனுக்கு வேதங்களை உபதேசம் செய்கிறானோ – என்பதற்கு ஏற்ப ஓதின, பெரியாழ்வார் திருமொழி (2-5-8) - சந்தச் சதுமுகன் – என்பதற்கு ஏற்ப வேதங்களைத் தனக்கு அடையாளமாகக் கொண்ட நான்முகன்.

**வ்யாக்யானம்** – "சலங்கலந்த செஞ்சடை", "வெண்புரிநூல் மார்வன்", "மானுரி யதளுமுடையவர்", "பிறர் மனை திரிதந்துண்ணும்", "காமனுடல் கொண்ட தவத்தார்", "இருக்கிலங்கு திருமொழிவா யெண் தோளீசர்" என்று நித்ய ஸ்நாநோபவீத க்ருஷ்ணாஜிந தாரண பிக்ஷாந்ந போஜந இந்த்ரியஜய ஸதாத்யயந பரத்வங்களான ப்ரஹ்மசர்ய லக்ஷண யுக்தனாய், "ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்ட்டாய" என்கிறபடியே தனக்கு ஜ்யேஷ்ட்ட

புத்ரனான ருத்ரன் முதலானார்க்கும், “சரணாமறை பயந்த” என்கிறபடியே புருஷார்த்த ததுபாய ஜ்ஞாந ஸாதநமான வேதத்தை ஓதுவித்தாப்போலே.

**விளக்கம்** - (அடுத்து நான்முகன் செய்தது என்ன என்பதை அருளிச்செய்கிறார்) திருச்சந்தவிருத்தம் (113) - சலங்கலந்த செஞ்சடை - என்பதற்கு ஏற்ப கங்கை நீரால் எப்போதும் ஸ்நாநம் செய்தபடி உள்ளவனும், முதல் திருவந்தாதி (46) - வெண்புரிநூல் மார்வன் – என்பதற்கு ஏற்ப யஜ்ஞோபவீதம் தரித்தவனும், பெரியதிருமொழி (10-9-4) – மானுரி யதளுமுடையவர் – என்பதற்கு ஏற்ப மான் தோலை ஆடையாக அணிந்துள்ளவனும், திருக்குறுந்தாண்டகம் (19) - பிறர் மனை திரிதந்துண்ணும் - மற்றவர்கள் வீட்டில் பிச்சை எடுத்து உண்பவனும், நான்முகன் திருவந்தாதி (78) - காமனுடல் கொண்ட தவத்தார் - என்பதற்கு ஏற்ப ஐந்து புலன்களையும் வென்றவனும், பெரியதிருமொழி (6-6-8) - இருக்கிலங்கு திருமொழிவா யெண் தோளீசர் - என்பதற்கு ஏற்ப எப்போதும் வேதங்களை ஓதியபடி உள்ளதன் காரணமாக ப்ரம்மசர்ய நிலைக்குத் தகுதியானவனும், ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்ட்டாய - நான்முகனுக்கு முதல் புத்திரன் - என்றுள்ளவனும் ஆகிய சிவன் முதலானவர்களுக்கு, முதல் திருவந்தாதி (60) - சரணாமறை பயந்த - என்பதற்கு ஏற்ப புருஷார்த்தம் மற்றும் அதன் உபாயம் ஆகியவற்றுக்குத் தேவையான ஞானம் அளிக்கவல்ல வேதத்தை ஓதுவித்தான்.

**வ்யாக்யானம்** – “ஆதுமில் காலத்தெந்தை” என்று “ஒன்றும் தேவும்” இத்யாதிப்படியே ஒன்றுமில்லாத ஸம்ஹார காலத்திலே நாமரூபங்களை இழந்தவோபாதி ஸத்தையுமிழந்து போகாமே எந்தையான முறையாலே தன் மேல் ஏறிட்டுக்கொண்டு நோக்கி மீளவும் கரணாதிகளைத் தந்து ஜ்ஞாந விகாஸத்தைப் பண்ணின “வாய் முதலப்பன்” என்கிற வாய்த்த காரண பூதனான உபகாரகன்.

**விளக்கம்** - (இதே போன்று தமிழ் வேதத்தைக் குறித்து அடுத்து கூறுகிறார்) இதே போன்று. திருவாய்மொழி (3-4-4) - ஆதுமில் காலத்தெந்தை - என்று, திருவாய்மொழி (4-10-1) - ஒன்றும் தேவும் - என்று கூறுவதற்கு ஏற்ப, வேறு ஏதும் இல்லாத ஸம்ஹார காலத்தில், பெயர் மற்றும் ரூபங்களை இழந்த ஜீவாத்மாக்கள் தங்களுடைய இருப்பு என்பதை மட்டும் இழக்காமல் இருந்தபோது, அவற்றுக்குத் தந்தை என்ற முறை காரணமாக, அவை படும் துன்பங்கள் அனைத்தையும் தன் மேலிட்டுக் கொண்டு,

கருணையுடன் நோக்கி, அவற்றுக்கு மீண்டும் கைகால் போன்றவற்றை அளித்து, அவற்றுக்கு ஞான மலர்ச்சியை ஏற்படுத்தி, திருவாய்மொழி (7-9-3) – வாய் முதலப்பன் - என்பதற்கு ஏற்ப இயல்பான உதவிகள் செய்யும் ஸர்வேச்வரன்.

**வ்யாக்யானம்** – "பீதகவாடைப்பிரானார் பிரம குருவாகி" என்கிறபடியே தானே ஆசார்யனாய், "இராப்பக லோதுவித்து" என்கிறபடியே திவாராத்ர விபாகமற, "என் முன் சொல்லும்" என்கிறபடியே முன்னுருச் சொல்ல, "திருநாமச்சொல் கற்றனமே" என்று அநூச்சாரணம் பண்ணினேனென்று இப்படியே அவனோடே ஓதினவிவரும்,

**விளக்கம்** - (ஸர்வேச்வரன் தமிழ் வேதம் குறித்துச் செய்தது என்ன என்று கூறுகிறார்) பெரியாழ்வார் திருமொழி (5-2-8) – பீதகவாடைப்பிரானார் பிரம குருவாகி - என்பதற்கு ஏற்ப, தானே ஆசார்யனாக வந்து, பெரியாழ்வார் திருமொழி (5-2-3) - இராப்பகல் ஓதுவித்து - என்பதற்கு ஏற்ப இரவு மற்றும் பகல் என்ற வேறுபாடு ஆராயாமல், திருவாய்மொழி (7-9-2) – என் முன் சொல்லும் - என்பதற்கு ஏற்றபடி அவன் வேதங்களை உரைக்க, திருவிருத்தம் (64) - திருநாமச்சொல் கற்றனமே – என்பதற்கு ஏற்ப "தொடர்ந்து நான் உரைத்தேன்" என்று இவ்விதம் அவனுடன் இணைந்து ஓதிய நம்மாழ்வாராகிய இவரும்.

**வ்யாக்யானம்** – "நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்" என்று தொடங்கி, "குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித் திரிவன்" என்று ஸ்வாசார்ய ப்ரேமத்தையும், "நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதும்" படியான என்னை, "அன்னையா யத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன்" என்று க்ருதஜ்ஞதையை முன்னிட்டுக் கொண்டு, "ஓதவல்ல பிராக்கள்" என்று இத்தை அப்யஸிக்கவல்ல உபகாரகரென்னும்படி ச்ரத்தா பூர்வகமாக ஓதும் ஸ்ரீமதுரகவிகள் போல்வாரை, "கன்மின்களென்றும்மை யான்" என்கிறபடியே "இத்தை அப்யஸியுங்கோள்" என்று சொல்லி "சொல் பயிற்றிய" என்கிறபடியே இச்சப்தத்தை அப்யஸிப்பிக்க,

**விளக்கம்** – (நம்மாழ்வார் செய்தது என்ன என்று அருளிச்செய்கிறார்) கண்ணிநுண் சிறுத்தாம்பு (2) - நாவினால் நவிற்றின்ப மெய்தினேன் - என்று தொடங்கி, கண்ணிநுண் சிறுத்தாம்பு (2) – குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித் திரிவன் - என்று கூறுவதற்கு ஏற்ப

தனது ஆசார்யனிடம் கொண்டுள்ள ப்ரேமத்தையும்; கண்ணிநுண் சிறுத்தாம்பு (4) - நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர் - என்னும்படியான என்னை, கண்ணிநுண் சிறுத்தாம்பு (4) - அன்னையா யத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன் - என்பதற்கு ஏற்ப, எனது அடிமைத்தனம் என்னும் ஒன்றை மட்டுமே கொண்டு என்னைப் பாதுகாத்தல் என்பதை நம்மாழ்வார் செய்வது கொண்டு அத்தகைய செய்ந்நன்றி அறிதலையும் [மேலே ஐந்து வரிக்கு முன்பாகக் கூறப்பட்ட ஆசார்யனிடம் கொண்ட ப்ரேமை மற்றும் செய்ந்நன்றி அறிதல் ஆகிய இரண்டையும்] முன்னிட்டுக்கொண்டு, திருவாய்மொழி (9-1-11) - ஓதவல்ல பிராக்கள் - என்பதற்கு ஏற்ப இந்தத் தமிழ்வேதத்தைக் கற்கவல்ல உபாகாரகர்கள் (அதாவது தாங்கள் கற்றுக் கொண்டு, மற்றவர்களுக்கு உபதேசம் செய்யவல்லவர்கள்) என்னும்படி உள்ள மதுரகவியாழ்வார் போன்றவர்களை, திருவாய்மொழி (6-8-6) - கன்மின்களென்றும்மை யான் – என்று கூறுவதற்கு ஏற்ப, “இதனைத் தொடர்ந்து பயில்வீர்களாக” என்று கூறி, திருவாய்மொழி (9-5-8) - சொல் பயிற்றிய – என்பதற்கு எற்ப இந்தத் தமிழ் வேதத்தை பயில்விக்க.

**வ்யாக்யானம்** – வேதமானது “ஓதுவாரோத்து” என்று அத்யேதாக்களையிட்டு நிரூபிக்கப்படுமதாகையாலே ஆதர்வணம், தைத்திரீயம், காண்வம் என்று பேர் பெற்றாப் போலே இவர் இதுக்கு ப்ரதமாத்யேதாவானது கொண்டு இதுவும் “சடகோபன் சொல்” என்று பேர் பெற்றதென்கை.

**விளக்கம்** - (இவ்விதம் நம்மாழ்வார் செய்ததால் நிகழ்ந்தது என்ன என்று அருளிச் செய்கிறார்) வேதங்கள், திருவாய்மொழி (3-1-6) – ஓதுவாரோத்து - என்பதற்கு ஏற்ப அவற்றை ஓதுகின்றவர்களில் தலைவராக உள்ளவர்களைக் கொண்டு அடையாளம் காண்பிக்கப்படுவதன் காரணமாக அவை “ஆதர்ணவம், தைத்திரீயம், காண்வம்” என்று பல்வேறு பெயர்கள் பெற்றன. இதே போன்று நம்மாழ்வார், தமிழ்வேதமாகிய இதனை முதலில் அருளிச்செய்ததன் காரணமாக இந்தத் தமிழ்மறையானது, திருவாய்மொழி (1-2-11) - சடகோபன் சொல் - என்று பெயர் பெற்றது.

**வ்யாக்யானம்** - ஆக “அத்யயந” இத்யாதி வாக்யத்தில் “சந்தங்களாயிரம்” என்று ப்ரஸ்துதமான திருவாய்மொழியின் வேதத்வத்தை, “எவ்வுலகத்து” இத்யாதி வாக்யம் தொடங்கி இவ்வளவாக ஸாதித்தாராய்த்து.

**விளக்கம்** - ஆக சூர்ணை (39) – எவ்வுலகத்து - என்று தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய, சூர்ணை (37) - அத்யயந – என்பதில் காணப்படும் “சந்தங்கள் ஆயிரம்” என்ற பதங்கள் மூலம் திருவாய்மொழிக்கு உணர்த்தப்பட்ட வேதத்தன்மையை நிரூபித்தார் என்று கருத்து.

50. இயற்பா மூன்றும் வேதத்ரயம்போலே; பண்ணார், பாடல் பண்புரை யிசைகொள் வேதம் போலே.

**அவதாரிகை** - திருவாய்மொழி ஒன்றுக்குமன்றே வேதத்வம் ஸாதித்தது; இவருடைய ப்ரபந்தங்கள் நாலுக்குமொக்குமிறே. ஆகையிறே, “வேதசதுஷ்டய” இத்யாதி வாக்யத்தில் இவர் ப்ரபந்தங்கள் நாலையும் நாலு வேதத்தினுடைய ஸ்தாநேயாக வருளிச்செய்தது. அதில் எந்த ப்ரபந்தம் எந்த வேதத்தினுடைய ஸ்தாநத்திலே யென்ன வருளிச்செய்கிறார் - (இயற்பாவித்யாதி).

**விளக்கம்** - இப்படியாக உரைக்கப்பட்ட “வேதங்களாக உள்ள தன்மை” என்பது நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு மட்டும் அல்ல; அவர் அருளிச்செய்த நான்கு ப்ரபந்தங்களுக்கும் உண்டு. அதனால்தான் சூர்ணை (43) – வேதசதுஷ்டய - என்பதன் மூலம் இருவருடைய நான்கு ப்ரபந்தங்களையும் நான்கு வேதங்களுடைய இடத்தில் வைத்து அருளிச்செய்தார். இந்த ப்ரபந்தங்களில் எந்த ப்ரபந்தம் எந்த வேதத்தில் வைக்கப்படுகிறது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இயற்பாவான திருவிருத்தம், திருவாசிரியம், திருவந்தாதி யென்கிற ப்ரபந்தங்கள் மூன்றும் அடைவே ருக் யஜுர் அதர்வணங்களாகிற மூன்று வேதத்தினுடைய ஸ்தாநத்திலே; “பண்ணார் பாடல்” என்று பண்ணோடே சேர்ந்திருந்துள்ள இசையையுடைய திருவாய்மொழி, “பண்புரை வேதம்” என்றும், “இசை கொள் வேதம்” என்றும் பண்ணையும் இசையையுடைத்தான ஸாமவேதம் போலே யென்கை. வ்யாக்க்யாநங்களில் “பண்புடை வேதம்” என்றொழிய “பண்புரை வேதம்” என்று பாடமும், “இசைகொள் வேதம்” என்கிறதுக்கு ஸாமவேத பரத்வமும் கண்டதில்லையேயாகிலும், ஆப்ததமரான இவர் இப்ப்ரபந்தத்திலே இப்படி யருளிச் செய்கையாலே இப்படியும் கொள்ளவேணும். அப்போதைக்கு அவ்வவ ஸ்தலங்களில்

ஸாமவேத வைலக்ஷண்யத்தைப்பற்ற இத்தைச் சொன்னதேயுள்ளது. மற்றையவற்றுக்கும் இது உபலக்ஷணமென்று கொள்ளக் கடவது.

**விளக்கம்** - இயற்பாவாகிய திருவிருத்தம், திருவாசிரியம், திருவந்தாதி ஆகிய மூன்று ப்ரபந்தங்களும் முறையே ருக், யஜுர் மற்றும் அதர்வண வேதங்களுடைய இடங்களில் வைக்கப்படுகின்றன. திருவாய்மொழி (10-7-5) – பண்ணார் பாடல் - என்பதற்கு ஏற்ப பண்ணோடு சேர்த்துள்ள இசையைக் கொண்டதான திருவாய்மொழியை, திருவாய்மொழி (6-6-5) – பண்புரை வேதம், பெரியதிருமொழி (5-3-2) – இசைகொள் வேதம் - என்பதற்கு ஏற்ப உள்ளதான பண் மற்றும் இசை ஆகியவற்றுடன் கூடியதான ஸாமவேதத்தின் இடத்தில் வைத்தல் வேண்டும். ஆனால் திருவாய்மொழிக்கான வ்யாக்யானத்தில், "பண்புடை வேதம்" என்று காணப்படுகிறதே அல்லாமல் "பண்புரை வேதம்" என்று இல்லை; மேலும் "இசைகொள் வேதம்" என்பதற்கான வ்யாக்யானத்தில் ஸாமவேதம் என்ற தன்மையும் கூறப்படவில்லை என்ற சந்தேகங்கள் எழலாம். இவ்விதம் கூறப்படவில்லை என்றாலும், மிகுந்த நம்பிக்கைக்கு உரிய நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்களில் இவ்விதம் அருளிச்செய்கையால், இப்படியே கொள்ளவேண்டும். "பண்புரை வேதம், இசைக்கொள் வேதம்" என்றுள்ள இடங்களில் ஸாமவேதத்தின் மேன்மையைக் கருத்தில் கொண்டு ஸாமவேதத்தினை அருளிச்செய்தார்; இதனை ஒரு எடுத்துக்காட்டாகக் கொண்டு மற்ற வேதங்களையும் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம்** – (பண்புரை வேதம்) என்றது, பண்ணைப் புரைந்திருக்கிற வேதமென்றதாய் அப்பண்ணுக்காச்ரயமான வேதமென்றபடி. "இசைகொள் வேதம்" என்றது இசையை யுடைத்தான வேதமென்றபடி. "பண்ணார் பாடல்" என்று திருவாய்மொழி பண்ணையும் இசையையுமுடைத்தாகையாலே ஸாமவேதத்துக்குப் பண்ணும் இசையுமுண் டென்னுமிடம் அறிவிக்கைக்காக வாய்த்து ஸாமவேதபரமான சந்தைகள் வேண்டுவதுண்டாயிருக்க இவற்றை இப்போது இவரெடுத்தது.

**விளக்கம்** - "பண்புரை வேதம்" என்று கூறப்பட்டது ஏன் என்றால் பண்ணைப் புரைந்துள்ள வேதம் என்ற பொருள்படும்படி, பண்ணுக்கு அண்டி நிற்கும்படியான வேதம் என்று கருத்து. "இசைகொள் வேதம்" என்றால் இசையுடன் சேர்ந்துள்ள வேதம் என்று கருத்து. ஸாமவேதத்தை எடுத்துக் காண்பிக்கின்ற பல பதங்கள் பல ப்ரபந்தங்களில் ஆங்காங்கு


**Email:**sridharan_book@yahoo.co.in

காணப்பட்டாலும் “பண்புரைவேதம், இசைகொள் வேதம்” என்பதை மட்டுமே இவர் அருளிச்செய்ததன் கருத்து என்ன? அதாவது “பண்ணார் பாடல்” என்று கூறுவதற்கு ஏற்ப திருவாய்மொழியானது பண் மற்றும் இசை ஆகிய இரண்டையும் அடங்கியது என்பதால், ஸாமவேதத்துக்கு பண்ணும் இசையும் உண்டு என்று உணர்த்துவதற்காக ஆகும்.

51. ருக்கு ஸாமத்தாலே ஸரஸாமாய் ஸ்தோபத்தாலே பரம்புமாபோலே சொல்லார் தொடையல் இசை கூட்ட அமர்சுவையாயிரமாயிற்று.

**அவதாரிகை** - ஆனால் அந்த சதுஷ்டயத்திலே ருக்கு ஸாம ரூபேண விஸ்த்ருகமாமாகாரம் இங்குமொக்குமோ வென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் - (ருக்கித்யாதி).

**விளக்கம்** - ஆனால் ருக்வேதமானது ஸாமவேதம் போன்று வடிவம் எடுத்து மலர்ந்து நிற்கும் தன்மை, நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு ப்ரபந்தங்களில் காணப்படுகிறதோ என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸாமஸங்க்ரஹமான ருக்கானது ஸ்வவிவரணமாய், “ருசஸ் ஸாம ரஸ:” என்கிறபடியே தனக்கு ரஸமாயிருந்துள்ள காந ரூபமான ஸாமத்தாலே ரஸஸஹிதமாய் “ஹாவு ஹாவு ஹாவு” இத்யாதியான ஸ்தோபத்தாலே விஸ்த்ருதமாமாபோலே ருக்வேத ஸ்தாநேயாயிருக்கிற “சொல்லார் தொடையலான” திருவிருத்தம் நூறு பாட்டும், “இசை கூட்டி” என்கிறபடியே இசையிலே கூட்டினவாறே ஸாமவேத ஸ்தாநேயாய், “அமர்சுவையாயிரம்” என்கிறபடியே ஸரஸமாயிருந்துள்ள வாயிரம் பாட்டாகப் பரம்பிற்றென்கை.

**விளக்கம்** – ஸாமவேதத்தின் சுருக்கமாக உள்ள ருக்வேதமானது தனது விரிவாக உள்ளதும், சாந்தோக்ய உபநிஷத் – ருசஸ் ஸாம ரஸ: - ருக்வேதத்தின் ரஸம் (ஆதாரம் அல்லது உற்பத்தி அல்லது சுவை) ஸாமவேதம் ஆகும் - என்று கூறுவது போன்று தனக்கு ஆதாரமாக உள்ளதும் ஆகிய இசைவடிவமாக உள்ள ஸாமவேதத்தால் சுவை நிறைந்ததாக, “ஹாவு ஹாவு ஹாவு” என்பது போன்று இசைச்சொற்களால் விரிந்து நிற்கிறது. இது போன்றே ருக்வேதத்தின் இடத்தில் வைக்கப்பட்டுள்ள திருவிருத்தம் (100) - சொல்லார் தொடையலான - என்பதற்கு ஏற்ப உள்ள திருவிருத்தத்தின் நூறு

பாசுரங்களும், திருவாய்மொழி (2-4-11) - இசை கூட்டி - என்பதற்கு ஏற்ப இசையில் சேர்ந்தவுடன் ஸாமவேதத்தின் இடத்தை அடைந்து, திருவாய்மொழி (1-3-1) – அமர்சுவை ஆயிரம் - என்பதற்கு ஏற்ப சுவையுடன் கூடி நிற்கும் ஆயிரம் பாசுரங்களாக விரிந்து நின்றது என்று கருத்து.

52. சந்தோகனென்று ஸாமாத்யமாகாமல் முதலிலே பிரித்து யாழ் பயில் காநஸ்வரூபியைப் பாலையாகியென்று விசேஷிக்கையாலே வேதகீதச்சாமி நானென்ற ஸாமந்தோன்ற உத்கீத ப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடிச் சரமகதி முடிவாகத் தொண்டர்க்கமுதென்ன தேவாந்நமாக்கி மஹாகோஷ நல்வேத வொலிபோலே மஹாத்யயந மென்னப் பாடுகையாலே இத்தை சாந்தோக்ய ஸமமென்பர்கள்.

**அவதாரிகை** - இனி இந்த ஸாமந்தான் அநேகவிதமாகையாலே இது எந்த ஸாமத்தோ டொக்குமென்ன வருளிச்செய்கிறார் மேல்.

**விளக்கம்** - அடுத்து ஸாமவேதம் பலவகைப்பட்டுள்ளதால், திருவாய்மொழி அந்த வகைகளில் எந்தச் ஸாமத்தோடு ஒப்பிடும்படியாக இருக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (சந்தோகனென்று ஸாமாந்யமாகாமல் முதலிலே பிரித்து) அதாவது, “சாமவேத கீதனாய”, “சாமியப்பன்”, “ஸாமவேதோஸ்மி” என்று அபியுக்தரும் அவன் தானும் சொன்ன ஸாமம் ஸாமாந்யமாகாமல், “சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி” என்கிறவிடத்தில் “சாமவேதி” யென்று மேல் சொல்லா நிற்க, “சந்தோகன்” என்று முதலிலே பிரித்தென்கை. இது நினைவன்றாகில் “சாமவேதி” என்றதுக்குள்ளே இந்த ஸாமமும் அந்தர்ப்பவிக்குமாயிருக்க இங்ஙன் பிரித்துச் சொல்ல வேண்டாவிறே என்று கருத்து.

**விளக்கம்** - (சந்தோகனென்று ஸாமாந்யமாகாமல் முதலிலே பிரித்து) – [இங்கு சந்தோகன் என்பது ஸாமவேதத்தின் உபநிஷத் பாகமான சாந்தோக்ய உபநிஷத் ஆகும். அதாவது வேதங்களில் சிறந்தது ஸாமவேதம், ஸாமவேதத்தில் சிறந்தது அதன் உபநிஷத்தான சாந்தோக்யம், அதுவே திருவாய்மொழி என்று கருத்து] திருச்சந்தவிருத்தம் (14) -

சாமவேத கீதனாய - என்றும், பெரியதிருமொழி (2-2-7) - சாமியப்பன் - என்றும் சான்றோர்களான ஆழ்வார்களும், கீதையில் (10-22) - வேதாநாம் ஸாமவேதோஸ்மி - வேதங்களில் நான் ஸாமவேதம் ஆவேன் - என்று ஸவேச்வரனாகிய தானும் கூறிய இடங்களில் காணப்படும் "ஸாமம்" என்ற பதம் பொதுவாக ஸாமவேதத்தை முழுவதுமாகக் கூறவில்லை; மாறாக சாந்தோக்ய உபநிஷத்தையே கூறுகிறது. இதனை உணர்த்தவே, பெரியதிருமொழி (5-5-9) - சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி – என்ற பாசுரத்தில் "சாமவேதி" என்று கூறுவதற்கு முன்பாகவே "சந்தோகன்" என்று பிரிக்கப்பட்டது என்று கருத்து. இவ்விதம் ஆழ்வாருக்கு திருவுள்ளம் இல்லையென்றால் "சாமவேதி" என்றுள்ள சொல்லிலேயே "ஸாமம்" அடங்கிவிடும் என்னும்போது, "சந்தோகன்" என்று தனியாகப் பிரித்து உரைக்கவேண்டிய அவசியம் இல்லை அல்லவோ?

**வ்யாக்யானம்** - (யாழ் பயில் கான ஸ்வரூபியைப் பாலையாகி யென்று விசேஷிக்கையாலே) அதாவது "யாழ் பயில் நூல் நரம்பின் முதிர்சுவை" என்று யாழ் விஷயமாக அப்யஸிக்கப்படுவதான சாஸ்த்ரத்திற் சொன்ன லக்ஷணத்தையுடைய நரம்பிலே பிறந்த பண்பட்ட ரஸமென்னும்படி கானஸ்வரூபம்போலே இனியனானவனை, கானஸாமாந்யமாகாமல் "யாழ் நரம்பில் பெற்ற பாலையாகி" என்று அந்த ச்சந்தோக ஸாமத்தின் நிறமான பாலையாழென்கிற பண்ணையிட்டு விசேஷிக்கையாலே யென்கை. இப்போது இது சொல்லிற்று – "சாமவேத கீதன்" என்கிறவிடத்தில் வேதத்தோடன்றிக்கே இதின் கீதத்தோடே ஸமாநாதிகரிக்கையாலே அந்த கீதமும் ச்சந்தோக ஸாமகீதமென் றறிவிக்கைக்காக.

**விளக்கம்** - (யாழ் பயில் கான ஸ்வரூபியைப் பாலையாகி யென்று விசேஷிக்கையாலே) – திருவாய்மொழி (2-3-7) - யாழ் பயில் நூல் நரம்பின் முதிர்சுவை – என்ற வரியில் யாழ் என்னும் இசைக்கருவி குறித்துக் கற்பிக்கும் சாஸ்த்ரத்தில் கூறப்படும் இலக்கணங்கள் அனைத்தையும் கொண்டதும், அந்த யாழின் நரம்பில் உண்டாவதும் ஆகிய நேர்த்தியான சுவை என்று கூறும்படியாக உள்ள கானம் எத்தனை இனிமையாக இருக்குமோ அது போன்று இனிமையாக உள்ளவனை, கானத்தோடு பொதுவாக உரைக்காமல், பெரியதிருமொழி (7-3-7) – யாழ் நரம்பில் பெற்ற பாலையாகி - என்று சாந்தோக்ய உபநிஷத் ஓதும் வடிவமான "பாலையாழ்" என்பதான பண் மூலம் சிறப்பித்து கூறுவது

காண்க. இந்த உதாரணம் இங்கு ஏன் கூறப்படுகிறது? “சாமவேத கீதன்” என்று ஸர்வேச்வரனை வேதங்களுடன் மட்டும் ஒற்றுமைப்படுத்திக் கூறாமல், அதன் கீதத்துடன் சேர்த்து ஒற்றுமைப்படுத்தியே கூறுகின்றனர்; அந்தக் கீதமும், சாந்தோக்ய உபநிஷத் ஸாமகீதமாகும் என்று உணர்த்தவே ஆகும்.

**வ்யாக்யானம்** - (வேதகீதச்சாமி நானென்ற ஸாமந்தோன்ற) அதாவது இப்படி விசேஷிக்கையாலே பச்வதிகரண ந்யாயத்தாலே “சாமவேத கீதன், “சாமி”, “ஸாமவேதோஸ்மி” என்று சொன்ன ஸாமாந்யமான இஸ்ஸாமசப்தமும் கீதசப்தமும் கீழ்ச்சொன்ன ச்சந்தோக தத்கீதங்களாகிற விசேஷத்திலே பர்யவஸிக்குமிறே. ஆன பின்பு ச்சந்தோக ஸாமமே ஸமாநாதிகரிக்கும்படி உத்க்ருஷ்டமாய் அவனுக்கு ஆதரணீயமான ச்சந்தோக ஸாமம் ஈதென்னுமிடம் தோன்றும்படியாக வென்கை.

**விளக்கம்** – இப்படியாக “சந்தோகன்” என்று முதலில் உரைத்து, “பாலையாகி” என்று சிறப்பித்துக் கூறுவதால், பச்வதிகரண ந்யாயம் காரணமாக (பசு என்னும் சொல் பொதுவாக நான்கு கால்கள் கொண்ட விலங்குகளைக் குறிக்கும் என்றாலும், யாகத்தில் “பசுவைக் கொண்டு வா” என்றால் “வெள்ளாட்டைக் கொண்டு வா” என்று அர்த்தம். இதுவே பச்வதிகரண ந்யாயம் – பொதுவாக உள்ள ஒன்றை ஒரு இடத்தில் சிறப்பித்தல்), “சாமவேத கீதன், சாமி, ஸாமவேதோஸ்மி” போன்ற இடங்களில் காணப்படும் “ஸாமம்” மற்றும் “கீதம்” என்ற பதங்கள் பொதுவாக முறையே “ஸாமவேதம்” மற்றும் “இசை” என்ற பொருளை அளிக்காமல் (பச்வதிகரண ந்யாயம் காரணமாக), ஸாமவேதத்தில் உள்ள சாந்தோக்ய உபநிஷத்தையும், அதன் பண்ணாகிற பாலையாழ் என்பதையும் உணர்த்தும். இப்படியாக ஸாமவேதத்தின் சாந்தோக்ய உபநிஷத்தே இங்கு கூறப்பட்டது என்பதாலும், ஸர்வேச்வரனாகிய தானும் ஸர்வேச்வரனாகிய தன்னுடன் ஒற்றுமைப்படுத்திக் காணபிக்கவல்லது என்பதால் மிகவும் உயர்ந்ததாக உள்ளதன் காரணமாக அவனுக்கும் விரும்பத்தக்கதாக உள்ளதாலும், சாந்தோக்ய ஸாமவேதமே இந்தத் திருவாய்மொழி என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி) அதாவது, ஒரு ஸாமந்தனக்கே ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதநம் என்ற அஞ்சு பாகங்களுண்டாகையாலே அவற்றுக்குள்ளே ஒன்றாயிருக்கச்செய்தே, “ஸாம்ந உத்கீதோ


**Email:**sridharan_book@yahoo.co.in

ரஸ:" என்று ஸாமத்துக்கு ரஸமாகச் சொல்லப்படுமதாய், ப்ரணவ பூர்வகமாக காநம் பண்ணப்படுமதா யிருப்பதொன்றிறே உத்கீதம்; ஆகையால், அந்த உத்கீதாவயவமான ப்ரணவத்தை, “ஓமித்யேததக்ஷர முத்கீத முபாஸீத” என்று சாந்தோக்யந் தன்னில் ப்ரதமத்திலே யெடுத்தாப்போலே இங்கும் ப்ரதமத்திலே யெடுக்கிறவளவில் “ஓம்” என்று ஸம்ஹிதாகாரேண வெடுத்தால் அதிக்ருதாதிகாரமா மென்று அஸம்ஹிதா காரேண அக்ஷர த்ரயத்தையும் ப்ரதம த்விதீய த்ருதீய பாதங்களில் எடா நிற்கச்செய்தே ப்ரதமாக்ஷரமான அகாரம் முதலாகவெடாதெ உகாரம் முதலாகவெடுக்கையாலே அக்ஷர க்ரமத்தை மாறாடியென்கை.

**விளக்கம்** - (உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி) - ஒரு ஸாமவேதத்திற்கு ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதநம் மற்றும் ஐந்து பாகங்கள் உள்ளன (குறிப்பு - யாகத்தின்போது யாக தேவதையைத் துதிக்கும் பொருட்டு ஸாமவேதத்தைப் பாடும்போது ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதநம் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரித்துப் பாடுவர்) இவற்றுள் உத்கீதம் என்பது மற்றவை போன்று உள்ளபோதிலும், சாந்தோக்ய உபநிஷத்தில் - ஸாம்ந உத்கீதோ ரஸ: – சாமத்திற்கு உத்கீதம் ரஸமாக உள்ளது – என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. இதன் காரணம் என்ன? “ஓம்” என்ற ப்ரணவத்தை முன்னிட்டுக் கொண்டு இசைக்கப்படுவதாக உள்ளது உத்கீதம் என்பதால் ஆகும் (குறிப்பு - உத்கீதத்தைப் பாடும்போது ஒவ்வொரு பதங்களுடனும் “ஓம்” என்பதைச் சேர்க்கவேண்டும். உதாரணமாக – ஓம் தத்ஸ விதுர்வரேண்யம், ஓம் பர்கோ தேவஸ்ய தீமஹி, ஓம் தியோ யோ ந: ப்ரசோதயாத் – என்பது காண்க. இதில், “ஓம்” என்பது ஒவ்வொரு பதத்தின் உறுப்பாக உள்ளது காண்க. இதனால்தான் “ஓம்” என்னும் அக்ஷரமானது உத்கீதத்தின் அவயவம் – உறுப்பு என்று கூறப்படுகிறது). ஆகவே அத்தகைய உத்கீதத்தின் உறுப்பான ப்ரணவம், சாந்தோக்ய உபநிஷத்தில் - ஓம் இதி ஏதத் அக்ஷரம் உத்கீதம் உபாஸீத - “ஓம்” என்ற பரணவத்தையே உத்கீதம் என்று உபாஸிக்கக்கடவன் - என்று முதலில் எடுக்கப்பட்டது (சாந்தோக்ய உபநிஷத்தின் முதல் வரியே - ஓம் இதி ஏதத் அக்ஷரம் உத்கீதம் உபாஸீத – என்பதாகும்). இது போன்றே திருவாய்மொழியைத் தொடங்கும்போது “ஓம்” என்ற எழுத்து கொண்டு தொடங்கினால் “வேதம் போன்று இந்தத் திருவாய்மொழியும் ஒரு சிலருக்கு மட்டுமே ஓதத்தக்கது, எல்லாரும் கூற இயலாது” என்று கருத வாய்ப்பு உள்ளது; இதன் காரணமாகவே ப்ரணவத்தின் தொகை வடிவமான “ஓம்” என்று அமைக்காமல், “அ, உ, ம” என்ற மூன்று

அக்ஷரங்களாகப் பிரிக்கும் முறையை எடுத்துக் கொண்டார்; அவற்றை முதல் பாசுரத்தின் முதல், இரண்டாவது, மூன்றாவது வரிகளின் தொடக்க எழுத்தாக அமைக்கத் திருவுள்ளம் பற்றினார். இவ்விதம் "அ, உ, ம" என்று அமைத்தாலும் அதனைக் கூட்டிக் கொண்டு "ஓம்" என்று பொருள் கொண்டு, "திருவாய்மொழி அனைவருக்கும் தகுதியானது அல்ல" என்று கூறிவிடுவர் என்று எண்ணியவராக, "அ" என்பதை முதலடியில் வைக்காமல், "உ" என்பதை முதலடியில் வைத்து, "அ, உ, ம" என்பதை "உ, அ, ம" என்று மாற்றி அமைத்தார்.

**வ்யாக்யானம் -** இப்படி உகாரம் முதலாகவெடுத்ததுக்கு ப்ரயோஜநம் அந்த ச்சாந்தோக்ய ரஸமான உத்கீதத்துக்கு நோக்கான "உத்" என்கிற திருநாமம் இதுக்கு உள்ளுறையானமை தோன்ற உகாராதியாக வெடுத்து "உயர்ந்தே" என்று தகாராந்தமாக முடிக்கை. இதுதான் மேலில் சூர்ணையிலே வ்யக்தம். ஆக இப்படி அக்ஷர த்ரய ரூபேண ப்ரணவத்தை ப்ரதமத்திலே கீர்த்தியா நிற்கச்செய்தே ஏததபிப்ராயேண அக்ஷரக்ரமத்தை மாறாடி.

**விளக்கம் -** ("அ, உ, ம" என்பதை மாற்றி அமைக்கவேண்டும் என்றால், முதலடியில் "ம" என்பதை வைத்திருக்கலாமே, "உ" என்று வைத்ததன் காணம் ஏதும் உண்டோ என்ற கேள்வி எழ அதற்கு விடை அருளிச்செய்கிறார்). "உ" என்ற எழுத்தை முதலில் அமைத்ததன் காரணம், சாந்தோக்ய உபநிஷத்தின் ஆதரமான உத்கீதம் என்பதற்குத் தொடக்க எழுத்துக்களான "உத்" என்பதிலேயே திருவாய்மொழி அடங்கிவிடுகிறது என்பதை உணர்த்தவே, "உ" என்பதை முதலில் வைத்து "உயர்வற" என்று தொடங்கினார். "உத்" என்பதில் உள்ள "உ" என்பது இவ்விதம் முதல் எழுத்தானது போன்று, "த்" என்ற தகாரம் திருவாய்மொழி (10-10-11) - உயர்ந்தே – என்பதில் இறுதி எழுத்தாக உள்ளது. இந்தக் கருத்து இந்தச் சூர்ணையில் விளங்குகிறது. இப்படியாக மூன்று எழுத்துக்களுடைய கூட்டாக உள்ள "ஓம்" என்ற ப்ரணவத்தைத் திருவாய்மொழியின் தொடக்கத்தில் வைத்தவர், மேலே கூறப்பட்ட கருத்தினை உணர்த்துவதற்காக எழுத்துக்களை மாற்றி அமைத்தார்.

**வ்யாக்யானம் -** (சரமகதி முடிவாக) அதாவது ச்சாந்தோக்ய மத்யே சொன்ன அர்ச்சிராதியான சரமகதியை "சூழ்விசும்பணிமுகிலிலே" பேசுகையாலே சரமகதியை முடிவாகக் கொண்டென்கை. இத்தை சரமகதியென்கிறது – கர்ப்ப யாம்ய தூமாதிகள் போலன்றிக்கே எல்லைநிலமான முக்திமார்க்கமாகையாலே. (தொண்டர்க்கமுதென்ன


**Email:**sridharan_book@yahoo.co.in

தேவாந்நமாக்கி) அதாவது, அந்த ஸாமம், "ஏதத் ஸாம காயந்நாஸ்தே" என்கிறபடியே பகவதநுபவ ஜநித ஹர்ஷத்துக்குப் போக்கு வீடாக, "ஹாவு ஹாவு ஹாவு" இத்யாதிப்படியே ஸாமகாநாம் பண்ணி, "அஹமந்நாத:" என்று களிக்கும் நித்யமுக்தரான தேவர்களுக்கு போக்யமாமாபோலே, "தொண்டர்க்கமுதுண்ண" என்கிறபடியே இதுவும் பகவதநுபவ சபலர்க்கு போக்யமாம்படியாக்கி யென்கை.

**விளக்கம்** - (சரமகதி முடிவாக) - சாந்தோக்ய உபநிஷத்தின் நடுப்பகுதியில் கூறப்பட்ட அர்ச்சிராதி மார்க்கம் என்பதான இறுதி கதியை இவர் திருவாய்மொழி (10-9-1) - சூழ்விசும்பு – என்பதில் கூறுவதால், இறுதியை இறுதியாகவே அருளிச்செய்தார் என்று கொள்ளவேண்டும். அர்ச்சிராதிகதியை ஏன் இறுதி மார்க்கம் என்கிறார்? கர்ப்பகதி - மீண்டும் கருவில் புகுதல், யாம்யகதி – மீண்டும் யமலோகம் செல்லுதல், தூமாதிகதி – மீண்டும் ஸ்வர்க்கம் புகுதல் போன்று அல்லாமல், இறுதியாக உள்ள முக்தி மார்க்கம் என்பதால் இவ்விதம் உரைத்தார். (தொண்டர்க்கமுதென்ன தேவாந்நமாக்கி) - தைத்திரீயத்தில் - ஏதத் ஸாம காயந்நாஸ்தே – ஸாமவேதத்தைக் கானம் செய்து மகிழ்கிறான் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனை அனுபவிக்கும் அனுபவம் மூலம் ஏற்படும் பரமானந்தத்தை வெளிப்படுத்துவிதமாக "ஹாவு ஹாவு ஹாவு" என்ற முறையில் ஸாமகானம் செய்து, தைத்திரீயத்தில் - அஹமந்நாத: - நான் பரமாத்மாவை அனுபவிப்பவன் – என்று களிக்கின்ற நித்யஸூரிகளுக்கு ஸாமவேதமானது இனிமையான பொருளாக உள்ளது போன்று, திருவாய்மொழி (9-4-9) - தொண்டர்க்கமுதுண்ண - என்பதற்கு ஏற்ப திருவாய்மொழியும் பகவானை அனுபவிப்பதில் ஆசை கொண்டவர்களுக்கு இன்பமாக இருக்கும் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (மஹாகோஷ நல்வேதவொலிபோலே மஹாத்யயநமென்னப் பாடுகையாலே) அதாவது – "ஸர்வேப்யோபி ஹி வேதேப்ய: ஸாமகோஷோ மஹாநபூத்; அந்வகோஷய தத்யர்த்தம் தேந ப்ரஹ்மாண்ட மண்டப:" என்றும், "பாடு நல்வேதவொலி" என்றும் சொல்லுகிற பெரிய கோஷத்தையுடைத்தான ஸாமவேதம்போலே பெரிய திருவத்யயன மென்னப்பாடுகையாலே யென்கை. (இத்தை ச்சாந்தோக்ய ஸமமென்பார்கள்) ஆக இப்படி கீழ்ச்சொன்ன ஆகாரங்களைக் கொண்டு இத்தை ச்சந்தோக ஸாமத்தில் உபநிஷத் பாகமான ச்சாந்தோக்யத்துக்கு ஸமமென்று அபியுக்தர்கள் சொல்லுவர்களென்கை.

**விளக்கம்** - (மஹாகோஷ நல்வேதவொலிபோலே மஹாத்யயநமென்னப் பாடுகையாலே) - ஸர்வேப்யோபி ஹி வேதேப்ய: ஸாமகோஷோ மஹாநபூத்; அந்வகோஷய தத்யர்த்தம் தேந ப்ரஹ்மாண்ட மண்டப: - அனைத்து வேதங்களைக் காட்டிலும் ஸாமவேதத்தின் ஒலியானது அதிகமானது; அதன் ஒலி காரணமாக நடுவில் இருந்த மிகப் பெரிய மண்டபமும் எதிரொலித்தது – என்றும், திருவாய்மொழி (5-9-3) – பாடு நல்வேதவொலி - என்றும் கூறப்படுவதான மிகுந்த ஒலியுடன் கூடிய ஸாமவேதம் போன்று இந்தத் திருவாய்மொழியை "பெரிய திருவத்யயனம்" என்று பாடுவர் [திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி உற்சவத்தின்போது இராப்பத்து காலத்தில் திருவாய்மொழியைக் கானம் செய்வதை அருளிச்செய்கிறார்]. (இத்தை ச்சாந்தோக்ய ஸமமென்பார்கள்) - இப்படியாகக் கூறப்பட்ட பலவிதமான தன்மைகளின் அடிப்படையில் திருவாய்மொழியை சந்தோக ஸாமத்தின் உபநிஷத் பாகமான சாந்தோக்ய உபநிஷத்துக்குச் சமம் என்று சான்றோர்கள் கூறுவர்கள் என்று கருத்து.

53. புரவியேழுருகாலுடைய தேரிலே திருச்சக்கர மொத்துக் கால சக்கரச்செங்கோல் நடாவி ஜ்யோதிச்சக்ர வொளிசுருக்கி அக்நீஷோமீயதே ஜோம்ருதத்துக் கூற்றும் மந்தேஹர்க்குச் செந்தீயும் முக்தி மார்க்கத்தலைவாசலும் கண்ணாவான் கண்ணில் பிறந்த கண்மணியும் த்ரயீமயமுமான மண்டலத்திலே தண்டாமரை சுமக்கத் தோள்வளையும் குழையும் திருச்செய்ய முடியு மாரமும் படையும் திகழும் பொன்மேனியும் செஞ்சுடர்த் தாமரைக் கண்ணுமாய் அணிநிறமூர்த்தி யீதென்னும்படி இரண்டையும் தன்னிறமாக்குகிற செய்யாளான வித்யையோடே அருக்கன் மேவின ஸதாத்யேய தேஜஸ்ஸின் ஸாமர ஸோத்காந நாம முள்ளுறையான ஆத்யந்தங்களாலே ஓராயிரமாமவற்றிலே ஒன்றை ஆயிரமுகத்தினாலருளின தீர்த்தம்போலே தீர்த்தங்களாயிரமுமாக விஸ்தரிகிறாரென்று வேதகுரூபதேசம்.

**அவதாரிகை** – "உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி" என்று கீழ்ச்சொன்னதின் கருத்தை ஆப்தோபதேசமுகேந அறிவிக்கிறார் மேல் – (புரவியேழித்யாதி சூர்ணையாலே).

**விளக்கம்** - "உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி" என்று கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்தினை நல்லதை மட்டுமே உபதேசிப்பவர்களுடைய உபதேசம் மூலமாக இந்தச் சூர்ணையில் அறிவிக்கிறார் (இந்தச் சூர்ணை சாந்தோக்ய உபநிஷத்தில் - ய

ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: - என்று தொடங்கி, தஸ்ய உத் இதி நாம – என்பது முடிய உள்ளவற்றின் சுருக்கமே ஆகும் என்பர்).

**வ்யாக்யானம்** - (புரவியேழொருகாலுடைய தேரிலே) அதாவது “காரார்புரவியேழ் பூண்ட” என்றும், “ஒருகாலுடைய தேர்” என்றும் சொல்லுகிறபடியே காயத்ரீ, ப்ருஹதீ, உஷ்ணிக், ஜகதீ, த்ரிஷ்டுப், அநுஷ்டுப், பங்க்தி: என்கிற ஏழு ச்சந்தஸ்ஸுக்களும் ஏழு குதிரைகளாய்க் கொண்டு வஹிக்கையாலே ஸப்தாச்வ யுக்தமாய், காலசக்ரமயமான ஏக சக்ரத்தையு முடையதான ரதத்திலே யென்கை. “ஸப்த யுஞ்ஜந்தி ரத மேக சக்ரம்” என்றும், “ஹயாச்ச ஸப்த சந்த்ரம்ஸி தேஷாம் நாமாநி மே ச்ருணு, காயத்ரீ ச ப்ருஹத் யுஷ்ணிக் ஜகதீ த்ரிஷ்டுபேவ ச, அநுஷ்டுப் பங்க்திரித்யுக்தா: ச்சந்தாம்ஸி ஹரயோ ரவே” என்று சொல்லக் கடவதிறே. “ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா” என்றதுக்கு ஹ்ருதயம் ஏததநுகுணமாக வ்யாக்க்யாதமான விடங்களிலே கண்டுகொள்வது. “த்ரிநாபிமதி பஞ்சாரே ஷண்ணேமிந்யக்ஷயாத்மகே, ஸம்வத்ஸரமயே க்ருத்ஸ்நம் காலசக்ர ப்ரதிஷ்டிதம்” என்கிறபடியே சாதுர்மாஸ்ய த்ரயாத்மகமான நாபியை யுடைத்தாய் ஸம்வத்ஸரம், பரிவத்ஸரம், இதாவத்ஸரம், அநுவத்ஸரம், இத்வத்ஸரம் என்று சொல்லப்பட்ட அஞ்சு வத்ஸரத்தையும் அரங்களாகவுடைத்தாய், வஸந்த க்ரீஷ்ம வர்ஷா சரத் தேமந்த சிசிரங்களாகிற ஆறு ருதுக்களையும் நேமியாக வுடைத்தாய், ப்ரவாஹ பரிவ்ருத்தியாலே அக்ஷயரூபமாயிருக்கிற காலசக்ரத்திலே ஸர்வம் ப்ரதிஷ்டித மென்கையாலே இந்த ஏக சக்ரம் காலசக்ரபரமாயிறே யிருப்பது. ஆக இப்படி யிருந்துள்ள ஸப்தாச்வங்களையும் ஏக சக்ரத்தையு முடைத்தாகையாலே இதரவ்யாவ்ருத்த வைபவமான ரதத்திலே யென்றபடி.

**விளக்கம்** - (புரவியேழொருகாலுடைய தேரிலே) - சிறிய திருமடல் – காரார்புரவியேழ் பூண்ட - என்றும், பெரியதிருமொழி (5-7-8) - ஒருகாலுடைய தேர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப காயத்ரீ, ப்ருஹதீ, உஷ்ணிக், ஜகதீ, த்ருஷ்டுப், அநுஷ்டுப் மற்றும் பங்க்தி: என்னும் ஏழு சந்தஸ்ஸுகளையும் ஏழு குதிரைகளாக உடையதாகவும், காலசக்ரம் என்பதான ஒரு சக்கரத்தை உடையதாகவும் உள்ள ரதத்தில் என்று பொருள். ஸப்த யுஞ்ஜந்தி ரத மேக சக்ரம் – ஒரு சக்ரத்தைக் கொண்ட ரதத்தை ஏழு குதிரையில் தாங்குகின்றன - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-8-4) - ஹயாச்ச ஸப்த சந்த்ரம்ஸி தேஷாம் நாமாநி மே ச்ருணு, காயத்ரீ ச ப்ருஹத் யுஷ்ணிக் ஜகதீ த்ரிஷ்டுபேவ ச, அநுஷ்டுப் பங்க்திரித்யுக்தா: ச்சந்தாம்ஸி ஹரயோ ரவே - குதிரைகளாக உள்ளவை ஏழு ஸந்தஸ்ஸுகள்; அவற்றின்

பெயர்களை நான் உரைக்கக் கேட்பாயாக; காயத்ரீ, ப்ருஹதீ, உஷ்ணிக், ஜகதீ, த்ருஷ்டுப், அநுஷ்டுப், பங்க்தி: என்றுள்ள ஏழும் சூரியனுக்குக் குதிரைகள் – என்றும் கூறியது காண்க. ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா – ஏழு பெயர்கள் கொண்ட ஒரு குதிரை சூரியனின் தேரைத் தாங்குகிறது – என்ற வரிக்கான விளக்கத்தை அந்த இடத்தில் காண்க. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-8-3) - த்ரிநாபிமதி பஞ்சாரே ஷண்ணேமிந்யக்ஷயாத்மகே, ஸம்வத்ஸரமயே க்ருத்ஸ்நம் காலசக்ர ப்ரதிஷ்டிதம் - மூன்று நாபிகள் (சக்கரத்தின் நடுவில் உள்ள குடம் போன்ற அமைப்பு நாபி ஆகும்), ஐந்து அரங்கள் (அரக்கால்கள்), ஆறு நேமிகள் (வட்டை) கொண்டதாக உள்ள கால சக்கரம் - என்று கூறுவதற்கு ஏற்ப நான்கு நான்கு மாதங்களாகப் பிரிக்கப்பட்ட மூன்று பாகங்கள் கொண்ட நாபிகள்; ஸம்வத்ஸரம், பரிவத்ஸரம், இதாவத்ஸரம், அநுவத்ஸரம், இத்வத்ஸரம் என்றுள்ள ஐந்து ஆண்டுகள் அரக்கால்கள்; இளவேனில், முதுவேனில், மழைக்காலம், கூதிர்காலம், முன்பனி, பின்பனி என்றுள்ள ஆறு ருதுக்கள் நேமிகள் என்றுள்ளதும்; எப்போதும் பெருகியபடி உள்ள வெள்ளம் போன்ற அழிவற்றதானதும் ஆகிய காலசக்கரத்தில் அனைத்தும் அடங்கி உள்ளன என்று கூறுவதால், ஒரே சக்கரம் கொண்ட இது "கால சக்கரம்" என்று கூறும்படி உள்ளது. ஆக, இவ்விதம் உள்ள ஏழு குதிரைகளையும் ஒரு சக்கரத்தையும் கொண்டதால் மற்றவற்றைக் காட்டிலும் வேறுபட்ட மேன்மை உடைய தேரில் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - இனிமேல் மண்டலத்தை வர்ணிக்கிறது, (திருச்சக்கரமொத்து) அதாவது "அம்மேருவில் செஞ்சுடரோன் திருமல் திருக்கைத் திருச்சக்கரமொக்கும்" என்னும்படி வ்ருத்தாகாரதையாலும் தேஜோவிசேஷத்தாலும் திருவாழியோ டொத்திருக்கை. (காலசக்கரச் செங்கோல் நடாவி) அதாவது "திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனுமிருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" என்கிறபடியே உபயவிபூதியிலும் ஈச்வரன் தன் ஆஜ்ஞையை நிர்வஹிக்கைக்கு உபகரணமான திருவாழியைப்போலே "கால சக்கரத்தாய்" என்னும்படி காலசக்ர நிர்வாஹகனானவனுடைய காலசக்ர விஷயமான ஆஜ்ஞையை "தனிவளர் செங்கொல் நடாவு" என்கிறபடியே நடத்துகை. (ஜ்யோதிச்சக்ர வொளிசுருக்கு) அதாவது "சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்" என்னும்படி ஸர்வதோதிக்கமாக வ்யாப்தமான ஸ்வதேஜ: ப்ரகர்ஷத்தாலே "துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி" இத்யாதிப்படியே நக்ஷத்ராதியான ஜ்யோதிர்கணங்களின் தேஜஸ்ஸை ஸங்கோசிப்பிக்கை. (அக்நீஷோமீய தேஜோம் ருதத்துக் கூற்றும்) அதாவது "அக்நிம் வாவாதித்யஸ் ஸாயம் ப்ரவிசதி, தஸ்மாதக்நிர் தூராந் நக்தம் தத்ருசே, உபே ஹி


**Email:**sridharan_book@yahoo.co.in

தேஜஸீ ஸம்பத்யேதே” என்றும், “ப்ரபா விவஸ்வதோ ராத்ரௌ அஸ்தம் கச்சதி பாஸ்கரே, விசத்யக்நிமதோ ராத்ரௌ வஹ்நிர் தூராத் ப்ரகாசதே” என்றும் சொல்லுகிறபடியே அஸ்தமய ஸமயத்திலே தன்னுடைய ப்ரபையை அக்நியிலே ப்ரவேசிப்பித்து ராத்ரியில் அக்நிக்கு தேஜோவ்ருத்தியை யுண்டாக்குகையாலே அக்நியினுடைய தேஜஸ்ஸூக்கு ஊற்றென்கிறது. “க்ஷீணம் பீதம் ஸுரைஸ் ஸோமம் ஆப்யாயயதி தீப்திமாந், மைத்ரேயைககலம் ஸந்தம் ரச்மிநைகேந பாஸ்கர: க்ரமேண யேந பீதோஸௌ தேவைஸ் தேந நிசாகரம், ஆப்யாயத்யநுதிதம் பாஸ்கரோ வாரிதஸ்கர:” என்கிறபடியே அபர பக்ஷத்தில் ப்ரதமை தொடங்கி சதுர்தசி யளவும் நித்யம் ஒரு கலையாக அம்ருதமயமான பதினாலு கலைகளையும் தேவர்கள் புஜித்துப் பதினஞ்சாவது கலையை பஞ்சதசியினன்று அபராஹ்ணத்திலே பித்ருக்கள் புஜிக்க, இப்படி க்ஷீணனான சந்த்ரனுக்கு பூர்வபக்ஷ ப்ரதமை தொடங்கி நித்யம் ஒரு கலையாக பஞ்சதசியளவும் பதினஞ்சு கலைகளையும் தன்னுடைய ரச்மிகளாலே வர்த்திப்பிக்கையாலே ஸோமனுடைய அம்ருதத்துக்கு ஊற்றென்கிறது. ஆக இப்படி அக்நியினுடைய தேஜஸ்ஸூக்கும் ஸோமனுடைய அம்ருதத்துக்கும் உத்பத்தி ஸ்தானமாயிருக்கு மென்கை.

**விளக்கம்** – அடுத்து சூரியமண்டலத்தை வர்ணிக்கிறார். (திருச்சக்கரமொத்து) - திருவிருத்தம் (88) - அம்மேருவில் செஞ்சுடரோன் திருமல் திருக்கைத் திருச்சக்கரமொக்கும் - என்று கூறுவதற்கு ஏற்ப வட்டமான வடிவம் மற்றும் மிகுந்த ஒளி ஆகியவற்றின் காரணமாகச் சக்கரத்தாழ்வான் போன்று உள்ளது. (காலசக்கரச் செங்கோல் நடாவி) - திருவிருத்தம் (33) - திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனுமிருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர் - என்பதற்கு ஏற்ப லீலாவிபூதி மற்றும் நித்யவிபூதி ஆகிய இரண்டிலும் ஸர்வேச்வரன் தனது ஆணைகளை நடைமுறைப்படுத்த உபயோகிக்கும் கருவியாக உள்ள சக்கரத்தாழ்வான் போன்று, திருவாய்மொழி (7-2-7) – கால சக்கரத்தாய் - என்பதற்கு ஏற்ப காலசக்கரத்தை செலுத்துபவனுடைய காலசக்கரத்தைக் குறித்துள்ள ஆணைகளை திருவிருத்தம் (13) – தனிவளர் செங்கொல் நடாவு – என்பதற்கு ஏற்ப சூரியனாகிற தான் நடத்தியபடி இருத்தல். (ஜ்யோதிச்சக்ர வொளிசுருக்கு) - திருப்பள்ளியெழுச்சி (3) - சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம் - என்பதற்கு ஏற்ப, அனைத்து திசைகளிலும் நிறைந்து நிற்கின்ற தனது ப்ரகாசத்தின் மிகுதி காரணமாக, திருப்பள்ளியெழுச்சி (3) - துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி - என்பதற்கு ஏற்ப நக்ஷத்திரங்கள் போன்றவற்றின் ஒலியை மங்கும்படியாக செய்த. (அக்நீஷோமீய


Email:sridharan_book@yahoo.co.in

தேஜோம் ருதத்துக் கூற்றும்) - அக்நிம் வாவாதித்யஸ் ஸாயம் ப்ரவிசதி, தஸ்மாதக்நிர் தூராந் நக்தம் தத்ருசே, உபே ஹி தேஜஸீ ஸம்பத்யேதே – சூரியன் அந்திப்பொழுதில் அக்னியில் நுழைகிறான், ஆகவே அக்னியானது தூரத்தில் இரவில் காணப்படுகிறது, இந்த இரண்டு ஒளிகளும் சேர்கின்ற - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-8-20) - ப்ரபா விவஸ்வதோ ராத்ரௌ அஸ்தம் கச்சதி பாஸ்கரே, விசத்யக்நிமதோ ராத்ரௌ வஹ்நிர் தூராத் ப்ரகாசதே – சூரியன் அஸ்தமிக்கும்போது சூரியனுடைய ப்ரகாசம் அக்னியில் புகுகின்றது, ஆகவே இரவில் அக்னியானது தூரத்தில் ப்ரகாசிக்கிறது - என்றும் கூறுவதற்கு ஏற்ப சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் தனது ப்ரகாசத்தை அக்னியில் புகுத்தி, இரவில் அக்னிக்கு ஒளி உண்டாக்குவதால் சூரியனை “அக்னியின் ஊற்று” என்கிறார். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-12-3) – க்ஷீணம் பீதம் ஸுரைஸ் ஸோமம் ஆப்யாயயதி தீப்திமாந், மைத்ரேயைககலம் ஸந்தம் ரச்மிநைகேந பாஸ்கர: க்ரமேண யேந பீதோஸௌ தேவைஸ் தேந நிசாகரம், ஆப்யாயத்யநுதிதம் பாஸ்கரோ வாரிதஸ்கர: - மைத்ரேயரே! தேவர்களால் அமிர்தத்தை உண்ணப்பட்டவனும், அதனால் தனது கலைகள் குறைந்தவனும், ஒரு கலை மட்டுமே உள்ளவனும் ஆகிய சந்த்ரனை, ஒளி பொருந்திய சூரியன் தனது ஒரு கிரணம் மூலம் வளரும்படியாகச் செய்கிறான்; தேவர்களால் எவ்விதம் ஒவ்வொரு நாளும் உண்ணப்பட்டானோ அதே போன்று ஒவ்வொரு நாளும் சூரியனால் வளர்க்கப்படுகிறான் – என்பதற்கு ஏற்ப, க்ருஷ்ண பக்ஷத்தில் ப்ரதமை தொடங்கி சதுர்தசி முடிய ஒவ்வொரு நாளும் அமிர்தமயமாக உள்ள சந்த்ரனின் பதினான்கு கலைகளைத் தேவர்கள் உண்கிறார்கள். பதினைந்தாவது கலையை அமாவாஸ்யை நாளில் மாலை நேரத்தில் பித்ருக்கள் உண்கிறார்கள். இப்படியாகத் தேய்ந்த சந்த்ரனை, சுக்லபக்ஷம் ப்ரதமை தொடங்கி அன்றாடம் ஒவ்வொரு கலையாக பௌர்ணமி முடிய பதினைந்து கலைகளைத் தனது கிரணங்களால் வளரச் செய்வதால் சூரியனை “அக்னியின் தேஜஸ் மற்றும் சந்த்ரனுடைய அமிர்தம் ஆகிய இரண்டுக்கும் சூரியனே பிறப்பிடமாக உள்ளான்” என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (மந்தேஹர்க்குச் செந்தீயும்) அதாவது மந்தேஹரென்பார் சில ராக்ஷஸர் ஸந்த்யா ஸமயத்திலே ஆதித்ய ரதத்தைப் பற்றிக்கொண்டு போகவொட்டாதே ஆதித்யனோடே மஹாயுத்தம் பண்ணி அவனைக் கொல்லத் தேடுவர்களாய், அவ்வளவிலே ப்ராஹ்மணர் காயத்ர்யபிமந்த்ரிதைகளான அப்புக்களை அர்க்ய ரூபேண ஊர்த்த்வமாக ப்ரக்ஷேபிக்க, அந்த காயத்ரீபூதார்க்கய சக்தியாலே ஆதித்யமண்டலத்திலே

 **Email:**sridharan_book@yahoo.co.in

ஜ்வலித்துக்கொண்டு தோற்றின சிவந்தவக்நியிலே விழுந்து முடிந்து போவர்களென்று, “மீண்டுவற்று ளெரிகொள் செந்தீவீழசுரரைப்போல” என்றாழ்வாரருளிச் செய்கையாலே மந்தேஹர்க்கு ஜ்வலிக்கிற அக்நியாயிருக்கு மென்கிறது. ராக்ஷஸரை அஸுரரென்று ஆழ்வாரருளிச் செய்தது – “தானவனாகம் தரணியில் புரள” என்றும், “தானவன் வாளரக்கன்” என்றும் சொன்னவைபோலே ஆஸுரப்ரக்ருதிகளான ஆகாரத்தாலே. “ததுஹ வா ஏதே ப்ரஹ்மவாதிந: பூர்வாபிமுகா: ஸந்த்யாயாம் காயத்ரியாபிமந்த்ரிதா ஆப ஊர்த்த்வம் விக்ஷிபந்தி” என்றும், “ஸந்த்யாகாலே து ஸம்ப்ரரப்தே ரௌத்ரே பரமதாருணே மந்தேஹா ராக்ஷஸா கோராஸ் ஸூர்ய மிச்சந்தி காதிதும், ப்ரஜாபதிக்ருதச் சாபஸ் தேஷாம் மைத்ரேய ரக்ஷஸாம், அக்ஷயத்வம் சரீராணாம் மரணம் ச திநே திநே, ததஸ் ஸூர்யஸ்ய தேஷாம் வை யுத்தமாஸீத் ஸுதாருணம், ததோ த்விஜோத்தமாஸ்தோயம் ப்ரக்ஷிபந்தி மஹாமுநே ஓங்கார ப்ரஹ்ம ஸம்யுக்தம் காயத்ர்யா சாபி மந்த்ரிதம், தேந தஸ்யந்தி தி தே பாபா வஜ்ரபூதேந வாரிணா” என்றும் ப்ராஹ்மணர் இங்கு ப்ரக்ஷேபிக்கிற அர்க்க்யஜலந்தானே வஜ்ரீபூதமாய்க்கொண்டு அந்த ராக்ஷஸரை நிரஸிக்குமென்று ச்ருதியிலும் புராணத்திலும் சொல்லுகையாலும், அந்த அர்க்க்ய ஜலம் ஆதித்ய மண்டலத்தையும் ஜ்வலிப்பித்து அணுகச் செல்லில் நசிக்கும்படி யாக்குமென்றும் சொல்லலாமிறே.

**விளக்கம்** - (மந்தேஹர்க்குச் செந்தீயும்) - “மந்தேஹர்” என்றால் ராக்ஷஸர்களில் ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் ஸந்த்யாகாலத்தில் சூரியனின் தேரைப் பிடித்துக் கொண்டு போகவிடாமல் தடுத்து அவனோடு பெரிய யுத்தம் செய்து அவனைக் கொல்ல முயல்வார்கள். அப்போது அந்தணர்கள் (ஸந்த்யாவந்தனம் செய்யும்போது) காயத்ரி மந்த்ரம் கொண்டு ஜபிக்கப்பட்ட தண்ணீரை மேலே அர்க்க்ய ரூபத்தில் விடுவார்கள். அந்த காயத்ரி மந்த்ர ஜப அர்க்யத்தின் சக்தி காரணமாக, சூரிய மண்டலத்தில் சிவந்த அக்னியானது மிகுந்த ப்ரகாசத்துடன் ஓங்கி எழுகிறது. அதில் அவர்கள் விழுந்து மடிவார்கள். திருவிருத்தம் (82) - மீண்டுவற்று ளெரிகொள் செந்தீவீழசுரரைப்போல - என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளதன் காரணமாக மந்தேஹர்க்கு எரியும் அக்னியாகவும் சூரியன் உள்ளான் என்று கருத்து. ராக்ஷஸர்களை அஸுரர்கள் என்று ஆழ்வார் அருளிச்செய்தது எப்படியென்றால், பெரியதிருமொழி (1-4-1) - தானவனாகம் தரணியில் புரள - என்றும், பெரியதிருமொழி (2-2-2) - தானவன் வாளரக்கன் - என்றும் அருளிச்செய்தது போன்று அசுரத்தன்மை கொண்டவர்கள் என்பதால் ஆகும். ததுஹ வா

ஏதே ப்ரஹ்மவாதிந: பூர்வாபிமுகா: ஸந்த்யாயாம் காயத்ரியாபிமந்த்ரிதா ஆப ஊர்த்த்வம் விக்ஷிபந்தி – இந்தக் காரணத்தினால்தான் வேதத்தை அறிந்தவர்கள் ஸந்த்யாகாலத்தில் காயத்ரியால் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை அர்க்யமாக மேலே எறிகிறார்கள் - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-8-48) – ஸந்த்யாகாலே து ஸம்ப்ரரப்தே ரௌத்ரே பரமதாருணே மந்தேஹா ராக்ஷஸா கோராஸ் ஸூர்ய மிச்சந்தி காதிதும், ப்ரஜாபதிக்ருதச் சாபஸ் தேஷாம் மைத்ரேய ரக்ஷஸாம், அக்ஷயத்வம் சரீராணாம் மரணம் ச திநே திநே, ததஸ் ஸூர்யஸ்ய தேஷாம் வை யுத்தமாஸீத் ஸுதாருணம், ததோ த்விஜோத்தமாஸ்தோயம் ப்ரக்ஷிபந்தி மஹாமுநே ஓங்கார ப்ரஹ்ம ஸம்யுக்தம் காயத்ர்யா சாபி மந்த்ரிதம், தேந தஸ்யந்தி தி தே பாபா வஜ்ரபூதேந வாரிணா - பயங்கரம் மற்றும் கொடூரம் நிறைந்த ஸந்த்யாகாலம் வந்தவுடன் தீயவர்களான மந்தேஹர் என்ற ராக்ஷஸர்கள் சூரியனைக் கொல்ல எண்ணுகிறார்கள். மைத்ரேயரே! சரீரத்தில் எந்தவிதமான குறையும் இல்லாத தன்மை மற்றும் ஒவ்வொரு நாளும் மரணம் என்ற இரண்டும் அவர்களுக்கு நான்முகனால் அளிக்கப்பட்ட சாபமாகும்; ஆகவே சூரியனுக்கும் அவர்களுக்கும் யுத்தம் தொடங்கியது; இதற்காகவே அந்தணர்களில் சிறந்தவர்கள் "ஓம்" என்பதுடன் இணைந்ததான காயத்ரி மந்த்ரம் கொண்டு ஜபிக்கப்பட்ட நீரை அர்க்யம் என்று மேலே எறிகிறார்கள். வஜ்ரமாக மாறும் அந்த நீரால் அந்த ராக்ஷஸர்கள் மடிகிறார்கள் – என்றும் கூறுவது காண்க. அந்தணர்கள் மேலே தூக்கி எறிகின்ற அர்க்யஜலம் வஜ்ரமாக மாறி, அந்த ராக்ஷஸர்களை அழிக்கும் என்று ச்ருதியிலும் புராணத்திலும் கூறப்படுவதாலும், அந்த அர்க்யஜலமானது ஆதித்ய மண்டலத்தையே ப்ரகாசம் அடையச் செய்வதுடன், அருகில் சென்றால் அழியும்படியும் செய்யவல்லது என்று கூறலாம்.

**வ்யாக்யானம்** - (முக்திமார்க்கத் தலைவாசலும்) அதாவது, அர்ச்சிராதிகதியாகிற முக்தி மார்க்கத்தாலே போமளவில், "அர்ச்சிஷமேவாபி ஸம்பவந்தி" இத்யாதிப்படியே அர்ச்சி: ப்ரப்ருதிகளைச் சென்று கிட்டிப் போகிற மாத்ரமன்றிக்கே, "பித்வா ஸூர்யஸ்ய மண்டலம்" என்றும், "தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு", "வெங்கதிர்ப்பரிதி வட்டத்தூடுபோய்" என்றும் சொல்லுகிறபடியே இம்மண்டலத்தூடே போகையாலும், அண்டகடாஹத்தை பேதித்துப் புறப்படுமதுக்கு முற்பட்டதாகையாலும் இத்தை இம்மார்க்கத்துக்குத் தலைவாசலென்கிறது.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (முக்திமார்க்கத் தலைவாசலும்) - பரமபதம் போகும் ஜீவாத்மா அர்ச்சிராதிகதி என்பதான முக்தி மார்க்கத்தில் செல்லும் போது, அர்ச்சிஷமேவாபி ஸம்பவந்தி - அர்ச்சிஷ் என்னும் பகல்பொழுது தேவதையை அடைகிறார்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப அர்ச்சிஷ் என்னும் தேவதையை அடைவது மட்டும் அல்லாமல், பித்வா ஸூர்யஸ்ய மண்டலம் - சூரியனுடைய மண்டலத்தைப் பிளந்துகொண்டு – என்றும், சிறிய திருமடல் - தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு - என்றும், பெரியதிருமொழி (4-5-10) - வெங்கதிர்ப்பரிதி வட்டத்தூடுபோய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, இந்தச் சூரிய மண்டலத்தின் வழியே செல்வதாலும், அண்டகடாஹத்தைப் பிளந்து கொண்டு செல்வதற்கும் முன்பு இது நிகழ்வதாலும், இந்தச் சூரியமண்டலத்தினை அர்ச்சிராதி மார்க்கத்தின் தலைவாசல் என்கிறார்.

**வ்யாக்யானம்** - (கண்ணாவான் கண்ணில் பிறந்த கண்மணியும்) – அதாவது "கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு", "சக்ஷுர் தேவநாமுத மர்த்யாநாம்" என்கிறபடியே ஸர்வர்க்டிம் த்ருஷ்டி பூதனான ஸர்வேச்வரன் கண்ணிலே "சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத" என்கிறபடியே ஜனிப்பதும் செய்து, "ஜகதேக சக்ஷுஷே" என்கிறபடியே ஜகத்துக்கு த்ருஷ்டிபூதமுமாயிருக்கு மென்கை. (த்ரயீமயமுமான மண்டலத்திலே) அதாவது, "த்ரயீமயாய" என்கிறபடியே வேதமயமாயிருக்கிற ஆதித்ய மண்டத்திலே யென்கை. இத்தால், "த்யேய: ஸதா ஸவித்ரு மண்டல மத்யவர்த்தீ நாராயண! ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட:, கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ ஹாரி ஹிரண்மயவபு: த்ருதசங்க சக்ர:" என்கிறவிதில் அவனெழுந்தருளி யிருக்கிற ஸவித்ரு மண்டலத்தை வர்ணித்தாராயிற்று.

**விளக்கம்** - (கண்ணாவான் கண்ணில் பிறந்த கண்மணியும்) - திருவாய்மொழி (1-8-3) - கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு - என்றும், யஜுர்வேதம் - சக்ஷுர் தேவநாமுத மர்த்யாநாம் - விண்ணில் உள்ளவர்களுக்கும் மண்ணில் உள்ளவர்களுக்கும் கண் ஆவான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைவருக்கும் கண்கள் போன்றுள்ள ஸர்வேச்வரனுடைய திருக்கண்ணில், புருஷஸூக்தம் - சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத - அவனுடைய கண்ணிலிருந்து சூரியன் உண்டானான் - என்பதற்கு ஏற்ப, சூரியன் பிறந்து, ஜகதேக சக்ஷுஷே - உலகத்திற்கு ஒரே கண்ணாக உள்ளவன் - என்று கூறுவதற்கு ஏற்ப உலகிற்குக் கண் போன்றவனாக உள்ளான். (த்ரயீமயமுமான மண்டலத்திலே) -


Email:sridharan_book@yahoo.co.in

த்ரயீமயாய - வேதமயமான - என்பதற்கு ஏற்றபடி, வேதமயமாகவே உள்ள ஆதித்ய மண்டலத்தில். இதன் மூலம், த்யேய: ஸதா ஸவித்ரு மண்டல மத்யவர்த்தீ நாராயண! ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட:, கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீட ஹாரி ஹிரண்மயவபு: த்ருதசங்க சக்ர: - தாமரையை ஆசனமாகக் கொண்டு வீற்றுள்ளவனும், தோள் வளைகளைக் கொண்டவனும், மகரகுண்டலங்களை அணிந்தவனும், பொன்மயமான திருமேனி உள்ளவனும், சங்குசக்கரங்களை ஏந்தியுள்ளவனும் ஆகிய நாராயணன் எப்போதும் சூரியமண்டலத்தின் நடுவில் உள்ளவனாக த்யானிக்கப் படவேண்டியவன் ஆவான் - என்று கூறுவதற்கு ஏற்ப அவன் எழுந்தருளியுள்ள சூரிய மண்டலத்தை விவரித்தார்.

**வ்யாக்யானம்** - இனி அதிலெழுந்தருளி யிருக்கிறபடியை வர்ணிக்கிறார். (தண்டாமரை சுமக்க) அதாவது, “தண்டாமரை சுமக்கும் பாதப்பெருமான்” என்கிறபடியே ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்டனா யிருக்கை. (தோள் வளையும் குழியும்) இத்தால் “கேயூரவாந் மகர குண்டலவாந்” என்றத்தைச் சொல்லுகிறது. (திருச் செய்யமுடியு மாரமும் படையும்) இத்தால் “கிரீட ஹாரி த்ருத சங்கசக்ர:” என்றதைச் சொல்லுகிறது. (திகழும் பொன் மேனியும்) அதாவது, “ஆரமும் படையும் திகழ” என்கிறபடியே கீழ்ச்சொன்ன ஆயுதாபரணங்க ளெல்லாம் விளங்கும்படி யிருப்பதாய், “பொன்மேனி கண்டேன்” என்னும்படி ஹிரண்மயமான திருமேனியும், “ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ருர் ஹிரண்யகேச ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:” என்றும், “ஹிரண்மயவபு:” என்றும் சொல்லக்கடவதிறே.

**விளக்கம்** – அடுத்து அந்தச் சூர்யமண்டலத்தில் அவன் எழுந்தருளியுள்ள நிலையை வர்ணிக்கிறார். (தண்டாமரை சுமக்க) - திருவாய் (4-5-8) - தண்டாமரை சுமக்கும் பாதப்பெருமான் – என்பதற்கு ஏற்ப, “ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்டன்” என்பது கூறப்பட்டது. (தோள் வளையும் குழியும்) - இதன் மூலம் “கேயூரவாந் மகர குண்டலவாந்” என்பது கூறப்பட்டது. (திருச் செய்யமுடியு மாரமும் படையும்) - இதன் மூலம் “கிரீட ஹாரி த்ருத சங்கசக்ர:” என்பது கூறப்பட்டது. (திகழும் பொன் மேனியும்) - திருவாய்மொழி (8-4-7) - ஆரமும் படையும் திகழ - என்பதற்கு ஏற்ப மேலே கூறியுள்ள ஆயுதங்கள் மற்றும் ஆபரணங்கள் ஆகியவை விளக்கும்படி உள்ளதாக, மூன்றாம் திருவந்தாதி (1) - பொன்மேனி கண்டேன் - என்பதற்கு ஏற்ப தங்கம் போன்ற ப்ரகாசம் கொண்ட

திருமேனியும்; ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ருர் ஹிரண்யகேச ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: - சூரியனின் நடுவில் பொன்மயமாக உள்ள எந்த ஒரு புருஷன் யோகிகளால் காணப்படுகிறானோ, அவன் பொன்மயமான மீசை மற்றும் கேசங்கள் கொண்டவனாக உள்ளான்; அவனுடைய நகங்கள் போன்ற அனைத்தும் பொன்மயமாக உள்ளன - என்றும், ஹிரண்மயவபு: - பொன்மயமான திருமேனி – என்றும் கூறப்பட்டது காண்க.

**வ்யாக்யானம்** - (செஞ்சுடர்த் தாமரைக்கண்ணுமாய்) அதாவது, "அஞ்சுடர் வெய்யோனணி நெடுந்தேர் தோன்றாதால்" என்ற வநந்தரம், "செஞ்சுடர்த் தாமரைக்கண் செல்வலும் வாரான்" என்றது - அந்த ஆதித்யமண்டலத்தில் எழுந்தருளி யிருக்கிறவனையிறே. ச்ருதியும், "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ" என்றது அவ்விருப்பிலேயிறே. ஆகையால் ஆதித்ய கிரணங்களாலே விகஸிதமானபோதைச் சிவந்த வொளியை யுடைய தாமரை போன்ற திருக்கண்களுமா யென்கை. (அணிநிற மூர்த்தி யீதென்னும்படி இரண்டையும் தன்னிற மாக்குகிற செய்யாளான வித்யையோடே) அதாவது, "திருக்கண்டேன்" என்று முதலிலே தன்னைக் கண்ட வநந்தரம், "ருக்மாபம்" என்னும்படி யிருக்கிற அவன் திருமேனியைக் கண்டு, "பொன்மேனி கண்டேன்" என்றிருக்கச் செய்தேயும் தன் திருமேனி நிறத்தில் வ்யாப்தியாலே இளவெய்யில் கலந்தாப்போலே விளங்கி தர்சநீயமா யிருக்கிற அவன் திருமேனி நிறத்தைக் கண்டு, "திகழுமருக்கனணி நிறமும் கண்டேன்" என்னும்படியாகவும், "செய்யதோர் நாயிற்றை காட்டிச் சிரீதரன் மூர்த்தி யீதென்னும்" என்று அந்த மண்டலவாஸிநியான தன் விக்ரஹ தேஹோ வ்யாப்தியாலே சிவந்த வொளியாலே அத்விதீயமா யிருக்கிறபடியைக் கண்டு ஸ்ரீதரனுடைய வடிவு இதென்று ப்ரமித்துச் சொல்லும்படியாகவும் பகவத் விக்ரஹமும் ஆதித்யமண்டலமுமாகிற இரண்டையும் தன்னிறமாம்படி பண்ணுகிற சிவந்த நிறத்தை யுடைய ளாகையாலே, "ஹிரண்யவர்ணாம்" இத்யாதிப்படியே, "கமல மலர்மேல் செய்யாள்" என்று நிரூபகமாம்படி யிருப்பாளாய் "வித்யா ஸஹாய மாதித்ய ஸம்ஸ்தம் வித்யா ப்ரஸாதகம்" என்றும், "வித்யா ஸஹாயவந்தம் மாம் ஆதித்யஸ்தம் ஸநாதநம்" என்றும் சொல்லுகிறபடியே வித்யா சப்த வாச்யையான பிராட்டியோடே கூட.

**விளக்கம்** - (செஞ்சுடர்த் தாமரைக்கண்ணுமாய்) – திருவாய்மொழியில் (5-4-9) - அஞ்சுடர் வெய்யோனணி நெடுந்தேர் தோன்றாதால் - என்று கூறியதைத் தொடர்ந்து, (5-4-9) -

செஞ்சுடர்த் தாமரைக்கண் செல்வலும் வாரான் - என்று கூறியது, சூரியமண்டலத்தில் எழுந்தருளியுள்ள ஸர்வேச்வரனைக் குறித்து மட்டுமே அல்லவோ? ச்ருதியும் - தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ - பரம்பொருளான அவனுடைய திருக்கண்கள் தாமரை போன்றுள்ளன - என்று கூறியது காண்க. ஆகவே சூரிய ஒளியால் மலர்ந்த சிவந்த ஒளி வீசுகின்ற தாமரை போன்ற திருக்கண்கள் என்று கருத்து. (அணிநிற மூர்த்தி யீதென்னும்படி இரண்டையும் தன்னிற மாக்குகிற செய்யாளான வித்யையோடே) - மூன்றாம் திருவந்தாதி (1) - திருக்கண்டேன் - என்று பெரியபிராட்டியாகத் தன்னைக் கண்டதைத் தொடர்ந்து, ருக்மாபம் – பொன் போன்ற - என்பதற்கு ஏற்ப உள்ள அவனுடைய திருமேனியைக் கண்டு, மூன்றாம் திருவந்தாதி (1) - பொன்மேனி கண்டேன் - என்று கூறுவதற்கு ஏற்றபடி உள்ளபோதிலும், பெரியபிராட்டியாராகிய தனது திருமேனியில் இளஞ்சூரிய ஒளி கலந்தது போன்றுள்ளதும், காண்பதற்கு அழகாக உள்ளதும் ஆகிய அவனுடைய திருமேனி நிறத்தைக் கண்டு மூன்றாம் திருவந்தாதி (1) - திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன் - என்று அருளிச்செய்தார். திருவாய்மொழி (4-4-2) - செய்யதோர் நாயிற்றை காட்டிச் சிரீதரன் மூர்த்தி யீதென்னும் - என்று, சூரியமண்டலத்தில் வசிக்கும் பெரியபிராட்டியான தனது திருமேனியின் ஒளி வெள்ளம் காரணமாகச் சிவந்த ஒளியால் ஒப்பற்றதாக உள்ள நிலையைக் கண்டு ஸ்ரீதரனுடைய வடிவம் இது என்று கலங்கி உரைத்தார். ஸர்வேச்வரனுடைய திருமேனி, சூரியமண்டலம் ஆகிய இரண்டையும் தனது நிறம் போல் செய்கின்ற சிவந்த நிறம் கொண்டவள் பெரியபிராட்டி என்பதால், ஸ்ரீஸூக்தம் - ஹிரண்யவர்ணாம் – என்பதற்கு ஏற்ப திருவாய்மொழி (9-4-1) - கமல மலர்மேல் செய்யாள் - என்று நிரூபகம் செய்யும்படி உள்ளவனாகவும்; வித்யா ஸஹாய மாதித்ய ஸம்ஸ்தம் வித்யா ப்ரஸாதகம் - வித்யை எனப்படும் பிராட்டியுடன் உள்ளவனும், வித்யையை அளிப்பவனும், சூரியனிடம் உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் - என்றும், வித்யா ஸஹாயவந்தம் மாம் ஆதித்யஸ்தம் ஸநாதநம் - பிராட்டியை எப்போதும் துணையாகக் கொண்டவனும், சூரியனிடம் உள்ளவனும், எப்போதும் உள்ளவனும் ஆகிய என்னை - என்றும் கூறுவதற்கு ஏற்ப “வித்யா” என்ற சொல்லுக்குப் பொருளாக உள்ள பெரியபிராட்டியுடன் சேர்ந்தபடி.

**வ்யாக்யானம்** - (அருக்கன் மேவின) – “வானிடை யருக்கன் மேவி நிற்பாற்கு” என்கிறபடியே ஸவித்ருமண்டலமத்ய வர்த்தியான “ய ஏஷோந்த ராதித்யே” என்றத்தைச் சொல்லுகிறது. (ஸதாத்யேய தேஜஸ்ஸின்) அதாவது, “த்யேயஸ் ஸதா” என்கிறபடியே

ஸர்வகாலமும் த்யாநம் பண்ணுவார்க்கு விஷயமாய், "ஹிரண்மயச் சகுநிர் ப்ரஹ்ம நாம யேந ஸூர்யஸ் தபதி தேஜஸேத்த:" என்றும், "தத் ஸவிதுர் வரேண்யம் பர்க்க:" என்றும், "தேஜ: பரம் தத் ஸவிதுர் வரேண்யம் தாம்நா பரேணா ப்ரணாகாத் ஸுவர்ணம்" என்றும் சொல்லுகிறபடியே தேஜோமயமாயிருக்கிற வஸ்துவினுடைய. (ஸாமரஸோத்காந நாம முள்ளுறையான ஆத்யந்தங்களாலே) அதாவது, "ஸாம்ந உத்கீதோ ரஸ" என்கையாலே ச்சந்தோக ஸாமத்துக்கு ரஸமாயிருந்துள்ள உத்காந முண்டு - உத்கீதம், அதில் "உத்" என்று சொல்லப்பட்ட "தஸ்ய உதிதி நாம" என்கிற திருநாமம் இதுக்கு உள்ளுறையானமை தோற்றும்படியான ஆத்யந்தங்களை உடைத்தா யிருக்கையாலே யென்கை, "உயர்வு" என்று எடுத்து "உயர்ந்தே" என்று தலைக்கட்டுகையால் உகாரம் ஆதியும் தகாரம் அந்தமுமாயிறே யிருக்கிறது. (ஆத்யந்தங்களாலே) என்றது மேல் சொல்லுகிறதுக்கு ஹேது இதென்று தோற்றுகைக்காக.

**விளக்கம்** - (அருக்கன் மேவின) - பெரியதிருமொழி (2-1-7) - வானிடை அருக்கன் மேவி நிற்பாற்கு - என்பதற்கு ஏற்ப, சூர்யமண்டலத்தில் உள்ளவனைக் குறித்து சாந்தோக்ய உபநிஷத்தில் - ய ஏஷோந்த ராதித்யே – சூரியனின் நடுவில் பொன்மயமான - என்று கூறப்பட்டது. (ஸதாத்யேய தேஜஸ்ஸின்) - சாந்தோக்ய உபநிஷத் – த்யேயஸ் ஸதா - எப்போதும் த்யானிக்கத்தக்கவன் - என்பதற்கு ஏற்ப எப்போது த்யானித்தபடி உள்ளவர்களுக்கு ஏற்ற விஷயமாகவும்; காடகத்தில் - ஹிரண்மயச் சகுநிர் ப்ரஹ்ம நாம யேந ஸூர்யஸ் தபதி தேஜஸேத்த: – ப்ரஹ்மம் என்னும் பறவை பொன்நிறமானது, அதன் எந்த ஒளியால் சூரியன் ப்ரகாசமாக உள்ளானோ – என்றும், காயத்ரியில் - தத் ஸவிதுர் வரேண்யம் பர்க்க: - உலகின் காரணமாக உள்ள பகவானின் உபாஸிக்கத்தக்க அந்த ஒளியை த்யானிக்கிறோம் – என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் – தேஜ: பரம் தத் ஸவிதுர் வரேண்யம் தாம்நா பரேணா ப்ரணாகாத் ஸுவர்ணம் - வேதங்களில் கூறப்பட்டதாகவும் , சிறந்ததாகவும், உபாஸிக்கத்தக்கதாவும் உள்ள சூரியனுடன் தொடர்புடைய ஒளியாக வேதங்கள் ஓதுகின்றன; அதன் உயர்ந்த ஒளி காரணமாக விரல்நுனி முடிய பொன்நிறமாகவே உள்ளது – என்றும் கூறப்படுகிற தேஜோமயமாக உள்ள பகவானுடைய. (ஸாமரஸோத்காந நாம முள்ளுறையான ஆத்யந்தங்களாலே) - ஸாம்ந உத்கீதோ ரஸ - ஸாமத்தின் ரஸமாக உத்கீதம் உள்ளது - என்று கூறுவதால் சாந்தோக்ய உபநிஷத்துக்கு ரஸமாக உத்கீதம் உள்ளது என்றாகிறது. அதில் "உத்", தஸ்ய உதிதி நாம - அந்த ஸாமத்தில் கூறப்பட்ட உத் - என்பது திருவாய்மொழிக்குத் தொடக்கமும் முடிவுமாக

உள்ளது என்பதால். இது எப்படி? திருவாய்மொழி “உயர்வு” என்று தொடங்கி “உயர்ந்தே” என்று முடிவதால், “உ” என்பது தொடக்கமாகவும் “த” என்பது முடிவாகவும் உள்ளது காண்க. (ஆத்யந்தங்களாலே) - என்று கூறியது ஏன் என்றால், அடுத்துக் கூற உள்ளதற்கான காரணம் இது என்று உணர்த்தவே ஆகும்.

**வ்யாக்யானம்** - (ஓராயிரமாமவற்றிலே ஒன்றை) அதாவது, “ஓராயிரமா யுலகே ழுளிக்கும் பேராயிரம்” என்கிறபடியே ஒரு திருநாமமே ஆயிரமுகமாக நின்று ஜகத்ரக்ஷணம் பண்ண வல்ல திருநாமங்களிலே ஒரு திருநாமத்தை. (ஆயிரமுகத்தினா லருளின வித்யாதி) அதாவது “ஆயிரமுகத்தினா லருளி மந்தரத் திழிந்த கங்கை” என்று கங்கைதானும் ஒன்றாயிருக்க, லோகபாவநார்த்தமாக ஸஹஸ்ரமுகமாக ப்ரவஹித்தாப்போலே, “தீர்த்தங்க ளாயிரம்” என்கிறபடியே லோகபாவநமான ஆயிரம் பாட்டாக விஸ்தரிக்கிறா ரென்று வேதாசார்ய பட்டர் உபதேசித்தருளும்படி யென்கை. விஸ்தரிக்கிறா ரென்று கர்த்ருத்வத்தை அபௌருஷேயத்வ விரோதமறக் கீழ்ச்சொன்னபடியே கொள்வது.

**விளக்கம்** - (ஓராயிரமாமவற்றிலே ஒன்றை) - திருவாய்மொழி (9-3-1) – ஓராயிரமா யுலகே ழுளிக்கும் பேராயிரம் - என்பதற்கு ஏற்றபடி அவனுடைய ஒரு திருநாமம் மட்டுமே ஆயிரமாக நின்று உலகைக் காக்கவல்லது. இப்படிப்பட்ட எண்ணற்ற திருநாமங்களில் ஒரு திருநாமத்தை. (ஆயிரமுகத்தினா லருளின வித்யாதி) - அதாவது, பெரியதிருமொழி (1-4-7) - ஆயிரமுகத்தினா லருளி மந்தரத் திழிந்த கங்கை - என்பதற்கு ஏற்ப கங்கையானது ஒன்றாகவே இருக்க, உலகில் உள்ள அனைத்தையும் தூய்மைப்படுத்த எண்ணி, ஆயிரம் முகங்களாகப் பெருக்கெடுத்து ஓடுவது போன்று, திருவாய்மொழி (7-10-11) – தீர்த்தங்கள் ஆயிரம் - என்று உலகில் மிகவும் உயர்ந்த ஆயிரம் திருப்பாசுரங்களாக விரிவாக உரைக்கிறார் என்று வேதாசார்யபட்டர் உபதேசிப்பார். “விஸ்தரிக்கிறார்” என்ற பதத்தை முன்னர் கூறியது போன்று, “யாராலும் செய்யப்படாத தன்மையுடன் கூடியது” என்ற பொருளிலேயே கொள்ளவேண்டும்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – ஆக, "எவ்வுலகத் தெவ்வெவையும்" என்று தொடங்கி, இவ்வாழ்வார் ப்ரபந்த சதுஷ்டயத்துக்கும் வேதரூபத்வமும் அங்கோபாங்க ஸாஹித்யமும், சாஸ்த்ரத்வாதி வேதலக்ஷண ஸாம்யமும், இதில் இவர்க்குத் தோற்றுகிற கர்த்ருத்வத்தால் இதன் நித்யத்வ அபௌருஷேயத்வ ஹாநியில்லாமையும், இவற்றில் இன்ன ப்ரபந்தம் இன்ன வேத ஸ்த்தாநே யென்னுமதுவும்; இதில் ஸாமவேத ஸ்த்தாநீயமான திருவாய்மொழி – ஸாமவேத ச்ரேஷ்ட்டமான ச்சந்தோக ஸாமோபநிஷத் ஸமமென்னு மதுவும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - ஆகவே சூர்ணை (39) - எவ்வுலகத் தெவ்வெவையும் - என்று தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு ப்ரபந்தங்களுக்கும் [திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி] நான்கு வேதங்களின் தன்மை உள்ளது என்றும், வேதங்களுக்குக் கூறப்பட்ட அங்கங்கள் போன்ற பலவும் இந்த அருளிச் செயல்களுக்கும் உள்ளன என்றும், "இதனை இவர் அருளிச்செய்தார்" என்று கூறுவதன் மூலம் இவை என்றும் உள்ளவை மற்றும் யாராலும் இயற்றப்படாதவை என்று கூறும் கருத்துக்களுடன் முரண்பாடு தோன்றவில்லை என்றும், "இன்ன ப்ரபந்தம் இன்ன வேதத்துக்கு ஒத்தது" என்றும், ஸாமவேதத்துடன் ஒத்துள்ள திருவாய்மொழியானது மிகவும் குறிப்பாக, ஸாமவேதத்தின் மிகவும் உயர்ந்த பகுதியான சாந்தோக்ய உபநிஷத்துடன் ஒத்தது என்றும் கூறப்பட்டது.

54. அன்றிக்கே ஸ்வரூபகுண விபூதி சேஷ்டிதங்களை விசதமாக்குகிற பஞ்சராத்ர புராணேதிஹாஸங்கள் போலே நீலபாரூபோக்தி தெரியச் சொன்ன வேதோபப்ர்ம்ஹண மென்பர்கள்.

**அவதாரிகை** - ஆக இப்படி இப்ப்ரபந்த சதுஷ்டயத்துக்கும் வேத ஸாம்யத்தை ஸாதித்தார் கீழ்; இங்ஙனன்றிக்கே இது தனக்கு வேதோப ப்ர்ம்ஹணஸாம்யமும் சொல்லுவர்க ளென்கிறார் மேல் - (அன்றிக்கே யென்று தொடங்கி).

**விளக்கம்** – ஆக, இப்படியாக நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு ப்ரபந்தங்களுக்கும் வேதத்தின் ஒற்றுமையைக் கடந்த சில சூர்ணைகளில் நிரூபித்தார். இது மட்டும் அல்லாமல் இப்ப்ரபந்தங்கள் வேதங்களின் ஆழ்பொருளை விவரித்துக் கூறும்


**Email:**sridharan_book@yahoo.co.in

உபப்ரும்ஹணங்கள் என்றும் சிலர் கூறுவார்கள் என்று இந்த சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இப்படி வேதஸாம்யம் சொல்லுகையன்றிக்கே பகவத் ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களுக்கெல்லாம் ப்ரதிபாதகமாயிருந்துள்ள வேதத்தில், "யத்த தத்ரேச்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ண மசக்ஷுச்ச்ரோத்ரம் ததபாணி பாதம், நித்யம் விபூம் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத் பூதயோநிம் பரிபச்யந்தி தீரா:", "ஸத்யம் ஜ்ஞாந மநந்த ப்ரஹ்ம:", "நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்", "நிர்குணம்" இத்யாதிகளால் சொல்லப்படுகிற ஸ்வரூபத்தையும்,

**விளக்கம்** - இவ்விதம் வேதங்களுடன் ஒத்துள்ள தன்மையைக் கூறுவது மட்டும் அல்லாமல், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், விபூதிகள், செயல்பாடுகள் என்ற இவற்றை உணர்த்துகின்ற வேதத்தில் -

- முண்டக உபநிஷத் - யத்த தத்ரேச்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ண மசக்ஷுச்ச்ரோத்ரம் ததபாணி பாதம், நித்யம் விபூம் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத் பூதயோநிம் பரிபச்யந்தி தீரா: - ஞானேந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டது, கை முதலான கர்மேந்த்ரியங்களுக்கும் அறிய இயலாதது, கோத்ரம் அற்றது, நான்கு வர்ணங்களைச் சாராதது, கண் போன்ற கர்மேந்த்ரியங்களின் அவசியம் அற்றதால் அவை இல்லாதது, கை முதலான கர்மேந்த்ரியங்களின் அவசியம் அற்றதால் அவை இல்லாதது, எப்போதும் உள்ளது, அனைத்து இடங்களிலும் உள்ளது, அனைத்து பொருள்களின் உள்ளும் புறமும் வ்யாபித்துள்ளது, மிகவும் நுண்ணியது, அக்ஷரம் என்று கூறப்படுவது, இப்படிப்பட்டதான அக்ஷரம் என்று சொல்லப்படும் எந்த ஒன்றை ப்ரஹ்மஞானிகள் அனைத்திற்கும் காரணம் என்று பார்க்கிறார்களோ

- தைத்திரீய உபநிஷத் - ஸத்யம் ஜ்ஞாந மநந்த ப்ரஹ்ம: - ப்ரஹ்மம் எப்போதும் ஸ்திரமாக உள்ளது, ஞானமயமானது, காலதேச எல்லைகள் அற்றது


Email:sridharan_book@yahoo.co.in

- ச்வேதாஸ்வதர உபநிஷத் - நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் – எந்தவிதமான செயலும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாததால் செயல்கள் செய்யாமல் உள்ளது, பசி முதலானவை அற்றது, எந்தவிதமான தோஷங்களும் அற்றது, தாழ்மையான தன்மைகள் அற்றது, யாராலும் பழிக்கப்படாதது

- நிர்குணம் – ஸத்வம், ரஜஸ், தமஸ் குணங்கள் அற்றது

இப்படிப்பட்ட வேதவாக்கியங்களால் கூறப்படும் ஸ்வரூபத்தைக் குறித்தும்,

**வ்யாக்யானம்** – "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்", "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச", "ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:" இத்யாதிகளால் சொல்லப்படுகிற குணங்களையும்,

**விளக்கம் –**

- முண்டக உபநிஷத் - யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் - எந்த ஒரு அக்ஷர ப்ரஹ்மம் அனைத்தும் அறியுமோ, அனைத்து பொருள்கள் குறித்தும் அறியுமோ

- ச்வேதாஸ்வதர உபநிஷத் - பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச - பரமாத்மாவுடைய பலவிதமான சக்தி, ஞானம், பலம், நியமனம் போன்றவை மிகவும் உயர்ந்தவைகள் மற்றும் அவை இயற்கையாகவே பரமாத்மாவுக்கு அமைக்கப்பெற்றவை என்று கேட்கப்பட்டுகின்றன.

- சாந்தோக்ய உபநிஷத் - ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப: - நிறைவேறப்பெறும் விருப்பங்கள் மற்றும் ஸங்கல்பங்கள் உள்ளவன்.

இப்படிப்பட்ட வேதவாக்கியங்களால் கூறப்படும் குணங்கள் குறித்தும் (இந்த இரண்டையும் - அதாவது ஸ்வரூபம், குணங்கள் குறித்து - மிகவும் விவரமாகக் கூறும் நூல்களை அடுத்து கூறுகிறார். அதாவது இவற்றைப் பாஞ்சராத்ரம் விவரித்துக் கூறுகிறது என்கிறார்).

**வ்யாக்யானம் –** “ச்ருணு தத் பரமம் ஸூக்ஷ்மம் ஸர்வஜ்ஞம் ஸர்வப்ருத் ததா, ஜ்ஞாநரூப மநாத்யந்த மவிகாரி நிராமயம். அசக்ஷுச்ச்ரோத்ர மஸ்பர்ச மபாணிசரணம் த்ருவம், நாமஜாத்யாதி ரஹித மவர்ண மகுணம் த்வபி, விச்வச்ரவோ விச்வசக்ஷுர் விச்வபாணி பதம் பரம், அஸக்தமசரம் சாந்தம் ஸ்வயம் ஜ்யோதி ரநூபமம், தூரஸ்த்த மந்திகசரம் ஜ்ஞாந கம்யம் நிரஞ்ஜநம், பூதபர்த்ருஸமம் ஜ்யோதிர் ஜ்யோதிஷாம் தமஸ: பரம், அக்ஷரம் ஸர்வ பூதஸ்த்தம் தத் விஷ்ணோ: பரமம் பதம்” இத்யாதிகளாலும், “அப்ராக்ருத குண ஸ்பர்சாத் நிர்க்குணம் பரிகீயதே, ச்ருணு நாரத! ஷாட்குண்யம் கத்த்யமாநம் மயாநக, அஜடம் ஸ்வாத்ம ஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹநம், ஜ்ஞாநம் நாம குணம் ப்ராஹு: ப்ரதமம் குண சிந்தகா:, ஸ்வரூபம் ப்ரஹ்மணஸ் தச்ச குணச்ச பரிகீயதே, ஜகத் ப்ரக்ருதிபாவோ ய: ஸா சக்தி: பரிகீர்த்திதா. கர்த்ருத்வம் நாம யத் தஸ்ய ஸ்வாந்த்ர்ய பரிப்ரும்ஹிதம், ஐச்வர்யம் நாம் தத் ப்ரோக்தம் குண தத்வார்த்த சிந்தகை:, ச்ரம ஹாநிஸ்து யா தஸ்ய ஸததம் குர்வதோ ஜகத், பலம் நாம குணஸ் தஸ்ய கதிதோ குணசிந்தகை:, தஸ்யோபாதாந பாவோபி விகாரவிரஹோ ஹி ய:, வீர்யம் நாம குணஸ் ஸோயம் அச்யுதத்வாபராஹ்வய:, ஸஹகார்ய நபேக்ஷா யா தத் தேஜஸ் ஸமுதாஹ்ருதம்” இத்யாதிகளாலும் விசதமாக்குகிற பஞ்சராத்ரம் போலேயும்,

**விளக்கம் –**

- பாஞ்சராத்ரம் - ச்ருணு தத் பரமம் ஸூக்ஷ்மம் ஸர்வஜ்ஞம் ஸர்வப்ருத் ததா, ஜ்ஞாநரூப மநாத்யந்த மவிகாரி நிராமயம். அசக்ஷுச்ச்ரோத்ர மஸ்பர்ச மபாணிசரணம் த்ருவம், நாமஜாத்யாதி ரஹித மவர்ண மகுணம் த்வபி, விச்வச்ரவோ விச்வசக்ஷுர் விச்வபாணி பதம் பரம், அஸக்தமசரம் சாந்தம் ஸ்வயம் ஜ்யோதி ரநூபமம், தூரஸ்த்த மந்திகசரம் ஜ்ஞாந கம்யம் நிரஞ்ஜநம், பூதபர்த்ருஸமம் ஜ்யோதிர் ஜ்யோதிஷாம் தமஸ: பரம், அக்ஷரம் ஸர்வ பூதஸ்த்தம் தத் விஷ்ணோ: பரமம் பதம் – உயர்ந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் குறித்துக் கேட்பாயாக. மிகவும் ஸூக்ஷ்மமானது, அனைத்தும் அறிந்தது, அனைத்தையும் தாங்குவது, ஞானமயமானது, தொடக்கமும் முடிவும் அற்றது, மாற்றம் அற்றது, உறக்கம் அற்றது, கண் காது போன்றவை அற்றது, ஸ்பர்சம் அற்றது, கை கால்கள் அற்றது, எப்போதும் உள்ளது, நாமம் மற்றும் குலம் ஆகியவற்றால் வரையறுக்கப்படாதது, நான்கு வர்ணங்களுக்கு உட்படாதது, மூன்று

குணங்களான ஸத் ரஜஸ் தமஸ் ஆகியவற்றால் பீடிக்கப்படாதது, அனைத்தையும் கண்களாகக் கொண்டது, அனைத்தையும் கைகால்களாகக் கொண்டது, பற்றுதல்கள் இல்லாதது, ஸஞ்சரிக்கவேண்டிய அவசியம் இன்றி உள்ள இடத்திலிருந்தே அனைத்தையும் செய்யவல்லது, சாந்தமானது, ஸ்வயம் ப்ரகாசிப்பது, ஒப்பற்றது, தூரமாகவும் உள்ளது அண்மையிலும் உள்ளது, ஞானத்தால் அடையத்தக்கது, தோஷங்கள் அற்றது, பஞ்சபூதங்களைத் தாங்கி நிற்பது, அனைவரிடமும் ஒரே போன்று உள்ளது, ஜ்யோதிகள் அனைத்திற்கும் ஜ்யோதியாக உள்ளது, ப்ரக்ருதி மண்டலத்துக்கும் அப்பால் உள்ளது, அழிவற்றது, அனைத்திலும் உள்ளது - மஹாவிஷ்ணுவின் உயர்ந்த ஸ்வரூபம் இப்படிப்பட்டது.

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - அப்ராக்ருத குண ஸ்பர்சாத் நிர்க்குணம் பரிகீயதே, ச்ருணு நாரத! ஷாட்குண்யம் கத்த்யமாநம் மயாநக, அஜடம் ஸ்வாத்ம ஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹநம், ஜ்ஞாநம் நாம குணம் ப்ராஹு: ப்ரதமம் குண சிந்தகா:, ஸ்வரூபம் ப்ரஹ்மணஸ் தச்ச குணச்ச பரிகீயதே, ஜகத் ப்ரக்ருதிபாவோ ய: ஸா சக்தி: பரிகீர்த்திதா. கர்த்ருத்வம் நாம யத் தஸ்ய ஸ்வாந்த்ர்ய பரிப்ரும்ஹிதம், ஐச்வர்யம் நாம் தத் ப்ரோக்தம் குண தத்வார்த்த சிந்தகை:, ச்ரம ஹாநிஸ்து யா தஸ்ய ஸததம் குர்வதோ ஜகத், பலம் நாம குணஸ் தஸ்ய கதிதோ குணசிந்தகை:, தஸ்யோபாதாந பாவோபி விசுரவிரஹோ ஹி ய:, வீர்யம் நாம குணஸ் ஸோயம் அச்யுதத்வாபராஹ்வய:, ஸஹகார்ய நபேக்ஷா யா தத் தேஜஸ் ஸமுதாஹ்ருதம் - ப்ரக்ருதியுடன் ஸம்பந்தம் கொண்டவையான ஸத்வ ரஜ தமஸ் என்ற மூன்று குணங்கள் அற்றதும், பரம்பொருள் என்பதும் ஆகிய அந்த வஸ்துவைக் குறித்து நாரதரே, நான் உரைக்கக் கேட்பீராக. அதன் ஆறு குணங்கள் குறித்துக் கூறுகிறேன். ப்ரஹ்மத்தின் திருக்கல்யாண குணங்களை எப்போதும் த்யானித்தபடி உள்ளவர்கள் - அறிவுள்ளதும், மற்றதன் உதவி இன்றி தானே ப்ரகாசிப்பதும், மற்ற பொருள்களையும் ப்ரகாசிக்கச் செய்வதும் ஆகிய ஞானம் என்ற குணத்தை முதலாவதாக உரைக்கிறார்கள். அது ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூபமாகவும், குணமாகவும் உள்ளது. உலகிற்கு முதன்மையான காரணமாக எது உள்ளதோ அது சக்தி எனப்படுகிறது. ப்ரஹ்மத்தின் குணங்களுடைய உண்மையை எப்போதும் த்யானித்தபடி உள்ளவர்கள், ப்ரஹ்மத்தின் சுதந்திரமான தன்மையுடன் கூடிய செயலாற்றும் தன்மை எதுவோ அதனை ஐச்வர்யம் என்று கூறுகிறார்கள்.

எப்போதும் அனைத்தையும் படைத்தபடி உள்ள அவனுக்குச் சிரமம் இல்லாத தன்மை என்பது பலம் எனப்படுகிறது. அச்சுதன் என்று வழங்கப்படும் அந்தப் பரம்பொருள், உலகின் முதற்காரணம் என்றபோதிலும் மாற்றம் அடையாமல் உள்ளது; இந்தத் தன்மை வீர்யம் எனப்படுகிறது. மற்றவர்களின் உதவியை நாடாமல் உள்ள தன்மை தேஜஸ் எனப்படுகிறது.

இப்படிபட்ட வரிகள் மூலம் விவரித்துக் கூறுகின்ற பாஞ்சராத்ரம் போன்றது (அடுத்து ஸ்வரூபம், குணங்கள் போன்றவற்றை விவரிக்கும் புராணங்கள் குறித்துக் கூறுகிறார்).

**வ்யாக்யானம்** – "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி", "ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜந்ய: க்ருத:, ஊரூ ததஸ்ய யத் வைச்ய:, பத்ப்யாம் சூத்ரோ அஜாயத", "அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம்", "பாதோஸ்ய விச்வா பூதாநி" இத்யாதியாலும், "ஸ ஹோவாச மஹிமாந ஏவைஷாம். ஏதே த்ரயஸ் த்ரிம்ச தேவ தேவா இதி, கதமேதே த்ரயஸ் த்ரிம்சதிதி, அஷ்டௌ வஸவ: ஏகாதச ருத்ரா:, த்வாத சாதித்யா: த ஏகத்ரிம்சத். இந்த்ரச்சைவ ப்ரஜாபதிச்ச, த்ரயஸ்த்ரிம்சத்" இத்யாதியாலும், "பௌதிமாஷ்யோ கோபவநாத் கோபவாந: கௌசிகாத் கௌசிக:, கௌண்டிந்யாத் கௌண்டிந்ய:, சாண்டில்யாத் சாண்டில்ய:, கௌசிகாச்ச கௌதமாச்ச கௌதம:, ஆக்நிவைச்யாதாக்நி வைச்ய: சாண்டில்யாத்" இத்யாதியாலும், ஜகஜ் ஜந்மாதிகளையும் ப்ராஹ்மணாதி வர்ணங்களையும் தேவஜாதியில் வைவித்யத்தையும் ருஷி வம்சாதிகளையும் ப்ரதிபாதிக்கிற வாக்யங்களால் சொல்லப்படுகிற விபூதியை, "ஸர்க்கச்ச ப்ரதிஸர்க்கச்ச வம்சோ மந்வந்தராணி ச, வம்சாநுசரிதஞ்சைவ புராண பஞ்ச லக்ஷணம்" என்கிறபடியே ஸர்க்காதிகளையும் வம்சங்களையும் மந்வந்த்ரங்களையும் வம்சாநு சரிதங்களையும் விஸ்தரேண ப்ரதிபாதிக்கிற முகேந விசதமாக்குகிற புராணம் போலவும்,

**விளக்கம் –**

- தைத்திரீய உபநிஷத் – யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி - எந்த ஒன்றிடமிருந்து இந்த உயிர்கள் அனைத்தும் தோன்றினவோ, எதனால் இவை அனைத்தும் வாழ்க்கின்றனவோ, எதில் சென்று அனைத்தும் இறுதியில் லயிக்கின்றனவோ அந்த ப்ரஹ்மத்தை நீ அறிய வேண்டும்.
- புருஷஸூக்தம் - ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜந்ய: க்ருத:, ஊரூ ததஸ்ய யத் வைச்ய:, பத்ப்யாம் சூத்ரோ அஜாயத – அந்தப் பரமபுருஷனுடைய திருமுகத்திலிருந்து அந்தணனும், தோளிலிருந்து க்ஷத்ரியனும், தொடையிலிருந்து வைசியனும், திருவடிகளிலிருந்து சூத்ரனும் உண்டானார்கள்
- அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் - அந்தப் பரமபுருஷன் அனைத்தின் உள்ளிலும் ப்ரவேசித்து அனைத்தையும் நியமிக்கிறான்.
- புருஷஸூக்தம் - பாதோஸ்ய விச்வா பூதாநி - பரமபுருஷனுக்கு அனைத்து உயிர்களும் கால் பாகம் ஆகும் (ஒரு பாதம் என்பர் – அதாவது நான்கில் ஒரு பங்கு).
- ஸ ஹோவாச மஹிமாந ஏவைஷாம். ஏதே த்ரயஸ் த்ரிம்ச தேவ தேவா இதி, கதமேதே த்ரயஸ் த்ரிம்சதிதி, அஷ்டௌ வஸவ: ஏகாதச ருத்ரா:, த்வாத சாதித்யா: த ஏகத்ரிம்சத். இந்த்ரச்சைவ ப்ரஜாபதிச்ச, த்ரயஸ்த்ரிம்சத் - இந்த 33 தேவர்களுக்கு, முதலில் கூறப்பட்ட 3306 தேவர்கள், குணமாக உள்ளவர்கள் மட்டுமே ஆவர். ஆக தேவர்கள் 33 பேர் மட்டுமே ஆவர். 8 வசுக்கள், 11 ருத்திரர்கள், 12 ஆதித்யர்கள் என்று இவர்கள் 31 பேர்; இவர்களுடன் இந்த்ரனையும் நான்முகனையும் சேர்த்தால் 33 தேவர்கள் ஆவர்.
- பௌதிமாஷ்யோ கோபவநாத் கோபவாந: கௌசிகாத் கௌசிக:, கௌண்டிந்யாத் கௌண்டிந்ய:, சாண்டில்யாத் சாண்டில்ய:, கௌசிகாச்ச கௌதமாச்ச கௌதம:, ஆக்நிவைச்யாதாக்நி வைச்ய: சாண்டில்யாத் - பௌதிமாநுஷ்யர் கோபவநரிடம் பயின்றார்; கௌண்டின்யர் சாண்டில்யரிடம் பயின்றார்; சாண்டில்யர், கௌசிகர் மற்றும் கௌதமர் ஆகியவர்களிடம் பயின்றார்; கௌதமர் ஆக்நிவைச்யரிடம் பயின்றார்; ஆக்நிவைச்யர் சாண்டில்யரிடம் பயின்றார்.


Email:sridharan_book@yahoo.co.in

இது போன்ற பல வரிகள் மூலம் உலகின் படைப்பு போன்றவற்றையும், அந்தணர் முதலான வர்ணங்களையும், தேவகுலங்களின் பிரிவுகளையும், ரிஷிகளின் பரம்பரைகளையும் குறித்துள்ள வாக்கியங்கள் மூலம் கூறப்படும் உலகத்தைக் குறித்து, அமரகோசத்தில் - ஸர்க்கச்ச ப்ரதிஸர்க்கச்ச வம்சோ மந்வந்தராணி ச, வம்சாநுசரிதஞ்சைவ புராண பஞ்ச லக்ஷணம் - படைத்தல், அழித்தல், பரம்பரை, மந்வந்த்ரங்கள், பரம்பரை குறித்துள்ள சரிதங்கள் ஆகிய ஐந்தையும் கூறும் தன்மை கொண்டவை புராணங்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸ்ருஷ்டி முதலாவற்றையும், பரம்பரைகளையும், மந்வந்த்ரங்களையும், பரம்பரை குறித்த சரிதங்களையும் விரிவாக உரைப்பதன் மூலம் தெளிவாக்குகிற புராணங்கள் போன்றும், (அடுத்து இதிஹாஸங்கள் குறித்து அருளிச்செய்கிறார்)

**வ்யாக்யானம்** – "உத்த்ர்தாஸி வராஹேண", "இதம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேதா நிதகே பதம்" இத்யாதிகளாலே சொல்லப்படுகிற அவதார சேஷ்டிதங்களை "ராமாயணம் நாராயண கதாம்" என்னும்படி ராமக்ருஷ்ணாவதார சேஷ்டிதங்களை விஸ்தரேண ப்ரதிபாதிக்கையாலும், "அத விஷ்ணுர் மஹாதேஜா அதித்யாம் ஸமஜாயத வாமநம் ரூபமாஸ்த்தாய வைரோசநிமுபாகமத், த்ரீந் க்ரமாந் அத பிக்ஷித்வா ப்ரதிக்ருஹ்ய ச மாதவ:, ஆக்ரம்ய லோகாந் லோகாத்மா ஸர்வலோக ஹிதே ரத:, மஹேந்த்ராய புந: ப்ராதாத் நியம்ய பலிமோஜஸா" இத்யாதிகளாலே ப்ராஸங்கிகமாக அவதாராந்தர சேஷ்டிதங்களையும் ஸ்ரீராமாயணத்திலே சொல்லுகையாலும், மோக்ஷதர்மத்திலே ஸ்ரீஜந்மரஹஸ்யத்திலே "நாரதேநைவ முக்தஸ்து ப்ரத்யுவாச ஜநார்தந:" என்று தொடங்கி, "பூர்வம் மத்ஸ்யோ பவிஷ்யாமி ஸ்த்தாபயிஷ்யாமி மேதிநீம், வேதாம்ச்சைவ உத்தரிஷ்யாமி மஜ்ஜமாநாந் மஹார்ணவே, த்விதீயம் கூர்ம ரூபேண ஹேமகூட ஸமப்ரபம், மந்தரம் தாரயிஷ்யாமி அம்ருதார்த்தே த்விஜோத்தம" இத்யாதியாலே தசாவதார சேஷ்டிதங்களையும் விசதமாக்குகிற இதிஹாஸம் போலவும்,

**விளக்கம்** - தைத்திரீய உபநிஷத் - உத்த்ர்தாஸி வராஹேண - பூமியே! வராஹ அவதாரம் எடுத்த ஸர்வேச்வரன் செய்த செயலால் நீ உயரே எடுக்கப்பட்டாய் - என்றும், ஸ்ரீவிஷ்ணுஸூக்தம் - இதம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேதா நிததே பதம் - ஸர்வேச்வரன் இந்த உலகங்களை அளந்தான், மூன்றுவிதமாக அடியை வைத்தான் - என்று காணப்படும் வரிகள் மூலமாக உணர்த்தப்பட்ட அவதாரத்தின் செயல்கள் குறித்து, ராமாயணம்

நாராயண கதாம் – இராமாயணம் என்பது நாராயணனின் சரிதம் - என்பதற்கு ஏற்ப, இராமனாகவும் க்ருஷ்ணனாகவும் அவதரித்தபோது செய்த செயல்கள் விரிவாக உரைக்கப்படுகின்றன. எங்கு உரைக்கப்படுகின்றன என்பதற்கு அடுத்து விடை அருளிச் செய்கிறார்.

- இராமாயணம் பாலகாண்டம் (29-19) - அத விஷ்ணுர் மஹாதேஜா அதித்யாம் ஸமஜாயத வாமநம் ரூபமாஸ்த்தாய வைரோசநிமுபாகமத், த்ரீந் க்ரமாந் அத பிக்ஷித்வா ப்ரதிக்ருஹ்ய ச மாதவ:, ஆக்ரம்ய லோகாந் லோகாத்மா ஸர்வலோக ஹிதே ரத:, மஹேந்த்ராய புந: ப்ராதாத் நியம்ய பலிமோஜஸா - பின்னர் மிகுந்த சக்தி பொருந்திய மஹாவிஷ்ணு, அதிதியிடம் அவதரித்தான். வாமனனாக நின்று விரோசனனின் புத்திரனாகிய மஹாபலியிடம் சென்றான். அனைத்து உலகிற்கும் ஆத்மாவும், அனைத்து உயிர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரன், எந்தவிதமான கர்வமும் இன்றி மூன்று அடிகளை யாசகமாகப் பெற்றான். பின்னர் அனைத்து உலகங்களையும் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டு, மஹாபலியை அடக்கி, இந்த்ரனிடம் அவன் இழந்த பதவியை மீண்டும் அளித்தான் - என்று மற்ற அவதாரங்கள் குறித்தும், அவற்றில் செய்யப்பட்ட செயல்கள் குறித்தும் இராமாயணம் ஆங்காங்கு உரைக்கிறது.

- மஹாபாரதம் மோக்ஷ தர்மத்தில் அவதார ரஹஸ்யம் கூறும் இடத்தில் (மஹாபாரதம் சாந்தி பர்வம் 348 - 3,4) - நாரதேநைவ முக்தஸ்து ப்ரத்யுவாச ஜநார்தந: - நாரதரால் இவ்விதம் கூறப்பட்ட பகவான் பதில் உரைக்கத் தொடங்கினான் - என்றுள்ள வரியில் தொடங்கி, பூர்வம் மத்ஸ்யோ பவிஷ்யாமி ஸ்த்தாபயிஷ்யாமி மேதிநீம், வேதாம்ச்சைவ உத்தரிஷ்யாமி மஜ்ஜமாநாந் மஹார்ணவே, த்விதீயம் கூர்ம ரூபேண ஹேமகூட ஸமப்ரபம், மந்தரம் தாரயிஷ்யாமி அம்ருதார்த்தே த்விஜோத்தம - முதலில் மீனாகப் போகிறேன், பூமியை நிலை நிறுத்துவேன், ஆழமான கடலில் மறைந்து கிடக்கும் வேதங்களை மேலே எடுப்பேன்; உத்தமமான நாரதரே! கூர்மாவதாரத்தில் எடுத்து ஹேமகூடம் என்ற மலைக்கு ஒப்பான மந்தர மலையை, அமிர்தத்திற்காக நான் தாங்கி நிற்கப் போகிறேன்; இது இரண்டாவது அவதாரம் – என்பது போன்ற வரிகளில் தசாவதாரத்தின்போது செய்த செயல்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட விஷயங்கள் கூறும் இதிஹாஸம் போன்றும் (அதாவது வேத வாக்கியங்களால் கூறப்படும் ஸ்வரூபமானது பாஞ்சராத்ரம், புராணம், இதிஹாஸம் போன்றவற்றில் விரிவாகக் கூறப்படுகிறது. இவற்றைப் போன்றே ....),

**வ்யாக்யானம் –** "நீலதோயத மத்த்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா", "மநோமய: ப்ராண சரீரோ பாரூப" இத்யாதிகளாலே விக்ரஹத்தைச் சொன்னவித்தை, ஆதிமத்யாந்தம் விக்ரஹத்தைப் பலவிடங்களிலும் வர்ணித்துக் கொண்டு பேசுகையாலே "தெரியச் சொன்ன" என்கிறபடியே விசதமாக்கிச் சொன்ன வேதோப ப்ரும்ஹணமென்று இத்தைச் சொல்லுவர்களென்கை.

**விளக்கம் –** நாராயண அநுவாகம் - நீலதோயத மத்த்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா - கருத்த மேகத்தின் நடுவே காணப்படும் மின்னற்கொடி போன்ற ப்ரகாசம் உள்ள – என்றும், முண்டக உபநிஷத் (2-2-7) - மநோமய: ப்ராண சரீரோ பாரூப - தூய்மையான மனதால் அறியத்தக்கவன், ப்ராணனைச் சரீரமாகக் கொண்டவன் - என்றும் கூறப்படுவதான ஸர்வேச்வரனுடைய திவ்ய மங்கள விக்ரஹம் குறித்து, திருவாய்மொழியிலும் தொடக்கம், நடு, இறுதி ஆகிய அனைத்து இடங்களிலும் விரிவாக அருளிச்செய்யப்படுகிறது. ஆகவே, திருவாய்மொழி (6-9-11) – தெரியச் சொன்ன - என்பதற்கு ஏற்ப திவ்யமங்கள விக்ரஹத்தைக் குறித்து தெளிவாக உரைக்கும் நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்களை, வேத உபப்ரும்ஹணம் என்றே கூறுவார்கள்.

**வ்யாக்யானம் -** இப்ப்ரபந்த சதுஷ்டயமும், "முழுநீர் முகில் வண்ணன்", "மைப்படி மேனி", "பச்சைமேனி – தாமரைக்காடு", "நற்பூவைப் பூவீன்ற", "கார்கலந்த மேனி", "துயரறு சுடரடி", "புனக்காயா நிறத்த" என்று உபக்ரமமே பிடித்து உபஸம்ஹார பர்யந்தம் விக்ரஹத்தை வர்ணித்துக் கொண்டு செல்லாநிற்குமிறே. "தெரியச் சொன்ன" என்கிறவிது - திருவாய்மொழிச் சந்தையேயாகிலும் - உபப்ரும்ஹணத்வம் ப்ரபந்தாந்தரங்களுக்கும் ஒக்குமென்றே கொள்ள வேணும். வேதத்வம் சொல்லுகிறபோது ஸாதாரணமாகச் சொன்னது இங்குமொக்குமிறே. பஞ்சராத்ர புராணேதி ஹாஸங்களிலும் இப்ப்ரபந்தத்திலும் ஸ்வரூபாதி ஸமஸ்தார்த்தங்களும் சொல்லப்பட்டதேயாகிலும் இவ்வோ வர்த்தங்களிலே இவற்றுக்கு நோக்காகையாலே இப்படி வகையிட்டுச் சொல்லக் குறையில்லை.

**விளக்கம்** – திருவிருத்தம் (2) - முழுநீர் முகில் வண்ணன் – என்று தொடங்கி, இறுதியில் (94) – மைப்படி மேனி - என்றும்; திருவாசிரியம் (1) - பச்சைமேனி - என்று தொடங்கி, இறுதியில் (5) - தாமரைக்காடு - என்றும்; பெரியதிருவந்தாதி (1) – நற்பூவைப் பூவீன்ற - என்று தொடங்கி, இறுதியில் (86) - கார்கலந்த மேனி – என்றும்; திருவாய்மொழி (1-1-1) - துயரறு சுடரடி - என்று தொடங்கி, இறுதியில் (10-10-6) - புனக்காயா நிறத்த – என்றும் நான்கு ப்ரபந்தங்களிலும் தொடக்கம் முதலாக இறுதிவரை ஸர்வேச்வரனுடைய திருமேனியைக் குறித்து வர்ணித்தபடி உள்ளதைக் காணலாம். திருவாய்மொழி (6-9-11) - தெரியச் சொன்ன - என்ற வாக்கியம் திருவாய்மொழியில் மட்டுமே உள்ளது, ஆகவே மற்ற ப்ரபந்தங்களுக்கு இது பொருந்துமோ என்ற சந்தேகம் எழலாம். இது திருவாய்மொழியில் மட்டும் காணப்பட்டாலும், உபப்ரும்ஹணமாக உள்ள தன்மை என்பது, திருவாய்மொழி போன்றே மற்ற மூன்று ப்ரபந்தங்களுக்கும் உண்டு என்றே கொள்ளவேண்டும். சூர்ணை 39 தொடக்கமாக, வேதங்களின் தன்மையானது திருவாய்மொழி போன்றே மற்ற மூன்று ப்ரபந்தங்களுக்கும் உண்டு என்று கூறியது போன்றே இங்கு கொள்ளவேண்டும் என்று கருத்து. பாஞ்சராத்ரம், புராணம், இதிஹாஸம் மற்றும் நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு ப்ரபந்தங்கள் ஆகிய அனைத்திலும் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், குணம், விபூதி போன்ற பலவும் விரிவாக உரைக்கப்பட்டுள்ளன. புராணங்களுக்கு உலகங்கள் குறித்துக் கூறுதல், இதிஹாஸங்களுக்கு அவதாரங்கள் பற்றிக் கூறுதல் என்பது போன்று, நம்மாழ்வாரின் ப்ரபந்தங்களுக்கு ஸர்வேச்வரனுடைய திருமேனி குறித்துக் கூறுதல் என்று வகைப்படுத்துவதில் எந்தக் குறையும் இல்லை.

55. கல்பாதியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர்முகன் சந்தஸ்ஸும், மோஹசாஸ்த்ர ப்ரவர்த்தகன் பிணச்சுடலை வெந்தார் அக்கும் ஆறும் அணிந்து ஏறு ஏறிச் சுழன்று ஆடும் ஆலம் அமர் பிச்சுத் தெளிந்து தான் வணங்குமாறு உரைக்கக் கேட்ட ஸஜாதீயர் ப்ரஸாதமும் ஆர்ஷமூலம்.

**அவதாரிகை** - உபப்ர்மஹணத்வ ஸாம்யமுண்டானாலும், இவ்வாழ்வார் ப்ரபந்தங்களுக்குள்ள வேற்றம் ஆர்ஷமான புராணாதிகளுக்கில்லை யென்னுமிடத்தை அறிவிக்கைக்காக, உபயத்தினுடையவும் உத்பத்தி மூலங்களை அருளிச்செய்யக் கோலி, ப்ரதமம் ஆர்ஷப்ரபந்தோத்பத்தி மூலத்தை அருளிச்செய்கிறார் - (கல்பாதியிலென்று தொடங்கி).

**விளக்கம் -** ஆழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களுக்கும், மஹரிஷிகள் ஏற்படுத்திய க்ரந்தங்களுக்கும், “இவை இரண்டும் வேதங்களுக்கு உபப்ரும்ஹணங்கள் ஆகும்” என்ற தன்மை ஒத்திருத்தாலும், ஆழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்களுக்கு உள்ள ஏற்றம் என்பது ரிஷிகள் ஏற்படுத்திய புராணங்கள் போன்றவற்றுக்கு இல்லை என்பதை உணர்த்த திருவுள்ளம் பற்றினார். ஆகவே ஆழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள், ரிஷிகள் ஏற்படுத்திய புராணங்கள் ஆகிய இரண்டும் தோன்றுவதற்கான காரணத்தை அருளிச்செய்ய எண்ணினார். இதற்காக முதலில் ரிஷிகள் ஏற்படுத்திய க்ரந்தங்கள் தோன்றுவதற்கான காரணத்தை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது “யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா, தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே” என்கிறபடியே குணத்ரய வச்யனான தனக்கு காலபேதேந குணத்ரயமும் ஸங்கீர்ணமாயும், அதிலொரு குணம் ப்ரசுர மாயிருக்கும் விசேஷத்தையிட்டு “ஸங்கீர்ணாஸ் ஸாத்விகாச்சைவ ராஜஸாஸ் தாமஸாஸ் ததா” என்று ஸங்கீர்ணங்களென்றும் ஸாத்விகங்களென்றும் ராஜஸங்களென்றும் தாமஸங்களென்றும் சொல்லப்படுகிற அஹஸ்ஸுக்களாகிற கல்பங்களினுடைய ஆதிகளிலே உத்ரிக்தமான குணநுகுணமாக ப்ரதிபந்ந மானபடியே, “அக்நேச் சிவஸ்ய மஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம், ராஜஸேஷு ச மாஹாத்ம்யம் அதிகம் ப்ரஹ்மணோ விது:, ஸாத்விகேஷ்வத கல்பேஷு மஹாத்ம்யமதிகம் ஹரே:, தேஷ்வேவ யோக ஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம், ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாஞ்ச நிகத்யதே” என்கிறபடியே தாமஸ கல்பங்களில் அக்நி சிவர்களுடைய மஹாத்ம்யத்தையும், ராஜஸ கல்பங்களில் தன்னுடைய மாஹாத்ம்யத்தையும், ஸாத்விக கல்பங்களில் ஸர்வேச்வரனுடைய மாஹாத்ம்யத்தையும், ஸங்கீர்ண கல்பங்களில் பித்ர்ஸரஸ்வதிகளின் மஹாத்ம்யத்தையும் வர்ணியாநிற்கும் சதுர்முகனுடைய “மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ” என்கிறபடியே இவன் வாக்கிலே இச்சப்தம் பிறக்கைக்கடியான அநுக்ரஹ கார்யமான நினைவும். சந்தஸ்ஸென்கிறவிது நினைவென்றே இவ்விடத்தில் கொள்ளவேணும். ச்சதமென்றே நினைவுக்கும் வாசகம்; ச்சந்தஸ்ஸென்கிறவிதுவும் நினைவுக்கு வாசகமாக வந்தவிடங்களிலே கண்டு கொள்வது.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (கல்பாதியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர்முகன் சந்தஸ்ஸூம்) - மத்ஸ்யபுராணம் – யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா, தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே - முன்பு நான்முகனால் எந்தக் கல்பத்தில் எது உரைக்கப்பட்டதோ, அதனுடைய பெருமை என்பதே அதன் தன்மையாக உரைக்கப்பட்டது - என்று கூறுவதற்கு ஏற்ற மூன்று குணங்களுக்கு வசப்பட்டவனாகிய நான்முகனாகிய தனக்கு, காலத்தில் உள்ள வேறுபாடுகள் காரணமாக மூன்று குணங்களும் கலந்தும், அந்த மூன்று குணங்களில் ஓரோரு காலத்தில் ஒவ்வொன்று அதிகமாகவும் உள்ள தன்மையின் விளைவாக [இந்தத் தன்மையின் விளைவாக நான்முகனுக்கு ஏற்படும் நினைவுகள் என்பவை, ரிஷிகள் ஏற்படுத்திய புராணங்கள் போன்றவற்றுக்கு ஒரு காரணம் என்று கூற உள்ளார். இதனை மேலும் விவரிக்கிறார். அதாவது நான்முகனுக்கு அந்த நினைவுகள் எப்படி உண்டாகின்றன என்பதை அடுத்து உரைக்கிறார்]. முதலில் மூன்று குணங்கள் கலந்திருப்பதற்கான ப்ரமாணம் கூறுகிறார். மத்ஸ்ய புராணம் - ஸங்கீர்ணாஸ் ஸாத்விகாச்சைவ ராஜஸாஸ் தாமஸாஸ் ததா - மூன்று குணங்களும் கலந்துள்ளதாகவும், ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்றுள்ளவையாகவும் - என்பதற்கு ஏற்றபடி மூன்று குணங்களும் கலந்துள்ளதாகவும், ஸாத்விகம் என்றும் ராஜஸம் என்றும் தாமஸம் என்றும் கூறப்படும் நாள்களாகிற கல்பங்களுடைய தொடக்கத்தில் உண்டாகும் குணங்களைப் பின்பற்றி உண்டாக்கப்படுபவை [சில வரிகளுக்கு முன்பு, “அதிகமாகவும் உள்ள தன்மையின் விளைவாக” என்று உள்ளது காண்க. அதனுடன் இங்கு கூறப்பட்ட “உண்டாக்கப்படுபவை” என்பதைச் சேர்க்கவும். அதாவது “அதிகமாகவும் உள்ள தன்மையின் விளைவாக உண்டாக்கப்படுபவை” என்று பொருள் கொள்க. அடுத்து எவை உண்டாக்கப்படுகின்றன என்று கூறுகிறார்]. மத்ஸ்ய புராணம் - அக்நேச் சிவஸ்ய மஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம், ராஜஸேஷு ச மாஹாத்ம்யம் அதிகம் ப்ரஹ்மணோ விது:, ஸாத்விகேஷ்வத கல்பேஷு மஹாத்ம்யமதிகம் ஹரே:, தேஷ்வேவ யோக ஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம் கதிம், ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ருணாஞ்ச நிகத்யதே – தாமஸம் நிறைந்த நாள்களில் அக்னி, சிவன் மாஹாத்ம்யம் அதிகமாக பேசப்படுகிறது; ராஜஸம் அதிகமாக உள்ள நாள்களில் நான்முகனின் மாஹாத்ம்யம் அதிகமாக உரைக்கப்படுகிறது; ஸத்வம் மிகுதியாக உள்ள நாள்களில் ஸ்ரீஹரியின் மாஹாத்ம்யம் அதிகமாகப் பேசப்படுகிறது; ஸத்வம் அதிகமாக உள்ள நாள்களில் யோகஸித்தி உள்ளவர்கள் உயர்ந்த கதியான மோக்ஷம் அடைவர்; மூன்று குணங்களும் கலந்துள்ள நாள்களில் ஸரஸ்வதி மற்றும் பித்ருக்கள் பெருமை

கூறுப்படுகிறது - என்று கூறுவதற்கு ஏற்ப தாமஸம் அதிகமான உள்ள நாள்களில் அக்னி மற்றும் சிவன் ஆகியோரின் பெருமையும், ராஜஸம் அதிகமாக நாள்களில் நான்முகனாகிய தனது பெருமையும், ஸத்வம் அதிகமாக உள்ள நாள்களில் ஸர்வேச்வரனாகிய ஸ்ரீஹரியின் மாஹாத்ம்யத்தையும், மூன்று குணங்களும் கலந்துள்ள நாள்களில் ஸரஸ்வது மற்றும் பித்ருக்களுடைய மாஹாத்ம்யத்தையும் நான்முகன் வர்ணித்தபடி உள்ளான். இப்படிப்பட்ட நான்முகனுடைய, இராமாயணம் பாலகாண்டம் (2-30) - மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ - வால்மீகியே! இந்த வாக்கியம் எனது நினைவு காரணமாக உமக்கு வந்தது - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள நினைவும் [புராணங்கள் உண்டாக ஒரு காரணமாக உள்ளது என்று வாக்கியத்தை நிறைவு செய்து கொள்க. அடுத்த காரணத்தை அடுத்த பத்தியில் கூறுகிறார்]. சூர்ணையில் உள்ள "சந்தஸ்" என்ற பதம் "நினைவு" என்ற பொருளில் வந்ததாகவே கொள்ளவேண்டும். "சந்தம்" என்பது நினைவைக் குறிப்பதாகும். ஆகவே "ச்சந்தஸ்" என்பதும் நினைவு என்றே கொள்ளப்பட வேண்டும் (ஆக இப்படியாக உள்ள நான்முகனின் நினைவு என்பது புராணங்கள் வெளிப்பட ஒரு காரணம் என்றார். இனி அடுத்த காரணத்தை கூறுகிறார்).

**வ்யாக்யானம்** – ஆக, இப்படியிருந்துள்ள சதுர்முகன் நினைவும், "அந்யம் தேஹி வரம் தேவ ப்ரஸித்தம் ஸர்வஜந்துஷு, மர்த்த்யோ பூத்வா பவாநேவ மாமாராதய கேசவ. மாம் வஹஸ்வ ச தேவேச! வரம் மத்தோ க்ருஹாணச, யேநாஹம் ஸர்வபூதாநாம் பூஜ்யாத் பூஜ்யதரோபவம்" என்று வரம் வேண்டின ஸ்வோத்கர்ஷ காமனாகையாலே, "த்வஞ்ச ருத்ர! மஹாபாஹோ மோஷசாஸ்த்ராணி காரய" என்று பகவான் நியோகித்தது வ்யாஜமாக ஆகமாதி மோஹ சாஸ்த்ர ப்ரவர்த்தகனான ருத்ரன்,

**விளக்கம்** - (மோஹசாஸ்த்ர ப்ரவர்த்தகன்) – இப்படியாக உள்ள நான்முகனின் நினைவும். அந்யம் தேஹி வரம் தேவ ப்ரஸித்தம் ஸர்வஜந்துஷு, மர்த்த்யோ பூத்வா பவாநேவ மாமாராதய கேசவ. மாம் வஹஸ்வ ச தேவேச! வரம் மத்தோ க்ருஹாணச, யேநாஹம் ஸர்வபூதாநாம் பூஜ்யாத் பூஜ்யதரோபவம் - தேவனே! கேசவா! தேவர்களுடைய தலைவனே! நீ மனிதனாக வந்து என்னை உனது தலைவனாக ஏற்று ஆராதிக்கவேண்டும். என்னிடம் வரங்களை நீ பெறவேண்டும்; எந்த ஒரு வரம் காரணமாக அனைத்து உயிர்களிலும் வணங்கப்படுபவர்களைக் காட்டிலும் உயர்ந்த வணங்கப்படுபவனாக நான் மாறுவேனோ, அந்த வரத்தை நீ எனக்கு அளிக்கவேண்டும் -

என்று வரம் வேண்டிய சிவன், தனது பெருமையில் மிகவும் நாட்டம் உள்ளவன் ஆவான்; ஆகவே அவன், த்வஞ்ச ருத்ர! மஹாபாஹோ மோஷசாஸ்த்ராணி காரய - பரந்த தோள்கள் உள்ள ருத்ரனே! மயக்க வைக்கும் சாஸ்த்ரங்களை நீ ஏற்படுத்துவாயாக - என்று ஸர்வேச்வரனால் கட்டளை இடப்பட்டதையே ஒரு காரணமாக வைத்துக் கொண்டு ஆகமம் போன்ற மயங்க வைக்கும் சாஸ்த்ரங்களை சிவன் ஏற்படுத்தினான்.

**வ்யாக்யானம்** - "பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகன்" என்றும், "சுடலையில் சுடுநீறன்" என்றும், "வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யிற் பூசி" என்றும், "அக்கும் புலியினதளுமுடையார்" என்றும், "ஆறும் பிறையு மரவமுமடம்பும் சடை மேலணிந்து" என்றும், "ஏறேறி" என்றும், "சுழன்றாடும் கொன்னவிலும் மூவிலைவேல் கூத்தன்" என்றும், "ஆலமமர் கண்டத்தரன்" என்றும் சொல்லுகிறபடியே தம: ப்ரசுரனாகையாலே நிஹீனவ்ருத்திபரனாய், "உந்மத்தவத் உந்மத்த: ப்ரபு: ப்ரபவதாமபி, ராத்ரௌ ச்மசாநேப்யடஸி தத் கிமேதத் தவேச்வர:" இத்யாதியாலே, "ச்மசாந பர்யடநம் தொடக்கமான நிஹீநவ்ருத்திகளை நீ அநுஷ்டிக்கைக்கு ஹேதுவென்" என்று தேவி கேட்கும்படி ச்மசாநங்களிலே ஸஞ்சரித்து, சவ பஸ்மத்தை உடம்பெங்கும் பூசி அஸ்த்தி மாலையைப் பூண்டு வ்யாக்ர சர்மத்தை யுடுத்தி, நதீ சந்த்ர ஸர்ப்பாதிகளை ஜடையிலே யணிந்து, ஸர்வேச்வரன் தன் ஸார்வஜ்ஞ்யாநுகுணமாக வேதமயனான விஹகேச்வரனை மேற்கொண்டு உலாவுமா போலே தன்னறிவு கேட்டுக்கநுகுணமாக ஜ்ஞாந ஹீநமான ரிஷபத்தை வாஹநமாக உடையவனாய், மத்தர் களித்து ந்ருத்தம் பண்ணுமோபாதி சக்ர ப்ரமம் போலே சுழன்றாடுவது, விஷத்தைக் கண்டத்திலே தரிக்கையாலே நம்மிற்காட்டில் அதிசயித சக்திகரில்லை யென்று தன்னை ஈச்வரனாக நினைத்திருப்பதாகிற ப்ராந்தி நீங்கி,

**விளக்கம்** – (பிணச்சுடலை வெந்தார் அக்கும் ஆறும் அணிந்து ஏறு ஏறிச் சுழன்று ஆடும் ஆலம் அமர் பிச்சுத் தெளிந்து). இப்படிப்பட்ட சிவன், பெரியதிருமொழி (2-6-9) - பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகன் - என்றும், பெரியதிருமொழி (10-1-5) - சுடலையில் சுடுநீறன் - என்றும், பெரியதிருமொழி (1-5-8) – வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யிற் பூசி - என்றும், பெரியதிருமொழி (9-6-1) - அக்கும் புலியினதளுமுடையார் - என்றும், பெரியதிருமொழி (6-7-9) - ஆறும் பிறையு மரவமுமடம்பும் சடை மேலணிந்து, இரண்டாம் திருவந்தாதி (63) - ஏறேறி - என்றும், பெரிய திருமடல் (70) - சுழன்றாடும்

கொன்னவிலும் மூவிலைவேல் கூத்தன் - என்றும், முதல் திருவந்தாதி (4) – ஆலமமர் கண்டத்தரன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தாமஸகுணம் நிறைந்தவன் என்பதால் தாழ்ந்த செயல்களுடன் கூடியவனாக உள்ளவன். உந்மத்தவத் உந்மத்த: ப்ரபு: ப்ரபவதாமபி, ராத்ரௌ ச்மசாநேப்யடஸி தத் கிமேதத் தவேச்வர: - ஈச்வரனே! பைத்தியத்தன்மை இல்லாதவரும், ப்ரபுக்கள் அனைவருக்கும் ப்ரபுவும் ஆகிய நீவிர் பித்துப் பிடித்தவர் போன்று இரவில் இடுகாட்டில் அலைகிறீர்; இது போன்ற நிலை ஏற்பட்டதன் காரணம் என்ன - என்று கூறுவதற்கு ஏற்ப, பார்வதியானவள் சிவனாகிய தன்னிடம், "இடுகாட்டில் திரிந்தபடி இருத்தல் போன்ற தாழ்வான செயல்களை நீவீர் செய்வதற்குக் காரணம் என்ன?", என்று கேட்கும்படியாக, மயானத்தில் திரிந்தபடி, எரிந்த பிணங்களுடைய சாம்பலைத் தனது உடல் முழுவதும் பூசியபடி, எலும்புத்துண்டுகளால் ஆகிய மாலையை அணிந்து கொண்டு, புலித்தோலை ஆடையாக உடுத்தியபடி, கங்கை சந்த்ரன் மற்றும் நாகத்தைத் தனது ஜடையில் தரித்தபடி, ஸர்வேச்வரன் தன்னுடைய அனைத்தும் அறிந்த தன்மைக்கு ஏற்ப வேதமயமான கருடனில் ஏறி ஸஞ்சரிப்பது போன்று சிவனாகிய தனது அறிவு கேட்டுக்கும் ஏற்றபடியாக அறிவில் குறைந்த ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு திரிந்தபடி, மனநிலை சரியில்லாதவர்கள் வேடிக்கையாக ஆடுவது போன்றும் சக்கரம் சுற்றுவது போன்றும் சுழன்று ஆடியபடி, கொடிய விஷத்தைத் தனது கழுத்தில் நிறுத்தியதன் காரணமாகத் தன்னைக் காட்டிலும் அதிக சக்தி உள்ளவர் வேறு யாரும் இல்லை என்று தன்னை எண்ணியபடி உள்ள சிவன், இப்படிப்பட்ட மயக்கம் நீங்கப் பெற்று.

**வ்யாக்யானம்** - ஸத்வ குணம் தலையெடுத்து, ஸத்வம் விஷ்ணு ப்ரகாசகமாகையாலே, "ஆல்மேல் வளர்ந்தானைத் தான் வணங்குமாறு நால்வர்க்கு மேலையுகத்துரைத்தான்" என்கிறபடியே அகடிதகடநா ஸமர்த்தனான ஸர்வேச்வரனைத் தான் உபாஸிக்கும் ப்ரகாரத்தை உபதேசிக்கக் கேட்டவர்களாகையாலே,

**விளக்கம்** – (தான் வணங்குமாறு உரைக்கக் கேட்ட) – [மயக்கம் நீங்கப் பெற்ற சிவன்] ஸத்வகுணம் மேம்பட்டு, ஸத்வகுணம் என்பது மஹாவிஷ்ணுவை உணர்த்துவது என்பதால், நான்முகன் திருவந்தாதி (17) - ஆல்மேல் வளர்ந்தானைத் தான் வணங்குமாறு நால்வர்க்கு மேலையுகத்துரைத்தான் - என்பதற்கு ஏற்ப யாராலும் செய்ய இயலாதவற்றைச் செய்யவல்லவன் ஸர்வேச்வரன் என்றுள்ள ஸர்வேச்வரனை,

சிவனாகிய தான் வணங்கும் விதத்தைத் தன்னிடமிருந்து கேட்டறிந்து கொண்டதாலும் [அதாவது சிவனாகிய தான், மஹாவிஷ்ணுவை வணங்கும் விதத்தைக் குறித்து தன்னிடம் ரிஷிகள் கேட்டு அறிந்ததால்]

**வ்யாக்யானம்** - ஸத்வநிஷ்ட்டராய் ருஷித்வத்தால் வந்த ஸாஜாத்யத்தையு முடையரான அகஸ்த்ய புலஸ்த்ய தக்ஷ மார்க்கண்டேயர்கள் நால்வரிலே ஒருவனான புலஸ்த்யன், "புராண ஸம்ஹிதாகர்த்தா பவாந் வத்ஸ பவிஷ்யதி, தேவதா பாரமார்த்த்யஞ்ச யதாவத் வேத்ஸ்யதே பவாந்" என்று ஸ்ரீபராசரபகவானுக்கு வரப்ரநாநம் பண்ணுகையாலே ஸஜாதீயரான ருஷிகள் ப்ரஸாதமும்

**விளக்கம்** - (ஸஜாதீயர் ப்ரஸாதமும்) – இவற்றைக் கேட்டறிந்த காரணத்தால் ஸத்வகுணத்தில் மட்டுமே எப்போதும் நிலைநிற்பவர்களும், மஹரிஷிகள் என்றுள்ள தங்கள் இனத்துக்கு ஏற்றதான தன்மை கொண்டவர்களும் ஆகிய அகஸ்தியர், புலஸ்த்யர், தக்ஷர், மார்க்கண்டேயர் ஆகிய நால்வரில் ஒருவரான புலஸ்த்யர் என்பவர், ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (1-1-25) – புராண ஸம்ஹிதாகர்த்தா பவாந் வத்ஸ பவிஷ்யதி, தேவதா பாரமார்த்த்யஞ்ச யதாவத் வேத்ஸ்யதே பவாந் - பராசரே! நீவிர் புராணம், ஸம்ஹிதைகளுக்குக் கர்த்தா ஆகப்போகிறீர் - என்று பராசரபகவானுக்கு வரம் அளித்த காரணத்தால் தங்கள் இனத்தவர்களாக உள்ள ரிஷிகளின் க்ருபையும் [நான்முகனின் நினைவு, சிவனுடைய உபதேசம், தங்களைப் போன்ற ரிஷிகளின் க்ருபை ஆகியவையே ரிஷிகள் புராணங்களை ஏற்படுத்தக் காரணம் ஆகும் என்கிறார்],

**வ்யாக்யானம்** - ருஷி ப்ரோக்தங்களான ப்ரபந்தங்களினுடைய உதயத்துக்கு மூலமென்கை.

**விளக்கம்** – (ஆர்ஷ மூலம்) – [மேலே கூறப்பட்ட பலவும்] ரிஷிகள் உண்டாக்கிய புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் தோன்றுவதற்குக் காரணங்கள் ஆகின்றன.

**வ்யாக்யானம்** - ஸ்ரீவால்மீகி பகவானுக்கு அநுக்ரஹகரனான ப்ரஹ்மாவைப் போலே விஜாதீயனன்றிக்கே ஸ்ரீபராசரபகவானுக்கு வரப்ரதனான புலஸ்த்யனும் ருஷியாகையாலே இவனுக்கு ஸஜாதீயனென்னத் தட்டில்லையிறே. மற்றுண்டான இதிஹாஸ புராண கர்த்தாக்களுடைய ப்ரபந்தங்களுக்கு மூலமும் ஆராய்ந்தால்

இப்புடையிலே யாயிருக்கு மத்தனையல்லது அத்வாரக பகவத் ப்ரஸாதம் ஒரு விஷயத்திலுமில்லை யென்று நினைத்திறே ஆர்ஷமூல மென்று திரளவருளிச் செய்தது.

**விளக்கம்** - அதாவது வால்மீகி பகவானுக்கு க்ருபை செய்த நான்முகன் போன்று வேறு இனமாக அல்லாமல், பராசர பகவானுக்கு க்ருபை செய்த புலஸ்த்யரும் பராசரர் போன்றே ரிஷி என்பதால், அவரைப் பராசரரின் இனம் என்று கூறுவதில் குற்றம் இல்லை. மேலும் மனிதர்களால் ஏற்பட்ட இதிகாசம் மற்றும் புராணங்களைச் செய்த கர்த்தாக்களுடைய ப்ரபந்தங்களுக்கு மூலம் எது என்று ஆரய்ந்தால், இது போன்றே இருக்கும் அல்லாமல், நேரடியாகப் பகவானின் க்ருபை என்பது எந்த ஒரு ப்ரபந்தத்துக்கும் இல்லை என்பதால் “ஆர்ஷ மூலம் - ரிஷிகள் உண்டாக்கியது” என்றார்.

56. பரம ஸத்வத்தோடே உள்ளி உரைக்கும், நிறை ஞானத்து அயனாம் சிவனாம் திருமால் அருள்கொண்டு இவர் பாடினார்.

**அவதாரிகை** - இனி இவ்வாழ்வார் ப்ரபந்தங்களுக்கு மூலம் இன்னதென்கிறார் (பரமஸத்வேத்யாதியால்).

**விளக்கம்** - இனி நம்மாழ்வார் ப்ரபந்தங்கள் உண்டாகக் காரணம் என்ன என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கல்பாதியில் உத்ரிக்தமான குணாநுகுணமாகத் தோற்றிற்று வர்ணிக்குமென்றதுக்கு எதிர்த்தட்டாம்படி பரமஸத்வத்தோடே “உள்ளியுரைத்த” என்று ரஜஸ் தமஸுக்களோடும் தத்ஸஹபடிதமான ஸத்வத்தோடும் அந்வயமின்றிக்கே, “பரம ஸத்வ ஸமாச்ரய:” என்கிறபடியே தனக்குமேல் இல்லை யென்னும்படியான சுத்த ஸத்வ யுக்தனாய், தான் சொல்லிற்றடைய வேதார்த்தமா யிருக்கச்செய்தே சடக்கெனச் சொன்னால் “வாய் வந்தபடி சொன்னான் நிரூபியாதே” என்பர்களென்று சேதனர்பக்கல் வாத்ஸல்யாதிசயத்தாலே இவர்களுக்கு ஆப்திக்குறுப்பாக “நெறியுள்ளியுரைத்த” என்கிறபடியே வேதமார்க்கத்தை விசாரித்து அருளிச்செய்யுமவனுமாய், பிச்சுத் தெளிந்து சொன்னவன் வார்த்தை கேட்டுண்டான ஜ்ஞாநமாத்ரத்தை யுடையவர்களைப் போலன்றியே “நிறை ஞானத்தொரு மூர்த்தி” என்கிறபடியே பரிபூர்ண ஜ்ஞானத்தை

நிரூபகமாகவுடையனுமாய் "அயனாம் சிவனாம் திருமாலால்" என்கிறபடியே கீழ்ச்சொன்ன ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் அந்தர்யாமியாய் நின்று அவ்வவகார்யங்களை நிர்வஹிக்கையாலே தத்தச்சப்த வாச்யனாய் ஸர்வாதிகனான ஶ்ரிய:பதியினாலே, "அருளப்பட்ட சடகோபன்" என்கிறபடியே "மயர்வற மதிநலம் அருளப்பெற்றவராய்", "அருள் கொண்டாயிர மிந்தமிழ் பாடினான்" என்கிறபடியே அந்த அத்வாரக பகவத் ப்ரஸாதத்தை மூலமாகக் கொண்டு இவர் இப் ப்ரபந்தங்கள் பாடியருளினாரென்கை.

**விளக்கம்** – (பரம ஸத்வத்தோடே) - கல்பத்தின் தொடக்கத்தில் மிகுதியாக உள்ள குணங்களுக்கு ஏற்றபடியாகத் தோன்றியதை உரைப்பது என்ற நிலைக்கு எதிர்த்தட்டாக உள்ள பரமஸத்வத்துடன் கூடியபடியே, திருவாய்மொழி (1-3-5) - உள்ளி உரைத்த - என்பதற்கு ஏற்ப ரஜஸ் மற்றும் தாமஸ குணங்களுடன் ஒன்றாகவே பேசப்படுகின்ற ஸத்வகுணத்துடன் எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லாமல், ஸ்தோத்ரரத்னம் (12) - பரம ஸத்வ ஸமாச்ரய: - யார் ஒருவன் பரமஸத்வமும் அண்டி நிற்கும்படியாக உள்ளவனோ - என்பதற்கு ஏற்ப, தனக்கு மேல் யாரும் இல்லை என்னும்படியாக சுத்த ஸத்வத்தை உடையவன். (உள்ளி உரைக்கும்) - தன்னால் கூறப்பட்டவை அல்லது தனது ஆணைகளே ஆன வேதங்களின் ஆழ்பொருளாக உள்ளபோதிலும், சட்டென்று அவற்றை உரைத்தால், "இவன் எதனையும் ஆராயாமல் வாய்க்கு வந்தபடி உரைக்கிறான்" என்று பழி கூறுவர் என்பதற்காக, அனைத்து உயிர்கள் மீதும் கொண்ட வாத்ஸல்யத்தின் மிகுதி காரணமாக "இவர்கள் நம்பவேண்டும்" என்பதற்காக, திருவாய்மொழி (1-3-5) – நெறி உள்ளி உரைத்த – என்பதற்கு ஏற்ப வேதநெறியை நன்றாக ஆராய்ந்து அருளிச்செய்பவன். (நிறை ஞானத்து) - மனக்குழப்பம் அல்லது புத்தி தடுமாற்றம் நீங்கி சிவன் கூறிய சொற்கள் கேட்டு ஏற்பட்ட ஞானத்தை மட்டுமே உடையவர்கள் போன்று அல்லாமல், (அயனாம் சிவனாம் திருமாலால்) - திருவாய்மொழி (4-8-6) – அயனாம் சிவனாம் திருமாலால் - என்பதற்கு ஏற்ப மேலே உரைக்கப்பட்ட நான்முகன் மற்றும் சிவன் போன்றவர்களுக்கு அந்தர்யாமியாக இருந்து அவர்கள் செய்கின்ற செயல்களான ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரத்தை நிர்வாகம் செய்பவன் என்பதால் "நான்முகன், சிவன்" என்று கூறினால் அது தன்னையே உரைக்கும் என்னும்படி அனைத்தையும் நியமிக்கும் மஹாலக்ஷ்மியின் நாயகன். இப்படிப்பட்ட ஸர்வேச்வரனால் திருவாய்மொழி (8-8-1) - அருளப்பட்ட சடகோபன் - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருள் - என்னும்படி க்ருபை செய்யப்பட்ட இவர், கண்ணிநுண்சிறுத்தாம்பு (8) - அருள்

கொண்டாயிர மிந்தமிழ் பாடினான் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய நேரடியான கருணை மூலம் ப்ரபந்தங்களை பாடி அருளினார்.

57. கருவுள்வேறலாமை அரனயனெச் செய்யுவைபோலே மூவுருவா முதல்வன் துப்பரவாலே பரமகவிகளால் பாடுவியாது நேர்படச் சொல்லும் நீர்மையிலாவென்னைத் தன்னாக்கி யென் நா முதல் வந்து புகுந்து தப்புதலறத் தன்னை வைகுந்தனாகத் தன் சொல்லால் தானே துதித்து மலக்கு நாவியல் மொய்ய சொல்லால் சொல்லவல்லே னென்று நானுஞ் சொல்லி நாடுங் கையெடுக்கும்படி என் சொல்லால் யான் சொன்ன இன்கவியென் பித்தா னென்றாரிறே.

**அவதாரிகை** - அவர்களுடைய ப்ரஸாதம் ஆர்ஷமூலமென்னுமிடம் "மச்சந்தாதேவ", "புராண ஸம்ஹிதா கர்த்தா" இத்யாதியாலே ப்ரபந்த வக்தாக்களானவர்கள் வசந ஸித்தமாயிருந்தது; அப்படியே இவர் ப்ரபந்தங்களுக்கு மூலம் பகவத் ப்ரஸாத மென்னுமது இவர் வசந ஸித்தமோ வென்னுமபேக்ஷையிலே அத்தை மூதலிக்கிறார் (கருவுளென்று தொடங்கி).

**விளக்கம்** – நான்முகனுடைய க்ருபை காரணமாக வால்மீகி முனிவர் இராமாயணத்தை அருளிச்செய்தார் என்பதை இராமாயணம் பாலகாண்டம் (2-30) - மச்சந்தாதேவ - வால்மீகி முனிவரே! இந்த வாக்கியம் எனது நினைவு காரணமாக உமக்கு வந்தது – என்றும், புலஸ்த்யருடைய க்ருபை காரணமாக பராசர மஹரிஷி ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை அருளிச்செய்தார் என்பதை ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-25) - புராண ஸம்ஹிதா கர்த்தா - பராசரரே! நீவிர் புராண ஸம்ஹிதைகளைச் செய்பவராக ஆவீர் - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம் நாம் அறியலாம். இதன் மூலம், நான்முகன் உள்ளிட்டவர்களுடைய க்ருபையால் இதிஹாஸ புராணங்கள் ஏற்பட்டன என்றும், அவையே அவற்றுக்குக் காரணமாக உள்ளன என்றும் தெளிவாகிறது. இது போன்று நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்களுக்குப் பகவத்க்ருபை என்பது நேரடிக் காரணம் என்பதை உணர்த்தவல்லதாக ஆழ்வாருடைய ப்ரபந்த வரிகள் ஏதும் உள்ளனவோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிச்ய ப்ரஜாபதே”, “கல்பாந்தே ருத்ரரூபீ யோ க்ரஸதே ஸகலம் ஜகத்”, “விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமி ததேஜஸ:” என்கிறபடியே, “திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்” என்றும், “வெள்ளை நீர்ச்சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்” என்றும் சொல்லும்படி ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு அந்தர்யாமியாய்க் கொண்டு ஸ்ருஷ்டி ஸம்ஹாராதிகளைப் பண்ணா நிற்கச் செய்தே, “அரனயனென வுலகழித்து அமைத்துளனே” என்று ஜகத்ஸ்ருஷ்டி வேதோபதேசம் ஜகத்ஸம்ஹாரம் த்ரிபுர தஹந மாகிற விவற்றை ப்ரஹ்ம ருத்ரர்கள் தாங்களே செய்தார்களாக லோகத்தார் சொல்லும்படி செய்தாப்போலே,

**விளக்கம்** - (கருவுள் வேறலாமை) - ஸ்ரீவிஷ்ணுதர்மம் (69-50) - ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிச்ய ப்ரஜாபதே - நான்முகனே! உனக்கு அந்தர்யாமியாக இருந்தபடி நான் அனைத்தையும் ஸ்ருஷ்டிக்கப் போகிறேன் – என்றும், கல்பாந்தே ருத்ரரூபீ யோ க்ரஸதே ஸகலம் ஜகத் - யார் ஒருவன் கல்பத்தின் முடிவில் ருத்ரன் ரூபத்தில் நின்றபடி அனைத்தையும் ஸம்ஹாரம் செய்கிறானோ - என்றும், மஹாபாரதம் கர்ணபர்வம் - விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமி ததேஜஸ: – அளவற்ற தேஜஸ்ஸை உடைய ருத்ரனுக்கு விஷ்ணு அந்தராத்மாவாக உள்ளான் – என்றும் கூறுவதற்கு ஏற்றபடியும்; திருவாய்மொழி (5-10-8) - திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும் – என்றும், திருவாய்மொழி (5-10-4) - வெள்ளை நீர்ச்சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும் - என்றும் கூறுவதற்கு ஏற்றபடியும்; நான்முகன் மற்றும் ருத்ரனுக்கு அந்தராமியாக நின்று ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரங்களை ஸர்வேச்வரனாகிய விஷ்ணு செய்தபடி உள்ளபோதிலும், (அரன் அயன் எனச் செய்யுமவை போலே) - திருவாய்மொழி (1-1-8) – அரனயனென வுலகழித்து அமைத்துளனே - என்றுள்ள பாசுரத்திற்கு ஏற்ப அனைத்து உலகங்களையும் படைத்தல், வேதங்களை உபதேசித்தல், அனைத்தையும் ஸம்ஹாரம் செய்தல், மூன்று புரங்களையும் எரித்தல் போன்றவற்றை விஷ்ணுவாகிய தான் செய்தபோதிலும், ருத்ரன் போன்றவர்கள் செய்தார்கள் என்னும்படியாக உலகில் உள்ளவர்கள் கூறும்படியாகச் செய்வது போன்று.

**வ்யாக்யானம்** - "மூவுருவா முதல்வனே" என்று ஸ்வேந ரூபேண நின்று கார்யம் செய்யுமிடத்தில் தனக்குத்தானே அடியானாப்போலே ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு தானே அடியாய் அவர்களை சரீரமாகக் கொண்டு நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணி அவர்கள் செய்தார்களென்று ப்ரஸித்தமாக்குமவன்.

**விளக்கம்** – (மூவுருவா முதல்வன்) - திருவாய்மொழி (7-9-2) – மூவுருவா முதல்வனே - என்பதற்கு ஏற்ப விஷ்ணுவாகிய தனது ரூபத்துடன் நின்று செயலாற்றும்போது தனக்குத்தானே காரணனாக உள்ளது போன்று, நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியவர்களுக்கும் தானே காரணனாக நின்று, அவர்களைத் தனது சரீரமாகக் கொண்டு நின்று, ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரம் ஆகியவற்றைத் தானே செய்து, அவர்கள் செய்தவர் என்று ப்ரஸித்தம் ஆக்குபவன்.

**வ்யாக்யானம்** – "திறத்துக்கே துப்பரவாம்" என்கிறபடியே ஏதேனுமொரு காரியத்திலும் வந்தால் ஒரு த்ருணத்தைக் கொண்டு கார்யம் தலைக்கட்டிக் கொள்ளவல்ல ஸாமர்த்த்யத்தையு முடையவனாகையாலே "இன்கவி பாடும் பரமகவிகளால் தன் கவிதான் தன்னைப் பாடுவியாது" என்று சொல்லுகிறபடியே தன்னைக் கவிபாடுவிக்க வேண்டினால் அதுக்கீடான ஜ்ஞாநசக்த்யாதிகளால் குறைவற்றவர்களாய் இனிய கவிகளைப் பாடவல்ல மேலான கவிகளான வ்யாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகளும், செந்தமிழ் பாடுவாரான முதலாழ்வார்களு முண்டாயிருக்க, அவர்களைக் கொண்டு பாடுவித்துக் கொள்ளாதே,

**விளக்கம்** – (துப்புரவாலே) - திருவாய்மொழி (7-9-9) - திறத்துக்கே துப்பரவாம் – என்பதற்கு ஏற்ப எந்த ஒரு செயலைச் செய்யும்படி இருந்தாலும், ஒரு சிறிய புல்லைக் கொண்டே அந்தச் செயலைச் செய்து முடிக்கும்படியான சாமர்த்யம் உள்ளவன். ஆகவே, (பரமகவிகளால் பாடுவியாது) – திருவாய்மொழி (7-9-6) - இன்கவி பாடும் பரமகவிகளால் தன் கவிதான் தன்னைப் பாடுவியாது – தன்னைக் குறித்துக் கவி பாடும்படியாகச் செய்யவேண்டும் என்றால், அதற்குத் தகுதியான ஞானம், சக்தி போன்ற பலவும் குறைவில்லாமல் உள்ளவர்களும், இனிமையான கவிகளைப் புனையவல்லவர்களும் ஆகிய கவிகளான வ்யாஸர், பராசரர், வால்மீகி முதலானவர்களும், செந்தமிழில்

பாடுபவர்களான முதலாழ்வார்களும் உள்ளபோதிலும், அவர்களைக் கொண்டு பாடும்படிச் செய்யாமல்,

**வ்யாக்யானம்** – "நேர்பட யான் சொல்லும் நீர்மையிலாமையில்" என்கிறபடியே தனக்குத் தகுதியாம்படி வாய்க்கச் சொல்லுகைக்கடியான ஜ்ஞாநாதி குணங்கள் எனக்கின்றிக்கே யிருக்க, "என்னைத் தன்னாக்கி" என்கிறபடியே என்னைத் தன்னோடொத்த ஜ்ஞாந சக்திகளை யுடையனாம்படி பண்ணி, "என் நா முதல் வந்து புகுந்து" என்கிறபடியே என்னுடைய வாக்ப்ரவ்ருத்திக்கு முதலாய் வந்து புகுந்து. "என்னாகியே தப்புதலின்றி" என்கிறபடியே என்னை உபகரணமாகக் கொண்டு பாடாநிற்கச் செய்தே என்னுடைய ஸ்பர்சத்தால் வந்த தோஷம் தட்டாதபடியாகக் கொண்டு, "தன்னை வைகுந்தனாகப் புகழ" என்கிறபடியே நான் புகழ்ந்தவித்தாலே வைகுண்டநாதனாய் அங்குத்தை ஐச்வர்யம் பெற்றானாக நினைத்து, "தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த" என்றும், "தன்னைத் தானே துதித்து" என்றும் சொல்லுகிறபடியே, 'சொல்லும் தன்னது, சொன்னானும் தான், சொல்லிற்றும் தன்னை' என்னும்படி எனக்கு அந்தராத்மாவாய் நின்று தன்னைத்தானே ஸ்துதித்து.

**விளக்கம்** – (நேர்பட சொல்லும் நீர்மையிலா வென்னைத் தன்னாக்கி) - திருவாய்மொழி (7-9-5) - நேர்பட யான் சொல்லும் நீர்மையிலாமையில் - என்று கூறுவதற்கு ஏற்ப தனக்குத் தகுதியானபடி ஞானம் போன்ற ஏதும் எனக்கு [நம்மாழ்வார்] இல்லாமல் உள்ளபோதிலும், திருவாய்மொழி (7-9-1) - என்னைத் தன்னாக்கி – என்பதற்கு ஏற்ப என்னைத் தனக்கு ஒத்தபடியான ஞானம், சக்தி போன்றவற்றைக் கொண்டவனாகும்படிச் செய்து, (யென் நா முதல் வந்து புகுந்து) - திருவாய்மொழி (7-9-3) - என் நா முதல் வந்து புகுந்து - என்பதற்கு ஏற்ப என்னுடைய வாக்கின் செயல்களுக்கு ஏற்றபடி வந்து நின்று, (தப்புதல் அற) - திருவாய்மொழி (7-9-4) – என்னாகியே தப்புதலின்றி - என்பதற்கு ஏற்ப என்னை ஒரு சாதனமாக வைத்துக்கொண்டு தன்னைப் பாடும்படிச் செய்தபோதிலும் என்னுடைய மனித சரீரத் தொடர்பு காரணமாக ஏற்படவல்ல தோஷம் ஏதும் உண்டாகாதபடி, (தன்னை வைகுந்தனாக) – திருவாய்மொழி (7-9-7) - தன்னை வைகுந்தனாகப் புகழ - என்பதற்கு ஏற்ப நான் புகழ்ந்த இவை மூலம் மட்டுமே தான் தன்னை ஸ்ரீவைகுண்டநாதன் என்று கொண்டு அங்குள்ள ஐச்வர்யங்களைத் தான் பெற்றதாக எண்ணியபடி, (தன் சொல்லால் தானே துதித்து) - திருவாய்மொழி (7-9-2) -

தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த - என்றும், திருவாய் (10-7-2) – தன்னைத் தானே துதித்து - என்றும் உள்ளதற்கு ஏற்ப, “கூறப்பட்ட சொற்கள் தன்னுடையது, கூறியவனும் தானே, கூறப்பட்டதும் தன்னைக் குறித்தே ஆகும்” என்றபடி எனக்கு அந்தர்யாமியாக நின்று, தன்னைக் குறித்து தானே ஸ்துதித்துக் கொண்டு [நிற்கும் ஸர்வேச்வரன்…]

**வ்யாக்யானம்** – “வலக்கையாழி யிடக்கைச் சங்குமிவையுடை மால்வண்ணனை மலக்கு நாவுடையேற்கு” என்று ஒன்றுக்கும் விக்ருதனாகாத ஸர்வாதிகனை என்னுக்தி மாத்ரத்தாலே விக்ருதனாம்படி பண்ணவல்ல நாவீறுடைய வெனக்கென்றும், “நாவியலாலிசை மாலைகளேத்தி நண்ணப் பெற்றேன்” என்று நெஞ்சொழிய வாக் ப்ரவ்ருத்தி மாத்ரத்தாலே இசைமாலைகளைக் கொண்டு ஸ்துதித்துக் கிட்டப் பெற்றே னென்றும், “மொய்ய சொல்லாலிசை மாலைகளேத்தி யுள்ளப் பெற்றேன்” என்று செறிந்த சொல்லாலேயுண்டாய் இசையோடே கூடியிருந்துள்ள தொடைகளாலே யேத்தி அநுஸந்திக்கப் பெற்றேனென்றும், “வானக்கோனைக் கவி சொல்ல வல்லேற்கு” என்று ஸ்ரீவைகுண்டநாதனைக் கவி சொல்லவல்ல வெனக்கென்றும் நான் பாடினேனாக நினைத்து நானும் சொல்ல,

**விளக்கம்** – (மலக்கு) திருவாய்மொழி (6-4-9) - வலக்கையாழி யிடக்கைச் சங்குமிவையுடை மால்வண்ணனை மலக்கு நாவுடையேற்கு - என்பதற்கு ஏற்ப எந்தச் சூழ்நிலையிலும் எதனாலும் தனது நிலை மாறாதபடி மிகவும் உயர்ந்தவனாகிய ஸர்வேச்வரனை எனது சொற்களால் மட்டுமே நிலை மாறும்படியாகலாம் என்னும்படிச் செய்யவல்ல நாக்கு வலிமை கொண்ட எனக்கு என்றும், (நாவியல்) - திருவாய்மொழி (4-5-4) - நாவியலாலிசை மாலைகளேத்தி நண்ணப் பெற்றேன் - என்பதற்கு ஏற்றபடி மனம் அல்லாமல் வாக்கு கொண்டு மட்டுமே இசைமாலைகளைத் தொகுத்து அவனைத் துதித்துக் கிட்டப்பெற்றேன் என்றும், (மொய்ய சொல்லால்) – திருவாய்மொழி (4-5-2) - மொய்ய சொல்லாலிசை மாலைகளேத்தி யுள்ளப் பெற்றேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, செறிந்த சொற்களால் அமையப்பெற்று இசையுடன் கூடிய தொடைகள் கொண்டு புகழ்ந்து எப்போதும் எண்ணியபடி இருக்கப்பெற்றேன் என்றும், (சொல்ல வல்லேன்) – திருவாய்மொழி (4-5-9) - வானக்கோனைக் கவி சொல்ல வல்லேற்கு - என்பதற்கு ஏற்ப ஸ்ரீவைகுண்டநாதனைக் குறித்து கவிபாடவல்ல எனக்கு என்றும், (நானும் சொல்லி) – இப்படியாக நான்

சொந்தமாக அவனைக் குறித்துப் பாடினேன் என்று எண்ணி இவ்விதம் பலவாறாக உரைத்துள்ளேன்.

**வ்யாக்யானம்** – "சடகோபன் சொல்" என்றவாறே நானித்தைப் பாடினேனாக நினைத்து நாடும் அஞ்ஜலி பண்ணும்படி, "என் சொல்லால் யான் சொன்ன வின்கவி யென்பித்து" என்கிறபடியே என்னுடைய வசந வ்யக்தியாலே நா கர்த்தாவாகச் சொன்ன இனிய கவியென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினா னென்று அருளிச்செய்தாரிறே யென்கை. ஆகையால் இவர் ஸர்வேச்வர னருளடியாகவே பாடினமை நிச்சிதமென்று கருத்து.

**விளக்கம்** - (நாடும் கை எடுக்கும்படி) - திருவாய்மொழி (2-2-11) - சடகோபன் சொல் - என்பதற்கு ஏற்ப இவற்றை நான் பாடினேன் என்று எண்ணி நாட்டில் உள்ள அனைவரும் கைகுவித்து வணங்கும்படியாக, (என் சொல்லால் யான் சொன்ன இன்கவி என்பித்தான்) - திருவாய்மொழி (7-9-2) - என் சொல்லால் யான் சொன்ன வின்கவி யென்பித்து - என்பதற்கு ஏற்ப எனது சொற்கள் மூலமாக நான் இவற்றை இயற்றியவன் என்னும்படி இந்த இனிய கவிகளை நான் செய்ததாக உலகிற்கு ப்ரஸித்தம் செய்தான், (என்றாரிறே) - என்று இவரே அருளிச்செய்தார் அல்லவோ? ஆகவே இவர் ஸர்வேச்வரனுடைய நேரடியான க்ருபையால்தான் திருவாய்மொழியை அருளிச்செய்தார் என்பது உறுதி என்று கருத்து.

58. தர்மவீர்ய ஜ்ஞாநத்தாலே தெளிந்து ஹ்ருஷ்டராய் மேலே மேலே தொடுப்பாரைப் போலன்றே அருளின பக்தியாலே உள்கலங்கிச் சோகித்து மூவாறு மாஸம் மோஹித்து ளருந்தியேங்கித் தாழ்ந்த சொற்களாலே நூற்கிறவிவர்.

**அவதாரிகை** - இப்படி இப்ப்ரபந்தங்களுக்கு மூலவைலக்ஷண்யத்தாலே வந்தவேற்ற முண்டென் றறிவித்தவளவு மன்றிக்கே வக்த்ரு வைலக்ஷண்யத்தால் வந்த வேற்ற முண்டென்று அறிவிக்கைக்காக ருஷிகளிற் காட்டில் ஆழ்வார்க்குண்டான வ்யாவ்ருத்தியை அருளிச்செய்கிறார் - (தர்மவீர்ய ஜ்ஞாநத்தாலே என்று தொடங்கி).


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம் -** இப்படியாக ஆழ்வாரின் திவ்ய ப்ரபந்தங்களுக்கு, அவை ஸர்வேச்வரனுடைய க்ருபை காரணமாக ஏற்பட்டவை என்பதால் ஏற்றம் உண்டு என்பதைக் கூறினார். இது தவிர ஆழ்வாருடைய மேன்மை காரணமாகவும் அவற்றுக்கு ஏற்றம் உண்டு என்று உணர்த்துவதற்காக, ரிஷிகளைக் காட்டிலும் ஆழ்வாருக்கு உள்ள வேறுபாட்டினை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது "ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம், தத் ஸர்வம் தர்ம வீர்யேண யதாவத் ஸம்ப்ரபச்யதி" என்கிறபடியே தாம் தாம் அநுஷ்டித்த தபோ ரூபமான தர்மத்தினுடைய சக்தியாலே ஜனித்த ஜ்ஞாநத்தாலே, "கண்டும் தெளிந்தும்" என்கிறபடியே ஜ்ஞாதவ்யங்களைத் தெளியவறிந்து, அதுதான், "ந போதாத் அபரம் ஸுகம்" என்னும்படி யிருக்கையாலே ஹர்ஷயுக்தராய், அந்தத் தெளிவும் ஹர்ஷமுமடியாக உத்தரோத்தரம் சப்தங்களைத் தொடுக்கும் ருஷிகளைப் போலன்றே,

**விளக்கம் –** (தர்மவீர்யஜ்ஞானத்தாலே) - இராமாயணம் பாலகாண்டம் (3-4) - ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம், தத் ஸர்வம் தர்ம வீர்யேண யதாவத் ஸம்ப்ரபச்யதி - இராமனுடைய புன்முறுவலுடன் கூடிய சொற்கள், ஸஞ்சாரங்கள், செயல்பாடுகள் மற்றும் பலவற்றையும் நான்முகனிடமிருந்து பெற்ற வரபலத்தால் வால்மீகி உள்ளது உள்ளபடி நன்றாக அறிந்தார் - என்று கூறுவதற்கு ஏற்ப அந்தந்த ரிஷிகள், தாங்கள் தாங்கள் செய்த தவத்தின் ரூபமாக உள்ள தர்மத்தின் சக்தியால் பிறந்த ஞானத்தால், (தெளிந்து) - திருவாய்மொழி (7-2-7) - கண்டும் தெளிந்தும் – என்பதற்கு ஏற்ப அறிந்து கொள்ளவேண்டியவைகளைத் தெளிவாக அறிந்து, (ஹ்ருஷ்டராய்) - அந்த நிலை என்பது, ந போதாத் அபரம் ஸுகம் – ஞானத்தைத் தவிர வேறு இன்பம் இல்லை - என்பதற்கு ஏற்ப உள்ளதன் காரணமாக எப்போதும் மகிழ்வுடன் உள்ளவராக, (மேலே தொடுப்பாரைப் போலன்றே) - அப்படிப்பட்ட தெளிந்த அறிவு மற்றும் மகிழ்வு காரணமக மேன்மேலும் சொற்களைத் தொடுத்தபடி உள்ள ரிஷிகள் போன்று அல்லர் நம்மாழ்வார்.

**வ்யாக்யானம் -** தர்மவீர்யத்தால் வந்ததுக்கும் அதுதான் ஜ்ஞாநமாத்ரமானதுக்கும் எதிர்த்தட்டாம்படி "மயர்வற மதிநல மருளினன்" என்கிறபடியே நிர்ஹேதுக பகவத் ப்ரஸாதத்தாலே வந்ததாய் ஜ்ஞாந விபாக ரூபையான பக்தியாலே, தெளிவுக்கும் ஹர்ஷத்துக்கும் எதிர்த்தட்டாம்படி "மதியெல்லாமுள் கலங்கி" என்கிறபடியே விரஹ

வ்யதையாலே ஜ்ஞாநமெல்லாம் அடிமண்டியோடே கலங்கி, யதாமநோரதம் பகவதநுபவம் பெறாமையாலே சோகித்து மேலே மேலே தொடுக்குமதுக்கு எதிர்த்தட்டாம்படி "எத்திறம்" என்றும், "பிறந்தவாறும்" என்றும், "கண்கள் சிவந்து" என்றும் ஸர்வாதிகனாய் அவாப்த ஸமஸ்த காமனாயிருக்கச் செய்தே க்ஷுத்ரராய் சபலரா யிருப்பாரைப் போலே அவன் செய்த நவநீத சௌர்ய வ்ருத்தாந்தத்தையும், அகர்ம வச்யனாயிருக்கச் செய்தேயும் கர்மவச்யரைப் போலே பிறந்தபடியையும், "மாயக்கூத்த"னில் தாம் கண்ணும் வாயும் துவர்ந்தாப்போலே தம்மைப் பிரிகையாலே அவன் கண்ணும் வாயும் துவர்ந்து தம்மோடு கலந்த பின்பு அவை தன்னிறம் பெற்றபடியையும் அநுஸந்தித்து 'ஈதென்ன ப்ரகாரம்! ஈதென்ன ப்ரகாரம்!' என்று ஓரொன்றில் அவ்வாறு மாஸமாக மூவாறு மாஸம் மோஹித்து,

**விளக்கம்** - (அருளின பக்தியால்) - தர்மத்தின் வலிமை காரணமாக வந்ததற்கும் அத்தகைய ஒன்று ஞானம் மட்டுமே என்று ஆனதற்கும் எதிர்த்தட்டாக ஆகும்விதமாக, திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளினன் - என்பதற்கு ஏற்ப எந்தவிதமான காரணமும் இன்றி ஸர்வேச்வரனுடைய க்ருபை காரணமாக மட்டுமே வந்ததாகவும், ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்ட நிலையான பக்தி காரணமாக, (உள்கலங்கி) - தெளிவு மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றுக்கு எதிர்த்தட்டாக ஆகும்விதத்தில், திருவாய்மொழி (1-4-3) - மதியெல்லாமுள் கலங்கி - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனைப் பிரிந்த காரணத்தால் ஞானம் முழுவதும் அடியுடன் கலங்கி, (சோகித்து) - தான் விரும்பிய பகவத் அனுபவம் என்பது கிட்டப்பெறாத காரணத்தால் சோகம் அடைந்து, (மூவாறு மாஸம் மோஹித்து) - மேன்மேலே சொற்கள் கொண்டு தொடுப்பதற்கு எதிர்தட்டாக ஆகும்விதமாக, திருவாய்மொழி (1-3-1) - எத்திறம் - என்பதற்கு ஏற்ப அனைவருக்கும் உயர்ந்தவனாகவும், விரும்பும் பொருள்கள் அனைத்தையும் அடையும்படி உள்ளவனாகவும் இருந்தபோதிலும், தாழ்ந்தவனாக மிகுந்த அற்பமான ஆசைகள் உள்ளவன் போன்று செய்த வெண்ணெய் களவு செய்து உண்ட நிகழ்வையும்; திருவாய்மொழி (5-10-1) - பிறந்தவாறும் - என்பதற்கு ஏற்ப கர்மங்களுக்குக் கட்டுபடாதவனாக உள்ளபோதிலும் அவற்றுக்குக் கட்டுப்பட்டவன் போன்று பிறந்த விதத்தையும்; திருவாய்மொழி (8-8-1) - கண்கள் சிவந்து - என்பதற்கு ஏற்ப "மாயக்கூத்தா" என்ற பாசுரத்தில் தான் எவ்விதம் கண்ணு வாயும் பிரிந்து நின்றது போன்று தன்னைப் பிரிந்த காரணத்தால் அவனும் தனது கண்ணும் வாயும் பிரிந்து நின்று, பின்னர் தன்னோடு சேர்ந்தவுடன் அவற்றை அவன் மீண்டும் பெற்றான் என்று உரைத்து;

“இது என்ன விந்தை, இது என்ன விந்தை” என்று ஒவ்வொரு செயலையும் ஆறு ஆறு மாதமாக எண்ணி எண்ணி, மூன்று முறை ஆறு மாதங்கள் மயங்கிக் கிடந்து (அதாவது “பத்துடை அடியவர்” என்று பாடியவுடன் ஆறு மாதம், “பிறந்தவாறும்” என்று பாடியவுடன் ஆறு மாதம், “கண்கள் சிவந்து” என்று பாடியவுடன் ஆறு மாதம் மயங்கிக் கிடந்தார் என்று கருத்து).

**வ்யாக்யானம்** – “வருந்தி நான் வாசக மாலை கொண்டு” என்கிறபடியே ஒரு சொல்லெடுக்கும்போது ஒரு மலையெடுக்குமாபோலே வருத்தப்பட்டு, “என்றென் றேங்கி யழுதக்கால்” என்கிறபடியே அநுபவா லாப க்லேசத்தாலே அவன் படிகளைப் பலகாலும் சொல்லிப் பொருமிப் பொருமி அழுது, “அங்கே தாழ்ந்த சொற்களால்” என்கிறபடியே, “எங்கே காண்கேன்” என்கிற மநச்சைதில்யத்தாலே கத்கத ஸ்வரமான சப்தங்களாலே “வண்டமிழ் நூற்க நோற்றேன்” என்று இப்ப்ரபந்தத்தை நிர்மிக்கிறவிவ ரென்கை.

**விளக்கம்** - (வருந்தி) – திருவாய்மொழி (3-8-10) - வருந்தி நான் வாசக மாலை கொண்டு - என்பதற்கு ஏற்ப ஒரு சொல்லை உரைக்கும்போது ஒரு மலையையே எடுப்பது போன்று வருத்தம் அடைந்து, (ஏங்கி) - திருவாய்மொழி (8-5-3) - என்றென் றேங்கி யழுதக்கால் - என்பதற்கு ஏற்ப பகவத் அனுபவத்தைப் பெறாத வருத்தம் காரணமாக அவனுடைய செயல்களைப் பலமுறை உரைத்தபடி பொருமிப் பொருமி அழுது, (தாழ்ந்த சொற்களாலே நூற்கிறவிவர்) – திருவாய்மொழி (8-5-11) - அங்கே தாழ்ந்த சொற்களால் – என்பதற்கு ஏற்ப “எங்கே காண்கேன்” என்று தளர்ந்த போன மனதுடன், தளர்ந்த குரல் கொண்டு திருவாய்மொழி (4-5-10) - வண்டமிழ் நூற்க நோற்றேன் – என்பதற்கு ஏற்ப இந்தப் ப்ரபந்தங்களைச் செய்தவர் இந்த ஆழ்வார் என்று கருத்து.

59. ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றுந் தெளிந்தும் கண்ட மைப்பாலே ஓதி யுணர்ந்தவர் இன்னு மாசாபாச பத்தர்; அவன் வழங்கும் திவ்ய சக்ஷுஸ்ஸாலே நேரே கார்செறிந்த நீறாடி கட்கரிய அரும்பொருளைக் கண்டபோதே யாமுறாமை யென்னும்படி இவர்க்கு வன்பாசங்கள் நீங்கிற்று.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை -** இப்படி பகவத் ப்ரேமத்தாலே ருஷிகளில் வ்யாவ்ருத்தரான வளவன்றிக்கே இதர விஷய வைராக்யத்தாலும் அவர்களில் இவர் வ்யாவ்ருத்தர் என்கிறார் - (ஸ்வாத்யாயேத்யாதியால்).

**விளக்கம் -** இப்படியாக பகவத் ப்ரேமை காரணமாக ரிஷிகளைக் காட்டிலும் நம்மாழ்வார் வேறுபட்டுள்ளார். இது மட்டும் அல்லாமல், மற்ற விஷயங்களில் விருப்பம் இல்லாத தன்மையுடன் கூடியவர் என்பதாலும் இவர் அவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர் என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "ஸ்வாத்யாயாத் யோகமாஸீத் யோகாத் ஸ்வாத்யாய மாமநேத், ஸ்வாத்யாய யோகஸம்பத்த்யா பரமாத்மா ப்ரகாசதே, ததீக்ஷணாய ஸ்வாத்யாயச் சக்ஷுர் யோகஸ் ததா பரம், ந மாம்ஸ சக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்ம பூதஸ் ஸ சக்யதே" என்கிறபடியே ஸ்வாத்யாய யோகங்களாகிற இரண்டு த்ருஷ்டிகளாலுமொழிய மாம்ஸ சக்ஷுஸ்ஸால் பரமாத்மாவைக் காணப்போகாமையாலே ஸ்வாத்யாய சப்தவாச்யமான வேதத்தை ஓதியும், யம நியமா த்யஷ்டாங்க யோகத்தை அப்யஸித்தும் அவ்வழியாலே ததுபய விஷயமான பரமாத்மாவை ஏவம் பூதனென்று தெளிந்தும் இம்முகத்தாலே ஸ்வயத்நேந கண்ட காட்சியில் (அ)வைசத்யத்தாலே "ஓதியுணர்ந்தவர்" என்கிறபடியே வேதசாஸ்த்ரக்களையோதி த்யாஜ்யோபாதேயங்களை யுணர்ந்திருக்கிற ருஷிகள் இன்றளவும் "ஆசாபாச சதைர் பத்தா:" என்கிறபடியே ஸாம்ஸாரிக போக விஷயங்களான ஆசாக்ய பாச சதங்களாலே பந்திக்கப்பட்டிருப்பார்கள்,

**விளக்கம் -** (ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றும் தெளிந்தும்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-6-2, 3) - ஸ்வாத்யாயாத் யோகமாஸீத் யோகாத் ஸ்வாத்யாய மாமநேத், ஸ்வாத்யாய யோகஸம்பத்த்யா பரமாத்மா ப்ரகாசதே, ததீக்ஷணாய ஸ்வாத்யாயச் சக்ஷுர் யோகஸ் ததா பரம், ந மாம்ஸ சக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்ம பூதஸ் ஸ சக்யதே - வேதத்தின் மூலம் ஆழ்பொருளை அறிந்து யோகத்தை அடைவானாக, யோகம் மூலம் மீண்டும் வேதத்தை ஓதுவானாக, யோகம் மற்றும் வேதம் ஆகியவற்றின் முழுமை காரணமாக அவனுக்குப் பரமாத்மா ப்ரகாசிக்கிறான்; அப்படிப்பட்ட பரமாத்மாவைக் காண்பதற்கு வேதம் ஒரு கண்ணாகவும், யோகம் ஒரு கண்ணாகவும் உள்ளது; அந்தப் பரமாத்மாவை சாதாரண மாமிசக்கண் கொண்டு காண இயலாது - என்று கூறுவதற்கு ஏற்ப வேதங்கள், யோகங்கள்

ஆகிய இரண்டு கண்கள் அல்லாமல் மாமிசக் கண்கள் கொண்டு பரமாத்மாவைக் காண இயலாது என்பதால், ஸ்வாத்யாயம் என்ற பதம் மூலம் கூறப்படும் வேதத்தை ஓதியும், யமம், நியமம் போன்ற எட்டு அங்கங்களுடன் கூடிய யோகத்தைக் கற்றும், அதன் வழியாக வேதம் மற்றும் யோகம் ஆகிய இரண்டாலும் காணக்கூடிய பரமாத்மா இத்தகையவன் என்று தெளிந்தும், (கண்டமை) - இவ்விதம் தனது முயற்சி மூலம் கண்ட காட்சியில், (மைப்பாலே) - தெளிவு இல்லாமையால், (ஓதி உணர்ந்தவர் இன்னும் ஆசாபாச பத்தர்) - திருவாய்மொழி (3-5-5) - ஓதி உணர்ந்தவர் - என்பதற்கு ஏற்ப வேத சாஸ்த்ரங்களை எப்போதும் ஓதி, கைவிட வேண்டியவை இன்னவை என்றும் கைக்கொள்ளத்தக்கவை இன்னவை என்றும் அறிந்துள்ள ரிஷிகள், இது நாள் முடிய, கீதை (16-12) - ஆசாபாச சதைர் பத்தா: - ஆசைகள் என்னும் நூற்றுக்கணக்கான கயிறுகளால் கட்டப்பட்டவர்களாக - என்பதற்கு ஏற்ப, இந்த உலக வாழ்க்கை என்னும் இன்பம் அளிக்க விஷயங்களான பலவிதமான கயிறுகளால் கட்டப்பட்டிருப்பார்கள்.

**வ்யாக்யானம்** – "திவ்யம் ததாமி தே சக்ஷு:" என்கிறபடியே தன்னைக் காண்கைக்கு ஸாதநமாக அவன் கொடுத்த திவ்ய ஜ்ஞாந ரூப சக்ஷுஸ்ஸாலே, "நேரே கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான்" என்றும், "கார் செறிந்த கண்டத்தா னென்கண்ணான் காணான்" என்றும், "நீறாடி தான் காணமாட்டாத தாரகல சேவடி" என்றும், "கட்கரிய பிரமன் சிவனிந்திர னென்றிவர்க்கும் கட்கரிய கண்ணன்" என்றும் சொல்லுகிறபடியே இவ்வருகுள்ளாரிற் காட்டில் ஜ்ஞாந சக்தியாதிகளா லதிகராய, "தாமோதரனைத் தனி முதல்வனை ஞானமுண்டவனை – ஒருவர்க்குத் தரமறியலாமோ" என்று தங்களை யொழிய ஒருவர்க்கு மறியப்போகா தென்றிருக்கும் ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் காணவரியனாய், "அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள் அறிந்தன கொள்க அரும்பொருளாதல்" என்கிறபடியே "யஸ்யாமதம் தஸ்ய மதம்" இத்யாதியாலே வேதங்களும் அறியவரிய வஸ்துவென்றே அரியும்படியாய் "கேட்பார்க்கரும் பொருளாய நின்ற" என்று, "நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந" என்கிறபடியே தன் ப்ரஸாதமொழிய ஸ்வயத்நத்தாலே ச்ரவணாதிகள் பண்ணுவார்க்கு துர்லப வஸ்துவான ஸர்வேச்வரனை, "கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்கிறபடியே அவன் தானே காட்டுகையாலே விசததமமாகக் கண்டபோதே "பொய்ந்நின்ற ஞானமும்" என்று தொடங்கி, "இந்நின்ற நீர்மையினியாமுறாமை" என்று அவித்யாதிகளை விடுவித்தருள வேணுமென்று அவனைக் கால்கட்டும்படி இவர்க்கு "மற்ற வன்பாசங்கள்"

என்று ஸ்வயத்ந நிவர்த்யமல்லாதபடி ப்ரபலமான பாஹ்ய ஸங்கங்கள் "பாசங்கள் நீக்கி" என்னும்படி தத்ப்ரஸாதத்தாலே ஸவாஸநமாக விட்டகன்ற தென்கை.

**விளக்கம்** – (அவன் வழங்கும் திவ்ய சக்ஷுஸ்ஸாலே) - கீதை (11-8) - திவ்யம் ததாமி தே சக்ஷு: - உனக்குத் தெய்வீகமான ஞானக்கண்ணை அளிக்கிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப தன்னைக் காண்பதற்கு இயலக்கூடியதான அவன் அளித்த ஞானரூபமான தெய்வீகமான கண்கள் கொண்டு, (நேரே கார்செறிந்த நீறாடி கட்கரிய) - முதல் திருவந்தாதி (56) - நேரே கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் – என்றும், நான்முகன் திருவந்தாதி (73) - கார் செறிந்த கண்டத்தா னென்கண்ணான் காணான் - என்றும், நான்முகன் திருவந்தாதி (27) - நீறாடி தான் காணமாட்டாத தாரகல சேவடி – என்றும், திருவாய்மொழி (7-7-11) - கட்கரிய பிரமன் சிவனிந்திர னென்றிவர்க்கும் கட்கரிய கண்ணன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்றவர்களைக் காட்டிலும் ஞானம், சக்தி போன்றவைகளால் மிகவும் உயர்ந்தவர்களும்; திருவாய்மொழி (2-7-12) - தாமோதரனைத் தனி முதல்வனை ஞானமுண்டவனை – ஒருவர்க்குத் தரமறியலாமோ - என்பதற்கு ஏற்ப தங்களை அல்லாமல் மற்ற யாருக்கும் அவனை எளிதாக அறிய இயலாது என்றுள்ளவர்களும் ஆகிய நான்முகன் மற்றும் ருத்ரன் ஆகியவர்களுக்கும் காண்பதற்கு அரியவனாகவும், (அரும்பொருளை) - திருவாய்மொழி (9-3-3) - அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள் அறிந்தன கொள்க அரும்பொருளாதல் - என்பதற்கு ஏற்ப, கேந உபநிஷத் – யஸ்யாமதம் தஸ்ய மதம் – யார் ஒருவன் பரம்பொருளை அளவிட இயலாத ஒன்று என அறிகிறானோ அவன் பரம்பொருளை அறிந்தவன் ஆகிறான் - என்பதன் மூலம் வேதங்களும் தங்களுக்கு அறிவதற்கு அரியதான வஸ்து என்று அறியப்படுபவனாகவும், நான்முகன் திருவந்தாதி (60) - கேட்பார்க்கரும் பொருளாய நின்ற – என்று கூறுவதற்கு ஏற்ப கட உபநிஷத் - நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந - பரம்பொருள் மனம் மற்றும் த்யானத்தால் அடையத்தக்கவன் அல்லன், வேள்வியாலும் அடையத்தக்கவன் அல்லன் - என்பதற்கு ஏற்ப தனது க்ருபை காரணமாக அல்லாமல் தங்களுடைய சுயமுயற்சியால் அறியலாம் என்றுள்ளவர்களுக்கு அரியவனாகவும் உள்ள ஸர்வேச்வரனை, (கண்டபோதே) - திருவாய்மொழி (10-4-9) - கண்டேன் கமலமலர்ப்பாதம் - என்பதற்கு ஏற்ப அவன் தன்னைக் காண்பித்துக் கொள்வதால் மிகவும் தெளிவாகக் கண்டபோதே, (யாம் உறாமை என்னும்படி) - திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற ஞானமும் - என்று தொடங்கி, திருவிருத்தம் (1) -

இந்நின்ற நீர்மையினியாமுறாமை - என்று கூறுவதற்கு ஏற்ப அறியாமை போன்றவற்றை விலக்கித் தந்தருளவேண்டும் என்று அவனுடைய திருவடிகளைப் பிடிக்கும்படியாக உள்ள நம்மாழ்வாருக்கு, திருவாய்மொழி (8-2-11) - மற்ற வன்பாசங்கள் – என்பதற்கு ஏற்ப தனது முயற்சியால் நீக்க இயலாதபடியாக உள்ள உலகியல் பற்றுக்கள் அனைத்தும் திருவாய்மொழி (7-8-5) - பாசங்கள் நீக்கி - என்பதற்கு ஏற்ப அவனுடைய க்ருபை காரணமாக வாசனையுடன் சேர்ந்து விலகின என்று கருத்து.

60. அவர்களுக்குக் காயோடென்னுமிவையே தாரகாதிகள்; இவர்க்கெல்லாம் கண்ணனிறே.

**அவதாரிகை** - இவ்வளவு மன்றிக்கே தாரகாதி வைலக்ஷண்யத்தாலும் அவர்களில் இவர்க்குண்டான வ்யாவ்ருத்தியை யருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - இது மட்டும் அல்லாமல் உயிர் வாழ அவசியமான உணவு போன்றவற்றில் காணப்படும் வேறுபாடுகளாலும், ரிஷிகளைக் காட்டிலும் நம்மாழ்வாருக்கு உள்ள வேறுபாட்டின் மேன்மையை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ருஷிகளானவர்களுக்கு “காயோடு நீடு கனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து” என்றும், “வீழ்கனியு மூழிலையு மென்னு மிவையே நுகர்ந்து” என்றும் சொல்லுகிறபடியே பலமூலபத்ரவாயு தோயங்களே தாரகபோஷக போக்யங்கள்; “ருஷிம் ஜுஷாம் மஹே” என்று இவரையும் ருஷியென்று சொல்லிற்றாகிலும் தாரகாதிகள் அவையன்று; க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வமான விவர்க்கு “உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்” என்கையாலே தாரக போக்ஷக போக்யங்க ளெல்லாம் க்ருஷ்ணனேயிறே யென்கை.

**விளக்கம்** - (அவர்களுக்கு) – பராசரர் போன்ற ரிஷிகளுக்கு, (காயோடு என்னுமிவையே தாரகாதிகள்) - பெரியதிருமொழி (3-2-2) - காயோடு நீடு கனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து - என்றும், பெரியதிருமடல் (12) – வீழ்கனியு மூழிலையு மென்னு மிவையே நுகர்ந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப பழங்கள், கிழங்குகள், இலைகள், காற்று, நீர் ஆகியவையே உயிர் வாழத் தேவையான உணவு வகைகள் ஆகும். (இவர்க்கு எல்லாம்

 **Email:**sridharan_book@yahoo.co.in

கண்ணனிறே) - பராங்குசாஷ்டகம் - ருஷிம் ஜுஷாம் மஹே - ரிஷியாகிற நம்மாழ்வாரை வணங்குகிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப நம்மாழ்வாரையும் ரிஷி என்று உரைத்தாலும், இவர் உயிர்வாழத் தேவையான உணவுகள் அவை அல்ல. க்ருஷ்ணன் மீது கொண்டுள்ள ஆழ்ந்த காதல் என்பதே உருவம் எடுத்தது போன்றுள்ள நம்மாழ்வாருக்கு, திருவாய்மொழி (6-7-1) - உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன் – என்பதற்கு ஏற்ப உயிர் தரிக்க வைப்பதும், பலன் அளிப்பதும், இன்பம் அளிப்பதும் ஆகிய அனைத்தும் க்ருஷ்ணனே ஆவான் என்று கருத்து.

61. அழுநீர்துளும்பக் கடலும் மலையும் விசும்புந் துழாய் திருமாலென்று எங்கே காண்கே னென்னுமிவர லமாப்பு வவர்க்களுக்குப் புத்ர வியோகத்திலே.

**அவதாரிகை** - இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் ப்ராக்ருத விஷயங்களில் நசையற்று பகவதேகபரரான விவர் தத்விரஹத்தில் படுமதெல்லாம் அவர்கள் ப்ராக்ருத விஷய ஸங்கம் அறாமையாலே அவ்விஷயங்களினுடைய விரஹத்திலே படுவர்களென்கிறார் - (அழு நீர் இத்யாதியால்).

**விளக்கம்** - இப்படியாக அனைத்துவிதங்களிலும் இந்த உலகியல் விஷயங்களில் உள்ள பற்றுதல்கள் அனைத்தையும் நீக்கும் ஸர்வேச்வரனிடம் மட்டுமே ஈடுபட்ட நம்மாழ்வார், ஸர்வேச்வரனைப் பிரிந்த காலங்களில் அடையும் துன்பங்கள் அனைத்தையும், ரிஷிகளானவர்கள் இந்த உலகியல் விஷயங்களுடன் தொடர்பு அறுக்காத காரணத்தால் உலகவிஷயங்களைப் பிரிந்தால் அடைவார்கள் என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “சேயரிக்கண் அழுநீர் துளும்ப அலமருகின்றன” என்றும், “கடலும் மலையும் விசும்பும் துழாய்” என்றும், “சிந்தை கலங்கித் திருமா லென்றழைப்பன்” என்றும், “எங்கே காண்கேனீன் துழாயம்மான் தன்னை” என்றும், “உன்னைக் காண்பான் நானலப்பாய்” என்றும் சொல்லுகிறபடியே பகவத் விரஹ வ்யஸநத்தாலே கண்ணும் கண்ணீருமாய் அபரிச்சேத்யமான கடலோடு நீர் விவரமான மலையோடு அச்சமான ஆகாசத்தோடு வாசியற எங்கும் தேடி ஹ்ருதயம் கலங்கி “ச்ரிய:பதியே!” என்று கூப்பிட்டு எங்கே காணக்கடவேனென்று இவர் படுமலமாப்பு,


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (அழுநீர் துளும்ப) – திருவிருத்தம் (2) - சேயரிக்கண் அழுநீர் துளும்ப அலமருகின்றன - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனைப் பிரிந்த விரஹ துன்பம் காரணமாகக் கண்ணும் கண்ணிருமாக நின்று, (கடலும் மலையும் விசும்பும் துழாய்) – திருவாய்மொழி (2-1-4) - கடலும் மலையும் விசும்பும் துழாய் - என்பதற்கு ஏற்ப அளவிட இயலாத கடல், அசைவற்று நிற்கும் மலை, அச்சம் ஏற்படுத்தும் ஆகாயம் ஆகிய அனைத்து இடங்களிலும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி எங்கும் தேடியபடி, (திருமால் என்று) - திருவாய்மொழி (9-8-10) – சிந்தை கலங்கித் திருமா லென்றழைப்பன் - என்பதற்கு ஏற்ப தனது இதயம் கலங்கி "மஹாலக்ஷ்மியின் நாயகனே" என்று அழைத்தபடி, (எங்கே காண்கேன் என்னும் இவர் அலமாப்பு) - திருவாய்மொழி (8-5-11) - எங்கே காண்கேனீன் துழாயம்மான் தன்னை - என்றும், திருவாய்மொழி (5-8-4) - உன்னைக் காண்பான் நானலப்பாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, "எங்கே நான் காண்பேன்" என்று இவர் அடையும் நிம்மதியற்ற நிலையானது (…. இப்படிப்பட்ட இவருடைய இந்த நிலையானது ஸர்வேச்வரனைப் பிரிந்த காரணத்தால் இவருக்கு ஏற்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட நிலை, ரிஷிகளுக்குப் புத்திரர் பிரிவால் ஏற்படுகிறது என்று கூற உள்ளார்…)

**வ்யாக்யானம்** - ஸ்ரீவஸிஷ்டபகவான் புத்ரவியோக க்லேசத்தாலே, "ஸ மேரு கூடாதாத்மாநம் முமோச பகவாந் ருஷி;, சிரஸ் தஸ்ய சிலாயாஞ்ச தூலராசாவிவாபதத், ந மமார ச பாதேந ததா ஸ முநி ஸத்தம:, ததாக்நிமித்த்வா பகவாந் ஸ விவேச மஹாவநே, தம் ததா ஸுஸமித்தோபி ந ததாஹ ஹுதாசந:, தீப்யமாநோப்யமித்ரக்நம் சீதோக்நிரபவத் ததா ஸ ஸமுத்ரமபி ப்ரேத்ய சோகாவிஷ்டோ மஹாமுநி:, கண்டே பத்த்வா சிலாம் குர்வீம் நிபபாத ததாம்பஸி" என்கிறபடியே மலையிலே ஏறி விழுவது, நெருப்பிலே புகுவது, கழுத்திலே கல்லைக் கட்டிக் கடலிலே விழுவதாகையாலும், ஸ்ரீவேதவ்யாஸபகவான் புத்ர விரஹம் பொறுக்கமாட்டாமல் "த்வைபாயநோ விரஹகாதா ஆஜுஹாவ புத்ரேதி" என்கிறபடியே புத்ரனே யென்று வாய்விட்டுக் கூப்பிட்டு அழுது கொண்டு காணப் பெறாமையால் அலமந்து திரிகையாலும் அவர்களுக்குப் புத்ரவிச்லேஷத்திலே நடக்குமென்றபடி.

**விளக்கம்** - (அவர்களுக்குப் புத்ர வியோகத்திலே) - வசிஷ்ட முனிவர் தனது புத்திரனைப் பிரிந்த துக்கம் காரணமாக, ஸ மேரு கூடாதாத்மாநம் முமோச பகவாந் ருஷி;, சிரஸ் தஸ்ய சிலாயாஞ்ச தூலராசாவிவாபதத், ந மமார ச பாதேந ததா ஸ முநி ஸத்தம:,

ததாக்நிமித்த்வா பகவாந் ஸ விவேச மஹாவநே, தம் ததா ஸுஸமித்தோபி ந ததாஹ ஹுதாசந:, தீப்யமாநோப்யமித்ரக்நம் சீதோக்நிரபவத் ததா ஸ ஸமுத்ரமபி ப்ரேத்ய சோகாவிஷ்டோ மஹாமுநி:, கண்டே பத்த்வா சிலாம் குர்வீம் நிபபாத ததாம்பஸி - வசிஷ்ட மஹரிஷி மேரு மலையின் உச்சியிலிருந்து கீழே குதித்தார்; அப்போது அவருடைய தலையானது, கல் ஒன்று பஞ்சுக்குவியலில் விழுவது போன்று விழுந்தது; ஆனால் முனிவர்களில் உயர்ந்த அவர், அப்போதும் இறக்கவில்லை; பின்னர் அவர் அக்னியை வளர்த்து அதில் புகுந்தார்; அவரை அக்னியானது எரிக்கவில்லை; சோகத்தால் வருந்திய அந்த வசிஷ்டர் ஸமுத்திரத்தை அடைந்து ஒரு பெரிய கல்லைத் தனது கழுத்தில் கட்டிக்கொண்டு ஸமுத்திரத்தில் குதித்தார் - என்பதற்கு ஏற்ப, மலை ஏறி குதித்தல், அக்னியில் புகுதல், கழுத்தில் கல்லைக் கட்டிக்கொண்டு ஸமுத்திரத்தில் விழுதல் போன்ற பலவற்றையும் செய்தார். வேத வ்யாசர் தனது புத்திரசோகம் தாங்காமல், ஸ்ரீமத் பாகவதம் (1-2-2) - த்வைபாயநோ விரஹகாதா ஆஜுஹாவ புத்ரேதி - தனது புத்திரராகிய சுகமுனிவரின் பிரிவைத் தாங்க இயலாத வ்யாஸர், "புத்திரனே வருவாய்" என்று அழைத்தார் - என்பதற்கு ஏற்ப "புத்திரனே" என்று வாய்விட்டு அலறியும், அழுது புலம்பியும் தனது புத்திரனைக் காண இயலாத காரணத்தால் துயரத்துடன் உடைந்து திரிந்தார். ஆக இது போன்ற செயல்களை காரணமாக ரிஷிகளான அவர்களுக்குப் புத்திரப் பிரிவால் துயரம் ஏற்படுகிறது என்று கருத்து.

62. பலஸாதந தேவதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச்சிலே தோன்றும்.

**அவதாரிகை** - இம்மாத்ரமேயன்றியே பலஸாதநாதிகளில் ப்ரதிபத்தி விசேஷத்தாலும் இரண்டு தலைக்குமுண்டான நெடுவாசியை அருளிச்செய்கிறார் மேலே - (பலஸாதநேத் யாதியால்).

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்டது மட்டுமே அல்லாமல், பலன் பெறுவதற்கான வழிமுறைகள் போன்றவற்றிலும் இந்த இருவருக்கும் உள்ள சிந்தனைகளின் விசேஷம் காரணமாகவும், ரிஷிகள் மற்றும் நம்மாழ்வார் ஆகிய இருவருக்கும் இடையே உள்ள பெருத்த வேறுபாட்டினை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷணா பேஷஜம் பகவத் ப்ராப்தி ரேகாந்தாத்யந்திகீ மதா, தஸ்மாத் தத் ப்ராப்தயே யத்ந: கர்த்தவ்ய: பண்டிதைர் நரை:, தத் ப்ராப்தி ஹேதுர் ஜ்ஞாநஞ்ச கர்ம சோக்தம் மஹாமுநே” இத்யாதிகளாலே பகவத்ப்ராப்தியே பலமாகவும், கர்மஜ்ஞாநாதிகளே உபாயமாகவும், இந்த்ராதி தேவதாந்தர்யாமியான ஈச்வரனே உத்தேச்யனாகையாலே இந்த்ராதி தேவதைகள் அநுவர்த்த நீயராகவுமிறே ருஷிகள் சொல்லுவது. “தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே”, “வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்” என்று கைங்கர்யம் புருஷார்த்தமாகவும், தத் ஸாதநமும் “நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்”, “அடிக்கீழமர்ந்து புகுந்தேனே” என்கிற ப்ரபத்தியாகவும், “மற்றொரு தெய்வம் தொழாள்” என்று தேவதாந்தரங்கள் அநுவர்த்த நீயரல்லாராகவுமிறே இவரருளிச் செய்தது. ஆகையால் பலத்திலும் ஸாதநத்திலும் தேவதாந்தரங்களிலும் அவர்கள் ப்ரதிபத்தியும் இவர் ப்ரதிபத்தியும் இரண்டு தலை பேச்சிலும் தெரியுமென்கை.

**விளக்கம்** - (பல ஸாதந தேவதாந்தரங்களில்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-59, 60) - நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷணா பேஷஜம் பகவத் ப்ராப்தி ரேகாந்தாத்யந்திகீ மதா, தஸ்மாத் தத் ப்ராப்தயே யத்ந: கர்த்தவ்ய: பண்டிதைர் நரை:, தத் ப்ராப்தி ஹேதுர் ஜ்ஞாநஞ்ச கர்ம சோக்தம் மஹாமுநே - தனக்கு மேல் ஏதும் இல்லாதபடியான ஆனந்தவடிவமான சுகம் ஒன்றை மட்டுமே வடிவாகக் கொண்டதும், துக்கம் என்பதே இல்லாததும், மீண்டும் லீலாவிபூதிக்குத் திரும்புதல் என்பது இல்லாததும் ஆகிய ஸர்வேச்வரனை அடையும் பேறு என்பது ஸம்ஸார துக்கத்துக்கு ஏற்ற மருந்தாகும். ஆகவே பண்டிதர்கள் ஸர்வேச்வரனை அடைவதற்கே முயல்வார்கள். அவனை அடைவதற்கு ஞானமும் கர்மமும் உபாயமாகக் கூறப்பட்டன - என்றுள்ள பல வரிகளின் மூலம், ஸர்வேச்வரனை அடைதல் என்பதே பலனாகவும், கர்மம் மற்றும் ஞானம் ஆகியவை அவனை அடைவதற்கான வழியாகவும் உள்ளதாலும், இந்த்ரன் உள்ளிட்ட தேவர்களுடைய அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனே அடையத்தக்கவன் என்பதாலும், இந்த்ரன் உள்ளிட்ட தேவர்களே பற்றத்தக்கவர்கள் என்பதாகவும் ரிஷிகள் கூறுவர். ஆனால், திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே - என்றும், திருவாய்மொழி (3-3-1) - வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுக்குச் செய்யப்படும் கைங்கர்யமே உயர்ந்த பலன் என்றும், திருவாய்மொழி (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் – என்றும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

திருவாய்மொழி (6-10-10) - அடிக்கீழமர்ந்து புகுந்தேனே - என்றும் கூறுவதற்கு ஏற்ப ப்ரபத்தி என்பதே அந்தக் கைங்கர்யத்தை அடைவிக்கவல்ல உபாயம் என்றும், திருவாய்மொழி (4-6-10) - மற்றொரு தெய்வம் தொழாள் - என்று கூறுவதற்கு ஏற்ப மற்ற தேவதைகள் வணங்கி அண்டத்தக்கவர்கள் அல்லர் என்றும் அல்லவோ நம்மாழ்வார் அருளிச்செய்தார்! ஆகவே பலன், அந்தப் பலனை அடைவிக்கும் உபாயம், மற்ற தேவதைகள் ஆகிய விஷயங்களில் அவர்களுடைய சிந்தனையும், நம்மாழ்வாருடைய சிந்தனையும், இந்த இருவர் உரைத்த வாக்கியங்களில் புலப்படுகிறது.

**வ்யாக்யானம்** - ஸகல வேதஸங்க்ரஹமான திருமந்த்ரத்தில் ப்ரதம பதத்தாலே சேஷத்வைக நிரூபணீயமாக ப்ரதிபாதிக்கப்பட்ட ஆத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் சரமபதத்தில் சதுர்த்தியால் சொல்லப்பட்ட கைங்கர்யமே யாகையாலும், மத்யபத ப்ரதிபாதிதமான பகவதத்யந்த பாரதந்த்ர்யத்துக்கு ததேகோபாயத்வ மொழிய ஸ்வரக்ஷணே ஸ்வப்ரவ்ருத்தி சேராமையாலும், மத்யமாக்ஷர ப்ரதிபாதிதமான பகவதநந்யார்ஹத்வத்துக்கு தேவதாந்தராநு வர்த்தந கந்தமும் ஸஹியாமையாலும், பகவத் ப்ராப்தி மாத்ரம் பலமாகவும், ஸ்வயத்ந ரூப கர்மாதிகள் உபாயமாகவும், அஹங்கார யுக்த தேவதைகள் பகவத் விசேஷணதயா உபாதேயராகவும் கொள்ளுமது ஸ்வரூப யாதாத்ம்ய தர்சிகளுக்குப் பரித்யாஜ்யமாயிறே யிருப்பது. ஆன பின்பு பலாதி த்ரயத்தில் அவர்கள் ப்ரதிபத்திக்கும் இவர் ப்ரதிபத்திக்கும் நெடுவாசியுண்டாகையாலே இவ்வழியாலும் அவர்களில் இவர் அத்யந்த வ்யாவ்ருத்தம் என்றதாயிற்று.

**விளக்கம்** - அனைத்தும் வேதங்களின் சுருக்கமாக உள்ள திருமந்திரத்தில் காணப்படும் முதல் பதமான ப்ரணவத்தின் மூலம் பகவத் அடிமைத்தனத்தால் மட்டுமே ஆத்மஸ்வரூபம் அறியப்படுகிறது என்று கூறப்படுகிறது. இத்தகைய ஆத்மாவுக்கு, அதன் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடியான பயன் என்பது பகவத் கைங்கர்யமே ஆகும் என்பது "நாராயணாய" என்பதில் உள்ள "ஆய" என்ற நான்காம் வேற்றுமை மூலம் கூறப்படுகிறது. ஆக, ஆத்மாவுக்கு ஏற்ற பயன் கைங்கர்யமே என்பதாலும்; "நம:" என்ற பதம் மூலம் கூறப்படுவதான "ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டு இருத்தல்" என்னும் "ஸர்வேச்வரனிடன் கொண்ட எல்லையில்லாத பாரதந்த்ர்யம்" என்ற நிலைக்கு, ஸர்வேச்வரனை மட்டுமே உபாயமாகக் கொள்ளுவது அல்லாமல், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, தானே முயலும் முயற்சி என்பது இருத்தல் கூடாது என்பதாலும்; ப்ரணவத்தின்


Email:sridharan_book@yahoo.co.in

நடு எழுத்தான "உ" என்பதன் மூலம் கூறப்படுவதான "ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமை" என்னும் "பகவத் அநந்யார்ஹ சேஷத்வம்" என்ற நிலைக்கு, மற்ற தெய்வங்களை ஆராதித்தல் என்பது சற்றும் பொருந்தாது என்பதாலும் - பகவானை அடைதல் மட்டுமே பலன் என்றும் (கைங்கர்யம் என்பதே பலன் என்று கொள்ளாமல்), தனது முயற்சியால் செய்யக்கூடிய கர்மங்களே அதற்கு உபாயம் என்றும் (ஸர்வேச்வரன் தனக்காக அனைத்தும் செய்வான் என்று எண்ணாமல்), அஹங்காரத்துடன் கூடிய மற்ற தெய்வங்கள் பகவானுக்குச் சரீரமாக உள்ளதால் அவர்களும் ஆராதிக்கத்தக்கவர்களே என்றும் சிந்திக்கும் எண்ணங்கள் அனைத்தும், ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களுக்குக் கைவிடத்தக்கவையாகவே உள்ளன. எனவே பலன், பலனை அடைவிக்கும் உபாயம், பலனை அளிக்கும் தேவதைகள் ஆகிய மூன்றைக் குறித்து ரிஷிகளுடைய சிந்தனைகளுக்கும், நம்மாழ்வாருடைய சிந்தனைகளுக்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு; இந்தக் காரணத்தாலும் ரிஷிகளைக் காட்டிலும் நம்மாழ்வாருக்கு அதிகமான வேறுபாடுகள் உண்டு என்றாகிறது.

63. ராமாயணம் நாராயண கதையென்று தொடங்கி கங்காகாங்கேய ஸம்பவாத்ய ஸத் கீர்த்தநம் பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணாமல் திருமாலவன் கவியென்ற வாயோலைப்படியே மாற்றங்க ளாய்ந்து கொண்டு உரிய சொல்வாய்த்த விது வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள்போலே அருளிச்செயலில் ஸாரம்.

**அவதாரிகை** – ஆக, "தர்ம வீர்யேத்யாதி" வாக்யம் தொடங்கி இவ்வளவும் இப்ப்ரபந்த வக்த்ரு வைலக்ஷண்யத்தை ப்ரதிபாதித்தார் கீழ். இனி இப்பரபந்த வைலக்ஷண்யந் தன்னை ப்ரதிபாதிக்கிறார் மேல் - (ராமாயணமென்று தொடங்கி).

**விளக்கம்** – ஆக, தர்மவீர்ய (சூர்ணை 58) – என்பது தொடங்கி கடந்த சூர்ணை முடிய இந்தத் திவ்ய ப்ரபந்தங்களை அருளிச்செய்த நம்மாழ்வாருடைய மேன்மையைக் குறித்து அருளிச்செய்தார். இனி இந்த ப்ரபந்தங்களுடைய மேன்மையை அருளிச்செய்கிறார்.

**குறிப்பு** – இந்தச் சூர்ணையின் தொடக்கப் பகுதியை, "ராமாயணம் என்று தொடங்கி கங்காகாங்கேய ஸம்பவாத்ய ஸத் கீர்த்தநம் பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணாமல்" என்றும், "நாராயண கதையென்று தொடங்கி கங்காகாங்கேய ஸம்பவாத்ய ஸத் கீர்த்தநம் பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணாமல்" என்றும் இரண்டாகப் பிரிக்கவேண்டும். இது

போன்று தொடங்கப்பட்ட இருவிதத்தில் மீதம் உள்ள சூர்ணையின் பகுதிகளைச் சேர்த்துப் படிக்கவேண்டும்.

**வ்யாக்யானம்** – அதாவது, "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஈத்ருசை: கரவாண்யஹம்" என்று ராம கதையைச் சொல்லுவதாக ராமாயணமென்று உபக்ரமித்து கங்கா ஸம்பவ ஸுப்ரஹ்மண்யோத்பத்தி புஷ்பக வர்ணந ரூப கதிகளைப் பரக்கப் பேசுகையாலே அஸத் கீர்த்தநம் பண்ணி வாகசுத்தி வந்ததிறே ஸ்ரீவால்மீகி பகவானுக்கு.

**விளக்கம்** - (ராமாயணம் என்று தொடங்கி) - இராமாயணம் பாலகாண்டம் (2-42) - காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஈத்ருசை: கரவாண்யஹம் - இராமாயண காவியம் முழுவதையும் இந்த ச்லோகங்கள் கொண்டு உரைக்கப் போகிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, இராமனின் திவ்யசரிதத்தை உரைக்கப் போவதாக இராமாயணத்தைத் தொடங்கி. (கங்காகாங்கேய ஸம்பவாத்ய ஸத் கீர்த்தநம் பண்ணின எச்சில்வாய்) - கங்கையின் பிறப்பு, முருகனின் பிறப்பு, புஷ்பக விமானத்தின் வர்ணனை போன்றதான மற்ற கதைகள் குறித்து விவரித்து உரைப்பதால் வாக்குத்தூய்மை என்பது வால்மீகி பகவானுக்கு இல்லாமல் போனது.

**வ்யாக்யானம்** - "நாராயண கதாமிமாம்" என்கிறபடியே நாராயண கதையென்று உபக்ரமித்து ஸம்பவ பர்வத்திலே காங்கேயரான ஸ்ரீபீஷ்மருடைய உத்பத்தி தொடக்கமாக அநேகருடைய உத்பத்தி ப்ரகாரங்களை விஸ்தரேண ப்ரதிபாதிக்கையாலும், "பூசல் பட்டோலை" என்னும்படி பாரத யுத்த ப்ரகாராதிகளையே பரக்க நின்று வர்ணித்தபடியாலும், அஸத் கீர்த்தநத்திலே மிகவும் பரந்து அசுத்தையான வாக்கை, "அஸத் கீர்தந காந்தார பரிவர்த்த பாம்ஸுலாம், வாசம் சௌரிகதா லாப கங்கயைவ புநீமஹே" என்று அஸத் கீர்த்தநமாகிற காட்டிலே அலமந்து புழுதி படைத்த வாக்கை பகவத் கதா லாபமாகிற கங்கையாலே சுத்தமாக்குகிறேனென்று சுத்தி பண்ணினானிறே ஸ்ரீவேதவ்யாஸ பகவான். ஸ்ரீவால்மிகி பகவான் இப்படி அநுதபித்து வாக் சுத்தி பண்ணிற்றிலனாகிலும், இந்த ந்யாயமவனுக்கு மொக்குமென்று நினைத்திறே இவர் கூட்டியெடுத்தது.

**விளக்கம்** – (நாராயண கதையென்று தொடங்கி) - மஹாபாரதம் ஆதிபர்வம் - நாராயண கதாமிமாம் - நாராயணனின் கதையை இங்கு உரைக்கப்போகிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, நாராயணனுடைய சரிதத்தை உரைக்கப் போவதாகத் தொடங்கி. (கங்காகாங்கேய

ஸம்பவாத்ய ஸத் கீர்த்தநம் பண்ணின எச்சில்வாய்) - மஹாபாரதத்தின் ஸம்பவ பர்வத்தில் பீஷ்மருடைய பிறப்பு தொடக்கமாக உள்ள பலருடைய பிறப்புக்களை மிகவும் விரிவாக விளக்கியபடி உள்ளதாலும், பூசல்பட்டோலை – யுத்தத்தைப் பற்றி உரைக்கும் நூல் - என்பதற்கு ஏற்ப மஹாபாரத யுத்தம் குறித்தே மிகவும் விரிவாக வர்ணிப்பதாலும், மற்றவற்றைக் குறித்து உரைப்பதால் மிகவும் விரிவாக வளர்ந்து வாக்குத் தூய்மை இல்லாமல் போனது. இதனை உணர்த்த வ்யாஸபகவான், ஹரிவம்சம் - அஸத் கீர்தந காந்தார பரிவர்த்த பாம்ஸுலாம், வாசம் சௌரிகதா லாப கங்கயைவ புநீமஹே - பொருள் அல்லாதவற்றைக் குறித்து மிகவும் விரிவாகப் பேசுதல் என்றும் காட்டில் சுற்றிய காரணத்தால் எனது வாக்கு புழுதி அடைந்தது; இதனைக் க்ருஷ்ணனின் சரிதையைக் கூறுதல் என்பதான கங்கை நீர் கொண்டு தூய்மை ஆக்குவேனாக - என்று கூறுவதற்கு ஏற்ப, "தேவை அற்றவை குறித்து உரைத்தல் என்னும் காட்டில் அலைக்கழிக்கப்பட்டு எனது வாக்கு புழுதி அடைந்தது. இதனைப் பகவானின் சரிதத்தை உரைத்தல் என்னும் கங்கைநீர் கொண்டு நான் தூய்மை ஆக்கக் கடவேன்", என்று உரைத்து, அது போன்றே செய்தார். வால்மீகி மஹரிஷி தனது வாக்கில் தூய்மை இல்லாதது கண்டு வருந்தி, வ்யாஸர் செய்தது போன்று, தனது வாக்கைத் தூய்மை செய்ததாக இராமாயணதில் காணப்படவில்லை என்றாலும், இந்த ந்யாயம் இவருக்கும் பொருந்தும் என்று ஸ்வாமி அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவுள்ளம் கொண்டதால், வ்யாஸரையும் இங்கு சேர்த்தே அருளிச்செய்தார் (அதாவது இராமாயணம் போன்றே மஹாபாரதத்திலும் வ்யாஸர் வருத்தம் கொண்டு ஏதும் உரைக்கவில்லை. ஹரிவம்சத்திலேயே இவ்விதம் உரைத்தார்).

**வ்யாக்யானம் –** ஆக இப்படி உபக்ரமித்ததுக்குச் சேராதபடி அஸத்கீர்த்தனத்தைப் பண்ணி வாக்கை அசுத்தையாக்கி, அதுக்கு சுத்தி பண்ணவேண்டாதபடி, "திருமாலவன் கவியாது கற்றேன்" என்று ஸ்ரீய:பதியினுடைய கவியென்று அடியில் வாயோலையிட்ட ப்ரகாரத்திலே "மாற்றங்களாய்ந்து கொண்டு" என்கிறபடியே, அந்யபரமான சப்தங்கள் ஒன்றும் ஊடு கலசாதபடி சப்தங்களைத் தெரிந்தெடுத்து "உரிய சொல்லாலிசை மாலைகளேத்தி" என்கிறபடியே, விஷயத்துக்குத் தகுதியான சொல்லாலே சொல்லப்பட்டதாய் "வாய்த்தவாயிரம்" என்று வாச்யனான ஸர்வேச்வரனுக்கு வாய்த்த இப்ப்ரபந்தம்,

**விளக்கம்** - (சுத்தி பண்ணாமல்) – இப்படியாகத் தொடங்கிய செயலுக்குச் சேராதவிதத்தில் பொருள் தராதவற்றைக் குறித்து உரைத்து, வாக்கானது தூய்மை இழந்து போகும்படியாகச் செய்து, அதன் பின்னர் அப்படிப்பட்ட வாக்கினைத் தூய்மை செய்ய வேண்டாதபடியாக, (திருமாலவன் கவி என்ற வாயோலைப்படியே) – திருவிருத்தம் (48) - திருமாலவன் கவியாது கற்றேன் - என்பதற்கு ஏற்ப மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய நாராயணனைக் குறித்த கவிகள் என்று முதல் ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தில் தனது வாக்கு கொண்டு உரைத்த விதத்தில், (மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு) - திருவாய்மொழி (6-8-11) - மாற்றங்களாய்ந்து கொண்டு - என்பதற்கு ஏற்ப மற்ற பொருள்கள் எதனையும் குறித்து உரைக்காதபடியான சொற்களை நன்றாகத் தெரிந்து எடுத்து, (உரிய சொல் வாய்ந்த இது) – திருவாய்மொழி (4-5-6) – உரிய சொல்லாலிசை மாலைகளேத்தி - என்பதற்கு ஏற்ப உரைக்கப்படும் வஸ்துவான நாராயணனுக்குச் சேரும்விதத்தில் உள்ள தகுதியான சொற்கள் கொண்டு உரைக்கப்பட்டதாக, திருவாய்மொழி (2-2-11) - வாய்த்தவாயிரம் - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்து சொற்களாலும் கூறப்படும் பொருளாகிய ஸர்வேச்வரனுக்கு ஏற்பட்டதாக உள்ள இந்த ப்ரபந்தம் … (அடுத்து இந்த ப்ரபந்தம் குறித்து உரைக்கிறார்)

**வ்யாக்யானம்** – “வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்ம சாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம்” என்று வேதங்களில் புருஷஸூக்தமும், தர்ம சாஸ்த்ரங்களில் மநுப்ரணீதமும், மஹாபாரதத்தில் ஸ்ரீகீதையும், புராணங்களில் ஸ்ரீவிஷ்ணுபுராணமும் ஸாரமாயிருக்குமாபோலே, அந்யகதாகந்த ரஹிதமான அருளிச்செயலில் ஸாரமாயிருக்குமென்கை. இத்தால் “தீதிலந்தாதி” என்கிறபடியே கதாந்தர ப்ரஸ்தாவ தோஷ ராஹித்யத்தாலே ஆர்ஷ ப்ரபந்தங்களில் வ்யாவ்ருத்தமாய், பகவத் ப்ரதிபாதந ஸாமர்த்த்யத்தாலே பகவதேகபரமான மற்றையாழ்வார்கள் ப்ரபந்தங்களிலும் ஸாரமாயிருக்குமென்று இப்பரந்த வைலக்ஷண்யம் சொல்லிற்றாயிற்று.

**விளக்கம்** - (வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள்போலே) - வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்ம சாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம் - வேதங்களில் புருஷஸூக்தம், தர்மசாஸ்த்ரங்களில் மநுதர்மம், மஹாபாரதத்தில் ஸ்ரீமத்பகவத்கீதை, புராணங்களில் ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஆகியவை உயர்ந்தவைகள் ஆகும் - என்று கூறுவதற்கு ஏற்ப வேதங்களில் புருஷஸூக்தமும், தர்மசாஸ்த்ரங்களில் மனுவால் கூறப்பட்ட மநுதர்மமும், மஹாபாரதத்தில் ஸ்ரீகீதையும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

புராணங்களில் ஸ்ரீவிஷ்ணுபுராணமும் அந்தந்த பிரிவுகளுக்குச் சாரமாக உள்ளன; இது போன்று, (அருளிச்செயலில் ஸாரம்) – இந்த ப்ரபந்தம் மற்ற எந்தவிதமான கதைகளின் ஸம்பந்தம் சற்றும் இல்லாதபடி உள்ள நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களின் சாரமாக உள்ளது. இதன் மூலம், திருவாய் (8-2-11) - தீதில் அந்தாதி - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் குறித்து அல்லாமல் மற்ற கதைகளை உரைத்தல் என்ற தோஷம் சற்றும் இல்லாத காரணத்தால், மஹரிஷிகள் அருளிச்செய்த நூல்கலைக் காட்டிலும் வேறுபட்ட மேன்மை கொண்டதாகவும், ஸர்வேச்வரனைக் குறித்து மட்டுமே உரைக்கின்ற ஸாமர்த்யம் காரணமாக ஸர்வேச்வரன் குறித்து மட்டுமே கூறுகின்ற மற்ற ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்களுக்குச் சாரமாகவும் உள்ளது என்பதே திருவாய்மொழியின் சிறப்பு என்றார்.

64. குருசிஷ்ய க்ரந்தவிரோதங்களைப் பரமதாதிகளாலே பரிஹரியாமல் செஞ்சொல் செந்தமிழின் கவி பரவி யழைக்குமென்று அந்யோந்யம் கொண்டாடிப் பேசிற்றே பேசுமேக கண்டரில் என்னில் மிகுவென்னு மிவ ருரைகொளின் மொழி கொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்க வேண்டுகையாலே வலங்கொண்ட விதுக்குச் சேராதவை மநு விபரீதங்கள் போலே.

**அவதாரிகை** - இனிமேல் இப்படி அருளிச்செயலில் ஸாரமான இதன் ப்ராமாண்யாதிசயத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக ஆழ்வார்களுடைய ஐககண்டயத்தையும், அவர்களில் தலைவரான இவரருளிச்செய்த இப்ப்ரபந்தத்தினுடைய ப்ராபல்யத்தையும் ப்ரதிபாதியா நின்று கொண்டு, ஏவம்பூதமான விதுக்குச் சேராத சாஸ்த்ரங்கள் பரீக்ஷக பரித்யாஜ்யங்களாம்படியை அருளிச்செய்கிறார் (குருசிஷ்யேத்யாதியால்).

**விளக்கம்** - அடுத்து மற்ற ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் அனைத்திற்கும் சாரமாக உள்ள திருவாய்மொழியின் மிகவும் உயர்ந்த ப்ரமாணமாக உள்ள தன்மையை வெளிப்படுத்தத் திருவுள்ளம் பற்றினார். ஆகவே மற்ற ஆழ்வார்கள் அனைவரையும் கூறியதையே கூறுபவர்கள் என்பதையும், அவர்களுடைய தலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியின் மேன்மையையும் அருளிச்செய்ய எண்ணினார். ஆகவே, இப்படிப்பட்டதான திருவாய்மொழிக்கு சேராத சாஸ்த்ரங்கள் ஏதும் ஆராயத் தகுந்தவை அல்ல என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம் –** அதாவது, ருஷிகளில் குருசிஷ்யர்களான வ்யாஸ ஜைமிநிகளில் குருவான வ்யாஸனுடைய க்ரந்தமான ப்ரஹ்மஸூத்ரத்தோடு சிஷ்யனான ஜைமிநியுடைய க்ரந்தமான கர்மஸூத்ரத்துக்கு நிரீச்வரவாதாதிகளால் வந்த விரோதத்தை, "ஸம்பத்தேரிதி ஜைமிநி", "அந்யார்த்தம் து ஜைமிநி:", "பரம் ஜைமிநிர் முக்க்யத்வாத்", "ப்ராஹ்மேண ஜைமிநி:" இத்யாதியான ப்ரஹ்மஸூத்ரங்களாலே ஜைமிநிக்கு ப்ரஹ்ம ஸ்வரூப தத்குண தது பாஸந தத்பலாதிகளினுடைய அங்கீகார முண்டென்னுமிடம் தோற்றுகையாலும், மஹாபாரதத்திலே ஹயசிர உபாக்யாநாதிகளிலே பகவத் வ்யாஸோபதேச லப்த பரமாத்ம தத்வஜ்ஞாநமுடையவனாகச் சொல்லுகையாலும், ஸ்ரீவேதவ்யாஸனும் ஜைமிநியும் ஏககண்டர்கள்.

**விளக்கம்** - (குருசிஷ்ய க்ரந்த விரோதங்களை) - ரிஷிகளில் குருவும் சிஷ்யருமாக உள்ள வ்யாஸர் மற்றும் ஜைமிநி ஆகியவர்களில் ஆசார்யனாகிய வ்யாஸருடைய க்ரந்தமான ப்ரஹ்மஸூத்ரத்துடன், சிஷ்யனாகிய ஜைமிநியின் க்ரந்தமான கர்மஸூத்ரத்துக்கு "ஸர்வேச்வரன் இல்லை" என்று கூறப்படும் வாதங்களால் முரண்பாடு ஏற்பட்டது. இந்தக் கருத்து வேறுபாட்டினை .... (இந்த வாக்கியத்தை அடுத்த விளக்கத்தின் இறுதியில் காணப்படும் "சமாதானம் உரைத்தார்கள்" என்பதுடன் சேர்த்து முடிக்கவேண்டும்). ப்ரஹ்மஸூத்ரம் (1-2-32) - ஸம்பத்தேரிதி ஜைமிநி - வைச்வாநர வித்யையின் அங்கமாக உள்ள ப்ராணாஹுதியை அக்னிஹோத்ரம் என்று உணர்துவதற்காகவே உபாஸகனின் மார்பு முதலான உடல் உறுப்புகளை வேதி முதலான யாகத்திற்குப் பயன்படும் உபகரணங்கள் என்று ஜைமினி கூறினார் - என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (1-4-18) - அந்யார்த்தம் து ஜைமிநி: - வேறு ஒரு கருத்தைக் கொண்டு இங்கு ஜீவன் குறித்து ஜைமிநி கூறுகிறார் - என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (4-3-11) - பரம் ஜைமிநிர் முக்க்யத்வாத் - ப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்களை ஆதிவாஹிகர்கள் அழைத்துச் செல்வதாக ஜைமிநி எண்ணுகிறார் - என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (4-4-5) - ப்ராஹ்மேண ஜைமிநி: - பாவம் அற்ற தன்மை போன்ற ப்ரஹ்மத்தின் தன்மைகளுடன் முக்தன் உள்ளதாக ஜைமிநி கருதுகிறார் - என்றும் காணப்படும் ப்ரஹ்மஸூத்ரங்கள் மூலம், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், ப்ரஹ்மத்தின் குணங்கள், ப்ரஹ்ம உபாஸனை, உபாஸனை மூலம் கிட்டும் பலன்கள் ஆகியவற்றில் வ்யாஸருடன் ஜைமிநிக்குக் கருத்து உடன்பாடு உண்டு என்று வெளிப்படுகிறது; மேலும் மஹாபாரதத்தில் காணப்படும் ஹயசிர சரிதம் போன்றவற்றின் மூலமாக வ்யாஸரின் உபதேசத்தால் ஜைமிநி, பரமாத்மாவைக் குறித்த ஞானத்தை உள்ளது உள்ளபடி பெற்றார்

என்று கூறப்படுகிறது. இந்தக் காரணங்களால் வ்யாஸரும், ஜைமிநியும் ஒரே போன்று பேசும் தன்மை கொண்டவர்கள் என்று தேறுகிறது.

**வ்யாக்யானம்** - இனி தேவதா நிராகரணம் பண்ணினவிது ஈச்வரப்ரணீதமாக வேதத்தைச் சிலர் சொல்லுய்கையாலே அந்த பௌருஷேயத்வமடியாக விப்ரலம்பாதி தோஷங்களைக் கல்பித்து வேதப்ராமாண்யம் சொல்லுவது, வைதிக கர்மங்களை நிந்திப்பதாகிற பாஹ்யரை நிராகரித்து, வேதப்ராமாண்ய கர்மாவச்ய கர்த்தவ்யதைகளை ஸாதிக்கையி லுண்டான இச்சையாலே ஸ்வமதமன்றியிலே யிருக்கப் பர மதத்தை அவலம்பித்துச் சொன்னா னென்றாதல், அன்றிக்கே தேவதா நிராகணத்தில் தாத்பர்யமில்லை. அச்ருத வேதாந்தர்க்கு கர்மத்தில் அச்ரத்தையை நிவாரிக்கைக்காக கர்மப்ராதாந்யம் சொல்லுகையிலே தாத்பர்யமாகையாலே, “நஹி நிந்தா நித்த்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே, நிந்திதாத் இதரத் ப்ரசம்ஸிதும்” என்கிற ந்யாயத்தாலே தேவதா நிராகரணம் பண்ணினவிது கர்ம ப்ரசம்ஸார்த்த மாகையாலே அந்யபரமென்றாதல் கொள்ள வேணுமென்று, இப்படி பர மதாந்ய பரத்வங்களாலே பரிஹரிக்க வேண்டிற்றிறே.

**விளக்கம்** - (பர மதாதிகளாலே பரிஹரியாமல்) - இப்படியாக உள்ளபோது, ஜைமிநி “ஸர்வேச்வரன் இல்லை” என்று கூறியது வ்யாஸருடன் முரணாகிறதே என்ற சந்தேகத்திற்கு அடுத்து விடை அளிக்கிறார். இவ்விதம் ஜைமிநி கூறினார் என்றாலும், “வேதங்கள் ஸர்வேச்வரனால் ஏற்படுத்தப்பட்டது” என்று சிலர் உரைப்பதன் காரணமாக ஜைமிநி செய்தது என்னவென்றால் – “வேதங்கள் மனிதர்களால் கூறப்பட்டது” என்று சிலர் உரைத்து, அதன் காரணமாக அவற்றில் வஞ்சித்தல் முதலான தோஷங்கள் உள்ளன என்று கூறி, வேதம் ப்ரமாணங்கள் அல்ல என்றும், வேதங்களில் உரைக்கப்பட்ட கர்மங்களை மறுத்தல் என்பதான செயல்களைச் சிலர் செய்வதால், அந்தச் மதங்களின் அந்தக் கொள்கைகளை மறுத்து, வேதங்களின் ப்ரமாணமாகும் தன்மையை நிரூபித்து, அவற்றின் உள்ள கர்மங்கள் அவசியம் செய்யத்தக்கவை என்று ஆணித்தரமான ஜைமினி எடுத்துரைத்தார்; இது போன்ற கருத்துக்கள் தனது “ஸர்வேச்வரன் இல்லை” என்பதுடன் முரணாக இருப்பினும், வேதங்களைக் காக்கவேண்டும் என்னும் இச்சை காரணமாக, மற்ற மதங்களில் உள்ள கருத்துக்களைத் தள்ளும்விதமாக உரைத்தார். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். “ஸர்வேச்வரன் இல்லை” என்றி ஜைமிநி கூறியதற்கு நேரடியான பொருள் ஏற்பது கூடாது. அதன் பொருள் என்னவென்றால் - வேதங்களைக் கேட்பதற்குத் தகுதி அற்றவர்களுக்கு அவற்றில் கூறும் கர்மங்களைச்

செய்வதில் விருப்பம் இருக்காது; இந்த விருப்பம் இன்னையைத் தள்ளுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டதால், கர்மங்களின் முக்கியத்வத்தை உணர்த்துவதையே தனது முக்கிய செயலாக ஜைமினி கொண்டார். ஆகவே, நஹி நிந்தா நித்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே, நிந்திதாத் இதரத் ப்ரசம்ஸிதும் - நிந்தை என்பது நிந்திக்கும் பொருளை நிந்திப்பதற்காக வரவில்லை, நிந்திக்கும் பொருள் அல்லாமல் உள்ள மற்றொரு பொருளைத் துதிப்பதற்காகவே வந்தது - என்ற நியாயத்தின்படி, "ஸர்வேச்வரன் இல்லை" என்று கூறப்பட்ட கருத்தானது, கர்மங்களைச் செய்தே தீரவேண்டும் என்ற அடிப்படையில் உரைக்கப்பட்டது என்று கொள்ளவேண்டும். ஆகவே மற்றவர்கள் மதத்தைத் தள்ளுவதற்காக, அவர்கள் மதத்தினை அடியொட்டி இவ்விதம் "ஸர்வேச்வரன் இல்லை" என்று உரைத்ததாக இந்த முரண்பாட்டிற்குச் சமாதானம் உரைத்தார்கள்.

**வ்யாக்யானம்** - அப்படியே யிங்கும் அந்யோந்ய வசந விரோதமுண்டாய் அதுக்கு ஒரு பரிஹாரம் பண்ணவேண்டாதபடி, "செஞ்சொற்கவிகாள்" என்றும், "செந்தமிழ் பாடுவார்" என்றும், "இன்கவி பாடும் பரமகவிகள்" என்றும், "பதியே பரவத் தொழும் தொண்டர்" என்றும், "அரங்கவோ வென்றழைக்கும் தொண்டர்" என்றும் பரஸ்பரம் ச்லாகித்துக் கொண்டு, "பேசிற்றே பேசலல்லால்" என்கிறபடியே ஒருவர் பேசினதே எல்லாரும் பேசுமேக கண்டரான ஆழ்வார்களில் வைத்துக்கொண்டு, "என்னில் மிகு புகழார் யாவர்" என்று சேஷிக்கு அதிசயகரராகப் பெற்ற ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே என்னிற்காட்டில் மிக்க புகழையுடையார் ஆரென்னும் ஸர்வாதிகரான இவருடைய "உரைகொளின் மொழி" என்கிறபடியே ஶ்ரீராமாயணாதிகளையும் ஸ்வவைலக்ஷண்யத்தாலே ஜயிக்கும்படியான உக்திகளைக் கொண்டு வேத ததுப ப்ரும்ஹண ரூப சாஸ்த்ரங்களில் ஸம்சயிதமான அர்த்தங்களை நிர்ணயிக்க வேண்டும்படியா யிருக்கையாலே "வலங்கொண்ட வாயிரம்" என்கிறபடியே ப்ரதிபாத்ய வஸ்துவை உள்ளபடி ப்ரதிபாதிக்கவல்ல ஸாமர்த்யத்தை யுடைத்தான இப்ப்ரபந்தத்துக்குச் சேராத சாஸ்த்ரங்கள், "மந்வர்த்த விபரீதா து யா ஸ்ம்ருதிஸ் ஸா ந சஸ்யதே" என்று சொல்லப்பட்ட மநுவிபரீதமான ஸ்ம்ருதிகள் போலக் கழிக்கப்படுமென்கை.

**விளக்கம்** - (செஞ்சொல் செந்தமிழின் கவி பரவி யழைக்குமென்று அந்யோந்யம் கொண்டாடி) - இது போன்று ஒருவர் உரைத்த கருத்துக்கு மற்றொருவர் முரணாக உரைத்துவிட்டு, பின்னர் அதற்கான சமாதானம் கூறவேண்டாதபடி திவ்ய ப்ரபந்தங்கள்


Email:sridharan_book@yahoo.co.in

உள்ளன. இதனை விளக்குகிறார். திருவாய்மொழி (10-7-1) - செஞ்சொற்கவிகாள் – என்றும், பெரியதிருமொழி (2-8-2) - செந்தமிழ் பாடுவார் - என்றும், திருவாய்மொழி (7-9-6) - இன்கவி பாடும் பரமகவிகள் - என்றும், பெருமாள் திருமொழி (2-2) - அரங்கவோ வென்றழைக்கும் தொண்டர் - என்றும் ஒருவருக்கு ஒருவர் மற்றவர்களுடைய மேன்மையை உரைத்துக் கொண்டாடியபடி, (பேசிற்றே பேசும் ஏக கண்டரில்) - திருமாலை (22) - பேசிற்றே பேசலல்லால் - என்பதற்கு ஏற்ப ஒரு ஆழ்வார் அருளிச்செய்த கருத்தையும் சொல்லையுமே அனைவரும் பேசும்படியான ஒரே குரல் கொண்டவர்களான ஆழ்வார்களில், (என்னில் மிகும் என்று இவர்) – பெரியதிருவந்தாதி (4) - என்னில் மிகு புகழார் யாவர் - என்பதற்கு ஏற்ப எஜமானனுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுத்துவதன் காரணமாக உண்டான ப்ரீதியின் மிகுதி யாருக்கு உள்ளது என்பதைக் காட்டிலும், மிகுந்த புகழ் நிரம்பியவர் யார் என்ற காரணத்தால் அனைவரையும் விட உயர்ந்தவராகிய நம்மாழ்வார், (உரைகொள் இன்மொழி கொண்டு) – திருவாய்மொழி (6-5-3) - உரைகொளின் மொழி - என்பதற்கு ஏற்ப இராமாயணம் உள்ளிட்டவற்றையும் தனது வேறுபட்ட மேன்மை காரணமாக வெல்லவல்ல சொற்கள் கொண்டு, (சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்க வேண்டுகையாலே) - வேதங்கள் மற்றும் அவற்றின் ஆழ்பொருளை விவரிக்கின்ற புராணங்கள் போன்றவற்றில் சந்தேகம் எழுப்பவல்ல கருத்துக்களை தெளிவாக்க வேண்டும்படி உள்ள காரணத்தால், (வலம் கொண்ட இதுக்குச் சேராதவை) - திருவாய்மொழி (3-8-11) - வலங்கொண்ட வாயிரம் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய ஸ்வபாவம், ஸ்வரூபம் போன்ற பல தன்மைகளையும் உள்ளது உள்ளபடி கூறவல்லதான இந்தத் திருவாய்மொழியின் பொருளுடன் பொருந்தாத மற்ற சாஸ்த்ரங்கள் அனைத்தும், (மநு விபரீதங்கள் போலே) மந்வர்த்த விபரீதா து யா ஸ்ம்ருதிஸ் ஸா ந சஸ்யதே - எந்த ஒரு ஸ்ம்ருதி மநுவால் கூறப்படும் கருத்துக்களுக்கு மாறுபட்டதாக உள்ளதோ அது கொண்டாடப்படுவதில்லை - என்பதற்கு ஏற்ப மநு சாஸ்த்ரத்திற்கு விரோதமான ஸ்ம்ருதிகள் தள்ளப்படுவது போன்று, தள்ளப்படத் தக்கவையே ஆகும் என்று கருத்து.

65. பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ர வாக்கியங்களொருங்கவிடுவர்.

**அவதாரிகை** - இப்படி இதுகொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயித்தவ ராரென்னும் அபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் (பாஷ்யகாரரித்யாதி).

**விளக்கம்** - இப்படியாக உள்ள திருவாய்மொழியின் துணை கொண்டு சாஸ்த்ரங்களின் ஆழ்பொருளை உறுதிபட உரைத்தவர் யார் என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது ஸூத்ரவாக்யங்களில் ஸந்திக்தங்களான அர்த்தங்களெல்லாம் இப்ப்ரபந்தத்தின் ஸூக்திகளைக் கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுவ ரென்கை.

**விளக்கம்** - எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்தபோது ப்ரஹ்மஸூத்ர வாக்கியங்களில் ஏற்படும் ஐயங்களை இந்த ப்ரபந்தத்தின் துணை கொண்டு தெளிந்து, உறுதிபட உரைத்தார் என்று கருத்து.

66. அதுக்கு மூலம் “விதயச்ச” என்கிற பரமாசார்ய வசநம்.

**அவதாரிகை** - அவர்தாம் அப்படி அருளிச்செய்தருளுகைக்கு மூலம் ஏதென்னு மபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் (அதுக்கு மூலமித்யாதி).

**விளக்கம்** - அவ்விதம் எம்பெருமானார் அருளிச்செய்ததற்கு என்ன காரணம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பாஷ்யகாரர் அப்படி செய்தருளுகைக்கடி, “விதயச்ச வைதிகாஸ் த்வதீய கம்பீரமநோநுஸாரிண:” என்று, “இதம் குரு” “இதம் மாகார்ஷீ:” என்கிற ஸ்வதந்த்ரமான வைதிக விதிகளும் அநந்ய ப்ரயோஜநரா யாச்ரயித்திருக்கும் த்வதீயருடைய ஐச்வர்யாதிகளால் கலக்கவொண்ணாதபடி கம்பீரமான மநஸ்ஸைப் பின் செல்லுமென்று – இவ்வாழ்வார் போல்வார் நினைவை சாஸ்த்ரங்கள்தான் பின் செல்லுமதாகப் பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த வசநமென்கை.

**விளக்கம்** - (அதுக்கு மூலம்) - எம்பெருமானார் திருவாய்மொழியை அடியாகக் கொண்டு ப்ரஹ்மஸூத்ர வாக்கியங்களைத் தெளிவுப்படுத்தியன் காரணம். (விஷயச்ச என்கிற பரமாச்சார்ய வசநம்) - இங்கு பரமாசார்யார் என்பது ஆளவந்தாரைக் குறிப்பதாகும். ஸ்தோத்ரரத்னம் (20) - விதயச்ச - வேதங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை

ஆராய்ந்தால், உன்னையே சரணம் என்று பற்றி நிற்கும் அடியார்களுடைய கம்பீரமான திருவுளத்தைப் பின்பற்றியே அவை உள்ளன என்று புலப்படுகிறது - என்றுள்ள ச்லோகத்தில், "இதம் குரு – இதனைச் செய், இதம் மாகார்ஷீ: - இதனைச் செய்யாதே" என்பதனான சுதந்திரமான வேத விதிமுறைகள் கூட, மற்ற எந்த ஒரு பலனையும் கருத்தில் கொள்ளாததும், செல்வம் முதலானவற்றால் மாசு அடையாததும் ஆகிய அடியார்களுடைய கம்பீரமான மனதைப் பின்தொடர்ந்தே உள்ளன என்று கூறுவது கானலாம்; ஆகவே அப்படிப்பட்டவராகிய நம்மாழ்வார் போன்றவர்களுடைய சிந்தனைகளைப் பின்பற்றியே சாஸ்த்ரங்கள் செல்கின்றன என்பது ஆளவந்தாரின் சொற்களாகும். இதுவே எம்பெருமானார் இவ்விதம் செய்ததன் காரணமாகும்.

67. ஆப்திக்கு இவர் சுருதி மார்க்கண்டேயன் பார்த்தனென்கிற விவை வ்யாஸ மநு ப்ரஹ்மவாதிகளை வேதம் சொல்லுமாபோலே.

**அவதாரிகை** - இப்படி அபியுக்தரானவர்கள் இது கொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்கும்படி ஸகல வேதோப ப்ரும்ஹணங்களிலும் அதிப்ரபலமாய், இவ்வளவு மன்றிக்கே கீழ்ச் சொன்னபடியே த்ராவிட வேதமாய்க் கொண்டு வேத ஸமமாயிருக்கிற ஆப்ததமமான இப்ப்ரபந்தத்திலே ஆப்திக்கு உறுப்பாக இவர் வேறே சில விஷயங்களை எடுப்பானென் னென்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (ஆப்திக்கித்யாதி).

**விளக்கம்** - இப்படியாக ப்ரமாணங்களைக் கொண்டு பலவற்றையும் நிரூபிக்கும் சான்றோர்கள், இந்தத் திருவாய்மொழியின் துணை கொண்டு சாஸ்த்ரங்களின் ஆழ்பொருளை நிரூபிக்கும்படியாக, அனைத்து வேதங்களைக் காட்டிலும், இதிகாசங்கள் மற்றும் புராணங்களைக் காட்டிலும், இந்தத் திருவாய்மொழி மிகவும் ப்ரபலமாக உள்ளது. இது மட்டும் அல்லாமல், மேலே கூறப்பட்டபடி, தமிழ்வேதமாகவே உள்ள காரணத்தால் வேதத்திற்குச் சமமாகவே உள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த இந்தத் திருவாய்மொழியில், பகவத்விஷயத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக நம்மாழ்வார், மற்ற சில உதாரணங்களை ஏன் காண்பிக்கவேண்டும் என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இதில் சொல்லுகிற அர்த்தங்களில் ஆப்திக்குறுப்பாக, இவர் "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்றும், "மார்க்கண்டேயனும் கரியே" என்றும், "பார்த்தன் தெளிந்தொழிந்த" என்றும் ச்ருதியையும், மார்க்கண்டேயனையும், பார்த்தனையும் சொல்லுகிறவை, பரமாப்தமான வேதம், "ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய" என்றும், "யத் வை கிஞ்ச மநுரவதத் தத பேஷஜம்" என்றும், "ப்ரஹ்மவாதிநோ வதந்தி" என்றும் ஆப்திக் குறுப்பாக வ்யாஸனையும் மநுவையும் ப்ரஹ்மவாதிகளையும் சொல்லுகிறாப்போலே யென்கை. ஆனபின்பு அது தாழ்வல்ல, ஆப்த்யதிசயத்துக்கு உறுப்பென்று கருத்து. இத்தால், கீழ் வேதஸாம்யம் சொன்னவிடத்திலே சொல்ல வேண்டியிருக்க, அநுக்தமாய்க் கிடந்தவற்றை இங்கே அருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம்** - (ஆப்திக்கு) - இந்தத் திருவாய்மொழியில் கூறப்படும் பகவத்விஷயத்தில் நம்பிக்கை ஏற்படுத்தும்விதமாக. (இவர் சுருதி மார்க்கண்டேயன் பார்த்தன் என்கிற இவை) - திருவாய்மொழி (1-1-7) - உளன் சுடர்மிகு சுருதியுள் - என்றும், திருவாய்மொழி (5-2-7) - மார்க்கண்டேயனும் கரியே – என்றும், திருவாய்மொழி (2-8-8) - பார்த்தன் தெளிந்தொழிந்த - என்றும் நம்மாழ்வார் ச்ருதி, மார்க்கண்டேயன், பார்த்தன் ஆகியவற்றைக் குறித்து உரைத்தல் என்பது. (வ்யாஸ மநு ப்ரஹ்மவாதிகளை வேதம் சொல்லுமாபோலே) - உண்மைகளைக் குறித்து உள்ளது உள்ளபடி உரைக்கும் வேதங்கள், ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய - பராசரரின் புத்திரரான வ்யாஸர் உரைத்தார் - என்றும், யஜுர்வேதம் - யத் வை கிஞ்ச மநுரவதத் தத பேஷஜம் - எதனை மனு உரைத்தாரோ அது மருந்து - என்றும், யஜுர்வேதம் - ப்ரஹ்மவாதிநோ வதந்தி - ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் கூறுகிறார்கள் - என்றும் நம்பிக்கை உண்டாக்கும் விதத்தில் வ்யாஸர், மனு, ப்ரஹ்மத்தை அறிந்த மனிதர்கள் குறித்துக் கூறுவது போன்றதாகும். ஆகவே நம்மாழ்வார் அவ்விதம் மற்ற விஷயங்களை அருளிச்செய்தமை என்பது, திருவாய்மொழிக்குத் தாழ்வு அல்ல, மாறாக நம்பிக்கை ஏற்படுத்தவல்லதாகும் என்று கருத்து. இதன் மூலம், வேதத்துடன் திருவாய்மொழிக்கு உள்ள ஒற்றுமை குறித்து அருளிச்செய்த இடத்தில் இதனைக் குறித்து கூறியிருக்கவேண்டும்; ஆனால், அதனை அங்கு உரைக்காமல் விடுத்த காரணத்தால், இங்கு அருளிச்செய்தார் என்பது தெளிவாகிறது.

68. பாரதகீதைகளின் வேதோபநிஷத்த்வம்போலே இதுவும் வ்யாக்க்யையானாலும் வேதரஹஸ்யமாம்.

**அவதாரிகை** - ஆனால் இத்தை உபப்ரும்ஹணமாகச் சொன்ன பக்ஷத்தில் வேதவ்யாக்க்யை யாமதொழிய, "வேதரூபமிதம் க்ருதம்", "த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம்", "த்ராவிட வேத ஸூக்தை:" என்று அபியுக்தர் சொல்லுகிற வேதத்வம் இதுக்குக் கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (பாரத கீதைகளினித்யாதியால்).

**விளக்கம்** - ஆனால் திருவாய்மொழியை இதிகாச புராணங்கள் போன்றுள்ளது என்று உரைக்கும்போது, அவை போன்று இதனையும், வேதத்திற்கு வ்யாக்யானம் என்று கூறலாமே அல்லாமல், வேதரூபம் இதம் க்ருதம் - வேதரூபமாகவே திருவாய்மொழி செய்யப்பட்டது - என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-6) - த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம் - தமிழில் உள்ளதான ப்ரஹ்மத்தைக் குறித்ததான திருவாய்மொழி என்னும் உபநிஷத்தை - என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-16) - த்ராவிட வேத ஸூக்தை: - தமிழ் வடிவில் உள்ள வேதம் கொண்டு - என்று சான்றோர்கள் உரைப்பது போன்று, வேதமாகும் தன்மை திருவாய்மொழிக்கு உண்டோ என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, வேதோபப்ரும்ஹணமான மஹாபாரதமும், அதில் ஸாரமான ஸ்ரீகீதையும், "வேதாநத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாந்" என்றும், "பகவத்கீதா ஸூபநிஷத்ஸு" என்றும் சொல்லுகிறபடியே வேதமும் உபநிஷத்துமாகிறாப் போலே, இது வேதவ்யாக்க்யையான உபப்ரும்ஹணமானாலும் வேதரஹஸ்யமா மென்கை. வேதரஹஸ்யமாவது, வேதத்தில் ரஹஸ்யபாகமான உபநிஷத்து. கீழ் ச்சாந்தோக்ய ஸமமாகவிறே சொல்லிற்று. ஆகையால் இந்தப் பக்ஷத்திலும் இதன் த்ராவிட வேதத்வ ஹாநி வாராதென்றும் கருத்து.

**விளக்கம்** - (பாரதகீதைகளின் வேதோபநிஷத்த்வம்போலே) – வேதத்திற்குத் துணை நூலாக, அதன் பொருளை விரிவாக உரைக்கவல்ல மஹாபாரதமும், அதன் சாரமாக உள்ள ஸ்ரீமத்பகவத்கீதையும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் - வேதாநத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாந் - மஹாபாரதமாகிற ஐந்தாவது வேதத்தை அத்யயனம் செய்வித்தார் - என்றும், பகவத்கீதாஸூபநிஷத்ஸு – பகவத்கீதை என்ற உபநிஷத்தில் - என்றும் கூறுவதற்கு

ஏற்ப, அவைகள் முறையே வேதமும் உபநிஷத்தும் ஆவது போன்று, (இதுவும் வ்யாக்க்யையயானாலும் வேதரஹஸ்யமாம்) - இந்தத் திருவாய்மொழியும் வேதத்தினை விவரித்துக் கூறும் நூலாக உள்ளபோதிலும், வேதரஹஸ்யமான உபநிஷத்தே ஆகும். வேதரஹஸ்யம் என்றால் வேதத்தில் உள்ள ரஹஸ்ய பாகமான உபநிஷத் ஆகும். மேலே காணப்பட்ட பல சூர்ணைகளில், திருவாய்மொழியைச் சாந்தோக்ய உபநிஷத்திற்குச் சமமாகவே கூறினார் அல்லவோ? ஆகவே திருவாய்மொழியை, வேதத்தின் பொருள் விளக்கும் நூல் என்று கொண்டாலும், இது தமிழ்வேதம் என்ற நிலைக்கு எந்தவிதமான தாழ்வும் ஏற்படாது என்று கருத்து.

69. உதாத்தாதி பத க்ரம ஜடா வாக்ய பஞ்சாதி பாத வ்ருத்த ப்ரச்ந காண்டாஷ்ட காத்யாயாம் ச பர்வாத்யலங்காரங்கள் போலே எழுத்தசை சீர்ப் பந்தமடி தொடை நிரைநிரையோசை தளை யினம் யாப்புப் பாத்துறை பண்ணிசை தாளம் பத்து நூறாயிரம் முதலான செய்கோலம் இதுக்குமுண்டு.

**அவதாரிகை** – ஆக இப்படி இப்ப்ரபந்தத்தை வேத ஸமமென்பது ததுபப்ரும்ஹண ஸமமென்பதாகா நின்றீர், அவை யிரண்டுக்கும் தத்ததநுரூபமா யிருப்பன சில அலங்காரங்களுண்டிறே, தாத்ருசாலங்காரங்கள் இதுக்குமுண்டோவென்ன, ஸம்ஸ்க்ருதமானவற்றுக்கு தத்ததநுகுணமான அலங்காரங்கள் பலவுமுண்டானாப்போலே த்ராவிடமான விதுக்கும் ஏததநுகுணமான அலங்காரங்கள் பலவுமுண்டென்கிறார் (உதாத்தாதியென்று தொடங்கி).

**விளக்கம்** - ஒரு சிலர் அழகியமணவாளப்பெருமாள்நாயனாரிடம், “திருவாய்மொழியானது வேதத்திற்குச் சமம், வேதத்தை விளக்கிக் கூறும் நூல்களுக்குச் சமம் என்று பலவிதமாக நீவிர் உரைத்தீர். ஆனால் அந்த இரண்டிற்கும், அந்தந்த க்ரந்தங்களுக்கு ஏற்றபடியான சில அலங்காரங்கள் (சொல் அல்லது வாக்கிய அமைப்பு) உள்ளது போன்று, திருவாய்மொழிக்கும் உள்ளதோ?”, என்றனர். வடமொழியில் அமையப் பெற்ற அந்தந்த க்ரந்தங்களுக்கு ஏற்ப அவற்றில் பல அலங்காரங்கள் உள்ளது போன்று, தமிழில் அமைந்துள்ள திருவாய்மொழிக்கு, தமிழுக்கே ஏற்ற அலங்காரங்கள் பலவும் உண்டு என்கிறார்.

**குறிப்பு** – இந்தச் சூர்ணையில் உள்ள பலவிதமான வடமொழி சொற்களை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். வேத வாக்கிற்கெல்லாம், சப்த உச்சரிப்பானது, உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்று நான்கு வகைப்படும். உதாத்தம் - சாதாரண ஸ்வரத்தில் உச்சரிக்க வேண்டும். அனுதாத்தம் - சாதாரண ஸ்வரத்திலிருந்து ஒரு மாத்திரை இறக்கி உச்சரிக்க வேண்டும். ஸ்வரிதம் - சாதாரண ஸ்வரத்திலிருந்து ஒரு மாத்திரை ஏற்றி உச்சரிக்க வேண்டும். ப்ரசயம் என்பதை ஸ்வரிதத்தில் மாறுபாடு கொண்ட ஸஞ்சாரம் எனலாம். ஜடை – ஒரு சொல்லை மாறி மாறி இரண்டு மூன்று முறை உச்சரித்தல். பஞ்சாதி – ஐம்பது சொற்கள் கொண்ட ஒரு தொகுப்பு.

**வ்யாக்யானம்** – அதாவது, உதாத்தாதி யென்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே அநுதாத்த ஸ்வரித ப்ரசயங்களைச் சொல்லுகிறது. இந்த உதாத்தாதி ஸ்வர விசேஷங்களும், க்ரம ஜடா பஞ்சாதிகளும் ப்ரச்நாஷ்டகங்களும் வேதாஸாதாரணம். அம்ச பர்வாதிகள் உபப்ரும்ஹணா ஸாதாரணம். பர்வாதி யென்கிறவிடத்தில் ஆதிசப்தத்தால் ஸ்கந்தாதிகளைச் சொல்லுகிறது. பத வாக்கிய பாத வ்ருத்த காண்டாத்யாயங்கள் உபய ஸாதாரணம். ஸ்ரீராமாயணத்தில் ப்ரதாந பரிச்சேதங்களிலும் கண்ட வ்யவஹார முண்டிறே. கௌஷீதகி முதலான உபநிஷத்துக்களிலே அத்யாயமென்கிற பரிச்சேத வ்யவஹாரம் கண்டு கொள்வது.

**விளக்கம்** - உதாத்தம் போன்றவைகளும். "உதாத்தாதி" என்பதில் உள்ள "ஆதி" என்பதன் மூலம் அனுதாத்தம், ஸ்வரிதம் மற்றும் ப்ரசயங்களும் சேர்த்துக் கூறப்பட்டன. இப்படிப்பட்ட உதாத்தம் போன்ற ஒலி பிரிவுகளும், க்ரமங்கள் - ஜடா - பஞ்சாதி – ப்ரச்ந - அஷ்டகங்களும் வேதத்திற்கே உரிய அமைப்புகள் ஆகும். அம்சம், பர்வம் [உதாரணமாக மஹாபாரதத்தில் உள்ள ஆதிபர்வம்] போன்ற அமைப்புகள் இதிகாசம், புராணங்கள் போன்றவைகளுக்கே உரியவை ஆகும். "பர்வாதி" என்பதில் உள்ள "ஆதி" என்பதன் மூலம் ஸ்கந்தம் [ஸ்ரீமத் பாகவதத்தில் முதல் ஸ்கந்தம், இரண்டாம் ஸ்கந்தம் என்று பன்னிரண்டு உள்ளன] போன்றவை கூறப்பட்டன. பதம், வாக்கியம், பாதம், விருத்தம், காண்டம், அத்யாயம் போன்றவை வேதங்கள் மற்றும் இதிகாச புராணங்கள் ஆகிய இரண்டிற்கும் உள்ள பொதுவான அமைப்புகள் ஆகும். இராமாயணத்தில் முக்கியமான பிரிவுகளைக் காண்டம் என்று கூறுவது உண்டு [உதாரணமாக, அயோத்யாகாண்டம்

போன்றவை]. கௌஷீதகீ உபநிஷத் போன்றவற்றில், அத்யாயம் என்ற பிரிவுகள் கூறப்படுவது காணலாம்.

**வ்யாக்யானம்** - ஆக இப்படி வேதத்துக்கும் ததுபப்ரும்ஹணங்களுக்கு முண்டான அலங்காரங்களைச் சொல்லி, அப்படியே இதுக்குமுண்டான அலங்காரங்களை யெல்லாம் சொல்லுகிறது மேல் (எழுத்தித்யாதி). எழுத்தாவது குற்றேழுத்து நெட்டெழுத்து முதலான பதின்மூன்றெழுத்து. அசையாவது நேரசை, நிரையசை ஆகிறவிரண்டசையும். சீராவது ஆசிரிய உரிச்சீர் நான்கும், வெண்பாவுரிச்சீர் நான்கும், வஞ்சியுரிச்சீர் நான்கும். பொதுச்சீர் பதினாறும், ஓரசைச்சீரிரண்டும் ஆக முப்பது சீரும். பந்தமெனிலும் தளையெனிலும் ஒக்குமென்று தமிழ் சொல்லுகையாலே பந்தமும் தளையுமொன் றாகையால் இங்கே பந்தமென்றும், மேலே தளையென்றும் சொல்லுமளவில் புநருக்த மாகையாலே இரண்டத்தொன்று வர்ஜிக்க வேணும்.

**விளக்கம்** - ஆக, இப்படியாக வேதங்கள் மற்றும் அவற்றை விளக்கவல்ல நூல்களான இதிகாச புராணங்கள் ஆகியவற்றுக்கு உள்ள அலங்காரங்களை உரைத்து, இது போன்றே திருவாய்மொழிக்கும் உள்ள அனைத்து அலங்காரங்களையும் இனி உரைக்கிறார். (எழுத்து) - எழுத்து என்றால் குறில், நெடில் என்றுள்ள பதிமூன்று வகைகள் ஆகும் [குறில், நெடில், உயிர், மெய், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், அளபெடை]. (அசை) - அசை என்பது நேரசை மற்றும் நிரையசை ஆகும். (சீர்) என்பது ஆசிரிய உரிச்சீர் நான்கு [நேர்நேர், நிரைநேர், நேர்நிரை, நிரைநிரை], வெண்பாவுரிச்சீர் நான்கு [நேர்நேர்நேர், நிரைநேர்நேர், நேர்நிறைநேர், நிரைநிரைநேர்],வஞ்சி உரிச்சீர் நான்கு [நேர்நேர்நிரை, நிரைநேர்நிறை,நேர்நிரைநிரை, நிரைநிரைநிரை), பொதுச்சீர் பதினாறு [ஆசிரியவுரிச்சீரான ஈரசைச் சீர்கள் ஒவ்வொன்றைத் தொடர்ந்தும் நேர்நேர், நேர்நிரை, நிரைநேர், நிரைநிரை என்பதைச் சேர்த்தால் 4 X 4 = பதினாறு அசைச்சீர்கள் கிட்டும்], ஓர் அசைச்சீர்கள் இரண்டு [நேர், நிரை] என்று மொத்தம் முப்பது சீர்கள். (பந்தம்) - பந்தம் என்பதும், தளை என்பதும் ஒன்றே ஆகும் என்று கூறுவர்; ஆகவே சூர்ணையில் வருகின்ற தளை என்ற சொல் “கூறியது கூறல்” என்ற புநருக்தி தோஷத்தை ஏற்படுத்திவிடும் என்பதால் இரண்டில் ஒன்றை நீக்கிக் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம் -** அடியாவது, குறளடி, சிந்தடி முதலான அடியைந்தும், தொடையாவது மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்கிற ஐந்திலும் அடிமோனை முதலாக ஒரொன்றிலே எவ்வெட்டுத் தொடையாக நாற்பதும், அந்தாதித்தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை யென்கிற மூன்றுமாக நாற்பத்துமூன்று தொடையும், நிரைநிரையாவது, நேர்நிரைநிரை, நிரைநிரைநிரை முதலானவை. ஓசையாவது செப்பலோசை அகவலோசை முதலான நாலோசையும், தளையாவது, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை முதலான ஏழு தளையும், இனமாவது, “தாழிசை, துறை, விருத்தம்” என்கிற பாக்களினம் மூன்றும். யாப்பாவது ப்ரபந்த ரூபமாயிருக்கை. பாவாவது வெண்பா ஆசிரியப்பா முதலான பாக்கள், துறை என்கிறவிதுவும், இனத்தின் வகையிலொன்றாகையாலே புநருக்தமாம். அர்த்தாந்தர முண்டாகில் கண்டு கொள்வது.

**விளக்கம் -** (அடி) - அடி என்பது குறளடி, சிந்தடி என்னும் ஐந்து விதம் ஆகும் [குறளடி - இருசீர் கொண்டவை, சிந்தடி – முச்சீர் கொண்டவை, நேரடி - நான்கு ஒரு சீர் கொண்டவை, நெடிலடி - ஐந்து சீர் கொண்டவை, கழிநெடிலடி - ஐந்து சீர்க்கு மேல் கொண்டவை]. (தொடை) - தொடை என்பது மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்ற ஐந்தில், மோனை தொடக்கி ஒவ்வொன்றிலும் எட்டு எட்டு தொடையாக வைத்து நாற்பது தொடைகள் மற்றும் அந்தாதித்தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்று மூன்றையும் சேர்ந்து நாற்பத்துமூன்று தொடைகள் ஆகும். (நிரைநிரை) - நிரைநிரை என்பது நேர்நிரைநிரை, நிரைநிரைநிரை போன்றவை ஆகும். (ஓசை) – ஓசை என்பது செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை மற்றும் தூங்கலோசை என்னும் நான்கு ஆகும். (பா) - பா என்பது வெண்பா, ஆசிரியப்பா போன்றவை ஆகும் [மேலும் உள்ள பாக்கள் - கலிப்பா, வஞ்சிப்பா என்று மொத்தம் நான்கு]. (துறை) - துறை என்பது பாக்களின் இனத்தில் ஒன்று என்பதால், அங்கே கூறப்பட்டது மீண்டும் இங்கு வந்தது எனலாம். வேறு பொருள் இருப்பின் அதனை எடுத்துக் கொள்ளலாம்.

**வ்யாக்யானம் -** பண்ணாவது முதிர்ந்த குறிஞ்சி, நட்டபாஷை, நட்டராகம், செந்திரி பியம்தைந்தளம் முதலானவை இசையாவது. குறள், துத்தம், கைக்கிளை, உழையினம், விளரிதாரம் என்கிற பேரால் சொல்லப்படுகிற நிஷாதர்ஷப காந்தாரஷட்ஜ மத்யம தைவம்


**Email:**sridharan_book@yahoo.co.in

பஞ்சமங்களாகிற ஏழிசையும். தாளமாவது “கஜகர்ணச் சோரகதிர் மகாத்வஜ தாளக: லக்ஷ்மீ கீர்த்தி: பாணிபாதௌ கௌரீ பஞ்சாநநஸ் ததா, சதுராம்நாய தாளச்ச தாளோயம் கருடத்வஜ:, ஸங்கீத சாஸ்த்ர வித்வத்பி ரேதே தாளா: ப்ரகீர்த்திதா:” என்கிறபடியே, கஜகரணம், சோரகதி, மகரத்வஜம் முதலான தாளங்கள். பத்தாவது அம்ச பர்வாதிகளில் அவாந்தர பரிச்சேதங்களான அத்யாயாதிகள்போலே நூற்றினுடைய அவாந்தர பரிச்சேதங்களாய், “இப்பத்தும்”, “இவை பத்தும்” என்று சொல்லப்படுகிற திருவாய்மொழிகள்.

**விளக்கம்** - (பண்) - பண் என்பது முதிர்ந்த குறிஞ்சி, நட்டபாஷை, நட்டராகம், செந்திரி, பியந்தை, இந்தளம் போன்றவை ஆகும். (இசை) - இசை என்பது குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் பெயர்களால் கூறப்படும் நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜமம், மத்யமம், தைவதம் மற்றும் பஞ்சமம் என்றுள்ள ஏழு ஆகும். (தாளம்) - கஜகர்ணச் சோரகதிர் மகாத்வஜ தாளக: லக்ஷ்மீ கீர்த்தி: பாணிபாதௌ கௌரீ பஞ்சாநநஸ் ததா, சதுராம்நாய தாளச்ச தாளோயம் கருடத்வஜ:, ஸங்கீத சாஸ்த்ர வித்வத்பி ரேதே தாளா: ப்ரகீர்த்திதா: - கஜகர்ணம், சோரகதி, மகரத்வஜம், லக்ஷ்மிகீர்த்தி, பாணி, பாதம், கௌரீ, பஞ்சானனம், சதுராம் நாயம், கருடத்வஜம் போன்றவை சங்கீதம் அறிந்தவர்களால் தாளங்கள் எனப்படுகின்றன - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதான கஜகரணம், சோரகதி, மகரத்வஜம் போன்ற தாளங்கள் ஆகும். (பத்து) - வடமொழி நூல்களில் காணப்படும் அம்சம், பர்வம் போன்றவற்றின் உட்பிரிவுகளாக உள்ள அத்யாயம் போன்றவை போல, நூற்றின் உட்பிரிவுகளாக உள்ளதான திருவாய்மொழி (9-4-11) – இப்பத்து, திருவாய்மொழி (5-5-11) - இவை பத்தும் - போன்று கூறப்படும் திருவாய்மொழிகள் பத்து.

**வ்யாக்யானம்** – நூறாவது, ப்ரதாந பரிச்சேதங்களான அம்ச பர்வ காண்டாதிகள் போலே, “நூறே சொன்ன”, “பத்து நூறு” என்னும்படி நூறு நூறு பாட்டாயிருந்துள்ள ப்ரதாந பரிச்சேதங்கள். ஆயிரமாவது, “சதுர்விம்சத் ஸஹஸ்ராணி ச்லோகாநாம்” என்னுமாபோலே யிருந்துள்ள மஹாபரிச்சேதம், முதலான வெண்கையாலே, முதலிட்டு மூன்று பத்து உத்தரகண்ட விவரணமாய் நடுவிட்டு மூன்று பத்து பூர்வகண்ட விவரணமாக, மேலிட்டு மூன்று பத்தும் அதுக்கு உபயோகியான அர்த்த ப்ரதிபாதகமாய் மேலில் பத்து பாலாவாப்தி கதநமா யிருக்கையாலே உண்டான விபாக விசேஷங்களும்


**Email:**sridharan_book@yahoo.co.in

விவக்ஷிதங்கனென்று தோற்றுகிறது. “முதலான செய்கோல மிதுக்குமுண்டு” என்றது, “செய்கோலத்தாயிரம்” என்று கவிக்குச் சொல்லுகிற அலங்காரங்களால் குறைவற்ற வாயிர மென்கையாலே ஏவமாதிகளான ஸர்வாலங்காரங்களும் இதுக்குமுண்டென்கை.

**விளக்கம்** - (நூறு) - வடமொழியில் உள்ள நூல்களில் காணப்படும் பெரும்பிரிவுகளான அம்சம், பர்வம், காண்டம் போன்று, திருவாய்மொழி (9-4-11) - நூறே சொன்ன, திருவாய்மொழி (6-7-11) – பத்து நூறு - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள நூறு நூறு பாசுரங்களாகப் பிரிக்கப்பட்ட பிரிவுகள் [முதல் பத்து, இரண்டாம் பத்து போன்றவை]. (ஆயிரம்) - இராமயணம் பாலகாண்டம் (4-2) - சதுர்விம்சத் ஸஹஸ்ராணி ச்லோகாநாம் - இருபத்துநான்காயிரம் ச்லோகங்களை வால்மீகி உரைத்தார் - என்று கூறுவது போன்றுள்ள மிகப் பெரிய பாகம் [அதாவது, ஆயிரம் பாசுரங்கள் கொண்ட திருவாய்மொழி]. (முதலான) – திருவாய்மொழியின் முதல் மூன்று பத்துக்கள் த்வயத்தின் இரண்டாவது வாக்கியத்தின் விளக்கமாகவும், அடுத்துள்ள மூன்று பத்துக்கள் த்வயத்தின் முதல் வாக்கியத்தின் விளக்கமாகவும், அடுத்துள்ள மூன்று பத்துக்கள் அந்த இரண்டு வாக்கியத்திற்கு ஏற்படும் ஆழ்பொருள் உரைப்பதாகவும், இறுதியாக உள்ள பத்துக்கள் பலனைக் கூறுவதாகவும் உள்ளதால், இப்படியாகப் பிரிக்கப்பட்ட விதங்கள் ஆழ்வாரின் திருவுள்ளத்தில் உள்ளதே ஆகும் என்று தேறுகிறது. (முதலான செய்கோலம் இதுக்கும் உண்டு) – திருவாய்மொழி (4-1-11) - செய்கோலத்தாயிரம் - என்று பொதுவாகக் கவிக்குச் சொல்லப்படும் அலங்காரங்களால் குறைவில்லாத ஆயிரம் என்பதால், இவை போன்று அனைத்து வடமொழி நூல்களில் உள்ள அலங்காரங்கள், திருவாய்மொழிக்கும் உண்டு என்றாகிறது.

70. அதவா, வேத வேத்ய ந்யாயத்தாலே பரத்வபரமுதுவேதம் வ்யூஹ வ்யாப்தி அவதரணங்களில் ஓதின நீதி கேட்ட மனு படுகதைகளாய் ஆகமூர்த்தியில் பண்ணிய தமிழானவாறே வேதத்தை த்ராவிடமாகச் செய்தாரென்னும்.

**அவதாரிகை** - ஆக இதுக்குக் கீழ் திவ்யப்ரபந்தத்துக்கு வேத ஸாம்யமும் ததுபப்ருஹ்மண ஸாம்யமும் உண்டென்னுமிடத்தை அருளிச்செய்தார். இங்ஙனன்றிக்கே வேதாவிர்ப்பாவ விசேஷமாய் இவ்வாழ்வாராலே நிர்மிதமாக ப்ரஸித்தமா யிருப்ப தொன்றென்று, இதுக்கு

இன்னமும் ஒரு யோஜனை பண்ணுகிறார் மேல் - (அதவா வேத வேத்ய ந்யாயத்தாலே என்று தொடங்கி).

**விளக்கம் -** ஆக இதுவரை, திவ்யப்ரபந்தங்களுக்கும் வேதங்களும் உள்ள ஒற்றுமை மற்றும் திவ்யப்ரபந்தங்களுக்கும் வேதங்களை விளக்கவல்லதான இதிஹாச புராணங்களுக்கும் உள்ள ஒற்றுமை ஆகியவற்றை அருளிச்செய்தார். இவை மட்டும் அல்லாமல் வேதங்களே இந்த வடிவில் அவதரித்த விசேஷமாகவும், ஆழ்வார் அருளிச்செய்ததாகவும், உலகில் உள்ள பலரும் அறிந்த விஷயமாகவும் உள்ளது ஒன்று என இதற்கு மேலும் ஒரு கருத்தையும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, கீழ்ச்சொன்ன உபய ப்ரகாரமுமன்றிக்கே, "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்று வேத வேத்யனான பரமபுருஷன், தசரத புத்ரனா யவதரித்த விடத்தில் அபௌருஷேயமான வேதமும், ஸ்ரீவால்மீகிபகவான் பக்கல் ஸ்ரீஇராமாயண ரூபேண அவதரித்த தென்கிற ந்யாயத்தாலே, "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே", "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்", "தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:", "யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந், ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபச்சிதா" இத்யாதிகளாலே பலவிடங்களிலும் ஈச்வரனுடைய பராவஸ்த்தையை ப்ரதிபாதிக்கையாலே பரத்வத்திலே நோக்காய், "முதுவேதம்" என்கிறபடி புருஷ புத்தி ப்ரபவ தோஷ கந்தமில்லாதபடி அநாதித்வேந பழையதா யிருக்கிற வேதமானது,

**விளக்கம் -** (அதவா) – திருவாய்மொழிக்கு, வேதங்களுடனும், அவற்றை விளக்கவல்ல இதிகாச புராணங்களுடனும் உள்ள ஒற்றுமை என்பது இதுவரை கூறப்பட்ட கருத்தில் அல்லாமல், (வேத வேத்ய ந்யாயத்தாலே) - இராமாயணம் பாலகாண்டம் - வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா - வேதங்களால் மட்டுமே அறியப்படுபவனாகிய பரமபுருஷனாகிய தசரதபுத்ரன் அவதரித்தபோது, வேதங்கள் ப்ராசேதஸின் புத்ரனாகிய வால்மீகி மூலம் இராமாயணமாக அவதரித்தன - என்று கூறுவதற்கு ஏற்ப, வேதத்தால் மட்டுமே அறியத்தக்கவனாகிய பரமபுருஷனாகிய இராமன், தசரதனின் புத்திரனாக அவதரித்தபோது, யாராலும் இயற்றப்படாமல் உள்ள வேதமானது, வால்மீகி பகவானால் இராமாயண வடிவில் அவதரித்தன என்ற அதே ந்யாயத்தின் அடிப்படையில். (பரத்வ பரமுதுவேதம்) -

தைத்திரீய உபநிஷத் – "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே - ராஜஸம் மற்றும் தாமஸம் ஆகியவற்றின் இருப்பிடமான இந்த உலகத்தின் மேலே உள்ள பரமபதத்தில் எழுந்தருளியுள்ள – என்றும், புருஷஸூக்தம் - ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் – சூரியனின் ப்ரகாசம் போன்ற பரமபுருஷன் இருள் சூழ்ந்த ப்ரக்ருதி மண்டலத்துக்கும் அப்பால் உள்ளான் – என்றும், யஜுர்வேதம் - தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: - மஹாவிஷ்ணுவின் பரமபதத்தை அந்த நித்யஸூரிகள் எப்போதும் பார்த்தபடி உள்ளனர் – என்றும், தைத்திரீய உபநிஷத் – யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந், ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபச்சிதா – இதயம் என்ற குகைக்குள் உள்ள இந்த ப்ரஹ்மத்தை யார் உபாஸிக்கிறானோ அவன் ப்ரக்ருதியின் தொடர்பற்ற பரமபதத்தில் உள்ள ப்ரஹ்மத்துடன் சேர்ந்து அனைத்து விருப்பங்களும் நிறைவேறப் பெற்று அனுபவிக்கிறான் – என்றும் உள்ளது போன்று பல இடங்களிலும், ஸர்வேச்வரன் பரம்பொருளாய் எழுந்தருளியுள்ள நிலையை உரைப்பதால் பரத்வத்தை வெளிப்படுத்துவதையே தனது இலக்காகவும், திருவாய்மொழி (1-6-2) - முதுவேதம் - என்பதற்கு ஏற்ப மனிதர்களின் புத்தி மூலம் ஏற்படவல்ல தோஷம் ஏதும் இல்லாதபடி எல்லையற்ற காலமாக இருந்து வருவதால் பழையதும் என்றுள்ள வேதமானது …

**வ்யாக்யானம்** – "ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸ பவாந் முக்தபோக்ய:" என்கிறபடியே ஷாட்குண்ய பரிபூர்ணனாய் முக்தபோக்யனா யிருக்கிற அந்த பரனானவன், "பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணாஸ் த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ர மைச்வர்ய வீர்யாத், ப்ரத்யும்நஸ் ஸர்ககதர்மௌ நயஸி ச பகவந் சக்தி தேஜோதிருத்தோ பிப்ராண: பாஸி தத்வம், கமயஸி ச ததா வ்யூஹ்ய" என்கிறபடியே ஸர்க்காதி நிர்வஹணார்த்தமாக வ்யூஹீபவித்த அவஸ்த்தையில், "ஸங்கர்ஷணாதி ஸத்பாவம் பஜே லோக ஹிதேப்ஸயா, க்ரமச: ப்ரளயோத்பக்தி ஸ்திதிபி: ப்ராண்யநுக்ரஹ: ப்ரயோஜந மதாந்யச்ச சாஸ்த்ர சாஸ்த்ரார்த்த தத்பரை:, தசாஸ் துர்ய ஸுஷுப் த்யாத்யாச் நதுர் வ்யூஹேபி லக்ஷயே" இத்யாதியாலும், "தத்ர ஜ்ஞாந பலத்வந்த்வாத் ரூபம் ஸாங்கர்ஷணம் ஹரே:, ஐச்வர்ய வீர்ய ஸம்பேதாத் ரூபம் ப்ராத்யும்ந முச்யதே சக்தி தேஜஸ் ஸமுத்கர்ஷாத் அநிருத்த தநுர் ஹரே:, ஏதே சக்திமயா வ்யூஹா குணோந்மேஷ ஸ்வலக்ஷணா:" இத்யாதியாலும் அந்த வ்யூஹ விசேஷ தத் குண ரூப க்ருத்யாதிகளை விஸ்தரேண ப்ரதிபாதிக்கைக்காக "பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்" என்கிறபடியே ஸர்வத்துக்கும் ஆதிவக்தா ஈச்வரன் தானாகையாலே "ஓதினாய் நீதி" என்று சொல்லப்பட்ட பஞ்சராத்ரமாய் ஆவிர்ப்பவித்து,

 **Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (வ்யூஹ ஓதின நீதி) ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-39) - ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸ பவாந் முக்தபோக்ய: - ஸ்ரீரங்கநாதா! நீ பரவாஸுதேவனாய் ஆறு குணங்களுடன் கூடியவனாய் முக்தர்களுக்கு இனிமையானவனாக உள்ளாய் - என்று கூறுவதற்கு ஏற்ப ஆறு குணங்கள் பரிபூர்ணமாக நிறைந்தவனாகவும், முக்தர்கள் அனைவருக்கும் இன்பம் அளிக்கும்படி உளளவனும் ஆகிய அந்தப் பரமபுருஷன், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-39) - பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணாஸ் த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ர மைச்வர்ய வீர்யாத், ப்ரத்யும்நஸ் ஸர்ககதர்மௌ நயஸி ச பகவந் சக்தி தேஜோதிருத்தோ பிப்ராண: பாஸி தத்வம், கமயஸி ச ததா வ்யூஹ்ய - பலம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டு குணங்களுடன் கூடியவனாக, ஸங்கர்ஷணன் என்னும் வ்யூஹரூபம் எடுத்து, ஸம்ஹார செயலை நடத்துகிறாய், அனைத்து சாஸ்த்ரங்களையும் உலகிற்கு அளிக்கிறாய். ஐச்வர்யம் மற்றும் வீர்யம் ஆகிய இரண்டு குணங்கள் கொண்ட ப்ரத்யும்ந வ்யூஹமாக அவதரித்து, ஸ்ருஷ்டியைச் செய்கிறாய், அனைத்து தர்மங்களையும் வழி நடத்துகிறாய். சக்தி மற்றும் தேஜஸ் ஆகிய இரண்டு குணங்களுடன் கூடிய அநிருத்த ரூபம் எடுத்து, காப்பாற்றுதல் என்னும் செயலைச் செய்தபடி உள்ளாய், உண்மையான ஞானம் பெறும்படிச் செய்கிறாய் - என்பதற்கு ஏற்ப ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் போன்றவற்றைச் செய்யும் பொருட்டு வ்யூஹங்களாக அவதரித்த நிலையில், விஷ்வக்ஸேந ஸம்ஹிதை - ஸங்கர்ஷணாதி ஸத்பாவம் பஜே லோக ஹிதேப்ஸயா, க்ரமச: ப்ரளயோத்பக்தி ஸ்திதிபி: ப்ராண்யநுக்ரஹ: ப்ரயோஜந மதாந்யச்ச சாஸ்த்ர சாஸ்த்ரார்த்த தத்பரை:, தசாஸ் துர்ய ஸுஷுப் த்யாத்யாச் நதுர் வ்யூஹேபி லக்ஷயே - இந்த லோகத்திற்கு ஏற்ற நன்மைகளை அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் ஸங்கர்ஷணன் போன்ற நிலைகளை அடைகிறேன். சரியான வரிசையில் ஸம்ஹாரம், ஸ்ருஷ்டி, இருப்பு என்பது நடைபெறுவதன் மூலம் அனைத்து உயிர்களுக்கும் நான் அனுக்ரஹம் செய்கிறேன். சாஸ்த்ரம், தர்மம், இவை குறித்த ஞானம் என்ற பல பயன்களும் இந்த லோகத்தில் உள்ளன. நான்கு வ்யூஹங்களில் துர்யம், ஸுஷுப்தி போன்ற நான்கு நிலைகளை அறிதல் வேண்டும் - என்பது போன்ற வாக்கியங்களாலும், விஷ்வக்ஸேந ஸம்ஹிதை - தத்ர ஜ்ஞாந பலத்வந்த்வாத் ரூபம் ஸாங்கர்ஷணம் ஹரே:, ஐச்வர்ய வீர்ய ஸம்பேதாத் ரூபம் ப்ராத்யும்ந முச்யதே சக்தி தேஜஸ் ஸமுத்கர்ஷாத் அநிருத்த தநுர் ஹரே:, ஏதே சக்திமயா வ்யூஹா குணோந்மேஷ ஸ்வலக்ஷணா: - ஞானம், பலம் போன்றவற்றின் சேர்க்கையால் ஸர்வேச்வரனுக்கு ஸங்கர்ஷண ரூபம் ஏற்படுகிறது. ஐச்வர்யம், வீர்யம் ஆகியவற்றால் ப்ரத்யும்ந ரூபம் ஏற்படுகிறது. சக்தி மற்றும் தேஜஸ் ஆகியவற்றால்

அநிருத்த ரூபம் ஏற்படுகிறது. ஆக சக்திமயமாக உள்ள இந்த வ்யூஹங்கள் அனைத்தும் ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்களின் வெளிப்பாடே ஆகும் – என்பது போன்ற வாக்கியங்களாலும், வ்யூஹங்களுடைய குணங்கள், ரூபங்கள், செய்கைகள் போன்றவற்றை விரிவாக உரைக்கும் பொருட்டு, மஹாபாரதம் – பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம் - அனைத்து பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களையும் உரைத்தவன் நாராயணனே ஆவான் - என்பதற்கு ஏற்ப, அனைத்தையும் கூறியவன் ஸர்வேச்வரனே என்றுள்ளபோது, (அந்த வேதங்கள்) இரண்டாம் திருவந்தாதி (48) - ஓதினாய் நீதி - என்று கூறப்பட்டதான பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களாக வெளிப்பட்டும் [ அதாவது அவன் வ்யூஹங்களாக நின்றபோது வேதங்கள் பாஞ்சராத்ரமாக வெளிப்பட்டன என்று கருத்து] …

**வ்யாக்யானம் -** இப்படி வ்யூஹீபவித்த மாத்ரமன்றிக்கே ஸர்வசப்தவாச்யனாய் ஸர்வகர்ம ஸமாராத்யனாய்க் கொண்டு ஸர்வாந்தர்யாமித்வேந வ்யாபித்து நிற்குமவஸ்த்தையில், “ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோவை நர ஸூநவ:, தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத:” இத்யாதியாலும், “ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸ மணீயஸாம், ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத் து புருஷம் பரம்”, “ஏநமேகே வதந்த்யக்நிம் மருதோந்யே ப்ரஜாபதிம், இந்த்ரமேகே பரே ப்ராணமபரே ப்ரஹ்ம சாச்வதம்”, “ஏஷ ஸர்வாணி பூதாநி பஞ்சபீர் வ்யாப்ய மூர்த்திபி: ஜந்ம வ்ருத்தி க்ஷயைர் நித்யம் ஸம்ஸாரயதி சக்ரவத்” இத்யாதியாலும், “ஸ ஆத்மா, அங்காந்யந்யா தேவதா:” என்கிறபடியே ஸர்வதேவதா சரீரிதயா ஸர்வகர்ம ஸமாராத்யன் இவனென்று தோற்றும்படி பூர்வபாகோப ப்ரும்ஹணமாய்க் கொண்டு ஸர்வாந்தர்யாமிதயா வ்யாப்தியை ப்ரதிபாதிக்கைக்காக “கேட்ட மனு” என்கிறபடியே ஆப்தமாகக் கேட்கப்பட்ட மந்வாதி ஸ்ம்ருதியா யாவிர்ப்பவித்து,

**விளக்கம் -** (வ்யாப்தி கேட்ட மநு) இவ்விதம் வ்யூஹமாக அவதரித்தது மட்டும் அல்லாமல், அனைத்து சொற்களாலும் கூறப்படுபவனாகவும், அனைத்து கர்மங்களையும் தனது ஆராதனையாகவும் கொள்பவனாகவும் உள்ள காரணத்தால் அனைத்து உயிர்களின் மநு ஸ்ம்ருதி (1-19) - ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோவை நர ஸூநவ:, தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத: - தண்ணீரானது நரன் எனப்படும் பரமாத்மாவிடமிருந்து உண்டானது. ஆகவே அது நாரம் எனப்படுகிறது, அத்தகைய நீரானது பரமாத்மாவின் சரீரம் என்பதால் அவன் நாராயணன் எனப்படுகிறான் – என்பது போன்ற வரிகளாலும்,

மநு ஸ்ம்ருதி (12-122) – ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸ மணீயஸாம், ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத் து புருஷம் பரம் - அனைத்தையும் நியமிப்பவன் என்றும், நுண்ணியதைக் காட்டிலும் மிகவும் நுண்ணியவன் என்றும், பொன் நிறம் கொண்டவன் என்றும், கனவில் ஏற்படும் புத்தி முதலான போகத்தால் அடையத்தக்கவன் என்றும் பரமபுருஷனை அறிய வேண்டும் - என்பது போன்ற வரிகளாலும், மநு ஸ்ம்ருதி (12-123) - ஏநமேகே வதந்த்யக்நிம் மருதோந்யே ப்ரஜாபதிம், இந்த்ரமேகே பரே ப்ராணமபரே ப்ரஹ்ம சாச்வதம் - இவனை அக்னி என்றும், மருத்துக்கள் என்றும், நான்முகன் என்றும், இந்த்ரன் என்றும், அந்தணன் என்றும், பரப்ரஹ்மம் என்றும் கூறுகிறார்கள் - என்பது போன்றவற்றாலும், மநு ஸ்ம்ருதி (12-124) – ஏஷ ஸர்வாணி பூதாநி பஞ்சபீர் வ்யாப்ய மூர்த்திபி: ஜந்ம வ்ருத்தி க்ஷயைர் நித்யம் ஸம்ஸாரயதி சக்ரவத் - அனைத்து உயிர்களையும் பஞ்சபூதங்களாலான சரீரத்தால் நிரப்பி, பிறப்பு – வளர்தல் - இறப்பு என்பவற்றால் சக்கரம் போன்று சுழலும்படி இவன் செய்கிறான் - என்பது போன்ற வரிகளாலும், தைத்திரீய உபநிஷத் - ஸ ஆத்மா, அங்காந்யந்யா தேவதா: – அந்த ஆத்மா என்று கூறப்பட்டவன் பரமாத்மா ஆவான், மற்ற அனைத்து தேவர்களும் அவனுடைய சரீரங்கள் - என்பதற்கு ஏற்ப அனைத்து தேவர்களையும் தனது சரீரமாகக் கொண்டுள்ளதன் காரணமாக, [அந்த வேதங்கள்] அனைத்து கர்மங்களாலும் இவனே ஆராதிக்கப்படுபவன் என்பது வெளிப்படும்படியாக, வேதத்தின் முதல் பாகமாகிய கர்மகாண்டத்தின் பொருளை விவரிக்கும்விதமாக, அனைத்து உயிர்களிலும் இவன் அந்தர்யாமியாக வ்யாபித்து நிற்பதை வெளிப்படுத்துவதற்காக, நான்முகன் திருவந்தாதி (76) - கேட்ட மனு – என்று கூறலாம்படி ஸத்யவாக்குகளாகவே உள்ளதான மநு ஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகளாக வெளிப்பட்டு [அதாவது அவன் அந்தர்யாமி நிலையில் உள்ளபோது வேதங்கள் மநு ஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகளக வெளிப்பட்டன],

**வ்யாக்யானம் -** அப்படி அதீந்த்ரியனாய் நிற்கிறவவன் ஸாதுபரித்ராணாதிகளுக்காக ராம க்ருஷ்ணாத் யவதாரங்களைப் பண்ணின வவஸ்த்தையில் தத்ததவதார சேஷ்டிதாதிகளை ப்ரதிபாதிக்கைக்காக “படுகதையும்” என்கிறபடியே வ்ருத்த கீர்த்தந ரூபமான ஸ்ரீராமாயண மஹாபாரதாதீ திஹாஸங்களாய் ஆவிர்ப்பவித்து,

**விளக்கம்** - (அவதரணங்களில் படுகதைகளாய்) – இவ்விதம் வ்யூஹம் மற்றும் அந்தர்யாமியாக நிற்கும்போது கண்கள் முதலான இந்த்ரியங்களுக்குப் புலப்படாமல் உள்ளான்; இப்படிப்பட்ட அவன் ஸாதுக்களைப் பாதுகாப்பதற்காக இராமன், க்ருஷ்ணன் போன்ற விபவ அவதாரங்களை எடுக்கிறான். அந்த நிலைகளில், [வேதங்கள்] அந்தந்த அவதாரங்களில் அவன் செய்கின்ற வியக்கவைக்கும் செயல்களைக் கூறுவதற்காக, நான்முகன் திருவந்தாதி (76) - படுகதையும் - என்பதற்கு ஏற்ப அவனுடைய செயல்களை விவரிக்கும் ரூபமாக உள்ளதான இராமாயணம், மஹாபாரதம் போன்ற இதிகாசங்களாக வெளிப்பட்டு [அவன் விபவ அவதாரங்களாக உள்ளபோது, வேதங்கள் இதிகாசங்களாக வெளிப்பட்டன],

**வ்யாக்யானம்** - அப்படி அவதாரமுகேந முன்னின்று ரக்ஷித்தருளுமவன், அவதாரத்தில் பிற்பாடரும் இழவாதபடி, "ஆகமூர்த்தியாய வண்ணமென்கொல்" என்று விசேஷஜ்ஞர் ஈடுபடும்படி ஆச்ரித ஹ்ருதயாநுகுணமாக "தமருகந்த தெவ்வுருவம்" இத்யாதிப்படியே த்ரவ்ய நாம ரூபாஸன சயநாதிகளிலும், தேசகாலாதிகாராதிகளிலும், ஸ்நாந போஜநாதிகளிலும் ஒரு நியமமறப் பண்ணிக் கொண்டு அத்யந்த ஸுலபனாயிருக்கும் அர்ச்சாவதாரமான அவஸ்த்தையில் தத்வைபவ ப்ரதிபாதநார்த்தமாக "சடகோபன் பண்ணிய தமிழ்" என்னும்படி ப்ரமேயந் தன்னைப்போலே தானும் ஸர்வஸுலபமாய் ஸர்வாதிகாரமாகைக் குறுப்பாக த்ராவிட ரூபமாய்க் கொண்டு ஆழ்வார் பக்கலிலே ஆவிர்ப்பவிக்கையாலே ஸம்ஸ்க்ருத ரூபமாயிருக்கிற வேதத்தை த்ராவிடமாகச் செய்தாரென்று சொல்லுவதும் ஒரு ப்ரகாரமுண்டென்கை. "எய்தற்கரிய மறைகளை ஆயிரமின் தமிழால் செய்தற்குலகில் வரும் சடகோபனை" என்னக்கடவதிறே. இவையெல்லாத்திலும் எல்லாம் சொல்லுமேயாகிலும் ஒன்றுக்கு ஒன்றிலே நோக்கா யிருக்கையாலிறே இவரிப்படி யருளிச்செய்தது. இதுதான் "பரத்வபர"மென்கையாலே ஸ்பஷ்டமிறே.

**விளக்கம்** – (ஆகமுர்த்தியில் பண்ணிய தமிழ் ஆனவாறே) – இவ்விதம் அவதாரங்கள் எடுத்து பலரையும் காப்பாற்றிய பின்னர், அந்தந்த அவதார காலத்திற்கு பின்னர் உள்ள காலத்தில் பிறப்பவர்கள் தன்னுடைய அந்தக் காப்பாற்றுதல்களையும், தனது லீலைகளையும் இழந்து விடக்கூடாது என்று தீர்மானித்து, திருச்சந்தவிருத்தம் (17) - ஆகமூர்த்தியாய வண்ணமென்கொல் மூர்த்தி - என்பதற்கு ஏற்ப ஞானத்தில் சிறந்து விளங்கும் சான்றோர்கள் ஈடுபடும்படியாக அடியார்களுடைய இதயத்தில் வைத்து


**Email:**sridharan_book@yahoo.co.in

ஆராதிப்பதற்கு ஏற்றபடியாக, முதல் திருவந்தாதி (44) - தமருகந்ததெவ்வுருவம் - என்று கூறுவதற்கு ஏற்ப, பல பொருள்களைத் தனது திருமேனியாகவும், பல நாமங்கள் பல ரூபங்கள் என்றும், இருத்தல் சயனித்தல் என்பது போன்ற வடிவங்களிலும், தேசம் - காலம் – அதிகாரம் போன்றவற்றின் எல்லை இன்றியும், நீராடல் – உணவு உட்கொள்ளுதல் போன்ற செயல்களில் எந்தவிதமான நியமங்களும் இன்றியும், தன்னை மிகவும் எளியவனாகக் கொண்டு அர்ச்சாவதார நிலையில் நின்றான்; இந்த நிலையில், அர்ச்சாவதாரத்தின் மேன்மைகளை உரைக்கும்விதமாக, திருவாய்மொழி (2-7-13) - சடகோபன் பண்ணிய தமிழ் – என்பதற்கு ஏற்ப அர்ச்சாவதாரம் போன்று வேதமாகிய தானும், அனைவருக்கும் எளிதாகவும் அனைவரும் தகுதியுடன் கற்கலாம்படியாகவும் இருப்பதற்கு ஏற்றபடி தமிழ்மொழியில் நம்மாழ்வாரிடமிருந்து வெளிப்பட்டது; இதனால்தான், வடமொழியில் உள்ள வேதத்தை நம்மாழ்வார் தமிழில் அருளிச்செய்தார் என்று ஒரு சிலர் கூறுவது உண்டு. இராமாநுசநூற்றந்தாதி (18) - எய்தற்கரிய மறைகளை ஆயிரமின் தமிழால் செய்தற்குலகில் வரும் சடகோபனை – என்பது காண்க. மேலே கூறப்பட்டதான வேதங்கள், பாஞ்சராத்ரம், ஸ்ம்ருதிகள், இராமாயணம், மஹாபாரதம் போன்ற பலவற்றிலும் அனைத்துவிதமான விஷயங்களும் கூறப்பட்டன என்றபோதிலும், ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கருத்தை மட்டுமே ஆழமாக உரைக்கின்றன (மஹாபாரதம் = இராமனின் சரிதம் போன்ற விஷயங்கள்). ஆனால் அனைத்து விஷயங்களும் ஒருங்கே இருத்தல் வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி அல்லவோ இவர் திருவாய்மொழியை அருளிச்செய்தது? இதனை "பரத்வபரம்" என்பதால் தெளியலாம்.

71. மண்ணாடின ஸஹ்யஜலம் தோதவத்திச்சங்கணி துறையிலே துகில்வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்தத்தைக் காட்டுமாபோலே அல்பச்ருதர் கலக்கின ச்ருதி நன்ஞானத் துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை யறிவித்தது.

**அவதாரிகை** - ஆனால் அபௌருஷேயமான வேதம் இப்படி அவஸ்த்தாந்தரத்தை பஜித்ததாகில் கலுஷமாய் அர்த்தப்ரகாசகத்வம் குன்றாதோவென்ன, வக்த்ரு விசேஷத்தாலே அது மற்றைப்படியாய்த் தென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச் செய்கிறார் (மண்ணாடின வித்யாதியால்).


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம் -** ஆனால் யாராலும் செய்யப்படாத வேதம் என்பது இப்படியாகப் பலவிதமாக வெளிப்பட்டது என்னும்போது, அது கலங்கின தன்மை கொண்டதாக உள்ளதே அல்லாமல், தெளிவாக உள்ளது என்னும் தன்மையை இழக்காதோ - என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அதனைத் தமிழில் அருளிச்செய்த நம்மாழ்வாரின் மேன்மை காரணமாக அது தெளிவுற்றது என்பதை எடுத்துக்காட்டுடன் அருளிச்செய்கிறார் (சூர்ணையில் உள்ள ஸஹ்யஜலம் = மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குடகு நீர் = காவேரி, தோதவத்தி துறை - திருவரங்கம் காவேரி படித்துறை, அங்கணித்துறை = தாமிரபரணி படித்துறை).

**வ்யாக்யானம் -** அதாவது, உச்ச ஸ்த்தலத்தில் நின்றும் வேகத்தோடே வந்து பூமியிலே விழுகையாலே ம்ருந்மிச்ரமாய்க் கலங்கி ஸஹ்யத்தில் நின்றும் வருகிற ஜலமானது, “தோதவத்தித் தூய்மறையோர் துறை” என்றும், “பொருநல் சங்கணி துறை” என்றும் சொல்லுகிற துறைகளிலே வந்தவாறே துறைவாசியாலே “துகில்வண்ணத் தூநீர்” என்றும், “தெண்ணீர்ப் பொன்னி” என்றும் சொல்லுகிறபடியே தெளிந்த நீராய் தனக்குள்ளே கிடக்கிற பதார்த்தங்களை ப்ரகாசிப்பிக்குமாபோலே,

**விளக்கம் -** (மண்ணாடின ஸஹ்யஜலம்) - மலைகளின் மேற்புறத்திலிருந்து மிகுந்த வேகத்துடன் வந்து பூமியில் விழுவதன் காரணமாக மண் கலந்து கலங்கியபடி, மலையில் இருந்து வரும் காவேரி மற்றும் தாமிரபரணி ஆகிய இரண்டும். (தோதவத்திச்சங்கணி துறையிலே துகில்வண்ணத் தெண்ணீராய்) – பெரியாழ்வார் திருமொழி (4-8-1) – தோதவத்தித் தூய்மறையோர் துறை - என்றும், திருவாய்மொழி (10-3-11) - பொருநல் சங்கணி துறை – என்றும் கூறப்படும் படித்துறைகளில், மேன்மையுடன் கூடிய வேறுபாடு காரணமாக, திருவாய்மொழி (7-2-11) - துகில்வண்ணத் தூநீர் - என்றும், பெருமாள் திருமொழி (1-1) – தெண்ணீர்ப் பொன்னி - என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் தெளிந்த நீராக மாறி. (அந்தஸ்ஸ்தத்தைக் காட்டுமாபோலே) – தன்னுள்ளே ஆழத்தில் கிடக்கின்ற பொருள்களையும் தெளிவாகக் காண்பிப்பது போன்று.

**வ்யாக்யானம் -** “பிபேத்யல்ப ச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி” என்கிறபடியே வேதந்தான் நடுங்கும்படி ததபிப்ராயமறியாமல் ப்ரதிபந்தங்களைச் சொல்லும் அல்ப ச்ருதர், ஒரு வாக்யத்துக்கர்த்தம் சொல்லப்புக்கால் அதுதன்னிலே நின்று விப்ரதிபத்தி

பண்ணி, த்வைதமென்பார், அத்வைதமென்பார், த்வைதாத்வைத மென்பாராய் இப்படி கலக்கக் கலங்கின ச்ருதியானது, "நன்ஞானத்துறை" என்று இவர் தாமருளிச் செய்தபடியே யதா ஜ்ஞாநத்துக்குத் துறையான இவ்வாழ்வார் பக்கலிலே வந்து சேர்ந்து "தெளிவுற்றவாயிரம்" என்கிறபடியே முன்புத்தைக் கலக்கம் தீர்ந்து தெளிவையடைந்து "அறிவித்தேனாழ்பொருளை" என்கிறபடியே அகாதமாய், பரமரஹஸ்யமான அர்த்த விசேஷங்களையெல்லாம் தோன்றுவித்த தென்கை.

**விளக்கம்** - (அல்ப ச்ருதர் கலக்கின ச்ருதி) – பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி - பிபேத்யல்ப ச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி – குறைவாகக் கற்றவனைக் கண்ட வேதமானது, இவன் என்னை வஞ்சித்து விடுவான் என்று அஞ்சுகிறது – என்று கூறுவதற்கு ஏற்ப, வேதங்களும் தங்களைக் கண்டு அச்சம் கொண்டு நடுங்கும்படியாக, அவற்றில் கூறப்பட்ட ஆழ்பொருளின் அர்த்தங்கள் அறியாமல், அவற்றுக்கு விரோதமான பொருள்களை உரைக்கும் அற்பமான ஞானம் உள்ளவர்கள், வேதத்தில் உள்ள ஏதேனும் ஒரு வாக்கியத்திற்கான பொருளை உரைக்கும்போது, அந்தப் பொருள் சரிவர விளங்காமல் மயங்கி த்வைதம், அத்வைதம், த்வைத அத்வைதம் என்று பலவிதமாக உரைப்பர். இப்படியாக மற்றவர்களால் கலக்கப்பட்ட காரணத்தால் கலங்கி நிற்கும் வேதமானது, திருவிருத்தம் (93) – நன்ஞானத்துறை - என்று நம்மாழ்வார் தாமே அருளிச்செய்தபடி, மெய்யான ஞானத்திற்குப் படித்துறையான நம்மாழ்வாரிடம் வந்து சேர்ந்து, திருவாய்மொழி (7-5-11) - தெளிவுற்றவாயிரம் - என்பதற்கு முன்பு உண்டான கலக்கம் அனைத்தும் நீங்கப்பெற்று தெளிவடைந்து, நான்முகன் திருவந்தாதி – அறிவித்தே னாழ்பொருளை – என்பதற்கு ஏற்ப ஆழ்ந்தும், பரமரஹஸ்யமும் ஆகிய ஆழ்பொருள்கள் அனைத்தையும் வெளிப்படுத்தியது என்று கருத்து.

72. மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே நூற்கடற்சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோபஜீவ்யமாமே.

**அவதாரிகை** - ஆனால் வேதத்துக்கு அத்யயந கால நியதியும் அதிகாரி நியதியு முண்டாயிரா நின்றதே. அந்த வேதாவதாரமான இதுக்கு அவையின்றிக்கே யொழிவானென் னென்ன வருளிச்செய்கிறார் (மேகம் பருகின வித்யாதி).


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம் -** ஆனால் வேதங்களை அத்யயனம் செய்வதற்கு நேரக்கட்டுப்பாடுகள், தகுதிகள் போன்ற பலவும் உள்ளன. அத்தகைய வேதத்தின் அவதாரமாகவே உள்ளதான இந்தத் திருவாய்மொழிக்கு, அத்தகைய கட்டுப்பாடுகள் ஏன் இல்லை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, விரஸமாய் ததந்தர்க்கத ஸத்வங்களுக்கொழியப் புறம்புள்ளார்க்கு உபஜீவ்யமன்றிக்கே பர்வங்களிலொழிய ஸ்பர்சிக்கலாகா தென்கையாலே ஸ்பர்ச கால நியதியையு முடைத்தாயிருக்கிற ஸமுத்ர ஜலமானது மேகம் பருகி வர்ஷிக்க அந்த மேக ஸ்பர்சத்தாலே தன் விரஸதை போய் ஸர்வதா ஸர்வஜந போக்யமமாமாபோலே, “ச்ராவண்யாம் ப்ரௌஷ்ட்டபத்யாம் வா உபாக்ருத்ய யதாவிதி, யுத்தச் சந்தாம்ஸ்யதீயீத மாஸாந் விப்ரோர்த்த பஞ்சமாந்; அத ஊர்த்வம் து சந்தாம்ஸி சுக்லேது நியத: படேத், வேதாங்காநி ரஹஸ்யம் ச க்ருஷ்ணபக்ஷேஷு ஸம்படேத்” என்கிறபடியே அத்யயன கால நியதியையும், த்ரைவர்ணிகாதிகாரதயா அதிகாரி நியதியையு முடைத்தா யிருந்துள்ள “நூற்கடல்” என்கிற வேதவித்யா ஸமுத்ரத்தில் வசநம் “இவள் வாயனகள் திருந்த” என்கிறபடியே இவருடைய வாக்கதமாய் கால நியம அதிகாரி நியம நிரபேக்ஷமான ஆகாரத்தையடைந்து கட்டளைப்பட்டவாறே, “அத்யேதவ்யம் த்விஜ ச்ரேஷ்டை: வேதரூபமிதம் க்ருதம், ஸ்த்ரீபிச் சூத்ராதிபிச் சைவ தேஷாம் முக்தி: கரே ஸ்திதா” என்கிறபடியே ஒரு கால நியமமின்றிக்கே ஸர்வகாலமும் ஸர்வர்க்கு முபஜீவ்யமாமிறே யென்கை.

**விளக்கம்** - (மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே) – உப்புத்தன்மை அதிகமாகக் கொண்டதாகவும், கடலாகிய அதற்குள் வசிக்கக்கூடிய உயிரினங்கள் அல்லாமல் மற்ற யாரும் அதில் வசிக்க இயலாததாகவும், குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே கடல் நீரில் நீராடலாம் அல்லாமல் மற்ற நாட்களில் அது போன்று செய்யலாகாது என்பதால் காலக் கட்டுப்பாடுகள் கொண்டதாகவும் ஸமுத்ர ஜலம் உள்ளது. ஆனால் அத்தகைய கடல் நீரானது, மேகத்தால் பருகப்பட்டு, மழையாகப் பெய்யப்படும்போது, அந்த மேகத்தின் ஸம்பந்தம் ஏற்பட்ட காரணமாக, தனது உப்புத்தன்மை நீங்கப் பெற்று, எப்போதும் அனைவருக்கும் பயன்படுகிறது. அதே போன்று, (நூற்கடல் சொல்) - மநுஸ்ம்ருதி (4-95) - ச்ராவண்யாம் ப்ரௌஷ்ட்டபத்யாம் வா உபாக்ருத்ய யதாவிதி, யுத்தச் சந்தாம்ஸ்யதீயீத மாஸாந் விப்ரோர்த்த பஞ்சமாந்; அத ஊர்த்வம் து சந்தாம்ஸி சுக்லேது நியத: படேத்,

வேதாங்காநி ரஹஸ்யம் ச க்ருஷ்ணபக்ஷேஷு ஸம்படேத் – அந்தணன் ஒருவன் ஆவணி அல்லது புரட்டாசி மாதங்களில் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட உபாகர்மங்களைச் செய்து, தகுந்த நியமயத்துடன் கூடியவனாக நான்கரை மாதங்களில் வேதஅத்யயனம் செய்வானாக; அதன் பின்னர் தகுந்த நியமங்களுடன் கூடியவனாக சுக்லபக்ஷத்தில் வேதங்களை ஓதுவானாக; வேதங்கள் மற்றும் உபநிஷத்துக்களை க்ருஷ்ணபக்ஷத்தில் அத்யயனம் செய்வானாக - என்று கூறுவதற்கு ஏற்ப இன்ன காலங்களில் மட்டும் அத்யயனம் செய்யவேண்டும், மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அத்யயனம் செய்யவேண்டும் என்று காலம் மற்றும்அதிகாரி கட்டுப்பாடுகள் கொண்டதான, மூன்றாம் திருவந்தாதி (32) – நூற்கடல் - என்பதற்கு ஏற்ப உள்ள வேதங்கள் என்னும் ஸமுத்திரத்தில் உள்ள சொற்கள், (இவர் வாயனவாய்த் திருந்தினவாறே) - திருவாய்மொழி (6-5-7) - இவள் வாயனகள் திருந்த – என்று கூறுவதற்கு ஏற்ப, நம்மாழ்வாருடைய திருவாக்கு மூலம் வெளிப்பட்டு, காலக்கட்டுப்பாடு மற்றும் அதிகாரிகளின் தகுதி போன்ரவை அவசியம் இல்லை என்பதான தன்மையை அடைகின்றன. இவ்விதம் கட்டளைப்பட்டபடி பாஞ்சராத்ரம் - அத்யேதவ்யம் த்விஜ ச்ரேஷ்டை: வேதரூபமிதம் க்ருதம், ஸ்த்ரீபிச் சூத்ராதிபிச் சைவ தேஷாம் முக்தி: கரே ஸ்திதா – வேதரூபமாகச் சொல்லப்பட்டு இது அந்தணர்களில் சிறந்தவர்களாலும், பெண்களாலும், நான்காம் வர்ணத்தினராலும் அத்யயனம் செய்யத்தக்கது. இதனை அத்யயனம் செய்பவர்கள் கையில் மோக்ஷம் உள்ளது – என்பதற்கு ஏற்ப காலக்கட்டுப்பாடு ஏதும் இன்றி, அனைத்துக் காலத்திலும் அனைவருக்கும் அவர்கள் கற்கலாம்படி உள்ளது.

### 73. ம்ருத்கடம்போலன்றே பொற்குடம்.

**அவதாரிகை** - இன்னமும் வேதகார்யமாயிருக்கச் செய்தே காரணமானவதுபோல் அதிக்ருதாதிகாரமன்றியே இது ஸர்வாதிகாரமா யிருக்கக் குறையில்லை யென்னு மிடத்துக்கு ஒரு த்ருஷ்டாந்த விசேஷம் தர்சிப்பிக்கிறார் (ம்ருத்கடமித்யாதி).

**விளக்கம்** – இந்தத் திருவாய்மொழி வேதத்தின் கார்யமாக (உதாரணம்: மண் = காரணம், பானை = கார்யம்) உள்ளபோதிலும், காரணப்பொருளான வேதங்கள் போன்று ஒரு சிலருக்கு மட்டுமே உரியது என்பது போன்றல்லாமல், அனைவருக்கும் உரியதாக

இருப்பதற்கு எந்தவிதமான குறையும் இல்லை என்பதை ஒரு உதாரணம் மூலம் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ம்ருத்கடம் தொடுமவர்களே தொடுமித்தனை போக்கி எல்லார்க்கும் தொடவொண்ணாதாயிருக்க, பார்த்திவமாயிரா நிற்கச்செய்தே பொற்குடம் எல்லார்க்கும் ஸ்பர்சிக்கலாயிரா நின்றதிறே யென்கை. இத்தால் காரணமான வேதம் அதிக்ருதாதிகாரமா யிருந்தாலும் தத்கார்யமானவிது ஸம்ஸ்கார விசேஷத்தாலே ஸர்வாதிகாரமாகக் குறையில்லை யென்றதாய்த்து. த்ருஷ்டாந்தத்திலே தோற்றுகிற காரணாத் கார்ய ச்லாக்யதாதிகள் தார்ஷ்டாந்திகத்திலும் விவக்ஷிதம்.

**விளக்கம்** – மண்ணால் செய்யப்பட்ட குடம், அதனைத் தொடுவதற்கு வல்லவர்கள் அல்லாமல் எல்லாரும் தொட இயலாத ஒன்றாக உள்ளது; ஆனால் சுட்டு எடுக்கப்பட்ட குடம் ஒன்று, மண்ணால் செய்யப்பட்டது என்றாலும், எல்லாராலும் தொடக்க்கூடியதாக உள்ளது அல்லவோ? இது போன்றே, காரணமாக உள்ள வேதம் என்பது ஒரு சிலருக்கு மட்டுமே உரியதாக உள்ளபோதிலும், அதன் கார்யமாக உள்ள திருவாய்மொழி அனைவருக்கும் உரியதாக உள்ளது. மண்குடம், பொற்குடம் என்ற உபமானத்தில் காணப்படுவதான காரணத்தைக் காட்டிலும், கார்யமான பொற்குடத்திற்குச் சிறப்புக்கள் அதிகம் என்பது போன்றவை, உபமேயமான வேதம் மற்றும் திருவாய்மொழிக்கும் உள்ளது என்பது தெளிவு [அதாவது காரணமான வேதங்களைக் காட்டிலும், கார்யமான திருவாய்மொழிக்குச் சிறப்பு அதிகம்].

74. பெரும்புறக்கடலும் ச்ருதிஸாகரமும் அலைத்தாழ்ந்தோடு மிடங்களில் அயோக்யர்க்குச் சமைத்த மடுவும் சாய்கரகமும் மாநமேய சரமம்.

**அவதாரிகை** - இனிமேல் இப்படியிருந்துள்ள திருவாய்மொழியும், ஏதத் ப்ரதிபாத்யமான அர்ச்சாவதாரமுமாகிற ப்ரமாண ப்ரமேய சரமங்கள் இவற்றினுடைய பூர்வா வஸ்த்தைகளில் அவகாஹன க்ஷமரல்லாதார்க்கு ஸுலபமாகக் கல்பிதங்களானவை யென்று "வேதவேத்ய" இத்யாதி வாக்யத்திற் சொன்ன ப்ரமாண ப்ரமேய சரமங்களை நிகமிக்கிறார் - (பெரும்புறக்கடலென்று தொடங்கி).

**விளக்கம்** - இப்படியாக உள்ள திருவாய்மொழி என்னும் ப்ரமாணத்தின் எல்லையும், திருவாய்மொழியில் கூறப்படுவதான அர்ச்சாவதாரம் என்னும் ப்ரமேயத்தின் (ப்ரமாணத்தால் அறியப்படும் வஸ்து = ஸர்வேச்வரன்) எல்லையும் – திருவாய்மொழிக்கு முன்பு உள்ளவற்றையும் (வேதங்கள், பாஞ்சராத்ரம், இராமாயணம், மஹாபாரதம் போன்றவை), அர்ச்சாவதாரத்தின் முன்பு உள்ளவற்றையும் (பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி நிலைகள்) - அறிந்து கொண்டு வணங்குவதற்கு வலிமை இல்லாதவர்கள், மிகவும் எளிதாக அறியும்படி படியாக ஏற்பட்டவை என்று, சூர்ணை (70) - வேதவேத்ய – என்பதில் கூறப்பட்டதான ப்ரமாண ப்ரமேய எல்லைகளை இந்தச் சூத்திரத்தில் நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, எல்லாக் கடலுக்கும் புறம்பாய் தான் பெருத்திருக்கிற கடல் போலே அபரிச்சேத்யமா யிருக்கிற பரவஸ்துவான ப்ரமேயம் – ஸமுத்ரம் தரங்கிதமாய் அலைந்து நிற்குமிடம்போலே ஜ்ஞாநாதி ஷட்குண பரிபூர்ணமான தானே அவற்றிலே இவ்விரண்டு குணங்களை ப்ரகடிப்பித்துக் கொண்டு ஸங்கர்ஷணாதி ரூபேண வ்யூஹித்திருக்குமிடத்திலும், ஸமுத்ரத்தில் நிலை காணவொண்ணாதபடி ஆழ்ந்திருக்கு மிடம்போலே, “யமாத்மா ந வேத” என்றும், “கட்கிலீ” என்றும் சொல்லுகிறபடியே அத்ருச்யத்வேந அந்தர்யாமியாய் நிற்குமிடத்திலும், ஸமுத்ரமானது கழிகளாய்க் கொண்டோடு மிடம்போலே, “மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:”, “யஸ்யாம் ஜாதோ ஜகந்நாதஸ் ஸாக்ஷாத் விஷ்ணுஸ் ஸநாதந:”, “நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்”, “விஷ்ணுர் மாநுஷரூபேண சசார வஸுதாதலே” என்கிறபடியே, கண் காண வந்து தோன்றி “ஞாலத்தூடே நடந்து” திரிந்த அவதாரமான விடத்திலும், தேச கரண கால விப்ரக்ருஷ்டதைகளாலே கிட்டி யனுபவிக்க யோக்யரல்லாதார்க்கு “அதிலே தேங்கின மடுக்கள் போலே” என்கிறபடியே தேசாதி விப்ரகர்ஷ கந்தமில்லாதபடி கல்பிக்கப்பட்ட அத்யந்த ஸுலப விஷயம் ப்ரமேயாவிர்ப்பாவ பரம்பரையினுடைய சரமாவஸ்த்தையான அர்ச்சாவதாரம்.

**விளக்கம்** - (பெரும் புறக்கடல்) - அனைத்துக் கடல்களைக் காட்டிலும் பெரியதாகப் பரந்து விரிந்துள்ள கடல் போன்று அளவிட இயலாதபடி உள்ள உயர்ந்த வஸ்துவான ப்ரமேயம் [பரம்பொருள்] தோன்றியதான, (அலைந்து ஆழ்ந்து ஓடும் இடங்களில்) – கடலானது அலைகளுடன் கூடியதாக அலைந்தபடி நிற்பது போன்று, ஞானம் உள்ளிட்ட ஆறு

குணங்களும் பரிபூர்ணமாகத் தன்னிடம் உள்ளபோதிலும், அவற்றில் பலம் மற்றும் ஞானம் கொண்டுள்ள ஸங்கர்ஷணன் என்னும்படியாக இரண்டு இரண்டு குணங்கள் கொண்டுள்ள வ்யூஹங்கள் என்ற நிலைகள்; ஸமுத்திரமானது ஆழங்காண இயலாதபடி உள்ள இடங்கள் போன்று, ப்ருஹத் உபநிஷத் (5-7-22) - ய யமாத்மா ந வேத - எந்த ஒரு பரமாத்மாவை ஆத்மா அறிய இயலாமல் உள்ளதோ - என்றும், திருவாய்மொழி (7-2-3) – கட்கிலீ - என்றும் கூறப்படும்படியாகக் காண இயலாத தன்மையுடன் கூடியதான அந்தர்யாமி என்ற நிலை; ஸமுத்ரமானது கழிகளாகக் கொண்டு ஓடும் இடங்கள் போன்று, இராமாயணம் அயோத்யாகாண்டம் (1-7) – மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந: - மனித ரூபத்தில் நித்யனாக உள்ள மஹாவிஷ்ணு அவதரித்தான் - என்றும், யஸ்யாம் ஜாதோ ஜகந்நாதஸ் ஸாக்ஷாத் விஷ்ணுஸ் ஸநாதந: – ஜகந்நாதனாகிய மஹாவிஷ்ணு எங்கு அவதரித்தானோ - என்றும், ஹரிவம்சம் (113-62) - நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் - ஆதிசேஷன் என்ற மெத்தை மீது சயனிக்கும் அவன் மதுராவிற்கு வந்தான் – என்றும், விஷ்ணுர் மாநுஷரூபேண சசார வஸுதாதலே - மஹாவிஷ்ணு மனிதரூபத்தில் இந்தப் பூமியில் ஸஞ்சரித்தான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, கண்களால் அனைவரும் காணலாம்படியாக அவதரித்து, திருவாய்மொழி (6-9-2) – ஞாலத்தூடே நடந்து - என்பதற்கு ஏற்ப இந்தப் பூமியில் நடந்து திரிந்ததான விபவம் என்ற அவதார நிலை. (அயோக்யர்க்கு) - இந்த நிலைகளை அந்தந்த காலத்தில் இல்லாத காரணம், மாமிசக்கண்கள் கொண்டு காண இயலாத காரணம் ஆகியவற்றால் அனுபவிக்க இயலாதபடி உள்ளவர்களுக்கு, (சமைத்த மடுவும்) - சூர்ணை (39) - அதிலே தேங்கின மடுக்கள் போலே - என்பதற்கு ஏற்ப இடத்தின் காரணமாகவும், காலத்தின் காரணமாகவும் ஏற்படும் எல்லைகள் ஏதும் இல்லாதபடி ஏற்பட்டதும், மிகவும் எளியதும், ஸர்வேச்வரனுடைய ஐந்து நிலைகளில் எல்லையாக உள்ளதும் ஆகிய அர்ச்சாவதாரம்.

**வ்யாக்யானம்** – “மதிமந்தாநமாவித்த்ய யேநாஸௌ ச்ருதி ஸாகராத்” என்கிறபடியே அபரிச்சேத்யமாய் பரத்வபரமான வேதம் – ஸமுத்ர தரங்கித ப்ரதேசம்போலே தத் வ்யூஹ ப்ரதிபாதகதயா அவஸ்த்தாந்தராபந்நமாய் பஞ்சராத்ரமான விடத்திலும் ஸமுத்ரத்தில் அகாத ஸ்தலம்போலே ததந்தர்யாமித்வ ப்ரதிபாதகதயா அவகாஹித்து அர்த்த தர்சநம் பண்ணவரிதாம்படி மந்வாதிஸ்ம்ருதி ரூபமான விடத்திலும், ஸமுத்ரம் கழிகளா


Email:sridharan_book@yahoo.co.in

யோடுமாபோலே ததவதார ப்ரதிபாதகதயா இதிஹாஸ ரூபேண விஸ்த்ருதமாய் நடக்கிற விடத்திலும்,

**விளக்கம் -** (ச்ருதி ஸாகரம்) – மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ச்ருதி ஸாகராத் – எந்த வ்யாஸபகவானால் வேதம் என்ற கடலில் ஞானம் என்று மத்து கொண்டு கடைந்து – என்பதற்கு ஏற்ப, அளவிட இயலாதபடியான ஸர்வேச்வரனுடைய பரத்வ நிலையைக் கூறும் வேதமானது, (அலைத்து) - கடலில் அலைகள் நிரம்பி உள்ளதான இடங்கள் போன்று ஸர்வேச்வரனுடைய வ்யூஹ நிலையை உரைப்பதன் காரணமாக வேறு ஒரு இடத்தை அடைந்தது போன்ற பாஞ்சராத்ரமாக மாறும் இடங்கள், (ஆழ்ந்து) - ஸமுத்ரத்தில் ஆழமான இடம் போன்று, அந்தர்யாமி நிலையை உரைப்பதால் “இன்ன பொருள் இங்கு உரைக்கப்படுகிறது என்று உறுதிபட உணர்வதற்குக் கடினமான மனுஸ்ம்ருதி போன்ற ஸ்ம்ருதிகளாக மாறும் இடங்கள், (ஓடும்) - ஸமுத்திரம் கழிகளாக ஓடும் இடங்கள் போன்று ஸர்வேச்வ்ரனுடைய அவதாரங்கள் பற்றி மிகவும் விரிவாக உரைப்பதால் இதிகாசங்கள் என்பதான ரூபங்கள் எடுக்கும் இடங்கள் என்பதான மூன்று இடங்கள்.

**வ்யாக்யானம் -** ஜ்ஞாநசக்தியாதி ஸங்கோசத்தால் அவகாஹித்து விடாய் தீர மாட்டாதார்க்கு விடாய்த்தவன் வாயை அங்காந்திருக்கத் தானே தண்ணீர் வந்து குதிக்கும்படி கல்பிதமான சாய்கரகம்போலே அநாயாஸேந உபஜீவிக்கலாம்படி அத்யந்த ஸுலபமான சாஸ்த்ரம் ப்ரமாண பூதமான வேதத்தினுடைய ஆவிர்ப்பாவ பரம்பரா சரமாவஸ்தையான திருவாய்மொழி யென்கை. இத்தால் மடுவும் சாய்கரகமு மென்கையாலே ப்ரமாண ப்ரமேயங்களினுடைய ஒளியும் எளிமையும் இனிமையும் தொடக்கமான ஸத்குண ஸாஹித்யம் சொல்லப்பட்டது.

**விளக்கம் -** (அயோக்யர்க்கு) – ஞானம், சக்தி போன்றவற்றால் குறைவுள்ள காரணத்தால் நீர் நிறைந்த மடு ஒன்றில் மூழ்கியபடி இருந்தாலும் தாகம் தீராதவர்கள் போன்றுள்ள வர்களுக்கு. (சமைத்த சாய்கரகம்) - அதிக தாகம் எடுத்த ஒருவன் தனது வாயைத் திறந்து வைத்துள்ளபோது தானாகவே வந்து அவனுடைய வாயில் நீர் ஊற்றுவதான சாய்ந்த நிலையில் உள்ள பாத்திரம் போன்று, (மாநமேய சரமம்) - பெருமுயற்சி எடுத்து களைத்துப்போதல் என்பது இன்றி எளிதாகக் கற்கலாம்படி மிகவும் எளிமையான

சாஸ்த்திரம் எதுவென்றால், ப்ரமாணமாக உள்ள வேதங்களுடைய வெளிப்பாடாக உள்ளதும், பலவற்றிலும் எல்லையாக உள்ளதும் ஆகிய திருவாய்மொழியே ஆகும். இந்தச் சூர்ணையில், அர்ச்சாவதாரத்தை மடு என்றும், திருவாய்மொழியைச் சாய்கரம் என்றும் கூறுவதால், ப்ரமாணம் மற்றும் ப்ரமேயம் ஆகியவற்றுடைய வெளிப்படும் தன்மை, எளிமை, இனிமை ஆகியவை தொடக்கமாக உள்ள உயர்ந்த தன்மைகளின் சேர்க்கை உணர்த்தப்பட்டது.

75. வீட்டின்ப வின்பப் பாக்களில் த்ரவ்யபாஷா நிரூபண ஸமம் இன்பமாரியி லாராய்ச்சி.

**அவதாரிகை -** இப்படி ப்ரமாண ப்ரமேய வைபவத்தை ப்ரதிபாதித்த வநந்தரம் ப்ரமாத்ரு வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிக்கிறார் மேல். அதில் ப்ரதமத்திலே ப்ரமாண ப்ரமேயங்கள் இப்படி விலக்ஷணமா யிருந்ததாகிலும் இப்ப்ரமாண வக்தாவானவர் சதுர்த்த வர்ணரன்றோ வென்ன, பாகவதோத்தமரான இவருடைய ஜந்ம நிரூபண தோஷத்தை ப்ரமாண ப்ரமேயங்களில் த்ரவ்யபாஷா நிரூபண தோஷம் கீழுக்த மன்றிக்கே யிருக்கச் செய்தே அத்தை ஸித்தவத்கரித்து த்ருஷ்டாந்தமாக்கிக் கொண்டருளிச் செய்கிறார் (வீட்டின்பமென்று தொடங்கி).

**விளக்கம் -** ப்ரமாணமாக உள்ள திருவாய்மொழி, அதன் மூலம் அறியப்படும் ப்ரமேயமான அர்ச்சாவதாரம் ஆகியவற்றின் மேன்மைகளை இதுவரை அருளிச்செய்தார். தொடர்ந்து இத்தகைய திருவாய்மொழியை அருளிச்செய்தவருடைய வைபவத்தை விரிவாக அருளிச் செய்கிறார். முதலில், ப்ரமாணம் மற்றும் ப்ரமேயங்களான திருவாய்மொழியும் அர்ச்சாவதாரமும் அனைத்தைக் காட்டிலும் மேம்பட்டதாக உள்ளபோதிலும், இந்தத் திருவாய்மொழியை அருளிச்செய்தவர் நம்மாழ்வார் நான்காம் வர்ணத்தைச் சேர்ந்தவர் அல்லவோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். திருவாய்மொழி ஏற்படுத்தப்பட்ட மொழி, அர்ச்சாவதார விக்ரஹம் உண்டாக்கத் தேவைப்பட்ட பொருள் ஆகியவை கொண்டு அவற்றை ஆராய்ந்து இகழ்ந்தால், அதனால் பாவங்களே ஏற்படும் என்று இதுவரை உள்ள சூர்ணைகளில் நேரடியாகக் கூறப்படவில்லை என்றாலும், அதனைச் செய்வதால் பாவங்கள் ஏற்படும் என்று கூறாமல் கூறப்பட்டது என்றே கொள்ளவேண்டும்; இதனையே உவமையாக்கி, பாகவதர்களில் மிகவும் உயர்ந்த


Email:sridharan_book@yahoo.co.in

நம்மாழ்வாருடைய பிறவியை ஆராய்ந்தால் பெருங்குற்றமே வந்து சேரும் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**குறிப்பு** – இந்தச் சூர்ணையை "இன்பமாரியில் ஆராய்ச்சி வீட்டின்பத்தில் த்ரவ்ய நிரூபன ஸமம், இன்பப்பாவில் பாஷா நிரூபண ஸமம் - என்று பிரித்துப் படிக்கவேண்டும். இங்கு இன்பமாரி = நம்மாழ்வார், வீட்டின்பம் = அர்ச்சை, இன்பப்பா = திருவாய்மொழி, திரவியம் = கல், உலோகம்.

**வ்யாக்யானம்** – அதாவது "கனிவார் வீட்டின்பம்" என்கிறபடியே பகவத் விஷயமென்றால் உளம் கனிந்திருக்குமவர்களுடைய க்ருஹங்களிலே அவர்களுகந்ததொரு த்ரவ்யத்தை திருமேனியாகக் கொண்டிருந்து இன்பத்தை விளைக்கிற அர்ச்சாவதாரத்தில் த்ரவ்ய நிரூபணத்தோடும், "அந்தமிழினின்பப்பா" என்கிறபடியே த்ராவிட ரூபமாக பகவத் குண கண ப்ரதிபாதகதயா விசேஷஜ்ஞர்க்கு ஆநந்தாவஹமாயிருக்கிற திருவாய்மொழியில் பாஷாநிரூபணத்தோடும் துல்யதோஷம் "அடியார்க்கின்பமாரி" என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் திருவாய்மொழி முகத்தாலே ஆநந்தத்தை வர்ஷிக்கும் மேகமான ஆழ்வார்பக்கல் உத்பத்தி நிரூபணமு மென்கை.

**விளக்கம்** - (வீட்டின்பத்தில்) - திருவாய்மொழி (2-3-5) - கனிவார் வீட்டின்பம் - என்பதற்கு ஏற்ப பகவத் விஷயம் என்றால் சட்டென்று உள்ளம் மகிழ்ந்து கொண்டாடும்படியாக உள்ளவர்களுடைய வீடுகளில், அவர்களுக்கு மகிழ்வை அளிக்கவல்ல ஏதேனும் ஒரு பொருளைத் தனது திருமேனியாகக் கொண்டு நின்று, அவர்களுக்கு பரமானந்தத்தை அளிக்கின்ற அர்ச்சாவதாரத்தை, (த்ரவ்ய நிரூபணம்) – அத்தகைய அர்ச்சாவதார விக்ரஹமானது செய்யப்பட்டதான பொருள்கள் காரணமாக அதனைத் தாழ்வாக உரைப்பதற்கும், (இன்பப்பாவில்) - பெருமாள் திருமொழி (1-4) - அந்தமிழினின்பப்பா - என்பதற்கு ஏற்ப தமிழ் ரூபமாக நின்று பகவானுடைய திருக்கல்யாண குணங்கள் கூட்டத்தை உரைப்பதால் சான்றோருக்கு ஆனந்தத்தை அளிப்பதாக உள்ள திருவாய்மொழியை, (பாஷா நிரூபணம்) - அது உண்டாக்கப்பட்ட மொழியைக் காரணமாகக் கொண்டு தாழ்வாக உரைப்பதற்கும், (ஸமம்) - ஒப்பாகும். எது எவ்விதம் ஒப்பாகும்? விடை அளிக்கிறார். (இன்பமாரியில்) - திருவாய்மொழி (4-5-10) - அடியார்க்கின்பமாரி - என்பதற்கு ஏற்ப ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் திருவாய்மொழி

மூலமாகப் பேரானந்தம் என்னும் மழையைப் பொழிகின்ற மேகம் போன்றவராகிய நம்மாழ்வாரின், (ஆராய்ச்சி) - பிறவியை இன்னது என்று ஆராய்தல் ஆகும். இவ்விதம் இவர் அருளிச்செய்ததன் காரணம், பின்வரும் பல சாஸ்த்ர வாக்கியங்களைத் திருவுள்ளத்தில் கொண்டதால் ஆகும்.

**வ்யாக்யானம் –** "விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதி ய: கரௌ மாநுஷம் பாவமுபௌ நரக பாதிநௌ", "யோ விஷ்ணோ ப்ரதிமாகாரே லோஹபாவம் கரோதி வை, குரௌச மாநுஷம் பாவமுபௌ நரகபாதிநௌ", "அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம், மாத்ரு யோநி பரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிண:", "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணோந நரோத்தம, பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம்", "கிமப்யத்ராபி ஜாயந்தே யோகிநஸ் ஸர்வ யோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநா தாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்", "சூத்ரம் வா பகவத் பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா, வீக்ஷதே ஜாதி ஸாமாந்யாந் ஸ யாதி நரகம் நர:" ஏவமாதி சாஸ்த்ர வசனங்களை ஹ்ருதீகரித்திறே இவரிப்படி யருளிச்செய்தது. "அவஜாநந்தி மாம் மூடா:" என்கிறபடியே வாசியறியாமல் அவஜ்ஞை பண்ணும் மூடர்க்கும் "பச்யந்தி கேசிதநிசம் த்வதநந்ய பாவா:" என்கிறபடியே வாசியறிந்து ஆதரிக்கும் அநந்யபாவர்க்கும் மூன்றிடமு மொக்குமிறே.

**விளக்கம் –**

- ப்ரஹ்மாண்டபுராணம் - விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதி ய: கரௌ மாநுஷம் பாவமுபௌ நரக பாதிநௌ - யார் ஒருவன் மஹாவிஷ்ணுவின் அர்ச்சா விக்ரஹங்களை அவை உலோகம் என்ற சிந்தனையில் காண்கிறானோ அல்லது யார் ஒருவன் ஆசார்யனை ஒரு சாதாரண மனிதன் என்று எண்ணுகிறானோ அவர்கள் இருவரும் நரகத்தில் விழுவார்கள்.
- யோ விஷ்ணோ ப்ரதிமாகாரே லோஹபாவம் கரோதி வை, குரௌச மாநுஷம் பாவமுபௌ நரகபாதிநௌ – யார் ஒருவன் அர்ச்சா விக்ரஹமாக எழுந்தருளியுள்ள மஹாவிஷ்ணுவிடம் உலோகம் என்னும் எண்ணத்தை வைக்கிறானோ, யார் ஒருவன் ஆசார்யனிடம் மனிதன் என்னும் எண்ணத்தை வைக்கிறானோ, அவர்கள் இருவரும் நரகம் செல்வர்.


**Email:**sridharan_book@yahoo.co.in

- அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம், மாத்ரு யோநி பரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிண: - அர்ச்சாவதார விக்ரஹங்களின் மூலத்தை ஆராய எண்ணுதல், ஸ்ரீவைஷ்ணவனின் குலத்தை ஆராய எண்ணுதல் ஆகியவை, தாயின் யோனியை ஆராய்வதற்கு ஒப்பாகும் என்று சான்றோர் கூறுவர்.

- ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம, பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம் – அரசனே! அந்தணன் ஒருவன் மஹாவிஷ்ணுவைக் குறித்து அல்லாமல் உள்ள மற்ற செய்யுள்களால் (வடமொழி அல்லாமல் மற்ற மொழிகளில் உள்ள) பாடுதல் கூடாது. ஆகவே நீ மற்ற பாஷையில் பாடியதற்காக நாட்டை விட்டுத் துரத்திய காரணத்தால் உன்னால் பாவம் செய்யப்பட்டது.

- பவிஷ்யோத்தர புராணம் – கிமப்யத்ராபி ஜாயந்தே யோகிநஸ் ஸர்வ யோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநா தாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம் - யோகிகள் இந்தப் பூமியில் அனைத்துவிதமான பிறவிகளிலும் பிறக்கிறார்கள். ஜீவாத்மா அனைத்திற்கு ஈச்வரனாகிய பரமாத்மாவை நேரில் கண்ட இந்த யோகிகளின் குலம், தொழில் போன்றவற்றை ஆராய்தல் கூடாது.

- சூத்ரம் வா பகவத் பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா, வீக்ஷதே ஜாதி ஸாமாந்யாந் ஸ யாதி நரகம் நர: - நான்காம் வர்ணத்தைச் சேர்ந்தவன், வேடுவன், நாய் இறைச்சி உண்பவன் ஆகியவர்களில் யாரேனும் பகவானின் பக்தனாக இருந்தால், அவர்களை அவ்விதம் அந்தந்த குலங்களில் வைத்துக் காண்பவன் நரகம் செல்வான்.

கீதை (9-11) – அவஜாநந்தி மாம் மூடா: - மனிதனாக ரூபம் எடுத்து அவதரித்த என்னை அறிவற்றவர்கள், நான் சாதாரண மனிதன் என்று கருதி அவமதிக்கிறார்கள் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்களான மூடர்கள் மற்றும் ஸ்தோத்ரரத்னம் (16) – பச்யந்தி கேசிதநிசம் த்வதநந்ய பாவா: - உன்னையே எப்போதும் சிந்திப்பவர்களாக, மற்ற விஷயங்களை நோக்காதவராக - என்பதற்கு ஏற்ப உள்ள ஞானிகள் ஆகிய இரு பிரிவினருக்கும் மூன்று இடங்களும் ஒன்றே ஆகும் (அதாவது ஏதும் அறியாதவர்கள் அறியாமை காரணமாக பர,

வ்யூஹ, விபவங்கள் ஒன்று என உணர்வர்; ஞானிகள் அனைத்தும் அறிந்ததால் அவை மூன்றும் ஒன்று என உணர்வர்).

76. பேச்சுப் பார்க்கில் கள்ளப்பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்; பிறவி பார்க்கில் அஞ்சாமோத்தும் அறுமூன்றும் கழிப்பனாம்.

**அவதாரிகை** - இங்ஙனன்றிக்கே பேச்சிலும், இது சொன்னவர் பிறவியிலும் தாழ்வு பார்த்து இப்ப்ரபந்தத்தை இகழுமவர்களுக்கு அநிஷ்ட ப்ரஸஞ்ஜநம் பண்ணுகிறார் - பேச்சித்யாதி வாக்ய த்வயத்தாலே.

**விளக்கம்** - இது மட்டுமே அல்லாமல், தமிழ் மொழிக்கும், தமிழில் வேதம் அருளிச்செய்த நம்மாழ்வாருடைய பிறவிக்கும் சிலர் தாழ்வை உரைத்து, இந்தத் திருவாய்மொழியை இகழக்கூடும். அப்படிப்பட்டவர்கள், தங்களுக்கு விருப்பம் இல்லாத நூல்களைக்கூட ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் என்று இந்தச் சூர்ணையில் உள்ள இரண்டு வாக்கியங்களால் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸம்ஸ்ருதமாகவுமாம், த்ராவிடமாகவுமாம், பகவத்பரமானது உபாதேயம்; அந்யபரமானது த்யாஜ்யமென்று கொள்ளாதே பாஷாமாத்ராவதியாக விதி நிஷேதங்களை அங்கீகரித்து த்ராவிட பாஷையாகையாலே இது த்யாஜ்யமென்னப் பார்க்கில், "வெள்ளியார் பிண்டியார் போதியாரென்றிவரோதுகின்ற கள்ளநூல்" என்றும், "பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி" என்றும் சொல்லுகிற பாஹ்ய சாஸ்த்ராதிகளும் ஸம்ஸ்க்ருத பாஷையான வாகாரத்தாலே உபாதேயமாக வேணும். சதுர்த்த வர்ணோத்பவரென்று வக்தாவானவர் பிறவியைப் பார்த்து இத்தை யிகழுமளவில், மத்ஸ்யகந்தாஸுதனான வ்யாஸன் சொன்ன பஞ்சம வேதமான மஹாபாரதமும், கோபஜந்மாவான க்ருஷ்ணன் சொன்ன ஷட்க த்ரயாத்மகமான கீதோபநிஷத்தும் த்யாஜமாக வேணுமென்கை. இத்தால் பாஷாமாத்ரத்தையும், வக்த்ரு ஜன்மத்தையும் பார்த்து இப்ப்ரபந்தத்தை இகழுமளவில் வரும் விரோதம் காட்டப்பட்டது.

**விளக்கம்** - (பேச்சுப்பார்க்கில்) வடமொழியில் இருந்தாலும், தென்மொழியில் இருந்தாலும், பகவானைப் பற்றி உரைக்கும் நூல்கள் ஏற்கத்தக்கதே ஆகும்; மற்ற விஷயங்கள் குறித்து உரைக்கும் நூல்கள் மட்டுமே தள்ளத்தக்கவை ஆகும். ஆனால்


**Email:**sridharan_book@yahoo.co.in

இவ்விதம் கொள்ளாமல், அந்தந்த நூல்கள் இயற்றப்பட்ட மொழியை மட்டுமே கருத்தில் கொண்டு, “இவற்றை ஏற்கவேண்டும், இவற்றைத் தள்ளவேண்டும்” என்றுள்ள விதிகளைப் பின்பற்றி, தமிழில் ஏற்பட்டது என்பதால் இந்தத் திருவாய்மொழியானது கைவிடத்தக்கது என்று சிலர் கூறக்கூடும். (கள்ளப்பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்) – இவ்விதம் உரைத்தால், பெரியதிருமொழி (9-7-9) - வெள்ளியார் பிண்டியார் போதியாரென்றிவரோதுகின்ற கள்ளநூல் – என்றும், பெரியதிருமொழி (2-5-2) - பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான மற்ற மத நூல்கள் பலவும் வடமொழியில் இருந்தால், அவைகளையும் ஏற்கவேண்டும் என்றாகிவிடும். (பிறவி பார்க்கில்) - திருவாய்மொழியை அருளிச்செய்த நம்மாழ்வார், நான்காம் வர்ணத்தைச் சேர்ந்தவர் என்று, பிறவியை ஆராய்ந்து திருவாய்மொழியை சிலர் இகழக்கூடும். இவ்விதம் செய்தால், (அஞ்சாமோத்தும் அறுமூன்றும் கழிப்பனாம்) - மச்சகந்தியின் புத்திரராகிய வ்யாஸர் அருளிச்செய்த ஐந்தாவது வேதம் என்று போற்றப்படும் மஹாபாரதமும், இடையர் குலத்தில் அவதரித்த க்ருஷ்ணன் திருவாய் மலர்ந்த பதினெட்டு அத்யாயங்கள் கொண்டதான ஸ்ரீமத்பகவத்கீதை என்னும் உபநிஷத்தும் கைவிடத்தக்கதே என்றாகிறது. ஆக இதன் மூலம், மொழி மற்றும் ஆழ்வாரின் குலம் ஆகியவற்றைக் காரணம் காண்பித்து, இந்தத் திருவாய்மொழியை இகழ்வதில் உள்ள விரோதம் உணர்த்தப்பட்டது.

**வ்யாக்யானம்** - அதவா, பாஷா வக்த்ரு ஜந்மமாந்த்யங்கள் நிரூபிக்கலாகாதென்று கீழ்ச்சொன்னபடியன்றிக்கே ஸம்ஸ்க்ருத பாஷையாயுள்ளதும், ஜந்மகௌரவமுடையார் சொல்லுமதுவுமே உபாதேயமென்று கொள்ளுமவர்களுக்கு அநிஷ்ட ப்ரஸஞ்ஜநம் பண்ணுகிறார் - பேச்சுப்பார்க்கிலித்யாதி வாக்ய த்வயத்தாலே. அதாவது - பகவத் பரத்வாந்ய பரத்வங்களைப் பரிக்ராஹ்ய பரித்யாஜ்யத்வங்களுக்கு ஹேதுவாக்காதே ஸம்ஸ்க்ருத பாஷையானது உபாதேயமென்று பேச்சினுடைய கௌரவமாத்ரத்தை பார்க்கில், “கள்ளநூல்”, “பொய்ந்நூல்” என்று கழிக்கப்பட்ட பாஹ்ய சாஸ்த்ராதிகளும் பரிக்ராஹ்யங்களாம். யதாஜ்ஞாநர் சொன்னது உபாதேயம், அயதாஜ்ஞானர் சொன்னது த்யாஜ்யமென்று கொள்ளாதே, ஜந்ம கௌரவமுடையார் சொன்னதே உபாதேயம்; அல்லாதார் சொன்னது த்யாஜ்யமென்று பிறவி மாத்ரத்தையே பார்க்கில், மத்ஸ்யகந்தா ஸுதனான வ்யாஸன் சொன்ன பஞ்சமவேதமும், கோபஜந்மாவான க்ருஷ்ணன் சொன்ன கீதோபநிஷத்தும் த்யாஜ்யமாக வேணுமென்கை. இத்தாலே பேச்சில் கௌரவமும்,

சொல்லுமவர்கள் பிறவியில் கௌரவமும் ப்ரபந்தோபாதேயத்வ ஹேதுவாகச் சொல்லுமளவில் வருமநிஷ்டம் காட்டப்பட்டது.

**விளக்கம்** - அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். நூலின் மொழி, நூலை உண்டாக்கியவரின் குலம் ஆகியவற்றை ஆராயக்கூடாது என்று கூறப்பட்டது. இவ்விதம் கொள்ளாமல், வடமொழியில் உள்ள நூல்கள் கூறுபவை மற்றும் உயர்ந்த குலத்தில் வந்தவர்கள் கூறுபவை மட்டுமே ஏற்கத்தக்கது என்று கூறுவர்கள், தங்களுக்கு விருப்பம் அற்ற நூல்களைக்கூட, ஒரு தலையாக ஏற்கவேண்டிய நிலை வரும் என்று இந்த இரண்டு வாக்கியங்களில் உரைப்பதாகவும் கொள்ளலாம். இந்தக் கருத்தை இனி விளக்குகிறார். (பேச்சுப் பார்க்கில்) – பகவானைக் குறித்து உரைத்தல், மற்ற விஷயங்கள் குறித்து உரைத்தல் என்பதால் முறையே ஏற்றுக்கொள்ளத்தக்கவை, ஏற்கத்தகாதவை என்று காரணம் காண்பிக்காமல், வடமொழியில் அமைந்த காரணத்தால் எத்தகைய நூலும் ஏற்கத்தக்கவை என்று மொழியின் பெருமையை மட்டுமே காரணமாகச் சிலர் ஏற்கக்கூடும். இவ்விதம் கொண்டால், (கள்ளப்பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்) – பெரியதிருமொழி (9-7-9) - வெள்ளியார் பிண்டியார் போதியாரென்றிவரோதுகின்ற கள்ளநூல் - என்றும், பெரியதிருமொழி (2-5-2) - பொய்ந்நூலை மெய்ந்நூலென் றென்றுமோதி - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தள்ளப்பட்ட மற்ற சமய நூல்களும் ஏற்கத்தக்கவை என்றாகிறது. (பிறவி பார்க்கில்) – மெய்யான ஞானம் உள்ளவர்கள் கூறுபவை ஏற்கத்தக்கவை, மற்றவர்கள் கூறுவது தள்ளத்தக்கவை என்று கொள்ளாமல், ஒருவருடைய பிறவியை ஆராய்ந்து, இவ்விதம் கொள்ளத்தக்கவற்றையும் ஏற்கத்தக்கவற்றையும் தீர்மானித்தால், (அஞ்சாமோத்தும் அறுமூன்றும் கழிப்பனாம்) - மச்சகந்தியின் புத்திரராகிய வ்யாசர் உரைத்த ஐந்தாம் வேதமாகிய மஹாபாரதமும், இடையர் குலத்தில் அவதரித்த க்ருஷ்ணன் அருளிச்செய்த ஸ்ரீமத்பகவத்கீதை என்ற உபநிஷத்தும் தள்ளத்தக்கவை என்றாகிவிடும். ஆக இப்படியாக, ஒரு நூல் அமையப் பெற்ற மொழியின் கௌரவம், அந்த நூலை ஏற்படுத்தியவருடைய பிறவியின் கௌரவம் ஆகியவற்றை, ஒரு நூல் ஏற்றுக்கொள்வதற்கான காரணமாக உரைத்தால் வரக்கூடிய தோஷம் கூறப்பட்டது.

77. க்ருஷ்ண க்ருஷ்ணத்வைபாயநோத்பத்திகள் போலன்றே க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வஜந்மம்.

**அவதாரிகை** - இவ்வாழ்வாருடைய உத்பத்தியை வ்யாஸ க்ருஷ்ணோத்பத்தி ஸமமாக வருளிச்செய்தார் கீழ். அவற்றில் இதுக்குண்டான வ்யாவ்ருத்தியை அருளிச்செய்கிறார் மேல் – (க்ருஷ்ண க்ருஷ்ணேத்யாதியாலே).

**விளக்கம்** - நம்மாழ்வாருடைய பிறவியை, வ்யாஸர் மற்றும் க்ருஷ்ணன் ஆகியவர்களுடைய பிறவிக்குச் சமமாக கடந்த சூர்ணையில் அருளிச்செய்தார். அவர்களுடைய பிறவியைக் காட்டிலும் நம்மாழ்வாரின் பிறவி உயர்ந்து நிற்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்தி மகனான" க்ருஷ்ணனுடையவும், கந்யாஸுதனான வ்யாஸனுடையவும் உத்பத்தி போலன்றே "கண்ணன் நீண் மலர்ப்பாதம் பரவிப் பெற்ற"வராய், "க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வ மிவோதிதம்" என்கிறபடியே க்ருஷ்ண விஷய த்ருஷ்ணைதான் ஒரு வடிவு கொண்டாப்போலே யிருக்கிற ஆழ்வாருடைய அவதாரமென்கை.

**விளக்கம்** – திருப்பாவை (25) - ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்தி மகனாய் – என்பதற்கு ஏற்ப உள்ளதான க்ருஷ்ணனுடைய பிறவி மற்றும் கன்னிப்பெண்ணான மச்சகந்தியின் புத்திரனாகிய வ்யாஸருடைய பிறவி போன்றது இவருடைய பிறவி அல்ல; யாருடைய இவ்விதம் அல்ல என்றால் விடை அளிக்கிறார். திருவிருத்தம் (37) – கண்ணன் நீண் மலர்ப்பாதம் பரவிப் பெற்ற - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளவராகவும், ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் (1-6) – க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வ மிவோதிதம் - க்ருஷ்ணனிடம் கொண்ட ஆசை என்பதே ஒரு வடிவம் எடுத்தது போன்று அவதரித்த நம்மாழ்வார் - என்று கூறுவதற்கு ஏற்ப க்ருஷ்ணனிடம் உள்ள ஆசையே ஒரு வடிவம் எடுத்தது போன்றுள்ளவரும் ஆகிய விதத்தில் நம்மாழ்வாருடைய அவதாரம் உள்ளது.

78. பெற்றும் பேறிழந்து(ம்) கன்னிகையானவளும், எல்லாம் பெற்றாளாயும் தத்துக்கொண்டாள் என்பர் நின்றாரென்னுமவளும், நெடுங்காலமும் நங்கைமீ ரென்னுமவளுக்கு நேரன்றே.

**அவதாரிகை** – அதெங்ஙனேயென்னு மபேக்ஷையிலே பல ஹேதுக்களாலும் இவர் ஜந்ம வ்யாவ்ருத்தியை ப்ரகாசிப்பிக்கிறார் மேல்; அதில் ப்ரதமத்திலே அவர்களைப் பெற்றவர்கள் இவரைப் பெற்றவளுக்கு ஸத்ருசரல்லாமையை இசைவிக்கிறார் – (பெற்றுமென்று தொடங்கி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டது போன்று "நம்மாழ்வாருடைய பிறவியானது வ்யாஸர் மற்றும் க்ருஷ்ணனுடைய பிறவி போன்று அல்ல" என்று எவ்விதம் கூற இயலும் என்ற கேள்வி எழலாம். இதற்கான விடையை, பல காரணங்களைக் காண்பித்து, நம்மாழ்வாரின் பிறவி மேன்மையை, அடுத்துள்ள மூன்று சூர்ணைகளில் அருளிச் செய்கிறார். அவற்றுள் முதலாவதாக, அவர்களைப் பெற்றவர்கள், நம்மாழ்வாரைப் பெற்றவருக்கு ஒப்பாகமாட்டார்கள் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற" என்கிறபடியே க்ருஷ்ணனைப் பிள்ளையாகப் பெற்றிருக்கச் செய்தேயும் அவனுடைய பால்யரஸம் ஒன்றுமநுபவிக்கப் பெறாதபடி "திருவிலேனொன்றும் பெற்றிலேன்" என்று பேறிழந்தவளான தேவகியும், "த்வீபே பதரிகாமிச்ரே பாதராயணமச்யுதம், பராசராத் ஸத்யவதீ புத்ரம் லேபே பரந்தபம்" என்கிறபடியே வ்யாஸனைப் பிள்ளையாகப் பெற்றிருக்கச் செய்தேயும் அவனாலுள்ள ரஸம் ஒன்றுமநுபவிக்கப் பெறாதபடி "புந: கந்யா பவிஷ்யதி" என்ற பராசர வசனத்தாலே மீளவும் கந்யகையான மத்ஸ்யகந்தையும்; "எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே" என்னும்படி க்ருஷ்ணனுடைய பால சேஷ்டிதாதிகளையெல்லா மநுபவிக்கப் பெற்றிருக்கச் செய்தேயும், "தத்துக்கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ" என்றும், "இம்மாயம் வல்ல பிள்ளை நம்பி யுன்னை யென்மகனே யென்பர் நின்றார்" என்றும் அவனுடைய அதிமநுஷ சேஷ்டிதங்களடியாகத் தானும் பிறரும் சங்கிக்கும்படியான மாத்ருத்வத்தையுடைய யசோதையும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (பெற்றும்) பெரியாழ்வார் திருமொழி (1-2-17) - திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற – என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணனைத் தேவகி தனது புத்திரனாகப் பெற்றபோதிலும், (பேறு இழந்தும்) – அவனுடைய பாலலீலைகள் எதனையும் அனுபவிக்கப் பெறாத காரணத்தால், பெருமாள்திருமொழி (7-5) - திருவிலேனொன்றும் பெற்றிலேன் - என்பதற்கு ஏற்ப பேறு இழந்த தேவகியும். (பெற்றும்) மஹாபாரதம் - த்வீபே பதரிகாமிச்ரே பாதராயணமச்யுதம், பராசராத் ஸத்யவதீ புத்ரம் லேபே பரந்தபம் - இலந்தை மரங்கள் நிறைந்த கானகத்தில் ஸத்யவதி என்பவள் பராசரமுனிவர் மூலமாக, எதிரிகளை வாட்டவல்ல விஷ்ணுவின் அம்சமாக, பதரிகாச்ரமத்தின் அருகில் பாதராயணர் என்ற வேதவ்யாஸரைப் பெற்றாள் - என்பதற்கு ஏற்ப ஸத்யவதி, வ்யாஸரைப் புத்திரராகப் பெற்றெடுத்த போதிலும், (கன்னிகையானவளும்) – அந்தப் புத்திரன் மூலம் ஏற்படக்கூடிய எந்தவிதமான தாய்மை இன்பத்தையும் அனுபவிக்க இயலாமல், புந: கந்யா பவிஷ்யதி - நீ மீண்டும் கன்னிப்பெண்ணாக ஆவாய் - என்று பராசரர் கூறியதன் காரணமாக மீண்டும் கன்னியாக மாறிய மச்சகந்தியும். (எல்லாம் பெற்றாளாயும்) – பெருமாள்திருமொழி (7-5-3) - எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே – என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணனுடைய பாலலீலைகள் முழுவதையும் நன்றாக அனுபவிக்கும்படியான பேறு யசோதைக்குக் கிட்டியபோதிலும், (தத்துக்கொண்டாள் என்பர் நின்றா ரென்னுமவளும்) – பெரியாழ்வார் திருமொழி (2-1-7) - தத்துக்கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ – தத்து எடுத்துக்கொண்டாள் அல்லாமல் தானே ஈன்றாளோ - என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-1-3) - இம்மாயம் வல்ல பிள்ளை நம்பி யுன்னை யென்மகனே யென்பர் நின்றார் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவனுடைய மனிதச் செயல்களுக்கு அப்பாற்பட்டதான செயல்கள் காரணமாகத் தானும், மற்றவர்களும் "க்ருஷ்ணனின் தாய் யசோதையோ" என்று சந்தேகம் கொள்ளும்படியாக உள்ள யசோதையும் (தேவகி, ஸத்யவதி, யசோதை ஆகிய மூவரும் நம்மாழ்வாரின் தாய்க்கு ஈடாக மாட்டார்கள் என்று அடுத்து உரைக்கிறார்) …..

**வ்யாக்யானம்** – "நெடுங்காலமும் கண்ணன் நீண் மலர்ப்பாதம் பரவிப்பெற்ற" என்று ஸக்ருதாச்ரயண மமைந்திருக்க ஆதராதிசயத்தாலே சிரகாலம் ஆச்ரித சுலபனான க்ருஷ்ணன் திருவடிகளை யாச்ரயித்து இவளைப் பெற்றவளாகவும், "நங்கைமீர் நீருமோர் பெண் பெறறு நல்கினீர்" என்று தொடங்கி - பூர்ணைகளான நீங்களும் ஒரு பெண்பிள்ளை பெற்று வளர்த்திகோளிறே, பகவல்லாஞ்சநாதிகளை திவாராத்ர விபாகமற வாய்புலற்றா

நின்றுள்ள சபலையானவென் பெண்பிள்ளைபடியை எங்ஙனே சொல்லுவேனென்று வாசாமகோசரமான இவருடைய முக்தவசநாதிகளை அநுபவித்தவளாகவும் சொன்ன விவரைப் பெற்றவளுக்கு ஸத்ருசரன்றே யென்கை.

**விளக்கம்** – (நெடுங்காலமும்) – திருவிருத்தம் (37) – நெடுங்காலமும் கண்ணன் நீண் மலர்ப்பாதம் பரவிப்பெற்ற - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனைச் சரணம் புகுதல் என்பது ஒருமுறை செய்தால் மட்டுமே போதுமானதாக உள்ளபோதிலும், பக்தி காரணமாக நீண்ட காலம், அனைவருக்கும் எளிதில் அடையவல்லவனாகிய க்ருஷ்ணனின் திருவடிகளை அடைந்து, பராங்குசநாயகியான நம்மாழ்வாரைப் பெற்றவளாகவும்; (நங்கைமீ ரென்னுமவளுக்கு) - திருவாய்மொழி (4-2-9) – நங்கைமீர் நீருமோர் பெண் பெறறு நல்கினீர் – என்றுள்ள வரி தொடக்கமாக, “அனைத்தும் நிரம்பப் பெற்ற நீங்களும் ஒரு பெண்பிள்ளையைப் பெறறு வளர்க்கிறீர்கள்; ஆனால் எனது பெண் பிள்ளையையும் பாருங்கள்; ஸர்வேச்வரனுடைய சங்கு, சக்கரம் போன்றவற்றை பகல், இரவு என்றுள்ள கால மாறுபாடுகள் கூட அறியாமல் புலம்பியபடி உள்ள எனது பெண்பிள்ளையின் நிலையை நான் எவ்விதம் உரைப்பேன்”, என்று உரைப்பதற்கு இயலாதபடி நம்மாழ்வாருடைய திருவாயிலிருந்து வெளிவரும்படியான சொற்களை அனுபவித்தவளாகவும் உரைக்கப்படும் நம்மாழ்வாரைப் பெற்றெடுத்த தாயாருக்கு, (நேர் அன்றே) – ஒப்பாக மாட்டார்கள் அல்லவோ?

79. மீந நவநீதங்கள் கந்திக்குமிடமும் வெறிகொள் துழாய் கமழுமிடமும் தன்னிலொக்குமோ.

**அவதாரிகை** - இனி மூவருடையவும் உத்பத்தி ஸ்தல கந்த விசேஷங்களைப் பார்த்தால் மற்றயவை இரண்டிலும் இவருடைய உத்பத்தி ஸ்தலத்துக்குண்டான வைபவம் விலக்ஷண மென்னுமிடத்தை மூதலிக்கிறார் - (மீனேத்யாதியால்).

**விளக்கம்** - அடுத்து, வ்யாஸர், க்ருஷ்ணன் மற்றும் நம்மாழ்வார் ஆகிய மூவரும் அவதரித்த இடங்களுடைய வாசனை (மணம்) விசேஷங்களை நோக்கும்போது, மற்ற இருவர் அவதரித்த இடங்களைக் காட்டிலும், நம்மாழ்வார் அவதரித்த இடத்திற்கு உள்ள மேன்மை வேறுபட்டது என்பதை இந்தச் சூத்திரத்தில் புகழ்கிறார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, மீன்வெறி நாறுகிற வ்யாஸோத்பத்தி ஸ்தலமும், வெண்ணெய்முடை நாறுகிற க்ருஷ்ணோத்பத்தி ஸ்தலமும், "வெறிகொள் துழாய் மலர் நாறும் வினையுடையாட்டியேன் பெற்ற" என்றும், "இவளந் தண்டுழாய் கமழ்தல்" என்றும் பகவத் ஸம்பந்த ப்ரகாசகமான திருத்துழாய் மணம் நாறுகிற ஆழ்வாரவதரித்த ஸ்தலத்துக்கு ஸத்ருசமோவென்றபடி. ப்ராக்ருத விஷய ஸம்ஸர்க்கஜமான ஹேய கந்தங்களிறே அவை, அப்ராக்ருத விஷய ஸம்ஸர்க்கஜமான உபாதேய கந்தமிறே யிது. இத்தால் தாத்ருச ஸ்தலங்களிலுண்டான அவர்களுடைய உத்பத்தியில் ஈத்ருச ஸ்தலத்திலுண்டான விவருடைய உத்பத்தியினேற்றம் காட்டப்பட்டது.

**விளக்கம்** – (மீந நவநீதங்கள் கந்திக்குமிடமும்) - மீன்நாற்றம் வெளியேறுவதான வ்யாஸர் பிறந்த இடமும், வெண்ணெய்முடை நாறுகிற க்ருஷ்ணன் அவதரித்த இடமும். (வெறிகொள் துழாய் கமழுமிடமும்) – திருவாய்மொழி (4-4-3) – வெறிகொள் துழாய் மலர் நாறும் வினையுடையாட்டியேன் பெற்ற – என்றும், திருவாய்மொழி (8-9-10) - இவளந் தண்டுழாய் கமழ்தல் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடனான தொடர்பை பெற்றுள்ளதன் அறிகுறியான துளசிமணம் வீசுகின்ற நம்மாழ்வார் அவதரித்த இடத்திற்கு. (ஒக்குமோ) - ஒப்பாகுமோ. இந்த உலகியல் பொருள்களுடன் ஸம்பந்தம் அடைந்த காரணத்தால் தாழ்ந்த நாற்றங்கல் வீசும் இடங்கள் முந்தையது ஆகும். ஆனால் இந்த உலகியல் பொருள்களுடன் ஸம்பந்தம் இல்லாத வஸ்துவான ஸர்வேச்வரனுடைய சேர்க்கையால் ஏற்பட்டதான, அனைவரும் விரும்பவல்ல நறுமணம் அல்லவோ நம்மாழ்வார் அவதரித்த இடம் ஆகிறது! இதன் மூலம் அந்த இடங்களில் ஏற்பட்டதான அவர்களுடைய பிறவிகளைக் காட்டிலும், இந்த இடத்தில் ஏற்பட்டதான நம்மாழ்வாரின் பிறவி ஏற்றம் கூறப்பட்டது.

80. ஆற்றில் துறையில் ஊரிலுள்ள வைஷம்யம் வாசாமகோசரம்.

**அவதாரிகை** - இன்னமும் அவர்களுடைய உத்பத்தி ஸ்தலங்களுக்கும் இவருத்பத்தி ஸ்தலத்துக்குமுள்ள வைஷம்யாதிசயத்தைக் காட்டுகிறார் - (ஆற்றிலித்யாதியால்).

**விளக்கம்** - மேலும் அவர்கள் அவதரித்த இடங்களுக்கும், நம்மாழ்வார் அவதரித்த இடத்திற்கும் உள்ள வேறுபாட்டின் மிகுதியை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது வ்யாஸோத்பத்தி ஸ்தலம், ஆறுதானே அசிஷ்ட பரிக்ரஹமுடைய கங்கையாய், அத்துறை ஓடத்துறையாய், ஊர் வலைச்சேரியா யிருக்கும். க்ருஷ்ணோத்பத்தி ஸ்தலம், ஆறானது க்ருஷ்ண ஜலப்ரவாஹதயா தமோமயியான யமுனையாய், துறையும் அதில் காளிய விஷதூஷிதமான துறையாய், ஊர்தானே "அறிவொன்றுமில்லாத வாய்க்குலம்" என்கிறபடியே இடக்கை வலக்கை யறியாதார் வர்த்திக்கிற இடைச்சேரியா யிருக்கும்.

**விளக்கம்** - வ்யாஸர் அவதரித்த இடம் – அங்குள்ள ஆறானது சிவனுடைய ஸம்பந்தம் கொண்டதான கங்கையாக, அந்தத் துறையானது ஓடத்துறையாக, அந்த ஊரானது மீன் வலைகள் நிரம்பியதாக இருக்கும். க்ருஷ்ணன் அவதரித்த இடம் – அங்குள்ள ஆறானது கறுத்த நிறமுள்ள நீர் கொண்டுள்ளதால் தமோமயமான யமுனையாக, அதன் துறையானது காளியனின் விஷத்தால் நிரப்பப்பட்டதாக, அந்த ஊரானது திருப்பாவை (28) - அறிவொன்றுமில்லாத ஆய்க்குலம் - என்பதற்கு ஏற்ப எதனைச் செய்யவேண்டும் எதனை விடவேண்டும் என்று அறியாதவர்கள் நிரம்பியதாய் இருப்பதாகும்.

**வ்யாக்யானம்** - இவ்வாழ்வாருடைய உத்பத்தி ஸ்தலம், ஆறு "பவள நன் படர்க் கீழ்ச் சங்குறை பொருநல்" என்கிறபடியே விலக்ஷண பதார்த்தங்களுக்கு ஆகரமுமாய் வாஸ ஸ்தலமுமாய்க் கொண்டு அதிச்லாக்யமாயிருக்கும் தாம்ரபர்ணியாய், துறை சுத்த ஸ்வபாவமாய் அவதாதமாயிருக்கிற சங்கங்கள் வந்து சேருகிற திருச்சங்கணிதுறையாய், ஊர், "நல்லார் நவில் குருகூர்" என்கிறபடியே ஸகல ஸஜ்ஜந ச்லாகநீயமாய், "சயப் புகழார் பலர் வாழும் தடங் குருகூர்", "நல்லார் பலர் வாழ் குருகூர்" என்கிறபடியே ஸம்ஸாரத்தை ஜயித்த புகழையுடையராய் பகவதநுபவம் பணி வாழ்கிற ஜ்ஞாநாதிகரான விலக்ஷணர் பலரும் நிரந்தர வாஸம் பண்ணுகிற திருக்குருகூராயிருக்கும்.

**விளக்கம்** - ஆனால் நம்மாழ்வார் அவதரித்த இடம் - அங்குள்ள ஆறானது, திருவாய்மொழி (9-2-5) – பவள நன் படர்க் கீழ்ச் சங்குறை பொருநல் – என்பதற்கு ஏற்ப மேன்மையான பொருள்களுக்குப் பிறப்பிடமாகவும் வசிக்கும் இடமாகவும் உள்ளதால் மேன்மையாக உள்ள தாமிரபரணியாகவும்; துறையானது தூய்மையான தன்மை உடையதாயும், வெண்மையாயும் உள்ள சங்குகள் வந்து ஒதுங்குகின்ற திருச்சங்கணி துறையாகவும்; ஊரானது திருவிருத்தம் (100) – நல்லார் நவில் குருகூர் - என்பதற்கு ஏற்ப

அனைத்து ஸாதுக்களாலும் புகழ்ப்பட்டதாய், திருவாய்மொழி (3-1-11) - சயப் புகழார் பலர் வாழும் தடங் குருகூர் – என்றும், திருவாய்மொழி (10-8-11) – நல்லார் பலர் வாழ் குருகூர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸம்ஸாரத்தை வென்றதால் புகழ் கொண்டவர்களும், எப்போதும் பகவத் அனுபவம் உள்ளதன் காரணமாக பகவத் அனுபவம் நிறைந்தவர்களும் ஆகிய ஞானிகள் பலரும் எப்போதும் வசித்தபடி உள்ளதான திருக்குருகூர் ஆகும்.

**வ்யாக்யானம்** – ஆகையால், அந்தவாறுகளையும் துறைகளையும் ஊர்களையும் பற்ற இந்த ஆற்றுக்கும் துறைக்கும் ஊர்க்கும் உண்டான வைஷம்யம் பேச்சுக்கு அவிஷயமாயிருக்கு மென்கை. ஆக க்ருஷ்ண, க்ருஷ்ணத்வைபாயநோத்பத்தியிற் காட்டில் க்ருஷ்ண த்ருஷ்ண தத்வமான இவருத்பத்திக்கு ஏற்றத்துக்குடலாகக் கீழ் விலக்ஷிதமான வற்றை யடைய வெளியிட்டாராய்த்து.

**விளக்கம்** – ஆகவே, அவர்கள் அவதரித்த இடத்தில் உள்ள ஆறு, ஊர், துறை ஆகியவற்றை நோக்கும்போது, நம்மாழ்வார் அவதரித்த இடத்தில் உள்ள ஆறு, துறை, ஊர் ஆகியவற்றுக்கு உண்டான மேன்மையான வேறுபாடுகள் சொற்களால் கூறி முடிக்க இயலாதபடி இருக்கும். இப்படியாக க்ருஷ்ணன், க்ருஷ்ண த்வைப்பாயனர் (வ்யாஸர்) ஆகியவர்களுடைய பிறவிளைக் காட்டிலும், க்ருஷ்ணன் மீது கொண்ட பக்தி என்பதே வடிவமானது என்று கூறலாம்படி உள்ள நம்மாழ்வாரின் பிறவிக்கு உள்ள ஏற்றங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

81. தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள்போலே ப்ரஹ்ம ஜந்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டைநாளிற்பிறவி உண்ணாட்டுத் தேசிறே.

**அவதாரிகை** - எல்லாம் செய்தாலும் பூர்வவர்ணங்களில் பிறவிபோலே சதுர்த்தவர்ணத்தில் பிறவி தேஜஸ்கரமன்றே யென்ன, தாஸ்ய ரஸஜ்ஞர்க்கு இது தேஜஸ்கரமென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் - (தேவத்வமுமென்று தொடங்கி).

**விளக்கம்** - எவ்விதம் நோக்கினாலும், மற்ற மூன்று வர்ணங்களில் எடுக்கின்ற பிறவிகள் போன்று நான்காம் வர்ணத்தில் உள்ள பிறவி தேஜஸ்ஸுடன் கூடியதாக இருப்பதில்லையே என்னும் சந்தேகம் எழலாம். இதற்கு, "ஸர்வேச்வரனுக்கும், அவனுடைய அடியார்களுக்கும் அடிமையாக இருப்பதன் சுவையை அறிந்த


**Email:**sridharan_book@yahoo.co.in

உயர்ந்தவர்களுக்கு, இத்தகைய பிறவி தேஜஸ்ஸுடன் கூடியதாகவே இருக்கும்", என்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ராவணவதாநந்தரம் ப்ரஹ்மாதிகள் "பவாந் நாராயணோ தேவ:" என்றது அஸஹ்யமாய், "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்கையாலும், கோவர்த்தநோத்தரணாநந்தரம் அந்த அதிமாநுஷ சேஷ்டிதம் கண்டு ஆச்சரியப்பட்ட கோபர், "பால த்வஞ்சாதி வீர்யஞ்ச ஜந்ம சாஸ்மாஸ்வ சோபநம், சிந்த்ய மாநமமேயாத்மந் சங்காம் க்ருஷ்ண ப்ரயச்சதி, தேவோ வா தாநவோவா த்வம் யசோ கந்தர்வ ஏவ வா" என்று சங்கித்துச் சொல்ல, "க்ஷணம் பூத்வா த்வஸௌ தூஷ்ணீம் கிஞ்சித் ப்ரணய கோபவாந்" என்கிறபடியே அது அஸஹ்யமாமென்னுமிடம் தோன்றச் சிறிதுபோது வாய் திறவாமலிருந்து பின்னை, "நாஹம் தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ ந ச தாநவ: அஹம் வோ பாந்தவோ ஜாத: நைவ சிந்த்யமதோந்யதா" என்கையாலும், தேவர்க்கும் தேவனான தான் லோகரக்ஷணார்த்தமாக மநுஷ்ய ஸஜாதீயனா யவதரித்தவளவில் தேவனாகச் சொல்லுகையும் நிந்தையாம்படி புரையறப் பிறக்கும் சீலாதிகனான ஈச்வரனுக்கு, "ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:" என்கிறபடியே, "பல பிறப்பாயொளி வரு முழுநலம்" என்று தாழவிழிந்ததனையும் கல்யாண குணங்கள் ஒளி பெற்று வரும் ஜந்மங்கள் போலே,

**விளக்கம் –** (தேவத்வமும் நிந்தையானவனுக்கு) - இராவணனை வதைத்த பின்னர் நான்முகன் உள்ளிட்ட பலரும் இராமாயணம் யுத்தகாண்டம் (120-13) - பவாந் நாராயணோ தேவ: - நீயே நாராயணன் என்ற தெய்வம் ஆவாய் - என்று இராமனைப் புகழ்ந்தார்கள். அப்போது இராமன், இராமாயணம் யுத்தகாண்டம் (120-13) - ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம் - என்னை நான் மனிதனாகவும், இராமன் என்ற பெயர் உள்ளவனாகவும், தசரதனின் புத்திரனாகவும் மட்டுமே எண்ணுகிறேன் - என்றான். கோவர்த்தன பர்வதத்தை க்ருஷ்ணன் தனது திருக்கரத்தால் உயர்த்திப் பிடித்த பின்னர், மனிதனால் செய்ய இயலாத இந்தச் செயலைக் கண்டு வியந்த இடையர்கள், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-7) – பால த்வஞ்சாதி வீர்யஞ்ச ஜந்ம சாஸ்மாஸ்வ சோபநம், சிந்த்ய மாநமமேயாத்மந் சங்காம் க்ருஷ்ண ப்ரயச்சதி, தேவோ வா தாநவோவா த்வம் யசோ கந்தர்வ ஏவ வா – இளமை, மிகுந்த வீர்யம், இங்கு வந்த பிறவி ஆகியவற்றை ஆராயும்போது இவன் தேவர்களுக்கும் தேவனா, கந்தர்வனா, யக்ஷனா என்ற சந்தேகம்

ஏற்படுகிறது – என்று ஐயத்துடன் கூறினார்கள். இதனைக் கேட்டபோது, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-9) - க்ஷணம் பூத்வா த்வஸௌ தூஷ்ணீம் கிஞ்சித் ப்ரணய கோபவாந் – க்ருஷ்ணன் சில நொடிகள் பொய்யான கோபம் கொண்டவனாக வாய் மூடி நின்றான் - என்பதற்கு ஏற்ப அவர்கள் உரைத்ததைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் சிறிது நேரம் வாயை மூடி நின்றான். பின்னர் அவர்களிடம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-12) – நாஹம் தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ ந ச தாநவ: அஹம் வோ பாந்தவோ ஜாத: நைவ சிந்த்யமதோந்யதா – நான் தேவன் அல்லன், கந்தர்வன் அல்லன், யக்ஷன் அல்லன், அஸுரன் அல்லன்; உங்களுடைய பந்துவாக அவதரித்த என்னை வேறுவிதமாக எண்ண வேண்டாம் – என்றான். இவ்விதம் இராமனும், க்ருஷ்ணனும் கூறியதால், தேவர்களுக்கும் தேவனாக உள்ள தான், இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்காக, மனிதனாக அவதரித்தபோது, தன்னைத் தேவனாக உரைத்தல் என்பதையே இழிந்து உரைப்பதாக எண்ணுகிறான். இவ்விதம் தடை இன்றி வெளிப்படும் சீலகுணம் பொருந்தியுள்ள ஸர்வேச்வரனுக்கு, (ஒளிவரும் ஜநிகள் போலே) – யஜுர் வேதம் – ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந: – இந்தப் பரமாத்மா அவதரித்ததால் ஒளி பொருந்தியன் ஆகிறான் - என்றும், திருவாய்மொழி (1-3-2) – பல பிறப்பாயொளி வரு முழுநலம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தாழ்வாக உள்ள அவதாரங்கள் அனைத்திலும் அவனுடைய திருக்கல்யாணகுணங்கள் மிகுந்த ப்ரகாசத்துடன் வெளிப்படுவது போன்று …

**வ்யாக்யானம்** – “மா ஸ்ம பூதபி மே ஜந்ம சதுர்முகமாத்மநா” என்று ப்ராஹ்மண்யத்துக்கு எல்லைநிலமான ப்ரஹ்மாவாய்ப் பிறக்கையும் சேஷத்வ விரோதியான அஹங்கார ஹேதுவாகையாலே ஆத்மாவுக்கு அவத்யமென்று இகழும்படி தாஸ்ய ரஸமறிந்தார்க்கு “பண்டை நாள்” என்கிற திருவாய்மொழியில் “பல்படிகால் குடிகுடி வழிவந்தாட் செய்யும் தொண்டர்”, “உன் பொன்னடிக் கடவாதே வழிவருகின்றவடியர்”, “தொல்லடிமை வழிவரும் தொண்டர்” என்று சொன்னபடியே தாஸ்ய விரோதியான ஜந்மாத் யபிமாந மின்றிக்கே கைங்கர்யாநுரூபமான குடிப்பிறவி, “ஆழியங்கைப் பேராயற்காளாம் பிறப்பு – உண்ணாட்டுத் தேசன்றே” என்கிறபடியே பகவத் விமுக ப்ரசுரமாகையாலே புறநாடான லீலாவிபூதி போலன்றிக்கே பகவதாநுகூல்யைக போகரஸத்திலே நெருங்கி போக விபூதியாய் அவனுக்கந்தரங்கமாயிருக்கிற பரமபதத்தில் வர்த்திக்கிற தேஜஸ்ஸை யுடைத்திறே யென்கை. பரமபதத்தில் பகவத் கைங்கர்யாநுகுணமாகப் பரிக்ரஹிக்கும் தேஹத்தோபாதி சேஷவஸ்துவான ஆத்மாவுக்கு இதுவே தேஜஸ்கரமென்று கருத்து.

**விளக்கம்** - (ப்ரஹ்ம ஜந்மமும் இழுக்கு என்பார்க்கு) - ஸ்தோத்ரரத்னம் (55) - மா ஸ்ம பூதபி மே ஜந்ம சதுர்முகமாத்மாநா – எனக்கு நான்முகனாக உள்ள பிறவி வேண்டாம் – என்பதற்கு ஏற்ப, அந்தணப்பிறவிக்கு எல்லையாக உள்ள நான்முகனாகப் பிறத்தல் என்பது, அடிமைத்தனத்தின் விரோதியாக உள்ள அஹங்காரம் ஏற்படக் காரணம் ஆகிவிடும் என்பதால், அந்தப் பிறவியைக் கூட இகழும்படியாக, ஸர்வேச்வரனுடைய அடிமையாக இருத்தலின் சுவையை அறிந்தவர்களுக்கு. (பண்டைநாளிற் பிறவி) - திருவாய்மொழி (9-2) – பண்டை நாள் - என்கிற திருவாய்மொழியில், (9-2-1) – பல்படிகால் குடிகுடி வழிவந்தாட் செய்யும் தொண்டர் – என்றும், (9-2-2-) – உன் பொன்னடிக் கடவாதே வழிவருகின்றவடியர் – என்றும், (9-2-3) - தொல்லடிமை வழிவரும் தொண்டர் – என்றும் அருளிச்செய்தபடி, அடிமைத்தனத்திற்கு விரோதியாக உள்ளதான “நான் இந்தக் குலத்தில் பிறந்தேன்” என்று, பிறவி போன்றவை மூலம் ஏற்படும் கர்வம் இல்லாமல் கைங்கர்யம் செய்வதற்கு ஏற்றதான குலப்பிறவியானது. (உண்ணாட்டுத் தேசிறே) – பெரியதிருவந்தாதி (79) – ஆழியங்கைப் பேராயற்காளாம் பிறப்பு … உண்ணாட்டுத் தேசன்றே – என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனைக் குறித்து எந்தவிதமான விருப்பமும் இல்லாதவர்கள் உலகில் அதிகமாக உள்ளதால், இந்த உலகம் போன்று அல்லாமல், ஸர்வேச்வரனுக்கு ஏற்றவனாக இருத்தல் என்னும் இன்பத்தின் சுவையில் நிலை நின்று, ஆனந்தம் அளிக்கவல்ல இடமாகவும், அவனுக்கு அந்தரங்கமாகவும் உள்ள பரமபதத்தில் வசிக்கின்ற, இந்த உலகின் ஸம்பந்தம் இல்லாத சரீரம் போன்று தேஜஸ் நிறைந்தது ஆகும். பரமபதத்தில் ஸர்வேச்வரனுடைய கைங்கர்யத்திற்கு ஏற்றவிதமாக ஒரு சரீரத்தை அடைவது போன்று, அடிமையாக உள்ள ஆத்மாவுக்கு ஏற்றதான ஒளியை இந்தச் சரீரமும் அளிக்கிறது என்று கருத்து.

82. ஜனக தசரத வஸுதேவ குலங்களுக்கு மூத்தபெண்ணும் நடுவிற்பிள்ளையும் கடைக்குட்டியும் போலே இவரும் பிறந்து புகழுமாக்கமுமாக்கி அஞ்சிறையுமறுத்தார்.

**அவதாரிகை** - இனி இவரவதாரத்தின் பரோபகாரகத்வத்தை ஸநிதர்சநமாக வருளிச் செய்கிறார் - (ஜநகேத்யாதியால்).

**விளக்கம்** – அடுத்து நம்மாழ்வாருடைய அவதாரத்தின் வள்ளல்தன்மைகளை எடுத்துக்காட்டுகளுடன் இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஜநக குலத்துக்கு மூத்த பெண்ணான பிராட்டி பிறந்து, "ஜநகாநாம் குலே கீர்த்திமாஹரிஷ்யதி மே ஸுதா, ஸீதா பர்த்தாரமாஸாத்ய ராமம் தசரதாத்மஜம்" என்கிறபடியே தான் பிறந்த குலத்துக்குக் கீர்த்தி யுண்டாக்கினாப் போலேயும்,

**விளக்கம்** – (ஜனக குலங்களுக்கு மூத்தபெண்ணும் பிறந்து புகழும் ஆக்கி) – ஜனகனின் குலத்துக்கு மூத்த பெண்ணாகப் பிறந்து, இராமாயணம் பாலகாண்டம் (67-21) – ஜநகாநாம் குலே கீர்த்திமாஹரிஷ்யதி மே ஸுதா, ஸீதா பர்த்தாரமாஸாத்ய ராமம் தசரதாத்மஜம் - எனது புத்திரியான இவள், தசரதனின் புத்திரனாகிய இராமனைக் கணவனாக அடைந்து, ஜனக குலத்துக்குப் பெருமை ஏற்படுத்த உள்ளாள் - என்று கூறுவதற்கு ஏற்ப, சீதையானவள் தான் அவதரித்த குலத்துக்கு மிகுந்த கீர்த்தி ஏற்படுத்தியது போன்றும்,

**வ்யாக்யானம்** – தசரத குலத்துக்கு நடுவில்பிள்ளையான ஸ்ரீபரதாழ்வான் பிறந்து, "ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹ அர்ஹஸி, கதம் தசரதாஜ்ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக:" இத்யாதியாலே மூத்தாரிருக்க இளையார் முடிசூடக்கடவரன்றென்கிற குலமர்யாதையை நடத்தின வளவன்றிக்கே, "ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் புவி" என்றும், "பங்கதிக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்றும் சொல்லுகிறபடியே ஜ்யேஷ்டரான பெருமாளுடைய விச்லேஷத்தில் சடை புனைந்து வற்கலை யுடுத்துக் கண்ணநீரா லுண்டான சேற்றிலே தரைக்கிடை கிடந்து, குலத்துக்கு முன்பில்லாத வேற்றங்ளை யுண்டாக்கினாப்போலவும்,

**விளக்கம்** - (தசரத குலங்களுக்கு நடுவிற்பிள்ளையும் பிறந்து ஆக்கமும் ஆக்கி) - தசரதனின் குலத்தில் நடுவில்பிள்ளையாகப் பரதன் பிறந்து, இராமாயணம் அயோத்யாகாண்டம் (82-12) – ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹ அர்ஹஸி, கதம் தசரதாஜ்ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக: - [தன்னை முடிசூட்டிக் கொள்ளும்படி தான் பணிக்கப்பட்டபோது, பரதன் அரசவையில் உள்ளவர்களை நோக்கி உரைக்கிறான்] ராஜ்யமும் நானும் இராமனின் செல்வங்கள், இந்த விஷயத்தில் நீவிர் தர்மத்தை உரைக்கவேண்டும், தசரதனின் புத்திரனாகப் பிறந்த ஒருவன் மற்றவர்களின் ராஜ்யத்தை எவ்விதம் அபகரிப்பான் - என்பதற்கு ஏற்ப, மூத்தவர்கள் உள்ளபோது இளையவர்கள்

முடிசூடிக் கொள்ளக்கூடாது என்ற குல மரியாதையை உரைத்தது மட்டும் அல்லாமல், இராமாயணம் அயோத்யாகண்டம் (100-1) - ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் புவி - சடைமுடியுடன் கூடியவனும், மரவுரி தரித்தவனும், கைகள் குவித்து வணங்கியபடி பூமியில் கட்டை போன்று விழுந்தவனும் ஆகிய பரதனை இராமன் பார்த்தான் - என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (127-5) – பங்கதிக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே - பரதன் சடைமுடியுடன் கூடியவனாக தனது அழுக்கடைந்த உடலுடன் உன்னுடைய வரவை எதிர்நோக்கியபடி உள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தனது மூத்த சகோதரனாகிய இராமனின் பிரிவு காரணமாகச் சடைமுடியுடன் மரவுரி தரித்து தனது கண்களிலிருந்து பெருகும் கண்ணீரால் ஏற்பட்ட சேற்றில் கிடந்தபடி, தசரதனின் குலத்துக்கு இதுவரை இல்லாத ஏற்றத்தைப் பரதன் உண்டாக்கியது போன்றும்.

**வ்யாக்யானம்** - வஸுதேவ குலத்துக்கு "மக்களறுவரைக் கல்லிடை மோதவிழந்தவள் தன் வயிற்றில் சிக்கன வந்து பிறந்து நின்றாய்" என்கிறபடியே கடைக்குட்டியான க்ருஷ்ணன் பிறந்து, "தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ" என்கிறபடியே தங்களால் விடுவித்துக் கொள்ளவொண்ணாத மாதாபிதாக்கள் கால்கட்டை யறுத்தாப்போலவும்,

**விளக்கம்** – (வஸுதேவ குலங்களுக்கு கடைக்குட்டியும் பிறந்து அஞ்சிறையும் அறுத்து) வஸுதேவ குலத்திற்கு, பெரியாழ்வார் திருமொழி (5-3-1) – மக்களறுவரைக் கல்லிடை மோதவிழந்தவள் தன் வயிற்றில் சிக்கன வந்து பிறந்து நின்றாய் - என்பதற்கு ஏற்ப கடைப்பிள்ளையாக க்ருஷ்ணன் அவதரித்து, பெரியதிருமொழி (7-5-1) – தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ – என்பத்ற்கு ஏற்ப தங்களால் விடுவித்துக்கொள்ள இயலாத தனது தாய்தந்தையரின் கைகால் விலக்குகளை அறுத்தது போன்றும்.

**வ்யாக்யானம்** - இவரும் திருவவதரித்து, "மலிபுகழ் வண்குருகூர்" என்னும்படி தாம் பிறந்த வூருக்குப் புகழுண்டாக்கி, "குடிக்கிடந்தாக்கம் செய்து" என்கிறபடியே சேஷத்வ குலமர்யாதை தப்பாதபடி நின்ற மாத்ரமன்றிக்கே சேஷி விரஹ க்லேசாதிசயத்தாலே "காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து", "கண்ணநீர் கைகளாலிறைத்து", "இட்டகா லிட்டகை" யாம்படி நிச்சேஷ்டராய், தரைக்கிடை கிடந்த ப்ரேம விசேஷத்தாலே இக்குடிக்குப் பண்டில்லாத வேற்றத்தையுமுண்டாக்கி, "அறுவர் தம் பிறவி யஞ்சிறையே" என்கிறபடியே தம்முடைய ப்ரபந்தாப்யாஸ முகத்தாலே தம்மோடந்விதரான

இவர்களுடைய ஸம்ஸாரமாகிற அறவைச் சிறையையுமறுத்தாரென்கை. த்ருஷ்டாந்தபூதரான மூவர் செய்ததும் ஒருத்தரே செய்கையாலும், இத்தனையும் ஸ்வரூபாநுகூலமாகச் செய்கையாலும் இவர் பிறப்பிறே மிகவும் பரோபகாரகமாய்த்து.

**விளக்கம்** - (இவரும் பிறந்து புகழும் ஆக்கமும் ஆக்கி அஞ்சிறையும் அறுத்தார்) – அவர்களைப் போன்றே நம்மாழ்வரும் இந்த உலகில் அவதரித்து, திருவாய்மொழி (4-2-11) – மலிபுகழ் வண்குருகூர் - என்பதற்கு ஏற்ப, தான் அவதரித்த ஊருக்குப் புகழை ஏற்படுத்தினார். திருவாய்மொழி (9-2-2) - குடிக்கிடந்தாக்கம் செய்து – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாக உள்ள தன்மை என்ற தனது குலப்பெருமை தவறாதபடி நின்றார். அத்துடன் நில்லாமல், ஸர்வேச்வரன் என்ற தலைவனைப் பிரிந்து ஏற்படும் துன்பம் காரணமாக, திருவாய்மொழி (8-5-2) - காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து - என்றும், திருவாய்மொழி (7-2-1) - கண்ணநீர் கைகளாலிறைத்து - என்றும், திருவாய்மொழி (7-2-4) - இட்டகால் இட்டகை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, என்ன செய்வது என்று அறியாதவராகத் தரையில் கிடந்து இவருடைய குலத்திற்கு இதுவரை இல்லாத ஏற்றத்தை உண்டாக்கினார். திருவாய்மொழி (1-3-11) – அறுவர் தம் பிறவி யஞ்சிறையே - என்பதற்கு ஏற்ப, தம்முடைய ப்ரபந்தங்களைக் கற்பதன் மூலம் தன்னுடன் ஸம்பந்தம் கொண்ட அனைவரது பிறவி என்னும் சிறையை அறுத்தார். இங்கு உபமானமாகக் கூறப்பட்ட மூவரின் செயல்களை, நம்மாழ்வார் ஒருவர் மட்டுமே செய்ததாலும், இவற்றைத் தனது ஆத்மஸ்வரூபத்துற்கு எந்தவிதமான விரோதமும் இன்றிச் செய்ததாலும், இவருடைய அவதாரம் மிகவும் வள்ளல்தன்மை மிக்கதாகிறது அல்லவோ?

83. ஆதித்ய ராமதிவாகரராச்யுதபாநுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவிக்கடல் வற்றி விகஸியாத போதில் கமல மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே.

**அவதாரிகை** - இன்னமும் இவருடைய அவதாரத்தாலே லோகத்துக்குண்டான நன்மைகளை யருளிச்செய்கிறார் (ஆதித்யேத்யாதியால்).

**விளக்கம்** – அடுத்து நம்மாழ்வாருடைய அவதாரத்தால் இந்த உலகிற்கு ஏற்பட்ட நன்மைகளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது” என்னும்படி பாஹ்யாந்தகாரத்தைப் போக்கிக் கொண்டு உதிக்குமாதித்யனுக்குப் போகாத உள்ளிருளான அஜ்ஞாநாந்தகாரம், “தமோ பாஹ்யம் விநச்யேத்து பாவகாதித்ய ஸந்நிதௌ பாஹ்யமாப்யந்தரஞ்சைவ விஷ்ணுபக்தார்க்க ஸந்நிதௌ” என்கிறபடியே நீங்கி, “சரஜாலாம்சுமாந் சூர: கபே! ராம திவாகர:, சத்ரு ரக்ஷோமயம் தோயமுபதோஷம் நயிஷ்யதி” என்கிறபடியே சரஜாலங்களாகிற கிரணங்களையுடையனாய்க் கொண்டு சத்ரு ராக்ஷஸராகிற ஸமுத்ரத்தை வற்றப் பண்ணின ராம திவாகரனுக்கு வற்றாத “பிறவியென்னும் கடல்” என்கிற ஸம்ஸார ஸமுத்ரம் வற்றி, “ததோகில ஜகத்பதம் போதாயாச்யுத பாநுநா, தேவகீ பூர்வ ஸந்த்யாயா மாவிர்ப்பூதம் மஹாத்மநா” என்று ஜகத்பத்மம் விகஸிதமாம்படி தேவகியாகிற பூர்வ ஸந்த்யையிலே ஆவிர்ப்பவித்த அச்யுதபாநுவான க்ருஷ்ணனுக்கு விகஸியாத “போதில் கமல வன்னெஞ்சம்” என்கிற ஹ்ருத்பத்மம் விகஸிதமாய்த்து,

**விளக்கம்** – (ஆதித்யனுக்கு போகாத உள்ளிருள் நீங்கி) – திருப்பள்ளியெழுச்சி (1) – கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் கனவிரு ளகன்றது – என்பதற்கு ஏற்ப உலகின் புற இருளை நீக்கியபடி உதிக்கும் சூரியனால் நீங்காதபடி உள்ளதாகிற அறிவின்மையானது, தமோ பாஹ்யம் விநச்யேத் து பாவகாதித்ய ஸந்நிதௌம் பாஹ்யமாப்யந்தரஞ்சைவ விஷ்ணுபக்தார்க்க ஸந்நிதௌ - அக்னி, சூரியன் ஆகியவர்கள் முன்பாக ஒருவனின் புற இருள் அழிந்துவிடும்; மஹாவிஷ்ணுவின் பக்தன் என்ற சூரியன் முன்னிலையில் மட்டுமே அக இருளும் அழியும் - என்பதற்கு ஏற்ப நீங்கி, (ராம திவாகரனுக்கு சோஷியாத பிறவிக்கடல் வற்றி) - இராமாயணம் ஸுந்தரகாண்டம் (37-16) – சரஜாலாம்சுமாந் சூர: கபே! ராம திவாகர:, சத்ரு ரக்ஷோமயம் தோயமுபதோஷம் நயிஷ்யதி - அனுமனே! அம்புகள் என்ற கதிர்கள் கொண்டவனாகிய இராமன் என்ற சூரியன், அரக்கர்கள் என்ற ஸமுத்திரத்தை வற்றச் செய்பவனாக உள்ளான் – என்பதற்கு ஏற்ப அம்புகள் என்ற கதிர்கள் கொண்டு விரோதிகளான ராக்ஷஸர்கள் கூட்டம் என்னும் ஸமுத்திரத்தை வற்றச் செய்யவல்ல இராமனால் வற்றாத, பெரியாழ்வார் திருமொழி (5-4-2) - பிறவியென்னும் கடல் - என்பதற்கு ஏற்ப உள்ளதான ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரம் வற்றி. (அச்யுதபாநுவுக்கு விகஸியாத போதில் கமலம் மலர்ந்தது) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-2) - ததோகில ஜகத்பதம் போதாயாச்யுத பாநுநா, தேவகீ பூர்வ ஸந்த்யாயா மாவிர்ப்பூதம் மஹாத்மநா - தாமரை போன்றுள்ளதான அனைத்து உலகங்களையும் மலரச்

செய்வதற்காக, தேவகி என்னும் கிழக்குத்திசையில், மிகவும் ப்ரகாசமான ஒளியுள்ள க்ருஷ்ணன் என்ற சூரியன் அவதரித்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, உலகம் என்ற தாமரை மலரும்படியாக, தேவகி என்ற கிழக்குத்திசையில் வெளிப்பட்ட க்ருஷ்ணனால் மலராத, பெரியாழ்வார் திருமொழி (5-2-8) – போதில் கமல வன்னெஞ்சம் – என்பதற்கு ஏற்ப உள்ளதான மனம் என்ற தாமரை மலர்ந்தது...(இது போன்ற மூன்று செயல்கள் எப்போது நடைபெற்றது என்றால், நம்மாழ்வார் என்னும் சூரியன் உதித்தபோது ஆகும் என்று அடுத்து அருளிச் செய்கிறார்).

**வ்யாக்யானம்** – "யத்கோ ஸஹஸ்ரம் அபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோ வஸதி யத்ர ஸசங்க சக்ர:, யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ராஸ் தஸ்மை நமோ வகுள பூஷண பாஸ்கராய" எனறு திருவாய்மொழி யாயிரமுமாகிற கிரணங்களையுடையராய், மஹிஷீ பூஷணாயுத விசிஷ்டனான நாராயணனை "கண்கள் சிவந்த"படியே உள்ளேயுடையராய், வேதவித்துக்களான ஸர்வசிஷ்டர்களும் கேட்டபோதே தாமிருந்த தேசத்தை நோக்கி வணங்கும்படியான வைபவத்தையுடையராய் வகுளாபரணரா யிருக்கிற ஆழ்வாராகிற பாஸ்கரனுடைய உதயத்திலேயென்கை. ஆதித்ய திவாகர பாநு சப்தங்களா லன்றிக்கே பாஸ்கர சப்தத்தாலே இவரைச் சொல்லுகையாலே "ஊரும் நாடும்" இத்யாதிப்படியே ஸ்வஸம்பந்தமுடையா ரெல்லார்க்கும் ப்ரகாசத்தைப் பண்ணுமவரென்று தோற்றுகிறது.

**விளக்கம்** - (வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே) – [சூர்யனால் போகாத அக இருள், இராம பாணத்தால் வற்றாத ஸம்ஸாரக்கடல், க்ருஷ்ணன் என்ற சூரியனால் மலராத மனம் என்ற தாமரை, நம்மாழ்வாருடைய அவதாரத்தால் ஏற்பட்டது என்கிறார்]. பராங்குசாஷ்டகம் - யத்கோ ஸஹஸ்ரம் அபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோ வஸதி யத்ர ஸசங்க சக்ர:, யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ராஸ் தஸ்மை நமோ வகுள பூஷண பாஸ்கராய - யார் ஒருவருடைய திருவாய்மொழி என்ற ஆயிரம் பாசுர வடிவில் உள்ளதான கதிர்கள் மூலம் மனிதர்களுடைய அறியாமை என்ற இருள் நீங்குகிறதோ, சங்கும் சக்கரமும் தரித்தபடி உள்ள ஸ்ரீமந்நாராயணன் யாரிடம் வசிக்கிறானோ, அந்தத் திருவாய்மொழியைக் கேட்கும் காதுகளைக் கொண்ட எந்த இடத்தை அந்தணர்கள் வணங்குகிறார்களோ, அப்படிப்பட்ட நம்மாழ்வாராகிய சூரியனுக்கு நமஸ்காரம் - என்று கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழிப் பாசுரங்கள் என்ற

ஆயிரம் கதிர்கள் கொண்டவராக, பெரியபிராட்டி மற்றும் திவ்யமான பல ஆபரண ஆயுதங்களுடன் கூடியுள்ள ஸ்ரீமந்நாராயணனைத் திருவாய்மொழி (8-8-1) - கண்கள் சிவந்து - என்பதற்கு ஏற்ப தனது உள்ளத்தில் கொண்டவராக, வேதவித்துக்களான அந்தணர்கள் அனைவராலும் திருவாய்மொழியின் ஓசையைக் கேட்ட உடனேயே தானிருக்கும் திசை நோக்கி வணங்கும்படி உள்ளவராக இருக்கின்ற நம்மாழ்வார் என்ற சூரியன் உதித்ததால் உண்டானது. இங்கு ஆதித்யன், திவாகரன், பானு என்ற பதங்களை விடுத்து நம்மாழ்வாரை "பாஸ்கர" என்ற பதம் கொண்டு கூறுவது காண்க. இது ஏன் என்றால், திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடும் - என்ற பாசுரத்தில் கூறியதற்கு ஏற்ப தன்னுடன் ஸம்பந்தம் கொண்டவர்கள் அனைவருக்கும் இவர் ஒளியை ஏற்படுத்துவார் என்பதை உணர்த்தவே ஆகும்.

84. வம்சபூமிகளை யுத்தரிக்கக் கீழ்க்குலம் புக்க வராஹ கோபாலரைப் போலே இவரும் நிமக்நரை யுயர்த்தத் தாழ விழிந்தார்.

**அவதாரிகை** - இப்படி பரோபகார ஜன்மரானவிவர் வர்ண த்ரயத்தி லொன்றிலே அவதரியாதே சதுர்த்த வர்ணத்திலே தாழவிழிவானென் னென்ன, அதுவும் பரரக்ஷணார்த்தமாகவே யென்கிறார் - (வம்சேத்யாதியால்).

**விளக்கம்** - இவ்விதம் மற்றவர்களுக்காக அவதரித்த நம்மாழ்வார், முதல் மூன்று வர்ணங்களில் அவதரிக்காமல், நான்காம் வர்ணத்தில் ஏன் அவதரித்தார் என்ற கேள்வி எழலாம். இதற்கு, "அவ்விதம் அவதரித்ததும், மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காகவே ஆகும்", என்று விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "யயாதி சாபாத் வம்சோயம் ராஜ்யாநர்ஹோ ஹி ஸாம்ப்ரதம்" என்கிறபடியே யயாதி சாபத்தாலே ராஜ்யார்ஹமல்லாதபடி நிஹீநமான யதுவம்சத்தை, "அயம் ஸ கத்த்யதே ப்ராஜ்ஞை: புராணார்த்த விசாரதை: கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி" என்கிறபடியே உத்தரிக்கைக்காக, "அங்கோராய்க் குலம் புக்கதும்" என்கிறபடியே கோகுலத்திலே உள்புக்கு கோபாலனான க்ருஷ்ணனைப் போலவும்; ஹிரண்யாக்ஷ பலத்தாலே நிலைகுலைந்து ப்ரளயங்கதையான பூமியை, "உத்த்ருதாஸி வராஹேண" என்றும், "நமஸ்தஸ்மை வராஹாய லீலயோத்தரதே மஹீம்" என்றும்


Email:sridharan_book@yahoo.co.in

சொல்லுகிறபடியே உத்தரிக்கைக்காக, "கேழலாய்க் கீழ்புக்கு" என்கிறபடியே பாதாளத்திலே தாழவிழிந்த வராஹரூபியைப் போலவும்,

**விளக்கம்** - (வம்சத்தை உத்தரிக்கக் கீழ்க்குலம் புக்க கோபாலரைப் போலே) ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-21-12) – யயாதி சாபாத் வம்சோயம் ராஜ்யாநர்ஹோ ஹி ஸாம்ப்ரதம் – இந்தக் குலமானது யயாதியின் சாபம் காரணமாக அரசாளத் தகுதி அற்றது என்பதற்கு ஏற்ப அரசனாகும் தகுதிகளை இழந்து தாழ்ந்து நின்ற யது வம்சத்தை, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-20-49) - அயம் ஸ கத்யதே ப்ராஜ்ஞை: புராணார்த்த விசாரதை: கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி – இந்த க்ருஷ்ணன் தாழ்வில் மூழ்கிக் கிடக்கும் யயாதியின் யதுகுலத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரப்போகிறான் என்று புராணங்களின் ஆழ்பொருளை உணர்ந்தவர்களால் கூறப்படுகிறது - என்று கூறுவதற்கு ஏற்ப உயர்த்துவதற்காக, திருவாய்மொழி (6-4-5) - அங்கோராய்க் குலம் புக்கதும் – என்பதற்கு ஏற்ப இடையர்கள் குலத்தில் புகுந்து அவதரித்த கோபாலனாகிய க்ருஷ்ணனைப் போன்றும். (பூமியை உத்தரிக்கக் கீழ்ப்புக்க வராஹனைப் போலே) - ஹிரண்யாக்ஷனின் வரபலம் காரணமாக நிலை குலைந்து ப்ரளய நீரில் ஆழ்ந்து போன பூமியை, தைத்திரீயம் – உத்த்ருதாஸி வராஹேண - வராஹனால் உயர்த்தப்பட்டாய் - என்றும், வராஹபுராணம் - நமஸ்தஸ்மை வராஹாய லீலயோத்தரதே மஹீம் - ஒரு லீலையாகவே எளிதாக பூமியை மீட்டு எடுத்த வராஹனுக்கு நமஸ்காரம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உயர்ந்துவதற்காக, திருவாய்மொழி (2-8-7) – கேழலாய்க் கீழ்புக்கு - என்று கூறுவதற்கு ஏற்ப பாதாளத்தில் தாழ்ந்து நின்று வராஹரூபம்எடுத்தவன் போன்றும்.

**வ்யாக்யானம்** – குலந்தாங்கு மபிமாநத்தாலே ஸம்ஸாரத்தில் நிமக்நரானவர்களை அந்நிலையில் நின்றும் பேதித்து "அபிமானதுங்கன்" என்னுமுயர்த்தியை யுடையராக்குகைக்காக அஹங்கார ஹேதுவான வர்ணங்கள் அநர்த்தகரமென்று தோற்றும்படி தத் ரஹிதமான சதுர்த்த வர்ணத்திலே தாழவிழிந்தாரென்கை. இத்தால், நாம் உத்க்ருஷ்டமாக நினைத்திருக்கும் வர்ணங்களை ஹேயமென்றுவிட்டு நிக்ருஷ்ட வர்ணத்திலே தாழ விழிந்தாரென்று தாய்த்து. ஆக, "வீட்டின்பம்" என்று தொடங்கி, இவ்வளவும் மந்தமதிகளுடைய சங்கா நிராகரணார்த்தமாக ஆழ்வாருடைய உத்பத்தி நிரூபணத்திலே வரும் ப்ரத்யவாயமும், வ்யாஸாதிகளைப் பற்றி இவரவதார


**Email:**sridharan_book@yahoo.co.in

வைலக்ஷண்யமும், அவதாரம் பரார்த்தமென்னுமிடமும், மஹாப்ரபாவரானவிவர் தாழவவதரிக்கைக்கு நிதானமு மருளிச்செய்தாராய் நின்றார்.

**விளக்கம்** – (இவரும் நிமக்நரை உயர்த்தத் தாழ இழிந்தார்) - தங்களுடைய குலத்தை தாங்கள்தான் தாங்கி நிற்பது போன்று கர்வம் காரணமாக ஸம்ஸாரத்தில் தாழ்ந்து நிற்பவர்களை, அப்படிப்பட்ட நிலையிலிருந்து அவர்களை மாற்றி, திருப்பால்லாண்டு (11) – அபிமானதுங்கன் – என்பதற்கு ஏற்ப உயர்ந்தவர்களாக ஆக்குவதற்காகவும், அஹங்காரத்திற்குக் காரணமாக உள்ள மூன்று வர்ணங்கள் கேட்டினை ஏற்படுத்துபவை என்பது வெளிப்படும்படியாகவும், அப்படிப்பட்ட அஹங்காரம் அற்றதான நான்காம் வர்ணத்தில் அவதரித்தார் என்று கருத்து. ஆக தாங்கள் உயர்ந்தவர்கள் என்றுள்ள கர்வம் காரணமாக ஸம்ஸாரத்தில் மேன்மேலும் உழன்றபடி உள்ளவர்கள், அத்தகைய உயர்பிறப்பு என்று கூறப்படுகின்ற பிறவியானது, அஹங்காரம் முதலானவற்றுக் காரணமாக உள்ளதால் தாழ்ந்தது என்று உணர்ந்து, அந்தக் கர்வம் நீங்கிக் க கரையேறுவதற்காக, அவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணிக் கொள்வதற்குக் காரணமாக உள்ள அந்த மூன்று வர்ணங்களை விடுத்து, தாழ்ந்தது என்று சிந்திக்கப்படும் நான்காம் வர்ணத்தில் தன்னைத் தாழ்த்திக் கொண்டு அவதரித்தார். ஆகவே சூர்ணை (75) - வீட்டின்பம் – என்னும் சூர்ணையில் தொடங்கி, இதுவரை உள்ள சூர்ணைகளில் அறிவற்றவர்களுடைய சந்தேகத்தைப் போக்கும்விதமாக ஆழ்வாருடைய பிறவியை ஆராய்ந்தால் ஏற்படும் தோஷத்தையும், வ்யாஸர் முதலானவர்களுடைய அவதாரத்தைக் காட்டிலும் நம்மாழ்வாரின் அவதாரத்தில் உள்ள வேறுபட்ட மேன்மையையும், நம்மாழ்வார் அவதரித்தது மற்றவர்களுக்காக மட்டுமே என்பதையும், மிகுந்த ப்ரபாவம் மிகுந்த நம்மாழ்வார் தன்னைத் தாழ்த்திக் கொண்டு அவதரித்ததன் காரணத்தையும் அருளிச்செய்தார்.

85. ம்லேச்சனும் பக்தனானால் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுத்துக் குலதைவத்தோடொக்கப் பூஜை கொண்டு பாவநதீர்த்த ப்ரஸாதனாமென்கிற திருமுகப்படியும், விச்வாமித்ர விஷ்ணுசித்த துளஸீ ப்ருத்யரோடே உள்கலந்து தொழு குலமானவன் நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும், கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய்த் தம்பிக்கு முன் பிறந்து வேலும் வில்லும் கொண்டு பின் பிறந்தாரைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவம்


Email:sridharan_book@yahoo.co.in

சொல்லும்படி ஏக குலமானமையும், தூது மொழிந்து நடந்து வந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹ போஜநமும், ஒரு பிறவியிலே இரு பிறவியானா ரிருவர்க்கு தர்மஸூநு ஸ்வாமிகள் அக்ர பூஜை கொடுத்தமையும், ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸந்தேஹியாமல ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யமும், புஷ்ப த்யாக போக மண்டபங்களில் பணிப்பூவு மாலவட்டமும் வீணையும் கையுமான அந்தரங்கரை முடிமன்னவனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்தித்த க்ரமமும், யாகாநுயாகோத்தர வீதிகளில் காயந்நஸ்தல சுத்தி பண்ணின வ்ருத்தாசாரமும் அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது.

**அவதாரிகை -** இன்னமும் ஆழ்வாருடைய வைபவத்துக் குறுப்பாக ஸாமாந்யேந பாகவத வைபவத்தைப் பல உதாஹரணங்களாலும் ப்ரகாசிப்பியா நின்று கொண்டு இவ் வாகாரங்க ளறிவார்க்கிறே ஜந்மத்தி லுத்கர்ஷாபகர்ஷம் தெரிவதென்கிறார் மேலோரு சூர்ணையாலே.

**விளக்கம் -** அடுத்து, நம்மாழ்வாருடைய மேன்மைகளை மேலும் நன்றாக விளக்கும்விதமாக, உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய மேன்மைகளைப் பல உதாரணங்கள் மூலம் விளக்கி, இத்தகைய தன்மைகளை நன்றாக உணர்ந்தவர்களுக்கு மட்டுமே, மற்றவர்களுடைய பிறவியில் உள்ள உயர்வும் தாழ்வும் அறிய இயலும் என்கிறார்.

**வ்யாக்யானம் –** [ம்லேச்சனும் பக்தனானால் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுத்துக் குலதைவத்தோடொக்கப் பூஜை கொண்டு பாவநதீர்த்த ப்ரஸாதனாமென்கிற திருமுகப்படியும்] (ம்லேச்சனும் பக்தனானால்) "மத் பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம், ஸ்வயம் அப்யர்ச்சநஞ்சைவமதர்த்தே டம்ப வர்ஜநம், மத் கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நோத்ராங்க விக்ரியாமமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி பக்திர் அஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சோபி வர்த்ததே" என்கிறபடியே என்கிறபடியே ம்லேச்ச ஜாதீயனாயுள்ளவனும் என்னுடைய பக்த ஜனங்கள் பக்கல் வாத்ஸல்யமும், என்னுடைய ஆராதனத்தி லுகப்பும், தானே ஆராதிக்கையும், என்பக்கல் டம்பமற்றிருக்கையும், என் கதையைக் கேட்குமிடத்தில் பக்தியும், பக்தி கார்யமான ஸ்வரநேத்ராங்கங்களில் விகாரமும், என்னையே எப்போதும் நினைக்கையும், என்னை ப்ரயோஜநாந்தரம் கொள்ளாதொழிகையு மென்று அஷ்டவிதையாக வருளிச்செய்த பக்தியை யுடையனானால், (சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுத்து) "ஸ


**Email:**sridharan_book@yahoo.co.in

விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதிஸ் ஸ ச பண்டித:; தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம்" என்றும், "பழுதிலா வொழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள் இழிகுலத்தவர்களேலு மெம்மடியார்களாகில், தொழுமினீர் கொடுமின் கொள்மின்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வோத்க்ருஷ்டனாய், உத்க்ருஷ்ட வர்ணரான சதுர்வேதிகள் அபிஜநாத்யபிமாந தூஷிதமான ஸ்வஸ்வரூப சுத்த்யர்த்தமாக அநுவர்த்திக்கைக்கு விஷயமாய், அவர்களுக்கு ஜ்ஞாநாபேக்ஷை யுண்டாகில் ஜ்ஞாந ப்ரதாநம் பண்ணி, (குலதைவத்தோடொக்கப் பூஜை கொண்டு) "ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்", "நின்னோடுமொக்க வழிபட வருளினாய் போல" என்கிறபடியே, "மம நாதம், மம குல தைவதம்" என்கிறபடியே குலதெய்வமாச் சொல்லப்படுகிற ஸர்வேச்வரனோடொக்க, "அவரெங்கள் குல தெய்வம்" என்கிறபடியே குலதெய்வமாய் அவர்களைப் பூஜை கொண்டு. (பாவந தீர்த்த ப்ரஸாதனாமென்கிற திருமுகப்படியும்) "தத் பாதாம்ப்வதுலம் தீர்த்தம் ததுச்சிஷ்டம் ஸுபாவநம்" என்று அவன் திருவடிகள் விளக்கின ஜலம் அநுபமமான தீர்த்தம்; அவனமுது செய்த சேஷம் பரம பாவநம் என்கையாலே, அஹங்கார மதிராபாவநமத்தரான அசுத்தரும் இந்த தீர்த்த ப்ரஸாதாந்வயத்தாலே சுத்த ஸ்வரூபராம்படி பாவந தீர்த்த ப்ரஸாதனாமென் றருளிச்செய்த பகவதுக்தியான திருமுகமும் அதின் படியெடுப்பான ஆழ்வார் பாசுரமும் (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது).

**விளக்கம்** – (ம்லேச்சனும் பக்தனானால்) பாஞ்சராத்ர ஆகமம் - மத் பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம், ஸ்வயம் அப்யர்ச்சநஞ்சைவமதர்த்தே டம்ப வர்ஜநம், மத் கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்க விக்ரியாமமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி பக்திர் அஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சோபி வர்த்ததே - எனது அடியார்களிடம் அன்பும், என்னிடம் எந்தவிதமான ஆடம்பரத்தைக் காண்பிக்காமலும், எனது லீலைகளைக் கேட்கும்போது பக்தி காரணமாக குரல் தழுதழுத்தலும், ஆனந்தக் கண்ணீர் சொரிதலும், மயிர்க்கூச்சல் எடுப்பதும், என்னை எப்போதும் எண்ணியபடி இருப்பதும், என்னிடமிருந்து என்னைத் தவிர வேறு எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல் இருப்பதும் என்றுள்ள எட்டுவிதமான பக்தி ஒரு தாழ்ந்தவனிடம் உள்ளது என்றாலும் - என்று கூறுவதற்கு ஏற்ப, தாழ்ந்தவனாக உள்ளபோதிலும் ஒருவன் எனது அடியார்களிடம் மிகுந்த வாத்ஸல்யம் கொண்டும், என்னை ஆராதிக்கும்போது மகிழ்வும், எப்போதும் தானே என்னை ஆராதித்தும், என்னிடம் ஆடம்பரம் காண்பிக்காமலும், எனது கதைகளைக் கேட்கும்போது பக்தியும், பக்தியின் விளைவாக ஆனந்தக்கண்ணீர்

 **Email:**sridharan_book@yahoo.co.in

சொரிந்து மயிர்க்கூச்சல் எடுத்தலும், என்னையே எப்போதும் நினைத்தலும், என்னைத் தவிர என்னிடமிருந்து வேறு பயன் எதிர்பாராமலும் என்றுள்ள எட்டுவிதமான பக்தி கொண்டவன் என்றால், (சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுத்து) – பாஞ்சராத்ரம் - ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதிஸ் ஸ ச பண்டித:; தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் - எட்டுவிதமான பக்தி கொண்ட அவன், மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும், அவனே அந்தணர்களில் உத்தமன், முனிவன், ஐச்வர்யம் பொருந்தியவன், பண்டிதன், அவனுக்கு ஞானம் அளிக்கலாம் என்றுள்ளவன், அவனிடமிருந்து ஞானம் பெறலாம் என்றுள்ளவன் - என்றும், திருமாலை (42) – பழுதிலா வொழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள் இழிகுலத்தவர்களேலு மெம்மடியார்களாகில், தொழுமினீர் கொடுமின் கொள்மின் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதத்திலும் உயர்ந்தவனாகவும்; உயர்ந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்களாகிய நான்கு வேதங்களையும் நன்கு அறிந்தவர்கள், தங்களுடைய பிறப்பு போன்றவற்றால் ஏற்பட்ட கர்வத்தால் தாழ்த்தப்பட்டதான தங்களுடைய ஆத்மஸ்வரூபத்தைத் தூய்மை அடையச் செய்யும்விதமாகப் பழகுவதற்கு ஏற்றவனாகவும், அவர்கள் அவனுடைய ஞானத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அந்த ஞானத்தை அவர்களுக்கு அளித்து. (குலதைவத்தோடொக்கப் பூஜை கொண்டு) – ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம் – நான் எவ்விதம் பூஜிக்கத் தக்கவனோ அது போன்று அவனும் பூஜிக்கத்தக்கவன் – என்றும், திருமாலை (42) – நின்னோடுமொக்க வழிபட வருளினாய் போல - என்றும் கூறுவதற்கு ஏற்ப, கத்யம் - மம நாதம், மம குல தைவதம் - எனது நாதனும் குலதெய்வமுமான ஸ்ரீரங்கநாதன் - என்று குலதெய்வமாகக் கொண்டாடப்படும் ஸர்வேச்வரனுக்கு நிகராக, பெரியதிருமொழி (2-6-4) - அவரெங்கள் குல தெய்வம் - என்கிறபடியே குலதெய்வமாகப் கொண்டு அவர்களைப் பூஜிக்கும்படியாக. (பாவநதீர்த்த ப்ரஸாதனாமென்கிற திருமுகப்படியும்) – பாஞ்சராத்ரம் - தத் பாதாம்ப்வதுலம் தீர்த்தம் ததுச்சிஷ்டம் ஸுபாவநம் – அவன் திருவடியைக் கழுவிய நீரானது ஒப்பற்ற தீர்த்தம், அவன் உண்டு வைத்த மீத உணவு மிகவும் தூய்மையானது - என்பதற்கு ஏற்ப, அப்படிப்பட்ட ஒருவன் தனது திருவடிகளைக் கழுவிய நீரானது ஒப்பில்லாத தீர்த்தம், அவன் உண்ட உணவின் மீதம் மிகவும் தூய்மையானது என்று கூறும் காரணத்தால், அஹங்காரம் என்ற மது பானத்தைப் பருகியதால் பித்துப் பிடித்தவர்கள் போன்றுள்ள தூய்மை அற்றவர்கள் கூட அத்தகைய தீர்த்தம் மற்றும் உணவின் மீதம் போன்றவற்றின் தொடர்பு காரணமாகத் தூய்மையான தன்மை அடையும்படிச் செய்கின்ற தூய்மையான தீர்த்த ப்ரஸாதம் அளிப்பவன் ஆகிறான் என்று அருளிச்செய்த பகவானுடைய திருவாக்கு நிறைந்த திருமுகப்பாசுரம் மற்றும் அதன்படி எடுக்கப்பட்டதான, திருமாலை (41) -

வானுளார் அறியலாக - என்பதான ஆழ்வாருடைய திருப்பாசுரம், (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) - ஆகியவற்றை அறிந்தவர்களுக்கு அல்லவோ பிறப்பின் உயர்த்தி தாழ்ச்சி அறிய இயலும் !!

**வ்யாக்யானம்** – [விச்வாமித்ர விஷ்ணுசித்த துளஸீ ப்ருத்யரோடே உள்கலந்து தொழு குலமானவன் நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும்] (விச்வாமித்ர விஷ்ணுசித்த துளஸீ ப்ருத்யரோடே உள்கலந்து தொழு குலமானவன்) அபர ராத்ரியிலே சென்று பாடி நம்பியைத் திருப்பள்ளியுணர்த்துகையாலே, “கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்த்யா ப்ரவர்த்ததே, உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம்” என்றும், “அரவணையா யாயரேறே அம்மமுண்ணத் துயிலெழாயே” என்றும், “அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே” என்றும் திருப்பள்ளியுணர்த்தின விச்வாமித்ரன் பெரியாழ்வார், “துளபத் தொண்டாய” தொண்டரடிப்பொடியாழ்வார் ஆகிய இவர்களோடே ஸகோத்ரியாய், “வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கா ளென்றுள் கலந்தார்” என்கிறபடியே பகவத் சேஷத்வ ஜ்ஞாந பூர்வகமாக அநந்ய ப்ரயோஜந வ்ருத்தியிலே அந்விதனாயுள் கலந்து, “எம் தொழுகுலம்” என்று விசேஷஜ்ஞர் ஆதரிக்கு மேற்றத்தை யடைந்த ஜந்மஸித்த நைச்யனான பாகவதன், (நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும்) சரககுலோத்பவனான ஸோமசர்மாவாகிற ப்ராஹ்மணன் உபக்ரமித்த யாகத்தை யதா க்ரமம் அநுஷ்டியாமையாலும், அது ஸமாபிப்பதுக்கு முன்னே மரிக்கையாலும் ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸாய்ப் பிறந்து திரியா நிற்கச்செய்தே, “த்வம் வை கீத ப்ரபாவேந நிஸ்தாரயிதும் அர்ஹஸி, ஏவ முக்த்வாத சண்டாளம் ராக்ஷஸச் சரணம் கத:” என்கிறபடியே, “நீ உன்னுடைய கீத ப்ரபாவத்தாலே என்னை இவ்வாபத்தில் நின்றும் கரை யேற்ற வேணும்” என்று சரணம் புக, “யந் மயா பச்சிமம் கீதம் ஸ்வரம் கைசிகமுத்தமம், பலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யஸி கில்பிஷாத்” என்று நம்பி ஸந்நிதியில் பின்பு பாடின “நிலையார் பாடலா”ன கைசிகப் பண்ணாலே, “ஏவம் தத்ர வரம் க்ருஹ்ய ராக்ஷஸோ ப்ரஹ்ம ஸம்ஜ்ஞித:, யஜ்ஞசாபாத் விநிர்முக்த: ஸோமசர்மா மஹாயசா:” என்னும்படியான வைகல்ய தோஷத்தாலே வந்த ரக்ஷஸ்த்வத்தைப் போக்கி உஜ்ஜீவிப்பிக்கையாலே அந்த ப்ராஹ்மணனுடைய யாகத்தில் குறையைத் தலைக்கட்டினபடியும், (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது).


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (விச்வாமித்ரரோடே) - இராமாயணம் பாலகாண்டம் (23-2) - கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்த்யா ப்ரவர்த்ததே, உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம் - கௌஸலையின் மிகவும் சிறந்த புத்திரனே! இராமா! காலைப்பொழுது புலர்ந்தது, துயில் எழுவாயாக, தேவர்கள் விஷயமாக உள்ள கர்மங்களை இயற்றவேண்டும் - என்று விடியற்காலைப்பொழுதில் சென்று இராமனைத் துயில் எழுப்பிய விச்வாமித்திரர். (விஷ்ணுசித்தரோடே) - பெரியாழ்வார் திருமொழி (2-2-1) – அரவணையா யாயரேறே அம்மமுண்ணத் துயிலெழாயே - என்று துயில் எழுப்பிய பெரியாழ்வார். (துளஸீப்ருத்யரோடே) – திருப்பள்ளியெழுச்சி - அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே - என்று ஸ்ரீரங்கநாதனைத் துயில் எழுப்பிய, திருமாலை (45) - துளபத்தொண்டாய தொல்சீர் தொண்டரடிப்பொடி - என்பதற்கு ஏற்ப உள்ளவராகிய தொண்டரடிப்பொடியாழ்வார் போன்றவர்களுடன் ஒரே கோத்ரம் ஆகும்படியாக. (உள்கலந்து) – இரவுப்பொழுதின் கடைசி யாமத்தில் சென்று பாடித் திருக்குறுங்குடி நம்பியைத் திருப்பள்ளி உணர்த்துவதாக கைசிகமாஹாத்ம்யத்தில் கூறப்பட்டவனும், திருவாய்மொழி (3-7-9) - வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கா ளென்றுள் கலந்தார் - என்பதற்கு ஏற்ப, "ஸர்வேச்வரனுக்கு நான் அடிமைப்பட்டவன் என்ற ஞானத்திற்கு மேலாக வேறு எந்த ஒரு பலனையும் எதிர்பாராமல் பாடுதல்" என்ற தொழிலில் மட்டும் ஈடுபட்டு ஒப்புமை இல்லாதவனும், (தொழுகுலம் ஆனவன்) – திருவாய்மொழி (3-7-8) – எம் தொழுகுலம் - என்பதற்கு ஏற்றபடி, உயர்ந்தவர்களும் கொண்டாடும்படியான ஏற்றத்தை அடைத்தவனும் ஆகிய இயற்கையாகவே தாழ்ந்த பிறவி கொண்ட பாகவதனாகிய நம்பாடுவான். (நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும்) – சரககுலத்தில் பிறந்தவனான ஸோமசர்மா என்னும் அந்தணன், தான் தொடங்கிய யாகத்தைச் செய்யவேண்டிய விதிகளின்படி செய்யாமல், அது நிறைவு பெறுவதற்கு முன்பாகவே இறந்துவிட்டதால், ப்ரஹ்மராக்ஷஸனாகத் திரிந்துபோது, கைசிகமாஹாத்ம்யம் - த்வம் வை கீத ப்ரபாவேந நிஸ்தாரயிதும் அர்ஹஸி, ஏவ முக்த்வாத சண்டாளம் ராக்ஷஸச் சரணம் கத: - "நீ உனது பண்ணுடைய மஹிமை காரணமாக என்னை இந்தப் பாவத்திலிருந்து கரையேற்ற வல்லவன்" என்று கூறியபடி, சண்டாளனாகப் பிறந்த நம்பாடுவானிடம் சரணம் அடைந்தான் - என்பதற்கு ஏற்ப, "நீ உன்னுடைய கீதத்தின் ப்ரபாவம் மூலம் என்னை இந்த ஆபத்திலிருந்து கரையேற்ற வேண்டும்" என்று சரணம் புகுந்து நின்றபோது, கைசிகமாஹாம்யம் – யந் மயா பச்சிமம் கீதம் ஸ்வரம் கைசிகமுத்தமம், பலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யஸி கில்பிஷாத் - மிகவும் உயர்ந்த ஸ்வரமாக உள்ள எந்த ஒரு கைசிகம் என்ற கீதம் என்னால் இங்கு

பாடப்படுகிறதோ, அத்தகைய கீதத்தின் பலன் காரணமாக உன்னை இந்த பாவத்திலிருந்து விடுவிப்பேன் – என்பதற்கு ஏற்ப, திருக்குறுங்குடிநம்பி முன்பாகப் பாடப்பட்ட பெரியதிருமொழி (9-6-10) - நிலையார் பாடல் – போன்று உள்ளதான கைசிகப்பண் மூலம், கைசிகமாஹாத்ம்யம் - ஏவம் தத்ர வரம் க்ருஹ்ய ராக்ஷஸோ ப்ரஹ்ம ஸம்ஜ்ஞித:, யஜ்ஞசாபாத் விநிர்முக்த: ஸோமசர்மா மஹாயசா: - இப்படியாக உள்ள வரம் காரணமாக ப்ரஹ்மராக்ஷஸ் எனத் திரிந்த ஸோமசர்மா, தான் யாகத்தை நடுவில் நிறுத்தியதால் உண்டான பாவம் விலகி விடுதலை அடைந்தான் - என்பதற்கு ஏற்ப, யாகத்தில் உண்டான குறை காரணமாக ஏற்பட்ட ரக்ஷஸ் என்னும் நிலையை நீக்கிக் கரையேற்றியதால், ஸோமசர்மா என்ற அந்தணனின் யாகத்தில் உண்டான குறையை நம்பாடுவான் முடித்தது குறித்து, (அறிவார்க்கிறே ஐந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) - அறிபவர்களுக்கு மட்டுமே பிறவியில் உள்ள உயர்ந்தியும் தாழ்ச்சியும் உரை இயலும்.

**வ்யாக்யானம் –** [கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய்த் தம்பிக்கு முன் பிறந்து வேலும் வில்லும் கொண்டு பின் பிறந்தாரைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவம் சொல்லும்படி ஏக குலமானமையும்] (கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய்) நிஷாத வம்சஜ ராகையாலே, “ஏழையேதலன் கீழ்மகன்” என்னும்படி ஜந்ம வ்ருத்த ஜ்ஞாநங்களால் தண்ணியரான ஸ்ரீகுஹப்பெருமாள், அயோத்தியர் கோமானாகையாலே அவை யெல்லாத்தாலும் உத்க்ருஷ்டனாயிருக்கிற வளவுமன்றிக்கே, தர்ம்மைக்யத்தாலே “வானோர் தலைமகனா” யிருக்கிற சக்ரவர்த்தித்திருமகனுக்கு, “உகந்து தோழன் நீ” என்கையாலே ஸமனான ஸகாவாய். (தம்பிக்கு முன் பிறந்து) “உம்பியும்” என்கையாலே இவர் தம்பியான இளையபெருமாளுக்கு முன்பிறந்தவராய், (வேலும் வில்லுங் கொண்டு பின்பிறந்தாரைச் சோதித்து) இப்படி தம்மை அங்கீகரித்தவன்று ராத்ரி, பெருமாள் பள்ளி கொண்டருளா நிற்க, அவருடைய ஸௌகுமார்யாநு ஸந்தாநத்தா லுண்டான பிரிவாலே கண்ணுறக்கமற்று கையும் வில்லுமாய்க் காத்துக்கொண்டு நிற்கிற இளையபெருமாளை அதிசங்கை பண்ணி, “கூரணிந்த வேல்வலவன்” என்றும், “தத்ஸ்த்வஹஞ்ச உத்தம பாண சாபத்ருத்ஸ்திதோபவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண:” என்றும் சொல்லுகிறபடியே ஸாயுதராய்க் கொண்டு, இவர் மேலே கண்ணாய் நின்று, அவர் நினைவு சோதித்து, (தமையனுக்கிளையோன் ஸத்பாவம் சொல்லும்படி ஏககுலமானமையும்) “ஆசசக்ஷேத ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந: பரதாய அப்ரமேயாய குஹோ கஹநகோசர:” என்கிறபடியே ராமவிரஹ க்லிஷ்டனாய் திருச்சித்ரகூடத்தேறப் போவதாக வந்த

தமையனான ஸ்ரீபரதாழ்வானுக்கு, தம்பியான இளையபெருமாளுடைய "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்றும், "பரவாநஸ்மி" என்றும் சொல்லுகிறபடியே பெருமாள் பக்கல் ப்ரேம பாரதந்த்ர்யங்களே நிரூபகமாம்படி யிருக்கையாகிற ஸத்தையோடே வ்யாப்தமான ஸ்வபாவத்தைச் சொல்லும்படி இக்ஷ்வாகு வம்ச்யரோடு ஏக குலமானபடியும், (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது).

**விளக்கம்** - (கீழ்மகன்) - வேடர்களுடைய குலத்தில் பிறந்த காரணத்தால் பெரியதிருமொழி (5-8-1) – ஏழையேதலன் கீழ்மகன் – என்பதற்கு ஏற்ப பிறவி, செயல்பாடு, ஞானம் போன்ற பலவற்றாலும் தாழ்ந்தவனாகிய குகன், (தலைமகனுக்கு) - அயோத்தியில் வாழ்கின்ற அனைவருக்கும் சக்கரவர்த்தியாக உள்ள காரணத்தால் அவர்கள் அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பது மட்டும் அல்லாமல், சூரியன் போன்று அனைவருக்கும் ஒரே தர்மத்துடன் உள்ள காரணத்தால், திருவிருத்தம் (53) - வானோர் தலைமகன் - என்றுள்ள சக்ரவர்த்தி திருமகனாகிய இராமனுக்கு. (ஸமஸஹாவாய்) - பெரியதிருமொழி (5-8-1) – உகந்து தோழன் நீ - என்பதற்கு ஏற்ப ஒத்த நண்பனாகவும். (தம்பிக்கு முன் பிறந்த) – பெரியதிருமொழி (5-8-1) – உம்பியெம்பி - என்பதற்கு ஏற்ப இராமனுடைய தம்பியாகிய லக்ஷ்மணனுக்கு முன்பு பிறந்தவன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவனாகவும். (வேலும் வில்லும் கொண்டு பின் பிறந்தாரைச் சோதித்து) - இவ்விதம் தன்னை ஏற்றுக் கொண்ட இரவுப்பொழுதில், இராமன் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில், இராமனுடைய மென்மையை எண்ணியபடியே உள்ளதால் ஏற்பட்ட பிரிவு காரணமாக உறக்கம் இன்றி கைகளில் வில்லுடன் இராமனுக்குக் காவலாக உலவி நின்ற லக்ஷ்மணனைக் குறித்து சந்தேகம் கொண்ட குகன், பெரியாழ்வார் திருமொழி (3-10-4) – கூரணிந்த வேல்வலவன் – என்றும், இராமாயணம் அயோத்யாகாண்டம் (87-23) – தத்ஸ்த்வஹஞ்ச உத்தம பாண சாபத்ருத்ஸ்திதோபவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண: – அதனைத் தொடர்ந்து உயர்ந்த வேல் மற்றும் அம்புகள் கொண்டிருந்த லக்ஷ்மணன் எங்கு உலவினானோ அங்கு நானும் இருந்தேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஆயுதங்களுடன் கூடியவனாக, லக்ஷ்மணன் மீது தன் கண்கள் வைத்தபடி நின்று, அவனுடைய சிந்தனையை எப்போதும் எண்ணியபடி உள்ளவனாகவும். (தமையனுக்கு) – இராமனைப் பிரிந்துள்ள காரணத்தால் மிகவும் வருத்தம் கொணடு திருச்சித்ரகூடம் செல்லும் பொருட்டு வந்த பரதனிடம், (இளையோன் ஸத்பாவம் சொல்லும்படி) - அயோத்யாகாண்டம் (86-1) – ஆசசக்ஷேத ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந: பரதாய அப்ரமேயாய குஹோ கஹநகோசர: - அந்தக்

கானகத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்ட குகன், பரதனிடம் லக்ஷ்மணனிடத்து உள்ள நல்ல தன்மைகள் குறித்து உரைத்தான் - என்பதற்கு ஏற்ப, இராமனின் தம்பியாகிய லக்ஷ்மணனுடைய, இராமாயணம் பாலகாண்டம் (18-27) – பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: - சிறுவயதிலிருந்தே லக்ஷ்மணன் இராமனிடம் மிகுந்த பக்தியுடன் இருந்தான் - என்றும், இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-7) – பரவாநஸ்மி - உனக்கு மட்டுமே வசப்பட்டவனாக உள்ளேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான, இராமனிடம் காண்பிக்கும் ப்ரேமை மற்றும் வசப்பட்ட தன்மை ஆகியவற்றைக் கொண்டு மட்டுமே "லக்ஷ்மணன் இன்னான்" என்று நிரூபிக்கும்படியாக உள்ள தன்மையைக் கூறுபவனாகவும். (ஏக குலம் ஆனமையும்) - இவ்விதம் உள்ள குஹன், இக்ஷ்வாகு வம்சத்தினரோடு ஒரே வம்சம் என்று ஒன்றாகக் கலந்து நின்ற நிலையைக் குறித்து, (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) - அறிபவர்களுக்கு மட்டுமே பிறவியில் உள்ள உயர்ந்தியும் தாழ்ச்சியும் உரை இயலும்.

**வ்யாக்யானம்** – [தூது மொழிந்து நடந்து வந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹ போஜநமும்] (தூதுமொழிந்தித்யாதி) "முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து" என்று பிராட்டிக்கு தூது வாக்கியத்தைத் திருவடி வாயிலே சொல்லிவிட்ட சக்ரவர்த்தி திருமகன், "சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:" என்கிறபடியே ஸ்ரீசபரி கையால் பண்ணின ஸம்யக் போஜநமும்; "குடை மன்னரிடை நடந்த தூதா" என்னும்படி பாண்டவர்களுக்காகத் தூது போன க்ருஷ்ணன், பீஷ்ம த்ரோணாதி க்ருஹங்களை விட்டு, "விதுராந்நாதி புபுஜே சுசீநி குணவந்திச" என்கிறபடியே பாவநத்வ போக்யத்வங்கள் கண்டு உகந்து ஸ்ரீவிதுரர் திருமாளிகையில் பண்ணின ஸகுண போஜநமும்; "தூது வந்த குரங்கு" என்கிற திருவடி, "த்ருஷ்டா ஸீதா" என்ற ப்ரீதியாலே, "உபகாராய ஸுக்ரீவோ ராஜ்ய காங்க்ஷீ விபீஷண: நிஷ்காரணாய ஹநுமாந் தத் துல்யம் ஸஹபோஜநம்" என்று திருவுள்ளம் பற்றி, "கோதில் வாய்மையினாயோடுமுடனே யுண்பன் நான்" என்று பெருமாளோடு பண்ணின ஸஹபோஜநமும் (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது).

**விளக்கம்** - (தூது மொழிந்தவருடைய ஸம்யக் ஸகுண போஜனமும்) பெரியதிருமொழி (2-2-3) - முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து - என்று கூறுவதற்கு ஏற்ப சீதைக்குத் தனது தூது செய்தியை அனுப்பிய சக்ரவர்த்தித்திருமகனாகிய இராமன்,


**Email:**sridharan_book@yahoo.co.in

இராமாயணம் பாலகாண்டம் (1-57) - சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ: - தசரதனுடைய புத்திரனாகிய இராமன் சபரியால் நன்றாக பூஜிக்கப்பட்டான் - என்பதற்கு ஏற்ப சபரியின் கைகளால் அவளுடைய குணத்திற்கு ஏற்றபடி இருந்த நல்ல உணவு உண்டான். (தூது நடந்தவருடைய ஸம்யக் ஸகுண போஜனமும்) – பெரியதிருமொழி (6-2-9) - குடை மன்னரிடை நடந்த தூதா – என்பதற்கு ஏற்ப பாண்டவர்களுக்காகத் தூது சென்ற க்ருஷ்ணன், பீஷ்மர் மற்றும் துரோணர் ஆகியவர்களுடைய வீடுகளுக்குச் செல்லாமல் விடுத்து, மஹாபாரதம் உத்யோகபர்வம் – விதுராந்நாதி புபுஜே சுசீநி குணவந்திச - தூய்மை மற்றும் சிறந்த குணம் பொருந்திய விதுரரின் வீட்டில் அன்னம் உண்டான் – என்பதற்கு ஏற்ப, விதுரரின் தூய்மை மற்றும் இன்பமான தன்மை ஆகியவற்றைக் கண்டு தனது திருவுள்ளம் மகிழ்ந்து, விதுரரின் வீட்டில் உணவை உண்டான். (தூது வந்தவருடைய ஸம்யக் ஸகுண போஜனமும்) பெரியதிருமொழி (10-2-6) – தூது வந்த குரங்கு – என்பதற்கு ஏற்ப உள்ள அனுமனால், இராமாயணம் பாலகாண்டம் (1-78) – த்ருஷ்டா ஸீதா – சீதை இலங்கையில் என்னால் பார்க்கப்பட்டாள் - என்பதற்கு ஏற்ப "சீதையைக் கண்டவன்" என்ற ப்ரீதி காரணமாக, பாத்மோத்தர புராணம் - உபகாராய ஸுக்ரீவோ ராஜ்ய காங்க்ஷீ விபீஷண: நிஷ்காரணாய ஹநுமாந் தத் துல்யம் ஸஹபோஜநம் - இராமன் செய்த உதவி காரணமாகவே சுக்ரீவன் அவனுக்குக் கைங்கர்யம் செய்தான், விபீஷணன் அரசபதவியை எண்ணினான், எதனையும் விரும்பாமல் அனுமன் கைங்கர்யம் மட்டுமே செய்தான் – என்பதற்கு ஏற்ப மகிழ்ந்த இராமன், அனுமனின் உள்ளத்தை அறிந்து, பெரியதிருமொழி (5-8-2) - கோதில் வாய்மையினாயோடுமுடனே யுண்பன் நான் – என்று கூறும்படி அனுமனுடன் சேர்ந்து இராமன் உணவு உண்டான். இவற்றை (அறிவார்க்கிறே ஐந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) - அறிபவர்களுக்கு மட்டுமே பிறவியில் உள்ள உயர்ந்தியும் தாழ்ச்சியும் உரை இயலும்.

**வ்யாக்யானம்** – [ஒரு பிறவியிலே இரு பிறவியானா ரிருவர்க்கு தர்மஸூநு ஸ்வாமிகள் அக்ர பூஜை கொடுத்தமையும்] (ஒரு பிறவியிலே இத்யாதி) யதுகுலத்திலே பிறந்து கோப குலத்தில்கே ஸஜாநீயத்வேந வளருகையாலே ஒரு பிறவியிலே இரு பிறவியான க்ருஷ்ணனுக்கு தர்மபுத்ரர் தம்முடைய யாகத்திலே அக்ரபூஜை கொடுத்தமையும், ருஷி புத்ரராய்ப் பிறந்து போய் மற்றோரிடத்திலே தஜ்ஜாதீயராய் வளருகையாலே ஒரு பிறவியிலே இரு பிறவியான திருமழிசைப்பிரானுக்குப் பெரும்புலியூரடிகள் தம்முடைய

யாகத்திலே அக்ரபூஜை கொடுத்தமையும் (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது).

**விளக்கம்** – (ஒரு பிறவியிலே இரு பிறவியானா ரிருவர்க்கு) - யதுவம்சத்தில் அவதரித்து, ஆயர் குலத்தில் அவர்களில் ஒருவனாகவே வளர்ந்த காரணத்தால், ஒரு பிறப்பில் இரண்டு பிறவிகளாக விளங்கிய க்ருஷ்ணனுக்கும், ரிஷியின் புத்திரராகப் பிறந்து பிரம்பன் குலத்தில் அந்த இனத்தில் ஒருவராகவே வளர்ந்த காரணத்தால் ஒரு பிறப்பில் இரண்டு பிறவிகள் என்று விளங்கிய திருமழிசையாழ்வாருக்கும். (தர்மஸூநு ஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும்) – தர்மபுத்திரன், தான் செய்த ராஜஸூய யாகத்தில் க்ருஷ்ணனுக்கு அக்ர தாம்பூலம் அளித்தமையும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாற்றின் அருகில் காணப்படும் பெரும்புலியூர் என்ற இடத்தில் வசித்த அந்தணர்கள், தாங்கள் இயற்றிய யாகத்தில் திருமழிசையாழ்வாருக்கு முதல் மரியாதை அளித்தமையும் குறித்து, (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) - அறிபவர்களுக்கு மட்டுமே பிறவியில் உள்ள உயர்ந்தியும் தாழ்ச்சியும் உரை இயலும்.

**வ்யாக்யானம்** – [ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யமும்] (ஐவரிலித்யாதி) பாண்டவர்களைவரில் ப்ரதாநரான தர்மபுத்ரர் ஸ்ரீவிதுரர்க்கு ஜ்ஞாநாதிக்யத்தையும் அசரீரி வாக்யத்தையுங் கொண்டு ஸந்தேஹியாமல் செய்த புத்ர க்ருத்யமும்; தசரதாத்மஜர் நால்வரில் ப்ரதாநரான பெருமாள், “ஸௌமித்ர ஹர காஷ்டாதி நிர்மதிஷ்யாமி பாவகம், க்ருத்ரராஜம் திதக்ஷாமி மத்க்ருதே நிதநம் கதம்” என்று ஸஹஜரான இளையபெருமாளும் கூட நிற்கச்செய்தே அவர் கையிலுங் காட்டாமல், “ஏவமுக்த்வா சிதாம் தீப்தாமாரோப்ய பதகேச்வரம், ததாஹ ராமோ தர்மாத்மா ஸ்வபந்துவிவ துக்கித:” என்கிறபடியே பெரியவுடையார்க்குச் செய்த புத்ர க்ருத்யமும்; பெரியநம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, பெரிய திருமலைநம்பி என்று ஸப்ரஹ்மசாரிகளாய்க் கொண்டு ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவிக்கையாலும், உடையவர்க்கு ஆசார்யர்களாகையாலும் ப்ரஸித்தரான நம்பிகள் மூவரிலும் ப்ரதாநரான பெரியநம்பி, மாறனேரிநம்பிக்கு “புரோடாசத்தை நாய்க்கிடாதே கொள்ளும்” என்று அவர் அருளிச்செய்து போந்தபடியே புரோடாசமாக நினைத்துச் செய்த புத்ர க்ருத்யமும் (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது);

**விளக்கம்** – (ஐவரில் முற்பட்டவர் ஸந்தேஹியாமல் செய்த புத்ர க்ருத்யமும்) - பாண்டவர்கள் ஐந்து பேர்களில் மூத்தவராகிய தர்மபுத்ரர், ஸ்ரீவிதுரருடைய ஞானத்தின் மேன்மை மற்றும் அசரீரி ஒன்றின் வாக்கு ஆகியவற்றை ஏற்றவராக, எந்தவிதமான தயக்கமும் இன்றி, ஸ்ரீவிதுரர் இறந்தபோது, ஒரு மகன் தனது தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடன்களைச் செய்வது போன்று, ஸ்ரீவிதுரர்க்குச் செய்தார். (நால்வரில் முற்பட்டவர் ஸஹஜரோடு செய்த புத்ர க்ருத்யமும்) - தசரதரின் புத்திரனாகிய இராமன், இராமாயணம் ஆரண்யகாண்டம் (68-27) – ஸௌமித்ர ஹர காஷ்டாதி நிர்மதிஷ்யாமி பாவகம், க்ருத்ரராஜம் திதக்ஷாமி மத்க்ருதே நிதநம் கதம் - லக்ஷ்மணா! விறகுகளை நீ எடுத்து வருவாயாக. நான் தீயை உண்டாக்குகிறேன். என் பொருட்டு மரணம் அடைந்த ஜடாயுவுக்கு நான் தீ மூட்ட விரும்புகிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, தன்னுடன் பிறந்தவனாகிய லக்ஷ்மணன் தன்னுடன் நின்றிருந்தபோதிலும், அவன் கையிலும் காண்பிக்காமல், இராமாயணம் ஆரண்யகாண்டம் (68-31) – ஏவமுக்த்வா சிதாம் தீப்தாமாரோப்ய பதகேச்வரம், ததாஹ ராமோ தர்மாத்மா ஸ்வபந்துவிவ துக்கித: – இவ்விதமாக உரைத்து, பறவைகளின் அரசனாகிய ஜடாயுவைச் சிதையில் ஏற்றியவனாகிய தர்மாத்மா இராமன், மிகுந்த துக்கத்துடன், தனது உறவினரை எரிக்கும் முறையில் எரித்தான் - என்பதற்கு ஏற்ப, ஜடாயு இறந்தபோது, ஒரு மகன் தனது தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடன்களைச் செய்வது போன்று, ஜடாயுவுக்குச் செய்தான். (மூவரில் முற்பட்டவர் புரோடாசமாகச் செய்த புத்ர க்ருத்யமும்) - ஆளவந்தாரிடம் பெரியநம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, பெரியதிருமலைநம்பி என்ற மூவரும் சீடர்களாக இருந்தனர். இவர்கள் எம்பெருமானாருடைய ஆசார்யர்களாக விளங்கியதால் மிகவும் ப்ரஸித்தி அடைந்தனர். இவர்களில் மூத்தவராகிய பெரியநம்பி, ஆளவந்தாரின் மடத்தில் இருந்த மாறனேரிநம்பி இறந்தபோது, அவர் உயிருடன் இருந்தபோது உரைத்த வாக்கான "புரோடாசத்தை நாய்க்கிடாதே கொள்ளும் - தேவர்களின் பொருட்டு வேள்வியில் அளிக்கப்படும் அரிசி மாவால் செய்த அவிர்பாகத்தை, நாய் போன்ற தாழ்ந்த பிறவிகளுக்கு அளிக்காமல் நீரே பாதுகாக்க வேண்டும்" என்பதற்கு ஏற்ப, மாறனேரிநம்பியையே புரோடாசமாக எண்ணி, மாறனேரிநம்பி இறந்தபோது, ஒரு மகன் தனது தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடன்களைச் செய்வது போன்று, மாறனேரிநம்பிக்குச் செய்தார். (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) – இவற்றைக் குறித்து அறிபவர்களுக்கு மட்டுமே பிறவியில் உள்ள உயர்த்தியும் தாழ்ச்சியும் உணர இயலும்.

**வ்யாக்யானம்** – [புஷ்ப த்யாக போக மண்டபங்களில் பணிப்பூவு மாலவட்டமும் வீணையும் கையுமான அந்தரங்கரை முடிமன்னவனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்தித்த க்ரமமும்] (புஷ்ப த்யாகேத்யாதி) “சிந்து பூமகிழும் திருவேங்கடம்” என்கிறபடியே புஷ்பமண்டபமான திருமலையில் பணிப்பூவும் கையுமாய் திருவுள்ள மறியப் பரிமாறுகையாலே திருவேங்கடமுடையானுக் கந்தரங்கரான குறும்பறுத்த நம்பியை, “துளங்கு நீண்முடியரசர்தம் குரிசில் தொண்டை மன்னவன்” என்கிற அபிஷிக்த க்ஷத்ரியாக்ருயரான தொண்டைமான் சக்ரவர்த்தி அநுவர்த்தித்த க்ரமமும்; “வேகவத் யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம், வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே” என்கிறபடியே த்யாகமண்டபமான பெருமாள்கோவிலில் திருவாலவட்டமும் கையுமாய்ப் பெருமாளுக்கு அந்தரங்கராய் நின்ற திருக்கச்சிநம்பியை வைதிகோத்தமரான உடையவர் அநுவர்த்தித்த க்ரமமும்; “தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடி வருடப் பள்ளி கொள்ளும்” என்கிறபடியே போகமண்டபமான கோயிலில் வீணையும் கையுமாய்ப் பெரியபெருமாளுக்கந்தரங்கராய் வர்த்தித்த திருப்பாணாழ்வாரை லோகஸாரங்க மஹாமுநிகள் அநுவர்த்தித்த க்ரமமும் (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது);

**விளக்கம்** - (புஷ்பமண்டபத்தில் பணிப்பூவும் கையுமான அந்தரங்கரை முடிமன்னவன் அநுவர்த்தித்த க்ரமும்) – [இங்கு புஷ்பமண்டபம் - திருவேங்கடம், பணிப்பூ - மண்ணால் செய்த பூ, அந்தரங்கர் - குறும்பறுத்தநம்பி, முடிமன்னவன் – தொண்டைமான்]. திருவாய்மொழி (3-3-2) - சிந்து பூமகிழும் திருவேங்கடம் - என்பதற்கு ஏற்ப புஷ்ப மண்டபமான திருவேங்கடத் திருமலையில், குறும்பறுத்தநம்பி என்பவர் மண்ணால் செய்த மலர் கொண்டு திருவேங்கடமுடையானின் திருவுள்ளத்தை நன்றாக அறிந்த காரணத்தால், அவனுக்கு மிகவும் அந்தரங்கராக இருந்து கைங்கர்யம் செய்தார். பெரியதிருமொழி (5-8-9) – துளங்கு நீண்முடியரசர்தம் குரிசில் தொண்டை மன்னவன் – என்பதற்கு ஏற்றபடி முடி சூடிய பல அரசர்களுக்கும் சக்ரவர்த்தியாக விளங்கிய தொண்டைமான் என்பவன், அத்தகைய குறும்பறுத்தநம்பி திருவேஙடமுடையானை வழிபட்ட அதே முறையைப் பின்பற்றினான். (த்யாக மண்டபத்தில் ஆலவட்டமும் கையுமான அந்தரங்கரை வைதிகோத்தமர் அநுவர்த்தித்த க்ரமமும்) – [இங்கு த்யாகமண்டபம் - காஞ்சீபுரம் வரதன் கோயில், ஆலவட்டம் – விசிறி, அந்தரங்கர் - திருக்கச்சிநம்பிகள், வைதிகோத்தமர் – எம்பெருமானார்]. காஞ்சீமாஹாத்ம்யம் – வேகவத் யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ்

ஸ்வயம், வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே - வேகவதி என்ற நதியின் வடக்குக்கரையில் உள்ள புண்ணியகோடி என்ற விமானத்தில் ஸ்ரீஹரி எழுந்தருளி, அனைத்து உயிர்களுக்கும் வரம் அளிப்பவனாக இன்றளவும் காணப்படுகிறான் - என்பதற்கு ஏற்ப அனைவருக்கும் அனைத்தையும் அளிப்பதால் த்யாகமண்டபமாகத் திகழும் காஞ்சீபுரம் வரதனின் திருக்கோயிலில், அவனுக்கு அன்றாடம் விசிறி வீசியபடி கைங்கர்யம் செய்து, அவனுக்கு மிகவும் நெருக்கமானவராகத் திருக்கச்சிநம்பிகள் விளங்கினார். இவரை, வைதிகரில் மிகவும் உத்தமராக விளங்கிய எம்பெருமானார் அண்டி நின்றார். (போக மண்டபத்தில் வீணையும் கையுமான அந்தரங்கரை மஹாமுனி அநுவர்த்தித்த க்ரமமும்) - [இங்கு போகமண்டபம் - ஸ்ரீரங்கம் பெரியகோயில், அந்தரங்கர் - திருப்பாணாழ்வார், மஹாமுனி – லோகசாரங்கர்]. பெருமாள்திருமொழி (1-1) - தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடி வருடப் பள்ளி கொள்ளும் - என்பதற்கு ஏற்ப மோக்ஷ ஆனந்தம் அளிக்கவல்லதான திருவரங்கம் பெரியகோயிலில் திருப்பாணாழ்வார் வீணை வாசித்தபடியே கைங்கர்யம் செய்து, பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதனுக்கு மிகவும் அந்தரங்கமானவர் ஆனார். அவரை லோகசாரங்க மஹாமுனிவர் அண்டி நின்றார். (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) – இவற்றைக் குறித்து அறிபவர்களுக்கு மட்டுமே பிறவியில் உள்ள உயர்த்தியும் தாழ்ச்சியும் உணர இயலும்.

**வ்யாக்யானம்** – [யாகாநுயாகோத்தர வீதிகளில் காயந்நஸ்தல சுத்தி பண்ணின வ்ருத்தாசாரமும்] (யாகாநுயாகேத்யாதி) “யஜ தேவ பூஜாயாம்” என்கையாலே, யாக சப்த வாச்யமான திருவாராதநத்தில் பிள்ளையுறங்காவில்லிதாஸர் ஸ்பர்சத்தாலே காயசுத்தி பண்ணின உடையவரும்; பகவதாராதநானந்தரம் தத் ஸமாப்தி ரூபேண பண்ணப்படு மதாகையாலே அநுயாக சப்த வாச்யமான ப்ரஸாத ஸ்வீகாரத்தில் பிள்ளையேறு திருவுடையார் தாஸர் கர ஸ்பர்சத்தாலே அந்த சுத்தி பண்ணின நம்பிள்ளையும்; உத்தரவீதி குடி புகுகிறபோது பிள்ளைவானமாமலை தாஸர் ஸஞ்சரணத்தாலே ஸ்தல சுத்தி பண்ணின நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டருமாகிற ஜ்ஞாந வ்ருத்தர்களுடைய ஆசாரமும், (அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) இப்படி கீழ்ச்சொன்ன விவை யெல்லாமறிவார்க்கிறே “இன்ன ஜந்மம் உத்க்ருஷ்டம், இன்ன ஜந்மம் அபக்ருஷ்டம்” என்று ஜந்மத்தினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் தோன்றுவதென்றபடி.

**விளக்கம்** - (யாகத்தில் காய சுத்தி பண்ணின வ்ருத்த ஆசாரமும்) – [இங்கு யாகம் - திருவாராதனம், காயசுத்தி செய்தவர் - எம்பெருமானார், காயம் என்றால் சரீரம்]. யஜ தேவ பூஜாயாம் - யாகங்கள் தேவர்களுக்குச் செய்யப்படும் பூஜை - என்பதற்கு ஏற்ப யாகம் என்ற சொல்லுக்குப் பொருளாக உள்ள திருவாராதனத்தில், பிள்ளை உறங்காவில்லி தாஸரைக் கொண்டு தன்னைத் தொடும்படிச் செய்து, அதனால் தனது சரீரத்தைத் தூய்மையாக்கிக் கொண்ட எம்பெருமானாரின் செயல். (அநுயாகத்தில் அன்ன சுத்தி பண்ணின வ்ருத்த ஆசாரமும்) - பகவத் ஆராதனம் முடியும்போது, அதனைத் தொடர்ந்து, அதனை நிறைவு செய்யும் விதத்தில் செய்யப்படுதல் என்பதால் "அநுயாகம்" என்று கூறப்படுவதான பகவத் ப்ரஸாதத்தை உட்கொள்ளுதல் என்ற நேரத்தில், பிள்ளை ஏறுதிருவுடையார் தாஸருடைய கரம் கொண்டு அந்த ப்ரஸாதத்தைத் தொடும்படிச் செய்து, அதன் மூலம் அந்த அன்னத்தைத் தூய்மையாக்கிய ஞானத்தில் முதிர்ந்தவராகிய நம்பிள்ளையின் செயல். (உத்தரவீதியில் ஸ்தல சுத்தி பண்ணின வ்ருத்த ஆசாரமும்) – திருவரங்கத்தில் உள்ள வடக்கு உத்தரவீதியில் குடி ஏறும்போது, பிள்ளை வானமாமலை தாஸரை அந்த இடத்தில் நடக்கும்படிச் செய்து, அதன் மூலம் அந்த நிலத்தைத் தூய்மைப்படுத்திய ஞானத்தில் மூத்தவராகிய நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டருடைய செயல். (அறிவார்க்கிறே ஐந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது) – இவ்விதம் கீழே கூறப்பட்ட பலவற்றையும் குறித்து அறிபவர்களுக்கு மட்டுமே "இன்ன பிறவி உயர்ந்தது, இன்ன பிறவி தாழ்ந்தது" என்று பிறவியில் உள்ள உயர்த்தியும் தாழ்ச்சியும் உணர இயலும்.

**வ்யாக்யானம்** - இத்தால் ஐந்மாத்யபக்ருஷ்டர் பகவத் பக்தர்களானார்களாகில் உத்க்ருஷ்ட வர்ணரால் அநுவர்த்தநீயராய், அவர்களுக்கு ஜ்ஞாநப்ரதராய், ஈச்வரனோபாதி அவர்களுக்குப் பூஜ்யராய், ஸ்வதீர்த்த ப்ரஸாதங்களாலே ஸர்வரையும் சுத்தராக்கு மவர்களாம்படியையும், பாபமக்நரான உத்க்ருஷ்ட வர்ணர்க்கும் ஸ்வஸம்பந்தத்தாலே உத்தாரகராம்படியையும், அவர்களளவில் பகவத் ததீயர்களுடைய ஆதராநுவர்த்தந ப்ரகாரங்களையும் அவர்களுடைய ஸ்பர்சமே பரமபாவனமென்னுமத்தையும், ப்ரமேய பூதனான ஈச்வரனுடையவும் ப்ரமாத்ரு பூதரான ததீயருடையவும் வசநா நுஷ்டாநங்களாலே மந்தமதிகளு மறியும்படி ப்ரகாசிப்பித்தாராய்த்து.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - ஆக இந்தச் சூர்ணை மூலம், பிறப்பு போன்றவற்றால் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள், பகவத் பக்தர்கள் என்றால் - உயர்ந்த பிறப்பு கொண்டவர்கள் என்று கருதப்படுபவர்களால் அண்டி நிற்கப்படுவர்; உயர் பிறப்பு கொண்டவர்களுக்கு ஞானம் அளிப்பவர்; ஸர்வேச்வரன் போன்றே அவர்களால் வணங்கத்தக்கவர்; தாங்கள் உண்டு மீதம் வைத்த தீர்த்தம் மற்றும் உணவு போன்றவற்றால் அனைவரையும் தூய்மையாக்க வல்லவர் என்பவற்றைக் குறித்தும்; அஹங்காரம் போன்ற பாவங்களால் சூழப்பட்டுள்ள உயர்பிறப்பு கொண்டவர்களைத் தங்களுடைய தொடர்பு காரணமாக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வது குறித்தும்; அவர்களிடம் உள்ளதான ஸர்வேச்வரனுடைய ஈடுபாடும், அவனைக் குறித்தே இவர்கள் வாழ்கின்ற வாழ்வும், இப்படிப்பட்ட அவர்களுடைய தொடுதல் என்பதே அனைத்தையும் தூய்மையாக்கவல்லது என்பவை குறித்தும் - வேதங்கள் என்ற ப்ரமாணங்கள் மூலம் மட்டுமே அறியப்படுபவனாகிய ஸர்வேச்வரன் மற்றும் அப்படிப்பட்ட ப்ரமாணங்கள் மூலம் அறியப்படும் சான்றோர் ஆகியோர்களுடைய சொற்கள் கொண்டு, அற்பமான அறிவுள்ளவர்களும் புரிந்து கொள்ளும்படி உரைத்தார்.

86. அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாச்ரம வித்யா வ்ருத்தங்களை கர்தப ஜன்மம் ச்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹுதி சவ விதவாலங்காரமென்று கழிப்பார்கள்.

**அவதாரிகை** - "ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது" என்றவிடத்தில் ததுத்கர்ஷாபகர் ஷங்களுக்கு உடலாக விவக்ஷிதமானவற்றை மேலிரண்டு வாக்யத்தாலே வெளியிடுகிறார். அதில் ப்ரதமத்திலே அபக்ருஷ்ட ஜந்மம் இன்னதென்று தோற்றும்படி பகவத் ஜ்ஞாந ரஹிதமான வர்ணாதிகளில் ஹேயத்வத்தை ஸப்ரமாணமாக தர்சிப்பிக்கிறார் (அஜ்ஞரென்று தொடங்கி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் "ஜந்ம உத்கர்ஷ அபகர்ஷங்கள் தெரிவது" என்றார். அந்தந்த பிறவிகளில் ஏற்படும் உயர்வு மற்றும் தாழ்வுகளுக்குக் காரணமாக உள்ளவை குறித்து அடுத்துள்ள இரண்டு சூர்ணைகளில் அருளிச்செய்கிறார். இவற்றில் முதலில், தாழ்ந்த பிறவி என்றால் இத்தகையது என்று உணர்த்தும்படி, பகவானைக் குறித்த ஞானம் இல்லாதவர்களுடைய தாழ்வினைத் தகுந்த ப்ரமாணங்கள் மூலம் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, பகவத் தாஸ்யமே ஆத்மாவுக்கு நிரூபகமென்று நிஷ்கர்ஷித்து ததநுகுணமாக ஹேயோபாதேய விபாகம் பண்ணத்தக்க ஜ்ஞாநமில்லாதவர்கள் பகவதந்வய ரஹிததயா அபக்ருஷ்டராயிருக்க, உத்தமவர்ணம், உத்தமாச்ரமம்,


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸத்வித்யை, ஸத்வ்ருத்தம் என்று உத்க்ருஷ்டமாக ப்ரமிக்கிற வர்ணாதியானவற்றை, “சதுர்வேததரோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி, வேதபார பராக்ராந்தஸ் ஸவை ப்ராஹ்மண கர்தப:” என்று நாலு வேதங்களையு மதிகரித்து வைத்தே, “ஸர்வே வேதா யத் பதமாமநந்தி”, “வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:” என்கிறபடியே ஸகல வேத ப்ரதிபாத்யனான ஸர்வேச்வரனை யறியாதவன் குங்குமம் சுமந்த கழுதைபோலே தான் பரித்துக் கொண்டு திரிகிற வேதத்தின் பரிமளமறியாத ப்ராஹ்மணக் கழுதையென்றும்,

**விளக்கம்** – (அஜ்ஞர்) - ஸர்வேச்வரனுக்கு அடிமையாக இருத்தல் என்பதே ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றது என்று உறுதிபட தீர்மானித்து, அதற்கு ஏற்றபடி தள்ளத்தக்கது எது மற்றும் ஏற்கத்தக்கது எது என்று பிரித்து அறியும் ஞானம் அற்றவர்கள், அத்தகைய ஞானம் இல்லாத காரணத்தால் மட்டுமே தாழ்ந்தவர்களாக உள்ளபோது, (ப்ரமிக்கிற வர்ண ஆச்ரம வித்யா வ்ருத்தங்களை) - உயர்ந்த வர்ணம், உயர்ந்த ஆச்ரமம், சிறந்த கல்வி, சிறந்த ஆசாரம் போன்றவற்றையே உயர்ந்ததாக எண்ணுகின்ற வர்ணம் போன்றவற்றையே உயர்வு என்று கருத்துகின்ற, (கர்தப ஜன்மம்) – [கர்தபம் என்றால் கழுதை] உயர்குலத்தில் பிறவி கொண்டவனை, சதுர்வேததரோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி, வேதபார பராக்ராந்தஸ் ஸவை ப்ராஹ்மண கர்தப: - எந்த ஒரு அந்தணன் நான்கு வேதங்களையும் அறிந்துள்ளபோதிலும், எங்கும் வ்யாபித்து நிற்கும் வாஸுதேவனை அறியாமல் உள்ளானோ, அவன் வேதங்கள் என்ற பாரத்தைத் சுமக்கின்ற அந்தணக் கழுதை ஆவான் - என்பதற்கு ஏற்ப நான்கு வேதங்களை அத்யயனம் செய்துள்ளபோதிலும், கடவல்லீ - ஸர்வே வேதா யத் பதமாமநந்தி - எந்த ஒரு பரமாத்மாவை அனைத்து வேதங்களும் கூறுகின்றனவோ – என்றும், கீதை (15-15) - வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய: - அனைத்து வேதங்களாலும் அறியத்தக்கவன் நானே ஆவேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து வேதங்களாலும் கூறப்படுகிற ஸர்வேச்வரனை அறியாதவன், குங்குமப்பூவை அதன் நறுமணம் அறியாமல் சுமக்கும் கழுதை போன்று, தான் சுமந்து நிற்கும் வேதங்களின் பரிமளம் அறியாத அந்தணக்கழுதை போன்றவன் என்று இகழ்வார்கள்.

**வ்யாக்யானம்** - “ச்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக:, விஷ்ணு பக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம:” என்று சரமாச்ரமியாகிலும் பகவத் பக்தி ஹீனனானவன் ச்வபசனிற்காட்டில் தண்ணியனென்றும்,

**விளக்கம்** - (ச்வபசாதமம் என்று) - உயர்ந்த வர்ணம், உயர்ந்த ஆச்ரமம், சிறந்த கல்வி, சிறந்த ஆசாரம் போன்றவற்றையே உயர்ந்ததாக எண்ணுகின்ற உயர்ந்த ஆச்ரமத்தில் உள்ள ஒருவனை, ச்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக:, விஷ்ணு பக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம: - விஷ்ணுவிடம் பக்தி உள்ளவன் நாய் இறைச்சி உண்பவன் என்றாலும் அவன் அந்தணனைக் காட்டிலும் உயர்ந்தவன் ஆகிறான்; விஷ்ணுபக்தி இல்லாதவன் ஸந்ந்யாஸி என்றாலும், அவன் நாய் இறைச்சி உண்பவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் ஆகிறான் - என்பதற்கு ஏற்ப, அனைத்தும் துறந்தவன் என்றாலும் பகவத் பக்தி அற்றவன் நாய் இறைச்சி உண்பவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் என்று இகழ்வது போன்று இகழ்வார்கள்.

**வ்யாக்யானம்** – "தத் கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே, ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா சில்பநைபுணம்" என்று பகவத்பரதயா மோக்ஷார்த்தையானதுவே வித்யை; அல்லாதது செருப்புத் தைக்கத் தக்கவோபாதியென்றும்,

**விளக்கம்** - (சில்பநைபுணம்) - உயர்ந்த வர்ணம், உயர்ந்த ஆச்ரமம், சிறந்த கல்வி, சிறந்த ஆசாரம் போன்றவற்றையே உயர்ந்ததாக எண்ணுகின்ற உயர்ந்த கல்வி உள்ள ஒருவனை, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-41) - தத் கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே, ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா சில்பநைபுணம் - எந்த ஒரு செய்கை ஸம்ஸார பந்தத்தை உண்டாக்காதோ அதுவே சிறந்த செய்கை; எந்த ஒரு கல்வி மோக்ஷத்திற்குப் பயன்படுமோ அதுவே உயர்ந்த கல்வி; மற்ற கல்வி அனைத்தும் செருப்புத் தைக்கக் கற்ற கல்வி போன்றது - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனைக் குறித்து உள்ளதன் காரணமாக மோக்ஷம் அளிப்பதற்காக உள்ளதே கல்வி ஆகும்; மற்ற கல்வி அனைத்தும் செருப்பு தைப்பதற்குக் கற்றது போன்றதே ஆகும் என்று அவனுடைய அறிவை இகழ்வார்கள்.

**வ்யாக்யானம்** – "ஆம்நாயாப்யஸநாநி அரண்ய ருதிதம் வேதவ்ரதாநி அந்வஹம் மேதச்சேத பலாநி பூர்த்தவிதய: ஸர்வே ஹுதம் பஸ்மநி, தீர்த்தாநாம் அவகாஹநாநி ச கஜ ஸ்நாநம் விநா யத் பதத்வந்த்வாம்போருஹ ஸம்ஸ்ம்ருதீ விஜயதே தேவஸ் ஸ நாராயண:" என்று பகவத் ஸ்ம்ருதியில்லாதவர்களுடைய கர்மாநுஷ்ட்டாநம் பஸ்மாஹுதிவத் நிஷ்ப்ரயோஜநமென்றும்,

**விளக்கம்** - (பஸ்மாஹுதி) - முகுந்தமாலை (25) – ஆம்நாயாப்யஸநாநி அரண்ய ருதிதம் வேதவ்ரதாநி அந்வஹம் மேதச்சேத பலாநி பூர்த்தவிதய: ஸர்வே ஹுதம் பஸ்மநி, தீர்த்தாநாம் அவகாஹநாநி ச கஜ ஸ்நாநம் விநா யத் பதத்வந்த்வாம்போருஹ ஸம்ஸ்ம்ருதீ விஜயதே தேவஸ் ஸ நாராயண: - நாராயணனின் திருவடித் தாமரைகள் குறித்த சிந்தனை இன்றிச் செய்யப்படும் வேத அத்யயனம் என்பது காட்டில் நின்று அழுவது போன்று பயன் இல்லாதது ஆகும்; வேதங்களில் கூறப்பட்ட கர்மங்களை இயற்றினாலும் அவை சரீரம் இளைத்தல் என்பதை மட்டுமே பயனாகக் கொண்டவை ஆகும்; குளம் வெட்டுதல் போன்ற தர்மங்களும் சாம்பலில் இடப்படும் அவிர்பாகம் போன்று பயனற்றவை ஆகும்; கங்கை போன்ற புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவதும் யானை நீராடுவது போன்று பயன் அற்றவை ஆகும்; இப்படியாக நாராயணன் உயர்ந்தவன் ஆவான் – என்று கூறுவ்தற்கு ஏற்ப, ஸர்வேச்வரனை த்யானம் செய்யாமல் உள்ளவர்கள் செய்கின்ற கர்மங்கள் அனைத்தும் சாம்பலில் இடப்படும் அவிர்பாகம் போன்று பயனற்றவை என்று இகழ்வார்கள்.

**வ்யாக்யானம்** - "யஸ்யாகிலாமீவஹபிஸ் ஸுமங்கலைர் வாசோ விமிச்ரா குணகர்ம ஜந்மபி:, ப்ராணந்தி சும்பந்தி புநந்தி வை ஜகத் யாஸ் தத் விமுக்தாச் சவ சோபநா மதா:", "விஷ்ணு பக்தி விஹீநஸ்ய வேதச் சாஸ்த்ர ஜபஸ் தப:, அப்ராணஸ்யேவ தேஹஸ்ய மண்டநம் லோகரஞ்ஜநம்" என்று பகவதந்வய ரஹிதோக்திகளும் பகவத்பக்தி ஹீநனுடைய வித்யா வ்ருத்தங்களும் சவாலங்கார கல்பமென்றும்,

**விளக்கம்** - (சவ அலங்காரம்) – ஸ்ரீமத்பாகவதம் (10-18-12) - யஸ்யாகிலாமீவஹபிஸ் ஸுமங்கலைர் வாசோ விமிச்ரா குணகர்ம ஜந்மபி:, ப்ராணந்தி சும்பந்தி புநந்தி வை ஜகத் யாஸ் தத் விமுக்தாச் சவ சோபநா மதா: - அனைவருடைய பாவங்களை நீக்குவதாகவும், அனைத்து மங்களங்களையும் அளிப்பதாகவும் உள்ள க்ருஷ்ணனுடைய குணங்கள், செய்கைகள் மற்றும் அவதாரங்கள் குறித்து உரைக்கப்படும் சொற்களே உலகத்தைச் செழிக்க வைக்கின்றன, உயர்த்துகின்றன, தூய்மையாக்குகின்றன; அவை அல்லாத மற்ற வாக்குகள் அனைத்தும் பிணத்திற்குச் செய்யும் அலங்காரங்கள் போன்றவையே ஆகும் - என்றும், விஷ்ணு பக்தி விஹீநஸ்ய வேதச் சாஸ்த்ர ஜபஸ் தப:, அப்ராணஸ்யேவ தேஹஸ்ய மண்டநம் லோகரஞ்ஜநம் - விஷ்ணுபக்தி அற்றவனுடைய வேத அத்யயனம், ஜபம், தவம் போன்றவை அனைத்தும் உயிரில்லாத சரீரத்திற்கு இந்த உலகில்

உள்ளவர்களுடைய மகிழ்வுக்கு வேண்டிச் செய்யும் அலங்காரம் போன்றவை – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வர சம்பந்தம் நீங்கப் பெற்ற சொற்கள், பகவத் பக்தி அற்றவனுடைய கல்வி மற்றும் ஒழுக்கம் முதலானவை, பிணத்திற்குச் செய்யப்படும் அலங்காரம் போன்றவை என்று அவனுடைய பலவற்றையும் இகழ்வார்கள்.

**வ்யாக்யானம் –** “ப்ராதுர்ப்பாவைஸ் ஸுரநரஸமோ தேவதேவஸ் ததீயா ஜாத்யா வ்ருத்தை ரபிச குணதஸ் தாத்ருசோ நாத்ர கர்ஹா, கிந்து ஸ்ரீமத், புவந பவந த்ராணதோந்யேஷு வித்யா வ்ருத்த ப்ராயோ பவதி விதவாகல்பகல்ப: ப்ரகர்ஷ:” என்று பகவதந்விதருடைய வித்யா வ்ருத்த பாஹுள்யமாகிற உத்கர்ஷம், பகவத் ஸம்பந்த ஜ்ஞாந ரூப ஸௌமங்கல்யா பாவத்தாலே விதவாலங்கார ஸமமென்றும் ஜ்ஞாநிகளானவர்கள் இகழ்வர்களென்கை. ஆக இப்படி பகவத் விஷய ஸ்பர்சமற்ற வர்ணாச்ரமங்களும் ஜ்ஞாந வ்ருத்தங்களும் ஹேயமென்கையாலே, கீழ் அபக்ருஷ்ட ஜந்மதயா விவக்ஷிதமானது இன்னதென்னு மிடமறிவித்தாராய்த்து.

**விளக்கம் -** (விதவா அலங்காரம்) - ப்ராதுர்ப்பாவைஸ் ஸுரநரஸமோ தேவதேவஸ் ததீயா ஜாத்யா வ்ருத்தை ரபிச குணதஸ் தாத்ருசோ நாத்ர கர்ஹா, கிந்து ஸ்ரீமத், புவந பவந த்ராணதோந்யேஷு வித்யா வ்ருத்த ப்ராயோ பவதி விதவாகல்பகல்ப: ப்ரகர்ஷ: – ஸர்வேச்வரன் தான் எடுக்கின்ற அவதாரங்கள் காரணமாக தேவர்கள், மனிதர்கள் போன்ற இனத்தவன் ஆகிறான்; பாகவதர்கள் கூட தங்களுடைய பிறப்பு, ஒழுக்கம் போன்றவற்றால் இவ்விதம் ஆகிறார்கள்; இவற்றால் எந்தவிதமான தோஷமும் இல்லை. இவை அனைத்தும் உயர்ந்தவையே ஆகும். பகவானின் அடியார்கள் அல்லாதவர்களிடம் உள்ள கல்வி, ஒழுக்கம் முதலானவற்றால் ஏற்படும் மேன்மை என்பது விதவைக்குச் செய்யப்பட்ட அலங்காரம் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுடைய சம்பந்தம் அற்றதான கல்வி, ஒழுக்கம் போன்றவை மூலம் ஏற்படும் மேன்மை என்பது, பகவத் சம்பந்த ஞானம் என்ற திருமாங்கல்யம் இல்லாத காரணத்தால், விதவைக்குச் செய்யப்பட்ட அலங்காரம் போன்றது என்று இகழ்வார்கள். ஆக இப்படியாக, ஸர்வேச்வரனுடைய விஷய சம்பந்தம் அற்றதான வர்ணம், ஆச்ரமம், ஞானம் போன்ற பலவும் தள்ளப்பட வேண்டியது என்பதால், இதுவரை கூறப்பட்டதான தாழ்ந்த பிறவி என்பது இத்தகையது என நிரூபித்தார் என்று கருத்து.

ஆசார்யம் ஹ்ருதயம் முதல் பகுதி ஸம்பூர்ணம்

ஸ்வாமி அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

(இரண்டாம் ப்ரகரணம் : சூர்ணைகள் 87 – 149)

**(ஸ்வாமி மணவாள மாமுனிகள் வ்யாக்யான மூலம், எளிய நடை)**



(ஆசார்ய ஹ்ருதயத்தின் மூலப்பொருளாம் நம்மாழ்வார்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

# இரண்டாம் ப்ரகரணம்

87. அணையவூரப்புனைய அடியும் பொடியும்படப் பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப் பெறுகிற திர்யக் ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பார்கள்.

**அவதாரிகை** - இனிமேல் ஆத்மநிரூபக சேஷத்வாநுகூல ஜந்மமே உத்க்ருஷ்ட ஜந்மமென்னுமத்தை அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரும் முமுக்ஷுக்களுமான மஹாத்மாக்களாதர முகேந ப்ரகாசிப்பிக்கிறார் - (அணையவென்று தொடங்கி).

**விளக்கம்** - அடுத்து "ஆத்மா இன்னது" என்று உணர்ந்தவல்ல தன்மையாக உள்ளதான "ஸர்வேச்வரனுக்கு அடிமைத்தனம் செய்தல்" என்பதற்கு ஏற்றதான ஒரு பிறவியே உயர்த்த பிறவி என்பதை, இந்த உலகில் ஸம்ஸார தொடர்பு அற்றவர்களாகிய நித்யஸூரிகள் மற்றும் முமுக்ஷுக்கள் போன்ற மஹாத்மாக்களின் ஈடுபாடு மூலம் இந்தச் சூர்ணையில் வெளிப்படுத்துகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "அணைவதரவணைமேல் பூம்பாவையாகம் புணர்வது" என்று பிராட்டி திருமேனி ஸ்பர்சத்தோடொக்க விகல்பிக்கலாம்படி அத்யந்த ஸுக ஸ்பர்சமாய், சைத்ய மார்த்வ ஸௌரப்யங்களை ப்ரக்ருதியாக வுடையதாய்க் கொண்டு ச்ரிய:பதியானவன் கண்வளர்ந்தருளுகைக்குப் பாங்காயிருக்கும் திருவரவணையாயும், "ஊரும் புள்" என்கிறபடியே ஆர்த்த ரக்ஷணத்துக்கும் அநுகூலரை அநுபவிப்பிக்கைக்கும் தன் உகப்புத்தனக்குமாக அவன் பலகாலும் மேற்கொண்டு நடத்துகைக்கு வாஹனமான கருளப்புள்ளாயும், "தோளிணை மேலும் நன் மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாய்" என்கிறபடியே அவனாதரித்துச் சாத்துகைக்கு அர்ஹமான திருத்துழாயாயமிருக்கும் திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை "பெருமக்களுள்ளவர்" என்கிறபடியே "அஹ்ருத ஸஹஜ தாஸ்ய" ராகையாலே "அஸந்நேவ" என்பது "ஸந்தமேநம்" என்பதாக வேண்டாதபடி, என்றுமொக்க வுளரா யிருக்கிற மஹாத்மாக்களான நித்யஸூரிகள், பகவத் கைங்கர்யேச்சையாலே பரிக்ரஹித்தார்கள்.

**விளக்கம்** - (அணையப் பெறுகிற திர்யக் ஜந்மத்தை) – திருவாய்மொழி (2-8-1) – அணைவதரவணைமேல் பூம்பாவையாகம் புணர்வது - என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியின் திருமேனி தீண்டுதலால் ஏற்படும் இன்பத்திற்கு இணையாகக்

கூறலாம்படியாக எல்லையற்ற இன்பம் அளிக்கவல்லதாகவும், குளிர்ச்சி – மென்மை - நறுமணம் ஆகிய தன்மைகளை இயல்பாகக் கொண்டதாகவும், மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸர்வேச்வரன் கண்வளர்வதற்கு ஏற்றபடி பாங்காக அமைந்துள்ளதும் ஆகிய ஆதிசேஷன் என்ற பிறவியையும். (ஊரப் பெறுகிற திர்யக் ஜந்மத்தை) – திருவாய்மொழி (10-2-3) – ஊரும் புள் - என்பதற்கு ஏற்ப தனது அடியார்களுடைய துன்பங்களை நீக்குவதற்காகவும், தன்னை அனுபவிக்கவேண்டும் என்று எண்ணும் அடியார்கள் தன்னை அனுபவிக்கும்படிச் செய்வதற்காகவும், தனது மகிழ்வுக்காகவும் பலமுறை வீற்றிருந்து செல்லக்கூடிய வாகனமாக உள்ள கருடன் என்ற பிறவியையும். (புனையப் பெறுகிற ஸ்தாவர ஜன்மத்தை) – திருவாய்மொழி (1-9-7) - தோளிணை மேலும் நன் மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாய் – என்பதற்கு ஏற்ப அவன் மிகவும் மகிழ்வுடன் தன் மீது சார்த்திக் கொள்வதற்கு ஏற்றவிதத்தில் துளசியாக உள்ள செடிகளுடைய பிறவியையும். (பெருமக்கள் பரிக்ரஹித்து) – திருவாய்மொழி (3-7-5) - பெருமக்களுள்ளவர் - என்பதற்கு ஏற்ப, ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-33) - அஹ்ருத ஸஹஜ தாஸ்ய – கைங்கர்யம் என்ற செல்வத்தை இயற்கையாகவே உடைய நித்யசூரிகள் – என்பதற்கு ஏற்ப உள்ளதால், தைத்திரீயம் – அஸந்நேவ - ப்ரஹ்மத்தை உள்ளது என்று அறியாதவன், இல்லாத பொருள் ஆகிறான் - என்று கூறப்படும் நிலையானது பின்னர் மனம் திருந்தி, தைத்திரீயம் – ஸந்நமேநம் - ப்ரஹ்மத்தை உள்ளது என்று அறிந்தவன் உள்ள பொருள் என்றாகிறான் – என்று மாறவேண்டிய அவசியம் இல்லாமல், எப்போதும் ஒரே போன்று ப்ரஹ்மத்தை அண்டி நிற்கும் மஹாத்மாக்களாகிய நித்யஸூரிகள், [முன்பு கூறப்பட்ட விலங்கு, பறவை, செடி என்னும் மூன்றுவிதமான பிறவிகளை] ஸர்வேச்வரனுக்குத் தாங்களும், அந்தப் பிறவிகளும் செய்யும் கைங்கர்யத்தின் மேல் காண்பிக்கப்படும் இச்சை காரணமாக மிகுந்த ஈடுபாட்டுடன் ஏற்றுக் கொண்டனர்.

**வ்யாக்யானம்** – “பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே, அஹம் கதம்போ பூயாஸம் கந்தோ வா யமுநா தடே” என்று ப்ரஜாபதி பசுபதிகளுடைய ஐச்வர்யத்தையும் வேண்டேன்; “பூத்தநீள் கடம்பேறி” என்றும், “பூங்குருந்தேறி யிருத்தி” என்றும் சொல்லுகிறபடியே யமுனைக்கரையில் அவன் திருவடிகளால் மிதித்தேறின கடம்பாதல், குருந்தாதலாவேனாக வேணுமென்றும், “ஆஸாமஹோ சரணரேணு ஜுஷாமஹம் ஸ்யாம் ப்ருந்தாவநே கிமபி குல்மல தௌஷதீநாம், ய துஸ்த்யஜம் ஸ்வஜநமார்ய பதஞ்ச ஹித்வா பேஜுர் முகுந்தபதவீம் ச்ருதிபிர் விம்ருக்யாம்” என்று ச்ருதிகளாலே தேடப்படுமதான க்ருஷ்ணன் போன வழியை ஸ்வஜநாதிகளையும் அதிக்ரமித்து யாவர் சில பெண்கள் பின்

 Email:sridharan_book@yahoo.co.in

தொடர்ந்தார்கள், அவர்களுடைய பாத ரேணுவை பஜித்திருப்பனவாய் ப்ருந்தாவனத்தி லிருக்கும் சிறுசெடிகள், கொடிகள், ஓஷதிகளில் வைத்துக் கொண்டு ஏதேனுமொன்றாவேனாக வேணுமென்றும்; “கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே”, “மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே”, “செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே”, “தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே”, “எம்பெருமான் பொன்மலை மேலேதேனு மாவேனே” என்று திருமலையாழ்வாரோட்டை ஸம்பந்தமுடைய திர்யக் ஸ்தாவர ஜந்மங்களில் ஏதேனுமொன்றாகப் பெறுவேனாக வேணுமென்றும்; “தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம் பவநேஷ் வஸ்த்வபி கீடஜந்ம மே” என்று தேவரீருடைய தாஸ்ய ஸுகமொன்றிலுமே ஸங்கத்தையுடையரான ஸ்ரீவைஷ்ணவர் திருமாளிகைகளிலே உத்பத்தி விநாசங்களிரண்டும் அங்கேயாம்படியான கீடஜந்மமே எனக்குண்டாக வேணுமென்றும்,

**விளக்கம் -** (அடிபடப் பெறுகிற தாவர ஜந்மத்தை) - பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே, அஹம் கதம்போ பூயாஸம் கந்தோ வா யமுநா தடே - நான்முகனின் செல்வம் மற்றும் சிவனுடைய செல்வம் ஆகியவற்றை நான் விரும்பவில்லை, யமுனை நதியின் கரையில் கடம்பமரம் அல்லது குருந்த மரம் என்று நிற்பதை அடைவேனாக - என்று நான்முகன், சிவன் போன்றவர்களுடைய செல்வத்தை நான் வேண்டமாட்டேன்; நாச்சியார் திருமொழி (4-4) - பூத்தநீள் கடம்பேறி - என்றும், நாச்சியார் திருமொழி (3-3) - பூங்குருந்தேறி யிருத்தி – என்றும் கூறுவதற்கு ஏற்ப யமுனை நதியின் கரையில் க்ருஷ்ணன் தனது திருவடிகள் கொண்டு மிதித்து மேலே ஏறிய கடம்பமரம் அல்லது குருந்தமரம் என்றாக வேண்டும் என்றும் உள்ளதான பிறப்பையும்; (பொடிபடப் பெறுகிற தாவர ஜந்மத்தை) - ஸ்ரீமத் பாகவதம் (10-48-61) – ஆஸாமஹோ சரணரேணு ஜுஷாமஹம் ஸ்யாம் ப்ருந்தாவநே கிமபி குல்மல தௌஷதீநாம், ய துஸ்த்யஜம் ஸ்வஜநமார்ய பதஞ்ச ஹித்வா பேஜுர் முகுந்தபதவீம் ச்ருதிபிர் விம்ருக்யாம் – எந்தக் கோபிகைகள், விட இயலாத உறவினர்கள் மற்றும் பெரியோர்கள் சென்ற வழியை விட்டு அகன்று, க்ருஷ்ணன் சென்ற வழியைப் பின்பற்றி நடந்தார்களோ, அத்தகைய கோபிகைகளுடைய பாதத்துளிகள் படிந்ததான ப்ருந்தாவனத்தில் உள்ள புதர்கள், கொடிகள், மரங்கள் என்பவற்றில் நான் ஏதேனும் ஒன்றாக ஆவேனாக – என்று கூறுவதற்கு ஏற்ப, ச்ருதிகளாலும் தேடப்படும் க்ருஷ்ணன் சென்ற வழியில், தங்களுடைய உறவினர்களையும் விட்டு கோபிகைகள் சென்றனர்; இப்படிப்பட கோபிகைகளுடைய பாதத்துளிகளை எப்போதும் வணங்கியபடி உள்ளதும், ப்ருந்தாவனத்தில் உள்ளதுமாகிய

சிறுசெடிகள், கொடிகள், மரங்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாக வேண்டும் என்று உள்ளதான பிறப்பையும்; (பர்வதத்தில் ஏதேனுமாக பெறுகிற திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை) - பெருமாள் திருமொழி (4-1) - கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே - என்றும், பெருமாள் திருமொழி (4-2) - மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே - என்றும், பெருமாள் திருமொழி (4-4) - செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே, பெருமாள் திருமொழி (4-5) - தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே - என்றும், பெருமாள் திருமொழி (4-10) - எம்பெருமான் பொன்மலை மேலேதேனு மாவேனே - என்றும் கூறுவதற்கு ஏற்ப திருவேங்கட திருமலையின் தொடர்பு உள்ளதான விலங்குகள், தாவரங்கள் என்பதான ஏதேனும் ஒன்றாகப் பிறக்கவேண்டும் என்பதான பிறப்பையும். (பவநங்களிலே ஜநிக்கப் பெறுகிற திர்யக் ஜந்மத்தை) – ஸ்தோத்ரரத்னம் (55) – தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம் பவநேஷ் வஸ்த்வபி கீடஜந்ம மே - உனக்குக் கைங்கர்யம் செய்வதன் மூலம் கிட்டவல்ல இன்பம் என்பதை மட்டுமே விரும்புகின்றவர்களுடைய வீடுகளில், பிறப்பு இறப்பு என்ற இரண்டுமே எனக்கு ஏற்படும்படியாக உள்ள புழு போன்ற தாழ்ந்த பிறவியாவது எனக்கு வேண்டும் என்பதான பிறப்பையும்.

**வ்யாக்யானம்** - இப்படி அவனடிபடவும், அவனையணைந்தாரடியில் பொடிபடவும், அவனுகந்தருளின நிலத்திலேயாதல், அவனடியார் அபிமாநமுள்ள நிலத்திலேயாதல் வர்த்திக்கவுமீடாக ஜநிக்கப் பெறுகிற திர்யக் ஸ்தாவர ஜன்மங்களை, “பேராளன் பேரோதும்” பெரியோரான ஸ்ரீசுகப்ரஹ்மர்ஷி, ஸ்ரீகுலசேகரப்பெருமாள், பெரியமுதலியார் முதலான முமுக்ஷுக்கள் ப்ரார்த்தித்தார்களென்றபடி.

**விளக்கம்** - (பெரியோரும் ப்ரார்த்திப்பர்) இப்படியாக அவனுடைய திருவடிகள் படும்படியாகவும், அவனை அண்டி நிற்பவர்களுடைய திருப்பாதத்துளிகள் படும்படியாகவும், அவன் மிகவும் உகப்புடன் வசிக்கின்ற திவ்யதேசத்தில் உள்ளபடியாகவும், அவனுடைய அடியார்கள் விருப்பத்துடன் வசிக்கின்ற இடத்தில் உள்ளபடியாகவும் இருக்கின்றதான விலங்கு, தாவரம் போன்ற பிறவிகளை, பெரியதிருமொழி (7-4-4) - பேராளன் பேரோதும் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்களான ஸ்ரீசுகப்ரஹ்மம், குலசேகராழ்வார், ஆளவந்தார் போன்றவர்கள் வேண்டி நின்றனர்.

**வ்யாக்யானம்** – இத்தால் “வாசிகை: பக்ஷி ம்ருகதாம் மாநஸைரந்த்ய ஜாதிதாம், சரீரஜை: கர்மதோஷைர் யாதி ஸ்தாவரதாம் நர:” என்ற இந்த விபூதியில் திர்யக் ஸ்தாவர ஜந்மங்கள் வாசிக காயிக பாப பலன்களாக சாஸ்த்ர சொல்லாநிற்க, அப்படியன்றிக்கே பகவத் விநியோகார்ஹமாக இந்த ஜந்மங்களை நித்யஸூரிகள் ஸ்வேச்சையாலே ஏறிட்டுக் கொள்ளுவர்களென்றும், தாஸ்ய ரஸஜ்ஞரான முமுக்ஷுக்கள் தத் ஸம்பந்த ததீய ஸம்பந்தமுள்ள திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை ப்ரார்த்திப்பர்களென்றும் சொல்லுகையாலே தாஸ்யாநுகுண ஜந்மமே உத்க்ருஷ்ட மென்றதாய்த்து.

**விளக்கம்** – மநுஸ்ம்ருதி (12-9) – வாசிகை: பக்ஷி ம்ருகதாம் மாநஸைரந்த்ய ஜாதிதாம், சரீரஜை: கர்மதோஷைர் யாதி ஸ்தாவரதாம் நர: - சொற்கள் மூலம் ஏற்பட்ட தோஷங்கள் காரணமாகப் பறவை மற்றும் விலங்கு போன்ற பிறவிகள், மனதால் ஏற்பட்ட தோஷத்தால் சண்டாளப் பிறப்பு, சரீரத்தால் ஏற்பட்ட தோஷத்தால் தாவரப் பிறவி ஆகியவற்றை ஜீவாத்மா அடைகிறான் - என்பதற்கு ஏற்றபடி, இந்த உலகில் விலங்குகள் பறவைகள், மரங்கள், செடிகள் என்பதான பிறவிகள், வாக்கு மற்றும் சரீரம் போன்றவற்றால் உண்டாகும் தோஷங்களுடைய பலன்கள் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன; ஆனால், இதனை விடுத்து ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்வதற்குத் தகுதியாக இந்தப் பிறவிகளை நித்யஸூரிகள் தங்களுடைய விருப்பத்தின் காரணமாக ஏற்பார்கள் என்றும், ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ளதன் சுவையை அறிந்த முமுக்ஷுக்கள், ஸர்வேச்வரன் மற்றும் அவன் அடியார்களுடைய ஸம்பந்தம் உள்ளதான விலங்கு மற்றும் தாவர பிறவிகளை வேண்டி நிற்பர்கள் என்றும் இந்தச் சூர்ணையில் கூறுவதால், ஸர்வேஸ்வரனுக்குக் கைங்கர்யம் செய்யவல்ல பிறப்பே உயர்ந்த பிறப்பு என்றாகிறது.

88. சேஷத்வ பஹிர்ப்பூத ஜ்ஞாநாநந்த மயனையும் ஸஹியாதார் த்யாஜ்யோபாதியை ஆதரியார்களே.

**அவதாரிகை** - பகவத் விநியோகார்ஹ மாகையாலே திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை நித்யஸூரிகள் பரிக்ரஹிக்கை ப்ராப்தம்; அங்ஙனன்றிக்கே, முமுக்ஷுக்களான விவர்கள் பகவத் பாகவத சேஷத்வ வாஞ்சையாலே திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை ப்ரார்த்தித்தார்களாகிலும், உத்க்ருஷ்டதயா சாஸ்த்ரஸித்தமான வர்ணத்தை இப்படி கழிக்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (சேஷத்வேத்யாதி).

**விளக்கம்** - ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்வதற்கு ஏற்றபடி உள்ளதாகையால் விலங்கு, தாவர பிறவிகளை நித்யஸூரிகள் விரும்பி ஏற்பது தக்கதே ஆகும். ஆனால் ஸர்வேச்வரன் மற்றும் பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்வதற்காக முமுக்ஷுக்கள் விலங்கு மற்றும் தாவர பிறவிகளை வேண்டினாலும், உயர்ந்தது என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட வர்ணங்களைத் தள்ளுவது ஏன் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகம் அசேஷாபிலஷிதம் நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத், பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹேயாது சததா விநாசம் தத் ஸத்யம் மதுமதந! விஜ்ஞாபநமிதம்" என்று தேவரீருடைய சேஷத்வத்துக்குப் புறம்பான தேஹாதிகளொன்றைம் க்ஷணமும் ஸஹியேன், அவ்வளவன்றியே ஜ்ஞாநாநந்தமயமான ஆத்வஸ்துவையும் ஸஹியேன், ஆக சத்தாவாக விநாசத்தையடைவதாக; இந்த விண்ணப்பம் அஹ்ருதயமன்று ஸத்யம், திருமுன்பே பொய் சொன்னேனாகில், தேவரீர்க்குப் பொய்யனான மது பட்டது படுகிறேனென்கையாலே, ஷேஷத்வத்துக்குப் புறம்பானபோது "ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா" என்று ஜ்ஞாநாநந்த மயத்வத்தாலே ச்லாக்யமாயிருக்கு மாத்மாவையும் ஸஹியாதவர்கள், சேஷத்வ விரோதி பூத அஹங்கார ஹேதுவாகையாலே த்யாஜ்யமாய் கர்மநிபந்தனமாகையாலே ஔபாதிகமா யிருக்கிற வர்ணத்தை ஆதரிப்பார்களோவென்கை. ஔபாதிகமானவித்தை உபாதியென்றது கார்யே காரணோபசாரம்.

**விளக்கம்** - (சேஷத்வ பஹிர்ப்பூத ஜ்ஞாநாநந்த மயனையும் ஸஹியாதார்) - ஸ்தோத்ரரத்னம் (57) – ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகம் அசேஷாபிலஷிதம் நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத், பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹேயாது சததா விநாசம் தத் ஸத்யம் மதுமதந! விஜ்ஞாபநமிதம் - மதுஸூதனா! உனக்குக் கைங்கர்யம் செய்வதற்கு ஒத்துழைக்காத எனது இந்தச் சரீரம், ப்ராணன், உலக இன்பங்கள், ஆத்மா போன்ற எதனையும் நான் விரும்பவில்லை. இவை அனைத்தும் நூறு துண்டுகளாக அடையாளம் இன்றிச் சிதைந்து போகக்கடவது. எனது இந்த விண்ணப்பம் அடியேன் மனம் அறிந்து செய்வதாகும், இது சத்தியம் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்தலுக்குப் புறம்பாக உள்ள சரீரம் போன்ற எதனையும், ஒரு நொடிப்பொழுது கூட என்னால் பொறுத்துக் கொள்ள இயலாது; அது மட்டும் அல்லாமல்,

ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ள ஆத்மாவையும் பொறுக்க இயலாது; அவை நூறு துகள்களாக அழியட்டும்; இந்த விண்ணப்பம் எனது இதயத்தினால் அறியப்படாதது அல்ல, அறிந்து கூறுகின்ற சத்திய வாக்காகும்; உன் முன்பாக நான் மெய் உரைக்காமல் பொய்யாக உரைத்தேன் என்றால், மது என்ற அரக்கன் அழிந்தது போன்று அழியக்கடவேன் - என்று கூறினார். ஆகவே, அடிமைத்தனத்திற்குப் புறம்பாக உள்ளபோது, ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா - ஞானம் மற்றும் ஆனந்தமயமான ஆத்மா – என்று கூறுவதற்கு ஏற்ப, ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ளதால் போற்றத்தக்கதான ஆத்மாவைக் கூடப் பொறுத்துக் கொள்ளாதவர்கள், (த்யாஜ்ய உபாதியை ஆதரியார்களே) - ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள தன்மைக்கு விரோதமாக உள்ளதான அஹங்காரத்திற்குக் காரணமாக உள்ளதால் கைவிடத்தக்கதாகவும், கர்மம் காரணமாக வந்தது என்பதால் வந்தேறியதாகவும் உள்ள வர்ணத்தை ஆதரிப்பார்களோ? மாட்டார்கள் இங்கு "வந்து சேர்ந்தது" என்பதை உபாதி என்பதாகக் கொள்க.

89. இதன் ஔபாதிகத்வம் ஒரு ராஜா தன்னை மறைமுனிவனாக்கினவன் நீசனாக்குவித்த ராஜாவை வாரே உறுப்பாக யஜிப்பித்து ஸ்வர்க்கமேற்றினபோதே தெரியும்.

**அவதாரிகை** - வர்ணத்தினுடைய ஔபாதிகத்வந்தன்னை உதாஹரண முகேந தெளிவிக்கிறார் மேல் (இதினௌபாதிகத்வம் ஒரு ராஜாவென்று தொடங்கி).

**விளக்கம்** – வர்ணம் என்பது ஜீவாத்மாவுக்கு இயல்பானது அல்ல, அது வந்தேறியதாகும் என்பதை ஓர் உதாரணம் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வர்ணத்தினுடைய ஔபாதிகத்வம் குசிக வம்ச்யனாய் ராஜாவான விச்வாமித்ரன் ப்ரஹ்மருஷித்வ காமனாய், நெடுங்காலம் தபஸ்ஸு பண்ணின தன்னை "மந்திரங்கொள் மறைமுனிவன்" என்னும்படி ப்ரஹ்மருஷியாக்கின சக்திமானான வஸிஷ்டன் தன் வார்த்தை கேளாமல் தன்னை அவமதி பண்ணிப்போனது கொண்டு ஸ்வபுத்ரர்கள் பண்ணின சாபத்தாலே மார்பிலிட்ட யஜ்ஞோபவீதமே வாராம்படி சண்டாள னாக்குவித்த இக்ஷ்வாகு வம்ச்யனாயிருந்துள்ள த்ரிசங்குவாகிற ராஜாவை அந்த வார்தானே யஜ்ஞாங்கமான உறுப்புத் தோலாகக் கொண்டு தன்னுடைய தபோ பலத்தாலே யஜிப்பித்து ஸ்வர்க்காரோஹணம் பண்ணுவித்தபோதே ஸுஸ்பஷ்ட மென்கை. இத்தால், ஒரு க்ஷத்ரியன் ஸுக்ருத விசேஷத்தாலே அந்த சரீரந் தன்னோடே

ப்ரஹ்மருஷிகையாலும், ஒரு க்ஷத்ரியன் துஷ்க்ருத விசேஷத்தாலே அந்த சரீரந் தன்னோடே சண்டாளனாகையாலும், க்ஷத்ரியத்வம் போய் ப்ரஹ்மருஷியானவன் தான் ப்ரஹ்மருஷியாவதுக்கு முன்பே க்ஷத்ரிய வேஷம் போய் சண்டாள வேஷமாய் நிற்கிறவனை, அந்த வேஷந் தன்னோடே யஜிப்பித்து ஸ்வர்க்கத்திலே யேற்றுகையாலும் வர்ணத்தின் கர்மோபாதிகத்வம் எல்லார்க்கும் தோன்றுமென்றதாய்த்து.

**விளக்கம்** - (இதன் ஔபாதிகத்வம்) – வர்ணங்கள் என்பது வாழும்போது நடுவில் வந்து தோன்றியவை என்பது, (ஒரு ராஜா) – குசிக குலத்தில் வந்த அரசனாகிய விச்வாமித்ரன். (தன்னை) - தான் ஒரு ப்ரஹ்மரிஷி ஆகவேண்டும் என்று விருப்பம் கொண்டு நீண்டகாலம் தவம் செய்த தன்னை. (மறைமுனிவன் ஆக்கினவன்) - பெருமாள் திருமொழி (10-2) – மந்திரங்கொள் மறைமுனிவன் - என்பதற்கு ஏற்றபடி ப்ரஹ்மரிஷி ஆக்கிய சக்தி வாய்ந்த வசிஷ்டன். (நீசன் ஆக்குவித்த ராஜாவை)- தனது [வசிஷ்டர்] சொற்களைக் கேட்காமல் தன்னை [வசிஷ்டன்] அவமதித்தான் என்ற காணத்தால், தனது [திரிசங்குவின்] புதல்வர்கள் அளித்த சாபம் காரணமக மார்பில் அணிந்துள்ள யஜ்ஞோபவீதம் என்பதே வாராகும்படி சண்டாளன் ஆக்கிய இக்ஷ்வாகு குலத்தில் வந்த திரிசங்கு என்ற அரசனை, (வாரே உறுப்பாக யஜிப்பித்து) - அப்படிப்பட்ட வார் என்பதையே யாகத்திற்கு உறுப்பாக உள்ள உறுப்புத்தோலாகக் கொண்டு விச்வாமித்திரனாகிய தனது தவ வலிமை மூலம் யாகத்தை முடித்து, (ஸ்வர்க்கம் ஏற்றினபோதே தெரியும்) – ஸ்வர்க்கத்திற்குப் போகும்படிச் செய்தான். இதன் மூலம், க்ஷத்ரியனாகிய ஒரு அரசன், தனது புண்ணிய பலன்கள் காரணமாக அந்தச் சரீரத்தில் உள்ளபோதே ப்ரஹ்மரிஷி ஆனதாலும்; க்ஷத்ரியனாகிய திரிசங்கு என்ற அரசன் தனது பாவ பலன்கள் காரணமாக அந்தச் சரீரத்தில் உள்ளபோதே சண்டாளன் ஆனதாலும்; க்ஷத்ரியனாய் நின்ற விச்வாமித்ரன், தான் ப்ரஹ்மரிஷி ஆவதற்கு முன்பாகவே, க்ஷத்ரியத் தன்மை மறைந்து சண்டாளனாய் நின்ற திரிசங்கு என்ற அரசனை, அப்படிப்பட்ட பிறவியிலேயே யாகம் செய்து ஸ்வர்க்கத்தில் ஏற்றியதாலும் - வர்ணங்கள் என்பது புண்ணிய பாவ கர்மங்கள் மூலம் வந்து சேர்வதாகும் என்பது தெளிவாகிறது.

90. மாவுருவில் கள்ளவேடம், திருந்து வேதமலமான மானிடம் பாடல், ஸர்வவர்ண சூத்ரத்வம், காடுவாழ் சாதியில் கடல்வண்ணன் வேடம், தென்னுரையில் ஹரிகீர்த்தி, ச்வபசரில் பத்திபாசனமுமறிவார் ஆராரமரரென்ன வேற அறியாதார் சாதியந்தணர் களேலும் தகர விழுவர்.

**அவதாரிகை** - இனிமேல் ப்ராகரணிகமாய் வருகிற ப்ரமாத்ரு வைபவ ஸ்தாபநத்துக்கு உறுப்பாக ப்ரமாண ப்ரமேயங்களையும் கூட்டிக் கொண்டு மூன்றிலும் த்யாஜ்யோபாதே யாம்சங்க ளுண்டென்னு மிடத்தை விபஜித்துச் சொல்லி இவ்விசேஷமறிவார் பெறும் பேற்றையும், இதறியாமல் பாகவத ஜன்ம நிரூபணம் பண்ணுவார் அத:பதிக்கும் படியையும் அறிவிக்கிறார் (மாவுருவிலித்யாதியாலே).

**விளக்கம்** - அடுத்து, ப்ரமாண வாக்கியங்கள் உரைக்கத்தக்கவராகிய ப்ரமாத்ரு என்று கொண்டாடப்படத் தக்கவராகிய, நம்மாழ்வாரின் மேன்மையை நிலைநிறுத்தும் பொருட்டு, ப்ரமாணம் மற்றும் ப்ரமேயம் ஆகிய இரண்டையும் சேர்த்துக்கொண்டு, ப்ரமாணம் - ப்ரமேயம் – ப்ரமாதா என்றுள்ள மூன்றிலுமே, ஏற்கத்தக்கவையும் உண்டு, தள்ளத்தக்கவையும் உண்டு என்பவற்றை வேறுபடுத்தி உரைத்து, இந்த வேறுபாட்டினைக் குறித்து அறிபவர்கள் அடையும் பேறு இன்னது என்றும், இதனை அறியாமல், பாகவதர்களின் பிறவி குறித்து ஆராய முற்படுபவர்கள் தாழ்ந்த நிலையை அடையும் தன்மை இன்னது என்றும் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, "எம்மாவுருவும் வேண்டுமாற்றாலாவாய்" என்கிறபடியே எல்லா ரூபமும் அப்ராக்ருதமாகையாலே ச்லாக்யமுமாய் இச்சாக்ருஷீதமுமா யிருக்கும். பகவதவதார விக்ரஹங்களில் வைத்துக் கொண்டு வேதா ப்ராமாண்யத்தை உபபாதித்து வைதிக ருசியைக் குலைக்கைக்காக "யதாஹி சோரஸ் ஸ ததாஹி புத்த:" என்கிறபடியே "கள்ள வேடத்தைக் கொண்டு" என்னும்படி பரிக்ரஹித்த புத்தமுனியான விக்ரஹமும்,

**விளக்கம்** – (மாவுருவில் கள்ளவேடம்) - திருவாய்மொழி (5-8-2) - எம்மாவுருவும் வேண்டுமாற்றாலாவாய் - என்பதற்கு ஏற்ற ஸர்வேச்வரனுடைய அனைத்து ரூபங்களும் இந்த உலகியல் பொருள்களுடனான தொடர்பு அற்றவை என்பதால் கொண்டாடத் தக்கவையாகவும், தனது விருப்பம் காரணமாகவே எடுக்கப்பட்டவையாயும் உள்ளவை ஆகும். இப்படிப்பட்ட அவனுடைய ரூபங்களில் ஒன்றாக உள்ளதும், வேதங்கள் ப்ரமாணம் அல்ல என்று உபதேசித்து வேத மார்க்கத்தில் உள்ள விருப்பத்தைத் தகர்க்கும் பொருட்டு, இராமாயணம் அயோத்யாகாண்டம் (109-33) – யதாஹி சோரஸ் ஸ ததாஹி புத்த: - கள்ளர்கள் போன்றே, வேத மார்க்கத்திற்குப் புறம்பான புத்தனும் தள்ளத்தக்கவன் -

என்று கூறுவதற்கு ஏற்பவும், திருவாய்மொழி (5-10-4) – கள்ள வேடத்தைக் கொண்டு – என்பதற்கு ஏற்பவும் கொண்டதும் ஆகிய புத்தமுனி ரூபம் தள்ளத்தக்கது.

**வ்யாக்யானம்** - பகவத் ஸ்வரூபாதிகளை யதாவாக ப்ரதிபாதிக்கையாலே கட்டளைப் பட்டிருந்துள்ள வேதத்தில் "நஸ்மர்த்தவ்யோ விசேஷேண வேதமந்த்ரோப்ய வைஷ்ணவ:" என்கிறபடியே ஸ்மரிக்கவுமாகாதபடி மலாம்சமான "மானிடம் பாடலென்னாவது" என்கிறபடியே க்ஷேத்ரஜ்ஞரை ப்ரசம்ஸிக்கிற வாக்யங்களும்,

**விளக்கம்** - (திருந்து வேதமலமான மானிடம் பாடல்) – ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம் முதலானவை குறித்து உள்ளது உள்ளபடி உரைப்பதால் கட்டளைப்பட்டுள்ள வேதத்தில், நஸ்மர்த்தவ்யோ விசேஷேண வேதமந்த்ரோப்ய வைஷ்ணவ: - வேத மந்த்ரமாகவே உள்ளபோதிலும் மஹாவிஷ்ணுவின் தொடர்பு இல்லாத மந்த்ரங்கள் விசேஷமாக எண்ணத்தக்கவை அல்ல – என்பதற்கு ஏற்ப அவற்றைக் குறித்து எண்ணுவதும் கூடாது என்னும்படியான தோஷம் பொருந்திய பகுதியான, திருவாய்மொழி (3-9-3) - மானிடம் பாடலென்னாவது – என்பதற்கு ஏற்ப கர்மம் காரணமாக உண்டானதும், தொடர்ந்து கர்ம வசப்பட்டதும் ஆகிய மற்ற ஜீவாத்மாக்கள் குறித்து உரைக்கும் வாக்கியங்கள் தள்ளத்தக்கவையே ஆகும்.

**வ்யாக்யானம்** – "ந சூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதாஸ் ஸ்ம்ருதா: ஸர்வவர்ணேஷு தே சூத்ரா யேஹ்ய பக்தா ஜநார்தநே" என்று எல்லா வர்ணங்களிலும் பகவத் பக்தரல்லாதார் சூத்ரத்வமுமாகிற - ப்ரமேயத்திலும் ப்ரமாணத்திலும் ப்ரமாதாக்களிலு முண்டான த்யாஜ்யாம்சங்களும்

**விளக்கம்** - (ஸர்வ வர்ண சூத்ரத்வம்) - மஹாபாரதம் அச்வமேதிகபர்வம் (118-32) - ந சூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதாஸ் ஸ்ம்ருதா: ஸர்வவர்ணேஷு தே சூத்ரா யேஹ்ய பக்தா ஜநார்தநே - பகவானின் அடியார்கள் சூத்திரர்கள் அல்லர்; அவர்கள் அந்தணர்களோடு ஒத்தவர் என்றும் பாகவதர்கள் என்றும் கூறப்படுவர். அனைத்து வர்ணங்களிலும், யார் ஒருவருக்கு பகவத் பக்தி இல்லாமல் உள்ளதோ அவரே சூத்திரர் ஆவர் - என்பதற்கு ஏற்றபடி அனைத்து வர்ணங்களிலும், பகவானுடைய அடியார்கள் அல்லாதவர் சூத்திரரே ஆவர் [ஆக நான்கு வர்ணங்களிலும், இவ்விதம் சூத்திரராக உள்ள

தன்மை தள்ளத்தக்கது என்று கருத்து]. இப்படியாக ப்ரமேயம், ப்ரமாணம், ப்ரமாதா ஆகியவற்றில் உள்ள தள்ளத்தக்கவற்றைக் குறித்து அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – "காடுவாழ் சாதியுமாகப் பெற்றான்" என்று ஊர்மனையில் வஸியாமல் பசுக்களுக்குப் புல்லும் தண்ணீருமுள்ள காடுகளிலே வர்த்திக்கையாலே "காடுவாழ் சாதி" என்கிற கோபஜாதியில் ஸஜாதீயனாய் வந்தவதரித்து நிற்கிற க்ருஷ்ணனுடைய "காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர்" என்று தாமநுபவித்துப் பிறர்க்குமழைத்துக் காட்டும்படி பசு மேய்த்து வருகிறபோதை யலங்காரத்தோடே கூடியிருக்கிற விக்ரஹமும்.

**விளக்கம்** - (காடுவாழ் சாதியில் கடல்வண்ணன் வேடம்) – நாச்சியார் திருமொழி (12-8) – காடுவாழ் சாதியுமாகப் பெற்றான் - என்பதற்கு ஏற்ப ஊருக்குள் உள்ள வீட்டில் வசிக்காமல், பசுக்களுக்குத் தேவையான புல்லும் நீரும் நிறைந்துள்ள காடுகளில் வசிப்பதால், நாச்சியார் திருமொழி (12-8) – காடுவாழ் சாதி - என்பதற்கு ஏற்ப உள்ள ஆயர்குலத்தில், அவர்கள் இனத்தில் ஒருவனாக உள்ளபடி தான் வந்து அவதரித்து நிற்கும் க்ருஷ்ணனுடைய, பெரியாழ்வாழ் திருமொழி (3-3-1) - காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர் - என்பதற்கு ஏற்ப, பெரியாழ்வாராகிய தான் அனுபவித்து மற்றவர்களுக்கும் அழைத்துக் காண்பிக்கும்படி உள்ளதான, பசு மேய்த்து வரும்போது காணப்படுவதான அலங்காரத்துடன் கூடிய திருமேனி கொண்டாடத்தக்கது.

**வ்யாக்யானம்** – "தென்னுரையில் கேட்டறிவதுண்டு" என்கிறபடியே தக்ஷிண திக் வர்த்தியானது கொண்டு தென்னுரை என்று சொல்லப்படுகிற த்ராவிட பாஷையான ப்ரபந்தங்களில், "ஹரிகீர்த்திம் விநைவாந்யத்" இத்யாதிப்படியே பகவத் ப்ரதிபாதகமானவையும்,

**விளக்கம்** - (தென்னுரையில் ஹரிகீர்த்தி) - பெரியதிருமடல் (6) - தென்னுரையில் கேட்டறிவதுண்டு – என்பதற்கு ஏற்ப, தெற்குத் திசையில் நிலைத்து நிற்பதன் காரணமாக "தென்னுரை" என்று கூறப்படுவதான தமிழில் உள்ள ப்ரபந்தங்களை, மத்ஸய புராணம் - ஹரிகீர்த்திம் விநைவாந்யத் - மஹாவிஷ்ணுவின் புகழ் நிறைந்தவை அல்லாமல் மற்ற


**Email:**sridharan_book@yahoo.co.in

பாசுரங்களை பாடுதல் ஆகாது - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் குறித்துள்ள பாடல்கள் என்பதால் பாடத்தக்கவை.

**வ்யாக்யானம்** – “ச்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக:” என்கிறபடியே ச்வபசரில் “பெறற்கரிய நின்ன பாத பத்தியான பாசனம்” என்று ஸ்வயத்நத்தால் பெறுதற்கரிதாயிருந்துள்ள பகவத் பாத கமல பக்தியாகிற தனமுடையவர்களுமாகிற ப்ரமேயாதி த்ரயத்தி லுபாதேயாம்சங்களுமான இவ்விபாகமறிவார் “ஆராரமரர்” என்கிறபடியே ஏதேனும் ஜந்ம வ்ருத்தங்களை யுடையரேயாகிலும் ஸூரி ஸமரென்னும்படி ச்லாக்யராய், “இலங்குவான் யாவரு மேறுவர்” என்கிறபடியே அத்யுஜ்ஜ்வலமான பரமபதத்தை ப்ராபிக்க,

**விளக்கம்** – (ச்வபசரில் பக்தி பாசனமும்) – ச்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக: - விஷ்ணுவிடம் பக்தி கொண்டவன் நாய் இறைச்சி உண்பவன் என்றாலும், அவன் அந்தணனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பதற்கு ஏற்ப நாய் இறைச்சி உண்பவர் என்றாலும், திருச்சந்தவிருத்தம் (100) – பெறற்கரிய நின்ன பாத பத்தியான பாசனம் – என்பதற்கு ஏற்ப தனது முயற்சியால் பெறுவதற்கு மிகவும் கடினமான “ஸர்வேச்வரனுடைய திருவடிகள் மீது கொள்ளும் பக்தி” என்னும் செல்வத்தைப் பெற்றவர்கள் கொண்டாடத்தக்கவர்களே ஆவர். இப்படியாக ப்ரமேயம் தொடக்கமாக உள்ள மூன்றிலும் ஏற்கத்தக்கவற்றைக் குறித்து உரைத்தார். (அறிவார் ஆர் ஆர் அமரர் என்ன ஏற) - இப்படியாக இந்த மூன்றிலும் தள்ளத்தக்கவை மற்றும் கொள்ளத்தக்கவை என்பதில் உள்ள வேறுபாட்டினை அறிபவர்கள், திருவாய்மொழி (10-5-8) – ஆராரமரர் – என்பதற்கு ஏற்ப, அவர்கள் எப்படிப்பட்ட பிறவியைக் கொண்டிருந்தாலும், எப்படிப்பட்ட ஒழுக்கங்கள் கொண்டிருந்தாலும், அவர்கள் நித்யஸூரிகளுக்கு ஒப்பானவர் என்னும் சிறப்பு உடையவர்களாக, திருவாய்மொழி (3-8-11) - இலங்குவான் யாவரு மேறுவர் – என்பதற்கு ஏற்ப, மிகுந்த ப்ரகாசம் நிறைந்ததான பரமபதத்திற்குச் செல்வர்.

**வ்யாக்யானம்** - இப்ப்ரமேயாதி த்ரயத்திலும் கீழ்ச்சொன்னவாசி யறியாதாராய்க் கொண்டு பாகவத ஜந்மநிரூபணம் பண்ணுவார் “அமரவோரங்கமாறும்” என்கிற பாட்டில் “ஸாங்கமாக ஸகல வேதங்களையும் அத்யயனம் பண்ணி ததீய ச்ரேஷ்டருமாய் உத்க்ருஷ்ட ஜந்மாக்களுமா யிருந்தார்களேயாகிலும் தேவரீர் திருவடிகளின் ஸம்பந்தைக

நிரூபணீயரான ஸ்ரீவைஷ்ணவர்களை, ஜந்மாதிகளையிட்டு நிந்திப்பார்களாகில் காலந்தரே தேசாந்தரே யன்றிக்கே, அப்போதே அவ்விடந்தன்னிலே அவர்கள் தாங்கள் சண்டாளராவர்கள்" என்கிறபடியே உத்க்ருஷ்ட ஜந்மாக்களே யாகிலும் கர்ம சண்டாளராய் இனியொரு காலமும் கரையேற யோக்யதையில்லை யென்னும்படி அத:பதிப்பர்களென்கை. "அநாசாராந் துராசாராந் அஜ்ஞாத்ரூந் ஹீந ஜந்மந: மத் பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத்" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - (அறியாதார் சாதி அந்தணர்களேலும் தகர விழுவர்) – ப்ரமேயம் என்பதான மூன்றில் உள்ளதும், கீழே உரைக்கப்பட்டதும் ஆகிய வேறுபாட்டினை அறியாமல், பாகவதர்களின் பிறப்பு போன்றவற்றைச் சிலர் ஆராயக்கூடும். அவர்கள், திருமாலை (43) – அமரவோரங்கமாறும் - என்னும் பாசுரத்தில், "வேதங்கள் அனைத்தையும் அவற்றின் அனைத்து அங்கங்களுடன் அத்யயனம் செய்து, அடியார்கள் அனைவரும் கொண்டாடும்படி உயர்ந்தவர்களாகவும், உயர்ந்த பிறவினராயும் சிலர் இருக்கக்கூடும். ஆனால் இப்படிப்பட்டவர்கள், உன்னுடைய திருவடிகளின் தொடர்பு கொண்டவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களை, அவர்களுடைய பிறவி போன்றவற்றை ஆராய்ந்து நிந்திப்பார்கள் என்றால், வேறு ஏதோ ஒரு காலம் அல்லது வேறு ஏதோ ஒரு இடம் என்றில்லாமல், அந்த நேரத்திலேயே, அந்த இடத்திலே அவர்கள் சண்டாளர்கள் ஆகிவிடுவர்", என்று கூறுவதற்கு ஏற்ப, உயர்ந்த பிறப்பு கொண்டவர்கள் என்றாலும், கர்மசண்டாளர்களாக இனி எந்த ஒரு காலத்திலும் கரையேறும் தகுதி இல்லாத தாழ்ந்த நிலையை அடைவார்கள். ப்ரஹ்மாண்ட புராணத்தில் - அநாசாராந் துராசாராந் அஜ்ஞாத்ரூந் ஹீந ஜந்மந: மத் பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் - எனது அடியார்கள் ஒழுக்கத்தை இழந்தவர்கள் என்றாலும், ஞானம் அற்றவர்கள் என்றாலும், தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்கள் என்றாலும், அவர்களைப் பழிப்பவன் அந்தணர்களில் உயர்ந்தவன் என்றபோதிலும், அவன் அந்த நொடியிலே சண்டாளன் ஆகிறான் - என்றது காண்க.

**வ்யாக்யானம்** - ஆக, "வீட்டின்ப வித்யாதி" வாக்யந் தொடங்கி, "நிமக்நரை உயர்த்தத் தாழ விழிந்தார்" என்னுமளவும் ஆழ்வாருடைய வைபவத்தை ப்ரதிபாதித்து தத் ஸ்தாபநார்த்தமாக "ம்லேச்சனும் பக்தனானால்" என்று தொடங்கி, மேலெல்லாம்


Email:sridharan_book@yahoo.co.in

ஸாமாந்யேந பாகவத வைபவத்தை விஸ்தரேண ப்ரகாசிப்பித்து உபக்ரம வாக்யத்திற் போலே, ப்ரமாண ப்ரமேயங்களுடனே சேர்த்து ப்ரமாத்ரு வைபவத்தை நிகமித்தாராய்த்து.

**விளக்கம்** - ஆக சூர்ணை(75) – வீட்டின்பம் - என்பது தொடங்கி, சூர்ணை (84) – நிமக்நரை உயர்த்தத் தாழ விழிந்தார் - என்பது முடிய உள்ளவற்றில், நம்மாழ்வாரின் வைபவத்தை அருளிச்செய்தார். அந்த வைபவத்தை மேலும் விளக்கும்விதமாகவும், உறுதிபட உரைக்கும் விதமாகவும், சூர்ணை (85) - ம்லேச்சனும் பக்தனானால் - என்று தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய உள்ளவற்றில், பாகவதர்களுடைய வைபவத்தை விரிவாக அருளிச்செய்தார். மேலும் சூர்ணை (75) - வீட்டின்பம் - என்பதில் அருளிச்செய்தது போன்று, ப்ரமாணம் மற்றும் ப்ரமேயம் என்பவற்றுடன் சேர்த்து ப்ரமாத்ரு வைபவத்தையும் கூறி முடிந்தார்.

91. தமிழ்மாமுனிதிக்கு சரண்யமென்றவர்களாலே க்வசித் க்வசித்தென்று இவராவிர்ப்பாவம் கலியும் கெடும் போலே ஸூசிதம்.

**அவதாரிகை** - இப்படி பாகவதத்வ ஸாமாந்ய ப்ரயுக்த வைபவ மாத்ரமன்றிக்கே “ஜநக தசரத” இத்யாதி வாக்யந் தொடங்கி மூன்று வாக்யத்தாலே கீழ்ச் சொன்ன வைபவ விசேஷ த்யோதகமான ப்ரமாணமேதென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல் (தமிழ் மாமுனி யென்று தொடங்கி).

**விளக்கம்** - இவ்விதம் பாகவதர்களுக்கு உரியதான பொதுவான வைபவத்தால் ஏற்படும் மேன்மை மட்டும் அல்லாமல், சூர்ணை (82) – ஜனக தசரத – என்று தொடங்கும் மூன்று வாக்கியங்கள் மூலம் கூறப்பட்ட மேன்மையை விளக்கவல்ல ப்ரமாணம் ஏதேனும் உண்டோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (தமிழ்மாமுனிதிக்கு சரண்யமென்றவர்களாலே) “தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா” என்று “வண்தமிழ் மாமுனி” என்கிறபடியே த்ராவிட சாஸ்த்ர ப்ரவர்த்தகனான அகஸ்த்யனிருக்கிற திக்கு ஸர்வர்க்கும் புகலிடமென்ற மஹர்ஷிகளாலே. இப்போது இது சொல்லிற்று - வைதிகரான ருஷிகள் த்ராவிட ப்ரபந்த வக்தாவானவிவரை இப்படி பஹுமதி பண்ணிச் சொல்லக்கூடுமோவென்று

சங்கிப்பார்க்கு ஒரு த்ராவிடஜ்ஞனாலே தக்ஷிண திக்குக்கு நன்மை சொன்னவர்கள் த்ராவிட ப்ரபந்த முகேந லோகோஜ் ஜீவநகரரான இவரையும் இப்படி பஹுமாநம் பண்ணிச் சொல்லக் குறையில்லையென்று தோற்றுகைக்காக.

**விளக்கம்** - (தமிழ்மாமுனிதிக்கு சரண்யமென்றவர்களாலே) – தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா - புண்ணிய கர்மங்களையே செய்கின்ற எந்த அகஸ்திய முனிவரால் தெற்குத் திசை அனைவரும் சரணம் புக ஏற்ற இடமாக ஆனதோ - என்றும், பாசுரப்படி இராமாயணம் ஆரண்ய காண்டம் - வண்தமிழ் மாமுனி - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தமிழ்மொழியில் அனைத்து சாஸ்த்ரங்களையும் எடுத்து உபதேசித்த அகஸ்த்ய முனிவர் வசிக்கும் தெற்குத்திசை அனைவருக்கும் புகலிடம் என்று மஹரிஷிகளாலே. இப்போது இங்கு அகஸ்த்யர் குறித்து ஏன் கூறப்பட்டது - வைதிகர்களாக உள்ள ரிஷிகள், தமிழில் அமையப் பெற்ற நம்மாழ்வாரின் ப்ரபந்தங்களையும், அவற்றைச் செய்தருளிய நம்மாழ்வரையும் இப்படியாகத் துதித்து உரைப்பார்களோ என்ற சிலர் ஐயம் கொள்ளலாம். தமிழை அறிந்த ஒரு முனிவனால் தெற்குத்திசைக்கே நன்மை உண்டு என்று கூறியவர்கள், தமிழ் ப்ரபந்தம் மூலம் உலகினைக் கரையேற்றக்கூடிய நம்மாழ்வாரையும் இவ்விதம் புகழ்ந்து உரைப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை – என்று உணர்த்தவே ஆகும்.

**வ்யாக்யானம்** - (க்வசித் க்வசித்தென்று இவராவிர்ப்பாவம்) "க்ருதாதிஷு நரா ராஜந் கலா விச்சந்தி ஸம்பவம், கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித் க்வசித் மஹாராஜ த்ராவிடேஷு ச பூயச:, தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ, காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ மஹாநதீ, யேபிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர, தேஷாம் நாராயணே பக்திர் பூயஸீ நிருபத்ரவா" என்று ஜ்ஞாதாக்கள் வந்து ஆவிர்ப்பவிக்கும் ஸ்தல விசேஷங்களை தத்தந்நதீ விசேஷங்களாலே ப்ரகாசிப்பித்து அந்த நதீ விசேஷங்களில் ஜலத்தைப் பாநம் பண்ணுமவர்களுக்கு பகவத் பக்தி அதிசயிக்கும்படியையும் சொல்லுகிறவளவில் ப்ரதமத்திலே "தாம்ரபர்ணீ நதீ யத்ர" என்று இவராவிர்ப்பாவ ஸ்தலத்தைச் சொல்லுகையாலே இவ்வாழ்வாருடைய ஆவிர்ப்பாவமானது, (கலியும் கெடும் போலே ஸூசிதம்) இவர்தாம் மயர்வறமதிநலம் பெற்றவராகையாலே "கலியும் கெடும்" என்று திருமங்கையாழ்வார் உடையவர் போல்வார் அவதரித்து கலியுக ஸ்வபாவமும் கழியுமென்று மேல்வருமம்சத்தை தர்சித்தருளிச் செய்தாப்போலே த்ரிகாலஜ்ஞரான ஸ்ரீசுகாதிகளாலே ஸூசிப்பிக்கப்பட்டதென்கை.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (க்வசித் க்வசித்தென்று இவராவிர்ப்பாவம்) - ஸ்ரீமத்பாகவதம் (11-5-38, 39) – க்ருதாதிஷு நரா ராஜந் கலா விச்சந்தி ஸம்பவம், கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித் க்வசித் மஹாராஜ த்ராவிடேஷு ச பூயச:, தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ, காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ, யேபிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர, தேஷாம் நாராயணே பக்திர் பூயஸீ நிருபத்ரவா – அரசனே! க்ருதயுகம் தொடக்கமாக உள்ள யுகங்களில் வாழ்ந்த மக்கள் கூட கலியுகத்தில் பிறவியை விரும்புகிறார்கள்; நாராயணனே அடையத்தக்கவன் என்று பறை சாற்றுகின்ற சான்றோர்கள் கலியுகத்தில் இங்கும் அங்கும் தோன்றுவார்கள்; எங்கு தாமிரபரணி, க்ருதமாலா, பாலாறு, பெருமை நிறைந்த காவேரீ, மேற்குக்கடலில் சென்று கலக்கும் பெரியாறு ஆகிய நதிகள் ஓடுகின்றனவோ அங்கு அவர்கள் பிறப்பார்கள்; எந்த மனிதர்கள் அந்த நதிகளுடைய புண்ணிய நீரைப் பருகுகிறார்களோ அவர்களுக்கு எந்தவிதமான இடையூறும் இன்றி நாராயணனிடம் பக்தி ஏற்படும் - என்பதன் மூலம் சான்றோர்கள் அவதரிக்கும் இடங்களை, அந்தந்த இடங்களில் உள்ள நதிகள் மூலம் சிறப்பித்து உரைத்து, அந்த நதிகளில் உள்ள தண்ணீரைப் பருகுபவர்களுக்குப் பகவானிடம் பக்தி பெருகுவதும் உரைக்கப்பட்டது; இவற்றில், தொடக்கத்திலேயே - தாம்ரபர்ணீ நதீ யத்ர - தாமிரபரணி எங்கு உள்ளதோ - என்று நம்மாவார் அவதரித்த இடத்தை உரைப்பதால், நம்மாழ்வாருடைய அவதாரம் என்பது, (கலியும் கெடும் போலே ஸூசிதம்) - நம்மாழ்வார் மதிநலம் பெற்றவர் என்பதால், திருவாய்மொழி (5-2-1) – கலியும் கெடும் – என்பதற்கு ஏற்ப திருமங்கையாழ்வார், எம்பெருமானார் போன்றவர்கள் அவதரிக்க, அதனால் கலியுகத்தின் தன்மை நீங்கும் என்று எதிர்காலத்தில் நடக்க உள்ளதை முன்பே அறிந்து நம்மாழ்வார் அருளிச்செய்தது போன்று, நம்மாழ்வாருடைய அவதார ஸ்தலம் குறித்து முக்காலமும் நன்குணர்ந்த ஸ்ரீசுகப்ரஹ்மம் போன்ற ரிஷிகளால் உரைக்கப்பட்டது என்று கருத்து.

**வ்யாக்யானம்** – "க்ரூரே கலியுகே ப்ராப்தே நாஸ்திகை: கலுஷீ க்ருதே, விஷ்ணோ ரம்சாம்சஸம் பூதோ வேத வேதார்த்த தத்வவித் ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும் த்ராவிட்யாபிச பாஷயா, ஜநிஷ்யதி ஸதாம் ச்ரேஷ்டோ லோகாநாம் ஹித காம்யயா" இத்யாதி வசநங்களும் இவராவிர்ப்பாவ ஸூசகங்களாகையாலே, இவ்விடத்தில் விவக்ஷிதங்கள். கேவல ஜந்ம வாசக சப்தங்களிலொன்றைச் சொல்லாதே அவதார சப்த பர்யாயமான ஆவிர்ப்பாவ சப்தத்தைச் சொல்லிற்று இவர் பிறப்பும் ஈச்வரன்


**Email:**sridharan_book@yahoo.co.in

பிறப்போபாதி பரார்த்தமென்று தோற்றுகைக்காக. இத்தால் இவர் ஓரவதார விசேஷமென்ற தாயிற்று.

**விளக்கம்** - க்ரூரே கலியுகே ப்ராப்தே நாஸ்திகை: கலுஷீ க்ருதே, விஷ்ணோ ரம்சாம்சஸம் பூதோ வேத வேதார்த்த தத்வவித் ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும் த்ராவிட்யாபிச பாஷயா, ஜநிஷ்யதி ஸதாம் ச்ரேஷ்டோ லோகாநாம் ஹித காம்யயா – [வேதமார்க்கமானது] நாஸ்திகர்களால் கலங்கும்படியான கொடிய கலியுகம் வந்தபோது, மஹாவிஷ்ணுவின் அம்சத்திற்கு அம்சமாக உள்ளவரும், வேதங்களை அதன் ஆழ்பொருளுடன் அறிந்தவரும் ஆகிய நம்மாழ்வார், வேதங்களின் உருவில் உள்ள ஸ்துதிகள் அனைத்தையும் தமிழ் மொழியில் உலகிற்கு நன்மை அளிக்கும் விதமாகச் செய்தருளப் போகிறார் - என்பது போன்று வாக்கியங்களும் நம்மாழ்வாருடைய அவதாரத்தை மறைமுகமாகக் கூறுவதால், அவற்றையும் இங்கு கொள்ளவேண்டும். சாதாரணமாக “பிறப்பு” என்பது போன்றதை உணர்த்தவல்ல “ஜனனம்” போன்ற பதத்தை கூறாமல், அவதாரத்தை உணர்த்தவல்லதான “ஆவிர்ப்பாவம்” என்ற பதத்தை இட்டது காண்க. இதன் மூலம் இவருடைய பிறப்பு என்பது ஸர்வேச்வரனுடைய பிறப்பு போன்று, மற்றவர்களுக்காக என்பது வெளிப்படுத்தப்பட்டது. இதனால் நம்மாழ்வார் ஓர் அவதார புருஷர் என்பது தெளிவாகிறது.

92. அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸு நந்தஸூநுவானவனுடைய யுக வர்ண க்ரமாவதாரமோ? வ்யாஸாதிவதாவேசமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ? முன்னம் நோற்ற அனந்தன்மேல் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்.

**அவதாரிகை** - இப்படி அவதரித்தவிவர் தாம் ஆரென்னு மாகாங்க்ஷையிலே பேரளவுடையாரும் இவரை இன்னாரென்று அளவிடமாட்டாமை அதிசங்கை பண்ணும்படியை அருளிச்செய்கிறார் மேல் (அத்ரியென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாகக் கொண்டாடப்படும்படி அவதரித்த நம்மாழ்வார்தான் யார் என்ற கேள்வி எழலாம். இதற்கு விடையாக, மிகவும் உயர்ந்த ஞானிகள் கூட நம்மாழ்வார் இன்னார் என்று அளவிட்டுக் கூற இயலாதபடி ஐயத்துடன் உள்ள நிலையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ருதயுகத்திலே அத்ரியும் ஜமதக்நியுமாகிற ப்ராஹ்மணோத்தமர்களுக்குப் பிள்ளையாய்க் கொண்டு தத்தாத்ரேயனும் பரசுராமனுமாய், த்ரேதாயுகத்திலே க்ஷத்ரியனான தசரத சக்ரவர்த்திக்குப் பிள்ளையாய். த்வாபரயுகத்திலே யயாதி சாபத்தாலே அபிஷேக ப்ராப்தியற்ற யதுகுலோத்பவராகையாலே க்ஷத்ரியரில் தண்ணியராய் வைச்யப்ராயரா யிருக்கிற வஸுதேவர்க்கும் "க்ருஷி கோரக்ஷ வாணிஜ்யம் வைச்யம் கர்ம ஸ்வபாவஜம்" என்கிறபடியே கோரக்ஷணாதி தர்மத்தையுடைய ஸாக்ஷாத் வைச்யரான ஸ்ரீநந்தகோபர்க்கும் புத்திரனாய், இப்படி க்ருதாதி யுக க்ரமத்திலே ப்ராஹ்மணாதி வர்ண க்ரமேண அவதரித்து வந்த ஸர்வேச்வரன் சதுர்த்தமான கலியுகத்திலே சதுர்த்த வர்ணத்திலே வந்தவதரித்தபடியோ வென்கை.

**விளக்கம்** – [அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸு நந்தஸூநுவானவனுடைய யுக வர்ண க்ரம அவதாரமோ] (அத்ரி ஜமதக்நி ஸூநுவாய்) – க்ருதயுகத்தில் அத்ரி என்ற அந்தணருக்குப் புத்ரனான தத்தாத்ரேயனாயும், ஜமதக்நி என்ற அந்தணருக்குப் புத்ரனான பரசுராமனாயும். (பங்க்திரத ஸூநுவாய்) – த்ரேதாயுகத்தில் இராமனாயும். (வஸு நந்த ஸூநுவாய்) - த்வாபர யுகத்தில் யயாதியின் சாபம் காரணமாக முடிசூடிக் கொள்ளும் தகுதி இழந்த யதுகுலத்தில் பிறந்தவராகையால், க்ஷத்ரியங்களில் தாழ்ந்தவராகவும், வைச்யர்களை ஒத்தவராகவும் உள்ள வஸுதேவர் மற்றும், கீதை (18-44) – க்ருஷி கோரக்ஷ வாணிஜ்யம் வைச்யம் கர்ம ஸ்வபாவஜம் - உழவு செய்தல், பசுக்களைக் காத்தல், பொருட்களை வாங்கி விற்பதில் ஸத்யத்துடன் இருத்தல் போன்றவை வைச்யர்களுடைய இயல்பான கர்மங்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப பசுக்களைக் காப்பாற்றுதல் போன்ற தர்மங்கள் உள்ளதன் காரணமாக இயல்பாகவே வைச்யராய் உள்ள நந்தகோபருடைய புத்திரனாயும், இப்படியாகப் பலவாக அவதரித்த ஸர்வேச்வரன். (யுக வர்ண க்ரம அவதாரமோ) – இவ்விதம் க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் என்ற வரிசையில் அந்தணர், க்ஷத்ரியர், வைச்யர் என்ற முறையில் அவதரித்து வந்த ஸர்வேச்வரன், நான்காம் யுகமான கலியுகத்தில், நான்காம் வர்ணத்தில் வந்து அவதரித்தானோ?

**வ்யாக்யானம்** - பூர்வ யுக த்ரயத்திலும் அடைவே வர்ணத்ரயத்திலும் அவதரித்து வருகையாலும், "கலௌ புந: பாபரதாபிபூதே ஸ உத்பபூவார்சித வத்ஸலத்வாத், பக்தாத்மநா ஸர்வ ஜநாந் ஸுகோப்தும் விச்வாதிகோ விச்வமயோஹி விஷ்ணு:" என்று

கலியுகத்திலே ஸர்வேச்வரன் பக்தரூபேண அவதரித்தானென்று ருஷிகள் சொல்லுகையாலும் இவர் வைபவம் கண்டவர்களுக்கு இப்படி சங்கிக்க யோக்யதை யுண்டிறே.

**விளக்கம்** – முதல் மூன்று யுகங்களில் முறையே மூன்று வர்ணங்களில் அவதரித்து வந்த்தாலும், கலௌ புந: பாபரதாபிபூதே ஸ உத்பபூவார்ச்ரித வத்ஸலத்வாத், பக்தாத்மநா ஸர்வ ஜநாந் ஸுகோப்தும் விச்வாதிகோ விச்வமயோஹி விஷ்ணு: - உலகில் உள்ள அனைத்தையும் விட உயர்ந்தவனும், உலகமே உருவமானவனும் ஆகிய மஹாவிஷ்ணு, பாவம் செய்வதில் மட்டுமே பற்றுதல் கொண்ட மனிதர்களால் சூழப்பட்ட இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் பொருட்டு, அடியார்களிடம் அதிக வாத்ஸல்யம் உள்ளவன் என்பதால், ஒரு விஷ்ணுபக்தனாகவே கலியுகத்தில் அவதரித்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, கலியுகத்தில் ஸர்வேச்வரன் பக்தரூபத்தில் அவதரித்தான் என்று ரிஷிகள் உரைப்பதாலும், நம்மாழ்வாருடைய மேன்மைகளைக் கண்ணுற்றவர்களுக்குக் கடந்த பத்தியின் இறுதியில் கூறப்பட்ட சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பு உள்ளது அல்லவோ?

**வ்யாக்யானம்** - (வ்யாஸதிவதாவேசமோ) அதாவது “க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்” என்றும், “ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி” என்றும் சொல்லுகிறபடியே வேதங்களை வ்யஸிக்கை முதலான கார்யங்களை நிர்வஹிக்கைக்காக வ்யாஸாதிகள் பக்கல் ஆவேசித்தாப்போலே இவரைக் கொண்டு த்ராவிட வேதத்தை ப்ரவர்த்திப்பிக்கைக்காக இவர் பக்கல் ஆவேசித்தானோ வென்கை. இவரைக் கொண்டு லோகத்தைத் திருத்துகைக்காக இவர் பக்கலிலே ஆவேசித்து நிற்கவும் கூடுமாகையாலே இப்படியும் சங்கிக்கலாமிறே.

**விளக்கம்** - (வ்யாஸாதிவத் ஆவேசமோ) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-4-5) - க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் – க்ருஷ்ண த்வைபாயநர் என்று வழங்கப்படும் வ்யாஸரை ஸர்வேச்வரனாகிய நாராயணன் என்றே அறிவாயாக - என்றும், மஹாபாரதம் - ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி - இப்படிப்பட்ட வ்யாஸர் என்ற மஹாமுனிவர் நாராயணனே ஆவார் - என்று கூறுவதற்கு ஏற்ப வ்யாஸர் போன்றவர்கள் ரூபத்தில் ஸர்வேச்வரன் அவதரித்தது போன்று நம்மாழ்வார் மூலமாகத் தமிழ் வேதத்தை வெளிப்படுத்த எண்ணியவனாக, நம்மாழ்வார்

ரூபத்தில் அவதரித்தானோ என்று கருத்து. நம்மாழ்வாரைக் கொண்டு உலகத்தைத் திருத்துவதற்காக நம்மாழ்வார் ரூபமாக அவதரித்திருக்கலாம் என்பது பொருந்தும் என்ற காரணத்தினால் இவ்விதம் ஐயப்படலாம் அல்லவோ?

**வ்யாக்யானம்** - (மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ) அதாவது, "விண்ணாட்டவர் மூதுவர்" என்று பரமபதத்துக்கு நிலத்தாளிகளான நித்யஸூரிகளிலே இவ்விபூதியைத் திருத்துகைக்காக ஈச்வர நியோகத்தாலே அவதரித்தார் ஒருவரோ? அன்றிக்கே "கரை கண்டோர்" என்று ஸம்ஸாரத்தைக் கடந்து அக்கரைப்பட்டிருக்கும் முக்தரிலே ஸம்ஸாரிகளைத் திருத்துவதாக பகவந் நிதேசத்தால் அவதரித்தார் ஒருவரோ? அன்றிக்கே, "முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் ச்வேத த்வீப நிவாஸிநாம்" என்கிறபடியே முக்தப்ராயராய், "பாற்கடல் பாம்பணை மேல் பள்ளிகொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியர்" என்கிற ச்வேத த்வீப வாஸிகளிலே இவ்வருகுள்ளாரைத் திருத்துகைக்காக ஈச்வரேச்சையாலே அவதரித்தா ரொருவரோ வென்கை. இவருடைய வைபவம் பார்த்தால் எல்லார்படியும் சொல்லலாம்படி யிருக்கையாலே இப்படியும் தனித்தனியே சங்கிப்பார்க்கு சங்கிக்கலாமிறே. "பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல்" என்கிறபடியே பிராட்டிமாரோடு சேர்த்துப் பார்க்கும்படியிறே யிருப்பது; மற்றுள்ள ததீயருடன் பின்னை சொல்ல வேண்டாவிறே.

**விளக்கம்** – [மூதுவர் கரைகண்டார் சீரியரிலே ஒருவரோ] (மூதுவரில் ஒருவரோ) – திருவிருத்தம் (2) - விண்ணாட்டவர் மூதுவர் - என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் எப்போதும் வசித்து வருகின்ற நித்யஸூரிகளில் ஒருவர், இந்த உலகத்தைத் திருத்துவதற்காக ஸர்வேச்வரனுடைய ஆணைக்கு இணங்க நம்மாழ்வாராக அவதரித்தாரோ? (கரைகண்டாரில் ஒருவரோ) – திருவாய்மொழி (8-3-10) – கரை கண்டோர் - என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரம் என்னும் பெரும் ஸமுத்ரத்தைக் கடந்து அக்கரையில் சேர்ந்த முக்தர் ஒருவர், ஸம்ஸாரிகளைத் திருத்துவதற்காக ஸர்வேச்வரனுடைய ஆணைக்குட்பட்டு நம்மாழ்வாராக அவதரித்தாரோ? (சீரியரிலே ஒருவரோ) – மஹாபாரதம் சாந்திபர்வம் – முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் ச்வேத த்வீப நிவாஸிநாம் - ச்வேத தீபகற்பத்தில் வசிப்பவர்களும், முக்தர்கள் போன்று உள்ளவர்களும் ஆகியவர்களுக்கு இதுவே லக்ஷணம் - என்பதற்கு ஏற்ப முக்தர்கள் போன்றவர்களாகவும், திருவிருத்தம் (79) – பாற்கடல் பாம்பணை மேல் பள்ளிகொண்டருளும் சீதனையே தொழுவார்

விண்ணுளாரிலும் சீரியர் - என்று கூறப்படுகின்ற ச்வேத தீபகற்பத்தில் வசிப்பவர்களாகவும் உள்ள ஒருவர், இந்த உலகில் உள்ளவர்களைத் திருத்துவதற்காக, ஸர்வேச்வரனுடைய விருப்பம் காரணமாக நம்மாழ்வாராக அவதரித்தாரோ? நம்மாழ்வாருடைய மேன்மையை ஆராயும்போது, இவர்கள் அனைவருடைய தன்மைகளும் காணப்படுவதால், இவ்விதம் தனித்தனியாகச் சந்தேகம் கொள்வது பொருத்தம் அல்லவோ? திருவாய்மொழி (6-5-10) – பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் - என்பதற்கு ஏற்ப பிராட்டிகளுடன் சேர்த்துப் படிக்கப்பட்டாலும், அவரவர்களுடன் தனித்தனியாக உள்ளவன் என்று ஐயம் கொள்ளும்படியாக உள்ளான் அல்லவோ? இப்படி உள்ளபோது அவனுடைய அடியார்கள் ஒவ்வொருடனும் தனித்தனியாக அவன் உள்ளதைத் தனித்து மீண்டும் கூறவேண்டுமோ?

**வ்யாக்யானம் -** (முன்னம் நோற்ற அநந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவரோ) அதாவது, கீழ்ச்சொன்னவர்கள் ஒருவருமன்றிக்கே ஸம்ஸாரிகள் தன்னிலே “முன்னம் நோற்ற விதி கொலோ” என்கிறபடியே ஐந்மாந்தர ஸஹஸ்ர ஸஞ்சிதமான தம்முடைய ஸுக்ருத பலமாய்க் கொண்டு இப்படி திருந்தினாரொருவரோ? அன்றிக்கே, “அநந்தன் மேல் கிடந்த வெம்புண்ணியா” என்று நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷத்தாலே நித்ய ஸம்ஸாரியை நித்யஸூரி கல்பமாக்கவல்ல அநந்தசாயியான ஸநாதந புண்யம் முழு நோக்காக பலித்து இப்படி திருந்தினார் ஒருவரோவென்று சங்கிப்பர்கள். அதாவது, இப்படிக் கீழ்ச் சொன்ன வகைகளாலே இவரை இன்னாரென்று நிச்சயிக்கமாட்டாமல் பேரளவுடையாரும் சங்கியா நிற்பர்க ளென்றபடி.

**விளக்கம் -** (முன்னம் நோற்ற புண்ணியங்கள் பலித்தவரோ) - மேலே கூறப்பட்டவர்களில் யாரும் இல்லாமல், ஸம்ஸாரிகளாகிய இந்த உலகத்தில் வாழ்கின்றவர்களில், திருவாய்மொழி (6-5-7) - முன்னம் நோற்ற விதி கொலோ – என்பதற்கு ஏற்ப ஆயிரக்கணக்கான முற்பிறவிகளில் கிட்டிய புண்ணிய பலன்கள் காரணமாகத் திருத்திய ஒருவர் இவ்விதம் நம்மாழ்வாராக அவதரித்தாரோ? (அனத்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவரோ) – திருச்சந்தவிருத்தம் (45) – அநந்தன் மேல் கிடந்த எம் புண்ணியா - என்பதற்கு ஏற்ப எந்த ஒரு காரணமும் இன்றி ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் கிட்டியதன் விளைவாக, நித்ய ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளவர்களை நித்யஸூரிகளுக்குச் சமமாகச் செய்யவல்ல ஆதிசேஷன் மீது சயனித்தவன், எப்போதோ செய்த புண்ணியத்தை

பலிக்க வைத்ததன் விளைவாகத் திருந்திய யாரோ ஒருவர் நம்மாழ்வாராக அவதரித்தாரோ? இதுவரை கூறப்பட்ட பலரில், நம்மாழ்வார் யார் என்று அறியாத காரணத்தால், அதனை உறுதியாக உரைக்க இயலாமல் சான்றோர்களும் சந்தேகத்துடனே உள்ளார்கள் என்று கருத்து.

93. இதுக்கு மூலம் - யான் நீ என்று மறுதலைத்து வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி நிலையிடம் தெரியாதே தெய்வத்தின மொருவகைக் கொப்பாக இனத்தலைவன் அந்தாமத்தன்பு செய்யச் சேர்ந்தமைக் கடையாளமுளவாக உகந்துகந்து திமிர் கொண்டாலொத்து நாட்டியல் வொழிந்து சடரையோட்டி மதாவலிப்தர்க்கு அங்குசமிட்டு நடாவிய கூற்றமாய்த் தீயனமருங்கு வாராமல் கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றிப் பட்டெழு போதறியாதிருந்த ப்ரபாவம்.

**அவதாரிகை** - இப்படி இவரை ஜ்ஞாநிகளானவர்கள் சங்கிக்கைக்கு ஹேதுவேதென்னு மாகாங்க்ஷையிலே இதுக்கு மூலம் இவருடைய ப்ரபாவமென்கிறார் மேல்.

**விளக்கம்** - இப்படியாக நம்மாழ்வார் குறித்து ஞானிகள் ஐயம் கொள்வதற்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழலாம். இதற்குக் காரணம் நம்மாழ்வாருடைய ப்ரபாவமே ஆகும் என்று விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (இதுக்கு மூலம்) அதாவது, இவரைக் கண்ட ஜ்ஞாநாதிகர் "இவர் இன்னார்" என்று நிர்ணயிக்கமாட்டாமை இங்ஙன் சங்கிக்கைக்கு ஹேது, (யான் நீயென்று மறுதலைத்து) "புவியுமிருவிசும்பும்" என்று தொடங்கி உபய விபூதியும் உன் ஸங்கல்பத்திலே கிடக்கின்றன; ஏவம்பூதனான நீ என்னுடைய ச்ரோத்ரேந்த்ரிய த்வாரா புகுந்து விச்சேதமின்றிக்கே என் ஹ்ருதயத்திலே உளையாகா நின்றாய். இப்படியான பின்பு விபூதியையுடைய நீயோ விபூதிமானையுடைய நானோ பெரியா ராரென் றறிவாரார். அப்ரதிஹத சக்தியான நீதான் இத்தை நிரூபித்தறிந்து காண் என்று உபய விபூதி யுக்தனோடே மறுதலைக்கிற விபவத்தையுடையராய்.

**விளக்கம்** – (இதற்கு மூலம்) நம்மாழ்வாரைக் கண்ட ஞானிகள் "இவர் இன்னார்" என்று உறுதியாக உரைக்க இயலாமல் இவ்விதம் ஐயம் கொள்வற்கான காரணம், (யான் நீ என்று மறுதலைத்து இருந்த ப்ரபாவம்) - பெரியதிருவந்தாதி (75) – புவியும் இரு விசும்பும் - என்று தொடங்கி, "நித்யவிபூதி, லீலாவிபூதி என்ற இருவகையான செல்வங்களும்


Email:sridharan_book@yahoo.co.in

உன்னுடைய ஸங்கல்பத்தில் உள்ளன. இப்படிப்பட்ட நீ எனது செவி வழியாக என்னுள் புகுந்து கொண்டு, பிரிவு என்பது இன்றி, எனது இதயத்தில் எப்போதும் நிலையாக நிற்கிறாய். இப்படியாக உள்ளதால், இந்தச் செல்வங்கள் அனைத்தையும் கொண்டவனாகிய நீயா அல்லது இந்தச் செல்வங்கள் அனைத்தையும் கொண்டவனாக உள்ள உன்னைக் கொண்டுள்ள நானா – நம் இருவரில் யார் பெரியவர் என்று யாரால் கூற இயலும்? ஆனால் எந்த ஒரு தடையும் இல்லாத சக்தி கொண்ட நீயே ஆவாய் என்பதை ஆராய்ந்து அறிந்து காண்பாயாக”, என்று இரண்டு விபூதிகளையும் கொண்டவனாகிய ஸர்வேச்வரனோடு மறுத்துப் பேசும்படியான வைபவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** – (வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி) “யாவர் நிகரகல் வானத்தே” என்றும், “மாறுளதோவிம் மண்ணின் மிசையே” என்றும் அவனுடைய உபயவிபூதி யோகத்துக்கும் ஸௌகுமார்யத்துக்கும் தகுதியாம்படியாகவும் ஸர்வேச்வரனாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஒன்றுக்கும் விக்ருதனாகாதவன், தம்முடைய உக்தி ச்ரவண ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே தெகுடாகும்படியாகவும், திருவாய்மொழி பாடுகிற நாவீறுடைமையாலே உபயவிபூதியிலும் உபமாந ரஹிதராய்,

**விளக்கம்** - (வானத்து மண்மிசை மாறும் நிகரும் இன்றி இருந்த ப்ரபாவம்) – திருவாய்மொழி (4-5-8) - யாவர் நிகரகல் வானத்தே - என்றும், திருவாய்மொழி (6-4-9) - மாறுளதோ இம்மண்ணின் மிசையே – என்றும் கூறுவதற்கு ஏற்ப இரண்டு விபூதிகளையும் கொண்டவனாகும் தன்மை மற்றும் மென்மைத் தன்மை ஆகிய இரண்டிற்கும் தகுதியாகும் விதத்திலும்; ஸர்வேச்வரனாக உள்ளதால், தான் விரும்பும் அனைத்தையும் அடைந்ததன் காரணமாக நிறைவு பெற்றவனாக உள்ளவனும், வேறு எதனையும் நாடாதவனும் ஆகிய அவன், தனது திருவாய்மொழியைக் கேட்டவுடன் எழுந்த மகிழ்ச்சி காரணமாக தெகுடு ஆடும் விதத்திலும் உள்ளதான திருவாய்மொழியை உரைக்கின்ற நாக்கு கம்பீரம் கொண்ட காரணத்தால் இந்த உலகம், அந்த உலகம் என்று இரண்டிலும் ஒப்பு கூற இயலாதவராக உள்ள ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (நிலையிடம் தெரியாதே) கலவியும் பிரிவும் கலசி நடக்கையாலே கலவியால் வந்த ரஸமேயாய்ச் செல்லும் அங்குள்ளார் படியுமன்றி, பகவத்குணைக தாரகதையாலே அந்த பாநாதிகளால் தரிக்குமிங்குளார் படியுமன்றி, இப்படி

 Email:sridharan_book@yahoo.co.in

உபயவிபூதியிலும் அடங்காமையாலே “வைகுந்தமோ வையமோ நும் நிலையிடம்” என்று வாஸ ஸ்தலம் தெரியாதபடியாய்,

**விளக்கம்** - (நிலை இடம் தெரியாதே இருந்த ப்ரபாவம்) – ஸர்வேச்வரனுடைய சேர்க்கை என்ற இன்பம் மட்டுமே எப்போதும் உள்ளதான பரமபதம் போன்று அல்லாமலும், இங்கு சேர்க்கையும் பிரிவும் கலந்து உள்ளதால், ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்களை அனுபவித்தபடி இருத்தல் என்பதை மட்டுமே கொண்டு உயிர் தாங்கி நிற்பதால் இந்த உலகில் உள்ள மற்றவர்கள் போன்று உணவு நீர் முதலியவைகளால் உயிர் தாங்கி நிற்பது அல்லாமலும் – ஆக இப்படியாக இந்த உலகம் மற்றும் பரமபதம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் சேராமல் உள்ளதன் காரணமாக, திருவிருத்தம் (75) – வைகுந்தமோ வையமோ நும் நிலையிடம் – என்று கூறுவதற்கு ஏற்ப நம்மாழ்வார் வாழும் இடம் இன்னது என்று அறிய இயலாதபடியான ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (தெய்வத்தின மொருவகைக் கொப்பக) “தெய்வத்தினமோரனை யீர்களாய்” என்று ஒருவரிருவரன்றிக்கே நித்யஸூரிகளெல்லாம் கூடினாலும் தமக்கு ஒரு வகைக் கொப்பாம்படியாய்,

**விளக்கம்** - (தெய்வத்து இனம் ஒருவகைக்கு ஒப்பாக இருந்த ப்ரபாவம்) – [இங்கு தெய்வத்து இனம் என்றால் நித்யஸூரிகள் என்று பொருள்] திருவிருத்தம் (23) – தெய்வத்தினமோரனை யீர்களாய் – என்பதற்கு ஏற்ப ஒருவர், இருவர் என்று அல்லாமல், நித்யஸூரிகள் அனைவரும் சேர்ந்து நின்றாலும், நம்மாழ்வாரகிய தன் ஒருவருக்கு மட்டும், அவர்கள் ஓரளவிற்கு ஒப்பாகும்படியான ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (இனத்தலைவன் அந்தாமத்தன்பு செய்ய) “வானோரினத் தலைவன்” என்று அனந்த ஸூரி ஸங்க நிர்வாஹகனான ஸர்வேச்வரன் “அந்தாமத்தன்பு செய்து” என்று அழகிய தாமமான பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை யடையத் தம் பக்கலிலே ஒரு மடைகொள்ளப் பண்ண,

**விளக்கம்** - (இனத்தலைவன் அந்தாமத்தன்பு செய்ய இருந்த ப்ரபாவம்) – [இனத்தலைவன் என்றால் பரமபதநாதன், அந்தாமம் என்றால் பரமபதம்] பெரியதிருவந்தாதி (25) – வானோரினத் தலைவன் - என்பதற்கு ஏற்ப எண்ணற்ற நித்யஸூரிகளுடைய


Email:sridharan_book@yahoo.co.in

நிர்வாஹகனான ஸர்வேச்வரன், திருவாய்மொழி (2-5-1) - அந்தாமத்தன்பு செய்து - என்பதற்கு ஏற்ப மிகவும் அழகான இடமான பரமபதத்தில் கொள்ளும் மயக்கம் முழுவதையும், நம்மாழ்வாராகிய தன்னிடம் மட்டுமே கொள்ளும்படியான ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (சேர்ந்தமைக்கு அடையாளமுளவாக) "திருவருள்களும் சேர்ந்தமைக் கடையாளம் திருந்தவுள" என்று மேன்மேலும் அவன் விஷயீகாரங்களைப் பெற்றமைக்கு ஸூவ்யக்தலாஞ்சநமான ராகம் வாய்கரையிலே தோன்றுகை முதலான கலவிக் குறிகளுண்டாய்ச் செல்ல,

**விளக்கம்** - (சேர்ந்தமைக்கு அடையாளமுளவாக இருந்த ப்ரபாவம்) – திருவாய்மொழி (8-9-6) - திருவருள்களும் சேர்ந்தமைக் கடையாளம் திருந்தவுள - என்பதற்கு ஏற்ப மேன்மேலும் அவனுடைய கடாக்ஷங்களைப் பெற்றதற்கு அடையாளமாக உதடுகளில் சிவந்த நிறம் தோன்றுதல் போன்றதான, சேர்க்கைக்கே உரிய தன்மைகள் நிறைந்த ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (உகந்துகந்து திமிர் கொண்டாலொத்து) "உகந்துகந்து மகிழ்ந்து குழையும்" என்றும், "திமிர் கொண்டாலொத்து நிற்கும்" என்றும், அவன் ஸௌந்தர்ய சீலாதிகளை அநுஸந்தித்து உத்தரோத்தரம் விளைகிற பாஹ்யாப்யந்தர ஹர்ஷத்தாலே சிதிலராவது, "ஸ்தப்தோஸ்யுத தமாதேசமப்ராக்ஷ்ய:" என்கிறபடியே ஸர்வநியாமக பரப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பிறந்தாரைப்போலே ஸ்திமிதராவதாய்.

**விளக்கம்** - (உகந்துகந்து திமிர் கொண்டாலொத்து இருந்த ப்ரபாவம்) - திருவாய்மொழி (6-5-4) – உகந்துகந்து மகிழ்ந்து குழையும் - என்றும், திருவாய்மொழி (6-5-2) - திமிர் கொண்டாலொத்து நிற்கும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவனுடைய ஸௌந்தர்யம், எளிமை போன்ற பல திருக்கல்யாண குணங்களை எப்போதும் எண்ணியபடி, அதன் விளைவாக உள்ளும் புறமும் மேன்மேலும் அதிகரித்தபடி உள்ளதான மகிழ்ச்சி காரணமாக உடல் தளர்ந்து நின்றவர், சாந்தோக்ய உபநிஷத் - ஸ்தப்தோஸ்யுத தமாதேசமப்ராக்ஷ்ய: - பரம்பொருள் குறித்து அறிந்தாயோ, அதனால் திமிர் கொண்டு காணப்பட்டாயோ – என்பதற்கு ஏற்ப அனைத்தையும் நியமிக்கின்ற பரம்பொருளை நேரடியாகக் கண்டவர்கள்

போன்று திமிர் நிறைந்தவராக உள்ள ப்ரபாவம் கொண்டவர் [இங்கு திமிர் என்றால் ஆணவம் என்று பொருள் அல்ல; அறிந்து கொண்ட பெருமிதம், மகிழ்ச்சி என்று பொருள்].

**வ்யாக்யானம்** - (நாட்டியல்வொழிந்து) "நாட்டாரோடியல் வொழிந்து" என்று, "உண்டியே உடையே" யுகந்தோடி, "யானே யென்றனதே" என்று அஹங்கார மமகார வச்யராயிருக்கிற லௌகிகரோடு ஸம்பந்தமற்று,

**விளக்கம்** – (நாட்டியல்வொழிந்து இருந்த ப்ரபாவம்) – திருவாய்மொழி (10-6-2) - நாட்டாரோடியல் வொழிந்து - என்பதற்கு ஏற்ப, பெருமாள் திருமொழி (3-4) - உண்டியே உடையே – என்று அவற்றின் பின்னால் ஓடி, திருவாய்மொழி (2-9-9) – யானே யென்றனதே - என்பதற்கு ஏற்ப "நான், என்னுடையது" என்பதான கர்வத்தின் பிடியில் சிக்குண்ட உலகத்தவர்களுடன் ஸம்பந்தம் இல்லாத ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (சடரையோட்டி) சடகோபராகையாலே "வேதசாஸ்த்ரா விரோதிநா" என்கிறபடியே ப்ரமாணாநுகூல தர்க்கங்களாலே மத்யஸ்தமாக வர்த்தத்தை ஸாதிக்கை யன்றிக்கே ஸ்வபுத்த்யா கல்பித சுஷ்க தர்க்கங்களாலே ஸ்வஸ்வ மத ஸ்தாபனம் பண்ணும் பாஹ்ய குத்ருஷ்டிகளாகிற சடரை, ச்ருத்யந்த தாத்பர்யமான ஸ்வோக்தி விசேஷங்களாலே ஸ்வஸந்நிதானத்தில் நில்லாதபடி துரத்தி.

**விளக்கம்** – (சடரை ஓட்டி இருந்த ப்ரபாவம்) மநுதர்மத்தில் - வேதசாஸ்த்ரா விரோதிநா - வேத சாஸ்த்ரங்களுக்கு முரண்படாமல் – என்பதற்கு ஏற்ப, ப்ரமாணங்களுக்கு ஏற்றபடியாக உள்ள விதிமுறைகள் கொண்டு நடுவு நிலைமை தவறாமல் நின்று வேதங்களின் ஆழ்பொருளை உறுதி செய்யாமல், தங்களுடைய புத்தியில் தோன்றுவதற்கு ஏற்ப வீண் கற்பனை வாதங்கள் கொண்டு தங்களுடைய மதங்களை நிலைநிறுத்த முயலும் மற்ற மதத்தவர்களும், வேதங்களின் ஆழ்பொருளை உள்ளது உள்ளபடி அறியாதவர்களும் ஆகிய வஞ்சனை நிறைந்தவர்களை, இவர் சடகோபர் என்பதால், வேதாந்தத்தின் தாத்பர்யமாகவே உள்ளதான தனது திருவாய்மொழிகள் கொண்டு, தன் முன்பாக நிற்க இயலாதபடி விரட்டிய ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (மதாவலிப்தர்க்கு அங்குசமிட்டு) பராங்குசராகையாலே "வித்யாமதோ தநமதஸ் த்ருதீயோ பிஜநோமத: ஏதே மதாவலிப்தாநாம்" என்று மத ஹஸ்திபோலே அபிஜந வித்யாதி மதத்ரயா வலிப்தராய்த் திரியுமவர்களுக்கு நிர்மதராய்த் தலைவணங்கும்படி உபதேச ரூபாங்குசமிட்டு.

**விளக்கம்** - (மத ஆவலிப்தர்க்கு அங்குசம் இட்டு இருந்த ப்ரபாவம்) - வித்யாமதோ தநமதஸ் த்ருதீயோ பிஜநோமத: ஏதே மதாவலிப்தாநாம் - கல்வி காரணமாக ஏற்பட்ட களிப்பு, செல்வம் காரணமாக ஏற்பட்ட களிப்பு, பிறந்த குலம் காரணமாக ஏற்பட்ட களிப்பு ஆகிய மூன்றும், கர்வம் கொண்டவர்களுக்கு மதத்தை ஏற்படுத்துகின்றன - என்பதற்கு ஏற்ப, கர்வம் கொண்ட யானை போன்று பிறந்த குலம், கல்வி மற்றும் செல்வம் ஆகியவற்றால் ஏற்படும் மூன்றுவிதமான மதங்களுடன் மேலும் கர்வம் கொண்டு திரிபவர்கள், தங்களுடைய கர்வம் நீங்கப் பெற்றவர்களாகி, தலைவணங்கி நிற்கும்படியாக, பராங்குசராக உள்ளதால் உபதேசம் வடிவமான அங்குசம் கொண்டு, அவர்களை அடக்கும் ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (நடாவிய கூற்றமாய்) "பறவையின் பாகன் மதன செங்கோல் நடாவிய கூற்றம்" என்று வேதவேத்யத்வ த்யோதகமாம்படி வேதமய கருடவாஹனான ஸர்வேச்வரன் விஷயத்திலே "நின்கண் வேட்கை யெழுவிப்பன்" என்று எல்லார்க்கும் பக்தியை யுண்டாக்கி நடத்தா நின்று கொண்டு தம் தர்சநத்திலகப்பட்டவர்களின் ஸம்ஸாரத்துக்கு ம்ருத்யுவாய்,

**விளக்கம்** – (நடாவிய கூற்றமாய் இருந்த ப்ரபாவம்) – திருவிருத்தம் (6) - பறவையின் பாகன் மதன செங்கோல் நடாவிய கூற்றம் – என்பதற்கு ஏற்ப, வேதங்களால் மட்டுமே அறியப்படக்கூடியதான தன்னுடைய தன்மையை உணர்த்தும்படியாக, வேதமயமாகவே உள்ள கருடனைத் தனது வாகனமாகக் கொண்டுள்ள ஸர்வேச்வரன் விஷயத்தில், திருவிருத்தம் (96) - நின்கண் வேட்கை யெழுவிப்பன் – என்பதற்கு ஏற்ப, அனைவருக்கும் பக்தியை வளர்த்து, தனது பார்வையில் அகப்பட்டவர்கள் அனைவருடைய ஸம்ஸாரம் என்பதற்கு யமனாக நிற்கும் ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (தீயனமருங்கு வாராமல்) “கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம்” என்று சரீரத்தை முடித்து ப்ராணனை அபஹரிக்கக் கடவதான வ்யாதி சாத்ரவ க்ஷுத்தாதி தோஷங்களும், ஸாம்ஸாரிக ஸகல துக்க ஹேதுவான பாபங்களும், “வன்துயரை – மருங்கு – கண்டிலமால்” என்னும்படி அருகும் வாராதபடியாய்,

**விளக்கம்** – (தீயனமருங்கு வாராமல் இருந்த ப்ரபாவம்) - திருவாய்மொழி (5-2-6) – கொன்று உயிர் உண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம் - என்பதற்கு ஏற்ப சரீரத்தை வீழ்த்தி, ப்ராணனை அபகரித்துச் செல்வதாகிய நோய், பகை, பசி போன்ற தோஷங்களும், ஸம்ஸாரத்தில் உள்ளதன் காரணமாக உண்டாகிற அனைத்துவிதமான துன்பங்களுக்கும் காரணமான பாவங்களும், பெரியதிருவந்தாதி (54) – வன்துயரை – மருங்கு – கண்டிலமால் – என்பதற்கு ஏற்ப சிறிதும் அருகில் வராதபடியாகத் தடுக்கும் ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றி) “திரியும் கலியுகம் நீங்கி” என்று, “பவிஷ்யத்யதரோத்தரம்” என்கிறபடியே பதார்த்த ஸ்வபாவங்கள் மாறாடும்படி பண்ணுவதாய், “கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வ ஸ்ரஷ்டாரமீச்வரம், நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா:” என்கிறபடியே பகவத் ருசி விரோதியான கலியுகம் போய், “பெரிய கதியுகம் பற்றி” என்கிறபடியே கேவல வைஷ்ணவ தர்மமே நடக்குமதாய், யுகாந்தர வ்யவதாநமின்றிக்கே ஒரு போகியான க்ருதயுகம் ப்ரவேசிக்கும்படியாக,

**விளக்கம்** - (கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றி) – மஹாபாரதம் - பவிஷ்யத்யதரோத்தரம் - பொருள்களின் தன்மைகள் அனைத்தும் முற்றிலும் தலைகீழாக மாற உள்ளன - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்துப் பொருள்களின் தன்மைகள் அனைத்தும் மாறும்படியாகவும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-50) – கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வ ஸ்ரஷ்டாரமீச்வரம், நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா: - மைத்ரேயரே! உலகம் அனைத்திற்கும் தலைவனும், எங்கும் பரவி உள்ளவனும், அனைத்தையும் படைப்பவனும், அனைத்தையும் நியமிப்பவனும் ஆகிய ஸர்வேச்வரனை, கலியுகத்தில் பாவங்களால் பீடிக்கப்பட்ட மனிதர்கள் வணங்கமாட்டனர் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வ்ரனிடம் உள்ள பக்திக்கு விரோதம் ஏற்படும்படியாகவும் உள்ளதான கலியுகமனாது, திருவாய்மொழி (5-2-3) – திரியும் கலியுகம் நீங்கி – என்று

கூறுவதற்கு ஏற்ப நீங்கி, திருவாய்மொழி (5-2-3) - பெரிய கதியுகம் பற்றி - என்பதற்கு ஏற்ப ஸ்ரீவைஷ்ணவ தர்மம் மட்டுமே நிறைந்ததும், மற்ற யுகங்களுடைய இடையூறு இன்றி இன்பம் அளிக்கவல்லதும் ஆகிய க்ருதயுகம் ஏற்படும்படியான ப்ரபாவம் கொண்டவர்.

**வ்யாக்யானம்** - (பட்டெழு போதறியாதிருந்த ப்ரபாவம்) "பட்டபோதெழு போதறியாள் விரை மட்டலர் தண்டுழா யென்னும்" என்று பகவத்விஷயத்தில் போக்யதாநுஸந்தானத்தால், "நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ" என்று ஆதித்யோதயத்திலே வந்தவாறே த்ரவ்யார்ஜந காலம் வந்ததென்று உகப்பார்கள், அவன் அஸ்தமித்தவாறே அபிமத விஷயங்களோடே ரமிக்கைக்கு காலம் வந்ததென்று உகப்பர்களென்றும், "ப்ராதர் மூத்ரபுரீஷாப்யாம் மத்யாஹ்நே க்ஷுத் பிபாஸயா, ஸாயம் காமேந பாத்யந்தே ஜந்தவோ நிசி நித்ரயா" என்றும் சொல்லுகிறபடியே நாட்டார்க்குப் புறம்பே காலக்ஷேபத்துக் குடலாய்ச் செல்லுகிற திவா ராத்ர விபாகமு மறியாதே அகால கால்யமான தேசத்திற் போலே, பகவதநுபவைக பரரா யிருந்த ப்ரபாவம். [இதுக்கு மூலம் இப்படியிருந்த ப்ரபாவம்] என்று வாக்ய ஸம்பந்தம். இத்தால் கீழ்ச்சொன்ன சங்கைக்குக் காரண மின்னதென்று எல்லாரு மறியும்படி அருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம்** – (பட்டெழுபோது அறியாது இருந்த ப்ரபாவம்) - திருவாய்மொழி (2-4-9) - பட்டபோதெழு போதறியாள் விரை மட்டலர் தண்டுழா யென்னும் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை மட்டுமே எப்போதும் எண்ணியபடி உள்ள மனம் கொண்டு, அந்த இன்பத்திலேயே மூழ்கியபடி உள்ளவர் என்பதால், இராமாயணம் அயோத்யாகாண்டம் (105-24) – நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ - சூரிய உதயத்தின்போது பொருள் ஈட்டும் காலம் வந்தது என்று மகிழ்வர், சூரியன் அஸ்தமித்தவுடன் மனைவியுடன் இன்பமான உள்ள காலம் வந்தது என்று மகிழ்வர் - என்பதற்கு ஏற்ப சூரியன் உதித்தவுடன் பொருள் ஈட்டும் காலம் வந்ததாக மகிழ்வர், சூரியன் மறைந்தவுடன் தங்களுக்கு விருப்பமாக விஷயங்களில் ஈடுபடுவதற்கான காலம் வந்தது என்று மகிழ்வர் - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-62) - ப்ராதர் மூத்ரபுரீஷாப்யாம் மத்யாஹ்நே க்ஷுத் பிபாஸயா, ஸாயம் காமேந பாத்யந்தே ஜந்தவோ நிசி நித்ரயா – காலைப்பொழுதில் மலமூத்திரத்தாலும், உச்சிப்பொழுதில் பசி தாகத்தாலும், மாலைப்பொழுதில் காமத்தாலும், இரவில் தூக்கத்தாலும் மனிதர்கள் துன்பம் அடைகிறார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப

உள்ள இந்த உலகினர் போன்று இவர் அல்லாமல், பொழுதுபோக்குவதற்குத் துணை நிற்கின்ற இரவு பகல் வேறுபாடு அறியாமல், காலம் என்பதன் பிடியில் சிக்காமல் உள்ள பரமபதத்தில் உள்ளது போன்று பகவத் அனுபவம் என்பதில் மட்டுமே எப்போதும் நிலைத்தவராக உள்ள ப்ரபாவம் கொண்டவர். சூர்ணையில் "இதுக்கு மூலம் … இப்படியிருந்த ப்ரபாவம்" என்று முடிக்கவேண்டும். இப்படியாகப் பலவிதமாக மேலே எழுந்த சந்தேகத்திற்குக் காரணம் இன்னது என்று அனைவரும் அறியும்படியாக அருளிச்செய்தார்.

94. இதுக்கு ஹேது - ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருளென்றளி மகிழ்ந்து முற்றுமாய் நின்று நூலுரைத்து யோகு புணர்ந்து கண்கான வந்து ஆள்பார்க்கிறவன் உலகினதியல்வை நல்வீடு செய்ய இணைக்குப் பார்வை தேடிக் கழலலர் ஞானமுருவின் முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்போடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப்படிந்து துளங்குகிறவர் மேலேபடப் பக்க நோக்கறப் பண்ணின விசேஷ கடாக்ஷம்.

**அவதாரிகை** - இவர்க்கு இந்த ப்ரபாவத்துக்கு அடியேதென்னுமாகாங்க்ஷையிலே இதுக்கு ஹேது, பகவந் நிர்ஹேதுக கடாக்ஷமென்கிறார் மேல். இப்படிக் கடாக்ஷித்ததுதான் இந்த லோகத்தை இவரைக் கொண்டு திருத்துகைக்காக வென்னுமத்தையும், இவர் தம்முடைய பூர்வாவஸ்தையையும், இவரைக் கடாக்ஷித்த ப்ரகாரத்தையும் விசதமாகச் சொல்லுகிறது இச்சூர்ணையாலே.

**விளக்கம்** - நம்மாழ்வாருடைய இத்தகைய ப்ரபாவத்திற்கான காரணம் என்ன என்ற கேள்வி எழலாம். இதற்குக் காரணம் - எந்தவிதமான காரணமும் இன்றி வருவதான பகவத் கருணையே ஆகும் என்கிறார். இவ்விதம் இவருக்குக் கடாக்ஷிப்பதன் காரணம் - இந்த லோகத்தை இவரைக் கொண்டு திருத்துவதற்காக என்பதையும், நம்மாழ்வாருடைய முந்தையை நிலை மற்றும் ஸர்வேச்வரன் கடாக்ஷித்த விதம் ஆகிய பலவற்றையும் இந்தச் சூர்ணையில் விரிவாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இதுக்கு ஹேது) இவருடைய இந்த ப்ரபாவத்துக்கு ஹேது. (ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருளென்றளி மகிழ்ந்து) "ஊழிதோறும் தன்னுள்ளே படைத்து" என்றும், "சோம்பாதிப் பல்லுருவை யெல்லாம் படர்வித்த" என்றும் சொல்லுகிறபடியே,

பண்ணின க்ருஷிகள் தப்பினாலும் சோம்பிக் கைவாங்காதே பின்னையும் க்ருஷி தன்னையே பண்ணும் க்ருஷிகனைப்போலே கல்பந்தோறும் ஸ்ருஷ்டிக்கச் செய்தே ஸபலமாகாதிருக்க முசியாதே மிகவுமொருப்பட்டு, என்றேனுமொருநாள் ப்ரயோஜனப் படுமென்று க்ருஷியை யுகந்து ஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ணி.

**விளக்கம்** - (இதுக்கு ஹேது) - நம்மாழ்வாருடைய இந்த ப்ரபாவத்திற்கான காரணம். (ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருள் என்று அளி மகிழ்ந்து) - திருவாய்மொழி (10-7-9) – ஊழிதோறும் தன்னுள்ளே படைத்து – என்றும், பெரியதிருவந்தாதி (18) - சோம்பாதிப் பல்லுருவை யெல்லாம் படர்வித்த - என்றும், திருவாய்மொழி (3-9-10) – ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான் - என்றும், திருவாய்மொழி (2-10-11) – பொருள் என்று இவ்வுலகம் படைத்தவன் - என்றும், திருவாய்மொழி (3-4-8) – அளி மகிழ்ந்து உலகம் எல்லாம் படைத்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, முன்பு செய்த விவசாயம் தவறிப் போனாலும் அதனால் சோம்பியபடி பின்வாங்காமல் மீண்டும் அதே போன்று விவசாயம் செய்யும் விவசாயி போன்று, ஒவ்வொரு கல்பத்திலும் அனைத்தையும் படைத்தாலும், அந்தப் படைப்புகள் தன்னை நாடாமல் உள்ளது கண்டு, "தனது படைப்பு பயன் பெறவில்லையே" என்று சோர்ந்துவிடாமல், "இவை என்றாவது ஒருநாள் பயன் அளிக்கும்" என்று தான் செய்வதை மிகவும் விருப்பத்துடன் செய்து உலகைப் படைத்தபடி.

**வ்யாக்யானம்** - (முற்றுமாய் நின்று) "நில நீரெரிகால் விண்ணுயிரென்றிவைதான் முதலா முற்றுமாய் நின்ற" என்று, "தத் ஸ்ருஷ்ட்வா, ததேவாநு ப்ராவிசத்" இத்யாதிப்படியே ஸ்ருஷ்டமான ஜகத்திலே இவற்றினுடைய வஸ்துத்வ நாம பாக்த்வங்களுக்கும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்திகளுக்குமாக அநுப்ரவேசித்து இவற்றைச் சொல்லும் வாசக சப்தம் தன்னளவிலே பர்யவஸிக்கும்படி ப்ரகாரியாய் நின்று. (நூலுரைத்து) "அன்ன மதாயிருந்தங்கற நூலுரைத்த" என்கிறபடியே, கேட்பார் உபஸத்தி பண்ண மாட்டாமையாலே இழக்கவெண்டாதபடி திர்யக் ரூபேண தன்னைத் தாழவிட்டு நின்று ஜ்ஞாதவ்ய தர்மப்ரகாசகமான சாஸ்த்ரத்தை உபதேசித்து. (யோகு புணர்ந்து) "குறைவில் தடங்கடல் கோளரவேறித்தன் கோல செந்தாமரைக்கண், உறைபவன் போல வோர் யோகு புணர்ந்த வொளி மணிவண்ணன்" என்கிறபடியே திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வான் மேலேயேறிப் படுக்கை வாய்ப்பாலே கண்வளர்ந்தருளுகிறாப்போலே ஜகத் ரக்ஷணோபாய சிந்தை பண்ணிக் கண்வளர்ந்து. (கண்காண வந்து) சிந்திதோபாயாநு குணமாக "துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண

வந்து” என்கிறபடியே, “ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம்” என்றும், “ந மாம்ஸ சக்ஷுரபி வீக்ஷதே தம்” என்றும், “கட்கண்ணால் காணாத வவ்வுரு” என்றும் சொல்லப்படுகிறதான துக்கோத்தரமான மநுஷ்யருடைய பிறவியிலே ஆவிர்ப்பவித்தருளி, அவர்கள் மாம்ஸ சக்ஷுஸ்ஸுக்கு விஷயமாம்படி வந்து. (ஆள்பார்க்கிறவன்) இப்படி அவதாராதிகளாலே “ஆள் பார்த்துழி தருவாய்” என்கிறபடியே “எனக்கடிமை யாவாருண்டோ” என்று இதுவே வேளாண்மையாகத் தேடித் திரிகிறவன்.

**விளக்கம்** - (முற்றுமாய் நின்று) – திருவாய்மொழி (7-6-2) – நில நீரெரிகால் விண்ணுயிரென்றிவைதான் முதலா முற்றுமாய் நின்ற - என்றும், தைத்திரீய உபநிஷத் – தத் ஸ்ருஷ்ட்வா, ததேவாநு ப்ராவிசத் - அனைத்தையும் படைத்து, அவற்றினுள் புகுந்தான் - என்றும் கூறுவதற்கு, ஏற்ப தன்னால் படைக்கப்பட்ட இந்த உலகத்தில் உள்ள அனைத்தும் “ஒரு பொருள்” என்று கூறுவதற்கான தகுதியை அடைவதற்கும், “இதற்கு இன்ன பெயர்” என்று கூறுவதற்கான தகுதியை அவை பெறுவதற்கும், அவை தங்களுடைய கர்மங்களை இயற்றுதல் மற்றும் இயற்றாமல் இருத்தல் போன்ற நிலையை அடைவதற்கும் என்பதற்காக அவற்றினுள் புகுந்து, அவற்றைக் குறிக்கும் பெயர்கள் அனைத்தும் தன்னையே குறிப்பதாகச் செய்யும்படி அவற்றின் உயிராக நின்று. (நூல் உரைத்து) – பெரியதிருமொழி (11-4-8) – அன்னமதாயிருந்தங்கற நூலுரைத்த - என்பதற்கு ஏற்ப தனது உபதேசங்களைக் கேட்பவர்கள் அனைவரும் அவற்றை உணரமாட்டார்கள் என்பதன் காரணமாக, அவர்கள் அதனை இழந்து விடக்கூடாது என்று திருவுள்ளம் பற்றியவனாக, அன்னப்பறவையாகத் தான் தாழ்ந்த பிறவியில் அவதரித்து, அனைவரும் அறிந்து கொள்ளவேண்டியதான தர்மங்கள் அனைத்தையும் தன்னுள் வெளிப்படுத்தியபடி உள்ள சாஸ்த்ரங்களை உபதேசம் செய்து, (யோகு புணர்ந்து) – திருவாய்மொழி (3-10-3) - குறைவில் தடங்கடல் கோளரவேறித்தன் கோல செந்தாமரைக்கண், உறைபவன் போல வோர் யோகு புணர்ந்த வொளி மணிவண்ணன் - என்பதற்கு ஏற்ப திருப்பாற்கடலிற்கு வந்து ஆதிசேஷன் மீது ஏறி, சயனித்துக் கிடப்பதற்கு ஒரு மெத்தை கிட்டியது என்பதைக் காரணமாக வைத்து உறங்குவது போன்று பாசாங்கு செய்து, உலகத்தைக் காப்பது எப்படி என்று எப்போதும் கண்களை மூடியபடி சிந்தித்து. (கண் காண வந்து) - சிந்தித்த உபாயத்திற்கு ஏற்றபடி, திருவாய்மொழி (3-10-6) - துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து – என்பதற்கு ஏற்ப, கடோபநிஷத் – ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம் – இந்தப் பரமபுருஷனை யாரும் மாமிசக்கண் கொண்டு காண இயலாது –


Email:sridharan_book@yahoo.co.in

என்றும், ந மாம்ஸ சக்ஷுஷாபி வீக்ஷதே தம் – மாமிசக் கண்கள் கொண்டு அவனைக் காண்பதற்கு இல்லை - என்றும், பெரிய திருவந்தாதி (28) - கட்கண்ணால் காணாத வவ்வுரு - என்றும் கறுவதற்கு ஏற்ப உள்ள ஸர்வேச்வரனாகிய தான், துக்கங்களுக்கு இருப்பிடமாக உள்ள மனிதப்பிறவியில் தோன்றி, அவர்களுடைய மாமிசக் கண்களால் தன்னைக் காணும்படியாக நின்று. (ஆள் பார்க்கிறவன்) - இவ்விதமான அவதாரங்கள் மூலமாக, நான்முகன் திருவந்தாதி (60) - ஆள் பார்த்துழி தருவாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, “நமக்கு அடிமையாக உள்ளவர் யாரும் உள்ளனரோ” என்று இதனையே தொழிலாகச் செய்தபடி உள்ளவன் [அதாவது இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் செய்வது என்னவென்றால் …]

**வ்யாக்யானம்** - (உலகினதியல்வை நல்வீடு செய்ய) “ஓ ஓ உலகினதியல்வே” என்று தத்வ வித்துக்கள் கண்டால் ஸஹிக்கமாட்டாமல் விஷண்ணராம்படி “பெற்றதாயிருக்க மணை வெந்நீராட்டு”வாரைப்போலே உத்பாதகனாய் ஸர்வ ப்ரகார ரக்ஷகனாய்ப் போருகிற பரதேவதையான தன்னை விட்டு, கிடந்தவிடம் தெரியாதபடி அப்ரஸித்தமான க்ஷுத்ர தேவதைகளை ஆட்டையறுத்தல், ப்ரஜையை அறுத்தல், அத்யந்த நிஷித்தமான மதிராதிகளை நிவேதித்தலாகிற பரஹிம்ஸாதி ஸாதந முகத்தாலே பஜித்து, தத் பலமாக துக்கமிச்ரமான ஸுகத்தைத் தருமவையாய், அநாதியாய் துஸ்தரமா யிருக்கிற ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநமான ஜந்மங்களினின்றும் ஒருகாலும் நீங்காமைக்குறுப்பாய், பலவகைப்பட்டுத் தப்பவரிதா யிருந்துள்ள சப்தாதி விஷயங்களிலே துக்கப்பட் டழுந்துகிற லோக ஸ்வபாவத்தை “யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும்” என்று, அநாதி வாஸனையாலே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் ஏதேனுமொன்றை அவலம்பித்துத் தன்னை விட்டகலுகையே ஸ்வபாவமான ஸம்ஸாரி சேதனன் வ்ரதத்தை நன்றாக விடுவிக்க மென்கிறபடியே ஸவாஸநமாகப் போக்குகைக்காக.

**விளக்கம்** - (உலகினது இயல்வை நல்வீடு செய்ய) - உண்மையானவற்றை உள்ளது உள்ளபடி அறியும் சான்றோர்கள் கண்டால், திருவாசிரியம் (6) – ஓ ஓ உலகினதியல்வே - என்று பொறுத்துக் கொள்ள இயலாமல் துன்பம் அடையும் விதத்தில்; பெரியதிருமொழி (11-6-6) – பெற்ற தாயிருக்க மணை வெந்நீர் ஆட்டுதிரோ – [பெற்ற தாய் போன்று பரிவுடன் தனது திரு வயிற்றிலே நிறுத்திப் பிழைக்க வைத்தருளின ஸர்வேச்வரனும் வெறுக்கும்படியாக வேறு ஒரு தாழ்ந்த தேவதையைக் கொண்டாடுவது என்பது, அறிவற்ற

மணைக் கட்டையை வெந்நீரில் நீராட்டுவது போன்று ஆகும் - பெண்கள் பிரசவித்தவுடன் பெற்ற அத்தாயையும் பிறந்த குழந்தையையும் நீராட்டுதல் என்பது மலைநாட்டு வழக்கமாக முன்பு இருந்தது; ஆனால் பிரசவித்தவுடனேயே தாயை நீராட்டுவது பலவகையான துன்பங்களுக்குக் காரணமாவதால் அத்தாய்க்குப் பதிலாக ஒரு மணைக் கட்டையை நீராட்டுதல் என்னும் வழக்கம் உள்ளது. அதனைத் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார்] என்பதற்கு ஏற்ப, அனைத்துப் பொருள்களையும் படைத்தவனும், அவற்றை அனைத்துவிதத்திலும் காப்பாற்றுபவனும் ஆகிய உயர்ந்த தெய்வமான தன்னை விட்டு அகன்று சென்று; உள்ள இடம் தெரியாதபடி இருக்கின்ற ப்ரஸித்தம் அற்ற தாழ்ந்த தெய்வங்களை, ஆட்டை அறுத்தும் குழந்தைகளை வெட்டியும் பலி அளித்தும், மது போன்ற தாழ்ந்த பொருட்களை அளித்தும் என்பதான மற்ற உயிர்களைத் துன்புறுத்துதல் போன்ற வழிகளால் பூஜித்து, அதன் விளைவாகத் துக்கம் கலந்த இன்பத்தை அளிப்பதாகவும், எல்லையற்ற காலங்களாகக் கடப்பதற்கு அரியதாகவும் உள்ள இந்த உலகின் தொடர்பு காரணமாக ஏற்படும் பிறவி எனபவற்றிலிருந்து நீங்குவதற்கு இயலாமல் உள்ளதன் காரணமாகவும் இருக்கின்ற உலகவிஷயங்களில் துக்கப்பட்டு அழுந்தியபடி உள்ள இந்த உலகத்தினரின் தன்மையை; திருவிருத்தம் (95) – யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும் - என்பதற்கு ஏற்ப, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதான வாசனை காரணமாக, இந்த உலகில் உள்ள பொருள்களுடன் தொடர்பு கொண்டபடி அவற்றை மட்டுமே விடாமல் பற்றிக்கொண்டு, ஸர்வேச்வரனாகிய தன்னை விட்டு அகலுதல் என்பதையே இயல்பாகக் கொண்டுள்ள இந்த ஸம்ஸாரத்தில் உள்ள மனிதர்களுடைய எண்ணங்களை முழுவதுமாக விடுவித்துவிடும் என்பதற்கு ஏற்ப அவற்றை வாசனையுடன் நீக்குவதற்காக.

**வ்யாக்யானம்** - (இணக்குப் பார்வை தேடி) ம்ருக பக்ஷிகளைப் பிடிப்பார் ஸஜாதீய புத்தியாலே தன்னோடே இணக்கவற்றான ம்ருக பக்ஷிகளைப் பார்வையாக வைத்துப் பிடிப்பாரைப்போலே பார்வையைத் திணக்குவதாக, அதுக்காவார் ஆரென்று தேடி. (கழலலர் ஞானமுருவின முழுதுமோட்டின பெருங்கண்) “கழறலம்” என்று தொடங்கி ஒரு திருவடித்தலமே பூமி யடையத் தானாயிற்று, ஒரு திருவடி பூமியிலே இடமில்லாமையாலே போய், ஸர்வர்க்கும் ஸர்வகாலத்திலும் இஸ்ஸம்பந்தத்தை நினைத்துத் தன்னிழலில் ஒதுங்கலாம்படி நிழலைக் கொடுக்கைக்காக ஊர்த்வ லோகங்க ளெல்லாத்திலும் நிறைந்தது. பரப்பையுடைத்தான அவ்வண்டத்தை யடையப்புக் குழறுகையாலே

விகஸிதமா யிருந்துள்ள ஜ்ஞாநமாகிற ப்ரகாச ரூபமான தீபத்தை யுடையனாயென்கிறபடியே கழல்தலமும், உழறலர் ஞானமும் மறுபாடுருவின பரப்பெங்கு மோட்டிப் பார்த்த “அழறலர் தாமரை” போன்ற செவ்வியையுடைய “பெருங்கண்மலர்” என்கிற பெரிய திருக்கண்களானவை. (எங்குமிலக்கற்று) ஓரிடத்திலும் அதுக்கு ஆவாரைக் காணாமல் ஒரு விஷயத்தை அப்படிக் காக்குவதாகப் பார்க்கிறவளவிலே, (அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப் படிந்து துளங்குகிறவர் மேலே பட) “அன்போடு தென்திசை நோக்கிப் பள்ளிக் கொள்ளும்” என்று ஸ்ரீவிபீஷணாழ்வான் விஷயமாக எப்போதும் ஸ்நேஹமாகப் பார்த்துக் கொண்டு கிடக்கையாலே தனக்குப் பள்ளமடையான தக்ஷிண திக்கிலே “யாதானுமோராக்கையில் புக்கு” என்றும், “ஆக்கையின் வழியுழல்வேன்” என்றும், “மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து” என்றும், “பல்பிறவியில் படிகின்ற யான்” என்றும், “பிறவிக் கடலுள் நின்ற நான் துளங்க” என்றும் சொல்லுகிறபடியே ஜாதி நியமமாதல் வர்ணநியமமாதலின்றிக்கே, கர்மாநுகுணமாக ஏதேனுமொரு சரீரத்திலே ப்ரவேசித்து, அந்த சரீரத்தின் வழியே போய் ஜந்ம பரம்பரைகளிலே தோள்மாறி அவ்வநர்த்தத்தில் வெறுப்பின்றிக்கே அதிலே அவகாஹித்துத் தரை காணவொண்ணாத ஸம்ஸார ஸாகர மத்யஸ்தராய்க் கொண்டு நடுங்குகிற விவர் மேலே பட, (பக்கநோக்கறப் பண்ணின விசேஷ கடாக்ஷம்) இப்படி இவர் மேலே பட்டவித்தை “நம்மேலோருங்கே பிறழ வைத்தார்” என்கிறபடியே ஒருமடைப்படுத்தி, “பக்கநோக்கறியான்” என்று நாச்சிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் புரிந்து பார்க்க வறியானென்னும்படி “நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந” என்றும், “நிர்ஹேதுக கதிம்” என்றும் சொல்லுகிறபடியே ஸ்வேச்சையாலே நிர்ஹேதுகமாகப் பண்ணப்பட்ட விசேஷ கடாக்ஷம். “இதுக்கு ஹேது – இப்படிப் பண்ணின விசேஷ கடாக்ஷம்” என்று வாக்யாந்வயம். ஆகக் கீழுக்தமான இவருடைய ப்ரபாவத்துக்கு ஹேது ஸ்பஷ்டமாக ப்ரதிபாதிதமாயிற்று. இத்தாலே சங்கா வாக்யத்திற் சொன்ன சங்கைகளெல்லாம் கிடக்க “அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவர்” இவரென்று நிர்ணீதமாய்விட்டது.

**விளக்கம்** - (இணக்குப் பார்வை தேடி) - விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றைப் பிடிக்க எண்ணுபவர்கள், அவைகள் “தங்களுடைய இனம்” என்று எண்ணுவதற்காக அவற்றின் இனத்துடன் ஒத்தபடி உள்ள விலங்குகளையும் பறவைகளையும் பார்வையாக


**Email:**sridharan_book@yahoo.co.in

வைத்துப் பிடிப்பது போன்று, ஸம்ஸாரிகளும் தங்களில் ஒருவர் என்று எண்ணவேண்டும் என்பதற்காக, அப்படிப்பட்ட ஒருவர் யார் என்று தேடி. (கழலலர் ஞானமுருவின முழுதுமோட்டின பெருங்கண்) திருவிருத்தம் (58) – கழறலம் – என்பதற்கு ஏற்ப ஒரு திருவடித்தலம் இந்தப் பூமி முழுவதையும் பரவி நின்றது, மற்றொன்று இந்தப் பூமியில் இடம் இல்லாத காரணத்தால் அனைவருக்கும் எப்போதும் இப்படிப்பட்டதான தனது ஸம்பந்தத்தை எண்ணியபடி "அவன் திருவடி நிழலில் ஒதுங்கலாம்" என்பதற்கு ஏற்ப நிழலை அளிப்பதற்காக மேல் லோகங்கள் அனைத்திலும் பரவி நின்றது. மிகுந்த பரப்பளவு கொண்டதான அண்டம் முழுவதும் பரவி நிற்கும்படியாக உள்ளதால் மலர்ந்து காணப்படும் ஞானம் என்ற ஒளி கொண்ட தீபம் ஏந்தியவன் என்பதற்கு ஏற்ப திருவடித்தலமும், மலர்ந்த ஞானம், மறுபாடு உருவின பரப்பு முழுவதும் அலசியபடி நோக்கியதும், சூரியனைக் கண்ட மலர்ந்துள்ள தாமரை போன்றும் அழகைக் கொண்ட திருவிருத்தம் (45) – பெருங்கண் மலர் - என்பதற்கு ஏற்ப உள்ள பெரிய திருக்கண்கள். (எங்கும் இலக்கு அற்று) - எந்த ஒரு இடத்திலும் இப்படிப்பட்ட செயலுக்கு ஏற்றபடியாக உள்ள ஒருவர் அகப்படாமல் உள்ளதால், அது போன்று ஒருவரைப் புதியதாக உருவாக்கலாம் என்று தீர்மானித்து நோக்கும் நேரத்தில். (அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப் படிந்து துளங்குகிறவர் மேலே பட) - பெருமாள் திருமொழி (1-10) - அன்போடு தென்திசை நோக்கிப் பள்ளிக் கொள்ளும் - என்பதற்கு ஏற்ப ஸ்ரீவிபீஷணாழ்வான் மீது கொண்ட அன்பின் காரணமாக எப்போதும் அவன் உள்ள திசையான தெற்குத்திசையை நோக்கியபடி உள்ளதால், தனது பார்வை என்னும் வெள்ளம் ஓடுவதற்கு ஏற்றபடி பள்ளமாக உள்ளதான தெற்குத்திசையில், திருவிருத்தம் (95) – யாதானுமோராக்கையில் புக்கு – என்றும், திருவாய்மொழி (3-2-1) – ஆக்கையின் வழியுழல்வேன் - என்றும், திருவாய்மொழி (2-6-8) - மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து – என்றும், திருவாய்மொழி (3-2-2) - பல்பிறவியில் படிகின்ற யான் – என்றும், திருவாய்மொழி (5-1-9) – பிறவிக் கடலுள் நின்ற நான் துளங்க - என்றும் கூறுவதற்கு ஏற்ப இன்ன வர்ணம் என்றோ அல்லது இன்ன குலம் என்றோ ஒரு வரையறை இல்லாமல், கர்மத்தின் காரணமாக ஏதேனும் ஒரு சரீரத்தில் புகுந்து, அந்தச் சரீரம் இட்டுச் செல்லும் வழியில் சென்று, தொடர்ச்சியாக வருகின்ற பிறவிகளில் மாறி மாறி வந்து, இப்படிப்பட்ட தாழ்ந்த நிலை என்ற நிலையைக் குறித்து வெறுப்பு இல்லாமல், அந்த ஸம்ஸாரத்தில் மூழ்கியதன் காரணமாகத் தரை காண இயலாதபடி உள்ள பிறவி என்ற பெருங்கடலின் நடுவில் இருந்தபடி நடுங்கும் நம்மாழ்வார் மீது ஸர்வேச்வரனின் பார்வை பட்டது. (பக்கநோக்கறப் பண்ணின விசேஷ கடாக்ஷம்) -

இவ்விதம் இவர் மேல் விழுந்த பார்வையை, திருவிருத்தம் (45) – நம்மேலோருங்கே பிறழ வைத்தார் – என்று கூறுவதற்கு ஏற்ப ஒரு நிலையில் வைத்து, திருவாய்மொழி (2-6-2) – க்கநோக்கறியான் – என்னும்படி பிராட்டிமார்கள் தங்களுடைய ஸ்தனங்கள் கொண்டு இவனை நெருக்கமாக அணைத்துக் கொண்டாலும் அதனை உணர்ந்து காணாமல் உள்ளான் என்னும்படியாக, பாஞ்சராத்ரம் - நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந - பகவானாகிய நான் சிபாரிசு காரணமாகவோ, மற்ற உபாயங்கள் காரணமாகவோ யாரையும் கடாக்ஷிப்பதில்லை; எனது விருப்பம் காரணமாக மட்டுமே ஒருவனைக் கடாக்ஷிக்கிறேன் - என்றும், பாஞ்சராத்ரம் – நிர்ஹேதுக கதிம் - எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படுவதான எனது கடாக்ஷம் காரணமாக ஏற்பட்டதான ஆசார்யனுடைய அங்கீகாரம் என்ற உயர்ந்த பேற்றினை அடைகிறார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது விருப்பம் காரணமாகவும், மற்ற எந்தவிதமான காரணம் இன்றியும் ஸர்வேச்வரனால் செய்யப்பட்ட சிறப்பான கடாக்ஷம். அதாவது "இதுக்கு ஹேது" என்று தொடங்கப்பட்ட சூர்ணை வாக்கியமானது "இவ்விதம் செய்யப்பட்ட விசேஷமான கடாக்ஷம்" என்று முடிகிறது. ஆக இப்படியாக மேலே கூறப்பட்ட இவருடைய ப்ரபாவத்தின் காரணம் இன்னது என்று தெளிவாகக் கூறப்பட்டது. இதன் மூலம் கடந்த சூர்ணையில் கூறப்பட்ட சந்தேகங்கள் பலவற்றில் உள்ளதான "அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவர்" இவரே ஆவார் என்று உணர இயல்கிறது.

95. ச்ரமணீ விதுர ரிஷிபத்நிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு சாபமிழிந் தென்னப் பண்ணுமிறே.

**அவதாரிகை** – நித்யஸம்ஸாரியாய்ப் போந்தாரொருவர்க்கு பகவத் கடாக்ஷ விஷயமான வளவிலே நிகில பாபங்களும் நீங்கி இப்ப்ரபாவமெல்லா முண்டாகக்கூடுமோ வென்கிற சங்கையிலே பகவத் கடாக்ஷ வைபவத்தை அருளிச்செய்கிறார் (ச்ரமணீ யென்று தொடங்கி).

**விளக்கம்** – எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள ஒருவருக்குப் பகவத் கடாக்ஷம் கிட்டிய உடனேயே, அவருடைய அனைத்து பாவங்களும் நீங்கப் பெற்று, இப்படிப்பட்ட ப்ரபாவங்கள் பலவும் ஏற்படுமோ என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடையாக, பகவத் கடாக்ஷத்தின் பெருமையை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ச்ரமணீம் தர்மநிபுணாம் அபிகச்ச” என்று கபந்தன் சொன்ன வநந்தரம் “ஸோப்ய கச்சந் மஹாதேஜாச் சபரீம்” என்கிறபடியே ஸ்வயமேவ சென்று விஷயீகரித்த வேடுவிச்சியான ச்ரமணியை, “சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம்” என்று தேவரீருடைய அழகிய திருக்கண் பார்வையாலே என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களெல்லாம் போய்ப் பரிசுத்தையானேனென்று சொல்லும்படியாகவும்,

**விளக்கம்** - (ச்ரமணீ பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு) - இராமாயணம் பாலகாண்டம் (1-57) – ச்ரமணீம் தர்மநிபுணாம் அபிகச்ச – ஸந்யாஸினியும், தர்மத்தில் நிலை நிற்பவளும் ஆகிய சபரியை அடைவாயாக - என்று கபந்தன் கூறியவுடன், இராமாயணம் பாலகாண்டம் (1-57) – ஸோப்ய கச்சந் மஹாதேஜாச் சபரீம் - மிகுந்த தேஜஸ் பொருந்திய சபரியை இராமன் அடைந்தான் - என்பதற்கு ஏற்ப, இராமன் தானாகவே சென்று ஏற்றுக் கொண்ட வேட்டுவிச்சியும், அனைத்தும் துறந்தவளும் ஆகிய சபரியை, இராமாயணம் ஆரண்யகாண்டம் (74-12) - சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் - ரகுகுலத்தில் அவதரித்தவனே! உனது குளிர்ந்த திருக்கண்களால் நான் தூய்மை அடைந்தேன். உனது திருவடிகள் காரணமாக நான் மீண்டும் வருதல் என்பது இல்லாத உலகத்தை அடைய உள்ளேன் - என்பதற்கு ஏற்ப, “உம்முடைய அழகான திருக்கண்களின் கடாக்ஷம் காரணமாக என்னுடைய பேற்றுக்குத் தடையாக இருந்த பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று தூய்மை அடைதேன்”, என்று கூறும்படியாகச் செய்த தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவனுடைய கடாக்ஷம்.

**வ்யாக்யானம்** - வெள்ளமானது பள்ளத்திலே தானே சென்று விழுமாபோலே அபிஜநாத்யஹங்கார அயோக்யதையு மில்லாமையாலே “நிவாஸாய யயௌ வேச்ம விதுரஸ்ய மஹாத்மந:” என்று தானே சென்று க்ருஹத்திலே புக்கு “விதுதாந்நாநி புபுஜே சுசீநி குணவந்திச” என்று தம்முடைய ஸ்பர்சமுள்ளவற்றை விரும்பி அமுது செய்யப்பெற்ற ஸ்ரீவிதுரரை, “பீஷ்ம த்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷல போஜனம்” என்று எதிரியானவன் சீறிச் சொல்லச் செய்தேயும், “புண்டரீகாக்ஷ” என்னும்படி அழகிய திருக்கண்களில் கடாக்ஷத்தாலே ஸகல ஸாம்ஸாரிக தோஷங்களும் போய் பரிசுத்தராம்படியாகவும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (விதுரரைப் பூதர் ஆக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு) வெள்ளம் தானாகவே பள்ளத்தை நோக்கி ஓடிச் சென்று விழுவது போன்று, உயர்ந்த குலத்தில் பிறவி போன்றவற்றால் ஏற்படுவதான அஹங்காரம் போன்றவை தோன்ற எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத காரணத்தால், மஹாபாரதம் உத்யோகபர்வம் - நிவாஸாய யயௌ வேச்ம விதுரஸ்ய மஹாத்மந: – மஹாத்மாவாகிய விதுரரின் இல்லத்தில் தங்குவதற்காக க்ருஷ்ணன் சென்றான் – என்பதற்கு ஏற்ப, தானாகவே வலியச் சென்று விதுரரின் இல்லத்தில் புகுந்தான். தொடர்ந்து, மஹாபாரதம் உத்யோகபர்வம் - விதுதாந்நாநி புபுஜே சுசீநி குணவந்திச - எந்தவிதமான பலனையும் எதிர்பாராத சிறந்த குணம் கொண்ட விதுரர் அளித்த உணவை உண்டான் - என்பற்கு ஏற்ப உண்ட பின்னர், தான் தொட்டு அளித்த உணவை மிகுந்த விருப்பத்துடன் உண்ட விதுரர், "மஹாபாரதம் உத்யோகபர்வம் - பீஷ்ம த்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷல போஜனம் - மதுஸூதநா! தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவனே! பீஷ்மர், துரோணர், துரியோதனனாகிய நான் என்று பலரும் உள்ளபோது, நீ ஏன் தாழ்ந்த விதுரர் வீட்டிற்குச் சென்று உண்டாய்?", என்று எதிரியான துரியோதனன் மிகுந்த சீற்றத்துடன் உரைத்தபோதிலும், புண்டரீகாக்ஷ - தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவன் - என்பதற்கு ஏற்ப தனது அழகான திருக்கண்களின் கடாக்ஷம் காரணமாக, பிறவியால் ஏற்பட்ட அனைத்து குற்றங்களும் நீங்கப்பெற்று தூய்மை அடையும்படியாகச் செய்த கடாக்ஷம்.

**வ்யாக்யானம்** – "வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளு"கிறபோதை நெடுநோக்காலே பக்த விலோசனத்தில் ருஷிபத்நிகளிலே ஒருத்தியை "தத்ரைகா வித்ருதா பர்த்ரா பகவந்தம் யதாச்ருதம், ஹ்ருதோபகூஹ்ய விஜஹௌ தேஹம் கர்ம நிபந்தநம்" என்று ஸ்வவிஷய ப்ராவண்யத்தாலே அப்போதே ஸம்ஸாராந் முக்தையாம்படியாகவும், அல்லாதாரை க்ஷீண பாபராய் முக்த்யர்ஹராம்படி பரிசுத்தராகவும் பண்ணின ஸர்வேச்வரனுடைய கடாக்ஷமானது

**விளக்கம்** - (ரிஷிபத்நிகளை பூதர் ஆக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு) – நாச்சியார் திருமொழி (12-6) – வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் - என்பதற்கு ஏற்ப தனது கடாக்ஷப்

பார்வையால் ரிஷிகளுடைய மனைவிகளில் ஒருவளை, ஸ்ரீமத்பாகவதம் (10-22-34) – தத்ரைகா வித்ருதா பர்த்ரா பகவந்தம் யதாச்ருதம், ஹ்ருதோபகூஹ்ய விஜஹௌ தேஹம் கர்ம நிபந்தநம் – [ராஸலீலை நடைபெற்ற இடமான] அங்கு ஒருவள் தனது கணவனால் தடுக்கப்பட்டவளாக, க்ருஷ்ணனைத் தனது மனதால் வரித்தவளாக, கர்மத்தால் ஏற்பட்ட சரீரத்தை அப்போதே விட்டாள் - என்பதற்கு ஏற்ப, தன்னிடம் கொண்ட ப்ரேமையால் அப்போதே அவள் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவள் என்றாகும்படியாகவும், மற்றவர்களைத் தங்கள் பாவங்கள் நீங்கப் பெற்று மோக்ஷம் பெறத் தகுதியானவர்கள் என்று பரிசுத்தராகும்படியாகவும் செய்யும் ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் …. [செய்வது என்ன என்று அடுத்து உரைக்கிறார்]

**வ்யாக்யானம்** – "அங்கணிரண்டுங் கொண்டெங்கள்மேல் நோக்குதியேல் எங்கள் மேல் சாபமிழிந்து" என்று அழகிய திருக்கண்களாலே எங்களைப் பார்த்தருளினாயாகில் சாபோபஹதரைப்போலே அநுபவித்தாலல்லது நசியாத வெங்கள் பாபம் போய்விடு மென்கிறபடியே அநுபவ விநாச்யமான ஸகல பாபங்களும் நிவ்ருத்தமாம்படி பண்ணுமிறே யென்கை. பகவத் கடாக்ஷந்தான் ஸகல பாப க்ஷபண நிபுணமாகையாலே, பட்டவிடம் "அமலங்களாக" என்னும்படி நிர்தோஷமாமிறே.

**விளக்கம்** - (சாபம் இழிந்து என்னப் பண்ணுமிறே) திருப்பாவை (22) - அங்கணிரண்டுங் கொண்டெங்கள்மேல் நோக்குதியேல் எங்கள் மேல் சாபமிழிந்து - என்பதற்கு ஏற்ப அழகான திருக்கண்கள் கொண்டு எங்களைப் பார்த்து அருளினால், சாபத்தில் பீடிக்கப்பட்டவர்கள் போன்று "அனுபவித்தால் அல்லாமல் கழியாது" என்றபடி உள்ள எங்களுடைய அனைத்துவிதமான பாபங்களும் அழியும்படிச் செய்யும் அல்லவோ [கடந்த பத்தியின் இறுதியில் உள்ள "ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம்" இவ்விதம் செய்யும் அல்லவோ என்று கூட்டவேண்டும்]? ஸர்வேச்வரனுடைய பார்வை என்பது அனைத்து பாவங்களையும் அழிக்கவல்லது என்பதால், அந்தப் பார்வை பட்ட இடமானது திருவாய்மொழி (1-9-9) – அமலங்களாக – என்பதற்கு ஏற்ப, தோஷம் இல்லாத இடம் அல்லவோ?

96. கோவ்ருத்திக்கு நெரிஞ்சியைப் புல்லாக்கினவன் ஜகத்திதார்த்தமாக எனக்கே நல்லவருள்க ளென்னும்படி ஸர்வ ஸௌஹார்த்த ப்ரஸாதத்தை ஒருமடை செய்து இவரைத் தன்னாக்க லோகமாகத் தம்மைப்போலே ஆக்கும்படியானார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - இப்படி இவரை ஈச்வரன் நிர்ஹேதுகமாக விசேஷ கடாக்ஷம் பண்ணிற்று ஏதுக்காக? விசேஷ கடாக்ஷ வேஷந்தானேது? இவர்தாம் பின்பு ஆனபடி எங்ஙனே யென்னு மபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் மேல் (கோவ்ருத்திக்கென்று தொடங்கி).

**விளக்கம்** - இவ்விதம் இவரை ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி சிறப்பாகக் கடாக்ஷித்தது ஏன்? அத்தகைய சிறப்பான கடாக்ஷத்தின் தன்மை என்ன? அதன் பின்னர் இவர் எவ்விதம் ஆனார்? இது போன்ற கேள்விகளுக்கு இந்தச் சூர்ணையில் விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி" என்று பரமபதத்திற் காட்டிலும் பசுநிரை மேய்க்கையை விரும்பியிருக்குமவனாகையாலே "ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநா க்லிஷ்ட கர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா" என்கிறபடியே கோரக்ஷணத்துக்காக நெரிஞ்சிக்காட்டை, "உத்பந்ந நவசஷ்பாட்யா" என்கிறபடியே தத் போக்யமான புல்லாம்படி பரஸம்ருத்த்யேக ப்ரயோஜநமான திருவுள்ளத்தாலே ஸங்கல்பித்த ஸர்வ சக்தியானவன்,

**விளக்கம்** - (கோவ்ருத்திக்கு நெரிஞ்சியைப் புல்லாக்கினவன்) - திருவாய்மொழி (10-3-10) – திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி – என்பதற்கு ஏற்ப, பரமபதத்தில் வீற்றுள்ளதைக் காட்டிலும் பசுக்கூட்டத்தை மேய்ப்பதை மிகவும் விரும்புபவன் என்பதால், ஸ்ரீவிஷ்ணு புராணம் (5-6-28) – ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநா க்லிஷ்ட கர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா - பசுக்களுடைய நன்மையை எண்ணும் மனம் கொண்ட க்ருஷ்ணனுடைய நல்ல மனத்தால், நெரிஞ்சில் முள் நிறைந்த காடாகக் கிடந்த ப்ருந்தாவனம், செழிப்பாக மாறும்படியாக எண்ணப்பட்டது - என்பதற்கு ஏற்ப, பசுக்களை காப்பாற்றும் பொருட்டு நெரிஞ்சில் காடாகக் கிடந்த பிருந்தாவனத்தை, ஸ்ரீவிஷ்ணு புராணம்(5-6-37) – உத்பந்ந நவசஷ்பாட்யா – புதியதாகப் புற்கள் நிறைந்தன – என்பதற்கு ஏற்ப, பசுக்களுக்கு இன்பம் அளிக்கவல்ல புல்லாக மாறும்படி மற்றவர்களுடைய மனநிறைவு என்பதையே தனது பலனாக எண்ணும் திருவுள்ளம் கொண்டு ஸங்கல்பித்த ஸர்வேச்வரன்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – "நமோ ப்ரஹ்மண்ய தேவாய கோ ப்ராஹ்மண ஹிதாய ச, ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம:" என்கிறபடியே, கோரக்ஷணத்தோபாதி ஜகத் ரக்ஷணத்துக்கும் கடவன் தானே யாகையாலே ஜகத்தினுடைய ஹிதார்த்தமாக,

**விளக்கம்** - (ஜகத்திதார்த்தமாக) – மஹாபாரதம் - நமோ ப்ரஹ்மண்ய தேவாய கோ ப்ராஹ்மண ஹிதாய ச, ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: - அந்தணர்கள், பசுக்கள் ஆகியவர்களுக்கு நன்மையைச் செய்பவனாகிய அந்தணர்களுடைய தலைவனாகிய பகவானுக்கு நமஸ்காரம்; உலகிற்கு நன்மையைச் செய்யும் க்ருஷ்ணா! கோவிந்தா! உனக்கு நமஸ்காரம் - என்பதற்கு ஏற்ப பசுக்களை எவ்விதம் பாதுகாக்கிறானோ அது போன்றே உலகில் உள்ளவர்களைக் காப்பதற்கு உரியவன் பகவானாகிய தானே என்பதால் உலகின் நன்மைக்காக.

**வ்யாக்யானம்** – "எனைத்தோர் பிறப்பும் - எதிர்சூழல் புக்கு – எனக்கே யருள்கள் செய்ய – அம்மான் திருவிக்கிரமனை - விதி சூழ்ந்தது" என்று அநேக ஜந்மங்கள் நான் பிறந்த ஜந்மங்களுக்கு எதிரே பிறந்து வந்து எனக்கே தன் ப்ரஸாதங்களைப் பண்ணும்படி ஸர்வேச்வரனை க்ருபை கால் கட்டிற்றென்றும், "நல்லவருள்கள் நமக்கே தந்தருள் செய்வான்" என்றும் இத்தலையில் குற்றமாதல், (அஜ்ஞத்வமாதல்,) தன் ஸார்வஜ்ஞயமாதல் பாராதே தன் பேறாகப் பண்ணுமதான வருள்களை நமக்கே அஸாதாரணமாகத் தந்தருளுகிறவனென்றும் இவர் பேசும்படி.

**விளக்கம்** - (எனக்கே நல்ல அருள்கள் என்னும்படி) - திருவாய்மொழி (2-7-6) – எனைத்தோர் பிறப்பும் … எதிர்சூழல் புக்கு … எனக்கே யருள்கள் செய்ய … அம்மான் திருவிக்கிரமனை … விதி சூழ்ந்தது – என்பதற்கு ஏற்ப, நான் பிறந்த பல பிறவிகளிலும் தானும் பிறந்து வந்து, எனக்காக மட்டுமே தனது அருளைச் செய்யும்படியாக ஸர்வேச்வரனை அவனுடைய கடாக்ஷமானது காலைக் கட்டியது - என்றும், திருவாய்மொழி (8-6-1) – நல்லவருள்கள் நமக்கே தந்தருள் செய்வான் - என்பதற்கு ஏற்ப நம்மிடம் உள்ள தோஷங்களை ஆராய்தல், அறிவற்ற தன்மையைக் காணுதல், முற்றும் உணர்ந்த தனது மேன்மையைக் கருத்தில் கொள்ளுதல் போன்ற எதனையும் செய்யாமல், கடாக்ஷித்தல் என்பதைத் தனது பேறாகச் செய்து, அந்தக் கடாக்ஷங்களை நமக்கே உடைமையாக அளிப்பவன் என்றும் நம்மாழ்வார் உரைக்கும்படியாக.

**வ்யாக்யானம்** – "ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாம்" என்கிறபடியே ஸர்வபூதங்களின் பக்கலிலும் நடக்கிற தன்னுடைய ஸௌஹார்த்த பலமான ப்ரஸாதமாகிற க்ருபையை இவரொருவர் விஷயமாகவும் ஒரு மடைப்படுத்தி, "என்னைத் தன்னாக்கி" என்கிறபடியே அஜ்ஞாந சக்திகளுக்கு எல்லையாயிருக்கிற விவரைத் தன்னோடொத்த ஜ்ஞான சக்திகளை யுடையராம்படி பண்ண, இப்படி அவனால் திருந்தினவிவர், "ஊரும் நாடு முலகமும் தன்னைப் போலே வனுடைய பேரும் தார்களுமே பிதற்றி" என்கிறபடியே தம்மோடந்வயித்த லோகத்திலுள்ளவர்களை யெல்லாம் தம்மைப்போலே பகவதேக பரராகப் பண்ணும்படியானா ரென்கை.

**விளக்கம்** - (ஸர்வ ஸௌஹார்த்த ப்ரஸாதத்தை ஒருமடை செய்து) – கீதை (5-29) - ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாம் - அனைத்து உயிர்களுடைய நன்மையை எண்ணுகின்ற என்னை - என்பதற்கு ஏற்ப அனைத்து உயிர்களிடமும் காண்பிக்கின்ற ப்ரியத்தின் விளைவான தனது கடாக்ஷத்தை, நம்மாழ்வார் ஒருவர் விஷயமாக மட்டுமே ஆகும்படி ஒரு நிலைப்படுத்தி, (இவரைத் தன்னாக்க) – திருவாய்மொழி (7-9-1) – என்னைத் தன்னாக்கி - என்பதற்கு ஏற்ப அறியாமை மற்றும் ஆற்றல் இன்மை ஆகியவற்றுக்கு எல்லையாக உள்ள இவரைத் தனக்குச் சமமான ஞானம் மற்றும் சக்தி உள்ளவராக மாற்ற, (லோகமாகத் தம்மைப்போலே ஆக்கும்படி ஆனார்) - இவ்விதம் அவனால் திருந்தின நம்மாழ்வார், திருவாய்மொழி (6-7-2) - ஊரும் நாடு முலகமும் தன்னைப் போலே வனுடைய பேரும் தார்களுமே பிதற்றி - என்பதற்கு ஏற்ப தம்முடன் உள்ள அனைவரும் தன்னைப் போன்றே அவனைக் குறித்து மட்டுமே அனுபவித்தபடி உள்ளது போன்று ஆனார்.

97. அதாவது மயர்வற மதிநல மருளுகை.

**அவதாரிகை** – தன்னாக்குகையாவ தென்னென்ன வருளிச்செய்கிறார் (அதாவதித்யாதி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் "தன்னாக்க" என்றால் என்ன என்பதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதென்று, தன்னாக்கவென்றத்தைப் பராமர்சிக்கிறது. "மயர்வற மதிநலம் அருளுகை"யாவது – அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப் போக்கி பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநத்தைக் கொடுக்கை.

**விளக்கம்** – சூர்ணையில் உள்ள "அதாவது" என்பதில் உள்ள "அது" என்பது கடந்த சூர்ணையில் உள்ள "தன்னாக்க" என்பதைக் குறிக்கிறது. திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளி – என்றால், "அறிவற்ற தன்மையை அடியுடன் நீக்கி, பக்தியின் ரூபத்துடன் கூடிய ஞானத்தை அளித்தல்" என்பதாகும்.

98. இருள் துயக்கு மயக்கு மறப்பென்கிற அநுதய ஸம்சய விபர்யய விஸ்ம்ருதிகளற்று மலர்மிசை யெழுகிற ஞானத்தைக் காதலன்பு வேட்கை அவாவென்னும் ஸங்க காமாநுராக ஸ்நேஹாத்யவஸ்தா நாமங்களோடே பரமபக்தி தசையாக்குகை.

**அவதாரிகை** - அது தன்னை விசதமாகவருளிச் செய்கிறார் மேல் (இருள் துயக்கென்று தொடங்கி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட "மயர்வற மதிநலம் அருளுகை" என்பதை இந்தச் சூர்ணையில் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – மயர்வற மதிநல மருளுகையாகிறதுதான் "இருள் தருமா ஞாலம்", "இருள் தீர்ந்திவ்வையம் மகிழ" என்று இருள் என்கிற சப்தத்தால் சொல்லப்படும் ஜ்ஞாநாநுதயமும், "துயக்கன் மயக்கன்" இத்யாதி ஸ்தலங்களில் "துயக்கு" என்கிற சப்தத்தால் சொல்லப்படும் "ஸ்தாணுர்வா புருஷோவா" என்கிறபடியே க்ராஹ்ய வஸ்துவை இன்னதென்று நிச்சயிக்கமாட்டாத ஸம்சயமும், "மயக்கு" என்கிற சப்தத்தால் சொல்லப்படும் ரஜ்ஜு சுக்த்யாதி விஷய ஸர்ப்பரூப்யாதி புத்திபோலே அதஸ்மிந் தத் புத்தியாகிற விபர்யயமும், "மறப்பும் ஞானமும்", "மறப்பறவென்னுள்ளே மன்னினான்" இத்யாதிகளிற்போலே மறப்பு என்கிற சப்தத்தால் சொல்லப்படும் பூர்வாநுபூத விஷயமாய் அநுபவ ஸம்ஸார மாத்ரஜமான ஜ்ஞாநத்தினுடைய அபாவமாகிற விஸ்ம்ருதியுமான சதுர்வித ஸங்கோசாவஸ்தையுமற்று, "மனனக மலமற மலர்மிசை யெழு தரும்" என்கிறபடியே மந: பரிசுத்தியாலே விகஸிதமாய்க் கொழுந்துவிட்டு "தாமரையாள்

கேள்வனொருவனையே நோக்கும்” என்கிறபடியே ப்ராப்த விஷயமான தன்னை நோக்கிக் கிளருகிற ஜ்ஞாநத்தை.

**விளக்கம்** - (இருள் என்கிற அநுதயம்) மயர்வற மதிநலம் அருளுகை என்பது : திருவாய்மொழி (10-6-1) – இருள் தருமா ஞாலம் - என்றும், பெரிய திருமொழி (11-4-8) - இருள் தீர்ந்திவ்வையம் மகிழ - என்றும் கூறப்படும் வரிகளில் உள்ள “இருள்” என்ற பதம் மூலம் கூறப்படும் அறிவு தோன்றாமை என்ற நிலை. (துயக்கு என்கிற ஸம்ஸயம்) – திருவாய்மொழி (1-9-6) - துயக்கன் மயக்கன் – என்பதற்கு ஏற்ப “துயக்கு” என்ற பதம் மூலம் கூறப்படும் “குச்சியா புருஷனா” என்று ஏதேனும் ஒன்றைக் கண்டால் அறிய வேண்டிய பொருள் இன்னது என்று உறுதியாக அறிய இயலாத சந்தேகத்துடன் உள்ள நிலை. (மயக்கு என்கிற விபர்யயம்) - “மயக்கு” என்ற சொல் மூலம் கூறப்படுவதான, கயிறு மற்றும் கிளிஞ்சல் ஆகியவற்றைப் பாம்பு மற்றும் வெள்ளி என்று எண்ணுவதான ஒன்றை மற்றொன்றாக எண்ணும் நிலை. (மறப்பு என்கிற விஸ்ம்ருதி) – திருவாய்மொழி (1-10-10) - மறப்பும் ஞானமும் - என்றும், திருவாய்மொழி (1-10-10) – மறப்பறவென்னுள்ளே மன்னினான் – என்றும் உள்ள வரிகளில் காணப்படும் “மறப்பு” என்ற பதம் மூலம் கூறப்படுவதான, முன்பே அறியப்பட்ட பொருளாக உள்ளபோதிலும், அனுபவம் காரணமாக ஏற்பட்ட நினைவு இன்மை என்ற நிலை. (அற்று) - இப்படியாக உள்ள நான்கு விதமான சுருக்கம் நிறைந்த நிலைகள் இன்றி. (மலர்மிசை எழுகிற ஞானத்தை) - திருவாய்மொழி (1-1-2) - மனனக மலமற மலர்மிசை யெழு தரும் - என்பதற்கு ஏற்ப, மனதில், பரிசுத்தம் காரணமாக மலர்ந்து கொழுந்துவிட்டு, முதல் திருவந்தாதி (67) – தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கும் – என்பதற்கு ஏற்ப அடையத்தக்க பொருளாகிய தன்னைக் குறித்து ஓங்கி வளர்கின்ற ஞானத்தை.

**வ்யாக்யானம்** – “உளப்பெருங்காதல்”, “நேரிய காதல்”, “காணக்கழி காதல்”, “கழியமிக்கதோர் காதல்”, “காதல் கடல்புரைய”, “காதல் கடலில் மிகப் பெரிதால்” “காதலுரைக்கில் - நீள்விசும்பும் கழியப் பெரிதால்”, “மெய்யமர் காதல்” என்றும், “அன்பு சூட்டிய”, “அன்பிலின்பு”, “அன்பே பெருகும் மிக”, “ஆராவன்பு” என்றும், “வேவாரா வேட்கை நோய்”, “பெருகுமால் வேட்கையும்”, “ஆவியின் பரமல்ல வேட்கை” என்றும், “அவா வொருக்கா வினையொடும்”, “காண்பானவாவுவன்”, “சூடுதற்கவா”, “அதனில் பெரிய வென்னவா” என்றும் இப்படிப் பலவிடங்களிலும் காதல், அன்பு, வேட்கை, அவா

 Email:sridharan_book@yahoo.co.in

என்று சொல்லப்படுகிற விஷய தர்சநத்தில் ப்ரதமபாவியாய் ஸ்நேஹாங்குரமான ஸங்கமும், "ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:" என்கிறபடியே ததநந்தர ஜாதமாய் அவ்விஷயத்தை அநுபவித்தல்லது நிற்கவொண்ணாதபடியிருக்கும் தத் விபாக தசையான காமமும், தத் கார்யமாய் அநுபாவ்ய விஷய ராகாவிச்சேத ரூபமான அநுராகமும், ததநந்தரம் அவ்விஷயத்தை உத்தரோத்தர மநுபவிக்கு மதொழிய விட்டுப் பிடிக்கப் பற்றாதபடி விளையும் ஸ்நேஹமும்.

**விளக்கம்** - (காதல் என்னும் ஸங்கம்) – திருவிருத்தம் (59) - உளப்பெருங்காதல் – என்றும், திருவாசிரியம் (2) - நேரிய காதல் - என்றும், இரண்டாம் திருவந்தாதி (56) – காணக்கழி காதல் - என்றும், திருவாய்மொழி (5-5-10) – கழிய மிக்கதோர் காதல் – என்றும், திருவாய்மொழி (5-3-4) - காதல் கடல்புரைய – என்றும், திருவாய்மொழி (7-3-6) – காதல் கடலில் மிகப் பெரிதால் – என்றும், திருவாய்மொழி (7-3-8) - காதலுரைக்கில் நீள்விசும்பும் கழியப் பெரிதால் - என்றும், திருவாய்மொழி (6-8-2) – மெய்யமர் காதல் - என்றும் பல இடங்களில் "காதல்" என்ற பதம் மூலம் கூறப்படுவதான, ஒரு பொருளைக் கண்டவுடன் முதன்முதலில் மனதில் ஏற்படுவதான சிநேகத்தின் முளையாக உள்ள ஸங்கமும். (அன்பு என்னும் காமம்) – திருவிருத்தம் (2) – அன்பு சூட்டிய - என்றும், திருவாசிரியம் (2) - அன்பிலின்பு - என்றும், பெரியதிருவந்தாதி (8) - அன்பே பெருகும் மிக – என்றும், திருவாய்மொழி (6-10-2) – ஆராவன்பு - என்றும் பல வரிகளில் "அன்பு" என்ற பதம் மூலம் கூறப்படுவதும், கீதையில் (2-62) – ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: - சேர்க்கையிலிருந்து காமம் ஏற்படுகிறது - என்பதற்கு ஏற்ப அந்தச் சங்கத்தின் மூலமாகத் தோன்றுவதும், இதன் காரணமாகப் பார்க்கப்பட்ட அந்தப் பொருளை அனுபவித்தால் அல்லாமல் நிற்க இயலாது என்பதற்கு ஏற்ப சங்கத்தின் முதிர்ந்த நிலையாக உள்ள காமமும். (வேட்கை என்னும் அநுராகம்) – திருவாய்மொழி (2-1-10) – வேவாரா வேட்கை நோய் - என்றும், திருவாய்மொழி (9-6-1) – பெருகுமால் வேட்கையும் - என்றும், திருவாய்மொழி (10-3-2) - ஆவியின் பரமல்ல வேட்கை – என்றும் இவ்விதம் பல வரிகளில் உள்ளதான "வேட்கை" என்ற பதம் மூலம் கூறப்படுவதும், காமத்தின் விளைவாக உள்ளதும், அனுபவிக்கப்படும் பொருள் மீது வைத்த ஆசை என்பது சிறிதும் இடைவெளி இன்றி உள்ளதும் ஆகிய அனுராகமும். (அவா என்னும் ஸ்நேஹம்) – திருவிருத்தம் (64) – அவா வொருக்கா வினையொடும் – என்றும், திருவிருத்தம் (84) – காண்பானவாவுவன் - என்றும், திருவாசிரியம் (2) – சூடுதற்கவா - என்றும், திருவாய்மொழி (10-10-10) - அதனில் பெரிய என் அவா – என்றும் இவ்விதம் பல வரிகளிலும் காணப்படும் "அவா" என்ற பதம் மூலம்

கூறப்படுவதும், விரும்பிய பொருளை மேன்மேலும் அனுபவித்தபடி இருப்பது அல்லாமல் அதனை நழுவவிட்டு பின்னர் பிடித்துக் கொள்ளலாம் என்பதைப் பொறுத்துக் கொள்ளாதபடி உள்ளதும், அந்த அனுராகத்தின் விளைவாக உள்ளதும் ஆகிய சிநேகமும்.

**வ்யாக்யானம்** - முதலான அவஸ்தைகளுக்கு அநுரூபமான நாமங்களையுடைத்தாய்க் கொண்டு பரமபக்தி தசா பர்யந்தமாம்படி பண்ணுகையென்கை. காதல், அன்பு, வேட்கை, அவா என்னுமிவை ஸங்காத்யுத்தரோத்தராவஸ்தைகளுக்கு வாசகமாயிருக்க, முன்பின் கலந்து வந்ததேயாகிலும், எல்லாவவஸ்தைகளும் இவர்க்கு எப்போதும் ப்ரகாசித்திருக்கையாலே அப்போதப்போது தம்முடைய ஆற்றாமைக் கீடாகப் பேசுகிறதாகையாலே விரோதமில்லை.

**விளக்கம்** - (ஆதி அவஸ்தா நாமங்களோடே பரபக்தி தசை ஆக்குகை) - போன்ற பலவிதமான நிலைகளுக்கு ஏற்படியான பெயர்கள் உள்ளதாகக் கொண்டு, அவற்றைப் பரமபக்தி நிலையாக மாற்றுதல் [கடந்த பத்திக்கும் முந்தைய பத்தியின் இறுதியில் உள்ள “ஞானத்தை” என்பதை இதனுடன் இணைத்துப் படிக்கவேண்டும். அதாவது அப்படிப்பட்ட ஞானத்தை, கடந்த பத்தியில் கூறப்பட்டதான ஸங்கம், காமம், அனுராகம், சிநேகம் என்ற நான்கு நிலைகளுக்கு ஏற்றபடிக் கொண்டு வந்து, பின்னர் பரமபக்தியாக மாற்றுதல் என்று கருத்து]. காதல், அன்பு, வேட்கை மற்றும் அவா ஆகியவை ஒன்றுக்கு ஒன்று மற்றொன்றின் விளைவாக இருந்தபடி, மேன்மேலும் ஏற்படுவதான ஸங்கம், காமம், அனுராகம், சிநேகம் என்ற நிலைகளை உணர்த்தக்கூடிய சொற்களாக உள்ளன; ஆனால் இவை நம்மாழ்வாரின் ப்ரபந்தங்களில் இதே போன்ற வரிசையில் வராமல், முன்னும்பின்னும் கலந்து வந்துள்ளதைப் காணலாம். இவ்விதம் இவை வந்தபோதிலும், இந்த அனைத்து நிலைகளும் நம்மாழ்வாருக்கு எப்போதுமே உள்ளபடி இருப்பதால், அவ்வப்போது இவற்றை, தம்முடைய பிரிவாற்றாமையைத் தாங்க இயலாமல், அதனைச் சரிசெய்யும் விதமாக கூறுவதால், முரண்பாடு இல்லை.

**வ்யாக்யானம்** - ஆக இத்தால் சொல்லிற்றாய்த்து, மயர்வற மதிநல மருளுகையாவது - அஜ்ஞாநபிதையாக சாஸ்த்ரஸித்தமான அநுதயாதி சதுர்வித ஸங்கோசாவஸ்தையுமற்று விகஸிதமாய்க் கொழுந்துவிட்டு விஷயோந்முகமாய்க் கிளருகிற ஜ்ஞாநத்தை ஸ்நேஹ ப்ரதமாங்குரமான ஸங்கம் முதலான உத்தரோத்தர விபாக ரூபாவஸ்தைகளுக்கு

 **Email:**sridharan_book@yahoo.co.in

அநுரூபமான காதலித்யாதி நாமங்களை பஜித்து ப்ரேமஸீமா பூமியான பரமபக்தி தசாபந்நமாம்படி பண்ணுகையென்றதாய்த்து.

**விளக்கம்** - ஆக இங்கு கூறப்பட்டது என்ன? மயர்வற மதிநலம் அருளுகை என்பது என்னவென்றால் - அறியாமை என்பதன் வெளிப்பாடாகச் சாஸ்த்ரங்களில் கூறப்படுவதான் அஜ்ஞானம் தோன்றாமை என்ற நான்குவிதமான சுருக்கமான நிலைகளும் விலகி; அடைய வேண்டிய பொருளான ஸர்வேச்வரனை நோக்கி மலர்ந்து கொழுந்துவிட்டுக் கிளர்ந்து எழுகின்ற ஞானத்தை; சிநேகத்திற்குக் காரணமாக சங்கம், அதன் விளைவான காமம், அதன் விளைவான அனுராகம், அதன் விளைவான சிநேகம் என்று ஒன்றுக்கொன்று காரண காரியங்களாக உள்ள நிலைகளுக்கு ஏற்றபடி காதல், அன்பு, வேட்கை மற்றும் அவா ஆகிய நாங்குவிதமான பெயர்களைப் பெற்று [அதாவது அந்த ஞானத்தை இவ்விதமாகப் பெயர்களைப் பெறும்படியாக); அதன் பின்னர் ப்ரேமையின் எல்லையான பரமபக்தி என்னும் நிலையை அடையும்படிச் செய்தல் - ஆகும்.

**வ்யாக்யானம்** - ஆக கீழ் "அத்ரி ஜமதக்நி" இத்யாதி வாக்யத்தில் சொன்ன சங்கைக்கு மூலம் இவர் ப்ரபாவமென்றும், அது தனக்கு ஹேது பகவந் நிர்ஹேதுக கடாக்ஷமென்று - கடாக்ஷத்தினுடைய சக்தியும், இவரை இப்படி கடாக்ஷித்தது லோக ஹிதார்த்தமாகவென்றும், கடாக்ஷிக்கையாவது - மயர்வற மதிநலமருளுகை யென்றும், அது தன்னின் ப்ரகாரமும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - ஆக, சூர்ணை (92) - அத்ரி ஜமதக்நி – என்பதில் எழுப்பப்பட்ட சந்தேகத்திற்கு மூலமானது, இவருடைய ப்ரபாவம் என்றும், அதற்குக் காரணம் என்னவென்றால் எந்த ஒரு காரணமும் இன்றி பகவானுடைய கருணை நிறைந்த கடாக்ஷம் என்ற கடாக்ஷத்தின் சக்தியும், இவ்விதம் இவரைக் கடாக்ஷித்ததன் காரணம் இவர் மூலமாக உலகிற்கு நன்மை ஏற்படுவதற்காகவே ஆகும் என்றும், கடாக்ஷித்தல் என்றால் மயர்வற மதிநலம் அருளுதல் என்றும், அப்படி அருளிய விதம் இப்படிப்பட்டது என்றும் கூறப்பட்டது.

**அவதாரிகை** - இனிமேல் இவருடைய இந்த பக்திதான் கர்மஜ்ஞாந ஸாத்யையாய் பகவத் ப்ராப்தி ஸாதந பூதையாயிருக்கு முபாஸகர் பக்தியிலும், ப்ரபந்நர் பகவான் பக்கல் அர்த்தித்துப் பெறும் கைங்கர்யோபகரண பக்தியிலும் வ்யாவ்ருத்தை யென்னுமிட

மறிவிக்கைக்காக ப்ரதமம் ஸாதந பக்தி வேஷத்தை தர்சிப்பிக்கிறார் (ஜந்மாந்தரேத்யாதி) சூர்ணையாலே.

**விளக்கம்** - அடுத்து நம்மாழ்வாருடைய பக்தி என்பது, கர்மம் மற்றும் ஞானத்தால் அடையப்படுவதாயும் பகவானை அடைவதற்குச் சாதனமாயும் உள்ளதான உபாஸகன் ஒருவனின் பக்தியைக் காட்டிலும் வேறுபட்டது என்றும், ப்ரபந்நர்கள் ஸர்வேச்வரனிடம் வேண்டி நின்று பெறப்படுவதான கைங்கர்யத்திற்கு உபாயமாக உள்ள பக்தியைக் காட்டிலும் வேறுபட்டது என்றும் உணர்த்த எண்ணியவராக, முதலில் சாதன ரூபத்தில் உள்ள பக்தியை இந்தச் சூர்ணையில் விளக்குகிறார்.

99. ஜந்மாந்தர ஸஹஸ்ர நல் தவங்களாலே க்யாத குலங்களிலே பிறந்து எழுதி வாசித்து தத்வஜ்ஞராய்க் குளித்து ஓதி உருவெண்ணு மந்தி ஐவேள்வி அறுதொழில்களால் மிக்கு ஊன்வாடப் பொருப்பிடைத் தாம் வருந்தித் துன்ப வினைகளை விடுத்து விவேக சமாதிகள் வளர எட்டு நீக்கி எட்டுமிட்டு எட்டினாய பேதப்பூவில் சாந்தொடு தேவகார்யம் செய்து உள்ளம் தூயராய் வாரிப் புன்புலவகத்தினுள் இளைப்பினையடைவே விளக்கினைக் கண்டு யோகநீதி நண்ணி அறம் திகழுமறையோர் மனந்தன்னுள் அமர்ந்துறையும் அரும்பெரும் சுடரைக் கண்கள் சிவந்திற்படியே மனவுட்கொண்டு நிரந்தரம் மறவாமை தொடக்கறா ஸ்ம்ருதியாய் கனவில் மிக்க தர்சந ஸமமாய் ஆகத்துப் புல்கு மத்யர்த்த ப்ரியமாய் வைகும் சிறப்பு விட்டுக் குற்றேவலென்னாத அநந்ய ப்ரயோஜநமாய் வேதநோபாஸந ஸேவாத்யாநாதிகளென்று சொல்லுமது ஸாத்ய ஸாதந பக்தியாக சாஸ்த்ர ஸித்தம்.

**வ்யாக்யானம்** - (ஜந்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே) "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே" என்றும், "ஒன்றி நின்று நற்றவம் செய்தூழி யூழிதோறெலாம்" என்றும் சொல்லுகிறபடியே ஜந்மாந்தர ஸஹஸ்ரங்களிலே த்ரிவித பரித்யாக பூர்வகமாக பகவத் ஸமாராதந ரூபேண அநுஷ்டிதங்களான ஸத் கர்மங்களாலே, (க்யாத குலங்களிலே பிறந்து) "சுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோக ப்ரஷ்டோபி ஜாயதே, அதவா யோகிநாமேவ குலே மஹதி தீமதாம்" என்றும், "ஜநித்வாஹம் வம்சே மஹதி ஜகதி க்யாத யசஸாம் சுசீநாம் யுக்தாநாம் குணபுருஷ தத்வ ஸ்திதி விதாம்" என்றும் சொல்லுகிறபடியே தத்வ வித்துக்களாய், பரமயோகிகளென்று ஜகத்ப்ரஸித்தரானவர்களுடைய குலங்களிலே பிறந்து,

**விளக்கம்** - (ஜந்மாந்தர ஸஹஸ்ர நல்தவங்களாலே) - ஸ்ம்ருதியில் – ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே - பல ஆயிரக்கணக்கான பிறவிகளில் செய்த கர்மம் மற்றும் ஈட்டப் பெற்ற ஞானம், பக்தி போன்றவை மூலம் பாவம் அனைத்தும் அழிந்ததன் விளைவாகவே ஒருவனுக்கு க்ருஷ்ணனிடம் பக்தி ஏற்படுகிறது - என்றும், திருச்சந்தவிருத்தம் (75) – ஒன்றி நின்று நற்றவம் செய்துழி யூழிதோறெலாம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஆயிரக்கணக்கான முற்பிறவிகளில், மூன்றுவிதமான த்யாகங்களை முன்னிட்டு [இவை பகவானுக்குச் செய்யும் ஆராதனத்தில் பலன் எதிர்பாராமல் இருத்தல், பற்று வைக்காமல் இருத்தல், இதனை நான் செய்கிறேன் என்று சிந்திக்காமல் இருத்தல் என்பதாகும்] ஸர்வேச்வரனைக் குறித்து செய்து வந்த ஆராதனங்கள் என்று வடிவத்தில் உள்ளதான தூய்மையான கர்மங்களால், (க்யாத குலங்களிலே பிறந்து) - கீதையில் ( 6-41) – சுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோக ப்ரஷ்டோபி ஜாயதே, அதவா யோகிநாமேவ குலே மஹதி தீமதாம் – யோகத்திலிருந்து நழுவியர்கள் ஸ்வர்க்கம் போன்ற இடங்களில் வசித்த பின்னர் மறுபடியும் நல்லொழுக்கம் உள்ள செல்வந்தர்கள் வீட்டில் பிறக்கிறார்கள் - என்றும், ஸ்தோத்ரரத்னம் (61) – ஜநித்வாஹம் வம்சே மஹதி ஜகதி க்யாத யசஸாம் சுசீநாம் யுக்தாநாம் குணபுருஷ தத்வ ஸ்திதி விதாம் - உலகில் உள்ளவர் அறியும்படியான கீர்த்தியைப் பெற்றவர்களும், தூய்மையானவர்களும், யோகம் இயற்றியபடி உள்ளவர்களும், குணம் – புருஷன் - ப்ரக்ருதி ஆகியவற்றினைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிந்தவர்களும் ஆகியவர்களுடைய குலத்தில் நான் பிறந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப [முன்பு கூறப்பட்ட கர்மங்களின் விளைவாக] தத்வஞானிகள் மற்றும் பரமயோகிகள் என்று உலகினரால் போற்றப்படுவர்களுடைய குலங்களில் பிறந்து.

**வ்யாக்யானம்** - (எழுதி வாசித்து தத்வஜ்ஞராய்) "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும்" என்கிறபடியே பகவத்விஷயத்தை அநுஸந்தித்து தத்விஷயமான சப்தங்களை லிகிப்பது, வாசிப்பது, பிறர் சொல்லக் கேட்பதாய்க் கொண்டு இந்த சாஸ்த்ராப்யாஸ முகேந பிறந்த தத்வ ஜ்ஞானத்தையுடையராய், (குளித்தோதி யுருவொண்ணும் அந்தி யைவேள்வி யறு தொழில்களால் மிக்கு) "குளித்து மூன்றனலை யோம்பும்" என்கிறபடியே உபாஸநாங்கமான நித்யகர்மாநுஷ்டாநோப யுக்தமாய் இருந்துள்ள காயசுத்யர்த்தமான ஸ்நாநத்தைப் பண்ணி, "ஓதியுருவெண்ணுமந்தி" என்றும், "ஐவேள்வி" என்றும் "அறு

தொழில்” என்றும் சொல்லுகிற ஸந்த்யாவந்தந காயத்ரீ ஜபமென்ன, தேவயஜ்ஞ பித்ருயஜ்ஞ பூதயஜ்ஞ மநுஷ்யயஜ்ஞ ப்ரஹ்மயஜ்ஞங்க ளாகிற ஷட்கர்மங்களென்ன, இப்படி யிருந்துள்ள நித்ய நைமித்திக கர்மாநுஷ்டானங்களால் பரிபூர்ணராய்,

**விளக்கம்** – (எழுதி வாசித்து தத்வஜ்ஞராய்) - நான்முகன் திருவந்தாதி (63) – தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் - என்பதற்கு ஏற்ப பகவத் விஷயத்தை எப்போதும் எண்ணியபடி இருந்து, அவனைக் குறித்துள்ள சொற்களை எழுதுதல், படித்தல், மற்றவர்கள் கூறக் கேட்டல் என்பதைச் செய்தபடி இருந்து, இப்படிப்பட்ட சாஸ்த்ர ரூபமான பயிற்சிகள் மூலமாக ஏற்பட்ட மெய்ஞ்ஞானத்தைக் கொண்டவர்களாக, (குளித்து ஓதி உருவெண்ணும் அந்தி ஐவேள்வி அறுதொழில்களால் மிக்கு) – திருமாலை (25) - குளித்து மூன்று அனலை ஓம்பும் - என்பதற்கு ஏற்ப உபாஸனம் செய்வதற்கு அங்கமாக உள்ளதான நித்ய கர்மாநுஷ்டானங்களுக்கு அடிப்படையாக உள்ள சரீரத்தைத் தூய்மையாக்குவதற்காக நீராடி, முதல்திருவந்தாதி (33) – ஓதி உருவெண்ணும் அந்தி – என்று கூறப்படுவதான ஸந்த்யாவந்தனம் மற்றும் காயத்ரீஜபம்; பெரியதிருமொழி (3-8-4) – ஐ வேள்வி - என்று கூறப்படுகின்ற தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பஞ்சபூத யஜ்ஞம், மனுஷ்ய யஜ்ஞம், ப்ரஹ்ம யஜ்ஞம் என்னும் ஐந்துவிதமான மஹாயஜ்ஞங்கள்; திருவெழுகூற்றிருக்கை – அறு தொழில் - என்பதற்கு ஏற்ப உள்ளதான வேதம் ஓதுதல், வேதம் ஓதுவித்தல், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், தானம் அளித்தல், தானம் பெறுதல் என்னும் ஆறுவிதமான கர்மங்கள் என்பதான நித்ய நைமித்திக கர்மங்களை எப்போதும் இயற்றியவர்களாக.

**வ்யாக்யானம்** - (ஊன்வாடப் பொருப்பிடைத்தாம் வருந்தி) “ஊன்வாட வுண்ணாதுயிர் காவலிட்டு” என்றும், “பொருப்பிடையே நின்றும் புனல் குளித்து மைந்து நெருப்பிடையே நிற்கவும்” என்றும், “வீழ் கனியுமூழிலையு மென்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி” என்றும் சொல்லுகிறபடியே நித்ய கர்மாதிகளை அவிகலமாக அநுஷ்டிக்கையாலே தபச்சர்யா யோக்யதை பிறந்தவாறே காயசோஷணார்த்தமாக அந்நத்தைக் குறைத்து ப்ராண தாரணத்துக்குத் தக்கவளவாக்கி, உஷ்ண காலங்களில் பர்வதாக்ரத்திலும் பஞ்சாக்நி மத்யத்திலும் நின்றும், சீத காலங்களில் அறாக்கயமான தடாகத்திலே மூழ்கிக் கிடந்தும் ஜீர்ண பர்ண பலாசநராயும், இப்படி தபச்சர்யையாலே சரீரத்தை சோஷிப்பித்து,

**விளக்கம்** – (ஊன்வாடப் பொருப்பிடைத்தாம் வருந்தி) – பெரியதிருவாய்மொழி (3-2-1) – ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு – என்பதற்கு ஏற்ப நித்யகர்மங்களை எந்தவிதமான குறைகளும் இன்றிச் செய்வதால், தவம் இயற்றுதலுக்குரிய தகுதி ஏற்படுகிறது; இதன் காரணமாக, சரீரம் வாழும்விதமாக அதற்கு அளிக்கிற உணவினைக் குறைத்து, அத்தகைய உணவை உயிர் வாழத் தேவையான அளவு மட்டுமே எடுத்துக் கொண்டு, மூன்றாம் திருவந்தாதி (76) – பொருப்பிடையே நின்றும் புனல் குளித்து மைந்து நெருப்பிடையே நிற்கவும் - என்பதற்கு ஏற்ப உஷ்ணமான காலங்கள் வந்தவுடன் மலை உச்சியிலும், ஐந்து அக்னிகளின் நடுவிலும் நின்றும், மழைக்காலங்களில் அறாக்யமான நீர் நிலைகளில் மூழ்கிக் கிடந்தும், பெரியதிருமடல் – வீழ் கனியுமூழிலையு மென்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி - என்பதற்கு ஏற்ப தானாகவே விழுந்த இலை மற்றும் கனிகளை மட்டுமே உட்கொண்டு, இவ்விதமாகத் தவங்கள் இயற்றி, அதனால் சரீரத்தை வாடும்படிச் செய்து.

**வ்யாக்யானம்** - (துன்ப வினைகளை விடுத்து) கீழ்ச்சொன்ன கர்மாநுஷ்டானத்தாலே, "மேவு துன்ப வினைகளை விடுத்து" என்கிறபடியே திலதைலாதிவத் ஆத்மாவோடே பிரிக்கவொண்ணாதபடி பொருந்திக் கிடக்கிற துக்க ஹேதுவான பாபங்களை "தர்மேண பாபமபநுததி" என்கிறபடியே போக்கி, (விவேக சமாதிகள் வளர) இப்படி ப்ரதிபந்தக பாப நிவ்ருத்தியாலே மனச்சுத்தி ஹேதுவான விவேகாதி ஸப்தகமும், "சம தம நியதாத்மா ஸர்வபூதாநுகம்பீ" இத்யாத்யுக்த சமதமாதிகளும் அபிவ்ருத்தமாக.

**விளக்கம்** - (துன்பவினைகளை விடுத்து) - இதுவரை கூறப்பட்ட பலவிதமான கர்மாநுஷ்டானம் காரணமாக, திருவாய்மொழி (3-2-8) - மேவு துன்ப வினைகளை விடுத்து - என்பதற்கு ஏற்ப, எள்ளில் எண்ணெய் உள்ளது போன்று ஆத்மாவிடம் பிரிக்க இயலாதபடி உள்ளதான துக்கங்களுக்குக் காரணமான பாபங்களை, தைத்திரீயம் - தர்மேண பாபமபநுததி - அன்றாடம் செய்யும் கர்மங்களால் பாவம் போக்குகிறான் - என்பதற்கு ஏற்ப விலக்கி, (விவேக சமாதிகள் வளர) – தடையாக இருந்துள்ள பாபங்கள் விலகுவதன் காரணமாக, மனதின் தூய்மைக்குக் காரணமாக உள்ள விவேகம் போன்ற ஏழு தன்மைகளும் [இவை அடுத்த பத்தியில் உள்ளன], சம தம நியதாத்மா ஸர்வபூதாநுகம்பீ – மனதைத் தன்வசப்படுத்துதல், இந்த்ரியங்களை அடக்குதல்

போன்றவற்றில் மனம் பொருந்தியவன் அனைத்து உயிர்களுடமும் கருணை உள்ளவனாகிறான் - என்பதற்கு ஏற்ப உள்ள தன்மைகளும் மேன்மேலும் வளர,

**வ்யாக்யானம்** – (குறிப்பு - கடந்த பத்தியில் "விவேகம் போன்ற ஏழு தன்மைகள்" என்று கூறப்பட்டது. அவையாவன - விவேகம், விமோகம், அப்யாஸம், க்ரியை, கல்யாணம், அநவஸாதம் மற்றும் அநுத்தர்ஷம் போன்றவை ஆகும். இவை இப்போது விளக்கப்படுகின்றன) இதில் விவேகமாவது – "ஜாத்யாச்ரய நிமித்தாதுஷ்டாதந்நாத் காயசுத்திர் விவேக:" என்கிறபடியே ஜாதிதுஷ்டமும் ஆச்ரயதுஷ்டமும் நிமித்ததுஷ்டமு மன்றிக்கே யிருந்துள்ள அன்னத்தாலுண்டான காயசுத்தி. ஜாதி துஷ்டங்களாவன களஞ்ஜக்ருஞ்ஜநாதிகள். ஆச்ரயதுஷ்டமாவது அபிசஸ்த பதித சண்டாளாதிகளுடைய த்ரவ்யம். ஆச்ரயமென்று த்ரவ்யஸ்வாமியான புருஷனைச் சொல்லுகிறது. நிமித்ததுஷ்டமாவது உச்சிஷ்ட கேசாத்யுபஹதமானது. இந்த த்ரிவித தோஷமுமில்லாத ஆஹாரத்தின் விவேசந பலமான காயசுத்தியிலே விவேக சப்தம் உபசாரேணோக்தம். அன்றிக்கே, விவிக்தாஹார ஸேவையாலே ராஜஸ தாமஸாஹார ஆப்யாயித தேஹத்திற் காட்டில் ஸ்வதேஹத்தினுடைய விவேசனம் விவேகமென்னவுமாம். சுத்தியாவது அசுத்தேப்யோ விவேசநமிறே, "காயசுத்தி:" என்கிறவிடத்தில் காயசப்தத்தால் அந்த:கரணத்தைச் சொல்லுகிறது. "ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி:" என்றிறே ச்ருதி சொல்லிற்று. ஸத்வமாவது அந்த:கரணமிறே. "அபயம் ஸத்வ ஸம்ஸுத்தி:" என்றும், "ஸத்வாநுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி" என்றும் சொல்லுகிறவிடங்களில் ஸத்வம் அந்த:கரணமென்று, ஸத்வசப்தம் அந்த:கரணவாசியாக பாஷ்யகார ரருளிச்செய்தாரிறே. ஆகையிறே விவேகமாவது "ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி:" என்கிறபடியே அந்த:கரண சுத்திக்கடியான அந்நசுத்தியென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

**விளக்கம்** - இவற்றில் விவேகம் என்பது, போதாயந வ்ருத்தி - ஜாத்யாச்ரய நிமித்தாதுஷ்டாதந்நாத் காயசுத்திர் விவேக: - ஜாதி, ஆச்ரயம், நிமித்தம் என்ற மூன்று விதமான தோஷங்களும் இல்லாத உணவு மூலம் ஏற்படும் சரீர சுத்தம் விவேகம் - என்பதற்கு ஏற்ப ஜாதிதோஷம், ஆச்ரயதோஷம் மற்றும் நிமித்ததோஷம் போன்றவை இல்லாத உணவால் ஏற்படும் சரீரத் தூய்மை ஆகும். ஜாதிதோஷம் என்றால் வெங்காயம், காளான் போன்றவை; ஆச்ரயதோஷம் என்றால் மற்றவரால் இகழப்பட்டவன், தனது நிலையில் இருந்து தாழ்ந்தவன், சண்டாளன் ஆகியோர் தொடர்புடையவை, இங்கு

ஆச்ரயம் என்றால் அந்தந்த பொருள்களுக்கான எஜமானனைக் குறிக்கிறது; நிமித்ததோஷம் என்றால் எச்சில், தலைமுடி போன்றவற்றுடன் கூடியவை. இத்தகைய மூன்றுவிதமான தோஷங்கள் இல்லாத உணவு எது என்று பகுத்தறிந்து, அதன் விளைவாக ஏற்படும் சரீரத்தூய்மை என்பதே விவேகம் எனப்படும். அதாவது இந்த மூன்று விதமான தோஷங்களும் இல்லாத உணவை உட்கொள்வதன் காரணமாக, ராஜஸம் மற்றும் தாமஸம் ஆகிய உணவுகளை உட்கொண்டு வளர்க்கப்பட்ட சரீரத்தைக் காட்டிலும், தன்னுடைய சரீரத்திற்கு உள்ள வேறுபாட்டினை பிரித்து அறியும் ஞானம் என்பது விவேகம் எனப்படுகிறது. சுத்தி என்றால், அசுத்தங்கள் எவை என்று உணர்ந்து, பிரித்து அறிதலாகும். “காயசுத்தி” என்ற பதத்தில் உள்ள “காய” என்பது இங்கு அந்தகரணத்தைக் கூறுவதாகவும் கொள்ளலாம். சாந்தோக்ய உபநிஷத்தில் - ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: - ஸத்வகுணத்தை வளர்க்கும் உணவை உண்பவர்களுடைய ஸத்வம் தூய்மை பெறுகிறது - என்றது காண்க; இங்கு இறுதியில் உள்ள ஸத்வம் என்பது அந்தகரணம் ஆகும். கீதை (16-1) – அபயம் ஸத்வ ஸம்ஸுத்தி: - ஸத்வத்திற்குத் தூய்மை என்பது, பயம் இன்றி இருத்தல் ஆகும் – என்றும், கீதை (17-3) - ஸத்வாநுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி - ச்ரத்தை என்பது அவரவர்களுடைய ஸத்வத்திற்கு ஏற்றபடி அமைகிறது - என்றும் கூறுகின்ற இடங்களில் “ஸத்வம் = அந்தகரணம்” என்று ஸத்வம் என்ற பதம் அந்தகரணத்தைக் குறிக்கும் என எம்பெருமானார் அருளிச்செய்தார். ஆகையால்தான், “விவேகம் என்றால், சாந்தோக்ய உபநிஷத் – ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: - ஸத்வகுணத்தை வளர்க்கும் உணவை உண்பவர்களுடைய ஸத்வம் தூய்மை பெறுகிறது - என்பதற்கு ஏற்ப, அந்தகரணத்தின் தூய்மைக்கு அடிப்படை உணவின் தூய்மையே ஆகும்”, என்று ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – விமோகமாவது “விமோக: காமாநபிஷ்வங்க:” என்கிறபடியே காமத்தில் அநபிஷ்வங்கம். யாதொரு விகாரத்தாலே விஷயத்தை புஜியாமல் நிற்கமாட்டான், அந்த விகாரம் அபிஷ்வங்கம். அதில்லாமை அநபிஷ்வங்கம். “காமாத் க்ரோதோபி ஜாயதே” இத்யாதி வசநத்தாலே க்ரோதாத்யபாவமும் இவ்விடத்திலே பலிதம். அப்யாஸமாவது, “ஆரம்பண ஸம்சீலநம் புந புநரப்யாஸ:” என்கிறபடியே த்யாநாலம்பநமான வஸ்துவிலே பலகாலும் பரிசீலனம் பண்ணுகை. ஆரம்பணமென்றது ஆலம்பனமென்றபடி. இவ்விடத்தில் ஆலம்பனமாவது சுபாச்ரயம். க்ரியையாவது “பஞ்ச மஹாயஜ்ஞாத்

யநுஷ்டாநம் சக்தித: க்ரியா” என்கிறபடியே பஞ்சமஹாயஜ்ஞாதி நித்யகர்மங்களை வல்லவளவும் அநுஷ்டிக்கை.

**விளக்கம்** – அடுத்து விமோகம் என்பது என்ன? போதாயன வ்ருத்தி - விமோக: காமாநபிஷ்வங்க: - என்பதற்கு ஏற்ப, விமோகம் என்றால் காமத்தின் அநபிஷ்வங்கம்; அபிஷ்வங்கம் என்றால், தான் விரும்பிய ஒரு பொருளை அனுபவிக்காமல் நில்லாமை என்பதற்கு உறுப்பான விகாரம்; அத்தகைய விகாரம் இன்றி இருத்தல் அநபிஷ்வங்கம் ஆகும். கீதை (2-62) - காமாத் க்ரோதோபி ஜாயதே - காமம் காரணமாகவே க்ரோதம் ஏற்டுகிறது - என்பது போன்ற வரிகள் மூலம், க்ரோதம் இல்லாத தன்மையும் இங்கே கொள்ளப்பட வேண்டும். அடுத்து அப்யாஸம் என்றால் என்ன? போதாயந வ்ருத்தி – ஆரம்பண ஸம்சீலநம் புந புநரப்யாஸ: - என்பதற்கு ஏற்ப, த்யானத்திற்கு உறுப்பாக உள்ள வஸ்துவில் பலமுறை ஆழ்ந்திருத்தல். ஆரம்பணம் என்றால் ஆலம்பனம், அதாவது த்யானிக்கப்படும் வஸ்து என்று பொருள். அடுத்து க்ரியை என்றால் என்ன? போதாயந வ்ருத்தி - பஞ்ச மஹாயஜ்ஞாத் யநுஷ்டாநம் சக்தித: க்ரியா - ஐந்து வேள்வி போன்ற நித்யகர்மங்களைத் தனது சக்திக்கு இயன்ற அளவு இயற்றுதல் என்பது க்ரியை ஆகும்.

**வ்யாக்யானம்** – கல்யாணமாவது, “ஸத்யார்ஜவ தயா தாநாஹிம்ஸாநபித்யா: கல்யாணாநி” என்கிறபடியே ஸத்யம், ஆர்ஜவம், தயை, தானம், அஹிம்ஸை, அநபித்யை ஆகிறவிவை. இவற்றில், ஸத்யம் - பூதஹிதம், ஆர்ஜவம் – மநோ வாக்காயாநா மைகரூப்யம். தயை – ஸ்வார்த்த நிரபேக்ஷ பரது:க்கா ஸஹிஷ்ணுத்வம், தாநம் – லோபராஹித்யம், அஹிம்ஸை – கரண த்ரயேண பரபீடா நிவ்ருத்தி:, அபித்யை – பரகீயே ஸ்வத்வபுத்தி:, அன்றிக்கே நிஷ்ப்பல சிந்தையாதல், பர க்ருதாபகார சிந்தை யாதலாகவுமாம், அதில்லாமை - அநபித்யை.

**விளக்கம்** - அடுத்து கல்யாணம் என்றால் என்ன? போதாயந வ்ருத்தி - ஸத்யார்ஜவ தயா தாநாஹிம்ஸாநபித்யா: கல்யாணாநி - என்பதற்கு ஏற்ப ஸத்யம், ஆர்ஜவம், தயை, தானம், அஹிம்ஸை மற்றும் அநபித்யை ஆகியவை கல்யாணம் எனப்படும். ஸத்யம் என்றால் உயிர்களுக்கு நன்மையைச் செய்தல்; ஆர்ஜவம் என்றால் மனம், வாக்கு, சரீரம் ஆகியவற்றின் செயல்பாடு ஒரே போன்று இருத்தல்; தயை என்றால் தனக்காக எந்தப் பயனையும் கருதாமல் இருத்தல் மற்றும் மற்றவர்களுடைய துன்பத்தைப் பொறுத்துக்

கொள்ள இயலாமல் இருத்தல்; தானம் என்றால் கஞ்சத்தன்மை இன்றி இருத்தல், அஹிம்ஸை என்றால் மனம், வாக்கு, சரீரம் ஆகிய மூன்றாலும் யாரையும் துன்புறுத்தாமல் இருத்தல்; அபித்யை என்றால் மற்றவர்கள் பொருளைத் தனது பொருள் என்று கருதாமை அல்லது பயனற்ற சிந்தனைகளைக் கொள்ளுதல் அல்லது மற்றவர்கள் தனக்குச் செய்த தீமைகளை எண்ணியபடி இருத்தல் ஆகும்; இவை இல்லாத தன்மை அநபித்யை ஆகும்.

**வ்யாக்யானம்** – அநவஸாதமாவது, "தேச கால வைகுண்யாத் சோகவஸ்த்வாத் யநுஸ்ம்ருதேச்சதஜ்ஜம் தைந்யமபாஸ்வரத்வம் மநஸோவஸாத:" என்கிறபடியே தேச காலங்களுடைய வைகுண்யத்தாலும், சோகஹேதுவாயும் பயஹேதுவாயுமுள்ள வஸ்துக்களின் அநுஸ்ம்ருதியாலுமுண்டான தைந்யமாகிற மநஸ்ஸினுடைய அபாஸ்வரத்வம் அவஸாதமாகையாலே, அதினுடைய விபர்யயம். சோகவஸ்துவென்றது சோக நிமித்த வஸ்துவென்றபடி; அதாவது அதீதமான புத்ரமரணாதி. ஆதி சப்தத்தாலே பய நிமித்தமான ஆகாமிவஸ்து விவக்ஷிதம். சோகம் – அதீத விஷயமாய், பயம் - ஆகாமி விஷயமாயிறேயிருப்பது. அபாஸ்வரத்வமென்கிறவிது - தைந்ய சப்த விவரணம். தைந்யமாவது – அபீஷ்ட கார்ய ப்ரவ்ருத்த்ய க்ஷமத்வம். பாஸ்வரத்வ விரோதியென்று தைந்ய விசேஷணமாகவுமாம். அநுத்தர்ஷமாவது – "தத் விபர்ய யஜா துஷ்டிருத்தர்ஷ:" என்கிறபடியே தேசகால ஸாத்குண்யத்தாலும் ப்ரியவஸ்த்வாத் யநுஸ்ம்ருதியாலு முண்டான துஷ்டி உத்தர்ஷமாகையாலே, அதினுடைய விபர்யயம்; அதாவது – ஹர்ஷஹேதுக்க ளுண்டானாலும் அதிப்ரீதனாகாதொழிகை.

**விளக்கம்** - அடுத்து அநவஸாதம் என்றால் என்ன? போதாயந வ்ருத்தி - தேச கால வைகுண்யாத் சோகவஸ்த்வாத் யநுஸ்ம்ருதேச்சதஜ்ஜம் தைந்யமபாஸ்வரத்வம் மநஸோவஸாத: – என்பதற்கு ஏற்ப இடம், காலம் ஆகியவற்றின் குணக்கேடு காரணமாகவும், சோகம் மற்றும் பயம் ஏற்படக் காரணமாய் உள்ள பொருள்கள் மீது வைத்துள்ள இடைவெளி இல்லாத நினைவு காரணமாகவும் ஏற்படுகின்ற மனதின் தெளிவற்ற நிலையாகும். மேலே உள்ள போதாயன வ்ருத்தியில் காணப்படும் "சோக வஸ்து" என்றால் துயரம் ஏற்படக் காரணமாக உள்ள பொருள், அதாவது முன்பு உண்டான புத்திர மரணம் போன்றவை ஆகும். அதே வரியில் உள்ள "வஸ்து ஆதி" என்பதில் காணப்படும் "ஆதி" என்பதன் மூலம் பயத்திற்குக் காரணமான "இனி நிகழ உள்ளது" என்று எண்ணும் எண்ணங்கள் கூறப்பட்டன. சோகம் என்பது முன்பே நிகழ்ந்த

நிகழ்வால் ஏற்படுவது, பயம் என்பது இனி நிகழ உள்ள நிகழ்வை எண்ணி ஏற்படுவது என்று கருத்து. அபாஸ்வரத்வம் என்பது தைந்யம் என்ற சொல்லுடைய விளக்கம் ஆகும். தைந்யம் என்றால், தான் விரும்பிய செயலில் முயற்சி செய்யாமல் பொறுமையுடன் இருப்பதாகும். அல்லது அபாஸ்வரத்வம் என்பதை தைந்யம் என்பதன் அடைமொழியாகக் கொள்வர்; இவ்விதம் கொண்டால், தைந்யம் பாஸ்வரத்திற்கு விரோதி என்று கருத்து. பாஸ்வரம் என்றால் விளக்கம், அபாஸ்வரம் என்றால் தெளிவற்ற நிலை. அநுத்தர்ஷம் என்றால், போதாயந வ்ருத்தி – தத் விபர்ய யஜா துஷ்டிருத்தர்ஷ: - என்பதற்கு ஏற்ப உத்தர்ஷம் இல்லாத தன்மை; உத்தர்ஷம் என்றால், இடம் மற்றும் காலம் ஆகியவற்றின் உதவி காரணமாகவும், விரும்பிய பொருள் மீது கொண்டுள்ள தடையில்லாத நினைவு காரணமாகவும் ஏற்படும் மகிழ்ச்சி ஆகும்; ஆக மகிழ்ச்சி ஏற்படக் காரணங்கள் இருந்தாலும் அவற்றைக் கண்டு பெரிதும் மகிழாமல் இருத்தல் அநுத்தர்ஷம் ஆகும்.

**வ்யாக்யானம்** - இனி சமாதிகளில். சமமாவது - அந்த:கரண நியமநம். தமமாவது – பாஹ்ய கரண நியமநம். “சமச் சித்த ப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச்சேந்த்ரிய நிக்ரஹ:” என்னக் கடவதிறே. “க்ஷமா ஸத்யம் தமச்சம:” என்கிறவிடத்தில், “தமோ பாஹ்ய கரணாநாமநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம: - அந்த:கரணஸ்ய ததாவித நியமநம்” என்றிறே பாஷ்யகார ரருளிச்செய்தது. மாறிச் சொல்லுமிடங்களுமுண்டு. ஆத்மகுணங்களில் ப்ரதானங்களிறே இவை. “சாந்தோதாந்த உபரதஸ் திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யே வாத்மாநம் பச்யேத்” என்கையாலே உபாஸநத்திலிழியுமவனுக்கு ப்ரதமாபேக்ஷிதங்கள் இவை யாகவிறே ச்ருதியும் சொல்லிற்று. மற்றுமுண்டான ஆத்மகுணங்களுக்கு யதாயோகம் அர்த்தம் கண்டு கொள்வது. ஆக இப்படியிருந்துள்ள விவேகாதிகளும் சமாதிகளும் மேன்மேலும் அபிவ்ருத்தமாய் வளர.

**விளக்கம்** - அடுத்து சமம் போன்றவை என்ன? சமம் என்றால் அந்தகரணத்தை அடக்குதல், தமம் என்றால் புற இந்த்ரியங்களைத் தன்வசப்படுத்துதல். சமச் சித்த ப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச்சேந்த்ரிய நிக்ரஹ: - சமம் என்பது மனதினை அடக்குதல், தமம் எனபது இந்த்ரியங்களை அடக்குதல் - என்பது காண்க. க்ஷமா ஸத்யம் தமச்சம: - என்று கூறும் இடத்தில், தமோ பாஹ்ய கரணாநாமநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம: - அந்த:கரணஸ்ய ததாவித நியமநம் - தமம் என்பது இந்த்ரியங்களை ஐம்புலன்களுடைய விஷயங்களில் செல்லாமல் காத்தல், சமம் என்றால் அந்தகாரணத்தைக் காத்தல் - என்று

அல்லவோ எம்பெருமானார் அருளிச்செய்தார். இவற்றை மாற்றிப் பொருள் கூறுவதும் உண்டு. ஆத்மகுணங்களில் முதன்மையானவை இந்த இரண்டுமே ஆகும். ப்ருஹத் உபநிஷத்தில் - சாந்தோதாந்த உபரதஸ் திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யே வாத்மாநம் பச்யேத் - மனதைத் தன் வயப்படுத்தியவனும், இந்த்ரியங்களை அடக்கியவனும், பலன் அளிக்கவல்ல கர்மங்களில் விருப்பம் அற்றவனும், பொறுமை நிறைந்தவனும், எப்போதும் மனநிறைவு கொண்டவனும் ஆகியபடி இந்த உயிர்களிடமே பரமாத்மாவைக் காண்பான் - என்று கூறுவதற்கு ஏற்ப, உபாஸநத்தில் ஈடுபடும் ஒருவனுக்கு, இவை இரண்டுமே முதன்மையாக இருத்தல் வேண்டும் என்று ச்ருதியும் உரைத்தது காண்க. மேலும் உள்ள பல ஆத்மகுணங்களுக்கும் பொருந்தும் விதத்தில் பொருள் கொள்க. ஆக, இப்படியாக உள்ள விவேகம் போன்றவைகளும், சமம் போன்றவைகளும் மேன்மேலும் அதிகரித்து வளர.

**வ்யாக்யானம்** - (எட்டு நீக்கி) "ஈனமாயவெட்டு நீக்கி" என்று ஜ்ஞாநஸங்கோசகதயா ஆத்மாவுக்கு குறையான அவித்யாதிகளைந்தும், சரீர ஸம்பந்த ப்ரயுக்தமான தாபத்ரயங்களுமாகிற எட்டையும் போக்கி. "துன்பவினைகளை விடுத்து" என்று கீழேயும் கர்ம விமோசநம் சொல்லிற்றேயென்னில்; அங்குச் சொல்லிற்று - ஜ்ஞாநோத்பத்தி விரோதி ப்ராசீந கர்ம மாத்ரமாகையால் விரோதமில்லை; அன்றிக்கே ஆத்மாவுக்குப் பொல்லாங்கைப் பண்ணுவதான காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர் யாஜ்ஞாநாஸூயைக ளாகிற எட்டையும் போக்கியென்னவுமாம். காமமாவது - அர்த்தித்த பதார்த்தம் அநுபவித்தல்லது நிற்கவொண்ணாத தசை. க்ரோதமாவது – அதின் கார்யமாய் அர்த்தித்த பதார்த்தாலாபத்தில் ஸந்நிஹிதர் பக்கல் பிறக்கும் சீற்றம். லோபமாவது – ஸந்நிஹித பதார்த்தத்தி லதிப்ராவண்யம். மோஹமாவது - கர்த்தவ்யாகர்த்தவ்யங்களை விவேகிக்க மாட்டாதொழிகை. மதமாவது – அர்த்திதார்த்த லாபத்தால் வரும் களிப்பு. மாத்ஸர்யமாவது - ப்ரஸம்ருத்தி பொறாமையை அநுஷ்டாந பர்யந்தமாக நடத்துகை. அஜ்ஞானமாவது - இவற்றால் மேல்வருமனர்த்தம் நிரூபியாமை. அஸூயையானது - குணங்களிலே தோஷத்தை ஆவிஷ்கரிக்கை. ஏவம் பூதங்களான விவற்றைப் போக்கி யென்றபடி.

**விளக்கம்** - (எட்டும் நீக்கி) திருச்சந்தவிருத்தம் (114) – ஈனமாயவெட்டு நீக்கி - என்பதற்கு ஏற்ப ஞானச்சுருக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், ஆத்மாவிற்குக் குறைபாடாக உள்ள

அவித்யை போன்ற ஐந்தும் [ஐந்து = அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம்], சரீரத் தொடர்பு காரணமாக ஏற்படும் மூன்றுவிதமான துன்பங்களும், ஆக மொத்தம் எட்டையும் நீக்கி. ஆனால், “துன்பவினைகளை விடுத்து” என்று முன்பு கூறப்பட்டதே என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். அங்கு கூறப்பட்டது - ஞானம் ஏற்படுவதற்குத் தடையாக உள்ள இரண்டு வினைகளைக் குறித்து மட்டுமே என்பதால், கூறுவது கூறல் என்ற தோஷம் இல்லை. அல்லது “எட்டு” என்பதற்கு ஆத்மாவிற்குக் கெடுதல் ஏற்படுத்துவதான காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம், அஜ்ஜானம், அஸூயை என்பதான எட்டையும் கொள்ளலாம். இவற்றை விலக்கி என்று பொருள். இவற்றை இப்போது விளக்குகிறார். காமம் என்றால் – விரும்பும் பொருள் கிடைத்தால் அன்றி ஓயாத நிலை; க்ரோதம் என்றால் – காமத்தின் செயல் காரணமாக விளைவதான தான் விரும்பிய பொருள் கிட்டாமல் போனால் அந்தப் பொருள் யாருக்குக் கிட்டியதோ அவர்கள் மீது ஏற்படும் கோபம்; லோபம் என்றால் - தன்னிடம் உள்ள பொருள்கள் குறித்த பேராசை; மோகம் என்றால் – செய்யக்கூடியது எது, செய்யக்கூடாதது எது என்று பிரித்து அறிய இயலாத நிலை; மதம் என்றால் - பொருள் போன்றவற்றைப் பெற்றதன் காரணமாக உண்டாகும் களிப்பு; மாத்ஸர்யம் என்றால் – மற்றவர்களிடம் உள்ள பலவற்றையும் நோக்கி பொறாமைப்படுதல் மற்றும் அதனை வெளியிலும் காண்பித்தல்; அஜ்ஞானம் என்றால் - இவற்றின் காரணமாக வரக்கூடிய தீயவற்றை உணராமை; அஸூயை என்றால் - நல்ல குணங்களிலும் குற்றங்களை ஆராய்தல். இப்படியாக உள்ள எட்டு தோஷங்களை நீக்கி.

**வ்யாக்யானம்** – (எட்டுமிட்டு) “இனமலரெட்டுமிட்டு” என்றும், “கந்தமாமல ரெட்டுமிட்டு” என்றும் சொல்லுகிறபடியே ஓரோவக்ஷரங்கள் பரிமளோத்தரமான புஷ்பம்போலே அவனுக்கு போக்யமாம்படி யிருக்கையாலே அஷ்டவிதமான புஷ்பத்தை ஸமர்ப்பிப்பாரைப் போலே திருமந்த்ரத்தை யநுஸந்தித்து. “அவன் பெயரெட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே” என்றும், “ஆர்வமோடிறைஞ்சி நின்றவன் பெயரெட்டெழுத்தும் வாரமாக வோதுவார்கள் வல்லர் வானமாளவே” என்றும் சொல்லக் கடவதிறே. அன்றிக்கே “அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ: ஸர்வ பூத தயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத: ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்” என்கிறபடியே அஹிம்ஸாத் யஷ்டவித புஷ்பங்களையு மிட்டென்றுமாம். கீழே “விவேக சமாதிகள்”

என்றதிலந்தர்ப்பூதங்களானவை இதிலேயும் வந்த்ததாகிலும், ஈச்வரனுக்கு இவற்றை போக்யத்வேந அநுஸந்தித்து அநுஷ்டிக்கையைச் சொல்லுகிறதாகையாலே விரோதமில்லை. ஆகையிறே இவற்றைப் புஷ்பஸமர்ப்பணமாகச் சொல்லுகிறது.

**விளக்கம்** - (எட்டுமிட்டு) – பெரியதிருமொழி (1-2-7) – இனமலரெட்டுமிட்டு – என்றும், பெரியதிருமொழி (3-5-6) – கந்தமாமல ரெட்டுமிட்டு – என்றும் கறுவதற்கு ஏற்ப, திருவஷ்டாக்ஷரத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் மிகுந்த பரிமளம் பொருந்திய மலர்கள் போன்று அவனுக்கு இன்பமாக உள்ளதன் காரணமாக, எட்டுவிதமான மலர்களைச் சமர்ப்பிப்பவர்கள் போன்று திருமந்திரத்தை ஓதி. திருச்சந்தவிருத்தம் (77) – அவன் பெயரெட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே – என்றும், திருச்சந்தவிருத்தம் (78) – ஆர்வமோடிறைஞ்சி நின்றவன் பெயரெட்டெழுத்தும் வாரமாக வோதுவார்கள் வல்லர் வானமாளவே – என்றும் கூறுவது காண்க. அல்லது இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ: ஸர்வ பூத தயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத: ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத் – மற்ற உயிர்களைத் துன்புறுத்தாமை முதல் மலர், இந்திரியங்களை அடக்குதல் இரண்டாவது மலர், அனைத்து உயிர்களிடமும் தயை காண்பிப்பது மூன்றாவது மலர், பொறுமை என்பது நான்காவது மலர், ஞானம் என்பது ஐந்தாவது மலர், தவம் என்பது ஆறாவது மலர், த்யானம் என்பது ஏழாவது மலர், ஸத்யம் என்பது எட்டாவது மலர் என்று இப்படியாக உள்ள எட்டுவிதமான மலர்கள், மஹாவிஷ்ணுவிற்கு ப்ரீதியை ஏற்படுத்துகின்றன - என்பதற்கு ஏற்ப உள்ள எட்டு மலர்களை இட்டு - என்றும் கொள்ளலாம். ஆனால் முன்பு கூறப்பட்டதான “விவேக சமாதிகள்” என்பதில் உள்ள பல தன்மைகளும், இந்த எட்டிலும் மீண்டும் காணப்படுகின்றனவே என்று கேட்கலாம். இங்கு இவை ஸர்வேச்வரனுக்கு ஏற்படக்கூடிய இன்பத்தைக் கருத்தில் கொண்டு நடக்கவேண்டும் என்று கூறப்பட்டதால், கூறியதுகூறல் என்ற தோஷம் இல்லை. அதனால்தான் இவற்றினை “புஷ்ப ஸமர்ப்பணம்” என்றார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – (எட்டினாய பேதப்பூவில் சாந்தொடு தேவகாரியம் செய்து) "எட்டினாய பேத மோடிறைஞ்சி" என்கிறபடியே "மநோ புத்த் யபிமாநேந ஸஹ ந்யஸ்ய தராதலே கூர்மவச்சதுர: பாதாந் சிரஸ் தத்ரைவ பஞ்சமம்" என்கிறபடியே பக்நாபிமாநனாய் விழுகையும், மநோபுத்திகளுக்கு ஈச்வரனே விஷயமாகையும், பாத த்வயங்களும் கர த்வயங்களும் சிரஸ்ஸூம் பூமியிலே பொருந்துகையுமாகிற அஷ்டாங்க ப்ரணாமத்தைப் பண்ணி, "பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து", "சாந்தோடு விளக்கம் தூபம் தாமரை மலர்கள் நல்லவாய்ந்து கொண்டு" என்கிறபடியே புஷ்பாங்கராகாதிகளான ஸமாராதநோபகரணங்களை பல ஸங்க கர்த்ருத்வங்களாகிற துராலும் மயிரும் புழுவும் படாதபடி ஆராய்ந்து மிகவும் ஸம்பாதித்துக் கொண்டு "தேவகாரியம் செய்து" என்கிறபடியே பகவத் ஸமாராதநத்தைச் செய்து.

**விளக்கம்** - (எட்டினாய பேதப்பூவில் சாந்தொடு தேவகாரியம் செய்து) (எட்டினாய பேத) – திருச்சந்தவிருத்தம் (27) – எட்டினாய பேத மோடிறைஞ்சி - என்பதற்கு ஏற்பவும், மநோ புத்த் யபிமாநேந ஸஹ ந்யஸ்ய தராதலே கூர்மவச்சதுர: பாதாந் சிரஸ் தத்ரைவ பஞ்சமம் – மனம், புத்தி, செருக்கு என்பவற்றோடு, இரண்டு கைகள், இரண்டு கால்கள் மற்றும் ஐந்தாவதாக தலை ஆகியவற்றைப் பூமியில் வைத்து - என்பதற்கு ஏற்பவும், கர்வம் அற்றவனாக விழுகையும், மனம் மற்றும் புத்தி ஆகியவற்றுக்கு ஸர்வேச்வரனை மட்டுமே விஷயமாக்குகையும், இரண்டு கால்கள், இரண்டு கைகள் மற்றும் தலை ஆகியவை பூமியில் பொருந்துகையும் என்றுள்ள அஷ்டாங்க நமஸ்காரம் செய்து. (பூவில் சாந்தொடு) – திருவாய்மொழி (5-2-9) - பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து - என்றும், திருவாய்மொழி (10-2-10) - சாந்தோடு விளக்கம் தூபம் தாமரை மலர்கள் நல்லவாய்ந்து கொண்டு – என்றும் கூறுவதற்கு ஏற்ப, மலர்கள் போன்றவைகளான் ஆராதனைக்கு உரிய பொருள்களை, "பலன், பற்றுதல், நாம் செய்தோம்" என்பதுடன் கூடிய செருக்கு என்ற நிலை, தலைமுடி, புழு போன்றவை இன்றி, சிறப்பாகக் கொண்டு வந்து (தேவகாரியம் செய்து) – பெரியாழ்வார் திருமொழி (4-5-1) – தேவகாரியம் செய்து – என்பதற்கு ஏற்ப பகவத் ஆராதனையைச் செய்து.

**வ்யாக்யானம்** - (உள்ளம் தூயராய்) "ஒன்றி நின்று நற்றவம் செய்து ஊழியூழிதோறெலாம் நின்று நின்றவன் குணங்களுள்ளி யுள்ளம் தூயராய்" என்கிறபடியே, நித்ய கர்மாநுஷ்டாநம் தொடங்கி பகவதாராதந பர்யந்தமாகப் பண்ணும் த்ரிவித பரித்யாக

பூர்வகமான கர்மாநுஷ்டாநந்தாலும் பகவத்குணாநுஸந்தாநத்தாலும், "கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே" என்கிறபடியே ஜ்ஞாநயோகார்ஹமாம்படியே ம்ருதித கஷாயராகையாலே பரிசுத்தாந்த:கரணராய்.

**விளக்கம்** - (உள்ளம் தூயராய்) – திருச்சந்தவிருத்தம் (75) - ஒன்றி நின்று நற்றவம் செய்து ஊழியூழிதோறெலாம் நின்று நின்றவன் குணங்களுள்ளி யுள்ளம் தூயராய் - என்பதற்கு ஏற்ப நித்யகர்மங்கள் இயற்றியபடி இருத்தல் என்பது தொடக்கமாக, பகவத் ஆராதனை என்பது முடிய இயற்றப்படுவதும், பலனை எண்ணாமை - பற்று வைக்காமை - நான் செய்தேன் என்ற எண்ணம் இல்லாமை – என்ற மூன்றுவிதமான தியாகங்களை முன்னிறுத்திச் செய்யப்படுவது ஆகிய கர்மங்களாலும், பகவானுடைய திருக்கல்யாண கணங்களை எப்போதும் எண்ணியபடி உள்ளதாலும், கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே - அன்றாடம் இயற்றப்பட வேண்டிய கர்மங்களை இயற்றுவதன் காரணமாகப் பாவங்கள் அழிந்து ஞானம் வெளிப்படுகிறது - என்பதற்கு ஏற்ப ஞானயோகத்தைத் அடைவதற்குத் தகுதியாக உள்ளதான பாவங்கள் நீங்கப் பெற்றவர் என்பதால் பரிசுத்தமான உள்ளம் உடையவர்களாக.

**வ்யாக்யானம்** - (வாரிப் புன்புல வகத்தி னுளிளைப்பினை யடைவே விளக்கினைக் கண்டு) "ப்ரகீர்ணே விஷயாரண்யே ப்ரதாவந்தம் ப்ரமாதிநம், ஜ்ஞாநாங்குசேந க்ருஹ்ணீயாத் வச்ய மிந்த்ரிய தந்திநம்" என்று விஸ்தீர்ணமான விஷயாடவியிலே ஓடாநிற்பதாய், அகப்பட்டாரைக் கொல்லுமதான இந்த்ரியமாகிற வானையை த்யாஜ்யோபாதேய விவேக ஜ்ஞாநமாகிற அங்குசத்தாலே வச்யமாகப் பண்ணுவானென்கிறபடியே. "வாரி சுருக்கி மதக்களி றைந்தினையும் சேரி தரியாமற் செந்நிறீஇ" என்று மதித்தவானைகளைத் தண்ணீரிலே செறுப்பிக்குமாபோலே இந்த்ரியங்களாகிற மதஹஸ்திகளை விஷயாநுபவ மாகிற போகத்தைத் குலைத்து. அவ்வளவுமன்றிக்கே விஷயங்கள் நடையாடுமிடத்தில் போகாதே ப்ரத்யக் வஸ்து விஷயமாகையாகிற செவ்வையிலே நிறுத்தி யென்றும், "புன்புல வழியடைத் தரக்கிலச்சினை செய்து நன்புலவழி திறந்து ஞான நற்சுடர் கொளீஇ" என்று அல்பாஸ்திரத்வாதி தோஷதுஷ்டமான க்ஷுத்ர விஷயங்களைப் பற்றிப்போகிற இந்த்ரிய மார்க்கத்தை நிரோதித்து அவற்றினுடைய க்ஷுத்ரதாநுஸந்தாநத்தாலே வாஸநாநு வ்ருத்தியு மறும்படி அத்தை உறைப்பித்து, விலக்ஷண விஷயத்தில் இந்த்ரிய மார்க்கத்தை ப்ரகாசிப்பித்து. நன்றான ஜ்ஞாந ப்ரபையை மிகவுமுண்டாக்கி யென்றும்,


Email:sridharan_book@yahoo.co.in

“ஐம்புலனகத்தினுள் செறுத்து” என்று ச்ரோத்ராதீந்த்ரியங்கள் சப்தாதி விஷயங்களிற் போகாமே உள்ளேயடக்கி யென்றும் சொல்லுகிறபடியே நிக்ருஹீதேந்த்ரிய க்ராமராய்,

**விளக்கம்** - (வாரி) – ப்ரகீர்ணே விஷயாரண்யே ப்ரதாவந்தம் ப்ரமாதிநம், ஜ்ஞாநாங்குசேந க்ருஹ்ணீயாத் வச்ய மிந்த்ரிய தந்திநம் - எங்கும் பரந்துள்ள உலகவிஷயங்கள் என்னும் காட்டில் ஓடியபடி உள்ளதும், அகப்பட்டவர்களை அழிப்பதும் ஆகிய இந்த்ரியங்கள் என்ற யானையை, விலக்கத்தக்கது எது மற்றும் ஏற்கத்தக்கது எது என்று பகுத்தறியும் ஞானம் என்ற அங்குசம் கொண்டு அடக்கவேண்டும் - என்பதகு ஏற்ப, முதல் திருவந்தாதி (47) - வாரி சுருக்கி மதக்களி றைந்தினையும் சேரி தரியாமற் செந்நிறீஇ - என்று மதம் பிடித்த யானைகளை தண்ணீரில் நிறுத்தி ஆற்றுவது போன்று, இந்த்ரியங்கள் என்ற மதயானையை விஷயங்களை அனுபவித்தல் என்பதான உலகவிஷயங்கள் நிறைந்துள்ள பொருள்கள் உள்ள இடத்திற்குப் போகவிடாமல், ஆத்மாவைக் காணுதல் என்பதான நேர்வழியில் நிலை நிறுத்தி என்றும். (புன்புலம்) – திருச்சந்தவிருத்தம் (76) - புன்புல வழியடைத் தரக்கிலச்சினை செய்து நன்புலவழி திறந்து ஞான நற்சுடர் கொளீஇ – என்று தாழ்ந்தவை, நிலையற்றவை போன்ற தோஷங்களை உடையதான சிற்றின்பம் அளிக்கவல்ல பொருள்களைப் பின்தொடர்ந்து செல்லும் இந்த்ரியங்களுடைய வழியை அடைத்து, அவற்றின் தாழ்ந்த எண்ணம் காரணமாகத் தலை தூக்கும் வாசனைகளையும் அறும்படியாக அவற்றை உறைவித்து, மேன்மையான ஆத்ம பரமாத்ம விஷயத்தில் இந்த்ரியங்கள் செல்வதற்கான பாதையை அமைத்து, சிறப்பான ஞானச்சுடரை கொழுந்து விட்டு எரியும்படி உண்டாக்கி என்றும். (அகத்தினுள்) – திருவெழுகூற்றிருக்கை - ஐம்புலனகத்தினுள் செறுத்து – என்பதற்கு ஏற்ப செவி முதலான இந்த்ரியங்கள், ஐந்து புலன்களுக்கான விஷயங்களில் செல்லாமல் உள்ளே அடக்கி என்றும். இவ்விதம் கூறுவதற்கு ஏற்ப உள்ளே அடைக்கப்பட்ட இந்த்ரியங்களைக் கொண்டவர்களாக.

**வ்யாக்யானம்** – “இளப்பினை யியக்கம் நீக்கி” என்கிற பாட்டில் சொல்லுகிறவடைவிலே “அவித்யாஸ்மிதா ராக த்வேஷாபி நிவேசா: பஞ்ச க்லேசா:” என்றும் சொல்லுகிற ச்லேசங்களுடைய ஸஞ்சாரத்தைத் தவிர்த்து, “நாத்யுச்சரிதம் நாதிநீசம்” இத்யாதியில் சொல்லுகிறபடியே ஓராஸநத்தேயிருந்து, “ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசச்சா நவலோகயந்” என்னும்படியே நாஸாக்ரந்யஸ்த லோசநராய், ஓரளவில் நில்லாத இந்த்ரியங்களை ப்ரத்யக்காக்கி, த்யேயமான பகவத் விஷயத்திலே ஸ்நேஹத்தை வைத்து

விடாம லநுஸந்தித்து, சுடர் விட்டுத் தோன்றுகிற ஜ்ஞாநத்தாலே ஸ்வயம் ப்ரகாசமான ஆத்மஸ்வரூபத்தை சாஸ்த்ரோக்த ப்ரகாரத்தாலே ஸாக்ஷாத்கரித்து ஸத்கர்மாநுஷ்டாநத்தாலே க்ஷீண பாபனாய், நிர்மலாந்த:கரண னானவனுக்கு பகவத் ஸாக்ஷாத்காரத்துக் குறுப்பாக விளையும் யோகஜந்ய ஜ்ஞாநந்தான் ப்ரதமம் ஆத்ம ஸ்வரூபத்தை தர்சித்துக் கொண்டிறே மேல்போவது.

**விளக்கம்** - (இளைப்பினை அடைவே விளக்கினைக் கண்டு) – திருக்குறுந்தாண்டகம் (18) – இளப்பினை யியக்கம் நீக்கி - என்ற பாசுரத்தில் கூறப்படுவது போன்று, அவித்யாஸ்மிதா ராக த்வேஷாபி நிவேசா: பஞ்ச க்லேசா: - அறியாமை, கர்வம், ஆசை, த்வேஷம், அபிமானம் என்னும் இவை ஐந்தும் துன்பங்கள் - என்று கூறப்படும் துன்பங்களுடைய ஸஞ்சாரத்தை தவிர்த்து, கீதை (6-11) - நாத்யுச்சரிதம் நாதிநீசம் – அதிகமான உயரமும் தாழ்வும் இல்லாத ஆசனம் - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதான ஓர் இருக்கையில் அமர்ந்து, கீதை (6-13) - ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசச்சா நவலோகயந் - தனது மூக்கின் நுனியை மட்டும் நன்றாக நோக்கியபடியும், திசைகளை நோக்காதபடியும் - என்பதற்கு ஏற்ப மூக்கின் நுனியில் மட்டும் தனது பார்வையைக் கொண்டவராகவும், ஓர் இடத்தில் நிலைநிற்காத இந்த்ரியங்களை உள்நோக்கும்படிச் செய்து, த்யானத்திற்கு இலக்காக உள்ள பகவானிடம் ஸ்நேஹத்தை வைத்து, இடைவிடாமல் அவனை எண்ணி, [அதன் மூலமாக] சுடர்விட்டு எரிகின்ற ஞானத்தால் தன்னைத்தானே வெளிப்படுத்தவல்ல ஆத்மஸ்வ்ரூபத்தைச் சாஸ்த்ரங்களில் கூறியுள்ள முறையில் தரிசித்து, இதன் மூலம் நல்ல கர்மங்களை இயற்றியபடி உள்ளதால் பாவங்கள் நீங்கப் பெற்று, தோஷங்கள் ஏதும் இல்லாத மனம் கொண்ட ஒருவனுக்கு, ஸர்வேச்வரனை நேருக்குநேர் காண்பதற்கு ஏற்றபடியாக உண்டாகின்ற யோகம் மூலம் பிறக்கும் ஞானம் என்பது, முதலில் ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்து தெளிந்து மேன்மேலும் ப்ரகாசிக்கும் - என்பதைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – “விளக்கினை விதியில் காண்பார்” என்கிறவிது பகவத் ஸாக்ஷாத்காரமாக பூர்வர்கள் வ்யாக்யாநம் பண்ணி வைத்தார்களாகிலும், இவர் ஆத்மபரமாகவே அருளிச் செய்தாரென்று கொள்ளவேணும்; பகவத் த்யாந தர்சநங்களை மேலே சொல்லுகையாலே “விதியில் காணும் ப்ரதம மத்யம தசைகளை” யென்று ஆத்மபரமாகவிறே கீழும் இவரருளிச் செய்தது. யோஜநா பேதங்களுண்டா யிருக்குமிறே.

**விளக்கம்** - மேலே எடுக்கப்பட்ட திருக்குறுந்தாண்டகம் (18) - விளக்கினை விதியில் காண்பார் - என்ற பாசுர வரிக்கு "ஸர்வேச்வரனை நேரே காணுதல்" என்றே பூர்வர்கள் வ்யாக்யானம் செய்தபோதிலும், இவர் ஆத்மபரமாகவே அருளிச்செய்கிறார் என்றே கொள்ளவேண்டும். ஏன்? காரணம், தொடர்ந்து இனி வரும் வரியில் – யோக நீதி நண்ணி- என்று தொடங்கி ஸர்வேச்வரனை த்யானித்தல், காணுதல் போன்றவற்றைத் தனியாகக் கூறுவதால் ஆகும். மேலும் சூர்ணை (23) - விதியில் காணும் ப்ரதம மத்யம தசைகளை - என்று ஆத்மபரமாக அல்லவோ ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்தார். இப்படியாகக் கருத்து வேறுபாடு வருவது இயல்பானதே ஆகும்.

**வ்யாக்யானம்** - (யோகநீதி நண்ணி) "யோகநீதி நண்ணுவார்கள்" என்கிறபடியே யோகமாகிற உபாயத்தாலே கிட்டி. (அறத்திகழு மறையோர் மனந்தன்னு ளமர்ந்துறையும் அரும் பெருஞ்சுடரை) "மறந்திகழு மனமொழித்து வஞ்சமாற்றி வன்புலன்களடக்கி யிடர்ப்பாரத் துன்பம் துறந்து இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான அறந்திகழு மனத்தவர்தம் கதியை" என்று கொலையும் சினமும் கொடுமையுமாகிற மறத்தால் விளங்கா நின்றுள்ள மநஸ்ஸை வாஸனையோடே போக்கி, பொய்யைத் தவிர்ந்து, வன்புலச்சேக்களைப் பட்டி புகாமே கட்டி மிக்க துக்கத்தை விளைப்பதான "பாரமாய பழவினையைப் பற்றறுத்து" ச்லாக்யமா யிருந்துள்ள ஆதிநடுவந்தியாகிற மூன்றுபொழுதிலுமேத்தி அளவிறந்த பழைய மர்யாதையிலே சிலவரால் கலக்கவொண்ணாதபடி நிலைநின்ற வைஷ்ணவர்களான ஆந்ருசம்ஸ் யோஜ்ஜ்வல சித்தர்க்குப் பரமப்ராப்யனானவனை யென்றும், "மறையோர் மனந்தன்னுள் விண்ணுளார் பெருமானை" என்று ப்ராஹ்மணருடைய ஹ்ருதயங்களைத் தனக்கு வாஸ ஸ்தாநமாக வுடையனா யிருக்கும் "அயர்வறு மமரர்க ளதிபதியை" என்றும், "மாதவமானவர் தங்கள் நிந்தை யமர்ந்துறைகின்ற வெந்தை" என்று மஹா தபஸ்ஸை யுடையரா யிருக்கும் மனுஷ்யர்களுடைய ஹ்ருதயங்களிலே அநந்யப்ரயோஜநனாய்க் கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமியென்றும் சொல்லுகிறபடியே பரிசுத் தாந்த:கரணரான பரமயோகிகள் ஹ்ருதயங்களிலே "ஆரமார்வ னரங்கனென்னு மரும் பெரும் சுடரொன்றினைச் சேரும் நெஞ்சினர்" என்னும்படி ஆபரணாத் யலங்க்ருதமாய் அத்யுஜ்ஜவலமான விக்ரஹத்தோடே யெழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரனை.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (யோகநீதி நண்ணி) - திருச்சந்தவிருத்தம் (63) - யோகநீதி நண்ணுவார்கள் – என்பதற்கு ஏற்ப யோகம் என்னும் உபாயத்தால் அடைந்து, (அறம் திகழும்) - பெருமாள் திருமொழி (1-7) – மறந்திகழு மனமொழித்து வஞ்சமாற்றி வன்புலன்களடக்கி யிடர்ப்பாரத் துன்பம் துறந்து இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான அறந்திகழு மனத்தவர்தம் கதியை – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதான கொலை, சினம், கொடுமை செய்தல் என்பதான மறம் காரணமாக மலராமல் உள்ளதான மனத்தினை, அந்த வாசனைகளை அடியுடன் போக்கி, பொய்யை விலக்கி, மிகுந்த வலிமை பொருந்திய இந்த்ரியங்களை அவற்றின் விஷயங்களில் மேய விடாமல் கட்டி வைத்து, மிகுந்த துன்பங்களை ஏற்படுத்தவல்லதும், அமலனாதிபிரான் - பாரமாய பழவினை பற்றறுத்து – என்று கூறுவதும் ஆகிய பழவினைகளை வேருடன் அறுத்து, மிகவும் மேன்மையான காலை நண்பகல் அந்தி என்னும் மூன்று வேளைகளிலும் தொழுது, முன்னோர் வகுத்த அளவற்ற நெறிமுறைகளில் சிலரால் கலக்க இயலாதபடி நிலை நிற்கும் ஸ்ரீவைஷ்ணவர்களாகவும், பேரருள் காரணமாக மலர்ந்துள்ள சித்தம் கொண்ட சித்தர்களாகவும் உள்ளவர்களுக்கு அடையப்படும் பெரும் இலக்காக உள்ளவனை என்றும். (மறையோர் மனம் தன்னுள்) – பெரியதிருமொழி (7-3-7) - மறையோர் மனந்தன்னுள் விண்ணுளார் பெருமானை - என்பதற்கு ஏற்ப அந்தணர்களுடைய மனங்களே தனக்கு ஏற்ற இருப்பிடம் என்று அமர்ந்துள்ள நித்யஸூரிகளின் அதிபதியை என்றும். (அமர்ந்து உறையும்) பெரியதிருமொழி (2-1-1) – மாதவமானவர் தங்கள் நிந்தை யமர்ந்துறைகின்ற வெந்தை - என்று கூறுவதற்கு ஏற்ப மிகவும் பெரிய தவங்களைக் கொண்ட மனிதர்களுடைய இதயங்களில், அவர்களிடமிருந்து எதனையும் எதிர்பாராமல் எப்போதும் வசிக்கின்ற ஸ்வாமி என்றும். இவ்விதமாகக் கூறுவதற்கு ஏற்ப, பரிசுத்தமான அந்தகரணத்தைக் கொண்டு உயர்ந்த யோகிகளுடைய இதயங்களில், (அரும் பெரும் சுடரை) – பெருமாள் திருமொழி (2-7) – ஆரமார்வன் அரங்கன் என்னும் அரும் பெரும் சுடரொன்றினைச் சேரும் நெஞ்சினர் – என்பதற்கு ஏற்ப ஆபரணங்கள் போன்ற பலவற்றாலும் அலங்கரிக்கப்பட்டவனாக மிகுந்து ப்ரகாசத்துடன் கூடிய திருமேனியுடன் எழுந்தருளியுள்ள ஸர்வேச்வரனை.

**வ்யாக்யானம்** - (கண்கள் சிவந்தில்படியே மனவுட்கொண்டு) “கண்கள் சிவந்து” என்கிற பாட்டில் சொல்லுகிறபடியே அவயவசோபை ஆபரணசோபை ஆயுதசோபைகளோடே கூடி, காளமேக நிபச்யாமமாயிருந்துள்ள திவ்ய விக்ரஹத்துடனே “கற்றவர் தந்தம் மனவுட்

கொண்டு" என்று அறிவுடையரான யோகிகளானவர்கள் தந்தாமுடைய ஹ்ருதயத்திலே கொண்டு என்கிறபடியே ஹ்ருதய கமலத்திலே த்யாநம் பண்ணி, (நிரந்தரம் மறவாமை துடக்கறா ஸ்ம்ருதியாய்) "நிரந்தரம் நினைப்பதாக" என்றும், "மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாய்" என்றும் சொல்லுகிறபடியே அந்த த்யாநத்துக்கு விச்சேதமும் விஸ்ம்ருதியுமற்று, "சோர்விலாத காதலால் துடக்கறா மனத்தராய்" என்று ஸர்வகாலமும் விஷயாந்தரங்களால் அபஹ்ருதமாகாத ப்ரேமத்தை யுடையராகையாலே தத் ஸம்ச்லேஷ வியோகைக ஸுகதுக்கராம்படி "ஸத்வ சுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:" என்கிறபடியே த்யேய வஸ்துவில் துடக்கறாமல் நடக்கும் த்ருவாநுஸ்ம்ருதியாய்.

**விளக்கம்** - (கண்கள் சிவந்தில்படியே) திருவாய்மொழி (8-8-1) – கண்கள் சிவந்து - என்ற பாசுரத்தில் கூறுவதற்கு ஏற்ப அவயங்களின் அழகு, ஆபரணங்களின் அழகு மற்றும் ஆயுதங்களின் அழகு ஆகியவற்றுடன் கூடியுள்ள காளமேகம் போன்ற கரியநிறம் பொருந்திய திவ்யமங்கள் விக்ரஹத்துடன். (மனம் உட்கொண்டு) – பெரியதிருமொழி (7-3-1) - கற்றவர் தந்தம் மனவுட் கொண்டு - என்பதற்கு ஏற்ப அறிவு நிறைந்த யோகிகள் தங்களுடைய இதயத்திலே கொண்டு என்கிறபடியே இதயக்கமலத்தில் உள்ளதாக த்யானம் செய்து. (நிரந்தரம் மறவாமை) - திருச்சந்தவிருத்தம் (101) - நிரந்தரம் நினைப்பதாக - என்றும், பெரியதிருமொழி (3-5-4) – மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அத்தகைய த்யானத்திற்கு எந்தவிதமான தடை மற்றும் மறதி இன்றி. (துடக்கு அறா மனத்தராய்) - திருச்சந்தவிருத்தம் (78) - சோர்விலாத காதலால் துடக்கறா மனத்தராய் – என்பதற்கு ஏற்ப, எந்த நேரத்திலும் உலக விஷயங்களால் ஈர்க்கப்படாத அன்பு கொண்டவர் என்பதால் அவனுடைய சேர்க்கை மற்றும் பிரிவு என்பதான சுகம் மற்றும் துக்கத்தை மட்டுமே கொண்டவர்களாக, சாந்தோக்ய உபநிஷத் - ஸத்வ சுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: – ஸத்வம் என்ற அந்தகரணம் தூய்மை அடைந்தால் தடையில்லாத த்யானம் கைகூடும் - என்பதற்கு ஏற்ப த்யானிக்கப்படும் பொருள் குறித்து தடையில்லாமல் உள்ள சிந்தனையுமாய்.

**வ்யாக்யானம்** - (கனவில் மிக்க தர்சன ஸமமாய்) "கனவில் மிகக் கண்டேன்" என்று இந்த்ரியங்களால் கலக்கவொண்ணாதபடி மாநஸ ஜ்ஞாநத்தாலே அழகிதாகக் கண்டேனென்னலாம்படி "ஸா ச ஸ்ம்ருதிர் தர்சந ஸமாநாகாரா" என்கிறபடியே, அதுதான் ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய். (ஆகத்துப் புல்கு மத்யர்த்தப் ப்ரியமாய்) அப்படி தர்சந

 **Email:**sridharan_book@yahoo.co.in

ஸமமானவதுதான், "நாடோறும் ஞாநத்தா லாகத்தணைப்பார்க்கு", "ஆகத்தணைப்பா ரணைவரே", "எல்லை யிலந் நலம் புல்கு", "ஆர்வம் புரிய பரிசினால் புல்கில்" என்னும்படி அங்கநா பரிஷ்வங்கம் போலே "ப்ரியோ ஹி ஜ்ஞாந நோத்யர்த்த மஹம்" என்கிற ஸ்மர்த்தவ்ய விஷய ஸாரஸ்யத்தாலே தானும் அத்யர்த்த ப்ரியமாய்.

**விளக்கம்** - (கனவில் மிக்க தர்சன ஸமமாய்) இரண்டாம் திருவந்தாதி (81) - கனவில் மிகக் கண்டேன் – என்று கூறுவதற்கு ஏற்ப இந்த்ரியங்கள் கொண்டு சேர இயலாதபடி மனத்தில் ஏற்படும் ஞானம் என்ற உணர்வு மூலம் "அழகியதாகக் கண்டேன்" என்று உரைக்கும்படியாக, ஸா ச ஸ்ம்ருதிர் தர்சந ஸமாநாகாரா - அத்தகைய நினைவு என்பது நேரடியாகக் காண்பது போன்று இருப்பது - என்பதற்கு ஏற்ப இந்தச் சிந்தனை என்பது அவனை நேருக்குநேர் காண்பது போன்றே உள்ளதாய். (ஆகத்துப் புல்கும் அத்யர்த்த ப்ரியமாய்) - அவ்விதம் நேரடியாகக் காண்பது போன்றுள்ள அதுதான், திருவாய்மொழி (10-4-6) – நாடோறும் ஞாநத்தா லாகத்தணைப்பார்க்கு – என்றும், முதல் திருவந்தாதி (32) - ஆகத்தணைப்பா ரணைவரே – என்றும், திருவாய்மொழி (1-2-4) - எல்லையில் அந்நலம் புல்கு – என்றும், முதல் திருவந்தாதி (50) – ஆர்வம் புரிய பரிசினால் புல்கில் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அணைப்பதாகவும், புல்குவதாகவும் கூறப்படுவதால், பெண்களை அணைப்பது போன்று, கீதை (7-17) - ப்ரியோ ஹி ஜ்ஞாந நோத்யர்த்த மஹம் - நான் ஞானிகளுக்கு மிகவும் ப்ரியமானவன் - என்பதற்கு ஏற்ப எண்ணப்படுகிற விஷயம் அளிக்கும் இன்பம் காரணமாகத் தானும் மிகவும் ப்ரியமாய்.

**வ்யாக்யானம்** - (வைகும் சிறப்புவிட்டுக் குற்றேவலென்னாத அநந்ய ப்ரயோஜநமாய்) "நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீ அவர்க்கு வைகுந்தமென் றருளும் வான்" என்று உன்னுடைய கல்யாண குணங்களிலே விச்சேதமின்றியே சொல்லுகிற சிந்தையிலுங் காட்டில் இனிதோ நீ அவர்க்கு நன்றாகச் சொல்லிக் கொடுக்கும் பரமபதமென்றும், "உலகு படைத்தித்யாதி – அமுத வெள்ளத்தானாம் சிறப்புவிட்டு ஒரு பொருட்கசைவோரசைக ... நல்வீடு பெறினும் கொள்ளவதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பு" என்று பரத்வ ஸௌலப்யாதிகளால் பரிபூர்ணனான ஸர்வேச்வரனுக்கு நிரதிசய போக்யமான திருவடிகளை அநுபவிக்கையிலுண்டான அபிநிவேசத்தாலே த்ரவீபூதமாய் ஓரவவியாக்கிக் காணவொண்ணாதபடி மங்கின ஆத்மவஸ்துவிலே அந்த ஆதரமடியாகப் பிறந்த விலக்ஷணமான ஸங்க காமாத்யவஸ்தைகளையுடைய பக்தியால் விளைகிற


**Email:**sridharan_book@yahoo.co.in

நிரதிசய ரஸத்திலே உளனாகையாகிற லாபத்தை விட்டு க்ஷுத்ர புருஷார்த்தங்களுக்கு க்லேசப்படுவார் அங்ஙனே க்லேசப்படுக; ச்லாக்யமான ஐச்வர்யம், அதில் விலக்ஷணமான ஆத்மாநுபவம், அவ்வளவன்றிக்கே பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷம், இவற்றைப் பெறுமளவானாலும் ஸாராஸார விவேகஞ்ஜரானவர்களுடைய ஹ்ருதயத்தில் அவற்றை ஸ்வீகரிக்கவும் நினைவுண்டோவென்றும், "உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன் மேலால் பிறப்பின்மை பெற்றடிக் கீழ்க் குற்றேவலன்று மறப்பின்மை யான் வேண்டும் மாடு" என்று உன்னுடைய ஸ்மர்யமாண தசையே தொடங்கி இனிதான குணங்களிலே பழுத்தொழிந்தேன்; பின்பு ஒருகால் பிறவாமை பெற்றுத் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் பண்ணுகையன்று எனக்கு வேண்டுவது, பிறந்த ஜ்ஞானத்துக்கு மறப்பில்லாமை எனக்கு வேண்டும் தனமானது - என்றும் சொல்லுகிறபடியே இவ்வநுஸந்தாநத்தாலே தேசவிசேஷத்தி லநுபவத்தையு முபேக்ஷிக்கும்படி தானே பரம ப்ரயோஜநமாம்படி ரஸிக்கையாலே அநந்ய ப்ரயோஜனமாய்.

**விளக்கம்** - (வைகும்) - பெரியதிருவந்தாதி (53) - நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீ அவர்க்கு வைகுந்தமென் றருளும் வான் - உனது திருக்கல்யாண குணங்களின் மீது எப்போதும் எந்தவிதமான தடையும் இன்றி உள்ளதான சிந்தனையைக் காட்டிலும் நீ அவர்களுக்கு நன்மை பயக்கும் என்று திருவுள்ளம் கருதி அளிக்கின்ற பரமபதம் இனிமையாக இருக்குமோ - என்றும், (சிறப்பு விட்டு) - திருவாசிரியம் (2) உலகு படைத்தித்யாதி – அமுத வெள்ளத்தானாம் சிறப்புவிட்டு ஒரு பொருட்கசைவோரசைக ... நல்வீடு பெறினும் கொள்ளவதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பு – பரத்வம், ஸௌலப்யம் போன்ற பலவற்றாலும் பரிபூர்ணமாக உள்ள ஸர்வேச்வரனுடைய திருவடிகளை அனுபவிக்கவேண்டும் என்ற காரணத்தால் ஏற்படும் எல்லையற்ற ஆசையின் விளைவாக நீர்ப்பண்டமாக உருகி, "இதுவும் ஓர் உருவமோ" என்று காண்பவர் வியக்கும்படி மங்கிப்போன ஆத்மவஸ்துவில், அத்தகைய ஆசை காரணமாகப் பிறந்த வேறுபட்ட சிறப்பினைக் கொண்டதான சேர்க்கை, காமம் போன்ற நிலைகளை உடைய பக்தியால் விளைவதான எல்லையற்ற இன்பத்தில் நிலைத்து நிற்பது என்ற லாபத்தைக் கைவிட்டு, தாழ்ந்த சில புருஷார்த்தங்களை வேண்டி நின்று அதற்காகத் தங்களை வருத்தியபடி சிலர் இருப்பர், அவர்களைத் தள்ளுக; மிகுந்த மேன்மையான ஐச்வர்யம், அதனைக் காட்டிலும் வேறுபட்ட சிறப்பினைக் கொண்டதான ஆத்ம அனுபவம், அதனைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷம்


**Email:**sridharan_book@yahoo.co.in

போன்றவற்றை ஒருவன் பெறக்கூடியவன் என்ற நிலை வந்தாலும், நன்மை எது தீமை எது என்று பிரித்து அறியக்கூடிய அறிவாளிகளுடைய மனதில் அவற்றை ஏற்கவேண்டும் என்ற எண்ணம் வருமோ - என்றும். (குற்றேவலென்னாத அநந்ய ப்ரயோஜநமாய்) - பெரியதிருவந்தாதி (58) – உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன் மேலால் பிறப்பின்மை பெற்றடிக் கீழ்க் குற்றேவலன்று மறப்பின்மை யான் வேண்டும் மாடு – உன்னைக் குறித்து எண்ணத் தொடங்கிய காலம் முதலாக உனது இனிமையான திருக்கல்யாண குணங்களில் மட்டுமே நான் பழுத்து நின்றேன்; இனி நான் வேண்டுவது என்பது மீண்டும் பிறக்காமல் இருந்து, உனது திருவடிகளில் கைங்கர்யம் செய்தபடியே இருத்தல் வேண்டும் என்பது அல்ல; எனக்கு இப்போது பிறந்த உன்னைக் குறித்த ஞானம் மறக்காமல் இருத்தல் வேண்டும் என்ற செல்வத்தையே வேண்டுகிறேன் - என்றும். இவ்விதம் கூறுவது போன்று ஸர்வேச்வரனைக் குறித்து இடைவிடாதுள்ள சிந்தனை காரணமாக, பரமபதத்தையும் வெறுத்துத் தள்ளும்படி, ஸர்வேச்வரனாகிய தானே மிகவும் உயர்ந்த பலனாக இனிமையாக உள்ளதால், மற்ற எந்த ஒரு பயனையும் அவர்கள் எண்ணாதபடியாக.

**வ்யாக்யானம்** - (வேதநோபாஸந ஸேவா த்யாநாதிகளென்று சொல்லுமது ஸாத்யஸாதந பக்தியாக சாஸ்த்ர ஸித்தம்) வேதநமென்றும், உபாஸனமென்றும், ஸேவையென்றும், த்யாநமென்றும் ஏவமாதி சப்தங்களாற் சொல்லப்படுகிற பக்தியானது "உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய" என்கிறபடியே கர்மஜ்ஞான ஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப் பிறக்கும தொன்றாகையாலே சேதந ஸாத்யமாய் பகவத்ப்ரஸாதநோபாயதயா தத் ப்ராப்தி ஸாதநமான பக்தியான ஸோபப்ரீம்ஹண வேதாந்த சாஸ்த்ரத்திலே சொல்லப்பட்டதென்கை.

**விளக்கம்** – (வேதநோபாஸந ஸேவா த்யாநாதிகளென்று சொல்லுமது ஸாத்யஸாதந பக்தியாக சாஸ்த்ர ஸித்தம்) - வேதனம், உபாஸனம், ஸேவை, த்யானம் போன்ற பலவிதமான சொற்கள் மூலம் கூறப்படும் பக்தி என்பது, ஆத்மஸித்தி – உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய – கர்மம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டாலும் நிரப்பப்பட்ட அந்தகரணம் உள்ளவனுக்கு - என்று கூறுவதற்கு ஏற்ப, கர்மம் மற்றும் ஞானம் ஆகியவை மூலம் பக்தி செய்வதற்குத் தகுதி நிறைந்த மனம் கொண்ட ஒருவனுக்குப் பிறப்பதாகும். ஆகவே சேதநர்களால் இயற்றப்படுவதாய், ஸர்வேச்வரனுடைய கருணையைப் பெறுவதற்குக்

காரணமாக இருப்பதால், அவனைப் பெறுவதற்கு உபாயமான பக்தியாக, இதிகாச புராணங்களும் கூடியதான வேதாந்த சாஸ்த்ரத்தில் கூறப்பட்டது என்று கருத்து (அதாவது சாதன பக்தியின் தன்மையை இவ்விதமாகக் கூறினார்).

100. ஸ்வீக்ருத ஸித்த ஸாதநர் இத்தை ஸாத்யமாக இரக்க ப்ராப்திக்கு முன்னே ஸித்திக்கும்.

**அவதாரிகை** - இப்படி உபாஸநரூபமாய் (உபாயமுமாயும்) இருந்துள்ளவிது போலன்றிக்கே உபேயபூத கைங்கர்யோபகரணமாக, ப்ரபந்நர் பகவான் பக்கல் அபேக்ஷித்துப் பெறும் பக்தி விஷயத்தை ப்ரதிபாதிக்கிறார் (ஸ்வீக்ருதேத்யாதியால்).

**விளக்கம்** - இப்படியாக உபாஸன வடிவில் உள்ள (அல்லது சாதனபக்தி) பக்தி போன்று அல்லாமல், பலனாக உள்ள கைங்கர்யம் ஏற்படுவதற்குச் சாதனமாகவும், ப்ரபந்நர்கள் ஸர்வேச்வரனிடம் வேண்டி நின்று பெற்றுக் கொள்வதும் ஆகிய ஸாத்ய பக்தியைக் கூறுகிறார் (ஸாத்ய பக்தி - மோக்ஷத்தை சாதித்துக் கொள்ள உதவும் பக்தி).

**வ்யாக்யானம் –** அதாவது "த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே" என்றும், "த்வத் பாதாரவிந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வீகரிக்கப்பட்ட சித்த ஸாதநத்தையுடையவர்கள், இந்த பக்தியை போஜநத்துக்கு க்ஷுத்துப் போலே கைங்கர்யத்துக்கு உபகரணமாகையாலே ப்ராப்யமான கைங்கர்யத்தோபாதி இதுவும் நமக்கு ப்ராப்யமென்று புத்தி பண்ணி, "பகவந் பக்திமபி ப்ரயச்ச மே" என்றும், "ஸ்தாந த்ரயோதித பரபக்தி யுக்தம் மாம் குருஷ்வ, பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ" என்றும் சொல்லுகிறபடியே, பகவான் பக்கலிலே அர்த்திக்க, "இமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய ததாநீமேவ" இத்யாதியில் சொல்லுகிறபடியே சரீர வியோகஸ மநந்தரம் பகவத் ப்ராப்தி பண்ணுவதற்கு முன்னே ஸித்திக்கு மென்கை.

**விளக்கம்** - (ஸ்வீக்ருத ஸித்த ஸாதநர்) – ஸ்தோத்ரரத்னம்(22) – த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே – உன்னுடைய திருவடிகளில் சரணம் அடைகிறேன் - என்றும், சரணாகதி கத்யம் - த்வத் பாதாரவிந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே - உன்னுடைய தாமரை போன்ற

திருவடிகளில் சரணம் அடைகிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தங்களுக்கு மோக்ஷம் என்ற பலனை சாதித்துக் கொடுக்கவல்லதைச் சாதனமாக உள்ளவர்கள். (இத்தை) – இத்தகைய பக்தியை. (ஸாத்யமாக இரக்க) - உணவுக்குப் பசி என்பது எப்படிக் காரணமாக உள்ளதோ அது போன்று, பக்தி என்பது கைங்கர்யத்திற்குக் காரணமாக உள்ளதால் [அல்லது சாதனமாக, உபகரணமாக உள்ளதால்], அடையப்படவேண்டிய இலக்கான கைங்கர்யம் போன்று, இந்தப் பக்தியும் நம்மால் அடையப்படவேண்டிய இலக்கே ஆகும் என்று தீர்மானித்து, ஸ்தோத்ரரத்னம் (54) – பகவந் பக்திமபி ப்ரயச்ச மே - எனக்கு பக்தியை அளிக்கவேண்டும் - என்றும், சரணாகதி கத்யம் – ஸ்தாந த்ரயோதித பரபக்தி யுக்தம் மாம் குருஷ்வ – மூன்று இடங்களில் கூறப்பட்ட பரபக்தி கொண்டவனாக என்னை நீ மாற்றவேண்டும் – என்றும், சரணாகதி கத்யம் - பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ - பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி போன்றவற்றைக் கொண்டவனாக நீ மாற்றவேண்டும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பகவானிடம் ப்ரார்த்தித்து நிற்கையில். (ப்ராப்திக்கு முன்னே ஸித்திக்கும்) - சரணாகதி கத்யம் – இமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய ததாநீமேவ – ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் உள்ள இந்தச் சரீரத்தை விட்டுவிட்டு அந்த நேரத்திலேயே – என்று கூறுவதற்கு ஏற்ப, சரீரத்தை விட்டு ஸர்வேச்வரனை அடையும் முன்பாகக் கைகூடும்.

101. இது உபயமுமன்றிக்கே அறியாக்காலத்தே ஒக்கப் பிறந்து தழுவி நின்று கட்டமே நோயாயுலர்த்தி வீழ்ந்தலப்பாய் த்யாக ஸ்வீகாரநிஷ்டா ஹாநிகளாக்கி ஸத்தா போக வ்ருத்த் யுபகரணமாவ தொன்று.

**அவதாரிகை** - இனி இவ்வாழ்வாருடைய பக்தி விசேஷமிருக்கும்படியை அறிவிக்கிறார் (இதுவென்று தொடங்கி).

**விளக்கம்** - இனி நம்மாழ்வாருடைய பக்தி விசேஷம் எத்தகையது என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழுக்தையான விவ்வாழ்வாருடைய பக்தி ஸ்வயத்ந ஸாத்யையாய் உபாயபூதையாயிருக்கும் பக்தியும், உபாய பரிக்ரஹாநந்தர மபேக்ஷிக்க

உபாய பலமாய் வரும் பக்தியுமாகிற நடுவிற் சொல்லுகிற விரண்டு மன்றிக்கே, "அறியா காலத்துள்ளே யடிமைக்கணன்பு செய்வித்து" என்று "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்கிறபடியே அறிவுக்கு ஸம்பாவநையில்லாத பால்யத்திலே ப்ராப்தி பலமான வடிமையிலே அதிப்ராவண்யத்தைப் பிறப்பித்தென்னும்படி திருத்துழாய்க்கு மணம் போலே ஒக்கப் பிறந்து "தழுவி நின்ற காதல்" என்று விடுவேனென்றாலும் விடவொண்ணாதபடி உடன்வந்தியாய் "கட்டமே காதல்", "வேட்கை நோய் கூர" என்று அநுபாவ்ய விஷயத்தை யதா மநோரத மநுபவிக்கப் பெறாதபோது, போஜநம் பெறாத தசையில் பசி போலே கஷ்டமென்பது, வ்யாதியென்பதாம்படி வெறுப்பை விளைத்து, "வேவாரா வேட்கை மெல்லாவி யுள்ளுலர்த்த" என்றும், "உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து" என்றும், "உன்னைக் காண்பான் நானலப்பாய்" என்றும் சொல்லுகிறபடியே அசோஷ்யமான ஆத்மவஸ்துவைக் குருத்து வற்றாம்படி சோஷிப்பித்துக் கடலிலே விழுந்தாப்போலே கரையேறவொண்ணாதபடி அபிநிவேச ரூபமான தன்னுள்ளே யாழ்ந்து போக்யமான அவ்விஷயத்தைக் காணவேணுமென்று அலமாக்கப் பண்ணி.

**விளக்கம்** – (இது) - சூர்ணை 97ல் கூறப்பட்ட நம்மாழ்வாருடைய பக்தியானது, (உபயமும் அன்றிக்கே) தனது முயற்சியால் செய்யப்படுவதான உபாயமாக உள்ள ஸாதன பக்தியும் [சூர்ணை 99], ஸர்வேச்வரனைப் பற்றிய பின்னர் விரும்பி உபாயத்தின் பலனாக வரும் ஸாத்ய பக்தியும் [சூர்ணை 100] ஆகிய இரண்டும் அல்லாமல். (அறியாக் காலத்தே ஒக்கப் பிறந்து) – திருவாய்மொழி (2-3-3) – அறியா காலத்துள்ளே யடிமைக்கணன்பு செய்வித்து – என்றும், இராமாயணம் பாலகாண்டம் (18-27) - பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: - இராமனிடம் லக்ஷ்மணன் தொட்டில் பருவம் தொடங்கியே பக்தியுடன் இருந்தான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அறிவானது முழுமை பெறாத பாலபருவம் முதலாகவே பேற்றின் பலனாகிய அடிமைத்தனம் குறித்து மிகவும் ஆழ்ந்த காதலை உண்டாக்கி என்னும்படியாக, துளசியில் நறுமணம் போன்று பக்தியும் ஒன்றாகவே பிறந்து. (தழுவி நின்று) - திருவாய்மொழி (4-7-11) – தழுவி நின்ற காதல் - என்பதற்கு ஏற்ப "விட்டுவிடுவேன்" என்றாலும் விட இயலாதபடி தொடர்ந்து உடன் வருவதாய். (கட்டமே நோயாய்) – திருவாய்மொழி (7-2-4) – கட்டமே காதல் - என்றும், திருவாய்மொழி (9-6-7) - வேட்கை நோய் கூர – என்பதற்கு ஏற்ப, வரும்போது அனுபவிக்கும் விஷயத்தை விருப்பத்தின்படி அநுபவிக்க இயலவில்லை என்றால், உணவு கிட்டாதபோது பசி போன்று, இந்தக் கஷ்டம் என்பது நோய் என்று வெறுக்கும்படியான நிலையை

ஏற்படுத்தி. (உலர்த்தி) – திருவாய்மொழி (2-1-10) - வேவாரா வேட்கை மெல்லாவி யுள்ளுலர்த்த - என்பதற்கு ஏற்ப உலர்த்த இயலாத ஆத்மாவை, குருத்து போன்று உலர வைத்து. (வீழ்ந்து) - திருவாய்மொழி (5-7-2) - உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து - என்பதற்கு ஏற்ப கடலில் விழுந்தது போன்று கரையேற இயலாதபடி ஆழ்ந்த காதலே உருவமான தன்னுள்ளே ஆழ்ந்து. (அலப்பாய்) – திருவாய்மொழி (5-8-4) – உன்னைக் காண்பான் நானலப்பாய் - என்பதற்கு ஏற்ப தனக்கு இன்பமான ஸர்வேச்வரனைக் காணவேண்டும் என்று தவிக்க வைத்து.

**வ்யாக்யானம்** – "உன்னாலல்லால் யாவராலுமொன்றும் குறை வேண்டேன்" என்கிறபடியே இதரோபாய பரித்யாக பூர்வகமாக அவனே உபாயமென் றறுதியிட்டிருக்கு மிவரை "குதிரியாய் மடலூர்தும்", "யாமடலூர்ந்து மெம்மொழி யங்கைப் பிரானுடைய தூமடல் தண்ணந்துழாய் மலர் கொண்டு சூடுவோம்" என்னும்படி த்யஜித்த உபாயத்திலே மூட்டுகையாலே த்யாக நிஷ்டா ஹாநியையும், "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்", "கழல்களவையே சரணாகக் கொண்ட", "அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்", "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண்", "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அடுத்தடுத்து ப்ரபத்தி பண்ணும்படி யாக்குகையாலே "ஸக்ருதேவஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம்", "ஸக்ருதேவ ப்ரபந்நாய" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஸக்ருத் கர்த்தவ்யமான ஸ்வீகாரத்தில் நிஷ்டா ஹாநியை யுண்டாக்கி.

**விளக்கம்** – (த்யாக நிஷ்டா ஹாநி ஆக்கி) – திருவாய்மொழி (5-8-3) – உன்னாலல்லால் யாவராலுமொன்றும் குறை வேண்டேன் - என்பதற்கு ஏற்ப மற்ற உபாயங்கள் அனைத்தையும் கைவிட்டு அவன் மட்டுமே உபாயம் என்று உறுதியுடன் உள்ள நம்மாழ்வாரை, திருவாய்மொழி (5-3-9) - குதிரியாய் மடலூர்தும் - என்றும், திருவாய்மொழி (5-3-10) - யாமடலூர்ந்து மெம்மொழி யங்கைப் பிரானுடைய தூமடல் தண்ணந்துழாய் மலர் கொண்டு சூடுவோம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப கைவிட்ட உபாயத்தில் ஈடுபடும்படி வைத்து, இவருடைய "மற்ற உபாயங்களைத் துறந்தார்" என்ற நிலைக்குக் கேட்டினை ஏற்படுத்தியும். (ஸ்வீகார நிஷ்டா ஹாநி ஆக்கி) – திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் - என்றும், திருவாய்மொழி (5-8-1) – கழல்களவையே சரணாகக் கொண்ட - என்றும், திருவாய்மொழி (5-9-11) – அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் – என்றும், திருவாய்மொழி (5-10-11) -

நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் – என்றும், திருவாய்மொழி ( 6-10-10) – அடிக்கீழமர்ந்து புகுந்தேனே – என்றும் அடுத்தடுத்து நம்மாழ்வார் ப்ரபத்தியைச் செய்யும்படிச் செய்வதாகையாலே, லக்ஷ்மீ தந்த்ரம் (17) - ஸக்ருதேவஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம் - சாஸ்த்ரங்கள் கூறுவதான இந்த ப்ரபத்தி என்பது ஒருமுறை மட்டுமே இயற்றப்பட்ட வேண்டியதாய், பிறவிக்கடலைத் தாண்ட வைப்பதாய் - என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) – ஸக்ருதேவ ப்ரபந்நாய - ஒருமுறை ப்ரபத்தி செய்தவன் விஷயத்தில் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஒருமுறை மட்டுமே செய்யப்பட வேண்டிய ப்ரபத்தியின் நிலைக்குக் கேட்டினை ஏற்படுத்தியும்.

**வ்யாக்யானம்** - பகவத் விஷயத்தை நினையாமையென்றும் ஸத்தா ஹாநியென்றும் இரண்டில்லை யென்றிருக்கு மிவர்க்கு அநவரத தத்விஷய ஸ்மரண ஹேதுவாகையாலே ஸத்தைக்கும், "எல்லாம் கண்ணன்" என்றிருக்குமிவர்க்கு தத்விஷயாநுபுபூஷையை மேன்மேலும் விளைக்கையாலே போகத்துக்கும், "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்றிருக்குமிவர்க்கு அசேஷ சேஷதைக ரதித்வத்துக் குடலாகையாலே வ்ருத்திக்கும் உபகரணமாயிருக்கு மென்கை.

**விளக்கம்** – (ஸத்தா போக வ்ருத்தி உபகரணம் ஆவது ஒன்று) - பகவத் விஷயத்தைத் தவிர மற்றொன்றை நினையாமை என்றும், அவ்விதம் எண்ணினால் தனது இருப்புக்குக் களங்கும் என்றும், அந்த விஷயம் அல்லாமல் இரண்டாவது என்று ஏதும் இல்லை என்றும் இருக்கின்ற நம்மாழ்வார்க்கு, எப்போதும் அவன் விஷயம் குறித்து எண்ணியபடி உள்ள நிலைக்குக் காரணமாக உள்ளதால் இருப்பு என்ற நிலைக்கும்; திருவாய்மொழி (6-7-1) - எல்லாம் கண்ணன் – என்று உள்ள நம்மாழ்வாருக்கு, அவனை அனுபவிக்க வேண்டும் என்று மேன்மேலும் ஆர்வத்தை அதிகரிப்பதால் இன்பத்துக்கும்; திருவாய்மொழி (3-3-1) - வழுவிலாவடிமை செய்யவேண்டும் – என்று உள்ள நம்மாழ்வாருக்கு, அனைத்து விதங்களிலும் கைங்கர்யத்தின் சுவையை அனுபவிப்பதற்கு உறுப்பாகையால் கைங்கர்யத்துக்கும் உதவியாக உள்ளது ஒன்றே என்று கருத்து [அதாவது மேலே கூறப்பட்ட "உலர்த்தி, தவிக்க வைத்து, புலம்ப வைத்து" என்று பலவிதமான நிலைக்கு ஆளாக்குவது இந்தப் பக்தி ஒன்றே ஆகும் என்று கருத்து].

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, ஸத்தாபோகேத்யாதிக்கு “நாகிஞ்சித் குர்வதச் சேஷத்வம்” என்று கிஞ்சித்கரியாத வஸ்துவுக்கு சேஷத்வமில்லை யென்கையாலே சேஷத்வைக நிரூபணீயனான இவனுடைய ஸத்தை கிஞ்சித்காரத்தாலே யாதலால் இவனுக்கு ஸத்தா ஹேதுவாய், “தனக்கேயாக”, “உன்றன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும்”, “கதா ப்ரஹர்ஷ யிஷ்யாமி” இத்யாதிகளிற்படியே இதுதான் பரமப்ரயோஜநமாகப் பண்ணுமதாகையாலே அவனுக்கு போகமாயிருக்குமதான கைங்கர்ய வ்ருத்திக்கு உபகரணமாயிருப்ப தொன்றென்னவுமாம்.

**விளக்கம்** – அடுத்து “ஸத்தா போக வ்ருத்தி உபகரணம்” என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். நாகிஞ்சித் குர்வதச் சேஷத்வம் - தொண்டு செய்யாத எந்த ஒரு ஜீவனுக்கும் அடிமை என்னும் தகுதி இல்லை - என்பதற்கு ஏற்ப, கைங்கர்யம் செய்யாத ஆத்மாவுக்கு அடிமைத்தனம் என்பது இல்லை என்பதால், “அடிமைத்தனம்” என்பதை மட்டுமே கொண்டு அறியத்தக்கவனாகிய ஜீவாத்மாவுடைய இருப்பு என்பது கைங்கர்யம் செய்வதால் மட்டுமே கைகூடுவதால், ஜீவாத்மாவின் இருப்பு என்பதற்குக் காரணமாகவும்; திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக – என்றும், திருவாய்மொழி (10-3-9) – உன்றன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (46) – கதா ப்ரஹர்ஷ யிஷ்யாமி - நான் உன்னை எப்போதும் மகிழ்விப்பேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இந்தக் கைங்கர்யம் என்பதே மிகவும் உயர்ந்த ப்ரயோஜனம் ஆகும் என்று செய்யப்படுவதால், அவனுக்கு இன்பத்தை விளைவிப்பதான கைங்கர்யத்தைச் செய்வதற்கு உதவியாகவும் உள்ள ஒன்று – எனவும் பொருள் கூறலாம்.

**வ்யாக்யானம்** - ஆக கீழ்ச்செய்தாயிற்றது, இவருடைய பக்தி – ஸாதித்துப் பெற்றதுமன்று, அபேக்ஷித்துப்பெற்றதுமன்று. ஸஹஜையாய் ஸத்தாதிகளுக்கு உபகரணமாயிருப்ப தொன்றென்றதாய்ந்து.

**விளக்கம்** - ஆகவே நம்மாழ்வாருடைய பக்தி என்பது ஒரு உபாயத்தைக் கைக்கொண்டு, அதனால் விளைந்தது அல்ல. இவராக விரும்பிப் பெற்றுக் கொண்டதும் அல்ல. இவருடன் அதுவும் கூடவே பிறந்து, இவரை எப்போதும் தழுவி நிற்பதாகவும், இவருடைய இருப்பு – இன்பம் - கைங்கர்யம் ஆகியவற்றுக்கு உதவியாக இருப்பதும் அந்தப் பக்தி ஒன்றே என்கிறார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

102. இடகிலேன் நோன்பறிவிலேன் கிற்பன் கீழ்நாள்க ளென்கையாலே ஸாதந த்ரய பூர்வ அப்யாஸஜமல்ல.

**அவதாரிகை** - இங்ஙனன்றிக்கே, இவருடைய இந்தப் பரமபக்தி – கர்ம ஜ்ஞான பக்திகளாகிற ஸாதந த்ரயத்தையும் இஜ்ஜந்மத்திலே அநுஷ்டிக்கையாலேயாதல், பூர்வ ஜந்மங்களி லப்யாஸத்தாலேயாதல் உண்டானதானாலோவென்கிற சங்கையிலே இரண்டுபடியாலும் வந்ததன்றென்னுமிடத்தை இவர் தம்முடைய உக்திகளாலே ஸாதிக்கிறார் (இடகிலேனென்று தொடங்கி).

**விளக்கம்** - மேலே கூறியபடி அல்லாமல், நம்மாழ்வாருக்கு உள்ள இத்தகைய பரமபக்தி என்பது, கர்மம் – ஞானம் - பக்தி ஆகிய மூன்று சாதனங்களையும் இந்தப் பிறவியில் கைக்கொண்டதால் ஏற்பட்டது என்றோ அல்லது கடந்த பிறவிகளில் இவற்றைக் கைக்கொண்ட பயிற்சி காரணமாக ஏற்பட்டது என்றோ கூறலாம் அல்லவா என்று ஒரு கேள்வி எழலாம். இந்தக் கேள்விக்கு, "இரண்டு விதங்களிலும் வந்தது அல்ல" என்பதை ஆழ்வாருடைய திருவாக்கு கொண்டே கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "இடகிலேன்" இத்யாதியாலே பசித்தார்க்குச் சோற்றையிடுதல், தாஹித்தார்க்குத் தண்ணீர் வார்த்தல் செய்தேனாகில் "யஜ்ஞோ தாநம் தப: கர்ம" என்கிறபடியே தாநமும் கர்மயோகாந்தர்ப்பூதமாகையாலே கர்மயோகத்திலே நிவேசிப்பிக்கலாம்; அது செய்ய மாட்டுகிறிலேன். இந்த்ரியங்களை விஷயங்களில் போகாதபடி நியமித்தேனாகில் ஜ்ஞாநயோகத்திலே நிவேசிப்பிக்கலாம்; அதுவும் செய்ய மாட்டுகிறிலேன். நியதனாய்க் கொண்டு சாஸ்த்ரோக்தமான காலங்களிலே புஷ்பாத் யுபகரணங்களை ஸம்பாதித்து ஆராதித்து ஸ்துதித்தேனாகில் பக்தி சரீரத்திலே நிவேசிப்பிக்கலாம்; அதுவும் செய்ய மாட்டுகிறிலேனென்றும், "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று பலவ்யாப்தமாம்படி அநுஷ்டிதமான கர்மயோகமுடையே னல்லேன். அதில்லாமையாலே ஸூக்ஷ்மரூபமான ஜீவ பர விஷய ஜ்ஞாநயோகத்தையு முடையேனல்லேன். ஆகையாலே உபய ஸாத்யையான பக்தியில்லை என்னுமிடம் அர்த்தாத் ஸித்தமென்று மருளிச்செய்கையாலே வர்த்தமாந ஜந்மத்தில் கர்ம ஜ்ஞாந பக்திகளாகிற ஸாதந த்ரயாநுஷ்டானத்தா லுண்டானதல்ல.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (இடகிலேன் என்கையாலே) - திருவாய்மொழி ( 4-7-9) – இடகிலேன் - என்பதன் மூலம் கூறுகிறார். பசியுடன் வந்தவர்களுக்கு உணவு அளித்தல், தாகம் கொண்டு வந்தவர்களுக்கு நீர் அளித்தல் போன்றவற்றைச் செய்திருந்தேன் என்றால், கீதையில் (18-5) - யஜ்ஞோ தாநம் தப: கர்ம – யஜ்ஞம், தானம், தவம் போன்றவை தூய்மைப்படுத்தவல்ல கர்மங்கள் - என்பதற்கு ஏற்ப, தானம் என்ற அவை அனைத்தும் கர்மயோகத்தில் அடக்கம் என்பதால் கர்மயோகத்தில் இழிந்தேன் எனலாம்; ஆனால் அதனைச் செய்யவில்லை. இந்த்ரியங்களை வசப்படுத்தி, அவை உலகவிஷயங்களின் மீது செல்லாமல் அடக்கினேன் என்றால் ஞானயோகத்தில் இழிந்தேன் எனலாம்; அதனையும் செய்யவில்லை. தகுந்த விதிகளுக்கு உட்பட்டு, சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட அந்தந்த நேரத்தில் மலர்கள் போன்றவற்றைக் கொண்டு ஆராதனை செய்து பகவானைத் துதித்தேன் என்றால் பக்தியோகத்தில் இழிந்தேன் எனலாம்; அதனையும் செய்யவில்லை. மேலும், (நோன்பு அறிவிலேன் என்கையாலே) – திருவாய்மொழி (5-7-1) - நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் - பலனுடன் கூடியதான கர்மயோகத்தைக் கொண்டவன் அல்லேன். அதன் காரணமாக மிகவும் நுண்ணியதான ஜீவாத்மா - பரமாத்மா விஷயங்கள் குறித்த ஞானயோகத்தையும் கொண்டவன் அல்லேன். ஆகவே கர்மம் மற்றும் ஞானம் ஆகியவற்றால் சேர்க்கப்படுவதான பக்தியும் இல்லை என்பது தானகவே விளங்கும். இப்படியாக நம்மாழ்வார் அருளிச்செய்த காரணத்தால் (ஸாதந த்ரயஜம் அல்ல) - நம்மாழ்வாருக்குள்ள பரமபக்தி என்பது இந்தப் பிறவியில் அவர் இயற்றிய கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் ஆகியவற்றால் ஏற்பட்டது அல்ல என்று தேறுகிறது.

**வ்யாக்யானம்** – “கிற்பன்கில்லே னென்றிலன் முனநாளால்” என்று முன்புண்டான காலமெல்லாம் “குர்யாத்” என்று நன்மை செய்யவடுக்குமென்றால் வல்லேனென்று இசைந்திலேன். “ந குர்யாத்” என்று தீமை செய்யலாகாதென்றால் மாட்டேனென்று தவிர்ந்திலேன். இப்படி விஹிதத்தைச் செய்யாமல், நிஷித்தத்தைச் செய்து போந்தே னென்றும், “தெரிந்துணர் வொன்றின்மையால் தீவினையேன் … ஆழியங்கை யம்மானை யேத்தாதயர்த்து … வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்” என்று பகவத் விஷயத்தை ஆராயும் ஜ்ஞாநமொன்று மில்லாமையாலே பகவதநுபவ யோக்யமான காலத்தைப் பாழே போக்கின பாவியான நான், பிராட்டி சொன்னது செய்தல்லது நிற்கமாட்டாமையாலே மாயாம்ருகத்தை அன்று பின்பற்றிப்போன அருகாழியைத்

திருக்கையிலேயுடைய ஸர்வேச்வரனை மங்களாசாஸநம் பண்ணப் பெறாதே அறிவு கெட்டு வ்யர்த்தமேயிருந்து விட்டேன் கீழுள்ள காலமெல்லாமென்று மருளிச் செய்கையாலே பூர்வ ஜந்மங்களி லப்யாஸத்தா லுண்டானதுமல்லவென்கை.

**விளக்கம்** - (கிற்பன் என்கையாலே) - திருவாய்மொழி (3-2-6) - கிற்பன்கில்லே னென்றிலன் முனநாளால் - எனபதைக் கூறுகிறார். அதாவது இதுவரை கழிந்த நாட்களில் - குர்யாத் - செய்வதற்கு ஏற்றது - என்பதற்கு ஏற்ப நன்மையைச் செய்ய இயலும் என்றாலும், “என்னால் அதற்கு இயலாது” என்று செய்யாமல் இருந்தேன். ந குர்யாத் – செய்யக்கூடாது - என்று கூறுவதற்கு ஏற்ப தீமையைச் செய்தலாகாது என்றால், “சரி, செய்யவில்லை” என்று செய்யாமல் விட்டதில்லை. இப்படியாக விதிக்கப்பட்டதைச் செய்யாமலும், தவிர்க்கப்பட்டதைச் செய்தபடியும் இருந்தேன் என்றார். மேலும் கூறுகிறார். (கீழ்நாள்கள் என்கையாலே) – பெரியதிருவந்தாதி (82) - தெரிந்துணர் வொன்றின்மையால் தீவினையேன் … ஆழியங்கை யம்மானை யேத்தாதயர்த்து … வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம் - என்பதைக் கூறுகிறார். பகவத் விஷயத்தைக் குறித்து ஆராய்ந்து தெளியும் ஞானம் ஏதும் இல்லாத காரணத்தால், பகவானைப் பற்றிச் சிந்தித்து அந்த அனுபவம் கொண்டு மகிழ்வதற்கு ஏற்றதான காலம் இருந்தபோதிலும் அதனை வீணாக நான் கழித்தேன். சீதை விண்ணப்பித்தாள் என்ற காரணத்தால் அதனை நிறைவேற்றாமல் இருத்தல் ஆகாது என்பதால், மாயமான் ஒன்றைப் பின்தொடர்ந்து போனவனும், அருள் சுரக்கும் சக்கரத்தைத் திருக்கரத்தில் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனைப் புகழ்ந்து தொழாமல், எனது அறிவை இழந்து, இதுவரை கழிந்த காலங்கள் அனைத்திலும் ஏதும் செய்யாமல் இருந்தேன். இப்படியாகக் கூறுவதால், நம்மாழ்வாருக்கு உள்ள பரமபக்தி என்பது முற்பிறவிகளில் இவர் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகத்தைக் கைக்கொண்ட பயிற்சியாலும் வந்தது அல்ல என்று தேறுகிறது.

103. இப்பிறப்பே சில நாளிலென்றபோதே இரண்டும் கழியும்

**அவதாரிகை** - இன்னமும் இவர் தம்முடையதொரு திவ்யஸூக்தி விசேஷத்தாலே இது தன்னை வ்யக்தீகரிக்கிறார் (இப்பிறப்பே யித்யாதியால்).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதை மேலும் ஒரு பாசுரம் கொண்டு விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "குறிக்கொள் ஞானங்களாலெனை யூழி செய் தவமும் கிறிக்கொண்டிப் பிறப்பே சில நாளிலெய்தினன் யான்" என்று யம நியமாத்ய வஹிதராய்க் கொண்டு ஸம்பாதிக்கவேண்டும் வேதந த்யாநோபாஸ நாத்யவஸ்தா விசேஷங்களான ஜ்ஞாநங்களாலே அனேக கல்பம் கூடி ச்ரவணமாய் மநநமாய் த்ருவாநுஸ்ம்ருதியாய் வரக் கடவ பக்தியோகமாகிற தபஸ்ஸினுடைய பலத்தை ஒரு யத்நமு மின்றிக்கே யிருக்க, நல்விரகான வவனாலே இஜ்ஜந்மத்திலே அது தன்னிலும் அல்பகாலத்திலே பெற்றே னென்கையாலே ஜந்மாந்தராப்யாஸஜமென்றும், இஜ்ஜந்மந் தன்னிலே ஸாதந த்ரயாநுஷ்டானஜமென்றும் சொல்லுகிற விரண்டும் போமென்றபடி. "இப்பிறப்பே" என்றும், "சில நாளில்" என்றுமிரண்டு மருளிச் செய்தது, ஜந்மாந்தரங்களி லப்யாஸத்தையும் இஜ்ஜந்மந் தன்னிலே சிரகால ஸாத்யமான வவற்றி லந்வயத்தையும் வ்யாவர்த்திக்கைக்காகவிறே.

**விளக்கம்** - (இப்பிறப்பே சிலநாளில் என்றபோதே) - திருவாய்மொழி (2-3-8) - குறிக்கொள் ஞானங்களாலெனை யூழி செய் தவமும் கிறிக்கொண்டிப் பிறப்பே சில நாளிலெய்தினன் யான் - என்ற பாசுரத்தை கூறுகிறார். யமம், நியமம் போன்ற யோக பயிற்சிகள் மூலம் அடையவேண்டுவதான வேதநம், த்யானம், உபவாஸம் போன்ற பலவிதமான நிலை வேறுபாடுகளாக உள்ள ஞானங்கள் மூலம், பல கல்ப காலங்கள் இணைந்து கேட்பதாலும், மனனம் செய்வதாலும், இடைவிடாமல் எண்ணியபடி உள்ளதாலும் வரக்கூடியது இந்த பக்தியோகம் ஆகும். இத்தகைய பக்தியோகம் என்ற தவத்தின் பலனை எந்தவிதமான முயற்சியும் இல்லாமல், நல்லவழி காண்பிக்கின்ற ஸர்வேச்வரன் மூலமாக இந்தப் பிறவியிலேயே, இதிலும் மிகவும் சில நாட்களிலேயே பெற்றேன் என்று கூறுவதால், (இரண்டும் கழியும்) - இத்தகைய பக்தி என்பது முற்பிறவிகளில் கைக்கொண்ட பயிற்சியின் விளைவால் ஏற்பட்டது என்றும், இந்தப் பிறவியிலேயே கர்மம் - ஞானம் – பக்தி என்ற மூன்றுவிதமான உபாயங்களைக் கைக்கொண்டதால் ஏற்ப்பட்டது என்று கூறுகின்ற இரண்டுவிதமான கருத்துகளும் மறைகின்றன. மேலே கூறப்பட்ட பாசுரத்தில் உள்ள "இப்பிறப்பே" மற்றும் "சிலநாளில்" போன்ற இரண்டு சொற்களை அருளிச்செய்தது ஏன்? இதன் மூலம் முறையே, முற்பிறவிகளில்

கைக்கொண்ட பயிற்சி, இந்தப் பிறவியிலேயே பலகாலமாக கர்மம் – ஞானம் - பக்தி ஆகியவற்றை இயற்றியபடி இருத்தல் போன்றவற்றில் தான் ஈடுபடவில்லை என்ற இரண்டையும் உணர்த்தவே ஆகும்.

**வ்யாக்யானம்** – அன்றிக்கே, (இடகிலேன்) இத்யாதி வாக்யத்திலே யெடுத்த சந்தைக ளெல்லாத்தாலும் பூர்வஜந்ம ஸித்தமான ஸாதந த்ரயாப்யாஸ பலமல்லாமையை ஸாதித்ததாய், அதில்லையாகில் இஜ்ஜன்மந் தன்னிலே அவற்றை யப்யஸித்து வந்ததானலோ வென்கிற சங்கை வர, பூர்வஜந்மத்திலும் இஜ்ஜன்மத்திலும் இவர்க்கு அவற்றி லந்வயமில்லை யென்னுமிடத்தை, "இப்பிறப்பே" இத்யாதியான விவருடைய ஸூக்தி விஷேத்தாலே தர்சிப்பியா நின்று கொண்டு உபயசங்கையும் சேரத் தள்ளுகிறா ரென்று இங்ஙனே யோஜிக்கவுமாம். இந்த யோஜனையைப் பற்றவும் பூர்வயோஜனையே இதனுடைய பட்டோலையான பெரியபடிக்குச் சேருவது.

**விளக்கம்** - அல்லது வேறு ஒரு கேள்வி எழுப்பலாம். கடந்த சூர்ணையில் – இடகிலேன் - என்பதன் மூலம், முற்பிறவிகளில் கர்மம் - ஞானம் - பக்தி ஆகிய உபாயங்களைக் கைக்கொண்ட பயிற்சி காரணமாக இவருக்கு இந்தப் பரமபக்தி ஏற்படவில்லை என்று உரைத்தார். சரி; அப்படி வரவில்லை என்றால், அந்த மூன்றுவிதமான சாதனங்களையும் இவர் இந்தப் பிறவியில் செய்தபடி உள்ளதால் இந்தப் பக்தி இவருக்கு ஏற்பட்டது என்று ஏன் கூறக்கூடாது என்று கேட்கலாம். முற்பிறவியிலும், இந்தப் பிறவியிலும் நம்மாழ்வாருக்கும் அந்த இரண்டு நிலைகளுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் திருவாய்மொழி (3-2-8) – இப்பிறப்பே - என்பதான இவருடைய பாசுரம் மூலம் தெளிவுபடுத்தி, அதனுடன் சேர்த்து இந்த இரண்டு சந்தேகங்களையும் ஒன்றாகத் தள்ளுகிறார் என்றும் கூறலாம். ஆனால் இந்தக் கருத்தைவிட முதலில் கூறப்பட்ட கருத்தே திருவாய்மொழியின் பட்டோலையாக உள்ள பெரியபடிக்குச் சேரும்விதமாக உள்ளது

104. பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெரும்செய் கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறிப் பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கிப் படிந்துண்ணும் போகத்தே தூராதே பொறுக்கொணாப் போகத்துக்குக் காவல் செய்து குமைத்துத் திரித்து வீழ்த்தி வலித்தெற்றி அருவி யறுத்துக் கடனாயின இறுப்பிக்கப் பாழ்த்த விதியானவாறே தன்பால் மனம் வைப்பிப்பதாகத் தேய்ந்தற மன்னி ஒள்வாளுருவி வினைத்தூற்றை வேரறுவித்துத்

தீக்கொளீஇக் கவ்வை யெருவிட்டு அமுதவாறுதலைப் பற்றி ஈரியாய்க் கசிந்ததிலே ஈரநெல் வித்தி எழு நாற்றுக்களையையும் வேர் முதல் மாய்த்துப் பட்டிச்சேவதக்கி மீது கொள்ளாமல் குறிக்கொள்வித்துக் கடல் புரைய விளைந்து தலைவணக்கினவாறே நாளுநாள் கோட்குறையாக நின்றாரறியாமல் குந்தங்கொண்டு ஆராமை யுண்டு காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்துத் தண்டாலடித்துப் பதரறுத்துப் போர்த்த தோல் விடுத்து ஸூக்ஷ்ம வொட்டும் நீரிலே கழுவி வேறோர் கலத்திட்டுப் பைந்தொடி மடந்தையரைக் கொண்டு ஷட்குண ரஸாந்நமாக்கி வானோர்க்கு ஆராவமுதானவாறே முற்றுமுண்ண முன்னம் பாரித்து உழுவதோர் நாஞ்சில் கொண்டு பெருக முயலும் பத்தியுழவன் க்ருஷீ பலமிறே.

**அவதாரிகை** - ஆனால் இவர்க்கு இந்த பக்தியுண்டாகைக்கு ஹேதுவென்? என்னு மாகாங்க்ஷையிலே பல போக்தாவன ஈச்வரன் க்ருஷி பலமென்னுமத்தை க்ஷேத்ரமும் கர்ஷகனும் க்ருஷியும் தத்பலமுமாக ரூபித்துக் கொண்டு அருளிச் செய்கிறார் (பெரும்பாழி லித்யாதி சூர்ணையாலே).

**விளக்கம்** – இத்தகைய பக்தியானது நம்மாழ்வருக்கு உண்டாகக் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இதற்கான காரணம், இவருடைய பக்தியின் பலனை அனுபவிப்பவனாக உள்ள ஸர்வேச்வரன் செய்த முயற்சியின் பலனே ஆகும் என்று விடை அளிக்கத் திருவுள்ளம் கொண்டார். ஆகவே, அதற்கு ஏற்றபடி விளைநிலம், உழவன், பயிர், பலன் என்று கூறி விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** - (பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெரும்செய்) “முடிவில் பெரும்பாழ்” என்று நித்யமாய் அபரிச்சேத்யமாய் சேதனர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலாம் நிலமான ப்ரக்ருதி தத்த்வத்தில் க்ஷேத்ரஜ்ஞனாகிற பத்தசேதநனுடைய “நெஞ்சப் பெரும்செய்” என்று பக்திக்கு விளைநிலமான மனஸ்ஸானது, (பாழ்த்த விதியானவாறே) என்றத்தோடு இதுக்கு ஸம்பந்தம். பாழ்படுகைக்கு அடி சொல்லுகிறது நடுவுள்ள தடங்கலும். (கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறி) “ஏவினார் கலியார் நலிகவென்று என் மேல்” என்கிறபடியே கலியுகமாகிற வன்னியன் “இவனை நலியுங்கோள்” என்று ஏவ, “மனமாளுமோரைவர் வன்குறும்பர்” என்கிறபடியே சேதந சேஷமான மனஸ்ஸை தங்களுக்கு சேஷமாக்கிக் கொண்டு நடத்துமவர்களாய், முன்கை மிடுக்கராய், அத்விதீயரா

யிருந்துள்ள இந்த்ரியங்களாகிற குறும்பர். “கோவாயைவரென் மெய்குடியேறி” என்கிறபடியே இச்சேதநனுக்கு நியாமகராய்க் கொண்டு தேஹத்திலே குடி புகுந்து. (கலியாரேவ) என்றது, இத்ரியங்களினுடைய நலிவுக்குக் கலிகாலம் ப்ரவர்த்தக மாகையாலே. “கலியார்” என்றும், “ஐவர்” என்றும் சேதந ஸமாதியாலே சொல்லுகிறது தனக்கென்ன ஆக்ரஹமுடையாரைப்போலே நலிகிற கொடுமையைப் பற்ற. கலியாரென்று ரேபாந்தமாக ஆழ்வாரருளிச்செய்தது கலிகாலத்துக்கு அஞ்சின படியாலேயிறே.

**விளக்கம்** - (பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெரும்செய்) - திருவாய்மொழி (10-10-10) - முடிவில் பெரும்பாழ் – என்பதற்கு ஏற்ப எப்போதும் உள்ளதாகவும், அளவிடுவதற்கு அரியதாகவும், அனைத்து சேதநர்களுக்கும் இன்பம் மற்றும் மோக்ஷத்தை ஏற்படுத்தல்லதாகவும் உள்ள இடமான ப்ரக்ருதியில், அறிபவனான ஆத்மாவாகவும், பந்தப்பட்டும் உள்ள சேதநனுடைய, திருவாய்மொழி (5-3-4) – நெஞ்சப் பெரும்செய் - என்று கூறப்படும் பக்திக்கு விளைநிலமாக உள்ள மனமானது, (கலியாரேவ) - பெரியதிருமொழி (1-6-8) – ஏவினார் கலியார் நலிகவென்று என் மேல் - என்பதற்கு ஏற்ப கலியுகம் என்ற பகைவன், “இந்த மனதைக் கலங்குங்கள்” என்று ஏவி விட, (ஆளும் வன்குறும்பர்) – பெரியதிருவந்தாதி (51) - மனமாளுமோரைவர் வன்குறும்பர் – என்பதற்கு ஏற்ப ஆத்மாவின் கட்டுப்பாட்டில் உள்ளதான மனத்தினை, தங்களுக்கு உடைமை என்று எடுத்தபடி, அதனை வழிநடத்துபவர்களாகவும், ஒப்பற்றவர்களாகவும் உள்ள இந்த்ரியங்கள் என்னும் குறும்பர். (குடி ஏறி) – பெரியதிருமொழி (7-7-9) – கோவாயைவரென் மெய்குடியேறி – என்பதற்கு ஏற்ப இந்தச் சேததனை நியமிப்பவர்கள் போன்று அவனுடைய சரீரத்தில் புகுந்து. இந்த்ரியங்கள் மனத்தினைக் கலக்குவதற்குக் காரணம் கலிகாலம் என்பதால் ஆகும் என்பதை விளக்கவே “கலியார் ஏவ” என்றார். “கலியார், ஐவர்” என்று இவற்றை ஏன் உயர்திணையில் கூறினார்? தனக்கு என்று பகைமை பூண்டது போன்று வந்து செய்கின்ற கொடுமையை எண்ணி “கலியார்” என்றார். இதே கருத்தினை “ஐவர்” என்று இந்த்ரியங்களைக் கூறியதற்கும் கொள்ள வேண்டும். “கலியார்” என்று ஆழ்வார் அருளிச்செய்தது, கலிகாலத்துக்கு அஞ்சிய காரணத்தால் ஆகும்.

**வ்யாக்யானம்** - (பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கி) முன்னின்று முறைபோக்கும் பெருங்குடிபோலே தங்களுக்கு ப்ரதாநமான மனஸ்ஸையும் "ஐம்புலன் கருதும் கருத்துளே திருத்தினேன் மனத்தை" என்கிறபடியே தங்கள் நினைத்த வழியே ஒழுகும்படியாகப் பண்ணி. (படிந்துண்ணும் போகத்தே தூராதே பொறுக்கொணாப் போகத்துக்குக் காவல் செய்து) "புலன் படிந்துண்ணும் போகம்" என்று விஷயங்களிலே அவகாஹித்து புஜிக்கிற போகத்திலே "தூராக்குழி" என்கிறபடியே ஒருகாலும் பூர்ணமாகாதே "பொறுத்துக் கொண்டிருந்தால் பொறுக்கொணாப் போகமே நுகர்வான்" என்கிறபடியே இவற்றால் வந்த நலிவை ஆற்றியிருப்போமென்றால் ஆற்றவொண்ணாதபடியான விஷய போகங்களை புஜிக்கவேணுமென்று "கடியார் காளையரைவர் புகுந்து காவல் செய்த" என்கிறபடியே க்ரூரராய் நலிய நலிய இளகிப் பதியா நின்ற பருவத்தை யுடையராய்க் கொண்டு இவனைச் சிறை செய்து.

**விளக்கம்** - (பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கி) - முன்னின்று முறைபோக்கும் பெருங்குடி போன்று, தங்களைக் காட்டிலும் முதன்மையாக உள்ள மனத்தினைக் கூட, பெரியதிருமொழி (1-1-8) – ஐம்புலன் கருதும் கருத்துளே திருத்தினேன் மனத்தை – என்பதற்கு ஏற்ப இந்த்ரியங்களாகிற தாங்கள் எண்ணிய வழியில் செல்லும்படியாகச் செய்து. (படிந்து உண்ணும் போகத்தே) – பெரியதிருமொழி (1-6-2) - புலன் படிந்துண்ணும் போகம் – என்பதற்கு ஏற்ப உலகவிஷயங்கள் என்பவற்றில் மூழ்கி அனுபவிப்பதான இன்பத்தில், (தூராதே) - திருவாய்மொழி (5-8-6) – தூராக்குழி - என்பதற்கு ஏற்ப எப்போதும் த்ருப்தி அடையாமல். (பொறுக்கொணாப் போகத்துக்கு) - பெரியதிருமொழி (7-7-7) – பொறுத்துக் கொண்டிருந்தால் பொறுக்கொணாப் போகமே நுகர்வான் - என்பதற்கு ஏற்ப இந்த விஷயங்கள் மற்றும் இந்த்ரியங்களால் ஏற்பட்டபடி உள்ள துன்பங்களைப் பொறுத்துக்கொள்வோம் என்றால் கூட, பொறுக்க இயலாதபடி "விஷயங்களை அனுபவிக்கவேண்டும்" என்று எண்ண வைத்து, (காவல் செய்து) – பெரியதிருமொழி (7-7-8) – கடியார் காளையரைவர் புகுந்து காவல் செய்த - என்பதற்கு ஏற்ப மிகவும் கொடியவராகவும், துன்புறுத்தத் துன்புறுத்தச் சிறிதும் இரக்கம் கொள்ளாமல் உள்ள பருவம் கொண்டவராகவும் இருக்கின்ற இந்த்ரியங்கள் இவனைச் சிறைப் பிடித்து.

**வ்யாக்யானம்** - (குமைத்துத் திரித்தி வீழ்த்தி வலித்தெற்றி யருவி யறுத்துக் கடனாயின விறுப்பிக்க) "கூறைசோறிவை தாவென்று குமைத்துப் போகார்", "செக்கிலிட்டுத் திரிக்கு

மைவர்", "கொடு வன்குழியினில் வீழ்க்கு மைவர்", "ஐவர் திசைதிசை வலித்தெற்றுகின்றனர்", "ஐவர் அருவித் தின்றிட" என்கிறபடியே தனக்கபீஷ்டமான வற்றைத் தாவென்று துகைத்திழுத்து, சரீரமாகிற செக்கிலேயிட்டுச் சுழற்றி க்ரூரமாய் கரையேற வொண்ணாதபடியாயிருக்கும் விஷயங்களாகிற படுகுழியிலே தள்ளி, அவைதான் அனேகங்களாகையாலே ஸ்வஸ்வவிஷயங்களிலே கொடுபோகைக்காக நாலு திக்கிலுமிழுத்து நலிந்து அருவித் தின்னுமா போலவும், அறுத்துத் தின்னுமாபோலவும், "என் விஷயத்தைக் காட்டு, என் விஷயத்தைக் காட்டு" என்று நெருக்கி, இப்படி பஹுவிதமாகத் தண்டித்து, "பொருளின்பமென விரண்டு மிறுத்தேன் ஐம்புலன்கட் கடனாயின" என்று ச்ரோத்ராதிகளுக்கு ப்ராப்தமாயிருக்கிற அர்த்தகாமங்களென்று சொல்லப்படுகிற விரண்டையும் கடமையிறுப்பாரைப்போல அவற்றாலே பரிபூதனாய்க் கொடுத்துப் போந்தேனென்னும்படி தங்களுக்கு ப்ராப்த கரங்களை யிறுப்பித்துக் கொள்ள. (பாழ்த்த விதியானவாறே) இப்படியாகையாலே "வாழ்த்தியவனடியைப் பூப்புனைந்து நின் தலையைத் தாழ்த்து இருகை கூப்பென்றால் கூப்பாத பாழ்த்த விதி" என்கிறபடியே வகுத்த சேஷியானவனை வாழ்த்தி ஆராதித்து வணங்கிக் கும்பிடுகைகளாகிற இவற்றிலொன்றிலும் அந்வயியாமையாலே ததங்கீகாரப் பற்றாசான ஸுக்ருத கந்தமற்று மனஸ்ஸு பாழ்பட்டவாறே.

**விளக்கம்** - (குமைத்து) – பெரியதிருமொழி (7-7-9) - கூறைசோறிவை தாவென்று குமைத்துப் போகார் – என்பதற்கு ஏற்ப தங்களுக்கு விருப்பமானவற்றைக் கொடு என்று துகைத்து இழுத்து. (திரித்து) – திருவாய்மொழி (7-1-5) – செக்கிலிட்டுத் திரிக்கு மைவர் - என்பதற்கு ஏற்ப சரீரம் என்ற செக்கில் இட்டுச் சுழற்றி. (வீழ்த்தி) - திருவாய்மொழி (7-1-9) - கொடு வன்குழியினில் வீழ்க்கு மைவர் - என்பதற்கு ஏற்ப மிகவும் கொடூரமாகவும், கரை ஏற முடியாதபடியும் உள்ளதான உலகவிஷயங்கள் என்ற படுகுழியில் தள்ள. (வலித்து ஏற்றி) – திருவாய்மொழி (7-1-10) - ஐவர் திசைதிசை வலித்தெற்றுகின்றனர் – என்பதற்கு ஏற்ப இந்த இந்த்ரியங்கள் பலவாக உள்ளதால், ஒவ்வொன்றும் இவனைத் தங்கள் தங்கள் விஷயங்களில் கொண்டு செல்வதற்காக நான்கு திசைகளிலும் இழுத்துத் துன்புறுத்தி. (அருவி அறுத்து) – பெரியதிருமொழி (7-7-1) - ஐவர் அருவித் தின்றிட – என்பதற்கு ஏற்ப அருவியும் அறுத்தும் உண்பது போன்று, "எனக்கு விருப்பமான விஷயத்தை எனக்குக் காட்டு, எனக்கு விருப்பமான விஷயத்தை எனக்குக் காட்டு" என்று பலவந்தப்படுத்தி, இப்படியாக இவனைப் பலவிதமாகத் தண்டித்து. (கடனாயின இறுப்பிக்க) -

பெரியதிருமொழி (6-2-1) - பொருளின்பமென விரண்டு மிறுத்தேன் ஐம்புலன்கட் கடனாயின - என்பதற்கு ஏற்ப செவி போன்ற இந்த்ரியங்களுக்கு விஷயமாக உள்ளதான பொருள், இன்பம் [அர்த்தம், காமம்] என்று கூறப்படும் இரண்டையும், கடமையைச் செய்வதில் ஆழ்ந்த பற்று உள்ளவைகள் போன்று இந்த்ரியங்களை இவனைக் கட்டாயப்படுத்த, அவற்றால் அடக்கப்பட்ட இவனும் "அப்படியே அளித்தேன்" என்று உரைக்கும்படியாகத் தங்களுக்கு ஏற்ற கப்பத்தை எடுத்துச் செல்ல. (பாழ்த்த விதியானவாறே) - இதன் காரணமாக, பெரியதிருவந்தாதி (84) – வாழ்த்தியவனடியைப் பூப்புனைந்து நின் தலையைத் தாழ்த்து இருகை கூப்பென்றால் கூப்பாத பாழ்த்த விதி - என்பதற்கு ஏற்ப இவனுடைய மனமானது, தனக்கு இயல்பான எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனை வாழ்த்தி, ஆராதித்து, வணங்கி, இரு கரங்கள் குவித்து என்பது போன்றதான எந்தவிதமான செய்கைகளிலும் நாட்டம் இல்லாததால், அந்த ஸர்வேச்வரனும் இவனை ஏற்றுக்கொள்ளக் காரணமாக இவனிடம் புண்ணியம் போன்ற எந்தவிதமான நற்செயலும் சிறிதும் இன்றிப் பாழடைந்தபோது.

**வ்யாக்யானம் -** (தன்பால் மனம் வைப்பிப்பதாகத் தேய்ந்தற மன்னி) "தன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்கிறபடியே இந்த்ரிய வச்யதையாலே இப்படிப் பாழ்பட்ட மனஸ்ஸைப் பயிர்படும்படி தன்பக்கலிலே வைக்கப் பண்ணுகைக்காக, "எனதேழை நெஞ்சாளும் திருந்தாதவோ ரைவரைத் தேய்ந்தற மன்னி இருந்தான்" என்கிறபடியே கண்டதெல்லாத்திலும் சபலமாயிருக்கிற மனஸ்ஸை அதுவே பற்றாசாகப் பொதியெடுத்து ஆளாநிற்பாராய், எத்தனையேனும் பலவான்கள் திருத்தப் புக்காலும் திருந்தாதே இனி இப்படி ஓரைவரில்லை யென்னும்படியிருக்கிற இந்த்ரியங்களாகிற ஐவர் க்ஷயித்து முடிந்துபோம்படி ஆஸந பலத்தாலே குறும்பரை அழிக்கும் ராஜாக்களைப் போலே ஸ்தாவர ப்ரதிஷ்டை யாயிருந்து. (ஒள்வாளுருவி வினைத்தூற்றை வேரறுவித்து) "நீ பணித்தவருளென்னு மொள்வாளுருவி" என்கிறபடியே "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று என்னுடைய ப்ரஸாதத்தையே உனக்கு உஜ்ஜீவந ஹேதுவாக அத்யவஸி யென்ன, "ஸ்திதோஸ்மி கத ஸந்தேஹ" என்னும்படி ஸகல ஸந்தேஹங்களையும் துணித்துப் பொகடவற்றாய் "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று அருளிச்செய்தபடியே ஸர்வ பாபங்களையும் சேதிக்கைக்கு ஸமர்த்தமுமான ஒண்மையையுடைய க்ருபையாகிற வாளை அப்ரதிஹதமாக்கி.

**விளக்கம்** - (தன்பால் மனம் வைப்பிப்பதாக) திருவாய்மொழி (1-5-10) - தன்பால் மனம் வைக்கத் திருத்தி – என்பதற்கு ஏற்ப இந்த்ரியங்களுக்கு வசப்பட்ட காரணத்தால் இவ்விதம் பாழ்பட்ட மனம் என்ற வயலை ஸர்வேச்வரனாகிய தன்னிடம் ஈடுபடுதல் என்பதாகிய பயரிடும்படியாகச் செய்வதற்காக, (தேய்ந்து அற மன்னி) – திருவாய்மொழி - (8-7-2) – எனதேழை நெஞ்சாளும் திருந்தாதவோ ரைவரைத் தேய்ந்தற மன்னி இருந்தான் – என்பதற்கு ஏற்ப எதனைக் கண்டாலும் அதன் மீது ஆசை கொள்ளும் எனது மனத்தினை, அந்த ஆசைகளையே காரணமாகக் கொண்டு இந்த்ரியங்கள் அழுத்தத் தொடங்கும்; அப்போது எத்தனை வலிமை கொண்டுள்ளவர்களாக இருந்தாலும், அதனைத் தடுக்க முயன்றால் திருந்தாமல் இருக்கும்; இந்த்ரியங்கள் என்னும் இப்படிப்பட்ட கொடூரமான வேறு ஓர் ஐவரை இனிக் காண இயலாது என்னும்படி உள்ள அவை, தேய்ந்து முடிந்து போகும்படி ஸர்வேச்வரன் செய்கிறான்; எப்படி என்றால், அரசர்கள் தங்களுடைய அரியணையில் அமர்ந்துள்ள பதவி என்னும் பலம் காரணமாக விரோதிகளை அழிப்பது போன்று, "ஸர்வேச்வரனாகிய நம்முடைய இருப்பால்தான் இந்த இந்த்ரியங்களை வெல்ல வேண்டும்" என்று எண்ணியவனாக நம் உள்ளே புகுகிறான். (ஒள்வாள்) – பெரியதிருமொழி (6-2-4) - நீ பணித்தவருளென்னு மொள்வாளுருவி – என்பதற்கு ஏற்ப, கீதையில் (18-66) - மாமேகம் சரணம் வ்ரஜ – என்னை மட்டுமே சரணம் புகுவாய் - என்று "நீ பிழைப்பதற்கு வழியாக எனது இரண்டு திருவடிகளை மட்டுமே உறுதியாக நம்பி இருப்பாயாக" என்று கூறுகிறான். இதனைக் கேட்டவுடன், கீதையில் (18-73) - ஸ்திதோஸ்மி கத ஸந்தேஹ – எனது சந்தேகங்கள் அனைத்தும் நீங்கி நான் திடமாக உள்ளேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்துவிதமான ஐயங்களும் நீங்கும்படியாக, கீதையில் (18-66) – ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - நான் உன்னை அனைத்து பாபங்களிருந்தும் விடுவிக்கிறேன் - என்று அருளிச்செய்தபடி, அனைத்துவிதமான பாபங்களையும் அறுப்பதற்கு வலிமை கொண்டதான தகுதியான அருள் என்ற வாளைத் தடையின்றி நமக்கு அளித்து.

**வ்யாக்யானம்** - பக்தியாகிற பயிருக்கு விளைநிலமாகக் கல்பிதமாயிருந்துள்ள மனஸ்ஸு பாழே கிடந்து போம்படி "கொடு வினைத்தூறு" என்கிறபடியே இவனா லடிகாணவும் அறுக்கவு மொண்ணாதபடி மூடின பாபமாகிற தூற்றை "வினைகளை வேரற" என்றும், "வல்வினைத் தொடர்களை முதலரிந்து" என்றும் சொல்லுகிறபடியே மறுகிளை யுண்டாகாதபடி வாஸநா ருசிகளாகிற ஊசி வேரோடும் பக்க வேரோடும் அறுப்பித்து.

வினைத்தூற்றை வேரறுத்தென்னாதே, "வேரறுவித்து" என்கையாலே ணிஜர்த்தமும் தோற்றுகிறது; வினையறுக்கையில் ப்ரயோஜக கர்த்ருத்வம் ஈச்வரனுக்கும், ஸாக்ஷாத் கர்த்ருத்வம் க்ருபைக்கு மாகலாமிறே.

**விளக்கம்** – (வினைத்தூற்றை) - பக்தி என்னும் பயிர் தழைத்து வளரக்கூடிய விளைநிலமாக உள்ள மனம் பாழடைந்து கிடக்கும்படி, திருவாய்மொழி (3-2-9) – கொடு வினைத்தூறு - என்பதற்கு ஏற்ப சேதநனால் இதன் அடிவேர் என்று காண இயலாமலும், அறுக்க இயலாமலும் மூடிக்கிடக்கும் பாபம் என்கிற புதர்களை, (வேர் அறுவித்து) - திருவாய்மொழி (3-2-1) – வினைகளை வேரற - என்றும், திருவாய்மொழி (3-2-2) - வல்வினைத் தொடர்களை முதலரிந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப மேலும் அவற்றிலிருந்து பல கிளைகள் தோன்றாதபடி, வாசனை மற்றும் ருசி என்பதான ஊசிவேர் மற்றும் பக்கவேருடன் அறுப்பித்து. இங்கு "விளைகளை வேரறுத்து" என்று கூறாமல் "வேர் அறுப்பித்து" என்று, தான் செய்யாமல் யாரையோ கொண்டு செய்வித்தது போன்று ஏன் கூறவேண்டும்? இதன் கருத்து – தனது அருள் என்பதை அவ்விதம் அவற்றை அறுக்கும்படிச் செய்கிறான் - என்பதாகும். அதாவது, வினைகளை அறுப்பதில் ஸர்வேச்வரன் இயக்கும் பணியைச் செய்கிறான்; அவனுடைய திருவருள் என்பது அறுப்பதைச் செய்கிறது என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (தீக்கொளீஇ) வெட்டின காட்டைச் சுட்டுப் பொகடுமாபோலே "மோக்ஷ யிஷ்யாமி" என்கிற க்ருபா ப்ரயுக்த ஸங்கல்பத்தால் முந்துற அடியறுத்தவற்றை "இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்" என்று இவ்வாத்மாவை முடிக்கிற கர்மஸந்தாநம் நெருப்புக் கொளுந்தி வேகாநின்ற தென்னும்படி "யதேஷிக தூலமக்நௌ ப்ரோதம் ப்தூயேத; ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்கிறபடியே உருமாய்ந்து போம்படி தக்தமாக்கி.

**விளக்கம்** – (தீக்கொளீஇ) - வெட்டிய காட்டினைத் தீயிட்டுக் கொளுத்துவது போன்று, கீதை (18-66) – மோக்ஷயிஷ்யாமி – மோக்ஷம் அளிப்பேன் - என்று அவன் தனது க்ருபையை மூலமாகக் கொண்டு, தனது ஸங்கல்பத்தால் முதலில் அடியுடன் அறுத்த அனைத்தையும் [இவை வினைகள் ஆகும்], பெரியாழ்வார் திருமொழி (5-4-2) – இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால் - என்பதற்கு ஏற்ப இந்த ஆத்மாவின்

இயல்பான தன்மையை அழிக்கவல்லதான "கர்மங்களின் தொடர்ச்சி" என்னும் நெருப்பைக் கொளுத்தி அவற்றை வேகும்படிச் செய்து; அதாவது சாந்தோக்ய உபநிஷத் (5-24-3) – யதேஷிக தூலமக்நௌ ப்ரோதம் ப்தூயேத; ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே - தீயில் இடப்பட்ட பஞ்சானது எவ்விதம் உடனே எரிகிறதோ அது போன்று உபாஸகனுடைய அனைத்து பாபங்களும் எரிகின்றன - என்பதற்கு ஏற்ப அவற்றின் உருவத்தை அழித்துச் சாம்பலாக்கி.

**வ்யாக்யானம்** - (கவ்வையெருவிட்டு) "ஊரவர் கவ்வை எருவிட்டு" என்கிறபடியே பகவதாபிமுக்க்யம் பிறந்தவளவிலே இவன் பாகவதனானானென்று ஸம்ஸாரிகள் சொல்லும் பழிமொழியை பக்தியாகிற பயிருக்கு வர்த்தகமான எருவாக விட்டு; (அமுதவாறு தலைப்பற்றி) "அறிவையென்னு மமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டது" என்கிறபடியே ஜ்ஞாநமாகிற அம்ருத நதியை வாயளவாய்த் தலைக்கு மேலே போம்படி பெருகப் பண்ணி. (ஈரியாய்க் கசிந்ததிலே) "கண்ணனுக்கென்றீரியா யிருப்பாள்", "கசிந்த நெஞ்சினளாய்" என்று சொல்லுகிறபடியே அந்த ஜ்ஞாநவாரியாலே நல்லது கண்டால் அவனுக்கென்னு மநுஸந்தாநத்தாலே ஆர்த்ரதை விளையும்படி நெஞ்சு பதம் செய்து செவ்விவாய்த்தவாறே அந்நெஞ்சிலே.

**விளக்கம்** - (கவ்வையெருவிட்டு) - திருவாய்மொழி (5-3-4) – ஊரவர் கவ்வை எருவிட்டு - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனிடம் இவனுக்கு ஆழமாக ஈடுபட்டுத் தொழுகின்ற மனம் வந்த உடனேயே "இவன் பாகவதன் ஆகிவிட்டான்" என்று ஸம்ஸாரிகள் கூறுகின்ற சொல்லைப் பக்தி என்னும் பயிரை வளர்க்கவல்ல எருவாக இட்டு. (அமுத ஆறு தலைப்பற்றி) – பெரியாழ்வார் திருமொழி (5-4-2) – அறிவையென்னு மமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டது - என்பதற்கு ஏற்ப ஞானம் என்னும் அமிர்த நதியை வாய் அளவிற்குச் செல்லும்படியாகத் தலைக்கு மேல் செல்லும்படிப் பெருக்கி. (ஈரியாய்க் கசிந்ததிலே) – திருவாய்மொழி (6-7-9) – கண்ணனுக்கென்று ஈரியா யிருப்பாள் – என்றும், திருவாய்மொழி (6-7-8) - கசிந்த நெஞ்சினளாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அந்த ஞான வெள்ளத்தின் காரணமாக நல்லவற்றைக் கண்ட உடனேயே ப்ரீதி விளையும்படி நெஞ்சத்தைப் பதமாக்கி, அந்த அன்பு வந்தவுடன் அந்த நெஞ்சத்தில்.

**வ்யாக்யானம்** - (ஈரநெல்வித்தி) ஸங்கமாகிற நெல்லை விரைத்து. (எழுநாற்றுக் களையையும் வேர்முதல் மாய்த்து) “செய்த்தலை யெழுநாற்று” என்கிறபடியே தத்ப்ரத்யாஸந்நமாய் ததேக பரதந்த்ரமாய் ததேக போக்யமாய் வளருகிற இப்பயிரில் கர்த்த்ருத்வ போக்த்ருத்வ புத்தியை விளைக்கும் அஹங்கார மமகாரங்களாகிற களையையும், “நீர்நுமதென்றிவை வேர் முதல் மாய்த்து” என்கிறபடியே ஊசிவேரோடே பறித்து பொகட்டு. (பட்டி சேவதக்கி) களை பறித்தாலும் போராதே, பட்டி புகாமல் நோக்கினாலிறே பயிர் தலைப்பெற்றுச் செல்லுவது. ஆகையாலே “வன்புலச்சேவை அதக்கி” என்கிறபடியே விஷயாந்தரங்களில் ப்ரவணமாய் பகவத்பக்தியைத் தலை யழிக்கையாலே பக்தியாகிற இப்பயிருக்குப் பட்டியான இந்த்ரியங்களாகிற சேக்களினுடைய ஸ்வைர ஸஞ்சார ஹேதுவான கர்வத்தைப் போக்கி.

**விளக்கம்** - (ஈரநெல்வித்தி) - அவனுடன் கலத்தல் என்ற நெல்லை விதைத்து. (எழுநாற்று)- பெரியாழ்வார் திருமொழி (3-7-9) – செய்த்தலை யெழுநாற்று - என்பதற்கு ஏற்ப அவனுக்கு அருகில் உள்ளதும், அவனுக்கு மட்டுமே வசப்பட்டதும், அவனுக்கு இனிமையாக உள்ளதுமாக வளர்கின்ற இந்தப் பயிரில். (களையையும் வேர் முதல் மாய்த்து) - “நான் இதனைச் செய்கிறேன், நான் இவற்றை அனுபவிக்கிறேன்” என்ற சிந்தனைகளை உண்டாக்குவதான அஹங்காரம் மற்றும் மமகாரங்களான [நான், எனது] களைகளையும், திருவாய்மொழி (1-2-3) – நீர்நுமதென்றிவை வேர் முதல் மாய்த்து – என்பதற்கு ஏற்ப ஊசி வேருடன் பறித்து எடுத்து. (பட்டிச் சேவதக்கி) – களையை நீக்கினால் மட்டும் போதாது, ஆடுமாடு மேயாமல் இருந்தால் அல்லவோ பயிர் நன்றாக விளையும்! ஆகவே, பெரியாழ்வார் திருமொழி (5-2-3) - வன்புலச்சேவை அதக்கி - என்பதற்கு ஏற்ப உலக விஷயங்களில் ஈடுபட்டு, பகவானிடம் காண்பிக்க வேண்டிய பக்தியை அழிப்பதால், பக்தி என்னும் இந்தப் பயிருக்கு ஆடுமாடு போன்றதான இந்த்ரியங்களாகிற சேக்களுடைய தனது விருப்பத்தின்படி திரிதலுக்குக் காரணமான கர்வத்தை நீக்கி.

**வ்யாக்யானம்** - (மீது கொள்ளாமல் குறிக்கொள்வித்து) பயிர் பலபர்யந்தமானாலும் பலிதாம் சத்தை ராத்ரி சரரபஹரிக்க யோக்யதையுண்டாகையாலே ரக்ஷை பண்ணி வைக்க வேணுமாய்த்து; அப்படியே “விளைந்த தானியமு மிராக்கதர் மீது கொள்ளகிலார்கள்” என்கிறபடியே அநந்யார்ஹமாம்படி “அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல்” என்று ராக்ஷஸப்ரக்ருதிகளும் ஆஸுரப்ரக்ருதிகளுமாகச் சொல்லலாம்படியான அபாகவத


Email:sridharan_book@yahoo.co.in

ஜனங்கள் “எங்களுக்கு இவன் ஸ்நேஹி” என்றிருக்கு மவ்வழியாலே இத்தை அபஹரிக்கைக்கு அவகாசமற பக்தியாகிற பயிர் விளைந்து கிடக்கிற நெஞ்சுக்கு, “பள்ளியறை குறிக்கொள்மின்” என்கிறபடியே காவலடைத்து, (கடல் புரைய விளைந்து தலைவணக்கினவாறே) “காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி” என்கிறபடியே எருவும் நீருமுண்டானாலும் மேல் வர்ஷமில்லாதபோது பயிர்த் தலைகுளிர்ந்து வளராதென்று காளமேக நிபச்யாமமான வடிவழகை வர்ஷித்து வளர்க்கையாலே, அந்த பக்தியாகிற பயிர் கடல்போலே அபரிச்சேத்யமாம்படி பலித்து “வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள் சாய்த்துத் தலைவணக்கும்” என்கிறபடியே பலித்த பயிரானது பரிபக்வமாய்த் தலைவணக்குமாபோலே பலிதமான அதனுடைய பரிபாக நிபந்தநமான ஆர்த்தியாலே வரும் பாரவச்யம் பிறந்தவாறே,

**விளக்கம்** - (மீது கொள்ளாமல் குறிக்கொள்வித்து) - பயிர் நன்றாக வளர்ந்து அறுவடை செய்யும் காலம் வந்தாலும், அந்தப் பலனை இரவில் அங்கு திரிபவர்கள் அவற்றை அபகரித்துச் செல்வதற்கு வாய்ப்பு உண்டு என்பதால் அவற்றைப் பாதுகாத்து வைக்க வேண்டும்; [இது போன்றே] பெரியாழ்வார் திருமொழி (4-4-8) – விளைந்த தானியமு மிராக்கதர் மீது கொள்ளகிலார்கள் - என்பதற்கு ஏற்றபடி அவனுக்கு மட்டுமே சொந்தமான இவனை, திருவாய்மொழி (5-2-5) – அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் – என்பதற்கு ஏற்ப ராக்ஷஸர்கள் மற்றும் அஸுரர்கள் என்பவர்களாகிய பாகவதர்கள் அல்லாதவர்கள், “இவன் எங்களுக்கு நண்பன்” என்றுள்ள சிந்தனையால் கவர்ந்து செல்வதற்கு இடம் அளிக்காதபடி. (குறிக்கொள்வித்து) - பக்தி என்னும் பயிர் தழைத்துள்ள நெஞ்சுக்கு, பெரியாழ்வார் திருமொழி (5-3-9) – பள்ளியறை குறிக்கொள்மின் - என்பதற்கு ஏற்ப காவல் ஏற்படுத்தி. (கடல் புரைய விளைந்து) – திருவாய்மொழி (5-3-4) - காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி – என்பதற்கு ஏற்ப எருவும் நீரும் இருந்தால் கூட, வானத்திலிருந்து பெய்யும் மழை இல்லை என்றால் பயிரானது தலைகுளிர்ந்து வளராது என்பதால், காளமேகம் போன்ற கரிய நிறம் கொண்ட தனது வடிவழகைப் பெய்ய வைத்து வளர்ப்பதால், பக்தி என்ற அந்தப் பயிரானது கடல் போன்று அளவிட இயலாதபடி வளர்ந்து. (தலை வணக்கினவாறே) – பெரியாழ்வார் திருமொழி (4-9-8) – வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள் சாய்த்துத் தலைவணக்கும் - என்பதற்கு ஏற்ப நன்கு விளைந்த பயிர் நன்றாகக் காய்ந்து தலைவணங்குவது போன்று, ஆத்மாவுக்கு முதிர்ந்த பக்தி ஏற்பட்டதன்

விளைவாக ஸர்வேச்வரனைப் பிரிந்து இருக்கும் துன்பத்தால் தன் வசம் இழந்து தவிக்கின்ற நிலை உண்டாகும்போது.

**வ்யாக்யானம்** - (நாளுநாள் கோட்குறையாக நின்றாரறியாமல் குந்தங்கொண்டு ஆராமையுண்டு) பக்தி பரிணாமம் சொன்னவித்தால் பலித்தது - ததாச்ரயமான ஆத்மவஸ்து பகவத் போக்யமாம்படி திருந்தினமையிறே. ஆகையாலே "நாளுநாள் வந்தென்னை மற்றவும் தானுண்டான்", "கோட்குறைபட்ட தென்னாயிருர்", "நின்றாரறியாவண்ணம் என்னெஞ்சு முயிருமைவ யுண்டு" என்கிறபடியே ஒருநாள் புஜித்து விடுகையன்றிக்கே, நாள்தோறும் வந்து புஜியா நிற்கச் செய்தே, பின்னையும் பர்யாப்தனன்றிக்கே படுகிற அலமாப்புக்கண்டு இத்தலையிலே சிறிது தொங்கிற்றுண்டென்று திருவனந்தாழ்வான் முதலானாரு மறியமாட்டாதபடி, பெரும் பசியரானவர்கள் விளைந்த நெல்லைச் சேரவறுத்துக் கொண்டு போய் புஜிக்கப் பற்றாமே முற்றின வளவுகளைக் குந்தங்கொண்டு புஜிக்குமாபோலே, முக்தனானவாறே பின்னைச் சேர புஜிக்கப் பற்றாத தன் அபிநிவேசத்தாலே இச்சரீரத்தோடே யிருக்கச்செய்தே விளைந்த பரிபாகாநுகுணமாக "மனக்காராமை மன்னியுண்டிட்டாய்" என்கிறபடியே மனஸ்ஸுக்கு ஒருகாலும் த்ருப்தி பிறவாதே மேன்மேலும் விரும்பி புஜித்து.

**விளக்கம்** - (நாளுநாள்) – பக்தியின் முதிர்ச்சியைக் கூறிய இதனால் என்ன நிகழ்ந்தது என்றால், பக்திக்கு இருப்பிடமான அந்த ஆத்மாவானது ஸர்வேச்வரனுக்கு இனிமையாக உள்ள விதத்தில் திருந்தியமை ஆகும். ஆகவே, திருவாய்மொழி (9-6-8) - நாளுநாள் வந்தென்னை மற்றவும் தானுண்டான் - என்பதற்கு ஏற்ப ஏதோ ஒருநாள் ஸர்வேச்வரன் ஜீவாத்மாவை அனுபவித்துவிட்டு பின்னர் விடுதல் என்பது இன்றி, அன்றாடம் வந்து அனுபவித்தபடி இருந்தாலும், மனநிறைவு அடையாத காரணத்தால் அடைகின்ற தடுமாற்றத்தைக் கண்டு. (கோள் குறையாக) திருவாய்மொழி (9-6-7) – கோட்குறைபட்ட தென்னாயிருர் - என்பதற்கு ஏற்ப ஜீவாத்மாவுக்கும் சிறிதளவாவது துக்கம் உண்டு என்று ஆராய்ந்து அறியும்படியாக. (நின்றார் அறியாமல்) – திருவாய்மொழி (10-7-1) – நின்றாரறியாவண்ணம் என்னெஞ்சு முயிருமைவ யுண்டு - என்பதற்கு ஏற்ப இத்தகைய பந்தம் ஏற்படுவதற்குச் சிபாரிசாக நின்ற பெரியபிராட்டி, கருடன், ஆதிசேஷன் போன்றவர்கள் யாரும் அறியாதபடி. (குந்தம் கொண்டு ஆராமை உண்டு) – மிகுந்த பசி எடுத்தவர்கள், வயலில் விளைந்த நெல்லை அறுத்து எடுத்துச் சென்று, அதனைச் சமைத்து

உண்ணும்வரை தாங்க இயலாமல், நன்றாக முற்றின சிலவற்றை அந்த இடத்திலேயே அமர்ந்து, சமைக்காமல் உண்பது போன்று, இந்த ஜீவாத்மா மோக்ஷம் அடைந்து தன்னை வந்தடைந்த பின்னர் அவனுடன் சேர்ந்து அனுபவித்துக் கொள்ளலாம் என்பதுவரை காத்திருக்க இயலாத ஸர்வேச்வரன், தனது மிகுந்த அன்பு காரணமாக, இந்தச் சரீரத்துடன் ஆத்மா உள்ளபோதே, அந்த ஆத்மாவுக்கு ஏற்பட்ட முதிர்ந்த பக்திக்கு ஏற்ப, திருவாய்மொழி (10-10-6) – மனக்காராமை மன்னியுண்டிட்டாய் - என்பதற்கு ஏற்ப எப்போதும் மனநிறைவு ஏற்படாதபடி மேன்மேலும் இந்த ஜீவாத்மாவுடன் சேர்ந்து அனுபவித்து,

**வ்யாக்யானம்** - (காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்து) "காலக்கழிவு செய்யேல்" என்றும், "மண்ணும் வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோலே" என்றும் சொல்லுகிறபடியே பரிபக்வமான விவ்வஸ்து காலக்ஷேபத்தாலே தரைப்பட்டு மங்கிப் போகாமல் "வினை பற்றறுக்கும்" என்கிறபடியே ப்ராப்தி விரோதியான கர்மங்களை யறுத்து. (தண்டாலடித்துப் பதறுத்து) அறுத்த நெற்கதிரைத் தடியாலே யடித்துப் பதரும் மணியும் பிரிக்குமாபோலே "அருளென்னும் தண்டாலடித்து" என்கிறபடியே தன்னுடைய க்ருபையாகிற த்ருடதர ஸாதநத்தாலே நெல்லோடொக்க விளைந்திருப்பதாய் அஸாரமான பதர் போலே யிருக்கிற ஆத்மாநுபவத்தில் ருசியையறுத்து; (போர்த்த தோல் விடுத்து) அந்நெல்லில் உமியை விடுவிக்குமாபோலே "போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை பேர்த்து" என்கிறபடியே ஆத்மாவைப் பொதிந்துகொண்டு கிடப்பதாய் ஆதிவ்யாதிகளுக்கும் ஷட்பாவ விகாரங்களுக்கும் அடியான ஸ்தூல தேஹத்தினுடைய விமோசநத்தைப் பண்ணி,

**விளக்கம்** - (காலக்கழிவாலே நிலத்து உகாமல்) – திருவாய்மொழி (2-9-2) – காலக்கழிவு செய்யேல் - என்றும், பெரியதிருமடல் (89) - மண்ணும் வறுநிலத்து வாளாங் குகுத்ததுபோலே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பக்தியின் முதிர்ச்சியை அடைந்த இந்த ஆத்மா காலம் செல்லச்செல்ல அந்த நிலை மறந்து மங்கி விடாமல். (பற்று அறுத்து) - பெரியதிருமொழி (11-4-9) – வினை பற்றறுக்கும் - என்பதற்கு ஏற்ப பேற்றுக்குத் தடையாக உள்ள கர்மங்கள் அனைத்தையும் அறுத்து. (தண்டால் அடித்துப் பதர் அறுத்து) - அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களைத் தடி கொண்டு அடித்து பதரையும் நெல்மணிகளையும் பிரிப்பது போன்று, பெரியதிருவந்தாதி (26) – அருளென்னும்

தண்டாலடித்து - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தனது அருள் என்ற உறுதியான கருவி கொண்டு நெல்லுடன் சேர்ந்து விளைந்துள்ளதான சாரம் அற்ற பதர் போன்றதான ஆத்மானுபவம் என்பதில் ஜீவாத்மாவுக்கு ஏற்படக்கூடிய ஈடுபாட்டை விலக்கி. (போர்த்த தோல் விடுத்து) - அந்த நெல்லில் உள்ள உமியை விடுவிப்பது போன்று, திருவாய்மொழி (7-5-10) - போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை பேர்த்து – என்பதற்கு ஏற்ப ஆத்மாவைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளதும், அனைத்துவிதமான நோய்களுக்கும் ஆறுவிதமான மாறுபாடுகளுக்கும் [கருவில் புகுதல் (அஸ்தி), பிறத்தல் (ஜாயதே), வளர்தல் (வர்ததே), இளமை - வாலிபம் - முதுமை போன்ற மாறுபாடுகளை அடைதல் (விபரிணமதே), மூப்பின் காரணமாக தளர்ச்சி அடைதல் (அபச்சியதே), இறுதியில் மரணமடைதல் (நாசம்)] காரணமாக உள்ள ஸ்தூல சரீரத்தை விடுவித்து.

**வ்யாக்யானம்** - (ஸூக்ஷ்மவொட்டும் நீரிலே கழுவி) அநந்தரம் தண்டுலத்தைத் தவிடறக் கழுவுமாபோலே ஸ்தூல தேஹம் போனாலும், தான் போகக்கடவதன்றிக்கே ஸம்ஸரண ஹேதுவாய்க் கொண்டு போந்ததாய், பகவதநுபவ விரோதியுமா யிருக்கச் செய்தே, விரஜா பர்யந்தமாந ஸாதநமாய்க் கிடந்த ஸூக்ஷ்ம சரீரத்தையும் "தத்தோய ஸ்பர்ச மாத்ரேண" என்கிறபடியே விரஜா ஜலஸ்பர்சத்தாலே வாஸநா ரேணுக்களோடே போக்கி. "கர்ம ஸம்பந்தமறுக்கையாலே ஸூக்ஷ்ம சரீரமிருக்கைக்கு ஹேதுவில்லாமையால் இங்கே கழித்து விடலாயிருக்கச்செய்தே விரஜா பர்யந்தம் இவனுக்கு கமந ஸாதநமாக ஈச்வரன் தன்னிச்சையாலே வைத்து, விரஜையிலே உள்புக்கவாறே கழித்துவிடும்" என்றிறே நம்மாசார்யர்க ளருளிச்செய்வது. ஸூக்ஷ்ம ப்ரக்ருதி ஸம்பந்தம் கிடக்குமளவும் வாஸநா ரேணுவும் கிடக்கையாலே அதுவும் அப்போதாய்த்து நிவ்ருத்தமாவது"; "விரஜையைச் சென்று கிட்டி வன்சேற்றள்ளலையும் வாஸநா ரேணுவையும் கழுவி" என்றாரிறே.

**விளக்கம்** - (ஸூக்ஷ்மவொட்டும் நீரிலே கழுவி) – தொடர்ந்து அந்த நெல்லிலிருந்து வெளிவந்த அரிசியை, தவிடு நீங்கும்படியாகக் கழுவுவது போன்று, ஸம்ஸாரத்தில் உழல்வதற்குக் காரணமாகவும் பகவானை அனுபவிப்பதற்கு விரோதியாக உள்ளபோதிலும் ஜீவாத்மாவை விரஜாநதி முடிய கொண்டு செல்வதற்கு உதவியாக உள்ளதும், ஸ்தூல சரீரம் நீங்கினாலும் தான் நீங்காமல் உள்ளதான ஸூக்ஷ்ம சரீரத்தையும், தத்தோய ஸ்பர்ச மாத்ரேண - விரஜாநதியின் தீர்த்தத்தை ஸ்பர்சித்த உடனேயே - என்பதற்கு ஏற்ப விரஜாநதியின் ஜலத்தைத் தொட்டதால் வாசனைகள்

அனைத்தையும் அவற்றின் அணுக்களுடன் நீக்கி. ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அர்ச்சிராதியில் – கர்ம ஸம்பந்தமறுக்கையாலே ஸூக்ஷ்ம சரீரமிருக்கைக்கு ஹேதுவில்லாமையால் இங்கே கழித்து விடலாயிருக்கச்செய்தே விரஜா பர்யந்தம் இவனுக்கு கமந ஸாதநமாக ஈச்வரன் தன்னிச்சையாலே வைத்து, விரஜையிலே உள்புக்கவாறே கழித்துவிடும் – கர்மங்களுடைய ஸம்பந்தம் அறுக்கப்படுவதால் ஸூக்ஷ்ம சரீரம் தொடர்ந்து உள்ளதற்குக் காரணம் இல்லை என்பதால் அதுவும் இந்த உலகிலேயே நீங்கிவிடலாம் என்றாலும், விரஜாநதி முடிய ஜீவாத்மா பயணிப்பதற்கு அந்த ஸூக்ஷ்ம சரீரத்தை உபாயமாக ஸர்வேச்வரன் தனது விருப்பத்தால் வைத்து, விரஜாநதியில் நீராடிய பின்னர் கழித்து விடுகிறான் - என்று அல்லவோ அருளிச்செய்தார்! ஸூக்ஷ்ம சரீரத்தின் ஸம்பந்தம் உள்ளவரை கர்மவாசனை போன்றவை உள்ளதால், அந்த ஸூக்ஷ்ம சரீரம் நீங்கும்போதுதான் அவையும் விலகும். அர்ச்சிராதியில் - விரஜையைச் சென்று கிட்டி வன்சேற்றள்ளலையும் வாஸநா ரேணுவையும் கழுவி – என்பது காணலாம்.

**வ்யாக்யானம் -** (வேறோர் கலத்திட்டு) "சீரார் தயிர் கடைந்த வெண்ணெய் திரண்டதனை வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு" என்கிறபடியே ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபையான ப்ரக்ருதியில் நின்றும் விவேகித்து வாங்கின இவ்வாத்ம வஸ்துவை அமாநவ கர ஸ்பர்சத்தாலே அப்ராக்ருத தேஹத்திலே ப்ரவேசிப்பித்து. (பைந்தொடி மடந்தையரைக் கொண்டு க்ஷட்குண ரஸாந்நமாக்கி) "அணைவர் போயமருலகில் பைந்தொடி மடந்தையர் தம் வேய்மரு தோளிணை" என்கிறபடியே, "தம் பஞ்சசதாந் யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி சதம் மாலா ஹஸ்தா:" இத்யாதி ப்ரகாரேண வந்தெதிர் கொண்டு, "தம் ப்ரஹ்மா லங்காரேணா லங்குர்வந்தி" என்று தங்கள் கையாலே இவ்வாத்ம வஸ்துவுக்கு ப்ரஹ்மாலங்காரத்தைப் பண்ணி ஸத்கரிக்கும் திவ்யாப்ஸரஸ்ஸுக்களைக் கொண்டு தன்னுடைய போகத்துக்கர்ஹமாம்படி அலங்கரிப்பியா நின்று கொண்டு, "ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே" என்கிறபடியே ஸ்வரூபாவிர்ப்பாவம் பிறந்து, முன்பு திரோஹிதமாய்க் கிடந்த ஆத்மகுணங்களெல்லாம் ப்ரகாசிக்கப் பெற்றிருக்கிற இவ்வஸ்துவை, ஜ்ஞாநாதி ஷட்குணங்களாகிற ஷட் ரஸ யுக்தமாய், "அஹமந்நம்" என்கிற அந்நமாம்படி அவர்கள் கரஸ்பர்சத்தாலே பக்வமாக்கி. சேஷவஸ்துகதமான ஜ்ஞாந சக்த்யாதி ஷட்குணங்களும், சேஷி விநியோகத்துக்கு உறுப்பாகையாலே இக்குணங்களோடே கூடி "அஹமந்நம்" என்றிருக்கு மிவ்வஸ்து அவனுக்கு அறுசுவை யடிசிலாயிறே யிருப்பது.

**விளக்கம்** - (வேறோர் கலத்து இட்டு) - சிறியதிருமடல் (30) - சீரார் தயிர் கடைந்த வெண்ணெய் திரண்டதனை வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு - என்பதற்கு ஏற்ப, ஸ்தூலம் மற்றும் ஸூக்ஷ்மம் ஆகிய சரீரங்களிலிருந்து பிரிக்கப்பட்ட இந்த ஜீவாத்மாவை, அமானவன் என்பவனுடைய கையின் தொடுதல் காரணமாக, இந்த உலகத்துடன் தொடர்பு இல்லாத வேறு ஒரு சரீரத்தில் ப்ரவேசிக்கும்படிச் செய்து. (பைந்தொடி மடந்தையரைக் கொண்டு) – திருவாய்மொழி (10-2-11) – அணைவர் போயமருலகில் பைந்தொடி மடந்தையர் தம் வேய்மரு தோளிணை - என்பதற்கு ஏற்ப கௌஷீதகீ உபநிஷத் (1-35) – தம் பஞ்சசதாந் யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி சதம் மாலா ஹஸ்தா: – அந்த முக்தாத்மாவை ஐந்நூறு தேவலோகப் பெண்கள் எதிர் கொண்டு தங்களுடைய கைகளில் மாலைகள் கொண்டவர்களாக – என்பதற்கு ஏற்ப எதிர்கொண்டு அழைத்து, தம் ப்ரஹ்மா லங்காரேணா லங்குர்வந்தி - தங்களுடைய கைகளால் அந்த ஆத்மாவுக்கு ப்ரஹ்மாலங்காரம் செய்து – என்பதற்கு ஏற்ப தங்களுடைய கரங்கள் கொண்டு அந்த ஆத்மாவுக்கு ப்ரஹ்மாலங்காரங்கள் போன்ற உபசாரங்கள் செய்கின்ற தேவலோகப்பெண்கள் கொண்டு அந்த ஆத்மாவுடைய இன்பத்துக்கு ஏற்கும் விதத்தில் அவனை அலங்கரித்து. (ஷட்குண ரச அன்னமாக்கி) – சாந்தோக்ய உபநிஷத் - ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே - தனது உண்மையான ஸ்வரூபத்துடன் உள்ளான் - என்பதற்கு ஏற்ப தனது உண்மையான ஞானஸ்வரூபம் வெளிப்பட்டு, முன்பு மறைந்து கிடந்த ஆத்மகுணங்கள் அனைத்தும் ப்ரகாசிக்கப் பெற்றுள்ள இந்த ஆத்மாவை, ஞானம் முதலான ஆறுகுணங்கள் என்னும் அறுசுவையுடன் கூடியவனாக, தைத்திரீயம் – அஹம் அன்னம் - நான் பரமாத்மாவுக்கு உணவாகிறேன் [அதாவது இன்பம் ஆவேன்] – என்பதற்கு ஏற்ப அன்னமாகும்படி அவர்களுடைய கரங்களின் தீண்டுதலால் பக்குவமாக்கி. அதாவது அடிமையாக உள்ள ஆத்மாவுடைய ஞானம், சக்தி போன்ற ஆறு குணங்களும் அவனுடைய எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன் அனுபவிப்பதற்கு ஏற்றதாக உள்ளதால், இந்த குணங்களுடன் கூடியவனாக, தைத்திரீயம் – அஹம் அன்னம் - நான் உணவாகிறேன் - என்றுள்ள இந்த ஆத்மா, ஸர்வேச்வரனுக்கு ஆறு சுவை கொண்ட அடிசிலாக உள்ளான் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (வானோர்க்காராவமுதானவாறே) “வானோர்க்காராவமுதே” என்கிறபடியே, “வைகுந்தன் தமரெமரெமதிடம் புகுது” என்பது, “விதிவகை புகுந்தனர்”

என்பதாய், “பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்” இத்யாதிப்படியே ஆதரிக்கும் நித்யஸூரிகளுக்குப் பரமபோக்யமாம்படி யானவாறே. (முற்றுமுண்ண முன்னம் பாரித்து) “என்னை முற்றுமுயிருண்டு” என்கிறபடியே இவ்வாத்ம வஸ்துவை முழுக்க புஜிப்பதாக “என்னில் முன்னம் பாரித்து” என்கிறபடியே இவ்வாத்மாவுக்கு ருசி பிறப்பதற்கு முன்னே பிடித்தும் பாரித்து.

**விளக்கம்** - (வானோர்க்கு ஆராவமுது ஆனவாறே) – திருவாய்மொழி (5-7-11) – வானோர்க்காராவமுதே - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (10-9-9) – வைகுந்தன் தமர் எமர் எமது இடம் புகுது – என்று கூறுவது என்னவென்றால், திருவாய்மொழி (10-9-10) - விதிவகை புகுந்தனர் - என்பதாகவும், திருவாய்மொழி (10-9-10) - பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர் – என்பதாகவும் உள்ளது போன்று ஆதரிக்கும் நித்யஸூரிகளுக்கும் மிகுந்த இனிமையான பொருள் ஆகிறான். தொடர்ந்து, (முற்றும் உண்ண) – திருவாய்மொழி (10-7-3) – என்னை முற்றும் உயிருண்டு – என்பதற்கு ஏற்ப, இந்த ஆத்மாவை முற்றிலும் அனுபவிப்பதற்காக, (முன்னம் பாரித்து) - திருவாய்மொழி (9-6-10) - என்னில் முன்னம் பாரித்து – என்பதற்கு ஏற்ப இந்த ஆத்மாவுக்கு அவன் விஷயத்தில் ருசி உண்டாவதற்கு முன்பாகவே ஈடுபடுத்தி.

**வ்யாக்யானம்** - (உழுவதோர் நாஞ்சில் கொண்டு பெருக முயலும் பத்தியுழவன் க்ருஷி பலமிறே) “உழுவதோர் படையும்”, “ஒற்றைக்குழையும் நாஞ்சிலும்” என்கிறபடியே இவன் கர்ஷகனென்று தோற்றும்படி க்ருஷி ஸாதநத்தைக் கையிலே கொண்டு “அரிய தெளிதாகுமாற்றலால் மாற்றிப் பெருக முயல்வாரைப் பெற்றால்” என்கிறபடியே அரிதான தன் திருவடிகளில் ப்ராப்தியு மெளிதாம்படி இவ்வாத்மோஜ்ஜீவநத்துக்கு மிகவும் யத்நியா நிற்கும் ஸ்வபாவனாய், “பக்தியுழவன்” என்கிறபடியே இவ்வாத்மாவுக்கு ஸ்வவிஷய பக்தியை விளைக்கைக்கு க்ருஷி பண்ணித் திரியும் ஸர்வேச்வரனுடைய க்ருஷி பலமிறே இவ்வாழ்வாருக்குண்டான இந்த பக்தியென்றபடி. இத்தால் இவருடைய பக்த்யுத்பத்தி காரணம் பகவத்க்ருஷி யென்றதாய்த்து.

**விளக்கம்** - (உழுவது ஓர் நாஞ்சில் கொண்டு) பெரியாழ்வார் திருமொழி (4-7-5) – உழுவதோர் படையும் – என்றும், பெரியதிருமொழி (8-8-8) – ஒற்றைக்குழையும் நாஞ்சிலும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இவனே [ஸர்வேச்வரன்] பயிர் செய்பவன் என்பது வெளிப்படும்படியாக, பயிர் செய்வதற்கு வேண்டியதான கருவியைத் திருக்கரத்தில்

கொண்டு. (பெருக முயலும்) – இரண்டாம் திருவந்தாதி (22) – அரிய தெளிதாகுமாற்றலால் மாற்றிப் பெருக முயல்வாரைப் பெற்றால் - என்பதற்கு ஏற்ப அடைவதற்கு அரியதாக உள்ள தனது திருவடிகளை அந்த ஜீவாத்மா எளிதாக அடையலாம்படி, அந்த ஆத்மா கரை ஏறுவதற்கு மிகுந்த முயற்சிகளை தானாகவே செய்யும் தன்மை கொண்டவனாக. (பக்தி உழவன்) – நான்முகன் திருவந்தாதி (23) – பக்தி உழவன் - என்பதற்கு ஏற்ப அந்த ஆத்மாவுக்கு தன்னிடம் பக்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் செய்தபடி உள்ள ஸர்வேச்வரனுடைய முயற்சிகளின் பலன் அல்லவோ, நம்மாழ்வாருக்கு ஏற்பட்ட இந்த பக்தியாக உள்ளது! ஆக இதன் மூலம் ஸர்வேச்வரனுடைய முயற்சிகளே நம்மாழ்வாருக்கு இத்தகைய பக்தி ஏற்படக் காரணம் என்று கருத்து.

105. கோஸல கோகுல சராசரம் செய்யும் குணமொன்றின்றியே அற்புதம் மென்னக் கண்டோம்.

**அவதாரிகை** – இப்படி இத்தலையிலொரு நன்மையற்றிருக்கச் செய்தே, ஈச்வர க்ருஷி பலிக்கக் கண்டவிடமுண்டோவென்ன வருளிச்செய்கிறார் மேல் (கோஸலேத்யாதி).

**விளக்கம்** - இவ்விதம் ஜீவாத்மாவிடம் எந்தவிதமான நன்மையும் (அல்லது முயற்சி) இல்லாமல் உள்ளபோதிலும், ஸர்வேச்வரனுடைய இத்தகைய செயல்பாடுகள் கைகூடுவதை எங்கேயாவது காண இயலுமா என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "த்வாமாமநந்தி கவய: கருணாம்ருதாப்தே ஜ்ஞாந க்ரியா பஜநலப்யமலப்ய மந்யை:, ஏதேஷு கேந வரதோத்தர கோஸலஸ்தா: பூர்வம் ஸதூர்வம பஜந்த ஹி ஜந்தவஸ்த்வாம்" என்கிறபடியே "அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் ஒன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன்" என்று திருவயோத்யாதி கோஸல தேசவர்த்திகளான சராசரங்களெல்லாம் நிர்ஹேதுகமாக "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:, ராம பூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி", "அபிவ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸபுஷ்பாங்குர கோரகா:, விஷயே தே மஹாராஜ ராமவ்யஸந கர்சிதா:, உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸிச, பரிசுஷ்க பலாசாநி வநாந்யுபவநாநிச", "அகால பலநோ வ்ருக்ஷா:


Email:sridharan_book@yahoo.co.in

ஸர்வேசாபி மதுஸ்ரவா:" இத்யாதிப்படியே, ஸ்வஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுக து:க்கங்க ளாகையாகிற நல்ல ஸ்வபாவத்தை யுடைத்தாம்படி நடத்தினானென்றும்,

**விளக்கம்** - (கோஸல சராசரம் ஒன்று இன்றியே) - ஸ்ரீவரதராஜஸ்தவம் (69) – த்வாமாமநந்தி கவய: கருணாம்ருதாப்தே ஜ்ஞாந க்ரியா பஜநலப்யமலப்ய மந்யை:, ஏதேஷு கேந வரதோத்தர கோஸலஸ்தா: பூர்வம் ஸதூர்வம பஜந்த ஹி ஜந்தவஸ்த்வாம் - கருணைக்கடலே! நீ ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் ஆகியவற்றால் மட்டுமே அடைய இயன்றவனாகவும், மற்ற உபாயங்களால் அடைய இயலாதவனாகவும் உள்ளாய் என்று அறிந்தவர்கள் கூறுகிறார்கள். வரதனே! உத்தரகோசலத்தில் இருந்த உயிர்கள் அனைத்தும், அங்கிருந்த புற்கள் உட்பட, எந்த உபாயத்தால் உன்னை அடைந்தன – என்பதற்கு ஏற்பவும், திருவாய்மொழி (7-5-1) – அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் ஒன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன் - என்பதற்கு ஏற்பவும், அயோத்தி முதலான கோசல நாட்டில் வசிக்கின்ற அசையும் பொருள்கள் மற்றும் அசையாப் பொருள்கள் ஆகிய அனைத்தும் எந்த ஒரு காரணமும் இன்றி. (அற்புதம் என்னக் கண்டோம்) - இராமாயணம் யுத்தகாண்டம் (131-96) - ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:, ராம பூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி - இராமன் இந்தப் பூமியை ஆளும்போது, அனைத்து மக்களுக்கும் "ராமா ராமா" என்பதாகவே சொற்கள் வெளிவந்தன; ஆகவே இந்த உலகம் முழுவதும் இராம ராஜ்யமாகவே ஆனது – என்றும், இராமாயணம் அயோத்யாகாண்டம் (59-4,5) – அபிவ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸபுஷ்பாங்குர கோரகா:, விஷயே தே மஹாராஜ ராமவ்யஸந கர்சிதா:, உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸிச, பரிசுஷ்க பலாசாநி வநாந்யுபவநாநிச - இராமனைப் பிரிந்து துக்கத்தால் மலர்கள், அரும்புகள், மொட்டு போன்ற அனைத்தும் வாடி, கருகி, உதிர்ந்தன; இராமனைப் பிரிந்து காரணத்தால் அங்கிருந்த ஆறுகள் கொதித்ததால் அந்த நீரை யாரும் அண்ட இயலாமல் காணப்பட்டன; சிறிய குட்டைகள் மற்றும் பெரிய குளங்களும் அது போன்றே ஆயின; காடுகளும் தோட்டங்களும் ஒரே போன்று காய்ந்த இலைகளுடன் கூடியவையாக ஆயின - என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (127-17) – அகால பலநோ வ்ருக்ஷா: ஸர்வேசாபி மதுஸ்ரவா: - காலம் அல்லாதபோதிலும் அனைத்து மரங்களும் பழங்கள் கொண்டவையாகவும், பெருகி ஓடிய தேன் நிறைந்தவையாகவும் ஆயின - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னுடைய பிரிவு மற்றும் சேர்க்கையால் முறையே துக்கம் மற்றும் சுகம் என்பதான நல்ல தன்மை கொண்டவையாக மாற்றியதைக் கண்டோம்.

**வ்யாக்யானம் -** கோகுலத்திலுண்டான சராசரங்களெல்லாம், “அவனொருவன் குழலூதின போது மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும், மலர்கள் வீழும், வளர்கொம்புகள் தாழும், இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கியவை செய்யும் குணமே”, “மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழி சோர, இரண்டுபாடும் துலுங்கா புடைபெயரா வெழுது சித்திரங்கள் போல நின்றனவே”, “பறவையின் கணங்கள் கூடு துறந்து வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப, கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே”, “கோவலர் சிறுமியரிளங் கொங்கை குதுகலிப்ப வுடலுளவிழ்ந்தெங்கும் காவலும் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே” என்கிறபடியே சைதந்ய ப்ரஸரணமில்லாத வ்ருக்ஷங்களோடு, சைதந்யலேசமுள்ள திர்யக்குக்களோடு, சைதந்ய விசேஷார்ஹ மநுஷ்ய ஜாதீயரான சிறு பெண்களோடு வாசியற நிர்ஹேதுகமாக பகவத் ப்ராவண்ய பரவசங்களானமை கண்டு, “நங்கைமீர்க ளிதோரற்புதம் கேளீர்” என்று விசேஷஜ்ஞர் வித்தராய்ச் சொல்லும்படியாகக் கண்டோமென்கை. இத்தால் பகவந் நிர்ஹேதுக விஷயீகாரம் இப்படிப் பலிக்கக் காண்கையாலே, ஆழ்வாருடைய பக்தியும் பகவந் நிர்ஹேதுக க்ருஷி பலமென்னத் தட்டில்லை யென்றதாய்த்து.

**விளக்கம் -** (கோகுல சராசரம் செய்யும் குணம்) - கோகுலத்தில் இருந்த அனைத்து பொருள்களும், பெரியாழ்வார் திருமொழி (3-6-10) – அவனொருவன் குழலூதின போது மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும், மலர்கள் வீழும், வளர்கொம்புகள் தாழும், இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கியவை செய்யும் குணமே – என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-6-9) - மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழி சோர, இரண்டுபாடும் துலுங்கா புடைபெயரா வெழுது சித்திரங்கள் போல நின்றனவே – என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-6-8) – பறவையின் கணங்கள் கூடு துறந்து வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப, கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே - என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-6-1) – கோவலர் சிறுமியரிளங் கொங்கை குதுகலிப்ப வுடலுளவிழ்ந்தெங்கும் காவலும் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அறிவு என்பது வெளிப்படாத மரங்கள், சிறிதளவு அறிவுள்ள விலங்குகள், சிறந்த அறிவு கொண்ட மனிதப் பிறவிகளான ஆயர்குலப் பெண்கள்

என்றுள்ள பலவும் எந்தவிதமான வேற்றுமையும் இன்றி, எந்தவிதமான காரணமும் இல்லாமல், க்ருஷ்ணனிடம் ஏற்பட்ட ப்ரேமையால் ப்ரவசப்பட்டதைக் கண்டு, (அற்புதம் என்னக் கண்டோம்) - பெரியாழ்வார் திருமொழி (3-6-1) - நங்கைமீர்க ளிதோரற்புதம் கேளீர் - என்பதற்கு ஏற்ப, ஈடுபட்டு நிற்பதைச் சான்றோர்கள் கூறக்கண்டோம். எனவே எந்தவிதமான காரணமும் இன்றி பகவான் ஏற்பது என்பதை இவ்விதம் உள்ள செயல்பாடுகளால் காண்கிறோம் என்பதால், நம்மாழ்வாருடைய பக்தியும், பகவான் எந்தவிதமான காரணமும் இன்றி முயற்சி செய்ததன் பலனே ஆகும் என்று கூறுவதில் எந்தவிதமான தோஷம் இல்லை.

106. பட்டத்துக்குறிய வானையு மரசும் செய்யுமவை ஆராயாது.

**அவதாரிகை** - ஆனால் இப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரிக்குமளவில் எல்லாரையும் விஷயீகரிக்கலாயிருக்க, இங்ஙனே இவரொருவரை விஷயீகரிக்கைக்கு அடியென்னென்னு மபேக்ஷையிலே, நிரங்குச ஸ்வதந்த்ரனானவன் ஈச்வரத்வச் செருக்காலே செய்யுமவற்றுக்கு அடி ஆராயப்படாதென்னுமத்தை லௌகிக த்ருஷ்டாந்தத்தாலே தர்சிப்பிக்கிறார் (பட்டத்துக்குரியவானையும் அரசும் செய்யுமவை யாராயாது) என்று.

**விளக்கம்** - "ஆனாலும் காரணம் இன்றி ஸர்வேச்வரன் ஒருவரைத் தன்னிடம் ஏற்றுக்கொள்வான் என்றால், அனைவரையும் அது போன்று ஏற்கலாம் அல்லவோ? இப்படி உள்ளபோது நம்மாழ்வார் ஒருவரை மட்டும் இவ்விதம் ஏற்பதற்குக் காரணம் என்ன?", என்று கேட்கலாம் இதற்கு விடையாக, "தடையற்ற சுதந்திரம் கொண்டவனாகிய ஸர்வேச்வரன் தன்னுடைய ஈச்வரத்தன்மை என்பதன் காரணமாகச் செய்யும் செயல்களுக்குக் காரணம் ஆராய இயலாது", என்று கூற முடிவு செய்து, அதனை இந்த உலகில் காணப்படும் ஓர் உதாரணம் மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அராஜகமான தேசத்திலே பட்டத்துக்குரிய ஆனையைக் கண்ணைக் கட்டிவிட்டால் அவ்வானை யெடுத்தவ னொருவன் ராஜாவாமளவில் அல்லாதாரெல்லாம் கிடக்க, இவனை இப்படி இது எடுக்கைக்கடி யென்னென்றும், ராஜாவானவன் தன் செருக்காலே ஒருத்தியைத் தனக்கு மஹிஷியாகப் பரிக்ரஹிக்கு

மளவில் இங்ஙனொத்த ஸ்த்ரீகள் பலருமுண்டாயிருக்க இவளை இப்படி இவன் பரிக்ரஹிக்கைக் கடியென்னென்றும் ஆராய்வாரில்லை யென்றபடி.

**விளக்கம்** - (பட்டத்துக்கு உரிய ஆனை செய்யுமது ஆராயாது) - அரசன் இல்லாத நாட்டில், பட்டத்துக்கு உரிய யானையுடைய கண்களைக் கட்டிவிட்டால், அந்த யானை யாரைத் தேர்ந்தெடுக்கிறதோ அவனே அரசன் என்று கூறுவர்; அப்போது, "மற்ற பலரும் உள்ளபோது இவனை மட்டும் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன?" என்று யாரும் ஆராய்வதில்லை. (அரசு செய்யும் அவை ஆராயாது) - அரசன் ஒருவன் தனது செருக்கிற்கு ஏற்றபடி ஒரு பெண்ணைத் தனது பட்டமஹிஷியாக ஏற்கும்போது, "இவளைப் போன்றே பல பெண்கள் உள்ளபோது இவளை மட்டும் தேர்ந்தெடுத்தது ஏன்?" என்று யாரும் ஆராய்வதில்லை.

**வ்யாக்யானம்** - இத்தால் சொல்லிற்றாயிற்று, "ஸ்வாதந்த்ர்ய மைச்வர மபர்யநு யோஜ்யமாஹு:" என்கிறபடியே பர்யநுயோஜ்யமல்லாத ஐச்வர ஸ்வாதந்த்ர்ய யுக்தனாய், "பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே" என்கிறபடியே ஸ்வாதீந பந்தமோக்ஷனாய், வேண்டினபோது வேண்டின வஸ்துவை வேண்டினபடியாக்க வல்லனுமான ஸர்வேச்வரன், அஹேதுகமாயிருக்க ஆதர விஷயமாம்படி பட்டத்துக்குரிய வானையும் அரசும் செய்யுமவைபோலே ஸ்வாதீனமுமாய் ஸ்வார்த்தமுமான ஆத்மவஸ்துக்களிலே ஓரொன்றை ஈச்வரத்வச் செருக்கடியான ஸ்வேச்சையாலே ஸ்வவிநியோகார்ஹமாம்படி விஷயீகரித்தால், அல்லாத ஆத்மவஸ்துக்களெல்லாம் கிடக்க இவ்வஸ்துவை இவனிப்படி விஷயீகரிப்பானென்னென்று இதுக்கடி ஆராயப்படா தென்கை.

**விளக்கம்** - ஆக இங்கு கூறப்பட்டது என்னவென்றால் ஸ்ரீவைகுண்டஸ்தவம் (55) – ஸ்வாதந்த்ர்ய மைச்வர மபர்யநு யோஜ்யமாஹு: - ஸர்வேச்வரனாக அவன் உள்ளதால் அவனுடைய சுதந்திரத்தன்மை என்பது "நீ ஏன் இவ்விதம் செய்தாய்" என்று யாராலும் கேட்பதற்குத் தகுந்தது அல்ல - என்பதற்கு ஏற்ப, எந்தவிதமன தடையும் இல்லாத ஈச்வரத் தன்மை என்னும் சுதந்திரம் கொண்டவனாகவும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-88) – பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே - உன்னாலேயே ஒருவன் பந்த மோக்ஷத்திற்கு உட்படுத்தப்படுகிறான், ஆகவே நீயே காப்பாற்றவேண்டும் -

என்பதற்கு ஏற்ப, பந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டையும் தனது கட்டுப்பாட்டில் வைத்தவனாகவும், விண்ணப்பிக்கும்போது விண்ணப்பித்தவனை அவ்விதமே ஆக்கவல்லவனும் ஆகிய ஸர்வேச்வரன், எந்தவிதமான காரணமும் இன்றி, அனைவருடைய விருப்பத்திற்கும் ஏற்கலாம்படியாக பட்டத்து யானையும் அரசனும் செய்யும் செயல்கள் போன்று, தனக்கு உரிமையாக உள்ளவையும் தனக்காகவே உள்ளவையும் ஆகிய ஆத்மாக்களில் ஏதோ ஒன்றை, தனது ஈச்வரத்தன்மை என்ற செருக்கு ஏற்படக் காரணமாக உள்ள தனது இச்சையால், தனது பயனுக்குத் தகுதியாகும்படிச் தேர்ந்தெடுக்கிறான். அப்போது "மற்ற பல ஆத்மாக்களும் உள்ளபோது இந்த ஆத்மாவை மட்டுமே இவன் இவ்விதம் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன?" என்று அந்தக் காரணத்தை ஆராய இயலாது என்று கருத்து.

107. முந்நீர் வாழ்ந்தார் சூட்டும் கோவையாழி யென்கிற ஸாக்ஷாத் க்ருத ஸ்வபர வ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிநாதிகளுண்டாகில் தோன்றும்.

**அவதாரிகை** - இங்ஙன் சொல்லுவானென்? இவர் தமக்கு ஜ்ஞாத ஸுக்ருதங்களன்றோவில்லை யென்றது; யாத்ருச்சிகாத்ய ஜ்ஞாத ஸுக்ருதங்களடியாக அங்கீகரித்தானானாலோ வென்ன வருளிச்செய்கிறார் (முந்நீரென்று தொடங்கி).

**விளக்கம்** - "நம்மாழ்வாரை இவ்விதம் ஸர்வேச்வரன் ஏற்பதற்கு, அவரிடம் அவராகவே அறிந்த செய்து வந்த புண்ணியங்கள் ஏதும் இல்லை. ஆனால் அவர் அறியாமல் செய்த நற்செயல்கள் காரணமாக அவன் ஏற்றான்", என்று கூறலாம் அல்லவோ? இந்தக் கேள்விக்கு விடை அருச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "முந்நீர் ஞாலம் படைத்த வெம்முகில் வண்ணனே" என்று தொடங்கி, ஸர்வேச்வரன் "விசித்ரா தேஹ ஸம்பத்தி" இத்யாதிப்படியே ஸ்வசரண கமல ஸமாச்ரயணோபகரணமான கரண களேபரங்களை இவ்வாத்மாவுக்குண்டாக்கி உஜ்ஜீவிப்பிக்கையே ப்ரயோஜநமாக ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ண, நான் அவன் தந்த சரீரத்தைக் கொண்டு அவனை ஆச்ரயிக்கையன்றிக்கே, அதன் வழியேயொழுகி ஸம்ஸரித்துப் போந்தேனென்று ஸ்வவ்ருத்தாந்தத்தையும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (முந்நீர் என்கிற ஸ்வவ்ருத்தாந்தர்க்கு) - திருவாய்மொழி (3-2-1) – முந்நீர் ஞாலம் படைத்த வெம்முகில் வண்ணனே – என்ற பாசுரத்தில், விசித்ரா தேஹ ஸம்பத்தி - அவனை வணங்குவதற்காக விசித்ரமாக உள்ள இந்தச் சரீரம் அளிக்கப்பட்டது - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனாகிய தன்னுடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டுவதற்கு ஏற்ற உபாயமாக உள்ள இந்தச் சரீரத்தை இந்த ஜீவாத்மாவுக்கு உண்டாக்கி, இந்த ஆத்மாவானது மோக்ஷத்தினை அடையும்படிச் செய்வதையே பலனாகக் கொண்டுள்ள இந்த உலகத்தைப் படைத்தான்; ஆனால் நானோ அவன் தந்த சரீரத்தைக் கொண்டு அவனை அடையாமல், அதனைக் கொண்டு ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளேன் என்று [நம்மாழ்வாராகிய] தனது செயல்பாடுகளையும்.

**வ்யாக்யானம்** – "வாழ்ந்தார்கள்" என்று தொடங்கி, முன்பு ஜீவித்தவர்கள் ஜீவித்த ப்ரகாரம் மஹாவர்ஷ ஜலபுத்புதம் போலே நசித்து நசித்து அத:பதித்தார்களென்னுமதொழிய, ஸ்ருஷ்டிகாலம் தொடங்கி இன்றளவும் வர ஜீவித்தவர்கள் ஒருபடிப்பட ஜீவித்தே போந்தார்களென்னு மிவ்வர்த்தந்தானில்லை யென்று ஐச்வர்யவான்களாய் முன்பு ஜீவித்துப் போந்தவர்கள் வ்ருத்தாந்தத்தையும்,

**விளக்கம்** – (வாழ்ந்தார் என்கிற பர வ்ருத்தாந்தர்க்கு) - திருவாய்மொழி (4-1-6) – வாழ்ந்தார்கள் - என்று தொடங்கி, முன்பு வாழ்ந்தவர்கள் அவ்விதம் வாழ்ந்த விதம் என்பது, மிகுதியான மழையில் எழுகின்ற சிறிய செடிகள் அல்லது பூச்சிகள் போன்று அழிந்து அழிந்து ஆழ்ந்தபடியே இருந்தார்கள் அல்லாமல், ஸ்ருஷ்டிகாலம் தொடங்கி இன்று முடிய வாழ்ந்தவர்கள் ஒரே போன்று வாழ்ந்தனர் என்னும் நிகழ்வு இல்லை என்பதை உணர்த்தும்விதத்தில், மிகுந்த செல்வம் கொண்டவர்களாக முன்பு வாழ்ந்து சென்றவர்கள் சரிதங்களையும்,

**வ்யாக்யானம்** – "சூட்டு நன்மாலைகளை" என்று தொடங்கி, பரமபதவாஸிகள் ஸமாராத நோபகரணங்களை தரித்துக் கொண்டு ஸமாராதநம் பண்ணாநிற்கச் செய்தே அத்தை யுபேக்ஷித்துத் திருவாய்ப்பாடியில் வெண்ணெயை விரும்பி வந்தவரித்தமை சொல்லுகையாலே பரமபதத்திலுள்ளார் வ்ருத்தாந்தத்தையும்,

**விளக்கம்** - (சூட்டும்) - திருவிருத்தத்தில் (21) - சூட்டு நன்மாலைகளை - என்று தொடங்கி பரமபதத்தில் உள்ளவர்கலள் அவனை ஆராதனம் செய்வதற்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு அவனை ஆராதனம் செய்தபடி உள்ளபோது, அதனை விடுத்து திருவாய்ப்பாடியில் உள்ள வெண்ணெயை மிகவும் விரும்பி வந்து அவதரித்த செயலைக் கூறுவதால் பரமபதத்தில் உள்ளவர்களுடைய செயல்களையும்.

**வ்யாக்யானம்** – "கோவை வாயாள் பொருட்டு" என்று தொடங்கி, தேச கால விப்ரக்ருஷ்டங்களான ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் விரோதி நிரஸநாபதாநங்களை தத்தத் தேசகாலங்களிற்போலே தர்சித்து, நீ இப்படி விரோதி நிரஸநம் பண்ணுகிற தசைகளிலே உதவி சிசிரோபசாரம் பண்ணப்பெற்றிலே னாகிலும், என்னுடைய ஹ்ருதயாதிகளே உனக்கு போகோபகரணமாம்படி என் பக்கலிலே வ்யாமுக்தனாவதே யென்கையாலும், "ஆழியெழ" என்று தொடங்கி, த்ரைவிக்ரமக்ரமணம், ஸமுத்ர மதநம், பூம்யுத்தரணம், ஜகந்நிகரணம், பாரத ஸமர நிர்வஹணம், ஹிரண்ய நிரஸநம், ராவணவதம், பாண கரச்சேதநம், ஜகத்ஸ்ருஷ்டி, கோவர்த்தநோத்தரண மாகிற பூர்வ சரிதங்களைப் பத்தும் பத்தாகப் பேசுகையாலும், ஈச்வர வ்ருத்தாந்தங்களையும் ஒரு உபாதியற ஒரு போகியாக ஸாக்ஷாத்கரித் தருளிச்செய்கிற விவர்க்கு

**விளக்கம்** - (கோவை) - திருவாய்மொழி (4-3-1) - கோவை வாயாள் பொருட்டு - என்ற பாசுரத்தில் இடம், காலம் போன்றவற்றால் வெவ்வேறாக உள்ளதான இராமன் மற்றும் க்ருஷ்ணன் ஆகிய அவதாரங்களில் பகைவர்களை அழித்தமை என்பதை அந்தந்த இடம் மற்றும் காலம் ஆகியவற்றில் உள்ளது போன்றே தரிசித்து, "நீ இவ்விதம் பகைவர்களை அழிக்கும்போது, அந்த இடம் மற்றும் காலம் ஆகியவற்றில் நான் இருந்து உனக்கு அந்தக் களைப்பு நீங்கும்படியாக ஏதும் உதவவில்லை; ஆனாலும் எனது நெஞ்சம் போன்றவை உனது இன்பத்துக்குப் பயன்படும்படியாக என்னிடம் நீ ப்ரேமை கொண்டவனாக உள்ளாயே", என்பதாலும். (ஆழி) – திருவாய்மொழி (7-4-1) – ஆழி எழ - என்ற பாசுரத்தில் மூன்றடி அளத்தல், கடலைக் கடைதல், பூமியை மேலே உயர்த்தல், உலகத்தை உண்ணுதல், மஹாபாரத யுத்தத்தை நடத்துதல், ஹிரண்யனை அழித்தல், இராவணனை வதைத்தல், பாணாஸுரனுடைய தோள்களைத் துண்டித்தல், உலகத்தைப் படைத்தல், கோவர்த்தன மலையை எடுத்தல் போன்ற பலவிதமான நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பலமடங்கு உரைப்பதாலும், (என்கிற ஸாக்ஷாத்க்ருத பர வ்ருத்தாந்தர்க்கு) -

ஸர்வேச்வரன் செய்த செயல்களை எந்தவிதமான தடையும் இன்றி ஒரு போகியாக மட்டுமே நின்று அருளிச்செய்கிற நம்மாழ்வாருக்கு.

**வ்யாக்யானம்** – அஜ்ஞாதமான தொன்றில்லாமையாலே தம்மை ஈச்வரனங்கீகரிக்கைக்கடியான யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்க ளுண்டாகில் அல்லாதவற்றோபாதி ப்ரகாசிக்குமிறே யென்றபடி. இத்தால், ப்ரகாசித்ததாகில் அருளிச்செய்வர்; இப்படி யருளிச்செய்யக் காணாமையாலும், கேவல நிர்ஹேதுக ப்ரஸாத ப்ரகாசக வசநங்கள் பலவுமருளிச்செய்தமை காண்கையாலும், அவையும் இவர்க்கில்லை யென்றதாய்த்து.

**விளக்கம்** - (யாத்ருச்சிகாதிகள் உண்டாகில் தோன்றும்) - அறியாத விஷயங்கள் என்று ஏதும் இல்லாததால், தம்மை ஸர்வேச்வரன் ஏற்றுக் கொண்டதற்கான காரணமாக "தற்செயலாக விளைந்த புண்ணியங்கள்" என்று தன்னிடம் ஏதும் இருந்தது என்றால், மற்ற விஷயங்கள் போன்று அதுவும் நம்மாழ்வாருக்கு விளங்கியிருக்கும். அவ்விதம் அவருக்கு விளங்கியிருந்தால் அதனை அவர் அருளிச்செய்திருப்பார்; ஆனால் இவ்விதம் அவர் அருளிச்செய்யவில்லை என்பதாலும், ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி அருள் புரிவான் என்பது போன்ற பல வரிகளை இவர் அருளிச்செய்துள்ளதாலும், அது போன்றுள்ள "தற்செயலான புண்ணியங்கள்" முதலான ஏதும் இவரிடம் இல்லை என்றாகிறது.

108. செய்தநன்றி தேடிக்காணாதே கெடுத்தாய் தந்தாயென்ற அத்வேஷாபிமுக்யங்களும் ஸத்கர்மத்தாலல்ல.

**அவதாரிகை** - இப்படி அங்கீகார ஹேதுவாயிருப்பதொரு ஸுக்ருதமில்லையே யாகிலும் அத்வேஷாபிமுக்யங்கள் ஸுக்ருதமடியாக வானாலோ வென்ன வருளிச்செய்கிறார் மேல் (செய்த நன்றி தேடிக்காணாதே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் நம்மாழ்வாரை ஸர்வேச்வரன் ஏற்றுக்கொண்டதற்குக் காரணமாக இவரிடம் புண்ணியங்கள் ஏதும் இல்லை என்றாலும், "அவனை வெறுக்காமை, அவனிடம் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இருத்தல்" போன்ற தன்மைகள் இவரிடம் இருந்து, அதனால்

அவன் இவரை ஏற்றுக்கொண்டிருக்கலாம் அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "வாட்டாற்றாற் கெந்நன்றி செய்தேனா வென்னெஞ்சில் திகழ்வதுவே" என்று ஸர்வேச்வரன் தம்மை விஷயீகரிக்கைக்கு உடலாகத் தாம் செய்த ஸுக்ருதமேதேனுமுண்டோவென்று தேடிக் காணாதே, "என்னைத் தீமனம் கெடுத்தாய்", "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்று தீமனம் போகையாகிற அத்வேஷமும், மருவித் தொழும் மனமுண்டாகையாகிற ஆபிமுக்யமும், இரண்டும் அவனாலே உண்டாய்த்தென்று தாமே நிஷ்கர்ஷிக்கையாலே அத்வேஷாபிமுக்யங்களும் ஸத்கர்மமடியாக வந்ததன்றென்கை.

**விளக்கம்** – (செய்த நன்றி தேடிக் காணாதே) - திருவாய்மொழி (10-6-8) - வாட்டாற்றாற்கு எந்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தன்னை ஏற்றுக் கொண்டதற்குக் காரணமாகத் தன்னிடம் நற்செயல்கள் ஏதும் உண்டோ என்று ஆராய்ந்தபடி இருந்து அவற்றைக் காணாத காரணத்தால், (கெடுத்தாய் என்ற அத்வேஷமும் தந்தாய் என்ற ஆபிமுக்யமும்) - திருவாய்மொழி (2-7-8) – என்னைத் தீமனம் கெடுத்தாய் - என்பதற்கு ஏற்ப தீயமனம் என்ற வெறுப்பு நிலையும், திருவாய்மொழி (2-7-7) - மருவித் தொழும் மனமே தந்தாய் - என்பதற்கு ஏற்ப அவனை அண்டி நின்று தொழும்படி உள்ள மனம் ஏற்படுவதான நிலையும், (ஸத்கர்மத்தால் அல்ல) - இந்த இரண்டு நிலைகளும் அவனால் ஏற்பட்டன என்று நம்மாழ்வாராகிய தானே உறுதியாக உரைப்பதால், அத்வேஷம் மற்றும் ஆபிமுக்யம் ஆகிய இரண்டும், நல்ல கர்மங்கள் காரணமாக வந்தது அல்ல என்றாகிறது.

109. எண்ணிலும் வரும் கணனைக்கு எண்டானுமில்லை.

**அவதாரிகை** - ஆனால் பரமபக்திக்கு முகம் காட்டுமோபாதி, பரிகணனைக்கும் முகம் காட்டு மென்றாரிறே அவர்தாமே; அந்தப் பரிகணனைதான் இவர்க்குண்டாய்த்தானாலோ வென்ன வருளிச்செய்கிறார் (எண்ணிலும் வரும் கணனைக் கெண்தானுமில்லை) என்று.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் ஒருவனுடைய பரமபக்திக்கு முகம் காண்பிப்பது போன்று, அவனை எண்ணுவதற்கும் முகம் காண்பிப்பான் என்று இவரே அருளிச்செய்துள்ளார். ஆகவே அத்தகைய "எண்ணியபடி இருத்தல்" என்ற நிலையே இவருக்கு ஏற்பட, அதன் காரணமாகவே ஸர்வேச்வரன் இவருக்கு க்ருபை செய்தான் என்று கூறலாம் அல்லவோ? இந்த ஐயத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "எண்ணிலும் வருமென்னினி வேண்டுவம்" என்றது, ஈச்வர குணாதிக்யம் சொன்ன வித்தனை போக்கி, அந்த பரிகணனைக்குத் தம்மோடு அந்வய மில்லாமை கண்டு, "நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று ஓரெண்டானு மின்றியே வந்தியலுமாறு – கண்டாயே" என்று கார்யங்கள் பலிக்குமிடத்தில், "எண்ணிலும் வரும்" என்றது தான் மிகையாம்படி ஓரெண்தானுமின்றி யிருக்கச்செய்தே பலித்துக்கொடு நிற்கிறபடி கண்டாயே யென்று தம் திருவுள்ளத்துக்கு மூதலிக்கையாலே அதுவும் இவர்க் கில்லை யென்கை.

**விளக்கம்** - (எண்ணிலும் வரும் கணனைக்கு) – திருவாய்மொழி (1-10-2) - எண்ணிலும் வருமென்னினி வேண்டுவம் - என்ற பாசுரத்தில், ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்கள் அனைத்தையும் கூறிய பின்னரும், அவற்றைக் குறித்தும் அவனைக் குறித்தும் எண்ணியபடி இருத்தல் என்பது தன்னிடம் இல்லை என்பதைக் கண்டார். அதனால், (எந்தானும் இல்லை) – திருவாய்மொழி (1-10-5) – நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று ஓரெண்டானு மின்றியே வந்தியலுமாறு – கண்டாயே – என்பதற்கு ஏற்ப, செயல்கள் அனைத்தும் நிறைவேறுவதற்கு "எண்ணிலும் வரும்" என்பது அவசியம் என்றாலும், அத்தகைய எண்ணியபடி இருத்தல் என்பது இல்லாதபோதிலும், ஸர்வேச்வரன் குறித்த செயல்கள் அனைத்தும் நிறைவேறியபடி உள்ளதைக் கண்டாய் அல்லவோ என்று தனது திருவுள்ளத்திற்கு நிரூபிப்பதால், இவருக்கு "அவனை எண்ணியபடி இருத்தல்" என்ற நிலை இருந்தது, அதன் காரணமாகவே ஸர்வேச்வரன் இவரைக் கடாக்ஷித்தான் என்பதும் பொருந்தாது.

110. மதியால் இசைந்தோ மென்னும் அநுமதீச்சைகள் இருத்துவ மென்னாத வென்னை இசைவித்த என்னிசைவினது.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - அதுதான் வேணுமோ? தமக்கு அநுமதீச்சைக ளுண்டாக வருளிச்செய்தாரே? அவைதான் ஹேதுவானாலோ வென்ன, அவையும் அவனாலே யுண்டான தென்கிறார் "மதியா லிசைந்தோமென்று தொடங்கி).

**விளக்கம்** - அத்தகைய எண்ணம் இவரிடம் இருந்தது என்று இவர் வெளிப்படையாகக் கூறவேண்டுமோ? இவர் தம்முடைய பாசுரங்களில் தனக்கு அநுமதியும் [ஸர்வேச்வரனை விலக்காமல் இருத்தல்] இச்சையும் உள்ளதாக அருளிச்செய்தார்; ஆகவே அவை காரணமாக ஸர்வேச்வரன் கடாக்ஷித்தான் என்று கூறலாம் அல்லவோ என்றால், அவையும் தனக்கு அவனாலேயே ஏற்பட்டது என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "வைத்தேன் மதியா லெனதுள்ளத் தகத்தே" என்று அநுமதி மாத்ரத்தாலே அவனை என்னெஞ்சுக்குள்ளே வைத்தேனென்றும், "யானு மென்னெஞ்சு மிசைந்தோம்" என்று விரோதியைப் போக்கும்படியாக நானும் மென்னெஞ்சு மிசைந்தோ மென்றும் தமக்குண்டாகச் சொன்ன அநுமதியும் இச்சையும், "யானொட்டி யென்னு ளிருத்துவ மென்றிலன்" என்று அவன் தம்முள்ளே புகுந்திருப்பதாகக் கேட்டவளவில் நான் இசைந்து என்னுடைய ஹ்ருதயத்தில் இருத்துவோ மென்றிலே னென்றபடியே அவனை உள்ளேயிருத்தவோ மென்றிசையாத தம்மை "இசைவித்தென்னை" என்கிறபடியே வருந்தி இசையப் பண்ணி, "என்னிசைவினை" என்று நானல்லேனென்று அகலாதபடி என்னிசைவுதானாய்ப் புகுந்தவனை யென்னும்படி யத்னித்த ஈச்வரனுடைய க்ருஷி பலமென்கை. அநுமதீச்சைகள் தமக்கு முன்னே உண்டாயிருந்ததாகில், "இருத்துவமென்றிலன்", "இசைவித்தென்னை" என்று மருளிச் செய்யக்கூடாதிறே.

**விளக்கம்** - (மதியால் என்னும் அநுமதி) – திருவாய்மொழி (8-7-10) – வைத்தேன் மதியால் எனது உள்ளத்து அகத்தே – என்று அநுமதி மட்டுமே கொண்டு அவனை எனது நெஞ்சத்தில் வைத்தேன் என்று தனக்கு உள்ளதாகக் கூறிய அநுமதியும், (இசைந்தோம் என்னும் இச்சை) – பெரியதிருவந்தாதி (26) – யானும் என் நெஞ்சும் இசைந்தோம்- என்று அவனை அடையத் தடையாக உள்ள விரோதியைப் போக்கும்படியாக நானும் எனது நெஞ்சமும் ஒன்றாக ஒப்புக் கொண்டோம் என்று தனக்கு உள்ளதாகக் இச்சையும். (இருத்துவம் என்னாத என்னை) – திருவாய்மொழி (1-7-7) – யானொட்டி யென்னு ளிருத்துவ மென்றிலன் - அவன் எனது மனதில் புகுந்திருப்பதைக் குறித்து

அறிந்தபோதிலும், நான் அதனை ஏற்றுக்கொண்டு அவனை எனது மனதிலேயே நிலைத்திருக்கும்படிச் செய்வேன் என்று கூறவில்லை – என்பதற்கு ஏற்ப, அவனை உள்ளேயே இருக்கும்படிச் செய்வேன் என்று இசையாத நம்மாழ்வாராகிய தன்னை. (இசைவித்த என் இசைவினது) – திருவாய்மொழி (5-8-9) – இசைவித்தென்னை - என்பதற்கு ஏற்ப வருந்தி இசையும்படிச் செய்து, திருவாய்மொழி (1-7-4) - என்னிசைவினை - என்பதற்கு ஏற்ப "நான் அதற்குத் தகுந்தவன் அல்லன்" என்று அகன்று செல்லாதபடி, எனது இசைவாகவே புகுந்தவனை - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்து முயற்சிகளும் செய்த ஸர்வேச்வரனுடைய செயல்பாடுகளின் பலனே ஆகும். அநுமதியும் இச்சையும் ஆழ்வாருக்கு முன்பே இருந்தது என்றால், "இருத்துவம் என்றிலன்" என்றும், "இசைவித்து என்னை" என்றும் அருளிச்செய்திருக்கமாட்டார் அல்லவோ?

111. மாதவன் மலை நீர் நிழலென்று ஏறிடுமது வ்யாவ்ருத்த்யுக்தி அந்யார்த்தம் அபுத்தி பூர்வகம் அவிஹிதம் பலவிஸத்ருசம் பலாந்தர ஹேது.

**அவதாரிகை** – இவையொன்றுமில்லையாகிலும் "மாதவன்" என்றும், "திருமாலிருஞ்சோலை மலை" என்றும் சொன்ன உக்தி மாத்ரங்களைப் பற்றாசாகக் கொண்டு விஷயீகரித்தானாக வருளிச்செய்கையால், அவைதானுண்டே யென்ன, அவை பேற்றுக்கடியாகச் சொல்லத் தக்கவை யன்றென்னு மிடத்தை மற்றுமிவற்றோடு ஸஹபடிதங்களாகச் தக்கவற்றையும் கூட்டிக்கொண் டருளிச்செய்கிறார் (மாதவன் மலை நீர் நிழலென்றேறிடுமதென்று தொடங்கி).

**விளக்கம்** - இது போன்று ஸர்வேச்வரன் இவரை ஏற்றுக்கொள்ள வேறு எந்தவிதமான காரணமும் இல்லை என்றாலும், "மாதவன்", "திருமாலிருஞ்சோலை மலை" என்று இவர் கூறிய சொற்களை மட்டுமே ஒரு வாய்ப்பாகக் கொண்டு, ஸர்வேச்வரன் தன்னை ஏற்றுக் கொண்டதாக இவரே அருளிச்செய்துள்ளதால், அது போன்று உரைத்தவற்றையே காரணமாகக் கூறலாம் அல்லவோ? ஆனால் அவை பேற்றுக்குக் காரணமாகக் கூறத்தக்கவை அல்ல என்பதை, அவற்றுடன் ஒருசேர சிந்திக்கத்தக்க வேறு சிலவற்றையும் சேர்த்துக் கொண்டு விளக்குகிறார்.

 Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, "மாதவனென்றதே கொண்டென்னை யினியிப்பாற்பட்டது யாதவங்களும் சேர்கொடேனென்று என்னுள் புகுந்திருந்து" என்று அந்த:புரவாஸிகள் சொல்லும் "மாதவன்" என்கிற திருநாமத்தை அஹ்ருதயமாகச் சொன்னவளவிலே, அத்தையே குவாலாகக் கொண்டு, அல்லாத திருநாமங்களுக்கும் இதுக்கும் வாசியறியாத வென்னை விஷயீகரித்து, என்னுள்ளே புகுந்திருந்து, ஸகல கர்மங்களையும் போக்கினானென்றும், "திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்னத் திருமால் வந்தென் நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்று ஓரோ தேசங்களில் மலைகளைச் சொல்லாநின்றால், ஓரோ விசேஷங்களை யிட்டுச் சொல்லுமோபாதி யாத்ருச்சிகமாக "திருமாலிருஞ்சோலைமலை யென்றேன்" என்னுங்காட்டில் தானுகந்தருளின திருமலையின் பேரை விரும்பிச் சொன்னேனாகக் கொண்டு நிரபேக்ஷனானதான், பிராட்டியோடே கூட வந்து என்னுள்ளே பரிபூர்ணமாகப் புகுந்தானென்றும் சொல்லும்படி, மாதவனென்று நம் பேரைச் சொன்னார்; திருமாலிருஞ்சோலைமலை யென்று நம்மூரைச் சொன்னாரென்றும் ஏறிடுகிறவை - ஈச்வரனுகந்த திருநாமமென்றும், அவன் உகந்து வர்த்திக்கிற திருமலை யென்றும் சொன்னவையல்ல; பேருக்கும் பேருக்கும் மலைக்கும் மலைக்கும் வ்யாவ்ருத்தி சொன்ன மாத்ரம்.

**விளக்கம்** – (மாதவன் என்று) – திருவாய்மொழி (2-7-3) – மாதவனென்றதே கொண்டென்னை யினியிப்பாற்பட்டது யாதவங்களும் சேர்கொடேனென்று என்னுள் புகுந்திருந்து - என்று கூறுவதற்கு ஏற்ப, அந்தப்புரத்தில் உள்ளவர்கள் கூறுவதான "மாதவன்" என்னும் திருநாமத்தை மனதளவில் ஒட்டும்படியாகச் சொல்லாமல் மேலோட்டமாக உரைத்தபோதிலும், அதனையே ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு, இதனைத் தவிர்த்து உள்ள திருநாமங்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு அறியாதபடி உள்ள என்னை ஏற்றுக் கொண்டு, என்னுள்ளே புகுந்து, அங்கேயே நிலைத்து நின்று எனது அனைத்து கர்மங்களையும் போக்கினான். (மலை என்று) – திருவாய்மொழி (10-8-1) - திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்னத் திருமால் வந்தென் நெஞ்சு நிறையப் புகுந்தான் - என்பதற்கு ஏற்ப ஒவ்வொரு இடங்களில் உள்ள மலைகள் குறித்துக் கூறியபடி வரும்போது, அவைகளுடைய சிறப்புகளை உரைப்பது போன்றே, தற்செயலாக "திருமாலிருஞ்சோலை" என்று உரைத்தேன்; அப்போது, தான் மகிழ்வுடன் உறையும் இடத்தை இவன் மிகவும் விருப்பத்துடன் உரைத்தான் என்று திருவுள்ளம் பற்றி, எதனையும் வேண்டாதபடி பெரியபிராட்டியுடன் கூடியவனாக எனது மனதில்

 Email:sridharan_book@yahoo.co.in

பரிபூர்ணமாகப் புகுந்தான். (ஏறிடுமது) – இவ்விதம் ஆழ்வார் உரைப்பது போன்று, “மாதவன் என்று நம்முடைய திருநாமத்தை உரைத்தார், திருமாலிருஞ்சோலை என்று நம்முடைய இருப்பிடத்தை உரைத்தார்” என்று ஆழ்வார் கூறியவற்றில் ஸர்வேச்வரன் அவனுடைய எண்ணங்களை ஏற்றிக் கொள்ளும் சிந்தனைகள்; (வ்யாவ்ருத்த்யுக்தி) - ஸர்வேச்வரன் மகிழ்வுடன் ஏற்கும் திருநாமம், அவன் உறைகின்ற இடம் என்றெல்லாம் ஆழமாக மனதில் எண்ணிக் கூறப்பட்டவை அல்ல; இவ்விதம் உரைக்கப்பட்டது என்னவென்றால் மற்ற திருநாமங்கள் மற்றும் இந்தத் திருநாமம், மற்ற மலைகள் மற்றும் இந்த மலை ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடு கூறிய அளவு மட்டுமே ஆகும்.

**வ்யாக்யானம்** - மற்றுமிவற்றோடு ஸஹபடிதமாய்ப் போருமவையான, “என்னடியார் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக் கொதுங்க நிழலைக் கொடுத்தாய்” என்றேறிடுகிறவை - தன் பயிர் தீயாமைக்காக நீருள்ளவிடத்தில் நின்றும், நெடும்துலையிட்டு இறைக்கிறதும், தனக்குச் சூது சதுரங்கம் பொருகைக்கும், காற்று வரவுக் கிருக்கைக்குமாக விரிவுண்டாகப் புறந்திண்ணை கட்டிவைக்கிறது மொழிய, பாகவதர்கள் விடாயைத் தீர்க்கைக்கும் அவர்களுக்கொதுங்க நிழலாகைக்கும் செய்கிறதல்லாமையாலே அந்யார்த்தம்.

**விளக்கம்** - (நீர் நிழல் என்று ஏறிடுமது) - இது போன்று ஸர்வேச்வரன் தானாகவே கற்பித்துக் கொள்ளும் இவற்றுடன் சேர்த்துக் கூறுவதான, “எனது அடியார்களின் தாகம் தீர்த்தான், அவர்கள் ஒதுக்குவதற்கு நிழலை அளித்தான்” என்று கற்பித்துக் கொள்வதானவை, (அந்யார்த்தம்) - தனது பயிர் வாடாமல் இருப்பதற்காக நீர் நிறைந்த இடத்திலிருந்து நீண்ட துலை இட்டு இறைப்பதும்; தான் சூது மற்றும் சதுரங்கம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்காகவும், காற்று வாங்கவும் வீட்டின் வெளிப்புறம் திண்ணை கட்டிவைப்பதும், இந்த இந்த காரணத்திற்கு அல்லாமல், பாகவதர்களுடைய தாகம் தீர்க்கவும் அவர்கள் ஒதுங்குவதற்காக நிழல் அமைப்பதும் என்பதற்காக அல்ல என்பதால், இவை வேறு ஒன்றைக் கருதியே ஆகும்; ஆனால் ஸர்வேச்வரன் எண்ணிக் கொள்வது வேறுவிதமாக ஆகும்.

**வ்யாக்யானம்** - இவைதான் இத்தனையும் இத்தலையில் நினைவின்றியிருக்க, அவன் அடித்தேறிடுகிறவை யாகையாலே புத்தி பூர்வகமுமல்ல. இவைதான் பல ஹேது தயா சாஸ்த்ர விஹிதங்களுமன்று. பகவத்விஷயீகாரமாகிற மஹாபலத்துக்கு இவை

ஸத்ருசமுமல்ல. இவையுண்டாய்த்தாகில் இவ்வருகே சில அல்பப்ரயோஜநங்களுக்கு ஹேதுவா மித்தனை யென்கை. ஆகையால் இவை பகவதங்கீகார ஹேதுவாக மாட்டாதென்று கருத்து.

**விளக்கம்** - (அபுத்தி பூர்வகம்) - இது போன்றுள்ள பல செயல்களும் இவர்கள் “இதற்காகச் செய்கிறோம்” என்னும் எண்ணம் ஏதும் இன்றிக்கே செய்தபோதிலும், ஸர்வேச்வரன் இவற்றை வேறுவிதமாகக் கற்பித்துக் கொண்டு நிற்பதால், இவர்கள் புத்தி அறிந்து செய்வது அல்ல. (அவிஹிதம்) - இது போன்ற செயல்கள் பலன் அளிப்பதற்கான காரணங்கள் என்று சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டவையும் அல்ல. (பல விஸாத்ருசம்) - ஸர்வேச்வரனால் ஏற்கப்படுதல் என்னும் மிகப் பெரிய பலனுக்கு இவை ஒத்தது அல்ல. (பலாந்தர ஹேது) - இவை இருந்தது என்றால், இவை வேறு சில பலன்களுக்குக் காரணமாக உள்ளன அல்லாமல், பகவான் ஏற்றுக்கொள்வதற்கான காரணமாகி விடாது.

**வ்யாக்யானம்** – கீழே “யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும்” என்றதுவும், இங்கே மாதவனித்யாதியாலே அவனேறிடத்தக்கவை சிலவுண்டாக இவர் தம்முடைய உக்தியாலே கண்டெடுத்துக் கழிக்கிறவிதுவும் தன்னில் சேரும்படி யெங்ஙனே யென்னில், யாத்ருச்சிகாதிகள்தான் பலவுமுண்டாகையாலே, அத்யுத்கடங்களாய் மஹாபலத்துக் குறுப்பாய் வந்து விழுமவையும் ஆபாஸங்களா யிருக்குமவையு முண்டாகையால் அத்யுத்கடங்களாய் அவனுக்கு ஹேதுவாகக் கொள்ளலாம்படி யிருக்குமவற்றைக் கீழே சொல்லிற்றாக்கி, ஆபாஸங்களாய் அவனாரோபித்துக் கொள்ளத்தக்கவற்றை இங்கே சொல்லிற்றென்று விபஜித்துக் கொள்ளுமளவில் விரோதமில்லை.

**விளக்கம்** - ஆனால் சூர்ணை 107ல் - யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும் – என்பதுடன், இந்தச் சூர்ணையில் – மாதவன் - என்று அவன் கற்பித்துக் கொள்ளத்தக்கபடியான செயல்கள் உள்ளன என்று கூறும் இவருடைய சொற்கள் மூலம் முரண்பாடு ஏற்படாதோ என்று கேட்கலாம். தற்செயலாக ஏற்படும் செயல்கள் என்பது பலவகைப்படும். மிகவும் பெரியவைகளாக, மிகப் பெரிய பலனை ஏற்படுத்தவல்ல செயல்கள் சில மட்டுமே இருக்கலாம்; மிகவும் சிறியதாக உள்ளவை சில மட்டுமே இருக்கலாம்; சூர்ணை 107ல், மிகவும் பெரியவைகளான, மிகவும் பெரிய பலன்களை அளிப்பதான காரணமாக வந்து சேர்வனவற்றை மட்டுமே கூறினார். ஆனால் இங்கு

மிகவும் சிறியவைகளாய் உள்ளபோதிலும், அவனால் கற்பிக்கப்பட்டவற்றைக் கூறினார். ஆக இரண்டிற்கும் வேறுபாடு உள்ளதால் முரண்பாடு இல்லை.

112. இவன் நடுவே அடியானென்று ஓலைப்படா ப்ரமாணம் பக்ஷபாதி ஸாக்ஷி வன்களவிலநுபவமாக இந்திர ஞாலங்கள் காட்டிக்கொள்ளக் காப்பாரற்று விதி சூழ்ந்தது.

**அவதாரிகை** - ஆனால் இவரை இப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரிக்க வேண்டுவானென்னென்னு மபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் மேல் "இவன் நடுவேயென்று" தொடங்கி.

**விளக்கம்** – ஆனால் ஸர்வேச்வரன் நம்மாழ்வாரை இப்படியாக எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்றுக் கொள்வது ஏன் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி ஒன்றை ஆரோபித்தாகிலும் விஷயீகரிக்குமிவன், "நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதன்" என்கிறபடியே நாதனாகையாலே நிர்ஹேதுகமாக வந்து, "அடியானிவ னென்றெனக் காரருள் செய்யும்" என்று "த்வம் மே" என்கிறபடியே இவன் என்னடியானென்று பிடிக்க, "அஹம் மே" என்கிறபடியே அதுக்கு இவர் இசையாமல் "என்னை நீ உன்னடியானென்றது எத்தாலே" என்ன; "இதம் மூல ப்ரமாணாத்" என்கிறபடியே இவரை இசைவிக்கைக்காக, "பதிம் விச்வஸ்ய", "ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞபதி:", "க்ஷராத்மாநாவீசநே தேவ ஏக:" இத்யாதிகளாலே சேதநாசேதநங்களடையத் தனக்கு சேஷமென்னுமித்தை ப்ரதிபாதிக்கிற வேதத்தை ப்ரமாணமாகக் காட்ட, அதுஎழுதா மறையாகையாலே அது ஓலைப்படா ப்ரமாணமென்று இவர் அத்தை அந்யதாகரித்துத் தம்முடைய அநாத்யநுபவத்தை ப்ரபலமாகக் கொண்டு நிற்கையாலே, ஆட்சியிலும் ப்ரபலமான தொடர்ச்சியை முன்னிட்டவளவில், அதுக்கும் ஸாக்ஷி ஆரென்று கேட்டவாறே, "ஸுதீஸ் ஸ்யாத்" என்கிறபடியே தத்வதர்சிகளான ஜ்ஞாநிகளை ஸாக்ஷியாகக் காட்ட, "தத்வ பக்ஷபாதீ ஸ:" என்கிறபடியே அவர்கள் உனக்குப் பக்ஷபாதிகளென்று அதுக்கும் இவர் கண்ணழிவு சொல்லுகையாலே,

**விளக்கம்** - (இவன்) – இப்படியாக ஏதேனும் ஒரு காரணத்தைத் தானாகவே கற்பித்துக் கொண்டாவது அங்கீகரிக்கும் ஸர்வேச்வரன். (நடுவே) – திருவாய்மொழி (1-7-5) - நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதன் – என்பதற்கு ஏற்ப, நாதன் என்பதால் எந்தவிதமான

காரணமும் இன்றி, (அடியானென்று) - திருவாய்மொழி (9-4-10) – அடியானிவ னென்றெனக் காரருள் செய்யும் - என்பதற்கு ஏற்ப, த்வம் மே – நீ எனக்கு உரியவன் - என்று உரைத்தபடி ஸர்வேச்வரன் நம்மாழ்வாரை “இவர் எனக்கு அடியார்” என்று பிடிக்க முயல்கிறான். அப்போது இவர் அதற்கு ஒப்புக்கொள்ளாமல், அஹம் மே – நான் எனக்கே உரியவன் - என்பதற்கு ஏற்ப, “என்னை உனது அடியான் என்று நீ பிடிக்க முயல்வது எதனால்?”, என்கிறார். இதற்கு ஸர்வேச்வரன், இதம் மூல ப்ரமாணாத் – இதற்கு வேதமே மூலப்ரமாணம் ஆகும் - என்று கூறுவதற்கு ஏற்ப இவரை ஒப்புக் கொள்ளச் செய்யும் விதமாக, புருஷஸூக்தம் – பதிம் விச்வஸ்ய - உலகின் நாதன் - என்றும், ச்வேதாஸ்வதர உபநிஷத் – ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞபதி: - ப்ரக்ருதி மற்றும் உயிர்களின் நாதன் - என்றும், ச்வேதாஸ்வதர உபநிஷத் - க்ஷராத்மாநாவீசநே தேவ ஏக: - ஸர்வேச்வரன் மட்டுமே அனைத்து உயிர்களையும் நியமிக்கிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து சேதநங்கள் மற்றும் அசேதநங்கள் தனக்கே வசப்பட்டவை என்பவை உணர்த்தும் வேதங்களை ப்ரமாணமாகக் கூறுகிறான். (ஓலைப்படா ப்ரமாணம்) - இதற்கு நம்மாழ்வார், “வேதங்கள் எழுதப்படாத மறைபொருள் என்பதால் அது ஓலைப்படா ப்ரமாணம்” என்று கூறி அதனைத் தள்ளி, எல்லையற்ற காலமாகத் தன்னைத் தொடர்ந்தபடி உள்ள கர்மம் போன்ற அனுபவங்களை மட்டுமே உறுதியாகப் பற்றியபடி நிற்பதால், தொடர்ந்து ஸர்வேச்வரன் தான் அனைத்தையும் நியமித்தபடி உள்ளதைக் கூறினான். (ஸாக்ஷி) இதனைக் கேட்ட நம்மாழ்வார், “அதற்குச் சாட்சி ஏதேனும் உள்ளதோ?”, என்றார். இதற்கு ஸர்வேச்வரன் - ஸுதீஸ் ஸ்யாத் - என்பதற்கு ஏற்ப ஞானிகளைச் சாட்சியாகக் காண்பித்தான். (பக்ஷபாதி) - அப்போது நம்மாழ்வார் அவனிடம், தத்வ பக்ஷபாதீ ஸ: - அவன் உனக்கு மட்டுமே ஒரு தலையாகப் பேசுவான் - என்பதற்கு ஏற்ப ஞானிகள் அனைவரும் உனக்காக மட்டுமே பாரபட்சமாகப் பேசுபவர்கள் ஆவர்”, என்று உரைத்தார். தொடர்ந்து,

**வ்யாக்யானம்** – “வன்கள்வன்” என்று விஷயீகாராநந்தரம், அநாதிகாலம் நாம் “அஹம் மம” என்றிருந்து போந்தவநுபவம், ஆத்மாபஹாரமாகிற வலிய களவாலே வந்ததென்று இவரநுதபிக்கும்படி “இந்திர ஞாலங்கள் காட்டி யிவ்வேழுலகுங் கொண்ட” என்று இந்த்ரஜாலங்கள் போலே த்ருஷ்டி சித்தாபஹாரிகளான வடிவழகையும், சீலத்தையும் சேஷ்டிதத்தையும் காட்டி, வாய்மாளப் பண்ணி, ஆஸுரப்ரக்ருதியான மஹாபலி “என்னது” என்றிருந்த லோகத்தைத் தன்னதாக்கிக் கொண்டாப்போலே இவரையும், வடிவழகையும்

சீலாதிகளையும் காட்டி வாய்மாளப் பண்ணி இவர் “என்னது” என்றிருந்த ஆத்மாவைத் தனதாக்கிக் கொள்ளும்படியாக,

**விளக்கம்** - (வன்களவில் அநுபவமாக) - திருவாய்மொழி (5-1-4) – வன்கள்வன் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி வந்ததான “அஹம் மம – நான் எனக்கே உரியவன்” என்ற சிந்தனையானது, ஸர்வேச்வரனுக்கே சொந்தமான ஆத்மாவைத் தன்னுடையது என்று அபகரித்துக் கொண்ட பெரும் களவு காரணமாகவே வந்தது என்று உணர்ந்து இவர் வருந்தும்படியாக, (இந்திர ஞாலங்கள் காட்டி) - திருவாய்மொழி (9-5-5) – இந்திர ஞாலங்கள் காட்டி யிவ்வேழுலகுங் கொண்ட - என்பதற்கு ஏற்ப இந்த்ரஜாலங்கள் போன்று அனைவருடைய கண்கள் மற்றும் சித்தம் ஆகியவற்றைக் கவர்ந்து இழுக்கவல்ல தன்னுடைய வடிவழகு, சீலம், செய்கைகள் ஆகியவற்றைக் காண்பித்து வியக்கும்படிச் செய்து. (கொள்ள) - அசுரத்தன்மை கொண்ட மஹாபலியானவன், “என்னுடையது” என்று எண்ணியிருந்த அனைத்து லோகங்களையும் அவனிடமிருந்து அபகரித்துத் தன்னுடையதாக்கிக் கொண்டது போன்று வடிவழகு, சீலம் முதலானவற்றைக் காண்பித்து மயங்கும்படியாகச் செய்து, நம்மாழ்வார் “என்னுடையது” என்று எண்ணியிருந்த ஆத்மாவை ஸர்வேச்வரன் தன்னுடையது என்று கொள்ளும்படியாக,

**வ்யாக்யானம்** – “விதிவாய்க்கின்று காப்பாரார்” என்று க்ருபா ஜநிகையான இவள் காக்கவோ? க்ருபா பரதந்த்ரனான நீ காக்கவோ? க்ருபா பாத்ரமான நான் காக்கவோ வென்னும்படி ஒருவரால் நிவாரிக்கவொண்ணாதபடி பெருகுவதாய், ஸ்வதந்த்ரனான தன்னாலும் தப்பவொண்ணாதபடியிருக்கையாலே விதி சப்த வாச்யையா யிருந்துள்ள க்ருபை, “எனைத்தோர் பிறப்பும் – எதிர்சூழல்புக்கு எனக்கே யருள்கள் செய்ய - அம்மான் த்ரிவிக்ரமனை – விதி சூழ்ந்தது” என்று அநேக ஜந்மங்கள் நான் பிறந்த பிறவிக்கு எதிராகப் பிறந்து கொடுவந்து, எனக்கொருவனுக்குமே தன் ப்ரஸாதங்களைப் பண்ணும்படியாக ஸர்வேச்வரனாய் வைத்து, த்ரிவிக்ரமாபதாந முகத்தாலே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்த ஸுசீலனை க்ருபை சூழ்ந்ததென்னும்படி இவரை அங்கீகரித்தல்லது நிற்கவொண்ணாதபடி வளைந்து கொண்டதென்கை. காட்டிக்கொள்ள வென்கிறவிடத்தில் “காட்டி” என்கிறவிது “ப்ரமாணம் காட்டி, ஸாக்ஷி காட்டி, இந்திரஞாலங்கள் காட்டி” என்று ஸர்வத்ராந்விதமாய்க் கிடக்கிறது.

**விளக்கம்** - (காப்பார் அற்று) திருவாய்மொழி (5-1-1) – விதிவாய்க்கின்று காப்பாரார் - என்று க்ருபைக்கு இலக்காக உள்ள இவளால் அது கிட்டாமல் தன்னைக் காத்துக் கொள்ள இயலுமா? உன்னுடைய க்ருபைக்கு வசப்பட்டவனாகிய நீயே அது கிட்டாமல் தடுக்க இயலுமா? உனது க்ருபைக்கு இலக்காக உள்ள நான் அது கிட்டாமல் தடுக்க இயலுமா - என்று கூறுவதற்கு ஏற்ப யாராலும் தடுத்து நிறுத்து இயலாதபடி பெருகுவதாய். (விதி சூழ்ந்தது) - "விதி" என்ற பதம் முலம் அவனுடைய க்ருபை கூறப்படுகிறது; யாருக்கும் கட்டுப்படாத சுதந்திரம் கொண்ட அவனால் கூட தப்ப இயலாதபடி உள்ளதால் "விதி" என்ற பதம் மூலம் அவனுடைய க்ருபை கூறப்பட்டது. இப்படியாக உள்ள அவனுடைய க்ருபையானது, திருவாய்மொழி (2-7-6) – "எனைத்தோர் பிறப்பும் – எதிர்சூழல்புக்கு எனக்கே யருள்கள் செய்ய - அம்மான் த்ரிவிக்ரமனை – விதி சூழ்ந்தது" – என்பதற்கு ஏற்ப நான் பிறந்த பல பிறவிகளிலும் எனக்கு முன்பாகவே தான் வந்து தோன்றி, என் ஒருவனுக்கு மட்டுமே தனது க்ருபையைச் செய்யும்படியாக ஸர்வேச்வரனாக நின்று, த்ரிவிக்ரம அவதாரம் மூலம் அனைவருடைய தலைகளிலும் தனது திருவடிகளை வைத்தவனாகிய பெரியவர் சிறியவர் என்ற வேறுபாடு ஆராயாமல் அனைவரிடமும் ஒரே போன்று பழகும் தன்மை உள்ள அவனை அவனுடைய க்ருபை சூழ்ந்து கொண்டது; அதாவது இவரை ஏற்றுக்கொண்டால் அல்லாமல் அவன் இருத்தல் இயலாது என்பதாக வளைத்துக் கொண்டது என்று கருத்து. சூர்ணையில் உள்ள "காட்டி" என்ற சொல்லை "ப்ரமாணம் காட்டி, ஸாக்ஷி காட்டி, இந்திரஞாலங்கள் காட்டி" என்று அனைத்து இடங்களிலும் சேர்த்துப் படிக்கவேண்டும்.

113. வரவாறில்லை வெறிதே என்றறுதியிட்டபின் வாழ்முதலென்கிற ஸுக்ருத மொழியக் கற்பிக்கலாவதில்லை.

**அவதாரிகை** - எல்லாம் செய்தாலும், ஏவம்பூத க்ருபைதான் அநாதிகாலம் இவ்வாத்ம விஷயமாகப் பெருகாமல் இன்று பெருகுமளவில் இதுக்கு உடலாகக் கற்பிக்கலாவதொரு ஸுக்ருதமில்லையோ வென்ன, அருளிச்செய்கிறார் (வரவாறென்று தொடங்கி).

**விளக்கம்** - அனைத்தும் செய்தபோதிலும், இவனுடைய க்ருபை என்பது இத்தனை காலம் நம்மாழ்வாருடைய விஷயத்தில் பெருகாமல், இந்தப் பிறவியில் இந்த அளவிற்குப் பெருகி

நிற்பதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருத்தல் வேண்டும்; ஆக அந்தக் காரணமாக அமையும் பொருட்டு ஒரு நல்வினையாவது உண்டு அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால்" என்று இது வந்த வழி இன்னதென்று இதுக்குச் சொல்லலாவதொரு ஹேதுவில்லை, பேறும் மிகவும் இனிதாயிரா நிற்குமென்றும், "வெறிதேயருள் செய்வர் செய்வார்கட்கு" என்று – தாம் செய்ய நினைத்தவர்களுக்கு நிர்ஹேதுகமாக க்ருபை பண்ணுவரென்றும், இப்படி விஷயீகாரம் நிர்ஹேதுகமென்று தாமே அறுதியிட்ட பின்பு, "தனியென் வாழ்முதலே" என்று ஸம்ஸாரத்திலொரு துணையின்றிக்கே யிருக்கிற வென்னுடைய அநுபவத்துக்கு ப்ரதம ஸுக்ருதமானவனே என்று தம்முடைய பேற்றுக்கு மூலஸுக்ருதமாக இவரருளிச் செய்த அவன் தன்னையொழிய வேறு கற்பிக்கலாவதொரு ஸுக்ருதமில்லை யென்கை.

**விளக்கம்** - (வரவாறு இல்லை என்று) – பெரியதிருவந்தாதி (56) – வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால் - என்று இத்தகைய க்ருபை வந்ததற்கான வழி இன்னது ஆகும் என்று இதற்குக் கூறும்படியான காரணம் ஏதும் இல்லை. கிட்டிய பேறு மிகவும் இனிதாக இருந்தது என்றும், (வெறிதே) – திருவாய்மொழி (8-7-8) - வெறிதேயருள் செய்வர் செய்வார்கட்கு – என்று, தான் யாருக்கு க்ருபை செய்யவேண்டும் என்று எண்ணுகிறானோ அவர்களுக்கு எந்தவிதமான காரணமும் இன்றி க்ருபை செய்வான் என்றும், (அறுதியிட்ட பின்) - இப்படியாக அவன் நம்மாழ்வாராகிய தன்னை ஏற்றுக் கொண்டதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்று தானே உறுதியாக உரைத்த பின்னர். (வாழ்முதல் என்கிற ஸுக்ருதம் ஒழிய) - திருவாய்மொழி (2-3-5) – தனியென் வாழ்முதலே - என்பதற்கு ஏற்ப "இந்த ஸம்ஸாரத்தில் எந்த ஒரு துணையும் இல்லாமல் உள்ள என்னுடைய அனுபவத்துக்கு மூலமாக உள்ள புண்ணியமானவனே" என்று தனது பேற்றுக்கு மூல புண்ணியமாக நம்மாழ்வார் அருளிச்செய்த அவன் அல்லாமல் வேறு எதனையும் கற்பிக்க இயலாது; ஆகவே வேறு எந்த நல்வினையும் இல்லை என்று கருத்து.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, "யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும்" என்று அஜ்ஞாத ஸுக்ருதமும் இவர்க்கு இல்லை யென்றவாறே இப்படி நேராகக் கழிக்க வேணுமோ? அநாதிகாலம் அங்கீகரியாதவன் இன்று செய்கையாலும், அல்லாத வாத்மாக்க ளெல்லாம்

கிடக்க இவரை இப்படி விஷயீகரிக்கையாலும், இதுக்குடலானது ஏதேனுமொரு ஸுக்ருதம் இவர்க்குண்டாகக் கூடுமென்று கார்யத்தையிட்டு அநுமித்தாகிலும் கல்பிக்கலாவ தொன்றில்லையோவென்ன; அப்படி கல்பிக்கலாவதில்லை யென்னு மிடத்தை விஸ்தரேண ப்ரதிபாதிக்கிறாரென்று ஸங்கதியாக்கி "செய்த நன்றி தேடிக் காணாதே" என்று தொடங்கி, "வெறிதே யென்றறுதியிட்டபின்" என்னுமளவும் ஏகவாக்யமாகக் கொண்டு இவ்வாழ்வார் கருத்தைச் சொல்லிக் கொண்டு செல்லுகிறதாய்,

**விளக்கம்** – அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். சூர்ணை (107) – யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும் - என்று இவர் அறியாதபடி இவரிடம் உள்ள புண்ணியம் என்று இவரிடம் ஏதும் இல்லை என்று கூறிய பின்னர் இவ்விதம் நேரடியாக "இவரிடம் நல்வினை என்று ஏதும் க்ருபைக்குக் காரணம் கூறும்படி இல்லை" என்று விலக்க இயலுமா? அதாவது, எல்லையற்ற காலமாக இவரை ஏற்றுக்கொண்டு க்ருபை செய்யாதவன் இன்று இவரை ஏற்றதாலும், மற்ற பல ஆத்மாக்கள் உள்ளபோது இவரை மட்டும் இவ்விதம் ஏற்பதாலும், இவ்விதம் இவரை ஏற்பதற்குக் காரணமான நல்வினை ஏதேனும் ஒன்றாவது இவரிடம் இருத்தல் வேண்டும் என்று அவன் எண்ணிக் கொண்டாவது அவை இவரிடம் உள்ளதாகக் கற்பிக்கலாம் அல்லவோ எனலாம். இவ்விதம் கற்பிப்பதற்குக் கூட இவரிடம் இடம் இல்லை என்பதை இந்தச் சூர்ணையில் விரிவாக அருளிச்செய்கிறார் என்றும் உரைக்கலாம். இவ்விதம் பொருள் கொண்டு விளக்கம் அளித்தால், சூர்ணை (108) – செய்த நன்றி தேடிக் காணாதே – என்பது முதல், இந்தச் சூர்ணையில் உள்ள "வெறிதே என்று அறுதியிட்ட பின்" என்பது முடிய உள்ள அனைத்தையும் ஒரே வரியாகக் கொண்டு, இவை நம்மாழ்வருடைய திருவுள்ளத்தை வெளிப்படுத்துவதாகக் கொள்ளவேண்டும் (இதனை அடுத்து கூறுகிறார்).

**வ்யாக்யானம்** - "எந்நன்றி செய்தேனா" என்று பகவதங்கீகாரத்துக்குடலாகத் தாம் செய்த ஸுக்ருதமுண்டோவென்று தேடிக்காணதே அங்கீகாரத்துக்குடலான தில்லையாகில் அத்வேஷாபி முக்க்யங்களுக்குத் தக்கதுதானுண்டோ வென்னில், அவையும் அவனாலே வந்தது, ஸத்கர்மத்தாலே வந்ததல்ல. "எண்ணிலும் வரும்" என்ற பரிகணனை தானுண்டோ வென்னில், அதுக்கு "எண்டானுமில்லை", "வைத்தேன் மதியால்", "யானு மென்னெஞ்சு மிசைந் தொழிந்தோம்" என்கிற அநுமதீச்சைகள் தானுண்டோவென்னில், அவையும் அவனுண்டாக்கினது; "மாதவனென்றதே கொண்டு", "திருமாலிருஞ்சோலை

மலை யென்றேனென்ன" இத்யாதிகளால் ஈச்வரன் வலியவேறிடுகிறவை – வ்யாவ்ருத்த் யுக்த்யாதிகள். இவன் நடுவே வந்து அடியானென்று பிடித்து ப்ரமாண ஸாக்ஷிகள் காட்டி, அவை கார்யகரமாகாதவளவில் வடிவழகைக் காட்டி இப்படி இவ்வஸ்துவை ஸ்வாதீனமாக்கிக் கொள்ளும்படி இவனை நிவாரகரற்ற க்ருபை சூழ்ந்தது. இவ்விஷயீகாரத்துக்கு "வரவாறொன்றில்லை", "வெறிதேயருள் செய்தவித்தனை" - என்று இவர்தாமே அறுதியிட்டபின்பு, "தனியேன் வாழுதலே" என்று தம்பேற்றுக்கு மூல ஸுக்ருதமாக இவரருளிச் செய்த ஈச்வரன் தன்னை யொழிய இவர்க்கு வேறு கல்பிக்கலாவதொரு ஸுக்ருதைமில்லை யென்று இங்ஙனே யோஜிக்கவுமாம்; இந்த யோஜனை இதன் பட்டோலையான க்ரந்தத்தில் இவரருளிச் செய்த மர்யாதைக்குச் சேரும்.

**விளக்கம்** - எந்நன்றி செய்தேனா - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் நம்மாழ்வாராகிய தன்னை ஏற்றுக் கொண்டதற்குத் தன்னிடம், தான் செய்த நற்செயல் ஏதேனும் உள்ளதோ என்று தேடினார்; ஆனால் ஏதும் கிடைக்கவில்லை. சரி, அவன் ஏற்பதற்கான காரணம் தன்னிடம் இல்லை என்றாலும், அவனை வெறுக்காமலும் அவனை ஏற்றலும் என்பதான அத்வேஷ ஆபிமுக்யம் தன்னிடம் உள்ளதா என்று ஆராய்ந்தார்; பின்னர் அவை தம்மிடம் இருந்தாலும், அவையும் அவன் அளித்தே வந்தன அல்லாமல், தன்னுடைய நற்செயல்களால் வந்தவை அல்ல என்று தெளிந்தார். "எண்ணிலும் வரும்" என்பதற்கு ஏற்ப அவனை எண்ணியபடி இருத்தல் என்பது உண்டோ என்றால், "எண் தானும் இல்லை" என்றார். தொடர்ந்து, "வைத்தேன் மதியால்", "யானும் என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம்" என்று கூறும்படியான அநுமதி மற்றும் இச்சை ஆகியவையேனும் உள்ளதா என்றால், அவையும் அவன் உண்டாக்கியவையே ஆகும் என்றார்; "மாதவன் என்றதே கொண்டு", "திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்ன" என்ற சொற்களைக் கொண்டு, ஸர்வேச்வரன் அந்தச் சொற்களை வேறுவிதமாகத் தனது திருவுள்ளத்தில் நிறுத்தியதால் இவை ஏற்பட்டன என்றார். மேலும் இவன் வந்து "இவர் தனக்கே உரியவர்" என்பதற்கான சான்றுகளையும் காண்பித்தான். அந்த முயற்சியும் பயனற்றுப் போகவே, தனது வடிவழகைக் காண்பித்தான். இப்படியாக இவருடைய ஆத்மாவைத் தன்னுடையது என்று ஆக்கிக்கொள்ளும்படியாக, ஸர்வேச்வரனுடைய க்ருபையானது அவனை அவ்விதம் செய்யும்படி நிர்ப்பந்தம் செய்து சுற்றி வளைத்துக் கொண்டது. இவ்விதம் அவன் தன்னை ஏற்றுக்கொண்டதற்கு "வரவாறொன்றில்லை", "வெறிதேயருள் செய்தவித்தனை" என்று இவர் உறுதியாக உரைத்த பின்னர், "தனியேன் வாழுதலே"


Email:sridharan_book@yahoo.co.in

என்று தனது பேற்றுக்கு மூல புண்ணியமாக ஸர்வேச்வரனே உள்ளான் என்று இவர் அருளிச்செய்த ஸர்வேச்வரன் அல்லாமல், கற்பிப்பதற்கு வேறு எந்த ஒரு புண்ணியமும் இவரிடம் இல்லை என்று பொருள் கொள்ளலாம்.

**வ்யாக்யானம்** – ஆக இதுக்குக்கீழ் இவர் ப்ரபாவத்தையும், அதுக்கடி பகவந்நிர்ஹேதுக கடாக்ஷமென்னுமத்தையும், அத்தால், இவர்க்குண்டான பக்தியின் வ்யாவ்ருத்தியையும், அதுதான் கர்ம ஜ்ஞாந ஸாத்யை யல்லாமையையும், இவரை ஈச்வரனங்கீகரித்ததுக்கு கேவல க்ருபையொழிய ஹேத்வந்தர மில்லாமையையும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - ஆக இதுவரை நம்மாழ்வாருடைய ப்ரபாவம், அதற்குக் காரணம் ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படுத்தும் க்ருபை, அதனால் இவருக்கு ஏற்பட்ட பக்தியின் வேறுபாடு, அத்தகைய நிலையானது கர்மத்தாலோ அல்லது ஞானத்தாலோ வந்தது அல்ல, இதுவரை ஸர்வேச்வரன் ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் அவனுடைய க்ருபை அல்லாமல் வேறு எந்தக் காரணமும் அல்ல என்று பலதையும் அருளிச்செய்தார்.

114. நலமருளினன் என்கொலென்று ஆமூலசூடம் அருளால் மன்னு மிவர்க்கு அன்புக் கடியானதுவே அடிசேருகைக்கும் ஸாதநம்

**அவதாரிகை** - இப்படி நிர்ஹேதுக விஷயீகார பாத்ரபூதரான விவருடைய பக்தி, பகவத் க்ருபை கலப்தையா யிருந்ததாகிலும் உபாஸகனுக்கு கர்மஜ்ஞாந ஜநிதையான பக்தியோபாதி இவர்க்கு ப்ராப்தி ஸாதநமிதுவோவென்ன வருளிச்செய்கிறார் மேல் (நலமருளினனென்று தொடங்கி).

**விளக்கம்** – எந்தவிதமான காரணமும் இன்றி ஸர்வேச்வரனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்மாழ்வாருடைய பக்தியானது, ஸர்வேச்வரனுடைய க்ருபையால் உண்டானது என்றாலும், ஒரு உபாஸகனுக்குக் கர்மம் மற்றும் ஞானம் ஆகியவை காரணமாக ஏற்படும் பக்தி போன்று, இவருக்கு உண்டான பேற்றுக்கு இதுவே காரணமாக இருக்கலாம் அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “மயர்வற மதிநல மருளினன்” என்று தம்முடைய பக்தியுத்பத்தி காரணம் கேவல பகவத் க்ருபையென்று உபக்ரமித்து “என்கொலம்மான் திருவருள்கள்” என்னுமளவாக ஜ்ஞாந தசையோடு ப்ராப்தி தசையோடு வாசியற, ஆமூலசூடம் “மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன்” என்று பிடிதோறும் நெய்யொழியச் செல்லாத ஸுகுமாரரைப்போலே நின்ற நிலைதோறும் அவனருள் கொண்டே தரிக்கவேண்டும் ஸ்வபாவரான விவர்க்கு, “ஆராவன்பிலடியே னுன்னடிசேர் வண்ணமருளாய்” என்கையாலே, “நலமருளினன்” என்று பக்தி காரணமாகச் சொன்ன க்ருபையே அடிசேருகையாகிற ப்ராப்திக்கும் ஸாதநமென்றபடி.

**விளக்கம்** – (நலம் அருளினன் என்று) - திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளினன் - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாராகிய தனக்கு பக்தி ஏற்படக் காரணம் ஸர்வேச்வரனுடைய க்ருபை மட்டுமே ஆகும் என்று தொடங்கி, (என்கொல் என்று) – திருவாய்மொழி (10-7-4) – என்கொலம்மான் திருவருள்கள் - என்று நிறைவு செய்து. (ஆமுல சூடம்) – ஞான நிலை மற்றும் பேறு பெற்ற நிலை ஆகியவற்றுக்கு இடையே எந்தவிதமான வேறுபாடும் ஆராயாமல், தொடக்கம் முதல் இறுதிவரையிலும், (அருளால் மன்னும் இவர்க்கு) - திருவாய்மொழி (1-5-11) – மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன் - என்பதற்கு ஏற்ப ஒவ்வொரு பிடி சோறும் உண்ணும்போதும் அதில் நெய் விடாமல் உணவு இறங்காமல் உள்ள சுகுமாரர்கள் போன்று, ஒவ்வொரு நிலையிலும் அவனுடைய க்ருபை கொண்டு மட்டுமே தரிக்கவேண்டும் என்ற இயல்பு கொண்ட நம்மாழ்வாருக்கு. (அன்புக்கு அடியானதுவே) - நலம் அருளினான் – என்று கூறுவதற்கு ஏற்ப பக்திக்குக் காரணமாக உரைக்கப்பட்ட க்ருபை என்பதே, (அடிசேருகைக்கும் ஸாதநம்) – திருவாய்மொழி (6-10-2) – ஆராவன்பிலடியே னுன்னடிசேர் வண்ணமருளாய் - என்று கூறுவதால், அவன் திருவடிகளைப் பற்றுதல் என்ற பேற்றுக்கான காரணம் ஆகும்.

115. புணர்தொறு மென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாந பக்திகளை வளர்த்தது கனங்குழையிடக் காதுபெருக்குதலும் மாஸோபவாஸி போஜநப் புறப்பூச்சும் போலே ஆற்ற நல்ல மாபோகச் சிரமமாக.

**அவதாரிகை** - இப்படி ப்ராப்தி ஸாதநம் க்ருபையாகில், “இந்நின்ற நீர்மை யினியா முறாமை” என்றபோதே இவரபேக்ஷிதம் செய்துவிடலாயிருக்க, இவரை வைத்து

ஸ்வஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே ஜ்ஞாந பக்திகள் வளர்த்தது ஏதுக்காகவென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (புணர்தொறுமென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாக இவருடைய பேற்றுக்குக் காரணம் ஸர்வேச்வரனுடைய க்ருபையே ஆகும் என்றால், திருவிருத்தம் (1) – இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை – என்று உரைத்தபோதே, இவருடைய விருப்பத்தை அவன் நிறைவேற்றியிருக்கலாம்; அதனை விடுத்து தன்னுடைய சேர்க்கையால் இவருக்கு ஞானத்தையும், பிரிவால் பக்தியையும் ஏன் வளர்த்தான் என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "புணர்தொறும் புணர்ச்சிக்காரா" இத்யாதியாலே ஸம்ச்லேஷிக்குந்தோறும் ஸம்ச்லேஷத்துக்குத் தக்க வளவல்லாத ஸுகஸாகரமானது, அபரிச்சேத்யமான ஆகாசத்தையும் கடந்து அவ்வருகுபட்டு, விபூதி த்வயத்தையும் விளாக்குலை கொள்ளவல்ல வறிவையும் முழுத்தும்படி பெருகி, இப்படி பெருகினவிது விச்லேஷ ப்ரஸங்கத்திலே, பெருக்காறுவற்றி அடிசுடுமாபோலே ஸ்வப்ந கல்ப மென்னலாம்படி வற்றிப்போய், அத்தசையிலே ப்ராண ஸ்தாநமான ஹ்ருதயத்தில் பூர்வ ஸம்ச்லேஷத்தாலுண்டான புடைதோறுமுள்ளே புகுந்து ஆச்ரயமான ஆத்மாவுக்குப் பொறுக்க வொண்ணாதபடி அபிநிவேசம் பெருகிவாரா நின்றதென்று சொல்லும்படியாகக் கலப்பது பிரிவதாய், கலவியாலே ஜ்ஞாநத்தையும் பிரிவாலே பக்தியையும் வளர்த்தது, கனத்த பணியிடுகைக் கிடமாம்படி. நூலிட்டுத் திரியிட்டுக் குதும்பையிட்டுக் காது பெருக்குமா போலவும், மாஸோபவாஸிகளுக்கு ப்ரதமத்திலே போஜனத்தையிடில் பொறாதென்று சோற்றையரைத்து உடம்பிலே பூசிப் பொரிக்கஞ்சி கொடுத்துப் பொரிக்கூழ் கொடுத்து, ஒடுக்கத்திலே போஜநம் பொறுப்பிக்குமா போலவும்,

**விளக்கம்** – (புணர்தொறும் என்னைக் கலந்து பிரிந்து) - திருவாய்மொழி (10-3-2) - புணர்தொறும் புணர்ச்சிக்காரா – என்று, சேரும்போது சேர்க்கைக்குத் தகுந்தபடி அளவற்ற இன்பம் என்ற வெள்ளமானது எல்லை காண இயலாத ஆகாயத்தையும் கடந்து, அத்துடன் நிற்லாமல், நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி என்ற இரண்டு விபூதிகளையும் பரவி நிற்கும் ஞானத்தையும் மூழ்கடிக்கும்படியாகப் பெருகி நின்றது; இப்படியாகப் பெருகிய இன்பமானது, அவனை விட்டுப் பிரியும் காலத்தில், அளவற்ற நீர் கொண்ட ஆறு வற்றிப்

போனால் அதன் தரை சுடுவது போன்று, அந்த இன்பம் என்பது கனவில் கண்ட ஒரு பொருள் மட்டுமே ஆகும் என்று எண்ணலாம்படி வற்றுகிறது. அந்த நிலையில், உயிரின் இருப்பிடமான இதயத்தில், முன்பு சேர்ந்திருந்த சேர்க்கையால் ஏற்பட்டதான புடைதொறும் உட்புகுந்து, "அவனையே அண்டி நிற்பதான ஆத்மாவுக்குப் பொறுத்துக் கொள்ள இயலாதபடியான காதல் பெருகி நிற்கிறது" என்று கூறும் விதத்தில் சேர்வதும் பிரிவதுமாக, (வளர்த்தது) - சேர்க்கையால் ஞானத்தையும், பிரிவால் பக்தியையும் வளர்த்தது [எப்படி என்றால்] (கனம் குழை இடக்காது பெருக்குதல் போலே) - சுமையான ஆபரணங்கள் இடுவதற்கான இடம் கிட்டும்படியாக நூல் இட்டு, திரி இட்டு, குதம்பை இட்டு காதில் உள்ள துளையைப் பெரிதாக்குவது போன்று, (மாச உபவாசி போஜனைப் புறம் பூச்சு போலே) - ஒரு மாதம் உபவாசம் இருந்தவர்களுக்கு முதலில் உணவை அளித்தால் அது சேராது என்பதால், சோற்றினை நன்றாக அரைத்து உடலில் பூசி, பொரி கஞ்சி அளித்து, பொரி கூழ் அளித்து, இறுதியில் உணவை அளிப்பது போன்றும்,

**வ்யாக்யானம்** – "ஆற்ற நல்லவகை காட்டுமம்மான்" என்று எனக்குப் பொறுக்கப் பொறுக்கத் தன் குணசேஷ்டிதாதிகளைக் காட்டி, அவ்வழியாலே என்னை யடிமை கொண்டவ னென்னும்படி பகவதநுபவம் கனாக்கண்டறியாத விவர்க்கு, "எம்மா வீடு" என்றும், "கட்டெழில் வானவர் போகம்" என்றும் சொல்லுகிறபடியே எவ்வகையாலும் லக்ஷணமாய்க் கொண்டு, கட்டடங்க நன்றாயிருப்பதாய் அபரிச்சிந்ந ஜ்ஞாநசக்திகரான நித்யஸூரிகளநுபவிக்கிற போகத்தை முதலிலே கொடுக்கில் ஸாத்மியாதென்று கருதி, அது ஸாத்மிக்கைக்காகச் சிரமம் செய்வித்தபடி யென்கை.

**விளக்கம்** – (ஆற்ற நல்ல) – திருவாய்மொழி (4-5-5) - ஆற்ற நல்லவகை காட்டுமம்மான் - நான் பொறுக்கப் பொறுக்க மெதுவாக எனக்குத் தனது திருக்கல்யாணகுணங்களையும் லீலைகளையும் காண்பித்து, அதன் மூலம் என்னை அடிமையாக்கிக் கொண்டான் என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுடைய அனுபவம் குறித்துக் கனவில் கூட அறியாத இவருக்கு. (மா போகம்) – திருவாய்மொழி (2-9-1) – எம்மா வீடு - என்றும், திருவாய்மொழி (6-6-11) - கட்டெழில் வானவர் போகம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து விதங்களிலும் வேறுபட்ட சிறப்பு உள்ளதன் காரணமாக நன்றாக உள்ளதும், எல்லையற்ற ஞானம் மற்றும் சக்தி நினைத்து நித்யஸூரிகள் அனுபவிப்பதும் ஆகிய இன்பத்தை.

(சிரமமாக) - முதலில் அளித்தால் பொறுக்க இயலாது என்று எண்ணி, அது பொறுத்துக் கொள்வதற்கான பயிற்சியை ஏற்படுத்திபடி என்று கருத்து.

**வ்யாக்யானம்** - ஆனபின்பு ஜ்ஞாபக்திகளை வளர்த்தது ப்ராப்தி ஸாதநதயாவன் றென்று கருத்து. மாஸோபவாஸிக்குப் புறப்பூச்சு மாத்ரத்தால் போஜநம் பொறாமையாலே புறப்பூச்சுச் சொன்னவிது மற்றையவற்றுக்கு முபலக்ஷணம். "மா போகம்" என்றது – "மா வீடு", "வானவர் போகம்" என்கிற சந்தைகளி லாத்யந்தங்களைச் சேர்த்துச் சொன்னபடி.

**விளக்கம்** - ஆகவே ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றை வளர்த்தது என்பது, பேற்றுக்குக் காரணமாக அல்ல என்றாகிறது. மாதம் முழுவதும் உபவாஸம் இருப்பவர்களுக்கு உணவு அளிக்காமல், மேலே பூசப்படும் உணவால் மட்டுமே வயிற்றுக்கு உணவு கிட்டாது அல்லவோ? ஆகவே அங்கு கூறப்படும் பொரிகஞ்சி, பொரிக்கூழ் போன்றவை அளிக்கப்படும் என்பதை, அந்த மேல் பூச்சு மறைமுகமாகக் கூறுகிறது. சூர்ணையில் உள்ள "மா போகம்" என்பது "மா வீடு", "வானவர்போகம்" என்ற பாசுரங்களில் உள்ள முதல் ஈறுகளைக் குறிக்கும்.

116. இவற்றால் வரும் ஸம்ச்லேஷ விச்லேஷங்களாகிறன - எளியனாய் நிற்குமரியனாய் எய்தானென்கிற தர்சந ஸமமான மாநஸாநுஸந்தானமும், திண்கொள்ளப் பெறாத மநச் சைதில்யமும்.

**அவதாரிகை** - ஆனால் ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது அதுக்காகிறது, "முனியே நான்முகன"ளவும் மாநஸாநுபவமொழிய, ப்ரத்யக்ஷாநுபவமில்லாத விவர்க்கு, இவற்றை வளர்க்கைக்குறுப்பாக வரும் ஸம்ச்லேஷ விச்லேஷங்களாகிறவை எவை யென்ன அருளிச்செய்கிறார் மேல் (இவற்றாலென்று தொடங்கி).

**விளக்கம்** – ஞானம் மற்றும் பக்தியை நம்மாழ்வாருக்கு வளர்த்தது என்பது அளவற்ற இன்பத்தை ஏற்கக்கூடிய பயிற்சியை அளிப்பதற்காக ஆகும். ஆனால் திருவாய்மொழியில் – முனியே நான்முகனே - என்பது முடிய உள்ள திருவாய்மொழிகளில், மனம் கொண்டு அனுபவிக்கும் அனுபவம் அல்லாமல், நேரடியாகக் கண்டு அனுபவித்த அனுபவம் இவருக்கு இல்லை; இப்படி உள்ளபோது ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றை

வளர்ப்பதான சேர்க்கையும் பிரிவும் இவர் விஷயத்தில் எவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது கீழ்ச்சொன்ன இக்காரியங்களடியாக வரும் ஸம்ச்லேஷமும் விச்லேஷமுமாகிறன – "கருத்துக்கு நன்று மெளியனாய்", "நிற்கும் முன்னே வந்து" என்று - நெஞ்சுக்கு மிகவும் விசததமாநுபவ விஷயமாய்க் கொண்டு என் முன்னே வந்து நிற்குமென்றும், "கண்கள் காண்டற்கரியனாய்", "கைக்கு மெய்தான்" என்று கண்ணுக்கு அவிஷயமாய்க் கொண்டு கையாலணைகைக்கு எட்டுகிறிலனென்றும் சொல்லுகிற ப்ரத்யக்ஷ துல்யமான மாநஸாநுஸந்தாநமும், "கண்கட்குத் திண்கொள்ள வொரு நாளருளாயுன் திருவுரு" என்று அபேக்ஷிதமான பாஹ்யாநுபவம் பெறாமையாலே, ஆந்தராநுபவமும் அடிமண்டியோடே கலங்கும்படி பிறந்த அந்த:கரண சைதில்யமு மென்கை.

**விளக்கம்** – (இவற்றால் வரும் ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் ஆகிறன) - இதுவரை கூறப்பட்ட ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றின் காரணமாக வருகின்ற சேர்க்கை மற்றும் பிரிவு எவை என்றால், (எளியனாய்) – திருவாய்மொழி (3-6-11) – கருத்துக்கு நன்று மெளியனாய் – என்றும், (நிற்கும்) - திருவாய்மொழி (7-3-6) - நிற்கும் முன்னே வந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, (மாநஸ அநுஸந்தானம்) - மனத்தின் மிகவும் தெளிவான அனுபவத்திற்கு விஷயமாகக் கொண்டு என் முன்பு வந்து நிற்கும் என்றும்; (அரியனாய்) - திருவாய்மொழி (3-6-11) - கண்கள் காண்டற்கரியனாய் – என்றும், (எய்தான்) – திருவாய்மொழி (7-3-6) - கைக்கு மெய்தான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப புறக்கண்களுக்குப் புலப்படாதவனாக இருந்து, கைகளால் அணைப்பதற்கு எட்டாமல் உள்ளதான, நேரே காண்பதற்குச் சமமாக உள்ளதாகிய மனத்தின் அனுபவம் என்பது சேர்க்கை ஆகின்றது. திருவாய்மொழி (5-10-7) – கண்கட்குத் திண்கொள்ள வொரு நாளருளாயுன் திருவுரு – என்று கூறுவதற்கு ஏற்ப, தான் விரும்பிய புறக்கண்களால் கண்டு அனுபவிக்கவேண்டும் என்ற அனுபவம் கிட்டாத காரணத்தால் உள்ளத்தில் ஏற்படும் கலக்க நிலையும், அடியுடன் அந்தகரணம் கலங்கி நிற்கும்படியாகச் சிதிலம் அடையும் நிலையும் பிரிவு ஆகின்றது.

117. புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவை அளை சரித்தவர்க்கு ப்ரிய ஹிதபரன் தான் துளக்கற வெங்கும் தழக்க நடத்தும்.

**அவதாரிகை** - ஆனால் அபிமதவிஷய ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் புண்ய பாப நிபந்தநமாகவன்றோ லோகத்தார்க்கு வருவது. லோக வ்யாவ்ருத்தரான விவர்க்கு இவை வருகைக்கு நிதான மேதென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார் (புண்ணியமென்று).

**விளக்கம்** – பொதுவாகச் சேர்த்தி மற்றும் பிரிவு என்பது இந்த உலகில் உள்ளவர்களுக்கு அவரவர்கள் செய்த புண்ணியம், பாபம் காரணமாக அல்லவோ ஏற்படுகிறது; ஆனால் நம்மாழ்வாரோ இது போன்ற உலகியல் விதிகளுக்கு அப்பாற்பட்டு வேறுபட்டவராக உள்ளபோது, இவருக்கு இந்த நிலைகள் உண்டாகக் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென்றிவையாய்" என்கிறபடியே நாட்டார்க்குப் புண்ய பாப பலமாய்க் கொண்டு வருகிற ஸம்ச்லேஷ விச்லேஷங்களை, "சார்ந்தவிரு வல்வினைகளும் சரித்து" என்று, "திலதைலவத் தாருவஹ்நிவத்" என்கிறபடியே ஆத்மாவோடே பிரிக்க வொண்ணாதபடி பொருந்திக் கிடக்கிற புண்யபாப ரூபமான ப்ரபல கர்மங்களை, விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே, தான் போக்குகையாலே, அவை யிரண்டுமற்றிருக்கிற விவர்க்கு ப்ரியபரனும் ஹிதபரனுமான ஈச்வரன்தான் ஜ்ஞாநபக்திகளை வளர்க்கையில் நினைவாலே "துளக்கற் றமுதமா யெங்கும் பக்கநோக்கறியான் என் பைந்தாமரைக்கண்ணன்" என்று விபூதி ரக்ஷணத்தைப் பற்ற வருமந்யபரதை கலசாதபடி அத்தை ஒருங்க விட்டுக்கொண்டு வந்து இனிப் பேராதபடி என்னுள்ளே புகுந்து அத்தாலே விகஸித ஸஹஜ ஸர்வஜ்ஞனுமாய், "விஜ்வர:" என்கிறபடியே உள்நடுக்கமும் தீர்ந்து எனக்கு நிரதிசய போக்யனுமாய் நாய்ச்சிமாரையும் புரிந்து பாராமல் என்னையே பார்த்துக் கொண்டு, இதனாலே திருக்கண்களும் செவ்வி பெற்று, இப்படி என்னோடே கலந்திருந்தானென்று இவர் அதிப்ரீதராம்படியாகவும், "தழை நல்லவின்பம் தலைப்பெய்தெங்கும் தழைக்க" என்று விச்லேஷ வ்யஸனத்தாலே நான் முடியாநின்றேன்; இனி என் துக்கம் காணாமையாலே லோகமெல்லாம் விஸ்தீர்ணமாய் நன்றான ஸுகத்தைப் பெற்று ஸம்ருத்தமாகக்

 **Email:**sridharan_book@yahoo.co.in

கடவதென்னும்படி அதிமாத்ர துக்க நிமக்நராம்படியாகவும் நடத்திக் கொண்டு போருமென்றபடி.

**விளக்கம்** – (புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவை) – திருவாய்மொழி (6-3-4) - புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென்றிவையாய் - என்பதற்கு ஏற்ப உலகில் உள்ளவர்களுக்குப் புண்ணியம் மற்றும் பாபம் ஆகியவற்றின் பலனாக ஏற்படுகிற சேர்க்கை மற்றும் பிரிவு ஆகியவற்றை. (அளை சரித்தவர்க்கு) – திருவாய்மொழி (1-5-10) - சார்ந்தவிரு வல்வினைகளும் சரித்து – என்று, சரணாகதிகத்யம் - திலதைலவத் தாருவஹ்நிவத் - எள்ளில் மறைந்துள்ள எண்ணெய் போன்றும் மரத்தில் மறைந்துள்ள அக்னி போன்றும் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஆத்மாவுடன் பிரிக்க இயலாதபடியாகப் பொருந்தியுள்ள புண்ணியம் மற்றும் பாபம் ஆகிய வடிவில் உள்ள கர்மங்களை, சாமர்த்தியம் உள்ளவர்கள் நெடுஞ்சுவரைத் தள்ளுவது போன்று, ஸர்வேச்வரனாகிய தான் போக்குவதால், புண்ணிய பாபங்கள் ஆகிய இரண்டும் அற்ற இவருக்கு, (ப்ரிய ஹிதபரன் தான்) – ப்ரீதி உள்ளவனும், நன்மையை எண்ணுபவனும் ஆகிய ஸர்வேச்வரன், தானாகவே வலிய வந்து ஞானம் மற்றும் பக்தியை வளர்க்கத் திருவுள்ளம் கொள்வதால், (துளக்கிற) – திருவாய்மொழி (2-6-2) – துளக்கற் றமுதமா யெங்கும் பக்கநோக்கறியான் என் பைந்தாமரைக்கண்ணன் - என்பதற்கு ஏற்ப உலகத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பதான மற்ற சிந்தனைகள் ஏதும் கலந்து விடாதபடி அவற்றை ஒதுக்கி வைத்து, வேறு எங்கும் இனி செல்லாதபடியாக எனது மனதில் புகுந்து, அதன் காரணமாக இயல்பாகவே மலர்ந்துள்ள அனைத்து அறிந்தவனுமாய்; இராமாயணம் பாலகாண்டம் (1-85) – அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ - விபீஷணனுக்கு முடிசூட்டிய பின்னர், இராமன் தான் செய்யவேண்டிய அனைத்தும் செய்த முடித்தவனாக நடுக்கம் அற்றவனாக மகிழ்ந்திருந்தான் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தனது நடுங்கங்கள் நீக்கப்பெற்றவனாய்; எங்கும் எல்லையற்ற இன்பம் அளிப்பவனாய்; பிராட்டிமார்களைக் கூட நோக்காமல் என்னையே உற்று நோக்கிக் கொண்டு பார்ப்பதால் தனது திருக்கண்கள் அழகு பெற்றவனாய்; இவ்விதமாக என்னுடன் இவன் கலந்துள்ளான் என்று நம்மாழ்வார் மிகவும் மகிழ்ந்திருக்கும்படியாகச் செய்கிறான் [இது சேர்தலால் ஏற்படும் மகிழ்ச்சி நிலை - ஸர்வேச்வரனால் ஏற்படுத்தப்படுகிறது]. (எங்கும் தழைக்க) – திருவாய்மொழி ( 9-5-10) – தழை நல்லவின்பம் தலைப்பெய்தெங்கும் தழைக்க – என்பதற்கு ஏற்ப பிரிவுத் துன்பம் காரணமாக நான்

முடிந்து போகும்படியாக உள்ளேன்; இனி எனது இந்தத் துக்கத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால், உலகம் முழுவதும் நிறைந்த சுகம் பெற்று இன்பமாக நிறைவுடன் இருக்கக்கடவது என்று எல்லையற்ற துன்பத்தில் அழுந்தியபடிக் கிடந்தார். (நடத்தும்) – இப்படியாக இந்த இரண்டு நிலைகளையும் அவன் இவர் விஷயத்தில் நடத்துகிறான்.

118. ஜ்ஞாநத்தில் தம் பேச்சு; ப்ரேமத்தில் பெண் பேச்சு.

**அவதாரிகை** - இப்படி ஈச்வரன் வளர்த்துக் கொண்டு போருகிற ஜ்ஞாந ப்ரேமங்களை யுடையரான இவருடைய ஜ்ஞாநதசையிலும் ப்ரேமதசையிலு முண்டான பேச்சுக்க ளிருக்கும்படி எங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் மேல் (ஜ்ஞாநத்திலித்யாதி).

**விளக்கம்** – இவ்விதம் ஸர்வேச்வரனால் இவருக்கு வளர்க்கப்படுகின்ற ஞானம் மற்றும் பக்தி ஆகிய நிலைகளில் உள்ள இவருடைய பேச்சுக்கள் எவ்விதம் இருக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஜ்ஞாநதசையில் தாமான தன்மையில் நின்று பேசுவர்; ப்ரேம தசையில் அவஸ்தாந்தராபந்நராய்ப் பெண்பேச்சாகப் பேசுவரென்கை.

**விளக்கம்** – (ஜ்ஞானத்தில் தம் பேச்சு) - ஞானம் உள்ள நிலையில், தான் தன்னுடைய நிலையில் நின்றவராகப் பேசுவார். (ப்ரேமத்தில் பெண் பேச்சு) – ப்ரேமை நிலையில் ஒரு பெண் பேசுகின்ற பேச்சுக்களை [நாயகி பாவத்தில்] பேசுவார்.

119. தேறும் கலங்கியென்று தேறியும் தேறாதும் ஸ்வரூபம் குலையாது.

**அவதாரிகை** - இப்படி தெளிவும் கலக்கமுமான இத்தசைகளில், பேச்சில் பேதமொழிய ஸ்வரூபத்திலும் பேதமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (தேறும் கலங்கி)என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகத் தெளிவான நிலை மற்றும் கலக்கமான நிலை ஆகியவற்றில் நம்மாழ்வார் உள்ளபோது அவர் பேசும் பேச்சுக்களில் வேறுபாடு உள்ளது; இதே போன்று இந்த கடந்த சூர்ணையில் கூறப்பட்ட இரண்டு நிலைகளில் காணப்படும் வேறுபாடு பேச்சில் மட்டும் அல்லாமல் ஸ்வரூபத்திலும் உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "தேறும் கை கூப்பும்", "கலங்கிக் கை தொழும்" என்று தெளிந்த தசையிலும் கலங்கின தசையிலும், சேஷத்வ ப்ரகாசமான அஞ்ஜலி மாறாமையாலே, பிண்டத்வ கடத்வ கபாலத்வ சூர்ணத்வங்களாகிற அவஸ்தாந்தரங்களை பஜித்தாலும், ம்ருத்தானவாகாரத்துக்கு அழிவில்லாதாப்போலே, "தேறியும் தேறாதும் மாயோன் திறத்தனளே இத்திருவே" என்கிறபடியே, தெளிந்த தசையோடு கலங்கிய தசையோடு வாசியற உபயாவஸ்தையிலும்,சேஷத்வ ரூபமான ஸ்வரூபம் நிலை குலையாதென்றபடி.

**விளக்கம்** – திருவாய்மொழி (7-2-5) – தேறும் கை கூப்பும் - என்றும், திருவாய்மொழி (2-4-4) – கலங்கிக் கை தொழும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தெளிந்த நிலை மற்றும் கலங்கிய நிலை என்று எந்த நிலையாக உள்ளபோதிலும், அடிமைத்தன்மையை வெளிப்படுத்தும் அஞ்ஜலி மாறாமல் உள்ளது. மண்ணானது பிண்டமாதல், குடமாதல், ஓடாதல், பொடியாகதல் போன்ற பலவிதமான நிலை மாற்றங்களை அடைந்தாலும் "மண்" என்ற தனது தன்மையை இழப்பதில்லை; அது போன்றே, திருவாய்மொழி (4-4-7) - தேறியும் தேறாதும் மாயோன் திறத்தனளே இத்திருவே - என்ற கூறுவதற்கு ஏற்ப, தெளிந்த நிலை மற்றும் கலங்கின நிலை ஆகிய இரண்டிலும், எந்தவிதமன வேறுபாடு இல்லாமல், இரண்டு நிலைகளிலும் அடிமைத்தனம் என்பதன் இயல்பு மாறாது.

120. அடியோம் தொடர்ந்து குற்றேவல் அடிச்சியோமடிக் கீழ் குற்றேவலாகை அவஸ்தாந்தரம்.

**அவதாரிகை** – ஆனால் இவர்க்கு அவஸ்தாந்தரமாவதே தென்னுமபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் (அடியோமித்யாதி).

**விளக்கம்** - ஆனால் இவருக்கு வேறு நிலை என்று கூறப்படுவது என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "அடியோம் போற்றியோவாதே", "தொடர்ந்து குற்றேவல் செய்து" என்று தாமான தன்மையில் சொல்லுமோபாதி, "அடிச்சியோம் தலைமிசை நீயணியாய்", "திருவடிக்கீழ் குற்றேவல் முன் செய்ய" என்று சொல்லுகையாலே, ஸ்வரூபத்திலும், ஸ்வரூபாநுரூப வ்ருத்தி ப்ரார்த்தனையிலும் பேதமில்லை. பிராட்டியான பாவனையாலே,தம் பேச்சானவிது போய், பெண் பேச்சாகை இவர்க்கு, அவஸ்தாந்தர மாவதென்றபடி. "அடியோம் தொடர்ந்து குற்றேவல்" என்று தம் பேச்சாலே சொல்லுகிறவிது, "அடிச்சியோம் அடிக்கீழ் குற்றேவல்" என்று பெண் பேச்சாகை இவர்க்கு அவஸ்தாந்தர மாவதென்று வாக்யத்துக்குச் சொல்படுத்தும் க்ரமம்.

**விளக்கம்** - (அடியோம்) – திருவாய்மொழி (9-2-9) - அடியோம் போற்றியோவாதே - என்றும், (தொடர்ந்து குற்றேவல்) – திருவாய்மொழி (9-2-3) – தொடர்ந்து குற்றேவல் செய்து – என்றும், "தான்" என்று நிலையில் நின்று உரைப்பது போன்றே, (அடிச்சியோம்) - திருவாய்மொழி (10-3-6) – அடிச்சியோம் தலைமிசை நீயணியாய் – என்றும், (அடிக்கீழ் குற்றேவலாகை) – திருவாய்மொழி (1-4-2) – திருவடிக்கீழ் குற்றேவல் முன் செய்ய - என்றும் கூறுவதால், (அவஸ்த்தாந்தரம்) - ஸ்வரூபத்திலும், ஸ்வரூபத்திற்கு ஏற்ற செயல்களை மட்டுமே விரும்புவதிலும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. நாயகி பாவத்தில் இவர் உரைப்பதன் காரணமாகத் தன்னுடைய இயல்பான பேச்சு மாறி, பெண் பேசுவது போன்று உள்ள நிலையே இவருக்கு நிலை மாறுபாடு என்றாகிறது. அதாவது, "அடியோம் தொடர்ந்து குற்றேவல்" என்று, தான் தன்னுடைய நிலையில் இருந்தபடி உரைத்தல் என்பது, "அடிச்சியோம் அடிக்கீழ் குற்றேவல்" என்று பெண் பேசுவது போன்று மாறுவதால், இவருடைய நிலை வேறுபாடு என்பது, வாக்கியங்களில் சொற்கள் அமையப் பெறும் நிலையே ஆகிறது.


Email:sridharan_book@yahoo.co.in

121. வித்யை தாயாகப் பெற்றுப் பாலுமமுதுமான திருநாமத்தாலே திருமகள்போல வளர்த்த தஞ்சமாகிய தந்தை மற்றொருவர்க்குப் பேச்சுப்படாமல் விச்வபதி லோகபர்த்தா வென்னும் மணவாளரை நாலிரண்டிழை கொண்டு முப்பிரியான ப்ரஹ்ம ஸூத்ர பந்தத்தோடே வரிப்பிக்க, பரம்புருடன் கைக் கொண்டபின் சதுர்த்தி யுள்புக்கு இடையீடு நடுக்கிடக்கும் நாள் கழித்து ஜந்மபூமியை விட்டகன்று சூழ்விசும்பிற்படியே உடன் சென்று குடைந்து நீராடி வியன் துழாய் அஞ்சனத்தின் நீறு நானப்பொடி பீதகவாடை பல்கலன் கொண்டு நோக்கியர் அலங்கரித்துப் பல்லாண்டிசைத்துக் கவரி செய்ய நிறைகுட விளக்கமேந்தி இளமங்கைய ரெதிர் கொள்ள வைகுந்தம் புக்கிருந்து வாய்மடுத்துப் பெருங்களிச்சியாக வானவர் போகமுண்டு கோப்புடைய கோட்டுக்கால் கட்டில் மிதித்து ஆரோஹித்து பரதா க்ரூர மாருதிகளைப் பரிஷ்வங்கித்த மணிமிகு மார்பிலே குருமாமணியா யணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று.

**அவதாரிகை -** ஆனால் இவர்க்குத் தம் பேச்சன்றோ ஸ்வாபாவிகம்; பிராட்டிமார் தசையை ப்ராபித்துப் பேசும் பெண்பேச்சு வந்தேறியன்றோ வென்ன; பகவதேக பரதந்த்ரமுமாய் பகவதேக போகமுமாயிருக்கு மாத்ம வஸ்துவுக்கு ஸ்த்ரீ ஸாதர்ம்யம் ஸ்வரூபாநுபந்தி யாகையாலே தத்ப்ரயுக்தமான பேச்சு இவர்க்கு வந்தேறியன் றென்னுமிடத்தை ரூபகத்வேந வருளிச்செய்கிறார் மேலோரு சூர்ணையாலே.

**விளக்கம் –** ஆனால் நம்மாழ்வார் தன்னுடைய நிலையிலிருந்து தான் பேசுவதாக உள்ளதே இயல்பு அன்றோ? பிராட்டிமார் நிலையை அடைந்து உரைக்கும்போது, பெண் போன்று பேசுதல் என்பது வந்தேறிய இயல்பு என்று ஆகிவிடும் அல்லவோ? இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அதாவது, ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டதாகவும், அவனுக்கு இனிமையாக உள்ளதாகவும் இருக்கின்ற இந்த ஆத்மாவிற்குப் பெண்ணுடன் ஒப்பான தன்மையானது ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றதாகவே உள்ளது; ஆகவே அதன் மூலம் வருவதான பெண்பேச்சு என்பது இவருக்கு வந்து சேர்ந்த இயல்பு அல்ல என்பதை இந்தச் சூர்ணையில் உருவகம் மூலம் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, (வித்யை தாயாகப் பெற்று) "ஸஹி வித்யாதஸ் தம் ஜநயதி" என்கிறபடியே ஆசார்யன் திருமந்த்ரமுகேந ஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்கினபோது இவ்வாத்ம ஸத்பாவமாகையாலே, வித்யையை மாதாவாகக் கொண்டு இவ்வாத்ம

 Email:sridharan_book@yahoo.co.in

வஸ்துவை ஜநிப்பித்து. (பாலுமமுதுமான திருநாமத்தால் திருமகள் போலே வளர்த்த) “தேனும் பாலுமமுதுமாய் திருமால் திருநாமம்” என்கிற போக்ய பதார்த்தமான திருமந்த்ரத்தாலே, “திருமகள் போல வளர்த்தேன்” என்கிறபடியே அநந்யார்ஹ சேஷத்வாதிகளாலே லக்ஷ்மீஸத்ருசமாக வளர்த்துக் கொண்டு போந்த (தஞ்சமாகிய தந்தை) தேஹோத்பாதகனாய் “ஸ பித்ரா ச” இத்யாதிப்படியே ஆபத்தசைகளிலே கைவிடும் பிதாவைப் போலன்றிக்கே, “பூதாநாம் யோவ்யய: பிதா” என்கிறபடியே ஸம்பந்தம் கண்ணழிவற்றிருக்க, “பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே” என்னும்படி ஸம்ஸார மோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கும் பிதாவைப் போலுமன்றிக்கே; ஸ்வரூபோத்பாதகனாய் ஒரு தசையிலும் கைவிடாதே ஹிதைஷியாய், உஜ்ஜீவநைக பரனாய்க் கொண்டு மோக்ஷைக ஹேதுவாயிருக்கையாலே ஆபத் ரக்ஷகனான ஆசார்யனாகிற பிதா. (மற்றொருவர்க்குப் பேச்சுப்படாமல்) “மற்றொருவர்க்கு என்னைப் பேசலொட்டேன்”, “மானிடவர்க்கென்று பேச்சுபடில்” என்கிற அந்ய சேஷத்வ ப்ரஸங்கம் வாராதபடி, (விச்வபதி லோகபர்த்தாவென்னும் மணவாளரை) “பதிம் விச்வஸ்ய”, “கௌஸல்யா லோகபர்த்தாரம்” என்று பதி சப்தத்தாலும் பர்த்ரு சப்தத்தாலும் ஸர்வலோக நாயகராகச் சொல்லப்படுகிற “பணவாளரவணைப் பற்பல காலமும் பள்ளி கொள்ளும் மணவாளரை, (நாலிரண்டிழை கொண்டு முப்பிரியான ப்ரஹ்மஸூத்ர பந்தத்தோடே வரிப்பிக்க) எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம்போலே, எட்டக்ஷரமாய் மூன்று பதமாய் ஈச்வர ஸம்பந்த ப்ரகாசகமான திருமந்த்ரமாகிற மங்கள ஸூத்ர பந்தத்தோடே, “பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா” என்கிறபடியே வரிக்கும்படி பண்ண, (பரம்புருடன் கைக்கொண்டபின்) “பரம் புருடா நீ என்னைக் கைக்கொண்ட பின்” என்கிறபடியே பரமபுருஷரான மணவாளர் பரிக்ரஹித்த வநந்தரம்,

**விளக்கம்** - (வித்யை தாயாகப் பெற்று) - ஆபஸ்தம்பஸூத்ரம் (16-17) – ஸஹி வித்யாதஸ் தம் ஜநயதி - ஆசார்யன் அவனைக் கல்வி மூலம் பிறக்கும்படிச் செய்கிறான் - என்பதற்கு ஏற்ப ஆசார்யன் திருமந்த்ரத்தின் மூலம் ஆத்மஸ்வரூபத்தைக் குறித்த ஞானத்தை உணர்த்தும்போது, இந்த ஆத்மா “இருக்கின்ற ஒரு வஸ்து” என்ற தன்மையை அடைவதால், கல்வி என்பதையே தாயாகக் கொண்டு இந்த ஆத்மாவைப் பிறக்கும்படிச் செய்து. (பாலும் அமுதுமான திருநாமத்தாலே) - பெரியதிருமொழி (6-10-6) - தேனும் பாலுமமுதுமாய் திருமால் திருநாமம் - என்பதற்கு ஏற்ப இனிமையான பொருளாக உள்ள

திருமந்திரத்தினால், (திருமகள் போல வளர்த்த) – பெரியாழ்வார் திருமொழி (3-8-4) - திருமகள் போல வளர்த்தேன் – என்பதற்கு ஏற்ப மற்ற யாருக்கும் உரியவன் என்று இல்லாமல், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமை என்னும் தன்மைகள் கொண்டு, மஹாலக்ஷ்மிக்குச் சமமாக வளர்த்து வந்த, (தஞ்சமாகிய தந்தை) - சரீரம் உண்டாவதற்குக் காரணமானவனாய், இராமாயணம் ஸுந்த்ரகாண்டம் (38-32) – ஸ பித்ரா ச - தந்தையாலும் கைவிடப்பட்ட காகாஸுரன் - என்பதற்கு ஏற்ப ஆபத்து ஏற்படும் காலங்களில் கைவிடுகின்ற காகாஸுரன் தந்தை போன்று அல்லாமல், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் – பூதாநாம் யோவ்யய: பிதா - அனைத்து காலங்களிலும் அழிவற்ற தந்தை யாரோ – என்பதற்கு ஏற்ப அவனுடனான ஸம்பந்தம் குறைவற்றிருக்க, ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-88) – “பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே – பிறவிக்கும் மோக்ஷத்திற்கும் உரியவன் என்று ஒருவன் உன்னாலேயே ஆகிறான் – என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக உள்ள தந்தையைப் போன்று அல்லாமல், ஆத்மஸ்வரூபத்தை வெளிக்கொண்டு வருபவனாய், எந்த நிலையிலும் கைவிடாமல் நம்முடைய நன்மையை மட்டுமே விரும்புபவனாய், நம்மைக் கரை ஏற்றுவதிலேயே நோக்கம் கொண்டவனாய் இருப்பதால் மோக்ஷத்திற்கு மட்டுமே காரணமாக உள்ளதால் ஆபத்து ஏற்படும்போது காப்பாற்றும் ஆசார்யனாகிற தந்தை. (மற்றொருவர்க்குப் பேச்சுப்படாமல்) – பெரியாழ்வார் திருமொழி (3-4-5) - மற்றொருவர்க்கு என்னைப் பேசலோட்டேன் – என்றும், நாச்சியார் திருமொழி (1-5) – மானிடவர்க்கென்று பேச்சுபடில் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்றவர்களுக்கு வசப்பட்டது என்னும் பேச்சு வராதவிதத்தில், (விச்வபதி லோகபர்த்தா என்னும்) – புருஷஸூக்தம் - பதிம் விச்வஸ்ய - இந்த உலகின் பதி - என்று “பதி” சப்தம் மூலமாகவும், இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-55) - கௌஸல்யா லோகபர்த்தாரம் – உலகிற்குக் கணவனாக உள்ள யாரை கௌஸலை பெற்றாளோ - என்று “பர்த்ரு” சப்தம் மூலமாகவும் அனைத்து லோகங்களுக்கும் நாயகன் என்று கூறப்படும், (மணவாளரை) – நாச்சியார் திருமொழி (10-6) - பணவாளரவணைப் பற்பல காலமும் பள்ளி கொள்ளும் மணவாளரை – என்பதற்கு ஏற்ப உள்ள அழகியமணவாளனை, (நால் இரண்டு இழை கொண்டு முப்பிரியான ப்ரஹ்மஸூத்ர பந்தத்தோடே) – முமுக்ஷுப்படியில் - எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம் - என்பதற்கு ஏற்ப எட்டு எழுத்துக்கள் மற்றும் மூன்றும் சொற்கள் கொண்டதாக, ஸர்வேச்வரனுடன் உள்ள ஸம்பந்தத்தை விளக்கவல்ல திருமந்த்ரம் என்ற தாலிக்கொடியுடன், (வரிப்பிக்க) - இராமாயணம் பாலகாண்டம் (73-26)

- பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா - உம்முடைய திருக்கரத்தால் இவளுடைய திருக்கரத்தைப் பற்றிக் கொள்வாயாக - என்பது போன்று கையைப் பிடிக்கும்படிச் செய்ய, (பரம் புருடன் கைக்கொண்டபின்) – பெரியாழ்வார் திருமொழி (5-4-2) – பரம் புருடா நீ என்னைக் கைக்கொண்ட பின் - என்று கூறப்படுகின்ற பரமபுருஷனாகிய அழகியமணவாளன் ஏற்றுக் கொண்ட பின்னர்.

**வ்யாக்யானம்** - (சதுர்த்தியுள் புக்கு) விவாஹாநந்தரம் சேஷ ஹோம பர்யந்தமான சதுர்திவஸத்திலும் அகலுதலு மணுகுதலுமற்று, அநந்யார்ஹ சேஷத்வாநுகுணமான பரிமாற்றத்துக்கு அர்ஹமென்னுமளவை ப்ரகாசிப்பித்துக் கொண்டிருக்குமோபாதி, ப்ரணவோக்தமான அநந்யார்ஹ சேஷத்வத்தில் கண்ணழிவற அங்கீகரிக்கையாலும், ததநுகுணமாகக் கிட்டிப் பரிமாறப் பெறாமையாலும், அகலுதலு மணுகுதலுமற்று, கைங்கர்ய ப்ரார்த்தனையோடே செல்லும் சரமசதுர்த்தியிலே உள்புக்கு (இடையீடு நடுக்கிடக்கும் நாள் கழித்து) தம்பதிகளிருவரும் ஏகசய்யையிலே வர்த்திக்கச் செய்தே அந்யோந்ய ஸ்பர்ச யோக்யதை யில்லாதபடி இடையீடான ஸோமாதிகள் நடுவே கிடக்கும் நாள் போலே, சேஷத்வ ஜ்ஞாநமும் சேஷ வ்ருத்தி ப்ரார்த்தனையு முண்டாகையாலே இரண்டு தலைக்கும் அண்ணிமை யுண்டாயிருக்கவும் சேர்ந்து பரிமாற வொண்ணாதபடி “நண்ணியும் நண்ணகில்லேன் நடுவேயோருடம்பலிட்டு” என்கிறபடியே அநுபவ விரோதியாய் இடையீடான சரீரம் நடுவே கிடக்கிற நாலு நாளையும், “நாள் கடலைக் கழிமின்” என்கிறபடியே கழித்து.

**விளக்கம்** - (சதுர்த்தியுள் புக்கு) - திருமணம் முடிந்த பின்னர், சேஷ ஹோமம் முடியும்வரை உள்ள நான்கு நாட்களிலும் அகன்றும் செல்லாமல் அணுகவும் செய்யாமல், அவனுக்கு மட்டுமே அடிமை என்னும் நிலைக்கு ஏற்றபடி, அவனுடன் இணைவதற்குத் தகுதி உள்ளது என்ற தன்மையை வெளிப்படுத்தியபடி உள்ளது போன்று, [இவ்விதமாக உள்ளது எது என்று அடுத்து கூறுகிறார்] ப்ரணவத்தில் கூறுவதாகிய அவனுக்கு மட்டுமே அடிமை என்றுள்ள தன்மையில் எந்தவிதமான தடையும் இன்றி அங்கீகரிப்பதாலும், அதற்குத் தகுதியாக அவனை அண்டி நின்று அவனுடன் சேர்வதற்கு இயலாமல் உள்ளதாலும், இதன் மூலம் அணுகுதல் மற்றும் அகலுதல் ஆகியவை அற்று, “கைங்கர்யம் செய்தல் வேண்டும்” என்ற ப்ரார்த்தனையுடன் கூடியதான “நாராயணாய” என்ற சொல்லில் காணப்படும் “ஆய” என்ற நான்காம் வேற்றுமை உருபின் பொருளில் ஈடுபட்டு,


Email:sridharan_book@yahoo.co.in

(இடையீடு நடுக்கிடக்கும் நாள் கழித்து) - தம்பதிகள் இரண்டு பேரும் ஒரே படுக்கையில் உள்ளபோதிலும் ஒருவரை ஒருவர் தொடுவதற்கு உரிய தகுதி ஏற்படாதவிதத்தில் தடுக்கின்ற சந்த்ரன் போன்றவர்கள் நடுவில் கிடக்கும் நாள்கள் போன்று, [இவ்விதம் உள்ளது எது என்று அடுத்து கூறுகிறார்], அடிமைத்தனம் குறித்த ஞானம் மற்றும் கைங்கர்யம் வளரவேண்டும் என்ற ப்ரார்த்தனை ஆகிய இரண்டும் ஏற்படுவதால், ஸர்வேச்வரனுக்கும் நம்மாழ்வாருக்கும் சேர்ந்து இருக்கவல்ல நிலை உள்ளபோதிலும், சேர்ந்து இருக்கமுடியாதபடி, திருவாய்மொழி (5-1-5) - நண்ணியும் நண்ணகில்லேன் நடுவேயோருடம்பலிட்டு - என்பதற்கு ஏற்ப அந்த அனுபவத்திற்கு விரோதியாக அதனைத் தடுக்கவல்ல சரீரம் நடுவில் உள்ள நான்கு நாள்களையும், திருவாய்மொழி (1-7) – நாள் கடலைக் கழிமின் – என்பதற்கு ஏற்பக் கழித்து.

**வ்யாக்யானம்** - (ஜந்மபூமியை விட்டகன்று) "முற்றிலும் பைங்கிளியும் பந்துமூசலும் ஏசுகின்ற சிற்றில் மென்பூவையும் விட்டகன்ற செழுங்கோதை" என்கிறபடியே ஒருவராலும் விடவரிதான ஜந்மபூமியான ஸம்ஸார விபூதியை முன்பு ஆதரணீயமாய்ப் போந்த வஸ்துக்களோடே கூட புரிந்து பாராமல் விட்டு நீங்கி. அன்றிக்கே "அன்று நான் பிறந்திலேன்" என்னும்படி கிடந்த தனக்கு, ஆசார்யன் திருமந்த்ரத்தினா லுண்டாக்கின ஜந்மம் பெற்றது இங்கேயாகையாலே ஜந்மபூமியான இவ்விபூதியை, பகவதநுபவ ப்ராவண்யத்தாலே "முற்றிலும் பைங்கிளியும்" இத்யாதிப்படியே முன்பு ஆதரணீயமாய்ப் போந்த வஸ்துக்களோடே கூட விட்டகன்றென்னவுமாம்; பிறந்தகத்தை விட்டுப் புக்ககத்துக்குப் போகிறதாகச் சொல்லுகிற இந்த ரூபகத்துக்கு இது மிகவும் சேருமிறே.

**விளக்கம்** - (ஜந்மபூமியை விட்டு அகன்று) – பெரியதிருமொழி (3-7-8) - முற்றிலும் பைங்கிளியும் பந்துமூசலும் ஏசுகின்ற சிற்றில் மென்பூவையும் விட்டகன்ற செழுங்கோதை – என்பதற்கு ஏற்ப யாராக இருந்தாலும் விடுவதற்கு மிகவும் அரிதான, பிறப்பு ஏற்படும் இடமான இந்த ஸம்ஸார உலகத்தினை, முன்பு நமக்கு விருப்பமான பொருள்களுடன் சேர்ந்து கைவிட்டு அகன்று. அல்லது வேறுவிதமாகவும் கூறலாம்; திருச்சந்தவிருத்தம் (64) - அன்று நான் பிறந்திலேன் - என்பதற்கு ஏற்பக் கிடந்த தனக்கு, ஆசார்யன் திருமந்த்ரத்தை உபதேசம் செய்ததன் காரணமாக, புதியதாக ஒரு பிறவி அடைந்தது இங்கே என்பதால், பிறவியைப் பெற்ற பூமியான இந்த உலகத்தை, ஸர்வேச்வரனை அனுபவித்தல் என்ற ஈடுபாடு காரணமாக, திருச்சந்தவிருத்தம் (64) - முற்றிலும்


**Email:**sridharan_book@yahoo.co.in

பைங்கிளியும் - என்ற பாசுரத்தில் உரைத்தபடி, முன்பு விருப்பத்திற்கு ஏற்றபடி இருந்த பொருள்களுடன் கூடச் சேர்ந்து அகற்றி, புகுந்த வீட்டிற்குச் செல்வது போன்று எனக் கூறுவது பொருத்தமாகும்.

**வ்யாக்யானம்** - (சூழ்விசும்பிற்படியே உடன்சென்று) "சூழ்விசும்பு" என்கிற திருவாய்மொழியில் சொல்லுகிறபடியே அர்ச்சிராதி மார்க்கத்தாலே வழியிலுள்ளாரடைய ஸத்கரிக்க, "அங்கவனொடு முடன் சென்று" என்கிறபடியே, "நயாமி" என்கிற நாயகன் முன்னே போக, பின்னே போய். (குடைந்து நீராடி) "குள்ளக் குளிரக் குடைந்து நீராடி" என்கிறபடியே, பர்த்ரு க்ருஹத்துக்குப் போகிற பெண் அவ்வூரெல்லையிலே சென்றவாறே அவர்கள் குளிப்பாட்டக் குளிக்குமாபோலே, அம்ருதவாஹிநியான விரஜையிலே இப்பாலுள்ள அழுக்கறும்படி நீராடி.

**விளக்கம்** - (சூழ்விசும்பிற்படியே உடன்சென்று) – திருவாய்மொழி (10-9-1) – சூழ்விசும்பு - என்ற திருவாய்மொழியில் கூறுவதற்கு ஏற்ப அர்ச்சிராதி மார்க்கத்தில் உள்ள பலரும் உபசாரம் செய்து வரவேற்க, (உடன் சென்று) – நாச்சியார் திருமொழி (6-10) – அங்கவனொடு முடன் சென்று – என்பதற்கு ஏற்ப, வராக சரமச்லோகத்தில் – நயாமி – அழைத்துச் செல்கிறேன் - என்று கூறுவதான நாயகன் முன்னே செல்ல, (குடைந்து நீராடி) – திருப்பாவை (13) - குள்ளக் குளிரக் குடைந்து நீராடி – என்பதற்கு ஏற்ப கணவன் வீட்டிற்குச் செல்லும் புதிய மணப்பெண், அந்த ஊரின் எல்லைக்குச் சென்றவுடன், அவர்கள் நீராட்டிவிட நீராடுவது போன்று, அமிர்தம் பெருகின்ற விரஜாநதியில் தன்னிடம் உள்ள அனைத்து அழுக்குகளும் நீங்கும்படி நீராடி.

**வ்யாக்யானம்** - (வியந்துழாயஞ்சனத்தின் நீறு நானப்பொடி பீதகவாடை பல்கலன் கொண்டு நோக்கியரலங்கரித்து) குளித்தேறின பெண்ணை பர்த்ரு பந்துக்களான ஸ்த்ரீகள் வந்து அலங்கரிக்குமாபோலே, "வியந்துழாய் கற்பென்று சூடும்", "ஆராரயிர்வேற் கணஞ்சனத்தின் நீறணிந்து", "மெய்திமிரு நானப்பொடி", "உடுத்துக் களைந்த நின் பீதகவாடை", "பல்கலனும் யாமணிவோம்" என்கிறபடியே அலங்காரோபகரணங்களான திவ்யமால்ய திவ்யாஞ்ஜந திவ்யசூர்ண திவ்யவஸ்த்ர திவ்யாபரணங்களை, "தம் பஞ்சச தாந்யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி சதம் மாலாஹஸ்தா: சதமஞ்ஜந ஹஸ்தா: சதம் சூர்ணை ஹஸ்தா: சதம் வாஸோ ஹஸ்தா: சதம் பூஷண ஹஸ்தா:" என்கிறபடியே ஏந்திக் கொண்டு,


Email:sridharan_book@yahoo.co.in

"மானேய் நோக்கி"யரான திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் எதிரே வந்து, "தம் ப்ரஹ்மாலங்காரேணா லங்குர்வந்தி" என்கிறபடியே போக்த்ருபூத ஈச்வர போக்யமாம்படி அலங்கரித்து.

**விளக்கம்** - (வியன் துழாய் அஞ்சனத்தின் நீறு நானப்பொடி பீதகவாடை பல்கலன் கொண்டு) – இவ்விதம் நீராடி கரை ஏறிய புது மணப்பெண்ணை அவளுடைய கணவனின் உறவுப்பெண்கள் வந்து அலங்கரிப்பது போன்று, மூன்றாம் திருவந்தாதி (69) - "வியந்துழாய் கற்பென்று சூடும் – என்றும், சிறியதிருமடல் (10) - ஆராரயிர்வேற் கணஞ்சனத்தின் நீறணிந்து - என்றும், பெரியாழ்வார் திருமொழி (1-4-9) – மெய்திமிரு நானப்பொடி - என்றும், திருப்பல்லாண்டு (9) - உடுத்துக் களைந்த நின் பீதகவாடை - என்றும், திருப்பாவை (27) – பல்கலனும் யாமணிவோம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அலங்காரம் செய்வதற்கு ஏற்றபடி உள்ளவைகளும், தெய்வீகமாக உள்ளவைகளும் ஆகிய மாலை, அஞ்சனம், வாசனைப்பொடி, புடவை, ஆபரணங்கள் போன்ற பலவற்றை. (நோக்கியர் அலங்கரித்து) - கௌஷீதகீ உபநிஷத் - தம் பஞ்சச தாந்யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி சதம் மாலாஹஸ்தா: சதமஞ்ஜந ஹஸ்தா: சதம் சூர்ணை ஹஸ்தா: சதம் வாஸோ ஹஸ்தா: சதம் பூஷண ஹஸ்தா: – நூறு பெண்கள் தங்களுடைய கைகளில் மாலை ஏந்தியபடியும், நூறு பெண்கள் தங்களுடைய கைகளில் அஞ்சனம் ஏந்தியபடியும், நூறு பெண்கள் தங்களுடைய கைகளில் ஸ்ரீசூர்ணம் ஏந்தியபடியும், நூறு பெண்கள் தங்களுடைய கைகளில் வஸ்த்ரம் ஏந்தியபடியும், நூறு பெண்கள் தங்களுடைய கைகளில் ஆபரணங்கள் ஏந்தியபடியும் அந்த முக்தனை நூறு தேவலோகப் பெண்கள் எதிர் கொள்கிறார்கள் – என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (5-8-11) – மானேய் நோக்கி – என்பதான தேவலோகப்பெண்கள் வந்து நின்று, கௌஷீதகீ உபநிஷத் - தம் ப்ரஹ்மாலங்காரேணா லங்குர்வந்தி - அவனை ப்ரஹ்ம அலங்காரம் செய்கிறார்கள் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய அனுபவத்திற்கு இனிமையாக உள்ள விதத்தில் அலங்காரம் செய்து.

**வ்யாக்யானம் -** (பல்லாண்டிசைத்துக் கவரி செய்ய) "தொக்குப் பல்லாண்டிசைத்துக் கவரி செய்வரேழையரே" என்கிறபடியே இவ்விஷயத்தில் கிஞ்சித்கரிக்கையிலுண்டான சாபலம் தோற்றத் திரள நின்று மங்களாசாஸநம் பண்ணி சாமரம் பணிமாற. (நிறைகுட விளக்கமேந்தி இளமங்கையரெதிர் கொள்ள) அலங்க்ருதையாய் உபலாலநத்தோடே

செல்லுகிற பெண், பர்த்ரு க்ருஹத்தை அணுகச்சென்றவாறே அங்குள்ள ஸ்த்ரீகள் மங்களதீபாதிகளை யேந்திக்கொண்டு எதிரே வந்து ஸத்கரிக்குமாபோலே, "நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மதிமுக மடந்தையரேந்தினர்" என்கிறபடியே மங்களாவஹமான பூர்ணகும்ப தீபாதிகளை தரித்துக் கொண்டு; "சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள" என்கிறபடியே நித்ய நவ யௌவந ஸ்வபாவைகளான வேறு சில திவ்யாப்ஸரஸ்ஸுக்க ளெதிர்கொள்ள.

**விளக்கம்** – (பல்லாண்டு இசைத்துக் கவரி செய்ய) திருவாய்மொழி (7-6-11) - தொக்குப் பல்லாண்டிசைத்துக் கவரி செய்வரேழையரே - என்பதற்கு ஏற்ப இவர்களுக்கு இந்த விஷயத்தில் கைங்கர்யம் செய்வதில் ஏற்பட்ட ஆசை வெளிப்படும்படியாக, திரளாக நின்று, துதித்து, சாமரம் வீச. (நிறை குட விளக்கமேந்தி இளமங்கையர் எதிர்கொள்ள) - நன்கு அலங்காரம் செய்யப்பட்டவளாக, மிகுந்த கொண்டாட்டங்களுடன் செல்லும் புதுமணப்பெண், தனது கணவன் வீட்டின் அருகில் சென்றவுடன், அங்குள்ள பெண்கள் அனைவரும் மங்களதீபம் போன்றவற்றைக் கைகளில் ஏந்தியபடி எதிரே வந்து உபசரிப்பது போன்று, திருவாய்மொழி (10-9-10) – நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மதிமுக மடந்தையரேந்தினர் – என்பதற்கு ஏற்ப, மங்களத்தை ஏற்படுத்தவல்லதான பூர்ணகும்பம், தீபம் போன்றவற்றை எடுத்துக்கொண்டு, திருவாய்மொழி (10-9-10) – சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள – என்பதற்கு ஏற்ப, எப்போதும் புதுமையுடன் கூடிய இளமையைக் கொண்டுள்ளதான தன்மை கொண்ட வேறு சில தேவலோகப் பெண்கள் எதிர் கொள்ள.

வ்யாக்யானம் - (வைகுந்தம் புக்கிருந்து) உபலாலநத்தோடே சென்ற பெண் பர்த்ரு க்ருஹத்திலே புகுருமாபோலே, "மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கிருப்பார்" என்கிறபடியே ஸ்ரீய:பதியானவனுக்கு போகஸ்தாநமான ஸ்ரீவைகுண்டத்தை ப்ராபித்து அவனோடே கூடியிருந்து. (வாய்மடுத்துப் பெருங்களிச்சியான வானவர் போகமுண்டு) பர்த்ரு க்ருஹத்திலே பெண் வந்த பின்பு தம்பதிகளும், மற்றுமுள்ள பந்துக்களும் கூடியிருந்து பெருங்களிச்சி யுண்ணுமாபோலே, "அடியார்கள் குழாங்களும்" அவனுமாக விருக்கிற சேர்த்தியிலே, "அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேன்" என்று பெருங்களிச்சியாக முழுமிடறு செய்து, "கட்டெழில் வானவர் போகமுண்பாரே"

என்கிறபடியே நித்யஸூரிகள் புஜிக்கிற போகத்தை, “ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா” என்கிறபடியே புஜித்து.

**விளக்கம்** – (வைகுந்தம் புக்கிருந்து) - நன்கு அலங்கரிக்கப்பட்டவளாக சென்ற அந்தப் பெண், தனது கணவன் வீட்டில் புகுவது போன்று, நாச்சியார் திருமொழி (3-10) - மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கிருப்பார் – என்பதற்கு ஏற்ப, மஹாலக்ஷ்மியின் நாயகனுடைய இன்பத்திற்கு இடமான ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து, அவனுடன் கூடியிருந்து, வீட்டிற்கு அந்தப் பெண் வந்த பின்னர் தம்பதிகளும் அங்குள்ள மற்ற உறவினர்களும் கூடி நின்று பெருங்களிச்சி உண்பது போன்று, திருவாய்மொழி (2-3-10) – அடியார்கள் குழாங்கள் - என்பதற்கு ஏற்ப அடியார்கள் கூட்டமும், அவனுமாக உள்ள சேர்த்தியில், திருவாய்மொழி (2-3-9) – அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேன் - என்பதற்கு ஏற்ப பெருங்களிச்சியாக முற்றிலும் உண்டு. (வானவர் போகம் உண்டு) - திருவாய்மொழி (6-6-11) - கட்டெழில் வானவர் போகமுண்பாரே - என்பதற்கு ஏற்ப நித்யஸூரிகள் அனுபவிக்கின்ற இன்பத்தினை, தைத்திரீயம் - ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா - அனைத்து விருப்பங்களையும் பரமாத்மாவுடன் சேர்ந்து நின்று அனுபவிக்கிறான் - என்பதற்கு ஏற்ப அனுபவித்து.

**வ்யாக்யானம்** - (கோப்புடைய கோட்டுக்காற் கட்டில் மிதித்தாரோஹித்து) பர்த்ரு ஸம்ச்லேஷத்துக்குப் படுக்கையிலே யேறுமாபோலே “கோப்புடைய சீரிய சிங்காசனம்” என்றும், “கோட்டுக்காற் கட்டில்” என்றும் சொல்லுகிறபடியே உபயவிபூதியும் தொழிலாக வகுப்புண்டு ஸர்வாச்சர்யமயமான திவ்யபர்யங்கத்திலே, “தமேவம் வித் பாதேநாத் யாரோஹதி” என்கிறபடியே பாதபீடத்திலே அடியிட்டேறி. (பரதாக்ரூர மாருதிகளைப் பரிஷ்வங்கித்த மணிமிகு மார்விலே) “தம் ஸமுத்தாப்ய காகுத்ஸ்தச் சிரஸ்யாக்ஷி பதம் கதம், அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே” என்றும், “ஸோப்யேநம் த்வஜ வஜ்ராப்ஜ க்ருத சிஹ்நேந: பாணிநா, ஸம்ஸ்ப்ருச்யாக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே” என்றும், “ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:, மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய மஹாத்மந:” என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீபரதாழ்வானையும் அக்ரூரனையும் திருவடியையும் ஆதரித்தணைத்துக் கொண்ட “மணிமிகு மார்பு” என்று ஸ்ரீகௌஸ்துபம் நிறம் பெறும்படி அழகிய திருமார்பிலே


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (கோப்புடைய கோட்டுக்காற் கட்டில் மிதித்து ஆரோஹித்து) - கணவனுடன் சேர்வதற்காகக் கட்டிலில் ஏறுவது போன்று, திருப்பாவை (23) - கோப்புடைய சீரிய சிங்காசனம் – என்றும், திருப்பாவை (19) – கோட்டுக்காற் கட்டில் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, இரண்டு விபூதிகளில் உள்ள அனைத்தையும் படைத்தல் போன்றவற்றைச் செய்து, அனைத்திற்கும் புகலிடமாக உள்ள தெய்வீகமான கட்டிலில், கௌஷீதகீ உபநிஷத் (1-5) – தமேவம் வித் பாதேநாத் யாரோஹதி – இவ்விதம் ப்ரஹ்மத்தை அறிந்தவன் தனது கால்கள் கொண்டு அந்தக் கட்டிலில் ஏறுகிறான் - என்பதற்கு ஏற்ப, பாதபீடத்தில் தனது கால்கள் கொண்டு அடியெடுத்து ஏறி, (பரத அக்ரூர மாருதிகளைப் பரிஷ்வங்கித்த மணிமிகு மார்விலே) - இராமாயணம் யுத்தகாண்டம் (130-39) – தம் ஸமுத்தாப்ய காகுத்ஸ்தச் சிரஸ்யாக்ஷி பதம் கதம், அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே – தனது தலை கொண்டு முன்னால் விழுந்துள்ள பரதனை இராமன் மெதுவாக எடுத்துத் தனது தொடையில் அமர்த்தி, நன்கு தழுவிக் கொண்டான் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-5) – ஸோப்யேநம் த்வஜ வஜ்ராப்ஜ க்ருத சிஹ்நேந: பாணிநா, ஸம்ஸ்ப்ருச்யாக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே - த்வஜம், வஜ்ரம், தாமரை போன்ற பலவிதமான அடையாளங்கள் கொண்ட தனது கைகளால் க்ருஷ்ணன், அக்ரூரரை மிகவும் அன்புடன் தொட்டும் தழுவியும் செய்தான் - என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (1-13) – ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:, மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய மஹாத்மந: – இரண்டு முறை எனக்குச் சரீரம் அளித்த உதவிய அனுமனுக்குச் சரியான நேரத்தில் என்னால் அளிக்கப்பட்ட இந்த அரவணைப்பு என்பது, அனைத்துவிதமான கொடைகளுக்கும் ஒப்பாகும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பரதன், அக்ரூரர் மற்றும் அனுமன் ஆகியவர்களை அணைத்துக் கொண்ட, திருவாய்மொழி (10-3-5) – மணிமிகு மார்பு – என்பதான, ஸ்ரீகௌஸ்துப மணியும் அழகு பெறுகின்ற, அழகான திருமார்பில்.

**வ்யாக்யானம்** - (குருமாமணியாயணையும் வஸ்துவுக்கு) "குருமாமணிப் பூண்" என்று ச்லாக்யமாய் ஈச்வரத்வ சிஹ்நமான ஸ்ரீகௌஸ்துபத்தோபாதி போக்யமாய் தேஜஸ்கரமாய்க் கொண்டு அணைகிற ஆத்மவஸ்துவுக்கு. (மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று) "வண்பூமணிவல்லி" என்று உதாரமாய் போக்யமாய்த் தனக்குத்தானே ஆபரணமாம்படி அழகியதாய், கொள்கொம்பு பெறாவிடில் தலையெடுக்க மாட்டாமை தரைப்பட்டுக் கிடக்கும் கொடி போன்றவளென்கிற ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமாய் வரும் பேச்சு வந்தேறியன்று; ஸ்வாபாவிகமென்றபடி. பெண் பேச்சென்ன வமைந்திருக்க மணிவல்லிப்

பேச்சென்றது – “மணிமிகு மார்பிலே மணியாயணையும்” என்றத்தோடொக்க “மணிவல்லி” என்றால் சொற்கட்டளையால் வரும் ரஸமுண்டாகையாலே. இத்தால் ஸ்த்ரீத்வம் ஆத்மவஸ்துவுக்கு ஸ்வாபாவிகமாகையாலே அத்தை உள்ளபடி தர்சித்த விவர்க்கு தத் ப்ரயுக்தமான பேச்சு ஸ்வாபாவிகமென்று சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – (குருமாமணியாயணையும் வஸ்துவுக்கு) – பெரியாழ்வார் திருமொழி (1-3-10) – குருமாமணிப் பூண் - என்று மேன்மையுடன் கூறப்படுவதாகவும், ஸர்வேச்வரத் தன்மையை வெளிப்படுத்தும் அடையாளமான ஸ்ரீகௌஸ்துபம் போன்று இனிமையாக உள்ளதாகவும், ஒளி வீசுவதாகவும் உள்ளதாகக் கொண்டு அணைகிற ஆத்மாவுக்கு. (மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று) – திருவிருத்தம் (9) – வண்பூமணிவல்லி - என்பதற்கு ஏற்ப வள்ளல் தன்மை கொண்டதாய், இனிமையாய், தனக்குத்தானே ஆபரணமாக உள்ளது போன்று அழகியதாய், கொள்கொம்பு கிடைக்கவில்லை என்றால் மேலே எழும்ப இயலாமல் தரையுடன் தரையாகக் கிடக்கும் கொடி போன்றவள் என்று பெண் தன்மையுடன் கூடியதாய் உள்ள பேச்சுக்கள் அனைத்தும் வந்து சேர்ந்தவை அல்ல; இயல்பாகவே உள்ள தன்மைகள் என்று கருத்து. “பெண் பேச்சு” என்று கூறினாலே போதுமானதாக உள்ளபோது, “மணிவல்லிப் பேச்சு” என்று ஏன் கூறினார்? “மணிமிகு மார்பிலே மணியாய் அணையும்” என்று கூறுவதுடன் சேரும் விதத்தில், “மணிவல்லி” என்று கூறினால், கூடுதல் ரஸம் ஏற்படும் என்பதால் ஆகும். இதன் மூலம் - பெண் தன்மை என்பது ஆத்மாவுக்கு இயல்பாகவே அமைந்த ஒன்றாகும்; ஆகவே இதனை உள்ளது உள்ளபடி அறிந்து கொண்ட இவருக்கு, அத்தகைய பெண் தன்மையால் ஏற்படும் பேச்சு இயல்பானதே ஆகும் – என்று கூறப்பட்டது.

122. இன்புமன்பும் முற்படுவது கொழுந்து விடுவதாகிறது கடிமாமலர்ப் பாவையோடுள்ள ஸாம்ய ஷட்கத்தாலே.

**அவதாரிகை** - இப்படி கேவலம் ஸ்த்ரீ ஸாம்யமேயன்றிக்கே நாரீணாமுத்தமையான பிராட்டியோடே ஸாம்யமும் பரிசுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு உண்டென்னுமத்தை ஸ்பஷ்டமாக வருளிச்செய்கிறார் மேல் (இன்புமன்புமென்று தொடங்கி).


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – இவ்விதம் பெண் என்ற ஒப்புமை மட்டும் அல்லாமல், பெண்களில் உயர்ந்தவளாகிற பெரியபிராட்டியுடன் ஒப்புமையும் இந்தத் தூய்மையான ஆத்மஸ்வரூபத்திற்கு உண்டு என்பதை மிகவும் தெளிவாக இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பனை" என்று இன்றாச்ரயித்த நமக்கும் நித்யஸூரிகளுக்கு மவ்வருகாய ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பூர்ணையாயிருக்கிற பிராட்டிக்கும் இன்பனாமிடத்தில், முற்பட இங்கே இன்பனாய், பின்பாயிற்று அவளுக்கு ஸ்நேஹிப்பதென்னும்படி, பிராட்டிக்கு முன்னே இவர்பக்கல் இன்பனாவது; "கோலமலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பே" என்று நிரதிசய போக்யையான பிராட்டிக்கு அன்பனாகையாலே, அவள் பரிக்ரஹமான என்பக்கலிலும் அன்பனானவனே யென்னும்படி, அவள் பக்கல் பண்ணின ஸ்நேஹம் இவ்வளவும் வளர வருவதாய், இப்படி இன்புமுற்படுவது அன்பு கொழுந்து விடுவதாகிறது, "கடிமாமலர்ப் பாவை யொப்பாள்" என்று பரிமள ப்ரசுரமான பூவில் பிறப்பாலும் நிருபாதிக ஸ்த்ரீத்வத்தாலும் நிரதிசய போக்ய பூதையான பிராட்டியோ டொக்கச் சொல்லலாமவளென்னும்படி, பிராட்டியோடு இத்தலைக்குள்ள ஸாம்யத்துக் குடலான அநந்யார்ஹ சேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வம், ஸம்ச்லேஷத்தில் தரிக்கை, விச்லேஷத்தில் தரியாமை, ததேக நிர்வாஹ்யத்வமாகிற ஆறு ப்ரகாரத்தாலேயென்கை.

**விளக்கம்** – (இன்பு முற்படுவது) - திருவாய்மொழி (4-5-8) – நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பனை - என்பதற்கு ஏற்ப, இன்று திருந்தி அவனை அடைந்த நமக்கும், நித்யஸூரிகளுக்கும் எட்டாதவளாக உள்ள ரூபம், குணம் மற்றும் ஆத்மகுணத்தால் நிறைந்துள்ள பெரியபிராட்டிக்கும் இனிமையாக உள்ளவனாக இருக்கும்போதிலும், முதலில் நம்மிடம் இன்பனாக இருந்த பின்னரே பெரியபிராட்டியிடம் இன்பனாக உள்ளான்; இதற்கு ஏற்றபடி பெரியபிராட்டிக்கு முன்பாக, நம்மாழ்வாரிடமே அவன் இன்பனாக உள்ளான் என்று கருத்து. (அன்பு கொழுந்து விடுவதாகிறது) - திருவாய்மொழி (10-10-7) - கோலமலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பே – என்பதற்கு ஏற்ப எல்லையற்ற இனியவளாக உள்ள பெரியபிராட்டிக்கு அன்பனாக உள்ளதால், அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட என்னிடமும் அன்பாக உள்ளவனே - என்னும்படியாக

பெரியபிராட்டியிடம் அவன் காண்பிக்கும் அன்பானது, நம்மாழ்வார் வரை வளர்ந்து நிற்பதாய்; இவ்விதம் இன்பம் முற்பட்டு அன்பு கொழுந்து விடுவதாகிறது. (கடிமா மலர்ப் பாவையோடு உள்ள) - பெரியதிருமொழி (3-7-9) – கடிமாமலர்ப் பாவை யொப்பாள் – என்பதற்கு ஏற்ப, மிகுந்த நறுமணத்துடன் கூடிய மலரில் பிறந்த காரணத்தாலும், எந்தக் காரணமும் இன்றி உள்ளதான பெண்மைத்தனத்தாலும் எல்லையற்ற இனிமையுடன் கூடியவளாக பெரியபிராட்டி உள்ளாள்; இப்படிப்பட்ட பெரியபிராட்டிக்கு ஒப்புமை கூறவல்லவள் என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியுடன் நம்மாழ்வாருக்கு உள்ளதான. (ஸாம்ய ஷட்கத்தாலே) - ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் [அநந்யார்ஹ சேஷத்வம்], அவனை மட்டுமே சரணம் என்று புகுதல் [அநந்ய சரணத்வம்], அவனுக்கு மட்டுமே இனியவளாக இருத்தல் [அநந்ய போக்யத்வம்], அவனுடன் சேர்ந்திருந்தால் மட்டுமே உயிர் தரித்தல், அவனைப் பிரிய நேர்ந்தால் உயிர் தரிக்க இயலாதபடி தவித்தல், அவனால் மட்டுமே காப்பாற்றப்படுதல் - என்பதான ஆறுவகையான ஒற்றுமைகள்.

**வ்யாக்யானம்** – "இன்பன்" என்றது – ஸ்நிக்தனென்றபடி. ஆகையால் அன்போபாதி இன்பும் ஸ்நேஹவாசியாகையாலே, ஸ்நேஹம் முற்படுவது கொழுந்து விடுவதாகிற தென்றபடி. "இன்பும், அன்பும்" என்று இரண்டு போலச் சொல்லிற்று - முற்படுதலும் கொழுந்துவிடுதலும் சொல்லுகிற ஸ்தலங்களில் ஸ்நேஹ வாசகதயா ப்ரயுக்த சப்தங்கள் இவையாகையாலே இரண்டு சந்தையும் தோற்றுகைக்காக. "பிராட்டியோடுள்ள" என்ன வமைந்திருக்க, "கடிமாமலர்ப் பாவையோடுள்ள" என்றது - அந்த சந்தையிலே பிராட்டி ஸாம்யம் முக்தகண்டமாகச் சொல்லியிருக்கையாலும், கந்தல் கழிந்த ஸ்வரூபத்தை யுடையவர்க ளெல்லாரையும் இப்படிச் சொல்லுகிற - ஸ்வரூபாநுபந்தியான இஸ்ஸாம்ய ஷட்கத்தாலே யென்றறிவிக்கைக்காகவும், ஸாம்யத்தாலே யென்னாமல், ஸாம்ய ஷட்கத்தாலே யென்றது - நிரூபகத்வம், அநுரூபத்வம், அபிமதத்வம், சேஷத்வ ஸம்பந்த த்வாரபாவம், புருஷகாரத்வம், ப்ராப்ய பூரகத்வம் முதலான ஸ்வபாவ விசேஷங்கள் ததஸாதாரணங்க ளாகையாலே.

**விளக்கம்** - "இன்பன்" என்றால் "சிநேஹிதன்" என்று பொருள். எனவே "அன்பு" என்ற சொல்லைப் போன்றே "இன்பு" என்ற சொல்லும் சிநேஹத்தைக் குறிப்பது என்பதால், சிநேஹம் முற்படுதல் கொழுந்துவிடுவதாகிறது என்று கருத்து. அப்படியென்றால்,

 **Email:**sridharan_book@yahoo.co.in

“இன்பம், அன்பு” என்று இரண்டு சொற்களாக ஏன் கூறவேண்டும் என்று கேட்கலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார். முற்படுதல் மற்றும் கொழுந்துவிடுதல் என்பதைக் கூறும் இடங்களில், சிநேஹத்தை உணத்துவதற்காக கூறப்பட்ட சொற்களே இவை இரண்டும் ஆகும் என்று உணர்த்துவதற்காக ஆகும். “பிராட்டியோடு உள்ள” என்று கூறினாலே போதுமானதாயிருக்க, “கடிமாமலர்ப் பாவையோடு உள்ள” என்று ஏன் கூறினார்? இதற்கு விடை அருளிச்செய்கிறார். “கடிமாமலர்ப்பாவை” என்று கூறுவதான பெரியதிருமொழி பாசுரத்தில் (3-7-9), பெரியபிராட்டி மற்றும் ஆத்மஸ்வரூபம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஒப்புமை மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாலும், கந்தல் கழிந்த ஸ்வரூபம் [இந்தச் சரீரத்தை நீக்கிய தன்மை] கொண்ட அனைவரையும் இவ்விதம் உரைப்பது என்பது மேலே கூறப்பட்ட ஆறுவகையான ஒப்புமை உள்ளதாலும் ஆகும் என்று உணர்த்தவே ஆகும். “ஸாம்யம்” என்று கூறாமல் “ஸாம்ய ஷட்கம் = ஆறு ஒற்றுமைகள்” என்று ஏன் கூறினார்? இதற்கான விடையை அருளிச்செய்கிறார். ஸர்வேச்வரனுக்கு மட்டுமே சேரும் தர்மமாக இருத்தல், அவனுக்கு ஒத்த ரூபத்தில் இருத்தல், அவனுக்கு விருப்பமானவளாக இருத்தல், அனைவரும் அவனுக்கு அடிமையாக இருத்தல் என்பது இவள் மூலமாக நிகழும்படி இருத்தல், அனைத்து உயிர்களுக்கும் சிபாரிசு செய்பவளாக இருத்தல் [புருஷகாரத்வம்], நாம் செய்யும் கைங்கர்யம் அனைத்தும் அவனுடைய திருவுள்ளத்தில் பூர்ணமாக நிறையும்படிச் செய்தல் போன்ற தன்மைகள் பெரியபிராட்டிக்கு மட்டுமே உரித்தானவை என்பதால் ஆகும்.

123. உண்ணாது கிடந்தோர் மாயையினா லென்னும் வீறுடைய முடிக்குரியாரோடு இத்திரு மண்ணேரென்ன வொண்ணுதல் பின்னைகொல் என்கிற ஒப்பு, தென்பால் நெடுமாடம் கடுஞ்சிலை அம்பெரியூட்டி நீறேழவெரித்த பெருந்தோற்றத்தாருயிர் காகுத்தன் ஆதியங்காலம் மண்புரை பொன்மாதின் துகளாடி எருதேழ்தழீஇச் சறையினாரென்னு மவற்றிலே தோன்றும்.

**அவதாரிகை -** இப்படி ஆறுப்ரகாரத்தாலே பரிசுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு தத்ஸாம்ய முண்டாகையாலே பிராட்டிதசை இவர்க்கு வந்தேறியல்லாமையை ப்ரகாசிப்பித்தாராய் நின்றார் கீழ். ஏவம் பூதாகாரத்தாலே பெரியபிராட்டியாரோடுள்ள ஸாம்யமே யன்றிக்கே, தம்முடைய பாவவிசேஷங்களாலே பகவதபிமத திவ்யமஹிஷிகளான பிராட்டிமார்


Email:sridharan_book@yahoo.co.in

மூவரோடும் இவர்க்குண்டான ஸாம்யம் இவர் பாசுரங்களிலே ப்ரகாசிக்கு மென்கிறார் மேல் (உண்டாதென்று தொடங்கி).

**விளக்கம்** - இப்படியாக மிகவும் தூய்மையாக உள்ள ஆத்மஸ்வரூபத்திற்கு, பெரியபிராட்டியுடன் ஆறுவிதங்களில் ஒப்புமை உள்ளது என்பதால், நாயகியாய் நிற்கும் தன்மையானது நம்மாழ்வாருக்கு வந்து சேர்ந்த ஒன்று அல்ல (இயற்கையாகவே உள்ளது) என்பதைக் கடந்த சூர்ணையில் வெளிப்படுத்தினார். இப்படியாக உள்ள தன்மைகளால் பெரியபிராட்டியாருடன் உள்ள ஒப்புமை மட்டும் அல்லாமல், இவருடைய மற்ற தன்மைகளுடைய சிறப்புகள் காரணமாகவும், ஸர்வேச்வரனுக்கு மிகவும் விருப்பமான அவனுடைய தேவிமார்கள் மூவருடனும் இவருக்கு ஒப்புமை உள்ளது என்பது, இவருடைய பாசுரங்களில் வெளிப்படுவதை இங்கு கூறுகிறார்.

**குறிப்பு** – இந்தச் சூர்ணைக்கான வ்யாக்யானத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு பொருள் உணரவேண்டும். ஆகவே சூர்ணைக்கான வ்யாக்யானம் ஒரே பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான விளக்கம், தனித்தனியாக உள்ளது.

**வ்யாக்யானம்** – அதாவது "உண்ணாதுறங்காது ஒலிகடலை யூடறுத்துப் பெண்ணாக்கை யாப்பூண்டு தாமுற்ற பேதெல்லாம்" என்கிறபடியே ஜநககுல ஸுந்தரியான தன்னைப் பிரிந்தபோது தீரோதாத்த நாயகனாகையாலே விகார ஹேதுக்களுண்டானாலும், தைர்யத்தாலே புறம் தோற்றாமலிருக்கும் சக்ரவர்த்தித்திருமகனை, "ந மாம்சம் ராகவோ புங்க்தே", "அநித்ரஸ் ஸததம் ராம:", "நைவ தம்சாந் ந மசகாந்" இத்யாதிப்படியே ஊணுமுறக்கமுமற்று, கடித்தது மூர்ந்தது மறியாதபடி பண்ணவல்ல வைலக்ஷண்யத்தால் வந்த முடிக்குரியளான பெரியபிராட்டியாரோடும், "கிடந்திருந்து நின்றளந்து" என்கிற பாட்டின்படியே ஸர்வஜ்ஞனாய் அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரனை, பஹுப்ரகாரமாகத் தன்னை அனுபவித்தாலும் பர்யாப்தனாகாதபடி பிச்சேற்றவல்ல வைலக்ஷண்ய ப்ரயுக்தமான வீறுடையளாய் பெரியபிராட்டியாரோபாதி முடிக்குரியளான ஸ்ரீபூமிப்பிராட்டியாரோடும், "ஓர் மாயையினால்" இத்யாதிப்படியே நித்யஸூரிகள் ஸமாராதந பரராய் நிற்க அவர்களறியாதபடி அத்தை உபேக்ஷித்து தாழ்வுக்கெல்லையான இடைக்குலத்திலே க்ருஷ்ணனாய் வந்து பிறந்து தன்னைப் பெறுகைக்கு சுல்கமாகவிட்ட ம்ருத்யு ஸமங்களான ருஷபங்களின் கொம்பினிடையிலே கருமாறி பாய்ந்தாற்போலே

தன்னைப் பேணாமல் சென்று விழும்படி பண்ணவல்ல வைலக்ஷண்ய வீறுடையளாய், முற்பட்ட மஹிஷிகளோபாதி முடிக்குரியளான நப்பின்னைப்பிராட்டியாரோடும் “மாயோன் திறத்தனளே இத்திரு” என்று “அநந்யா ராகவேணாஹம்” என்கிறபடியே ஸர்வதசையிலும் அவன் திறமல்லதறியாளாய் ஸாக்ஷால்லக்ஷ்மியோடு விகல்பிக்கலாம் ஸ்வபாவையான விவளென்றும், “மண்ணேரன்ன வொண்ணுதல்” என்று ஸ்ரீபூமிப்பிராட்டி யாரோடொத்த வைலக்ஷண்யத்தை யுடையவளென்றும், “பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல்” என்று நப்பின்னைப்பிராட்டியோ ஸ்ரீபூமிப் பிராட்டியோ பெரியபிராட்டியாரோ என்றும் சொல்லும்படி இவர்க்குண்டான ஸாம்யம்; “தென்பாலிலங்கை வெங்களம் செய்த நம் விண்ணோர் பிரானார் துழாய் துணையாநங்களை மாயை கொள்வான் வந்து தோன்றி நலிகின்றதே” என்று சக்ரவர்த்தித்திருமகனைப் பிரிந்து பாதக பதார்த்தங்களாலே நோவுபடுவது, “வழாநெடும் துன்பத்த ளென்றிரங்காரம்மனோ இலங்கைக் குழாநெடுமாட மிடித்த பிரானார் கொடுமைகளே” என்று ‘ப்ரணயித்வமில்லையானால் ஸாமாந்ய க்ருபையு மில்லையோ?’ என்று கொடுமை சொல்லுவது, “காயும் கடுஞ்சிலையென் காகுத்தன் வாரானால்” என்று எதிர்கள்பக்கல் தான் கண் பார்க்கிலும் கண் பாராத வில்லையுடைய காகுத்தன் இத்தசையில் வருகிறிலனென்று வெறுப்பது, “இலங்கைநகர் அம்பெரி யுய்த்தவர் தாளிணை மேலணி வம்பவிழ் தண்ணந்துழாய் மலர்க்கே இவள் நம்பும்” என்று இலங்கையை சராக்நியாலே தக்தமாக்கினவர் திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்படுவது, “தீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான் தாள் நயந்த யாமுற்ற துற்றாயோ” என்று லங்கையையெல்லாம் அக்நிக்கு விருந்திட்டவன் திருவடிகளை யாசைப்பட்ட நான் பட்டது பட்டாயோவென்று ஸமதுக்கிகளைக் கட்டிக் கொண்டழுவது, “மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க் கென்னையுமுள ளென்மின்களே” என்று எதிரில்லாத போரையுடைய ராவணன் தனக்கு அரணாகவிட்ட மதிளைத் துகளாக்கிப் பொகட்ட ப்ரஸித்தமான சேவகத்தையுடையவருக்கு ரஷ்ய வர்க்கத்திலே நானு மொருத்தி யுண்டென்று சொல்லுங்கோளென்று தூது விடுவது, “கிளரரக்கன் நகரெரித்த களி மலர்த் துழாயலங்கல் கமழ் முடியன் கவராத வறிவினால் குறைவிலம்” என்று ஐச்வர்யோத்ததனான ராவணனுடைய நகரத்தை தக்தமாக்கி முடி சூடி வளையம் வைத்திருக்கிறவன் விரும்பாத அறிவினால் என்ன கார்யமுண்டென்று அவனுக்கு உறுப்பல்லாததை உபேக்ஷிப்பது, “காண் பெருந்தோற்றத்தென் காகுத்த நம்பிக்கு என் பூண்புனை மென்முலை தோற்றது பொற்பே” என்று கண்ணுக்கினியதாய்,

அபரிச்சேத்ய போக்யமான ஸந்நிவேசத்தையும் குணபூர்த்தியையுமுடைய சக்கரவர்த்தி திருமகனுக்கு இவள் தன்னழகை யிழந்தா ளென்னும்படி அவனை ஆசைப்பட்டு அழகழிவது, "என்னாருயிர் காகுத்தன் நின் செய்யவாயொக்கும் வாயன் கண்ணன் கை காலினன் நின் பசுஞ்சாம நிறத்தன் கூட்டுண்டு நீங்கினான் சிறு கிளிப்பைதலே இன்குரல் நீ மிழற்றேல்" என்று விச்லேஷத்தில் தரிக்கவொண்ணாதபடி எனக்கு ப்ராண பூதனான சக்கரவர்த்தி திருமகன் என்னோடே கலந்து வைத்துப் பிரிந்தான்; இத்தசையிலே அவனுக்குப் போலியான உன் வடிவாலே நலிகிறதுக்கு மேலே பேச்சாலும் நலியாதே கொள் என்று கிளியைப் பார்த்து நிஷேதிப்பதாய்க் கொண்டு பேசின பாசுரங்களிலும், "ஆதியங் காலத்தகலிடம் கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொற்றுழாயென்றே யோது மாலெய்தினாள்" என்னும்படி வராஹ கல்பாதியில் மஹாப்ருதிவியை அண்டபித்தியில் நின்று ஒட்டு விடுவித்து, எடுத்தவனுடைய திருவடிகளில் திருத்துழாயென்றே பலகாலும் சொல்லும்படி பிச்சேறுவது, "மண் புரை வையமிடந்த வராகற்கு என் கண் புனை கோதை இழந்தது கற்பே" என்னும்படி அவனை ஆசைப்பட்டு அறிவிழப்பது, "ஞாலப் பொன் மாதின் மணாளன் துழாய் நங்கள் சூழ் குழற்கே ஏலப் புனைந்தென்னைமா ரெம்மை நோக்குவதென்றுகொல்" என்று ஸ்ரீபூமிப்பிராட்டி செவ்வி கொள்ள இட்டுப் பிறந்தவன் சூடின திருத்துழாயை பந்துக்களானவர்கள் ஏற்கவே கொண்டு வந்து நம் குழலிலே சூட்டி நம்மை ரஷிப்பதென்றோ வென்பது. "ஏனமொன்றாய் மண் துகளாடி வைகுந்தமன்னான் குழல்வாய் விரைபோல் விண்டு கள்வாரும் மலருளவோ நும் வியலிடத்தே" என்று அத்விதீய வராஹமாய், ப்ரளயங்கதையான பூமியை யெடுத்தபோது வடிவில் பெருமையால் திருவெயிற்றில் கிடக்கிற பூமி ஒரு துகள் மாத்ர மென்னும்படி நின்றவனுடைய அபதாநத்தை அநிபவித்திருக்கிறவிவள் போக்யதை உபயவிபூதியிலு முண்டோவென்று விசேஷஜ்ஞர் ச்லாக்கிக்கும்படியை ப்ரகாசிப்பதாய்க் கொண்டு பேசின பாசுரங்களிலும், "எருதேழ்தழீ இக்கோளியார் கோவலனார் குடக் கூத்தனார் தாளிணை மேலணி தண்ணந்துழா யென்றே நாளு நாள் நைகின்றது" என்னும்படி ஏறு தழுவுகை முதலான அபதாநங்களையுடைய க்ருஷ்ணன் திருவடிகளில்திருத்துழாயை ஆசைப்பட்டு நாள்தோறும் சைதில்யத்தை யடைவது; "கறையினார் துவருடுக்கை கடையாவின் கழி கோற்கைச் சறையினார் கவராத தளிர் நிறத்தால் குறைவிலம்" என்று கோப வேஷதரனாய் ரஷ்ய வர்க்கத்தினுடைய ரக்ஷணத்துக்காகத் தன்னுடம்பு பேணாமல் திரியும் க்ருஷ்ணன் விரும்பாத ஸ்நிக்தமான நிறம் எனக்கு வேண்டாவென்பதாய்ப் பேசின பாசுரங்களிலும் தோன்றுமென்றபடி.

**விளக்கம்** – [உண்ணாது என்னும் வீறுடைய முடிக்கு உரியாரோடு இத்திரு என்கிற ஒப்பு] (உண்ணாது என்னும்) – நாச்சியார் திருமொழி (11-7) – உண்ணாதுறங்காது ஒலிகடலை யூடறுத்துப் பெண்ணாக்கை யாப்பூண்டு தாமுற்ற பேதெல்லாம் - என்பதற்கு ஏற்ப ஜனகரின் குலத்தில் அவதரித்த சுந்தரியான தன்னைப் பிரிந்தபோது, தீரோதாத்த நாயகன் என்பதால், இராமனாகிய அவன் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவன் என்பதை உணர்த்த பலவிதமான காரணங்கள் உள்ளபோதிலும், தைரியத்தால் அவற்றை வெளிக்காட்டாமல் நின்ற இராமனை, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (36-42) - ந மாம்சம் ராகவோ புங்க்தே - இராகவன் மாமிசம் உண்ணவில்லை - என்றும், ஸுந்தரகாண்டம் (36-44) - அநித்ரஸ் ஸததம் ராம: - இராமன் உறங்கவில்லை – என்றும், ஸுந்தரகாண்டம் (36-42) – நைவ தம்சாந் ந மசகாந் – ஈக்களும் கொசுக்களும் தனது சரீரத்தில் உள்ளபோதிலும் விரட்டவில்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப உணவின்றி, உறக்கம் இன்றி, தன் மீது கடிப்பதையும் ஊர்வதையும் கூட அறியாதபடிச் செய்யவல்ல சிறப்பு காரணமாக ஏற்பட்ட, (வீறுடைய முடிக்கு உரியாரோடு) – வீறு உள்ளவளாகவும், ஸர்வேச்வரனுடைய ஸாம்ராஜ்யத்தில் அவனுக்கு நிகராக முடிசூட்டிக் கொள்வதால் முடிக்கு உரியவளாகவும் உள்ள பெரியபிராட்டியாரோடு, (இத்திரு என்கிற ஒப்பு) – திருவாய்மொழி (4-4-7) - மாயோன் திறத்தனளே இத்திரு – என்றும், ஸுந்தரகாண்டம் ( 21-15) – அநந்யா ராகவேணாஹம் – இராகவனைக் காட்டிலும் நான் வேறுபட்டவள் அல்லள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து நிலைகளிலும் அவன் இருப்பு அல்லாமல் வேறு ஏதும் அறியாத பெரியபிராட்டியோ இவர் என்று வியக்கும்படியாக மஹாலக்ஷ்மியோடு ஒப்பிடத்தக்க தன்மை கொண்டவர் இவர் என்று கூறலாம்படியாக உள்ளது இவருக்குப் பெரியபிராட்டியாருடன் உள்ள ஒப்புமை (இத்தகைய ஒப்புமை இவருடைய பாசுரங்களில் எங்கு வெளிப்படுகிறது என்று அடுத்து கூறுகிறார்) …..

[தென்பால் நெடுமாடம் கடுஞ்சிலை அம்பெரியூட்டி நீறேழவெரித்த பெருந்தோற்றத் தாருயிர் காகுத்தன் என்னுமவற்றிலே தோன்றும்] (தென்பால்) – திருவிருத்தம் (77) – தென்பால் இலங்கை வெங்களம் செய்த நம் விண்ணோர் பிரானார் துழாய் துணையாநங்களை மாயை கொள்வான் வந்து தோன்றி நலிகின்றதே – என்ற பாசுரத்தில், சக்ரவர்த்தித் திருமகனாகிய இராமனைப் பிரிந்து, பிரிந்த காதலர்களைத் துன்புறுத்தும் பொருள்களால் துன்பம் அடைதல். (நெடுமாடம்) – திருவிருத்தம் (36) - வழாநெடும்


**Email:**sridharan_book@yahoo.co.in

துன்பத்தள் என்றிரங்காரம்மனோ இலங்கைக் குழா நெடுமாடம் இடித்த பிரானார் கொடுமைகளே - என்று கூறுவதற்கு ஏற்ப, “ப்ரியம் இல்லை என்றாலும், பொதுவாகவே வெளிப்படும் கருணையும் இல்லையோ?”, என்று தனக்கு ஏற்பட்ட கொடுமையை உரைத்தல். (கடுஞ்சிலை) – திருவாய்மொழி (5-4-3) - காயும் கடுஞ்சிலை என் காகுத்தன் வாரானால் – என்ற பாசுரத்தில், “எதிரிகளிடம் இராமனாகிய தான் தனது கருணையைக் காண்பித்தபோதிலும், அவ்விதம் கருணையைக் காண்பிக்காத வில்லைக் கொண்ட இராமன் எனது இந்த நிலையிலும் வரவில்லையே”, என்று வெறுத்தல். (அம்பெரி) – திருவாய்மொழி (4-2-8) – இலங்கைநகர் அம்பெரி உய்த்தவர் தாளிணை மேல் அணி வம்பவிழ் தண்ணந்துழாய் மலர்க்கே இவள் நம்பும் - என்ற பாசுரத்தில், இலங்கையைத் தனது அம்புகள் என்னும் அக்னியைக் கொண்டு சாம்பலாக்கிய இராமனின் திருவடிகளில் உள்ள துளசியைக் குறித்து ஆசைப்படுதல். (ஊட்டி) - திருவாய்மொழி (2-1-3) - தீமுற்றத் தென்னிலங்கை ஊட்டினான் தாள் நயந்த யாமுற்றது உற்றாயோ – என்ற பாசுரத்தில், இலங்கை முழுவதையும் அக்னிக்கு உணவாக அளித்தவன் திருவடிகள் மீது நான் கொண்ட ஆசை காரணமாக அனுபவித்த பிரிவுத் துன்பங்கள் அனைத்தையும் நீங்களும் அனுபவித்தீர்களோ என்று தனக்குச் சமமாக துக்கம் அடைந்த பலவற்றையும் ஒன்று திரட்டிக் கொண்டு புலம்புதல். (நீறேழ) – திருவாய்மொழி (6-1-10) – மாறில் போர் அரக்கன் மதிள் நீறெழச் செற்று உகந்த ஏறு சேவகனார்க்கு என்னையும் உள் என்மின்களே - என்ற பாசுரத்தில், எதிர் இல்லாத போர் கொண்ட இராவணன், தனக்குச் சரணாக அமைத்துக் கொண்ட மதிளைத் துகள்களாகத் தகர்த்த வீரம் கொண்ட இராமனால் காப்பாற்றத் தகுந்த பொருள்களில் நானும் ஒருவள் என்று கூறுவீர்களாக தூது விடுதல். (எரித்து) – திருவாய்மொழி (4-8-5) - கிளரரக்கன் நகரெரித்த களி மலர்த் துழாயலங்கல் கமழ் முடியன் கவராத வறிவினால் குறைவிலம் - என்ற பாசுரத்தில், ஐச்வர்யம் காரணமாக உயர்ந்து நின்ற இராவணனுடைய நகரத்தை முற்றிலுமாக எரித்துச் சாம்பலாக்கி, பின்னர் அயோத்தி வந்து முடிசூடி, திருத்துழாய் மாலை அணிந்துள்ள இராமனால் நான் விரும்பப்படவில்லை; என்னை விரும்பாமல் உள்ள அவன் அறிவால் என்ன ஆகப்போகிறது என்று அவனுக்குச் சேராதவற்றை வெறுத்தல். (பெரும் தோற்றத்து) – திருவாய்மொழி (6-6-9) - காண் பெருந்தோற்றத்தென் காகுத்த நம்பிக்கு என் பூண்புனை மென்முலை தோற்றது பொற்பே - என்ற பாசுரத்தில், கண்களுக்கு இனிமையானதும், எல்லையற்ற இன்பம் அளிக்கவல்லதும் ஆகிய தோற்றம் மற்றும் அனைத்து குணங்களும் பரிபூர்ணமாக உள்ள தன்மை ஆகியவற்றைக் கொண்ட


Email:sridharan_book@yahoo.co.in

இராமனுக்காக இவள் தன் அழகினை இழந்தாள் என்று கூறலாம்படி அவன் மீது ஆசை கொண்டு தனது அழகினை இழத்தல். (ஆருயிர்க் காகுத்தன்) - திருவாய்மொழி (9-5-6) – என்னாருயிர் காகுத்தன் நின் செய்ய வாயொக்கும் வாயன் கண்ணன் கை காலினன் நின் பசுஞ்சாம நிறத்தன் கூட்டுண்டு நீங்கினான் சிறு கிளிப்பைதலே இன்குரல் நீ மிழற்றேல் - என்ற பாசுரத்தில், “தனது பிரிவால் நான் தரிக்க இயலாதபடியாக எனக்கு உயிர் போன்ற இராமன் என்னுடன் கலந்து, பின்னர் பிரிந்தான்; இந்த நிலையிர் அவனுடைய திருமேனி நிறம் போன்றுள்ள உனது நிறம் காரணமாக என்னைத் துன்புறுத்துவது மட்டும் அல்லாமல், உனது பேச்சாலும் என்னை வருத்தாதே”, என்று கிளியை நோக்கி விலக்குவதாகப் பேசுதல் போன்ற பல பாசுரங்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

[கிடந்த என்னும் வீறுடைய முடிக்குரியாரோடு மண்ணோரன்ன ஒண்ணுதல் என்கிற ஒப்பு] (கிடந்த என்னும்) - திருவாய்மொழி (2-8-7) – கிடந்து இருந்து நின்று அளந்து - என்பதற்கு ஏற்ப, அனைத்தும் அறிந்தவனும் அனைத்தும் விருப்பங்களும் நிறைவேறப் பெற்றவனும் ஆகிய ஸர்வேச்வரனை, பலவிதமாகத் தன்னை அவன் அனுபவித்தபோதிலும், மனநிறைவு கொள்ளாதவனாக அறிவுத் தடுமாற்றம் செய்யவல்ல சிறப்பு காரணமாக ஏற்பட்ட. (வீறுடைய முடிக்கு உரியாரோடு) - வீறு கொண்ட பெரியபிராட்டி போன்றே முடிசூட உரிமை உள்ள பூமிப்பிராட்டியாருடன். (மண்ணோரன்ன ஒண்ணுதல் என்கிற ஒப்பு) - திருவிருத்தம் (49) - மண்ணோரன்ன வொண்ணுதல் - என்பதற்கு ஏற்ப பூமிப்பிராட்டியோ இவர் என்று வியக்கும்படியாக பூமிப்பிராட்டியுடன் ஒத்த சிறப்பைக் கொண்டவர் என்று கூறலாம்படியாக இவருக்கு உள்ள ஒப்புமை [இத்தகைய ஒப்புமை வெளிப்படும் பாசுரங்களை அடுத்து உரைக்கிறார்] ….

[ஆதியங்காலம் மண்புரை பொன்மாதின் துகளாடி என்னுமவற்றிலே தோன்றும்] (ஆதி அம் காலம்) திருவாய்மொழி (4-2-6) – ஆதியங் காலத்தகலிடம் கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொன் துழாய் என்றே ஓதும் மால் எய்தினாள் – என்ற பாசுரத்தில், “வராஹ கல்பத்தின் தொடக்கத்தில் இந்தப் பெரிய பூமியை அண்டத்திலுருந்து குத்தி எடுத்து, அதனை விடுவித்து, எடுத்தவனுடைய திருவடிகளில் உள்ள துளசி”, என்று பலமுறை உச்சரித்தபடி புத்தி தடுமாறுதல். (மண்புரை) – திருவாய்மொழி (6-6-5) – மண் புரை வையமிடந்த வராகற்கு என் கண் புனை கோதை இழந்தது கற்பே - என்ற பாசுரத்தில் அவன் மீது ஆசை கொண்டு தனது அறிவை இழத்தல். (பொன்மாதின்) – திருவிருத்தம்

(40) - ஞாலப் பொன் மாதின் மணாளன் துழாய் நங்கள் சூழ் குழற்கே ஏலப் புனைந்து என்னைமா ரெம்மை நோக்குவதென்றுகொல் - என்ற பாசுரத்தில் பூமிப்பிராட்டியின் அழகினை ஏற்பதற்காக வந்து பிறந்தவன் சூடிக் கொண்ட துளசியை நம்முடைய உறவினர்கள் கொண்டு வந்து நம்முடைய அழகான தலைமுடியில் சூட்டி வைத்து நம்மைக் காப்பாற்றுவது எந்த நாளிலோ என்று கூறுதல். (துகளாடி) - திருவிருத்தம்(55) – ஏனம் ஒன்றாய் மண் துகளாடி வைகுந்தமன்னான் குழல்வாய் விரைபோல் விண்டு கள்வாரும் மலர் உளவோ நும் வியலிடத்தே - என்ற பாசுரத்தில், இதனைப் போன்று இன்னொன்று இல்லை என்று கூறலாம்படியான வராஹமாய் நின்று ப்ரளயவெள்ளத்தில் ஆழ்ந்த பூமியை எடுத்தபோது காணப்பட்ட திருவடியின் பெருமை காரணமாக, இவனுடைய திருவயிற்றில் உள்ள பூமி ஒரு சிறிய துகள் மட்டுமே ஆகும் என்னும்படியாக நின்றவனுடைய வீரத்தை அனுபவித்துள்ள இவளுடைய இனிமையானது, பரமபதம் மற்றும் இதர லோகங்கள் ஆகியவற்றிலும் உள்ளதோ என்று சான்றோர்கள் வியப்பதாகக் கூறுதல். (என்னுமவற்றில் தோன்றும்) - போன்ற பல பாசுரங்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

[ஓர் மாயையினால் என்னும் வீறுடைய முடிக்குரியாரோடு பின்னைகொல் எக்னிற ஒப்பு] (ஓர் மாயையினால் என்னும்) – திருவிருத்தம் (21) – ஓர் மாயையினால் – என்ற பாசுரத்தில் கூறியதற்கு ஏற்ப, நித்யஸூரிகள் அன்றாடம் திருவாராதனம் செய்தபடி உள்ளபோதிலும், அவர்கள் அறியாதவிதத்தில் அந்த ஆராதனையை ஒதுக்கி வைத்து, தாழ்விற்கு எல்லையாக உள்ள ஆயர்குலத்தில் க்ருஷ்ணனாக வந்து அவதரித்து, நப்பின்னையாகிய தன்னை அடைவதற்காக வைக்கப்பட்டிருந்த யமன் போன்ற ரிஷபங்களுடைய கொம்புகளின் நடுவில், சூலத்தின் நடுவில் சென்று பாய்வது போன்று, தன்னைக் குறித்துக் கவலைப்படாமல் பாயும்படிச் செய்த. (வீறுடைய முடிக்கு உரியாரோடு) - முன்னர் கூறப்பட்ட பிராட்டிமார்களோடு சமமான, முடிசூடுவதற்கு உரிய மேன்மை கொண்ட. (பின்னைகொல் என்ற ஒப்பு) - திருவாய்மொழி (6-5-10) – பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் – என்பதற்கு ஏற்ப நப்பின்னை பிராட்டியோ இவர் என்று வியக்கும்படியாக நப்பின்னைப்பிராட்டியுடன் இவருக்கு உள்ள ஒப்புமை [இத்தகைய ஒப்புமை வெளிப்படும் பாசுரங்களை அடுத்து உரைக்கிறார்] …

[எருதேழ் தழீஇச் சறையினார் என்னுமவற்றிலே தோன்றும்] (எருது ஏழ் தழீஇ) - திருவாய்மொழி (4-2-5) – எருதேழ்தழீ இக்கோளியார் கோவலனார் குடக் கூத்தனார் தாளிணை மேலணி தண்ணந்துழா யென்றே நாளு நாள் நைகின்றது - என்ற பாசுரத்தில், ஏறு தழுவுதல் போன்ற பல வீரச்செயல்கள் கொண்ட க்ருஷ்ணனுடைய திருவடிகளில் உள்ள துளசி மீது ஆசை கொண்டு நாள்தோறும் தனது சரீரம் கெடும்படியாக இருத்தல். (சறையினார்) – திருவாய்மொழி (4-8-4) – கறையினார் துவருடுக்கை கடையாவின் கழி கோற்கைச் சறையினார் கவராத தளிர் நிறத்தால் குறைவிலம் – என்ற பாசுரத்தில், இடையன் போன்று வேடம் பூண்டு, தன்னால் காக்கப்பட வேண்டியவற்றைக் காப்பாற்ற தனது சரீரத்தையும் நோக்கிக் கொள்ளாமல் திரிகின்ற க்ருஷ்ணனால் விரும்பப்படாத தளிர் போன்ற நிறம் எனக்கு வேண்டாம் என்று கூறுதல். (என்னுமவற்றில் தோன்றும்) – போன்ற பாசுரங்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

**வ்யாக்யானம்** - இத்தால் திவ்யமஹிஷிகள் மூவரோடும் இவருக்குண்டான ஸாம்யம் ஜநககுல ஸுந்தரியான பிராட்டிக்கு அஸாதாரணமான ராமாவதார ததபதாநங்களிலும், ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு அஸாதாரணமான வராஹாவதார ததபதாநங்களிலும், நப்பின்னைப் பிராட்டிக்கு அஸாதாரணமான கிருஷ்ணாவதார ததபதாநங்களிலும் அந்தப் பிராட்டிமார் தங்களைப்போலே அதிமாத்ர ப்ரவணராயருளிச்செய்த அவ்வவ திவ்யஸூக்திகளிலே அபிவ்யக்த மென்றதாயிற்று.

**விளக்கம்** – ஆக ஸர்வேச்வரனுடைய திவ்யமான பிராட்டிமார்கள் மூவருடனும் நம்மாழ்வாருக்கு உள்ள ஒப்புமை என்பது - ஜனகருடைய குலத்தில் வந்த சீதைக்கு மட்டுமே உரிய இராமாவதாரம் மற்றும் அந்த அவதாரத்தில் செய்த செயல்கள், பூமிப்பிராட்டிக்கு மட்டுமே உரிய வராஹ அவதாரம் மற்றும் அந்த அவதாரத்தில் செய்த செயல்கள், நப்பின்னையைப் பிராட்டிக்கு மட்டுமே உரிய க்ருஷ்ணாவதாரம் மற்றும் அந்த அவதாரத்தில் செய்த செயல்கள் ஆகியவற்றில் ஈடுபட்ட நின்ற அந்தந்த பிராட்டிகள் போன்று அளவற்ற காதலுடன் அருளிச்செய்த அந்தந்த திருப்பாசுரங்களில் வெளிப்பட்டது.

124. இவர்கள் தேடிநிற்கப் பொய்கை முதுமணல் முல்லைப்பந்தல் முற்றம் மச்சொடு மாளிகை அவ்வவ்விடம் புக்கு வாரிச் சிதைத்துப் பறித்துக் கிழித்துக் கோயின்மை குறும்பு செய்து அல்லல் விளைத்துக் கவருமுகக்கு நல்லவர் முழுசி ஆவரென்னும் தேன்மொழியாலே கோகுலத்தை மறப்பிக்கும் நகரஸ்த்ரீகள், நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாறு பல்லாயிர மெண்ணிறந்தார் பாவம் – கடல் ஞாலம் மின்னிடை மல்லிகை வேய்மரு பேய்முலை முனிந்து மற்பொரு விறல் கஞ்சனை மங்கநூற்ற வாயும் தீர்ப்பாரென்னு மவற்றிலே தோன்றும்.

**அவதாரிகை** - இப்படி ப்ரதாந மஹிஷிகளான இவர்களோடுள்ள ஸாம்யமேயன்றிக்கே இவர்களை உபேக்ஷித்தும் தங்களை யுகக்கும்படி அவனுக்கு அபிமதைகளான திருவாய்ப்பாடியில் பெண்களுடையவும், அவர்களையும் தங்கள் பேச்சழகாலே அவன் மறக்கும்படி பண்ணும் ஸ்ரீமதுரையில் பெண்களுடையவும், நரகவதாநந்தரம் பரிக்ரஹித்த ஸ்ரீமத் த்வாரகையில் பதினாறாயிரம் தேவிமாருடையவும் பாவங்கள் இவர்க்குண் டென்னுமிடம் இவர்தம் பேச்சிலே தோன்றுமென்கிறார் (இவர்கள் தேடி நிற்கவென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாக உள்ள முதன்மையான பிராட்டிமார்களுடன் மட்டுமே நம்மாழ்வாருக்கு ஒப்புமை உள்ளது என்பது அல்லாமல், இந்த மூன்று பிராட்டிமார்களை விட்டுவிட்டு ஸர்வேச்வரனாகிய க்ருஷ்ணன் தங்களை விரும்பும்படியாக அவனுக்கு மிகவும் ப்ரியமான திருவாய்ப்பாடியில் உள்ள பெண்கள், அந்தப் பெண்களையும் தங்களுடைய பேச்சு மூலம் க்ருஷ்ணனை மறக்கும்படியாகச் செய்யும் மதுரா நகரத்தில் உள்ள பெண்கள், நரகாசுரனை வதைத்த பின்னர் அவனிடமிருந்து மீட்கப்பட்டு த்வாரகையிலே இருந்த பதினான்காயிரம் பெண்கள் ஆகியவர்களுடைய தன்மைகளும் நம்மாழ்வாருக்கு உண்டு என்பது இவருடைய பேச்சில் வெளிப்படுகிறது என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "தேடித்திருமகள் மண்மகள் நிற்க" என்கிறபடியே ப்ரதான மஹிஷிகளான விவர்கள் தன்னைத்தேடி நிற்கும்படி இவர்களை உபேக்ஷித்து, "இப்பொய்கைக் கெவ்வாறு வந்தாய்", "முதுமணல் குன்றேறி", "முல்லையின் பந்தர்நீழல் மன்னியவளைப் புணரப்புக்கு", "முற்றத்தூடு புகுந்து", "மச்சொடு மாளிகையேறி", "அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய்" என்கிறபடியே இவர்கள்


**Email:**sridharan_book@yahoo.co.in

ஜலக்ரீடை பண்ணுமிடம், விளையாடுமிடம் மற்றும் அவர்களிச் சாநுகுணமாகத் திரளவும் தனியவு மிருக்கு மிடங்களான பொய்கை, மணற் குன்று, முல்லைப்பந்தல், முற்றம், மச்சொடு மாளிகை அவ்வவ ஸ்தலங்களிலே சென்று புக்கு, "துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும்", "பந்து பறித்து துகில் பற்றி", "கச்சோடு பட்டைக் கிழித்து" என்கிறபடியே குடைந்து நீராடுகிறவர்கள் கூறைகள் வாரிக்கொள்வது. "இட்டமா விளையாடுகிறவர்க ளிழைத்த சிற்றிலைச் சிதைப்பது, பந்து கழல் முதலான லீலோப கரணங்களைப் பறிப்பது. அவர்களோடே இட்டீடு கொண்டு பட்டுக்கள் கச்சுக்களெட்டினவற்றைப் பற்றி வலித்துக் கிழிப்பதாய், "கோயின்மை செய்து கன்மமொன்றில்லை", "குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற" என்னும்படி நியாமகரற்ற ஸ்வதந்த்ரர் செய்யுமத்தையும், நியாமகர் கீழடங்காமல் மூலையடியே நடத்துவார் செய்யுமத்தையும் செய்து, "அல்லல் விளைத்த பெருமான்" என்கிறபடியே பேராரவரம் விளைத்து, "ஆயர்பாடி கவர்ந்துண்ணும்" என்று திருவாய்ப்பாடியில் பெண்களை யடைய முற்றூட்டாக விரும்பி புஜிக்குமென்கிறபடியே அவன் விரும்பப்படும் மவர்களாய், அத்தாலே "நீயுகக்கு நல்லவர்" என்னும்படி அவனுகப்புக்கு விஷயமான வைலக்ஷண்யத்தை யுடையவர்களென்று நிரூபகமாயிருக்கிற திருவாய்ப்பாடியில் பெண்களுடைய பாவம் இவர்க்குண்டென்னுமிடம்.

**விளக்கம்** – (இவர்கள் தேடி நிற்க) - பெரியதிருமொழி (10-8-9) – தேடித்திருமகள் மண்மகள் நிற்க - என்பதற்கு ஏற்ப முதன்மையான பிராட்டிமார்களான இவர்கள் மூவரும் தன்னைத் தேடி நிற்கும்படியாக அவர்களை விட்டுவிட்டு. (பொய்கை முதுமணல் முல்லைப்பந்தல் முற்றம் மச்சொடு மாளிகை அவ்வவ்விடம் புக்கு) – நாச்சியார் திருமொழி (3-2) – இப்பொய்கைக் கெவ்வாறு வந்தாய் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (1-10-8) - முதுமணல் குன்றேறி – என்றும், பெருமாள் திருமொழி (6-8) – முல்லையின் பந்தர்நீழல் மன்னியவளைப் புணரப்புக்கு – என்றும், நாச்சியார் திருமொழி (2-9) - முற்றத்தூடு புகுந்து - என்றும், பெரியாழ்வார் திருமொழி (2-7-2) - மச்சொடு மாளிகையேறி – என்றும், திருவாய்மொழி (6-2-6) - அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப திருவாய்ப்பாடியில் உள்ள பெண்கள் நீராடும் இடம், விளையாடும் இடம், இவர்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி கூட்டமாகக் கூடும் இடம் மற்றும் தனித்து இருக்கும் இடம் என்பதான பொய்கை, மணற்குன்று, முல்லைப்பந்தல், முற்றம், மாடியுடன் கூடிய மாளிகை போன்ற இடங்களில் சென்று புகுந்து. (வாரி) – நாச்சியார் திருமொழி (12-3) – துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் - என்றும், நாச்சியார் திருமொழி


Email:sridharan_book@yahoo.co.in

(13-10) - பந்து பறித்து துகில் பற்றி – என்றும், நாச்சியார் திருமொழி (14-2) – கச்சோடு பட்டைக் கிழித்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப நீரில் புகுந்து விளையாடும் அவர்களுடைய உடைகளை வாரி எடுத்துக்கொள்ளுதல். (சிதைத்து) – தங்களுடைய விருப்பம் போன்று விளையாடியபடி உள்ள அவர்கள் கட்டி வைத்த மணல் வீடுகளைச் சிதைத்தல். (பறித்து) - அவர்கள் விளையாடும் பந்து, கழல் போன்ற விளையாட்டுப் பொருள்களைப் பறித்தல். (கிழித்து) - அவர்களுடன் விவாதம் செய்து, அவர்கள் அணிந்துள்ள பட்டு ஆடைகள், கச்சுகள் ஆகியவற்றில் தனது கைக்கு எட்டியவற்றைப் பிடித்து இழுத்துக் கிழித்தல். (கோயின்மை குறும்பு செய்து) - திருவாய்மொழி (6-2-6) – கோயின்மை செய்து கன்மமொன்றில்லை – என்றும், நாச்சியார் திருமொழி (12-3) - குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற - என்று கூறுவதற்கு ஏற்ப தன்னை நியமிப்பவர்கள் என்று யாரும் இல்லாத காரணத்தால் சுதந்திரமான ஒருவன் செய்யக்கூடியதையும், ஒரு எஜமானனுக்குக் கீழ் அடங்காமல் தனது விருப்பத்தின்படி நடந்துபவர்கள் செய்யக்கூடியதையும் செய்து. (அல்லல் விளைத்து) – நாச்சியார் திருமொழி (13-10) – அல்லல் விளைத்த பெருமான் – என்பதற்கு ஏற்ப மிகுந்த ஆரவாரம் ஏற்படுத்தி. (கவரும்) – நாச்சியார் திருமொழி (13-14, 14-2) – ஆயர்பாடி கவர்ந்துண்ணும் – திருவாய்ப்பாடியில் உள்ள பெண்களை அடைவதற்காக பரிபூர்ணமாக வெண்ணெய் போன்ற அனைத்தையும் கலந்து உண்பவன் - என்பதற்கு ஏற்ப அவனால் மிகவும் விரும்பப்படுபவர்களாக. அதன் காரணமாக, (உகக்கு நல்லவர் பாவம்) – திருவாய்மொழி (10-3-8) – நீ உகக்கு நல்லவர் – என்பதற்கு ஏற்ப, அவனுடைய மகிழ்வுக்கு விஷயமாக உள்ள மேன்மையைக் கொண்டவர்கள் என்று உணர்த்தவல்ல திருவாய்ப்பாடியில் உள்ள பெண்களுடைய தன்மை நம்மாழ்வாருக்கு உண்டு என்னும் நிலை [எங்கு வெளிப்படுகிறது என்று அடுத்து அருளிச்செய்கிறார்] …

**வ்யாக்யானம்** – க்ருஷ்ண விரஹ மாற்றமாட்டாமல் “துஷ்ட காளிய திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா”, “க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம் யாலோக்யதாம் கதி:” இத்யாதிப்படியே அவர்கள் அநுகரித்தாப்போலே இவர் அவனைப் பிரிந்தாற்றாமையாலே அநுகரித்த “கடல்ஞாலத்”திலும், அந்யவிஷயங்களிலே பரப்பனாகையாலே அபேக்ஷித ஸமயத்தில் வாராமல் அவன் விளம்பித்து வந்தால் அவர்கள் ஊடுமாபோலே இவர் அவனோடூடின “மின்னிடை மடவாரிலும்”, பகலெல்லாம் பசு மேய்க்கப்போய் அவற்றுடனே வரும் க்ருஷ்ணனை பசுக்களின் முற்றொழுந்தில் காணாதே பிற்குழையிலே வருகிறவன் வரப்பற்றாமல் ஒரு ஸந்த்யையிலே பஞ்ச லக்ஷம் குடியில் பெண்களும்

பாதபதார்த்தங்களுக்கு இடைந்து கூப்பிட்டாப்போலே இவர் கூப்பிட்ட மாலைப்பூசலான "மல்லிகை கமழ்தென்ற"லிலும், இரவெல்லாம் க்ருஷ்ண ஸம்ச்லேஷம் பண்ணியிருந்து போதுவிடிந்தவாறே அவன் பசு மேய்க்கப் போகுங்காலமென்னும் நினைவாலே அவனை யணைத்துக் கொண்டிருக்கச் செய்தே போனானாகவே கருதி பாதகபதார்த்தங்களும் ஸம்ச்லேஷ தசையில் அவன் பரிமாற்றங்களும் புறம்புமுள்ளும் நின்று நலிகிற நலிவை அவர்கள் அவன்றனக்குச் சொல்லிக் கூப்பிட்டாப்போலே இவர் கூப்பிட்ட காலைப் பூசலான "வேய்மரு தோளிணை"யிலும், தனக்கு பாதங்களாய் வந்து கிட்டின பூதநா சகட யமளார்ஜுநாதிகள் நினைவை அவைதன்னோடே போக்கித் தன்னை நமக்காக நோக்கித் தந்த வுபகாரகனை நான் கிட்டுவதென்னோவென்றும், அப்படி செய்த க்ருஷ்ணனாகிற வுபகாரகனுக்கு என் ஸ்த்ரீத்வத்தை யிழந்தே னென்றும் சொன்ன "பேய் முலையுண்டு", "முனிந்து சகட முதைத்து" என்கிற பாட்டுக்களிலும் தோன்றும்.

**விளக்கம்** – (கடல்ஞாலம்) - க்ருஷ்ணனைப் பிரிந்த பிரிவாற்றாமையைப் பொறுத்துக் கொள்ள இயலாமல், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13- 27) – துஷ்ட காளிய திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா - காளியனே! நிற்பாயாக. நான் க்ருஷ்ணன் என்று அவன் உரைத்தான் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-27) – க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம் யாலோக்யதாம் கதி: - நான் க்ருஷ்ணன் ஆவேன், உங்களுக்காக நான் அழகாக நடக்கப்போகிறேன் – என்றும் அவனைப் போன்றே தாங்களும் உள்ளதாக அந்த ஆயர்பாடிப்பெண்கள் செய்து காண்பித்தது போன்று, நம்மாழ்வார் அவனை விட்டுப் பிரிந்துள்ள துக்கம் தாங்காமல் அருளிச்செய்த திருவாய்மொழி (5-6-1) – கடல் ஞாலம் – என்ற திருவாய்மொழியிலும். (மின்னிடை) – மற்ற செயல்களிலும் அவன் ஈடுபட்டு நிற்பதால், இவர்கள் விரும்பி அழைக்கும் நேரத்தில் வராமல் அவன் தாமதமாக வந்தால் அந்தப் பெண்கள் அவனுடன் ஊடல் கொள்வது போன்று, இவர் அவனுடன் ஊடல் கொள்வதான திருவாய்மொழி (6-2-1) – மின்னிடை மடவாரிலும் - என்ற திருவாய்மொழியிலும். (மல்லிகை) - பகல்பொழுது முழுவதும் பசுக்களை மேய்ப்பதற்காகச் செல்லும் க்ருஷ்ணன், மாலைப்பொழுதில் அந்தப் பசுக்கூட்டத்திற்கு முன்பு வராமல், அவற்றின் பின்னே வரும் காலதாமதத்தைக் கூடப் பொறுத்துக் கொள்ள இயலாமல், ஒருநாள் மாலையில் ஐந்து லக்ஷம் குடியில் உள்ள பெண்கள் அனைவரும் தங்களைத் துன்புறுத்துகின்ற பொருள்களைச் சேர்த்து அழைத்தது போன்று, இவரும் அழைத்த மாலை நேரத்து துன்ப பாசுரமான திருவாய்மொழி (9-9-1) – மல்லிகை கமழ்தென்றல் -

என்ற திருவாய்மொழியிலும். (வேய் மரு) - இரவுப்பொழுது முழுவதும் க்ருஷ்ணனுடன் சேர்ந்திருந்தாலும், பொழுது விடிந்தவுடன் அவன் பசுக்களை மேய்க்கச் செல்லும் காலம் வந்துவிடும் என்ற நினைவு காரணமாக, அவன் அணைத்தபடி உள்ளபோதிலும் தங்களை விட்டு அவன் சென்றுவிட்டான் என்றே எண்ணிக்கொண்டு, தங்களை வருத்துகின்ற பொருள்கள் மற்றும் அவன் தங்களுடன் சேர்ந்திருந்தபோது செய்த செயல்கள் ஆகியவை தங்களை உள்ளும் புறமும் நின்று வேதனை உண்டாக்கும் செயல்களை அந்தப் பெண்கள் க்ருஷ்ணனிடம் உரைத்து அவனை அழைத்தது போன்று இவர் அழைத்த திருவாய்மொழி (10-3-1) - வேய்மரு தோளிணை - என்ற திருவாய்மொழியிலும். (பேய்முலை முனிந்து) - க்ருஷ்ணனாகிய தனக்கு விரோதிகளாக வந்த பூதனை, சகடாசுரன், மருதமரங்கள் போன்றவற்றை அவற்றுடைய நினைவு கூட மீண்டும் வராதபடி அழித்து, நமக்காகவே தன்னைக் கொடுத்து உதவி செய்த க்ருஷ்ணனை நான் அடைவது எந்த நாளிலோ என்றும், இப்படியாகச் செய்த க்ருஷ்ணன் என்ற உபகாரகனுக்காக நான் என்னுடைய பெண்மைத் தன்மையை இழந்தேன் என்றும் உரைத்த திருவாய்மொழி (5-3-8) – பேய் முலை உண்டு – என்றும், திருவாய்மொழி (7-3-5) – முனிந்து சகடம் உதைத்து - என்றும் உள்ள திருவாய்மொழிகளிலும் வெளிப்படும்.

**வ்யாக்யானம்** - ஸ்ரீமாலாகாரரும் கூனியும் கொடுத்த திருமாலையையும் சாந்தையும் சாத்திக் கொண்டு ராஜமார்க்கத்தாலே யெழுந்தருளி, குவலாயாபீட நிரஸநம் பண்ணி நிற்கிறபோது, “முழுசி வண்டாடிய”, “ஆவரியை செய்தறிவார்” என்கிற பாட்டுக்களிற் சொல்லுகிறபடியே ஒப்பனையழகிலும் வடிவழகிலும் குவலயாபீட நிரஸநமாகிற சேஷ்டிதத்திலும் தோற்று, “ஸக்க்ய: பச்யத க்ருஷ்ணஸ்ய முகமத்யருணேக்ஷணம், சுஜயுத்த க்ருதாயாஸ ஸ்வேதாம்பு கணிகாசிதம்” இத்யாதிப்படியே அந்யோந்யம் தங்களிலே பேசுகிற “மழறு தேன்மொழி” என்கிறபடியே மழலைத்தேன் போலே இனிதான பேச்சுக்களாலே “மதுராம் ப்ராப்ய கோவிந்த: கதம் கோகுலமேஷ்யதி, நகர ஸ்த்ரீகலாலாபமது ச்ரோத்ரேண பாஸ்யதி” என்று கோகுலத்திற் பெண்கள் பேசும்படி அவன் கோகுலத்தை மறக்கப் பண்ணும் ஸ்ரீமதுரையில் பெண்களுடைய பாவம் இவர்க்குண்டென்னுமிடம்,

**விளக்கம்** – (முழுசி ஆவரென்னும் தேன்மொழியாலே கோகுலத்தை மறப்பிக்கும் நகரஸ்த்ரீகள் பாவம்) - மாலை தொடுப்பவர் மற்றும் குப்ஜா என்னும் கூனி ஆகியோர்

அளித்த மாலை மற்றும் சந்தை ஏற்றுக்கொண்டு, மதுரா நகரத்தின் ராஜமார்க்கத்தில் எழுந்தருளி, குவலயாபீடம் என்ற யானையை அழித்துவிட்டு க்ருஷ்ணன் நிற்கும்போது. பெரியதிருமொழி (2-8-7) – முழுசி வண்டாடிய - என்றும், பெரியதிருமொழி (3-3-7) – ஆவரியை செய்தறிவார் – என்றும் உள்ள பாசுரங்களில் கூறுவதற்கு ஏற்ப ஒப்பனை அழகு, வடிவழகு மற்றும் குவலயாபீடத்தை வீழ்த்திய செயல் போன்ற பலவற்றில் தோற்றுப்போய், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-20-53) – ஸக்க்ய: பச்யத க்ருஷ்ணஸ்ய முகம் அத்யருணேக்ஷணம், சுஜயுத்த க்ருதாயாஸ ஸ்வேதாம்பு கணிகாசிதம் - தோழிகளே! அழகாகச் சிவந்த திருக்கண்கள் கொண்டதும், யானையுடன் யுத்தம் செய்த காரணத்தால் ஏற்பட்ட களைப்பால் வியர்வை நிரம்பியதும் ஆகிய க்ருஷ்ணனுடைய திருமுகத்தைப் பாருங்கள் - என்று தங்களுக்குள் பேசிக் கொள்வதான, திருவாய்மொழி (6-2-5) – மழறு தேன்மொழி – என்பதற்கு ஏற்ப உள்ளதான மழலைகள் பேசும் தேன் போன்ற இனிமையான பேச்சுக்கள் மூலமாக. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-18-13) – மதுராம் ப்ராப்ய கோவிந்த: கதம் கோகுலமேஷ்யதி, நகர ஸ்த்ரீகலாலாபமது ச்ரோத்ரேண பாஸ்யதி - மதுரா நகரத்தை அடைந்து, அங்குள்ள பெண்களுடைய இனிமையான சொற்கள் என்னும் தேனை, தனது காதுகள் கொண்டு பருகியபடி உள்ள க்ருஷ்ணன் இனி கோகுலத்திற்கு எப்படி வருவான்? - என்று கோகுலத்தில் உள்ள பெண்கள் புலம்பும்படியாக க்ருஷ்ணன் கோகுலத்தை மறந்து போகும் விதத்தில் செய்கின்ற மதுராநகரத்தில் உள்ள பெண்களுடைய தன்மை நம்மாழ்வாருக்கு உண்டு என்ற நிலை [எங்கு வெளிப்படுகிறது என்று அடுத்து அருளிச்செய்கிறார்] …

**வ்யாக்யானம்** – “மற்பொரு தோளுடை மாயப்பிரானுக்கு என் கற்புடையாட்டி யிழந்தது கட்டே” என்று ப்ரபலரான மல்லரோடே தோளில் சாந்தழியாதபடி மல்லைப் பொருத ஆச்சர்யபூதனான உபகாரகனுக்கு அறிவுடையளா யிருக்கிறவென் பெண் தனக்குள்ளதடங்கலும் இழந்தாளென்றும், “விறல் கஞ்சனை வஞ்சனை செய்தீர் உம்மைத் தஞ்சமென்றிவள் பட்டனவே” என்று பெருமிடுக்கனான கம்ஸனை அவன் வஞ்சனை அவனோடே போம்படி பண்ணினவரே! உம்மையே தனக்குத் தஞ்சமென் றிவள்பட்ட வெள்ளமென்தா னென்று தமக்குப் பரிவரானவர்கள் சொன்ன பாசுரத்தாலே மல்லைரையும் கம்ஸனையும் நிரஸித்த க்ருஷ்ணனை அச்சுவடோடே அநுபவிக்க ஆசைப்பட்டமையைப் பேசின பாசுரத்திலே தோன்றும்.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – [மற்பொரு விறல் கஞ்சனை என்னுமவற்றிலே தோன்றும்] (மற்பொரு) – திருவாய்மொழி (6-6-10) – மற்பொரு தோளுடை மாயப்பிரானுக்கு என் கற்புடையாட்டி யிழந்தது கட்டே - என்ற பாசுரத்தில், "அனைவரும் அறிந்த மல்லர்களுடன், தனது தோளில் பூசப்பட்ட சாந்து கூட அழியாதபடி மல்யுத்தம் செய்து அழித்து வியப்பை ஏற்படுத்தவல்ல உபகாரகனான க்ருஷ்ணன் விஷயத்தில், மிகுந்த அறிவுள்ள எனது பெண் தன்னிடம் உள்ள அனைத்தையும் இழந்தாள்" - என்றும். (விறல் கஞ்சனை) - திருவாய்மொழி (2-4-8) - விறல் கஞ்சனை வஞ்சனை செய்தீர் உம்மைத் தஞ்சமென்றிவள் பட்டனவே – என்ற பாசுரத்தில், "மிகுந்த வலிமை உள்ள கம்சனை, அவன் செய்த வஞ்சனைகள் அனைத்தும் அவனுடன் சேர்ந்து அழியும்படியாகச் செய்தவனே! உன்னை மட்டுமே தனக்குத் தஞ்சம் என்று எண்ணியபடி உள்ள இவள் அடைந்த துக்கம் எத்தகையது", என்றும் தன்னிடம் அன்பு நிறைந்தவர்கள் கூறும் பாசுரங்கள் மூலமாக, மல்லரையும் கம்ஸனையும் அழித்த க்ருஷ்ணனை, அந்த அடையாளங்களுடன் அனுபவிக்க ஆசைப்பட்டது குறித்து உரைத்த பாசுரங்களில் வெளிப்படும்.

**வ்யாக்யானம்** – "நரகனைத் தொலைத்த கரதலத்த" என்றும், "நரகன்றன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து கன்னிமகளிர் தம்மைக் கவர்ந்த" என்றும் சொல்லுகிறபடியே நரகாஸுரன் கந்யகைகளாகக் கொண்டு வந்து திரட்டி வைக்க, அவனை நிரஸித்துப் பொகட்டுப் பரிக்ரஹித்தவர்களாய், "பதினாறாமாயிரவர் தேவிமார்", "பல்லாயிரம் பெருந்தேவிமார்", "எண்ணிறந்த பெருந்தேவிமார்" என்கிறபடியே ஆயிரமிரண்டாயிர மல்லாமையாலே பல்லாயிரமென்றும் எண்ணிறந்தவென்றும் சொல்லப்படுவாராய், "ஷோடச ஸ்த்ரீ ஸஹஸ்ராணி" என்று புராணஸித்தரான பதினாறாயிரம் தேவிமார் பாவம் இவர்க்குண்டென்னுமிடம்,

**விளக்கம்** – [நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாறு பல்லாயிர மெண்ணிறந்தார் பாவம்] (நரகனைத் தொலைத்து கவர்ந்த) – பெரியதிருமொழி (10-9-4) - நரகனைத் தொலைத்த கரதலத்த – என்றும், பெரியாழ்வார் திருமொழி (4-3-3) – நரகன் தன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து கன்னிமகளிர் தம்மைக் கவர்ந்த – என்றும் கூறுவதற்கு ஏற்ப நரகாஸுரன் என்பவன் கன்னிப்பெண்கள் பலரையும் கவர்ந்து வந்து ஒரே இடத்தில் வைத்தபோது, அவனை அழித்து க்ருஷ்ணனாகிய தன்னால் மீட்கப்பட்டவர்களும். (பதினாறு பல்லாயிரம் எண்ணிறந்தவர் பாவம்) – பெரியாழ்வார் திருமொழி (4-9-4) -

பதினாறாமாயிரவர் தேவிமார் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (4-1-6) – பல்லாயிரம் பெருந்தேவிமார் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (4-2-10) – எண்ணிறந்த பெருந்தேவிமார் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஆயிரம் இரண்டாயிரம் என்று அல்லாத காரணத்தால் "பல்லாயிரம், எண்ணிறந்தவர்" என்று கூறப்படுபவர்களும், ஸ்ரீவிஷ்ணு புராணம் (5-31-18) – ஷோடச ஸ்த்ரீ ஸஹஸ்ராணி – பதினாறாயிரம் பெண்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப புராணங்களில் உரைக்கப்படுபவர்களும் ஆகிய பதினாறாயிரம் தேவிமார்களுடைய தன்மை நம்மாழ்வாருக்கு உண்டு என்னும் நிலை [எங்கு வெளிப்படுகிறது என்று அடுத்து அருளிச்செய்கிறார்] …

**வ்யாக்யானம்** – "நூற்றுவரை யன்று மங்கநூற்ற நிகரில் முகில்வண்ணன் நேமியான் என்னெஞ்சம் கவர்ந்தெனை யூழியான்" என்று துர்யோதனாதிகள் மண்ணுண்ணும்படி மந்த்ரித்த க்ருஷ்ணனுக்கு நெஞ்சு பறிகொடுத்தமை சொன்னதிலும், துர்யோதநாதிகளை நிரஸிக்கைக்காக அவனெழுந்தருளினபோது அவர்கள் பிரிவாற்றாமையாலே கண்ணாஞ் சுழலையிட்டு, "குரரி! விலபஸி த்வம் வீதநித்ரா நசேஷே ஸ்வபதி ஜகதி ராத்ர்யாமீச்வரக்ரஸ்தபோதே, வயமிவ ஸகி! கச்சித் காட நிர்விண்ணசேதா நளிந நயந ஹாஸோதார லீலே க்ஷணேந" இத்யாதிகளாலே ப்ரலாபித்தாப்போலே, நாரை அன்றில் தொடக்கமானவற்றுக்கு வெளுப்பு விரஹக்கூப்பீடு முதலானவை நியத ஸ்வபாவமென் றறியாதே தமக்குப்போலே பகவத் விரஹஜமான வைவர்ண்யாதிகளாகக் கருதி, அவற்றுக்குமாகத் தாம் நோவுபட்டு ப்ரலாபித்த "வாயுந்திரையுகளி"லும், "தோர்ப்பாகனார்க்கு இவள் சிந்தை துழாய் திசைக்கின்றதே" என்று ஆச்ரிதர்க்காக ஸாரத்யம் பண்ணினவனை அநுபவிக்கைக்காக இவளந்த:கரணம் கலங்கி அறிவு கெடுகிறதென்று தொடங்கி, "வண் துவராபதி மன்னனை யேத்துமினேத்துதலும் தொழுதாடுமே" என்று ஸ்ரீமத்த்வாரகைக்கு நிர்வாஹகனானவனை மங்களாசாஸநம் பண்ண இவள் நோவு பரிஹ்ருதமா மென்றும் தலைக்கட்டின "தீர்ப்பாரையாமினி"யிலும் தோன்றுமென்றபடி.

**விளக்கம்** – [மங்கநூற்ற வாயும் தீர்ப்பாரென்னு மவற்றிலே தோன்றும்] (மங்கநூற்ற) – திருவாய்மொழி (7-3-10) – நூற்றுவரை யன்று மங்கநூற்ற நிகரில் முகில்வண்ணன் நேமியான் என்னெஞ்சம் கவர்ந்தெனை யூழியான் - என்று துரியோதனன் உள்ளிட்ட பலரையும் இந்தப் பூமியானது உள்ளே இழுத்துக் கொள்ளும்படியாகச் செய்தருளிய

க்ருஷ்ணனிடம் தனது நெஞ்சத்தைப் பறி கொடுத்தது குறித்துக் கூறிய பாசுரத்திலும். (வாயும்) துரியோதனன் போன்றவர்களை அழிப்பதற்காக அவன் சென்றபோது, அந்தப் பிரிவுத்துன்பம் காரணமாகத் தடுமாறி நின்ற அவர்கள் ஸ்ரீமத்பாகவதம் (10-90-15) – குரரி! விலபஸி த்வம் வீதநித்ரா நசேஷே ஸ்வபதி ஜகதி ராத்ர்யாமீச்வரக்ரஸ்தபோதே, வயமிவ ஸகி! கச்சித் காட நிர்விண்ணசேதா நளிந நயந ஹாஸோதார லீலே க்ஷணேந – அன்றில் பறவையே! ஸர்வேசவரனால் மறைக்கப்பட்ட அறிவு காரணமாக இரவில் உறங்கியபடி உள்ள உலகம் அனைத்தும் இவ்விதம் கிடக்கும்போது, நீ உறக்கம் இன்றி கத்துகிறாய்; உனது கூட்டில் படுத்துக்கொள்லவில்லை, தாமரை போன்ற திருக்கண்கள் மற்றும் புன்னகை ஆகியவற்றுடன் வியக்கவைக்கும் செயல்கள் மற்றும் மயங்க வைக்கும் பார்வை கொண்ட க்ருஷ்ணனால் எங்களைப் போன்று நீயும் மிகவும் துன்பப்பட்ட மனம் அடைந்தாயோ - என்று புலம்பியது போன்று, நாரை மற்றும் அன்றில் முதலான பலவற்றுக்கும் வெண்மை நிறம் மற்றும் பிரிவால் கத்துதல் போன்ற நிலைகள் எப்போதும் உள்ளதாகும் என்று அறியாமல், பகவானைப் பிரிந்த காரணத்தால் தனக்கு ஏற்பட்டுள்ள பசலை நிறம் போன்றவையாகவே எண்ணிக்கொண்டு அவற்றுக்கும் சேர்த்து தான் புலம்பிய திருவாய்மொழி (2-1-1) – வாயும் திரையுகளும் - என்ற பாசுரத்திலும். (தீர்ப்பார்) – திருவாய்மொழி (4-6-1) – தோர்ப்பாகனார்க்கு இவள் சிந்தை துழாய் திசைக்கின்றதே - என்ற பாசுரத்தில் தன்னை அண்டி நின்றவர்களுக்காகத் தேர்ப்பாகனாக நின்றவனை அனுபவிப்பதற்காக இவள் தனது உள்ளம் தடுமாறி அறிவை இழக்கின்றாள் - என்று தொடங்கி, திருவாய்மொழி (4-6-10) – வண் துவராபதி மன்னனை ஏத்துமின் ஏத்துதலும் தொழுதாடுமே – என்றுள்ள பாசுரத்தில் துவாரகையின் அரசனாக உள்ள அவனைப் புகழ்ந்து வாழ்த்தினால் இவளுடைய இந்த நோயானது தீர்ந்துவிடும் என்று முடிக்கப்பட்ட “தீர்ப்பாரையாம் இனி எங்ஙனம் நாடுதும்” என்ற பாசுரத்திலும் வெளிப்படும்.

125. இரானெனில் நசவாகக் குழைத்தவன் பின் தொடர விருந்த வன்சிறையிலும் விதிதன் புணைவனென்று ஜீவிதாதிகளால் குறைவின்றி மாயும் வகை விஷ சஸ்த்ரங்கள் தேடி வில்வலவா ஹாவென்று இரக்கமெழாக் கொடுமைகள் சங்கித்து என்னையும் ஜீவந்தீ மென்று ஆள்விட்டுச் சுடரையடைந்து அகலகில்லா முற்றுவமை பெருமகளோடே.

**அவதாரிகை** - இப்படி ப்ரதாந மஹிஷிகளோடும் மற்றும் பகவத் பரிக்ரஹமுடையாரோடும் இவர்க்கு ஸாம்யமுண்டேயாகிலும், அல்லதாரெல்லாம்

இவர்க்கொருவகைக் கொப்பா மித்தனை யாகையாலே, ஸர்வதா ஸாம்யம் ஜநகுல ஸுந்தரியான பிராட்டியோடே யென்கிறார் மேலொரு சூர்ணையாலே.

**விளக்கம்** – இப்படியாக ஸர்வேச்வரனுடைய முதன்மையான பிராட்டிமார்கள் மற்றும் அவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்ற தேவிமார்கள் ஆகியவர்களுடன் நம்மாழ்வாருக்கு ஒப்புமை உள்ளது; இவர்கள் தவிர உள்ள மற்றவர்களுடன் இவருக்கு இது போன்றுள்ள ஒப்புமை உண்டு என்பதால் ஜனககுலத்தில் அவதரித்த சீதையுடன் ஒப்புமை உள்ளது என்று இந்தச் சூர்ணையில் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - (இரானெனில் நசவாகக் குழைத்தவன் பின்தொடரவிருந்த வன்சிறையிலும்) "நச ஸீதா" இத்யாதி ச்லோகத்திற்படியே ஜலாதுத்த்ருதமான மத்ஸ்யம் போலே விச்லேஷத்தில் ஸத்தாஹாநி பிறக்கும்படி, "மநஸ்வீ தத்கத:" என்று ஜாதி குணங்கள் த்ரவ்யத்துக்கு ப்ரகாரமாய் பிரிக்கவொண்ணாதபடி யிருக்குமாபோலே, பிரிக்கவொண்ணாதபடி ஒரு நீராகக் கலந்த சக்ரவர்த்தித்திருமகன், "உண்ணா துறங்கா தொலி கடலை யூடறுத்து" லங்கா த்வாரத்தளவும் பின்தொடர்ந்து வரும்படியாக, "தனிச்சிறையில் விளப்புற்ற" என்கிறபடியே "ஒருத்தி சிறையிருந்து ரக்ஷிக்கும்படியே!" என்று லோகமடையக் கொண்டாடும்படி தேவஸ்த்ரீகள் சிறையை விடுவிக்கைக்காகப் பிராட்டி லங்கையிலே தனிப்பட்டுச் சிறையிருந்தாப்போலே

**விளக்கம்** – [இரானெனில் நசவாகக் குழைத்தவன் பின்தொடரவிருந்த வன்சிறையிலும்] (இரான் எனில் நச ஆக) - இராமாயணம் அயோத்யாகாண்டம் (53-31) – நச ஸீதா – இராமா! உன்னிடமிருந்து விலக்கப்பட்ட சீதை உயிர் தரிக்கமாட்டாள், நானும் உயிர் தரிக்கமாட்டேன், உயிர் வாழ்ந்தாலும் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன் போன்று ஒரு சில நொடிகளே உயிர் வாழ்வோம் - என்பதற்கு ஏற்ப, தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன் போன்று தனது பிரிவின் காரணமாக உயிருக்கு ஆபத்து உண்டாகும்படியாக. (குழைத்தவன்) - இராமாயணம் பாலகாண்டம் (77-25) – மநஸ்வீ தத்கத: - தாராள மனம் கொண்டவன், சீதையை அடைந்தவன் – என்பதற்கு ஏற்ப, ஒரு பொருளின் தன்மை என்பதை அந்தப் பொருளிலிருந்து பிரிக்கமுடியாது என்பது போன்று பிரிக்க இயலாதபடி சீதையுடன் ஒரு நீராகக் கலந்துவிட்ட சக்ரவர்த்தித்திருமகன், (பின் தொடர) – நாச்சியார் திருமொழி (11-7) – உண்ணாது உறங்காது ஒலி கடலை ஊடு அறுத்து - என்பதற்கு ஏற்ப

உண்ணாமலும் உறங்காமலும் இருந்து மிகுந்த ஓசையுடன் கூடிய ஸமுத்திரத்தைக் கடந்து இலங்கையுடைய வாசல் முடிய அவள் உள்ள இடம் தேடிப் பின் தொடர்ந்து வரும்படியாக, (இருந்த) - திருவாய்மொழி (4-8-5) – தனிச்சிறையில் விளப்புற்ற – என்பதற்கு ஏற்ப "சீதையைச் சிறையில் இருந்து விடுவிக்க இராமன் செய்த முயற்சிகள் எத்தகையது" என்று உலகம் கொண்டாடும்படியாக, (வன்சிறையிலும்) - மறைமுகமாகத் தேவலோகப் பெண்களைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்காக சீதை இலங்கையில் உள்ள சிறையில் தனியாக இருந்தது போன்று [சீதையைப் போன்றே நம்மாழ்வாராகிய தான் இந்தச் சரீரம் என்ற சிறையில் உள்ளதாகக் கூறுவதை அடுத்து உரைக்கிறார்] …

**வ்யாக்யானம்** – "மராமரமெய்த மாயவனென்னு ளிரானெனில் பின்னை யானொட்டுவேனோ" என்று சக்ரவர்த்தித்திருமகன் என்பக்கல் இரேனென்று அகலுமாகில் பின்னை நான் தொங்குவனோவென்று விரஹத்தில் ஸத்தாஹாநி பிறக்கும்படியாக "இலங்கை செற்றாய் – உன்னை யென்னுள்ளே குழைத்த வெம்மைந்தா" என்கிறபடியே ஏகதத்வ மென்னலாம்படி ஸம்ச்லேஷித்தவன் பிரிவில் தம் ஆற்றாமை குளப்படியாம்படி கடல் போன்றவாற்றாமையோடே விண்ணுலகம் தர விரைந்து, தாமிருந்த விடத்தேற வரும்படி, "வன்சிறையிலவன் வைக்கில்" என்கிறபடியே ஸம்ஸாரிகள் சிறையை விடுவிக்கைக்காக அவன் ஸம்ஸாரத்திலே வைக்கவிருந்த வன்சிறையிலும்,

**விளக்கம்** – (இரான் எனில் நச ஆக) - திருவாய்மொழி (1-7-6) - மராமரம் எய்த மாயவன் என்னுள் இரான் எனில் பின்னை யான் ஒட்டுவேனோ - என்ற பாசுரத்தில், "சக்ரவர்த்தித் திருமகன் என் அருகில் இருக்கமாட்டேன் என்று அகன்றால் அதன் பின்னர் நான் இந்தச் சரீரத்தில் நிலைப்பேனோ" என்று அவனைப் பிரிந்தால் ஏற்படும் விரஹதாபம் காரணமாக உயிருக்கு ஆபத்து ஏற்படும்படியாக, (குழைத்தவன்) – திருவாய்மொழி (2-6-9) - இலங்கை செற்றாய் உன்னை என்னுள்ளே குழைத்த எம்மைந்தா - என்பதற்கு ஏற்ப, நானும் அவனும் ஒரே பொருள் என்று கூறலாம்படியாக என்னுடன் கலந்தான். (பின் தொடர) – அவன் என்னை விட்டுப் பிரிந்தால் எனது பிரிவுத்துன்பம் என்பது மாட்டின் குளம்பின் மூலம் ஏற்படும் பள்ளத்தில் நிற்கும் நீரின் அளவே உள்ளது; ஆனால் அவனுக்கு அந்தப் பிரிவுத்துன்பம் என்பது ஸமுத்திரத்தின் அளவாக உள்ளதால், மிகுந்த துன்பம் காரணமாக எனக்கு விண்ணுலகம் தருவதற்காக, நம்மாழ்வாராகிய நான் உள்ள இடம்


Email:sridharan_book@yahoo.co.in

தேடி வரும்படியாக, (இருந்த வன்சிறையிலும்) – திருவாய்மொழி (1-4-1) – வன்சிறையில் அவன் வைக்கில் - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாராகிய தன்னை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, அவன் இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகளுடைய சிறையை விடுவிக்கும் பொருட்டு, அவனால் இந்தச் சரீரம் என்ற சிறையில் நம்மாழ்வாராகிய இவர் உள்ள நிலை உள்ளது [அதாவது தேவலோகப் பெண்களை இராவணனுடைய சிறைலிருந்து விடுவிப்பதற்காக இலங்கையின் சிறையில் சீதை இருந்தது போன்று, ஸம்ஸாரத்தில் உள்ளவர்களை விடுவிக்கும் பொருட்டு நம்மாழ்வார் இந்தச் சரீரம் என்னும் சிறையில் உள்ளார் என்று கருத்து].

**வ்யாக்யானம்** - (விதிதன் புணைவனென்று) அச்சிறை யிருப்பிலேயும் அவள், விமுகனான ராவணனுக்கு "விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி" என்று, நீ ப்ராணனோடேயிருக்க வேண்டியிருந்தாயாகில் சரணாகதி தர்மஜ்ஞருமாய் சரணாகத வத்ஸலருமாக ப்ரஸித்தராயிருக்கிற பெருமாளோடே உறவு பண்ணென்று ஹிதோபதேசம் பண்ணினாப்போலே இவரும் விமுகரான ஸம்ஸாரிகளுக்கு "புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே" என்று ஹிதோபதேசம் பண்ணுகையாலும்.

**விளக்கம்** – (விதிதன் புணைவன் என்று) - அப்படிப்பட்ட சிறையில் சீதை இருந்தபோதிலும் அவள் தனது எதிரியாகவே இருந்த இராவணனுக்கு, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-20) – விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி - இராமன் அனைத்து தர்மங்களையும் அறிந்தவன், தன்னைச் சரணம் புகுந்தவர்களிடம் மிகுந்த அன்பு காண்பிப்பவன் என்பதை அனைவரும் அறிவர், ஆகவே நீ உயிருடன் இருக்க விரும்பினால் இராமனிடம் நட்புடன் இருப்பாயாக - என்பதற்கு ஏற்ப, "நீ உயிருடன் இருக்க எண்ணினால் சரணாகதி தர்மத்தை அறிந்தவர் என்றும், சரணாகதி செய்தவரிடம் மிகுந்த வாத்ஸல்யம் கொண்டவர் என்றும் அறியப்படும் இராமனுடன் நட்புறவு கொள்வாயாக", என்று உபதேசம் செய்தாள். இதே போன்று நம்மாழ்வாரும் ஸர்வேச்வரனிடம் ஈடுபாடு இன்றி உள்ள ஸம்ஸாரிகளிடம், திருவாய்மொழி (2-8-1) – புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே - என்ற பாசுரத்தில் ஸம்ஸாரம் என்னும் பெருங்கடலைக் கடக்கும் விருப்பம் கொண்டவர்களுக்கு, அதனை நீந்துவதற்கான உபாயம் அவன் மட்டுமே ஆவான் என்று நன்மையை உபதேசிப்பதாலும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** - (ஜீவிதாதிகளால் குறைவின்றி) அவள், "நஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் பூஷணை: வஸந்த்யா ராக்ஷஸீ மத்யே விநா ராமம் மஹாரதம்" என்று பெருமாளைப் பிரிந்து ராக்ஷஸிகள் நடுவேயிருக்கிற வெனக்கு ப்ராணாதிகளா லென்ன ப்ரயோஜந மென்று தத்விநியோகத்திற்குப் புறம்பாமவற்றை உபேக்ஷித்தாப்போலே, இவரும், "மாறாளன் கவராத மணீமாமை குறைவிலம்" என்று தொடங்கி அத்தலைக் குறுப்பல்லாத ஆத்மாத்மீயங்களை உபேக்ஷிக்கையாலும்,

**விளக்கம்** – (ஜீவித ஆதிகளால் குறைவின்றி) - சீதையானவள் இராமாயணம் ஸுந்தரகாண்டம் (26-5) - நஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் பூஷணை: வஸந்த்யா ராக்ஷஸீ மத்யே விநா ராமம் மஹாரதம் – சிறந்த வீரனாகிய இராமனைப் பிரிந்து இந்த ராக்ஷஸிகள் நடுவில் உள்ள எனக்கு, எனது உயிரால் எந்தப் பயனும் இல்லை; செல்வத்தால் பயன் இல்லை, ஆபரணங்களால் பயன் இல்லை - என்பதற்கு ஏற்ப, "இராமனைப் பிரிந்து இந்த ராக்ஷஸிகள் நடுவில் உள்ள எனக்கு, உயிர் போன்றவற்றால் என்ன பயன்?", என்று எண்ணியவளாக, இராமனுடைய அனுபவத்தைத் தவிர உள்ள மற்றவற்றை விரும்பாமல் வெறுத்தாள். இதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (4-8-1) – மாறாளன் கவராத மணீமாமை குறைவிலம் - என்ற பாசுரம் தொடக்கமாக உள்ளவற்றில், ஸர்வேச்வரனுடன் ஸம்பந்தம் கொள்ளாத உயிரையும், அந்த உயிருடன் தொடர்புள்ள அனைத்து வஸ்துக்களையும் வெறுப்பதாலும்.

**வ்யாக்யானம்** - (மாயும் வகை விஷ சஸ்த்ரங்கள் தேடி) அவள், ஆற்றாமையின் அதிசயத்தாலே "விஷஸ்ய ததா ந ஹி மேஸ்தி கச்சித் சஸ்த்ரஸ்ய வா வேச்மநி ராக்ஷஸஸ்ய" என்று உயிர்க் கொலையாக்கி வைத்தவனுடைய க்ருஹத்தில் நற்கொலை யாக்குவதித்தனை விஷம் தருவாரில்லையோ? விஷம்போலே சிறிதுபோது நின்று கொல்லுகையன்றிக்கே அப்போதே முடிப்பதொரு சஸ்த்ரம் தருவாரில்லையோவென்று முடியும் வகை தேடினாப்போலே, இவரும், "மாயும் வகையறியேன்" என்று முடியும் வகை தேடுகையாலும்,

**விளக்கம்** – (மாயும் வகை விஷ சஸ்த்ரங்கள் தேடி) - சீதை தனது ஆற்றாமையின் மிகுதி காரணமாக, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (28-16) – விஷஸ்ய ததா ந ஹி மேஸ்தி கச்சித் சஸ்த்ரஸ்ய வா வேச்மநி ராக்ஷஸஸ்ய - இந்த ராக்ஷஸனுடைய இடத்தில் எனக்கு

விஷத்தையோ அல்லது வாள் போன்ற ஆயுதத்தையோ அளிக்க யாரும் இல்லையே - என்பதற்கு ஏற்ப, "நான் உயிருடன் உள்ளபோதே என்னை இறந்தவள் போன்று ஆக்கியவன் வீட்டில் நற்கொலை ஆக்குவது போன்று சிறிதளவேனும் விஷம் தருபவர்கள் யாரும் இல்லையோ? அல்லது விஷம் போன்று தாமதமாக உயிரை எடுக்காமல், அந்த நொடியிலேயே உயிரை மாய்த்துக் கொள்ள ஏதுவான ஆயுதம் தருபவர் இல்லையோ?", என்று, தான் இறப்பதற்கான வழியைத் தேடினாள். இதே போன்று நம்மாழ்வாரும், திருவாய்மொழி (5-4-3) – மாயும் வகை அறியேன் – என்று, தான் முடியும் வழியைத் தேடுவதாலும்.

**வ்யாக்யானம்** - (வில்வலவாஹாவென்று) அவள் அதிமாத்ர துக்கிதையாய் ரக்ஷகரான பெருமாளுடைய சௌர்யாதிகளை நினைத்து "ஹா ராம" என்று கூப்பிட்டாப்போலே, இவரும், "புணரா நின்ற மரமேழன்றெய்தவொரு வில்வலவா வோ" என்று அவன் வீரப்பாட்டைச் சொல்லிக் கூப்பிடுகையாலும்,

**விளக்கம்** – (வில்வலவா ஹாவென்று) - சீதை மிகுந்த துக்கம் காரணமாகத் தன்னைக் காப்பாற்றவல்ல இராமனுடைய வீரம் போன்றவற்றை எண்ணியவளாக, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (28-8) – ஹா ராமா - என்று அழைத்தாள். இதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (6-10-5) – புணரா நின்ற மரமேழு அன்று எய்த ஒரு வில்வலவா வோ - என்று அவனுடைய வீரமான செயல்களை நினைத்து அழைப்பதாலும்.

**வ்யாக்யானம்** - (இரக்கமெழாக் கொடுமைகள் சங்கித்து) அவள், கன்னாற்றாமைக்கு உதவ வந்து முகம் காட்டாமையாலே "க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவ: ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச் சங்கே" என்று பெருமாளை நிர்கருணராக சங்கித்தாப்போலே, இவரும் "இரக்கமெழீர்", "வழாநெடுந்துன்பத்த ளென்றிரங்கா ரம்மனோ! இலங்கைக்குழா நெடுமாட மிடித்த பிரானார் கொடுமைகளே" என்று இத்தசையில் க்ருபை பண்ணாமலிருக்கிற கொடுமையாலே, "அறிவொன்றும் சங்கிப்பன்" என்கிறபடியே நைர்க்ருண்ய சங்கை பண்ணுகையாலும்.

**விளக்கம்** – (இரக்கம் எழாக் கொடுமைகள் சங்கித்து) - சீதையாகிய தனது பிரிவாற்றாமையை இராமன் உணர்ந்த பின்னரும் வந்து நிற்காத காரணத்தால்,

இராமாயணம் ஸுந்தரகாண்டம் (26-13) – க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவ: ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச் சங்கே - இராமன் குற்றம் நிறைந்தவர்களிடம் கூட குணத்தைக் காண்பவர், செய்ந்நன்றி மறவாதவர், மிகுந்த க்ருபை உள்ளவர், சிறந்த ஒழுக்கம் கொண்டவர் என்று அனைவராலும் புகழப்பட்டாலும், எனது புண்ணியங்களின் குறைவு காரணமாகவே என் விஷயத்தில் க்ருபை இன்றி உள்ளார் என்று நான் ஐயம் கொள்கிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, இராமன் க்ருபை இல்லாதவன் என்று சந்தேகப்பட்டாள். இதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (2-4-3) – இரக்கம் எழீர் - என்றும், திருவிருத்தம் (36) – வழாநெடுந்துன்பத்தள் என்று இரங்கார் அம்மனோ! இலங்கைக் குழா நெடுமாடம் இடித்த பிரானார் கொடுமைகளே - என்று கூறுவதற்கு ஏற்ப இவர் விஷயத்தில் அவன் க்ருபை செய்யாமல் உள்ள கொடுமை காரணமாக திருவாய்மொழி (8-1-7) - அறிவொன்றும் சங்கிப்பன் - என்பதற்கு ஏற்ப அவன் க்ருபை அற்றவனோ என்று சந்தேகம் கொள்வதாலும்.

**வ்யாக்யானம்** - (என்னையும் ஜீவந்தீமென்று ஆள்விட்டு) அவள், "ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந், தத்த்வயா ஹநுமந் வாச்யோ வாசா தர்மமவாப்நுஹீ" என்று ஸத்தையோடே கிடக்கிறவென்னை இஸ்ஸத்தை போவதற்கு முன்னே யாதொருபடி பெருமாள் வந்து நோக்கிக் கொள்வர்; அப்படி அவர்க்கு விண்ணப்பம் செய்யென்று தூது விட்டாப்போலே, இவரும், "ஏறுசேவகனார்க் கென்னையு முளளென்மின்களே" என்று என் ஸத்தை கிடந்தமையை அவர்க்கு அறிவியுங்கோளென்று ஆற்றாமை தோற்றத் தூதுவிடுகையாலும்,

**விளக்கம்** – (என்னையும் ஜீவந்தீம் என்று ஆள்விட்டு) - சீதையானவள் இராமாயணம் ஸுந்தரகாண்டம் (39-10) - ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந், தத்த்வயா ஹநுமந் வாச்யோ வாசா தர்மமவாப்நுஹீ – அனுமனே! மிகுந்த கீர்த்தி நிரம்பிய இராமன், நான் உயிரோடு உள்ளபோதே என்னை வந்து காண்கிற வழிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நீ உரைப்பாயாக. இந்த உபகாரத்தை நீ செய்தால், வாக்கு மூலம் தர்மம் செய்த புண்ணியத்தை நீ பெறுவாய் – என்று கூறுவதற்கு ஏற்ப, "உயிருடன் உள்ள என்னை, இந்த உயிர் போவதற்கு முன்பாக எந்தவிதத்திலாவது இராமன் வந்து காணவேண்டும் என்று நீ அவரிடம் விண்ணப்பம் செய்வாயாக", என்று தூதுவிட்டாள். இதே போன்று நம்மாழ்வாரும், திருவாய்மொழி (6-1-10) – ஏறுசேவகனார்க்கு என்னையும்

உளள் என்மின்களே - என்ற பாசுரத்தில், “எனது உயிர் உள்ள நிலையை அவனுக்குத் தெரிவிப்பீர்களாக” என்று தனது பிரிவாற்றாமை வெளிப்படும்படி தூதுவிடுவதாலும்.

**வ்யாக்யானம்** - (சுடரையடைந்து) அவள், “அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா” என்று ஆதித்யனோடு ப்ரயைபோலே நான் பெருமாளோடு அநந்யையா யிருப்பனென்றாப்போலே, இவரும் “அரக்கியை மூக்கீர்ந்தாயை – சுடரை - அடியேனடைந்தேன் முதல் முன்னமே” என்று அநாதியான ப்ரகாரதயா சேஷத்வத்தாலே அவனோடு தாம் நித்யஸம்யுக்தராகப் பேசுகையாலும்.

**விளக்கம்** – (சுடரை அடைந்து) - சீதையானவள் இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-65) - அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா - சூரியனை விட்டுப் பிரிக்க முடியாத கதிர்கள் போன்று நான் இராமனை விட்டுப் பிரிக்க இயலாதவள் – என்று கூறுவதற்கு ஏற்ப, “சூரியனுடன் உள்ள கதிர்கள் போன்று நான் இராமனை விட்டு வேறுபடாமல் இருப்பேன்”, என்று கூறினாள். இதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (2-3-6) - அரக்கியை மூக்கீர்ந்தாயை சுடரை அடியேன் அடைந்தேன் முதல் முன்னமே – என்ற பாசுரத்தில், எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள அடிமைத்தன்மை காரணமாக தான் அவனுடன் எப்போதும் சேர்ந்தே உள்ளதாக உரைப்பதாலும்.

**வ்யாக்யானம்** – (அகலகில்லா) அவள், “அகலகில்லே னிறையுமென் றலர்மேல்மங்கை யுறைமார்பா” என்கிறபடியே உன்னை க்ஷணகாலமுமகல சக்தையல்லே னென்னுமாப்போலே, இவரும் “அடியே னுனபாத மகலகில்லே னிறையும்” என்று உன்னை க்ஷணகாலமும் பிரியச் சக்தனல்லே னென்கையாலும்,

**விளக்கம்** – (அகலகில்லா) – பெரியபிராட்டியார் திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா – என்று கூறுவதற்கு ஏற்ப, “உன்னை விட்டு ஒரு நொடிப்பொழுது கூட பிரிவதற்கான சக்தி எனக்கு இல்லை” என்றாள். இதே போன்று நம்மாழ்வாரும், திருவாய்மொழி (6-10-9) – அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையும் - என்ற பாசுரத்தில், “உன்னை ஒரு நொடிப்பொழுது கூடப் பிரியும் சக்தி கொண்டவன் அல்லன்”, என்று கூறுவதாலும்,

**வ்யாக்யானம்** - (முற்றுவமை பெருமகளோடே) இவர்க்கு ஸர்வதா ஸாத்ருச்யம் "பெருமகள் பேதைமங்கை" என்கிற பெரியபிராட்டியாரோடே யென்றபடி. "இரானெனில் நசவாக" என்று தொடங்கி "அகலகில்லா" என்று தலைக்கட்டுகையாலும், ஜீவிதாதிகளால் குறைவின்றி முதலாக ஆள்விடுகையீறாக நடுச்சொன்னவையும், விரஹ து:கா ஸஹத்வ கார்யங்களாகையாலும், பிரியில் தரியாமையிறே இச்சூர்ணையிலே ப்ராசுர்யேண ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம்** - (முற்றுவமை பெருமகளோடே) - நம்மாழ்வாருக்கு அனைத்துவிதங்களிலும் பெரியதிருமொழி (4-5-5-) – பெருமகள் பேதைமங்கை – என்று கூறப்படும் பெரியபிராட்டியுடன் ஒப்பாகும் தன்மை உள்ளது என்று கருத்து. ஆக இந்தச் சூர்ணையில், "இரான் எனில் நசவாக" என்று தொடங்கி, "அகலகில்லா" என்று முடிப்பதாலும், "ஜீவாதாதிகளால் குறைவின்றி" என்று தொடங்கி, "ஆள்விட்டு" என்று நடுவில் உரைக்கப்பட்ட அனைத்தும் பிரிவாற்றாமை காரணமாக ஏற்படும் துக்கத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் செய்யப்படும் செயல்கள் என்பதாலும், இந்தச் சூர்ணையில், "பிரிந்தால் உயிர் தரியாமை" என்பதே முக்கியமான கருத்தாக உரைக்கப்பட்டது என்றாகிறது.

126. பிரியில் இலேனுக்கு இளங்கோவும் அக்குளத்தில் மீனிறே.

**அவதாரிகை** - இப்படி பிராட்டியோபாதி பிரியில் தரியாமைக்கு இவரொருவருமேயோ? பின்னையுமுண்டோவென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (பிரியில் இலேனுக்கு இளங்கோவும் அக்குளத்தில் மீனிறே) என்று.

**விளக்கம்** – இப்படியாகப் பெரியபிராட்டியைப் போன்று, அவனைப் பிரிந்தால் தரிக்க இயலாமல் உள்ள நிலை என்பது நம்மாழ்வாருக்கு மட்டுமே உள்ளதா அல்லது இது போன்றுள்ள நிலை வேறு யாருக்கும் வருமோ என்ற சந்தேகத்திற்கான விடையை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிருபாதிக சேஷியானவனைப் பிரியில் "நின்னலாலிலேன் காண்" என்று இவராகைக்கு "நேரிழையு மிளங்கோவும் பின்பு போக" என்கிறபடியே

 **Email:**sridharan_book@yahoo.co.in

பிராட்டியோபாதி பின் துடர்ந்து போன இளையபெருமாளும், நிறுத்திப் போவதாகப் பெருமா ளருளிச்செய்தபோது, "ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ, முஹுர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதௌ" என்கையாலே அந்த ஜலத்தில் மத்ஸ்யமிறேயென்கை. இத்தால் பிராட்டியைப்போலே பிரியில் முடிகைக்கு இளைய பெருமாளும் இவரும் ஒக்குமென்றதாய்த்து.

**விளக்கம்** – (பிரியில் இலேனுக்கு) - எந்தவிதமான காரணமும் இன்றி இயற்கையாகவே எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனைப் பிரிந்தால், திருவாய்மொழி (2-3-7) – நின்னலால் இலேன் காண் - என்பதற்கு ஏற்ப, இவர் இல்லை என்ற நிலைக்கு வருகிறார். இதே போன்று பெருமாள்திருமொழி (9-2) - நேரிழையும் இளங்கோவும் பின்பு போக – என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியுடன் இராமன் பின்னே தொடர்ந்து சென்ற லக்ஷ்மணன், இராமன் கானகம் போவதற்கு முயன்றபோது தன்னை அயோத்தியிலே நிறுத்தி விட்டுப் போவதாக அருளிச்செய்தபோது, இராமாயணம் அயோத்யாகாண்டம் (53-31) - ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ, முஹுர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதௌ – இராமா! உன்னிடமிருந்து விலக்கப்பட்ட சீதை உயிர் தரிக்கமாட்டாள், நானும் உயிர் தரிக்கமாட்டேன், உயிர் வாழ்ந்தாலும் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன் போன்று ஒரு சில நொடிகளே உயிர் வாழ்வோம் - என்று உரைத்தான். ஆக இதன் மூலம், பெரியபிராட்டிக்கு மட்டும் அல்லாமல், அவனை விட்டுப் பிரிந்தால் தரிக்க இயலாத நிலை என்பது லக்ஷ்மணன் போன்றே இவருக்கும் உள்ளது.

127. அழுந்தொழும் ஸ்நேஹபாஷ்பாஞ்ஜலியோடே ருசிரஸாநுக்களில் கூவிக்கொள்ளும் பிரியாவடிமைக்குச் சரணே சரணென்று வாளும் வில்லுங்கொண்டு பந்துவும் பிதாவுமவரே யென்கையும், அன்னையென் செய்யிலென் ராஜ்யமும் யானேயென்று பெருஞ்செல்வமு மிச்சியாமல் வேண்டிச் சென்று திருவடியே சுமந்து விரைந்து வருமளவும் கண்ணநீர் பங்கமாக நிலம் துழாவிக் குடிக்கிடந்த கையறவும், கோதிலடிமை உறுமோ வென்பித்த புலன்கொள் நித்ய சத்ரு விசிந்தநமுமான ப்ராதாக்கள், அப்பொழுதைக்கப்பொழுது போனாயென்னும் மாதாபிதாக்கள், செந்தீத் தண்காற்று இளநாகம் முதலான பகையறச் சிந்தை செய்து எங்குமுளனென்னும் பள்ளிப்பிள்ளை, முற்றவிட்டு மற்றிலே னென்னும் தர்மாத்மா, வாளி பொழிந்த நிர்க்குண விச்வாத்மா உள்ளேயுறைய வீரசரிதம் ஊணாகக் கற்பார் பாவம் மற்றிலே னென்னும் ராமதாஸன்,


**Email:**sridharan_book@yahoo.co.in

பலவகையும் கண்டு வெண்சங்கேந்தின ரூபபரனான ச்வேதன் முதலானார் படிகளும் காணலாம்.

**அவதாரிகை** – இனிமேல் பகவதநந்யராய் ஸஹஜ பக்திகராயிருக்கும் லக்ஷ்மண பரத சத்ருக்நர்கள்படியும், பகவத் ப்ரத்யாஸந்நராய் தத்பக்தியுக்தரான தசரத யசோதா ப்ரஹ்லாத விபீஷண மாருதி பார்த்தபடிகளும் இவர் பக்கலிலே உண்டென்னுமத்தைத் தனித்தனியே அடைவே தர்சிப்பிக்கிறார் ஒரு சூர்ணையாலே. த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்களிரண்டுக்கும் தனித்தனியே வாசகமிடாதே இரண்டும் ஒரு ஸந்தர்ப்பத்திலே பலிக்கும்படி வாக்கியத்தைச் சுருக்கி யருளிச்செய்கையாலே த்ருஷ்டாந்தத்திலாதல் தார்ஷ்டாந்திகத்திலாதல் வசநமில்லாதவற்றுக்கு ப்ரதிகோடிக்கு அநுகுணமாகக் கூட்டி நிர்வஹிக்கக்கடவது. இந்த ந்யாயம் இப் ப்ரபந்தத்திலிப்படி வந்த ஸ்தலங்களுக்கெல்லாமொக்கும்.

**விளக்கம்** – அடுத்து பகவானைக் காட்டிலும் வேறு என்று கூறப்பட இயலாதவர்களும், இயற்கையாகவே பக்தி கொண்டவர்களும் ஆகிய லக்ஷ்மணன், பரதன், சத்ருக்நன் ஆகியோருடைய தன்மைகளும்; பகவானுடன் எப்போதும் ஸம்பந்தம் கொண்டவர்களும், அவனிடம் பக்தியுடன் உள்ளவர்களும் ஆகிய தசரதன், யசோதை, ப்ரஹலாதன், விபீஷணன், அனுமன், அர்ஜுனன் ஆகியோருடைய தன்மைகளும் நம்மாழ்வாருக்கு உள்ளது என்பதைத் தனித்தனியாக முழுவதுமாக இந்தச் சூர்ணையில் உணர்த்துகிறார். உபமானம் மற்றும் உபமேயம் ஆகிய இரண்டிற்கும் தனித்தனியான சொற்கள் கூறாமல், அவை இரண்டும் ஒரே நேரத்தில் வெளிப்படும்படியாக வாக்கியத்தைச் சுருக்கமாக அமைத்து அருளிச் செய்துள்ள காரணத்தால், உபமானத்திலோ அல்லது உபமேயத்திலோ ஒன்றுக்கொன்று பொருத்தமான சொற்கள் இல்லையென்றால், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு எற்ற சொற்களைச் சேர்த்துக் கொண்டு பொருள் கொள்ளவேண்டும். இந்த விதிமுறை இந்த ப்ரபந்தத்தில் இவ்விதம் உள்ள அனைத்து இடங்களுக்கும் பொருந்தும்.

**வ்யாக்யானம்** - (அழுந்தொழுமித்யாதி) அதாவது இளையபெருமாள் “பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:” என்கிறபடியே பால்யமே தொடங்கிப் பிரியில் தரியாத ஸ்நேஹத்தாலே “பாஷ்ப பர்யாகுலமுக:” என்றும், “ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்திதம்” என்றும்

சொல்லுகிறபடியே விச்லேஷ ப்ரஸங்கஜமான சோக வேகத்தாலே சொரிகிற பாஷ்பத்தோடே ஸ்வரூப ப்ரகாசகமான அஞ்ஜலியும் கையுமாய்க் கொண்டு, “ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத” என்றும், “பாவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே” என்றும் சொல்லுகிறபடியே திருச்சித்திரகூடகிரித் தாழ்வரை முதலான ருசிர தேசங்களிலே பிராட்டியோடேகூட தேவரீர் ஸ்வைரமாக வெழுந்தருளியிருக்க, ஸர்வவித கைங்கர்யங்களையும் அடியேன் செய்யவேணும்; அது செய்யுமிடத்தில் ஏவிக்கொண்டருள வேணுமென்று ப்ரார்த்தித்து, அப்படி ஏவிக்கொள்ளச் செய்யப்படுமதாய் “குருஷ்வமாமநுசரம்” என்கிறபடியே விச்சேதமறப் பின்துடர்ந்து செய்யுமடிமைத் தொழிலைப் பெறுகைக்காக, “ஸ ப்ராதுச் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம்” என்கிறபடியே புருஷகார பூர்வகமாகத் திருவடிகளைக் கட்டிக்கொண்டு, “அக்ரத: ப்ரயயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா, ப்ருஷ்டதஸ்து ததுஷ்பாணிர் லக்ஷ்மணோநுஜகாமஹ” என்கிறபடியே ஸாயுதராய்க் கொண்டு பெருமாளைப் பின்சென்று, “ப்ராதா பர்த்தாச பந்துச்ச பிதா ச மம ராகவ:” என்று தமக்கு ஸர்வவித பந்துவும் பெருமாளே யென்றாப்போலே.

**விளக்கம்** – (அழும் தொழும் ஸ்நேஹ பாஷ்ப அஞ்ஜலியோடே) – லக்ஷ்மணன், இராமாயணம் பாலகாண்டம் (18-27) – பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: - இராமனிடம் சிறுவயது தொடங்கியே அன்புடன் இருந்தான் - என்பதற்கு ஏற்ப பால்யம் முதலே இராமனை விட்டு அகன்றால் தாங்கிக் கொள்ள இயலாதபடி கொண்ட அன்பு காரணமாக, இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-1) – “பாஷ்ப பர்யாகுலமுக: - கண்ணீரால் நிறைந்த முகம் கொண்ட – என்றும், அயோத்யாகாண்டம் (16-26) - ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்திதம் – வணங்கியபடியும் அஞ்ஜலி முத்திரையுடனும் உள்ள – என்று கூறுவதற்கு ஏற்ப பிரிவை வெளிப்படுத்துவதான சோகம் காரணமாக சொரிந்தபடி உள்ள கண்ணீர் மற்றும் அடிமைத்தன்மையை வெளிப்படுத்தும் அஞ்ஜலிமுத்திரை ஆகியவற்றுடன் கூடியபடி. (ருசிர ஸாநுக்களில் கூவிக்கொள்ளும் பிரியா அடிமைக்கு) - ஆரண்யகாண்டம் (15-7) – ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத - உனது திருவுள்ளத்துக்கு ஏற்ற இடத்தைக் காண்பித்து, “இங்கு பர்ணசாலை அமைப்பாய்” என்று நீயே நியமிக்கவேண்டும் - என்றும், அயோத்யாகாண்டம் (31-25) – பாவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச

தே – நீ சீதையுடன் சேர்ந்து இந்த மலையின் தாழ்வரைகளில் இன்பமாக இருப்பாயாக; நான் இரவு பகல் என்று ஆராயாமல் உனக்கு வேண்டிய அனைத்து கைங்கர்யங்களையும் செய்வேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, "திருச்சித்திரக்கூட மலையின் தாழ்வரைகள் போன்ற இனிமையான இடங்களில் சீதையுடன் சேர்ந்து நீ இன்பத்துடன் உள்ளபோது, நான் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தல்வேண்டும்; அவ்விதம் நான் செய்ய முனையும்போது, எனக்குக் கட்டளை இட்டு அந்தச் செயல்களை நீ ஏற்கவேண்டும்", என்று இராமனிடம் ப்ரார்த்தனை செய்து இயற்றப்படுவதும், அயோத்யாகாண்டம் (31-23) – குருஷ்வமாமநுசரம் - என்னை உன்னுடன் வரும்படியாகச் செய்தருளவேண்டும் – என்பதற்கு ஏற்ப எந்தவிதமான தடையும் இன்றிப் பின்தொடர்ந்து சென்று செய்யப்படுவதும் ஆகிய கைங்கர்யத்தைப் பெறுவதற்காக. (சரணே சரணென்று) - அயோத்யாகாண்டம் (31-2) – ஸ ப்ராதுச் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம் - இராமனுடைய இரண்டு திருவடிகளையும் உறுதியாகப் பிடித்தபடி, அருகில் இருந்த சீதையை நோக்கியபடி, லக்ஷ்மணன் உரைத்தான், இராமனையும் பார்த்தபடி உரைத்தான் - என்பதற்கு ஏற்ப, சிபாரிசு செய்பவளாகிய சீதையை முன்னிட்டுக் கொண்டு இராமனுடைய திருவடிகளைக் கட்டிப் பிடித்தபடி. (வாளும் வில்லும் கொண்டு) ஆரண்யகாண்டம் (11-1) – அக்ரத: ப்ரயயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா, ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர் லக்ஷ்மணோநுஜகாமஹ - இராமன் முன்னே செல்ல, அழகான இடையைக் கொண்ட சீதை பின்னே செல்ல, லக்ஷ்மணன் வில்லும் கையுமாகப் பின் தொடர்ந்தான் - என்பதற்கு ஏற்ப ஆயுதங்களை ஏந்தியவனாக இராமனைப் பின்தொடர்ந்தபடி சென்று. (பந்துவும் பிதாவும் அவரே என்கையும்) – அயோத்யாகாண்டம் (58-31) – ப்ராதா பர்த்தாச பந்துச்ச பிதா ச மம ராகவ: – எனது சகோதரனும், கணவனும், உறவினனும், தந்தையும் இராமனே ஆவான் - என்று தனக்கு அனைத்துவிதமான உறவும் இராமனே ஆவான் என்று கூறியது போன்று (இதனைப் போன்றே நம்மாழ்வாரும் உரைத்ததை அடுத்துக் கூறுகிறார்) …

**வ்யாக்யானம்** – இவரும் "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்வித்து" என்கிறபடியே பருவம் நிரம்புவதற்கு முன்னே, பிரியில் தரியாதபடி பிறந்த ஸ்நேஹத்தாலே "அழும் தொழும்" என்று, விச்லேஷம் பொறாமல் கண்ணும் கண்ணநீரும் கையுமஞ்ஜலியுமாய் "திருவேங்கடத்தெழில்கொள் சோதி யெந்தை தந்தை தந்தைக்கு - ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்று

"மொய்த்த சோலையும் மொய்பூம்தடம் தாழ்வரை"யுமான போக ஸ்தலங்களையுடைய திருமலையிலே, "அலர்மேல் மங்கையுறை மார்பனா"கையாலே பிராட்டியோடே கூடி ரஸோத்தரமாக விருக்கிற பரமசேஷியானவவனுக்கு, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸகல சேஷவ்ருத்திகளையும் பண்ணவேணும்; அது தன்னிலும், "முகப்பே கூவிப் பணிகொள்ளாய்" என்று ஸந்நிதியிலே யேவிக்கொள்ளவும் வேணுமென்று ப்ரார்த்தித்து, அப்படி ஏவிக்கொள்ளப்படுமதாய், "பிரியாவடிமை" என்கிறபடியே யாவதாத்மாநுவர்த்தியான கைங்கர்யத்தைப் பெறுகைக்கு உபாயமாக "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்று புருஷகாரம் முன்னாக அவன் திருவடிகளைப் பற்றி, "வாளும் வில்லுங் கொண்டு பின் செல்வார் மற்றில்லை" என்று திவ்யாயுதங்களைக் கொண்டு தாம் பின்னே திரியவாசைப்பட்டு, "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையு மவரே" என்று சேஷியான ஸர்வேச்வரனே தமக்கு மாதாபித்ராதி ஸர்வவித பந்துவுமென்கையாலும்.

**விளக்கம்** – (அழும் தொழும் ஸ்நேஹ பாஷ்ப அஞ்ஜலியோடே) - திருவாய்மொழி (2-3-3) - அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து – என்பதற்கு ஏற்ப தகுந்த வயது வருவதற்கு முன்பாகவே அவனைப் பிரிந்தால் தாங்கிக் கொள்ள இயலாதபடியாக உண்டான அன்பு காரணமாக, திருவாய்மொழி (7-2-8) - அழும் தொழும் – என்பதற்கு ஏற்ப பிரிவு ஏற்பட்டதைத் தாங்க இயலாமல் கண்ணும் கண்ணீருமாகவும், கையும் அஞ்ஜலியுமாகவும் நின்று. (ருசிர ஸாநுக்களில்) – திருவாய்மொழி (3-3-1) - திருவேங்கடத்தெழில்கொள் சோதி யெந்தை தந்தை தந்தைக்கு - ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழி (3-3-10) – மொய்த்த சோலை மொய்பூம்தடம் தாழ் - என்பதற்கு ஏற்ப உள்ளதான இனிமையான இடங்கள் பல உள்ள திருவேங்கடத்திருமலையில். (கூவிக் கொள்ளும்) - திருவாய்மொழி (6-10-10) - அலர்மேல்மங்கை உறை மார்பா – என்பதற்கு ஏற்ப உள்ளதால், "பெரியபிராட்டியுடன் கூடியபடி மிகுந்த இன்பத்துடன் உள்ள உயர்ந்த எஜமானனுக்கு அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும், அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும். இவ்விதம் செய்யும்போது, திருவாய்மொழி (8-5-7) – முகப்பே கூவிப் பணிகொள்ளாய் - என்பதற்கு ஏற்ப, "நீ என்னை 'இவ்விதம் செய்யவேண்டும்' என்று உத்தரவிட்டு அந்தக் கைங்கர்யங்களை ஏற்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்தும், இப்படியாக அவனால்

உத்தரவிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதும் ஆகிய, (அடிமைக்கு) – திருவாய்மொழி (5-8-2) - பிரியா அடிமை – என்பதற்கு ஏற்ப உள்ளதான சரீரத்தில் உயிர் உள்ளவரை தொடர்ந்தபடி இருக்கின்ற கைங்கர்யத்தை அடையும் வழியாக. (சரணே சரணென்று) – திருவாய்மொழி (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு – என்று கூறுவதற்கு ஏற்ப சிபாரிசாக பெரியபிராட்டியை முன்னிறுத்தி அவன் திருவடிகளைப் பற்றியபடி. (வாலும் வில்லும் கொண்டு) - திருவாய்மொழி (8-3-3) - வாளும் வில்லுங் கொண்டு பின் செல்வார் மற்றில்லை - என்பதற்கு ஏற்ப திவ்யமான ஆயுதங்களைக் கைகளில் எடுத்துக்கொண்டு அவன் பின்னே செல்வதற்கு ஆசை கொண்டு. (பந்துவும் பிதாவும் அவரே என்கையும்) – திருவாய்மொழி (5-1-8) – சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே - என்பதற்கு ஏற்ப எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனே தனக்குத் தாய், தந்தை, அனைத்துவிதமான உறவினன் என்று கூறுவதால். (ப்ராதாக்கள் படிகளும் காணலாம்) - லக்ஷ்மணன் தன்மையை இவரிடம் காணலாம்.

**வ்யாக்யானம்** - ஸ்ரீபரதாழ்வான், பெருமாள் திருமுடி சூடியிருக்கத் தாமடிமை செய்து வாழப் பெறாதபடி அவரைக் காட்டிலே அகலவடித்துத் தம்மேலே ஸ்வாதந்த்ர்யத்தை ஆரோபித்த கொடுமையாலே "ஹந்யாமஹமிமாம் பாபாம் கைகேயீம் துஷ்டசாரிணீம்" என்று மாதாவானவளைச் சீறியுபேக்ஷித்து ஸ்வாதந்த்ர்யாஸஹதை தோற்ற "ராஜ்யஞ் சாஹஞ்ச ராமஸ்ய" என்று ராஜ்யமும் நானும் பெருமாளுக்கு சேஷமென்று, "ம்ருதே து தஸ்மிந் பரதோ வஸிஷ்ட ப்ரமுகைர் த்விஜை:, நியுஜ்யமாநோ ராஜ்யாய நைச்சத் ராஜ்யம் மஹாபல:" என்கிறபடியே வஸிஷ்டாதி புரோஹிதர் நீ ராஜாவாக வேணுமென்று நியோகியா நிற்க, "இக்ஷ்வாகூணமியம் பூமிஸ் ஸசைலவநகாநநா" என்கிற மஹைச்வர்யத்தையு மிச்சயாதே பெருமாளை மீட்டுக் கொண்டு வந்து திருவபிஷேகம் பண்ணுவிக்கையிலே அபேக்ஷை தோன்ற "ஏபிச்ச ஸ சிவைஸ்ஸார்த்தம்" என்கிறபடியே அவர் திருவடிகளிலே சென்று "அயாசத் ப்ராதரம் ராமம்" என்கிறபடியே மீண்டெழுந்தருள வேணுமென் றபேக்ஷித்த விடத்தில் அவர் அது செய்யாதே, "பாதுகே சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வா புந: புந:" என்கிறபடியே திருவடிநிலையைக் கொடுத்துவிட, "ததஸ்து சிரஸா க்ருத்வா பாதுகே பரதஸ்ததா, ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டச் சத்ருக்நேந ஸமந்வித:" என்கிறபடியே அத்திருவடிநிலையை சிரஸாவஹித்துக் கொண்டு ஹ்ருஷ்டராய் மீண்டு போந்து "சிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் நக்ருதம் மயா" என்கிற இழவு திருவுள்ளத்திலே

கிடக்கையாலே "நமே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராண்யாபரணநிச, தம் விநா கைகயீ புத்ரம் பரதம் தர்மசாரிணம், இத ஏவ யதா க்ஷிப்ரம் ப்ரதிகச்சாம தாம் புரீம், அயோத்யா மாகதோ ஹ்யேஷ பந்தா: பரமதுர்கம:" என்று நாம் பிள்ளை பரதனையொழியக் குளித்தல் ஒப்பித்தல் செய்யக்கடவோமல்லோம், சீக்ரமாக நாம் இனி அங்கே செல்லலாம்படி யென்னென்று பெருமாள் த்வரையோடே மீண்டெழுந்தருளுமளவும், "பங்கதிக்தஸ்து ஜடிலோ பரத:" என்கிறபடியே கண்ணநீராலுண்டான சேற்றிலே தரைக்கிடை கிடக்கையாலே பங்கதிக்தராய், மூத்தாரிருக்க இளையார் முடிசூடக் கடவரல்லரென்கிற இக்ஷ்வாகு குல மர்யாதை தப்பாமல் நோக்கிக் கொண்டு, "ஸ காம மநவாப்யைவ" என்கிறபடியே தாமாசைப்பட்ட பொருள் கைபுகராத விழவோடே யிருந்தாப்போலே

**விளக்கம்** – (அன்னை என் செய்யில் என் ராஜ்யமும் யானே என்று) ஸ்ரீபரதாழ்வான், இராமன் திருமுடி சூடிக்கொண்டு ராஜ்யத்தை ஆண்டபடி உள்ளபோது, தான் அவனுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்து வாழவேண்டும் என்று விருப்பம் கொண்டிருந்தான். ஆனால் அது நிறைவேறப் பெறாதபடி இராமானைக் கானகம் அனுப்பி, தன் மீது அரசபதவி என்ற சுதந்திரத்தை ஏற்றிய கொடுமை காரணமாக, அயோத்யாகாண்டம் (78-22) - ஹந்யாமஹமிமாம் பாபாம் கைகேயீம் துஷ்டசாரிணீம் - இந்தத் தீய செயல் நிறைந்த மஹாபாபியாக உள்ள கைகேயியை நான் கொன்று விடுகிறேன் - என்பதற்கு ஏற்ப, தனது தாயாகிய கைகேயியைச் சீறி, அவளை வெறுத்து ஒதுக்கி, தான் தனக்கு உரியவன் அல்லன் என்ற தன்மை வெளிப்படும்படி, அயோத்யாகாண்டம் (82-12) – ராஜ்யம் அ அஹம் ச ராமஸ்ய - இந்த ராஜ்யமும் நானும் இராமனுடைய உடைமைகள் - என்பதற்கு ஏற்ப, "இந்த ராஜ்யமும் நானும் இராமனுடைய அடிமைகள்" என்று கூறியது போன்றும்; (பெருஞ்செல்வமும் இச்சியாமல்) - பாலகாண்டம் (1-33) - ம்ருதே து தஸ்மிந் பரதோ வஸிஷ்ட ப்ரமுகைர் த்விஜை:, நியுஜ்யமாநோ ராஜ்யாய நைச்சத் ராஜ்யம் மஹாபல: - தசரதன் இறந்தபோது அந்த நாட்டை ஆள்வதற்கான திறன் கொண்ட பரதன், வசிஷ்டர் போன்ற முக்கியமானவர்களால் அரசபதவியை ஏற்கவேண்டும் என்று கூறப்பட்டாலும், அரசனாக அமர விருப்பம் கொள்ளவில்லை - என்பதற்கு ஏற்ப, வசிஷ்டர் முதலான பலரும் பரதனிடம், "நீ அரசபதவியை ஏற்கவேண்டும்" என்று ஆணையிட்டபோதிலும், கிஷ்கிந்தாகாண்டம் (18-6) – இக்ஷ்வாகூணமியம் பூமிஸ் ஸசைலவநகாநநா – மலைகள், வனங்கள் ஆகியவை நிறைந்த இந்தப் பூமியானது இக்ஷ்வாகு குலத்து அரசர்களுக்கே உரியது – என்பதற்கு ஏற்ப

உள்ளதான மிகப் பெரிய செல்வத்தையும் விரும்பாமல் நின்றது போன்றும்; (வேண்டிச் சென்று) - இராமனைக் கானகத்திலிருந்து மீண்டும் நாட்டிற்கு அழைத்து வந்து அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கவேண்டும் என்ற விருப்பம் வெளிப்படும்படி அயோத்யாகாண்டம் (104-12) – ஏபிச்ச ஸ சிவைஸ்ஸார்த்தம் - நான் இவர்களுடன் சேர்ந்து உன்னை வேண்டுகிறேன் – என்பதற்கு ஏற்ப இராமனுடைய திருவடிகளில் பணிந்து, பாலகாண்டம் (1-35) - அயாசத் ப்ராதரம் ராமம் - தனது மூத்தவனாகிய இராமனைப் பரதன் வேண்டி நின்றான் – என்பதற்கு ஏற்ப, “மீண்டும் அயோத்திக்குத் திரும்ப வேண்டும்”, என்று விண்ணப்பித்தது போன்றும்; (திருவடியே சுமந்து) - அப்போது இராமன் அது போன்று செய்யாமல், பாலகாண்டம் (1-37) – பாதுகே சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வா புந: புந: – இராமன் தனது இடத்தில் தன்னுடைய பாதுகையை வைத்து ஆளும்படியாக அளித்து மீண்டும் மீண்டும் உரைத்தான் - என்பதற்கு ஏற்ப தனது பாதுகைகளை அளித்தபோது, அயோத்யாகாண்டம் (113-1) – ததஸ்து சிரஸா க்ருத்வா பாதுகே பரதஸ்ததா, ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டச் சத்ருக்நேந ஸமந்வித: – அதன் பின்னர் பரதன் அந்தப் பாதுகைகளைத் தனது தலையில் ஏற்றுக் கொண்டு மிகுந்த ஆனந்தம் பூண்டு சத்ருக்நனோடு தேரில் ஏறினான் – என்பதற்கு ஏற்ப அந்தப் பாதுகைகளைத் தனது தலையில் ஏற்றபடி ஆனந்தத்துடன் அயோத்தி திரும்பியது போன்றும்; (விரைந்து வருமளவும் கண்ணநீர் பங்கமாக நிலம் துழாவி) - யுத்தகாண்டம் (124-19) - சிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் நக்ருதம் மயா - தனது தலையால் வணங்கிக் கேட்டுக் கொண்டபடி நம்மால் செய்ய இயலவில்லை - என்பதற்கு ஏற்ப மிகுந்த வருத்தமானது இராமனுடைய திருவுள்ளத்தில் நிறைந்திருந்தது. ஆகவே யுத்தகாண்டம் (124-6, 7) – நமே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராண்யாபரணநிச, தம் விநா கைகயீ புத்ரம் பரதம் தர்மசாரிணம், இத ஏவ யதா க்ஷிப்ரம் ப்ரதிகச்சாம தாம் புரீம், அயோத்யா மாகதோ ஹ்யேஷ பந்தா: பரமதுர்கம: - கைகேயியின் புத்திரனும் அறநெறி தவறாதவனும் ஆகிய பரதன் இன்றி நீராடவோ, ஆடை அணிகலன் அணிவதிலோ எனக்கு விருப்பம் இல்லை. இங்கிருந்து நான் விரைவாக அயோத்தி செல்லவேண்டும். அயோதிக்குச் செல்லும் இந்த வழி நீண்ட தூரம் என்பதால் விரைவாக அடைய இயலாதது – என்பதற்கு ஏற்ப, “நாம் நம்முடைய புத்திரன் போன்ற பரதனைக் காணாமல் இனி குளித்தல், அலங்கரித்தல் போன்றவற்றைச் செய்யமாட்டோம். விரைவாக அங்கு செல்வதில் என்ன தடை” என்று கூறியபடி இராமன் விரைந்து அயோத்திக்கு வந்தான் அப்போது, யுத்தகாண்டம் (127- 4) - பங்கதிக்தஸ்து ஜடிலோ பரத: - தூசி படிந்த சரீரத்துடனும் ஜடைமுடியுடனும் உள்ள பரதன் – என்பதற்கு

ஏற்ப கண்ணீரால் ஏற்பட்ட சேற்றில் தரையில் கிடந்த காரணத்தால் சேறு அப்பியவனாகக் கிடந்தது போன்றும்; (குடிக்கிடந்த கையறவும்) - மூத்த புத்திரன் உள்ளபோது இளையபுத்திரன் முடிசூடிக்கொள்ளும் தகுதி கொண்டவன் அல்லன் என்பதான இக்ஷ்வாகு குலத்தின் வழக்கம் தவறிப் போகாமல் பாதுகாத்து, பாலகாண்டம் (1-38) – ஸ காம மநவாப்யைவ – பரதன், தான் விரும்பிய கைங்கர்யத்தைப் பெறாமல் - எனபதற்கு ஏற்ப, தான் விரும்பிய பொருள் கிட்டவில்லையே என்ற வருத்தத்துடன் இருந்தது போன்றும் [இவற்றைப் போன்றே நம்மாழ்வாரின் தன்மை உள்ளதை அடுத்து அருளிச்செய்கிறார்] …

**வ்யாக்யானம்** - இவரும் பகவத் ப்ராவண்யாதிசயத்தாலே வழியல்லா வழியேயாகிலும் கிட்டுமத்தனை யென்கிற த்வரைக்கு இடங்கொடாமல் விலக்கும் மாதாவை சத்ரு பக்ஷமாகக் காண்கையாலே, “அன்னையென்செய்யிலென்” என்று “ஜீவிக்கிலென்? முடியிலேன்?” என்று சீறி உபேக்ஷித்து, “யானேயென்றனதே” என்கிற ஸ்வாதந்தர்யா ஸஹாராய்க் கொண்டு “யானே நீயென்னுடைமையும் நீயே” என்று ஆத்மாத்மீயங்க ளிரண்டும் அங்குத்தைக்கு சேஷமென்று “கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு” என்று மேன்மேலும் ஸம்ருத்தமாய் வரும் நிரவதிகைச்வர்யத்தையும் அக்நி சமமாகக் கொண்டு “வேங்கடவாணனை வேண்டிச் சென்று” என்று திருச்சித்திரகூடத்தி லிருந்தாப்போலே திருமலையிருக்கிறவவனை யதாமநோரத மநுபவிக்கைக்காக அபேக்ஷித்துச் சென்று தம் அபேக்ஷிதம் அவன் அப்போது செய்யாதே ஒரு வைசத்ய முகத்தாலே “திருவடியே சுமந்துழலக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை” என்று திருவடிகளைத் தந்தாயென்று ஹ்ருஷ்டராம்படி பண்ணிவிட, அப்படி அவன் கொடுத்த திருவடிகளை சிரஸாவஹித்து வீடுதிருத்தப் போனவன் விண்ணுலகம் தர விரைந்து வருமளவும், “கண்ணநீர் கைகளாலிறைக்கும்”, “இருநிலம் கைதுழாவிருக்கும்” என்கிறபடியே கண்ணநீர் வெள்ளத்தாலுண்டான சேற்றிலேயிருந்து ஆற்றாமையாலே நிலம் துழாவி, “குடிக்கிடந்தாக்கம் செய்து” என்கிறாப்டியே ப்ரபந்ந குலத்தில் செய்து போரும் மர்யாதை தப்பாமல் “காமுற்றகையறவோடு” என்கிறபடியே தாமாசைப்பட்ட பொருள் கைபுகராதவிழவோடே யிருக்கையாலும்;

**விளக்கம்** – நம்மாழ்வாரும் பகவானிடம் கொண்டுள்ள மிகுதியான பக்தி காரணமாக செல்லக்கூடாத வழி என்றபோதிலும் அவ்வழியாகச் சென்றால் தகுந்த இலக்கை

அடையலாம் என்பதான விரைவான செயலை அனுமதிக்காமல் தடுப்பவள் தாயாக உள்ளபோதிலும் விரோதியாகக் காண்பதால், (அன்னை என் செய்யில் என்) - திருவாய்மொழி (5-3-6) – அன்னை என் செய்யில் என் – என்பதில் கூறியபடி, “உயிர் வாழ்ந்தால் உனக்கு என்ன? மடிந்தால் உனக்கு என்ன?”, என்று தாயை வெறுத்து ஒதுக்கி, (ராஜ்யமும் யானே என்று) – திருவாய்மொழி (2-9-9) – யானேயென்றனதே – என்பதற்கு ஏற்ப தான் சுதந்திரமாக உள்ளதைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாதவராக, திருவாய்மொழி (2-9-9) – யானே நீயென்னுடைமையும் நீயே – என்பதற்கு ஏற்ப தனது ஆத்மாவும் ஆத்மாவுடன் ஸம்பந்தம் கொண்டுள்ள அனைத்தும் உனக்கே உடைமைப்பட்டவை என்று உரைத்து, (பெருஞ்செல்வமும் இச்சியாமல்) – திருவாய்மொழி (4-9-4) – கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு - என்பதற்கு ஏற்ப மேன்மேலும் தன்னிடம் வளர்ந்தபடி உள்ள எல்லையற்ற செல்வங்கள் அனைத்தையும் அக்னிக்குச் சமமாக எண்ணியபடி. (வேண்டிச் சென்று) - திருவாய்மொழி (8-2-1) - வேங்கடவாணனை வேண்டிச் சென்று - என்பதற்கு ஏற்ப திருச்சித்திரக்கூடத்தில் இருந்தது போன்று திருவேங்கடத்திருமலையில் உள்ள அவனைத் தனக்கு விருப்பமான விதங்கள் அனைத்திலும் அனுபவிப்பதற்கான விருப்பத்துடன் சென்று. (திருவடியே சுமந்து) - தனது விருப்பத்தினை அவன் அப்போது நிறைவேற்றாமல், தெளிந்த ஞானம் மூலமாக, திருவாய்மொழி (4-9-9) - திருவடியே சுமந்துழலக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை - என்பதற்கு ஏற்ப, “திருவடிகளை அளித்தாய்” என்று மிகுந்த ஆனந்தம் நிறைந்தவராகச் செய்தான்; அவ்விதம் அவன் அளித்த திருவடிகளைத் தனது தலையில் தாங்கியபடி, (விரைந்து வருமளவும்) - வீடு திருத்தப் போனவன் பரமபதத்தை அளிப்பதற்காக விரைவாக வரும்வரை. (கண்ணநீர் பங்கமாக நிலம் துழாவி) - திருவாய்மொழி (7-2-1) - கண்ணநீர் கைகளாலிறைக்கும் – என்றும், திருவாய்மொழி (7-2-1) - இருநிலம் கைதுழாவிருக்கும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப கண்ணநீரால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உண்டான சேற்றில் நின்றபடி பிரிவாற்றாமையால் தரையில் புரண்டு. (குடிக்கிடந்த கையறவும்) – திருவாய்மொழி (9-2-3) - குடிக்கிடந்தாக்கம் செய்து - என்பதற்கு ஏற்ப ப்ரபந்நர்களின் குலத்திற்கு உண்டான கௌரவம் குலையாமல், திருவாய்மொழி (2-1-3) – காமுற்றகையறவோடு - என்பதற்கு ஏற்ப, தான் விரும்பிய பொருள் கிட்டாமல் உள்ள நிலையுடன் இருப்பதால், (ப்ராதாக்கள் படிகளும் காணலாம்) – பரதாழ்வான் தன்மையை இவரிடம் காணலாம்.

**வ்யாக்யானம்** – ஸ்ரீசத்ருக்நாழ்வான், “கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத” என்கிறபடியே பாகவத சேஷத்வமே பரம புருஷார்த்தமென்று ஸ்ரீபரதாழ்வானுக்கே சேஷபூதராய், அவருடைய பாவநத்வ போக்யத்வங்களிலே கால்தாழ்ந்து, “பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்” என்கிறபடியே வயிரவுருக்காய் ஆண்களையும் பெண்ணுடை யுடுத்தும் பெருமாளுடைய வடிவழகில் துவக்குண்ணாதே, பரதாநுவ்ருத்தியில் போகாதபடி தன் பக்கலிலே துவக்கவற் றென்னுமத்தாலே தம்முடைய நிஷ்டைக்கு அது நித்யசத்ருவென்றறுதி யிட்டிருக்கச்செய்தே ஸ்ரீபரதாழ்வானுக்கு உகப்பாகையாலே உத்தேச்ய ப்ரீதியென்று புரிந்து பெருமாள் வடிவிலே நெஞ்சு சென்று, “விசிந்தயந்” என்கிறபடியே எப்போதும் அத்தை மநஸ்ஸிலே கொண்டிருக்குமாபோலே

**விளக்கம்** – (கோதிலடிமை உறுமோ வென்பித்த புலன்கொள் நித்ய சத்ரு விசிந்தநமுமான ப்ராதாக்கள்) – ஸ்ரீசத்ருக்நாழ்வான், அயோத்யாகாண்டம் (1-1) – கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத - தோஷங்கள் அற்றவனாகவும், புலன்களை அடக்கியவனாகவும் உள்ள சத்ருக்நன் மிகுந்த அன்பு காரணமாக பரதனால் அன்புடன் அழைத்துச் செல்லப்பட்டான் - என்பதற்கு ஏற்ப, பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்பதே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்பதால் பரதனுக்கே அடிமைப்பட்டவனாகவும்; பரதனுடைய தூய்மையான தன்மை மற்றும் இனிமை ஆகிய இரண்டிலும் தன்னை இழந்தவனாகவும்; அயோத்யாகாண்டம் (3-28) – பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் - வடிவழகு தாராளகுணம் போன்றவற்றால் ஆண்களுடைய சித்தத்தையும் கவரவல்ல இராமன் - என்பதற்கு ஏற்ப, வைரம் போன்ற கடினமான உள்ளதையும் உருகும்படிச் செய்கின்ற இராமனுடைய வடிவழகைக் கண்டு தடுமாறாமல் பரதனுக்குக் கைங்கர்யம் செய்வதை விட்டு அகன்று போகாதபடியும்; இப்படியாக அந்த நிலை மாறாதபடி இருப்பதற்காக தனது அந்த நிலைக்கு இராமனுடைய வடிவழகு எப்போதும் சத்ருவே ஆகும் என்று தீர்மானித்துள்ளபோதிலும், பரதனுக்கு மிகவும் ப்ரியம் என்றும் காரணத்தால் இராமனுடைய வடிவழகில் ஈடுபட்டு, அயோத்யாகாண்டம் (89-3) – விசிந்தயந் - சிறப்பாக மனதில் கொண்டிருப்பவன் - என்பதற்கு ஏற்ப எப்போதும் இராமனுடைய வடிவழகைத் தனது மனதில் நிலை நிறுத்தியபடி உள்ளது போன்று (சத்ருக்நாழ்வானின் தன்மையை நம்மாழ்வாரிடம் காணலாம் என்று அடுத்து அருளிச்செய்கிறார்) …

**வ்யாக்யானம் –** இவரும், “கோதிலடியார்” என்று ப்ரதமாவதியில் நிலைபோலன்றிக்கே ஸ்வரூபத்தினுடைய எல்லை நிலமாகையாலே “லோதிலடிமை” என்று சொல்லப்படுகிற பாகவத சேஷத்வத்தினுடைய ரஸம், “அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டார் இங்கே திரிய” அவர்களைத் தவிர்ந்து “செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்புகுதல் – பாவியேனுக்கு - உறுமோ?” என்று சொல்லுவிக்கப்பட்டதாய், ஸர்வேந்த்ரியாபஹார க்ஷமமாகையாலே அந்த பாகவத சேஷத்வ நிஷ்டா விரோதியான பகவத் விக்ரஹத்தை உத்தேச்ய ப்ரீதியென்னுமத்தைப் பற்றி, “திரிதந்தாகிற்”படியே மீண்டு, “புலன் கொள்வடி வென் மனத்ததாய்” என்று எப்போதும் தம் மநஸ்ஸுக்கு விஷயமாகக் கொண்டிருக்கையாலும், கீழ்ச்சொன்ன வாகாரங்களை யுடையரான இளையபெருமாள் ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீசத்ருக்நாழ்வானாகிற திருத்தம்பிமார் மூவர்படியும் இவர்பக்கலிலே காணலாம்.

**விளக்கம்** – நம்மாழ்வார் (கோதில் அடிமை) திருவாய்மொழி (8-10-9) – கோதில் அடியார் - என்பதற்கு ஏற்ப அடிமைத்தனத்தில் முதல் நிலை போன்று அல்லாமல் [பகவத் அடிமை போன்று அல்லாமல்], “கோதில் அடிமை” என்று கூறும்படியாக பாகவதர்களுக்கு அடிமையாக உள்ள நிலையின் சுவை, (உறுமோ என்பித்த) - திருவாய்மொழி (8-10-3) – அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டார் இங்கே திரிய – என்பதற்கு ஏற்ப உள்ள அவர்களை விடுத்து, திருவாய்மொழி (8-10-3) - செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்புகுதல் – பாவியேனுக்கு - உறுமோ – என்று கூறும்படியாகச் செய்வதும். (புலன் கொள் நித்ய சத்ரு விசிந்தநமுமான) - அனைத்து இந்த்ரியங்களையும் கவரும்படியான ஆற்றல் கொண்டதாக உள்ளதால், பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருத்தல் என்று நிலைக்கு இடையூறாக உள்ள பகவானின் திருமேனியை, தனக்கு விருப்பமானவர்களுக்கு மகிழ்வு ஏற்படுத்தும் என்ற காரணத்தால், கண்ணிநுண்சிறுத்தாம்பு (3) – திரிதந்தாகிலும் - என்பதற்கு ஏற்ப பாகவத அடிமைத்தனத்தில் இருந்து கடினத்துடன் தனது மனதைத் திருப்பி எடுத்து, திருவாய்மொழி (8-10-9) – புலன் கொள்வடி வென் மனத்ததாய் – என்பதற்கு ஏற்ப தனது மனதிற்கு எப்போதும் இலக்காகக் கொண்டுள்ள காரணத்தால், (ப்ரதாக்கள் படிகளும் காணலாம்) – லக்ஷ்மணன், பரதன், சத்ருக்நன் ஆகிய மூன்று தம்பிகளுடைய தன்மையை நம்மாழ்வாரிடம் காணலாம்.

**வ்யாக்யானம்** – "விசிந்தநம்" என்கிறவிதுக்கு இப்படி வ்யாக்யாநம் பண்ணிற்று இதன் பட்டோலை யானதிலே, "உறுமோ"வென்று நித்யசத்ருவை வென்று, "புலன் கொள்வடிவை விசிந்தயனாயிருக்கும்" என்று, "விசிந்தயந்" என்று ஒரு வசநமுண்டாகவு மெடுத்து இப்படி இவர்தானே அருளிச்செய்து வைக்கையாலே, இவ்விடத்திலும் சிந்தநமென்னாமல் விசிந்தநமென்றது அவ்வசந ஸூசகமாகவிறே. "விசிந்தயந்" என்கிற வசநம் இன்னவிடத்திலே யென்று த்ருஷ்டமாய்த்தில்லை; வந்தவிடத்திலே கண்டு கொள்வது.

**விளக்கம்** – "விசிந்தநம்" என்று சொல்லுக்கு மேலே உள்ள விதத்தில் வ்யாக்யானம் செய்தது எப்படி என்றால் – "உறுமோ" என்ற பாசுரத்தில் பாகவத கைங்கர்யத்திற்கு எப்போதும் தடையாக உள்ள பகவத் திருமேனியை வென்று, "புலன்கொள் வடிவை" என்பதற்கு ஏற்ப உள்ள அவனை, "விசிந்தயனாய் இருக்கும் - விசேஷமாக மனதில் எப்போதும் கொண்டு" என்றுள்ள சூர்ணை வரியில், "விசிந்தயந்" என்னும் ஒரு சொல் இராமாயணத்தில் உள்ளதாக ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் எடுத்தாண்ட காரணத்தால் ஆகும்; இங்கு சிந்தநம் என்று கூறாமல் விசிந்தநம் என்று உரைத்தது அந்தச் சொல்லை மறைமுகமாக உணர்த்தவே ஆகும். ஆனால் இராமாயணத்தில் "விசிந்தயந்" என்ற சொல், இன்ன இடத்தில் உள்ளது என்று அறிய இயலவில்லை.

**வ்யாக்யானம்** - (அப்பொழுதைக்கித்யாதி) சக்ரவர்த்தி, "ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப" என்கிறபடியே வைத்தகண்வாங்காதே உத்தரோத்தர மநுபவியா நிற்கச்செய்தே ஒருகாலும் த்ருப்தனாகாமல் அநுபூஷுவாய்ச் சொல்லுமாபோலே, இவரும் "எப்பொழுதும் நாள் திங்களாண்டு" இத்யாதிப்படியே யாவத் காலமநுபவியா நின்றாலும், "அப்பொழுதைக் கப்பொழு தென்னாராவமுதம்" என்று அநுக்ஷணம் எனக்கு அத்ருப்திகரமான போக்யவஸ்துவென்று, மேன்மேலும் அபிநிவிஷ்டராகையாலும்.

**விளக்கம்** – (அப்பொழுதைக்கு அப்பொழுது என்னும் பிதா) – தசரதசக்ரவர்த்தி, அயோத்யாகாண்டம் (3-29) – ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப - தன்னிடம் வருகின்ற இராமனை நோக்கியபடி உள்ள தசரதனுக்கு மனநிறைவு உண்டாகவில்லை – என்பதற்கு ஏற்ப வைத்த கண் வாங்காமல், மேன்மேலும் இராமனை அனுபவித்தபடி உள்ளபோதிலும், எப்போதும் மனநிறைவு அடையாமல் மீண்டும் கண்டு அனுபவிக்க

வேண்டும் என்று விரும்பியது போன்று; நம்மாழ்வாரும், திருவாய்மொழி (2-5-4) – எப்பொழுதும் நாள் திங்களாண்டு - என்ற பாசுரத்தில் கூறுவது போன்று காலம் உள்ளவரை அனுபவித்தபடி நின்றாலும், திருவாய்மொழி (2-5-4) – அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆராவமுதம் - என்பதற்கு ஏற்ப, ஒவ்வொரு நொடியிலும் எனக்கு மனநிறைவு ஏற்படாதவிதத்தில் உள்ள இனிமையான பொருள் என்று, மேன்மேலும் ஆசையைப் பெருக்கியபடி உள்ளவர் என்பதாலும்.

**வ்யாக்யானம்** – “யமளார்ஜுநயோர் மத்யே ஜகாம” என்று க்ருதஸங்கேதமாய் நலிய வந்து நின்ற யமளார்ஜுநங்களின் நடுவே க்ருஷ்ணன் போனபோது யசோதைப்பிராட்டி ஓடிச் சென்று எடுத்துக்கொள்ளாநிற்க, மருதுகளின் பெருமையையும் இவன் மௌக்த்யத்தையும் கண்டு வயிறு எரிகொளுந்தி முகத்தைப் பார்த்து “இப்பெரிய மருதுகளின் நடுவே போனாயே” என்று வெறுத்தாப்போலே, இவரும் அதீதகாலஸ்தமாயிருக்கவும் ஸமகாலத்திற்போல ப்ரகாசிக்கையாலே அப்படி வயிறெரிந்து கொண்டு “போனாய் மாமருதின் நடுவே” என்கையாலும் பிதாவும் மாதாவுமான அவர்களிருவர்படியும் இவர் பக்கலிலே காணலாம்.

**விளக்கம்** – (போனாய் என்னும் மாதா) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-6-15) – யமளார்ஜுநயோர் மத்யே ஜகாம - யமளார்ஜுன மரங்களுக்கு நடுவில் சென்றான் - என்று கூறுவதற்கு ஏற்ப குறிப்பிட்ட செயலைச் செய்வதில் ஒத்தபடியான சிந்தனை உள்ளவர்களாக, க்ருஷ்ணனைத் துன்புறுத்த எண்ணியபடி வந்து நின்ற யமளார்ஜுன மரங்களின் நடுவே க்ருஷ்ணன் சென்றான். அப்போது யசோதைப்பிராட்டி ஓடி வந்து அவனை எடுத்துக்கொண்டாள். அந்த இரண்டு மருதமரங்களின் வளர்த்தி மற்றும் க்ருஷ்ணனுடைய பால்யம் ஆகிய இரண்டையும் கண்ணுற்று, வயிறு எரிந்து, க்ருஷ்ணனுடைய திருமுகத்தை நோக்கி, “இந்தப் பெரிய மருதமரங்கள் நடுவில் சென்றாயே” என்று வெறுத்து நின்றாள். இதே போன்று நம்மாழ்வாரும், கடந்த காலகட்டத்தில் இந்த நிகழ்வு நடந்தபோதிலும், இவர் உள்ளபோது நடந்தது போன்று தோன்றுவதால், யசோதையைப் போன்றே வயிறு எரிந்து, திருவாய்மொழி (5-1-2)- போனாய் மாமருதின் நடுவே - என்று கூறினார். (படிகளும் காணலாம்) - இதன் மூலம் இவரிடம் தந்தை மற்றும் தாயான தசரதன் மற்றும் யசோதையின் தன்மைகளைக் காணலாம்.

**வ்யாக்யானம்** – (செந்தீத் தண்காற்று இளநாகம் முதலான பகையறச் சிந்தை செய்து எங்குமுளனென்னும் பள்ளிப்பிள்ளை) ஸ்ரீப்ரஹ்லாதன், "நாக்நிர்தஹதி நைவாயம் சஸ்த்ரைச் சிந்நோ நசோரகை:, க்ஷயம் நீதோ நவாதேந நவிஷேண நக்ருத்யயா", "ஸத்வாஸக்தமதி: க்ருஷ்ணே தச்யமாநோ மஹோரகை:, நவிவேதாத்மநோ காத்ரம் தத் ஸ்ம்ருத்யாஹ்லாத ஸம்ஸ்தித:" என்கிறபடியே அக்நி முதலானவை பாதகமாகாதபடி "ஸர்வ பூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே, பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ரகதா குத:" என்று மித்ராமித்ரகதாவகாசமற ஸர்வமும் பகவதாத்மகதயா அநுகூலமாக அநுஸந்தித்து, "எங்குமுளன் கண்ணன்" என்கிறபடியே "உர்வ்யாமஸ்தி" என்று தொடங்கி, "ஸர்வத்ராஸ்தி" என்று பிறர்க்கு முபதேசித்தாப்போலே; இவரும், "அறியும் செந்தீயைத் தழுவி யச்சுதனென்னும் மெய்வேவாள் எறியும் தண்காற்றைத் தழுவி யென்னுடைக் கோவிந்த னென்னும்", "போமிள நாகத்தின் பின்போய் அவன் கிடக்கை யீதென்னும்" என்று அக்நி முதலான பாதக பதார்த்தங்கள் பகவதாத்மகத்வேந அநுகூலமாம்படி "என் முன்னைக் கோளரியே – உன்னைச் சிந்தை செய்து செய்து – என் முன்னைத் தீவினைகள் முழுவேரரிந்தனன் யான் – முடியாததென்னெனக்கு" என்று அவனை அநவரதா நுஸந்தாநம் பண்ணி, "கறந்த சிலிடந்தொறுமிடந்திகழ் பொருடொறும் கரந்தெங்கும் பரந்துளன்" என்று அவனுடைய ஸர்வகதத்வத்தைப் பிறருமறியும்படி அருளிச் செய்கையாலே "பள்ளியிலோதி வந்த தன் சிறுவன்" என்றும், "பிள்ளையைச் சீறி" என்றும் சொல்லப்பட்ட பள்ளிப்பிள்ளையான ப்ரஹ்லாதன்படியும் இவர்பக்கலிலே காணலாம்.

**விளக்கம்** – ஸ்ரீப்ரஹ்லாதன், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-58) – நாக்நிர்தஹதி நைவாயம் சஸ்த்ரைச் சிந்நோ நசோரகை:, க்ஷயம் நீதோ நவாதேந நவிஷேண நக்ருத்யயா - அவனை அக்னி எரிக்கவில்லை, ஆயுதங்கள் வெட்ட இயலவில்லை, விஷத்தால் இறக்கவில்லை, பூதங்களால் அழியவில்லை - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-38) - ஸத்வாஸக்தமதி: க்ருஷ்ணே தச்யமாநோ மஹோரகை:, நவிவேதாத்மநோ காத்ரம் தத் ஸ்ம்ருத்யாஹ்லாத ஸம்ஸ்தித: – க்ருஷ்ணனிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட மனம் உள்ளவனாகிய ப்ரஹ்லாதன் கொடிய பாம்புகளால் தீண்டப்பட்டபோதிலும் க்ருஷ்ணனுடைய நினைவால் ஏற்பட்ட மகிழ்ச்சி காரணமாகத் தனது சரீரத்தை உணரவே இல்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அக்னி போன்றவை தனக்கு எந்தக் கெடுதலையும் செய்யாதபடி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-36) – ஸர்வ பூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே, பரமாத்மநி கோவிந்தே

மித்ராமித்ரகதா குத: – தந்தையே! அனைத்து உயிர்களையும் தனது சரீரமாகக் கொண்டவனும், உலகிற்கு நாயகனும், பரமாத்மாவும் ஆகிய கோவிந்தன் இந்த உலகத்தையே தனது சரீரமாகக் கொண்டபடி உள்ளபோது பகைவன் என்ற நிலை எவ்விதம் உண்டாகும் - என்பதற்கு ஏற்ப, பகைவன் போன்ற எந்தவிதமான சொல்லையும் எண்ணாதபடி, அனைத்தையும் பகவானின் சரீரமாகவே எண்ணி, திருவாய்மொழி (2-8-9) – எங்கும் உளன் கண்ணன் – என்பதற்கு ஏற்ப, உர்வ்யாமஸ்தி - பூமியில் உள்ளான் – என்று தொடங்கி, ஸர்வத்ர அஸ்தி - எங்கும் உள்ளான் - என்பது முடிய அனைவருக்கும் உபதேசித்தான். இதே போன்று நம்மாழ்வாரும், (செந்தீத் தண்காற்று இளநாகம் முதலான பகையற) - திருவாய்மொழி (4-4-3) - அறியும் செந்தீயைத் தழுவி அச்சுதன் என்னும் மெய்வேவாள் எறியும் தண்காற்றைத் தழுவி என்னுடைக் கோவிந்தன் என்னும் - என்றும், திருவாய்மொழி (4-4-5) – போம் இள நாகத்தின் பின்போய் அவன் கிடக்கை ஈதென்னும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அக்னி முதலான துன்புறுத்தும் பொருள்கள் அனைத்தும் ஸர்வேச்வரனையே தங்களுடைய ஆத்மாவாகக் கொண்டுள்ள காரணத்தால் நன்மையே செய்யும்படியாக. (சிந்தை செய்து) – திருவாய்மொழி (2-6-6) - என் முன்னைக் கோளரியே உன்னைச் சிந்தை செய்து செய்து என் முன்னைத் தீவினைகள் முழுவேரரிந்தனன் யான் முடியாததென்னெனக்கு - என்பதற்கு ஏற்ப எப்போதும் சிந்தித்தபடி. (எங்கும் உளன் என்று) – திருவாய்மொழி (1-1-10) – கறந்த சிலிடந்தொறுமிடந்திகழ் பொருடொறும் கரந்தெங்கும் பரந்துளன் – என்பதற்கு ஏற்ப அவன் எங்கும் நிறைந்துள்ள தன்மையை அனைவரும் அறியும்படியாக அருளிச்செய்வதால், பெரியதிருமொழி (2-3-8) – பள்ளியிலோதி வந்த தன் சிறுவன் - என்றும், பெரியதிருமொழி (2-3-8) – பிள்ளையைச் சீறி – என்றும் கூறப்பட்ட பள்ளிப்பிள்ளையான ப்ரஹ்லாதன் தன்மையையும் நம்மாழ்வாரிடம் காணலாம்.

**வ்யாக்யானம்** – ஸ்ரீவிபீஷணாழ்வான், "த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணங்கத:" என்றும், "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச, பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநிவை" என்றும் லங்கையோடே கூட புத்ர தாராதிகளான ஸர்வத்தையும் விட்டு சக்ரவர்த்தி திருமகனையே தமக்கெல்லாமாகப் பற்றினாப்போலே, இவரும் "பாதமடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டு" என்று ஸாம்ஸாரிக ஸகல ஸங்கங்களையும் ஸவாஸநமாகவிட்டு, "தயரதற்கு மகன்றன்னை யன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்று சக்ரவர்த்தி திருமகனையே தமக்கு ஸர்வப்ரகார

ரக்ஷகனாகப் பற்றுகையாலே, "விபீஷணஸ்து தர்மாத்மா" என்று தர்மபுத்தி யுடையவ னென்கிற மாத்ரமன்றிக்கே, "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்று சொல்லப்பட்ட தர்ம ஸ்வரூபனான சக்ரவர்த்தி திருமகனையே தனக்கு தாரகமாகவுடையவ னாகையாலே "தர்மாத்மா" என்று விசேஷஜ்ஞர் சொல்லும் ஸ்ரீவிபீஷணாழ்வான்படியும் இவர் பக்கலிலே காணலாம்.

**விளக்கம்** – (முற்றவிட்டு மற்றிலே னென்னும் தர்மாத்மா) - விபீஷணன், யுத்தகாண்டம் (17-14) – த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணங்கத: - புத்திரர்களையும் மனைவியையும் துறந்த நான் இராமனையே சரணம் அடைந்தேன் - என்றும், யுத்தகாண்டம் (19-5) – பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச, பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநிவை - இலங்கை என்னால் துறக்கப்பட்டது, நண்பர்கள் விடப்பட்டனர், செல்வங்கள் விடப்பட்டன, எனது அரசும் உயிரும் உனது உடைமையாக உள்ளன, அனைத்தும் உனது உடைமையாக உள்ளன – என்றும் கூறுவதற்கு ஏற்ப இலங்கையுடன் சேர்த்து புத்திரர்கள், மனைவி ஆகிய அனைத்தையும் துறந்து, சக்ரவர்த்தி திருமகன் மட்டுமே தனக்கு அனைத்தும் என்று பற்றினான். இதே போன்று நம்மாழ்வாரும், (முற்றவிட்டு) - திருவாய்மொழி (8-2-11) – பாதம் அடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டு - என்பதற்கு ஏற்ப இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் பற்றுதல்கள் மற்றும் வாசனையுடன் கைவிட்டு. (மற்றிலேன் என்னும்) – திருவாய்மொழி (3-6-8) – தயரதற்கு மகன்றன்னை யன்றி மற்றிலேன் தஞ்சமாகவே - என்பதற்கு ஏற்ப சக்ரவர்த்தி திருமகனை மட்டுமே தனக்கு அனைத்துவிதமான பாதுகாப்பாகப் பற்றியபடி உள்ளதாய். (தர்மாத்மா படியும் காணலாம்) - ஆரண்யகாண்டம் (17-23) - விபீஷணஸ்து தர்மாத்மா - விபீஷணன் தர்மம் நிறைந்தவன் - என்பதற்கு ஏற்ப தர்மபுத்தி கொண்டவன் என்பதும் மட்டும் அல்லாமல், ஆரண்யகாண்டம் (37-13) - ராமோ விக்ரஹவாந் தர்ம: - தர்மமே இராமன் என்ற உருவம் எடுத்தது - என்று கூறப்படும் தர்ம ஸ்வரூபனாகிய சக்ரவர்த்தி திருமகனை மட்டுமே, தான் உயிர் வாழ்வதற்கான காரணமாகக் கொண்டுள்ளதால் "தர்மாத்மா" என்று சான்றோர்கள் கொண்டாடும் விபீஷணாழ்வான் தன்மையை நம்மாழ்வாரிடம் காணலாம்.

**வ்யாக்யானம்** – திருவடி, "நிர்குண: பரமாத்மாஸௌ தேஹம் தே வ்யாப்ய திஷ்ட்டதி" என்கிறபடியே விரோதி வர்க்கத்தைக் கிழங்கெடுக்கையாலே ஏறிட்ட நாணி இறங்கிட்டு


Email:sridharan_book@yahoo.co.in

“பவாந் நாராயணோ தேவ:” என்கையாலே, பரமாத்ம சப்த வாச்யனாய்க் கொண்டு “விச்வாத்மாநம்” என்கிறபடியே விச்வத்துக்கும் ஆத்மபூதனாயிருக்கிற சக்ரவர்த்தி திருமகனைத் தன்னுள்ளே யுடையனாய், “ஸோத்ரைவ ஹந்த ஹநுமாந் பரமாம் விமுக்திம் புத்த்யாவதூய சரிதம் தவ ஸேவதேஸௌ” என்கிறபடியே சக்ரவர்த்தி திருமகனுடைய வீரசரிதத்தை போக்யமாகவுடையனாய், “ஸ்நேஹோ மே பரமோ ராஜம்ஸ்த்வயி நித்யம் ப்ரதிஷ்ட்டித: பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி” என்று குணத்தாலும் சரத்தாலும் அநுகூலரையும் ப்ரதிகூலரையும் ஜயிக்கும் வீரரான சக்ரவர்த்தி திருமகனளவிலே எப்போதும் ப்ரதிஷ்ட்டிதமாய், இதுக்கு மேலில்லை யென்னும்படி யிருக்கிற ஸ்நேஹத்தாலும் நியதையான பக்தியாலும் இவ்விஷயத்தை விட்டுப் பரத்வத்தில் தன்னெஞ்சு போகாமை சொல்லுகிறவிடத்தில் பரத்வத்தின் பேரும் சொல்லுகை அஸஹ்யமாய் “அந்யத்ர” என்னும்படி சக்ரவர்த்தி திருமகனையல்லதறியே னென்றிருந்தாப்போலே.

**விளக்கம்** – (வாளி பொழிந்த நிர்க்குண விச்வாத்மா உள்ளேயுறைய வீரசரிதம் ஊணாகக் கற்பார் பாவம் மற்றிலே னென்னும் ராமதாஸன்) மஹாபாரதம் வனபர்வம் (149-8) - நிர்குண: பரமாத்மாஸௌ தேஹம் தே வ்யாப்ய திஷ்ட்டதி – தாழ்ந்த குணங்கள் ஏதும் அற்றவனாகிய அந்தப் பரமாத்மா உனது சரீரம் முழுவதிலும் பரவி நிற்கிறான் - என்பதற்கு ஏற்ப பகைவர்களுடைய கூட்டத்தை அடியுடன் அழிப்பதால் ஏற்றிய நாணை இறக்கி, யுத்தகாண்டம் (130-13) - பவாந் நாராயணோ தேவ: - நீயே நாராயணன் ஆவாய் - என்று கூறுவதால், “பரமாத்மா” என்று கூறப்படும் பெயர் கொண்டவனாக, தைத்திரீயத்தில் – விச்வாத்மா - உலகின் ஆத்மாவாக உள்ளவன் - என்று கூறும்படி உலகத்திற்கே ஆத்மாவாக உள்ள சக்ரவர்த்தி திருமகனைத் தனது உள்ளத்துள்ளே எப்போதும் கொண்டவனும்; அதிமாநுஷஸ்தவம் (32) – ஸோத்ரைவ ஹந்த ஹநுமாந் பரமாம் விமுக்திம் புத்த்யாவதூய சரிதம் தவ ஸேவதேஸௌ - அந்த அனுமன் உயர்ந்த மோக்ஷத்தையும் தள்ளியவனாக உனது வீரம் நிறைந்த சரீரத்தை எப்போதும் கொண்டாடியபடி இங்கேயே உள்ளான் - என்பதற்கு ஏற்ப சக்ரவர்த்தி திருமகனுடைய வீரம் நிறைந்த சரீரத்தை மட்டுமே இன்பமாக எண்ணுபவனும்; உத்தரகாண்டம் (40-15) - ஸ்நேஹோ மே பரமோ ராஜம்ஸ்த்வயி நித்யம் ப்ரதிஷ்ட்டித: பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி - மிகவும் உயர்ந்த ப்ரீதி எனக்கு உன்னிடம் உள்ளது, அதே போன்று பக்தியும் உள்ளது, எனது மனம் இதனை விடுத்து வேறு எங்கும் செல்வதில்லை -

என்பதற்கு ஏற்ப சிறந்த குணம் மூலமும், அம்புகள் மூலமும் முறையே தனக்கு வேண்டியவர்களையும், விரோதிகளையும் வெல்லும் வீரனாகிய சக்ரவர்த்தி திருமகனிடம் எப்போதும் நிலைத்து நிற்பதாகவும், அதற்கு மேல் வேறு எதுவும் இல்லை என்பதற்கு ஏற்ப உள்ளதாகவும் இருக்கின்ற அன்பாலும், எப்போதும் உள்ள பக்தியாலும், அந்த இராமனை அல்லாமல் பரத்வத்தில் கூடத் தனது உள்ளம் போகாமல் உள்ளதைக் குறித்துக் கூறும்போது பரத்வம் என்ற சொல்லைக் கூறுவதையும் விரும்பாமல் “அந்யத்ர - மற்ற எதிலும்” என்று கூறுவதற்கு ஏற்ப, சக்ரவர்த்தி திருமகன் அல்லாமல் வேறு எதனையும் அறியாமல் உள்ளவனும் ஆகிய அனுமான் இவ்விதம் இருந்தது போன்று.

**வ்யாக்யானம்** - இவரும், “செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை உருக்கெட வாளி பொழிந்த வொருவன் திருக்கடித்தானமு மென்னுடைச் சிந்தையுமொருக்கடுத் துள்ளே யுறையும் பிரான் கண்டீர்” என்று மூல பலம் முதலறும்படி சரவர்ஷத்தை வர்ஷித்த ஏகவீரனான சக்ரவர்த்தி திருமகனைத் தம்முள்ளே யுடையராய், “கணை நாணி லோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே ஓவாத வூணாக வுண்” என்கிறபடியே அவனுடைய வீரசரிதத்தை போக்யமாக வுடையராய், “கற்பாரிராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ?” என்று ப்ரிய ஹிதங்களைப் பற்ற ஒன்றைக் கற்குமவர்கள் ரமணீயனுமாய் உபகாரகனுமான சக்ரவர்த்தி திருமகனையொழிய பரத்வாதிகளையும் அவதாராந்தரங்களையும் கற்பரோவென்று தமக்கு இவ்விஷயத்திலுண்டான ப்ராவண்யாதிசயத்தாலே, பரத்வாதிகளைக் கழிக்கிறவிடத்தில் அவற்றின் பேர் சொல்லுகையும் அஸஹ்யமாய் “மற்றும்” என்னும்படி “தயரதற்கு மகன் றன்னை யன்றி மற்றிலேன்” என்றிருக்கையாலே, “தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய” என்று ராமதாஸனா யிருக்கும் திருவடியுடையபடியும் இவர்பக்கலிலே காணலாம்.

**விளக்கம்** – நம்மாழ்வாரும், (வாளி பொழிந்த நிர்க்குண விச்வாத்மா உள்ளேயுறைய) - திருவாய்மொழி (8-6-2) – செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை உருக்கெட வாளி பொழிந்த வொருவன் திருக்கடித்தானமு மென்னுடைச் சிந்தையுமொருக்கடுத் துள்ளே யுறையும் பிரான் கண்டீர் - என்று மூலமாக உள்ள வலிமையானது அதன் முதலுடன் அழிந்து போகும்படியாக அன்பு மழையைப் பொழிந்த ஒரே வீரனாகிய சக்ரவர்த்தி திருமகனைத் தன் உள்ளத்தில் கொண்டவராகவும். (வீரசரிதம் ஊணாக) – பெரிய திருவந்தாதி (78) - கணை நாணி லோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே

ஓவாத வூணாக வுண் – என்பதற்கு ஏற்ப அவனுடைய வீர சரிதத்தையே தனக்கு இன்பமாகக் கொண்டவராகவும். (கற்பார் பாவம் மற்றிலேன் என்னும்) - திருவாய்மொழி (7-5-1) – கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ - என்பதற்கு ஏற்ப, "மகிழ்வுக்காகவும் நன்மைக்காகவும் ஒன்றைக் கற்கவேண்டும் என்றுள்ளவர்கள், மனதிற்கு இனிமையானவனும் உபகாரங்கள் செய்பவனும் ஆகிய சக்ரவர்த்தி திருமகனை விடுத்து, பரத்வம் போன்ற மற்ற அவதாரங்கள் குறித்துக் கற்பார்களோ", என்று தனக்கு இராமனின் மீது உண்டான அளவு கடந்த அன்பினால் பரத்வம் போன்றவற்றை நீக்கி உரைக்கும்போது, அவற்றின் பெயரை உரைக்கக் கூட விருப்பம் இன்றி "மற்றும்" என்று கூறும் அளவிற்குத் திருவாய்மொழி (3-6-8) - தயரதற்கு மகன் றன்னை யன்றி மற்றிலேன் – என்று உள்ளதன் காரணமாக, (ராமதாஸன் படியும் காணலாம்) - ஸுந்தரகாண்டம் (43-9) - தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய - நான் கோசலநாட்டின் சக்ரவர்த்தியாகிய இராமனின் அடிமை - என்று கூறுவதற்கு ஏற்ப இராமனின் அடிமையாக உள்ள அனுமனுடைய தன்மையையும் காணலாம்.

**வ்யாக்யானம்** – அர்ஜுனன், "பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந்" என்று விச்வரூபம் கண்டவநந்தரம், "அத்ருஷ்ட பூர்வம் ஹ்ருஷிதோஸ்மி த்ருஷ்ட்வா பயேநச ப்ரவ்யதிதம் மநோ மே, ததேவ மே தர்சய தேவ ரூபம் ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ; கிரீடிநம் கதிநம் சக்ர ஹஸ்தமிச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ, தேநைவ ரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ பல விச்வமூர்த்தே" என்று திவ்ய சக்ஷுஸ்ஸாலே இப்போது கண்ட விச்வரூபம் அத்ருஷ்ட பூர்வதையாலும் உக்ரதையாலும் ஹர்ஷ பயங்க ளிரண்டையும் விளைக்கையாலே ஸதத ஹர்ஷ ஹேதுவாய் பூர்வபரிசிதமுமான ஸௌம்ய ஸ்வரூபத்தைக் காணவாசைப்பட்டு சதுர்புஜமுமாய் சங்க சக்ர கதாதரமுமான திவ்ய விக்ரஹத்தைக் காட்ட வேணுமென்று தத் தர்சந தத் பரனா யபேக்ஷித்தாப்போலே,

**விளக்கம்** – (பலவகையும் கண்டு வெண்சங்கேந்தின ரூபபரனான ச்வேதன் படியும் காணலாம்) - அர்ஜுனன், கீதை (11-15) - பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந் – தேவாதிதேவனே! நான் உன்னுடைய திருமேனியில் அனைத்துவிதமான தேவர்களையும், அனைத்து உயிர்களையும், தாமரையில் உள்ள

நான்முகனையும், சிவனையும், அனைத்து ரிஷிகளையும், ஸர்ப்பங்களையும் பார்க்கிறேன் – என்று கூறுவதற்கு ஏற்ப விச்வரூபத்தைத் தரிசித்தான். அதன் பின்னர், கீதை (11-45) - அத்ருஷ்ட பூர்வம் ஹ்ருஷிதோஸ்மி த்ருஷ்ட்வா பயேநச ப்ரவ்யதிதம் மநோ மே, ததேவ மே தர்சய தேவ ரூபம் ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ - இதற்கு முன்பு நான் எப்போதும் கண்டிராத இந்த வியக்கவைக்கும் ரூபத்தைக் கண்டு மகிழ்ந்தபடி உள்ளேன். எனது மனம் அச்சத்தால் நடுங்கியபடி உள்ளது. எனவே நீ உனது முந்தைய ரூபத்தையே காண்பிப்பாயாக. அனைத்து தேவர்களுக்கும் உலகத்திற்கும் இருப்பிடமாக உள்ளவனே, எனக்கு க்ருபை செய்வாயாக - என்றும், கீதை (11-46) - கிரீடிநம் கதிநம் சக்ர ஹஸ்தமிச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ, தேநைவ ரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ பல விச்வமூர்த்தே – க்ரீடத்தைத் தரித்தவனாகவும், கதாயுதம் கொண்டவனாகவும், சக்ரத்தை ஏந்தியவனாகவும் உள்ள உன்னுடைய அந்த ரூபத்திலேயே நான் உன்னைத் தரிசிக்க விரும்புகிறேன். ஆயிரம் திருக்கரங்கள் கொண்டு விச்வரூபத்தில் உள்ள நீ, நான்கு திருக்கரங்கள் கொண்டவனாக தரிசனம் தருவாயாக - என்றும் கூறுவதற்கு ஏற்ப, திவ்யமான கண்கள் கொண்டவனாக தான் கண்ட விச்வரூபம் என்பது முன்பு எப்போதும் காணப்படாத ஒன்றாக உள்ளதாலும் உக்கிரமாக இருந்ததாலும், மகிழ்வையும் அச்சத்தையும் ஒருசேர உண்டாக்குவதாக இருந்ததாலும், எப்போதுமே மகிழ்வை மட்டுமே உண்டாக்கக் காரணமாக உள்ளதும், முன்பு காணப்பட்டதும் ஆகிய அழகான ரூபத்தை மீண்டும் காண ஆசை கொண்டான்; ஆகவே நான்கு திருத்தோள்களுடனும், சங்கு சக்கரம் கதை ஆகியவற்றைக் கொண்டவனாகவும் உள்ள திவ்ய திருமேனியைக் காண்பதில் ஈடுபட்டவனாக நின்று விரும்பியது போன்று.

**வ்யாக்யானம் -** இவரும், “நல்குரவும்” என்று தொடங்கி, “பலவகையும் பரந்த பெருமானை – திருவிண்ணகர்க்கண்டேனே” என்று விருத்த விபூதி யுத்தனாய்க் கொண்டு விபூதி முகத்தாலே பலபடியாக விஸ்த்ருதனா யிருக்கிறவனைக் கண்டு, “நீராய் நிலனாய்” என்று தொடங்கி, “சிவனாயயனானாய்” என்று கார்ய காரணங்க ளிரண்டையும் சரீரமாகக் கொண்டு நீ ஜகதாகாரனாயிருக்கிறவிருப்பை எனக்கு காட்டித் தந்தாயாகிலும், இத்தால் நான் பெற்றது உன்னதான வஸ்துக்களை என்னதென்றும் பிறரதென்றுமிருக்கும் விப்ரதிபத்தி போய், உன்னதே ஸகலமுமென்றிருக்கிற மாத்ரம்; இது எனக்கு ஆகர்ஷகமாய் அநுபாவ்யமா யிருக்கிறதில்லை. ஆனபின்பு, “கூராராழி வெண்சங்கேந்தி வாராய்” என்று சங்கசக்ரமான உன் அஸாதாரண விக்ரஹத்தோடே என் முன்னே

வரவேணுமென்று அஸாதாரண விக்ரஹாநுபவ தத் பரராய் அபேக்ஷிக்கையாலே, “சினப்போர்ச் சுவேதன்” என்று சொல்லப்பட்ட அர்ஜுனன்படியும் இவர் பக்கலிலே காணலாமென்கை.

**விளக்கம்** – (இவரும் பல்வகையும் கண்டு) - நம்மாழ்வாரும் திருவாய்மொழி (6-3-1) – பல்குரவும் - என்று தொடங்கி, திருவாய்மொழி (6-3-1) - பலவகையும் பரந்த பெருமானை திருவிண்ணகர்க்கண்டேனே - என்று ஒன்றுக்கொன்று, மாறுபட்ட பொருள்கள் நிறைந்த இந்த உலகத்தைத் தனது செல்வமாகக் கொண்டவனாய், தனது உடைமையாக உள்ள பொருள்கள் மூலம் இந்த உலகில் பலவிதமாக நிறைந்துள்ளவனாய் உள்ள அவனைக் கண்டு. (வெண்சங்கு ஏந்தின ரூப பரனான) - திருவாய்மொழி (6-9-1) – நீராய் நிலனாய் - என்று தொடங்கி, (6-9-1) – சிவனாய் அயன் ஆனாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, “கார்யம் மற்றும் காரணம் ஆகிய அனைத்தையும் உனது சரீரமாகவே கொண்டு, இந்த ஜகத்தின் காரணமாக நீ உள்ள இருப்பை எனக்குக் காண்பித்தாய். ஆனால் இத்தகைய நிலையால், நான் அடைந்ததான உனக்குச் சொந்தமான பொருள்களை என்னுடையது என்றும், மற்றவர்களுடையது என்றும் எண்ணுகின்ற மாறுபட்ட எண்ணங்கள் விலகி, அனைத்தும் உனக்கே சொந்தம் என்ற எண்ணம் மட்டுமே என்னால் அடையப்பட்டது. இத்தகைய நிலையானது எனக்கு ஈடுபடுத்துவதாகவும், அனுபவிக்கத்தக்கதாகவும் இல்லை. ஆகவே, திருவாய்மொழி (6-9-1) – கூரார் ஆழி வெண்சங்கு ஏந்தி வாராய் - என்பதற்கு ஏற்ப சங்கும் சக்கரமும் கூடியதான உனக்கு மட்டுமே உரிய திருமேனியுடன், என் முன்பாக நீ வரவேண்டும்”, என்று அவனுக்கு மட்டுமே உரிய திருமேனியுடன் அவனை அனுபவிக்க வேண்டும் என்று விண்ணப்பித்தார். (ச்வேதன்படியும் காணலாம்) - இதன் மூலம் நம்மாழ்வாருக்கு நான்முகன் திருவந்தாதி (24) – சினப்போர்ச் சுவேதன் - என்னும்படியான அர்ஜுனனின் தன்மையும் உள்ளதைக் காணலாம்.

**வ்யாக்யானம்** – ச்வேதனென்றது ச்வேதவாஹந னென்றபடி. முதலானாரென்றது “உபமாந மசேஷாணாம் ஸாதூநாம் யஸ் ஸதாபவத்” என்கிறபடியே எல்லார்க்கும் தம்முடைய ஓரோ வகைகளாலே உபமாந பூமியாயிருக்கு மவராகையாலே இன்னமும் ஜ்ஞாநிகளானவர்கள் பலர்படியும் இவர் பக்கலிலே காணலாமென்று தோற்றுகைக்காக; பிராட்டிமாரோடு ஸாம்யம் சொன்னபின்பு ஸ்ரீகோபிமார் முதலானரோடு ஸாம்யம்

சொன்னவோபாதியிறே, லக்ஷ்மணாதிகளோடே ஸாம்யம் சொன்ன பின்பு தசரதாதிகளோடே இவர்க்குண்டான ஸாம்யம் சொன்னவிதுவும்.

**விளக்கம்** – "ச்வேதன்" என்றால் ச்வேதவாஹனன் அல்லது அர்ஜுனன். "முதலானோர்" என்பதன் மூலம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-55-156) - உபமாந மசேஷாணாம் ஸாதூநாம் யஸ் ஸதாபவத் - உயர்ந்த ஸாதுக்கள் அனைவருக்கும் எப்போதும் உபமானம் கூறலாம்படி எந்த ப்ரஹ்லாதன் இருந்தானோ - என்பதற்கு ஏற்ப, அனைவருக்கும் தங்களுடைய ஒவ்வொரு தனித்தன்மை காரணமாக உபமானத்தின் இருப்பிடமாக நம்மாழ்வார் உள்ளதால், மேலும் பல ஞானிகளுடைய தன்மைகளையும் நம்மாழ்வாரிடம் காணலாம் என்பது உணர்த்தப்பட்டது. இந்தச் சூத்திரத்தில், பிராட்டிமார்களுடன் நம்மாழ்வாருக்கு உள்ள ஒப்புமை கூறியதைத் தொடர்ந்து, கோபிகைகளுக்கும் இவருக்கும் உள்ள ஒப்புமை கூறப்பட்டது; அது போன்று லக்ஷ்மணன் போன்றவர்களுடன் ஒப்புமை கூறியதைத் தொடர்ந்து தசரதன் போன்றவர்களுடன் ஒப்புமை கூறப்பட்டது.

128. குழலில் நெஞ்சம் அருகலில் சுவையுமானவிவர் அவர்களளவல்லர்.

**அவதாரிகை** – ஆக, இப்படி நித்யஸூரிகளில் தலைவராய், தொடர்ந்தடிமை செய்யப் பிறந்த லக்ஷ்மணாதிகளோடும், நித்ய ஸம்ஸாரிகளிலே அந்ய தமராய் வைத்து பகவத் ப்ரத்யாஸந்நராகப் பெற்ற தசரதாதிகளோடும் இவர்க்குண்டான ஸாம்யத்தையருளிச் செய்தார் கீழ். அவர்களனைவரிலும் இவர்க்குள்ள வேற்றத்தை அருளிச்செய்கிறார் மேல் "குழலில் நெஞ்சு மருகலில் சுவையுமான இவர் அவர்களளவல்லர்" என்று.

**விளக்கம்** – இப்படியாக நித்யஸூரிகளுக்குத் தலைவராகவும், தொடர்ந்து கைங்கர்யம் செய்வதற்காக இங்கு வந்து பிறந்த லக்ஷ்மணன் முதலானவர்களோடும்; நித்யஸம்ஸாரிகளைக் காட்டிலும் வேறுபட்டவராக இந்த ஸம்ஸார உலகில் அவதரித்து பகவத் பக்தியுடன் விளங்கிய தசரதன் முதலானவர்களோடும் நம்மாழ்வாருக்கு உள்ள ஒப்புமையை அருளிச்செய்தார். அவர்களைக் காட்டிலும் இவருக்கு உள்ள ஏற்றத்தை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, “குழற்கோவலர்” என்கிற பாட்டில் சொல்லுகிறபடியே பிராட்டிமாரும் நித்யஸூரிகளு மவனுமான திரளிலே பற்றின நெஞ்சையுடையராய், “அருகலிலாய” என்கிற பாட்டிற் சொல்லுகிறபடியே பிராட்டிமாரோடும் திருவடி திருவநந்தாழ்வான் முதலான நித்யஸூரிகளோடும் ஓரோவகையாலே பரிமாறுமவன், அவர்களோடே பரிமாறுமாபோலே ஒருவழியாய் வந்த ரஸத்தைத் தந்து விடுகிறிலன் என்னளவில்; அவர்களெல்லார் பக்கலிலும் பண்ணுமாதரத்தை என் பக்கலிலே பண்ணாநின்றா னென்னும்படி எல்லா வழிகளாலுமுள்ள ஸம்ச்லேஷ ரஸத்தை அவன் தமக்கு விளைக்கையாலே போக ரஸமும் விஞ்சப் பெற்றவரான விவர், ஓரோ அவதார மாத்ரத்திலும் கேவலம் அவன்றன்னளவிலும் பற்றின நெஞ்சையுடையராய் பகவத் ப்ராவண்யம் காதாசித்கமாய் விஷயாந்தர ப்ராவண்யமும் கலசியிருப்பாரும்; இதர விஷய வைராக்ய பூர்வகமாக எப்போதும் நடந்து செல்லும் பகவத் ப்ராவண்யமுண்டாயும், ததீயரும் அவனுமான சேர்த்தியில் ரஸமறியாதாருமான தசரதாதிகளும் பரத்வாவதார விபாகமற அவகாஹித்த நெஞ்சையுடையராயும் ஒருவழியால் வந்த ரஸத்தைப் பெற்றிருக்கும் லக்ஷ்மணாதிகளுமான அவர்களில் அத்யந்த வ்யாவ்ருத்தரென்கை. ஆக, லக்ஷ்மணாதிகள் தசரதாதிகளோடும் இவர்க்குள்ள ஸாம்யத்தை தர்சிப்பித்தாப்போலே அவர்களில் இவர்க்குண்டான ஆதிக்யத்தையும் தர்சிப்பித்தாராயிற்று.

**விளக்கம்** – (குழலில் நெஞ்சும்) – திருவிருத்தம் (3) – குழற்கோலவர் - என்ற பாசுரத்தில் கூறியதற்கு ஏற்ப பிராட்டிமார்கள், நித்யஸூரிகள் மற்றும் ஸர்வேச்வரன் என்றுள்ள இந்தப் பெருக்கூட்டத்தில் தனது மனதை வைத்தவராக. (அருகலில் சுவையுமான இவர்) – திருவாய்மொழி (1-9-3) – அருகலிலாய - என்பதில் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய அவன், பிராட்டிமார் அனுமன் ஆதிசேஷன் போன்ற நித்யஸூரிகளுடன் ஒவ்வொரு விதமாகக் கலந்து பழகுகிறான். இது போன்று எனக்கு ஏதோ ஒரு ரஸத்தை மட்டும் அளிப்பதில்லை; அவர்கள் ஒவ்வொரிடமும் காண்பிக்கும் தனித்தனி ஈடுபாட்டினை முழுவதுமாக எனக்கு மட்டுமே அளிக்கிறான் என்று கூறலாம்படி, அனைத்து விதங்களிலும் சேர்க்கை இன்பத்தை அவன் நம்மாழ்வாராகிய தனக்கு உண்டாக்குவதால் இன்பச் சுவையும் நிறம்பப் பெற்றவர் ஆகிறார். இப்படிப்பட்ட இவர் (அவர்கள் அளவு அல்லர்) - அவனுடைய ஒவ்வொரு அவதாரத்தில் மட்டுமே அவனிடம் தங்களுடைய நெஞ்சத்தைப் பறி கொடுத்து நின்றவர்கள்; பகவத் பக்தி என்பது ஒரு காலகட்டத்தில் மட்டுமே உள்ளதாய் மற்ற விஷயங்களின் மீது விருப்பமும் கொண்டவர்கள்; மற்ற

விஷயங்கள் மீது ஏற்பட்ட வெறுப்பு என்பதை முன்னிட்டவர்களாய் பகவத் பக்தி ஏற்பட்டாலும் அவன் மற்றும் அவனுடைய அடியார்கள் என்ற சேர்க்கையில் உள்ள சுவையை அறியாத தசரதன் முதலானவர்கள்; பரத்வம் மற்றும் அவதாரம் என்றுள்ள வேறுபாடு காணாமல் இரண்டிலும் ஒரே போன்று ஈடுபாடுள்ள உள்ளத்தைக் கொண்டவர்களாக, ஒரு வழியால் வந்த இன்பத்தை அடைந்த லக்ஷ்மணன் போன்றவர்கள் – இவர்களைக் காட்டிலும் மிகமிக வேறுபட்டவர் ஆவார். ஆக லக்ஷ்மணன் முதலானவர்களுடன், தசரதன் முதலானவர்களுடன் நம்மாழ்வாருக்கு உள்ள ஒப்புமையைக் கூறியது போன்று, அவர்களைக் காட்டிலும் இவருக்கு உள்ள மேன்மையையும் காண்பித்தார்.

129. எற்றைக்கு மென்றது தோன்றப் பிறந்து ஒப்பித்து வீசிக் காப்பிட்டுக் காட்டுக்கு முற்பட்டு தர்மம் சொல்லிக்கேட்டு சிஷ்யாதாஸீ பக்தைகளாய் பாடி வருடி இன்று வந்தென்பாரையும், சென்றாலூரும் நிவாஸதாஸ பேதம் கொள்வாரையும், தாமவராக பாவிப்பர்.

**அவதாரிகை** - இப்படிப்பட்ட நெஞ்சயும் சுவையையுமுடைய இவர் தம்முடைய அபிநிவேசத்தாலே அவன் பிறவிக்கு அநுகுணாமாகப் பிறந்து அநேகாநுவ்ருத்திகளைப் பண்ணும் பிராட்டிமாரையும், அசேஷசேஷதைகரதிகராய் அநேகதாபவித்து அநேகவித கைங்கர்யங்களைப் பண்ணும் அநந்த வைநதேயாதிகளையும் அவர்கள் தானென்னலாம்படி பாவிப்பரென்கிறார் “எற்றைக்குமென்று” தொடங்கி.

**விளக்கம்** – இப்படிப்பட்ட நெஞ்சத்தையும் சுவையையும் கொண்ட நம்மாழ்வார் தம்முடைய அளவு கடந்த ப்ரேமை காரணமாக, அவனுடைய அவதாரங்களுக்கு ஏற்றபடியாகப் பிறந்து அவனுக்குப் பலவிதமான தொண்டுகள் செய்யும் பிராட்டிமார்; செய்யவேண்டியதான கைங்கர்யங்களில் எந்தவிதமான குறையும் இன்றி, அவற்றில் மிகுந்த ஈடுபாட்டுடன், அந்தந்த இடஙளுக்கு ஏற்றபடி பல ரூபங்கள் எடுத்து, அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி உள்ள ஆதிசேஷன், கருடன் போன்ற நித்யஸூரிகள் – முதலானவர்கள் நம்மாழ்வாராகிய தாமே என்று கூறலாம்படியாக எண்ணிக்கொள்வார் என்பதை அருளிச்செய்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்ரீபூமிப்பிராட்டியவதாரமான ஆண்டாள் ப்ரார்த்தனை மூவர்க்கு மொக்குமாகையாலே "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடுற்றோமே யாவோ முனக்கே நாமாட்செய்வோம்" என்று அநேக ஜந்மங்கள் பிறந்து உன்னோடே சேஷ சேஷி பாவமாகிற உறவையுமுடையோமாய், உனக்கே உகப்பான அடிமைகளை நாங்கள் செய்யவேணுமென் றபேக்ஷித்தமை தோன்ற, "தேவத்வே தேவ தேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷி, விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ்தநூம்" என்கிறபடியே ஈச்வரன் லோக ரக்ஷணார்த்தமாக தேவ மநுஷ்யாதி ஸஜாதீயனா யவதரிக்குமளவில், அவன் கொண்ட வடிவுக்கு அநுரூபமான வடிவு கொண்டு தோற்றுமவளாகையாலே, "ராகவத்வே பவத் ஸீதா" என்கிறபடியே அவன் சக்ரவர்த்தி திருமகனா யவதரித்தபோது தானும் ஸ்ரீஜநகராஜன் திருமகளாயவதரித்து.

**விளக்கம்** – (எற்றைக்கும் என்றது தோன்ற) – ஸ்ரீபூமிப்பிராட்டியின் அவதாரமான ஆண்டாளுடைய ப்ரார்த்தனை என்பது மூன்று பிராட்டிமார்களுடைய ப்ரார்த்தனை போன்றே உள்ளது என்பதால், திருப்பாவை (29) - எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம் உனக்கே நாமாட்செய்வோம் – என்பதற்கு ஏற்ப பலவிதமான பிறவிகள் எடுத்தாலும் உன்னுடன் "அடிமை – எஜமானன்" என்ற உறவுமுறையுடன் கூடியவர்களாகவும், உனக்கு மட்டுமே நீ விரும்பும் கைங்கர்யங்களை நாங்கள் செய்யவேண்டும் என்ற ஆசை கொண்ட நிலை வெளிப்படும்படியாக. (பிறந்து) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-145) - தேவத்வே தேவ தேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷி, விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ்தநூம் – அவன் தேவனாக அவதரித்தால் பிராட்டியும் தேவ சரீரம் எடுத்தும், மனிதனாக அவதரித்தால் இவள் மனித சரீரம் எடுத்தும், விஷ்ணுவின் அந்தந்த ரூபத்திற்கு ஏற்றபடியாகத் தானும் தனது சரீரத்தை பிராட்டி எடுத்துக்கொள்கிறாள் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் இந்த லோகத்தைக் காப்பாற்றும்விதமாக தேவன், மனிதன் போன்ற பிறவிகளில் அந்தந்த பிறவி கொண்டவனாக அவதரிக்கும்போது, அவன் எடுத்துக்கொண்ட ரூபத்திற்கு எற்றபடியான ரூபம் கொண்டு அவதரிப்பவள் என்பதால், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-144) - ராகவத்வே பவத் ஸீதா - அவன் இராகவனாக அவதரித்தபோது இவள் சீதையாக அவதரித்தாள் - என்பதற்கு ஏற்ப அவன் சக்ரவர்த்தி திருகமனாய் அவதரித்தபோது தானும் ஸ்ரீஜனகராஜனின் திருமகளாக அவதரித்து.

**வ்யாக்யானம்** – “வராஹ ருதிராபேண சுசிநாச ஸுகந்திநா, அநுலிப்தம் பரார்த்யேந சந்தநேத பரந்தபம்” என்கிறபடியே திருவபிஷேகார்த்தமாக அலங்கரித்து, “ஸ்திதயா பார்ச்வதச்சாபி வாலவ்யஜந ஹஸ்தயா, உபேதம் ஸீதயா பூயச் சித்ரயா சசிநம் யதா” என்கிறபடியே அப்போதருகே ஸேவித்து நின்று திருவெண்சாமரம் பணிமாறி, அநந்தரம் சக்ரவர்த்தி மாளிகைக் கெழுந்தருளுகிறபோது, “பதி ஸம்மாநிதா ஸீதா பர்த்தாரம் அஸிதேக்ஷணா, ஆத்வாரமநு வவ்ராஜ மங்களாந்யபி தத்யுஷீ; பூர்வாம் திசம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம:, வருண: பச்சிமா மாசாம் தநேசஸ்தூத்தராம் திசம்” என்கிறபடியே பெருமாள் வடிவழகைக் கண்டு இது நமக்குத் தொங்கப் புகுகிறதோ வென்னும் வயிறுபிடியாலே அந்த:புர த்வாரத்தளவும் பின் சென்று மங்களாசாஸநம் பண்ணி, ததநந்தரம் காட்டுக்கெழுந்தருளுகிறதோது “அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குச கண்டகாந்” என்று தான் முற்பட்டு,

**விளக்கம்** – (ஒப்பித்து) – அயோத்யாகாண்டம் (16-9) - வராஹ ருதிராபேண சுசிநா ச ஸுகந்திநா, அநுலிப்தம் பரார்த்யேந சந்தநேத பரந்தபம் – சிவந்த மேகம் போன்றதும், பிராட்டியின் ஸம்பந்தம் காரணமாகத் தூய்மையாக உள்ளதும், நறுமணம் நிறைந்ததும் ஆகிய சந்தனத்தைச் சீதையால் பூசப்பட்டவனும், பகைவர்களை நடுங்கச் செய்பவனும் ஆகிய இராமன் – என்பதற்கு ஏற்ப உள்ள இராமனைப் பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்காக அலங்காரம் செய்து. (வீசி) – அயோத்யாகாண்டம் (16-10) - ஸ்திதயா பார்ச்வத: ச அபி வாலவ்யஜந ஹஸ்தயா, உபேதம் ஸீதயா பூயச் சித்ரயா சசிநம் யதா - அருகில் நிற்பவளும், சாமரத்தைத் திருக்கரத்தில் கொண்டவளும் ஆகிய சீதையுடன் சித்திரை நக்ஷத்திரத்துடன் கூடிய சந்த்ரன் போன்றுள்ள – என்பதற்கு ஏற்ப இராமனுக்கு அருகே அமர்ந்து வணங்கியபடி வெண்மையான சாமரம் வீசி. (காப்பிட்டு) – அதனைத் தொடர்ந்து இராமன் தசரதனுடைய அரண்மனைக்கு எழுந்தருளும்போது, அயோத்யாகாண்டம் (16-21) – பதி ஸம்மாநிதா ஸீதா பர்த்தாரம் அஸிதேக்ஷணா, ஆத்வாரம் அநுவவ்ராஜ மங்களாந்யபி தத்யுஷீ – தனது கணவனாகிய இராமனால் (நீ உன் தோழிகளுடன் ஆனந்தமாக இரு, நான் தசரதனைப் பார்த்துவருகிறேன்) நற்செய்தி உரைத்துக் கௌரவிக்கப்பட்டவளும் கருமையான கண்கள் கொண்டவளும் ஆகிய சீதை மங்களமான சொற்களைக் கூறியபடி வாசல்வரை வந்து இராமனை வழி அனுப்பினாள் - என்றும், அயோத்யாகாண்டம் (16-24) - பூர்வாம் திசம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம: வருண: பச்சிமாம் ஆசாம் தநேசஸ: உத்தராம் திசம் – கிழக்கில் இந்திரனும், தெற்கில்

யமனும், மேற்கில் வருணனும், வடக்கில் குபேரனும் உம்மைக் காப்பாற்றட்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப இராமனுடைய வடிவழகைக் கண்ட சீதை, "இந்த நிலை நமக்கு நிலையாக இருக்குமோ" என்ற கவலை காரணமாக அவன் அந்தப்புரத்தை விட்டு வெளியே செல்லும்வரை பின் தொடர்ந்து சென்று புகழ்ந்து. (காட்டுக்கு முற்பட்டு) – பின்னர் இராமன் கானகம் செல்ல முனையும்போது, அயோத்யாகாண்டம் (27-6) - அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குச கண்டகாந் – உனக்கு முன்பாக நான் பாதையில் உள்ள புற்களையும் முட்களையும் அழித்தபடி செல்வேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, தான் முன்பாகச் செல்வதாக முனைந்து.

**வ்யாக்யானம்** - ஸ்ரீதண்டகாரண்யத்தி லெழுந்தருளி யிருக்கிறபோது அவராயுதங்களை தரித்துக் கொண்டு நிற்கிற நிலையைக் கண்டு "ந ஹி மே ரோசதே வீர கமநம் தண்டகாந் ப்ரதி, காரணம் தத்ர வக்ஷ்யாமி வதந்த்யாச் ச்ரூயதாம் மம; த்வம் ஹி பாணதநுஷ்பாணி: ப்ராத்ரா ஸஹ வநம் கத:, த்ருஷ்ட்வா வநசராந் ஸர்வாத் கச்சித் குர்யாச் சரவ்யயம்; க்ஷத்ரியாணாஞ்ச ஹி தநுர்ஹுதா சஸ்யேந்தநாநிச, ஸமீபதஸ் ஸ்திதம் தோஜோ பல முச்ச்ரயதே ப்ருசம்" என்று இவர் ஸாயுதராய் நிற்கில் ஆரேனையும் மேல் விழுந்து ப்ரமாதம் விளையக் கூடுமென்று பயப்பட்டு, "தர்மாதர்த்த: ப்ரபவதே தர்மாத் ப்ரபவதே ஸுகம்" இத்யாதியாலே ஸர்வத்துக்கும் தர்மமே மூலமென்னுமிடத்தை ஸ்மரிப்பித்து, ஆனபின்பு ஆயுதத்தை வைத்து தாபஸ வேஷத்தோடே தர்மத்தை அநுஷ்டிக்க வமையுமென்று தர்மோபதேசத்தையும் பண்ணின பெரியபிராட்டியாரையும்,

**விளக்கம்** – (தர்மம் சொல்லி) - ஸ்ரீதண்டகாரண்ய வனத்தில் இராமன் எழுந்தருளியிருந்தபோது, அவன் ஆயுதங்களுடன் நின்று நிலையைக் கண்டு, ஆரண்யகாண்டம் (9-13) – ந ஹி மே ரோசதே வீர கமநம் தண்டகாந் ப்ரதி, காரணம் தத்ர வக்ஷ்யாமி வதந்த்யா: ச்ரூயதாம் மம – வீரரே! தண்டகாரண்யத்தை நோக்கி நாம் செல்வதில் எனக்கு உடன்பாடில்லை. அதற்கான காரணத்தைக் கூறுகிறேன், கேட்பீராக - என்றும், ஆரண்யகாண்டம் (9-14) - த்வம் ஹி பாணதநுஷ்பாணி ப்ராத்ரா ஸஹ வநம் கத:, த்ருஷ்ட்வா வநசராந் ஸர்வாந் கச்சித் குர்யாச் சரவ்யயம் – அம்பையும் வில்லையும் கையில் ஏந்தியபடி, தம்பியுடன் கானகம் வந்துள்ளீர்கள்; காட்டில் யாரைக் கண்டாலும் நீவிர் அந்த பாணங்களைத் தொடுப்பீர் - என்றும், ஆரண்யகாண்டம் (9-15) - க்ஷத்ரியாணாம் ச ஹி தநு: ஹுதாசஸ்ய இந்தநாநி ச, ஸமீபத: ஸ்திதம் தோஜோ பலம்

உச்ச்ரயதே ப்ருசம் – காரணம், நெருப்பின் அருகில் உள்ள விறகும், க்ஷத்ரியர் கையில் உள்ள வில்லும் ஆற்றலையும் வேகத்தையும் அதிகரிக்கும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, “இவர் ஆயுதமும் கையுமாக நிற்கும்போது யாருடனாவது யுத்தம் செய்ய வாய்ப்புண்டு”, என்று அச்சம் கொண்டு, ஆரண்யகாண்டம் (9-30) - தர்மாதர்த்த: ப்ரபவதே தர்மாத் ப்ரபவதே ஸுகம் - தர்மத்தால் பொருளும் இன்பமும் ஏற்படுகிறது - என்பது போன்ற வாக்கியங்களால் “அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது தர்மமே ஆகும்”, என்று நினைவூட்டி, தொடர்ந்து, “ஆகவே ஆயுதத்தை வைத்து, தவ வேஷத்திற்கு ஏற்ப தர்மத்தைக் கடைப்பிடிப்பதே நல்லது” என்று தர்ம உபதேசம் செய்த பெரியபிராட்டியாரையும்.

**வ்யாக்யானம் –** “அஹம் சிஷ்யாச தாஸீச பக்தாச த்வயி மாதவ, மத்க்ருதே ஸர்வபூதாநாம் லகூபாயம் வத ப்ரபோ” என்று ஸ்ரீவராஹநாயனார் பக்கலிலே பரமதர்மம் கேட்டு தந்மூலமாக சிஷ்யையும் தாஸியும் பக்தையுமாய், “உன்றன்னைப் பாடி” என்கிறபடியே கவிபாடி, “திருமகளும் புவியும் செம்பொற் றிருவடியினிணை வருட” என்கிறபடியே பெரியபிராட்டியாரோபாதி அவன் திருவடிகளைப் பிடித்து, “இன்று வந்தித்தனையு மமுது செய்திடப் பெறில் நானொன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வன்” என்று தன்னைக் கைங்கர்யங் கொண்டால் அதுக்கு ப்ரத்யுபகாரமும் பண்ணுவனென்ற ஸ்ரீபூமிப்பிராட்டியாரையும்.

**விளக்கம்** – (கேட்டு சிஷ்யா தாஸீ பக்தைகளாய்) - கைசிகபுராணம் – அஹம் சிஷ்யாச தாஸீச பக்தாச த்வயி மாதவ, மத்க்ருதே ஸர்வபூதாநாம் லகூபாயம் வத ப்ரபோ - ப்ரபுவே! மாதவா! நான் உன்னிடம் சிஷ்யையாகவும் தாஸியாகவும் பக்தையாகவும் உள்ளேன். என் பொருட்டு அனைத்து உயிர்களும் கரை ஏறுவதற்கான உபாயத்தை அருளிச்செய்வீராக – என்பதற்கு ஏற்ப வராஹப்பெருமாளிடம் மிகவும் உயர்ந்த தர்மம் குறித்துக் கேட்டறிந்து, அதன் காரணமாக சிஷ்யையும் தாஸியும் பக்தையுமாக நின்று, (பாடி) - திருப்பாவை (27) – உன் தன்னைப் பாடி - என்பதற்கு ஏற்ப அவனைக் கவி பாடி. (வருடி) - பெரியதிருமொழி (7-8-1) - திருமகளும் புவியும் செம்பொன் திருவடியின் இணை வருட – என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியாரைப் போன்றே அவன் திருவடிகளைப் பிடித்து. (இன்று வந்து) – நாச்சியார் திருமொழி (9-7) - இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில் நான் ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வன் – என்பதற்கு ஏற்ப, தன்னை

அடிமையாகக் கொண்டால் அதற்கான ப்ரதியுபகாரங்களைச் செய்வேன் என்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியாரையும்.

**வ்யாக்யானம்** – "சென்றால் குடையாம்" என்கிற பாட்டிலும், "நிவாஸ சய்யா" இத்யாதி ச்லோகத்திலும் சொல்லுகிறபடியே பகவத் விநியோகாநு குணமாக சத்ர ஸிம்ஹாஸந பாதுகாம் சுகாதி சரீர பேதம் கொண்டு ஸகலவித கைங்கர்யங்களையும் செய்யும் திருவநந்தாழ்வானையும்; "ஊரும் புட்கொடியும் அஃதே" என்கிற சந்தையிலும், "தாஸஸ் ஸகா" இத்யாதி ச்லோகத்திலும் சொல்லுகிறபடியே வாஹந த்வஜ விதாந வ்யாஜநாதி தேஹ பேதங்களைக் கொண்டு ஸகலவித கைங்கர்யங்களையும் செய்யும் பெரியதிருவடியும் போலே, இவரும் "பிறந்திட்டாள்" என்கிறபடியே பிறந்து, பிராட்டிமார் தசையிலே நின்று பேசும்படியான பல பாவ வ்ருத்திகளையும், "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம்" என்று ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும், உசிதமான ஸகல சேஷவ்ருத்திகளையும், பண்ணவேணுமென்னு மபிநிவேசாதிசயத்தையு முடையராகையாலே, பிராட்டிமாரையும் அநந்தாதிகளான ஸூரிகளையும், அவர்களுக்கும் தமக்குமொரு விசேஷமற அவர்கள் தாமாகவே பாவிப்ப ரென்றபடி.

**விளக்கம்** – (சென்றால் நிவாஸ பேதம் கொள்வாரையும்) - முதல் திருவந்தாதி (53) – சென்றால் குடையாம் - என்ற பாசுரத்தில் உள்ளபடியும், ஸ்தோத்ரரத்னம் (40) - நிவாஸ ஸய்யா - இருப்பிடம் சயனிக்கும் மெத்தை - என்பது போன்ற ச்லோகங்களில் உள்ளபடியும் பகவானுடைய கைங்கர்யத்திற்கு ஏற்றபடி குடை, ஸிம்ஹாஸனம், பாதுகை, திருப்பரிவட்டம் போன்ற பலவிதமான சரீரங்களை எடுத்துக்கொண்டு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி உள்ள ஆதிசேஷனையும். (ஊரும் தாஸ பேதம் கொள்வாரையும்) - திருவாய்மொழி (10-2-3) - ஊரும் புட்கொடியும் அஃதே – என்ற பாசுரத்திலும், ஸ்தோத்ரரத்னம் (41) – தாஸஸ் ஸகா - உனக்கு அடிமையாகவும் நண்பனாகவும் - என்ற ச்லோகத்திலும் கூறுவதற்கு ஏற்ப வாகனம், கொடி, விதானம், விசிறி போன்ற பலவிதமான சரீரங்களை எடுத்துக் கொண்டு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி உள்ள கருடனையும். (தாம் அவராகப் பாவிப்பர்) – திருவாய்மொழி (6-5-10) – பிறந்திட்டாள் – என்பதற்கு ஏற்ப பிறந்து, பிராட்டிமார்களின் நிலைகளில் நின்று பேசும்படியான பலவிதமான சிறப்பான தன்மைகளையும்;

திருவாய்மொழி (3-3-1) – ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டு நாம் - என்று அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும், அவனுக்கு ஏற்ற அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி இருக்கவேண்டும் என்பதான அளவு கடந்த ப்ரேமையும் கொண்டுள்ளதால் பிராட்டிமாரையும், ஆதிசேஷன் முதலான நித்யஸூரிகளையும், அவர்களுக்கும் தனக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்று கொண்டாடி, அவர்களை தானாகவே எண்ணிக் கொள்வார்.

130. எழுவதோருரு அழிக்க, செய்கிற வழுவிலாவடிமைக்குப் பாஞ்சாலி படுத்துமதும் கௌஸல்யாநுவ்ருத்தியு மொப்பாக்குகை பரிசு.

**அவதாரிகை** - இப்படி யிவர்க்கிவ்வவஸ்தை விளையும்படி ஈச்வர விக்ரஹ வைலக்ஷண்யம் இவர் பும்ஸ்த்வத்தையழித்து ஸ்த்ரீத்வ பாவனையை ஜநிப்பித்ததுக்கும், இத்திருமேனியோடே யிவர்கிவ்விஷயத்தில் அநேகவிதாநுவ்ருத்திக ளுண்டானதுக்கும், த்ரௌபதி கௌஸல்யைகள் படிகளை த்ருஷ்டாந்தமாகச் சொல்லலாமோ வென்னு மாகாங்க்ஷையிலே இதுக்கவற்றை த்ருஷ்டாந்தமாக்குகை ஸ்தூலமென்னுமிடத்தை தர்சிப்பிக்கிறர் (எழுவதோருருவென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாக இவருக்கு இந்த நிலை ஏற்படும்படியாக, ஸர்வேச்வரனுடைய திவ்யமங்கள திருமேனியின் மேன்மையானது, இவருடைய ஆண்மகன் என்ற நிலையை மாற்றி, நாயகி போன்று இவர் மாறியதற்கும், இந்தத் திருமேனி கொண்ட ஸர்வேச்வரன் விஷயத்தில் பலவிதமான கைங்கர்யங்களை இவர் செய்தபடி உள்ளதற்கும், த்ரௌபதி மற்றும் கௌஸலை போன்றவர்களுடைய தன்மைகளையும் உதாரணமாகக் கூறலாமோ என்னும் ஆசை எழுந்தது. இதனால் அவற்றை இங்கு உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு” என்று தேஜோராசி மத்யே உந்நேயமாம்படி யிருப்பதாய், “பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்” என்கிறபடியே வயிரவுருக்காய் ஆண்களையும் பெண்ணுடை யுடுத்துமதான வவனுடைய அப்ராக்ருத விக்ரஹம் இவருடைய பும்ஸ்த்வத்தை யழித்து ஸ்த்ரீத்வ பாவனையை

விளைத்ததுக்கும்; நிருபாதிக சேஷியான அவன் விஷயத்தில் நிரதிசய ப்ரேமத்தாலே "வழுவிலாவடிமை செய்ய" என்கிறபடியே தம்முடைய பாவவிசேஷங்களால் இவர் செய்கிற நாநாவிதாநுவ்ருத்திகளுக்கும் - "பாஞ்சால்யா: பத்மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா ஜகநம் கநம், யாஸ்ஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மநஸாயயு:" என்கிறபடியே ப்ராக்ருதமாய் மாம்ஸாஸ்ருகாதிமயமான தேஹத்தையுடைய த்ரௌபதி, ஸ்வதேஹ ஸௌந்தர்யத்தாலே ஸஜாதீயரை ஸ்த்ரீத்வத்தை யழித்து பும்பாவத்தை யடைவித்ததையும்; "யதாயதா ஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவச பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச்சோபதிஷ்டதி" என்கிறபடியே கௌஸலையார், ஔபாதிக பர்த்ரு விஷயத்தில் அவஸ்தாநுகுணமாகப் பண்ணின பாவவிசேஷ ப்ரயுக்த கதிபயாநுவ்ருத்தியையும் த்ருஷ்டாந்தமாக்குகை ஸுஸத்ருசமல்லாமையாலே ஸ்தூலமென்றபடி. இத்தாலொரு புடை ஒப்புச் சொல்லுவோமென்றாலும், இதுக்கது பற்றாதென்றதாயிற்று.

**விளக்கம்** – (எழுவது ஒரு உரு அழிக்க) – திருவாய்மொழி (5-5-10) – சோதி வெள்ளத்தின் உள்ளே எழுவதோர் உரு - என்பதற்கு ஏற்ப தேஜஸ் குவியலின் நடுவில் ஆராய்ந்து அறியும்படியாக உள்ளதாகவும், அயோத்யாகாண்டம் (3-28) – பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் – ஆண்களுடைய பார்வையையும் கவர்ந்து இழுக்கும் இராமன் – என்று கூறுவதற்கு ஏற்ப உறுதியான ஆண்களைக் கூட பெண்கள் போன்று மயங்கி நிற்கச் செய்வதாகவும் உள்ள அவனுடைய திவ்யமான திருமேனியானது, நம்மாழ்வாருடைய ஆண்மகன் என்ற தன்மையை மாற்றி, அவரை நாயகியாக நிற்கும்படிச் செய்ததை … (பாஞ்சாலி படுத்துமது ஒப்பாக்குகை பரிசு) - மஹாபாரதம் – பாஞ்சால்யா: பத்மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா ஜகநம் கநம், யாஸ்ஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மநஸாயயு: - தாமரை இதழ்கள் போன்ற கண்கள் கொண்ட த்ரௌபதியுடைய சரீரத்தைக் கண்ட பெண்கள், ஆண்களுடைய தன்மையை தங்களுடைய மனதளவில் அடைந்தனர் - என்பதற்கு ஏற்ப இந்த உலகத்துடன் தொடர்பு கொண்டதாகவும், சதை மற்றும் இரத்தம் ஆகியவற்றால் உண்டானதும் ஆகிய சரீரம் கொண்ட த்ரௌபதி தனது சரீரத்தின் அழகு மூலம், தன் போன்ற பெண்களைக்கூட மயக்கி, அவர்களுடைய பெண் என்ற சிந்தனையை மாற்றி, அவர்கள் தங்களை ஆண்மகன் என்று கற்பனை செய்யும்படிச் செய்ததுடன் ஒப்பு நோக்கினால், இதற்கு அது பொருந்தாது.


**Email:**sridharan_book@yahoo.co.in

(செய்கிற வழுவிலா அடிமை) - எந்தவிதமான காரணமும் இன்றி இயல்பாகவே எஜமானனாகிய அவன் விஷயத்தில், எல்லையற்ற ப்ரேமை காரணமாகத் திருவாய்மொழி (3-3-1) – வழுவிலா அடிமை செய்ய - என்பதற்கு ஏற்ப தனது பல்வேறு நிலைகளில் நின்றபடி இவர் செய்யும் பலவிதமான கைங்கர்யங்களுக்கு … (கௌஸல்யா அநுவ்ருத்தி ஒப்பாக்குகை பரிசு) - அயோத்யாகாண்டம் (12-68) - யதாயதா ஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவச பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச்சோபதிஷ்டதி – கௌஸலை தனது வாழ்நாள் முழுவதும் வேலை செய்பவளாகவும், தோழியாகவும், மனைவியாகவும், சகோதரியாகவும், தாயாகவும் நின்று அனைத்தையும் செய்தாள் - என்பதற்கு ஏற்ப கௌஸலை தனது கணவன் விஷயத்தில், அவன் தனது கணவன் என்ற உறவுமுறை காரணமாக, அந்தந்த நிலைகளுக்கு ஏற்றபடியாகச் செய்த தொண்டுகளை ஒப்பாகக் கூறலாம் என்றால், அது பொருந்தாது. ஆகவே எந்தவிதத்திலாவது ஒப்புமை கூறலாம் என்றால், இயலாது.

131. பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்குமா போலே நெக்கொசிந்து கரைந்தலைந்திடிந்து உடையப் பெருகு (மிகு) காதல் கடலிடங் கொண்ட கடலை பஹுமுகமாக அவகாஹிக்கும்.

**அவதாரிகை** - இப்படி யவஸ்தாந்தராபந்நரானாலும், தாமான தன்மையால் செல்லும் அபிநிவேசமும், இவர்க்குக் குறையாதென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் மேல் (பெருக்காறென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாக பலருடைய தன்மைகளை இவர் அடைந்தாலும், தானாக நின்று உரைக்கும் காதல் என்பதும் இவரிடம் குறையாது என்பதை ஓர் உதாரணத்தால் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கிண்ணகமெடுத்தவாறு பலதலையாய்ப் பாய்ந்து செல்லாநிற்க தனக்கொரு குறைவின்றியே, "பெயருங் கருங்கடலே நோக்குமாறு" என்கிறபடியே தனக்குப் புகலான கடலை நோக்கிச் சென்று புகுமாப்போலே, "நெக்கொசீந்து கரையும்", "நீராயலைந்து", "நெஞ்சிடிந்து", "என்மனமுடைவது மவர்க்கே" என்று உடை குலைப்பட்டு சிதிலராய் பரவசராய் த்ரவீபூதராய் நிலைகலங்கி நெஞ்சுகட்டழிந்து உருக்குலைந்து

போம்படி "பெருகுமால் வேட்கை", "கழியமிக்கதோர் காதல்" என்கிறபடியே கரையழியப் பெருகுகிற காதலானது "கடலிடங்கொண்ட கடல்வண்ணா" என்கிறபடியே ஒரு கடலொரு கடலிலே சாய்ந்தாற்போலே திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின ச்ரமஹரமான வடிவையுடைய பெரியபெருமாளாகிற அபரிச்சேத்ய வஸ்துவைத் தாமான தன்மையாலும் அவஸ்தாந்தரா பத்தியாலுமுண்டான பேதத்தாலே பலமுகமாகச் சென்று அவகாஹிக்கு மென்கை. இத்தால் உக்தவசஷ்யமாணா வஸ்தைகளுக்கெல்லாமுடலான விவருடைய பக்தி வைபவம் ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம்** – (பெருக்காறு பலதலைத்து) - வெள்ளம் எடுத்த ஆறு ஒன்று பல கிளைகளாகப் பிரிந்து சென்று பாய்ந்து ஓடினாலும், இவ்விதம் பலவாகப் பிரிந்தாலும், எந்தவிதமனா குறையும் இன்றி, (கடலை நோக்குமாபோலே) - முதல் திருவந்தாதி (67) – பெயருங் கருங்கடலே நோக்குமாறு – என்பதற்கு ஏற்ப, தான் சென்று சேர்வதற்கு ஏற்ற இடமாக உள்ள கடலை நோக்கிச் சென்று, அதில் சேர்ந்து விடுகிறது. இது போன்று, நம்மாழ்வார் நிலையைக் கூறுகிறார். (நெக்கு ஒசிந்து கரைந்து) - திருவாய்மொழி (6-5-2) – நெக்கொசிந்து கரையும் – என்றும், (அலைந்து) - திருவாய்மொழி (5-8-1) – நீராய் அலைந்து - என்றும், (இடிந்து) - திருவாய்மொழி (9-6-2) – நெஞ்சு இடிந்து - என்றும், (உடைய) - திருவாய்மொழி (9-3-6) - என் மனம் உடைவதும் அவர்க்கே - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளம் உடைந்து, உருவம் குலைந்து, பரவசம் மிகுந்து, நீராய் உருகி, தனது நிலை தடுமாறி, நெஞ்சம் உறுதி இழந்து போகும்படியாக. (பெருகு காதல்) – திருவாய்மொழி (9-6-1) - பெருகுமால் வேட்கை – என்றும், திருவாய்மொழி (5-5-10) – கழியமிக்கதோர் காதல் – என்றும் கூறுவதற்கு ஏற்ப கரை அழியும்படியாகப் பெருகும் காதல் என்பது, (கடல் கொண்ட கடலை) - திருவாய்மொழி (7-2-7) – கடலிடம் கொண்ட கடல்வண்ணா - என்பதற்கு ஏற்ப ஒரு கடலில் மற்றொரு கடல் சாய்ந்துள்ளது போன்று திருப்பாற்கடலில் கண்வளர்ந்தபடி உள்ளவனும், காண்பதற்கு இனிமையானதும் களைப்பை நீக்குவதும் ஆகிய வடிவத்தைக் கொண்டவனும் ஆகிய பெரியபெருமாள் என்னும் அளவிட்டு உரைக்க இயலாத பொருளை. (பஹுமுகமாக அவகாஹிக்கும்) - தானான தன்மையில் நின்றும் [அதாவது மற்றவர்கள் தன்மையில் நிற்காமல், நம்மாழ்வார் என்னும் தன்னுடைய தன்மையில் நின்று], மற்ற பலவிதமான தன்மைகளில் நின்றும் [தாய், தோழி, நாயகி போன்ற தன்மைகள்] பலவிதமாகச் சென்று சேருவார். இதன் மூலம்

இதுவரை கூறப்பட்டவை, இனிக் கூறப்பட உள்ளவை ஆகிய பலவிதமான தன்மை மாறுபாடுகளுக்கு ஆதாரமாக உள்ள இவருடைய பக்தி வைபவம் உரைக்கப்பட்டது.

132. அச்சேத்ய மென்னுமது ஈரும் வேம் ஈரியாயுலர்த்த வென்னப்பட, சித்தம் சித்தாய் அல்லேனென்று நீங்க, கரணங்கள் முடியானே யிலவையாக, உடலமாத்மதர்மம் கொள்ள, காற்றுங்கழியும் கட்டியழக் கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமை நூல்வரம்பில்லையே.

**அவதாரிகை** - இவருடைய பக்திதான் சாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியே ஸக்ரமமாய் ஸாத்ம்யமாய் ஏகமுகமாயிராமலிப்படி அமர்யாதமாய் அஸாத்ம்யமாய் அநேக முகமாய் நடப்பானென்னென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (அச்சேத்யமென்று தொடங்கி).

**விளக்கம்** – நம்மாழ்வாருடைய பக்தியானது சாஸ்த்ரங்களில் கூறிய வரிசைப்படியும், ஒரே தன்மை கொண்டபடியும் இல்லாமல், கட்டுக்குள் அடங்காதவிதத்திலும் கைக்கொள்ள இயலாதபடியும் பலவித தன்மைகளுடனும் உள்ளது ஏன் என்ற ஆர்வம் மேலிட, அதனை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "அச்சேத்யோய மதாஹ்யோய மக்லேத்யோசோஷ்ய ஏவச" என்றுச் சேதந தஹந க்லேதந சோஷணா நர்ஹமாகச் சொல்லப்படு மாத்மவஸ்து "சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர் திருவாக மெம்மாவி யீரும்" என்று பிராட்டியோடு ருத்ராதிகளோடு வாசியற உடம்பு கொடுக்குமவனுடைய சீலம் ஸ்மாரகமாய் என்னாத்மாவை யீராநின்றதென்றும், "வேமெமதுயிரழல் மெழுகிலுக்கு" என்று என்னாத்மாவானது நெருப்பிலிட்ட மெழுகுபோல உருக்குலைந்து வேவா நின்றதென்றும், "கண்ணனுக்கென்று ஈரியாய்" என்று நல்லது கண்டால் க்ருஷ்ணனுக் கென்கிற அநுஸந்தாநத்தாலே ஆர்த்ரதையை யடையுமென்றும், "வேட்கை நோய் மெல்லாவி யுள்ளுலர்த்த" என்று ப்ரேம வ்யாதியானது ம்ருது ஸ்வபாவமான ஆத்மாவைக் குருத்துவற்றாக வுலர்த்தவென்றும், இப்படிச் சேதநாத்யர்ஹமாயிற்றென்று ஸ்வயமேவ சொல்லும்படியாக,

**விளக்கம்** – (அச்சேத்யம் என்னும் அது) - கீதை (2-24) – அச்சேத்ய: அயம் அதாஹ்ய: அயம் அக்லேத்ய: அசோஷ்ய: ஏவ ச - இந்த ஆத்மா வெட்டப்பட இயலாதவன்,


**Email:**sridharan_book@yahoo.co.in

எரிக்கப்பட முடியாதவன், நனைக்கப்பட முடியாதவன், உலர்த்தப்பட முடியாதவன் – என்று கூறுவதற்கு ஏற்ப வெட்டுதல், எரித்தல், நனைத்தல், உலர்த்தல் போன்றவற்றைச் செய்ய இயலாதபடியாகக் கூறப்படும் ஆத்மாவானது. (ஈரும்) - திருவாய்மொழி (9-9-6) - சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர் திருவாக எம்மாவி ஈரும் – என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியார், சிவன் போன்ற பலருக்கும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி தனது திருமேனியை அளிக்கின்ற அவனுடைய சீல குணத்தை எண்ணும்போது எனது ஆத்மாவை அந்த குணம் அறுத்தது என்றும். (வேம்) – திருவாய்மொழி (10-3-7) – வேம் எமது உயிர் அழல் மெழுகு இலக்கு - என்பதற்கு ஏற்ப எனது ஆத்மாவானது அக்னியில் இடப்பட்ட மெழுகு போன்று உருக்குலைந்து வெந்தபடி ஆனது என்றும். (ஈரியாய்) - திருவாய்மொழி (6-7-9) - கண்ணனுக்கென்று ஈரியாய் - என்பதற்கு ஏற்ப நன்மை அளிக்கும் எதனை நோக்கினாலும், இது க்ருஷ்ணனுக்கு ஆகும் என்று எண்ணுவதால் நீர்ப்பண்டம் போன்று நனைந்தபடியே இருக்கும் என்றும். (உலர்த்த) – திருவாய்மொழி (2-1-10) - வேட்கை நோய் மெல்லாவி உள் உலர்த்த - என்பதற்கு ஏற்ப அவன் மீது கொண்டுள்ள ப்ரேமை என்ற நோயானது மிகவும் மென்மையான ஆத்மாவைக் குருத்து போன்று உலர்த்தி என்றும். (என்னப்பட) - இப்படியாக வெட்டப்படுதல் முதலான பலவிதமான நிலைகளை அடைய தனது ஆத்மா தகுதியாக நின்றது என்று தானே கூறும்படியாக …

**வ்யாக்யானம்** – “என்னெஞ்சென்னை நின்னிடையே னல்லேனென்று நீங்கி” என்று அசேதநமான சித்தமானது சேதந ஸமாதியையடைந்து அவன் விச்லேஷித்துப் போன உனக்குக் கரணமாவேனல்லேனென்று “ஸந்ந்யஸ்தம் மயா” என்கிறபடியே உறவறச் சொல்லித் தம்மை விட்டு நீங்க, பாஹ்ய கரணங்கள் “முடியானேயிற்”படியே சேதந ஸமாதியாலே ஒரு கரணத்தினுடைய வ்ருத்தியைக் கரணாந்தரமாசைப்படும்படி விடாய்க்க, “உடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரைய” என்று பகவத் ப்ரேம பாரவச்யத்தாலே ஆத்மா சிதிலமாய்ப் போகாதபடி கட்டின கரையான சரீரம் த்ரவ்யமிருந்த குஹையும் உருகுமாபோலே, அன்பும் அதுக்காச்ரயமு மென்றிரண்டின்றியே அன்பு தானொரு வடிவு கொண்டாப் போலேயாய், உத்தரோத்தரம் சைதில்யத்தை யடைந்து ஆத்மதர்மத்தை ஏறிட்டுக்கொள்ள “கடலும் மலையும்”, “இருளின் திணி வண்ணம்” இத்யாதிகளிற்படியே காற்றுக்கு ஸதத கதித்வமும், கழிக்கு ஏறுவது வடிவதாகையும் நியத ஸ்வபாவமென்றறியாதே, அவற்றுக்கு அவை பகவத் விரஹ க்லேச

ஜநிதமாகக் கருதி அசேதநமானவற்றைத் தமக்கு ஸமதுக்கிகளாகக் கொண்டு “எம்மாற்றாமை சொல்லியழுவோமை” என்று தாம் அவற்றைக் கட்டிக்கொண்டு கிடந்து கதறும்படியாக “அலர் தூற்றிற்றது முதலாக் கொண்டவென் காதல்” என்றும், “மயல் பெருங்காதல்” என்றும் சொல்லுகிறபடியே பிறர் பழி சொன்னதுவே எருவாகப் பணைத்துச் செல்லுமதாய் க்ருத்யாக்ருத்யம் தெரியாதபடி அறிவுகேட்டை விளைப்பதுமான அபரிச்சேத்ய பக்திக்கு “ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:” என்கிற தேசவிசேஷத்தில் அநுபவோபகரண பக்திபோலே சென்றபடி கண்டிருக்குமத்தனை யல்லது “பத்திமைக்கன்புடையேனாவதே” என்கிறபடியே நூல்பிடித்துப் பரிமாறும்படி வரம்பு கட்டவொண்ணாதிறே யென்கை.

**விளக்கம்** – (சித்தம் சித்தாய் அல்லேன் என்று நீங்க) – திருவாய்மொழி (8-2-10) – என் நெஞ்சு என்னை நின்னிடையேன் அல்லேன் என்று நீங்கி – என்பதற்கு ஏற்ப அறிவில்லாத நெஞ்சமானது அறிவுள்ள பொருளின் தன்மையைப் பெற்று, “அவனால் பிரிந்து செல்லப்பட்ட உனக்கு நான் இனி உறுப்பு ஆகமாட்டேன்” என்று கூறி, ஸந்ந்யஸ்தம் மயா - என்னால் முழுவதுமாக விடப்பட்டது - என்பதற்கு ஏற்ப, உறவு நீங்கும் விதத்தில் உரைத்து தன்னை விட்டு நீங்க. (கரணங்கள் முடியானெயில் அவையாக) - மற்ற புற இந்த்ரியங்கள் அனைத்தும் திருவாய்மொழி (3-8-1) - முடியானேயில் - என்ற திருவாய்மொழியில் கூறுவதற்கு ஏற்ப அறிவுள்ள பொருள்களாக நின்று, ஒரு உறுப்பின் செய்கையை மற்றொரு உறுப்பு செய்ய விரும்புவதாகப் பெரும் ஆசையுடன் நிற்க. (உடலம் ஆத்ம தர்மம் கொள்ள) - திருவாய்மொழி (5-8-1) – உடலம் நின்பால் அன்பாயே நீராய் அலைந்து கரைய - என்பதற்கு ஏற்ப ஆத்மா உருக்குலைந்து விடாதபடி அமைத்து வைக்கப்பட்ட சரீரமானது, பகவானிடம் கொண்ட ப்ரேமையின் மிகுதி காரணமாக, பொன் வைக்கப்பட்ட குகையும் உருகுவது போன்று, ப்ரேமை மற்றும் அந்தப் ப்ரேமை தங்கியுள்ள இடம் என்று இரண்டாக இல்லாமல் ப்ரேமையானது ஒரு வடிவம் எடுத்தது போன்று, மேன்மேலும் உருக்குலைந்து ஆத்மாவின் தன்மையை எடுத்துக் கொள்ள. (காற்றும் கழியும் கட்டி அழ) - திருவாய்மொழி (2-1-4) - கடலும் மலையும் - என்றும், திருவாய்மொழி (2-1-8) – இருளின் திணி வண்ணம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப காற்றுக்கு எப்போதும் அலைந்தபடி இருப்பதே அதன் இயல்பு என்றும், உப்பங்கழிக்கு ஏறுவதும் வடிவதும் என்று உள்ளதே அதன் தன்மை என்றும் அறியாமல், அவற்றுக்கு அந்த நிலைகள், பகவானைப் பிரிந்த துன்பத்தால் வந்தவை என்று

எண்ணியபடி, அறிவற்ற அவற்றைத் தன்னைப் போன்றே துக்கத்துடன் நிற்பவையாகக் கொண்டு, திருவாய்மொழி (2-1-7) - எம்மாற்றாமை சொல்லியழுவோமை - என்பதற்கு ஏற்ப, தான் அவற்றைக் கட்டிக்கொண்டு கிடந்து கதறும்படி. (பெரும் காதலுக்கு பத்திமை) - திருவாய்மொழி (7-3-8) - அலர் தூற்றிற்றது முதலாக் கொண்டவென் காதல் - என்றும், திருவாய்மொழி (4-4-10) – மயல் பெருங்காதல் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, மற்றவர்கள் கூறும் பழிச்சொற்கள் என்பதே எரு இட்டது போன்று பல கிளைகளாக வளர்ந்து நிற்கும்படியாக, செய்யக்கூடியது மற்றும் செய்யக்கூடாதது என்பது அறியாமல் அறிவுக்குத் தடுமாற்றம் உணடாக்குவதான எல்லையற்ற பக்திக்கு. (நூல் வரம்பு இல்லையே) - ந சாஸ்த்ரம் ந ஏவ ச க்ரம: - பக்திக்கு சாஸ்த்ரம் இல்லை, முறைகளும் இல்லை - என்பதற்கு ஏற்ப, பரமபதத்தில் உள்ளதான அனுபவத்திற்கு உறுப்பாக உள்ள பக்தி போன்று சென்று உள்ளதைக் கண்டிருக்கும். அல்லது திருக்குறுந்தாண்டகம் (10) – பத்திமைக்கன்புடையேன் ஆவதே – என்பதற்கு ஏற்ப நூல் பிடித்தது போன்று செயலாற்ற வரம்பு கட்ட இயலாதபடி உள்ள நிலை.

**வ்யாக்யானம்** – இத்தால், “நிதித்யாஸிதவ்ய:” என்கிற விதிப்ரேரிதையாய் சேதந ஸாத்யையாய் க்ரமபரிணாமிநியான பக்தி போலன்றிக்கே அதுக்கெதிர்த்தட்டாய்க் கரையழிந்து செல்லுகிறவிது சாஸ்த்ரமர்யாதையின் கீழ் அடங்காதென்றதாய்த்து. ஆக, “ஞானத்தில் தம் பேச்சு” என்று தொடங்கி இவ்வளவும் ஜ்ஞாநதசையில் தாமான தன்மையாலும், ப்ரேமதசையில் ஸ்த்ரீத்வரூபேணவும் பேசுவரென்றும், ஸ்த்ரீத்வம் ஆத்மாவுக்கு வந்தேறியல்லாமையாலே இவர்க்கு இது ஸ்வாபாவிகமென்றும், அதுதான் ஸாமாந்யமன்றிக்கே ஆறு ப்ரகாரத்தாலே லக்ஷ்மீஸமரென்றும், மற்றைப் பிராட்டிமார் பகவத் பரிக்ரஹமுடையா ரெல்லாரோடும் ஸாம்ய முடையவரென்றும், ஸர்வதா ஸாம்யம் இவர்க்கு லக்ஷ்மியோடே யென்றும், மற்றும் பகவதநந்யராயும் பகவத் ப்ரத்யாஸந்நராயுமுள்ள லக்ஷ்மணாதிகள் தசரதாதிகள் படியும் இவர்க்குண்டென்றும், அவர்களில் இவர் வ்யாவ்ருத்தரென்றும், பிராட்டிமாரையும் அநந்தாதிகளையும் அவர்கள் தாமாகவே பாவிப்பரென்றும், இந்த பாவநாஹேதுவான இவருடைய ஸ்த்ரீத்வ வரலாற்றுக்கும் அநேக வ்ருத்திகளில் அபிநிவேசத்துக்கும் த்ரௌபதீ கௌஸல்யைகள் படிகளை த்ருஷ்டாந்திக்கை ஸ்தூலமென்றும், இந்த பாவவ்ருத்திகளுக்கு மூலமான பக்தி ப்ரகாரங்களையும் சொல்லிற்றாய்த்து.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – இதன் மூலம் நிதித்யாஸிதவ்ய: -- த்யானிக்கத்தக்கவன் - என்பதான விதியின் மூலம் உண்டாக்கப்பட்டதாகவும், சேதநர்களால் கைக்கொள்ளப்படுவதாகவும், தகுந்த முறைப்படி வெளிப்படுவதாகவும் உள்ள பக்தி போன்று அல்லாமல், அதற்கு நேர்மாறாக கரையை அழித்துக் கொண்டு ஓடுகின்ற வெள்ளம் போன்று செல்லும் இந்த பக்தியானது சாஸ்த்ர விதிகளின் கீழ் அடங்காது என்று கருத்து. ஆக சூர்ணை (118) - ஞானத்தில் தம் பேச்சு - என்று தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய கீழே உள்ள பலவும் கூறப்பட்டன:

- ஞானம் முதிர்ந்துள்ள நிலையில் நம்மாழ்வாராக நின்றும், ப்ரேமம் முதிர்ந்த நிலையில் பெண் தன்மை கொண்டும் பேசுவார்
- பெண் தன்மை என்பது ஆத்மாவுக்கு வந்து சேர்ந்தது அல்ல (இயல்பாக இருக்கும் ஒன்று) என்பதால் இவ்விதம் பேசுவது இவருக்கு இயல்பே ஆகும்
- அந்தத் தன்மை பொதுவாக இன்றி, ஆறுவிதமான தன்மைகளால் மஹாலக்ஷ்மிக்கு ஒப்பாக உள்ளார்.
- மற்ற பிராட்டிமார்கள் மற்றும் ஸர்வேச்வரனால் கைக்கெள்ளப்பட்டவர்கள் என்று எல்லாருடனும்ம் ஒப்புமை உள்ளவர்.
- அனைத்துவிதங்களிலும் பெரியபிராட்டியாருடன் ஒப்புமை கூறும்படி உள்ளவர்.
- பகவானை விட்டு அகலாதவர்களாகவும், அவனுடன் நெருக்கமாக உள்ளவர்களாகவும் உள்ள லக்ஷ்மணன், தசரதன் ஆகியோருடைய தன்மைகளும் இவருக்கு உள்ளது.
- அவர்களைக் காட்டிலும் இவர் வேறுபட்டவர்
- பிராட்டிமார்கள், ஆதிசேஷன் போன்றவர்ளை "தான்" என்றே எண்ணியபடி இருப்பார்.
- இப்படிப்பட்ட தன்மைகளுக்குக் காரணமாக உள்ள இவருடைய பெண் தன்மையின் செய்கைகள் மற்றும் கைங்கர்யங்களில் உள்ள ஈடுபாடு போன்றவற்றுக்கு த்ரௌபதி மற்றும் கௌஸலை போன்றார்களுடைய தன்மைகளை உதாரணமாகக் கூறுவது பொருந்தாது
- இத்தகைய தன்மைகளுடன் இவர் செய்யும் செய்கைகளுக்கு ஆதாரமாக உள்ள பக்தியின் வகைகள்


**Email:**sridharan_book@yahoo.co.in

133. ஸம்பந்தோபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தைகளுக்குத் தோழி தாயார் மகளென்று பேர்.

**அவதாரிகை** – ஏவம்பூத பக்திதசையில் இவர் பெண் பேச்சாகப் பேசுமிடத்தில் தோழி தாய் மகள் என்று த்ரிவிதமாகப் பேசுகிறவிதுக்குக் கருத்தென்னென்னுமபேக்ஷையிலே அத்தை ப்ரகாசிப்பிக்கிறார் மேல் (ஸம்பந்தோபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்கு தோழி தாயார் மகளென்று பேர்) - என்று.

**விளக்கம்** – இப்படிப்பட்டதான பக்தி நிலையில், இவர் ஒரு பெண்ணைப் போன்று பேசும்போது தோழி, தாய், மகள் என்பதான மூன்று விதங்களில் பேசும் இதற்கு என்ன கருத்து என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தோழியாவாள், நாயக நாயகிகளை இணக்கிச் சேர்க்குமவளாகையாலே திருமந்த்ரத்தில் ப்ரதம பதத்தால் ஈச்வரனோடு ஆத்மாவுக்குச் சொல்லப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வாதி ஸம்பந்த ஜ்ஞாநமே அவனோடு இவ்வாத்மா சேருகைக்கு ஹேதுவாகையாலே, அந்த ஸம்பந்த ஜ்ஞாநமாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தையைத் தோழியென்றும்.

**விளக்கம்** – (ஸம்பந்தத்தில் உணர்த்தி ஆகிற ப்ரஜ்ஞாவஸ்தைக்குத் தோழி என்று பேர்) - தோழி என்பவள், நாயகன் மற்றும் நாயகி ஆகிய இருவரையும் ஒன்று கூட வைத்துச் சேர்ப்பவள் ஆவாள். திருமந்த்ரத்தில் உள்ள முதல் பதமான “ஓம்” என்பதன் மூலம், ஸர்வேச்வரனோடு ஆத்மாவிற்குக் கூறப்பட்டதான “இந்த ஆத்மா அவன் ஒருவனுக்கு மட்டுமே அடிமை” என்னும் அவனுக்கும் நமக்கும் இடையே உள்ள ஸம்பந்தத்தை உணர்த்தும் ஞானம் என்பதே, அவனோடு இந்த ஆத்மா சேர்வதற்குக் காரணமாக உள்ளது. ஆகவே அத்தகைய ஸம்பந்த ஞானத்தையே “தோழி” என்று கூறினார்.

**வ்யாக்யானம்** - தாயாராவாள், பெற்று வளர்த்து பெண்பிள்ளை ப்ராப்த யௌவநையாய் நாயக விஷயத்தில் அதிமாத்ர ப்ராவண்யத்தாலே அவனிருந்தவிடத்தேறப் போக வேணுமென்று பதறுமளவிலும், அவன் தானே வரக்கண்டிருக்கையொழியப் படி கடந்து புறப்படுகை குலமர்யாதைக்குப் போராதென்று நிஷேதித்துப் போருமவளாகையாலே,

ஸித்தோபாயத்தைப் பற்றினார்க்கு ப்ராப்தி விளம்ப ஹேதுவில்லாமையாலே சீக்ரமாக ப்ராப்யத்தைப் பெறவேணுமென்கிற அந்த த்வரையினுடைய உத்பத்த்யாதிகளுக்கு ப்ரதம ஹேதுவாய், அந்த த்வரை ப்ராப்ய வைலக்ஷண்ய தர்சநத்தாலே க்ரமப்ராப்தி பற்றாமல் முறுகி நடக்குமளவில், இது ப்ரபந்நகுல மர்யாதைக்குச் சோரதென்று நிஷேதித்து, சேஷியானவன் தானே வந்து விஷயீகரிக்கக் கண்டிருக்கவேணுமென்று இதின் துடிப்பை அடக்கப் பார்க்கிற மத்யம பத ப்ரதிபாதி தோபாயாத்யவஸாயமாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தையைத் தாயாரென்றும்.

**விளக்கம்** – (உபாயத்தில் துணிவு ஆகிய ப்ரஜ்ஞாவஸ்தைக்குத் தாயார் என்று பேர்) – தாய் என்பவள் குழந்தையைப் பெற்று, வளர்த்து, தனது பெண்பிள்ளை தகுந்த பருவம் வந்தவுடன் நாயகன் ஒருவனிடம் கொண்ட அளவு கடந்த ப்ரேமை காரணமாக அவன் உள்ள இடம் தேடிப் போகவேண்டும் என்று பதறியபடி உள்ளபோதும், அவன் தனது இடம் வரும்வரை பொறுக்க இயலாமல் படியைத் தாண்டிப் புறப்படுதல் என்பது குல மரியாதைக்கு ஏற்காது என்று எண்ணும்போதும், அந்த மகளைத் தடுப்பவள் ஆவாள். ஸர்வேச்வரன் என்ற ஸித்தோபாயத்தைப் பற்றியவர்கள் அவனை அடைவதற்கான காலம் அதிகமாக உள்ளதற்கு எந்தக் காரணமும் இல்லாமல் உள்ளதால், விரைந்து "அவனை அடைதல்" என்ற பேற்றை அடையவேண்டும் என்னும் வேகம் பிறப்பதற்கான முதல் காரணமாக உள்ளதால், அந்த விரைவு என்பது, அடையப்படவுள்ள பேற்றின் மேன்மையைக் கண்டதால் எந்தவிதமான முறைகளையும் வரிசையாகப் பின்பற்றாமல் ஓடும்படிச் செய்கிறது. இந்த நிலையானது ப்ரபந்நர்கள் குலமரியாதைக்கு ஏற்காது என்று தடுத்து, எஜமானனாகிய ஸர்வேச்வரன் தானாகவே வந்து நம்மை ஏற்கும்வரை காத்திருக்கவேண்டும் என்று இந்த வேகத்தின் துடிப்பை அடக்குவது திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதாகும். ஆகவே இவ்விதம் உபாயத்தில் உறுதியாக நிலைத்தல் என்ற இந்த நிலையே தாயார் என்கிறார்.

**வ்யாக்யானம்** - தலைமகளாவாள், இயற்கையிலே புணர்ந்து நாயகன் வைலக்ஷண்யத்திலே ஈடுபட்டுக் குலமர்யாதைகளையும் பாராதே கிட்டியல்லது தரியேனென்னும் பதற்றத்தை யுடையளாகையாலே ப்ரதம மத்யம பதங்களால் அறுதியிடப்பட்ட சேஷியாய் சரண்யனானவனுக்கு சரம பத ப்ரோக்தமான ஸ்வரூப ரூப குண விபூதிகளால் வந்த வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்து தததநுபவ விளம்பா


Email:sridharan_book@yahoo.co.in

க்ஷமத்வத்தாலே ததேகோபாயத்வாத்யவஸாயத்தையு மதிக்ரமித்துக் கிட்டி அநுபவித்தல்லது தரியாதபடி நடக்கிற ப்ராப்ய த்வரையாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தையை மகளென்று பேரிட்டுச் சொல்லக் கடவதென்கை. ஜ்ஞாநாவஸ்த்தைக ளென்னாமல் ப்ரஜ்ஞாவஸ்த்தைகளென்றது த்ரிவிதாவஸ்த்தையும் இவர்க்கு ஸர்வகாலமு முண்டென்னு மிடம் தோற்றுகைக்காக. "ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா" என்னக் கடவதிறே. பத த்ரயார்த்த ஜ்ஞாநமும் திருவுள்ளத்தில் எப்போது முண்டாயிறேயிருப்பது.

**விளக்கம்** – (பலத்தில் பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்தைக்கு மகள் என்று பேர்) - நாயகி இயல்பாகவே நாயகனுடன் சேர்ந்து, அவனுடைய ஒப்பற்ற சிறப்புகளில் ஈடுபட்டு நின்று, தனது குலமரியாதைகள் எதனையும் ஆராயாமல், அவனுடன் சேரவில்லை என்றால் உயிர் தாங்கமாட்டேன் என்னும் பதற்றம் கொண்டவள் ஆவாள். திருமந்த்ரத்தில் உள்ள "ஓம்" என்னும் முதல் பதம், "நம:" என்னும் நடுப்பதம் ஆகிய இரண்டாலும் உறுதியாகக் கூறப்பட்ட எஜமானனும், அனைவருக்கும் சரணம் புகத்தக்கவனும் ஆகிய ஸர்வேச்வரனுக்கு, திருமந்த்ரத்தின் இறுதி பதமான "நாராயண" என்பதன் மூலம் கூறப்பட்டதான ஸ்வரூபம், ரூபம், குணம் மற்றும் விபூதி ஆகியவற்றால் ஏற்பட்ட சிறப்புகளை எப்போதும் எண்ணியபடி உள்ளதால், அத்தகைய அனுபவம் கிடைக்கும்வரை ஏற்படும் காலதாமதத்தைப் பொறுத்துக்கொள்ள இயலாமல், "அவன் மட்டுமே அவனை அடைய வைக்கும் உபாயம்" என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ள விதியையும் மீறி, அவனை அடைந்தால் மட்டுமே உயிர் தாங்கும், இல்லையேல் தரிக்காது என்று நடப்பதான பலன் மீது உள்ள பதற்றத்தை மகள் என்று கூறினாள். ஞானத்தின் பல்வேறு நிலைகள் என்று கூறாமல் "ப்ரஜ்ஞாவஸ்தை" என்று ஏன் கூறவேண்டும் என்றால், இந்த மூன்றுவிதமான நிலைகளும் இவருக்கு எப்போதும் உள்ளது என்று விளக்கவே ஆகும். ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா - மூன்று காலத்தையும் அறிவதே ப்ரஜ்ஞாவஸ்தை – என்றது காண்க. மேலும் திருமந்த்ரத்தில் உள்ள மூன்று பதங்களுடைய பொருள் குறித்த ஞானம் இவருக்கு எப்போதும் நிலைத்து உள்ளதாகும்.

134. ஸகி வெறிவிலக்கி ஆசையறுத்து அறத்தொடு நின்ற மூன்றில் அநந்யார்ஹத்வமும், வாடி மெலிந்து பித்தேறி ஏறப் பேசிக் கட்டிழந்தகன்று சார்வதே வலித்தமை ஸாதநமாமோ வென்று மாதா அஞ்சி முறைப்பட்டு முறையிடுகிற ஏழில் அத்யவஸாயமும், புத்ரி பலகால் ஆள்விட்டு ஆற்றாமை சொல்லிக் கவராதவை விட்டு இரைக்க மடலெடுத்துக் கண்


Email:sridharan_book@yahoo.co.in

புதையப் போக்கற்று உருநெஞ்சுள்ளெழக் கூடுநாள் தேடித் தாழ்த்ததுக்கு ஊடி உசாத்துணையற்றுச் சூழலும் பகைமுகஞ் செய்யத் தடைநில்லாதே புயக்கற்று மாலையும் காலையும் பூசலிடுகிற பதினேழில் த்வரையும் தெரியும்.

**அவதாரிகை** - இவ்வவஸ்தைகள் மூன்றும் இவர் பேச்சிலே தோற்றுமோவென்னு மபேக்ஷையிலே தோழி தாய் மகள் பேச்சான திருவாய்மொழிகளிலே இவை தெரியுமென்னுமத்தை ஸங்க்ரஹமாக வரைந்து அருளிச்செய்கிறார் மேல் (ஸகியென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படிப்பட்ட மூன்று நிலைகளும் இவருடைய பேச்சில் வெளிப்படுமோ என்ற சந்தேகம் தோன்ற, "தோழி, தாய், மகள்" ஆகியவர்களுடைய பேச்சாக வெளிப்படும் திருவாய்மொழிகளில் இவற்றை அறியலாம் என்று, அவற்றை எளிமையாக அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, எம்பெருமானோடே இயற்கையிலே புணர்ந்து பிரிந்து ஆற்றாமையாலே மோஹங்கதையாய்க் கிடக்கிற பிராட்டிதசையைக் கண்டு தாய்மார் கலங்கி, இவள் நோவையும் அதுக்கு நிதானத்தையும் பரிஹாரத்தையும் அறியாதே, ப்ரதிபந்த பாஷிணியாயிருப்பாளொரு கட்டுவிச்சி சொல்லைக் கொண்டு இந்நோய்க்குப் பரிஹாரமாகக் கருதி வெறியாடலுற; இவள் ப்ரக்ருதியறியு முயிர்த்தோழி அநந்யார்ஹையான விவளுக்கு அந்ய ஸ்பர்சம் ஸஹியாது, நாம் இதை விலக்காதொழியில் இவளை யிழக்கவருமென்று பார்த்து அப்போது நிரூபித்தறிந்தாளாக இவள் நோவையும் அதுக்கு நிதானத்தையும் அவர்களுக்குச் சொல்லி தகுசித பரிஹாரங்களையும் விதித்து, "அங்கோர் கள்ளுமிறைச்சியும் தூவேல்மின்", "உணங்கல் கெடக் கழுதை யுதடாட்டம் கண்டென் பயன்" இத்யாதிகளாலே வெறியை விலக்கின பாசுரத்தாலே ப்ராப்ய த்வராதசையில் அவஸாதமடியாக உபாயாத்யவஸாயம் கலங்கி, "தர்மேண பாபமபநுததி" என்கிறபடியே தர்மாநுஷ்டானத்தாலே துக்க ஹேதுவைப் போக்கலாமென்பார் வார்த்தையைக் கொண்டு இவ்வவஸாதத்தைப் பரிஹரிக்கலாமோவென்று தேவதாந்தர்யாமி பரமான கர்மகலாபங்களிலே ப்ரவர்த்திக்கத் தேட, அவ்வளவிலே ஸம்பந்த ஜ்ஞாநமானது இவ்வவஸாதம் கர்மபலமன்றிக்கே, ஆகஸ்மிக பகவத் கடாக்ஷ பலமாய் அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனானவனை


Email:sridharan_book@yahoo.co.in

அநுபவிக்கையி லுண்டான ப்ராவண்ய கார்யமாகையாலே இதுக்கு அது பரிஹாரமுமன்று; அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு விருத்தமாகையாலே ஸ்வரூப நாசகமுமாமன்று, அந்ய ஸ்பர்சத்தை நிவர்த்திப்பித்த "தீர்ப்பாரையாமினியும்".

**விளக்கம்** – (வெறி விலக்கி) – ஸர்வேச்வரனோடு இயற்கையாகவே சேர்ந்து, பின்னர் பிரிந்து, அந்த ஆற்றமை காரணமாகப் பிராட்டி மயங்கிக் கிடக்கிறாள். இந்த நிலையைக் கண்டு அவளுடைய தாய்மார்கள் கலக்கம் கொண்டு, இவளுக்கு ஏற்பட்ட நோய் இன்னது என்றும், இதற்கான காரணம் மற்றும் மருந்து இன்னது என்றும் அறியாமல் நிற்கிறார்கள். அப்போது தனக்குத் தோன்றுவதை உரைக்கும் ஒரு கட்டுவிச்சி கூறியதைக் கேட்டு இந்த நோய்க்கு இதுவே மருந்து என்று வெறியாடலில் ஈடுபட்டனர் (வெறியாடல் என்பது ஒரு பூசாரியை அழைத்து க்ஷுத்ர தெய்வங்களுக்குச் செய்யப்படும் சாமி ஆடுதல் போன்ற சடங்கு). அப்போது நாயகியின் நிலையை அறியும் அவளுடைய உயிர்த்தோழி ஒருவள், "ஸர்வேச்வரன் அல்லாமல் வேறு யாருக்கும் இவள் உரியவள் அல்லள். இப்படிப்பட்ட இவளுக்கு வேறு தொடர்பு ஏற்படுதல் என்பது பொறுத்துக் கொள்ள இயலாத ஒன்றாகும். நாம் இதனைத் தடுக்கவில்லை என்றால், இவளை இழந்துவிடுவோம்", என்று ஆராய்ந்தாள்; அதன் பின்னர் ஒரு முடிவுக்கு வந்தாள். அந்த நாயகிக்கு ஏற்பட்டுள்ள நோய் இன்னது என்று உரைத்து, அதன் காரணத்தையும் தாய்மார்களிடம் கூறினாள். அதற்கான மருந்துகளையும் உரைத்தாள். ஆக, திருவாய்மொழி (4-6-3) - அங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேல்மின் - என்றும், திருவாய்மொழி (4-6-7) – உணங்கல் கெடக் கழுதை யுதடாட்டம் கண்டென் பயன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப வெறியாடல் என்பதை விலக்கிய திருப்பாசுரங்கள் மூலம் பேற்றினை அடைவதற்குப் பதறியபடி உள்ள நிலையில், மிகுந்த துன்பத்தின் காரணமாக உபாயத்தின் மீது கொண்டுள்ள உறுதியானது கலங்கி, தைத்திரீயம் – தர்மேண பாபம் அபநுததி – பலனின் பற்றில்லாத தர்மங்களால் பாபங்கள் நீங்குகின்றன - என்பதற்கு ஏற்ப தர்மங்களில் ஈடுபடுவதால் துக்கத்திற்கான காரணங்கள் விலகுகின்றன என்று கூறுபவர்களுடைய சொற்களைக் கேட்டு, இந்தத் துன்பத்தை விலக்க இயலுமோ என்று அனைத்து தேவதைகளின் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரன் விஷயமாக உள்ள கர்மங்களை இயற்றுவதற்கு முனைந்தனர். அப்போது ஸர்வேச்வரனுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தம் குறித்த ஞானம் குறித்து அந்தத் தோழி கூறுவது என்னவென்றால், "இந்தத் துன்பமானது இதுவரை செய்து வந்த கர்மங்களால் உண்டான பலன் காரணமாக வந்தது அல்ல. ஸர்வேச்வரன் நம்மிடமிருந்து எதனையும்

எதிர்பாராமல் நம்மைக் கடாக்ஷிப்பதன் பலனாக, தனக்கே உரியதான சிறந்த திருமேனியைக் கொண்ட ஸர்வேச்வரனை அனுபவிப்பதால் ஏற்படுவதான மிகுந்த அன்பின் காரணமாக உண்டானதாகும். ஆகவே இந்த வெறியாடல் என்பது இதற்கு மருந்தாகாது. மேலும் இது அவனுக்கு மட்டுமே அடிமை என்ற தன்மைக்கு விரோதத்தை ஏற்படுத்தும்; இதனால் ஆத்ம ஸ்வரூபத்தை அழித்தும்விடும்", என்பதாகும். இப்படியாக அந்தத் தோழி, மற்ற ஸம்பந்தங்களை திருவாய்மொழி (4-6) – தீர்ப்பாரை யாம் இனியும் – என்பதில் நீக்கினாள்.

**வ்யாக்யானம்** - திருத்துலைவில்லிமங்கலத்திலே அதிப்ரவணையாயிருக்கிற பெண்பிள்ளையை மீட்கப் பார்க்கிற தாய்மாரைக் குறித்துத் தோழியானவள் "இவளை நீரினியன்னைமீர் உமக்காசையில்லை" என்று நீங்களேயன்றோ திருத்துலைவில்லிமங்கலத்திலே கொண்டு புக்கு இப் ப்ராவண்யத்தை விளைத்திகொள்; இனி ப்ராப்த விஷய ப்ரவணையான இவளை உங்களால் மீட்கப் போகாது. ஆனபின்பு இவள் பக்கல் உங்களுக்காசையற வமையுமென்ற பாசுரத்தாலே அர்சாவதார ஸுலபமான விஷயமே உபாயமாகையாலே எப்போதும் இதிலே நோக்காயிருக்கு முபாயாத்யவஸாயம் அவ்விஷய வைலக்ஷண்யத்தை விஷயீகரித்த ப்ராவண்ய கார்யமான த்வரை உபாயத்திலே அந்வயிக்கிறதோவென்னு மதிசங்கையாலே அத்தை நிவர்த்திப்பிக்கத் தேட, அவ்வளவிலே ஸம்பந்த ஜ்ஞாநம் சேஷ வஸ்துகதமான இப் ப்ராவண்யம் சேஷி யுகப்புக்கு விஷயமாமித்தனையல்லது உபாய கோடியி லந்வயியாது. ப்ராப்த விஷய வைலக்ஷண்யாதீனமாக வந்ததாகையாலே நிவர்த்திப்பிக்கவும் போகாது. இத்தை ஸ்வநிவர்த்யமாக நினைத்திருக்கிற ஸ்வாதந்த்ர்யம் அத்யந்த பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபத்துக்கு விருத்தமாகையாலே த்யாஜ்யமென்று ஸ்வஸ்பர்சத்தை நிவர்த்திப்பித்த "துவளில் மாமணியும்".

**விளக்கம்** – (ஆசை அறுத்து) - மேலும் அவள் தொடர்ந்தாள். திருத்துலைவில்லி மங்கலத்தின் மீது மிகுந்த காதல் கொண்டுள்ள பெண்பிள்ளையை அதிலிருந்து விலக்க எண்ணும் தாய்மாரை நோக்கி அந்தத் தோழியானவள், "திருவாய்மொழி (6-5-1) - இவளை நீரினியன்னைமீர் உமக்காசையில்லை - என்று கூறுவதற்கு ஏற்ப திருத்துலைவில்லி மங்கலத்திற்கு இவளை அழைத்துச் சென்று இவளுக்கு இந்தக் காதலை ஏற்படுத்தியது நீங்கள் அல்லவோ? இயல்பாகவே நம்முடைய காதலனாகிய ஸர்வேச்வரனிடம்

 Email:sridharan_book@yahoo.co.in

இவளுக்கு உள்ள இந்தக் காதலை உங்களால் விலக்க இயலாது. ஆகவே இவள் விஷயத்தில் உங்களுக்கு ஆசை அற அமையும்", என்றாள். இந்தத் திருவாய்மொழி மூலம், அர்ச்சாவதாரம் என்பதான மிகவும் எளிமையான விஷயமே உபாயமாக உள்ளதன் காரணமாக, எப்போதும் ஸர்வேச்வரனை அடையவேண்டும் என்பதன் காரணமாக அவனே உபாயம் என்பதில் உள்ள உறுதியானது, அர்ச்சாவதாரத்தின் எளிமையை உணர்ந்ததால் ஏற்பட்ட காதலுடைய பதற்றம் என்ற உபாயத்தில் கொண்டு சேர்த்துவிடுமோ என்ற சந்தேகம் காரணமாக அதனை நீக்க முயலும்போது. ஸர்வேச்வரனுடைய அடிமையாக உள்ள இந்த ஆத்மாவிற்கு இயல்பாகவே அவனிடம் அமைந்த இந்தக் காதல் ஸர்வேச்வரனுடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக மட்டுமே அமையும் அல்லாமல், உபாயத்தில் சேராது; இயல்பாகவே எஜமானனாகிய ஸர்வேச்வரனுடைய மேன்மை காரணமாக வந்த இந்தக் காதலைத் தள்ளவும் இயலாது; இதனைத் தன்னால் நீக்க இயலும் என்று எண்ணுகிற சுயசுதந்திரமானது, "அவனுக்கு மட்டுமே வசப்பட்ட நிலை" என்பதற்கு விரோதமானது என்பதால், கைவிடத்தக்கது என்று தனது ஸம்பந்தத்தை விலக்குகின்ற திருவாய்மொழி (6-5) – துவளில் மாமணியும் – என்ற திருவாய்மொழியில் விளக்கினாள்.

**வ்யாக்யானம்** - தலைமகள் பருவத்தைக் கண்டு பந்து ஜனங்கள் ஸ்வயம்வரத்துக்கு ராஜலோகத்தைத் திரட்டுகைக்கு மணமுரசறைவிக்க, திருப்புலியூரில் நாயனாரோடே அவளுக்குக் கலவி யுண்டாய்த்தென்னுமிடத்தை இவள் வடிவிலும் பேச்சிலுமுண்டான வேறுபாட்டாலே அறிந்த வுயிர்த்தோழியானவள் இத்த்வநி பெண்பிள்ளை செவிப்படுமாகில், "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழாத" தன்மையளாயிருக்கிற விவளைக் கிடையாது; ஏற்கவே பரிஹரிக்க வேணுமென்று இவள் பந்துஜனங்களைக் குறித்து இவளுக்குத் திருப்புலியூரில் நாயனாரோடே ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்றுப் போலேயிரா நின்றது, தத் குணசஷ்டிதங்களையே வாய்புலற்றா நின்றாள். ஆன பின்பு நீங்கள் செய்கிறது தர்மமல்லவென்ன; ஆகில் இவளுக்குத் தக்க அவயவசோபை ஆபரணசோபை முதலான நாயக லக்ஷணங்கள் அவனுக்குண்டோ வென்ன; அவையெல்லாம் குறையில்லை. அவையொன்றுமில்லையேயாகிலும் இவள் அங்கே அநந்யார்ஹையாமைக்கடையாளம் ஸுவ்யக்தமாகக் காணலாம். ஆன பின்பு இத்தைத் தவிருங்கோளென்று மத்யஸ்தையாய் நின்று தர்மம் சொல்லுகிறாளாய், அந்த மணத்தை விலக்கின பாசுரத்தாலே ப்ராப்ய த்வரையினுடைய பரிபாகத்தை உபாயாத்யவஸாய

தசையிலே நின்று தர்சித்தவநந்தரம் அது பகவதநந்யார்ஹை யானமையறியாதே அந்ய விஷயத்துக்கு மர்ஹமோவென்று நிரூபிக்க, அவ்வளவிலே ஸம்பந்த ஜ்ஞாநம், இதுக்கு அந்ய சேஷத்வ ப்ரஸங்கமும் ஸ்வரூபம் நாசகம் சேஷியானவனுடைய போக்யதையாலும் அது தன்னை யொழியவும் நிருபாதிக சேஷத்வத்தாலும் இவ்வஸ்து அவனுக்கே சேஷமென் றுறுதியிட்ட "கருமாணிக்க மலை"யுமாகிற தோழிப் பேச்சான இம்மூன்று திருவாய்மொழியிலும் அநந்யார்ஹ சேஷத்வம் தோன்றுமென்கை. ஆகவித்தால், தோழியானவள் வெறிவிலக்கியும், ஆசையறுத்தும், அறத்தோடு நின்றும், இவ்வஸ்து - அந்யசேஷமுமன்று, ஸ்வசேஷமுமன்று, பகவதேக சேஷமென்று சொன்ன இம்மூன்று திருவாய்மொழியும், ஸம்பந்தஜ்ஞாநதசையில் பேச்சென்னுமிடம் ஸம்ப்ரதிபந்ந மென்றதாயிற்று.

**விளக்கம்** – (அறத்தொடு நின்ற) - நாயகியின் திருமண வயதை அறிந்த உறவினர்கள் அவளுடைய ஸ்வயம்வரத்திற்காக அரசர்களை வரவழைக்கும் விதமாக மணமுரசை அறிவித்தனர். அப்போது திருப்புலியூரில் உள்ள ஸர்வேச்வரனோடு நாயகிக்கு ஏற்பட்ட சேர்க்கையை நாயகியின் வடிவிலும் பேச்சிலும் உண்டான மாற்றங்கள் மூலம் அறிந்த கொண்ட அவளுடைய உயிர்த்தோழியான ஒருத்தி தனது மனதில், "இவள் நாச்சியார் திருமொழி (1-5) - மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் - என்பதற்கு ஏற்ப தன்மை கொண்டவளாக உள்ளாள். இந்நிலையில் இந்தச் செய்தி இவள் காதில் விழுந்தால் இவள் நமக்கு உயிருடன் கிடைக்கமாட்டாள். ஆகவே இவளைக் காப்பாற்ற வேண்டும்" என்று தீர்மானித்து உறவினர்களிடம் சென்றாள். அவர்களிடம் அந்தத் தோழி, "இவளுக்குத் திருப்புலியூரில் உள்ள ஸர்வேச்வரனுடன் சேர்க்கை உண்டானது என்று தோன்றுகிறது. அவனுடைய திருக்கல்யாண குணங்களையும், செய்கைகளையும் குறித்தே எப்போதும் வாய் ஓயாதபடி புலம்புகிறாள். இவ்விதம் உள்ளபோது நீங்கள் இவளுக்குத் திருமணம் செய்ய எண்ணுவது சரியல்ல", என்றாள். இதற்கு உறவினர்கள், "சரி, ஆனால் இவளுக்கு ஏற்றபடியான திருமேனி அழகு, ஆபரணங்களின் ஒளி போன்ற நாயகனுக்குத் தேவையான லக்ஷணங்கள் அவனுக்கு உள்ளதா?", என்று கேட்டனர். இதற்குத் தோழி, "அவை ஒன்றிலும் குறையில்லை. அவை அவனிடம் இல்லையென்றாலும், இவள் அவனுக்கு மட்டுமே வசப்பட்டவள் என்றான நிலையை மிகவும் தெளிவாகக் காணலாம். ஆகவே நீங்கள் செய்யும் இந்த ஏற்பாட்டைத் தவிர்ப்பீர்களாக", என்று நடுநிலை மாறாமல் தர்மம் உரைத்தாள். இப்படியாகத் திருமணத்தை விலக்கிய விதத்தைத்

திருவாய்மொழி (8-9-1) - கருமாணிக்க மலை – என்பதில் காணலாம். மேலும் இந்தத் திருவாய்மொழியில், “பேற்றினை அடையவேண்டும் என்ற வேகத்தின் முதிர்ந்த நிலையை, உபாயத்தின் உறுதி நிலையில் கண்ட பின்னர், அது பகவானுக்கு மட்டுமே உரிமையாகிவிட்டது என்பதை அறியாமல், மற்றவர்களுக்கு உரிமையாகலாமோ என்று ஆலோசிக்க, அப்போது உண்டாகும் ஸம்பந்த ஞானமானது, அந்த ஆத்மா வேறு ஒருவருக்கு அடிமை என்ற பேச்சு, அதன் ஸ்வரூபத்தை அழித்துவிடும் என்பதை உணர்த்துகிறது. மேலும் தனக்கு எஜமானனாகிய அவனிடம் உள்ள இனிமையாலும், அதனை அல்லாமல் வேறு எதனையும் காரணமாகக் கொண்டு ஏற்படாத அடிமைத்தன்மையாலும் இந்த ஆத்மா அவனுக்கு மட்டுமே அடிமையாகும்”, என்று கூறப்பட்டது. (மூன்றிலும் அநந்யார்ஹத்வம் தெரியும்) – தோழியின் சொற்களான இந்த மூன்று திருவாய்மொழிகளிலும், இந்த ஆத்மா மற்ற யாருக்கும் அடிமை இல்லை, அவனுக்கு மட்டுமே அடிமை என்னும் கருத்து வெளிப்பட்டது. ஆகவே இதன் மூலமாகத் தோழியானவள், “வெறிவிலக்கியும், ஆசை அறுத்தும், அறத்தொடு நின்றும்” என்பதற்கு ஏற்ப, மூன்று தன்மைகளால் இந்த ஆத்மாவானது மற்றவர்களுக்கு அடிமை அல்ல, தனக்குத்தானே அடிமை அல்ல, பகவானுக்கு மட்டுமே அடிமை என்று உரைத்த மூன்று திருவாய்மொழிகளும், அவள் “ஸர்வேச்வரன் – ஆத்மா” என்ற ஸம்பந்த ஞானத்துடன் கூறிய சொற்களே ஆகும் என்பது நன்றாக விளங்குகிறது.

**வ்யாக்யானம்** - (வாடிமெலிந் தித்யாதி) அதாவது ஆடியாடியிலே, “வாடிவாடும்” என்று அடியார்கள் குழாங்களையுடன் கூடப் பொறாமையால் வந்த க்லேசத்தாலே ஆச்ரயத்தை யிழந்த தளிர் போலே வாடி, பாலனாயேழுலகிலே “கண்ணன் கழல் துழாய் பொன்செய்ப் பூண் மென்முலைக்கென்று மெலியும்” என்று கைகழிந்தவற்றை யாசைப்பட்டு மெலிந்து, மண்ணையிருந்து துழாவியிலே “என் பெண் கொடியேறிய பித்தே” என்னும்படி ஸத்ருச பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாக நினைத்துக் கிட்டும்படி பித்தேறி, கடல் ஞாலத்திலே “ஈசன் வந்தேறக்கொலோ” என்று ஆற்றாமையாலே அநுகரிக்கிறமை யறியாதே ஈச்வர னாவேசித்தானோ வென்னும்படி அவனாகப் பேசி, மாலுக்கு வையத்திலே “கற்புடையாட்டி யிழந்தது கட்டே” என்னும்படி பகவதலாப க்லேசத்தாலே கட்டடங்கவிழந்து,

**விளக்கம்** – (வாடி) – திருவாய்மொழி (2-4-1) – ஆடியாடி - என்ற திருவாய்மொழியில் உள்ளதான (2-4-1) – வாடிவாடும் - என்பதற்கு ஏற்ப அடியார்கள் கூட்டத்தைத் தன்னால் அடையப்பெறாத காரணத்தால் ஏற்பட்ட துன்பம் காரணமாக ஆதாரத்தை இழந்த தளிர் போன்று வாட்டம் அடைந்து. (மெலிந்து) – திருவாய்மொழி (4-2) – பாலனாய் ஏழுலகில் – என்பதில் உள்ளதான (4-2-10) - கண்ணன் கழல் துழாய் பொன்செய்ப் பூண் மென்முலைக்கென்று மெலியும் – என்பதற்கு ஏற்ப கையை விட்டு அகன்றதைக் குறித்து அதில் மேன்மேலும் ஆசை கொண்டு உடல் மெலிந்து. (பித்தேறி) - திருவாய்மொழி (4-4) – மண்ணையிருந்து துழாவி – என்பதில் உள்ளதான (4-4-6) - என் பெண் கொடியேறிய பித்தே - என்பதற்கு ஏற்ப அவனைப் போன்று ஒப்புமை உள்ள பொருள்களையும், அவனுடன் ஸம்பந்தம் கொண்ட பொருள்களையும் அவனாகவே எண்ணி அடையும்படியாக புத்தி தடுமாறி. (ஏறப் பேசி) - திருவாய்மொழி (5-6) - கடல் ஞாலம் – என்பதில் உள்ளதான (5-6-1) – ஈசன் வந்தேறக்கொலோ - என்பதற்கு ஏற்ப பிரிவாற்றாமை காரணமாகப் புலம்புவது அறியாமல், தன்னுள் ஸர்வேச்வரன் வந்து புகுந்தான் என்று கூறும்படியாக அவனாகவே பேசி. (கட்டிழந்து) - திருவாய்மொழி (6-6) – மாலுக்கு - என்பதில் உள்ளதான (6-6-10) – கற்புடையாட்டி யிழந்தது கட்டே - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனைப் பிரிந்த துன்பம் காரணமாகச் சரீரம் முழுவதையும் இழந்து.

**வ்யாக்யானம்** – உண்ணுஞ்சோற்றிலே "இன்றெனக் குதவா தகன்ற" என்று தன்னைப் பிரிந்து க்லேசப்படுகிற இவ்வாபத் தசையில் எனக்கு உதவாதே போனாளென்னும்படி அகன்று, கங்குலும் பகலிலே "சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த தையல்" என்னும்படி அவனைக் கிட்டி அவன் ஸந்நிதியிலே முடியவேணுமென்று வ்யவஸிதையானமை உபாஸகர்க்குப் பரபக்தி தசையிலுண்டாம் க்லாநி கார்ச்யாதிகள் போலே ஸாதநத்திலே முதலிடுமோவென்று மாதாவானவ ளஞ்சி, அவன் தன்னையும் வினவ வந்தவர்களையும் குறித்து வாடா நின்றாள், மெலியா நின்றாள் என்றாற்போலே முறைப்பட்டு "முறையோ வரவணை மேல் பள்ளி கொண்ட முகில்வண்ணனே" என்று அத்தலையில் க்ருபையொழிய இவள் பக்கலுள்ளவை ஒன்றும் ஹேதுவல்ல; ஆனபின்பு இவளை இப்படித் துடிக்க விட்டிருக்கை உம்முடைய க்ருபைக்கும் ரக்ஷகத்வத்துக்கும் போருமோவென்று கூப்பிடுகிற ஏழு திருவாய்மொழிகளிலும் உபாயாத்யவஸாயம் தோன்றுமென்கை. இத்தால், தாய்ப்பேச்சான ஏழு திருவாய்மொழியும் உபாயாத்யாஸாயதசையில் பேச்சென்னுமிடம் ஸ்பஷ்டமென்றபடி.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (அகன்று) – திருவாய்மொழி (6-7) – உண்ணும் சோறு – என்பதில் உள்ளதான (6-7-6) – இன்று எனக்கு உதவாது அகன்ற - என்பதற்கு ஏற்ப தன்னைப் பிரிந்து துன்பப்படுகின்ற இந்த ஆபத்து நிலையில், எனக்கு உதவாமல் போனாள் என்னும்படியாக அகன்று சென்று. (சார்வதே வலிமை) - திருவாய்மொழி (7-2) – கங்குலும் பகலும் – என்பதில் உள்ளதான (7-2-5) – சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த தையல் - என்பதற்கு ஏற்ப அவனை அடைந்து அவனுடைய அருகிலேயே உயிரை விடவேண்டும் என்று உறுதியாக உள்ள தன்மை. (ஸதனம் ஆமோ என்று) – உபாஸகர்கள் பரபக்தி நிலையை அடையும்போது அவர்களுக்கு உண்டாகின்ற வாட்டம், மெலிந்து போகுதல் முதலானவைகள் போன்று இவளுக்கும் இவை ஸாதனத்தில் வந்து நிற்குமோ என்று. (மாதா அஞ்சி முறைப்பட்டு) - தாயானவள் அச்சம் கொண்டு அவனையும், அவனைக் குறித்து வினவ வந்தவர்களையும் குறித்தும் இவள் "வாடியபடி நின்றாள், மெலிந்து நின்றாள்" என்பதும் போன்று. (முறைப்பட்டு முறையிடுகிற எழில்) – திருவிருத்தம் (62) - முறையோ அரவணை மேல் பள்ளி கொண்ட முகில்வண்ணனே - என்பதற்கு ஏற்ப அவனிடம் உள்ள க்ருபை அல்லாமல் இவளிடம் எந்தவிதமான செய்கைகளும் உபாயத்தில் சேராது; இப்படி உள்ளபோது இவ்விதம் இவளைத் துடிக்கும்படிச் செய்தல் என்பது உனது க்ருபைக்கும் பாதுகாக்கும் தன்மைக்கும் ஏற்புடையாயதாகுமோ என்று அழைக்கின்ற ஏழு திருவாய்மொழிகளிலும். (அத்யவ்யஸாயம் தெரியும்) - உபாயத்தில் உள்ள உறுதி வெளிப்படும் என்று கருத்து. ஆக இதன் மூலம், தாயுடைய சொற்களாக அமைந்துள்ள ஏழு திருவாய்மொழிகளும், உபாயத்தில் உறுதியுடன உள்ள நிலையில் வெளிப்பட்ட பேச்சுக்கள் என்பது தெளிவாகிறது.

**வ்யாக்யானம்** – (புத்ரியித்யாதி) அதாவது, தலைமகளானவள், "அஞ்சிறைய மடநாரை", "வைகல் பூங்கழி", "பொன்னுலகாளீர்", "எங்கானல்" என்கிற நாலு திருவாய்மொழிகளிலும் க்ரமப்ராப்தி பற்றாமல் தூதுவிட்டு, வாயுந்திரையுகளிலே "ஆற்றாமை சொல்லி யழுவோமை" என்று ஸகல பதார்த்தங்களும் பகவதலாபத்தாலே நோவுபடுகிறனவாகக் கருதி, அவற்றை ஸமதுக்கிகளாகக் கொண்டழுது, ஏறாளுமிறையோனிலே "மாறாளன் கவராத மணிமாமை குறைவிலம்" என்று அவன் விரும்பாதவற்றை யுபேக்ஷித்து, மாசறு சோதியிலே "நாடுமிரைக்கவே – யாமடலூர்தும்" என்று ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி

மடலூர்வனென்று, ஊரெல்லாம் துஞ்சியிலே “பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடுமால் முன்னின்றிராவூழி கண்புதைய மூடிற்றால்” என்று ப்ரேம வ்யாதியும் ராத்ரியாகிற கல்பமும் க்ருத ஸங்கேதிகளாய் சூழப்பொருகையாலே போக்கடியற்று, எங்ஙனேயோவிலே “சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு வென்னெஞ்சுள்ளெழும்” என்று தேஜஸ் தரங்கமத்யே நெஞ்சிலே ப்ரகாசிக்க, மானேய் நோக்கிலே “திருவல்லவாழுறையும் கோனாரை அடியேனடி கூடுவதென்று கொல்” என்று அவனைக் கூடும் நாளை ப்ரார்த்தித்து, இப்படி ப்ரார்த்தியாநிற்கவும் தாழ்த்து வந்தவாறே மின்னிடை மடவாரிலே “போகு நம்பீ” என்று ப்ரணய ரோஷத்தாலேயூடி, வெள்ளைச் சுரிசங்கிலே “என்னெஞ்சினாருமங்கே யொழிந்தார் - இனியாரைக் கொண்டென்னுசாகோ” என்று அபஹ்ருத சித்தையாகையாலே உசாத்துணையுமின்றி, ஏழையராவியிலே “கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றனவே” என்று உருவெளிப்பாட்டாலே பாதக வர்க்கம் ஒருமுகமாய் நலிய, நாங்கள் வரிவளையிலே “காலம் பல சென்றும் காண்பதாணை யுங்களோ டெங்களிடையில்லை” என்று ஹிதம் சொல்லுகிற தாய்மார் தோழிமாரை அதிக்ரமித்து, இன்னுயிர்ச் சேவலிலே “இழை நல்ல வாக்கையும் பையவே புயக்கற்றது” என்று போலி கண்டு நொந்து முடிகையிலே வ்யவஸிதையாய், மல்லிகை கமழ் தென்றலிலே ஸந்த்யாகாலத்தில் க்ருஷ்ணனைப் பசுக்களின் முற்கொழுந்தில் வரக்காணாமல் பாதக பதார்த்தங்களாலே நலிவுபட்டு, வேய்மரு தோளிணையிலே ப்ராத: காலத்திலே க்ருஷ்ணன் பசு மேய்க்கப் போனானாக அதிசங்கை பண்ணி, அவன் முகத்தைப் பார்த்து, நீ பசு மேய்க்கப் போனால் நலியக்கடவ பாதக பதார்த்தங்கள் நலியாநின்றதென்று கூப்பிடுகிற பதினேழு திருவாய்மொழிகளிலும், ப்ராப்ய த்வரை தோன்றுமென்கை. இத்தால் தலைமகள் பேச்சான பதினேழு திருவாய்மொழிகளும் ப்ராப்ய த்வராதசையில் பேச்சென்னுமிடம் வ்யக்தமென்றபடி.

**விளக்கம்** – (புத்ரி பலகால் ஆள்விட்டு) - நாயகியானவள், திருவாய்மொழி (1-4-1) - அஞ்சிறைய மடநாரை – என்றும், (6-1-1) – வைகல் பூங்கழி - என்றும், (6-8-1) – பொன்னுலகாளீர் - என்றும், (9-7-1) – எங்கானல் - என்றும் உள்ள நான்கு திருவாய்மொழிகளிலும், நாயகன் வரும்வரை காத்திருக்க இயலாமல் அவனுக்குத் தூதுவிட்டு. (ஆற்றாமை சொல்லி) - திருவாய்மொழி (2-1) – வாயும் திரையுகளில் - என்றுள்ள திருவாய்மொழியில் உள்ளதான (2-1-7) - ஆற்றாமை சொல்லி அழுவோமை - என்பதற்கு ஏற்ப, அனைத்து பொருள்களும் ஸர்வேச்வரனைப் பிரிந்து துன்பம் அடைந்து

துக்கத்தில் இருப்பதாக எண்ணி, அவற்றையும் தன்னைப் போன்ற துக்கம் கொண்டவைகளாகக் கொண்டு புலம்பி. (கவராதவைவிட்டு) - திருவாய்மொழி (4-8) – என்பதில் உள்ளதான (4-8-1) – மாறாளன் கவராத மணிமாமை குறைவிலம் - என்பதற்கு ஏற்ப அவனால் விரும்பப்படாமல் உள்ளவற்றைத் தானும் வெறுத்து. (இரைக்க மடல் எடுத்து) - திருவாய்மொழி (5-3) – மாசறு சோதி – என்பதில் உள்ளதான (5-3-10) – நாடுமிரைக்கவே யாம் மடலூர்தும் – என்பதற்கு ஏற்ப உலகம் இரைக்கும்படியாக மடல் ஊர்வேன் என்று. (கண்புதையப் போக்கற்று) - திருவாய்மொழி (5-4) – ஊரெல்லாம் துஞ்சி - என்பதில் உள்ளதான (5-4-6) – பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடுமால் முன்னின்றிராவூழி கண்புதைய மூடிற்றால் – என்பதற்கு ஏற்ப காதல் நோயானது இரவுப்பொழுது என்பது கல்பம் போன்று பெரிதாக இவளை வருத்துவது என்ற ஒரே செயலில் நோக்கம் கொண்டதாக சூழ்ந்து நிற்பதால், செல்லும் இடம் அறியாமல். (உருநெஞ்சுள் எழ) – (5-5) – எங்ஙனேயோ – என்பதில் உள்ளதான (5-5-10) - சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு என்னெஞ்சுள் எழும் – என்பதற்கு ஏற்ப ஒளிவெள்ளம் என்ற அலைகளுக்கு நடுவில் ஒளிப்பிழம்பு போன்று காணப்படுவதான, இந்த உலகத்துப் பொருள்களுடன் தொடர்பு அற்றதான அவனுடைய திருமேனியானது அன்பு மற்றும் அன்பற்ற நிலை ஆகிய அனைத்தும் ஒரே போன்று நிற்கும்படியாக நெஞ்சத்தில் ப்ரகாசிக்க. (கூடுநாள் தேடி) - திருவாய்மொழி (5-9) – மானேய் நோக்கி - என்பதில் உள்ளதான (5-9-1) - திருவல்லவாழுறையும் கோனாரை அடியேனடி கூடுவதென்று கொல் - என்பதற்கு ஏற்ப அவனுடன் சேரும் நாளை ப்ரார்த்தனை செய்து, அந்த ப்ரார்த்தனையில் நிலை நின்றபோது அவன் காலதாமதம் செய்து வந்ததால். (தாழ்த்ததுக்கு ஊடி) – திருவாய்மொழி (6-2) – மின்னிடை மடவார் - என்பதில் உள்ளதான (6-2-1) – போகு நம்பீ - என்பதற்கு ஏற்ப காதல் காரணமாக உண்டான கோபத்தால் ஊடி. (உசாத்துணை அற்று) – திருவாய்மொழி (7-3) – வெள்ளைச் சுரிசங்கு - என்பதில் உள்ளதான (7-3-4) - என்னெஞ்சினாருமங்கே யொழிந்தார் இனியாரைக் கொண்டென்னுசாகோ – என்பதற்கு ஏற்ப அவனாலே கவரப்பட்ட சிந்தனை கொண்டவள் என்பதால் வேறு வழித்துணை யாரும் இன்றி. (சூழவும் பகைமுகம் செய்ய) – திருவாய்மொழி (7-7) – ஏழையராவி - என்பதில் உள்ளதான (7-7-8) - கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றனவே – என்பதற்கு ஏற்ப அவனைப் போன்றே உள்ளதன் காரணமாகத் துன்புறுத்துகின்ற பொருள்கள் ஒரு பக்கம் துன்புறுத்த. (தடை நில்லாதே) – திருவாய்மொழி (8-2) - நங்கள் வரிவளை – என்பதில் உள்ளதான (8-2-7) - காலம் பல

சென்றும் காண்பதாணை யுங்களோ டெங்களிடையில்லை – என்பதற்கு ஏற்ப தனக்கு நன்மையை உரைக்கின்ற தாய்மார்கள் மற்றும் தோழிகளுடைய சொற்களை மீறி. (புயக்கற்று) – திருவாய்மொழி (9-5) – இன்னுயிர்ச்சேவல் - என்பதில் உள்ளதான (9-5-10) – இழை நல்ல வாக்கையும் பையவே புயக்கற்றது – என்பதற்கு ஏற்ப அவனைப் போன்றே உள்ள பொருள்களைக் கண்டு நொந்து உயிர் துறப்பது என்று தீர்மானித்தவளாக. (மாலையும் காலையும் பூசல் இடுகிற) – திருவாய்மொழி (9-9) – மல்லிகை கமழ் தென்றல் - என்ற திருவாய்மொழியில் மாலைப் பொழுதானவுடன் பசுக்கூட்டங்கள் திரும்பும்போது அவற்றின் முன்பு க்ருஷ்ணனைக் காணாமல் தன்னை வருத்தும் பல பொருள்களால் மேலும் துன்பம் அடைந்து, திருவாய்மொழி (10-3) – வேய்மரு தோளிணை – என்ற திருவாய்மொழியில், காலைப்பொழுதில் பசுக்களை மேய்க்க க்ருஷ்ணன் புறப்படும்போது அவனிடம், "நீ பசு மேய்க்கச் செல்லும்போது என்னை அனைத்துப் பொருள்களும் துன்புறுத்துகின்றன", என்று அவனை அழைத்தபடி செல்கின்ற. (பதினேழில் துவரையும் தெரியும்) – இப்படியாகக் கூறப்பட்ட பதினேழு திருவாய்மொழிகளில், பேற்றில் உள்ள பதற்றமானது வெளிப்படுகிறது என்று கருத்து. இதன் மூலம் நாயகி உரைப்பதான பதினேழு திருவாய்மொழிகளும் பேறு கிட்டவேண்டும் என்ற பதற்றம் காரணமாக நின்ற நிலையில் உரைத்த சொற்கள் என்பது தெளிவாகிறது.

135. தோழிமாரன்னையரென்கிற பன்மை ரக்ஷகத்வாதி பந்த வாத்ஸல்யாதி வ்யவஸாய புத்தி பேதத்தாலே.

**அவதாரிகை** - ஆனால் தோழியென்றும் தாயென்றும் சொல்லுகிறது ஸம்பந்த ஜ்ஞாநத்தையும் உபாயாத்யவஸாயத்தையுமாகில் தத் தத் விஷயமான பன்மைச்சொலவுக்குத் தாத்பர்யமேதென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (தோழிமாரென்று தொடங்கி).

**விளக்கம்** – ஆனால் தோழி மற்றும் தாய் என்பதன் மூலம் ஸம்பந்த ஞானம் மற்றும் உபாயத்தில் உள்ள உறுதி ஆகியவை கூறப்படுகின்றன என்றால், அவற்றைத் தோழிமார், தாய்மார் என்று பன்மையில் ஏன் கூறவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

 Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது "தோழிமார்களு மன்னையரும்", "அன்னையரும் தோழியரும்", "தோழிமார் விளையாடப் போதுமினென்ன", "அன்னையர் நாண", "ஊரென் சொல்லிலென் தோழிமீர்", "எங்ஙனேயோ வன்னைமீர்காள்" என்று இப்படி தோழி தாய் விஷயமாகச் சொல்லுகிற பன்மை - திருமந்த்ரத்திற் சொல்லுகிறபடியே இவ்வாத்மாவோடு ஈச்வரனுக்கு ரக்ஷகத்வ சேஷித்வ காரணத்வ சரீரித்வாதி ஸம்பந்தங்கள் பலவுமுண்டாகையாலே அவ்வோ ஸம்பந்தங்களை விஷயீகரித்த ஜ்ஞாநத்தினுடைய பேதத்தாலும், உபாயபூதனான அவனுடைய வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்ய ஜ்ஞாந சக்தி க்ருபாதிகளைப் பற்றி வரும் வ்யவஸாய ரூபமான ஜ்ஞாநத்தினுடைய பேதத்தாலுமென்கை. புத்தி சப்தம் – ஜ்ஞாநவாசி; "புத்திர் மநீஷா திஷணாதீ: ப்ரஜ்ஞா சேமுஷீ மதி:" என்னக்கடவதிறே. இத்தால் ஸம்பந்த ஜ்ஞாநத்துக்கும் உபாயாத்யவஸாயத்துக்கும் விஷயபேதத்தாலே வ்யக்தி பேதமுண்டாகையாலே தத்தத் விஷய பஹுவசன ப்ரயோகத்துக்குக் குறைவில்லை யென்றதாயிற்று.

**விளக்கம்** – (தோழிமார் என்கிற பன்மை) – திருவாய்மொழி (5-5-9) – தோழிமார்களும் அன்னையரும் – என்றும், (5-4-5) – தோழியரும் – என்றும், (6-2-8) – தோழிமார் விளையாடப் போதுமினென்ன – என்றும், (5-3-6) - ஊரென் சொல்லிலென் தோழிமீர் - என்றும் உள்ள பலவற்றிலும், தோழி விஷயமாகப் பன்மையில் கூறியது ஏன் என்றால், (ரக்ஷகத்வாதி பந்த புத்தி பேதத்தாலே) - திருமந்த்ரத்தில் கூறுவதற்கு ஏற்ப ஆத்மாவுடன் ஸர்வேச்வரனுக்கு காப்பாற்றும் தன்மை, எஜமானத்தன்மை, உண்டாக்கிய காரணமாக இருத்தல், சரீரமாகக் கொண்டிருத்தல் போன்ற பல ஸம்பந்தங்கள் உண்டு என்பதால், அந்தந்த ஸம்பந்தங்கள் குறித்த ஞானத்தின் வேற்றுமையை உணர்த்தவே ஆகும் [அல்லது ஞானத்தின் வேற்றுமை காரணமாக ஆகும்]. (அன்னையர் என்கிற பன்மை) - திருவாய்மொழி (5-5-9) – அன்னையரும் – என்றும், (5-4-5)- அன்னையரும் - என்றும், (5-3-8) - அன்னையர் நாண – என்றும், (5-5-1) – எங்ஙனேயோ வன்னைமீர்காள் - என்றும் உள்ள பலவற்றிலும் தாய் விஷயமாகப் பன்மையில் கூறியது ஏன் என்றால், (வாத்ஸல்யாதி வ்யவஸாய புத்தி பேதத்தாலே) - உபாயமாக உள்ள ஸர்வேச்வரனுடைய வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், சௌசீல்யம், ஸௌலப்யம், ஞானம், சக்தி, க்ருபை போன்ற பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு வருவதான உபாயத்தில் உள்ள உறுதி என்பதான ஞானத்தின் வேற்றுமைகளால் ஆகும். புத்தி என்ற சொல்லானது, ஞானத்தைக் கூறுவதாகும். அமரகோசத்தில் - புத்திர் மநீஷா திஷணாதீ: ப்ரஜ்ஞா சேமுஷீ மதி: - புத்தி,

 **Email:**sridharan_book@yahoo.co.in

மநீஷா, தீக்ஷ்ணா, தீ, ப்ரஜ்ஞா, சேமுஷீ, மதி போன்றவை ஒத்த பொருள் உடையவை – என்றது காண்க. ஆக, இதன் மூலம் ஸம்பந்த ஞானம் மற்றும் உபாயத்தில் உள்ள உறுதி ஆகியவற்றுக்கு விஷய வேறுபாடுகள் காரணமாக அவற்றின் ஸ்வரூபத்திலும் மாறுபாடு உள்ளது என்பதால், தோழிமார் எனபது போன்று பன்மையில் கூறியதில் எந்தவிதமான தோஷமும் இல்லை என்றாகிறது.

136. அபிலாஷா சிந்தநாநுஸ்ம்ருதீச்சா ருசி பர பரம பக்திகளிலே பேதை முதலான பருவம் கொள்ளும்.

**அவதாரிகை** - தலைமகளென்கிறது ப்ராப்யத்வரையையாகில் தலைமகளுக்குச் சொல்லும் பருவமேழும் இங்குக் கொள்ளும்படி யென்னென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார் (அபிலாஷாத்யாதி).

**விளக்கம்** – பேற்றினை அடைவதில் உள்ள பதற்றம் என்பதே இங்கு தலைமகள் என்று கூறப்படுவதாகக் கொண்டால், அவளுக்கு உரைக்கப்படும் ஏழு பருவங்களை (வயதில் உள்ள பிரிவுகளை) இங்கு கொள்வது எப்படி என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநுபாவ்யவிஷய ப்ரதம தர்சநத்தில் பிறக்கும் ஆசையாகிற அபிலாஷையும், த்ருஷ்டமான அவ்விஷயத்திலுண்டாம் ஸ்மரணமாகிற சிந்தனையும், அந்த ஸ்மரண அநவரதம் நடக்கையாகிற அநுஸ்ம்ருதியும், அவ்விஷயத்தை அவச்ய மநுபவித்தே நிற்கவேணுமென்னுமாசையாகிற இச்சையும், அவ்வாசைதான் ரஸாந்தரத்தால் மாற்றவொண்ணாதபடி முதிருகையாகிற ருசியும், அவ்விஷயத்தில் ஸம்ச்லேஷ விச்லேஷங்களே ஸுகதுக்கங்களாகையாகிற பரபக்தியும், அவ்விஷயத்தினுடைய விச்லேஷத்தில் ஸத்தை கிடவாதொழிகையாகிற பரமபக்தியுமாகிற ஏழவஸ்தையிலும், “பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண்” என்கிற ஏழு பருவமும் தலைமகளான ப்ராப்ய த்வரைக்குக் கொள்ளுமென்றபடி. இத்தால் பக்தி ரூபையான ப்ராப்ய த்வரைக்கு பக்தியினுடைய ப்ரதம தசை தொடங்கி சரம தசாபர்யந்தமான அவஸ்தா விசேஷங்களிலே பர்வ ஸப்தகமும் கொள்ளலாமென்றதாயிற்று.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (அபிலாஷா) - அனுபவிக்கத்தக்க பொருளை முதன்முதலில் பார்த்தவுடன் ஏற்படுகின்ற ஆசை என்னும் அபிலாஷையும். (சிந்தநா) - அவ்விதம் பார்க்கப்பட்டதான அந்தப் பொருளைக் குறித்த நினைவுகள் என்னும் சிந்தனையும். (அநுஸ்ம்ருதி) அத்தகைய நினைவானது சிறிதும் இடைவெளி இன்றி தொடர்ந்தபடி உள்ளதான நிலையும். (இச்சா) – அந்தப் பொருளை நிச்சயமாக அனுபவித்தே தீரவேண்டும் என்ற ஆசையாகிற இச்சையும். (ருசி) - அந்த ஆசை என்பது, அதனைப் போன்றே வேறு இன்பம் அளிக்கவல்ல பொருளில் மனதை மாற்ற இயலாமல் முதிர்ந்து நிற்பதாகிற ருசியும். (பரபக்தி) அந்தப் பொருளை அடைதல், பிரிதல் என்பதே இன்பம் மற்றும் துன்பம் என்றாகிற பக்தியும். (பரமபக்தி) – அந்தப் பொருளைப் பிரிய நேர்ந்தால் இருப்பு என்பது இல்லாமல் போகின்ற பரமபக்தி என்பதான ஏழு நிலைகளிலும். (பேதை முதலான பருவம் கொள்ளும்) - பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் - என்பதான ஏழு பருவங்களும் பேற்றை அடைவதில் உள்ள பதற்றம் என்று தலைமகளுக்குக் கொள்ளப்படும். இதன் மூலம் பக்தி ரூபமாக உள்ளதான பேற்றினை அடைவதில் உள்ள பதற்றத்துக்கு, பக்தியின் முதல் நிலை தொடக்கமாக இறுதி நிலை முடிய உள்ள நிலைகளில் ஏழு பருவங்களையும் கொள்ளலாம் என்றானது.

137. மயில் பிறை வில் அம்பு முத்துப்பவளம் செப்பு மின் தேரன்னம் தெய்வவுரு விகாஸ சுத்தி தாந்தி ஜ்ஞாநாநந்தாநுராக பக்த்யனுத்வ போக்யதா கதிகளையுடைய அகமேனியின் வகுப்பு.

**அவதாரிகை** - இனி தலைமகளான வவஸ்தையில் வர்ணிக்கு மவயவ விசேஷங்கள் எவை யென்னுமாகாங்க்ஷையிலே அத்தை தர்சிப்பிக்கிறார் (மயில்பிறையென்று தொடங்கி).

**விளக்கம்** – பேற்றினை அடைவதில் உள்ள பதற்றம் என்பதைத் தலைமகளாகக் கொள்ளும்போது, அவளுடைய அவயவங்களை வர்ணிப்பதன் மூலம் உணர்த்தப்படும் பொருள் என்ன என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “தோகைமாமயிலார்கள்” என்று ஸ்த்ரீகளை மயிலாகச் சொல்லுகிறது அலகபார விஸ்த்ருதியை யிட்டாகையாலே. அத்தால் இங்கு ஆத்மாவினுடைய ஜ்ஞாந விகாஸத்தைச் சொல்லுகிறது. “பிறையுடை வாணுதல்” என்று


Email:sridharan_book@yahoo.co.in

நெற்றியைப் பிறையாகச் சொல்லுகையாலே அதன் தாவள்யத்தையிட்டு ஸ்வாதந்த்ர்யாந்ய சேஷத்வங்களாகிற தோஷ ஸ்பர்சமற்றிருக்கும் சுத்தியைச் சொல்லுகிறது. “விற்புருவக்கொடி” என்று பருவத்தை வில்லாகச் சொல்லுகிறது - வளைவையிட்டாகையாலே பாஹ்யாப்யந்தரகரண நியமந ரூப தாந்தியைச் சொல்லுகிறது. “அம்பன்ன கண்ணாள்” என்று கண்ணை லக்ஷ்யபாதியான அம்பாகச் சொல்லுகையாலே “தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு” என்று தனக்கடைத்த விஷயத்தை அவலம்பித்த ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது.

**விளக்கம்** - (மயில் விகாஸ) – திருவாய்மொழி (6-2-2) – தோகைமாமயிலார்கள் - என்பதற்கு ஏற்ப பெண்களை மயிலாக வர்ணித்தல் என்பது அவர்களுடைய கூந்தலின் பரப்பை முன்னிட்டு என்பதால் ஆகும். ஆக இங்கு ஆத்மாவுடைய ஞானமலர்ச்சியைக் கூறுகிறார். (பிறை சுத்தி) - பெரியதிருமொழி (2-9-9) - பிறையுடை வாணுதல் – என்பதற்கு ஏற்ப நெற்றியைப் பிறையாக உரைப்பதன் மூலம் அதன் வெண்மை கூறப்பட்டு, தான் தனக்கு அடிமையாக இருத்தல் மற்றும் மற்றவர்களுக்கு அடிமையாக இருத்தல் போன்றதான தோஷம் ஏதும் இன்றி உள்ளதான ஆத்ம தூய்மையைக் கூறுகிறார். (வில் தாந்தி) – திருவாய்மொழி (6-6-6) – விற்புருவக்கொடி - என்பதற்கு ஏற்ப புருவங்களை வில் என்று கூறுகிறது. இது வளைந்துள்ள தன்மையால் கூறப்படுகிறது. இதன் மூலம் புற இந்த்ரியங்களையும் அந்தகரணத்தையும் அடக்கி ஆளுதல் என்பதை உணர்த்துகின்ற அமைதி கூறப்படுகிறது. (அம்பு ஞானம்) - பெரியதிருவந்தாதி (6-8-6) – அம்பன்ன கண்ணாள் - என்று கண்களை சரியாக இலக்கைச் சென்று தாக்கும் அம்பு எனக் கூறுவதால், முதல் திருவந்தாதி (67) - தாமரையாள் கேள்வ ஒருவனையே நோக்குமுணர்வு - என்பதற்கு ஏற்ப தனக்கு இயல்பாகவே அமையப் பெற்ற விஷயமாகிய அந்தப் பரம்பொருளைப் பற்றும் ஞானத்தைக் கூறினார்.

**வ்யாக்யானம்** - “முத்தன்ன வெண்முறுவல்” என்று முறுவலை முத்தாகச் சொல்லுகையாலே “முத் ப்ரீதி: ப்ரமதோ ஹர்ஷ:” என்கிறபடியைக் கொண்டு அவ்விஷயாநுபவத்தா லுண்டான ஆனந்தத்தைச் சொல்லுகிறது. “பவள வாயாள்” என்று அதரத்தை ப்ரவாளமாகச் சொல்லுகிறது. சிவப்பை யிட்டாகையாலே, அவ்விஷயத்தைப் பற்ற வுண்டான அநுராகத்தைச் சொல்லுகிறது. “செப்பன்ன மென்முலை” என்று பரிணதமான முலையை செப்பாகச் சொல்லுகையாலே, சேஷி விரும்பி மேல்விழும்படி


Email:sridharan_book@yahoo.co.in

பரிணதையான பக்தியைச் சொல்லுகிறது. “மின்னனைய நுண்மருங்குல்” என்று இடையை மின்னாகச் சொல்லுகிறது நுண்மையை யிட்டாகையாலே, கீழ்ச் சொன்ன ஜ்ஞாநா வஸ்தா விசேஷங்களுக் கெல்லா மாதாரமான ஆத்மஸ்வரூபத்தின் அணுத்வத்தைச் சொல்லுகிறது.

**விளக்கம்** – (முத்து ஆனந்தம்) – நாச்சியார் திருமொழி (5-6) – முத்தன்ன வெண்முறுவல் – என்று புன்முறுவலை முத்து என உரைப்பதால், அமரகோசம் – முத் ப்ரீதி: ப்ரமதோ ஹர்ஷ: - முத் என்பது ப்ரீதி, ப்ரமதம், ஆனந்தம் என்று கூறப்படும் – எனக் கூறுவதால், அந்தப் பரம்பொருளை அனுபவிப்பதன் காரணமாக ஏற்படும் ஆனந்தத்தைக் கூறுகிறது. (பவளம் அநுராகம்) – பெரியதிருமொழி (4-8-1) – பவள வாயாள் – என்பதற்கு ஏற்ப உதட்டினைப் பவளம் என்று கூறுவது ஏனென்றால், அதன் சிவந்த நிறத்தால் ஆகும்; ஆக அந்தப் பரம்பொருளைக் காரணமாகப் பற்றி வரும் அன்பைக் கூறுகிறது. (செப்ப பக்தி) – திருப்பாவை (20) – செப்பன்ன மென்முலை - என்று நன்கு முதிர்ந்த ஸ்தனத்தைச் செப்பு என்று கூறுவதால், ஸர்வேச்வரன் மீது விழுந்து வணங்கியபடி உள்ளதான முதிர்ந்த பக்தியைக் கூறுகிறது. (மின் அணுத்வம்) - பெரியதிருமொழி (3-9-5) – மின்னனைய நுண்மருங்குல் – என்று இடுப்பை மின்னலாக வர்ணிப்பது, அதன் நுண்ணிய தன்மை காரணமாக என்பதால், இதுவரை கூறப்பட்ட ஞானத்தின் பல்வேறு நிலைகளுக்கும் ஆதாரமாக உள்ளதான ஆத்மஸ்வரூபத்தின் அணு போன்ற தன்மையைக் கூறியது.

**வ்யாக்யானம்** – “தேரணங்கல்குல்” என்கிற நிதம்ப வைலக்ஷண்யம் போக்தாவுக்கு போக்யமாயிருக்குமதாகையாலே “தேனும் பாலும் கன்னலுமமுதுமாகித் தித்தித்து” என்கிறபடியே சேஷிக்கு மிகவும் ரஸாவஹமாம்படி யிருக்கிற ஆத்மவஸ்துவின் போக்யதையைச் சொல்லுகிறது. “அன்னமன்ன நடையாள்” என்று அன்னத்தை யொப்பிடுகிறது நடையழகுக்காகையாலே, சேஷியும் ததீயரும் ச்லாகிக்கும்படி ஸ்வரூபாநு ரூபமாக நடக்கையாகிற கதியைச் சொல்லுகிறது.

**விளக்கம்** – (தேர் போக்யதை) பெரியதிருமொழி (1-4-6) – தேரணங்கல்குல் - என்பதனான அல்குலுடைய அழகானது, அனுபவிப்பவனுக்கு இனிமையாக இருக்கும் என்பதால், திருவாய்மொழி (4-3-10) - தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து - என்பதற்கு ஸர்வேச்வரனுக்கு மிகவும் இனிமையான பொருளாக உள்ள ஆத்மாவின் இனிமையைக்

கூறுகிறது. (அன்னம் கதி) - பெரியதிருமொழி (3-7-9) – அன்னமன்ன நடையாள் - என்று நடை அழகுக்கு உவமையாக அன்னத்தைக் கூறுவதால், எஜமானனாகிய ஸர்வேச்வரனும் அவனுடைய அடியார்களும் கொண்டாடும்படி ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றபடி நடத்தல் என்னும் ஒழுக்கம் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - ஆக இப்படி மயில்பிறையித்யாதி வர்ணனார்ஹாவயவ விசேஷ யுக்தமாய் “தெய்வவுரு” என்று அப்ராக்ருதமாகச் சொன்ன ரூபமாவது – ஜ்ஞாந விகாஸ சுத்த்யாதிகளுக்கு ஆச்ரயமாய், “அகமேனி” என்று ஆந்தரமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தின் வகுப்பென்றபடி; வகுப்பாவது – தர்மி தர்ம வைசிஷ்டியாலே ஏவம்பூத ரூபகார்ஹமாம்படி யிருக்கிற கட்டளை. கீழ் ப்ராப்ய த்வரையையன்றோ தலைமகளாகச் சொல்லிற்று; அவயவ வர்ணனையில் ஆத்மஸ்வரூப பரமாகச் சொல்லுவானென் னென்னில் - மூன்றவஸ்தையும் இவர் தமக்கேயாகையாலே தத்ததவஸ்தைகளோடு சேர்ந்த வேஷத்தாலே ஸகலமும் இவர்தாமேயாய் நின்று பேசுகையாலே ப்ராப்ய த்வரையை யடைந்து நிற்கிறவிவர் ஸ்வரூபத்துக்கே தலைமகளான நிலையாகையாலே அப்படி சொல்லக் குறையில்லை.

**விளக்கம்** – ஆகவே இப்படியாக மயில்பிறை என்பது போன்று வர்ணித்து உரைக்கத்தக்கபடியாக அவயவங்களுடைய சிறப்புகளைக் கொண்டதாகவும், திருவாய்மொழி (4-4-2) – தெய்வ உரு – என்று கூறுவதற்கு ஏற்ப இந்த உலகத்துடன் ஸம்பந்தம் அற்றதாகக் கூறப்பட்டதாகவும் உள்ள திருமேனியானது - ஞானமலர்ச்சி மற்றும் தூய்மை ஆகியவற்றுக்கு ஆதாரமாகவும், (அகமேனியின் வகுப்பு) - திருவாய்மொழி (9-7-10) – அகமேனி - என்பதற்கு ஏற்ப உள்ளே காணப்படுவதும் ஆகிய ஆத்மஸ்வரூபத்தின் வகுப்பு என்று கருத்து. வகுப்பு என்றால் “பண்புகள் – பண்புகள் கொண்டவன்” என்ற சேர்க்கை மூலமாக இப்படிப்பட்ட ரூபத்திற்குத் தகுதியாக உள்ள நிலை. ஆனால் பேற்றினை அடைவதில் உள்ள பதற்றம் என்பதே தலைமகளாகக் கூறப்பட்டது; இப்படி உள்ளபோது, அவயவங்களை வர்ணிக்கும் நேரத்தில், அந்தப் பதற்றத்தை ஆத்மஸ்வரூபமாக உரைப்பது ஏன்? இதன் காரணம், மேலே கூறப்பட்ட மூன்றுவிதமான நிலைமாறுதல்களும் [தோழி, தாய், தலைமகள்], நம்மாழ்வாருக்கே ஏற்படுவது என்பதாலும், அந்தந்த நிலைகளுடன் சேர்ந்து நிற்பதன் காரணமாக மூன்று நிலைகளும் இவராகவே நின்று உரைப்பதாலும், பேற்றினைப் பெறுவதில் பதற்றத்துடன்

நிற்கும் அவருடைய ஸ்வரூபத்திற்கே நாயகி என்ற நிலை உள்ளதாலும், இவ்விதம் கூறுவதில் தவறில்லை.

138. சூழ்ச்சி அகற்றினீரென்னும் பழி, இணக்கி எங்ஙனேயென்னும் மேலெழுத்து, முன்னின்றாய் இவளை நீரென்னும் இருபடைமெய்க்காட்டு, நீரென்னே யென்னு முடன்பாடு, இடையில்லை யென்னு முதறுதல், இருந்திருந்து நடந்தாளென்னும் கொண்டாட்டம் அவஸ்தா த்ரய வ்ருத்தி.

**அவதாரிகை** - ஆக, தோழி தாயென்னு மவஸ்தைகளிற் சொல்லும், பஹுவசனத்துக்கு விஷயங்களையும், தலைமகளான அவஸ்தையிற் சொல்லும் பருவங்களையும், அவயவ வர்ணனைகளையும் தர்சிப்பித்தாராய் நின்றார்கீழ். இவ்வவஸ்தா த்ரயத்தினுடைய வ்ருத்தி விசேஷங்களை யெல்லாரு மறியும்படி ப்ரகாசிப்பிக்கிறார்மேல் (சூழ்ச்சியென்று தொடங்கி).

**விளக்கம்** – தோழி, தாய் என்ற நிலைகளில் "தோழிமார், தாய்மார்" என்றுள்ளது போன்று பன்மைக்கு உள்ள விஷயங்கள், தலைமகள் என்ற நிலையில் கூறப்படும் பருவங்கள், அவயவங்களுடைய வர்ணனைகள் ஆகியவற்றை இதுவரை விரிவாக உரைத்தார். இந்த மூன்று நிலைகளுடைய [தோழி, தாய், தலைமகள்] செயல்களில் காணப்படும் வேறுபாடுகளை அனைவரும் அறியும்படியாக இனி விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "தோழிமார் பலர் கொண்டு போய்ச் செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்" என்று தோழிமாரன்றோ இவளைக்கொடுபோய் அவ்விஷயத்திலே அகப்படுத்தி இப்படியாக்கினார்களென்று தாயானவள் தோழிமார்மேலே பழியிடுவது, "துலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு அமுத மென்மொழியாளை நீருமக்காசையின்றி யகற்றினீர்" என்று அவ்வூரிலே கொண்டுபுக்கு அவ்விஷயத்தைக் காட்டி நீங்களேயன்றோ இவளை இப்படிக் கைகழியப் பண்ணினிகோளென்று தோழியானாவள் தாய்மார்மேலே பழியிடுவதாகிறவிதுவும்,


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (சூழ்ச்சி அகற்றினீரென்னும் பழி) – பெரியாழ்வார் திருமொழி (3-7-4) – தோழிமார் பலர் கொண்டு போய்ச் செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன் - என்பதற்கு ஏற்ப, நாயகியான இவளை ஸர்வேச்வரனிடம் அழைத்துச் சென்று, அவன் விஷயத்தில் சிக்க வைத்து, இந்த நிலைமைக்கு ஆளாக்கியவர்கள் இவளுடைய தோழிமார்களே ஆவர் என்று தாயானவள் அவர்கள் மீது பழி கூறுவதும்; திருவாய்மொழி (6-5-2) - துலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு அமுத மென்மொழியாளை நீருமக்காசையின்றி யகற்றினீர் – என்பதற்கு ஏற்ப, "திருத்தொலைவில்லிமங்கலத்துக்கு இவளை அழைத்துச் சென்று, அந்த இடத்தில் உள்ள ஸர்வேச்வரனை இவளுக்குக் காண்பித்து, இவளை இவ்விதம் அனைவரும் பழித்துப் பேசும்படியாகச் செய்தவர்கள் நீங்கள் அல்லவோ?", என்று தோழியானவள் தாய்மார் மீது பழி கூறுவதும் என்கிற இவையும்.

**வ்யாக்யானம்** – "இணக்கி யெம்மை யெம்தோழிமார் விளையாடப் போதுமினென்னப் போந்தோமை" என்று உன்னை வெறுக்கிறதென்? இணக்குப் பார்வையாய் நின்று உன்பக்கலிலே அகப்படுத்தின தோழிமாராலே வந்ததன்றோ விதென்பது, "எங்ஙனேயோ வன்னைமீர்காள் என்னை முனிவது நீர்" என்று எனக்கு அவ்விஷயத்தைக் காட்டி இப்ராவண்யத்தை விளைத்த தாய்மாரான நீங்கள் என்னைப் பொடிகிறபடி எங்ஙனேதா னென்பதாய் கீழ்ச்சொன்ன பழி இரண்டுக்கும் ஒக்குமென்றும் தலைமகள் மேலெழுத்திடுகையும்;

**விளக்கம்** – (இணக்கி எங்ஙனேயென்னும் மேலெழுத்து) "திருவாய்மொழி (6-2-8) - இணக்கி யெம்மை யெம்தோழிமார் விளையாடப் போதுமினென்னப் போந்தோமை – என்பதற்கு ஏற்ப என்னுடன் சரிசமமாக நின்று என்னை உன்னிடம் ஈடுபடுத்தியது எனது தோழிமார்களுடைய செய்கையால் ஆகும். அவர்களால் அல்லவோ எனக்கு இந்த நிலை வந்தது. இப்படி உள்ளபோது உன்னை [ஸர்வேச்வரன்] நான் ஏன் வெறுக்கவேண்டும்?" என்றும்; "திருவாய்மொழி (5-5-1) - எங்ஙனேயோ வன்னைமீர்காள் என்னை முனிவது நீர் - என்பதற்கு ஏற்ப எனக்கு ஸர்வேச்வரனைக் காண்பித்து, இப்படிப்பட்ட தீராத காதலை என்னிடம் உண்டாக்கிய தாய்மாராகிய நீங்கள் என்னைப் பழிப்பது எப்படிப் பொருந்தும்?", என்றும் கூறுவதற்கு ஏற்ப, மேலே கூறப்பட்ட பழிச்சொற்கள் தோழிமார், தாய்மார் ஆகிய இருவருக்குமே பொருந்தும் என்று தலைமகள் உரைப்பதும்.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – “முன்னின்றாயென்று தோழிமார்களு மன்னையரும் முனிதிர்” என்னும்படி இதுக்கு முன்பு ஒருவர் கண்படாமல் வளர்ந்து போந்த நீ இப்போதெல்லாரும் காணப்புறப்பட்டு முன்னே நின்றாயென்று, தோழி, தாய்மாரோடே கூடி நின்று தலைமகளைப் பொடிவது, “இவளை நீரினி யன்னைமீ ருமக்காசையில்லை விடுமினோ” என்று தாய்மார்க்குக் கார்யோபதேசம் பண்ணுவாரைப்போலே, தோழி, தலைமகளுக்குத் துணை செய்வதாய்க் கொண்டு இரண்டு தலைக்கும் ஒரொருபோதிலே ஸஹகரிக்கையாகிற இருபடைமெய்க்காட்டும்,

**விளக்கம்** – (முன்னின்றாய் இவளை நீரென்னும் இருபடைமெய்க்காட்டு) திருவாய்மொழி (5-5-9) - முன்னின்றாயென்று தோழிமார்களு மன்னையரும் முனிதிர் - என்பதற்கு ஏற்ப, தோழியானவள் தாய்மாருடன் சேர்ந்து கொண்டு தலைமகளிடம், “இதற்கு முன்பு யாருடைய கண்களிலும் படாமல் வளர்ந்த நீ, இப்போது அனைவரும் காணும்படியாக அவனுடன் நிற்கிறாய்”, என்று உரைக்கிறாள். திருவாய்மொழி (6-5-1) - இவளை நீர் இனி அன்னைமீர் உமக்கு ஆசையில்லை விடுமினோ – என்பதற்கு ஏற்ப தலைமகளுக்குத் துணை செய்யும் பொருட்டு தோழியானவள் தாய்மாருக்கு உபதேசம் செய்கிறாள். ஆக தோழியானவள் இரண்டு பேருக்கும் ஒவ்வொரு சூழ்நிலையில் உதவி செய்தல் என்பது இருபடைமெய்க்காட்டுதல் ஆகும்.

**வ்யாக்யானம்** – “அன்னையரும் தோழியரும் நீரென்னே யென்னாதே நீளிரவும் துஞ்சுவரால்” என்று தாய்மாரும் தோழிமாரும் இத்தசையில் என்னை ஆச்வஸிப்பியாதே இரவு முழுக்க உறங்காநின்றாகளென்று தாய்மாரோடும் தோழிமாரோடும் தலைமகளுக்குண்டான உடன்பாடும், “அன்னைமீர்க ளென்னுடைத் தோழியர்கா ளென்செய்தேன்” என்றவளவில் அவர்கள் எங்களைக் கேட்கில் மீளவமையுமென்ன, “உங்களோ டெங்க ளிடையில்லை” என்று இவ்விஷயத்தில் நின்றும் மீட்க நினைக்கிற உங்களோடு எனக்கொரு ஸம்பந்தமில்லையென்று இரண்டு தலையையு முதறுகையும்;

**விளக்கம்** – (நீரென்னே என்னும் உடன்பாடு) - திருவாய்மொழி (5-4-5) - அன்னையரும் தோழியரும் நீரென்னே யென்னாதே நீளிரவும் துஞ்சுவரால் – என்பதற்கு ஏற்ப, நான் உளள இந்த நிலையை உணர்ந்து என்னைத் தேற்றாமல், இரவு முழுவதும் தாங்கள் உறங்காமல் இருந்தனர் என்று தலைமகளுக்குத் தனது தோழிமாருடன் தாய்மாருடனும்

உண்டான உடன்பாடு. (இடையில்லை யென்னு முதறுதல்) - திருவாய்மொழி (8-2-7) – அன்னைமீர்கள் என்னுடைத் தோழியர்காள் என்செய்தேன் – என்பதற்கு ஏற்ப இவள் புலம்பும் நேரத்தில் அவர்கள் இவளிடம், “நீ அவனை விட்டு வருதல் நலம்” என்று கூறும்போது, இவள் அவர்களிடம், “திருவாய்மொழி (8-2-7) – உங்களோடு எங்கள் இடையில்லை - என்பதற்கு ஏற்ப இந்த விஷயத்திலிருந்து என்னைத் தள்ள எண்ணுகின்ற உங்களுடன் எனக்கு இனி ஒரு தொடர்பும் இல்லை” என்று கூறி இருவரையும் உதறுதலும்.

**வ்யாக்யானம்** – “இருந்திருந் தரவிந்தலோசனனென்றென்றே நைந்திரங்கும்” என்று ஒருகால் அரவிந்தலோசன னென்னும்போது பலஹாநியாலே நடுவே பலகாலிளைத் திருந்திருந்து அவன் கண்ணழகுக்கு வாசகமான அத்திருநாமத்தை இப்படிப் பலகாலும் சொல்லிச் சிதிலை யழியாநின்றாளென்று இவளதிப்ராவண்யத்தைக் கண்டு தோழி கொண்டாடுவது. “திருக்கோளூர்க்கே நேரிழை நடந்தாள்” என்று அவன் வர்த்திக்கிற தேசத்தைக் குறித்துப் போனாளென்ன வமைந்திருக்க, பகவத் ப்ராவண்யாதிசயத்தைப் பற்ற பஹுமாநம் பண்ணி நடந்தாளென்று தாயார் கொண்டாடுவதாகிறவிதுவும், தோழி தாய் மகளென்கிற அவஸ்தா த்ரயத்தினுடையவும் வ்யாபாரமென்றபடி.

**விளக்கம்** – (இருந்து இருந்து நடந்தாள் என்னும் கொண்டாட்டம்) - திருவாய்மொழி (6-5-8) – இருந்திருந்து அரவிந்தலோசனன் என்றென்றே நைந்து இரங்கும் - என்பதில், ஒருமுறை “அரவிந்தலோசநன்” என்று கூறினாலே தனது வலிமை குறைந்து பலமுறை இளைத்தபடி காணப்பட்டு, அவனுடைய திருக்கண்களின் அழகைக் கூறுவதான அந்தத் திருநாமத்தை இவ்விதம் பலமுறை உரைத்து, உருக்குலைந்து அழிகிறாள் என்று இவளுடைய அளவு கடந்த ப்ரேமத்தைக் கண்டு தோழி கொண்டாடுவது; திருவாய்மொழி (6-7-9) – திருக்கோளூர்க்கே நேரிழை நடந்தாள் – என்ற பாசுரத்தில் அவன் எப்பொழுதும் வசித்தபடி உள்ளதான திவ்யதேசத்தை எண்ணியவளாகச் சென்றாள் என்று கூறியபோதிலும், ஸர்வேச்வரனிடம் கொண்ட அளவு கடந்த ஈடுபாடு காரணமாக உயர்வு வெளிப்படச் சென்றாள் என்று தாயார் கொண்டாடுவது; (அவஸ்தா த்ரய வ்ருத்தி) – இவை அனைத்தும் தோழி, தாய், மகள் ஆகிய மூன்று நிலைகளின் செயல்பாடுகள் என்று கருத்து.

**வ்யாக்யானம் -** இதில் பழி, மேலெழுத்து என்கிறவிரண்டாலும் "அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி:" என்கிறபடியே சேஷவ்ருத்தி யந்வயமில்லாதபோது சேஷத்வ ஸித்தியில்லாமையாலே சேஷவ்ருத்தியிலே நோக்காயிருக்கும் ஸம்பந்த ஜ்ஞாநம் ப்ராப்ய ருசிக்கு ஹேதுவாகையாலும், விலக்ஷண குண விக்ரஹ விசிஷ்டமாய் உபேயமாயிருக்கிற வஸ்து தன்னையே தத் ப்ராப்த்யுபாயமாகப் பரிக்ரஹிக்கையாலே உபாயாத்யவஸாயம் உபாய வைலக்ஷண்யத்தை முன்னிட்டுக் கொண்டிருக்கையாலே உபேய ருசிக்கு ஹேதுவாகையாலும், இவற்றி லோரொன்றைப் பார்த்தால் இதுவே ப்ராப்ய த்வரா ஹேதுவென்னும்படி யிருக்கையும், ப்ராப்ய த்வரா வேஷந் தன்னை நிரூபித்தாலும் அவையிரண்டுமடியாக இது வந்ததென்று தோற்றும்படி யிருக்கையும் சொல்லுகிறது. இப்படி ஸம்பந்த ஜ்ஞாநமும் உபாயாத்யவஸாயமும் ப்ராப்ய த்வரைக்குக் காரணமா யிருக்கிறவிது ப்ரதமதசை.

**விளக்கம் –** மேலே கூறப்பட்டவற்றில் பழி மற்றும் மேலெழுத்து ஆகிய இரண்டின் மூலம் அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி: - கைங்கர்யத்தில் தொடர்பு இல்லையென்றால் அடிமைத்தன்மையை அடையும் மார்க்கம் ஏதும் இல்லை என்பதால், கைங்கர்யத்தில் மட்டுமே குறிக்கோள் உடையதாக உள்ள ஸம்பந்தஞானம் என்பது, கைங்கர்யம் என்ற இலக்கை அடைவதில் உள்ள ஆசைக்குக் காரணமாக உள்ளதாலும்; மிகவும் உயர்ந்த குணங்கள் மற்றும் அழகான திருமேனி ஆகியவற்றுடன் கூடியதாக உள்ளதும், அடையப்பட வேண்டியதும் ஆகிய அந்தப் பரமாத்மாவை மட்டுமே அதனை அடைவதற்கான உபாயமாக பற்றுவதால் அத்தகைய உபாயத்தில் உள்ள துணிவு [அல்லது நம்பிக்கை] என்பது அடையப்படும் இலக்காக உள்ள பரமாத்மாவின் மேன்மைகளை முன்னிட்டபடி உள்ளதால், அடையத்தக்கதான அந்தப் பரமாத்மா மீது ஏற்படுகின்ற ஆசைக்குக் காரணமாக உள்ளதாலும்; இவற்றில் எதனை நோக்கினாலும் அதுவே பேற்றை அடைவதில் உள்ள பதற்றத்திற்குக் காரணம் என்று தோன்றுவதாக உள்ள தன்மையும், பேற்றினை அடைவதில் உள்ள பதற்றத்தின் தன்மை இத்தகையது என்று நிரூபித்தபோதிலும் இந்தத் தன்மையானது ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே வந்தது என்று தோன்றுவதாக உள்ள தன்மையும் கூறப்பட்டது [அதாவது பழி, மேலெழுத்து என்பதால் இவை இரண்டும் கூறப்பட்டது].


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** - இருபடைமெய்க்காட்டு, உடன்பாடு என்கிறவிரண்டாலும் ஸம்பந்தஜ்ஞாநமானது - சேஷத்வம் ஸ்வரூபமான பின்பு, சேஷிதானே வந்து விஷயீகரிக்கக் கண்டிருக்கையொழியத் தான் பதறுகை ஸ்வப்ரயோஜனத்திலே முதலிடுகையாலே ஸ்வரூப விருத்தமென்னுமாகாரத்தாலே, ஸ்வப்ரவ்ருத்தி நிவர்த்தகமான உபாயாத்யவஸாயத்துக்கு ஸஹகரித்தும், இவ்வதி ப்ராவண்யம் உபாயத்திலே முதலிடில் செய்வதென்னென்று இத்த்வரையை நிவர்த்திப்பிக்கப் பார்க்கிற வுபாயாத்யவஸாயத்தை, ப்ராப்த விஷயத்தில் ப்ராவண்யம் ஸ்வரூபாதிரேகி யல்லாமையால், இது நிவர்த்தநீயமுமன்று; நிவர்த்திப்பிக்கத்தானும் போகாதென்று நிவர்த்தநோத் யோகத்தைக் குலைத்து ப்ராப்ய த்வரைக்கு ஸஹகரித்தும், இப்படி யிரண்டுக்கு மநுகூலிக்கத்தக்கதா யிருக்கும்படியும், சேஷிக்கு அதிசயகரமான கைங்கயத்தி லந்வயிப்ப தெப்போதோ வென்னுமத்தாலும், ஸித்தோபாயத்தைப் பற்றினார்க்கு விளம்பஹேது வில்லாமையாலே சீக்ரமாக ப்ராப்யத்தைப் பெறவேணுமென்னுமத்தாலும் செல்லுகிற ப்ராப்ய த்வரைக்கு ஸம்பந்தஜ்ஞாநமும் உபாயாத்யவஸாயமும் அநுகூலமா யிருக்கும்படியையும் சொல்லுகிறது. இப்படி ஸம்பந்தஜ்ஞாநம் உபய ஸஹகாரியாவது ப்ராப்ய த்வரைக்கு நிரோதகங்களான ஸம்பந்தஜ்ஞாநோபாயாத்யவஸாயங்கள் முகபேதேந தத்ததநுகூலங்க ளாவதாகிறவிது மத்யமதசை.

**விளக்கம்** – இப்படியாக ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகிய இரண்டும் பேற்றினைப் பெறுவதில் உள்ள பதற்றத்திற்குக் காரணமாக உள்ள முதல் கட்டமாகும். இருபடைமெய்க்காட்டு மற்றும் உடன்பாடு ஆகிய இரண்டின் மூலம் ஸம்பந்தஞானம் என்பது – அடிமைத்தன்மை என்பது ஆத்மாவின் ஸ்வரூபம் என்றான பின்னர், ஸர்வேச்வரன் தானாகவே வந்து தன்னை ஏற்றுக்கொள்ளுதல் என்பது அல்லாமல், தான் பதற்றத்துடன் இருத்தல் என்பது தனது பயனுக்காகத் தான் முயல்வது போன்று உள்ளதால், இந்தத் தன்மை ஸ்வரூபத்திற்கு முரணாக உள்ளது; ஆகவே தனது முயற்சியை விலக்கிவிடுவதான உபாயத்தில் துணிவு என்பதற்குத் துணை செய்கிறது. இந்த அளவு கடந்த ப்ரேமை என்பது, உபாயத்தில் புகுந்தால் என்ன செய்வது என்று எண்ணி, இந்தப் பதற்றத்தை விலக்க முயல்கின்ற உபாயத்தில் உள்ள துணிவை – நமக்கு இயல்பாகவே அடையத்தக்க இலக்காக உள்ள விஷயத்தின் மீது ஏற்படும் அளவு கடந்த ப்ரேமை என்பது, ஆத்ம ஸ்வரூபத்திற்கு முரணானது அல்ல என்பதால் இதனை விலக்க வேண்டியது இல்லை என்றும், விலக்கினாலும் மறையாது என்றும் உணர்த்தி, விலக்கும்

முயற்சியைத் தடுத்து பேற்றினை அடைவதில் உள்ள பதற்றத்துக்குத் துணை செய்கிறது. இப்படியாக ஸம்பந்தஞானமானது உபாயத்தில் துணிவு மற்றும் பேற்றில் பதற்றம் ஆகிய இரண்டிற்கும் அனுகூலம் செய்யத்தக்கதாக உள்ளதையும்; ஸர்வேச்வரனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற கைங்கர்யத்தினை அடைவது எப்போதோ என்பதாலும், ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரனைப் பற்றியவர்களுக்கு தாமதம் ஏற்படுவதற்கான காரணம் ஏதும் இல்லாமையால் விரைந்து பேற்றினைப் பெறவேண்டும் என்பதாலும் கூறப்படும் பேற்றில் பதற்றத்துக்கு, ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகிய இரண்டும் அனுகூலமாக உள்ளதையும் கூறுகிறது [அதாவது இவை இருபடை மெய்க்காட்டு, உடன்பாடு என்பதால் கூறப்படுகிறது]. இவ்விதம் ஸம்பந்தஞானம் என்பது இரண்டிற்கும் துணையாக இருத்தல் என்பது, பேற்றில் பதற்றத்திற்குத் தடைகளான ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகிய இரண்டும் வேறுபாடு காரணமாக அவற்றுக்கு அநுகூலமாக இருத்தல் என்பதாகும். இது நடுவில் உள்ள நிலையாகும்.

**வ்யாக்யானம்** – உதறுதல், கொண்டாட்டம் என்கிறவிரண்டாலும் இப்படி அநுகூலமாய்த் தோற்றியிருக்கிற ஸம்பந்தஜ்ஞாநமும் உபாயாத்யவஸாயமும் க்ரமப்ராப்தியே அமையுமென்று த்வரைக்கு நிவர்த்தகமாமளவில் த்வரை யிரண்டையு மதிக்ரமித்துப் போம்படியையும், அப்படி அதிக்ரமித்த காலத்தில் அந்த த்வரை ஸம்பந்தஜ்ஞாநத்துக்கு முபாயாத்யவஸாயத்துக்கும் அவத்யமாய்த் தோற்றுகையன்றிக்கே ச்லாக்யமா யிருக்கும்படியையும் சொல்லுகிறது. இப்படி ப்ராப்ய த்வரை ஸம்பந்தஜ்ஞாநோபாயத் யவஸாயங்களை அதிக்ரமிக்கையும், அதுதான் ச்லாக்யமாகையுமாகிறவிது சரமதசை. ஆக ஸம்பந்தஜ்ஞாநம், உபாயாத்யவஸாயம், ப்ராப்ய த்வரையாகிற அவஸ்தா த்ரயத்தினுடைய வ்ருத்தி விசேஷங்களை ஸர்வருமறிந்து அநுஸந்திக்கும்படி ஸங்க்ரஹேண தர்சிப்பித்தாராய்த்து.

**விளக்கம்** – உதறுதல், கொண்டாட்டம் ஆகியவற்றால் கூறப்படுவது – அநுகூலமாகத் தோன்றுவதான ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகியவை, ஸர்வேச்வரன் தானாகவே வந்து ஏற்பான் என்பதுவரை பொறுமையுடன் இருத்தலே சரியானது என்று பதற்றத்திற்குத் தடையாக உள்ளபோது, பேற்றில் பதற்றமானது ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகியவற்றுக்குத் தாழ்வு ஏற்படுத்துகிறதோ என்று எண்ண வைக்காமல், கொண்டாடத்தக்கபடியாக உள்ளதைக் கூறுகின்றன. இவ்விதம் பேற்றில்


Email:sridharan_book@yahoo.co.in

பதற்றம் என்பது ஸம்பந்தஞானம் மற்றும் உபாயத்தில் துணிவு ஆகிய இரண்டையும் மீறுதல் மற்றும் அவ்விதம் மீறுதல் என்பதும் கொண்டாடத்தக்கது என்று உள்ளதும் ஆகிய இறுதி நிலையாகும். இதன் மூலம் - ஸம்பந்தஞானம், உபாயத்தில் துணிவு மற்றும் பேற்றில் பதற்றம் ஆகிய மூன்றின் செயல்பாடுகள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும்படியாகச் சுருக்கமாக அருளிச்செய்தார்.

**அவதாரிகை** – இவ்வவஸ்தா த்ரயத்தில், தாயென்றும் மகளென்றும் சொல்லுகிற அவஸ்தைகளில், ஸ்வஸ்வ சத்ருக்களும் பந்துக்களுமாகச் சொல்லுகிறது ஆரையென்னு மாகாங்க்ஷையிலே அவற்றை யருளிச்செய்கிறார் (தாயாரென்று தொடங்கி).

**விளக்கம்** – இந்த மூன்று நிலைகளில் உள்ளதான தாய் மற்றும் மகள் ஆகிய நிலைகளில், அவரவர்களுக்குப் பகைவர்கள், உறவினர்கள் என்று யாரைக் கூறுகிறார்கள் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

139. தாயார் ஏதலர் உற்றீர்களென்னும் ஸாத்ய ஸித்த ஸாதந நிஷ்டரை; மகள் நம்முடை யேதலர் யாமுடைத் துணையென்னும் ஸித்த ஸாதந ஸாத்ய பரரை.

**வ்யாக்யானம்** – அதாவது, தாயாரான உபாயாத்யவஸாய தசையில், "ஏதலர் முன்னாவென் நினைந்திருந்தாய்" என்று சத்ருக்களாகவும், "உற்றீர்கட்கென் சொல்லிச் சொல்லுகேன் யான்" என்று பந்துக்களாகவும் சொல்லும் – ஸித்த ஸாதந நிஷ்டா ப்ரதிகூலரான ஸாத்ய ஸாதந நிஷ்டரையும், அநுகூலரான ஸாத்ய ஸாதநநிஷ்டரையும். மகளான ப்ராப்ய த்வாரா தசையில், "நம்முடை யேதலர் முன்பு நாணி" என்று அந்தரங்க சத்ருக்களாகவும், "யாமுடைத் துணையென்னும் தோழிமார்" என்று ஸ்வஸமாந ஸுகதுக்கரான பந்துக்களாகவும் சொல்லும் – பகவதேக பரராயிருக்கச் செய்தே ததுபாய பாவத்திலே ஊன்றி நின்று, இத் த்வரை பாரதந்த்ர்யத்துக்குச் சேராதென்று நிஷேதிக்கும் ஸித்த ஸாதந பரரையும், தன்னைப்போலே உபேயபாவத்திலே யூன்றி உடன்பாடராயிருக்கும் ஸாத்ய பரரையுமென்கை. கீழில் வாக்யத்திலே "சூழ்ச்சி" என்றும், இவ்வாக்யத்திலே "ஏதலர்" என்றும் மற்றையாழ்வார்கள் சந்தைகளையும் கூட்டி யெடுத்தது, ஆழ்வார்களெல்லாரும் ஏககண்டராகையாலே அருளிச்செயலுக்கெல்லாம் இந்த ஸ்வாபதேசம் ஒக்குமென்று தோற்றுகைக்காக.

**விளக்கம்** – (தாயார் ஏதலர் என்னும் நிஷ்டரை) - தாயான உபாயத்தில் துணிவு என்ற நிலையில், பெரியதிருமொழி (2-7-5) - ஏதலர் முன்னாவென் நினைந்திருந்தாய் - என்று பகைவர்களாகக் கூறுவது யாரை என்றால் ஸித்த ஸாதந நிலைக்கு விரோதமாக உள்ள ஸாத்ய ஸாதந நிஷ்டர்களை ஆகும் [ஸித்த ஸாதந நிஷ்டர் - ஸர்வேச்வரனே உபாயம் என்பவர்கள், ஸாத்ய ஸாதந நிஷ்டர் - ஸர்வேச்வரனைப் பலனாகக் கொண்டு நிற்பவர்கள்]. (தாயார் உற்றீர்கள் என்னும் ஸித்த ஸாதந நிஷ்டரை) - திருவாய்மொழி (5-6-7) - உற்றீர்கட்கென் சொல்லிச் சொல்லுகேன் யான் - என்பதற்கு ஏற்ப அநுகூலமாக உள்ள ஸித்த ஸாதந நிஷ்டர்களை உறவினர்களாகக் கூறும். (மகள் நம்முடைய ஏதலர் என்னும் ஸித்த ஸாதந பரரை) - மகளான பேற்றில் பதற்றம் என்ற நிலையில், திருவாய்மொழி (8-2-1) - நம்முடை யேதலர் முன்பு நாணி - என்பதற்கு ஏற்ப அந்தரங்க சத்ருக்களாக உரைப்பது யாரை என்றால், ஸர்வேச்வரனை மட்டுமே பற்றியுள்ள போதிலும் அவனுடைய உபாயத்தன்மை என்பதில் நிலை நின்று, இத்தகைய பேற்றில் பதற்றம் அடைதலாவது, மற்றவர்களைப் பற்றி நிற்கும் தன்மைக்குப் பொருந்தாது என்று விலக்குபவர்களாகிய ஸித்தா ஸாதநத்தில் நிலைநிற்பவர்களை ஆகும். (மகள் யாமுடைத்துணை என்னும் ஸாத்ய பரரை) – திருவாய்மொழி (9-9-5) – யாமுடைத் துணையென்னும் தோழிமார் - என்பதற்கு ஏற்ப, தனது இன்பதுன்பங்களைத் தங்களுடையதாகவே கொள்ளும் உறவினர்களாக யாரைக் கூறுவாள் என்றால், தன்னைப் போன்றே அடையத்தக்கபொருளில் நிலைநின்று தனக்கு ஏற்புடைய விதத்தில் உள்ள ஸாத்ய நிஷ்டர்களை ஆகும். கடந்த சூர்ணையில் "சூழ்ச்சி" என்றும், இந்தச் சூர்ணையில் "ஏதலர்" என்றும் திருவாய்மொழி மட்டும் அல்லாமல், மற்ற ஆழ்வார்களுடைய பாசுரங்களையும் சேர்த்து எடுத்தது ஏன் என்றால், ஆழ்வார்கள் அனைவருமே ஒரே போன்ற சொற்களைக் கூறுபவர்கள் என்பதால், அவர்களுடைய அருளிச் செயல்களுக்கும் இந்த மறைமுகமான கருத்துக்கள் ஏற்புடையதாகவே இருக்கும் என்பதை உணர்த்தவே ஆகும்.

140. நாலயலார் அயற்சேரியார் உபாயசதுஷ்ட யாந்தர்யாமித்வ பரர்.

**அவதாரிகை** - இந்த ப்ரஸங்கத்திலே அருளிச்செயலில் வரும் பல அந்யாபதேசங்களுக்கும் ஸ்வாபதேசங்களை அருளிச்செய்கிறார் மேல் பலவாக்யங்களாலே.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – இந்த நேரத்தில் அருளிச்செயல்களில் காணப்படும் பல அந்யாபதேசங்களுக்கும் [தான் கூறுவதை நேரடியாகக் கூறாமல், மற்றவை மூலம் கூறுவது], மறைமுகமான கருத்தை இந்தச் சூர்ணை தொடக்கமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "நாலயலாரு மறிந்தொழிந்தார்" என்கிற நாலயலாரும், "அயற்சேரியீர்காள்" என்கிற அயற்சேரியாருமாகிறார் - கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்திகளாகிற உபாய சதுஷ்டயத்திலும் ஊன்றியிருக்குமவர்களும், அர்ச்சாவதாராதிகளி லபேக்ஷையற்று அந்தர்யாமித்வத்திலே ஊன்றியிருக்கு மவர்களுமென்கை.

**விளக்கம்** – (நாலயலார் உபாயசதுஷ்டய பரர்) – நாச்சியார் திருமொழி (12-2) - நாலயலாரு மறிந்தொழிந்தார் – என்பதற்கு ஏற்ப கூறப்படும் நாலயலார் என்றால் கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி ஆகிய நான்குவிதமான உபாயங்களில் நிலைநிற்பவர்கள் ஆவர். (அயற்சேரியார் அந்தர்யாமித்வ பரர்) – திருவாய்மொழி (7-3-2) - அயற்சேரியீர்காள் - என்பதற்கு ஏற்ப கூறப்படும் அயற்சேரியார் என்றால் அர்ச்சாவதாரம் போன்றவற்றில் நாட்டம் இன்றி, அந்தர்யாமி நிலையில் மட்டுமே நிலைநிற்பவர்கள் ஆவர்.

141. கீழை மேலை வடக்கிலவை புறம்பாகத் தன்பற்று உள்ளசல்.

**அவதாரிகை** – ப்ரபத்தி பரரையும் அசலாகச் சொல்லலாமோவென்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (கீழையித்யாதி).

**விளக்கம்** – ஆனால் ப்ரபத்தியில் ஈடுபட்டு நிற்பவர்களை அயலார் (கடந்த சூர்ணையில் உள்ள நாலயலார் - நான்கு அயலார்) என்று கூறலாமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "கீழையகத்துத் தயிர் கடைய" என்றும், "மேலையகத்து நங்காய் வந்து காண்மின்கள்" என்றும், "வடக்கிலகம் புக்கிருந்து மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்து வைத்த" என்றும், க்ரியையும் தர்சநமும் அநுபவமுமாகிற

கர்மயோகமும் ஜ்ஞாநயோகமும் பக்தியோகமும் ஸித்த ஸாதந பரர்க்குப் புறவசலாய், அவ்விஷயந்தன்னில் ஸ்வகத ஸ்வீகாரம் உள்ளசலா யிருக்குமென்றபடி.

**விளக்கம்** – (கீழை மேலை வடக்கிலவை புறம்பு அசல் ஆக) - பெருமாள் திருமொழி (6-2) - கீழையகத்துத் தயிர் கடைய - என்றும், பெரியதிருமொழி (10-7-2) - மேலையகத்து நங்காய் வந்து காண்மின்கள் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-1-2) – வடக்கிலகம் புக்கிருந்து மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்து வைத்த - என்றும் உள்ள பாசுரங்களில் காணப்படும் செய்கை, காட்சி மற்றும் அனுபவம் என்பதான கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் ஆகியவை ப்ரபத்தியில் நிலைநிற்பவர்களுக்கு வெளியில் பகைகளாக உள்ளபோது, (தன் பற்று உள்ளசல்) - ஸர்வேச்வரனைத் தான் பற்றியுள்ள பற்று என்பது உட்புறம் பகைகளாக இருக்கும்.

143. ஊரார் நாட்டாருலகர் கேவலைச்வர்ய காம ஸ்வதந்த்ரர்.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஊராரிகழிலும்", "ஊரவர் கவ்வை", "நாட்டாரோடியல் வொழிந்து", "எங்கள் கண்முகப்பே யுலகர்க ளெல்லாம்", "இம்மடவுலகர்", "ஊரும் நாடுமுலகமும்" என்கிற விடங்களில், ஊராரென்பது ஆத்ம ப்ராப்தி காமரான கேவலரை. நாட்டார் என்பது – புத்ர பச்வந்நாதிகளான இஹலோகைச்வர்ய காமரை. உலகர் என்பது ஸ்வர்க்காதி பரலோகைச்வர்ய காமரான ஸ்வதந்த்ரரையென்கை.

**விளக்கம்** – (ஊரார் கேவலர்) - சிறிய திருமடல் (77) – ஊரார் இகழிலும் – என்றும், திருவாய்மொழி (5-3-4) – ஊரவர் கவ்வை – என்றும் உள்ளவற்றில் "ஊரார்" என்பதன் மூலம் கூறப்படுவது ஆத்ம அனுபவத்தை விரும்புகின்ற கேவலரை ஆகும். (நாட்டார் ஐச்வர்ய காமர்) - திருவாய்மொழி (10-6-2) – நாட்டாரோடு இயல்வொழிந்து – என்பதில் உள்ள "நாட்டார்" என்பதன் மூலம் புத்திரன், பசு, உணவு போன்றதான இந்த உலக இன்பங்களை மட்டுமே விரும்பியபடி உள்ளவர்கள் கூறப்பட்டனர். (உலகர் ஸ்வதந்த்ரர்) – திருவாய்மொழி (9-2-8) - எங்கள் கண்முகப்பே உலகர்கள் எல்லாம் - என்றும், திருவாய்மொழி (9-2-7) – இம்மட உலகர் - என்றும், திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடும் உலகமும் - என்றும் உள்ளவற்றில் "உலகர்" என்பதன் மூலம் ஸ்வர்க்கம் போன்றதான மறுமையில் உள்ள செல்வங்களை விரும்பும் ஸ்வதந்த்ரர்கள் கூறப்பட்டனர்.

143. இறுகலிறப்புக்கும் இறந்தால் தங்குமூர் ஒக்குமே.

**அவதாரிகை** - கேவலரை ஒரூராகச் சொல்லுவானென் என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (இறுகலித்யாதி).

**விளக்கம்** – ஆனால் கேவலர் என்பவர்களை ஓர் ஊராக ஏன் உரைக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அபரிச்சிந்ந ஸ்வரூப ரூப குண விபூதிக பரப்ரஹ்மாநுபவம் போலன்றிக்கே அணுபூதாத்மாநுபவமாத்ர மாகையாலே, “இறுகலிறப்பு” என்கிற ஸங்கோசரூபமான மோக்ஷத்துக்கும், “ஜரா மரண மோக்ஷாய” என்கிறபடியே ஜரா மரணாதிகளில் அந்வயமற்றிருந்து அநுபவிக்கும்போது ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்குக் கர்மீபவிக்கும் ப்ரக்ருதி மண்டலத்துக்கு அவ்வருகான பரமாகாசத்திலே யிருந்து அநுபவிக்கவேண்டுகையாலே, “யோகிநாமம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம்” என்கையாலே, “இறந்தால் தங்குமூரண்டமே” என்கிறபடியே ப்ரக்ருதி ஸம்பந்தமற்றால் போய் வஸிக்கும் தேசமொக்கு மென்றபடி.

**விளக்கம்** – (இறுகல் இறப்புக்கும்) - எல்லையற்ற ஸ்வரூப ரூப குண விபூதிகளைக் கொண்டதான பரப்ரஹ்மத்தின் அனுபவம் போன்று அல்லாமல், அணு அளவே உள்ளதான ஆத்மாவை அனுபவித்தல் என்பதால் ஏற்பட்ட அனுபவம் என்பதால், திருவாய்மொழி (4-1-10) - இறுகல் இறப்பு – என்பதற்கு ஏற்ப சுருக்கமான ரூபமான மோக்ஷத்திற்கும், (இறந்தால் தங்கும் ஊர் ஒக்கும்) - கீதையில் (7-29) – ஜரா மரண மோக்ஷாய – வயோதிகம், மரணம் போன்றவற்றிலிருந்து விடுபடுவதற்காக – என்பதற்கு ஏற்ப வயோதிகம் மற்றும் மரணம் ஆகியவற்றின் தொடர்பு நீங்கப் பெற்று அனுபவித்தபடி உள்ளபோது, ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரம் ஆகியவை ஏற்படும் இடமான ப்ரக்ருதி மண்டலத்திற்கும் அப்பால் உள்ளதான பரமாகாசத்தில் இருந்து அனுபவிக்கவேண்டும் என்பதால், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-6-38) - யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம் – ஜனகன் போன்ற யோகிகளுக்கு அமிர்தம் என்று கூறப்படும் இடம் எதுவோ அதுவே தனது ஆத்மாவை அனுபவிக்கவேண்டும் என்று எண்ணி அதற்கான உபாயங்களைக் கைக்கொள்ளும் இடம் - என்று கூறுவதற்கு ஏற்ப,

பெரியதிருமொழி (10-2-10) - இறந்தால் தங்கும் ஊர் அண்டமே – என்னும்படி இந்தச் சரீரத்தின் தொடர்பு நீங்கப்பெற்றவுடன் சென்று வசிக்கும் தேசம் ஒப்புமையாகும் என்று கருத்து.

144. சிறுசீரார் சுளகுகள் உபய விவேக பரிகரம்.

**வ்யாக்யானம்** – அதாவது, “சிறுசுளகு மணலுங் கொண்டு” என்றும், “சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா” என்றும் சொல்லுகிறவிடங்களில், சிறுசுளகாவது - பெருமணலையும் நுண்மணலையும் பிரிப்புதொன்றாகையாலே, தேஹாத்ம விவேகத்துக்குப் பரிகரமான ப்ரமாணம். சீரார்சுளகாவது - இவளுக்கு இவ் வ்யாமோஹத்தை விளைத்தார் ஆரென்று ஆராய்கிறவளவிலே, “சிலநெல் பிடித்தெறியா” என்று தொடங்கி “பேராயிரமுடையா னென்றாள்” என்று தேவதாந்தரங்களன்று; ஸர்வேச்வரனென்று விவேகிக்கிற போதைக்கு உபகரணமாகையாலே ஆத்ம பரமாத்மா விவேகத்துக்குப் பரிகரமான ப்ரமாணமென்கை. உபய விவேகமாவது - த்யாஜ்யோபாதேய ரூபோபய வஸ்து விவேகமாகையாலே, ப்ரகரணோசிதமாக இப்படி சொல்லத் தட்டில்லை.

**விளக்கம்** – (சிறு சுளகு) – நாச்சியார் திருமொழி (2-8) - சிறுசுளகு மணலுங் கொண்டு – என்று கூறும் இடத்தில் உள்ள “சிறு சுளகு” என்பது, (உபய விவேக பரிகரம்) – பெருமணல் மற்றும் சிறுமணல் ஆகியவற்றைப் பிரித்தல் என்பதால், சரீரம் வேறு ஆத்மா வேறு என்று பகுத்தறிந்து உணர்வதற்கான ப்ரமாணம் ஆகும். (சீரார் சுளகு) – சிறியதிருமடல் (21) - சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா – என்பதில் கூறப்பட்ட “சீரார் சுளகு” என்பதன் பொருள் என்னவென்றால், இவளுக்கு இவ்விதம் தீர்க்க இயலாத காதல் நோயை ஏற்படுத்தியது யார் என்று ஆராயும்போது, சிறியதிருமடல் (21) - சிலநெல் பிடித்தெறியா - என்று தொடங்கி, சிறியதிருமடல் (22) – பேர் ஆயிரம் உடையான் என்றாள் – என்று, அவளைப் பிடித்துள்ள இந்த நோய்க்குக் காரணம் மற்ற தெய்வங்கள் அல்ல, ஸர்வேச்வரனே ஆவான் என்று அறிவதற்கு ஏற்றதாக உள்ளதால், ஆத்மாவையும் பரமாத்மாவையும் பிரித்து உணரும் விவேகத்தினை ஏற்படுத்தும் ப்ரமாணம் என்று கருத்து. உபய விவேகம், என்றால் தள்ளத்தக்கது எது, ஏற்கத்தக்கது எது என்று பிரித்து

அறியக்கூடிய அறிவு என்பதால், இந்த இடத்திற்கு ஏற்றபடி இவ்விதம் பொருள் கொள்வதில் தவறில்லை.

145. மாலை கங்குல் காலை பகல் – ரஜஸ் தமஸ் ஸத்வ சுத்தஸத்வ ஜ்ஞாநங்கள்.

**வ்யாக்யானம்** – அதாவது, "செங்களம் பற்றி நின்றெள்கு புன்மாலை", "சொல்கதிர் மாலை" இத்யாதிகளிலே சொல்லுகிற மாலையாவது - ராகோத்தரமாய் பதார்த்தங்கள் விசதமாக ப்ரகாசியாமை கொண்டு அந்யதா ப்ரதிபத்திக்கு உறுப்பாயிருக்கும் ஸந்த்யா காலமாகையாலே பதார்த்தங்களில் அந்யதா ப்ரதிபத்திக்குறுப்பான ராஜஸ ஜ்ஞாநம். "சூழ்கின்ற கங்குல்", "செல்கின்ற கங்குல்", "கங்குல் நாழிகை" இத்யாதிகளால் சொல்லுகிற கங்குலாவது - பதார்த்தங்களொன்றும் தோற்றதபடியாய், ஏதேனும் தோற்றமதுமுண்டாகில் விபரீதமாகத் தோற்றும்படியிருக்கும் திமிரோபஹத ராத்ரி காலமாகையாலே ஜ்ஞாத வ்யார்த்த ப்ரகாசமுமின்றியே விபரீத ப்ரதிபத்திக்கு ஹேதுவுமாயிருக்கும் தாமஸ ஜ்ஞாநம். "காலை யெழுந்திருந்து", "காலை நன்ஞானத்துறை படிந்து" இத்யாதிகளிற் சொல்லுகிற காலையாவது - ப்ராஹ்மமுஹூர்த்தமாகையாலே பதார்த்த யதா ப்ரதிபத்திக்குறுப்பாகா நிற்கும் ஸாத்விக ஜ்ஞாநம். "பகல் கண்டேன்" இத்யாதியிற் சொல்லும் பகலாவது – பதார்த்தங்களை ஸம்சய விபர்யயமற விசதமாக ப்ராகாசிப்பிக்கும் காலமாகையாலே, "நாரணனைக் கண்டேன்" என்கிறபடியே ஸமஸ்த குண விக்ரஹ விபூதி விசிஷ்டனான ஸர்வேச்வரனை ஸம்யக் ஸாக்ஷாத்கரிக்கிற சுத்தஸத்வ ஜ்ஞாநமென்கை. இத்தால் அந்யதா ஜ்ஞாநம், விபரீத ஜ்ஞாநம், யதா ஜ்ஞாநம், தத்பலமான ஸாக்ஷாத்கார ஜ்ஞாந மென்கிறவற்றைச் சொன்னபடி.

**விளக்கம்** – (மாலை) – திருவிருத்தம் (77) - செங்களம் பற்றி நின்றெள்கு புன்மாலை – என்றும், திருவாய்மொழி (9-9-1) - சொல்கதிர் மாலை - என்றும் உள்ள பாசுரங்களில் கூறப்படும் "மாலை" என்பது. (ரஜஸ் ஜ்ஞாநம்) – ஆசையை மேன்மேலும் வளர்ப்பதும், காணும் பொருள்கள் இன்னது என்று தெளிவாக உணர இயலாத காரணத்தால் வேறுவிதமாக எண்ணுவதற்குக் காரணமாய் உள்ள ஸந்த்யாகாலமாக இருப்பதால், பொருள்களைச் சரிவர அறியாமல் வேறுவிதமாக அறிவதற்குக் காரணமாக உள்ளதும் ஆகிய ராஜஸ ஞானம் ஆகும். (கங்குல்) – திருவிருத்தம் (72) - சூழ்கின்ற கங்குல் – என்றும், திருவாய்மொழி (5-4-10) - செல்கின்ற கங்குல் – என்றும், பெரியதிருமொழி (9-5-

3) - கங்குல் நாழிகை – என்றும் உள்ள பாசுரங்களில் காணப்படும் “கங்குல்” என்பது. (தமஸ் ஜ்ஞாநம்) - எந்தவிதமான பொருள்களையும் அறிய இயலாதபடியும், ஏதேனும் தென்பட்டாலும் அதனைத் தவறாக உணரும்படியும் இருள் சூழ்ந்து கிடக்கும் இரவுப்பொழுது என்பதால், அறியத்தகுந்தபடி உள்ள பொருள்களைச் சரிவர உணர்த்தாமல் வேறு பொருள் என்னும் தவறான அறிவு ஏற்படக் காரணமாக உள்ள தாமஸ ஞானம் ஆகும். (காலை) – நாச்சியார் திருமொழி (9-8) - காலை யெழுந்திருந்து - என்றும், திருவிருத்தம் (93) - காலை நன்ஞானத்துறை படிந்து – என்றும் உள்ள பாசுரங்களில் காணப்படும் “காலை” என்பது. (ஸத்வ ஜ்ஞாநம்) – ப்ரஹ்மமுகூர்த்த நேரம் என்பதால் ஸத்வகுணத்தை வளர்ப்பதாகவும், இருளை விலக்கியபடி வருகின்ற காலைப்பொழுது என்பதால் பொருள்களை உள்ளது உள்ளபடி உணர்த்தக் காரணமாக உள்ளதும் ஆகிய ஸத்வ ஞானம் ஆகும். (பகல்) – இரண்டாம் திருவந்தாது (81) – பகல் கண்டேன் – என்பது போன்ற பாசுரங்களில் கூறப்படும் “பகல்” என்பது. (சுத்தஸத்வ ஜ்ஞாநம்) - பொருள்களை எந்தவிதமான சந்தேகமும் இன்றி மிகவும் தெளிவாக உணர்த்துகின்ற பகல்பொழுது என்பதால், இரண்டாம் திருவந்தாதி (81) – நாராணனைக் கண்டேன் - என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான கல்யாணகுணங்கள் நிறைந்தவனும், எழிலான திருமேனி உள்ளவனும், அனைத்து விபூதிகளையும் கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரனை, எந்தவிதமான ஐயமும் இன்றி தெளிவாக உணர்த்துகின்ற சுத்தஸத்வ ஞானம் ஆகும். ஆக இதன் மூலம் பொருளைத் தெளிவின்றி அறிதல், மாற்றி அறிதல், உள்ளது உள்ளபடி அறிதல், இறுதியாகக் கூறப்பட்டதான பலனாகிய தெளிவான அறிவு ஆகியவற்றைக் கூறினார்.

146. நிலா முற்றம் ப்ரஜ்ஞா ப்ராஸாதமென்னு மெல்லை நிலம்.

**வ்யாக்யானம்** – அதாவது, “நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள்” என்கிற நிலாமுற்றமாகிறது, “ப்ரஜ்ஞா ப்ராஸாதமாருஹ்ய அசோச்யச்சோசகாந் ஜநாந், பூமிஸ்த்தாநிவ சைலஸ்த்தோ ஹ்யஜ்ஞாந் ப்ராஜ்ஞ: ப்ரபச்யதி” என்கிறபடியே உத்துங்கமாக நின்று ஸர்வத்தையும் தர்சிக்கைக்கு உறுப்பாகச் சொல்லப்படுவதாய், அதிலே நின்று தர்சித்தவளவில் “காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்” என்கையாலே ததீய விஷயமே பரம ப்ராப்யமென்று பிறர்க்கும் ப்ரகாசிக்கும்படி சரமாவதியான புருஷார்த்த ஜ்ஞாநமென்கை.

**விளக்கம்** – (நிலாமுற்றம்) - பெரியதிருமொழி (8-2-2) – நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள் - என்ற பாசுரத்தில் கூறப்பட்ட "நிலா முற்றம்" என்பது. (ப்ரஜ்ஞா ப்ராஸாதம் என்னும் எல்லை நிலம்) - மஹாபாரதம் சாந்திபர்வம் - ப்ரஜ்ஞா ப்ராஸாதமாருஹ்ய அசோச்யச்சோசகாந் ஜநாந், பூமிஸ்த்தாநிவ சைலஸ்த்தோ ஹ்யஜ்ஞாந் ப்ராஜ்ஞ: ப்ரபச்யதி – திருமந்த்ரத்தின் உயர்ந்த ஞானம் என்பதான மலையில் ஏறி, தன்னைக் குறித்த எந்தவிதமான வருத்தமும் இல்லாத ஞானி ஒருவன், அறிவின்றி வருந்தும் இந்த உலகில் உள்ளவர்களை, மலையில் உள்ள ஒருவன் கீழே நோக்குவது போன்று, காண்கிறான் - என்பதற்கு ஏற்ப உயர்ந்த இடத்தில் நின்று அனைத்துப் பொருள்களையும் காணும்போது, பெரியதிருமொழி (8-2-2) - காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள் - என்பதற்கு ஏற்ப அவன் தொடர்புடைய பொருள்களை அடைவதே மிகவும் உயர்ந்த பேறாகும் என்று அனைவருக்கும் விளக்கும்படியான எல்லை நிலமாக உள்ள பேற்றினைக் குறித்த ஞானம் ஆகும்.

147. கலை வளை அஹம் மம க்ருதிகள்.

**வ்யாக்யானம்** – அதாவது, "கைவளையும் மேகலையும் காணேன்", "கலையாளா வகலல்குல் கனவளையும் கையாளா" இத்யாதிகளில் சொல்லுகிற கலையும் வளையுமான – பகவதநுபவ விரோதியான அஹங்க்ருதியும் மமக்ருதியுமென்கை. அஹங்கார மமகாரங்க ளிரண்டும் பகவதநுபவ விரோதியாகையாலேயிறே மத்யம பதத்தாலே இவையிரண்டையும் கழித்துக் கொண்டு த்ருதீய பதத்திலே பகவதநுபவம் சொல்லிற்று. "கழல்வளை பூரிப்ப யாங்கண்டு கைதொழக் கூடுங்கொலோ", "ஈண்டிய சங்கும் நிறையும் கொள்வான்", "தூதுரைத்தல் செப்புதிரேல் சுடர்வளையும் கலையும்" என்கிறவிடங்களில் த்யாஜ்யமான அஹம் மம க்ருதிகளன்றிக்கே "சேஷோஹம்", "என்னுடைய திருவரங்கர்" என்றாப்போலே யிருந்துள்ள அஹம் மமதைகளைச் சொல்லிற்றாகக் கொள்ளலா மாகையாலே, அங்குத்தைக்கும் இதுவே ஸ்வாபதேசமாகக் குறையில்லை.

**விளக்கம்** – (கலை) திருநெடுந்தாண்டகம் (22) - கைவளையும் மேகலையும் காணேன் - என்றும், பெரியதிருமொழி (5-5-2) – கலையாளாவகல் அல்குல் கனவளையும் கையாளா - என்றும் உள்ள பாசுரங்களில் காணப்படும் "கலை, வளை" போன்ற சொற்கள். (அஹம் மம

க்ருதிகள்) - ஸர்வேச்வரனை அனுபவிக்கத் தடையாக உள்ள அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகியவை ஆகும். அஹங்காரம், மமகாரம் என்ற இரண்டும் பகவத் அனுபவத்திற்கு விரோதிகளாக உள்ளதால், "ஓம் நமோ நாராயணாய" என்பதில் உள்ள நடுப்பதமான "நம:" என்பதன் மூலம் இவை இரண்டையும் நீக்கிய பின்னர் ஏற்படும் பகவத் அனுபவத்தை மூன்றாவது பதமான "நாராயண" என்பது கூறுகிறது. திருவாய்மொழி (5-9-9) - கழல்வளை பூரிப்ப யாங்கண்டு கைதொழக் கூடுங்கொலோ - என்றும், திருவாய்மொழி (8-2-2) – ஈண்டிய சங்கும் நிறையும் கொள்வான் – என்றும், திருவாய்மொழி (9-7-6) - தூதுரைத்தல் செப்புதிரேல் சுடர்வளையும் கலையும் - என்றும் கூறுகின்ற இடங்களில் கைவிடவேண்டியதான அஹங்காரம், மமகாரம் என்ற பொருளில் வராமல், சேஷோஹம் – நான் அடிமை – என்றும், என்னுடைய திருவரங்கன் – என்ற இடங்களில் உள்ளது போன்று காணப்படும் பொருளில் அஹங்காரம், மமகாரங்களைக் கூறுவதாக எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே அங்கும் இது போன்றே மறைமுகமான பொருள் என்பதில் தோஷம் இல்லை

148. பட்டம் சூடகமாவன பராவர குருக்கள் பூட்டும் ஆத்மபூஷணங்கள்.

**வ்யாக்யானம்** – அதாவது, "பட்டங் கட்டிப் பொற்றோடு பெய்து இவள் பாடகமும் சிலம்பும் இட்டமாக வளர்த்தெடுத்தேனுக்கு" என்றும், "சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்" என்றும் சொல்லுகிற ஆபரணங்களாவன – "க்ருஷ்ணாங்க்ரி துளஸீமௌலி: பட்டம் க்ருஷ்ணாபி வந்தநம், குண்டலே க்ருஷ்ண சரித ச்ரவணம் கங்கணோஞ்ஜலி:" என்கிறபடியே ப்ரதமத்திலே இவ்வாத்மாவை அங்கீகரித்த ஆசார்யனுண்டாக்கும் நாம ரூபங்களும், பகவத் வந்தநாதிகளும். பின்பு அவ்வாசார்ய வைபவத்தை உணர்த்தி, அவனுண்டாக்கும் சேஷத்வ ஜ்ஞாநாதிகளுமாகிற ஆத்மாலங்காரங்க ளென்கை.

**விளக்கம்** – (பட்டம் சூடகம் ஆவன) – பெரியாழ்வார் திருமொழி (3-7-6) – பட்டங் கட்டிப் பொற்றோடு பெய்து இவள் பாடகமும் சிலம்பும் இட்டமாக வளர்த்தெடுத்தேனுக்கு – என்றும், திருப்பாவை (27) - சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம் – என்றும் கூறப்படும் ஆபரணங்கள் எவை என்றால், (பர அவர குருக்கள் பூட்டும் ஆத்மபூஷணங்கள்) - க்ருஷ்ணாங்க்ரி

துளஸீமௌலி: பட்டம் க்ருஷ்ணாபி வந்தநம், குண்டலே க்ருஷ்ண சரித ச்ரவணம் கங்கணோஞ்ஜலி: - க்ருஷ்ணன் தனது திருவடிகளில் அணிந்த திருத்துழாய் என்பது க்ரீடம், அவனை வணங்குதல் என்பது பட்டாடை, அவன் சரீரங்களைக் கேட்பது என்பது குண்டலங்கள், அவனை வணங்குதல் என்பது கைகளுக்கு இடப்படும் வளையல்கள் - என்பதற்கு ஏற்ப, இந்த ஆத்மாவை ஏற்றுக்கொண்டு அதனை ஒரு பொருளாக்கிய ஆசார்யன் முதலில் ஏற்படுத்தித் தருகின்ற பெயர் மட்டும் ரூபங்கள் [அதாவது இராமாநுசதாசன் என்பதும், பன்னிரண்டு திருமண்காப்புகளும்] மற்றும் பகவானை வணங்குதலும் ஆகும். தொடர்ந்து அந்த ஆசார்யனுடைய வைபவங்களை உணர்த்தி ஆத்மாக்கள் அனைவரும் ஸர்வேச்வரனுடைய அடிமைகள் என்று ஆசார்யனால் அளிக்கப்பட்ட ஞானம் போன்றவைகளும் ஆத்மாக்களுக்கு அலங்காரங்கள் ஆகும்.

149. பந்து கழல் பாவை குழமணன் யாழ் தென்றல் மதியம் அடிசில் சாந்தம் பூணகில் சிற்றில் தூதை முதலாவன – குணத்ரய விசித்ர கர்மஸூத்ரத்தாலே கட்டி லீலையாக ப்ரேரிக்க விழுந்தெழுந்தும் சுழன்றுழன்றும் பறிபட்டும் அற்பசாரமா மவையுமாய் மதீயமென்னில் விட்டகலவும் ததீயமென்னில் இகழ்வறவும் முனிவதுமிக்கால மீதோ வென்னப்படும் பொய்கைம்புலனில் போக்யாதி ஸமூஹம்.

**அவதாரிகை** - இனி லோலோபகரணாதிகளாகச் சொல்லப்படுமவற்றுக்கு ஸ்வாபதேச மருளிச்செய்கிறார் (பந்து கழலென்று) தொடங்கி.

**விளக்கம்** – பலவிதமான விளையாட்டுப் பொருள்களுக்கு மறைமுகமான அர்த்தம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “பந்தும் கழலும் தந்து போகு நம்பீ”, “கன்ம மன்றெங்கள் கையில் பாவை பறிப்பதும்”, “குழகியெங்கள் குழமணன் கொண்டு”, “யாழ் நரம்பு”, “தைவந்த தண்தென்றல்”, “மேவுதண் மதியம்”, “இன்னடிசிலொடு பாலமுதூட்டி”, “சாந்தமும் பூணும்”, “சீருற்றவகில் புகை”, “எங்கள் சிற்றிலும்”, “வட்டவாய்ச் சிறுதூதை” இத்யாதிகளால் சொல்லுகிற லீலோபகரண போக்ய போகோபகரணாதிகளாவன – “லோஹித சுக்ல க்ருஷ்ணாம்” என்கிறபடியே செந்நூல் வெண்ணூல் கருநூலினுடைய ஸ்தாநேயான குண த்ரயத்தோடே “கர்மஸூத்ரோபபாதிதை:” என்கிறபடியே விசித்ரமான

கர்மஸூத்ரத்தாலே கட்டி, “ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:” என்கிறபடியே ஈச்வரன் தன்னுடைய லீலைக்கு உறுப்பாக “அஜ்ஞோ ஜந்துர நீசோயமத் மநஸ் ஸுகதுக்கயோ:, ஈச்வர ப்ரேரிதோ கச்சேத் ஸ்வர்க்கம்வா ச்வப்ரமேவ வா” என்கிறபடியே அஜ்ஞனாய் அசக்தனான விவன் கர்மாநுகுணமாக உபரிதந லோகாதிகளிலே போவது மீளுவதாம்படி ஸ்வஸங்கல்பத்தாலே ப்ரேரிக்க,

**விளக்கம்** – (பந்து கழல் பாவை குழமணன் யாழ் தென்றல் மதியம் அடிசில் சாந்தம் பூணகில் சிற்றில் தூதை முதலாவன) – திருவாய்மொழி (6-2-1) – பந்தும் கழலும் தந்து போகு நம்பீ, (6-2-7) – கன்ம மன்றெங்கள் கையில் பாவை பறிப்பதும் – என்றும், (6-2-6) – குழகியெங்கள் குழமணன் கொண்டு - என்றும், (9-9-7) – யாழ் நரம்பு - என்றும், (5-4-8) – தைவந்த தண்தென்றல் – என்றும், (9-9-4) – மேவுதண் மதியம் - என்றும், நாச்சியார் திருமொழி (5-5) - இன்னடிசிலொடு பாலமுதூட்டி – என்றும், பெரியதிருமொழி (2-7-3) - சாந்தமும் பூணும் - என்றும், திருவாய்மொழி (9-9-7) - சீருற்றவகில் புகை - என்றும், (6-2-9) – எங்கள் சிற்றிலும் - என்றும், நாச்சியார் திருமொழி (2-8) - வட்டவாய்ச் சிறுதூதை - என்றும் உள்ள பல பாசுரங்களில் கூறப்படுகின்ற விளையாட்டுப் பொருள்கள், இனிய பொருள்கள், இன்பம் அளிக்கும் பொருள்கள் ஆகியவை. (குணத்ரய விசித்ர கர்ம ஸூத்ரத்தாலே கட்டி) – தைத்திரீயம் - லோஹித சுக்ல க்ருஷ்ணாம் - சிவந்தும் வெளுத்தும் கறுத்தும் உள்ளதான ப்ரக்ருதி - என்பதற்கு ஏற்ப சிவந்த நூல், வெண்மையான நூல் மற்றும் கறுத்த நூல் ஆகியவற்றிடம் மூன்று குணங்களுடன், ஸ்ரீவிஷ்ணுதர்மம் - “கர்மஸூத்ரோப பாதிதை: - கர்மம் என்ற கயிற்றால் கட்டப்பட்ட - என்பதற்கு ஏற்ப விசித்ரமாக உள்ள கர்மம் என்ற கயிறு கொண்டு கட்டி. (லீலையாக ப்ரேரிக்க) – ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி: - விளையாடுவதற்கு ஏற்றதான இந்த உயிர்களைக் கொண்டு நீ விளையாடுகிறாய் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் தனது லீலைக்கு ஏற்றபடி மஹாபாரதம் சாந்திபர்வம் (12-36) - அஜ்ஞோ ஜந்துர நீசோயமத் மநஸ் ஸுகதுக்கயோ:, ஈச்வர ப்ரேரிதோ கச்சேத் ஸ்வர்க்கம்வா ச்வப்ரமேவ வா – ஜீவாத்மா அறிவற்றவனாகவும், தனது இன்பதுன்பங்களைக் குறித்துக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லாதவனாகவும், ஸர்வேச்வரனால் தூண்டப்பட்டு மேலும் கீழும் சென்றபடி உள்ளான் - என்பதற்கு ஏற்ப, அறிவற்றவனாகவும், சக்தி அற்றவனாகவும் உள்ள ஜீவாத்மா, தான் செய்த கர்மங்களுக்கு ஏற்றபடி மேல்லோகம்


**Email:**sridharan_book@yahoo.co.in

செல்லுதல், அங்கிருந்து திரும்புதல் போன்றவற்றைத் தனது ஸங்கல்பம் மூலம் ஏவுகிறான்.

**வ்யாக்யானம்** – "த்வம் ந்யஞ்சத்பிருதஞ்சத்பி:" என்கிறபடியே தாழ விழுந்தும் உயரவெழுந்தும், "ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே" என்கிறபடியே சக்ர ப்ரமம் போலே சுழன்றும், "யமாலய மஹாசூலே மாதுர் ஜடரதோல்பத:, யாதாயாத ஸஹஸ்ராணாம் முகே ஜீவஸ்ய ஸாதநம்" என்கிறபடியே ஒருகால் போனதிலே அநேக பர்யாயம் போவது வருவதாயுழன்றும் போருகிற ஆத்மாவோட்டை அந்வயத்தாலே விழுந்தெழுகை முதலான ஸ்வபாவ யுக்தமாய், "பந்துயறித்து" என்கிறபடியே ஈச்வரன் தன்னுடைய போகவிரோதியென்று வலிய விடுவிக்க விடுபட்டும்,

**விளக்கம்** – (விழுந்தும் எழுந்தும்) - ஸ்ரீவிஷ்ணுதர்மம் – த்வம் ந்யஞ்சத்பிருதஞ்சத்பி: – நீ விழுகின்றவற்றாலும் எழுகின்றவற்றாலும் - என்பதற்கு ஏற்ப கீழே விழுந்தும் உயரத்தில் எழுந்தும். (சுழன்றும் உழன்றும்) அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே - ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் நிலைத்து தான் செய்த கர்மங்கள் காரணமாகச் சுழன்றபடி - என்பதற்கு ஏற்ப சக்கரத்தின் சுழற்சி போன்று சுழன்றபடி இருந்தும், யமாலய மஹாசூலே மாதுர் ஜடரதோல்பத:, யாதாயாத ஸஹஸ்ராணாம் முகே ஜீவஸ்ய ஸாதநம் – முனிவரே! இந்த உயிருக்கு யமனிடம் உள்ள மஹாசூலம் மற்றும் தாயின் கர்ப்பம் ஆகியவற்றில் பலமுறை செல்வதற்கும் வெளியே வருவதற்குமான ஸாதனம் – என்பதற்கு ஏற்ப ஒருமுறை சென்ற காரணத்தால் [அதாவது ஸம்ஸாரத்தில் புகுந்து காரணத்தால்] பலமுறை வருவதும் போவதுமாக உழன்றபடி உள்ளதான ஆத்மாவின் சேர்க்கை காரணமாக விழுதல், எழுதல் என்ற இயல்புகள் சேர்ந்ததாக என்று கருத்து. (பறிபட்டும்) – பெரியதிருமொழி (10-7-5) – பந்துயறித்து - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தனது இன்பத்திற்குத் தடை என்று எண்ணி தானாகவே வந்து விடுவிக்கும்போது இதிலிருந்து விடுபட்டும்.

**வ்யாக்யானம்** – "அற்ப சாரங்கள்" என்கிறபடியே பகவத்விஷயத்தில் நின்று அகற்றுமதொழிய தன்பக்கல் புஜிக்கலாவதொன்றில்லாதபடி அல்ப ரஸங்களாயிருக்கும் மவையுமாய், மதீயமென்று ஸ்வஸம்பந்தத்தையிட்டுப் பார்க்கும்போது "சிற்றில் மென் பூவையும் விட்டகன்ற" என்கிறபடியே த்யாஜ்யங்களாய், ததீயமென்று தத் ஸம்பந்தத்தை

யிட்டுக் காணும்போது "இகழ்வி லிவ்வனைத்தும்" என்கிறபடியே கட்டங்க உபாதேயமா மவையுமாய், "அன்னை முனிவது மன்றிலின் குரலீர்வதும்" இத்யாதிப்படியையும், "பனிப்பியல்வாக வுடைய தண்வாடை, இக்கால மிவ்வூர் பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரி வீசும்" என்கிறபடியே அவனையொழியக் கண்டபோது ப்ரதிகூலங்களாகவும், "அவ்வாடை யீதோ வந்து தண்ணென்றதே" என்று அவனோடே சேர்த்துக் கண்டபோது அநுகூலங்களாகவும் சொல்லப்படுமவையான "பொங்கைம்புலனும்" என்கிற பாட்டில் சொல்லப்பட்ட போக்ய போகோபகரண போகஸ்தாந ஸமூஹமென்றபடி.

**விளக்கம்** – (அல்பசாரமா மவையுமாய்) - திருவாய்மொழி (3-2-6) – அற்ப சாரங்கள் - என்பதற்கு ஏற்ப பகவானிடமிருந்து அகற்றிவிடுதல் என்ற செயல் அல்லாமல் மற்றபடி தன்னிடம் உயர்ந்ததாக அனுபவிக்க ஏதும் இல்லாத படி தாழ்ந்த சுவை நிறைந்தவைகளாக இருப்பவையும். (மதீயம் என்னில் விட்டகலவும்) – "எனக்கு உடைமையானது" என்று தனது ஸம்பந்தத்தை முன்னிறுத்திக் காணும்போது, பெரியதிருமொழி (3-7-8) - சிற்றில் மென் பூவையும் விட்டகன்ற - என்பதற்கு ஏற்ப கைவிடத்தக்கவையாகும். (ததீயம் என்னில் இகழ்வு அறவும்) – "இது அவனுக்கு உடைமையானது" என்று அவன் ஸம்பந்தத்தை முன்னிறுத்திக் காணும்போது திருவாய்மொழி (3-4-1) – இகழ்வில் இவ்வனைத்தும் - என்பதற்கு ஏற்ப முற்றிலுமாக ஏற்கத்தக்கவையாகவும். (முனிவதும் இக்காலம்) - பெரியதிருமொழி (11-2-5) - அன்னை முனிவதும் அன்றிலின் குரல் ஈர்வதும் – என்றும், திருவிருத்தம் (5) – பனிப்பியல்வாக வுடைய தண்வாடை, இக்கால மிவ்வூர் பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரி வீசும் – என்றும் உள்ள பாசுரங்களில் கூறப்பட்டபடி அவன் இன்றிக் காணும்போது பகையாக உள்ளவையாகவும். (ஈதோ) – திருவிருத்தம் (27) – அவ்வாடை ஈதோ வந்து தண்ணென்றதே - என்பதற்கு ஏற்ப அவனுடன் சேர்ந்து காணும்போது இனிய பொருள்களாகவும். (என்னப்படும்) - என்று கூறப்படுபவையான. (பொங்கைம்புலனின் போக்யாதி ஸமூஹம்) – திருவாய்மொழி (10-7-10) - பொங்கைம்புலனும் - என்ற பாசுரத்தில் கூறப்பட்டதான பொருள்கள், இன்பத்தை அளிக்கவல்ல பொருள்கள், இன்பம் தருகின்ற இடம் போன்றவற்றின் கூட்டம் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - இதில் செந்நூல் வெண்ணூல் கருநூலாலே சமைக்கப்பட்ட பந்தாகச் சொல்லிற்று, போகஸ்தானமான தேஹத்தையென்னுமிடம் மேலிவர் வர்ணித்ததிலே

தெரியும். கழலாவது – சிறுகி அஞ்சாயிருக்குமதாகையாலே போகோபகரணமான பஞ்சேந்த்ரியங்கள். பாவை குழமணங்களாவன – லீலோபகரண விசேஷங்கள். யாழ் தென்றல் மதியம் அடிசில் சாந்தம் பூண் அகில் ஆவன – போக்யங்களான சப்தாதி விஷயங்கள். இதில் பூண் அகில் என்கிறவை ரூப கந்தங்களில் பிதை. சிற்றிலாவது – கொட்டகமாகையாலே போகஸ்தானம். தேஹமும் வாஸ ஸ்தானமான க்ருஹாதிகளும் போகஸ்தாந விசேஷமிறே. தூதையாவது - சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே இந்த்ரிய வ்யதிரிக்தங்களான போகோபகரணங்களுக்கு உபலக்ஷணம். போகஸ்தானமாக தேஹத்தையும், போகோபகரணமான இந்த்ரியங்களையும் பந்து கழலித்யாதியாலே லீலோபகரணமாகச் சொல்லுகிறது, லீலையாவது தாதாத்விக ரஸமான வ்யாபாரமாகையாலே தாத்ருச வ்யாபாரத்துக்கு இவை உபகரணமாயிருக்கையாலே. ஆகையால் இவையனைத்தும் “பொங்கைம்புலனில்” போக்யாதி ஸமூஹம் என்னக் குறையில்லை.

**விளக்கம்** – இந்தச் சூர்ணையில் சிவந்த நூல், வெண்மையான நூல் மற்றும் கறுப்பு நூல் ஆகியவை கொண்டு உண்டாக்கப்பட்ட பந்தாக உரைக்கப்பட்டது எதுவென்றால், இன்பத்திற்கு இடமாக உள்ள சரீரத்தையே ஆகும் என்பது மேலே இவர் உரைத்த வர்ணனை மூலம் தெளிவாகிறது. கழல் என்பது சிறியதாகவும், ஐந்தாகவும் உள்ளதால் இன்பத்திற்குக் கருவிகளாக உள்ள இந்த்ரியங்கள் ஆகும். பாவை, குழமணம் போன்றவை விளையாட்டுக் கருவிகளின் தன்மைகள். யாழ், தென்றல், மதியம், அடிசில், சாந்தம், பூண் அகில் போன்றவை இன்பம் அளிக்கவல்ல இனிய பொருள்களாகிய சுவை, ஒளி, உணர்தல், சப்தம், மணம் போன்றவை ஆகும். இவற்றில் பூண் மற்றும் அகில் என்பவை உருவம் மற்றும் மணம் ஆகியவற்றின் வேறுபாடு உணர்த்துவது ஆகும். சிற்றில் என்பது கொட்டகம் என்பதால், இன்பம் அளிக்கும் இடம்; சரீரம் மற்றும் வசிக்கும் வீடு ஆகியவை இன்பம் அளிக்கவல்ல இடங்கள் அல்லவோ? தூதை என்பது சிறு சோறு உண்டாக்க உதவுவது என்பதால் இந்த்ரியங்களைத் தவிர்த்து உள்ளதான இன்பம் அளிக்கவல்ல உபகரணங்கள் ஆகும். இன்பம் தரவல்ல சரீரம் மற்றும் இன்பம் அளிக்கவல்ல கருவிகளான இந்த்ரியங்கள் ஆகியவற்றை பந்து, கழல் மூலம் கூறி, அவை விளையாட்டுக் கருவிகளாக உள்ளதாகக் கூறுகிறார்; ஏனென்றால் விளையாட்டு என்பது அந்த நேரத்தில் ஏற்படுகின்ற இன்பமான செயல் என்பதால், அந்தச் செயலுக்கு ஏற்ற கருவிகளாக அவை உள்ளதால் ஆகும். ஆகவே இவை அனைத்தும் திருவாய்மொழி (10-7-10) –

பொங்கைம்புலனில் - என்பதில் இன்பம் முதலானவையாகக் கூறப்பட்டவை என்று உரைப்பதில் தவறில்லை.

ஆசார்யம் ஹ்ருதயம் இரண்டாம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்

ஸ்வாமி அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்
நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

## ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

(மூன்றாம் ப்ரகரணம் : சூர்ணைகள் 150 – 218)

**(ஸ்வாமி மணவாள மாமுனிகள் வ்யாக்யான மூலம், எளிய நடை)**



(ஆசார்ய ஹ்ருதயத்தின் மூலப்பொருளாம் நம்மாழ்வார்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

# மூன்றாம் ப்ரகரணம்

150. சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாந கர்மங்களைச் சிறகென்று குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்.

**அவதாரிகை** - இனி பகவத் விஷயத்தில் தூதாகவிடுகிற பக்ஷிகளுக்கு ஸ்வாபதேசமேதென்னு மாகாங்க்ஷையிலே அத்தையருளிச்செய்கிறார் மேல் (சோர்ப்பாரை) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து பகவானிடம் தூதாக விடப்படுகின்ற பறவைகள் என்பதற்கு மறைமுகமான பொருள் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது (சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி) பகவத் விஷயத்தில் கடகராமவர்களைப் பக்ஷிகளாக ப்ரதிபத்தி பண்ணி. (ஜ்ஞாந கர்மங்களைச் சிறகென்று) “வீசும் சிறகால் பறத்தீர்”, “அஞ்சிறைய மடநாராய்” இத்யாதிகளாலே “உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதி: ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:” என்கிறபடியே பகவத் விஷயத்தில் சீக்ர ப்ராப்திக்குறுப்பான அவர்களுடைய ஜ்ஞாந வ்ருத்தங்களைப் பக்ஷங்களென்று சொல்லி, (குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்) “நீயும் நின் அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி”, “இது சொல்லியருள் ஆழிவரி வண்டே”, “வந்து மேயும் குருகினங்காள் – கைகள் கூப்பிச் சொல்லீர்”, “உடன் மேயும் மடவன்னங்காள் அடியேனுக்கும் போற்றுமினே”, “நன்னலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் நானிரந்தேன்”, “என் முல்லைகள் மேல் தும்பிகாள் -யாமிதுவோ தக்கவாறென்ன வேண்டும் கண்டீர்”, “செங்கால் மடநாராய் - குடக்கூத்தற்கென் தூதாய் – நுமரோடே - நும்கால்களென் தலைமேல் கெழுமீரோ”, “கொக்கினங்காள் குருகினங்காள் தக்கிலமே கேளீர்கள்” இத்யாதிகளாலே குருக்களுடையவும் ஸப்ரஹ்மசாரிகளுடையவும், “இளங்கிளியே யான் வளர்த்த நீயலையே”, “நீயலையே சிறுபூவாய்”, “யான் வளர்த்த கிளிகாள்”, “தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே” இத்யாதிகளாலே புத்ரர்களுடையவும் சிஷ்யர்களுடையவும் ஸ்தாநே சொல்லுமென்கை.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (சேர்ப்பாரைப் பக்ஷிகள் ஆக்கி) - பகவானிடம் கொண்டு சேர்ப்பவர்களைப் பறவைகளாக எண்ணி. (ஞான கர்மங்களைச் சிறகு என்று) - திருவிருத்தம் (54) - வீசும் சிறகால் பறத்தீர் - என்றும், திருவாய்மொழி (1-4-1) – அஞ்சிறைய மடநாராய் – என்றும் கூறுவதன் மூலம், உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதி: ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம: - பறவைகள் தங்கள் இரண்டு சிறகுகளால் ஆகாயத்தை அடைவது போன்று, ஞானம் மற்றும் கர்மம் ஆகிய இரண்டாலும் புருஷோத்தமனை அடைகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை விரைந்து அடைவதற்கு உதவியாக உள்ளதான ஞானம் மற்றும் கர்மம் ஆகியவற்றைச் சிறகுகள் என்று உரைத்து. (குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்) - திருவாய்மொழி (1-4-1) – நீயும் நின் அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி - என்றும், திருவாய்மொழி (1-4-6) - இது சொல்லியருள் ஆழிவரி வண்டே - என்றும், திருவாய்மொழி (6-1-1) - வந்து மேயும் குருகினங்காள் – கைகள் கூப்பிச் சொல்லீர் – என்றும், திருவாய்மொழி (6-1-5) - உடன் மேயும் மடவன்னங்காள் அடியேனுக்கும் போற்றுமினே – என்றும், திருவாய்மொழி (6-8-1) - நன்னலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் நானிரந்தேன் - என்றும், திருவாய்மொழி (6-8-4) – என் முல்லைகள் மேல் தும்பிகாள் - யாமிதுவோ தக்கவாறென்ன வேண்டும் கண்டீர் - என்றும், திருவாய்மொழி (9-7-1) – செங்கால் மடநாராய் - குடக்கூத்தற்கென் தூதாய் – நுமரோடே - நும்கால்களென் தலைமேல் கெழுமீரோ – என்றும், திருவாய்மொழி (9-7-3) - கொக்கினங்காள் குருகினங்காள் தக்கிலமே கேளீர்கள் - என்றும் உள்ள பாசுரங்களில் குருக்களும் அவர்களுடைய சிஷ்யர்களும் கூறப்படுகின்றனர். திருவாய்மொழி (1-4-7) – இளங்கிளியே யான் வளர்த்த நீயலையே – என்றும், திருவாய்மொழி (1-4-8) - நீயலையே சிறுபூவாய் - என்றும், திருவாய்மொழி (6-8-5) - யான் வளர்த்த கிளிகாள் – என்றும், திருவாய்மொழி (6-8-6) – தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே - என்றும் உள்ள பாசுரங்களில் புத்திரர்களும், சிஷ்யர்களும் கூறப்படுகின்றனர்.

151. விவேகமுகராய் நூலுரைத்து அள்ளலில் ரதியின்றி அணங்கின் நடையைப் பின்சென்று குடை நீழலிலே கவரியசையச் சங்கமவை முரல வரிவண்டிசை பாட மாநஸ பத்மாஸநத்திலே யிருந்து விதியினா லிடரி லந்தரமின்றி யின்பம்படக்

குடிச்சீர்மையிலேயாதல் பற்றற்ற பரம ஹம்ஸராதலான நயாசலன் மெய்ந்நாவன் நாத யாமுநர் போல்வாரை அன்னமென்னும்.

**அவதாரிகை** - இனி இந்த பக்ஷிகளில் அவாந்தர பேதங்களுடைய ஸ்வாபதேச மருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி இதில் அன்னமாகச் சொல்லுகிறது ஆரையென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (விவேகமுகராய்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்த அந்த ஒவ்வொரு பறவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை, அந்தந்த பறவைகளை ஏன் கூறவேண்டும் என்ற மறைமுகப்பொருளைக் கூறி விளக்கத் திருவுள்ளம் கொண்டார். இவற்றில் அன்னம் என்று யாரைக் கூறினார் என்பதை முதலில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, (விவேகமுகராய்) "ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்பு மிச்ரம்" என்கிறபடியே ஹம்ஸமானது நீர க்ஷீர விபாகம் பண்ணுமாபோலே, ஸாராஸார விவேகோந்முகராய். (நூலுரைத்து) "அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த" என்று ஹம்ஸ ரூபியாய் சாஸ்த்ர ப்ரதானம் பண்ணினாப்போலே ச்ரோதாக்களைக் குறித்து சாஸ்த்ரங்களை யுபதேசித்து, (அள்ளலில் ரதியின்றி) "நபத்நாதி ரதிம் ஹம்ஸக: கதாசித் கர்த்தமாம்பஸி" என்கிறபடியே ஹம்ஸமானது கர்தம ஜலத்தில் பொருந்தாதாப்போலே, "வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்து அழுந்தார்" என்கிறபடியே ஸம்ஸார கர்தமத்தில் பொருத்தமுடையரன்றிக்கே (அணங்கின் நடையைப் பின்சென்று) "அன்னம் பெய்வளையார் தம் பின் சென்று" என்கிறபடி ஹம்ஸமானது ஸ்த்ரீகள் நடையழகைக் கண்டு தானும் அப்படி நடக்கைக்காகப் பின்செல்லுமாபோலே "அன்ன நடையவணங்கு" என்று ஹம்ஸகதியான பிராட்டியுடைய அநந்யார்ஹ சேஷத்வாதிகளும் புருஷகாரபாவமுமாகிற நடையை யநுகரித்து.

**விளக்கம்** – (விவேக முகராய்) - ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்பு மிச்ரம் - ஹம்ஸமானது நீருடன் கலந்துள்ள பாலில் உள்ள பாலை மட்டும் பிரிப்பது போன்று - என்பதற்கு ஏற்ப ஹம்ஸமானது நீரையும் பாலையும் பகுத்தறிந்து பிரிப்பது போன்று, சாரம் மற்றும் சாரம் அற்றவை என உணர்ந்து அவற்றைப் பிரிக்க முனைபவர்கள். (நூல் உரைத்து) – பெரியதிருமொழி (11-4-8) – அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த - என்பதற்கு ஏற்ப,


**Email:**sridharan_book@yahoo.co.in

ஹம்ஸ அவதாரம் எடுத்து வந்து சாஸ்த்ரங்களை உபதேசித்தது போன்று கேட்கும் ஆர்வம் கொண்டவர்களுக்குச் சாஸ்த்ரங்களை உபதேசம் செய்து. (அள்ளலில் ரதியின்றி) - ரதி என்றால் ஆசை. நபத்நாதி ரதிம் ஹம்ஸக: கதாசித் கர்த்தமாம்பஸி - ஹம்ஸம் சேற்று நீரில் ஆசை வைப்பதில்லை - என்பதற்கு ஏற்ப ஹம்ஸமானது சேற்று நீரில் பொருந்தாமல் உள்ளது போன்று, திருவிருத்தம் (100) - வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்து அழுந்தார் – என்பதற்கு ஏற்ப இந்த ஸம்ஸாரம் என்ற சேற்று நீரில் பொருத்தம் உடையவர் அல்லாமல். (அணங்கின் நடையைப் பின்சென்று) - பெரியதிருமொழி (6-5-5) – அன்னம் பெய்வளையார் தம் பின் சென்று – என்பதற்கு ஏற்ப அன்னமானது பெண்களுடைய நடையழகைக் கண்டு தானும் அதே போன்று நடப்பதற்காக அவர்கள் பின் செல்வது போன்று, பெரியதிருமடல் (7) - அன்ன நடையவணங்கு - என்பதற்கு ஏற்ப அன்னத்தின் நடையைக் கொண்ட பிராட்டியுடைய, மற்றவர்களுக்கு வசப்படாமல் பகவானுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் மற்றும் அவளுடைய புருஷகாரத்தன்மை போன்ற நடைகளைப் பின்பற்றியபடி.

**வ்யாக்யானம்** - (குடைநீழலிலே, கவரியசைய, சங்கமவை முரல, வரி வண்டிசை பாட, மாநஸ பத்மாஸநத்திலே யிருந்து) "அன்னமென் கமலத் தணிமலர்ப் பீடத்து அலைபுனலிலைக் குடை நீழல் வீற்றிருக்கும்" என்றும், "செந்நெலொண் கவரியசைய வீற்றிருக்கும்" என்றும், "சங்கமவை முரலச் செங்கமல மலரையேறி" என்றும், "வரி வண்டிசை பாட அன்னம் பெடையோடுடன் நாடும்" என்றும், "மன்னுமுது நீர் அரவிந்த மலர் மேல்" என்றும் சொல்லுகிறபடியே ஹம்ஸமானது, மேலே எழுந்த தாமரையிலை குடையாகவும், பக்வ பலமான செந்செலின் அசைவு கவரியாகவும், சங்குகளின் த்வநி ஜய கோஷமாகவும், வண்டுகளின் மிடற்றோசை பாட்டாகவும் பெற்று, மாநஸ ஸர: பத்மம் ஆஸநமாக இருக்குமாபோலே "அக்கமலத்திலை போலும் திருமேனியடிகள்" என்று பத்மபத்ர நிபச்யாமலமான திருமேனியை ஸம்ஸார துக்கார்க்க தாபம் வாராதபடி தங்களுக்கு ஒதுங்க நிழலாகவுடையராய், "அஹமந்நம்" என்னும்படி பரிபக்வ ஜ்ஞாநரானவர்கள் அநுகூலவ்ருத்தி செய்ய, சுத்தஸ்வபாவர் ஸ்துதிக்க, ஸாரக்ராஹிகள் ஸாமகாநம் பண்ண, "குரு பாதாம்புஜ த்யாயோத்" என்கிறபடியே ஆசார்ய சரணயுகளங்கள் அநவரதம் நெஞ்சுக்குள்ளே கொண்டிருக்கும் சிஷ்யர்களுடைய பரமகுருவுக்கிருப்பிடமான "போதிற் கமல வன் நெஞ்சம்" என்கிற மாநஸ பத்மத்தை வஸ்தவ்யமாகவுடையராய்.

**விளக்கம்** – (குடைநீழலிலே, கவரியசைய, சங்கமவை முரல, வரி வண்டிசை பாட) - பெரியதிருமொழி (9-1-5) – அன்னமென் கமலத் தணிமலர்ப் பீடத்து அலைபுனலிலைக் குடை நீழல் வீற்றிருக்கும் – என்றும், பெரியதிருமொழி (9-1-5) - செந்நெலொண் கவரியசைய வீற்றிருக்கும் – என்றும், பெரியதிருமொழி (7-8-2) – சங்கமவை முரலச் செங்கமல மலரையேறி - என்றும், பெரியதிருமொழி (7-5-9) - வரி வண்டிசை பாட அன்னம் பெடையோடுடன் நாடும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அன்னப்பறவையானது மேலே எழுந்து நிற்கும் தாமரை இலையைக் குடை போன்றும், நன்கு முதிர்ந்த செந்நெல் கதிர்களைக் கவரி போன்றும், சங்குகளின் நாதத்தை வெற்றி முழக்கமாகவும், வண்டுகளின் ஓசை என்பதைப் பாட்டாகவும் அமையப்பெற்று, (மாநஸ பத்மாஸநத்திலே யிருந்து) – மானச மடுவில் உதித்த தாமரைமலரைத் தனது ஆசனமாகக் கொண்டிருப்பது போன்று. திருவாய்மொழி (9-7-3) - அக்கமலத்திலை போலும் திருமேனியடிகள் - என்பதற்கு ஏற்ப தாமரையின் இலை போன்று ச்யாமள நிறம் கொண்டதான பகவானுடைய திருமேனியை, ஸம்ஸாரதுக்கம் என்பதன் மூலம் ஏற்படக்கூடிய பெருந்துயரம் என்பது வராதபடி தங்களுக்கு ஒதுங்கிக் கொள்ள ஏற்ற நிழலாகக் கொண்டவராகவும். தைத்திரீயம் – அஹம் அந்நம் – நான் அவனுக்கு இனியவன் – என்பதற்கு ஏற்ப முதிர்ந்த ஞானம் கொண்டவர்கள் கைங்கர்யம் செய்யும்படியாகவும், சுத்தமான இயல்புடையவர்கள் துதிக்கும்படியாகவும், சாரமாக உள்ளவற்றை மட்டுமே கைக்கொள்ள வல்லவர்கள் ஸாமகானம் செய்யும்படியாகவும், குரு பாதாம்புஜ த்யாயோத் - ஆசார்யன் திருவடிகளை த்யானிக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப ஆசார்யனுடைய பொருந்திய திருவடிகளை எப்போதும் இடைவிடாமல் நெஞ்சத்தில் வைத்தபடி உள்ள சிஷ்யர்களுடையதான பிரமகுருவுக்கு இருப்பிடமான பெரியாழ்வார் திருமொழி (5-2-8) - போதிற் கமல வன் நெஞ்சம் – என்பதான, மனம் என்னும் தாமரையைத் தங்கள் வசிக்கும் இடமாகக் கொண்டவராகவும்.

**வ்யாக்யானம்** – (விதியினால், இடரில், அந்தரமின்றி, இன்பம் பட, குடிச்சீர்மையிலே யாதலித்யாதி) “விதியினால் பெடைமணக்கும்” என்றும், “இடரில் போகம் மூழ்கி” என்றும், “அந்தர மொன்றுமின்றி” என்றும், “மிகவின்பம் பட மேவும்” என்றும் சொல்லுகிறபடியே சாஸ்த்ரோத்தமான ப்ரகாரத்திலேம ஸாம்ஸாரிக ஸகல துரிதங்களும் தட்டாதாபடியாகவும், ஒரு விச்சேதமும் வாராதபடியாகவும், மேன்மேலும் ஆநந்தம்


**Email:**sridharan_book@yahoo.co.in

அபிவ்ருத்தமாம்படியாகவும், “குடிச்சீர்மையி லன்னங்கள்” என்கிறபடியே பார்யா புத்ராதிகளோடேயிருந்து பகவதநுபவம் பண்ணுகிற “நளிர்ந்த சீலன் நயாசலன்” என்று சொல்லப்பட்ட செல்வநம்பி, “மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்” என்கிற பெரியாழ்வார் போல்வாரையும், “பற்றற்றார்கள்” என்றும், “சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினர் அற்ற பற்றர்” என்றும் சொல்லுகிறபடியே ஸாம்ஸாரிக ஸகல ஸங்கமுமற்று, உத்தமாச்ரமிகளாய்ப் பரமஹம்ஸ சப்த வாச்யரான நாதமுநிகள், யாமுநமுநிகள் போல்வாரையும் இந்த குண ஸாம்யத்தையிட்டு அன்னமென்று சொல்லுமென்கை.

**விளக்கம்** – (விதியினால், இடரில், அந்தரமின்றி, இன்பம் பட) – திருவாய்மொழி (1-4-3) விதியினால் பெடைமணக்கும் - என்றும், திருவாய்மொழி (6-1-4) – இடரில் போகம் மூழ்கி – என்றும், திருவாய்மொழி ( 6-810) – அந்தர மொன்றுமின்றி - என்றும், திருவாய்மொழி ( 9-7-10) – மிகவின்பம் பட மேவும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட முறைகளில், ஸம்ஸாரத்தினால் ஏற்படும் அனைத்துவிதமான துன்பங்களும் நெருங்காதபடியும், எந்தவிதமான இடையூறும் உண்டாகாதபடியும், மேன்மேலும் ஆனந்தம் பெருகும்படியாகவும், (குடிச்சீர்மையிலே யாதல்) - திருவிருத்தம் (29) – குடிச்சீர்மையில் அன்னங்கள் - என்பதற்கு ஏற்ப மனைவி மற்றும் புத்திரர்களுடன் சேர்ந்து நின்று பகவத் அனுபவம் கிட்டியபடி உள்ள. (நயாசலன்) – பெரியாழ்வார் திருமொழி (4-4-8) - நளிர்ந்த சீலன் நயாசலன் - என்று கூறப்பட்ட செல்வநம்பி. பெரியாழ்வார் திருமொழி (4-9-11) - மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன் - என்று கூறப்பட்ட பெரியாழ்வார் போன்றவர்களையும். (பற்றற்ற பரமஹம்ஸராதல் ஆன) – பெருமாள் திருமொழி (1-4) – பற்றற்றார்கள் – என்றும், திருச்சந்தவிருத்தம் (52) - சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினர் அற்ற பற்றர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸார உலகத்துடனான அனைத்துவிதமான ஸம்பந்தங்களையும் விலக்கி, மிகுந்த உத்தமமான ஸந்யாச ஆச்ரமத்தைப் பற்றிவர்களும், பரமஹம்ஸர்கள் என்று கூறலாம்படி உள்ளவர்களும் ஆகிய. (நாதயாமுநர் போல்வாரை) - நாதமுனிகள், யாமுநமுனிகள் போன்றவர்களையும். (அன்னம் என்னும்) - இதுவரை கூறப்பட்ட குணங்களுடைய ஒற்றுமை உள்ளதன் காரணமாக அன்னம் என்றார்.

152. என் பெறுதியென்ன ப்ரமியாது உள்ளத்துளூறிய மதுவ்ரதமாய் தூமது வாய்கள் கொண்டு குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்துத் தேதெனவென்று ஆளம் வைத்துச் சிறுகாலெல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக்கொள்ளப்பாடித் துன்னிட்டு நெருக்க நீக்கென்று கடந்து புகும் தகைவறப் புக்கு வண்டொத்திருண்ட குழலிலே சங்கையற மருவி அருளாத யாமென்றோடி வந்து வாசமேயூதி வண்டே கரியான தெய்வவண்டோடே சேர்விக்கும் சேமமுடை நாரதன் முனிவாஹநர் தம்பிரான்மார் போல்வரை வண்டு தும்பி யென்னும்.

**அவதாரிகை** - வண்டு தும்பிகளென்றது ஆரையென்ன அருளிச்செய்கிறார் மேல் (என் பெறுதி) என்று தொடங்கி.

**விளக்கம்** – வண்டு, தும்பி போன்றவை யாரைக் குறிக்கின்றன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, (என் பெறுதியென்ன ப்ரமியாது) “ஏரார் மலரெல்லாமூதி நீயென் பெறுதி” என்று நிவர்த்திப்பிக்க வேண்டும்படி அப்ராப்த விஷயங்களை போக்யமென்று ப்ரமியாதே, (உள்ளத்துளூறிய மது வ்ரதமாய்) “உளம் கனிந்திருக்கு மடியவர் தங்களுள்ளத்து ளூறிய தேனை” என்று தன்னுடைய ஸௌந்தர்ய சீலாதிகளை நினைத்து ஹ்ருதயம் பக்வமாயிருக்கும் சேஷபூதருடைய ஹ்ருதயத்திலே “ஊறிய தேன்” என்கிற பகவத் விஷயமாகிற மதுவை விரும்பி, “த்வாம்ருதஸ்யந்திதி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி, ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே” என்கிறபடி மற்றொன்றைப் புரிந்து பாராதே இத்தை புஜிக்கையே வ்ரதமாகவுடையராய், (தூமது வாய்கள் கொண்டு) “சூடிய தண்டுளபமுண்ட தூமது வாய்கள் கொண்டு” என்று பகவத் போக்யதாநுபவத்தாலே பரிசுத்தமாய் இனிதான வாய்க் கொண்டு, (குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்து) “என் குழல் மேல் ஒளி மாமல ரூதீரோ” என்கிறபடியே “நாட்கமழ் மகிழ்மாலை மார்ப”ராகையாலே வகுளதரரான ஆழ்வாருடைய “வைகுந்தமன்னாள் குழல்வாய் விரைபோல் விண்டு கள்வாரும் மலருளவோ நும்வியலிடத்தே” என்று ப்ரத்வாதிகள் போக்யதையும் பரிச்சிந்நமென்னும்படியான திருக்குழலில் வைத்த ஒளிமா மலரான வகுளத்தின் ஸாரத்தை க்ரஹித்து அவ்வழியாலே இத்தலையில் போக்யதையை யநுபவித்து.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (என் பெறுதி என்ன ப்ரமியாது) – பெரியதிருமொழி (8-4-5) - ஏரார் மலர் எல்லாம் ஊதி நீ என் பெறுதி – என்று தள்ளவேண்டியதாக உள்ளதும் பெறுவதற்குத் தகுதி அற்றதும் ஆகிய விஷயங்களை இன்பம் என்று எண்ணி மயங்காமல், (உள்ளுத்துள் ஊறிய மது வ்ரதமாய்) - பெரியதிருமொழி (4-3-9) – உளம் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனை - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய தனது திருமேனி அழகு, சீலம் முதலானவற்றை எண்ணியபடி உள்ளதால் தங்களுடைய இதயமானது "ஊறிய தேன்" என்பதான பகவத் விஷயம் என்னும் தேனை மிகவும் விரும்பி, ஸ்தோத்ரரத்னம் (27) – த்வாம்ருதஸ்யந்திதி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி, ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே - தேனை மட்டுமே தனக்கு உணவாகக் கொண்டபடி உள்ளபோது அதனை விடுத்து, கிடைப்பதற்கு மிகவும் அரிதாக உள்ளதான முள்ளிப்பூவைப் பாராமல் உள்ளது போன்று, உன்னுடைய தேன் பொருந்திய திருவடித்தாமரைகளின் இன்பத்தை அனுபவித்த நான் வேறு ஒரு அற்பமான இன்பத்தை இனி நாடுவேனோ - என்பதற்கு ஏற்ப மற்றொன்றினை பார்க்காமல் இதனை மட்டுமே உட்கொள்ளும் செயலையே விரதமாகக் கொண்டவராகவும். (தூமது வாய்கள் கொண்டு) – திருவாய்மொழி (6-8-3) – சூடிய தண் துளபம் உண்ட தூமது வாய்கள் கொண்டு – என்பதற்கு ஏற்ப பகவத் இன்பத்தை அனுபவிக்கின்ற தூய்மையான இனிய வாய் கொண்டு. (குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்து) - திருவாய்மொழி (6-8-3) - என் குழல் மேல் ஒளி மாமலல் ஊதீரோ - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (4-10-11) - நாட்கமழ் மகிழ்மாலை மார்பர் - என்பவராக உள்ளதால் வகுளமாலையை அணிந்துள்ள நம்மாழ்வாருடைய, திருவிருத்தம் (55) - வைகுந்தமன்னாள் குழல்வாய் விரைபோல் விண்டு கள்வாரும் மலருளவோ நும்வியலிடத்தே - என்பதற்கு ஏற்ப பரத்வத்தின் இனிமை கூட அளவுடன் கூடியது என்று கூறும்படியாக திருக்குழலில் வைக்கப்பட்ட ஒளி வீசும் மாமலராகிய வகுளமலரின் ஸாரத்தை எடுத்து அதன் மூலம் இவருடைய இனிமையை அனுபவித்து.

**வ்யாக்யானம்** - (தேதெனவென்று ஆளம்வைத்து) "வரிவண்டு தேதெனவென்றிசை பாடும்", "யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும்" என்கிறபடியே இப்படி பகவத் பாகவத போக்யதைகளை அநுபவித்த செருக்குக்குப் போக்குவீடாக ஆளத்தி வைத்து. (சிறுகால் எல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக்கொள்ளப்பாடி)

“அறுகால் வரிவண்டுகள் ஆயிர நாமம் சொல்லிச் சிறுகாலைப் பாடும்”, “எல்லியம்போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி”, “வண்டு குறிஞ்சி மருளிசை பாடும்”, “வண்டினங்கள் காமரங்களிசை பாடும்”, “கந்தாரமந் தேனிசை பாட” என்கிறபடியே காலோசிதமான பண்களை, “பண்கள் தலைக் கொள்ளப்பாடி” என்கிறபடியே தலைமை பெறும்படி பாடி,

**விளக்கம்** – (தேதெனவென்று ஆளம் வைத்து) - பெரியதிருமொழி (4-1-1) – வரிவண்டு தேதெனவென்றிசை பாடும் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (4-86) - யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் – என்பதற்கு ஏற்ப பகவத் விஷயம் மற்றும் பாகவதர்கள் ஆகியோருடைய இனிமையை அனுபவித்த செருக்கு நீங்கும்படியாக ஆளத்தி வைத்து. (சிறுகால் எல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக்கொள்ளப்பாடி) – பெரியாழ்வார் திருமொழி (4-2-8) - அறுகால் வரிவண்டுகள் ஆயிர நாமம் சொல்லிச் சிறுகாலைப் பாடும் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (4-8-8) – எல்லியம்போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி - என்றும், பெரியதிருமொழி (2-1-2) - வண்டு குறிஞ்சி மருளிசை பாடும் - என்றும், பெருமாள் திருமொழி (8-4) – வண்டினங்கள் காமரங்களிசை பாடும் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-8-1) - கந்தாரமந் தேனிசை பாட - என்றும் உள்ளதான அந்தக் காலத்திற்கு ஏற்றதான பண்களை, திருவாய்மொழி (3-5-2) – பண்கள் தலைக் கொள்ளப்பாடி – என்பதற்கு ஏற்ப முதன்மை பெறும் விதமாகப் பாடி.

**வ்யாக்யானம்** - (துன்னிட்டு நெருக்க நீக்கென்று கடந்து புகும் தகைவறப்புக்கு) “பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்த்ரனும் துன்னிட்டுப் புகலரிய” என்றும், “சுந்தரர் நெருக்க” என்றும் சொல்லுகிறபடியே திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்க வொண்ணாதபடியே நெருக்க, “நேச நிலைக் கதவம் நீக்கு” என்று திருவாசல் காப்பானைத் திருக்கதவு திறக்கவேணுமென்று அபேக்ஷித்து, “பொன்னியலு மாடக் கவாடம் கடந்து புக்கு” என்கிறபடியே த்ருஷ்டி சித்தாபஹாரம் பண்ணும் திருவாசலி லழகிலே துவக்குண்ணாதே அத்தைக் கடந்து புகவேண்டுகையாகிற தகைவு அற, பாடுவாரான அந்தரங்கதையாலும் ஏகாக்ர சித்ததையாலும் போய்ப்புக்கு. (வண்டொத்திருண்ட குழலிலே சங்கையற மருவி) “வண்டொத்திருண்ட குழல்”

என்கிறபடியே ஸ்வஸமாந விஷயமுள்ளவிடத்திலே சேர்ந்து “நீமருவியஞ்சாதே நின்று” என்கிபடியே நிச்சங்கமாக அவனுக்கு ஸமீபவர்த்திகளாய்.

**விளக்கம்** – (துன்னிட்டு நெருக்க) – பெருமாள் திருமொழி (4-3) – பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்த்ரனும் துன்னிட்டுப் புகலரிய - என்றும், திருப்பள்ளியெழுச்சி (7) – சுந்தரர் நெருக்க - என்றும் கூறுவதற்கு ஏற்ப திருவாசல்களில் பகவானை வழிபட வந்தவர்கள் நிறைந்து நின்று தலையைக் கூட நுழைக்க இயலாதபடி நெருக்க. (நீக்கு என்று) - திருப்பாவை(16) - நேச நிலைக் கதவம் நீக்கு - என்பதற்கு ஏற்ப திருவாசலைக் காவல் காத்து நிற்பவனிடம், “திருக்கதவைத் திறப்பாயாக” என்றும் விருப்பத்துடன் விண்ணப்பம் செய்து. (புகும் தகைவு அறப்புக்கு) - பெரிய திருமடல் (73) - பொன்னியலு மாடக் கவாடம் கடந்து புக்கு – என்பதற்கு ஏற்ப கண்களையும் மனதையும் தனது அழகால் கவர்ந்து இழுக்கவல்லதான திருவாசலுடைய அழகில் தடுமாறி விழாமல் அதனைக் கடந்து செல்லவேண்டும் என்பதான தடுப்பு ஏதும் இன்றி, அவனைக் குறித்துப் பாடுவதால் உண்டாகின்ற அந்தரங்கமானவர்கள் என்பதாலும், ஒரே சிந்தனை கொண்டுள்ளதாலும் அங்கு சென்று. (வண்டொத்திருண்ட குழலிலே சங்கையற மருவி) – பெரியாழ்வார் திருமொழி (2-5-7) – வண்டொத்திருண்ட குழல் - என்பதற்கு ஏற்ப தனக்கு ஏற்றதான விஷயம் இருக்கின்ற இடத்தில் சேர்ந்து, திருநெடுந்தாண்டகம் (26) – நீமருவியஞ்சாதே நின்று – என்பதற்கு ஏற்ப எந்த விதமான அச்சமும் இல்லாமல் அவனுடைய அருகாமையில் உள்ளவர்களாகவும்.

**வ்யாக்யானம்** - (அருளாத யாமென்று ஓடி வந்து வாசமேயூதி) “அருளாத நீரருளி” என்றும், “யாமிதுவோ தக்கவாறு” என்றும் இத்தலையிலார்த்தியை அவனுக்கறிவித்து, “ஓடி வந்து என் குழல் மேல் ஒளிமாமலரூதீரோ” என்று அவனோடே கூடி வரவிராதே முந்துறவே ஓடிவரவேணுமென்று அபேக்ஷித்து விட்டபடியே இத்தலையிலார்த்திக்கீடாக அவன் வரவையறிவிக்க விரைந்து வந்து, தங்கள் வரவாலே இத்தலையில் பிறந்த செவ்வியை அநுபவித்து, “பூந்துளவின் வாசமே வண்டு கொண்டு வந்து ஊதுமாகில்” என்கிறபடியே அத்தலையில் தாங்களநுபவித்த போக்யதையைத் தங்கள் வரவாலே இத்தலைக்கு ப்ரகாசிப்பியா நின்று கொண்டு ஆச்வஸிப்பித்து. (வண்டே கரியான தெய்வ வண்டோடே சேர்விக்கும் மித்யாதி) “கொங்குண் வண்டே கரியாக வந்தான்” என்கிறபடியே சாகாக்ர ஸாரக்ராஹியாய் ஷட்பத நிஷ்டராய் பக்ஷத்வய யோகத்தாலே அப்ரதிஹத கதியானவரை

முன்னிட்டு அங்கீகரிக்குமவனாய், “தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு” என்று வேதாந்த வேத்யனென்று தோற்றும்படி கருடவாஹநனாய் ஸாரக்ராஹியாயிருக்கிற ஸர்வேச்வரனோடே சேர்விக்கும்,

**விளக்கம்** – (அருளாத யாமென்று ஓடி வந்து வாசமேயூதி) – திருவாய்மொழி (1-4-6) – அருளாத நீரருளி - என்றும், திருவாய்மொழி (6-8-4) – யாமிதுவோ தக்கவாறு – என்றும் கூறுவதற்கு ஏற்ப இவர்கள் அடையும் துன்பத்தை அவனுக்குத் தெரியப்படுத்தி, (ஓடிவந்து) திருவாய்மொழி (6-8-3) - ஓடி வந்து என் குழல் மேல் ஒளிமாமலர் ஊதீரோ - என்பதற்கு ஏற்ப “அவன் எங்களிடம் வரும்போது அவனுடன் சேர்ந்து வரவேண்டும் என்று எண்ணாமல், அவனுக்கு முன்பாகவே இங்கு ஓடி வந்து விடவேண்டும்” என்று அவர்கள் விண்ணப்பித்தபடியே, இவர்களுடைய பிரிவுத் துன்பத்திற்கு ஏற்றபடியான மருந்தாக உள்ளதான அவனுடைய வரவு குறித்து அறிவிக்க வேண்டுமென்று எண்ணி விரைந்து வந்து, இவ்விதம் தாங்கள் விரைவாக வந்து காரணத்தால் இவர்களுக்கு மகிழ்ச்சியின் விளைவால் உண்டான அழகை அனுபவித்து. (வாசமே ஊதி) – பெரியதிருமொழி (11-1-9) – பூந்துளவின் வாசமே வண்டு கொண்டு வந்து ஊதுமாகில் - என்பதற்கு ஏற்ப அவனிடம் சென்றபோது தாங்கள் அனுபவித்த இனிமையைத் தங்களுடைய வருகையின் மூலமே இவர்களுக்கு விளக்கி, அதன் முலம் இவர்களுடைய உயிரானது நிலைக்கும்படிச் செய்து. (வண்டே கரியான தெய்வ வண்டோடே சேர்விக்கும்) – பெரியதிருமொழி (9-3-4) – கொங்குண் வண்டே கரியாக வந்தான் - என்பதற்கு ஏற்ப வேதசாகைகளில் உள்ள சாரத்தை மட்டுமே கிரஹிக்கும் திறன் கொண்டவர்களாகவும், ஆறுபதங்கள் கொண்டதான த்வய மந்த்ரத்தில் எப்போதும் நிலைநிற்பவர்களாகவும், ஞானம் மற்றும் கர்மம் ஆகிய இரண்டு சிறகுகளுடன் கூடியுள்ளதால் எந்தத் தடையும் இன்றி எங்கும் செல்லக் கூடியவர்களாகவும் உள்ள அவர்களை முன்னிட்டுக் கொண்டு ஏற்றுக் கொள்பவனாகவும், திருவாய்மொழி (9-9-4) - தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு – என்பதற்கு ஏற்ப வேதாந்தங்கள் மூலம் மட்டுமே அறியத்தக்கவன் என்பது வெளிப்படும்படியாக வேதமே ரூபம் எடுத்தது போன்ற கருடனைத் தனது வாகனமாகக் கொண்டவனாகவும் உள்ள ஸர்வேச்வரனுடன் சேர்த்து வைப்பவர்களாகிய.

**வ்யாக்யானம்** – “சேமமுடை நாரதன்” என்று ப்ரஹ்ம பாவனைக நிஷ்டதையாகிற ரக்ஷையையுடையனாய், பகவத் குணானுபவ ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ந்ருத்த கீத பரனாயிருக்கும் ஸ்ரீநாரத ப்ரஹ்மர்ஷி, லோகஸாரங்க மஹாமுநிகளாலே வஹிக்கப்படுகையாலே முநிவாஹந ரென்று நிரூபிதரான திருப்பாணாழ்வார், திருவாய்மொழியிசையே தங்களுக்கு போக்யமாயிருக்கிற தம்பிரான்மார் போல்வாரை இக்குண ஸாம்யத்தாலே வண்டென்றும் தும்பியென்றும் சொல்லுமென்கை. தும்பியாவது ப்ருங்க ஜாதியிலே ஓர் அவாந்தரபேதம்; ஆகையிறே “வண்டினங்காள் தும்பிகாள்” என்று ஏகஸ்தலத்திலே இரண்டையும் பிரிய வருளிச்செய்தது.

**விளக்கம்** – (சேமமுடை நாரதன்) – பெரியாழ்வார் திருமொழி (4-9-5) – சேமமுடை நாரதன் - என்பதற்கு ஏற்ப ப்ரஹ்மபாவனை என்பதான நன்மையைக் கொண்டதால் அதனையே தனக்கு ரக்ஷகம் என்று உள்ளவரும், பகவத் குணங்களை எப்போதும் அனுபவித்தபடி உள்ளதால் ஏற்பட்ட மகிழ்ச்சி காரணமாக உண்டான ஆனந்தமான நடனம் மற்றும் பாட்டு ஆகியவற்றுடன் கூடியுள்ளவரும் ஆகிய நாரத ப்ரஹ்மரிஷி. (முனிவாஹநர்) - லோகஸாரங்கன் என்ற மஹாமுனிவரால் தாங்கப்படுவதால் “முநிவாஹநர்” என்று அந்த முனிவரின் பெயராலேயே அறியப்படும் திருப்பணாழ்வார். (தம்பிரான்மார்) - திருவாய்மொழியின் இசை என்பதே தங்களுக்கு இனிமையானது என்று கொண்டுள்ள தம்பிரான்மார். (அரையர் போல்வாரை) - இப்படிப்பட்டவர்களை. (வண்டு தும்பி என்னும்) - மேலே கூறிய பல்வேறு தன்மைகள் ஒத்தபடி உள்ளதால் வண்டு என்றும், தும்பி என்றும் கூறுவார்கள். தும்பி என்பது வண்டு இனத்தினைச் சேர்ந்ததே ஆகும். இதனால் அல்லவோ திருவாய்மொழி (9-7-8) - வண்டினங்காள் தும்பிகாள் - என்று ஒரே இடத்தில் இரண்டையும் தனித்தனியாக உரைத்தார்.

153. கண்வலைப்படாதே அகவலைப்பட்டு வளர்த்தெடுப்பார் கையிருந்து தயிர் நெய்யமர் பாலமுதுண்டு ஒரு மிடறாய்ப் போற்றியொரு வண்ணந் திருந்த நுவலாததுக்கு என் பிழைக்கும் நீயலையே நல்வளத்துரப்பனென்னுமவற்றுக்கு முகந்து, சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியா வைத்த மாற்றம் கை கூப்பி வணங்கப் பாடி ஆலியாவழையா பராபிமாநத்திலே யொதுங்கின நம்பிக்கன்பர் தலைமீதடிப்பொடி உடையவருடையார் போல்வாரைக் கிளி பூவை குயில் மயிலென்னும்.


Email:sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** – கிளி பூவை முதலானவையாகச் சொல்லுவது ஆரையென்னு மபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் (கண்வலை) என்று தொடங்கி.

**விளக்கம்** - கிளி, பூவை என்று யாரைக் கூறுகிறார் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது (கண்வலைப்படாதே அகவலைப்பட்டு) "மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டு" என்று ஸ்த்ரீகளுடைய த்ருஷ்டியாகிற வலையிலே அகப்பட்டு அநர்த்தப்படாதே; "தாமரைத்தடங்கண் வழிகளின் அகவலைப்படுப்பான்" என்கிறபடியே தப்பாமல் அகப்படுத்திக் கொள்ளும் ஸர்வேச்வரனுடைய தாமரை போன்ற திருக்கண்களின் நோக்காகிற வலைக்குள்ளே அகப்பட்டு, (வளர்த்து, எடுப்பார் கையிருந்து) "வளர்த்ததாலே பயன் பெற்றேன்" என்றும், "எடுத்தவென் கோலக்கிளியை" என்றும், "மங்கைமார் முன்பு என் கையிருந்து" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வரூப வர்த்தகராய், உபலாலித்து நோக்கிக்கொண்டு இட்டமாக வளர்த்தெடுத்துப் போருமவர்கள் கைவசமாய். (தயிர் நெய்யமர் பாலமுதுண்டு) "தயிர்ப்பழம் சோற்றோடு பாலடிசிலும் தந்து" என்றும், "நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ", "இன்னடிசிலொடு பாலமுதூட்டி" என்றும் சொல்லுகிறபடியே அவர்கள் காலோசிதமாகவும் பாகாநுகுணமாகவும், "உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம்" என்கிறபடியே உபதேசமுகேந தாரக போக்யங்களான பகவத் குணாதிகளை யநுபவிப்பிக்க அநுபவித்து. (ஒருமிடறாய்) ஆசார்யர்களோடு ஏக கண்டராய். (போற்றி ஒருவண்ணம் திருந்த) "போற்றியானிரந்தேன் புன்னை மேலுறை பூங்குயில்காள்" என்றும், "ஒருவண்ணம் சென்று புக்கெனக்கொன்றுரை யொண்கிளியே" என்றும், "திருந்தக்கண்டெனக் கொன்றுரையாய் ஒண் சிறு பூவாய்" என்றும் கடகபுத்தி பண்ணி ஆதரித்த தசையிலும். (நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலையே நல்வளம்) "நோயெனது நுவல்" என்று என்னார்த்தியை சீக்ரமாகப்போய் அவனுக்கு அறிவியென்னச் செய்தே செய்யாததுக்கு "என் பிழைக்கு மிளங்கிளியே யான் வளர்த்த நீயலையே", "நீயலையே சிறுபூவாய் நூவலாதே யிருந்தொழிந்தாய்" என்றும்; ஸ்மாரக பதார்த்தங்கள் பாதகமாகிறவளவிலே அருகேயிருந்து திருநாமத்தைச் சொன்னது பொறாமல் "சொல் பயிற்றுய நல்வள மூட்டினீர் பண்புடையீரே" என்றும் இன்னாதான தசையிலும், (துரப்பனென்னுமவற்றுக்கும் உகந்து) "இன்று நாராயணனை வரக்கூவாயேல் இங்குத்து

நின்றும் துரப்பன்” என்று அநாதரித்த தசையிலும் சொன்ன இன்சொற்களும் வெஞ்சொற்களுமாகிற வவற்றுக்கும் “வகுத்த விஷயத்தில் நிக்ரஹாநுக்ரஹங்க ளிரண்டும் அங்குத்தை விநியோக ப்ரகாரம்” என்னும் நினைவாலே உகந்து;

**விளக்கம்** - (கண்வலைப்படாதே அகவலைப்பட்டு) திருமாலை (16) - மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டு - என்று கூறுவதற்கு ஏற்ப பெண்களுடைய பார்வை [அல்லது கண்கள்] என்னும் வலையில் அகப்பட்டு கேட்டினை அடைந்த விடாமல், திருவாய்மொழி (6-2-9) – தாமரைத்தடங்கண் வழிகளின் அகவலைப்படுப்பான் - என்பதற்கு ஏற்ப நாம் தப்பிவிடாமல் அகப்படுத்திக் கொள்ளும்படியாக உள்ள ஸர்வேச்வரனுடைய தாமரை போன்ற திருக்கண்களின் பார்வை என்ற வலையில் அகப்பட்டு. (வளர்த்து எடுப்பார் கை இருந்து) - திருநெடுந்தாண்டகம் (14) - வளர்த்ததாலே பயன் பெற்றேன் – என்றும், நாச்சியார் திருமொழி (5-5) – எடுத்தவென் கோலக்கிளியை - என்றும், திருவாய்மொழி (6-8-2) - மங்கைமார் முன்பு என் கையிருந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸ்வரூபத்தை வளர்ப்பவர்களாகவும், கொண்டாடியபடி நன்றாகப் பாதுகாத்துக்கொண்டு மிகவும் விருப்பத்துடன் வளர்த்தபடி உள்ளவர்களாகவும் இருக்கின்றவர்களுடைய கைவசமாக. (தயிர் நெய்யமர் பாலமுதுண்டு) – திருவாய்மொழி (9-5-8) – தயிர்ப்பழம் சோற்றோடு பாலடிசிலும் தந்து – என்றும், திருவாய்மொழி (6-8-2) – நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ - என்றும், நாச்ச்சியார் திருமொழி (5-5) – இன்னடிசிலொடு பாலமுதூட்டி - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவர்கள் காலத்திற்கு ஏற்ற விதத்திலும் அவரவர்களுடைய மனப்பக்குவத்திற்குச் சேரும் விதத்திலும், கீதை (4-34) - உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் – ஞானிகள் உனக்கு அந்த உயர்ந்த தத்வத்தை உபதேசிப்பார்கள் - என்பதற்கு ஏற்ப உபதேசம் மூலமாக உயிர் தரிக்கத் தேவையாக உள்ளதும் இன்பம் அளிக்கவல்லதும் ஆகிய பகவத் குணங்களை அனுபவிக்கும்படிச் செய்ய, அதன் மூலம் அவற்றை அனுபவித்து. (ஒரு மிடறாய்) - ஆசார்யர்களுடன் ஒரே சிந்தனை கொண்டவராக. (போற்றி ஒருவண்ணம் திருந்த) - திருவாய்மொழி (6-1-6) - போற்றியானிரந்தேன் புன்னை மேலுறை பூங்குயில்காள் - என்றும், திருவாய்மொழி (6-1-7) - ஒருவண்ணம் சென்று புக்கெனக்கொன்றுரை யொண்கிளியே – என்றும், திருவாய்மொழி (6-1-8) - திருந்தக்கண்டெனக் கொன்றுரையாய் ஒண் சிறு பூவாய் – என்றும் அவனுடன் சேர்க்கவேண்டும் என்பதான ஆதரித்தபடி உள்ள நிலையிலும். (நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலையே நல்வளம்) - திருவாய்மொழி (1-4-8) –


Email:sridharan_book@yahoo.co.in

நோயெனது நுவல் - என்பதற்கு ஏற்ப என்னுடைய துன்பத்தை நீ விரைவாகச் சென்று அவனுக்கு அறிவிப்பாயாக என்று கூறினால் அதனைச் செய்யாமல் இருந்தற்கு, திருவாய்மொழி (1-4-7) – என் பிழைக்கு மிளங்கிளியே யான் வளர்த்த நீயலையே - என்றும், திருவாய்மொழி (1-4-8) – நீயலையே சிறுபூவாய் நூவலாதே யிருந்தொழிந்தாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அவனுடைய நினைவுகளை அதிகமாக ஏற்படுத்துகின்ற பொருள்கள் மேலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளபோது அருகில் அமர்ந்து அவனுடைய திருநாமங்கள் கூறுவதைப் பொறுத்துக் கொள்ளாமல், திருவாய்மொழி (9-5-8) – சொல் பயிற்றுய நல்வள மூட்டினீர் பண்புடையீரே – என்று இயலாத நிலையிலும். (துரப்பன் என்னும் அதற்கும்) நாச்சியார் திருமொழி (5-10) – இன்று நாராயணனை வரக்கூவாயேல் இங்குத்து நின்றும் துரப்பன் - என்பதற்கு ஏற்ப ஆதரிக்காமல் உள்ள நிலையிலும் (உகந்து) - இப்படியாக உள்ள நிலைகளில் கூறப்பட்டதான இனிமையான சொற்கள் மற்றும் கடுமையான சொற்கள் ஆகியவற்றுக்கு "நமக்கு வேண்டியவர்களுடைய வெறுப்பு மற்றும் விருப்பம் ஆகிய இரண்டும் அவர்கள் ஏற்றுக்கொள்வதன் வகைகளே ஆகும்" என்றுள்ள நினைவினால் மகிழ்ந்து.

**வ்யாக்யானம்** - (சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியா வைத்த மாற்றம் கைகூப்பி வணங்கப்பாடி) "சொல்லெடுத்துத் தன் கிளியைச் சொல்லேயென்று துணை முலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே" என்று திருநாமத்தைச் சொல்ல உபக்ரமித்து பலஹாநியாலே ஒரு சொல் சொல்லும்போது மலை யெடுக்குமாபோலேயாய் அதுவும் மாட்டாதே பரவச காத்ரரானவாறே, "கன்மிங்களென்றும்மையான் கற்பியா வைத்த மாற்றம்" என்கிறபடியே முன்பே கற்பித்து வைத்த சொல்லான திருநாமத்தைச் சொல் என்ன, "திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைக்கூப்பி வணங்கினாளே" என்று கற்பித்தவர் தாங்கள் உபகார ஸ்ம்ருதி பண்ணி யநுவர்த்திக்கும்படி ப்ரீதி ப்ரேரிதராய்ச் சொல்லி, (ஆலியாவழையா) "ஆலியாவழையா வரங்காவென்று" என்கிறபடியே ஆநந்தத்தோடே திருநாமத்தைக் கொண்டு போது போக்குமவர்களாய், (பராபிமாநத்திலே ஒதுங்கின) "தேவுமற்றறியேன்" என்கிபடியே ஆசார்யாபிமாநமாதல் பாகவதாபிமாநமாதலாகிற பராபிமாநத்திலே ஒதுங்கினவர்களான,

**விளக்கம்** - (சொல்லெடுத்து கோர்த்தவாறே) - திருநெடுந்தாண்டகம் (13) – சொல்லெடுத்துத் தன் கிளியைச் சொல்லேயென்று துணை முலைமேல் துளிசோரச்

சோர்கின்றாளே – என்பதற்கு ஏறப் அவனுடைய திருநாமங்களை உரைக்கத் தொடங்கி, ஒரு சொல்லை உரைத்தவுடனேயே ஏற்பட்ட சோர்வு காரணமாக மலையை உயர்த்தியது போன்ற நிலையை அடைந்து, அந்த ஒரு சொல்லையும் கூற இயலாமல் தனது நிலையை இழந்து. (கற்பியா வைத்த மாற்றம்) - திருவாய்மொழி (6-8-6) – கன்மிங்க ளென்றும்மையான் கற்பியா வைத்த மாற்றம் - என்பதற்கு ஏற்ப முன்பே கற்பித்து வைக்கப்பட்ட சொல்லாகிய திருநாமத்தைக் கூறுவாயாக என்று உரைத்தால், (கைகூப்பி வணங்கப்பாடி) - திருநெடுந்தாண்டகம் (14) - திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைக்கூப்பி வணங்கினாளே - என்பதற்கு ஏற்ப கற்றுக் கொடுத்தவர்கள் தாங்கள் செய்த நன்றி பாராட்டி வணங்கும்படியாக ப்ரியத்தால் துண்டப்பட்டவர்களாக உரைத்து. (ஆலியா அழையா) – பெருமாள் திருமொழி (3-2) - ஆலியாவழையா வரங்காவென்று - என்பதற்கு ஏற்ப ஆனந்தத்துடன் அவன் திருநாமங்களை உச்சரித்தபடியே தங்களுடைய காலத்தை கழிப்பவர்களாக. (பராபிமாநத்திலே ஒதுங்கின) – கண்ணிநுண்சிறுத்தாம்பு (2) - தேவு மற்றறியேன் – என்பதற்கு ஏற்ப ஆசார்யர்களிடம் உள்ள பற்றுதல், பாகவதர்களிடம் உள்ள பற்றுதல் என்று மற்றவர்கள் குறித்த பற்றுதல்களில் நிலைநிற்பவர்களாக உள்ள.

**வ்யாக்யானம்** - (நம்பிக்கன்பர், தலைமீதடிப் பொடி, உடையவருடையார் போல்வாரை) “தென்குருகூர்நகர் நம்பிக்கன்பன்” என்று ஆசார்யரான ஆழ்வார் விஷயத்தில் ப்ரேமமே நிரூபகமாம்படியிருக்கும் ஸ்ரீமதுரகவிகள். “நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே” என்று திருநாமத்தையண்டை கொண்ட பலத்தாலே யமாதிகள் தலையிலே அடியிடும்படி செறுக்கையுடையராய் பாகவதர்களுக்குப் பாததூளி போலே பரதந்த்ரராய் இதுவே நிரூபகமான தொண்டரடிப்பொடியாழ்வார், “இராமாநுச னுடையார்” என்றே நிரூபகமாம்படி உடையவர்க்குப் பரதந்த்ரரான ஆழ்வான் ஆண்டான் எம்பார் அருளாளப்பெருமாளெம்பெருமானார் முதலானவர்கள் போல்வாரை, (கிளி, பூவை குயில் மயிலென்னும்) குணஸாம்ய நிபந்தனமாகக் கிளியென்றும் பூவையென்றும் குயிலென்றும் மயிலென்றும் சொல்லுமென்றபடி. பூவையாவது நாகணவாய்ப்புள். மயிலைத் தூதுவிட்டமையன்றிக்கே யிருக்க அத்தை ஸஹபடித்தது, “யான் வளர்த்த கிளிகாள் பூவைகாள் குயில்காள் மயில்காள்” என்று ஸ்தலாந்தரத்திலே அருளிச் செய்கையாலே அதுக்கும் இதுவே ஸ்வாபதேசமென்று அறிவிக்கைக்காக.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (நம்பிக்கு அன்பர்) - கண்ணிநுண்சிறுத்தாம்பு (11) - தென்குருகூர்நகர் நம்பிக்கன்பன் - என்பதற்கு ஏற்ப ஆசார்யராக உள்ள நம்மாழ்வார் விஷயத்தில் கொண்டுள்ள ப்ரேமை மூலமாகவே தன்னை அடையாளம் காண்பிக்கவல்லவராக உள்ள ஸ்ரீமதுரகவிகள். (தலைமீது அடிப்பொடி) - திருமாலை (1) – நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே - என்பதற்கு ஏற்ப திருநாமத்தை அண்டி நின்ற பலம் காரணமாக யமன் முதலானவர்கள் தலையில் தங்களுடைய கால்களை வைக்கும்படியாக செருக்கு கொண்ட பாகவதர்களுக்குப் பாததூளி போன்று அவர்கள் வசப்பட்டவராகவும், அதனைக் கொண்டே தம்மை உணர்த்த வல்லவராகவும் உள்ள தொண்டரடிப்பொடி ஆழ்வார். ( உடையவர் உடையார்) – "இராமாநுசனை உடையார்" என்றே அடையாளம் காண்பிக்கவல்லவராகவும் உடையவருக்கு வசப்பட்டவர்களாகவும் உள்ள கூரத்தாழ்வான், திருமலையாண்டான், எம்பார், அருளாளப்பெருமாளெம்பெருமானார் போன்றவர்கள். (போல்வாரை) - இப்படிப்பட்டவர்களை. (கிளி பூவை குயில் மயில் என்னும்) - குணத்தின் ஒற்றுமை காரணமாக கிளி என்றும், பூவை என்றும், குயில் என்றும் மயில் என்றும் கூறுவார். பூவை என்றால் நாகணவாய்ப்புள் என்ற பறவை. மயிலைத் தூதுவிட்டதாகக் கூறவில்லை என்றாலும், அதனை உரைத்தது ஏன் என்றால், திருவாய்மொழி (8-2-8) - யான் வளர்த்த கிளிகாள் பூவைகாள் குயில்காள் மயில்காள் - என்று வேறு ஓர் இடத்தில் அருளிச்செய்த காரணத்தால், அங்கு உரைத்தற்கும் இதுவே மறைமுகமான பொருள் என்று உணர்த்தவே ஆகும்.

154. ஆசறு தூவியென்னும் பாஹ்யாப்யந்தர சுத்தியோடே திரையுகளும் வ்யஸந வ்யதையற்றுத் தாய்வாயி லுண்ணும் பிள்ளைக் கிரைதேடி வைகலுடன் மேய்ந்து நுங்கால் பைங்கானமென்று ப்ரஹ்மரதம் பண்ணிக் கொடுத்தவை கொண்டு நல்ல பதத்தையும் வேண்டே னென்னுந் தனிப்பெரும் பித்தர் நம்முதலிகள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும்.

**அவதாரிகை** - நாரை கொக்கு குருகென்று சொல்லுகிறது ஆரையென்னு மபேக்ஷையிலே அருளிச்செய்கிறார் (ஆசறுதூவி) என்று தொடங்கி.

**விளக்கம்** - நாரை, கொக்கு, குருகு என்று யாரைக் கூறுகிறார் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம் -** அதாவது (ஆசறு தூவியென்னும் பாஹ்யாப்யந்தர சுத்தியோடே) "ஆசறு தூவி வெள்ளைக்குருகே" என்று 'பழிப்பற்ற சிறகையுடைத்தாய் உள்ளும் புறம்பு மொக்க நிர்மலமா யிருக்கும் குருகே!' என்று சொல்லப்பட்ட "ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தரச் சுசி:" என்கிற பாஹ்யாப்யந்தர சுத்தியோடே கூடி, (திரையுகளும் வ்யஸந வ்யதையற்று) "வாயுந்திரையுகளும் கானல்மடநாராய்" என்று ஆமிஷைஷகாக்ர சித்ததையாலே நாரையானது திரைகள் வந்து கிட்டி மேலே தாவிப்போகா நிற்கிற கானலிலே சலியாமலிருக்குமாபோலே, "கிரயோ வர்ஷதாராபிர் ஹந்யமநா ந வివ்யது:, அபிபூயமாநா வ்யஸநைர் யதா தோக்ஷஜ சேதஸ:" என்கிறபடியே பகவத்தேகாக்ர சித்ததையாலே ஸம்ஸார ஸமுத்ர தரங்கங்களான தாபத்ரய ரூப வ்யஸநங்கள் அஹமஹமிகயா வந்து மேலிடா நின்றாலும் அதுக்கு இடையாதே,

**விளக்கம்** – (ஆசறு தூவியென்னும் பாஹ்யாப்யந்தர சுத்தியோடே) - திருவாய்மொழி (6-8-8) – ஆசறு தூவி வெள்ளைக்குருகே – என்று கூறுவதற்கு ஏற்ப, "எந்தவிதமான பழிப்பும் அற்றதாக உள்ள சிறகைக் கொண்டதாகவும், உள்ளும் புறமும் ஒரே போன்று தோஷம் இன்றி உள்ள குருகே" என்று கூறப்பட்டதான, ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தரச் சுசி: - யார் ஒருவன் தாமரை போன்ற திருக்கண்கள் கொண்ட ஸர்வேச்வரனை த்யானிக்கிறானோ அவன் உள்ளிலும் புறத்திலும் தூயவன் ஆவான் - என்பதற்கு ஏற்றபடி உள்ளும் புறமும் தூய்மையுடன் கூடியபடி. (திரையுகளும் வ்யஸந வ்யதையற்று) - திருவாய்மொழி (2-1-1) - வாயுந்திரையுகளும் கானல்மடநாராய் – என்பதற்கு ஏற்ப தன்னுடைய உணவாகிய மீனைப் பிடிக்கவேண்டும் என்ற எண்ணம் காரணமாக நாரையனது அலைகள் மேலே எழும்புவது போன்று வருகின்ற கானல்நீரிலும் சலிப்படையாமல் உள்ளது போன்று, ஸ்ரீமத்பாகவதம் (10-20-15) – கிரயோ வர்ஷதாராபிர் ஹந்யமநா ந வివ்யது:, அபிபூயமாநா வ்யஸநைர் யதா தோக்ஷஜ சேதஸ: - ஸர்வேச்வரனை மனதில் கொண்டவர்கள் துக்கத்தால் மூடப்பட்டாலும் வருந்தமாட்டார்கள், இதே போன்று மலைகளானவை மழையினால் அடிபட்டாலும் சலிப்பதில்லை - என்பதற்கு ஏற்ப பகவானிடம் மட்டுமே வைக்கப்பட்ட சிந்தனை கொண்டதன் காரணமாக, ஸம்ஸார ஸமுத்திரத்தின் அலைகளாக உள்ளதான மூன்று விதமான துன்பங்கள் இடைவிடாமல் வந்து தாக்கியபடி உள்ளபோதிலும், அதனால் சோர்ந்துவிடாமல்.

**வ்யாக்யானம் -** (தாய்வாயில் உண்ணும் பிள்ளைக்கு இரைதேடி) "தாய்வாயில் கொக்கின் பிள்ளை வெள்ளிறவுண்ணும்" என்றும், "பழனக் கழனியதனுள் போய்ப் புள்ளுப்பிள்ளைக் கிரை தேடும்" என்றும் சொல்லுகிறபடியே கொக்கானது தன் வாயாலே எடுத்துக் கொடுக்க ஜீவித்திருக்கும் தன் பிள்ளைக்கு வாய்க்கடங்குமிரை தேடியிடுமாபோலே தங்கள் வாக்காலே உபகரிக்கும் பகவத் விஷயத்தை யுப ஜீவித்திருக்கும் குழைச் சரக்கான சிஷ்யர்களுக்கு பாகாநுகுணமாக ஸாத்ம்யமான பகவத் விஷயார்த்தங்களை சாஸ்த்ரங்களிலே ஆராய்ந்து உபகரித்து, (வைகலுடன் மேய்ந்து) "வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்" என்றும், "காதல்மென் பெடையோடுடன் மேயும் கருநாராய்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வகாலமும் போகஸ்தலங்களிலே தாங்களே சென்று தங்களைப் பிரியில் தரியாத ப்ரேமமுடைய சிஷ்யர்கள் உடனே கூட பகவத் குணாநுபவம் பண்ணி. (நுங்கால் பைங்கானமென்று ப்ரஹ்மரதம் பண்ணி) "நுங்கால்களென் தலைமேல் கெழுமீரோ" என்றும், "பைங்கான மீதெல்லா முனதேயாகப் பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன்" என்றும் சொல்லுகிறபடியே தங்கள் பக்கலுப ஜீவித்த சிஷ்யர்கள் உபகார ஸ்ம்ருதியாலே சிரஸாவஹிக்கையாகிற ப்ரஹ்மரதம் பண்ணி. (கொடுத்தவை கொண்டு) "சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத்" என்கிற க்ரமத்திலே ஸாதரமாக ஸமர்ப்பித்தவற்றை அங்கீகரித்து.

**விளக்கம்** – (தாய் வாயில் உண்ணும் பிள்ளைக்கு இரைதேடி) – பெரியதிருமொழி (9-6-1) - தாய்வாயில் கொக்கின் பிள்ளை வெள்ளிறவுண்ணும் - என்றும், பெரியதிருமொழி (5-1-2) - பழனக் கழனியதனுள் போய்ப் புள்ளுப்பிள்ளைக் கிரை தேடும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, கொக்கானது தன்னுடைய அலகுகள் மூலம் இரையை அளிக்க, அதனை மட்டுமே நம்பியுள்ள தனது குஞ்சுக்கு, அதனுடைய வாய்க்குள் அடங்கும்படியான இரையைத் தேடிக் கொடுப்பது போன்று, தங்களுடைய வாக்கிலிருந்து வருகின்ற பகவத் விஷயத்தை மட்டுமே அண்டியபடி வாழ்கின்ற சிஷ்யர்களுக்கு அவரவர்களுடைய புத்திக்கு எட்டும் விதமாக அறியக்கூடிய பகவத் விஷயங்களை சாஸ்த்ரங்களில் ஆராய்ந்து எடுத்து வந்து உபதேசித்து உதவி செய்த. (வைகல் உடன் மேய்ந்து) – திருவாய்மொழி (6-1-1) - வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்" – என்றும், திருவாய்மொழி (6-11-2) – காதல்மென் பெடையோடுடன் மேயும் கருநாராய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து காலங்களிலும் பகவத்விஷயம் என்பதான இன்பத்தை அனுபவிக்கும் இடங்களில்

தாங்கள் சென்று, தங்களை விட்டுப் பிரிய நேர்ந்தால் பொறுத்துக்கொள்ள இயலாதபடி உள்ள ப்ரேமை நிறைந்த சிஷ்யர்களுடன் சேர்ந்து நின்று பகவானுடைய குணங்களை நன்றாக அனுபவித்து. (நுங்கால் பைங்கானமென்று ப்ரஹ்மரதம் பண்ணி) - திருவாய்மொழி (9-7-1) - நுங்கால்களென் தலைமேல் கெழுமீரோ – என்றும், திருநெடுந்தாண்டகம் (27) – பைங்கான மீதெல்லா முனதேயாகப் பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தங்களிடம் உதவிகள் பெறுவதன் காரணமாக ஜீவிக்கின்ற சிஷ்யர்கள், அத்தகைய செய்நன்றி காரணமாகத் தலையால் தாங்குதல் என்னும் ப்ரஹ்மரதத்தைச் செய்து, (கொடுத்தவை கொண்டு) – சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் - தனது சரீரம், பொருள்கள், உயிர் ஆகியவற்றைத் தனது ஆசார்யனுக்காக அளிக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப மிகுந்த ஈடுபாட்டுடன் சமர்ப்பித்தவற்றை ஏற்றுக் கொண்டு.

**வ்யாக்யானம்** - (நல்ல பதத்தையும் வேண்டேனென்னு மித்யாதி) "நல்ல பதத்தால் மனை வாழ்வர்" என்று பாகவத கைங்கர்யத்துக்குறுப்பான கார்ஹஸ்த்யத்தையும் ஸம்ஸார வெக்காய மடியான பயத்தாலே "இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று உபேக்ஷிக்குமவர்களாயுள்ள "அங்கையாழி யரங்கனடியிணை தங்கு சிந்தைத் தனிப் பெரும் பித்தரா"ன ஸ்ரீகுலசேகரப்பெருமாள், ஆசார்யபதஸ்தரான நம்முதலிகள் போல்வாரை குணஸாம்யத்தாலே நாரையென்றும் கொக்கென்றும் குருகென்றும் சொல்லுமென்கை. "நன்னீல மகன்றில்காள்" என்று மகன்றில்களையும் தூதுவிட்டமை ஒத்திருக்கச்செய்தே அதுக்கு ஸ்வாபதேசமருளிச் செய்யாதொழிந்தது அதில் இப்படி பரக்கச் சொல்லத்தக்கதில்லாமையலும் இந்த ந்யாயத்திலே தத்ஸமாந குணரைச் சொல்லிக் கொள்ளுமித்தனையன்றோ வென்னு மித்தைப் பற்றவும். மகன்றிலாவது அன்றிலிலே ஓரவாந்தரபேதம். ஆகவிப்படி தூத்ய ப்ரகரணத்திலே சொல்லுகிற பக்ஷ்யவாந்தரங்களுக்கு ஸ்வாபதேச மருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம்** – (நல்ல பதத்தையும் வேண்டேன்) – திருவாய்மொழி (8-10-11) - நல்ல பதத்தால் மனை வாழ்வர் – என்பதற்கு ஏற்ப பாகவத கைங்கர்யத்திற்கு ஏற்றபடியான இல்லறத்தையும் கூட, ஸம்ஸாரத் துன்பம் காரணமாக ஏற்படும் பயத்தால் பெருமாள் திருமொழி (4-5) - இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன் – என்று வெறுப்பவர்களாக உள்ள, பெருமாள் திருமொழி (3-9) - அங்கையாழி யரங்கனடியிணை


**Email:**sridharan_book@yahoo.co.in

தங்கு சிந்தைத் தனிப் பெரும் பித்தர் - என்பவராகிய ஸ்ரீகுலசேகரப்பெருமாள். (நம்முதலிகள் போல்வாரை) - ஆசார்ய இடத்தில் நின்றவர்களாகிய நம்முடைய பூர்வாசார்யார்களை. (நாரை கொக்கு குருகு என்னும்) - குணங்களுடைய ஒற்றுமை காரணமாக நாரை என்றும், கொக்கு என்றும், குருகு என்றும் கூறுவார். திருவாய்மொழி (1-4-4) – நன்னீல மகன்றில்காள் - என்று மகன்றிலையும் தூதாக அனுப்பியுள்ளபோது, அது யாரைக் குறிக்கிறது என்று அதற்கான மறைமுகமான பொருளை அருளிச்செய்யாமல் விட்டது ஏன் என்றால் - அதற்கு இவ்விதமாக விரிவாக உரைப்பதற்கு ஏதும் இல்லாத காரணத்தாலும், இந்த ந்யாயம் காரணமாக அது போன்ற குணம் கொண்டவர்களையும் கூறுவதற்கு யாரும் இல்லை என்ற காரணத்தாலும் ஆகும். மகன்றில் என்பது அன்றில் இனத்தைச் சேர்ந்த ஒரு பறவையே ஆகும். இப்படியாகத் தூது விடும் இடத்தில் வருகின்ற பலவிதமான பறவைகளுக்கான மறைமுகமான கருத்தை இவ்விதம் அருளிச்செய்தார்.

155. பூண்டநாள் சீர்க் கடலையுட் கொண்டு திருமேனி நன்னிற மொத்து உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து ஜ்ஞாநஹ்ரதத்தைப் பூரித்துத் தீங்கின்றி வாழ நிதி சொரிந்து கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து வெளுத்தொளித்துக் கண்டுகந்து பரஸம்ருத்தியே பேறான அன்பு கூருமடியவர் உறையிலிடாதவர் புயற்கை யருள்மாரி குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்.

**அவதாரிகை** - இனிமேல் இப் ப்ரகரணத்தில் மேகமாகச் சொல்லுகிறது ஆரையென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (பூண்டநாள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து இந்தப் பகுதியில் மேகம் என்று யாரைக் கூறுகிறார் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, (பூண்டநாள் சீர்க்கடலையுட் கொண்டு) வர்ஷிக்கைக்குடலான காலங்களில் கடலிலே புக்கு அதில் நீரைப் பருகிக் கொண்டிருக்கும் மேகம்போலே "நீண்ட தோள் மால்கிடந்த நீள் கடல் நீராடுவான் பூண்ட நாளெல்லாம் புகும்" என்றும், "திருமால் சீர்க்கடலை யுட்பொதிந்த சிந்தனையேன்" என்றும் சொல்லுகிறபடியே விடிந்த நாளெல்லாம் அவன் காணவளர்ந்தருளுகிற கடலிலே புகுந்து ச்ரிய:பதியான அவனுடைய கல்யாண குண ஸாகரத்தை "மனவுட்கொண்டு" என்கிறபடியே உள்ளே

யடக்கிக்கொண்டு, (திருமேனி நன்னிறமொத்து) “திருமால் திருமேனியொக்கும்” என்றும், “கண்ணன்பால் நன்னிறங்கொள் கார்” என்றும் சொல்லுகிறபடியே மேகமானது அவன் திருமேனியோடொத்த நிறத்தை உடைத்தா யிருக்குமாபோலே விக்ரஹ வர்ணத்தால் அவனோடு ஸாம்யாபந்நராய். (உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து) “உயிரளிப்பான் மாகங்களெல்லாம் திரிந்து” என்று மேகமானது வர்ஷமுகேந ப்ராணி ரக்ஷணம் பண்ணுகைக்காக விஸ்த்ருதமான ஆகாசப் பரப்பெங்கும் ஸஞ்சரிக்குமாபோலே ஸம்ஸாரிகளான ஆத்மாக்களை ரக்ஷிக்கைக்காக “தீர்த்தகரராமின் திரிந்து” என்றும், “தீதில் நன்னெறி காட்டியெங்கும் திரிந்து” என்றும் சொல்லுகிறபடியே லோகபாவநராய் உஜ்ஜீவநமார்க்க ப்ரதர்சகராய்க் கொண்டு ஸர்வத்ர ஸஞ்சாரம் பண்ணி. (ஜ்ஞாந ஹ்ரதத்தைப் பூரித்து) மேகம் வர்ஷத்தாலே தடாகாதிகளை நிறைக்குமாபோலே “ஜ்ஞாநஹ்ரதே த்யாந ஜலே ராக த்வேஷமலாபஹே, ய: ஸ்நாதி மாநஸே தீர்த்தே ஸ யாதி பரமாம் கதிம்” என்று மாநஸ தீர்த்த வர்ணனத்தில் சொன்ன ஜ்ஞாநமாகிற ஹ்ரதத்தைத் தாங்கள் வர்ஷிக்கிற பகவத் குண ஜலங்களாலே நிறைத்து, (தீங்கின்றி வாழ நிதி சொரிந்து) “தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து” என்றும், “வாழவுலகினில் பெய்திடாய்” என்றும், “மாமுத்த நிதி சொரியும்” என்றும் சொல்லுகிறபடியே அநர்த்தகந்தமின்றிக்கே அகிலருமுஜ்ஜீவிக்கும்படி பகவத் குணரத்னங்களை வர்ஷித்து.

**விளக்கம்** – (பூண்டநாள் சீர்க்கடலையுட் கொண்டு) - மழையைப்பொழியும் காலங்களில் கடலில் புகுந்து அதில் உள்ள நீரைப் பருகியபடி உள்ள மேகம் போன்று, மூன்றாம் திருவந்தாதி (69) நீண்ட தோள் மால்கிடந்த நீள் கடல் நீராடுவான் பூண்ட நாளெல்லாம் புகும் – என்றும், பெரிய திருவந்தாதி (69) - திருமால் சீர்க்க்டலை யுட்பொதிந்த சிந்தனையேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப விடிந்த நாள் முழுவதும் அவன் கண் வளர்ந்தருளுகிற திருப்பாற்கடலில் புகுந்து மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய அவனுடைய திருக்கல்யாணகுணங்கள் என்னும் ஸமுத்திரத்தை, பெரியதிருமொழி (7-3-1) – மனவுட் கொண்டு - என்பதற்கு ஏற்ப உள்ளே அடக்கிக்கொண்டு. (திருமேனி நல்நிறம் ஒத்து) - திருவிருத்தம்(32) - திருமால் திருமேனியொக்கும் – என்றும், பெரிய திருவந்தாதி (85) – கண்ணன்பால் நன்னிறங்கொள் கார் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மேகமானது அவனுடைய திருமேனியின் நிறத்தைக் கொண்டதாக இருப்பது போன்று, தங்களுடைய செயல்கள் போன்ற பலவற்றாலும் அவனுடன் ஒத்த நிறம் கொண்டவர்களாகவும். (உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து) - திருவிருத்தம் (32) - உயிரளிப்பான்

மாகங்களெல்லாம் திரிந்து - என்பதற்கு ஏற்ப மேகமானது மழை மூலமாக அனைத்து உயிர்களையும் பாதுகாக்கும் விதமாகப் பரந்து விரிந்துள்ள ஆகாயம் முழுவதும் ஸஞ்சரிப்பது போன்று ஸம்ஸாரத்தில் உள்ள ஜீவாத்மாக்களைக் காப்பாற்றுவதற்காக இரண்டாம் திருவந்தாதி (14) - தீர்த்தகரராமின் திரிந்து – என்றும், பெருமாள்திருமொழி (2-6) – தீதில் நன்னெறி காட்டியெங்கும் திரிந்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப உலகத்தைத் தூய்மையாக்குபவர்களாகவும், கரையேறும் வழியைக் காண்பிப்பவர்களாகவும் இருந்து அனைத்து இடத்திலும் ஸஞ்சரித்தபடி. (ஜ்ஞாந ஹ்ரதத்தைப் பூரித்து) - மேகமானது மழையைப் பொழிந்து தடாகத்தை நிரம்புவது போன்று, ஜ்ஞாநஹ்ரதே த்யாந ஜலே ராக த்வேஷமலாபஹே, ய: ஸ்நாதி மாநஸே தீர்த்தே ஸ யாதி பரமாம் கதிம் – ஞானம் என்ற மடுவைக்கொண்டதும் த்யானம் என்ற நீரைக் கொண்டதும் ஆசை மற்றும் கோபம் போன்ற களங்கங்ளை விலக்குவதும் ஆகிய மனத்தில் உள்ள தீர்த்தத்தில் நீராடும் ஒருவன் உயர்ந்த கதியை அடைகிறான் - என்று மனதில் உள்ள தீர்த்தத்தைக் குறித்துக் கூறப்பட்ட இடத்தில் கூறப்பட்டதான ஞானம் என்ற மடுவைத் தாங்கள் பொழிகின்ற பகவத்குணங்கள் என்ற நீரால் நிரப்பி. (தீங்கின்றி வாழ நிதி சொரிந்து) – திருப்பாவை (3) - தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து - என்றும், திருப்பாவை (3) - வாழவுலகினில் பெய்திடாய் - என்றும், நாச்சியார் திருமொழி (8-2) – மாமுத்த நிதி சொரியும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எந்தவிதமான தாழ்வும் இன்றி அனைவரும் பிழைக்கும் விதமாக பகவத் குணங்கள் என்னும் இரத்தினங்களைப் பொழிந்து.

**வ்யாக்யானம்** - (கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து) ஔதார்யாதிசயத்தாலே உபகரித்ததை நினையாதே “இன்னமும் உபகரிக்கப் பெற்றிலோம்! நாம் செய்தது போருமோ?” என்று லஜ்ஜித்து. (வெளுத்தொளித்து) உபகரிக்கப் பெறாதபோது உடம்பு வெளுத்து ஒளித்து. (கண்டுகந்து பரஸம்ருத்தியே பேறான) உபகரிக்கும் தசையில் எதிர்த்தலையில் ஸம்ருத்தி கண்டுகந்து அந்த பரஸம்ருத்தியே தங்களுக்குப் பேறாக நினைத்திருக்கிற, (அன்புகூருமடியவர்) “ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூறுமடியவரான” முதலாழ்வார்கள். (உறையிலிடாதவர்) உருவின வாள் உறையிலிடாதே ஆதிமத்யாந்தம் தேவதாந்தராவரத்வ ப்ரதிபாதந பூர்வகமாக பகவத் பரத்வத்தை யுபபாதிக்கும் திருமழிசைப்பிரான். (புயற்கையருள்மாரி) “காரார் புயற்கைக் கலிகன்றி” என்றும், “அருள்மாரி” என்றும் ஔதார்யத்தில் மேகஸத்ருசராய்க் கொண்டு க்ருபையை வர்ஷிக்கும் திருமங்கையாழ்வார். (குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்)


Email:sridharan_book@yahoo.co.in

"குணந்திகழ் கொண்டல்" என்று குணோஜ்ஜ்வலமான மேகமாகச் சொல்லப்பட்ட எம்பெருமானார் போல்வாரை இந்த குணஸாம்யத்தையிட்டு மேகமென்று சொல்லுமென்றபடி. பேற்றுக்கு அடி இவர்களாகையாலே ப்ராப்யத்தில் த்வரை தோன்றப் பலகாலும் தூதுவிடுவர்.

**விளக்கம்** – (கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து) - தங்களுடைய தாராள மனம் காரணமாக உதவி செய்ததை எண்ணாமல், "இவர்களுக்கு இன்னமும் அளித்திருக்கலாம், நாம் அளித்தது போதுமானதாக இருந்ததோ?" என்று வெட்கம் அடைந்து. (வெளுத்து ஒளித்து) - மழையைப் பொழியாதபோது மேகங்கள் வெளுப்பது போன்று தாங்கள் உதவி செய்யாதபோது உடல் வெளுத்து யார் கண்களிலும் படாமல் மறைந்து. (கண்டுகந்து பரஸம்ருத்தியே பேறான) - உதவி செய்யும்போது மற்றவர்களுடைய நிறைவு என்பதைக் கண்டு மகிழ்ந்து, இவ்விதம் அவர்கள் நிறைவுடன் உள்ளதே தங்களுடைய பேறு என்று எண்ணியபடி உள்ள. (அன்புகூருமடியவர்) - பெரியதிருமொழி (2-10-4) – ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூறுமடியவர் - என்பதற்கு ஏற்ப உள்ள முதலாழ்வார்கள். (உறையில் இடாதவர்) – உருவிய வாளை உறையில் இடாமல் உள்ளது போன்று தொடக்கம், நடு, இறுதி ஆகியவற்றில் மற்ற தேவதைகளின் தாழ்வை உரைத்து ஸர்வேச்வரனுடைய மேன்மையை உரைக்கின்ற திருமழிசையாழ்வார். (புயற்கையருள்மாரி) – பெரியதிருமொழி (3-2-10) - காரார் புயற்கைக் கலிகன்றி – என்றும், பெரியதிருமொழி (3-4-10) - அருள்மாரி - என்றும் கூறுவதற்கு ஏற்ப தாராளமாக உள்ள தன்மையில் மேகம் போன்று இருந்து கருணையைப் பொழிகின்ற திருமங்கையாழ்வார். (குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்) – இராமாநுச நூற்றந்தாதி (60) – குணம் திகழ் கொண்டல் – என்பதற்கு ஏற்ப ஒளிர்ந்தபடி உள்ள மேகமாகக் கூறப்பட்ட எம்பெருமானார். (போல்வாரை) – முதலானவர்களை. (மேகம் என்னும்) - அவர்களுடைய குணத்தின் ஒற்றுமை காரணமாக மேகம் என்று கூறுவார். பேற்றுக்கான காரணம் இவர்களாக உள்ளதால் பேற்றினை விரைவாக அடையவேண்டும் என்ற பதற்றத்தால் பலமுறை தூதுவிடுவார்கள்.

156. தம்பிழையுஞ் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த க்ஷமாதீக்ஷாஸாரஸ்ய ஸௌந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹ விபவ பரத்வ த்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்.

**அவதாரிகை -** இனி இப்படி இவர் தூதுவிடும்படி முகம் காட்டாமைக்கு ஹேதுவையும், தூது விடுகைக்குப் பற்றாசையும், அதுக்கு விஷயத்தையும் தூது நாலுக்கும் வகையிட்டருளிச்செய்கிறார் மேல் (தம்பிழையும்) என்று தொடங்கி.

**விளக்கம் –** அடுத்து, இவர் இவ்விதம் தூது விடும்படியான நிலை ஏற்படும்விதத்தில் தனது முகத்தை அவன் காண்பிக்காத காரணத்தையும், தூதுவிடுதலுக்கான காரணத்தையும், அதற்கான விஷயத்தையும், நான்கு தூதுகளுக்கான வகையையும் இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது (தம்பிழை மறப்பித்த க்ஷமையை யுணர்த்தும் வ்யூஹம் முதல் தூதுக்கு விஷயம்) "அஞ்சிரைய மடநாரை"யில், "என் பிழையே நினைந்தருளி" என்று தன் மேன்மையாலே இத்தலையில் தண்மை பாராதே வந்து கலந்தான், கலக்கக்கொள்ள நம் தோஷ தர்சனத்தைப் பண்ணிப் பிரிந்து நம் அபராதத்தையே பார்த்துத் தன் க்ஷமையை மறக்கையாலே இத்தலையை நினையாதிருந்தானத்தனை; "அவன் தன்னுடைய அபராத ஸஹத்வத்தையறிவிக்க வரும்" என்று அறுதியிட்டு "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்று அபராத ஸஹத்வம் பற்றாசாக, "கடலாழி நீர் தோற்றி யதனுள்ளே கண்வளரும் அடலாழி யம்மானைக் கண்டக்கால் இது சொல்லி" என்று ஜகத் ஸ்ருஷ்ட்யர்த்தமாக ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினவனுக்கு ஸ்ருஷ்டி ப்ரயோஜநம் "விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும்" என்கிறபடியே திருவடிகளிலே அடிமை கொள்ளுகையன்றோவென்று இத்தைச் சொல்லவேணுமென்று வ்யூஹத்திலே தூதுவிடுகையாலே தம்பிழை மறப்பித்த க்ஷமையை யுணர்த்திவிட்ட வ்யூஹம் ப்ரதம தூதுக்கு விஷயம்.

**விளக்கம் –** (தம்பிழை மறப்பித்த க்ஷமையை யுணர்த்தும் வ்யூஹம் முதல் தூதுக்கு விஷயம்) – திருவாய்மொழி (1-4) – அஞ்சிறைய மடநாராய் – என்ற திருவாய்மொழியில் உள்ள திருவாய்மொழி (1-4-7) – என் பிழையே நினைந்தருளி – என்பதற்கு ஏற்ப தனது மேன்மை காரணமாக வந்து கலப்பவர்களுடைய தாழ்வை ஆராயாமல் வந்து கலந்தான். அவ்விதம் கலந்து நம்முடைய தோஷங்களைப் பார்த்துப் பிரிந்து, நம்முடைய குற்றங்களையே பார்த்து, தனது பொறுமையை அவன் மறப்பதாலே இவரை அவன்

நினைக்காமல் இருந்தான். ஆனால் அவன் தன்னுடைய “குற்றங்களைக் கண்டு பொறுத்துக் கொள்ளும் தன்மை” என்பதை உணர்த்துவதற்காக வருவான் என்ற நம்பிக்கையுடன், திருவாய்மொழி (1-4-7) - என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு - என்பதற்கு ஏற்ப அவனுடைய பொறுமை என்பதையே காரணமாகக் கொண்டு, திருவாய்மொழி (1-4-10) – கடலாழி நீர் தோற்றி யதனுள்ளே கண்வளரும் அடலாழி யம்மானைக் கண்டக்கால் இது சொல்லி – என்று இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் நோக்கத்தைக் கொண்டவனாகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தபடி உள்ளவனுக்கு ஸ்ருஷ்டியின் மூலம் கிடைப்பதன் பயன், ஸ்ரீவிஷ்ணுதர்மம் - விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும் - ஸர்வேச்வரனை வணங்குவதற்காகவே கைகால்களுடன் கூடிய இந்த விசித்ரமான சரீரம் முன்பு உண்டாக்கப்பட்டது - என்று கூறுவதற்கு ஏற்ப அவனுடைய திருவடிகளில் நம்முடைய கைங்கர்யத்தை ஏற்பதே ஆகும் அல்லவோ என்று அவனுக்கு உணர்த்த விரும்பி, வ்யூஹத்திற்கு தூதுவிடப்பட்டது. ஆகவே நம்முடைய பிழைகளானவை, அவனுடைய பொறுமை என்ற குணத்தை அவன் மறக்கும்படிச் செய்தன; இதனை மீண்டும் நினைவு கூறும்வகையில் செய்ததே முதல் தூதிற்கான விஷயம் ஆகும்.

**வ்யாக்யானம் -** (சிறந்த செல்வம் மறப்பித்த தீக்ஷையை யுணர்த்தும் விபவம் இரண்டாம் தூதுக்கு விஷயம்) “வைகல் பூங்கழிவாயி”ல், “சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும்” என்று ஆர்த்த ரக்ஷணம் பண்ணி வாரா நிற்கச்செய்தே திருவண்வண்டூரின் ஐச்வர்யத்தைக் கண்டு கால் தாழ்ந்து தன் ஆர்த்தரக்ஷண தீக்ஷையை மறக்கையாலே நம்மை நினையாதிருந்தானத்தனை; ஆர்த்த ரக்ஷணமொரு தலையானால் மற்றொன்றில் கால் தாழுமவனல்லாமையாலே அத்தை யறிவிக்க வருமென்று, “புணர்த்த பூந்தண்டுழாய் முடி நம் பெருமானைக் கண்டு” என்று ஆர்த்தரக்ஷண தீக்ஷிதத்வம் பற்றாசாக, “மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு என்னையுமுள ளென்மின்கள்” என்று பிராட்டி நிமித்தமாக ராவணனுக்கு வாஸபூமியான லங்கையில் அரணைத் துகளாக்கின ஏகவீரனான சக்ரவர்த்திதிருமகனுக்கு ரக்ஷ்யவர்க்கத்திலே நானுமொருத்தி யுண்டென்று சொல்லுங்கோளென்று விபவத்திலே தூது விடுகையாலே சிறந்த செல்வம் மறப்பித்த தீக்ஷையை யுணர்த்திவிட்ட விபவம் இரண்டாம் தூதுக்கு விஷயம்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (சிறந்த செல்வம் மறப்பித்த தீக்ஷையை யுணர்த்தும் விபவம் இரண்டாம் தூதுக்கு விஷயம்) – திருவாய்மொழி (6-1) – வைகல் பூங்கழிவாய் - என்ற திருவாய்மொழியில் உள்ள திருவாய்மொழி (6-1-3) - சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும் – என்பதற்கு ஏற்ப துன்பம் அடைந்தவர்களைப் பாதுகாத்தபடி வந்தான். அப்போது திருவண்வண்டூரில் உள்ள ஐச்வர்யத்தைக் கண்டு அங்கேயே நின்றான். இதனால் துன்பம் அடைந்தவர்களைக் காத்தல் என்ற தனது கொள்கையை மறந்து, நம்மை எண்ணாமல் இருந்தான். துன்பம் அடைந்தவர்களைக் காப்பாற்றுதல் என்பது ஒரு நிலை என்றால், மற்றொன்றில் நிலைப்பவன் என்பது அல்லாமையால், அதனை உணர்த்துவதற்காக இவன் வருவான் என்று நம்பியபடி, திருவாய்மொழி (6-1-5) – புணர்த்த பூந்தண்டுழாய் முடி நம் பெருமானைக் கண்டு – என்பதற்கு ஏற்ப துன்பம் அடைந்தவர்களைப் பாதுகாத்தல் என்பதான அவனுடைய விரதத்தையே காரணமாகக் கொண்டு, திருவாய்மொழி (6-1-10) - மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு என்னையுமுள ளென்மின்கள் – என்று கூறவதற்கு ஏற்ப சீதை காரணமாக இராவணன் வசித்து வந்த இலங்கையின் அரணைத் துகள்கள் ஆக்கியவனும் மற்றொரு துணை வேண்டாதபடியான வீரனும் ஆகிய இராமனுக்கு, “உன்னால் காப்பாற்றப்பட வேண்டிய பொருள்களில் நானும் ஒருவன் ஆவேன்” என்று கூறுவீர்களாக என விபவ விஷயம் குறித்துத் தூது விட்டாள். இதனால் சிறந்த செல்வமானது, “துன்பம் உள்ளவர்களைப் பாதுகாத்தல்” என்ற விரதத்தை அவன் மறக்கும்படிச் செய்தபோது, அதனை நினைவுபடுத்த விடுத்த தூதானது இரண்டாவது ஆகும்.

**வ்யாக்யானம்** - (படைத்த பரப்பு மறப்பித்த ஸாரஸ்யத்தை யுணர்த்தும் பரத்வ த்வயம் மூன்றாம் தூதுக்கு விஷயம்) “பொன்னுலகாளீ”ரில் “முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன் என்னலங் கொண்ட பிரான் தனக்கு” என்று ஸ்ருஷ்டமான ஜகத்தின் பரப்பை ரக்ஷிக்கிற பராக்காலே ஆச்ரிதரோடு தனக்குண்டான ஐகரஸ்யத்தை மறந்து, அது கொண்டு தம்மை நினையாதிருந்தானித்தனை, “தன் மன்னு நீள் கழல் மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்” என்று ஆச்ரிதரோடு ஏகரஸனாகையாலே அத்தையறிவிக்க வருமென்று ஐகரஸ்யம் பற்றாசக “வானவர் கோனைக் கண்டு யாமிதுவோ தக்கவாறு என்ன வேண்டும்” என்று பரத்வத்திலும், “எங்குச் சென்றாகிலுங் கண்டிதுவோ தக்கவாறென்மின்” என்று அதீந்த்ரியதயா பரத்வ ஸத்ருசமான

அந்தர்யாமித்வத்திலும் தூதுவிடுகையாலே, படைத்த பரப்பு மறப்பித்த ஸாரஸ்யத்தை யுணர்த்திவிட்ட பரத்வ த்வயம் மூன்றாம் தூதுக்கு விஷயம்.

**விளக்கம்** - (படைத்த பரப்பு மறப்பித்த ஸாரஸ்யத்தை யுணர்த்தும் பரத்வ த்வயம் மூன்றாம் தூதுக்கு விஷயம்) - திருவாய்மொழி (6-8) – பொன்னுலகாளீர் – என்ற திருவாய்மொழியில் உள்ள திருவாய்மொழி (6-8-1) - முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன் என்னலங் கொண்ட பிரான் தனக்கு – என்பதற்கு ஏற்ப தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தைக் காப்பாற்றுதல் என்ற துடிப்பு காரணமாக அடியார்களுடன் தனக்கு உண்டான இன்பத்தை மறந்து, அதன் காரணமாக நம்மை எண்ணாமல் இருந்தான். திருவாய்மொழி (6-8-6) - தன் மன்னு நீள் கழல் மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் – என்பதற்கு ஏற்ப அடியார்களுடன் சேர்ந்த இன்பத்தை உடையவன் என்பதால், தான் இவ்விதம் பிரிந்ததைக் கூற வருவான் என்று நம்பி அந்த இன்பம் காரணமாகவே, திருவாய்மொழி (6-8-5) - வானவர் கோனைக் கண்டு யாமிதுவோ தக்கவாறு என்ன வேண்டும் – என்று பரத்வம் குறித்தும், திருவாய்மொழி (6-8-5) - எங்குச் சென்றாகிலுங் கண்டிதுவோ தக்கவாறென்மின் - என்று காண இயலாதபடி உள்ள பரத்வத்திற்கு ஒப்பான அந்தர்யாமி நிலையைக் குறித்தும் தூதுவிடுவதால், தான் ஸ்ருஷ்டித்த இந்த உலகமானது மறக்க வைத்ததான அடியார்களுடன் சேரும் இன்பம் என்பதை நினைவுபடுத்த அனுப்பிய தூதானது மூன்றாவது ஆகும்.

**வ்யாக்யானம்** - (தமரோட்டை வாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தை யுணர்த்தும் அர்ச்சை நாலாம் தூதுக்கு விஷயம்) "எங்கானலி"ல், "தமரோடங்குறைவார்க்கு" என்று தம்மையுகந்த பாகவதர்களோட்டைச் சேர்த்தியின் இனிமையாலே, பிரிந்தார்க்கு ப்ராணன் கொண்டிருக்க வொண்ணாதபடியான தன் ஸௌந்தர்யத்தை மறந்து அது கொண்டு பிரித்திட்டு வைத்துப்போய் நம்மை நினையாதிருந்தாரத்தனை, இவ்வடிவழகைப் பிரிந்தார் தரிப்பரோவென்று அவ்வழகை யறிவித்துவிட்டால் வாராதிராரென்று, "செக்கமலத்தலர்போலும் கண் கை கால் செங்கனிவாய் அக்கமலத்திலை போலும் திருமேனியடிகளுக்கு தக்கிலமே கேளீர்கள்" என்றும், "பூந்துழாய் முடியார்க்கு" என்று தொடங்கி, "தாம் தம்மைக் கொண்டகல்தல் தகவன்று" என்று ஸௌந்தர்யம் பற்றாசாக "திருமூழிக்களத்தாருக்கு" என்று அர்ச்சவதாரத்திலே தூதுவிடுகையாலே தமரோட்டை

வாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தை யுணர்த்திவிட்ட அர்ச்சை நாலாம் தூதுக்கு விஷயமென்றபடி.

**விளக்கம்** – (தமரோட்டை வாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தை யுணர்த்தும் அர்ச்சை நாலாம் தூதுக்கு விஷயம்) - திருவாய்மொழி (9-7) - எங்கானல் – என்ற திருவாய்மொழியில் உள்ள திருவாய்மொழி (9-7-2) – தமரோடங்குறைவார்க்கு - என்பதற்கு ஏற்ப தன்னை மிகவும் விரும்பியபடி உள்ள பாகவதர்களுடன் தான் கொண்ட சேர்த்தியால் ஏற்பட்ட இனிமையின் விளைவாக நம் அழகையும் மறந்து அதன் விளைவாக நம்மையும் மறந்து நின்றான். இப்படிப்பட்ட அழகைப் பிரிந்தவர்கள் உயிர்தாங்கமாட்டார்கள் என்று இந்த அழகினை உணர்த்தினால் அதன் பின்னர் வராமல் இருக்கமாட்டான் என்று எண்ணி, திருவாய்மொழி (9-7-2) - செக்கமலத்தலர்போலும் கண் கை கால் செங்கனிவாய் அக்கமலத்திலை போலும் திருமேனியடிகளுக்கு தக்கிலமே கேளீர்கள் – என்றும், திருவாய்மொழி (9-7-9) – பூந்துழாய் முடியார்க்கு – என்று தொடங்கி, “தாம் தம்மைக் கொண்டகல்தல் தகவன்று” என்று அழகையே காரணமாகக் கொண்டு, “திருமூழிக்களத்தார்க்கு” என்று அர்ச்சாவதாரத்திற்குத் தூது விடப்பட்டது. இதனால் தனது அடியார்களுடன் சேர்ந்திருந்த காரணத்தால் மறக்கப்பட்ட தனது அழகை நினைவுபடுத்தும் விதமாக நான்காம் தூது அனுப்பப்பட்டது.

157. பகலோலக்கமிருந்து கறுப்புடுத்துச் சோதித்துக் காரியம் மந்த்ரித்து வேட்டையாடி ஆராமங்களிலே விளையாடும் ராஜநீதி, ஆதுஞ் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்தவென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு விண்மீதென்கிற ஐந்திலும் காணலாம்.

**அவதாரிகை** - இப்படி பலவிடங்களிலும் தூதுவிட்டால் ப்ராப்ய வஸ்த்வைக்யம் குலையாதோவென்கிற சங்கையிலே, பரத்வாதிகளில் ஸ்தல பேதமொழிய வஸ்து பேதமில்லை யென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (பகலோலக்கம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகப் பலரையும் குறித்துத் தூது விட்டால், “அடையவேண்டிய இலக்கு ஒன்றே ஆகும்” என்னும் ஸித்தாந்தம் முரண்படாதோ என்ற கேள்விக்கு

விடையாக, பரத்வம் போன்ற ஐந்து நிலைகளில் காணப்படுவது இடத்தின் வேறுபாடு மட்டுமே ஆகும் அல்லாமல், அடையப்படும் பொருளில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதை உதாரணத்துடன் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, (பகலோலக்கமிருந்து) ஸகல பரிஜந ஸேவ்யனாய்க் கொண்டு தன் வீறு தோற்றப் பகலோலக்கமிருக்கையும், (கறுப்புடுத்துச் சோதித்து) ராஜ்யத்திலுள்ளார் தோஷகுணங்க ளறிகைக்காக ராத்ரியிலே பிறரறியாதபடி கறுப்புடுத்து நகரசோதநம் பண்ணுகையும், (கார்யம் மந்த்ரித்து) ராஜ்யத்தில் சிக்ஷை ரக்ஷைகளுக்காகக் கார்யவிசாரம் செய்கையும், (வேட்டையாடி) பின்பு துஷ்டஸ்த்வ நிரஸநார்த்தமாக வேட்டையாடுகையும், (ஆராமங்களிலே விளையாடும் ராஜநீதி) அந்த ச்ரமம் தீர பூந்தோப்புக்களிலே அபிமதவிஷயங்களோடே விளையாடுகையுமாகிற ராஜ நீதியானது. (ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்தவென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு) “பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்” என்றும், “அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்” என்றும் சொல்லுகிறபடியே உபயவிபூதியிலும் ஏகதேசமும் சேஷியாதபடி தன்னுடைய திவ்யாஜ்ஞையை நடத்துமவனாய், “பாரளந்த பேரரசே எம் விசும்பரசே எம்மை நீத்து வஞ்சித்தோரரசே” என்று சொல்லப்பட்ட ஸௌலப்ய பரத்வ ப்ரணயித்வங்களாலே வந்த மூன்று முடிக்குரிய வானிளவரசான ஸர்வேச்வரனுக்கு. (விண்மீதென்கிற வைந்திலும் காணலாம்) “விண்மீதிருப்பாய்” என்று “வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ:” என்கிறபடியே, “பகல் கண்டேன்” என்கிற ஒரு பகலான பரமபதத்திலே, “ஒண்டொடியாள் திருமகளும்” தானுமாய் நித்யமுக்தர் ஸேவிக்க ஓலக்கமிருக்கையும்; “இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்” என்று “யமாத்மா ந வேத” என்கிறபடியே வ்யாப்ய பதார்த்தங்களுக்குத் தெரியாதபடி அந்தர்யாமியாய், “உள்ளுருவாருள்ளிற்றெல்லாம்” அறிகையும்; “கடல் சேர்ப்பாய்” என்று பாற்கடல் யோகநித்திரை செய்து சேதந ரக்ஷோபாயங்களைச் சிந்திக்கையும்; அநந்தரம் “மண் மீதுழல்வாய்” என்று ரக்ஷணார்த்தமாக வந்தவதரித்து, “களிறும் புள்ளுமுடன் மடிய வேட்டையாடி வருவான்” என்கிறபடியே ஆச்ரித விரோதி துஷ்டஸ்த்வ நிரஸனமாகிற வேட்டையாடுகையும்; “மலைமேல் நிற்பாய்” என்று விரோதி நிரஸந ச்ரமமாற நிரதிசய

போக்யங்களான "ஆராமம் சூழந்த" கோயில் திருமலை முதலான தேசங்களிலே ரஸோத்தரமாக வஸிக்கையுமாகிற இவையைந்திலும் காணலாமென்கை. இத்தால் பரத்வாதிகளில் ஸ்தல பேதமொழிய வஸ்து பேதமில்லாமை காட்டப்பட்டது.

**விளக்கம்** – (பகலோலக்கமிருந்து) - அனைவராலும் வணங்கப்படுபவனாக இருக்கின்ற காரணத்தால் தனது ஆளுமை வெளிப்படும்படியாகப் பகலில் அரசசபையில் வீற்றிருத்தல். (கறுப்புடுத்துச் சோதித்து) - தனது நாட்டில் உள்ளவர்களுடைய குற்றங்கள் மற்றும் குணங்கள் ஆகியவற்றை அறியும்விதமாக இரவில் யாரும் அறியாதவிதத்தில் மாறுவேடம் பூண்டு நகர சோதனை செய்தல். (கார்யம் மந்த்ரித்து) - நாட்டில் உள்ள நல்லவர்களுக்கு ஏற்ற நன்மையைச் செய்து, அவர்களைக் காப்பாற்றத் தேவையான செயல்கள் குறித்து ஆராய்தல். (வேட்டையாடி) – தீயவிலங்குகளை அழிப்பதற்காக வேட்டை ஆடுதல். (ஆராமங்களிலே விளையாடும்) - வேட்டையாடிய களைப்பு நீங்கும்விதமாக பூந்தோட்டங்களில் தனக்கு விருப்பமானவர்களுடன் சேர்ந்து விளையாடுதல் என்பதான. (ராஜநீதி) - அரசர்களுக்கே உரிய செயல்பாடுகளை, (ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற) – நாச்சியார் திருமொழி (11-3) – பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார் - என்றும், திருவிருத்தம் (33) – அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இரண்டு விபூதிகளிலும் ஒரு சிறிய அளவு கூட விடாதபடி தனது திவ்யமான ஆணையை நடத்துபவனாகவும். (பாரளந்தவென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு) – திருவிருத்தம் (80) - பாரளந்த பேரரசே எம் விசும்பரசே எம்மை நீத்து வஞ்சித்தோரரசே - என்று கூறப்பட்டதான எளிமை, உயர்த்தி, அன்பு போன்ற தன்மைகள் மூலம் ஏற்பட்டதான மூன்று முடிக்கு உரியவன் என்றுள்ள ஸர்வேச்வரனுக்கு. (விண்மீதென்கிற வைந்திலும் காணலாம்) – திருவாய்மொழி (6-9-5) – விண்மீது இருப்பாய் - என்றும், வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ: - சிந்திப்பதற்கும் அப்பாற்பட்டதான ஸ்வரூபத்தை உடைய, உலகங்கள் அனைத்திற்கும் நாயகனாகிய மஹாவிஷ்ணு நித்யஸூரிகளுடனும் பிராட்டிமார்களுடனும் ஸ்ரீவைகுண்டம் என்ற உயர்ந்த இடத்தில் வீற்றுள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, இரண்டாம் திருவந்தாதி (81) – பகல் கண்டேன் – என்பதற்கு ஏற்ப பகலான பரமபதத்தில், திருவாய்மொழி (4-9-10) - ஒண்தொடியாள் திருமகளும் –

என்பதற்கு ஏற்ப உள்ள பெரியபிராட்டியும், தானும் நித்யஸூரிகள் மற்றும் முக்தாத்மாக்கள் ஆகியவர்கள் வணங்கி நிற்கும்படியாக ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தும், திருவாய்மொழி (6-9-5) – இவற்றுள் எங்கும் - என்றும், உபநிஷத்தில் – யம் ஆத்மா ந வேத – எந்தப் பரம்பொருளை இந்த ஆத்மா அறியவில்லையோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தான் எந்தெந்த பொருள்களில் வ்யாபித்துள்ளானோ அவை ஏதும் தன்னை அறியாதபடி அந்தர்யாமியாகவும், திருமாலை (34) – உள்ளுருவாருள்ளிற்றெல்லாம் - என்பதற்கு ஏற்ப அனைவரின் உள்ளிருந்து அனைத்தையும் அறிதல்; திருவாய்மொழி (6-9-5) - கடல் சேர்ப்பாய் – என்று கூறுவதற்கு ஏற்ப திருப்பாற்கடலில் யோகநித்திரையில் இருந்து அனைத்து சேதநர்களையும் காப்பாற்றும் வழிகளை ஆலோசித்தபடி இருத்தல்; தொடர்ந்து திருவாய் (6-9-5) - மண் மீது உழல்வாய் – என்பதற்கு ஏற்ப அனைவரையும் காப்பாற்றும் பொருட்டு வநது அவதரித்தல்; நாச்சியார் திருமொழி (14-9) - களிறும் புள்ளுமுடன் மடிய வேட்டையாடி வருவான் - என்பதற்கு ஏற்ப தனது அடியார்களுக்கு விரோதிகளாக உள்ள தீயவர்களை அழிப்பது என்ற வேட்டை ஆடுதல்; திருவாய் (6-9-5) – மலை மேல் நிற்பாய் - என்று கூறுவதற்கு ஏற்ப விரோதிகளை அழித்த பின்னர் ஏற்பட்ட களைப்பு நீங்குவிதமாக எல்லையற்ற இன்பம் அளிக்கவல்லதான, சிறிய திருமடல் (34) – ஆராமம் சூழ்ந்த - என்பதான திருவரங்க, திருமலை போன்ற திவ்யதேசங்களில் இன்பத்தை அளித்தபடி வசித்தல் போன்ற ஐந்திலும் காணலாம். இதன் மூலம், பரத்வம் போன்ற நிலைகள் அனைத்தும் இடவேற்றுமை மட்டுமே அல்லாமல் வஸ்து வேற்றுமை அல்ல என்பது உணர்த்தப்பட்டது.

158. தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னானார் வணங்குமிடத்திலே யெல்லாம் பூர்ணம்.

**அவதாரிகை -** ஆனால் ஐந்திலு மொத்திருக்கையன்றிக்கே அர்ச்சாவதாரத்திலே இவர் அண்டியிருப்பானென் னென்னுமாகங்க்ஷையிலே இதன் குணபூர்த்தியை அருளிச்செய்கிறார் (தமருகந்த) என்று தொடங்கி.

**விளக்கம் –** ஆனால் பரத்வம் போன்ற ஐந்து நிலைகளும் ஒரே போன்று உள்ளபோது, நம்மாழ்வார் அர்சாவதாரத்தில் மட்டுமே அதிக ஈடுபாடு கொண்டது ஏன் என்ற கேள்விக்கு, அர்ச்சாவதாரத்தில் காணப்படும் குணங்களின் நிறைவை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்” என்று ஆச்ரிதருகந்த த்ரவ்யங்களே தனக்குத் திருமேனியாகவும், அவர்களுகந்த திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவும் கொண்டிருக்குமென்றும். “அடியோமுக்கே யெம்பெருமானல்லீரோ நீரிந்தளூரீரே” என்று தேச கால கரண விப்ரக்ருஷ்டதைகளாலே பரத்வாதிகளில் அணுகுகைக்கு ஆளன்றிக்கே அநந்யகதிகளா யிருக்கிற வெங்களுக்கு, ருசி பிறந்தபோதே நினைத்தவைகளெல்லா மநுபவிப்பிக்கைக்காகவன்றோ திருவிந்தளூரிலே வந்து நிற்கிறதென்றும் சொல்லப்பட்ட “பின்னானார் வணங்கும் சோதி” என்று அவதாரங்களுக்குப் பிற்பாடரானவர்களுக்கு அநுபாவ்யமான அர்ச்சாவதாரத்திலே, “ஸர்வம் பூர்ணம்ஸஹோம்” என்கையாலே பரத்வாதிகளி லநுபாவ்யமான குணங்களெல்லாம் பூர்ணமென்கை. ஆகவிப்படி ஆச்ரிதாதீந ஸ்வரூப ஸ்தித்யாதிகமாய் “அடியோமுக்கே” என்னும்படி கறை விழுந்தவிடமான அர்ச்சாவதாரத்தில் முற்பட்டவற்றிலுள்ளவையும் காணலாமாகையாலே “தேவ பிரானறியு” மென்னும்படி மண்டியிருப்பரென்று கருத்து.

**விளக்கம்** – (தமர் உகந்த) – முதல்திருவந்தாதி (44) – தமர் உகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே தமருகந்த தெப்பேர் மற்றப்பேர் – என்பதற்கு ஏற்ப அடியார்கள் மிகவும் விரும்புகின்ற பொருள்களையே தனது திருமேனியாகவும், அவர்களுக்கு மிகவும் விருப்பமான திருநாமங்களையே தனது திருப்பெயராகவும் கொண்டிருப்பான் என்றும், (அடியோமுக்கே என்னும்) – பெரியதிருமொழி (4-9-5) - அடியோமுக்கே யெம்பெருமானல்லீரோ நீரிந்தளூரீரே - என்பதற்கு ஏற்ப இடம், காலம், உறுப்புகள் போன்ற அனைத்தாலும் எட்டாத தூரத்தில் உள்ளதால் பரத்வம் போன்ற நான்கு நிலைகளை அண்டுவதற்கு ஏற்றவர்கள் யாரும் இன்றி, வேறு கதி அற்றவர்களாக இருக்கின்ற எங்களுக்கு அவன் மீது ஈடுபாடு ஏற்பட்ட உடனேயே நாங்கள் நினைத்த விதங்களில் எல்லாம் எங்களை அனுபவிக்கும்படிச் செய்வதற்காக அல்லவோ திருவிந்தளூரில் வந்து நிற்கிறான் என்றும் கூறப்பட்டதாகிய. (பின்னானார் வணங்கும் இடத்திலே) - திருநெடுந்தாண்டகம் (10) – பின்னானார் வணங்கும் சோதி - என்பதற்கு ஏற்ப அவதாரங்களுக்கு பிற்பட்ட காலத்திலே பிறந்தவர்களும் அனுபவிப்பதற்கு ஏற்றபடியான உள்ள அர்ச்சாவதாரத்திலே. (எல்லாம் பூர்ணம்) - ஸர்வம் பூர்ணம்ஸஹோம் – அனைத்தும் பரிபூர்ணமாக உள்ளது என்பதற்கு ஏற்ப பரத்வம்

போன்ற நிலைகளில் அனுபவிக்கத்தக்க அனைத்து குணங்களும், அர்ச்சாவதாரத்தில் முழுமையாக உள்ளன என்று கருத்து. இப்படியாக அடியார்களுக்கு வசப்பட்டுள்ள இயல்பையும், பொருந்தி இருத்தல் என்பதையும், பெரியதிருமொழி (4-9-5) – அடியோமுக்கே - என்பதற்கு ஏற்ப உள்ளதையும் கொண்டதான கறைபடிந்த நிலையாகிய அர்ச்சாவதாரத்தில், முன்புள்ள நான்கு நிலைகளின் குணங்களையும் காணலாம். எனவே திருவாய்மொழி (7-10-10) – தேவபிரான் அறியும் - என்பதற்கு ஏற்ப ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இருப்பார் என்று கருத்து.

159. வன்பெருவானக முதலுய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி வடிவுடைக் கடலிடங் கட்கிலீயென்னு மவற்றில் இவள் திறத்தென்கொலோ வென்பிக்கிற வ்யூஹ ஸௌஹார்த்த ப்ரதாநம்.

**அவதாரிகை** - இப்படி அர்ச்சாவதாரத்திலே எல்லாம் பூர்ணமாகில் எல்லாத் திருப்பதிகளிலும் எல்லா குணங்களும் ஒக்க ப்ரகாசிக்குமோவென்னு மாகாங்க்ஷையிலே, பரத்வாதிகளுக்கு அஸாதாரணமாயும் ஸாதாரணமாயுமிருக்கும் குணங்களில் ஒரோ குணம் ஒரோ திருப்பதியிலே ப்ராதாந்யேந ப்ரகாசிக்கும்படியை இவ்வாழ்வா ரநுஸந்தித்த திருப்பதிகள்தோறும் தர்சிப்பிக்கிறார் மேல். அதில் ப்ரதமத்திலே பரத்வாதிகளுக்கு அஸாதாரணமான ஒரோ குணம் ப்ராதாந்யேந ப்ரகாசிக்கிற திருப்பதிகளை யருளிச்செய்யக் கோலி, அதில் திவ்யதேச ப்ரதானமான கோயிலில் ப்ரகாசிக்கிற குணத்தை ஆதியிலே யருளிச்செய்கிறார் (வன்பெருவானகம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதமாக அர்ச்சாவதாரத்தில் அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களும் பரிபூர்ணமாக உள்ளது என்றாலும், அனைத்து திவ்யதேசங்களிலும் இந்த அனைத்து குணங்களும் ஒரே போன்று வெளிப்படுமோ என்ற சந்தேகம் எழுகிறது. இதற்கு விடை அளிக்கிறார். பரத்வம் போன்ற நிலைகளில், ஒவ்வொரு நிலைக்கு மட்டுமே உரியதாகவும், அந்த அனைத்திற்கும் பொதுவானதாகவும் உள்ள குணங்களில் ஒவ்வொரு குணமும் ஒவ்வொரு திவ்யதேசத்தில் முதன்மையாக வெளிப்படும் விதத்தை ஆழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் கொண்டு விளக்குகிறார். முதலில் பரத்வம் போன்ற நிலையில், அந்தந்த நிலைகளுக்கே உரிய ஒவ்வொரு குணமும் முதன்மையாக வெளிப்படும் திவ்யதேசங்களை உரைக்கத் திருவுள்ளம் கொண்டார். ஆகவே அனைத்து


**Email:**sridharan_book@yahoo.co.in

திவ்யதேசங்களிலும் முதன்மையான திருவரங்கம் பெரியகோயிலில் வெளிப்படும் குணத்தைத் தொடக்கத்தில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, (வன்பெருவானகமுதலுய்ய) “வன்பெரு வானகமுய்ய வமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய” என்று முதலில் ப்ரஹ்மலோகத்திலே யெழுந்தருளிப் பின்பு பூலோகத்தில் எழுந்தருளின கட்டளையில் நைமித்திக ப்ரளயத்துக்கு இளையாத ப்ரஹ்மலோகம் முதலான இவ்வருகுண்டான உபரிதந லோகங்களும் அங்குள்ள ப்ரஹ்மாதிகளும், பூமியும் இங்குள்ள மனுஷ்யரும் உஜ்ஜீவிக்கும்படியாக. (இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி) “திருவாள னினிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கம்” என்றும், “திருவாளன் திருப்பதி” என்றும் சொல்லுகிறபடியே திருவுள்ளமுகந்து கண்வளர்ந்தருளுகிற ஸ்ரீய:பதியுடைய திருப்பதியான கோயிலானது; (வடிவுடைய கடலிடம் கட்கிலீ யென்னுமவற்றில்) “வடிவுடை வானோர் தலைவனே” என்றும், “கடலிடங் கொண்ட கடல்வண்ணா” என்றும், “கட்கிலீ” என்றும், “காகுத்தா” என்றும் சொல்லும்படி தோன்றும் பரத்வாதிகளில் வைத்துக்கொண்டு (இவள் திறத்து என்கொலோவென்பிக்கிற வ்யூஹ ஸௌஹார்த ப்ரதாநம்) “இவள் திறத்தென் சிந்தித்தாய்” என்றும், “என்கொலோ முடிகின்றதிவட்கே” என்றும், ‘இவளிடையாட்டத்தில் தேவர் சிந்தித்ததென்? இவள் காரியம் என்னாய் முடியக்கடவது?’ என்று சொல்லும்படி பண்ணுகிற “பாற்கடல் யோக நித்திரை சிந்தை செய்”யும் வ்யூஹகுணமான ஸௌஹார்த்தத்தை ப்ரதானமாக வுடைத்தாயிருக்கு மென்கை. இஸ்தலத்திலே வ்யூஹ ஸௌஹார்தம் ப்ராதாந்யேந ப்ரகாசிக்குமென்றபடி.

**விளக்கம்** – (வன்பெருவானகமுதலுய்ய) – பெருமாள் திருமொழி (1-10) – வன்பெரு வானகமுய்ய வமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய – என்பதற்கு ஏற்ப முதலில் ப்ரஹ்மலோகத்தில் எழுந்தருளி, அதன் பின்னர் பூலோகத்தில் எழுந்தருளிய விதத்தில், நைமித்திக ப்ரளயத்தால் பாதிக்கப்படாத ப்ரஹ்மலோகம் முதலான மற்ற லோகங்களும், அங்குள்ள நான்முகன் உள்ளிட்டவர்களும், இந்த உலகில் உள்ள மனிதர்களும் பிழைத்துக் கரையேறும்விதமாக. (இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி) - பெரியாழ்வார் (4-9-10) - திருவாளன் இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கம் – என்றும், பெரியாழ்வார் (4-8-10) - திருவாளன் திருப்பதி – என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது திருவுள்ளம் மகிழ்ந்து திருக்கண்கள் வளர்கின்ற

மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸர்வேச்வரனுடைய இருப்பிடமான திருவரங்கம் பெரியகோயில் என்பதானது, (வடிவுடைய கடலிடம் கட்கிலீ யென்னுமவற்றில்) – திருவாய்மொழி (7-2-10) – வடிவுடை வானோர் தலைவனே -என்றும், (7-2-7) - கடலிடம் கொண்ட கடல்வண்ணா – என்றும், (7-2-3) – கட்கிலீ - என்றும், (7-2-3) - காகுத்தா – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான பரத்வம் போன்ற பல்வேறு நிலைகளிலும் இருந்தபடி. (இவள் திறத்து என்கொலோவென்பிக்கிற வ்யூஹ ஸௌஹார்த ப்ரதாநம்) - திருவாய்மொழி (7-2-4) – இவள் திறத்தென் சிந்தித்தாய் - என்றும், (7-2-2) – என்கொலோ முடிகின்றதிவட்கே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, "இவள் விஷயத்தில் நீ என்ன நினைத்துள்ளாய்? இவளுடைய வாழ்க்கை எவ்விதம் செல்லப்போகிறது?" என்று புலம்பும்படியாகச் செய்கிற. (வ்யூஹ ஸௌஹார்த்த ப்ரதாநம்) – திருவாய்மொழி (2-6-5) - பாற்கடல் யோக நித்திரை சிந்தை செய்த - என்பதற்கு ஏற்ப யோக நித்திரையில் சிந்தனை செய்தபடி, வ்யூஹகுணமான "உலகில் உள்லவர்களைக் காப்பாற்றுதல் எப்படி" என்ற எண்ணத்தையே முதன்மையாகக் கொண்டிருப்பதாக உள்ளது. ஆக திருவரங்கத்தில், "அனைத்தையும் காப்பது எப்படி" என்று சிந்தித்தபடி உள்ளதான ஸௌஹார்தம் என்ற குணமே முதன்மையாக வெளிப்படுகிறது.

160. மண்ணோர் விண்ணோர் வைப்பில், போகின்ற ஏழுலக்குயிர் பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்ய முஜ்ஜ்வலம்.

**அவதாரிகை** – இனி, கோயிலுக்கனந்தரம் சொல்லப்படுவதான திருமலையில் ப்ரகாசிக்கிற குணத்தை யருளிச்செய்கிறார் (மண்ணோர்) என்று தொடங்கி.

**விளக்கம்** - திருவரங்கம் பெரியகோயிலுக்கு அடுத்து உரைக்கப்படுவதாகிய திருவேங்கடத் திருமலையில் வெளிப்படுகின்ற குணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது (மண்ணோர் விண்ணோர் வைப்பில்) "கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றும், "தண்ணருவி வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்று உபயவிபூதியிலுள்ளார்க்கும் சேமித்து வைத்த நிதி போலே ப்ராப்யமாயிருக்கிற திருமலையில். (போகின்ற ஏழுலகுக்குயிர், பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்ய முஜ்ஜ்வலம்) "போகின்ற காலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள்

தாய்தந்தையுயிராகின்ற” யென்றும், “கண்ணாயேழுலகுக்கு உயிராய வெங்கார் வண்ணனை” என்றும் சொல்லுகிறபடியே ஸர்வகாலமும் ஸர்வாத்மாக்களுக்கும் ஸர்வவித பந்துவுமாய்க் கொண்டு ஸர்வர்க்குமாத்மாவா யிருக்கிற அந்தர்யாமியுடைய குணமாயிருப்பதாய், “என்கண் பாசம் வைத்த”, “நிகரில் புகழாய்” என்று மிகவும் தண்ணியனாயிருக்கிற என் பக்கலிலே ஸங்கத்தைப் பண்ணினானென்றும் ஒப்பில்லாப் புகழை யுடையவனே யென்றும் சொல்லப்பட்ட வாத்ஸல்யம் “பரஞ்சுடர்ச்சோதி” என்று வடிவிலே தொடைகொள்ளலாம்படி உஜ்ஜ்வலமாயிருக்குமென்கை. (பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்யம்) என்கையாலே “ஒழிவில் காலம்”, “உலகமுண்ட பெருவாயன்” இரண்டையும் சேர்த்துப் பிடித்தருளிச் செய்தமை தோற்றுகிறது. கோயிலுக்கனந்தரம் திருமலையைச் சொல்லுகை தேட்டமாகில் இரண்டு திருமலையும் ஒவ்வாதோ? தெற்குத் திருமலை விஷயமான “கிளரொளியிளமை” கீழே கிடக்க, “ஒழிவில் கால”த்தில் சொன்ன வடக்குத் திருமலையை அருளிச்செய்வானென்னென்னில்; பரத்வாதிகளுக்கு அஸாதாரண குணப்ரகாசகமான ஸ்தலங்களை அருளிச்செய்கிற ப்ரகரணமாகையாலே, தெற்குத் திருமலையில் ப்ரகாசிக்கிற குணம் இதுக்குச் சேர்த்தியில்லாலது கொண்டு “கிளரொளி யிளமை”யைச் “செஞ்சொற் கவியோடு” சேர்த்தருளிச் செய்வதாக விட்டு வைத்து இது முதலாக அருளிச்செய்தாரித்தனை.

**விளக்கம்** – (மண்ணோர் விண்ணோர் வைப்பில்) – திருவாய்மொழி (1-8-3) - கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு – என்றும், நான்முகன் திருவந்தாதி (45) – தண்ணருவி வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு - என்றும் கூறுவதற்கு ஏற்ப நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிலும் உள்ளவர்களுக்கும் சேமித்து வைக்கப்பட்டுள்ள புதையல் போன்று அடையவேண்டிய இலக்காக உள்ள திருமலையில். (போகின்ற) - திருவாய்மொழி (2-6-10) - போகின்ற காலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள் தாய்தந்தையுயிராகின்ற - என்றும், (ஏழுலகுக்கு உயிர்) - பெரியதிருமொழி (1-9-10) - கண்ணாயேழுலகுக்கு உயிராய வெங்கார் வண்ணனை - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து காலங்களிலும், அனைத்து ஆத்மாக்களுக்கும் அனைத்து உறவினனாகவும் இருப்பதால், அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ள அந்தர்யாமியின் குணம் உள்ளதாகிய (பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்யம்) – திருவாய்மொழி (3-3-4) – என்கண் பாசம் வைத்த - என்பதற்கு ஏற்ப மிகவும் தாழ்ந்தவனாக உள்ள என்னிடம் சேர்க்கையை ஏற்படுத்திக்கொண்டு நின்றான் என்றும்,

திருவாய்மொழி (6-10-10) – நிகரில் புகழாய் – என்று கூறுவதற்கு ஏற்ப ஈடில்லாத புகழ் கொண்டவனே என்றும் கூறப்படுகின்ற வாத்ஸல்யம், (உஜ்ஜ்வலம்) – திருவாய்மொழி (3-3-4) - பரஞ்சுடர்ச்சோதி – என்று கூறுவதற்கு ஏற்ப வடிவத்தில் தொடை கொள்வதற்கு ஏற்றபடி ப்ரகாசமாக இருக்கும். (பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்யம்) - இவ்விதமாகக் கூறுவதால் "ஒழிவில் காலம்" மற்றும் "உலகம் உண்ட பெருவாயா" ஆகிய இரண்டையும் சேர்த்து அருளிச்செய்தமை வெளிப்படுகிறது. திருவரங்கத்திற்கு பின்னர் திருமலையைக் குறித்து உரைப்பதில் விருப்பம் இருந்தது என்றால், திருவேங்கடம் மற்றும் திருமாலிருஞ்சோலை ஆகிய இரண்டும் ஒன்றாகவே உள்ளது அல்லவோ? மேலும் திருமாலிருஞ்சோலை திருமலை விஷயமாக "கிளரொளி இளமை" என்ற இரண்டாம் திருவாய்மொழி உள்ளபோது, அதனைக் கூறாமல் வரிசையில் மூன்றாவதாக உள்ள "ஒழிவில் காலம்" என்பதில் கூறப்பட்ட திருவேங்கட திருமலையை ஏன் முதலில் கூறவேண்டும் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். பரத்வம் போன்றதான ஐந்து நிலைகளில் ஒவ்வொரு நிலைக்கே உரியதான குணங்கள் வெளிப்படுகின்ற திவ்யதேசங்கள் குறித்து அருளிச்செய்யும் பகுதி என்பதால், திருமாலிருஞ்சோலையில் வெளிப்படும் குணம் என்பது திருவேங்கடத்தில் வெளிப்படும் குணத்தைக் காட்டிலும் வேறானதாக உள்ளதால், "கிளரொளி இளமை" என்ற திருவாய்மொழியை, "செஞ்சொல்" என்பதான திருவாய்மொழியுடன் சேர்த்து அருளிச்செய்ய எண்ணியவராக, இங்கு திருவேங்கடத்தை முதலில் அருளிச்செய்தார்.

161. உபய ப்ரதாந ப்ரணவமான உறைகோயிலில் எத்தேவுமென்னும் பரேசத்வம் பொலியும்.

**அவதாரிகை -** இனி, "ஒழிவில் கால"த்துக்குப் பின்பு திருப்பதி விஷயமான திருவாய்மொழி "ஒன்றுந்தேவா"கையாலே திருநகரியில் ப்ரகாசிக்கிற குணத்தை யருளிச்செய்கிறர் (உபயேத்யாதியால்).

**விளக்கம் -** "ஒழிவில் காலம்" திருவாய்மொழியைத் தொடர்ந்து திவ்யதேச ஸம்பந்தம் கொண்டதான திருவாய்மொழியாக "ஒன்றுந்தேவும்" என்பது உள்ளதால், அதில் கூறப்படுவதான ஆழ்வார்திருநகரியில் வெளிப்படும் குணத்தை அருளிச்செய்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம் -** அதாவது (உபயப்ரதாந ப்ரணவமான உறை கோயிலில்) "ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத" என்றும், "ஓங்காரோ பகவாந் விஷ்ணு:" என்றும் சொல்லுகிறபடியே சப்தார்த்தங்களினுடைய ப்ராதாந்யத்தாலே ஜீவேச்வரர்க ளிருவர்க்கும் வாசகமாய்க் கொண்டு இருவருடையவும் ப்ராதாந்யம் தோன்றுவிக்கிற ப்ரணவம் போலே ஆழ்வாருடையவும் பொலிந்து நின்ற பிரானுடையவும் ஆஜ்ஞை இருபுரிந்து நடக்கையாலே உபயருடையவும் ப்ராதாந்யம் தோற்றும்படியிருப்பதாய், "அவன் மேவியுறை கோவில்" என்று பரமபதத்தில் ஸம்ஸாரிகளிழவை நினைத்து உள்வெதுப்போடே யிருக்குமா போலன்றிக்கே, அவர்களுக்கு அணித்தாக வந்து நிற்கப் பெறுமையாலே உள்வெதுப்பற்று வர்த்திக்கிற ஸ்தலமான திருநகரியில், (எத்தேவுமென்னும் பரேசத்வம் பொலியும்) "எத்தேவுமெவ்வுலகங்களும் மற்றும் தன்பால் மறுவில் மூர்த்தியோடொத்து இத்தனையும் நின்ற வண்ணம் நிற்கவே திருக்குருகூரதனுள் குறிய மாணுருவாகிய நீள்குடக்கூத்தன்" என்று ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்டஜ் வஸ்துக்களும் ஸ்வாஸாதாரண விக்ரஹத்தோபாதி தனக்கு ப்ரகாரமாம்படியிருக்கிற ஐச்வர்யத்தோடே கூட, திருக்குருக்கூரிலே ஸுலபனாய் வந்து நின்றானென்று சொல்லப்பட்ட "திருக்குருகூரதனுள் பரன்", "திருக்குருகூரதனுள் ஈசன்" என்று ஸுலபனான நிலையில் ப்ரகாசிக்கிற பரத்வ லக்ஷணமான ஈச்வரத்வம் "பொலிந்து நின்ற பிரான்" என்கையாலே அபிவ்ருத்தமாகா நிற்கும்மென்கை.

**விளக்கம்** – (உபய ப்ரதாந ப்ரணவமான) - ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத - ஓம் என்று ஆதமாவை த்யானிப்பானாக – என்றும், ஓங்காரோ பகவாந் விஷ்ணு: - ஓம் என்பது பகவானாகிய விஷ்ணு - என்றும் கூறுவதற்கு ஏற்ப, இந்த இரண்டு வாக்கியங்களிலும் கூறப்பட்டவர்களாக, முதலில் உள்ள ப்ரமாணத்தின் சொல் காரணமாக ஜீவாத்மா, இரண்டாம் ப்ரமாணத்தின் பொருள் காரணமாகப் பரமாத்மா ஆகியோர் உள்ளனர். இவர்கள் இருவருடைய முதன்மையை உணர்த்துவதாக உள்ள "ஓம்" என்ற ப்ரணவம் போன்று ஆழ்வார் மற்றும் "பொலிந்து நின்ற பிரான்" ஆகிய இருவருடைய ஆணைக்கு ஏற்றபடி உள்ள காரணத்தால், இவர்கள் இருவருடைய மேன்மை வெளிப்படும்படியும்; திருவாய்மொழி (4-10-2) – அவன் மேவியுறை கோவில் - என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் உள்ளபோது ஸம்ஸாரிகள் தன்னை இழந்து நிற்கிறார்களே என்று எண்ணிக் கலங்கியபடி உள்ள நிலை போன்று அல்லாமல், அவர்கள் மிகவும் அருகில் வந்து நிற்பதால் உள்ளக் கலக்கம் நீங்கப் பெற்று வசிப்பதாகவும் உள்ள திவ்யதேசமான ஆழ்வார்திருநகரியில்.

(எத்தேவு என்னும்) - திருவாய்மொழி (4-10-10) – எத்தேவுமெவ்வுலகங்களும் மற்றும் தன்பால் மறுவில் மூர்த்தியோடொத்து இத்தனையும் நின்ற வண்ணம் நிற்கவே திருக்குருகூரதனுள் குறிய மாணுருவாகிய நீள்குடக்கூத்தன் – என்று கூறுவதற்கு ஏற்ப, “தன்னைத் தவிர்த்து உள்ள மற்ற அனைத்து பொருள்களும் தனக்கு மட்டுமே உரிய திருமேனி போன்று தனக்காகவே உள்ள நிலையை வெளிப்படுத்தும்படியான ஐச்வர்யத்துடன் கூடியவனாக திருக்கூருகூரில் அனைவரும் வந்து அண்டும்படியாக நின்றான்”, என்று கூறப்பபட்ட. (பர ஈசத்வம்) – திருவாய்மொழி (4-10-3) – திருக்குருகூரதனுள் பரன் - என்றும், திருவாய்மொழி (4-10-4) – திருக்குருகூரதனுள் ஈசன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எளியவனாக நிற்கும்போதிலும் வெளிப்படுகின்ற பரத்வம் என்பதற்கு இலக்கணமாக உள்ள ஈச்வரத் தன்மையானது, (பொலியும்) – திருவாய்மொழி (4-10-5) – பொலிந்து நின்ற பிரான் - என்று கூறுவதால் வெளிப்பட்டபடி இருக்கும் என்று கருத்து.

162. வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீலமேனியின் ருசி ஜநக விபவ லாவண்யம் பூர்ணம்.

**அவதாரிகை** – இதுக்குப் பின்பு திருப்பதி விஷயமான திருவாய்மொழி எங்ஙனேயோவாகையாலே திருக்குறுங்குடியில் ப்ரகாசிக்கிற குணத்தை அநந்தரம் அருளிச்செய்கிறார் (வைஷ்ணவ) இத்யாதியால்.

**விளக்கம்** – ஆழ்வார்திருநகரியைத் தொடர்ந்து திவ்யதேசத்தைக் குறித்து உரைக்கும் திருவாய்மொழி “எங்ஙனேயோ” என்பதால், அதில் கூறப்படுவதான திருக்குறுங்குடியில் வெளிப்படுகின்ற குணத்தை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - திருக்குறுங்குடியில்லென்னாதே வைஷ்ணவ வாமநத்தில் என்றது ஸாபிப்ராயம். அதாவது வாமநாவதாரத்தில் தன்னுடைமை பெறுகைக்குத்தான் அர்த்தியானாப்போலே அர்த்தியாய் நின்று, பாஷ்யகாரர் பக்கலிலே வேதாந்தார்த்தம் கேட்டு சிஷ்யனாய் “நாமும் நம்மிராமாநுசனை யுடையோம்” என்கையாலே ஸ்ரீவைஷ்ணவநம்பி என்று திருநாமமாய் வாமநாவதாராம்சமாகப் புராண ஸித்தராயிருக்கிற நம்பியுடைய திருப்பதியென்கை. அன்றிக்கே “அறியக்கற்று வல்லார்

வைட்டணவர்” என்று இத்தேச விஷயமான திருவாய்மொழியைக் கற்றவர்கள் வைஷ்ணவராவ ரென்கையாலே, வைஷ்ணவர்களுடையதாய் வாமந க்ஷேத்ரமாயிருக்கிற தேசத்திலென்னவுமாம். வாமநாவதார ப்ரஸங்கத்துக்கு ப்ரயோஜநம் (விபவ லாவண்யம் பூர்ணம்) என்கிறதுக்குடலாக விபவாந்வயத்தை யுணர்த்துகையும், “குறியவன்குடி குறுங்குடி” என்னுமர்த்தத்தைத் தெரிவிக்கையும், ஆகவிப்படி யிருந்துள்ள திருக்குறுங்குடியில், “நிறைந்த சோதிவெள்ளஞ் சூழ்ந்த நீண்ட பொன்மெனியோடும் நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான்” என்றும், “நீலமேனியும் நான்கு தோளும் என்னெஞ்சம் நிறைந்தனவே” என்றும் சொல்லுகிறபடியே இவர் திருவுள்ளத்திலே வேறொன்றுக் கிடமறும்படி ப்ரகாசிக்கிற காலமேக நிபச்யாமமான விக்ரஹத்தினுடைய “செல்கின்ற தென்னெஞ்சம்” என்னும்படி மேன்மேலு மநுபவ ருசி ஜநகமாய் “ரூபவாந் ஸுபக: ஸ்ரீமாந்”, “ரூப ஸம்ஹநநம் லக்ஷ்மீம்” என்று விபவத்தில் ப்ரகாசிக்குமதாகச் சொன்ன ஸமுதாய சோபையான லாவண்யம், “நிறைந்த சோதி வெள்ளஞ் சூழ்ந்த” என்கையாலே பூர்ணமாயிருக்குமென்கை.

**விளக்கம்** – (வைஷ்ணவ வாமநத்தில்) - திருக்குறுங்குடி என்று கூறாமல் “வைஷ்ணவ வாமநத்தில்” என்று ஏன் கூறினார் என்றால் ஒரே கருத்து கொண்டவை என்பதால் ஆகும். வாமனனாக வந்து தனக்குச் சேரவேண்டியதை பெறுவதற்காக இரந்தது போன்று, “நாமும் நம்முடைய இராமாநுசனை நமது உடைமையாகக் கொண்டுள்ளோம்” என்ற காரணத்தால் ஸ்ரீவைஷ்ணவநம்பி என்ற திருநாமம் கொண்டு வாமன அவதார அம்சமாகப் புராணங்களில் கூறப்பட்டவனாக உளள நம்பியைக் கொண்ட திவ்யதேசம் என்பதைக் கூறுவதற்காக ஆகும். அல்லது திருவாய்மொழி (5-5-11) – அறியக்கற்று வல்லார் வைட்டணவர் - என்பதற்கு ஏற்ப இந்தத் திவ்யதேசத்தைக் குறித்த இந்த திருவாய்மொழியைக் கற்பவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்று கூறுவதால் ஸ்ரீவைஷ்ணவர்களுடையதாக உள்ள வாமன க்ஷேத்ரம் என்றுள்ள திவ்யதேசம் என்பதால் இவ்விதம் கூறினார் எனலாம். வாமன அவதாரம் குறித்து இங்கு கூறியதன் பலன் என்ன என்றால், (விபவ லாவண்யம் பூர்ணம்) என்பதற்கு ஏற்ப விபவத்தின் தொடர்பை உணர்த்துதல் மற்றும் வாமனனுடைய இடமானது குறுங்குடி என்று உணர்த்துதல் ஆகியவையே ஆகும். இப்படிப்பட்டதாக உள்ள திருக்குறுங்குடியில், (நிறைந்த நீலமேனியின்) – திருவாய்மொழி (5-5-7) - நிறைந்த சோதிவெள்ளஞ் சூழ்ந்த நீண்ட பொன்மெனியோடும் நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான் - என்றும்,

திருவாய்மொழி (5-5-6) - நீலமேனியும் நான்கு தோளும் என்னெஞ்சம் நிறைந்தனவே – என்றும் கூறுவதற்கு ஏற்ப இவருடைய திருவுள்ளத்தில் வேறு எதற்கும் இடம் இல்லாதபடியாக ப்ரகாசிக்கின்ற மழைமேகம் போன்று நிறம் கொண்டதான திருமேனியினுடைய, (ருசி ஜநகம்) – திருவாய்மொழி (5-5-1) – செல்கின்றது என்னெஞ்சம் - என்பதற்கு ஏறப மேன்மேலும் அனுபவ ருசியை ஏற்படுத்துவதான, (விபவ லாவண்யம்) - இராமாயணம் ஸுந்தரகாண்டம் (34-30) - ரூபவாந் ஸுபக: ஸ்ரீமாந் - அழகான ரூபம் கொண்டவன், ப்ரகாசம் பொருந்தியவன் என்றும், ஆரண்யகாண்டம் (1-13) - ரூப ஸம்ஹநநம் லக்ஷ்மீம் - மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்த ரூபம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அவதாரங்களில் வெளிப்படுவதாகக் கூறப்படுகின்ற அழகுக்கூட்டம் என்பதான லாவண்யம், (பூர்ணம்) - திருவாய்மொழி (5-5-7) - நிறைந்த சோதி வெள்ளஞ் சூழ்ந்த – என்பதால் பரிபூர்ணமாக உள்ளது என்று கருத்து.

163. ருசிவிவசர்க்குப் பாதமே சரணாக்கு மௌதார்யம் வானமாமலையிலே கொழுந்து விடும்.

**அவதாரிகை** - இப்படி பரத்வாதிகளுக்கு அஸாதாரணமான வோரோ குணங்கள் ப்ராதாந்யேந ப்ரகாசிக்கும் ஸ்தலங்களை அருளிச்செய்த வநந்தரம், மற்றுமுண்டான குணங்களிலோரொன்று ப்ராதாந்யேந ப்ரகாசிக்கும் ஸ்தலங்களை, சிரீவரமங்கை முதலாகத் திருப்பேரெல்லையாகத் திருவாய்மொழியடைவிலே யருளிச்செய்கிறார் மேல் (ருசிவிவசர்க்கு) இத்யாதி.

**விளக்கம்** – இப்படியாகப் பரத்வம் போன்ற நிலைகளில் மட்டுமே காணப்படக் கூடிய குணங்கள், முதன்மையாக வெளிப்படுகின்ற விளங்குகின்ற திவ்யதேசங்களை அருளிச்செய்தார். அடுத்து மற்ற குணங்கள் முதன்மை பெற்று விளங்குவதான திவ்ய தேசங்களை சிரீவரமங்கை தொடக்கமாக, திருப்பேர் என்பது முடிய உள்ளவற்றை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது கீழ்ச்சொன்ன லாவண்யத்தாலே ஒருவராலும் நிவர்த்திப்பிக்க வொண்ணாதாபடி பிறந்த ருசியாலே பரவசராய் அநந்யகதிகளானவர்களுக்கு, "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்னும்படி திருவடிகளே

உபாயமாகக் கொடுக்கும் "கார்முகில்வண்ணன்" என்கிற ஔதார்யம்குணம் "சிரீவர மங்கலத்தவர் கைதொழவிறை வானமாமலை" என்று சிரீவரமங்கயிலெழுந்தருளியிருக்கிற வானமாமலைபக்கலிலே "வந்தருளி யென்னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்தே" என்கிறபடியே தானே வந்து இடங்கொண்டு தன்னை யுபகரிக்கும்படி கொழுந்துவிட்டு வளருமென்கை.

**விளக்கம்** – (ருசி இவர்க்கு) - மேலே கூறப்பட்ட லாவண்யம் போன்றவை காரணமாக யாராலும் தடுக்க இயலாதபடி பிறந்த ருசியின் விளைவாக, மிகுந்த பரவசம் அடைந்து, வேறு கதி அற்றவர்களுக்கு. (பாதமே பரண் ஆகும்) – திருவாய்மொழி (5-7-10) - ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்பதற்கு ஏற்ப தனது திருவடிகளையே உபாயமாகக் கொடுக்கின்ற, (ஔதார்யம்) – திருவாய்மொழி (5-7-3) – கார்முகில் வண்ணன் - என்பதான தாராளகுணம், (வானமாமலையிலே கொழுந்துவிடும்) - திருவாய்மொழி (5-7-6) - சிரீவர மங்கலத்தவர் கைதொழவிறை வானமாமலை – என்று கூறுவதற்கு ஏற்ப சிரீவரமங்கையில் எழுந்தருளியுள்ள வானமாமலையிடம், திருவாய்மொழி (5-7-7) - வந்தருளி யென்னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்தே – என்பதற்கு ஏற்ப தானே வந்து நின்று, தன்னை அளிக்கும்படியாகக் கொழுந்துவிட்டு நிற்கும் என்று கருத்து.

164. களைகணற்றாரை யுருக்கும் மாதுர்யம் குடமூக்கிலே ப்ரவஹிக்கும்.

**வ்யாக்யானம்** - (களைகணற்றாரை) இத்யாதி. அதாவது "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்" என்று ரக்ஷகாந்தர ப்ரதிபத்தி நிவ்ருத்தி பிறந்தாரை "நீராயலைந்து கரைய வுருக்குகின்ற" என்று சிதிலராம்படி பண்ணுகிற ஆராவமுதான மாதுர்யம்; குடமூக்கு என்கிற கும்பகோணத்திலே மேன்மேலுமாராமல் புஜிக்கும்படி பெருகா நிற்குமென்கை.

**விளக்கம்** - (களைகணற்றாரை உருக்கும் மாதுர்யம்) - திருவாய்மொழி (5-8-8) – களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன் - என்பதற்கு ஏற்ப நம்மைக் காக்கவல்லவர்கள் வேறு யாரும் இல்லை என்ற எண்ணம் கொண்டவர்களை, திருவாய்மொழி (5-8-1) – நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற - என்பதற்கு ஏற்ப

உருக்குலைந்து போகும்படியாகச் செய்கின்றதும், எத்தனை அனுபவித்தாலும் திகட்டாத அமுதமாக உள்ளதும் ஆகிய இனிமை, (குடமூக்கிலே ப்ரவஹிக்கும்) – இரண்டாம் திருவந்தாதி (97) - குடமூக்கு – என்பதற்கு ஏற்ப கும்பகோணத்தில் மேலும் மேலும் மனநிறைவு அடையாமல் அனுபவிக்கும்படியாக உள்ளது என்று கருத்து.

165. மெலிவிலும் சேமங்கொள்விக்கும் க்ருபை தென்னகரிலே நித்யம்.

**வ்யாக்யானம்** - (மெலிவிலும்) இத்யாதி. அதாவது கீழ்ச்சொன்ன நிரதிசய போக்யமான விஷயத்தை சீக்ரமாகக் கிட்டியநுபவிக்கப் பெறாமையாலே "வைகலும் வினையேன் மெலிய" என்று நாள்தோறும் மெலியுமளவிலும், "அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்று அவனே ரக்ஷகனென்று அத்யவஸித்திருக்கும்படி பண்ணும் "பெருமானது தொல்லருளே" என்கிற க்ருபை; "திருவல்லவாழ் சேமங்கொள் தென்னகரிலே" தொன்மை பழமையாகையாலே, நித்யமாயிருக்கு மென்கை.

**விளக்கம்** – (மெலிவிலும்) - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான எல்லையற்ற இனிமை கொண்ட விஷயத்தை மிகவும் விரைவாக அடையப் பெற்று அனுபவிக்க இயலாத காரணத்தால் திருவாய்மொழி (5-9-1) - வைகலும் வினையேன் மெலிய - என்பதற்கு ஏற்ப அன்றாடம் மெலிந்தபடி உள்ளபோது. (சேமம் கொள்விக்கும்) - திருவாய்மொழி (5-9-11) - அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் – என்பதற்கு ஏற்ப அவனே நம்மைக் காக்கவல்லவன் ஆவான் என்று உறுதியுடன் இருக்கும்படியாகச் செய்கின்ற. (க்ருபை) – திருவாய்மொழி (5-9-9) - பெருமானது தொல்லருளே – என்ற அருளானது, (தென்னகரிலே நித்யம்) - திருவாய்மொழி (5-9-11) - திருவல்லவாழ் சேமங்கொள் தென்னகரிலே - என்பதற்கு ஏற்ப திருவல்லவாழ் திவ்யதேசத்தில் எப்போதும் நிலைத்து நிற்கும்.

166. வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷண ஸ்தைர்யம் பம்போத்தர தேசஸ்தம்.

**வ்யாக்யானம்** - (வ்யவஸாயஜ்ஞர்) இத்யாதி. அதாவது, "ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா" என்று சொல்லப்பட்ட பிராட்டியைப்போலே "ஏறுசேவகனார்க்கு என்னையு முளளென்மின்கள்" என்று ஆர்த்த ரக்ஷணத்தில் தன்னுடைய வ்யவஸாயத்தை யதாவாக அறிந்திருக்குமவர்களுடைய ரக்ஷணத்தில், "ந த்யஜேயம்", "ஏதத் வ்ரதம் மம"


Email:sridharan_book@yahoo.co.in

என்கிறபடியே அநுகூலராலும் சலிப்பிக்கவொண்ணாதபடியிருக்கும் அவனுடைய ஸ்தைர்யகுணம், "தேறுநீர்ப் பம்பை வடபாலைத் திருவண்வண்டூர்" என்று பம்பையாகிற வாற்றுக்கு வடகரையான திருவண்வண்டூரில் நிலைபெற்று நிற்குமென்கை.

**விளக்கம்** – [வ்யவஸாஜ்ஞர் என்றால் பகவானுடைய திருவுள்ளத்தை எப்போதும் உள்ளது உள்ளபடி அறிந்தவர்கள் ஆவர்] (வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷண) – ஸுந்தரகாண்டம் (16-4) - ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா – இராமனுடைய திருவுள்ளத்தை நன்றாக அறிந்த சீதை - என்பதற்குஏற்ப உள்ள சீதையைப் போன்று, திருவாய்மொழி (6-1-10) – ஏறுசேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்கள் – என்பதற்கு ஏற்ப துன்பம் அடைந்துள்ளவர்களைக் காப்பாற்றுவதில் தனக்குள்ள உறுதியை நன்றாக அறிந்தவர்களைக் காப்பதில், (ஸ்தைர்யம்) - யுத்தகாண்டம் (18-3) – ந த்யஜேயம் - இவனை நான் கைவிடமாட்டேன் - என்றும், யுத்தகாண்டம் (18-33) - ஏதத் வ்ரதம் மம - இது என்னுடைய வ்ரதம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவனுக்கு வேண்டப்பட்டவர்களாக இருந்தாலும் அந்த எண்ணத்தை விட்டு அவனை அசைக்க இயலாதபடி உள்ளதான அவனுடைய குணமானது, (பம்போத்தர தேசஸ்தம்) – திருவாய்மொழி (6-11-10) - தேறுநீர்ப் பம்பை வடபாலைத் திருவண்வண்டூர் - என்பதற்கு ஏற்ப பம்பை நதியின் வடக்குக்கரையில் அமைந்துள்ள திருவண்வண்டூரில் நிலையாக இருக்கும்.

167. விளம்ப விரோதமழிக்கும் விருத்த கடநா ஸாமர்த்த்யம் நன்னகரிலே விஸ்தீர்ணம்.

**வ்யாக்யானம்** - (விளம்ப விரோதம்) இத்யாதி. அதாவது க்ரம ப்ராப்தி பற்றாமல் படுகிற த்வரைக்கீடாகக் கடுக வந்து முகம் காட்டாமல் விளம்பித்து வருகையாலே "போகு நம்பீ", "கழகமேறேல் நம்பீ" என்னும்படி ப்ரணய ரோஷத்தால் பிறந்த விரோதத்தை "அழித்தாயுன் திருவடியால்" என்று அழித்துப் போகட்ட - விருத்தங்களை கடிப்பிக்கவல்ல ஸாமர்த்த்யம் "நல்குரவும் செல்வும்" என்று தொடங்கி தன்னில் சேராதவற்றைச் சேர்த்துகொண்டு நிற்கிற விருத்த விபூதி யோகத்தை ப்ரகாசிப்பித்த "திருவிண்ணகர் நன்னகரே" என்று நன்னகரான திருவிண்ணகரிலே "பல்வகையும் பரந்த" என்கிறபடியே பரந்திருக்கு மென்கை.

**விளக்கம்** – (விளம்ப விரோதம்) - முறையாக நின்று அவனை அடைவோம் என்று காத்திருத்தலைப் பொறுக்காமல், தான் படுகிற வேகத்துக்கு ஈடாக அவன் விரைந்து வந்து திருமுகம் காண்பிக்காமல், காலம் தாழ்த்தி வருவதால், திருவாய்மொழி (6-2-1) – போகு நம்பீ - என்றும், திருவாய்மொழி (6-2-6) – கழகமேறேல் நம்பீ – என்றும் கூறுவதற்கு ஏற்ப ப்ரணய கோபம் காரணமாக ஏற்பட்ட விரோதத்தை. (அழிக்கும் விருத்த கடநா ஸாமர்த்யம்) - திருவாய்மொழி (6-2-9) – அழித்தாய் உன் திருவடியால் - என்பதற்கு ஏற்ப அழித்து விலக்கி, மாறுபாடுகளை உண்டாக்கவல்ல சாமர்த்யமானது. (நன்னகரிலே விஸ்தீர்ணம்) – திருவாய்மொழி (6-3-1) – நல்குரவும் செல்வும் - என்று தொடங்கி, தன்னில் சேராமல் உள்ள அனைத்தையும் சேர்ந்துக் கொண்டு நிற்கின்ற விபூதியோகத்தை வெளிப்படுத்துகின்ற, திருவாய்மொழி (6-3-2) – திருவிண்ணகர் நன்னகரே - என்பதற்கு ஏற்ப நன்னகரான திருவிண்ணகரில், திருவாய்மொழி (6-3-1) – பல்வகையும் பரந்த - என்பதற்கு ஏற்ப நன்னகரான திருவிண்ணகரில், பரந்து காணப்படும்.

168. கடிநகடக விகடநா பாந்தவம் அவ்வூரிலே த்விகுணம்.

**வ்யாக்யானம்** - (கடிதகடகேத்யாதி) அதாவது "பிரானிருந்தமை காட்டினீர்" என்கிற கடகராலே தன்பக்கல் கடிதரானார்க்கும் கடகரானார்க்கும் "இவளை நீரினி யன்னைமீ ருமக்காசை யில்லை விடுமினோ" என்னும்படி விகடநையைப் பண்ணுவதான "தேவபிரானையே தந்தை தாய்" என்கிறவனுடைய பாந்தவம்; "அவ்வூர்த் திருநாமங் கேட்பது" என்று தோழியானவள் திருத்துலைவில்லி மங்கலமென்று தான் சொல்லும்போது, பெண்பிள்ளை சொன்னாற் போலினிதா யிராமையாலே அவ்வூர் என்று சொல்லப்பட்ட தேசத்திலே தேவபிரானு மரவிந்தலோசனனுமாய் நின்றிருந்துறையு மிரட்டைத் திருப்பதியாகையாலே யிரட்டித்திருக்கு மென்கை. (விகடநா பாந்தவம்) என்றது விகடநாகர பாந்தவ மென்றபடி.

**விளக்கம்** – (கடித கடக) – திருவாய்மொழி (6-5-5) – பிரான் இருந்தமை காட்டினீர் - என்பதற்கு ஏற்ப சேர்ப்பவர்களால் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டவர்களுக்கும், அப்படியாக சேர்ப்பவர்களுக்கும், (விகடநா பாந்தவம்) - திருவாய்மொழி (6-5-1) – இவளை நீர் இனி அன்னைமீர் உமக்காசை யில்லை விடுமினோ - என்பதற்கு ஏற்ப பொருந்தாமையை ஏற்படுத்துவதான திருவாய்மொழி (6-5-11) - தேவபிரானையே தந்தை

தாய் – என்பதற்கு ஏற்ப உள்ள அவனுடைய உறவு என்ற தன்மையானது (அவ்வூரிலே) - திருவாய்மொழி (6-5-10) - அவ்வூர் - என்பதற்கு ஏற்ப தோழியானவள் “திருத்துலைவில்லி மங்கலம்” என்று கூறும்போது தனது தலைவி உரைத்தது போன்று இனிமையாக இல்லாத காரணத்தால் அந்தத் தோழி “அவ்வூர்” என்றே உரைத்தாள்; இப்படிப்பட்ட திவ்யதேசத்திலே தேவப்பிரான் மற்றும் அரவிந்தலோசனன் என்று இரண்டாக நிற்பதற்கு இரண்டு மடங்காக இருக்கும். (விகடநா பாந்தவம்) - பொருந்தாமையை ஏற்படுத்துகின்ற.

169. கைம்முதலிழந்தாருண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகுமூரிலே ஸம்ருத்தம்.

**வ்யாக்யானம்** - (கைம்முதலிழந்தார்) இத்யாதி. அதாவது “ஏலக்குழலியிழந்தது சங்கே” என்று தொடங்கி “கற்புடையாட்டி யிழந்தது கட்டே” என்று ப்ராப்யாலாப நிபந்தனமான ஆர்த்தியால் வந்த பாரவச்யத்தாலே ப்ராப்ய ப்ராபகாபாஸங்களெல்லாம் தன்னடையே விட்டுக்கழிகையாலே கைம்முதலற்றவர்கள், “உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்” என்று தாரக போஷக போக்யங்களெல்லாம் தானேயாக புஜிக்கும் “வைத்தமாநிதி” என்று ஆபத்ரக்ஷகமாகச் சேமித்து வைத்த மஹாநிதி போலே யிருக்கிறவனுடைய ஆபத்ஸகத்வம்; “திண்ணமென்னிளமான் புகுமூர் திருக்கோளூரே” என்று ப்ராப்ய ருசி பிறந்தார்க்கு ப்ரவேஷ்டவ்யமா யிருக்கும் திருக்கோளூரிலே, “செல்வம் மல்கியவன் கிடந்த” என்று ரக்ஷ்ய வர்க்கத்தினுடைய ரக்ஷணமே தனக்கு நிரதிசய ஸம்பத்தாக நினைத்து வந்து கிடக்கையாலே ஸம்ருத்த மென்கை.

**விளக்கம்** – (கைம்முதல் இழந்தார்) – திருவாய்மொழி (6-6-1) - ஏலக்குழலியிழந்தது சங்கே – என்று தொடங்கி, திருவாய்மொழி (6-6-10) - கற்புடையாட்டி யிழந்தது கட்டே – என்பது முடிய கூறுவதற்கு ஏற்ப, அடைய வேண்டிய தலைவனை அடைய இயலாமல் போனதன் காரணமாக எழுந்த துன்பத்தால் உண்டாகிய “அவனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல்” எனபதால் தகாத பேறுகளும் அவற்றுக்கான வழிகளும் தாங்களே அகன்றுவிடுவதால், வேறு உபாயம் அற்றவர்கள். (உண்ணும்) - திருவாய்மொழி (5-7-11) – வைத்தமாநிதி - என்பதற்கு ஏற்ப ஆபத்துக்காலத்தில் உதவும் பொருட்டு சேமித்து வைத்த நிதி போன்று உள்ளவனுடைய, ஆபத்துக்காலத்தில் உதவுகின்ற குணமானது. (புகும் ஊரிலே) – திருவாய்மொழி (6-7-1) - திண்ணமென்னிளமான் புகுமூர் திருக்கோளூரே – என்பதற்கு

ஏற்ப அடையவேண்டிய பேற்றில் ஏற்பட்டவர்கள் சென்று சேர்வதற்கு ஏற்றபடி உள்ளதான திருக்கோளூரில். (ஸம்ருத்தம்) – திருவாய்மொழி (6-7-4) - செல்வம் மல்கியவன் கிடந்த - என்பதற்கு ஏற்ப காப்பாற்றப்பட வேண்டியதான பொருள்களைக் காப்பாற்றுதல் என்பதே தனக்கு எல்லையற்ற ஸம்பத்தாகும் என்று எண்ணி வந்து கிடப்பதால், நிறைந்திருக்கும் என்று கருத்து.

170. சென்று சேர்வார்க்கு உசாத்துணை யறுக்கும் ஸௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்.

**வ்யாக்யானம்** - (சென்று சேர்வார்க்கு) இத்யாதி. அதாவது, “தென்திருப்பேரெயில் சேர்வன் சென்றே” என்று க்ரமப்ராப்தி பற்றாத ப்ரேமாதிசயத்தாலே ஹிதபரர் வார்த்தை கேளாதே சென்று ப்ரவேசிப்பதென்னும்படியானவர்களுக்கு, “என்னெஞ்சினாரு மங்கே யொழிந்தார் உழந்தினி யாரைக்கொண்டென்னுசாகோ” என்னும்படி உசாத் துணையாணா நெஞ்சை யபஹரிக்கும் “செங்கனிவாயின் திறத்ததாயும்” இத்யாதியால் சொன்னவனுடைய ஸௌந்தர்யம்; “தென்திருப்பேரெயில் மாநகர்” என்று மஹாநகரமான தென்திருப்பேரெயிலே, “எழுந்த நல்வேதத்தொலி நின்றோங்கு” என்கிறபடியே அவ்விஷயத்தை யநுபவித்த ஹர்ஷ ப்ரகர்ஷத்தால் அங்குள்ளார் பாடுகிற ஸாம கோஷத்திலே தெரியுமென்றபடி.

**விளக்கம்** – (சென்று சேர்வார்க்கு) – திருவாய்மொழி (7-3-8) - தென்திருப்பேரெயில் சேர்வன் சென்றே - என்பதற்கு ஏற்ப முறையாகச் சென்று அடையும்வரை பொறுக்க இயலாத ப்ரேமையின் மிகுதி காரணமாக, தனக்கு நன்மை செய்பவர்களுடைய சொற்களைக் கேட்காமல் சென்று சேர்வது என்று முடிவு செய்தவர்களுக்கு. (உசாத்துணை அறுக்கும்) - திருவாய்மொழி (7-3-4) – என்னெஞ்சினாரு மங்கே யொழிந்தார் உழந்தினி யாரைக்கொண்டென்னுசாகோ - என்பதற்கு ஏற்ப உசாத்துணையான நெஞ்சத்தை அபகரிக்கும் விதத்தில் உள்ள. (ஸௌந்தர்யம்) - திருவாய்மொழி (7-3-3) - செங்கனிவாயின் திறத்ததாயும் - என்பது போன்றவற்றால் கூறப்பட்டவனுடைய அழகு. (மாநகரிலே கோஷிக்கும்) – திருவாய்மொழி (7-3-9) – தென்திருப்பேரெயில் மாநகர் - என்பதற்கு ஏற்ப உள்ளதான பெரிய நகரமாகிய தென் திருப்பேரையில், திருவாய்மொழி (7-3-4) – எழுந்த நல்வேதத்தொலி நின்றோங்கு – என்பதற்கு ஏற்ப அவனை அனுபவித்த


Email:sridharan_book@yahoo.co.in

மகிழ்ச்சிப் பெருக்கு காரணமாக அங்கு உள்ளவர்கள் பாடுகிற ஸாமவேத கானத்தில் விளங்கும்.

171. ப்ரவணசித்தம் பரத்வ விமுகமாக்கும் ஆநந்த வ்ருத்தி நீணகரிலே.

**வ்யாக்யானம்** - (ப்ரவண சித்தம்) இத்யாதி. அதாவது “தீவினை யுள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் திருவாறன்விளை யதனை மேவி வலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னுமென் சிந்தனை” என்று அவித்யாதிகள் ப்ரத்யக் வஸ்துவான வாத்மாவில் பற்றறப் போய்த் தெளிவை விளைப்பதான பரமபதத்தை ப்ராபிக்கை வந்து கிட்டினாலும், என்னெஞ்சானது, திருவாறன்விளையாகிற அத்தேசத்தைக் கிட்டி அநுகூல வ்ருத்தி பண்ணிக் கையாலே தொழக்கூடுமோவென்னா நிற்கும் என்று தன்பக்கல் ப்ரவணரானவர்கள் சித்தத்தை, “சிந்தை மற்றொன்றின் திறத்தல்லாத் தன்மை” என்று பரமபதத்தின் பேர் சொல்லுகையும் அஸஹ்யமாம்படி பரத்வத்தில் விமுகமாகப் பண்ணும் “இன்பம் பயக்க வெழில் மலர் மாதரும் தானு மிக்கேழுலகை யின்பம் பயக்க வினிதுடன் வீற்றிருந்து” என்கிற ஆநந்த வ்ருத்தி, “திருவாறன்வளையென்னும் நீணகரமதுவே” என்று நீணகரான திருவாறன்விளையில் வ்யக்தமென்றபடி.

**விளக்கம்** – (ப்ரவண சித்தம்) திருவாய்மொழி (7-10-9) - தீவினை யுள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் திருவாறன்விளை யதனை மேவி வலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னுமென் சிந்தனை – என்பதற்கு ஏற்ப அவித்யை முதலான பலவும் தனக்குத்தானே ப்ரகாசிக்கவல்ல ஆத்மவஸ்துவிலிருந்து தங்கள் பற்றுகள் அனைத்தையும் அறுத்துக்கொண்டு சென்றதால், தெளிவை ஏற்படுத்துவதான பரமபதத்தை அடைதல் என்பது என்னை வந்து சேர்ந்தாலும், எனது மனமானது திருவாறன்விளை என்பதான அந்த திவ்யதேசத்தை அடைந்து நின்று, அவனுக்கு ஏற்ற செயல்கள் செய்தபடி நின்று, கைகளைக் குவித்து அவனைத் தொழுதபடி நிற்க இயலுமோ என்று எண்ணியபடியே சிலர் இருப்பர். இப்படியாக தன்னிடம் ப்ரேமை கொண்டவர்களுடைய சித்தத்தை. (பரத்வ விமுகம் ஆக்கும்) – திருவாய்மொழி (7-10-10) – சிந்தை மற்றொன்றின் திறத்தல்லாத் தன்மை - என்பதற்கு ஏற்ப “பரமபதம்” என்று உச்சரிப்பதையும் எண்ணாதபடி, அந்த பரத்வத்தில் விருப்பம் இல்லாத நிலையை

உண்டாக்குகின்ற, (ஆநந்தவ்ருத்தி) – திருவாய்மொழி (7-10-1) - இன்பம் பயக்க வெழில் மலர் மாதரும் தானு மிக்கேழுலகை யின்பம் பயக்க வினிதுடன் வீற்றிருந்து - என்பதற்கு ஏற்ப உள்ளதான ஆனந்தத்தில் வளர்ச்சி என்பது, (நீள் நகரிலே) – திருவாய்மொழி (7-10-6) – திருவாறன்விளை என்னும் நீணகரமதுவே - என்பதற்கு ஏற்ப உள்ளதான நீண்நகரமான திருவாறன்விளையில் வெளிப்படும்.

172. ஸாதரரைப் பரிசழிக்கும் சேஷ்டிதாச்சர்யம் குளத்தே கொடிவிடும்.

**வ்யாக்யானம்** – (ஸாதரரை) இத்யாதி. அதாவது “ஆழிவலவனை யாதரித்து – கூடச் சென்றேன்” என்று தன்பக்கல் ஆதரத்தோடே கூடியிருப்பாரை, “பல்வளையார் முன் பரிசழிந்தேன்” என்னும்படி ஸ்த்ரீத்வ ப்ரகாரமான லஜ்ஜாதியை யழிக்கும் “மாயக்கூத்தன்” என்கிற சேஷ்டிதாச்சர்யம்; “மாடக்கொடி மதிள் தென்குளத்தை” என்கிற திருக்குளத்தையிலே இதுக்கென்னக் கட்டின மாடக்கொடி முகேந ப்ரகாசிக்குமென்கை.

**விளக்கம்** – (ஸாதரரை) – திருவாய்மொழி (8-2-4) - ஆழிவலவனை யாதரித்து கூடச் சென்றேன் - என்பதற்கு ஏற்ப தன்னிடம் மிகுந்த ஈடுபாடு, ப்ரேமை போன்ற அனைத்துடனும் கூடியபடி உள்ளவர்களுடைய. (பரிசு அழிக்கும்) திருவாய்மொழி (8-2-4) – பல்வளையார் முன் பரிசழிந்தேன் - என்பதற்கு ஏற்ப பெண்மைக்கு இலக்கணமாகத் திகழ்கின்ற நாணத்தை அழிப்பதான, (சேஷ்டிதாச்சர்யம்) – திருவாய்மொழி (8-2-4) - மாயக்கூத்தன் - என்பதற்கு ஏற்ப லீலைகளுடைய ஆச்சர்யம் என்பது, (குளத்தே கொடிவிடும்) திருவாய்மொழி (8-2-4) - மாடக்கொடி மதிள் தென்குளத்தை - என்பதற்கு ஏற்ப திருக்குடந்தையில், இதற்காகவே கட்டப்பட்ட மாடக்கொடி மூலம் வெளிப்படும்.

173. ச்ரமமனஞ் சூழும் ஸௌகுமார்ய ப்ரகாசம் ஆய்ச்சேரியிலே.

**வ்யாக்யானம்** – அதாவது, “பணியாவமரர்” இத்யாதிப்படியே பரம ப்ரேம யுக்தரான நித்யஸூரிகள் பரிசர்யை பண்ண பரமபதத்திலே யிருக்குமவன் நிரதிசய ஸுகுமாரமான திருமேனியோடே ஸம்ஸாரிகளுடைய துக்கத்தைப் போக்குகைக்காகத் தன் வாசியறியாத விந்தலோகத்தில் வந்தவதரித்து, அடியாரல்லல் தவிர்ப்பது, படிதான் நீண்டு தாவுவதாகையால் வந்த ச்ரமத்தை யநுஸந்தித்த மநஸ்ஸானது வ்யாகுலிதமாய்

ப்ரமிக்கும்படியான, "ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்" என்று பூவேந்தினாற்போலே யிருக்கும் திருவாழி திருச்சங்கை யேந்துகிறதும் மலை சுமந்தாற்போலே வன்பாரமாகத் தோற்றும்படி யிருக்கிறவன் ஸௌகுமார்ய ப்ரகாசம்; உடைய நங்கையார் பிறந்தகமாகையாலே ஆழ்வாருக்கு ஆய்ச்சேரியா யிருப்பதாய், "உருவார் சக்கரம் சங்கு சுமந்திங்கும் மோரொடொருபா டுழல்வா னோரடியானு முளனென்று வண்பரிசாரத் திருந்தவென் திருவாழ் மார்வற் கென்திறஞ் சொல்லார்" என்ற திருப்பரிசாரத்திலே காணப்படு மென்கை.

**விளக்கம்** – (ச்ரம) - திருவாய்மொழி (8-2-6) – பணியாவமரர் - என்பதற்கு ஏற்ப மிகுந்த ப்ரேமை நிறைந்தவர்களாகிய நித்யஸூரிகளால் உபசரிக்கப்பட்டு பரமபதத்தில் உள்ள அவன், மிகுந்த மென்மையான தனது திருமேனியுடன் இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுடைய துன்பங்கள் அனைத்தையும் நீக்குவதற்காக, தனது மேன்மை அறியாத இந்த லோகத்தில் வந்து அவதரித்து, திருவாய்மொழி (8-3-5) – அடியார் அல்லல் தவிர்த்த - என்பதற்கு ஏற்ப அவர்கள் துன்பத்தை நீக்கி, திருவாய்மொழி (8-3-6) - இப்படி தான் நீண்டு தாவி - என்பதற்கு ஏற்ப உயர்ந்து வளர்ந்து அனைத்தையும் அளந்த காரணத்தால் வந்த சிரமத்தை. (மனம்) - எண்ணுகின்ற மனமானது. (சூழும்) – மிகுந்த துன்பத்தை அடைந்து மயங்கும்படியாக. (ஸௌகுமார்ய ப்ரகாசம்) - திருவாய்மொழி (8-3-3) - ஆழியும் சங்கும் சுமப்பார்தாம் - என்பதற்கு ஏற்ப மலரைத் திருக்கரத்தில் ஏந்தியது போன்றுள்ள சக்கரத்தையும் சங்கையும் ஏந்தியபடி நிற்பதையே மிகவும் கனமான மலையைச் சுமப்பது போன்று நிற்கின்ற அவனுடைய திருமேனியின் மென்மை வெளிப்படுவது. (ஆய்ச்சேரியிலே) - நம்மாழ்வாருடைய தாயார் பிறந்த இடம் என்பதால் நம்மாழ்வாருக்கு தாயின் இருப்பிடமாக உள்ளதாகிய, திருவாய்மொழி (8-3-7) – உருவார் சக்கரம் சங்கு சுமந்திங்கும் மோரொடொருபா டுழல்வா னோரடியானு முளனென்று வண்பரிசாரத் திருந்தவென் திருவாழ் மார்வற் கென்திறஞ் சொல்லா - என்பதான திருவண்பரிசாரம் என்ற திவ்யதேசத்தில் ஆகும்.

174. மஹாமதிகள் அச்சங் கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்றாற்றிலே கொழிக்கும்.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஸம்ஸ்ப்ருசந்நாஸநம் சௌரே: விதுரஸ்ஸ மஹாமதி:" என்கிறபடியே ஸௌகுமார்யாநுஸந்தாநத்தாலே அவனுக்கெங்கே யென்ன தீங்கு

வருகிறதோவென்று அஸ்தாநே பயசங்கை பண்ணும் மஹாமதிகள், "எங்கள் செல்சார்வு" என்று தங்களுக்கு நிர்ப்பய ஸ்தாநமான புகலாக நினைத்து பயங்கெட்டு "திருச்சிற்றாற்றங்கரையானை முக்கணம்மானை நான்முகனை யமர்ந்தேன்" என்று ப்ரஹ்மருத்ரர்களுடைய ஸத்தாதிகள் ஸ்வாதீனமாம்படி இவர்களை ப்ரகாரமாகவுடைய பெருமையை யுடையனாய் வைத்து ஸுலபனாய் வந்து நிற்கிறவனை, "அவனுக்கென் வருகிறதோ" என்று பட்டமறுகுதல் தீர்ந்து கிட்டி யநுபவிக்கப் பெற்றெனென்று ஹ்ருஷ்டராம்படியான "வார்கடாவருவி" இத்யாதியால் சொன்ன குவலயாபீட சாணூர முஷ்டிக கம்ஸாதி நிரஸந ப்ரகடித சௌர்யாதிகள் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறென்கிற திருப்பதியிலே, ஆற்றுக்குள்ளில் மணிமுக்தாதிகள் கரையிலே கொழித்துத் தோற்றுமாபோலே ப்ரகாசிக்குமென்கை, (சௌர்யாதிகள்) என்கிறவிடத்தில் ஆதி சப்தத்தாலே வீர்ய பராக்ரமங்களைச் சொல்லுகிறது. ஆறென்கிற ஸமாதியாலே கொழிக்குமென்றது.

**விளக்கம்** – (மஹாமதிகள்) – ஸம்ஸ்ப்ருசந்நாஸநம் சௌரே: விதுரஸ்ஸ மஹாமதி: - க்ருஷ்ணன் சயனிக்க வேண்டிய படுக்கையை விதுரர் நன்றாகத் தடவி ஆராய்ந்தார் - என்பதற்கு ஏற்ப அவனுடைய திருமேனியின் மென்மையை எப்போதும் எண்ணியபடி உள்ளதால், அவனுக்கு எந்த இடத்தில் எதன் மூலம் என்ன தீங்கு ஏற்படுமோ என்று அச்சம் கொள்ளத் தேவையற்ற இடத்தில் கூட அச்சம் கொள்கின்ற உயர்ந்த புத்தி கொண்டவர்கள். (அச்சம் கெட்டு) - திருவாய்மொழி (8-4-1) – எங்கள் செல்சார்வு - என்று தங்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லாத இடமாக, தாங்கள் புகலிடம் தேடுவதற்கு ஏற்றதாக எண்ணி, தங்கள் பயத்தைக் கைவிட்டு. (அமரும்) - திருவாய்மொழி (8-1-10) - திருச்சிற்றாற்றங்கரையானை முக்கணம்மானை நான்முகனை யமர்ந்தேன் – என்பதற்கு ஏற்ப நான்முகன், ருத்ரன் போன்றவர்களுடைய இருப்பு என்பதும் தனது வசப்பட்டவனாகவும், அவர்களைத் தனது சரீரமாகக் கொண்டவனாகவும் உள்ள பெருமை நிறைந்தவன் என்றாலும், மிகவும் எளியவனக வந்து நிற்பவனை; "அவனுக்கு என்ன தீங்கு நேரிடுமோ!", என்று அடைந்த கலக்கம் நீங்கப் பெற்று, அவனை அண்டி நின்று அனுபவிக்கப் பெற்றேன் என்று மகிழ்ந்தபடி இருப்பதற்கு ஏற்றபடியான. (சௌர்யாதிகள்) - திருவாய்மொழி ( 8-4-1) – வார்கடா வருவி - என்பதற்கு ஏற்ப குவலயாபீடம், சாணூரன், முஷ்டிகன், கம்சன் போன்ற பலரையும் வதைத்து வெளிப்படுத்திய சூரத்தன்மை போன்ற பலவும். (சிற்றாற்றிலே கொழிக்கும்) -

திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு என்னும் திவ்யதேசத்தில், ஆற்றில் உள்ள மணி, முத்து போன்றவை கரையில் ஒதுங்கி வெளிப்படுவது போன்று வெளிப்படும். (சௌர்யாதிகள்) - இதில் உள்ள "ஆதி" என்பது வீர்யம், பராக்ரமம் போன்ற பலவற்றையும் கூறுகிறது. "ஆறு" என்பதால் அதற்கு ஏற்றபடி "கொழிக்கும்" என்றார்.

175. ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும் ஸாதநமொருக்கடுக்கும் க்ருதஜ்ஞதா கந்தம் தாயப்பதியிலே.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸாத்யம் கைப்பட்டால் ஸாதநத்திலிழிவாரின்றிக்கே யிருக்கே "திருக்கடித்தானமு மென்னுடைச் சிந்தையு மொருக்கடுத்துள்ளே யுறையும் பிரான்" என்று ஸாத்யமான ஆழ்வார் திருவுள்ளத்தில் வாஸம் லபித்திருக்கச் செய்தேயும், இத்தைப் பெற்றது அத்தேசத்தில் நிலையாலேயன்றோவென்று ஸாதநமான திருக்கடித்தானத்தையும், அடுத்துப் பிடித்து வர்த்திக்கும்படியான க்ருதஜ்ஞதா பரிமளம்; "திருக்கடித்தான நகரும் தன தாயப்பதி" என்று தனக்கு தாயப்ராப்தமான ஸ்தாநமாக நினைத்திருக்கும் திருக்கடித்தானத்திலே யென்கை. (க்ருதஜ்ஞதா கந்தம்) என்றது "கடித்தானம்" என்று மணத்தையுடைத்தான ஸ்தாநமென்கையாலே.

**விளக்கம்** – (ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும்) - பலன் கிட்டியவுடன் அந்தப் பலன் கிட்டுவதற்கான வழியில் அதன் பின்னர் ஈடுபடாமல் இருப்பார்கள். இது போன்று அல்லாமல், திருவாய்மொழி (8-6-2) – திருக்கடித்தானமு மென்னுடைச் சிந்தையு மொருக்கடுத்துள்ளே யுறையும் பிரான் – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்போதும் உறைதல் என்ற பலன் கிடைத்த பின்னரும், (ஸாதநமொருக்கடுக்கும் க்ருதஜ்ஞதா கந்தம்) – இத்தகைய பலனை ஸர்வேச்வரனாகிய தான் அடைந்தது இந்த திவ்யதேசத்தின் வாசத்தால் அல்லவோ என்று அந்தப் பலன் ஏற்பட்ட வழியாகிய திருக்கடித்தானத்தையும் சேர்த்துப் பிடித்து அங்கேயும் வசிக்கும்படியான செய்ந்நன்றி அறிதல் என்ற நறுமணமானது. (தாயப்பதியிலே) – திருவாய்மொழி (8-6-8) – திருக்கடித்தான நகரும் தன தாயப்பதி – என்பதற்கு ஏற்ப தனக்கு தாயமாக அடையத்தக்கதான இடமாக எண்ணுகின்ற திருக்கடித்தானம் என்ற திவ்யதேசத்தில். (க்ருதஜ்ஞதாகந்தம்) - என்று கூறியது ஏன் என்றால், "கடித்தானம்" என்று நறுமணம் கொண்ட இடமாக உள்ளதால் ஆகும்.

176. அவகாஹித்தாரை அநந்யார்ஹமாக்கும் நாயகலக்ஷணம் வளம்புகழுமூரிலே குட்டமிடும்.

**வ்யாக்யானம்** – அதாவது "அப்பன் திருவருள் மூழ்கினள்" என்று தன் ப்ரஸாதத்திலே மறுநனைய அவகாஹித்தாரை "அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்", "திருப்புலியூர்ப் புகழன்றி மற்று பரவாளிவள் நின்றிராப்பகல்", "திருப்புலியூர் நின்ற மாயப்பிரான் திருவருளாமிவள் நேர்பட்டது" என்னும்படி அநந்யார்ஹமாக்குமதாய் "கருமாணிக்க மலைமேல் மணிதடந்தாமரைக் காடுகள் போல்", "துன்னுசூழ்சுடர் நாயிறுமன்றியும் பலசுடர்களும் போல்" இத்யாதிகளால் சொன்ன அவயவசோபை ஆபரணசோபை முதலான நாயக லக்ஷணம்; "திருப்புலியூர் வளம் புகழும்" என்று இவர் கொண்டாடும்படியான ஐச்வர்யத்தையுடைய திருப்புலியூரிலே பூர்ணமாயிருக்குமென்கை, (குட்டமிடும்) என்றது குட்டநாடென்னுமத்தை நினைத்து. அருள் மூழ்கினாரை யென்னாதே (அவகாஹித்தாரை) யென்றது, கலந்தவர்களை அநந்யார்ஹராக்கும்படி யிருக்கவேணும் நாயக லக்ஷணமென்று உத்தமநாயக லக்ஷணத்தை ஸாமாந்யேந தர்சிப்பித்து அந்த லக்ஷணமீச்வரனுக்குத் திருப்புலியூரிலே பூர்ணமாக ப்ரகாசிக்கு மென்றருளிச்செய்கிறவ ராகையாலே.

**விளக்கம்** – (அவகாஹித்தாரை) – திருவாய்மொழி (8-9-5) – அப்பன் திருவருள் மூழ்கினள் - என்பதற்கு ஏற்ப தனது கருணையில் மூழ்கியபடி உள்ளவர்களை. (அநந்யார்ஹம் ஆக்கும்) - திருவாய்மொழி (8-9-1) - அருமாயன் பேரன்றிப் பேச்சிலள் – என்றும், திருவாய்மொழி (8-9-9) - திருப்புலியூர்ப் புகழன்றி மற்று பரவாளிவள் நின்றிராப்பகல் - என்றும், திருவாய்மொழி (8-9-10) - திருப்புலியூர் நின்ற மாயப்பிரான் திருவருளாமிவள் நேர்பட்டது - என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்ற யாருக்கும் வசப்படாதவராக, தனக்கு மட்டுமே வசப்படும்படியாகச் செய்யும், (நாயக லக்ஷணம்) - திருவாய்மொழி (8-9-1) - கருமாணிக்க மலைமேல் மணிதடந்தாமரைக் காடுகள் போல் – என்றும், திருவாய்மொழி (8-9-2) - துன்னுசூழ்சுடர் நாயிறுமன்றியும் பலசுடர்களும் போல் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள திருமேனியின் அவயவங்கள் அமைந்துள்ள நேர்த்தி மற்றும் ஆபரணங்களுடைய அழகு முதலான நாயகனுக்கே உரிய லக்ஷணங்கள். (வளம் புகழும் ஊரிலே) - திருவாய்மொழி (8-9-3) – திருப்புலியூர் வளம் புகழும் - என்று நம்மாழ்வார்

கொண்டாடும்படியான ஐச்வர்யம் நிறைந்த திருப்புலியூரில் பரிபூர்ணமாக இருக்கிறது என்று கருத்து. (குட்டமிடும்) - அதாவது குட்டநாடு என்ற பொருள்படும்படி. அருளில் "மூழ்கினார்" என்று கூறாமல் "அவகாஹித்தார்" என்று ஏன் கூறினார்? அதாவது "தன்னுடன் வந்து ஒன்றாகக் கலந்தவர்களை, மற்றவர்கள் வசப்படாமல் தனக்கு மட்டுமே உரியவர்கள் என்று செய்யும்படியான நாயக லக்ஷணம்" என்று உத்தமமான நாயக லக்ஷணத்தைப் பொதுவாக உரைத்து, இத்தகைய லக்ஷணமானது ஈச்வரனுக்கு திருப்புலியூரில் முழுமையாகக் காணப்படுகிறது என்று அருளிச்செய்வதால் ஆகும்.

177. போக்யபாக த்வரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்.

**வ்யாக்யானம்** – அதாவது, பசி கனத்தவன் அன்னம் பக்வமாவதற்கு முன்னே பதற்றத்தாலே அதுக்கு அணித்தாக வந்து கிடப்பது இருப்பது நிற்தாமாபோலே, போக்ய பூதரான ஆழ்வார்க்கு பரமபக்தியாகிற பாகம் பிறக்குமளவும் அவனுக்குண்டான த்வரை, "தெளிந்தவென் சிந்தை" என்கிற சந்தைக்கு முன் சொன்ன "புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று" என்று கிடப்ப திருப்பது நிற்பதான திருப்புளிங்குடி, திருவரகுணமங்கை, திருவைகுந்தமாகிற திருப்பதி மூன்றிலும் தெரியு மென்கை.

**விளக்கம்** – (போக்யபாக த்வரை) - மிகுந்த பசி எடுத்த ஒருவன் உணவு சமைப்பதற்கு முன்பே மிகுந்த பதற்றம் காரணமாக அந்த இடத்திலேயே மிகவும் அருகில் வந்து நிற்பது போன்று, இனியவராக உள்ள நம்மாழ்வாருக்குப் பரமபக்தி என்னும் பாகம் உண்டாகும்வரை ஸர்வேச்வரனிடம் உள்ள பதற்றம் என்பது. (தெளிந்த சந்தைக்கு) – திருவாய்மொழி (9-2-4) – தெளிந்த என் சிந்தை - என்ற திருப்பாசுரத்திற்கு. (முன்னில் மூன்றிலும்) - முன்பாக உரைக்கப்பட்ட, திருவாய்மொழி (9-2-4) - புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று - என்பதற்கு ஏற்ப கிடப்பது, இருப்பது, நிற்பது என்பதான திருப்புளிங்குடி, திருவரகுணமங்கை, திருவைகுந்தம் என்ற மூன்று திவ்யதேசத்திலும். (ப்ரகடம்) – வெளிப்படுவதைக் காணலாம்.


Email:sridharan_book@yahoo.co.in

178. போகத்தில் தட்டுமாறுஞ் சீலம் காட்கரையிலே கரையழிக்கும்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி போக்யபூதரான ஆழ்வாருடனே கலந்து பரிமாறுமிடத்தில் "ஆட்கொள்வானொத்து என்னுயிருண்ட மாயன்" என்றும், "ஆருயிர் பட்ட தெனதுயிர்பட்டது" என்றும் பேசும்படி அத்தலை யித்தலையாக சேஷசேஷிபாவம் மாறாடிப் பரிமாறும் சீலகுணம்; "திருக்காட்கரை மருவிய மாயன்றன் மாயம் நினைதொறு" என்று வித்தராய்ப் பேசின திருக்காட்கரையிலே கரையழியப் பெருகுமென்கை. (கரையழிக்கும்) என்றது காட்கரையென்கிற ஸமாதியாலே.

**விளக்கம்** – (போகத்தில் தட்டுமாறும் சீலம்) - இவ்விதம் தனக்கு மிகவும் இனியவராக உள்ள நம்மாழ்வாருடன் சேர்ந்து மகிழ்ந்தபடி உள்ளபோது திருவாய்மொழி (9-6-7) - ஆட்கொள்வானொத்து என்னுயிருண்ட மாயன் - என்றும், திருவாய்மொழி (9-6-9) – ஆருயிர் பட்ட தெனதுயிர்பட்டது - என்றும் உரைக்கும்படியாக அத்தலை இத்தலையாக மாறி, அடிமை - எஜமானன் என்ற தன்மை மாறி நிற்கும்படியான சீலகுணமானது, (காட்கரையிலே) – திருவாய்மொழி (9-6-1) – திருக்காட்கரை மருவிய மாயன்றன் மாயம் நினைதொறு - என்று மிகுந்த ஈடுபாடு நிறைந்தவராக உரைத்த திருக்காட்கரையில். (கரை அழிக்கும்) - கரை அழிக்கும்படியாகப் பெருகி நிற்கும். (கரை அழிக்கும்) - காட்கரை என்ற பெயருக்கு ஏற்ப உரைத்தார்.

179. மஹாத்மாக்கள் விரஹம் ஸஹியாத மார்த்தவம் வளத்தின் களத்தே கூடு பூரிக்கும்.

**வ்யாக்யானம்** – அதாவது, "தமரோடங்குறைவார்க்கு" என்று தம் பரிஜனங்களோடே அங்கே நித்யவாஸம் பண்ணுகிறவர்க்கென்னும்படி, "ஸக்ருத் த்வதாகார விலோக நாசயா த்ருணீ க்ருதாநுத்தமபுக்தி முக்திபி: மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத் விரஹோதிதுஸ்" என்கிறபடியே தம்முடைய விக்ரஹத்தை யொருகால் காணவேணுமென்னு மாசையாலே அநுத்தமமான போக மோக்ஷங்களையும் த்ருணீகரித்திருக்கும் மஹாத்மாக்களோட்டை விரஹம் ஸஹியாமையாகிற மார்த்தவம்; "மூழிக்களத் துவளத்தினை" என்று ஆச்ரிதர்க்கு ஸம்பத்தாயிருக்கும் ஸ்வபாவ னானவன் திருமூழிக்களத்திலே கூடுகட்டி நிற்குமென்கை. கூடுபூரிக்குமென்றது களமென்கிற ஸமாதியாலே.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (மஹாத்மாக்கள்) – திருவாய்மொழி (9-7-2) - தமரோடங்குறைவார்க்கு - என்பதற்கு ஏறப தனது உறவினர்களுடன் அங்கு எப்போதும் வசிப்பவர்க்கு என்று கூறுவதற்கு ஏற்ப, ஸ்தோத்ரரத்னம் (5) - ஸக்ருத் த்வதாகார விலோக நாசயா த்ருணீ க்ருதாநுத்தமபுக்தி முக்திபி: மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத் விரஹோதிதுஸ் - ஒருமுறையாவது உனது திருமேனியை நான் காணவேண்டும் என்ற ஆசை காரணமாக மிகவும் உயர்ந்த நான்முகன் முதலனாவர்களுடைய லோகங்களுடைய இன்பம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றைக் கூட ஒரு துரும்பு போன்று எண்ணும் மஹாத்மாக்களாகிய பாகவதர்களால் நான் கடாக்ஷிக்கப்படும் விதத்தில் நீ என்னைக் கடாக்ஷிக்க வேண்டும் - என்பதற்கு ஏற்ப தனது திருமேனியை ஒருமுறையாவது காணவேண்டும் என்ற ஆசையால் மிகவும் உயர்ந்த நான்முகன் முதலான தேவர்களுடைய லோகங்களையும் மோக்ஷத்தையும் ஒரு அற்பமான புல்லாக எண்ணுகின்ற மஹாத்மாக்களுடைய. (விரஹம் ஸஹியாத மார்தவம்) - பிரிவைப் பொறுத்துக் கொள்ள இயலாதபடியான மென்மையான திருவுள்ளம் கொண்ட குணம். (வளத்தின் களத்தே) – பெரியதிருமடல் (129) - மூழிக்களத் துவளத்தினை - என்பதற்கு ஏற்ப அடியார்களுக்குச் செல்வமாக உள்ள தன்மை கொண்டவனுடைய திருமூழிக்களத்தில். (கூடு பூரிக்கும்) - கூடுகட்டி நிற்கிறது. “களம்” என்பதற்கு ஏற்ப “கூடு கட்டி” என்றார்.

180. பிரிந்த துன்பக்கடல் கடத்தும் விஷ்ணுபோதாந்ருசம்ஸ்யம் நாவாயிலே நிழலெழும்.

**வ்யாக்யானம்** - (பிரிந்த துன்பக்கடல்) இத்யாதி. அதாவது “அன்புடையாரைப் பிரிவுறு நோய்” என்றும், “துன்பக்கடல் புக்கு” என்றும் சொல்லுகிறபடியே “எமராலும் பழிப்புண்டு அணிமூழிக்களத்துறையும் தம்மாலிழிப் புண்டு இங்கென்”, “தாந்தம்மைக் கொண்டகல்தல் தகவன்றென் றுரையீர்”, “மிகமேனி மெலிவெய்தி மேகலையுமீடழிந் தென்னகமேனி யொழியாமே திருமூழிக்களத்தார்க்கு தகவன்றென் றுரையீர்” என்கிறபடியே மேன்மேலும் ஆள் விடவேண்டும்படி தன்னைப் பிரிகையால் வந்த துக்க ஸாகரத்தை நிஸ்தரிப்பிக்கும் “விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்” என்கிற விஷ்ணு போதமான வவனுடைய, “ஆவாவடியா னிவனென் றருளாய்” என்று அபேக்ஷிக்கலாம்படி யிருக்கும் ஆச்ரித விஷய க்ருபையாகிற ஆந்ருசம்ஸ்யம் – “நாவாயுறைகின்ற” என்று அவன் நித்யவாஸம் பண்ணுகிற திருநாவாயிலே உள்ளு நிற்கிற வஸ்துவின் ஸ்வபாவமிதுவோ

வென்றறியலாம்படி அவ்வூரின் பேராலே நிழலெழுமென்கை. நாவாய் போலே யிருக்கிறவவன் வர்த்திக்கின்ற தேசமாகையாலே நாவாய் என்று ஊருக்குப் பேராயிருக்கிறதென்று கருத்து. விஷ்ணுபோதத்வ மித்தாலே ப்ரகாசித்தால் அதுக்குடலான ஆந்ருசம்ஸ்யம் தன்னடையே தோன்றுமிறே. “காருண்யே நாந்ருசம்ஸ்யேந” என்று விபஜித்துச் சொல்லி, “ஸ்த்ரீ ப்ரநஷ்டேதி காருண்யம் ஆச்ரிதேத்யந்ருசம்ஸதா” என்கையாலே ஆந்ருசம்ஸ்யமாவது ஆச்ரித விஷய க்ருபை.

**விளக்கம்** – (பிரிந்த துன்பங்கடல்) – நாச்சியார் திருமொழி (5-4) - அன்புடையாரைப் பிரிவுறு நோய் - என்றும், நாச்சியார் திருமொழி (5-4) – துன்பக்கடல் புக்கு – என்றும் கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழி (9-7-2) - எமராலும் பழிப்புண்டு அணிமூழிக்களத்துறையும் தம்மாலிழிப் புண்டு இங்கென் - என்றும், திருவாய்மொழி (9-7-9) – தாந்தம்மைக் கொண்டகல்தல் தகவன்றென் றுரையீர் - என்றும், திருவாய்மொழி (9-7-10) - மிகமேனி மெலிவெய்தி மேகலையுமீடழிந் தென்னகமேனி யொழியாமே திருமூழிக்களத்தார்க்கு தகவன்றென் றுரையீர் - என்றும் இவ்விதமாக மேன்மேலும் தூது விடும்படியாகத் தன்னைப் பிரிவதன் மூலம் ஏற்பட்ட துக்கம் என்ற ஸமுத்திரத்தை, (கடந்த விஷ்ணுபோதம்) ஸ்ரீவிஷ்ணுதர்மம் – விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம் - விஷ்ணு என்ற ஓடம் இன்றி வேறு ஸாதனம் இல்லை - என்பதற்கு ஏற்றபடி தாண்டுவிக்கின்ற விஷ்ணுபோதமாக அவனுடைய (ஆந்ருசம்ஸ்யம்) - திருவாய்மொழி (9-8-7) - நாவாயுறைகின்ற - என்று விரும்புவதற்கு ஏற்றபடியாக உள்ள அடியார்கள் விஷயத்தில் வெளிப்படும் க்ருபையாகும் என்பது; (திருநாவாயிலே நிழல் எழும்) - திருவாய்மொழி (9-8-7) – நாவாய் - என்பதற்கு ஏற்ப அவன் எப்போதும் வசிப்பதான திருநாவாய் என்ற திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள ஸர்வேச்வரனுடைய தன்மை இத்தகையது என்று அறியும்விதத்தில் அந்த ஊருடைய பெயராலேயே வெளிப்படுகிறது (நாவாய் என்றால் ஓடம், படகு). அதாவது ஓடம் போன்றுள்ளவன் எப்போதும் அங்கு வசிப்பதால் “நாவாய்” என்று ஊருக்கும் பெயர் வந்தது. விஷ்ணுவின் ஓடமாக உள்ள தன்மை இதன் மூலம் வெளிப்படும்போது, அதற்குக் காரணமாக உள்ள அவனுடைய க்ருபை என்பதும் தானாகவே வெளிப்படுகிறது அல்லவோ? இராமாயணம் ஸுந்தரகாண்டம் (15-49) – காருண்யே நாந்ருசம்ஸ்யேந - கருணையாலும் தனது அடியார்களிடம் காண்பிக்கும் அருளாலும் - என்று தனித்தனியாக உரைத்து, ஸ்த்ரீ ப்ரநஷ்டேதி காருண்யம் ஆச்ரிதேத்யந்ருசம்ஸதா - பெண் காப்பாற்றப்படவில்லை என்ற

கருணையாலும், நம்மைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றாமல் போனோமே என்ற அருளாலும் இராமன் வருந்தினான் - என்று கூறுவதால், ஆந்ருசம்ஸ்யம் என்பது அடியார்களிடம் காணபிக்கப்படும் க்ருபை என்றாகிறது.

181. சரண்யமுகுந்தத்வம் உத்பலாவதகத்திலே ப்ரஸித்தம்.

**வ்யாக்யானம்** - (சரண்ய முகுந்தத்வம்) இத்யாதி. அதாவது, “சரணமாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்” என்று கீழ்ச் சொன்ன விசேஷணத்தாலே எல்லார்க்கும் சரணவரணார்ஹனா யிருக்குமவனுடைய மோக்ஷ ப்ரதத்வம் “உத்பலாவதகே திவ்யே விமாநே புஷ்கரேக்ஷணம், சௌரிராஜமஹம் வந்தே ஸதா ஸர்வாங்க ஸுந்தரம்” என்கிறபடியே திருக்கண்ணபுரத்தில் உத்பலாவதக மென்கிற பேரையுடைத்தான திவ்யவிமாநத்தில் நிற்கிற நிலையிலே எல்லாரு மறியலாம்படி ப்ரஸித்தமென்கை. முகுந்தத்வமாவது முக்திபூமி ப்ரதத்வம். “வைகுந்தம் கொடுக்கும் பிரான்” என்கையாலே யாய்த்து இவரிப்படி யருளிச்செய்தது. பலமென்றும் மாம்ஸமாய் உத்பலரென்று மாம்ஸலதேஹரா யிருக்கையன்றிக்கே யிருக்கும் முமுக்ஷுக்களாய் “தேஷாம் மமாவதோ வாஸ முத்பலாவதகம் விது:” என்கிறபடியே அவர்களுக்கு ரக்ஷகனானவன் எழுந்தருளி நிற்கையாலே உத்பலாவதகமென்று அங்குத்தை திவ்யவிமாநத்துக்குப் பேராகையாலேயாய்த்து மோக்ஷ ப்ரதத்வம் அந்த ஸ்தலத்திலே ப்ரஸித்தமென்கிறது.

**விளக்கம்** - (சரண்ய முகுந்தத்வம்) திருவாய்மொழி (9-10-5) - சரணமாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் – என்று இதுவரை கூறப்பட்ட பலவிதமான சிறப்புகள் காரணமாக தங்களுடைய புகலிடம் என்று பற்றுவதற்கு ஏற்றபடி உள்ள ஸர்வேச்வரனுடைய மோக்ஷம் அளிக்கவல்ல தன்மை. (உத்பலாவதகத்திலே ப்ரஸித்தம்) உத்பலாவதகே திவ்யே விமாநே புஷ்கரேக்ஷணம், சௌரிராஜமஹம் வந்தே ஸதா ஸர்வாங்க ஸுந்தரம் உத்பலாவதகம் என்பதான திவ்ய விமானத்தில், தாமரை போன்ற கண்கள் கொண்டவனும், அனைத்து அவயவங்களும் நேர்த்தியாக அமையப்பெற்று சுந்தரமாக உள்ளவனும் ஆகிய ஸௌரிராஜனை வணங்குகிறேன் - என்பதற்கு ஏற்ப திருக்கண்ணபுரத்தில் உத்பலாவதகம் என்ற பெயர் கொண்ட திவ்யமான விமானம் நிற்கும் நிலை மூலம் அனைவரும் அறிவர். (முகுந்தத்வம்)

- மோக்ஷத்தை அளிக்கும் தன்மை. திருவாய்மொழி (9-10-5) - வைகுந்தம் கொடுக்கும் பிரான் - என்ற திருப்பாசுரத்தை தனது திருவுள்ளத்தில் கொண்டதன் காரணமாகவே இவ்விதமாக அருளிச்செய்தார். உத்பலாவதகம் என்பதில் உள்ள பலம் என்பது மாமிஸம், உத்பலமர் என்பதால் மாமிஸ சரீரம் கொண்டவராக இல்லாமல், சரீரத்தை உலர்த்துவதன் காரணமாக விலக்கப்பட்ட மாமிஸத்தைக் கொண்டவராக, அத்தகைய சரீரத்தில் விருப்பம் இன்றி இருக்கின்ற முமுக்ஷுக்களைக் குறிப்பதாகும். தேஷாம் மமாவதோ வாஸ முத்பலாவதகம் விது: - முமுக்ஷுக்களைக் காப்பாற்றும் எனது இருப்பிடத்தை உத்பலாவதகம் என்பர் - என்பதற்கு ஏற்ப எழுந்தருளியுள்ளதால் அங்குள்ள திவ்யமான விமானமானது உத்பலாவதகம் என்று பெயர் பெற்றது. ஆகவே அந்த இடம் மோக்ஷம் அளிக்கும் இடம் என்று கருத்து.

182. மார்க்கபந்து சைத்யம் மோஹநத்தே மடுவிடும்.

**வ்யாக்யானம்** – (மார்க்கபந்து சைத்யம்) இத்யாதி. அதாவது இப்படி மோக்ஷ ப்ரதனான தன்னுடைய ப்ரஸாதத்தாலே மோக்ஷபூமிக்குப் போவார்க்கு "காளமேகத்தை யன்றி மற்றொன்றிலம் கதி", "ஆத்தன் தாமரையடியன்றி மற்றிலமரணே" என்னும்படி ஆப்தனாய் கூடக்கொண்டுபோம் மார்க்கபந்துவானவனுடைய, "சுரிகுழல் கமலக்கட் கனிவாய்க் காளமேகம்" என்றும், "அவனடி நிழல் தடம்" என்றும், "மரதக மணித்தடம்" என்றும் சொல்லும்படி யிருந்துள்ள ஸாம்ஸாரிக ஸகல தாபஹரமான சைத்யம்; அம்ருத ப்ரதாந ஸமயத்திலே அஸுரர்களை மோஹிப்பித்த விடமாகையாலே மோஹந க்ஷேத்ரமான திருமோகூரிலே நிறைந்து நிலைபெற்றிருக்குமென்கை. மடுவிடுமென்றது "மரதக மணிதடம்" என்கிற ஸமாதியாலே.

**விளக்கம்** – (மார்க்கபந்து) – இப்படியாக மோக்ஷத்தை அளிப்பவனாகிய அவன், தனது க்ருபை காரணமாக மோக்ஷம் அடைபவர்களுக்கு, திருவாய்மொழி (10-1-1) – காளமேகத்தை யன்றி மற்றொன்றிலம் கதி - என்றும், திருவாய்மொழி (10-1-6) - ஆத்தன் தாமரையடியன்றி மற்றிலம் அரணே – என்றும் கூறுவதற்கு ஏற்ப நம்புவதற்கு ஏற்றவனாகத் தன்னுடனே அவர்களை வழி நடத்திச் செல்லும் உறவினனாக உள்ளவனுடைய. (சைத்யம்) – திருவாய்மொழி (10-1-1) – சுரிகுழல் கமலக்கட் கனிவாய்க் காளமேகம் – என்றும், திருவாய்மொழி (10 -1-2) – அவனடி நிழல் தடம் - என்றும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

திருவாய்மொழி (10-1-8) - மரதக மணித்தடம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதும், ஸம்ஸாரம் என்பதில் உழல்வதன் காரணமாக உண்டாகும் அனைத்துவிதமான துன்பங்களையும் போக்குவதும் ஆகிய குளிர்ச்சி. (மோக்ஷத்தே) - அமிர்தத்தை அளிக்கின்ற நேரத்தில் அஸுரர்கள் மயங்கும்படியாகச் செய்த இடம் இன்பதால் மோஹந க்ஷேத்ரம் என்ற பொருள் தருவதான திருமோகூரில், (மடுவிடும்) - நிறைவாக நிலை பெற்று நிற்கும்.

183. ஸைந்ய புத்ர சிஷ்ய ஸாத்ய ஸித்த பூஸுரார்ச்சனத்துக்கு முக நாபி பாதங்களை த்வார த்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்தசயநத்திலே வ்யக்தம்.

**வ்யாக்யானம்** - (ஸைந்யேத்யாதி) அதாவது “அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர்” என்கிற ஸேநா ஸஹிதரான ஸேனைமுதலியாராகிற “யத்ர பூர்வே ஸாத்யா:” என்கிற நித்யஸூரிகளில் தலைவரான ஸாத்யருடையவும், “அமரராய்த் திரிகின்றார்கட்காதி” என்கையாலே புத்ரர்களான ப்ரஹ்மாதிகளாகிற ஸித்தருடையவும், “படமுடையரவில் பள்ளிபயின்றவன் பாதம் காண நடமினோ நமர்களுள்ளீர்” என்று இவருபதேசம் கேட்ட சிஷ்யர்களான பூஸுரருடையவும் அர்ச்சநத்துக்கு, திருமுகமும் திருநாபியும் திருவடிகளுமாகிற விவற்றை திருவாசல் மூன்றாலும் தர்சிப்பிக்கிற, நித்யஸூரிகள் ஸம்ஸாரிகள் என்று விசேஷம் பாரத ஸாம்யகுணம் திருவநந்தபுரத்தில் கண்வளருகிற ப்ரகாரத்திலே வ்யக்தமாயிருக்கும் மென்கை.

**விளக்கம்** – (ஸைந்ய ஸாத்ய) – திருவாய்மொழி (10-2-6) – அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர் - எனப்படும் சேனையுடன் சேர்ந்துள்ள ஸேனைமுதலியார் என்பவராகிற புருஷஸூக்தம் – யத்ர பூர்வே ஸாத்யா: – எல்லையற்ற காலமாக இருந்துவரும் நித்யஸூரிகள் எங்குள்ளார்களோ - என்பதற்கு ஏற்ப நித்யஸூரிகளுடைய தலைவராகிய ஸேனைமுதலியார் என்னும் ஸாத்யர். (புத்ர ஸித்த) - திருவாய்மொழி (10-2-4) – அமரராய்த் திரிகின்றார்கட்காதி - என்பதால் புத்ரர்களாக உள்ள நான்முகன் போன்ற ஸித்தர்கள். (சிஷ்ய பூஸுர) - திருவாய்மொழி (10-2-8) - படமுடையரவில் பள்ளிபயின்றவன் பாதம் காண நடமினோ நமர்களுள்ளீர் – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாரின் உபதேசத்தைக் கேட்ட சிஷ்யர்களான அந்தணர்கள். இப்படியாக உள்ள இந்த மூவருடைய. (அர்ச்சனத்துக்கு) – அர்ச்சனைக்கு. (முகம் நாபி பாதங்களை

த்வார த்ரயத்தாலே காட்டும்) - திருமுகம், திருநாபி, திருவடிகள் ஆகியவற்றை மூன்று திருவாயில்கள் மூலம் காண்பிக்கின்ற. (ஸாம்யம்) - நித்யஸூரிகள், ஸம்ஸாரிகள் என்ற வேறுபாடு இன்றி ஒரே போன்று வெளிப்படும் குணம். (அநந்தசயநத்திலே வ்யக்தம்) - திருவனந்தபுரத்தில் கண்வளர்கின்ற விதத்தில் தெளிவாக வெளிப்படும் என்று கருத்து.

184. மோக்ஷ தாநத்தில் ப்ரணத பாரதந்த்ர்யம் வலம் மிக்க நதியிலே கரைபுரளும்.

**வ்யாக்யானம்** - (மோக்ஷ தாநத்தில்) இத்யாதி. அதாவது "அருள்தருவானமைகின்றானது நமது விதிவகை" என்றும், "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே" என்றுமிப்படி ஸர்வஸமனானவன் ஆச்ரிதர்க்கு மோக்ஷ ப்ரதாநம் பண்ணுமளவில் அவர்கள் விதித்தபடி செய்வானாய் நிற்கிற ஆச்ரித பாரதந்த்ர்யம்; "வளம் மிக்க வாட்டாற்றான்" என்று ரக்ஷ்யவர்க்கம் குறைவற்ற தேசமாகையாலே அவனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கிற திருவாட்டாற்றிலே அமர்யாத்மாக ப்ரவஹிக்குமென்கை. கரை புரளுமென்று ஆறு என்கிற ஸமாதியாலே.

**விளக்கம்** – (மோக்ஷ தாநத்தில்) - மோக்ஷ தானத்தில் (ப்ரணத பாரதந்த்ர்யம்) - திருவாய்மொழி (10-6-1) – அருள்தருவானமைகின்றானது நமது விதிவகை – என்றும், திருவாய்மொழி (10-6-3) - விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதத்திலும் ஒரே போன்றுள்ள ஸர்வேச்வரன் தனது அடியார்களுக்கு மோக்ஷம் அளிக்கும்போது அவர்கள் கூறியபடி செய்பவனாக நிற்கின்ற அடியார்களுக்கு வசப்பட்டுள்ள தன்மை என்பது, (வளம் மிக்க நதியிலே) – திருவாய்மொழி (10-6-3) - வளம் மிக்க வாட்டாற்றான் - என்பதற்கு ஏற்ப பாதுகாக்கப்பட வேண்டிய பொருள்கள் சிறிதும் குறைவில்லாமல் உள்ள திவ்யதேசம் என்பதால் அவனுக்குச் செல்வம் மிகுதியாக உள்ளதான திருவாட்டாறு என்ற திவ்யதேசத்தில், (கரை புரளும்) – கரையைக் கடந்து புரண்டு ஓடும். "வாட்டாறு" என்பதில் உள்ள ஆறு என்பதன் காரணமாக "கரை புரளும்" என்கிறார்.

185. த்யாஜ்ய தேஹ வ்யாமோஹம் மருள்கள்கடியும் மயல்மிகு பொழிலிலே தழைக்கும்.

**வ்யாக்யானம் -** அதாவது, முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யமான தேஹத்தில், சரம தேஹமாகையாலே, மஹிஷியுடைய உச்சிஷ்டத்தை விரும்பும் ராஜபுத்ரனைப்போலே "வஞ்சக் கள்வனாய் நெஞ்சு முயிருமுள் கலந்து", "மாயவாக்கையிதனுட் புக்கு" என்கிறபடியே இதின் தோஷம் பாராமல் உள்புக்கு, "திருமாலிருஞ்சோலை மலையே" இத்யாதிப்படியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இதிலேகதேசத்திலே பண்ணி, "மங்கவொட்டு" என்று கால்கட்டி விடுவிக்க வேண்டும்படி அவனுக்குண்டான வ்யாமோஹம் "மருள்கள் கடியும் மணிமலை" என்று ஸர்வருடையவு மஜ்ஞானத்தை ஸவாஸநமாகப் போக்குமதாய், "மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ்சோலை" என்று போக்யதா ப்ரகர்ஷத்தாலே போக்தாக்களைப் பிச்சேற்றவற்றான சோலையை யுடைய தெற்குத்திருமலையிலே ஸம்ருத்தமாய்ச் சொல்லுமென்கை. (பொழில்) என்கிற ஸமாதியாலேயாய்த்து (தழைக்கும்) என்றது.

**விளக்கம் –** (த்யாஜ்ய தேஹ வ்யாமோஹம்) - முமுக்ஷுக்களால் கைவிடத்தக்கதான சரீரத்தில் பிறவிகள் முடிகின்ற சரீரம் என்பதால், மனைவியின் எச்சிலை விரும்பும் அரசகுமாரன் போன்று, திருவாய்மொழி (10-7-1) – "வஞ்சக் கள்வனாய் நெஞ்சு முயிருமுள் கலந்து – என்றும், திருவாய்மொழி (10-7-3) – மாயவாக்கையிதனுட் புக்கு - என்றும் கூறுவதற்கு ஏற்ப இப்படிப்பட்ட சரீரத்தின் தாழ்வை நோக்காமல் இதன் உள்ளே புகுந்து திருவாய்மொழி (10-7-8) - திருமாலிருஞ்சோலை மலையே – என்பதற்கு ஏற்ப மிகவும் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்கள் அனைத்திலும் கொண்டுள்ள விருப்பத்தை இந்தச் சரீரத்தில் வைத்து திருவாய்மொழி (10-7-10) – மங்கவொட்டு - என்பதற்கு ஏற்ப அவனைக் கால்கட்டி மட்டுமே விடுவிக்கவேண்டும்படியாக அவனுக்கு ஏற்பட்ட காதல்மயக்கம் என்பது : (மருள்கள் கடியும்) – திருவாய்மொழி (1-7-7) - மருள்கள் கடியும் மணிமலை – என்பதற்கு ஏற்ப அனைவருடைய அறியாமை என்பதை அடியுடன் நீக்குவதாகவும், (மயல்மிகு) - திருவாய்மொழி (2-10-3) - மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ்சோலை - என்பதற்கு ஏற்ப இனிமையின் மிகுதி காரணமாகக் காண்பவர்களை மயங்கும்படிச் செய்வதாகவும் உள்ளதான (பொழிலிலே) - சோலைகள் நிறைந்த தெற்குத் திருமலையில் (தழைக்கும்) - நிறைவாக இருக்கும். "பொழில்" என்பதன் காரணமாக "தழைக்கும்" என்கிறார்.

 **Email:**sridharan_book@yahoo.co.in

186. அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெருநகரிலே பேர் பெற்றது.

**வ்யாக்யானம்** – அதாவது, "திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்னத் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்" என்று ஸ்வாங்கீகாரத்துக் குடலான ஸுக்ருத லவமில்லாதாரையும் மடிமாங்காயிடுமாப்போலே "என்னூரைச் சொன்னாய்" இத்யாதியான அஜ்ஞாத ஸுக்ருதங்களை யாரோபித்தும் அங்கீகரிக்கைக்கிடம் பார்க்குமவனுடைய ஸ்வாமித்வம் : "பெருநகரரவணை மேல்" என்று கண்வளர்ந்தருளுகிற திருப்பேர் நகரிலே ப்ரஸித்தமாய்த்தென்கை. ஆக திருப்பதிகள்தோறு மோரோ குணம் ப்ராதாந்யேந ப்ரகாசிக்கு மென்னுமிடம் இவரநுஸந்தித்த திருப்பதிக ளெல்லாவற்றிலும் தர்சிப்பித்தாராய்த்து.

**விளக்கம்** – (அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும்) – திருவாய்மொழி (10-8-1) - திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான் - என்பதற்கு ஏற்ப தன்னுடைய ஏற்றுக்கொள்ளும் தன்மைக்கு ஏற்றவிதத்தில் புண்ணியங்கள் ஏதும் இல்லாதவர்களாக இருந்தாலும், மடிமாங்காய் அளிப்பது போன்று, "எனது ஊரை உரைத்தாய்" என்பது போன்றதான அறியாமல் செய்த புண்ணியங்களையும் அவர்கள் மீது ஏற்றிக்கொண்டு அங்கீகரிப்பதற்கான இடம் கொண்ட அவனுடைய எஜமானத்தன்மை, (பெருநகரிலே பேர் பெற்றது) - திருவாய்மொழி ( 5-9-3) – பெருநகர் அரவணை மேல் – என்பதற்கு ஏற்ப திருக்கண்கள் வளர்கின்ற திருப்பேர்நகரில் வெளிப்படுகிறது. இப்படியாக திவ்யதேசங்கள் ஒவ்வொன்றிலும் வெளிப்படும் முதன்மையான குணம் இன்னதாகும் என்று நம்மாழ்வார் அனுபவித்த திவ்யதேசங்கள் அனைத்திலும் காண்பித்தார்.

187. இவற்றில் ப்ராவண்யம் இவள் பரமே யென்னவுண்டாய் ஷோடச கலாபூர்ணமான சந்த்ரமண்டலம்போலே பதினாறு திருநக்ஷத்ரம் நிரம்பினவாறே தேவபோக்யமானவதில் அம்ருதம் போலன்றிக்கே என்னாத் தமிழரிசைகாரர் முதற்பத்தர் மானவரென்னம்மான் பார் பரவென்னும்படி ஸேச்வரவிபூதி போக்யமான பாலோடமுதன்ன மென்மொழி முகஞ்செய்தது.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை -** இத்திருப்பதிகளில் ப்ராவண்யம் இவர்க்குண்டாய்த்தெப்போது? இவர் தாம் ப்ரபந்த மருளிச்செய்யத் தொடங்கிற்று எத்தனை திருநக்ஷத்ரத்தளவிலே? இது தனக்கு போக்த்ரு நியாமமுண்டோ? இதன் போக்யத்தை தானிருக்கும்படி யெங்ஙனே யென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல் (இவற்றில் ப்ராவண்யம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இத்தகைய திவ்யதேசங்களில் நம்மாழ்வாருக்கு ஆழ்ந்த ஈடுபாடு எப்போது ஏற்பட்டது? இத்தகைய ப்ரபந்தங்களை இவர் எந்த வயதில் அருளிச்செய்தார்? இந்த ப்ரபந்தங்களுக்கான அதிகாரி தகுதி உண்டா? இந்தப் ப்ரபந்தங்களுடைய இனிமை எத்தகையது? இது போன்ற கேள்விகளுக்கு இந்தச் சூர்ணையில் விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது இவ்வர்ச்சாவதார ஸ்தலங்களில் ப்ராவண்யம் "முலையோ முழு முற்றும் போந்தில பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம் இவள் பரமே" என்னும்படி, பருவம் நிரம்புவதற்கு முன்னேயுண்டாய்; பதினாறு கலைகளாலும் பரிபூர்ணமான சந்த்ரமண்டலம் போலே, பதினாறு திருநக்ஷத்ரம் பூர்ணமானவாறே. "க்ருஷ்ணபக்ஷேமரைச் சச்வத் பீயதே வை ஸுதாமய:" என்கிறபடியே தேவர்களுக்கு போக்யமாகையாலே போக்த்ரு நியமமுடைத்தான அந்த சந்த்ரமண்டலத்தில் அம்ருதம் போலன்றிக்கே, "என்னாவிலின்கவி" என்றும், "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும், "தூமுதல் பத்தர்க்கு" என்றும், "கேட்டாரார் வானவர்கள்" என்றும், "தென்னாவென்னு மென்னம்மான்" என்றும், "பார் பரவின்கவி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்வபாவிபாகம், ஸூரிஸம்ஸாரி விபாகம், ஈசேசிதவ்ய விபாகமற ஈச்வரனோடே கூட இரண்டு விபூதியும் புஜிக்கைக்கு யோக்யமாய், "பாலொடமுதன்ன வாயிரம்", "அமுதமென்மொழி" என்கிறபடியே வாச்ய வாசகங்களும் ஸம்ச்லேஷ ரஸத்தாலே பாலுமமுதும் கலந்தாப்போலேயாய், போக்யதாதிசயத்தாலும் புஜித்தார்க்கு நித்யத்வத்தைக் கொடுக்கையாலும் அம்ருதஸமமாய் அதில் வ்யாவ்ருத்தமான மார்த்தவத்தை யுடைத்தான சப்தம் இவர் முகோத்கதமாய்த் தென்கை.

**விளக்கம்** – (இவற்றில் ப்ராவண்யம்) - இத்தகைய அர்ச்சாவதார திவ்யதேசங்களில் உள்ள ஈடுபாடும் ப்ரேமையும், திருவிருத்தம் (60) - முலையோ முழு முற்றும் போந்தில பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம் இவள் பரமே – என்பதற்கு ஏற்ப

பருவம் நிரம்புவதற்கு முன்பாகவே ஏற்பட்டதாக. (ஷோடச கலாபூர்ணமான சந்த்ரமண்டலம்போல) – பதினாறு கலைகள் நிறைந்த சந்த்ரமண்டலம் போன்று, (பதினாறு திருநக்ஷத்ரம் நிரம்பினவாறே) – பதினாறு வயது முடிந்தபோது, (தேவ போக்யமான அதில் அம்ருதம்போல் அன்றிக்கே) ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-11-22) – க்ருஷ்ணபக்ஷேமரைச் சச்வத் பீயதே வை ஸுதாமய: – க்ருஷ்ணபக்ஷத்தின்போது அமிர்தமயமான சந்த்ரன் தேவர்களால் உண்ணப்படுகிறான் - என்பதற்கு ஏற்ப, தேவர்களுக்கு இனிமையான உணவாக உள்ளதால், அதிகாரி நியமம் உள்ளதான அந்த சந்த்ரனில் உள்ள அமிர்தம் போன்று அல்லாமல், (என்னா) – திருவாய்மொழி (3-9-1) – என் நாவில் இன்கவி - என்றும், (தமிழர் இசைகாரர்) - திருவாய்மொழி (1-5-11) - பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம் - என்றும், (முதல் பத்தர்) - திருவாய்மொழி (7-9-3) – தூமுதல் பத்தர்க்கு – என்றும், (வானவர்) - திருவாய்மொழி (10-6-2) - கேட்டாரார் வானவர்கள் – என்றும், (என்னம்மான்) - திருவாய்மொழி (10-7-5) - தென்னாவென்னு மென்னம்மான் - என்றும், (பார்பரவு) - திருவாய்மொழி (7-9-5) – பார் பரவு இன்கவி - என்றும், (என்னும்படி) - கூறுவதற்கு ஏற்ப “நான் – மற்றவர்” என்ற வேறுபாடு, “நித்யஸூரிகள் - ஸம்ஸாரிகள்” என்ற வேறுபாடு, “நியமிப்பவன் – நியமிக்கப்படும் பொருள்” என்ற வேறுபாடு போன்ற அனைத்தும் நீங்கும்விதமாக. (ஸேச்வர விபூதி போக்யமான) – ஸர்வேச்வரனுடன் சேர்ந்து இரண்டுவிதமான விபூதிகளும் அனுபவிப்பதற்கு ஏற்றபடியாக, (பாலோடு அமுதன்ன மென்மொழி) – திருவாய்மொழி (8-6-11) – பாலொடு அமுது என்ன ஆயிரம் – என்றும், திருவாய்மொழி (6-5-2) - அமுதமென்மொழி – என்றும் கூறுவதற்கு ஏற்ப, கூறப்பட்ட சொல் மற்றும் அதனால் உணர்த்தப்படும் பொருள் என்ற இரண்டும் சரியாகக் கலந்த சுவை காரணமாக பாலும் அமிர்தமும் ஒன்றாகச் சேர்ந்தது போன்றும், அளவற்ற இனிமை காரணமாகத் தன்னைப் பருகுபவர்களுக்கு நித்யத்தன்மை அளிப்பதாக உள்ளதால் அமிர்தத்தைப் போன்றும், அதிலிருந்து வேறுபட்ட மென்மையுடன் கூடியதாகவும் உள்ள சொற்கள், (முகம் செய்தது) - நம்மாழ்வாரிடமிருந்து வெளிப்பட்டது.

188. நீர்பால் நெய்யமுதாய் நிரம்பின வேரி தெளிக்குமாபோலே பரபக்த்யாதிமய ஜ்ஞாநாம்ருதாப்தி நிமிகிற வாய்கரை மிடைந்து மொழிபட்டு அவாவிலந்தாதி யென்று பேர்பெற்றது.

**அவதாரிகை** - இவர் பக்கல் ப்ரபந்தம் அவதரிக்கத் தொடங்கின காலத்தை யருளிச்செய்தார் கீழ்; இதுதான் அவதரிக்கிறவளவில் "இப்படி நாமவனைக் கவி பாடவேணும்" என்று ஸங்கல்பித்திருந்து பாடினாரோ என்னுமாகாங்க்ஷையிலே, இதின் அவதரண க்ரமத்தை யருளிச்செய்கிறார் மேல் (நீர்பால்) என்று தொடங்கி.

**விளக்கம்** – நம்மாழ்வார் மூலமாக இந்தத் திருவாய்மொழி அவதரித்த காலத்தை மேலே அருளிச்செய்தார். இத்தகைய திருவாய்மொழி அவதரிக்கும்போது "இவ்விதம் நாம் ஸர்வேச்வரனைக் குறித்து உரைக்கவேண்டும்" என்று திருவுள்ளத்தில் எண்ணியபடி இவர் பாடினாரா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு விடை அளிக்கும்விதமாக இந்தத் திருவாய்மொழி அவதாரித்த வரிசையைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது நீர் பாலாய், பால் நெய்யாய், நெய் அம்ருதமாய் அத்தாலே நிரம்பினதோரேரி பொறாமல் நெளித்து உடையுமாபோலே; "மயர்வற மதிநலமருளினன்" என்கிறவிடத்தில் கர்மஜ்ஞாநாநு க்ருஹீதையான பக்தியின் ஸ்தாநத்திலே பகவத் ப்ரஸாதமாய், அதடியாக பரமபக்தி தொடங்கி பிறக்கையாலே, ஜ்ஞாநம் முதலிலே பரபக்தி ரூபமாய், பரபக்தியானது பரஜ்ஞாநமாய், பரஜ்ஞாநமானது பரமபக்தியாய், "அச்யுத பக்தி தத்வ ஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ சுபைர் வசோபி:" என்கிறபடியே அந்த பரபக்த்யாதிகளாய் நிறைந்த ஜ்ஞாநமாகிற அம்ருதாப்தியானது, ஆச்ரயமழியாமல் பரிவாஹாபேக்ஷை பிறந்து, "நிமியும் வாய்" என்கிறபடியே நெளிகிற வாய்கரையாலே "மிடைந்த சொல்" என்றகிபடியே சொற்கள்தான் "நாமிங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேணும்" என்று "என்னைக்கொள், என்னைக்கொள்" என்று மேல்விழுகையாலே நெருங்கிக் கொண்டு, "மொழிபட்டோடும்" என்கிறபடியே வசநரூபமாய் ப்ரவஹித்து இப்படி பரபக்த்யாத்யவஸ்த்தா த்ரயாபந்ந பக்திப்ரேரிதமாய் அவதரிக்கையாலே "அவாவி லந்தாதிகளா லிவையாயிரமும்" என்று பக்தி பலாத்காரத்தாலே பிறந்தவந்தாதியான ஆயிரமென்று நிரூபகமாம்படியாய்த்தென்கை. ஆக, இவர் இப் ப்ரபந்தமருளிச் செய்கைக்கடியான ப்ராவண்யம் பிறந்த காலமும் அருளிச்செய்யத் தொடங்கின காலமும், இதினுடைய ஸர்வாதிகாரத்வமும், ரஸ்யதையும், அவதரித்த க்ரமமும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – (நீர்பால் நெய்யமுதாய் நிரம்பின ஏரி) - நீரானது பாலாக, பாலானது நெய்யாக, நெய்யானது அமிர்தமாக, அந்த அமிர்தத்தால் நிரம்பிய ஒரு ஏரி. (நெளிக்குமாபோலே) - தாங்க இயலாமல் தளர்ந்து உடைவது போன்று. (பரபக்தி ஆதிமய

 Email:sridharan_book@yahoo.co.in

ஜ்ஞாந அம்ருத அப்தி) – திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளினன் - என்பதில் கர்மம், ஞானம் ஆகியவை காரணமாக ஏற்படுகின்ற பக்தியின் இடத்தில் பகவானுடைய ப்ரஸாதமாக, அதன் காரணமாக பரபக்தி தொடக்கமாகப் பிறப்பதால், ஞானம் முதலில் பரபக்தி ரூபமாகவும், பரபக்தி என்பது ப்ரஜ்ஞானமாகவும், ப்ரஜ்ஞானமானது பரமபக்தியாகவும். ஸ்தோத்ரரத்னம் (3) - அச்யுத பக்தி தத்வ ஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ சுபைர் வசோபி: - ஸர்வேச்வரனிடம் கொண்ட பக்தி, உண்மையான ஞானம், இவையாக உள்ள அமிர்தக்கடலில் வெள்ளம் போன்ற மங்களமான திருவாக்கு மூலமாக - என்பதற்கு ஏற்ப பரபக்தி முதலானவற்றால் நிறைந்துள்ள ஞானம் என்ற அமிர்தக்கடலானது. (நிமிகிற வாய்கரை) - தான் ஈடுபட்டு நிற்பதற்கு ஏற்றபடி அழியாமல் நிறைந்து நிற்கவேண்டும் என்ற விருப்பம் உண்டாகி, திருவாய்மொழி (6-5-2) – நிமியும் வாய் - என்பதற்கு எற்ப நெளிகின்ற வாய்கரையில். (மிடைந்து) - திருவாய்மொழி (1-7-11) – மிடைந்த சொல் - என்பதற்கு ஏற்ப சொற்கள் அனைத்தும் “நாம் இங்கு இருந்து கைங்கர்யம் செய்யவேண்டும்” என்று எண்ணி, “என்னைப் பயன்படுத்தவேண்டும், என்னைப் பயன்படுத்தவேண்டும்” என்று நம்மாழ்வாரிடம் விழுந்தபடி நெருங்கி நின்று. (மொழிபட்டு) – திருவாய்மொழி (8-10-5) – மொழி பட்டோடும் - என்பதற்கு ஏற்ப சொற்கள் வசந ரூபமாகப் பெருகி நின்று, பரபக்தி முதலான மூன்று நிலைகளை அடைந்த பக்தியால் தூண்டப்பெற்று அவதரிக்கிறது. ஆகவே, (அவாவில் அந்தாதி என்று பேர் பெற்றது) – திருவாய்மொழி (10-10-11) – அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும் - என்பதற்கு ஏற்ப பக்தியின் வேகத்தால் பிறந்த அந்தாதியான ஆயிரம் என்ற பெயர் பெற்றது. இப்படியாக இந்த ப்ரபந்தம் அருளிச்செய்தமைக்குக் காரணமாக உள்ள ப்ரேமை பிறந்த காலத்தையும், அருளிச்செய்த காலத்தையும், இது அனைவருக்குமே ஏற்றதாகும் என்பததையும், இதன் இனிமையையும், அவதரித்த முறையையும் உரைத்தார்.

189. மனஞ்செய் எல்லையில் ஞான வின்பத்தை நின்மலமாக வைத்தவர் ஞனப்பிரானை ஞானத்துவைம்மி னென்றவிது, தத்வ விவேக நித்யத்வாநித்யத்வ நியந்த்ருத்வ ஸௌலப்ய ஸாம்யாஹங்காரேந்த்ரிய தோஷ பல மந: ப்ராதாந்ய கரணநியமந ஸுக்ருதி பேத தோவாஸுர விபாக விபூதியோக விச்வரூப தர்சந ஸாங்கபக்தி ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே அன்றோதிய கீதா ஸமமென்னும்.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**குறிப்பு** – இந்தச் சூர்ணைக்கான வ்யாக்யானத்தில் முதல் பகுதியில் ஸ்ரீகீதையின் விளக்கங்களையும், இரண்டாவது பகுதியில் அந்த விளக்கங்களுக்கு ஏற்ப உள்ள திருவாய்மொழியையும் அருளிச்செய்துள்ளார். ஆனால் இங்கு, அந்தந்த கீதா வ்யாக்யானத்தைத் தொடர்ந்து, அதற்கான திருவாய்மொழி வ்யாக்யானம் உள்ளது போன்றி மாற்றி தரப்பட்டுள்ளது. இது படிப்பதற்கு எளிதாக இருக்கும் என்று கருதியே இவ்விதம் அமைக்கப்பட்டது.

**அவதாரிகை** - இனிமேல் இப் ப்ரபந்த ப்ரதிபாத்யார்த்தங்களை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, அதில் ப்ரதமத்திலே, ஸாக்ஷாத் க்ருத பகவத் தத்வரானவிவர் ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவநார்த்தோபதேசம் பண்ணின இப் ப்ரபந்தம் ப்ரதிபாத்யார்த்த ஸாம்யத்தாலே பகவத் ப்ரணீத கீதோபநிஷத் ஸமமாகச் சொல்லப்படுமென்கிறார் (மனம்செய்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இனி இந்த ப்ரபந்தத்தில் கூறப்படுகின்ற ஆழ்பொருள்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துரைக்கத் திருவுள்ளம் பற்றுகிறார். முதலில் பகவத்விஷயம் குறித்து உள்ளது உள்ளபடி நேரடியாக அறிந்தவராகிய நம்மாழ்வாரால், இந்த உலகில் உள்ள அனைத்து மக்களும் கரையேறுவதற்காக உபதேசிக்கப்பட்ட இந்த ப்ரபந்தத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கருத்துக்களின் ஒற்றுமை காரணமாக, இது பகவானால் கூறப்பட்டதான கீதோபநிஷத்திற்கு ஒப்பாக உள்ளது என்று இந்தச் சூர்ணையில் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது (மனஞ்செய் எல்லையில் ஞானவின்பத்தை) "எல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாமே மனஞ்செய் ஞானத்துன் பெருமை" என்றும், "எல்லையில் ஞானத்தன்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ காரணமாய் அபரிச்சேத்யமான ஸங்கல்ப ரூப ஜ்ஞாநத்தை யுடையனாய், "சூழ்ந்ததனில் பெரிய சுடர் ஞானவின்பம்" என்கிறபடியே ப்ரக்ருதி புருஷ தத்வங்களிரண்டும் தனக்குள்ளே யாம்படி வ்யாபித்து தான் அபரிச்சேத்யமாய் உஜ்ஜ்வலமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கிற ஸ்வரூபத்தை யுடையனான ஸர்வேச்வரனை; (நின்மலமாக வைத்தார்) "எனதாவியுள்ளே நிறைந்த ஞனமூர்த்தியாயை நின்மலமாக வைத்து" என்று பரிபூர்ண ஜ்ஞாந ஸ்வரூபனான

உன்னையென் னெஞ்சுக்குள்ளே விசததமாமாக வநுபவித்தென்னும்படி ஸாஷாத்கரித்தவாழ்வார்,

**விளக்கம்** – (மனஞ்செய் எல்லையில் ஞான இன்பத்தை) திருவாய்மொழி (1-5-2) – எல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாமே மனஞ்செய் ஞானத்துன் பெருமை - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்துப் பொருள்களுக்கும் காரணமாகவும், (எல்லையில்) - திருவாய்மொழி (3-10-8) – எல்லையில் ஞானத்தன் - என்பதற்கு ஏற்ப அளவிட இயலாத ஸங்கல்ப ரூபமான ஞானத்தை உடையவனாகவும். (ஞான இன்பத்தை) - திருவாய்மொழி (10-10-10) – சூழ்ந்ததனில் பெரிய சுடர் ஞானவின்பம் – என்பதற்கு ஏற்ப ப்ரக்ருதி மற்றும் புருஷன் ஆகிய இரண்டு தத்வங்களும் தனக்குள்ளே இருக்கும்படியாக எங்கும் வ்யாபித்து, தான் அளவுபடுத்தி அறிய இயலாதவனாகவும், ப்ரகாசமாகவும், ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றை லக்ஷணமாக உள்ள ஸ்வரூபம் கொண்டவனாகவும் உள்ள ஸர்வேச்வரனை. (நின்மலமாக வைத்தவர்) – திருவாய்மொழி (4-7-7) - எனதாவியுள்ளே நிறைந்த ஞனமூர்த்தியாயை நின்மலமாக வைத்து – என்பதற்கு ஏற்ப "பரிபூர்ணமான ஞான ஸ்வரூபமாக உள்ள உன்னை எனது நெஞ்சத்தில் மிகவும் தெளிவாக வைத்து அனுபவித்தபடி" என்று நேரடியாகக் கண்டு அனுபவித்த நம்மாழ்வார்.

**வ்யாக்யானம்** - (ஞானப்பிரானை ஞானத்துவைம்மி மென்றவிது) "இருங்கற்பகஞ்சேர் வானத்தவர்க்கு மல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் எறிதிரை வையம் முற்று மேனத் திருவாயிடந்த ஞானப்பிரானை யல்லாவில்லை நான் கண்ட நல்லது" என்று ப்ரளயார்ணவ மக்நையான பூமியை மஹாவராஹமா யுத்தரித்த ஜ்ஞாந சக்திகளையும் ஸ்வாமித்வ ப்ராப்தியையு முடையனாய் ச்லோக த்வய முகத்தாலே சரமோபாயத்தை வெளியிடுகையாலே ஜ்ஞாநோபகாரகனுமா யிருக்கிறவனை யொழிய ஸர்வர்க்கு முஜ்ஜீவந ஹேதுவாயிருயிருப்ப தொன்றில்லை, இது நானறுதியிட்ட விலக்ஷணமான வர்த்தம் என்று ப்ரதம ப்ரபந்தத்தி லருளிச்செய்த விஷயத்தை உபாயமாகப் பற்றச் சொல்லுகிறவளவில் "திருக்குருகூரதனையுளங்கொள் ஞானத்துவைம்மி னும்மை யுய்யக் கொண்டு போகுறில்" என்று உஜ்ஜீவிக்க வேண்டியிருந்தீர்களாகில் அவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசத்தை உங்கள் மாநஸ ஜ்ஞாநத்துக்கு விஷயமாக்குங்கோளென்று ஸம்ஸாரிகளைக் குறித்து உபதேசித்த இப்பரபந்தம்


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (ஞானப்பிரானை) - திருவிருத்தம் (99) – இருங்கற்பகஞ்சேர் வானத்தவர்க்கு மல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் எறிதிரை வையம் முற்று மேனத் திருவாயிடந்த ஞானப்பிரானை யல்லாவில்லை நான் கண்ட நல்லது - என்பதற்கு ஏற்ப, "ப்ரளய நீரில் மூழ்கிக் கிடந்த பூமியை மஹாவராஹனாக அவதரித்து மேலே உயர்த்திய ஞானசக்திகளையும், எஜமானனாக உள்ள தன்மையையும் கொண்டவனாகவும், வராஹ சரம ச்லோகம் மூலம் சரம உபாயத்தை வெளியிடுவதால் ஞானம் ஏற்படுத்த ஏற்றதான உபகாரங்கள் செய்தபடி உள்ளவனாகவும் இருக்கின்ற இவன் அல்லாமல் அனைவரும் கரை ஏறுவதற்கான உபாயம் வேறு ஏதும் இல்லை என்பதே நாம் உறுதியாக அறிந்த விஷயமாகும்", என்று முதல் ப்ரபந்தமாக உள்ள திருவிருத்தத்தில் அருளிச்செய்த விஷயத்தையே உபாயமாகப் பற்றவேண்டும் என்று கூறுகிறார். (ஞானத்தை வைம்மின் என்ற இது) – திருவாய்மொழி (4-10-9) – திருக்குருகூரதனையுளங்கொள் ஞானத்துவைம்மின் உம்மை உய்யக் கொண்டு போகுறில் - என்பதற்கு ஏற்ப "கரையேற வேண்டும் என்று முடிவு செய்தீர்கள் என்றால், அவன் நித்யமாக வசிக்கின்ற திவ்யதேசத்தை உங்களுடைய மனதின் ஞானத்திற்கு இலக்காகக் கொள்வீராக", என்று ஸம்ஸாரிகளைக் குறித்து உபதேசிக்கப்பட்ட இந்த ப்ரபந்தம்.

**வ்யாக்யானம்** - தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தமாக வவதரித்தருளின க்ருஷ்ணன். "அஸ்த்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சஸ்த்ராவதரணம் க்ருதம்" என்கிறபடியே, அஸ்த்தாநேயுண்டான பந்து ஸ்நேஹ காருண்யங்களாலும், ஸ்வதர்மத்தில் அதர்ம புத்தியாலும் கலங்கி, "நயோத்ஸ்யாமி" என்று யுத்தாந் நிவ்ருத்தனாய், "யச் ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சித ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்ற வர்ஜுனனைத் தெளிவித்து யுத்தே ப்ரவ்ருத்தனாக்குகை வ்யாஜமாக, "அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய" என்கிறபடியே லோகத்துக்கு உஜ்ஜீவந சாஸ்த்ரமாம்படி எல்லாப் பொருளும் விரித்த ஸ்ரீகீதையில், (தத்வவிவேக) ப்ரதமத்திலே, தேஹாத்மாபிமாந கார்யமான பந்து ஸ்நேஹத்தையும் வத பீதியையும் மாற்றுகைக்காக தத்வஜ்ஞாநத்தை யுபதேசிக்கத் தொடங்கின வளவிலே, "ந த்வே வாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்" என்று ஸர்வேச்வரனான தன்னோபாதி ஸகலாத்மாக்களும் நித்யரென் றருளிச்செய்கிற வழியாலே, ஜீவபர பேதம், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதமாகிற விவற்றை தர்சிப்பித்து, "தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா

தேஹாந்தர ப்ராப்தி: தீரஸ் தத்ர நமுஹ்யதி” இத்யாதியாலே ப்ரக்ருத்யாத்ம விவேகத்தையும் சொல்லுகையாலே தத்வங்களினுடைய விவேகத்தையும் … இவரும் “அடியேனுள்ளான்” என்கிறவிடத்திலே சாப்தமாகவும் ஆர்த்தமாகவும் ஜீவபர பேதமும், ஜீவர்களுக்கு பரஸ்பர பேதமும், “சென்று சென்று பரம்பரமாய்” என்று ஆத்மாவுக்கு தேஹாதி விலக்ஷணத்வத்தைச் சொல்லுகையாலே ப்ரக்ருத்யாத்ம விவேகமுமாகிற தத்வ விவேகத்தையும்,

**விளக்கம்** – (தத்வ விவேக) தர்மத்தை நன்றாக நிலைநிறுத்துவதற்காக அவதரித்த க்ருஷ்ணன். கீதார்த்த ஸங்க்ரஹம் (5) – அஸ்த்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சஸ்த்ராவதரணம் க்ருதம் - வரச்கூடாத இடத்தில் ஏற்பட்டதான உறவினர்கள் மீது கொண்ட அன்பு, கருணை போன்றவற்றாலும், தனக்கே உரிய தர்மத்தை அதர்மம் என்று உணர்ந்ததாலும் கலங்கியபடி நின்று, தன்னைச் சரணம் புகுந்த அர்ஜுனனுக்காக இந்த கீதாசாஸ்த்ரம் தொடங்கப்பட்டது – என்று கூறுவதற்கு ஏற்ப, வரக்கூடாத இடத்தில் ஏற்பட்ட உறவினர் மீது அன்பு மற்றும் கருணை காரணமாகவும், தனது தர்மத்தை அதர்மம் என்று எண்ணியதாலும் கலங்கி, நயோத்ஸ்யாமி - என்பதற்கு ஏற்ப யுத்தம் செய்யவதில்லை என்று தீர்மானித்து கைவிட்டவனாய், கீதை (2-7) – யச் ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சித ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் - எனக்கு எது உயர்வை அளிக்கும் என்று நீ தீர்மானித்துள்ளாயோ, அதனை உனது சிஷ்யனாக உன்னைச் சரணடைந்து நிற்கும் எனக்கு உபதேசம் செய்வாயாக - என்று நின்ற அர்ஜுனனுடைய அறிவைத் தெளிய வைத்து, அவனை யுத்தத்தில் ஈடுபடுத்தும்விதமாகக் கூறுகின்ற உபதேசம் என்று ஒரு காரணத்தை ஏற்படுத்திக்கொண்டு, திருவாய்மொழி (4-8-6) - அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவர் அறிய – என்பதற்கு ஏற்ப “உலகில் உள்ள அனைவரும் கரையேறும் விதமாக அமைந்துள்ல ஒரு சாஸ்த்ரம்” என்று அனைத்துப் பொருள்களும் மிகவும் விரிவாக உரைக்கப்பட்ட ஸ்ரீமத்பகவத்கீதையின் தொடக்கத்தில், சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியதன் விளைவாக ஏற்பட்டதான உறவினர்கள் மீது உள்ள அன்பு மற்றும் கொல்வதில் உள்ள அச்சம் போன்றவற்றை மாற்றும்விதமாக தத்வஞானத்தை உபதேசிக்கத் தொடங்கும்போது, கீதை (2-12) – ந த்வே வாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் – இதற்கு முன்னால் உள்ள காலங்களில் நான் இல்லாமல் இல்லை, நீயும் இல்லாமல் இல்லை, இந்த அனைவரும்

இல்லாமல் இல்லை; இனிவரும் காலங்களிலும் நாம் இல்லாமல் இருப்போம் என்பதும் இல்லை - என்று ஸர்வேச்வரனாகிய தன்னைப் போன்றே அனைத்து ஆத்மாக்களும் நித்யர்களே ஆவர் என்று அருளிச்செய்ததன் மூலம், ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவுக்கு இடையே உள்ள வேறுபாடு, ஒவ்வொரு ஜீவாத்மாக்களிலும் உள்ள வேறுபாடு ஆகியவற்றை உபதேசித்தான். தொடர்ந்து கீதை (2-13) – தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தர ப்ராப்தி: தீரஸ் தத்ர நமுஹ்யதி – சரீரத்தில் உள்ள ஆத்மா எவ்வாறு சரீரத்தின் இயற்கையான இளமை, வாலிபம், வயோதிகம் ஆகியவற்றை அடைகிறதோ அது போன்றே வேறு ஒரு சரீரத்தையும் அடைகிறது; ஆகவே இதனைக் கண்டு தீரன் வருந்துவதில்லை - என்பது போன்றவை மூலம், சரீரமும் ஆத்மாவும் வெவ்வேறு என்பது உபதேசிக்கப்படுகிறது; இதன் மூலம் தத்வங்களை வேறுபடுத்திக் காண்கின்ற அறிவு ஏற்படுத்தப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும், திருவாய்மொழி (8-8-2) – அடியேன் உள்ளான் - என்ற பாசுரத்தில் உள்ள பதங்கள் மூலம் ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவிற்கு உள்ள பேதம், ஜீவாத்மாக்களில் ஒவ்வொருத்தருக்கும் இடையில் உள்ள பேதம் ஆகியவற்றையும், திருவாய்மொழி (8-8-5) – சென்று சென்று பரம்பரமாய் - என்பதன் மூலம் ஆத்மாவிற்கும் சரீரத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் கூறுவதால் தத்வங்களுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை உபதேசித்தார்.

**வ்யாக்யானம்** - (நித்யவாநித்யத்வ) "அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாச் சரீரிண அநாசிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத", "ந ஜாயதே ந ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதாவா நபூய: அஜோ நித்ய சாச்வதோயம் புராணோ நஹந்யதே ஹந்யமாநே சரீரே", "வாஸாம்ஸி ஜீர்ணாநியதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி, ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ" இத்யாதிகளாலே ஆத்மநித்யத்வ தேஹாநித்யத்வங்களையும் … (இவரும்) "மின்னின் னிலையில மன்னுயிராக்கைகள்" என்றும், "உள்ளது மில்லதும்" என்றும் சிதசித் தத்வங்களின் நித்யத்வாநித்யத்வங்களையும்,

**விளக்கம்** – ( நித்யத்வ அநித்யத்வ) – கீதையில் (2-18) - அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாச் சரீரிண அநாசிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத – நித்யமாகவும், அழிவற்றவனாகவும், அறிபவனாகவும் உள்ள ஆத்மாவின் இந்தச் சரீரங்கள் அனைத்துமே அழியக்கூடியவை என்றே கூறப்பட்டுள்ளது. ஆகவே நீ

கலங்காமல் யுத்தம் செய்வாயாக – என்றும், கீதை (2-20) – ந ஜாயதே ந ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதாவா நபூய: அஜோ நித்ய சாச்வதோயம் புராணோ நஹந்யதே ஹந்யமாநே சரீரே - இந்த ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை; முன்பு உண்டாகி, பின்பு இல்லாமல் போகப்போகிறான் என்பதும் இல்லை; இவன் பிறப்பற்றவன், நித்யமானவன், எப்போதும் உள்ளவன், பழமையானவன்; சரீரம் கொல்லப்பட்டாலும் ஆத்மா அழிவதில்லை - என்றும், கீதை (2-22) - வாஸாம்ஸி ஜீர்ணாநியதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி, ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ - மனிதன் கிழிந்த துணிகளைக் களைந்துவிட்டு புதிய துணிகளை எவ்விதம் அணிந்து கொள்கிறானோ அது போன்றே ஆத்மாவும் பழைய சரீரத்தை விட்டு புதிய சரீரத்தை எடுத்துக்கொள்கிறது - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம், ஆத்மாவின் நித்யத்தன்மை மற்றும் சரீரத்தின் அநித்யத்தன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-2-2) – மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள் – என்றும், திருவாய்மொழி (1-2-8) – உள்ளதும் இல்லதும் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், சேதநத்தின் நித்யத்வம் மற்றும் அசேதநத்தின் அநித்யத்வம் ஆகியவற்றை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (நியந்த்ருத்வ) "பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்தி ரேவச, அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி ரஷ்டதா", "அப்ரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்" என்கிறபடியே சேதநாசேதந சரீரியாய்; "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம போஹநஞ்ச" என்றும், "ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந திஷ்ட்டதி, ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ ஜநஹ்ருதி ஸ்த்தனாய் நின்று ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் பண்ணுவிக்கையாகிற ஈச்வரனுடைய நியந்த்ருத்வத்தையும், ... (இவரும்) "உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்து" என்றும், "கரந்த சிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும் கரந்தெங்கும் பரந்து" என்றும் அந்த சேதநாசேதந சரீரியாய், "நின்றனர்" இத்யாதிப்படியே அவற்றின் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ஸ்வாதீநமாம்படியிருக்கிற வவனுடைய நியந்த்ருத்வத்தையும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (நியந்த்ருத்வ) – கீதை (7-4) - பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்தி ரேவச, அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி ரஷ்டதா – பூமி, நீர், அக்னி, வாயு, ஆகாசம், மனம், புத்தி, அஹங்காரம் என்று என்னுடைய இந்த ப்ரக்ருதியானது எட்டுவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது - என்றும், கீதை (7-5) - அப்ரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் – இப்படியாகப் பிரிக்கப்பட்டுள்ள இது "அபரா" என்னும் என்னுடைய ஜடப்ரக்ருதி ஆகும். இதனைக் காட்டிலும் வேறாக உள்ள எந்த ஒரு ப்ரக்ருதிய்னால் அனைத்தும் தாங்கப்பட்டுள்ளதோ அதுவே என்னுடைய ஜீவரூபமான "பரா" என்னும் ப்ரக்ருதி ஆகும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து சேதந அசேதநங்களையும் தனது சரீரமாகக் கொண்டவனாகவும்; கீதை (18-61) - ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந திஷ்ட்டதி, ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா – சரீரம் என்னும் இயந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள அனைத்து ஜீவாத்மாக்களையும், அவற்றின் அந்தர்யாமியாக உள்ள ஈச்வரன், தனது மாயை மூலம் அவரவர்களுடைய கர்மங்களுக்கு ஏற்ப சுழலும்படிச் செய்து, அவர்களுடைய இதயத்தில் நிற்கிறான் - என்றும், கீதை (15-15) - ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம போஹநஞ்ச – நானே அனைத்து உயிர்களுடைய இதயத்தில் உள்ளேன். என்னிடமிருந்தே ஞாபகமும் மறதியும் ஏற்படுகின்றன - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து உயிர்களுடைய இதயத்தில் நின்று அவர்கள் தங்கள் செயல்களைச் செய்தல் மற்றும் செய்யாமல் இருத்தல் ஆகியவற்றை நியமித்தபடி உள்ள ஈச்வரனுடைய நியமிக்கும் தன்மையானது கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-1-7) – உடல்மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்து - என்றும், திருவாய்மொழி (1-1-10) - கரந்த சிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும் கரந்தெங்கும் பரந்து – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், அனைத்து சேதந அசேதநங்களைச் சரீரமாகக்கொண்டவன் என்பதையும்; திருவாய்மொழி (1-1-6) – நின்றனர் - என்பதன் மூலம் அனைத்து பொருள்களுடைய செயல் புரிகின்ற நிலை, செயல் புரியாமல் உள்ல நிலை போன்றவை தன் வசப்பட்டவை என்பதாக இருக்கின்ற நியமிக்கும் தன்மையைக்கொண்டவன் என்பதையும் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** – (ஸௌலப்ய) "தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந:" என்றும், "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்த்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்றும் பக்திமான்கள் நிமித்தமாகவும் அவதார ப்ரயுக்தமாகவு

 **Email:**sridharan_book@yahoo.co.in

முண்டான வவன் ஸௌலப்யத்தையும், ... (இவரும்) "பத்துடை யடியவர்க் கெளியவன்" என்றும், "பல பிறப்பாய் எளிவரு மியல்வினன்" என்றும் ஆசாலேசமுடையாரைப் பற்றவும் அவதார ப்ரயுக்தமாகவு முண்டான வவனுடைய ஸௌலப்யத்தையும்,

**விளக்கம்** – (ஸௌலப்ய) கீதையில் (8-14) - தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந: – எப்போதும் இடைவிடாமல் என்னுடன் இருக்கவேண்டும் என்ற ஆசை கொண்ட ஞானிக்கு நான் சுலபமாக அடையும்படி உள்ளேன் - என்றும், கீதை (4-8) - பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்த்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே - சாதுக்களைக் காப்பாற்றவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பக்தியில் நிலைநிற்பவர்கள் காரணமாகவும், தனது அவதாரம் காரணமாகவும் வெளிப்படுவதான எளிமைத்தன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும், திருவாய்மொழி (1-3-1) – பத்துடை அடியவர்க்கு எளியவன் - என்றும், திருவாய்மொழி (1-3-2) – பல பிறப்பாய் எளிவரும் இயல்வினன் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அவன் மீது சிறிதளவே ஆசை கொண்டிருந்தாலும் அவர்களைப் பற்றுவதற்காகவும், அவதாரம் காரணமாகவும் அவனுக்குள்ள எளிமையைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - (ஸாம்ய) "ஸமோஹம் ஸர்வபூதேஷு நமே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:" என்று அவனுடைய ஆச்ரயணீயத்வே ஸர்வஸாம்யத்தையும், ... (இவரும்) "முற்றவும் நின்றனன்" என்று அவனுடைய ஆச்ரயணீயத்வே ஸாம்யத்தையும். (அஹங்கார தோஷ) "அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமதி மந்யதே" என்று அஹங்கார தோஷத்தையும், ... (இவரும்) "நீர் நுமதென்றிவை வேர் முதல்மாய்த்து" என்று ஸம்ஸார ஹேது அதுவேயாகச் சொல்லுகையாலே அஹங்கார தோஷத்தையும்.

**விளக்கம்** - (ஸாம்ய) - கீதையில் (9-29) - ஸமோஹம் ஸர்வபூதேஷு நமே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: - அனைத்து உயிர்களிடமும் நான் சமமாகவே உள்ளேன். எனக்குப் பகைவரோ விருப்பமானவரோ என்று பேதம் இல்லை - என்று அவனை ஆராதிக்கும்விதத்தில் எந்த வேறுபாடும் இன்றியுள்ள நிலை கூறப்பட்டது. இதே போன்று நம்மாழ்வாரும் (1-2-6) – முற்றவும் நின்றனன் - என்பதன் மூலம் அவனைக் அண்டும் முறைகளில் அவன் அனைவருக்கும் சமமாகவே உள்ளதை அருளிச்செய்கிறார். (அஹங்கார தோஷம்) -


Email:sridharan_book@yahoo.co.in

கீதையில் (3-27) - அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமதி மந்யதே - அஹங்காரத்தால் மயக்கப்பட்ட புத்தியைக் கொண்டவன், தானே இவற்றைச் செய்வதாக எண்ணுகிறான் - என்று அஹங்காரத்தினுடைய தோஷம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-2-3) – நீர் நுமதென்றிவை வேர் முதல்மாய்த்து - என்பதன் மூலம் ஸம்ஸாரத்திற்கான காரணமாக அஹங்காரத்தை உரைப்பதால், அதன் தோஷத்தை அருளிச்செய்தார் என்றாகிறது.

**வ்யாக்யானம்** - (இந்த்ரியபல) "யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:" என்று இந்த்ரிய ப்ராபல்யத்தையும், ... (இவரும்) "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையுஞ் செறுமைம்புலன்" என்று இந்த்ரிய பலத்தையும். (மந: ப்ராதாந்ய) "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" என்றும், "அஸம்சயம் மஹோபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் அப்யாஸேநது கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே" என்றும் மற்றை யிந்த்ரியங்களில் வைத்துக் கொண்டு மநஸ்ஸினுடைய ப்ராதாந்யத்தையும், ... (இவரும்) "மனத்தை வலித்து" என்று மநோநியமநத்தினருமை சொல்லுகையாலே மந: ப்ராதாந்யத்தையும். (கரணநியமந) "தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டதா" என்றும், "ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்த்யச" என்றும் கரணநியமநத்தையும், ... (இவரும்) "உள்ளமுரை செயலுள்ள விம்மூன்றையு முள்ளிக்கெடுத்து" என்று கரண நியமநத்தையும்.

**விளக்கம்** – (இந்த்ரிய பலம்) - கீதை (2-60) – யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: - பற்றுதல் அழியாத காரணத்தால், மனதைக் கலக்கும் இந்திரியங்களானவை, அறிவுள்ள மனிதனின் புத்தியையும் மனதையும் கூடக் கவர்ந்து இழுக்கின்றன - என்பதன் மூலம் இந்த்ரியங்களின் வலிமையைக் கூறியது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (7-1-6) - விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன் - என்பதன் மூலம் இந்த்ரியங்களுடைய வலிமையை அருளிச்செய்தார். (மந: ப்ராதாந்ய) - கீதை (6-34) - சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் – க்ருஷ்ணா! இந்த மனம் எதிலும் நிலையாக நிற்பதில்லை.


Email:sridharan_book@yahoo.co.in

இந்த்ரியங்களை எளிதாக மயக்கவல்லது, உறுதியும் வலிமையும் கொண்டது, அதனை அடக்குவது என்பது காற்றை அடக்குவதைப் போன்று கடினமானது - என்றும், கீதை (4-35) - அஸம்சயம் மஹோபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் அப்யாஸேநது கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே – இந்த மனம் சஞ்சலம் நிறைந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இதனை வசப்படுத்துவது கடினமே ஆகும். ஆனால் தொடர்ந்த பயிற்சி மற்றும் பற்றின்மை மூலம் இது வசப்படுத்தப்படுகிறது - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம், மற்ற இந்த்ரியங்களைக் காட்டிலும் மனதிற்கு உள்ள முதன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (5-1-4) – மனத்தை வலித்து - என்பதன் மூலம், மனத்தை அடக்குவதில் உள்ள கடினத்தை உரைப்பதால் மனத்தின் முதன்மையை அருளிச்செய்தார் என்றாகிறது. (கரண நியமந) - கீதையில் (2-61) - தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டதா - அனைத்து புலன்களையும் தன்வசப்படுத்திய ஒருவன், என்னையே உயர்ந்த கதி என்று எண்ணியபடி த்யானித்தில் இருக்கவேண்டும்; காரணம் யார் ஒருவனுடைய இந்த்ரியங்கள் கட்டுப்பட்டு உள்ளனவோ அவனுடைய புத்தியானது ஸ்திரமாக உள்ளது - என்றும், கீதை (8-12) - ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்த்யச - ஞானத்தின் வழியாக உள்ள அனைத்து இந்த்ரியங்களையும் மற்ற விஷயங்களிருந்து விலக்கி - என்றும் உள்ள ச்லோகங்களால் கரணங்களை அடக்குதல் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (2-1-8) – உள்ளம் – என்பதன் மூலம், கரணங்களை அடக்குவது குறித்து அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (ஸுக்ருதிபேத) “சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுர் அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப” என்று ஸுக்ருதிகளுடைய பேதத்தையும், … (இவரும்) “பொருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங் கொள்வர்” என்கையாலே ஆர்த்தனான ப்ரஷ்டைச்வர்ய காமன், “இறுகலிறப்பென்னும்” என்கையாலே ஜிஜ்ஞாஸுவான கேவலன், “குணங்கொள் நிறைபுகழ் மன்னர்” இத்யாதியாலே அர்த்தார்த்தியான அபூர்வைச்வர்ய காமன், “திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மின்” என்கையாலே ஜ்ஞாநியாகிற பகவச்சரணார்த்தி என்கிற ஸுக்ருதி பேதத்தையும். (தேவஸுர விபாக) “த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச”, “தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீமதா” என்று தேவாஸுர

விபாகத்தையும், ... (இவரும்) "அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல்" என்றும், "நண்ணாவசுரர் நல்லவமரர்" என்று தேவாஸுர விபாகத்தையும்.

**விளக்கம்** – (ஸுக்ருதிபேத) - கீதை (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுர் அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப - அர்ஜுனா! தான் இழந்த செல்வத்தைப் பெற விரும்புகிறவன், கைவல்யத்தை விரும்புகிறவன், செல்வத்தைப் புதிதாக அடைய விரும்புகிறவன், என்னைக் குறித்து அறிய விரும்புகிறவன் ஆகிய நான்குவிதமான மனிதர்கள் என்னை ஆராதிக்கிறார்கள் - என்று நன்மையுடன் கூடிய மனிதர்களில் உள்ள வேறுபாடு கூறுகிறது. இதனைப் போன்றே நம்மாழ்வாரால் திருவாய்மொழியில் (4-1-1) - பொருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங் கொள்வர் – என்பதன் மூலம் இழந்து செல்வத்தைப் பெறவிரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-10) - இறுகலிறப்பென்னும் - என்று கைவல்யத்தை விரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-8) - குணங்கொள் நிறைபுகழ் மன்னர் - என்று புதிய செல்வத்தை விரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-1) – திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மின் - என்று பகவானைச் சரணம் புகுந்த ஞானியும் கூறப்பட்டனர். (தேவாஸுர விபாக) - கீதையில் (16-6) - த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச - இந்த உலகில் தெய்வப்பண்புகள் கொண்டவர்கள், அசுரப்பண்புகள் கொண்டவர்கள் என இருவிதமான பிறவிகள் உண்டு - என்றும், கீதை (16-5) - தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீமதா - தெய்வப்பண்பு மோக்ஷத்திற்கும், அசுரப் பண்பு பந்தம் என்ற தாழ்ந்த நிலைக்கும் காரணமாகிறது - என்றும் உள்ள ச்லோகங்களால் தேவர்கள் மற்றும் அசுரர்கள் ஆகியவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (5-2-5) - அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் - என்றும், திருவாய்மொழி (10-7-5) - நண்ணாவசுரர் நல்லவமரர் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் தேவர்கள் மற்றும் அஸுரர்கள் ஆகியோரின் வேறுபாட்டை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (விபூதியோக) "ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்ம நச்சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே", "ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந்" இத்யாதியாலே விபூதியோகத்தையும், ... (இவரும்) "புகழுநல்லொருவன்", "நல்குரவும்", "மாயாவாமனன்" இவைகளிலே விபூதியோகத்தையும். (விச்வரூப தர்சந)

“பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந்” இத்யாதியாலே விச்வரூப தர்சநத்தையும், … (இவரும்) “நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்” என்று விச்வரூப தர்சனத்தையும். (ஸாங்க பக்தி) “மந்மநா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:” என்று அங்க ஸஹிதையான பக்தியையும், … (இவரும்) “வணக்குடைத் தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டுணக்குமின் பசையற” என்றும், “மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை நாவிற் கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே” என்றும், “மாலை நண்ணி காலை மாலை கமல மலரிட்டு தொழுதெழுமினோ” என்றும் ஸாங்க பக்தியையும்.

**விளக்கம்** - (விபூதி யோக) – கீதையில் (10-19) – ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்ம நச்சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே – குருவம்சத்தில் வந்தவனே! எனது விபூதிகள் தெய்வீகமானவை ஆகும். அவற்றில் சிலவற்றை உனக்கு உரைக்கிறேன்; காரணம் அவற்றுக்கு முடிவு என்பது இல்லை - என்றும், கீதை (10-21) – ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந் – பன்னிரண்டு ஆதித்யர்களில் நான் விஷ்ணுவாகவும், இருளைப் போக்கும் பொருள்களில் நான் சூரியனாகவும் உள்ளேன் - என்றும் உள்ள ச்லோகங்கல் மூலம் விபூதியோகம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (3-4-1) – புகழுநல்லொருவன் - என்றும், திருவாய்மொழி (6-3-1) - நல்குரவும்- என்றும், திருவாய்மொழி (7-8-1) – மாயாவாமனா - என்றும் உள்ள திருவாய்மொழிகளில் விபூதியோகத்தை அருளிச்செய்தார். (விச்வரூப தர்சநம்) - கீதையில் (11-5) - பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந் - க்ருஷ்ணா! உனது திருமேனியில் நான் அனைத்து தேவர்களையும், அனைத்து உயிரினங்களையும், தாமரையில் வீற்றுள்ள நான்முகனையும், சிவனையும், அனைத்து ரிஷிகளையும், ஸர்ப்பங்களையும் காண்கிறேன் - என்பது போன்ற ச்லோகங்களால் விச்வரூப தரிசனம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (6-9-1) நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனானாய் - என்பதன் மூலம் விச்வரூப தரிசனத்தை உரைத்தார். (ஸாங்க பக்தி) - கீதையில் (9-34) - மந்மநா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி

யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: - என்னிடமே மனதை நிலைநிறுத்துவாயாக; எனது பக்தனாக இருப்பாயாக; என்னை வணங்கி, பஜித்து, மனம் மற்றும் இந்த்ரியங்களுடன் கூடிய உனது சரீரத்தை என்னிடமே ஈடுபடுத்தி, நீ சரணம் அடையத்தக்க ஒரே இடம் என்று என்னையே கொள்வாயாக - என்பதன் மூலம் தகுந்த அங்கங்கள் கொண்ட பக்தி கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-3-5) - வணக்குடைத் தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டுணக்குமின் பசையற - என்றும், திருவாய்மொழி (5-2-9) - மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை நாவிற் கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே - என்றும், திருவாய்மொழி (9-10-1) – மாலை நண்ணி காலை மாலை கமல மலரிட்டு தொழுதெழுமினோ - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அங்கங்களுடன் கூடிய பக்தியை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (ப்ரபத்தி த்வைவித்யாதி) "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே", "தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத" என்று அங்கத்வேநவும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" இத்யாதியாலே ஸ்வதந்த்ரத்வேநவு மிரண்டுபடியான ப்ரபத்த்யுபதேசத்தைப் பண்ணினாப்போலே ... (இவரும்) "அவனுடையுணர்வும் கொண்டுணர்ந்து" என்று அவனருளிச்செய்த ப்ரபத்திரூப ஜ்ஞாநத்தை ஸஹாயமாகக் கொண்டு அத்தையறிந்தென்கையாலே பக்த்யங்கத்வேநவும் "மற்றோன்றில்லை", "சரணமாகும்" என்கிறவற்றாலே ஸ்வதந்த்ரத்வேநவும் இரண்டு வகையான ப்ரபத்தியையு முபதேசிக்கையாலே ஏதத் ப்ரதியார்த்த ஸாம்யத்தைக் கொண்டு "மாயனன்றோதிய வாக்கு" என்கிற ஸ்ரீகீதையோடொக்கச் சொல்லப்படுமென்கை. "ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே "ஜந்ம கர்மசமே திவ்யமேவம் யோவேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்றாப்போலே, "இவை பத்தும் வல்லாரமரரோடுயர்விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறை" என்று சொன்ன அவதார ரஹஸ்ய வைபவம், "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, தததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந:" என்றாப்போலே "பிரிவகையின்றி நன்னீர் தூய்ப்புரிவதுவும் புகைபூ" என்று சொன்னவவன் ஸ்வாராததை முதலாகக் கீழநுக்தங்களையும், தேஹாத்மாபிமாநிகளை க்ரமத்திலே ப்ராப்ய ஸாதநங்களி னெல்லையிலே மூட்டுகையும், ஸாத்யோபாயங்களிலே பரந்து ஸித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்குமிடத்தில் வைபவம் தோற்ற வெளியிடுகையுமானவற்றையும் நினைக்கிறது.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (ப்ரபத்தி த்வைவித்யம்) – கீதையில் (7-14) – தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே - அந்த உலகில் உள்ள அனைத்திற்கும் அப்பாற்பட்டதும், மூன்று குணமயமாக உள்ளதும் ஆகிய எனது மாயையானது கடப்பதற்கு அரிதே ஆகும்; யார் என்னைச் சரணம் புகுகிறார்களோ அவர்கள் இந்த மாயையை எளிதாகக் கடக்கிறார்கள் - என்றும், கீதை (18-62) - தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத – அனைத்துவிதங்களிலும் ஸர்வேச்வரனைக் காரணம் அடைவாயாக - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம் அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியும், கீதை (18-66) - ஸர்வதர்மாந் பரித்யஜ்ய – அனைத்து தர்மங்களையும் துறந்து - என்பதன் மூலம் சுதந்திரமானவன் என்பதை விடுத்த ப்ரபத்தியும் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-3-5) – அவனுடையுணர்வும் கொண்டுணர்ந்து - என்று அவன் அருளிச்செய்த ப்ரபத்தி குறித்த ஞானத்தைத் துணையாகக் கொண்டு, அதனை அறிதல் என்பதால் பக்திக்கு அங்கமாக உள்ள ப்ரபத்தியையும்; திருவாய்மொழி (9-1-7) – மற்றொன்றில்லை - என்றும், திருவாய்மொழி (9-10-5) – சரணமாகும் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் சுதந்திர ப்ரபத்தியையும் அருளிச்செய்தார். ஆக இப்படியாக நான்முகன் திருவந்தாதி (71) - மாயனன்றோதிய வாக்கு - என்பதற்கு ஏற்ப ஸ்ரீமத்பகவத்கீதையுடன் ஒன்றாகக் கூறப்படுகிறது. "ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே" என்பதில் உள்ள "ஆதி" என்ற பதம் மூலம் கீதையில் (4-9) - ஜந்ம கர்மசமே திவ்யமேவம் யோவேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந அர்ஜுனா! - எனது பிறப்பு மற்றும் செய்கை தெய்வீகமானவை ஆகும். அவற்றில் களங்கம் ஏதும் இல்லை. இவ்விதம் யார் அறிகிறானோ அவன் சரீரத்தை துறந்த பின்னர் மீண்டும் ஒரு பிறவியை அடையாமல் என்னையே அடைகிறான் - என்று கூறப்பட்டது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-3-11) – இவை பத்தும் வல்லாரமரரோடுயர்விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறை - என்பதன் மூலம் அவனுடைய அவதார ரஹஸ்யம் குறித்து உரைத்தார் என்பதும்; கீதையில் (9-26) - பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந: - யார் எனக்கு பக்தியுடன் இலை, மலர், பழம், தண்ணீர் போன்றவற்றைச் சமர்ப்பிக்கிறானோ, பக்தியுடன் பலன் எதிர்பாராமல் அளிக்கப்பட்ட அவற்றை நான் ப்ரியத்துடன் ஏற்கிறேன் - என்று கூறப்பட்டது போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-6-1) - பிரிவகையின்றி நன்னீர் தூய்ப்புரிவதுவும் புகை பூ - என்பதன் மூலம் எளிதாக ஆராதிக்கப்படக்கூடிய விதமாக அவன் உள்ளான்

என்பதும் கூறப்பட்டது. மேலும் சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியுள்ள ஸம்ஸாரிகளைச் சரியான வழியில் தகுந்த பேற்றினை அடைய வைக்கும் சாதனங்களில் ஈடுபடுத்துதல் மற்றும் ஸாத்ய உபாயங்களில் நிலை நின்று, ஸித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்கும் இடத்தில் வைபவத்தை வெளிப்படும்படியாக உரைத்தல் ஆகியவை காண்க.

190. அது தத்வோபதேசம்; இது தத்வ தர்சி வசனம்.

**அவதாரிகை** – ஆக ஸ்ரீகீதையோடு திருவாய்மொழிக்குண்டான ஸாம்யாம் சொல்லிற்று கீழ்; அதிலிதுக்குண்டான ஆதிக்யத்தைப் பல ஹேதுக்களாலும் சொல்லுகிறது மேல். ப்ரதமம் வக்த்ரு வைலக்ஷண்யத்தால் வந்த ஏற்றம் சொல்லுகிறது (அது தத்வோபதேசம்) இத்யாதியால்.

**விளக்கம்** - இப்படியாக ஸ்ரீமத்பகவத்கீதையுடன் திருவாய்மொழிக்கு உள்ள ஒப்புமையைக் கடந்த சூர்ணையில் அருளிச்செய்தார். அடுத்து ஸ்ரீமத்பகவத்கீதையைக் காட்டிலும் திருவாய்மொழிக்கு பல காரணங்களால் ஏற்றம் உண்டு என்பதை அருளிச்செய்யத் திருவுள்ளம் கொண்டார். நம்மாழ்வாருடைய பெருமை காரணமாகத் திருவாய்மொழிக்கு உள்ள ஏற்றத்தை முதலில் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அந்த ஸ்ரீகீதாப்ரபந்தம், "தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோமுகை, தத்வமேகோ மஹாயோகீ ஹரிர் நாராயண: பர:" என்கிறபடியே தத்வ பூதனான ஸர்வேச்வரன் தானே உபதேசித்தது. இப் ப்ரபந்தம், "தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:" என்று ஜ்ஞாநோபதேசத்துக்கு ஆப்ததமராக அவன்தானருளிச்செய்த தத்வதர்சிகளில் தலைவரான ஆழ்வார் வசநமென்கை. இத்தால் சொல்லிற்றாய்த்து "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ் ததா, மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய:", "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று இப்படி ஸ்வவைபவத்தை ஸ்வயமேவ அருளிச்செய்கையாலே ஸ்வப்ரசம்ஸைபோலே யிருக்கையாலே, அது மந்தமதிகளுக்கு விச்வஸநீயமாகாது; சுத்த ஸத்வ ஜ்ஞாநரானவிவர், "மண்ணும் விண்ணும்மெல்லாம் முடனுண்ட நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே", "கறுத்த மனமொன்றும்

வேண்டா கண்ணனல்லால் தெய்வமில்லை", "கண்ணனல்லாலில்லை கண்டீர் சரண் திண்ணமா நும்முடைமையுண்டேலவனடி சேர்த்துய்ம்மினோ" என்று இப்படி மத்யஸ்த்தமாக நின்று தத்வைபவத்தை யுபதேசிக்கையாலே, இது மந்தமதிகளுக்கும் விச்வஸநீயமா யிருக்கு மென்கிற ஆதிக்யம்.

**விளக்கம்** – (அது) - அந்த ஸ்ரீமத்பகவத் கீதையானது. (தத்வ உபதேசம்) - மஹாபாரதம் சாந்திபர்வம் – தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோமுகை, தத்வமேகோ மஹாயோகீ ஹரிர் நாராயண: பர: - உண்மையான தத்வத்தைக் குறித்து அறிந்து கொள்ள ஆசைப்பட்ட ரிஷிகளுக்கு உயர்ந்தவனும், ஒரே தத்துவமாக உள்ளவனும், அனைத்து பாபங்களையும் போக்கவல்லவனும் ஆகிய ஸ்ரீஹரியாகிய நாராயணன் மட்டுமே பரம்பொருள் என்ற நிலை அறியப்பட்டது - என்பதற்கு ஏற்ப உண்மைப் பொருளாக உள்ள ஸர்வேச்வரன் தானே நேரில் நின்று உபதேசம் செய்ததாகும். (இது) - இந்தத் திருவாய்மொழியானது. (தத்வ தர்சி வசனம்) - கீதை (4-34) – தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந: - ஆத்ம ஞானத்தை, உண்மையைக் காண்கின்ற ஞானிகளிடம் அறிந்து கொள்வாயாக. அவர்களை நீ வணங்குவதாலும், அவர்களுக்குத் தொண்டு புரிவதாலும், எந்த வஞ்சனையும் இன்றி அவர்களைக் கேள்வி கேட்பதாலும், அந்த உயர்ந்த ஞானத்தை அவர்கள் உனக்கு உபதேசம் செய்வர் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஞான உபதேசம் பெறுவதற்கு நம்பத்தகுந்தவர்களில் தலைவராக உள்ள நம்மாழ்வார் அருளிச்செய்ததாகும். இதன் மூலம் கூறப்பட்டது என்ன? கீதை (7-6) - அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ் ததா – அனைத்திற்கும் காரணம் நானே ஆவேன், ப்ரளய காலத்தில் என்னிடமே அனைத்தும் லயிக்கின்றன – என்றும், கீதை (7-7) - மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய: - நானே உயர்ந்த பரம்பொருள், என்னைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறு ஏதும் இல்லை - என்றும், கீதை (18-66) – மாம் ஏகம் சரணம் - என்னிடமே சரணம் அடைவாயாக – என்றும் தனது பெருமையைத் தானே அருளிச்செய்வதன் காரணமாக, தற்புகழ்ச்சி போன்று உள்ளதால், இதனை அற்பமான அறிவு கொண்டவர்கள் நம்பும்விதத்தில் இருக்காது; அவர்களால் ஏற்கத்தக்கதாக இருக்காது. ஆனால் சுத்தமான ஸத்வஞானம் கொண்டவராகிய நம்மாழ்வார், திருவாய்மொழி (2-2-1) - மண்ணும் விண்ணும்மெல்லாம் முடனுண்ட நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே – என்றும், திருவாய்மொழி (5-2-7) - கறுத்த மனமொன்றும் வேண்டா கண்ணனல்லால்

தெய்வமில்லை - என்றும், திருவாய்மொழி (9-1-10) – கண்ணனல்லாலில்லை கண்டீர் சரண் திண்ணமா நும்முடைமையுண்டே லவனடி சேர்த்துய்ம்மினோ - என்றும் பல பாசுரங்கள் மூலம் நடுநிலையாக நின்று அவனுடைய வைபவத்தை உபதேசிக்கிறார்; ஆகவே இந்தத் திருவாய்மொழியானது அற்பமான அறிவு கொண்டவர்களுக்கு நம்பும்படியாக இருக்கும் என்பதால், இதற்கு ஸ்ரீமத்பகவத்கீதையைக் காட்டிலும் ஏற்றம் உண்டு என்று கருத்து.

191. அது ஐவரை வெல்வித்துப் பதிற்றைந் திரட்டிபடச் சொன்னது. இது நாடாகத் தோற்றோமென்று ஐயைந்து முடிப்பான் சொன்னது.

**அவதாரிகை** – ப்ரபந்தோதய ஹேது வைலக்ஷண்யத்தால் வந்த ஆதிக்யம் சொல்லுகிறது மேல் (அது ஐவரை வெல்வித்து) இத்யாதியால்.

**விளக்கம்** - அடுத்து, திருவாய்மொழி வெளிப்பட்ட காரணத்தின் மூலமாகவும் இதற்கு உள்ள ஏற்றத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அந்த ப்ரபந்தம் “அன்றைவரை வெல்வித்த” என்கிறபடியே “த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச்சக்ருர் ஜநார்தநம்” என்று ராஜ்யகாங்க்ஷிகளாய் சரணம் புக்கு நிற்கிற பாண்டவர்களைவரையும், “ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண” என்றவர்ஜுநனை, “கரிஷ்யே வசநம் தவ” என்னப் பண்ணி யுத்தத்திலே மூட்டி விஜயிகளாக்கி, “பதிற்றைந் திரட்டிப் படைவேந்தர்பட” என்கிறபடியே அவர்களுக்கு ப்ரதிபக்ஷபூதரான துர்யோதநாதிகள் நூற்றுவரையும் முடிக்கைகாகச் சொன்னது; இந்த ப்ரபந்தம், “தோற்றோம் மடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு” என்று வகுத்த சேஷிபக்கலிலே எல்லாரும் அபஹ்ருத சித்தராய்ப் போம்படியாக, “முடிப்பான் சொன்னவாயிரம்” என்கிறபடியே அதுக்கு விரோதியாயிருந்துள்ள “பொங்கைம்புலனும்” இத்யாதியால் சொன்ன சதுர்விம்சதி தத்வாத்மகமான அசித்திலும், ஜ்ஞாநாநந்த லக்ஷணமாக் கொண்டு ஸ்வபோக்யதையாலே தன்பக்கலிலே கால்தாழப் பண்ணுமாத்மாவிலு முண்டான ஸங்கத்தை முடிப்பதாகச் சொன்னதென்கை. இத்தால் மோக்ஷ சாஸ்த்ரமேயாகிலும் உதிக்கிறபோது அந்யார்த்தமாக உதித்த குறையுண்டு அதுக்கு; மோக்ஷார்த்தமாகவே உதித்த வேற்றமுண் டிதுக்கு என்றதாய்த்து.

**விளக்கம்** - (அது) - ஸ்ரீமத்பகவத்கீதையானது. (ஐவரை வெல்வித்து) – திருவாய்மொழி (4-6-1) - அன்றைவரை வெல்வித்த - என்பதற்கு ஏற்ப, மஹாபாரதம் ஆரண்யபர்வம் – த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச்சக்ருர் ஜநார்தநம் - பாண்டவர்கள் திரௌபதியுடன் சேர்ந்து நின்று ஜநார்தநனை வணங்கினார்கள் - என்று கூறுவதன் மூலம் இராஜ்யத்தின் மீது விருப்பம் கொண்டிருந்த காரணத்தால் தன்னைச் சரணம் புகுந்த பாண்டவர்கள் ஐந்து பேரையும், கீதை (1-32) - ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண - க்ருஷ்ணா! நான் இந்த வெற்றியை விரும்பவில்லை - என்று கூறிய அர்ஜுனனை, கீதை (18-72) – கரிஷ்யே வசநம் தவ – உனது சொற்படியே செய்கிறேன் - என்று கூறும்படியாகச் செய்து, அவனை யுத்தத்தில் ஈடுபட வைத்து அவர்களை வெற்றி அடையும்படிச் செய்து, பெரியதிருமொழி (2-4-4) - பதிற்றைந் திரட்டிப் படைவேந்தர்பட – என்பதற்கு ஏற்ப அவர்களுடைய விரோதிகளாகிய துரியோதனன் உள்ளிட்ட நூறு பேரையும் முடிப்பதற்காக அருளிச்செய்யப்பட்டதாகும். (இது) - இந்தத் திருவாய்மொழியானது. (நாடாகத் தோற்றோம் என்று) – திருவாய்மொழி (2-17) - தோற்றோம் மடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு - என்பதற்கு ஏற்ப, இயல்பாகவே எஜமானனாக உள்ள அவனால் அபகரிக்கப்பட்ட சிந்தனை கொண்டவர்களாக அனைவரும் அவனிடம் செல்லும்படியாக. (ஐயைந்து முடிப்பான் சொன்னது) – திருவாய்மொழி (8-7-11) – முடிப்பான் சொன்ன ஆயிரம் – என்று கூறுவதற்கு ஏற்ப அவ்விதம் அவனிடம் செல்வதற்கு விரோதியாக உள்ளதான, திருவாய்மொழி (10-7-10) - பொங்கைம்புலனும் - என்ற பாசுரத்தில் கூறப்பட்டபடி இருபத்து நான்கு தத்துவங்களுடன் கூடிய சரீரத்தின் மீதும், ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றைத் தனது ஸ்வரூபமாகக் கொண்டுள்ளதால் தனது இனிமை காரணமாகத் தன்னிடத்தியே ஈடுபடுத்தச் செய்யும் ஆத்மா மீதும் உள்ள பற்றினை விலக்குவதற்காக அருளிச்செய்யப்பட்டதாகும்; ஆகவே ஸ்ரீமத்பகவத்கீதையானது மோக்ஷத்திற்கான சாஸ்த்ரம் என்றபோதிலும், அது வெளிப்பட்டபோது வேறு ஒரு காரணமாக வெளிப்பட்டது என்ற தோஷம் அதற்கு உண்டு; ஆனால் மோக்ஷத்திற்காக மட்டுமே வெளிப்பட்ட ஏற்றமானது திருவாய்மொழிக்கு மட்டுமே உண்டு.

192. அங்கு நம்பி, சரணென்று தொடங்கி முடிவில் அப்ரியமென்றது; இங்கு பரமே யென்றிழிந்து பொலிகவென் றுகந்தது.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** – உபக்ரமோபஸம்ஹார ப்ரக்ரியையால் வந்த வைபவம் சொல்லுகிறது (அங்கு) இத்யாதியால்.

**விளக்கம்** - தொடக்கம் மற்றும் நிறைவுப் பகுதிகளில் காணப்படும் விஷயங்கள் மூலமாகவும் திருவாய்மொழிக்கு உள்ள ஏற்றத்தை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அந்த ப்ரபந்தத்தி லுபதேசம் தொடங்குகிறபோது, “நாந்தகமேந்திய நம்பி சரணென்று தாழ்ந்த தனஞ்சயற்காகி” என்கிறபடியே, “சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்” என்ற வர்ஜுனனுடைய அநுவர்த்தநம் கண்டு ப்ரிதீயோடே உபக்ரமித்து, “நூநம் அச்ரத்தாநோஸி துர்மேதாச்சாஸி பாண்டவ, அபுத்த்யா யந்த ஜாநீஷே தந்மே ஸுமஹத ப்ரியம்” என்று அவன் பக்க லநவதாநம் காண்கையாலே அப்ரீதியோடே தலைக்கட்டிற்று. இப் ப்ரபந்தத்தில் விமுகரைக் குறித்து க்ருபையாலே உபதேசிக்கையாலே உபதேசோபக்ரமத்திலே “ஏபாவம் பரமே” என்று அப்ரீதியோடே யுபக்ரமித்து அவ்வுபதேசங் கேட்டு ஜகத்தாகத் திருந்துகையாலே இப்படி திருந்தினவர்களைக் கண்டு “பொலிக பொலிக” என்ரு மங்களாசாஸநம் பண்ணி, உகந்து பணிசெய் தென்னும்படி ப்ரீதியோடே தலைக்கட்டிற்றென்கை. இத்தால் அர்ஜுனன் யுத்தே ப்ரவ்ருத்தனான மாத்ரமொழிய ஸித்த தர்ம பர்யந்த முபதேசத்தின் பலம் ஸித்திக்கப் பேராமையாலே உபதேசம் ஸப்ரயோஜநமாய்த்தில்லை யங்கு; அது ஸப்ரயோஜநமாய்த்தது மிங்கே என்றதாய்த்து.

**விளக்கம்** – (அங்கு) – ஸ்ரீமத்பகவத்கீதையில். (நம்பி சரண் என்று தொடங்கி) – பெரியாழ்வார் திருமொழி (1-9-4) - நாந்தகமேந்திய நம்பி சரணென்று தாழ்ந்த தனஞ்சயற்காகி - என்பதற்கு ஏற்ப, கீதை (2-7) - சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் – நான் உன்னைச் சரணம் புகுந்த சிஷ்யன் - என்பதான அர்ஜுனனுடைய வேண்டுதலைக் கண்டு மிகவும் மகிழ்ந்து உபதேசம் தொடங்கி. (முடிவில் அப்ரியம் என்றது) – நூநம் அச்ரத்தாநோஸி துர்மேதாச்சாஸி பாண்டவ, அபுத்த்யா யந்த ஜாநீஷே தந்மே ஸுமஹத ப்ரியம் – அர்ஜுனா! நீ ச்ரத்தை அற்றவனாக உள்ளாய், தீயபுத்தியைக் கொண்டவனாக உள்ளாய், எதனால் நீ உனது அறிவின்மையை அறியாமல் உள்ளாயோ அதனைக் கண்டு எனக்கு மகிழ்ச்சி இல்லை - என்பதற்கு ஏற்ப அவனிடம் கூறுவதால் வெறுப்புடன் முடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (இங்கு) – இந்தத் திருவாய்மொழியில்.

(பரமே என்று இழிந்து) - விருப்பமற்றவர்களாக உள்ளவர்களை நோக்கி மிகுந்த கருணையுடன் உபதேசிப்பதன் காரணமாக, அந்த உபதேசத்தின் தொடக்கத்தில், திருவாய்மொழி (2-2-2) - ஏபாவம் பரமே – என்று மகிழ்வின்றி தொடங்கி, (பொலிக என்று உகந்தது) - அந்த உபதேசங்களைக் கேட்டு உலகம் திருந்துவதன் காரணமாக இப்படியாகத் திருத்தியவர்களை நோக்கி, திருவாய்மொழி (5-2-1) – பொலிக பொலிக - என்று உரைத்து, திருவாய்மொழி (10-8-10) – உகந்து பணிசெய்து – என்று மகிழ்வுடன் முடிக்கப்பட்டது. ஆகவே அர்ஜுனன் யுத்தம் செய்யத் தொடங்கினான் என்பது மட்டுமே நிகழ்ந்தது அல்லாமல் அவன் ஸித்தோபாயம் என்ற பயனைப் பெறவில்லை என்பதால் அந்த கீதோபதேசம் பயனடையவில்லை; ஆனால் திருவாய்மொழியானது பயன் பெற்றது.

193. அதில் ஸித்த தர்ம விதியே, இதில் வித்யநுஷ்டாநங்கள்.

**அவதாரிகை** – ப்ரதிபாத்யார்த்த கௌரவத்தால் வந்த வைபவம் சொல்லுகிறது (அதில் ஸித்த தர்ம) இத்யாதியால்.

**விளக்கம்** – திருவாய்மொழியில் கூறப்பட்ட ஆழ்பொருளின் கௌரவம் காரணமாகவும் இதற்கு ஸ்ரீமத்பகவத்கீதையைக் காட்டிலும் ஏற்றம் உண்டு என்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அந்த ஸ்ரீகீதையில் “மாமேகம் சரணம் வ்ரஜ” என்ற ஸித்ததர்ம விதிமாத்ரமே யுள்ளது; இந்த ப்ரபந்தத்தில், “திருநாராணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ” என்று விதியும், “அடிக்கீழமர்ந்து புகுந்தேன்” என்று அநுஷ்டாநமும் இரண்டும் காணலாமென்கை. இத்தால் விதிமாத்ர ப்ரதிபாதகமானவதில், வித்யநுஷ்டாநங்க ளிரண்டையும் ப்ரதிபாதிக்கு மிதுக்கு ஏற்றமுண்டென்றதாய்த்து.

**விளக்கம்** – (அதில்) - ஸ்ரீமத்பகவத்கீதையில். (ஸித்ததர்ம விதி) கீதை (18-66) – மாமேகம் சரணம் வ்ரஜ - என்னை மட்டுமே சரணம் என்று புகுவாயாக – என்று “ஸர்வேச்வரனையே பற்றவேண்டும்” என்பதான விதித்தல் மட்டும் உள்ளது. (இதில்) - திருவாய்மொழியில். (விதி அநுஷ்டானங்கள்) – திருவாய்மொழி (4-1-1) - திருநாராணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ – என்று விதித்தலும், திருவாய்மொழி (6-10-10) – அடிக்கீழ் அமர்ந்து புகுந்து - என்று செயல்புரிதலும் ஆகிய

இரண்டையும் காணலாம். ஆக இதன் மூலம், விதிப்பது என்பதை மட்டுமே கூறுகின்ற ஸ்ரீமத்பகவத்கீதையைக் காட்டிலும், விதித்தல் மற்றும் செயல் புரிதல் ஆகிய இரண்டையும் கூறும் திருவாய்மொழிக்கு ஏற்றம் உண்டு என்று கருத்து.

194. பகவன் ஞானவிதி பணிவகையென்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.

**அவதாரிகை** - இனி அந்த ஸ்ரீகீதைதனக்கு உத்கர்ஷமும் இவரங்கீகாரத்தாலே யென்கிறது (பகவன்) இத்யாதியால்.

**விளக்கம்** – அடுத்து, ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ஏற்பட்ட ஏற்றம் என்பதும் நம்மாழ்வார் அதனை அங்கீகாரம் செய்ததன் மூலமே ஏற்பட்டது என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "அம்பகவன் வணக்குடைத் தவநெறிவழி நின்று" என்றும், "ஞான விதி பிழையாமே" என்றும், "பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமல மலர்ப்பாதம்" என்றும் பரம வைதிகரான இவர் அத்தை ப்ரமாணமாகக் கொள்ளுகையாலே யாய்த்து அந்த ஸ்ரீகீதைக்கு உத்கர்ஷமுண்டாய்த் தென்கை. புத்த முநியாயும் கபில முநியாயும் சொன்ன பௌத்த சாஸ்த்ரமும் ஸாங்க்ய சாஸ்த்ரமும் அவன் தானருளிச் செய்ததாயிருக்கச் செய்தே, வைதிக பரிக்ரஹமில்லாமையிறே அப்ரமாணமாய்த்து. "இதி மோஹந வர்ஷ்மணா த்வயாபி க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணாய மந்ய" என்று பகவதுக்தமேயாகிலும் வேதவிருத்தமானது வைதிகரங்கீகரியார்களிறே. வேதாவிரோதித்வம் ப்ரகாசிப்பது வைதிக பரிக்ரஹத்தாலேயிறே. ஆகையால் அதுக்கு உத்கர்ஷம் இவரங்கீகாரத்தாலே யென்னக் குறையில்லை, இத்தால் அதுக்குத்கர்ஷம் இவர் பரிக்ரஹம் கொண்டு சொல்லவேணும்; இவர் வாக்கில் பிறந்தவிதுக்கு அதுவும் வேண்டாவென்று இவ்வழியாலும் ஓர் ஆதிக்யம் சொல்லிற்றாய்த்து. ஆக ஸ்ரீகீதையிலு மிதுக்குண்டான ஆதிக்ய ஹேதுக்களெல்லாம் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - (பகவன்) – திருவாய்மொழி (1-3-5) - அம்பகவன் வணக்குடைத் தவநெறிவழி நின்று - என்றும், (ஞானவிதி) - திருவாய்மொழி (5-2-9) - ஞானவிதி பிழையாமே – என்றும், (பணிவகை) - திருவாய்மொழி (10-4-9) - பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமல மலர்ப்பாதம் – என்றும், (என்று இவர் அங்கீகாரத்தாலே) - கூறுவதற்கு

ஏற்ப, பரமவைதிகரான நம்மாழ்வார் ஸ்ரீபகவத்கீதையை ப்ரமாணமாக ஏற்றுக்கொண்டதால் மட்டுமே ஸ்ரீபகவத்கீதைக்கு ஏற்றம் உண்டானது. புத்த முனிவராக நின்று உரைத்த பௌத்த சாஸ்த்ரத்தையும், கபிலமுனியாய் வந்து உரைத்த ஸாங்க்ய சாஸ்த்ரத்தையும் அவன் அருளிச்செய்தபோதிலும், வைதிகர்கள் அவற்றை ஏற்காத காரணத்தால், அவற்றுக்கு ப்ரமாணமாக இருக்கும் தன்மை இல்லை. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் - இதி மோஹந வர்ஷ்மணா த்வயாபி க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணாய மந்ய - இப்படியாக மற்றவர்களை மயக்கும்படிச் செய்யும்விதமாக உன்னால் ஏற்படுத்தப்பட்டவையும், வேதங்களுக்குப் புறம்பாக உள்ளவையும் ஆகிய மற்ற மதங்களை நான் புல்லாகவே கருதுகிறேன் - என்பதற்கு ஏற்ப, பகவானால் உண்டாக்கப்பட்டவை என்றாலும், அவை வேதங்களுக்கு முரணானது என்பதால் வைதிகர்கள் ஏற்கமாட்டனர் அல்லவோ? வேதங்களுக்கு முரணான தன்மை இல்லை என்ற நிலையும் வைதிகர்களுடைய அங்கீகாரத்தால் அல்லவோ ஏற்படுகிறது? ஆகவே ஸ்ரீமத்பகவத்கீதைக்கு ஏற்பட்ட ஏற்றம் என்பது, நம்மாழ்வார் அதனை அங்கீகாரம் செய்ததால் மட்டுமே உண்டானது என்று கூறுவதில் குற்றம் இல்லை. இதன் மூலம், ஸ்ரீமத்பகவத்கீதைக்குள்ள ஏற்றமானது நம்மாழ்வார் அதனை ஏற்றதன் அடிப்படையில் கூறவேண்டும்; ஆனால் திருவாய்மொழியானது இருவருடைய திருவாக்கிலிருந்தே வந்ததால் இது போன்று இதற்கு உரைக்கவேண்டாம் என்றவிதத்திலும் திருவாய்மொழிக்கு ஏற்றம் கூறப்பட்டது. எனவே ஸ்ரீமத்பகவத்கீதையைக் காட்டிலும் திருவாய்மொழிக்குள்ள ஏற்றத்திற்கான காரணங்கள் பலவும் கூறப்பட்டன.

195. வேதவேத்ய வைதிகோபதேசம் ஆவித்யரளவிலே; அஜ்ஞர் ஜ்ஞாநிகள் ஜ்ஞாந விசேஷ யுக்தர் ஸர்வஜ்ஞனென்னாமல் இவர் திருத்துவர்.

**அவதாரிகை** - இப்படி ஈச்வரோபதேசத்தி லிவருபதேசத்துக்கு ஏற்றம் சொன்ன ப்ரஸங்கத்திலே ப்ரமேய பூதனானவவனோடே ப்ரமாண ப்ரமாதாக்களையும் கூட்டி "அவர்களெல்லாருபதேசமும் ஸங்குசித விஷயம், இவருபதேசம் ஸர்வ விஷயம்" என்று இவ்வழியாலே உபதேஷ்டாவான ஆழ்வார்க்கு ஓர் ஆதிக்யமருளிச் செய்கிறார் மேல் (வேதவேத்ய வைதிகோபதேசம்) என்று தொடங்கி.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடைய உபதேசங்களைக் காட்டிலும் நம்மாழ்வாருடைய உபதேசங்களுக்குள்ள ஏற்றத்தைக் கூறுகின்ற இந்த நேரத்தில், தகுந்த ப்ரமாணங்களாகிய வேதங்களால் மட்டுமே அறியத்தக்கவனாகிய ஸர்வேச்வரனுடைய ப்ரமாணங்கள் மற்றும் அவற்றை அறிந்தவர்கள் ஆகிய அனைவரையும் ஒன்றாகத் திரட்டி, "அவர்களுடைய உபதேசங்கள் அனைத்தும் ஒரு சிலருக்கு மட்டுமே ஏற்புடையது; ஆனால் நம்மாழ்வாருடைய உபதேசங்கள் அனைவருக்குமே ஆகும்" என்று இவ்விதத்திலும், உபதேசம் செய்பவராகிய நம்மாழ்வாருக்கு உள்ள மற்றொரு பெருமையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஹிதாதுசாஸநபரமான வேதத்தினுடையவும், "வேதவேத்யே பரே பும்ஸி" என்று வேதைகஸமதிகம்யனான ஈச்வரனுடையவும், "யேச வேதவிதோ விப்ராயேசாத்யாத்மவிதோ ஜநா:" என்கிறபடியே வேதத்தில் பூர்வோத்தர பாகார்த்தஜ்ஞராய் வைதிகரென்று நிரூபகமாயிருக்கும் மஹர்ஷிகளுடையவு முபதேசம், "ஆவித்ய: ப்ராக்ருத: ப்ரோக்த:" என்கிறபடியே தத்வஹித புருஷார்த்த ஜ்ஞாநாபாவ ரூபா வித்யா யுக்தரான ஸம்ஸாரிகள் மாத்ரத்திலே; தத்வஹிதாதிகளில் அஜ்ஞரான ஸம்ஸாரிகளோடு பகவதுபாயத்வ நிஷ்டராயிருக்கும் ஜ்ஞாநிகளானவர்களோடு, தத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை ஸாக்ஷாத்கரித்து உபேயபரராய் தததுபவமே யாத்ரையா யிருக்கும் ஜ்ஞாநவிசேஷயுக்தரோடு, "நைவ கிஞ்சித் பரோக்ஷம் தே", "யோ வேத்தி யுகபத் ஸர்வம்" என்கிறபடியே ஸர்வஜ்ஞனான வீச்வரனோடு வாசியற ஸர்வர்க்கும் வேண்டுமம்சங்களை யுபதேசித்து இவர் திருத்துவரென்கை.

**விளக்கம்** – (வேத உபதேசம்) - அனைவருக்கும் ஏற்ற நன்மைகளை மட்டுமே உபதேசிக்கின்ற வேதங்களுடைய உபதேசமும். (வேத்ய உபதேசம்) - ஸ்கந்த புராணம் வேதவேத்யே பரே பும்ஸி - வேதங்களால் மட்டுமே அறியப்படும் பரமபுருஷன் - என்பதற்கு ஏற்ப வேதங்களால் அறியப்படுகின்ற ஸர்வேச்வரனுடைய உபதேசமும். (வைதிக உபதேசம்) - யேச வேதவிதோ விப்ராயேசாத்யாத்மவிதோ ஜநா: - எந்த அந்தணர்கள் வேதங்களின் பூர்வபாகத்தை அறிந்தவர்களோ, யார் உத்தரபாகத்தை அறிந்தவர்களோ – என்று கூறுவதற்கு ஏற்ப வேதத்தில் உள்ள பூர்வபாகம் மற்றும் உத்தரபாகம் ஆகியவற்றின் ஆழ்பொருளை நன்றாக அறிந்தவர்களும், வைதிகர் என்று கூறப்படுபவர்களும் ஆகிய மஹரிஷிகளுடைய உபதேசமும். (ஆவித்யர் அளவிலே) -

ஆவித்ய: ப்ராக்ருத: ப்ரோக்த: - ஆவித்யன் எனப்படுகிறான் - என்பதற்கு ஏற்ப உண்மை மற்றும் நன்மை என்னும் புருஷார்த்தங்கள் குறித்த ஞானம் இல்லாத காரணத்தால் ஸர்வேச்வரனுடைய இயல்பு இன்னது என்று அறியாதபடி உள்ள ஸம்ஸாரிகளுக்கு மட்டும் பொருந்துவதாக உள்ளன. (இவர்) - நம்மாழ்வார். (அஜ்ஞர்) - உண்மையான ஒரு புருஷார்த்தம் குறித்து அறியாத ஸம்ஸாரிகள். (ஜ்ஞாநிகள்) – ஸர்வேச்வரனே உபாயம் என்றுள்ள ஞானிகள். (ஜ்ஞாந விசேஷ யுக்தர்) - ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், விபூதிகள் போன்ற அனைத்தையும் நேரடியாகவே அனுபவித்து, பேற்றில் மட்டுமே நாட்டம் கொண்டு, ஸர்வேச்வரனுடைய அனுபவம் என்பதையே தங்கள் வாழ்க்கை என்று நிலைநிற்பவர்கள். (ஸர்வஜ்ஞன்) - ந ஏவ கிஞ்சித் பரோக்ஷம் தே - உன்னால் காணப்படாமல் எந்த ஒன்றும் இல்லை – என்றும், யோ வேத்தி யுகபத் ஸர்வம் - யார் ஒருவன் ஒரு நேரத்திலேயே அனைத்தையும் அறிகிறானோ - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்தையும் அறிந்த ஸர்வேச்வரன். (என்னாமல்) - இவ்விதம் உள்ள மற்றவர்கள் போன்று அல்லாமல், (இவர் திருத்துவர்) – அனைவருக்கும் ஏற்கும்படியான விஷயங்களை உபதேசித்து இவர் திருத்துவார்.

196. அறியாதார்க்கு உய்யப்புகுமாறும் இக்கரையேறினார்க்கு இன்ப வெள்ளமும் நிலையறியாதார்க்கு ஆழங்காலும் கரையேற்றுமவனுக்கு நாலாறு மறிவிக்கவேணும்.

**அவதாரிகை** - எல்லார்க்கும் இவரிப்படி அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணவேணுமோ என்னு மபேக்ஷையிலே, கீழ்ச்சொன்ன நாலு விஷயத்துக்கு மிவரறிவிக்க வேண்டுமர்த்த விசேஷங்களை தர்சிப்பிக்கிறார் (அறியாதார்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆனால் இவ்விதமாக இவர் அனைவருடைய அறியாமையையும் நீக்கவேண்டுமோ என்ற கேள்விக்கு விடையாக, இதுவரை கூறப்பட்ட நான்கு பேருக்கும் உணர்த்தவேண்டிய ஆழ்பெருமாள் இன்னவை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “செங்கணெடியானைச் சிந்தித்தறியாதார் என்று மறியாதார்” என்று முதலிலே பகவத் ஜ்ஞாநமில்லாத ஸம்ஸாரிகளுக்கு, “அஃதே யுய்யப் புகுமாறு” என்று “திருநாரணன்தாள்” என்கிறவதுவே உஜ்ஜீவிக்கைக்கு உபாயமென்று ஸம்ஸார நிஸ்தரணோபாயமும், “அக்கரையென்னு மனத்தக்கடலுளழுந்தியுன் பேரருளாலிக்

கரையேறி யிளைத்திருந்தேனை" என்று ஸம்ஸார ஸாகரத்திலழுந்துகிறவர்களுக்கு பகவதேகோபாயத்வ ஜ்ஞாநம் பிறந்தால் இங்கேயிருக்கச் செய்தே "அக்கரை இக்கரை" என்னும்படி ஸம்ஸாரம் தூரமாய் பரமபதமாஸந்நமாம்படி யிருக்கையாலே பகவதேகோபாயத்வத்திலே வ்யவஸிதராய் ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தரா யிருக்கிறவர்களுக்கு வ்யவஸாயம் குலைந்து த்வரிக்கும்படி "முகில்வண்ண வானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே" என்று ப்ராப்ய வைலக்ஷண்யமும்; ஆற்றிலேயிழிந்து போகா நிற்கச் செய்தே நிலைக்குமிடமும் நிலையாத விடமுமறியாதாரைப்போலே, ப்ராப்ய பரராயநுபவியா நிற்கச்செய்தே அதில் நிலை கொள்ளலாமிடமும் ஆழங்கால்படுத்துமிடமும் அறியாதவர்களுக்கு, "செஞ்சொற்கவி காளுயிர் காத்தாட் செய்மின்" என்று சீலகுணமாகிற ஆழங்காலும், "ஸம்ஸார ஸாகரம் கோரமநந்த க்லேச பாஜநம், த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:" என்கிறபடியே ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடத்தி அக்கரைப்படுத்துமவனுக்கு "பொங்கைம்புலன்" இத்யாதியாலே சதுர் விம்சதி தத்வமு மறிவிக்க வேணுமென்கை. ஆக அறிவு கேடரை உபாயத்திலே மூட்டுவர்; உபாயத்திலே யூன்றுவாரை ப்ராப்ய பரராக்குவர்; ப்ராப்யத்திலே அவகாஹிக்குமவர்களுக்கு ஆழங்காலறிவிப்பர்; ப்ராப்தியை யுண்டாக்குமவனுக்கு த்யாஜ்யத்தை யறிவிப்பரென்றதாய்த்து.

**விளக்கம்** – (அறியாதார்க்கு) – பெரியதிருமொழி (11-7-8) – செங்கண் நெடியானைச் சிந்தித்தறியாதார் என்றும் அறியாதார் – என்பதற்கு ஏற்ப முதலில் ஸர்வேச்வரனைக் குறித்த ஞானம் இல்லாத ஸம்சாரிகளுக்கு, (உய்யப்புகும் ஆறும்) - திருவாய்மொழி (4-1-11) - அஃதே உய்யப் புகுமாறு - என்று, திருவாய்மொழி (4-1-1) - திருநாரணன் தாள் – என்பதான அதுவே கரையேறுவதற்கான உபாயம் என்று ஸம்ஸாரத்திலிருந்து வெளியேறுவதற்கான உபாயத்தை உணர்த்தவேண்டும். (இக்கரை ஏறினார்க்கு) - பெரியாழ்வார் திருமொழி (5-3-7) - அக்கரையென்னு மனத்தக்கடலுள் அழுந்தி உன் பேரருளால் இக்கரையேறி இளைத்திருந்தேனை – என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரக்கடலுள் மூழ்கியபடி உள்ளவர்களுக்கு, "ஸர்வேச்வரன் ஒருவன் மட்டுமே உபாயம்" என்ற ஞானம் ஏற்பட்டால், இந்த உலகில் அவர்கள் இருந்தாலும், அக்கரையான பரமபதம் இதுவே ஆகும் என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரம் வெகுதொலைவிலும், பரமபதம் அருகிலும் உள்ளதாகத் தோன்றுகிறது; ஆகையால் பகவான் மட்டுமே உபாயம் என்னும் கருத்தில் ஆழ்ந்த உறுதியுடையவர்களாக, தங்களுடைய முயற்சிகள் அனைத்தையும்

துறந்தவர்களாக, அந்த உறுதியானது நிலைகுலைந்து அவர்கள் பதறும்படியாக, (இன்ப வெள்ளமும்) – திருவாய்மொழி (7-2-11) - முகில்வண்ண வானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே – என்று அடைய உள்ள பேற்றின் ஒப்பில்லாத சிறப்பை உணர்த்தவேண்டும். (நிலை அறியாதார்க்கு) - ஆற்றில் இழிந்தபடிச் செல்லும் ஒருவருக்குத் தான் உள்ள இடமும், நிலையில்லாதபடிச் செல்லும் இடமும் அறியாமல் இருப்பார்; அது போன்று பேற்றினை அடைந்த பின்னர், அதில் ஈடுபட்டு அனுபவித்து நிற்கும்போது, அதில் நிலை கொள்ளவல்ல இடம் மற்றும் ஆழ்ந்து நிற்கவேண்டிய இடம் குறித்து அறியாதவர்களுக்கு, (ஆழங்காலும்) - திருவாய்மொழி (10-7-1) - செஞ்சொற்கவி காளுயிர் காத்தாட் செய்மின் - என்று சீலகுணம் என்பதான ஆழங்காலை உணர்த்த வேண்டும். (கரை ஏறும் அவனுக்கு) - ஸம்ஸார ஸாகரம் கோரமநந்த க்லேச பாஜநம், த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: - மிகவும் கொடியதும், எல்லையற்ற துன்பத்திற்கு இடமாக உள்ளதும் ஆகிய ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கு ஞானிகள் உன்னையே சரணம் அடைகிறார்கள் - என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரக் கடலைத் தாண்டும்படிச் செய்து கரையேற்றும் ஸர்வேச்வரனுக்கு, (நாலாலும்) – திருவாய்மொழி (10-7-10) – பொங்கு ஐம்புலன் - என்பதன் மூலம் இருபத்து நான்கு தத்வங்களின் தன்மையை உணர்த்தவேண்டும். எனவே அறிவற்றவர்களை உபாயத்தில் ஈடுபடுத்துவார், உபாயத்தில் நிலைநிற்பவர்களுக்கு ஆழங்கால் உணர்த்துவார், பேற்றினை அளிக்கும் ஸர்வேச்வரனுக்கு விடத்தக்கவற்றை உணர்த்துவார்.

197. அவன் முனிந்தார்க்குத் தாம்கண்டது, தம்மை முனிவார்க்குத் தம் கண், காணாதது காண்பார்க்குக் கண்மாறுமிடம், ராகாந்தனுக்கு மாயாதோஷம் இவர் காட்டுமவை.

**அவதாரிகை -** இவர்களுக்கு இவ்வர்த்தங்க ளுபதேசிக்கைக் குறுப்பான ஹேதுக்களோடே இவைதன்னை யின்னமொரு ப்ரகாரேண வ்யக்தமாக வருளிச்செய்கிறார் (அவன் முனிந்தார்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம் –** இவர்களுக்கு இந்தக் கருத்துக்களை உபதேசிப்பதற்கான அடிப்படியாக உள்ள காரணங்களுடன் சேர்த்து, இவற்றை மேலும் ஒருவிதத்தில் விளக்கமாக அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "க்ஷிபாமி", " ந க்ஷமாம" என்கிறவவன் முனிவுக்கு விஷயமாய் அஜ்ஞரான ஸம்ஸாரிகளுக்கு, "ஞானப்பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லது" என்று நிமக்நோத்தரண சக்தனாய் ஜ்ஞாநோபகாரகனானவனை யொழிய ஸர்வர்க்கு முஜ்ஜீவ நோபாயமில்லை என்று தாமறுதியிட்ட விலக்ஷணமான வர்த்தமும்; "எங்ஙனேயோ வன்னைமீர்காளென்னை முனிவது நீர்" என்னும்படி உபாயாத்யவஸாய தசையிலே நின்று ஸ்வயத்நபீருக்களாய் ப்ராப்ய வைலக்ஷண்ய மறியாதே இத்தனை அதிப்ராவண்யமாகாதென்று ஹிதம் சொல்லுமவர்களுக்கு, "என்னெஞ்சினால் நோக்கிக் காணீர்" என்று ப்ராப்ய வைலக்ஷண்யாவகாஹியான என்னெஞ்சினால் பார்க்க மாட்டீர்களோவென்று தம்முடைய உட்கண்ணான ப்ராப்ய வைலக்ஷண்ய ஜ்ஞாநமும், "செஞ்சொற்கவிகாளுயிர் காத்தாட் செய்மின்" என்று கவிகளாய் கூர்க்கக் காணுமவர்களாகையாலே புறம்பொருவர் காணாததும் காணவல்லவர்களுக்கு, அவன் சில குணத்திலே கண்வையாதே கொள்ளுங்கோளென்று கண்மாறுமிடமும்; தம்பக்கல் ராகத்தாலே முன்னடி தோற்றாமையாலே த்யாஜ்ய தேஹதோஷம் காணமாட்டாதவனுக்கு, "மங்கவொட்டுன் மாமாய" என்று ப்ரக்ருதி தோஷமுமிவர் தர்சிப்பிக்கு மவையென்கை.

**விளக்கம் –** (அவன் முனிந்தார்க்கு) கீதையில், "க்ஷிபாமி – தள்ளுகிறேன், ந க்ஷமாமி – பொறுத்துக் கொள்ளமாட்டேன்", என்பது போன்று உரைக்கும் ஸர்வேச்வரன் கோபம் அடைவதற்கு இலக்கான உள்ள இந்த ஸம்ஸாரிகளுக்கு. (தாம் கண்டது) - திருவிருத்தத்தில் (99) – ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லது – என்று தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை மேலே உயர்த்தும் தன்மை கொண்டவனும், ஞானத்தை உபதேசித்தவனும் ஆகிய அவன் அல்லாமல் அனைவருக்கும் கரையேறும் உபாயம் வேறு ஏதும் இல்லை என்று தான் உறுதியாக்கிய மேன்மையான இந்தக் கருத்தை இவர் உணர்த்துவார். (தம்மை முனிவார்க்கு) – திருவாய்மொழி (5-5-2) - எங்ஙனேயோ அன்னைமீர்காள் என்னை முனிவது நீர் – என்பதற்கு ஏற்ப உபாயநிலையில் ஆழ்ந்த உறுதி உள்ளவர்களாக தங்களுடைய முயற்சி மூலம் பேற்றினை அடைவதில் அச்சம் கொண்டவர்களாக, பேற்றின் சிறப்பை அறியாதவர்களாக, இந்த அளவிற்கு ப்ரேமை கூடாது என்று நன்மை கூறுபவர்களுக்கு, (தம்கண்) – திருவாய்மொழி (5-5-2) - என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் - என்று பேற்றின் சிறப்பில் மூழ்கியபடி உள்ள என் நெஞ்சத்தின் மூலம் நீங்கள் காணமாட்டீர்களா என்று, தனது உட்கண்ணாகிய


**Email:**sridharan_book@yahoo.co.in

ஞானத்தைக் காண்பிப்பார். (காணாதது) – திருவாய்மொழி (10-7-1) – செஞ்சொற்கவிகாள் உயிர் காத்தாட் செய்மின் – என்பதற்கு ஏற்ப கவிகளாக இருக்கின்ற காரணத்தால் கூர்க்கக் காணுபவர்களாக உள்ளதால், வெளியில் மற்றவர்களால் காண இயலாதவற்றையும் காண இயன்றவர்களாக உள்ளவர்களுக்கு, (கண்மாறும் இடம்) - அவனுடைய சீல குணத்தில் நீங்கள் உங்களுடைய சிந்தனையை வைத்துக்கொள்ளுங்கள் என்று கண்வைக்கும் இடத்தைக் காண்பிப்பார். (ராகாந்தனுக்கு) - நம்மாழ்வாராகிய தம்மிடம் வைத்த ஆசை காரணமாக வேறு ஏதும் தோன்றாமல், கைவிடத்தக்கதான இந்தச் சரீரத்தில் உள்ள குற்றத்தை ஆராயாமல் உள்ள பகவானுக்கு, (மாயா தோஷம்) – திருவாய்மொழி (10-7-10) - மங்கவொட்டுன் மாமாய - என்று இந்தச் சரீரத்தில் உள்ள தோஷங்களை உணர்த்துவார்.

198. ஸாநந ஸாத்யஸ்த மத்யஸ்தரைவிட்டு அவற்றிற்கலங்கும் ஜீவேச்வரர்க்கு வீடுமின் நினைமின் பிடித்தேன் விடுவேனோ வைத்தெழ ஊது வாடிநிற்கக் கன்மமன்று ஆன்பின் கைகழியேல் உழிதராய் என் சொற்கொளென்று இவர் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவர்.

**அவதாரிகை** - ஆனால் அஜ்ஞர்க்கு உபதேசிக்குமாபோலே இவர்களெல்லார்க்கும் பலகாலு முபதேசிப்பரோவென்ன வருளிச்செய்கிறார் மேல் (ஸாதந ஸாத்யஸ்த்த மத்யஸ்த்தரை) என்றுதொடங்கி.

**விளக்கம்** – ஆனால் அறிவில்லாதவர்களுக்கு உபதேசிப்பது போன்று ஸர்வேச்வரன் உட்பட கடந்த சூர்ணையில் கூறப்பட்ட மூவருக்கும், பலமுறை உபதேசிப்பாரோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸாதந ஸாத்யங்கள் கைப்பட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டுவது அல்பமாகையாலே ஸாதகஸ்தராகவும் ஸாத்யஸ்தராகவும் நடுவுசொன்ன ஜ்ஞாநிகளும் ஜ்ஞாநவிசேஷ யுக்தருமாகிற அவர்களிருவரையும் விட்டு, கர்மபரவசராய் ஸாதந ஸாத்யங்களின்னதென்றறியாதே கலங்கி நிற்கிற ஸம்ஸாரி சேதநர்க்கு, "வீடுமின் முற்றவும்" என்று தொடங்கி, "சுனை நன்மலரிட்டு நினைமின் நெடியானே" என்னுமளவும் த்யாஜ்யோ பாதேயங்களைப் பல படியாலு முபதேசிக்கையாலும்;


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (ஸாதந ஸாத்ய மத்யஸ்தரை விட்டு) - ஸாதனமாக உள்ள உபாயத்தைக் கைக்கொண்டவர்களுக்கும், ஸாத்யமான பேறு அடையப்பெற்றவர்களுக்கும் உணர்த்த வேண்டியது மிகவும் குறைவே ஆகும். ஆகவே மேலே கூறப்பட்ட நான்கு பேர்களில் உபாயத்தில் நிலைநிற்பவர்களாகவும், பேற்றில் ஊன்றியுள்ளவர்களாகவும், ஞானங்களும் சிறப்பான ஞானத்தை கொண்டபடியும் உள்ள இவர்கள் இருவரையும் விட்டுவிட்டு. (அவற்றில் கலங்கும் ஜீவர்கட்கு) - கர்மத்தின் பிடியில் சிக்குண்டு, உபாயம் எது என்றும், பேறு எது என்றும் தெரியாமல் கலங்கி நிற்கும் ஸம்ஸாரிகளுக்கு, (வீடுமின் நினைமின் என்று இவர் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர்) – திருவாய்மொழி (1-2-1) வீடுமின் முற்றவும் – என்று தொடங்கி, திருவாய்மொழி (10-5-10) - சுனை நன்மலரிட்டு நினைமின் நெடியானே - என்பது முடிய, கைவிடத்தக்கவை மற்றும் ஏற்கத்தக்கவை இன்னவை என்று பலவிதமாக உபதேசிப்பார்.

**வ்யாக்யானம்** - ப்ரேம பரவசனாய் ஸாதந ஸாத்யங்கள் இன்னதென்றறியாதே கலங்கு மீச்வரனுக்கு "அயோக்யதாநுஸந்தாநத்தாலே இவர் நம்மை விடில் செய்வதென்" என்றதிசங்கை பண்ணி அலமருகிறவளவிலே, "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே", "உன்னை நானடைந்தேன் விடுவேனோ" என்று, "மாசுச:" என்பது, "தோகை மாமயிலார்கள் செவியோசை வைத்தெழ ஆகள் போக விட்டுக் குழலூது" என்று ஸாதந ஸாத்யங்களை யறிவிப்பது. "மழறு தேன்மொழியார்கள் நின்னருள் சூடுவார் மனம் வாடி நிற்க எம் குழறு பூவையொடும் கிளியோடும் குழகேல்", "கன்ம மன்றெங்கள் கையில் பாவை பறிப்பது", "ஆன்பின் போகேல்", "என்கை கழியேல்" என்று அக்ருத்யங்களைச் செய்யாதே கொள்ளென்பது, "நீயுகக்கு நல்லவரொடு முழிதராய்", "அவத்தங்கள் விளையுமென் சொற்கொள்" என்று க்ருத்யங்களானவற்றைச் செய்யென்பதாய், இப்படி பலவிடங்களிலு முபதேசிக்கையாலும், ப்ரதம சரமோக்தரான அஜ்ஞ ஸர்வஜ்ஞர்களுக்குப் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவரென்றபடி.

**விளக்கம்** - (அவற்றில் கலங்குமீச்வரனுக்கு) - அடியார்கள் மீது கொண்ட ப்ரேமை காரணமாக உபாயமும் பேறும் இன்னது என்று அறியாமல் கலங்கும் ஈச்வரனுக்கு, (பிடித்தேன் விடுவேனோ) - "தன்னை மிகவும் தாழ்ந்தவர் என்று எண்ணிக் கொண்டு நம்மாழ்வார் நம்மை விட்டு அகன்றுவிடுவாரோ" என்ற சந்தேகத்தால் ஈச்வரன் தடுமாறி

நிற்கும்போது, திருவாய்மொழி (2-6-1) - உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே – என்றும், திருவாய்மொழி (2-6-10) - உன்னை நானடைந்தேன் விடுவேனோ - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவனிடம், கீதை (18-66) – மாசுச: - வருத்தம் அடையாதே - என்று கூறுதல்; (வைத்து எழ ஊது) - திருவாய்மொழி (6-2-2) - தோகை மாமயிலார்கள் செவியோசை வைத்தெழ ஆகள் போக விட்டுக் குழலூது - என்று உபாயத்தையும், அதன் மூலம் அடையப்படும் பேற்றையும் அறிவித்தல்; (வாடி நிற்க) - திருவாய்மொழி (6-2-5) மழறு தேன்மொழியார்கள் நின்னருள் சூடுவார் மனம் வாடி நிற்க எம் குழறு பூவையொடும் கிளியோடும் குழகேல் - என்றும், (கன்மம் அன்று) - திருவாய்மொழி (6-2-8) - கன்ம மன்றெங்கள் கையில் பாவை பறிப்பது – என்றும், (ஆன்பின் கைகழியேல்) – திருவாய்மொழி (10-3-8) - ஆன்பின் போகேல் – என்றும், திருவாய்மொழி (10-3-8) - என்கை கழியேல் - என்றும் கூறிய பாசுரங்கள் மூலம் செய்யத்தகாதவற்றைச் செய்தல் கூடாது என்று கூறுதல்; (உழிதராய் என் சொற் கொள்) - திருவாய்மொழி (10-3-8) – நீ உகக்கு நல்லவரொடும் உழிதராய் – என்றும், திருவாய்மொழி (10-3-10) - அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் – என்றும் கூறும் பாசுரங்கள் மூலம் செய்யத்தக்கவையான உள்ள இவற்றைச் செய்வாயாக என்று கூறுதல்; (இவர் பலகாலும் ஹித அஹிதங்கள் சொல்லுவர்) - என்று இப்படியாக ஈச்வரனுக்கு இவர் பலமுறை நல்லது தீயதை உரைப்பார்.

**வ்யாக்யானம்** – "ஸாதந ஸாத்யங்களில் கலங்கு மீச்வரனுக்கு" என்று உபக்ரமித்து, "பிடித்தேன் விடுவேனோ வாடி நிற்க" இத்யாதிகளை யெல்லா மருளிச் செய்வானென் னென்னில், ஸாதந ஸாத்யஸ்தரைச் சொன்னதுக்கு ப்ரதி கோடியாக அவற்றில் கலக்கம் ஜீவேச்வரர்களிருவர்க்கும் ஒரோ வழிகளாலுண்டென்று தர்சிப்பிக்கைக்காகச் சொன்னவித்தனை யொழிய, மேல் சொல்லுகிற ஹிதாஹிதங்களெல்லாம் அவ்விரண்டு விஷயமாயே யிருக்கவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லாமையால் விரோதமில்லை. ஜீவ விஷயமான உபதேசந்தன்னிலும் அர்த்தபஞ்சகமும் உபதேசிக்கையால் அவை யிரண்டுமே யென்கிற நிர்ப்பந்தமில்லையிறே.

**விளக்கம்** – "ஸாதந ஸாத்யங்களில் கலங்கு மீச்வரனுக்கு" என்று தொடங்கி, "பிடித்தேன் விடுவேனோ வாடி நிற்க" என்பது முடிய உள்ள பலவற்றை ஏன் அருளிச்செய்தார் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். உபாயத்தில் நிலை நிற்பவர்கள் மற்றும் பேற்றில் நிலை

நிற்பவர்கள் ஆகியவர்களைக் கூறுவதற்கு எதிர்த்தட்டாக, உபாயத்தில் கலக்கம் மற்றும் பேற்றில் கலக்கம் ஆகியவை ஜீவாத்மாக்களுக்கும் ஈச்வரனுக்கும் ஒரு சில விதங்களில் ஏற்படுகிறது என்று உரைப்பதன் பொருட்டே இவ்விதம் கூறினார்; நன்மைகள் மற்றும் தீமைகள் ஆகியவை உபாயம் மற்றும் உபேய விஷயத்தில் இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை என்பதால் இவ்விதம் கூறுவதால் முரண்பாடு ஏதும் இல்லை. மேலும் ஜீவாத்மாக்களுக்கு உபதேசம் செய்யும்போது, அத்தகைய உபதேசங்களில் கூட அர்த்தபஞ்சகத்தைக் கூறுவதால், உபாயம் மற்றும் உபேயம் என்ற இரண்டுமே எடுக்கப்பட்டது என்று கூற அவசியம் இல்லை.

**வ்யாக்யானம் -** அங்ஙனன்றிக்கே, ஜீவ விஷயமான உபதேசத்திலும் "வீடுமின் முற்றம்" பக்தி ரூபஸாத நோபதேச பரமாகையாலும், "கண்ணன் கழலிணை" பக்திமான்கள் பரிமாற்றமிருக்கும்படி யுபதேசித்ததாகையாலும், நடுவுள்ள வுபதேசத்தை யாராய்ந்தாலும் பக்தி ப்ரபத்தி ரூபஸாதநோபதேசமும் பகவதநுபவ கைங்கர்ய ரூப ஸாத்யோபதேசமும் ப்ரசுரமாய், ப்ராப்யமான பரஸ்வரூபத்தையும், ப்ராப்தாவான ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தையும், ப்ராப்தி விரோதியையு முபதேசித்தவை, இந்த ஸாதந ஸாத்யங்களிலே ஊன்ற வைக்கைக்குடலாகையாலே ஏதச்சேஷமாய் அறுகையாலும், ஸாதந ஸாத்யங்களில் கலக்கம் தீர்க்கையே உபதேசத்துக்கு ப்ரதாநமென்றொருங்கவிட்டு, ஈச்வர விஷயமான உபதேசமும் ஸாதந ஸாத்யங்களில் கலக்கம் தீர்க்கையைப் பற்றவென்றே கொள்ளவேணுமாகில், "பிடித்தேன்", "விடுவேனோ" என்கிறவிரண்டும் தனக்கு ஸாத்யபூதரான விவரோடே வந்து ஸம்ச்லேஷித்துப் பெறாப்பேறு பெற்றானயிரா நிற்கச்செய்தே, "இவர் அயோக்யதாநுஸந்தாநம் பண்ணி அகலில் செய்வதென்" என்றதிசங்கை பண்ணி யலமாக்கிறத்தை நிவர்த்திப்பிக்கைக்காகச் சொன்னவை யாகையாலே ஸாத்யவிஷயமான கலக்கத்தைத் தெளிவிக்கைக்காகச் சொன்னவை யாகலாம். ஸாத்யத்தில் கலக்கமாவது ஸாத்யமின்னதென் றறியாமல் கலங்குகை யானாலும், ஸாத்ய வஸ்து விஷயமான கலக்கமென்கிற மாத்ரத்தைக் கொண்டு இதுக்கிப்படி யோஜித்தால் வரும் விரோதமில்லை.

**விளக்கம்** - இவ்விதம் அல்லாமல் இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். ஜீவாத்மாக்கள் குறித்த விஷயமாக உள்ள உபதேசங்களிலும், திருவாய்மொழி (1-2) - வீடுமின் முற்றவும் – என்ற திருவாய்மொழியானது பக்தியில் நிலைத்து நிற்பவர்களுடைய

செயல்கள் எவ்விதம் இருக்கவேண்டும் என்பதை உபதேசிப்பதாக உள்ளதாலும், இந்த இரண்டு திருவாய்மொழிகளின் நடுவில் மற்றவற்றை ஆராய்ந்து பார்த்தால், பக்தி மற்றும் ப்ரபக்தி ரூபமாக உள்ள உபாய உபதேசங்களும், பகவத் அனுபவம் என்ற கைங்கர்ய வடிவில் உள்ள பலனின் உபதேசங்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன; மேலும் இவை அடையவேண்டிய இலக்காக உள்ள பரமாத்மாவின் ஸ்வரூபம், அடைபவனாக உள்ள ஜீவாத்மாவின் ஸ்வரூபம், பலனை அடைவதற்கு உள்ள தடைகளின் ஸ்வரூபம் ஆகியவற்றையும் கூறுகிறார். இப்படியாக உள்ளதால், இந்த திருவாய்மொழிகள் உபாயம் மற்றும் பேறு ஆகியவற்றில் நிலையாக நிற்க வைப்பதற்கான காரணமாக உள்ளதால், இவை அங்கங்கள் போன்று காணப்படுகின்றன. எனவே உபாயம் மற்றும் பேறு ஆகியவற்றில் உள்ள கலக்கங்களை நீக்குவதே உபதேசத்தின் முக்கியமான பயன் என்று கொண்டு, ஸர்வேச்வரன் விஷயமான உபதேசமும் உபாயம் மற்றும் பேறு ஆகியவற்றில் உள்ள கலக்கத்தைத் தீர்க்கவே ஆகும் என்பதாக உள்ளது என்று கொள்ளவேண்டும் என்றால் – “பிடித்தேன்”, “விடுவேனோ” என்கிற இந்த இரண்டும் தனக்குப் பேறாக உள்ள நம்மாழ்வாரோடு வந்து கலந்து நின்று பெற இயலாத பேற்றினை அடையப் பெற்றதாக ஸர்வேச்வரன் நிற்கும்போது, “இவர் தம்மைத் தகுதியானவர் அல்லர், மிகவும் தாழ்ந்தவர் என்று எண்ணியபடி நம்மை விட்டு அகல முயற்சித்தால் என்ன செய்வது?”, என்று சந்தேகம் கொண்டு தடுமாறுகிறான்; ஆகவே அவனுடைய இந்தக் கலத்தை நீக்குவதற்காக உரைக்கப்பட்டது என்பதால், பேறு குறித்த கலக்கத்தை நீக்கும்விதமாக கூறப்பட்டது - எனலாம். பேறு குறித்த கலக்கம் என்றால், பேறு இன்னது என்று அறியாமல் கலங்குதல் என்பதே பொருள் என்றாலும், பேற்றைக் குறித்த கலக்கம் என்பதை இவ்விதம் பொருள் கொண்டால் முரண்பாடு ஏதும் இல்லை.

**வ்யாக்யானம் -** (வைத்தெழவூது) என்கிறவிது தனக்கபிமதமான விஷயங்களைப் பிரிந்து கண்ணாஞ்சுழலையிட்டு அதஸ்மிம்ஸ் தத்புத்தி பண்ணித் தங்கள் குழலைக் கொண்டாடினானாகக் கருதி, “நாங்கள் அவர்கள் அல்லோம் காண். அவர்கள் பக்கலிலே போ” என்கிற நினைவாலே, “தோகைமாமயிலார்கள் செவியோசை வைத்தெழ” என்று ஸாத்யத்தையும், “ஆகள் போகவிட்டுக் குழலூது” என்று ஸாதநத்தையும் அவனுக் கறிவிக்கிற தாகையாலே, உபயத்திலும் கலங்கினவனுக்குச் சொல்லுகிறதென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

**விளக்கம்** - (வைத்தெழ ஊது) - தனக்கு விருப்பமானவர்களைப் பிரிந்து, கலக்கம் அடைந்து மயங்கி, ஒன்றை மற்றொன்றாக எண்ணி, தங்களுடைய குழலை அவன் கொண்டாடினான் என்று எண்ணியவர்களாக, “நாங்கள் நீ நினைப்பவர்கள் அல்லர். நீ அவர்களிடமே செய்வாயாக”, என்று உரைக்கவேண்டும் என எண்ணியபடி, திருவாய்மொழி (6-2-2) - தோகை மாமயிலார்கள் செவியோசை வைத்தெழ - என்பதன் மூலம் பலனையும், திருவாய்மொழி (6-2-2) - ஆகள் போக விட்டுக் குழலூது – என்பதன் மூலம் அதனை அடையும் வழியையும் அவனுக்கு உணர்த்துகிறார். ஆகவே இவை உபாயத்திலும் உபேயத்திலும் கலங்குபவனுக்குக் கூறப்பட்டது என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (வாடி நிற்க) என்கிறவிது “மழறுதேன் மொழியார்கள்” என்று தொடங்கி, உனக்கபிமதைகளானவர்கள் உன்னைப் பிரிந்து உறாவிக் கிடக்க உனக்கு உபேக்ஷா விஷயமான வெங்கள் பூவைக்கிளிகளோடே கலந்து பேச்சுக்கொள்ளாதே கொள்ளென்கிற தாகையாலே, ஸாத்யத்தில் கலக்கம் கண்டு சொன்னதாமிறே. (கன்மமன்று) என்கிறவிது, தங்களோடே இட்டீடு கொண்டு தங்களபிஸந்தியைக் குலைத்துத் தங்களை வசீகரிக்கைக்கு ஸாதநமாக நினைத்துத் தங்களுக்கநிஷ்டமென் றறியாமல் கையில் பாவையைப் பறிக்கிற அவனைக் குறித்து “உனக்கிது கார்யமன்று” என்கிறதாகையாலே ஸாதநத்தில் கலக்கங்கண்டு சொன்னதாகலாம். (ஆன்பின் போகேல் கைகழியேல்) என்றது பசு மேய்க்கப் போனவிடத்தே தனக்கென்ன தீங்குவருகிறதோ என்றும் பிரிவாற்றாமலும் இத்தலைபடுகிற க்லேசமறிந்தால் பிரியாதே இத்தலையோடே கூடியிருக்கை புருஷார்த்தமாயிருக்க, ஜாத்யுசிததர்மமென்கிற மாத்ரத்தைக் கொண்டு பசுமேய்க்கப் போகவொருப்படுகிறவனைக் குறித்து “ஆழுமென்னாருயிரான் பின் போகேல்”, “கலவியும் நலியுமென்கை கழியேல்” என்றவையாகையாலே, ஸாத்யத்தில் கலங்கினவனுக்குச் சொல்லுகிறதாகலாம். (உழிதரு) என்கிறவிது “வசி செயுன் தாமரைக்கண்ணும் வாயும் கைகளும் பீதகவுடையுங் காட்டி” என்று வசீகார ஸாதநத்தையும், “உகக்கு நல்லவரொடு முழிதரு” என்று அபிமத விஷய ஸம்ச்லேஷமாகிற ஸாத்யத்தையும், அவையறியாமல் நிற்கிறவனுக்கறிவித்ததாகவிறே யிருக்கிறது; (என் சொற்கொள்) என்கிறவிது பசு மேய்க்கப் போகவேண்டாவென்று விலக்குகிறது. நமக்கொரு தீங்கு வாராமைக்காக வென்றறியாதே பரிவையான தன் வார்த்தையை யநாதரிக்கிறவனைக் குறித்து “அவத்தங்கள் விளையுமென் சொற்கொள்” என்றதாகையாலே, இதுவும் ஸாத்யத்தில் கலங்கினவனுக்குச் சொன்னதாகக்

கொள்ளலாம். ஆனபின்பு, (இவற்றில் கலங்கு மீச்வரனுக்குப் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவர்) என்றதுக்கு அநுகுணமாக இச்சந்தைகளுக் கெல்லாமிப்படி யோஜித்தாலும் குறையில்லை.

**விளக்கம்** – (வாடி நிற்க) திருவாய்மொழி (6-2-5) மழறு தேன்மொழியார்கள் – என்று தொடங்கி, “உனக்கு விருப்பமானவர்கள் உன்னைப் பிரிந்து துக்கத்தில் உள்ளபோது உனது வெறுப்புக்கு இடமாக உள்ள எங்களுடைய பூவைக்கிளிகளுடன் நீ கலந்து பேசவேண்டாம்”, என்று உரைப்பதால் பேற்றில் கலக்கம் கண்டு உரைக்கப்பட்டதாயிற்று. (கன்மம் அன்று) - தங்களுடன் விவாதம் செய்து, தங்களுடைய மன உறுதியைக் குலைத்து, தங்களை வசப்படுத்துவதற்கான வழியாக எண்ணி, தங்களுக்கு விருப்பம் இல்லாதது என்று அறியாமல், தங்கள் கைகளில் உள்ள பாவையை அவன் பறிக்கும்போது அவனிடம், “உனக்கு இது ஏற்ற செயல் அல்ல”, என்று கூறுவதால் உபாயத்தில் கலக்கம் கண்டு உரைத்தார் என்றானது. (ஆன்பின் போகேல் கைகழியேல்) – என்பதான இவை பசுக்கள் மேய்க்கச் சென்ற இடத்தில் தனக்கு என்ன தீமை ஏற்படும் என்று அறியாமலும், தனது பிரிவாற்றாமை காரணமாக இவர்களுக்கு ஏற்படும் துன்பம் இன்னது என்று அறிந்தால் பிரியாமல் சேர்ந்து இருத்தல் புருஷார்த்தம் என்று கொள்ளாமல் தனது குலத்திற்கே உரிய தர்மம் என்பதை எண்ணியபடியும் பசுக்களை மேய்க்கச் சென்றான். இவ்விதம் உள்ளவனைக் கண்டு திருவாய்மொழி (10-3-8) - ஆழுமென்னாருயிரான் பின் போகேல் – என்றும், திருவாய்மொழி (10-3-8) - கலவியும் நலியுமென்கை கழியேல் - என்றும் கூறுவதால் பேற்றில் கலங்கியவனுக்குக் கூறப்பட்டது என்றாகிறது. (உழிதரு) - என்பதான இது திருவாய்மொழி (10-3-8) - வசி செயுன் தாமரைக்கண்ணும் வாயும் கைகளும் பீதகவுடையுங் காட்டி - என்று கூறுவதற்கு ஏற்ப வசீகரிக்கும் கருவிகளையும், திருவாய்மொழி (10-3-8) - உகக்கு நல்லவரொடு முழிதரு - என்று கூறுவதற்கு ஏற்ப தன்னால் விரும்பப்பட்டவர்களுடன் கலத்தல் என்ற பயனையும் அறியாமல் உள்ளவனுக்கு, அவற்றை உரைப்பதாக உள்ளது. (என்சொற்கொள்) – என்பதான இது, “பசு மேய்க்கச் செல்லவேண்டாம்” என்று அவர்கள் தடுப்பது, நமக்கு ஒரு துன்பம் வரக்கூடாது என்பதற்காகவே ஆகும் என்பதை அறியாமல், அன்பு கொண்டவளாகிய தனது சொற்களைத் தள்ளுபவனைக் குறித்து, திருவாய்மொழி (10-3-10) – அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் - என்று கூறியதால், இதுவும் பேற்றில் கலங்குகிறவனுக்கு உரைத்ததாயிற்று. இப்படியாக உள்ளபோது, (இவற்றில் கலங்கு மீச்வரனுக்குப்


Email:sridharan_book@yahoo.co.in

பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவர்) என்பதற்கு ஏற்ப இந்தப் பாசுரங்களுக்கு இவ்விதம் பொருள் கூறினால் தோஷம் இல்லை.

199. கதிர்ஞானமூர்த்திக்கு உணர்த்துவது ப்ரேமத்தாலே; தம மூடுவார்க்கு வேட்கையெழுவிப்பது ஞானத்தாலே.

**அவதாரிகை** - இப்படி யிவர்களிருவர்க்கும் பலகாலுமுபதேசிக்கைக்கு ஹேதுவென் னென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (கதிர்ஞான மூர்த்திக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் இவர் பலமுறை இந்த இருவருக்கும் (ஜீவாத்மா, ஈச்வரன்) உபதேசம் செய்வது ஏன் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதி யாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞானமூர்த்தியினாய்" என்று ஸம்ஹ்ருதி ஸமயத்தில் ஸகல சேதநாசேதகங்களையு மொக்கக்கலசி ஸ்ருஷ்டி ஸமயத்தில் ஒருவர் கர்மமொருவர் பக்கல் கலசாதபடி பிரித்தவிடத்திலும் தன் ஸ்வரூபத்துக் கொரு பேதமின்றிக்கே அத்விதீயமாய் அபரிச்சேத்யமான கீர்த்தி ஸமுத்ரத்தை யுடைத்தா யிருக்கிற ப்ரபாரூபமான ஜ்ஞானத்தை வடிவாகவுடைய னாகையாலே ஸர்வஜ்ஞனா யிருக்கிறவனுக்கு "உனக்கொன் றுணர்த்துவன்" என்று உபதேசிக்கிறது, தத் விஷய ப்ரேமத்தாலே. "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக் கொள்ளென்று தம மூடும்" என்று ஐச்வர்யம் விநாச ஹேதுவாகக் காணாநிற்கச் செய்தே பின்னையுமத்தை ஸ்வீகரிக்கும்படி தமோபி பூதராகா நிற்கும் ஸம்ஸாரிகளுக்கு, "நின்கண் வேட்கையெழுவிப்பன்" என்று தம்முபதேசத்தாலே பகவத் பக்தியை ஜநிப்பிக்கிறது. தத் ஸம்பந்தமடியாக அவர்களை விடமாட்டாதே திருத்தித் தம்மோபாதி பகவதநுபவ பரராக்க வேணுமென்கிற ஜஞாநத்தாலே யென்கை.

**விளக்கம்** – (கதிர்ஞான மூர்த்திக்கு) - திருவாய்மொழி (6-2-8) - பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதி யாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞானமூர்த்தியினாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸம்ஹாரம் செய்யும் ப்ரளய காலத்தில்

அனைத்து சேதந அசேதநங்களையும் ஒன்றாகக் கலந்து, ஸ்ருஷ்டி காலத்தில் ஒருவருடைய கர்மம் மற்றொருவருடன் கலந்து விடாதபடி பிரித்தபோதிலும், தனது ஸ்வரூபத்திற்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல், இரண்டாவது என்று ஏதும் இல்லாதபடி, அளவிட இயலாத கீர்த்தியைக் கடல் போன்று கொண்ட தேஜோரூபமான ஞானத்தையே வடிவமாகக் கொண்டுள்ளவன் என்பதால், அனைத்து அறிந்தவனாக உள்ள ஸர்வேச்வரனுக்கு. (உணர்த்துவது) - திருவாய்மொழி (6-2-5) – உனக்கு ஒன்று உணர்த்துவன் – என்று கூறுவற்கு ஏற்ப உபதேசிப்பதன் காரணம், (ப்ரேமத்தாலே) - அவனிடம் கொண்டுள்ள ப்ரேமையால் ஆகும். (தம மூடுவார்க்கு) – திருவாய்மொழி (4-9-4) – கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக் கொள்ளென்று தம மூடும் - என்பதற்கு ஏற்ப ஐச்வர்யம் அழிவதற்குக் காரணமாக உள்ளது என்பதைக் காணும்போதும் அதனையே தொடர்ந்து ஏற்கும் படியாகச் செய்யும் அறிவின்மையால் மூடப்பட்டு நிற்கின்ற ஸம்ஸாரிகளுக்கு. (வேட்கை எழுவிப்பது) - திருவிருத்தம் (46) - நின்கண் வேட்கையெழுவிப்பன் - என்பதற்கு ஏற்ப தனது உபதேசம் மூலமாக ஸர்வேச்வரன் குறித்த பக்தியை ஏற்படுத்துவதன் காரணம், (ஞானத்தாலே) - அவனுடன் உள்ள ஸம்பந்தம் காரணமாக அவர்களைக் கைவிட இயலாமல் திருத்தி, தம்மைப் போன்றே பகவத் அனுபவம் பெறுபவர்களாகச் செய்யவேண்டும் என்கிற ஞானத்தால் ஆகும்.

200. உயிர்மாய்தல் ஆழு மென்னுருயிரென்னும் பரதுக்கம் ஸஹியாமை யிரண்டிலு முண்டு.

**அவதாரிகை** - இப்படி ஜ்ஞாந ப்ரேமங்களிரண்டும் காரணமாகச் சொல்லுவானென். பரதுக்கா ஸஹிஷ்ணுத்வமன்றோ பரோபதேசத்துக்கு ப்ரதாந காரணமென்ன வருளிச்செய்கிறார் (உயிர்மாய்தல்) இத்யாதியால்.

**விளக்கம்** – மற்றவர்களுடைய துக்கம் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல் இருத்தலே அவர்களுக்கு உபதேசம் செய்யக் காரணமாக உள்ளபோது, ஞானம் மற்றும் ப்ரேமம் ஆகியவற்றை ஏன் காரணமாக உரைக்கவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, "கொண்டாட்டும் குலம் புனைவும்" என்று தொடங்கி, "உயிர் மாய்தல் கண்டாற்றேன்" என்று ஸம்ஸாரிகள் பாரிக்கிற பாரிப்பும் முடிந்து போகிறபடியும் கண்டு ஆற்றமாட்டுகிறிலே னென்கையாலே பரருடைய துக்கம் ஸஹியாமையும், "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்றாழு மென்னாருயிர்" என்று அசுரர்களுன்னை வந்து கிட்டினால் அங்கு என்னாய் விளையுமோவென்று என்னாத்மாவானது தரைப்படா நின்றதென்கையாலே பரனான வீச்வரனுடைய துக்கம் ஸஹியாமையும், இருவர்க்கு முபதேசிக்கைக்கு ஹேதுவாகச் சொன்ன ஜ்ஞாந ப்ரேமங்க ளிரண்டிலு மென்கை. இத்தால் ஜ்ஞாந ப்ரேமங்களிரண்டும் பரதுக்கா ஸஹிஷ்ணுத்வத்தை யொழிந்திரா தென்றதாய்த்து.

**விளக்கம்** – (உயிர்மாய்தல் என்னும் பரதுக்கம் ஸஹியாமை) - திருவாய்மொழி (4-9-3) – கொண்டாட்டும் குலம் புனைவும் – என்பதில், "ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுடைய பாரிப்பு முடிந்து போவதைக் கண்டு தாங்க இயலாமல் உள்ளேன்", என்று கூறுவதன் மூலம், மற்றவர்கள் துன்பம் கண்டு பொறுக்க இயலாமல் உள்ள நிலை. (ஆழும் என் ஆர் உயிர் என்னும் பரதுக்கம் ஸஹியாமை) - திருவாய்மொழி (10-3-8) – அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொல் ஆங்கு என்றாழும் என்னாருயிர் – என்பதில், "அசுரர்கள் உன்னை வந்து அடைந்தால் அங்கு என்ன நடக்குமோ என்று எனது ஆத்மா தரையில் நிற்க இயலாமல் தவித்தபடி இருந்தது", என்று கூறுவதன் மூலம், ஸர்வேச்வரனுடைய துன்பத்தைக் கண்டு பொறுக்க இயலாமல் உள்ள நிலையும். (இரண்டிலும் உண்டு) - ஸம்ஸாரத்தில் உள்ளவர்கள், ஸர்வேச்வரன் ஆகிய இரண்டு பேருக்கும் உபதேசம் செய்வதற்கான காரணமாகக் கூறப்பட்ட ஞானம் மற்றும் ப்ரேமை இரண்டிலுமே உள்ளது. ஆகவே ஞானம் மற்றும் ப்ரேமை ஆகிய இரண்டுமே, மற்றவர்கள் துன்பம் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமை என்பதை விட்டு நீங்கி இருப்பது அல்ல என்றாகிறது.

201. என்னதுன்னதாவியிலே அறிவாராத்மாவென்று அவன் மதந்தோன்றும்.

**அவதாரிகை** - இப்படி ப்ரேமமாத்ரத்தாலன்றிக்கே ஈச்வரன் நினைவாலே அவனுக்குத் தாமாத்ம பூதராகையாலும், அவனுக்கொரு தீங்கு வரப்பொறுக்கமாட்டா ரென்னுமத்தை தர்சிப்பிக்கிறார் (என்னது) இத்யாதியால்.

**விளக்கம்** – இவ்விதம் ஸர்வேச்வரன் கொண்ட ப்ரேமை மட்டும் அல்லாமல் அவனிடம் எப்போதும் பொருந்தியுள்ள நினைவு காரணமாகவும், அவனுக்கு நம்மாழ்வாராகிய தாம் ஆத்மாவாக உள்ளதாலும், அவனுக்கு எந்த ஒரு தீமை வருவதையும் பொறுத்துக் கொள்ளமாட்டார் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "என்னதுன்னதாவியும்" என்று உன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் நானிட்ட வழக்கு என்றவிடத்திலே, "அறிவாருயிரானாய்" என்று அறிவாரை யுயிராக வுடையவ னென்னும்படி, "ஜ்ஞாநீ த்வாத்மைவமே மதம்" என்று ஜ்ஞாநியானவன் எனக்கு தாரகனாகவே யென்னுடைய மதம் என்றருளிச்செய்தபடியே, இவரை யவன் தனக்காத்மாவாக நினைத்திருக்கிற ஆகாரம் தோன்றுமென்றபடி. ஆகையால், அவனுக்கொரு துக்கம் வரப் பொறுக்கமாட்டாரென்று கருத்து.

**விளக்கம்** – (என்னது உன்னது ஆவியிலே) - திருவாய்மொழி (4-3-8) – என்னதுன்னதாவியும் – என்பதில், "உன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபமானது எனது விருப்பத்தின்படி உள்ளது", என்று கூறும்போது, (அறிவார் ஆத்மா என்று) - திருவாய்மொழி (6-9-8) – அறிவார் உயிர் ஆனாய் - என்று அறிவாரைத் தனது உயிராகக் கொண்டவன் என்பதற்கு ஏற்ப, (அவன் மதம் தோன்றும்) - கீதை (7-18) - ஜ்ஞாநீ த்வாத்மைவமே மதம் – ஞானிகள் எனது ஸ்வரூபம் - என்பதற்கு ஏற்ப, "ஞானியாக உள்ளவன் என்னுடைய உயிர் ஆவான் என்பதே எனது கருத்து", என்று அவன் அருளிச்செய்தபடியே, நம்மாழ்வாரை அவன் தன்னுடைய ஆத்மா என்று எண்ணியுள்ள நிலை தோன்றும். ஆகவே அவனுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் இவர் பொறுக்கமாட்டார்.

202. இருத்து மெண்டானாய்ப் பொய் கலவாது அன்பு செய்து பற்றிலனாய் க்ஷுத் த்ருட் பீடித நிர்த்தநரைப் போலே கண்டு கொண்டுண்டு பருகிப் பரிஜநாதிகளோடே தன்னைத் தந்து என்செய்வ னென்றே யிருந்து அகில பரத்தையும் ஸமர்ப்பிக்க அது சுமந்து அல்லு நன்பகலும் போகு என்றாலும் அகல்வானு மல்லனாய் போகே லென்றால் உகப்பையுந் தவிர்ந்து விதி வகையே நடத்துமவனே உபதேச ஸத்பாத்ரம்.

**அவதாரிகை** - ஆக ஜீவேச்வரர்களுக்குப் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுகைக்கு ஹேதுக்களை தர்சிப்பித்தாராய் நின்றார் கீழ், இப்படி இவருபதேசிப்பரானாலும் சிஷ்ய

லக்ஷண யோக்யதை யில்லாத வீச்வரன் உபதேசத்துக்கு முக்யபாத்ரமன்றே என்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறர் மேல் (இருத்துமெண்டானாய்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக ஸம்ஸாரிகள் மற்றும் ஈச்வரன் ஆகியோருக்கு பலமுறை நன்மை தீமைகளை உரைத்த காரணத்தை அருளிச்செய்தார். இவ்விதம் இவர் உபதேசித்தாலும், சிஷ்யனுக்கான லக்ஷணத்தில் ஸர்வேச்வரன் பொருந்தமாட்டான் என்னும்போது, உபதேசத்திற்கு அவன் முக்கியமான பாத்திரம் அல்ல அல்லவோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸச்சிஷ்யனுனவன் ஆசார்யனை ததபிமத ஸ்தலத்திலே வைத்து தச்சந்தாநுவர்த்தியாய் தத்விக்ரஹத்திலே புரையற்ற விருப்பமுடையனாய், ஸகல ஸ்நேஹத்தையுமவன் பக்கலிலே பண்ணி ததிதரங்களிலே ஸங்கமற்று, மிடியனும் பசியனும் விடாயனும் தனமும் சோறும் தண்ணீரும் பெற்றாப்போலே அத்யபி நிவேசத்தோடே யவனை யனுபவித்து, "சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத்" என்கிறபடியே தன்னாத்மாத்மீயங்களை ஆசார்யனுக்கு ஸமர்ப்பித்து எல்லாம் செய்தாலும், "க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாத் ந தத்துல்யம் கதஞ்சந" என்கிறபடியே ஆசார்யன் பண்ணின மஹோபகாரத்துக்கு ஸத்ருசமல்லாமையாலே குறைவாளனுய், ஆசார்யன் தன்னுடைய தேஹயாத்ரா பரமெல்லாம் தன் மேலே பொகட்டிருக்கத் தான் அதடங்கலும் சுமந்து, திவாராத்ர விபாகமற அவனைப் பிரியாதே அவன் நிக்ரஹித்து "போ" என்றாலும் போகாதானாய், அவனுக்கநிஷ்டமானால் தனக்கு உகப்பானவற்றையும் விட்டு ஆசார்யன் விதித்தபடியே நடத்துமவனாகையாலே.

**விளக்கம்** – அனைத்துவிதங்களிலும் சரியான சிஷ்யன் ஒருவன், தனது ஆசார்யனை அவனுக்கு விருப்பமான இடத்தில் வைத்து, ஆசார்யன் விருப்பத்தின்படி நடந்து, ஆசார்யனுடைய திருமேனியில் எந்தவிதமான தளர்வும் இல்லாத விருப்பம் கொண்டவனாக, அனைத்துவிதமான ப்ரியத்தையும் ஆசார்யனிடம் வைத்து, மற்ற எந்த விஷயங்களிலும் தொடர்பு இல்லாமல் இருந்து, வறுமையில் இருந்தவன் செல்வம் அடைந்தது போன்றும் பசியுடன் இருந்தவன் உணவைப் பெற்றது போன்றும் மிகுந்த தாகம் எடுத்தவன் தண்ணீரைப் பெற்றது போன்றும் மிகுந்த ஈடுபாட்டுடன் ஆசார்யனை

அனுபவித்து, சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் - தனது சரீரம், பொருள், உயிர் ஆகியவற்றை நல்ல ஆசார்யனுக்கு அளிக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப தனது ஆத்மா மற்றும் பொருள்கள் அனைத்தையும் ஆசார்யனுக்கு அளித்து, இவ்விதம் அனைத்தையும் செய்தபோதிலும், க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாத் ந தத்துல்யம் கதஞ்சந – இந்தப் பூமி முழுவதையும் அளித்தாலும் ஆசார்யன் செய்த மிகப் பெரிய உபகாரத்திற்கு எந்தவிதமான இணையும் இல்லாமல் தான் செய்தவை குறைவே ஆகும் என்று எண்ணியவனாய், ஆசார்யன் தனது பொறுப்பு முழுவதையும் தன் மீது வைத்திருக்க அவற்றைச் சுமந்து, இரவுபகல் என்று எப்போதும் ஆசார்யனை விட்டு அகலாமல், ஆசார்யன் கோபம் கொண்டு “போ” என்று கூறினாலும் அகலாமல், ஆசார்யனுக்கு விருப்பம் இல்லையென்றால் தான் விரும்பியதையும் கைவிட்டு, ஆசார்யன் இட்ட கட்டளைப்படி நடப்பவன் ஆவான்.

**வ்யாக்யானம்** – “இருத்தும் வியந்தென்னைத் தன் பொன்னடிக்கீழ்” என்று இவர்க் கபிமதமான விடத்தே இவரை யிருத்தி, “என்னெண்டானான்” என்று இவர் நினைவிலே யொழுகுவானாய், “பொய் கலவாதென் மெய் கலந்தான்” என்று இவர் திருமேனியில் பண்ணின விருப்பத்திலே புரையின்றிக்கே, “அந்தாமத்தன்பு செய்து” என்று பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை இவர் பக்கலிலே பண்ணி, “பற்றிலனீசனும்” என்று இவர் பக்கல் ஸங்கத்தாலே யங்குள்ளார் பக்கல் ஸங்கத்தையும் விட்டு, “இருந்தான் கண்டு கொண்டு” என்றும், “என்னை முற்றவும் தானுண்டான்” என்றும், “தானென்னை முற்றப் பருகினான்” என்றும் சொல்லுகிறபடியே நிர்த்தநன் நிதி கண்டாற்போலவும், பசித்தவன் சோறு கண்டாற்போலவும், தாஹித்தவன் தண்ணீர் கண்டாற்போலவும், அத்யந்தாபிநிவேசத்தோடே யிவரை யநுபவித்து,

**விளக்கம்** - இது போன்று ஸர்வேச்வரனும் (இருத்தும்) - திருவாய்மொழி (8-7-1) – இருத்தும் வியந்து என்னைத் தன் பொன்னடிக்கீழ் – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருக்கு விருப்பமான இடத்தில் அவரை அமர்த்தி. (எந்தானாய்) - திருவாய்மொழி (1-8-7) – என்னெண்டானான் - என்பதற்கு ஏற்ப இவர் நிலைவில் நின்றபடி. (பொய் கலவாது) - திருவாய்மொழி (1-8-5) - பொய் கலவாது என் மெய் கலந்தான் - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருடைய திருமேனி மீது கொண்ட விருப்பம் காரணமாக எந்தவிதமான தளர்வும் இன்றி, (அன்பு செய்து) - திருவாய்மொழி (2-5-1) – அந்தாமத்தன்பு செய்து – என்பதற்கு

ஏற்ப பரமபதம் மீது காண்பிக்கும் விருப்பத்தை நம்மாழ்வாரிடம் காண்பித்து. (பற்றிலனாய்) - திருவாய்மொழி (1-2-6) - பற்றிலன் ஈசனும் – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாரிடம் கொண்ட அன்பு காரணமாகப் பரமபதத்தில் உள்ளவர்களுடைய சம்பந்தத்தை விட்டு அகன்று. (க்ஷுத் த்ருட் பீடித நிர்த்தநரைப் போலே கண்டு கொண்டுண்டு பருகி) – திருவாய்மொழி (8-7-2) - இருந்தான் கண்டு கொண்டு – என்பதற்கு ஏற்ப வறுமையில் இருந்த ஒருவன் செல்வத்தைக் கண்டது போன்றும், திருவாய்மொழி (9-6-8) – என்னை முற்றவும் தானுண்டான் - என்பதற்கு ஏற்ப பசி நிறைந்த ஒருவன் உணவைக் கண்டது போன்றும், திருவாய்மொழி (9-6-10) – தான் என்னை முற்றப் பருகினான் – என்பதற்கு ஏற்ப தாகம் கொண்டவன் தண்ணீரைக் கண்டது போன்றும், மிகுந்த ஈடுபாட்டுடன் வந்து நம்மாழ்வாரை அனுபவித்து.

**வ்யாக்யானம்** – "பரிஜந பரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி ப்ரவர குணகணாச்ச ஜ்ஞாந சக்த்யாதயஸ் தே, பரமபதமதாண்டாக்யாத்ம தேஹஸ் ததாத்மா வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த" என்றும், "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" என்றும் சொல்லுகிறபடியே தன் விபூதியையும் தன்னையு மிவர்க்குக் கொடுத்து, "உன்னடியார்க்கென் செய்வனென்றே யிருத்தி" என்கிறபடியே இவர்க்கெல்லாம் செய்தாலும் தானிழவாளனாய், ஆத்மாத்மீயாகில பரத்தையும் நமச் சப்தமுகேந விவர் ஸமர்ப்பிக்க; "வேங்கடத்துறைவார்க்கு நமவென்னலாம் கடமையது சுமந்தார்கட்கு" என்னும்படி "பூயிஷ்ட்டாம்" என்கிறபடியே நம உக்தி தனக்குக் கனத்துத் தோற்றுகையாலே அவ்வழியாலே அகில பரத்தையும் சுமந்து, "அல்லு நன் பகலுமிடை வீடின்றி நல்கி யென்னை விடான்" என்று இவர் பக்கல் பண்ணின ஸ்நேஹத்தாலே திவாராத்ர விபாகமற இவரைவிடமாட்டாதே, "போகு நம்ப" என்று சீறிப் போகச் சொன்னாலும், "அகல்வானு மல்லனினி" என்கிறபடியே அகலாதானாய், "ஆன் பின் போகேல்" என்று இவர் நிவர்த்திப்பித்தால் "திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி" என்கிறபடியே தனக்கு உகப்பானத்தையும் தவிர்ந்து, "அருள்தருவா னமைகின்றானது நமது விதிவகையே" என்று இவர் விதித்தபடியே நடத்துகிற ஸர்வேச்வரனே உபதேசத்துக்கு ஸத்பாத்ரமென்கை.

**விளக்கம்** – (பரிஜநாதிகளோடே தன்னைத் தந்து) - வரதராஜஸ்தவம் (63) - பரிஜந பரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி ப்ரவர குணகணாச்ச ஜ்ஞாந சக்த்யாதயஸ் தே, பரமபதமதாண்டாக்யாத்ம தேஹஸ் ததாத்மா வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த - வரதா! உனது அனைத்து பரிஜனங்கள், சாமரம் போன்றவை, திரு ஆபரணங்கள் திவ்யமான ஆயுதங்கள், ஞானம் சக்தி போன்ற குணங்கள், ஸ்ரீவைகுண்டம் போன்றவை, உன்னுடைய திருமேனி, உனது அனைத்து பொருள்கள் என்ற பலவும் உனது அடியார்களுக்காகவே உள்ளன - என்றும், திருவாய்மொழி (2-7-11) - எனக்கே தன்னைத் தந்த கற்பகம் – என்று கூறுவதற்கு ஏற்ப தனது விபூதிகளையும் தன்னையும் நம்மாழ்வாருக்கு அளித்து. (என் செய்வன் என்றே இருத்தி) – பெரியதிருவந்தாதி (53) - உன்னடியார்க்கென் செய்வனென்றே யிருத்தி - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருக்கு இவை அனைத்தையும் செய்தபோதிலும் தான் குறைவாகவே செய்ததாக எண்ணியபடி. (அகில பரத்தையும் ஸமர்ப்பிக்க) - ஆத்மாவுடன் சேர்ந்துள்ள அனைத்து பாரங்களையும் “நம” என்று உரைத்து இவர் அவனிடம் சமர்ப்பித்தபோது, திருவாய்மொழி (3-3-6) - வேங்கடத்துறைவார்க்கு நமவென்னலாம் கடமையது சுமந்தார்கட்கு - என்பதற்கு ஏற்ப, யஜுர்வேதத்தில் – பூயிஷ்ட்டாம் – உன் பொருட்டு நம: என்று கூறுகிறோம் – என்று கூறுவதற்கு ஏற்ப கூறப்பட்ட அந்தச் சொல்லானது தனக்குப் பாரமாகத் தோன்றுவதால் அதன் விளைவாக அனைத்து பாரங்களையும் ஏற்றுக்கொண்டு. (அல்லு நன்பகலும் போகு என்றாலும் அகல்வானு மல்லனாய்) - திருவாய்மொழி (1-10-8) - அல்லு நன் பகலுமிடை வீடின்றி நல்கி யென்னை விடான் – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாரிடம் கொண்ட ப்ரேமை காரணமாக இரவுபகல் என்ற வேறுபாடு ஆராயாமல் இவரை விடாமல், திருவாய்மொழி (6-2-2) – போகு நம்பீ – என்று நம்மாழ்வார் கோபத்துடன் அகலச் சொன்னால் கூட, திருவாய்மொழி (2-6-7) – அகல்வானும் அல்லன் இனி - என்பதற்கு ஏற்ப அகலாமல் நின்று, (போகேல் என்றால்) - திருவாய்மொழி (10-3-8) – ஆன்பின் போகேல் - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வார் இவன் செல்வதைத் தடுத்தால், (உகப்பையும் தவிர்ந்து) - திருவாய்மொழி (10-3-10) – திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி - என்பதற்கு ஏற்ப தனது விருப்பமான செயலையும் கைவிட்டு, (விதிவகையே நடந்துமவனே) - திருவாய்மொழி (10-6-1) – அருள்தருவான் அமைகின்றானது நமது விதிவகையே – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வார் இட்ட கட்டளைப்படி நடக்கும் ஸர்வேச்வரனே, (உபதேச ஸத்பாத்ரம்) - உபதேசம் பெறுவதற்கான சரியான பாத்திரம் ஆவான்.


**Email:**sridharan_book@yahoo.co.in

203. நண்ணாதார் மெய்யிலூன் ஆசை நிர்வேதத்தோடே ஆஸ்திக்ய அமாநித்வாதிகள் விஞ்சின ப்ரணிபாதாபிவாதந பரிப்ரச்ந ஸேவாபரர்க்கு உளங்கொள் பேசுமளவன் றென்னும் அர்த்தத்தை வம்மின் விரோதமீனச்சொல் எவ்வுயிர்க்கு மறியவென்று அடைவுகெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது ஞாலத்தார் பந்தபுத்தியும் அநர்த்தங்கண்டு ஆற்றாமையும் மிக்க க்ருபையுமிறே.

203. ஆனால் இங்ஙனன்றிக்கே அஜ்ஞரான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிறவளவில் ஸம்ஸார விரக்தராய் ஆத்மகுணோபேதராய் ஸம்யகுபஸந்நரானவர்களுக்கு உபதேசிக்கு மர்த்தத்தை, பகவத்விமுகராய் ப்ரயோஜநாந்தரபரராய் அநுவர்த்தந ஹீநரானவர்களுக்கு வலியப் பிடித்து உபதேசிப்பா னென்னென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல் (நண்ணாதார்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆனால் கடந்த சூர்ணையில் கூறப்பட்டது போன்று அல்லாமல், ஏதும் அறியாதவர்களாகிய ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கும்போது, ஸம்ஸார வாழ்வில் விரக்தி அடைந்தவர்களாகவும், ஆத்மகுணங்கள் நிறைந்தவராகவும், அருகில் அண்டி வந்து மிகவும் ஈடுபாட்டுடன் விரும்புபவர்களாகவும் உள்ளவர்களுக்கு உபதேசிக்கத் தகுந்த ஆழ்பொருள்களை, பகவானிடம் எந்தவிதமான ஈடுபாடும் இன்றி உள்ளவர்களும், மற்ற பலன்களை எதிர்ப்பார்த்தபடி உள்ளவர்களும், விருப்பத்துடன் அருகில் வராமல் உள்ளவர்களும் ஆகியவர்களுக்கு வலிய வந்து ஏன் உபதேசம் செய்யவேண்டும் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “நண்ணாதார் முறுவலிப்ப”விலும், “மெய்யில் வாழ்க்கை”யிலும், “ஊனேறு செல்வத்”திலும், “ஆசைவாய்ச் சென்ற சிந்தை”யிலும் சொல்லுகிறபடியே பகவத் விமுக லோக யாத்ரையிலும், மாம்ஸாஸ்ருகாதி மல ரூப தேஹத்திலும், கர்மோபாதிகங்களான தேஹாநு பந்திகளிலுமுண்டான தோஷதர்சநத்தாலே, “பரீக்ஷ்ய லோகாந்” இத்யாதிப்படியே பிறந்த நிர்வேதத்தோடே,

**விளக்கம்** - (நண்ணாதார் மெய்யிலூன் ஆசை நிர்வேதத்தோடே) திருவாய்மொழி (4-9-1) – நண்ணாதார் முறுவலிப்ப – என்பதிலும், பெருமாள்திருமொழி (3-1) – மெய்யில் வாழ்க்கை – என்பதிலும், பெருமாள்திருமொழி (4-1) – ஊனேறு செல்வத்து - என்பதிலும்,

பெரியாழ்வார் திருமொழி (4-5-1) – ஆசைவாய்ச் சென்ற சிந்தை – என்பதிலும் கூறுவதற்கு ஏற்ப, பகவானிடம் சிறிதும் ஈடுபாடு இல்லாதபடியான வாழ்விலும், மாமிசம் இரத்தம் போன்றவற்றால் ஆகிய சரீரத்திலும், கர்மங்கள் காரணமாக வந்து சேர்ந்த சரீரத்துடன் தொடர்பு கொண்ட பொருள்களிலும் உள்ள பலவிதமான தோஷங்களை உணர்த்த காரணத்தால், முண்டக உபநிஷத் - பரீசஷ்ய லோகாந் - பலன்களை ஆராய்ந்த அந்தணன் ஒருவன் - என்பதற்கு ஏற்றபடி உண்டாகும் வெறுப்புடன்.

**வ்யாக்யானம்** – "ஆஸ்திகோ தர்மசீலச்ச சீலவாந் வைஷ்ணவச்சுசி:, கம்பீரச் சதுரோ தீரச் சிஷ்ய இத்யபிதீயதே" என்றும், "அமாநித்வ மதம்பித்வ மஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்ம விநிக்ரஹ:" இத்யாதியாலும் சொல்லப்படுகிற ஆஸ்திக்யாதிகளும் அமாநித்வாதிகளுமாகிற சிஷ்ய லக்ஷணமான ஆத்ம குணங்களாலதிகராய்; "ப்ரணிபத்யாபி வாத்யச" என்றும், "தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா" என்றும் சொல்லுகிறபடியே பக்நாபிமாநராய்க் கொண்டு ப்ரணிபாத அபிவாதந பரிப்ரச்ந ஸேவையாகிற விவற்றிலே தத்பரராய் சிரகாலம் அநுவர்த்தித்தவர்களுக்கு, "உளங்கொள் ஞானத்து வைம்மின்" என்றும், "பேசுமளவன்றிது வம்மின் நமர்! பிறர் கேட்பதன் முன்" என்றும் இப்படி அஷட்கர்ணமாக உபதேசிக்க வேண்டும் அர்த்த விசேஷத்தை,

**விளக்கம்** - (ஆஸ்திக்ய அமாநித்வாதிகள் விஞ்சின) - ஆஸ்திகோ தர்மசீலச்ச சீலவாந் வைஷ்ணவச்சுசி:, கம்பீரச் சதுரோ தீரச் சிஷ்ய இத்யபிதீயதே – சாஸ்த்ரங்களில் நம்பிக்கை உள்ளவனும், தர்மங்களைக் கைக்கொண்டவனும், ஒழுக்கம் நிறைந்தவனும், விஷ்ணுவிடம் பக்தி கொண்டவனும், தூய்மையானவனும் ஆகிய ஒருவன் சிஷ்யன் எனப்படுகிறான் - என்றும், கீதை (13-7) - அமாநித்வ மதம்பித்வ மஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்ம விநிக்ரஹ: - தற்பெருமை இன்மை, தன்னிடம் இல்லாத நற்குணங்களை இருப்பதாகக் காண்பித்துக் கொள்ளாமை, எந்த உயிரையும் துன்புறுத்தாமை, பொறுமையுடன் இருந்தல், மனம் சொல் செயல் போன்றவற்றில் ஒரே போன்று இருத்தல், ஆசார்யனைப் பணிதல், உள்ளும்புறமும் தூய்மையாக இருத்தல், மன உறுதியுடன் இருத்தல், சரீரத்தைக் கட்டுப்படுத்துதல் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஆஸ்திக்யம் மற்றும் அமாநித்வம் போன்றதான சிஷ்யனுடைய லக்ஷணங்களாக உள்ள ஆத்மகுணங்களில் உயர்ந்தவர்களாக. (ப்ரணிபாதாபிவாதந

பரிப்ரச்ந ஸேவாபரர்க்கு) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-1) - ப்ரணிபத்யாபி வாத்யச - கைகள் குவித்து வணங்கியும், அபிவாதநம் செய்தும் - என்றும், கீதை (4-34) - தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா - அவர்களை சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்குவதாலும், பணிவிடைகள் செய்வதாலும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எந்தவிதமான கர்வமும் அற்றவர்களாக இருந்தபடி விழுந்து வணங்குதல், அபிவாதநம் செய்தல், கூறுதல், கேட்டல், பணிவிடை செய்தல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு பலகாலம் தன்னைச் சார்ந்தவர்களுக்கு, (உளங்கொள் பேசுமளவன்றென்னும் அர்த்தத்தை) - திருவாய்மொழி (4-10-9) - உளங்கொள் ஞானத்து வைம்மின் – என்றும், பெரியதிருமொழி (2-4-9) - பேசுமளவன்றிது வம்மின் நமர்! பிறர் கேட்பதன் முன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான ஆறு காதுகள் இல்லாத ஒருவருக்கு மட்டுமே உபதேசம் செய்யவேண்டியதான ஆழ்பொருள்களை.

**வ்யாக்யானம்** – "வம்மின் புலவீர்" என்று வலியவழைத்து, "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினே" என்று நான் சொல்லுகிறவிது உங்களுக்கு விரோதமாய்த் தோற்றியிருந்ததாகிலும் சொல்லுவன். இத்தைக் கேளுங்கள் என்று அபேக்ஷித்து, "ஈனச்சொல்லாயினுமாக" என்கையாலே "ஆகிலுமாக" என்று பொகடு பொருளாகவும், "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத் தெவ்வுயிர்க்கும்" என்றும், "திண்ண நாமறியச் சொன்னோம்" என்றும் ஸர்வர்க்கும் ப்ரஸித்தமாம் படியாகவும், இப்படி அடைவுகேடாக, "இதம் தே நாதபஸ்காய" இத்யாதியால் சொன்ன அநதிகாரிகளுக்கு உபதேசிக்கிறது,

**விளக்கம்** - (வம்மின்) - திருவாய்மொழி (3-9-6) - வம்மின் புலவீர் – என்பதற்கு ஏற்ப வலிய அழைத்து. (விரோதம்) - திருவாய்மொழி (3-9-1) - சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினே - என்பதற்கு ஏற்ப, "நான் உங்களுக்கு உரைக்கும் இவை அனைத்தும் விரோதமாகத் தோன்றினாலும், நான் உரைப்பேன். கேளுங்கள்", என்று விருப்பத்துடன். (ஈனச்சொல்) - திருவிருத்தம் (99) - ஈனச்சொல்லாயினுமாக - என்பதால் "ஆகிலும் ஆக" என்று பொகடு பொருளாகவும். (எவ்வுயிர்க்கும் அறிய என்று) - திருவாய்மொழி (9-1-7) - மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத் தெவ்வுயிர்க்கும் – என்றும், திருவாய்மொழி (10-2-5) – திண்ண நாமறியச் சொன்னோம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைவருக்கும் சென்று சேரும்விதமாகவும், (அடைவுகெட) –

இவ்விதமாக முறை தவறி. (அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது) - கீதை (18-67) – இதம் தே நாதபஸ்காய - இதனைத் தகுதி அற்றவர்களுக்கு உரைத்தல்கூடாது – என்று கூறுவதற்கு ஏற்ப அதிகாரிகள் அல்லாதவர்களுக்கு உபதேசம் செய்வதன் காரணம் என்னவென்றால்.

**வ்யாக்யானம்** – "ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமான்" என்று நித்ய விபூதியிலுள்ளாரோபாதி லீலாவிபூதியிலுள்ளார்க்கும் அவனோடு ஸம்பந்தமொத்திருக்க, இவர்கள் அவனையிழந்து கிடக்கவொண்ணாதென்கிற ஸம்பந்த ஜ்ஞாநமும், "கண்டாற்றே னுலகியற்கை" என்று இவர்கள் ஸம்ஸாரத்தில் படுகிற அநர்த்தங்கண்டு பொறுக்கமாட்டாத ஸ்வபாவமும், தாவந்மாத்ரமன்றிக்கே "அருள் கண்டீரிவ் வுலகினில் மிக்கது" என்று, "க்ஷிபாமி நக்ஷமாமி" என்று ஈச்வரன் கைவிட்டவர்களையும் திருத்தியல்லது நிற்கமாட்டாத கரைபுரண்ட காருண்யமுமிறே என்கை. பந்தபுத்தியும் அநர்த்தா ஸஹத்வமும் இவர் தம்முடைய உக்தி ஸித்தமாகையாலும் க்ருபாதிக்யம் சிஷ்யோக்தி ஸித்தமாகையாலுமாய்த்து இப்படி ப்ரஸித்தி தோற்றவருளிச்செய்தது.

**விளக்கம்** – (ஞாலத்தார் பந்தபுத்தியும்) – திருவாய்மொழி (4-5-8) - ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமான் - என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் உள்ளவர்கள் போன்று இந்த உலகில் உள்ள ஜீவாத்மாக்களுக்கு அவனுடன் உள்ள ஸம்பந்தம் என்பது ஒத்துள்ளது என்றாலும், இவர்கள் அவனை இழந்து நிற்கக்கூடாது என்பதான ஸம்பந்த ஞானமும். (அநர்த்தம் கண்டு ஆற்றாமையும்) – திருவாய்மொழி (4-9-3) - கண்டாற்றே னுலகியற்கை – என்பதற்கு ஏற்ப இவர்கள் இந்த ஸம்ஸாரத்தில் இருந்தபடியே அடைகின்ற கேட்டினைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாத தன்மையும். (மிக்க க்ருபையுமிறே) - அது மட்டும் அல்லாமல், கண்ணிநுண்சிறுத்தாம்பு (8) - அருள் கண்டீரிவ் வுலகினில் மிக்கது – என்பதற்கு ஏற்ப கீதையில் – க்ஷிபாமி ந க்ஷமாமி - தள்ளுகிறேன், பொறுத்துக் கொள்ளமாட்டேன் என்று ஸர்வேச்வரனால் கைவிடப்பட்டவர்களையும் திருத்தினால் அல்லாமல் ஓயாத உயர்ந்த கருணையும் ஆகும். பந்தபுத்தி மற்றும் ஸம்ஸாரிகள் அடையும் கேட்டைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமை ஆகிய இரண்டையும் திருவாய்மொழி மூலம் கூறுவதாலும், மிகுந்த கருணை என்பதை நம்மாழ்வாருடைய சிஷ்யராகிய மதுரகவியாழ்வார் சொற்கள் மூலம் கூறுவதாலும், இவர் இவ்விதம் அனைவருக்கும் சென்று சேரும்விதத்தில் உரைத்தது விளங்குகிறது.

204. தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது.

**அவதாரிகை** - மற்றுமிப்படி யுபதேசிப்பார் பலருமுண்டோ வென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (தாய்க்கும்) இத்யாதி.

**விளக்கம்** – "இவ்விதம் உபதேசித்தவர்கள் வேறு யாரேனும் உண்டோ", என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தன்பக்கலிலே விபரீதபுத்தியைப் பண்ணி நிற்கிற பாபிஷ்டனான ராவணனைக் குறித்து, "மித்ரமௌபயிகம் கர்த்தும்", "விதிதஸ்ஸஹி தர்மஜ்ஞ:" இத்யாதிகளாலே ஹிதோபதேசம் பண்ணின "நித்யைவைஷா ஜகந்மாதா" என்கிற ஸர்வலோக ஜநநியான பிராட்டிக்கும்.

**விளக்கம்** - (தாய்க்கும்) - சீதையாகிய தன்னிடம் தகாத புத்தியைக் கொண்டு நிற்கின்ற பாபியாகிய இராவணனிடம், ஸுந்தரகாண்டம் (21-19) - மித்ரமௌபயிகம் கர்த்தும் – இராமன், நீ நட்பு கொள்வதற்கு ஏற்றவன் ஆவான் - என்றும், ஸுந்தரகாண்டம் (21-20) - விதிதஸ்ஸஹி தர்மஜ்ஞ: - இராமன் அனைத்து தர்மங்களையும் நன்கு அறிந்தவன் - என்றும் பலவிதங்களிலும் அனைத்துவிதமான நன்மைகளையும் உபதேசித்த, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-8-17) - நித்யைவைஷா ஜகந்மாதா - அனைத்து உயிர்களுக்கும் தாயாக உள்ளவள் - என்பதற்கு ஏற்ப அனைத்து லோகங்களுக்கும் தாயாக உள்ள பெரியபிராட்டிக்கும் [கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ஸம்பந்த ஜ்ஞாநம், அநர்த்தா ஸஹத்வம், அநவதிக க்ருபை ஆகியவை உள்ளன].

**வ்யாக்யானம்** - திருநாமம் சொன்னதுவே ஹேதுவாகச் சீறித் தன்னை அதிக்ரூரமான தண்டங்களைப் பண்ணும்படி பகவதத்யந்த விமுகனாய் பாபிஷ்டாக்ரகண்யனான ஹிரண்யனைக் குறித்து, "ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே", "உர்வ்யாமஸ்தி" இத்யாதிகளாலே ஹிதத்தை யுபதேசித்தும், விமுகரான அஸுரபுத்ரர்களைக் குறித்து, "அபார ஸம்ஸார விவர்த்தநேஷு மாயாத தோஷம் ப்ரஸபம் ப்ரவீமி, ஸர்வத்ர தைத்யாஸ்

ஸமதாமுபேத ஸமத்வமாராதந மச்யுதஸ்ய” இத்யாதிகளாலே ஹிதத்தை யுபதேசித்தும் செய்த “மீளவவன் மகனை” என்கிற ஹிரண்ய புத்ரனான ப்ரஹ்லாதனுக்கும்.

**விளக்கம்** - (மகனுக்கும்) - பகவானுடைய திருநாமத்தை உரைத்ததையே காரணமாகக் கொண்டு, அவன் மீது கோபத்துடன் சீறியபடி, பலவிதமான கொடிய அபராதங்களைச் செய்தபடி, பகவானை அடியுடன் வெறுப்பவனாகவும், பாபம் செய்பவர்களில் முதலிடத்தில் உள்ளவனும் ஆகிய ஹிரண்யனிடம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-37) - ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே – அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ளவனும், அனைத்திற்கும் தந்தையும், இந்த ஜகத்தின் நாதனும், இந்த ஜகத்தாகவே உள்ளவனும் - என்றும், உர்வ்யாமஸ்தி - எங்கும் உள்ளான் - என்றும் பலவிதங்களில் நன்மையை உபதேசித்தும். பகவானிடம் சற்றும் விருப்பம் இல்லாத அஸுர புத்திரர்களிடம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-7-89) - அபார ஸம்ஸார விவர்த்தநேஷு மாயாத தோஷம் ப்ரஸபம் ப்ரவீமி, ஸர்வத்ர தைத்யாஸ் ஸமதாமுபேத ஸமத்வம் ஆராதநம் அச்யுதஸ்ய - அஸுரர்களே! எந்தவிதமான ஆழமும் இல்லாத இந்த உலக வாழ்வில் உள்ள சுழற்சியான தேவர்கள் முதலான பிறவிகளைக் கண்டு மகிழாதீர்கள். ஒரே போன்று இருப்பதையே அடையுங்கள். இத்தகைய தன்மையே அச்சுதனுக்கு மகிழ்வை ஏற்படுத்தும் - என்பதான பலவிதமான நன்மைகளை உபதேசித்தபடி இருந்தவனாகிய பெரியாழ்வார் திருமொழி (1-6-2) – மீள அவன் மகனை - என்று கூறப்பட்ட ஹிரண்யனுடைய புத்திரனாகிய ப்ரஹ்லாதனுக்கும் [கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ஸம்பந்த ஜ்ஞாநம், அநர்த்தா ஸஹத்வம், அநவதிக க்ருபை ஆகியவை உள்ளன].

**வ்யாக்யானம்** – “யாவந்த லங்காம் ஸமபித்ரவந்தி வலீமுகா: பர்வத கூடமாத்ரா:, தம்ஷ்ட்ராயுதாச்சைவ நகாயுதாச்ச ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ”, “யாவந் நக்ருஹ்ணந்தி சிராம்ஸி பாணா ராமேரிதா ராக்ஷஸ புங்கவாநாம், வஜ்ரோபமா வாயு ஸமாந வேகா ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ” என்றிப்படி தனக்கு ஹிதம் சொன்னது பொறாமல், “த்வாம் து திக் குலபாம் ஸகம்” என்று திக்கரித்த க்ரூரனான ராவணனைக் குறித்து, “ஸுலபா: புருஷா ராஜந் ஸததம் ப்ரியவாதிந:, அப்ரியஸ்யது பத்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப:, பத்தம் காலஸ்ய பாசேந ஸர்வபூதாபஹாரிணா, நநச்யந்த முபேக்ஷேயம் ப்ரதீப்தம் சரணம் யதா” என்று தொடங்கி ஹிதோபதேசம் பண்ணின “அவன் தம்பிக்கே” என்கிற ராவணநுஜனான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும்.

**விளக்கம்** - (தம்பிக்கும்) - யுத்ததகாண்டம் (14-3) - யாவந்ந லங்காம் ஸமபித்ரவந்தி வலீமுகா: பர்வத கூடமாத்ரா:, தம்ஷ்ட்ராயுதாச்சைவ நகாயுதாச்ச ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ - மலைச்சிகரம் போன்று உள்ளவையும், தங்களுடைய பற்களையே ஆயுதங்களாகக் கொண்டவைகளும் ஆகிய வானர சேனைகள் இலங்கையை வந்து அடைவதற்கு முன்பாக சீதாப்பிராட்டியை இராமனிடம் அளிக்கவேண்டும - என்றும், யுத்தகாண்டம் (14-4) - யாவந் நக்ருஹ்ணந்தி சிராம்ஸி பாணா ராமேரிதா ராக்ஷஸ புங்கவாநாம், வஜ்ரோபமா வாயு ஸமாந வேகா ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ - இராமனால் தொடுக்கப்பட்டவையும், வஜ்ராயுதம் போன்றவையும், காற்று போன்று வேகம் கொண்டவையும் ஆகிய அம்புகள், அசுரர்களுடைய தலைகளை அறுப்பதற்கு முன்பாக சீதையை இராமனிடம் அளிக்கவேண்டும் - என்றும் தனக்கு உரைக்கப்பட்ட நன்மைகளைப் பொறுத்துக் கொள்ள இயலாமல், யுத்தகாண்டம் (16-51) – த்வாம் து திக் குலபாம் ஸகம் – அசுரர்களுடைய குலத்திற்குத் தீமையைச் செய்யும் உன்னை, பழித்தே கூறவேண்டும் - என்று தள்ளிய இராவணனிடம், யுத்தகாண்டம் (16-20) - ஸுலபா: புருஷா ராஜந் ஸததம் ப்ரியவாதிந:, அப்ரியஸ்யது பத்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப: - எப்போதும் மகிழ்வை அளிக்கும் சொற்கள் கூறுபவர்கள் கிடைப்பார்கள். ஆனால் மகிழ்வை ஏற்படுத்தாத நன்மையைக் கூறுபவனும் கேட்பவனும் கிட்டமாட்டார்கள் – என்றும், யுத்த (16-21) - பத்தம் காலஸ்ய பாசேந ஸர்வபூதாபஹாரிணா, நநச்யந்த முபேக்ஷேயம் ப்ரதீப்தம் சரணம் யதா - எந்தவிதமான கருணையும் இன்றி அனைத்து உயிர்களையும் கவர்கின்ற யமனின் பாசக்கயிற்றால் கட்டுப்பட்டவனும், அழியக் கூடியவனும் ஆகிய உன்னை, எரியும் வீட்டைப் போன்று நான் வெறுக்கமாட்டேன் - என்றும் கூறிய, திருவாய்மொழி (7-6-9) – அவன் தம்பிக்கே - என்பவனாகிய இராவணனுடைய தம்பியாகிய விபீஷணனுக்கும் [கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ஸம்பந்த ஜ்ஞாநம், அநர்த்தா ஸஹத்வம், அநவதிக க்ருபை ஆகியவை உள்ளன].

**வ்யாக்யானம்** - பகவத்விமுகராய் அந்யபரராய்த் திரிகிற ஸம்ஸாரிகளை விட மாட்டாமல், "வீடுமின் முற்றவும்" தொடங்கிப் பலவிடங்களிலும் பலபடியாலும் உபதேசித்த விவ்வாழ்வார் தமக்கும், ஓராண்வழியாகப் பூர்வர்களுபதேசித்துப் போந்த நியமத்தைக் குலைத்துப் பலரையு முபதேசிக்கும்படி பண்ணியும், பலகால் நடந்து துவண்டு கேட்ட பரமார்த்தத்தை ஓலக்கமாக வைத்து உபதேசித்தும், "வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ

ஜந்ம ஸந்ததி:, தஸ்யாமந்யதமம் ஜந்ம ஸஞ்சிந்த்ய சரணம் வ்ரஜ" என்று ருசி விச்வாஸ ஹீனரையும் நிர்ப்பந்தித்து சரமோபாயஸ்த்தராக்கியும், இப்படி அதிகாரம் பாராமல் அவர்கள் துர்க்கதியைப் பார்த்து உபதேசித்தருளும் ஸ்வபாவராய், "பாமன்னு மாறனடி பணிந்துய்ந்தவன்" என்று நிரூபகமாயிருக்கும் எம்பெருமானார்க்குமே இவ் வாகாரங்க ளுள்ளதென்கை. (இவை) என்று கீழ்ச்சொன்ன ஸம்பந்த ஜ்ஞாநம், அநர்த்தா ஸஹத்வம், அநவதிக க்ருபை ஆகிற மூன்றையும் பராமர்சிக்கிறது.

**விளக்கம்** - (இவர்க்கும்) - பகவானிடம் பக்தி அற்றவர்களாகவும், உலக விஷயங்களில் மட்டுமே நோக்கம் கொண்டவர்களாகவும் உள்ள இந்த ஸம்ஸாரிகளை விட இயலாமல், திருவாய்மொழி (1-2-1) - வீடுமின் முற்றவும் – என்று தொடங்கிப் பல இடங்களிலும் பலவிதங்களிலும் உபதேசித்த நம்மாழ்வாராகிய இவருக்கும் [கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ஸம்பந்த ஜ்ஞாநம், அநர்த்தா ஸஹத்வம், அநவதிக க்ருபை ஆகியவை உள்ளன]. (இவர் அடிபணிந்தவர்க்குமே) - ஓராண்வழியாக பூர்வாசார்யர்கள் உபதேசித்து வந்த முறையை விலக்கி, பலரையும் உபதேசிக்கும்படியாகச் செய்தும், பலமுறை நடந்து சென்று கேட்டறிந்த உயர்ந்த உண்மையை சபையின் நடுவே வைப்பது போன்று அனைவருக்கும் உபதேசித்தும், சாண்டில்ய ஸ்ம்ருதி – வ்ருதைவ பவதோ யாதா பூயஸீ ஜந்ம ஸந்ததி:, தஸ்யாமந்யதமம் ஜந்ம ஸஞ்சிந்த்ய சரணம் வ்ரஜ – உனக்குத் தொடர்ந்து வருகின்ற பல பிறவிகளும் பயனற்றுப் போயின. அவற்றில் இந்த பிறவியில் பகவானைச் சரணம் அடைவாயாக - என்று ஆசை இல்லாதவர்களையும் நம்பிக்கை அற்றவர்களையும் வற்புறுத்தி சரணாகதியில் ஈடுபடுத்தியும், இப்படியாக அவர்களுடைய தகுதிகளை ஆராயாமல் அவர்களுடைய தாழ்ந்த நிலையை மட்டுமே ஆராய்ந்து உபதேசம் செய்தருள்கின்ற தன்மை கொண்டபடியும், இராமாநுச நூற்றந்தாதி (1) – பாமன்னு மாறன் அடி - என்று கூறப்படுகின்றவரும் ஆகிய எம்பெருமானாருக்கும் [கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ஸம்பந்த ஜ்ஞாநம், அநர்த்தா ஸஹத்வம், அநவதிக க்ருபை ஆகியவை உள்ளன]. (இவை உள்ளது) - இந்தத் தன்மைகள் உள்ளன. "இவை" என்ற சொல்லானது, கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான "ஸம்பந்த ஞானம், மற்றவர்கள் தாழ்வு கண்டு பொறுத்துக் கொள்ளாமை, மிகுந்த கருணை" ஆகியவற்றைக் குறிக்கிறது.

205. க்யாதி லாப பூஜாபேக்ஷையற மலர் நாடி யாட்செய்ய, உய்யக்கொண்டு ஆரைக்கொண்டு வாளும் வில்லுங் கொண்டென்கிற இழவுகள் தீரப்பெற்றது.

**அவதாரிகை** - இப்படி விமுகரான ஸம்ஸாரிகளைக் குறித்து இவ்வாழ்வாருபதேசித்தவிது ஸபலமாய்த்தோ வென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (க்யாதிலாப) இத்யாதி.

**விளக்கம்** – "இவ்விதம் பகவானிடம் ஈடுபாடு இல்லாத ஸம்ஸாரிகளை குறித்து நம்மாழ்வார் உபதேசித்த இவை பயன் அடைந்ததோ?", என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**அவதாரிகை** – அதாவது, "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தண்மைக் கெல்லையாகத் தம்மை நினைத்திருக்கையாலும், "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ் செல்வம் நெருப்பாக" என்று ஐச்வர்யத்தை அக்நி ஸமமாகக் காண்கையாலும், "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்று பாகவத சேஷத்வத்தி னெல்லையிலே நிற்கிறவர்களுக்குத் தம்மை சேஷமாக நினைத்தும், "ஓதவல்ல பிராக்கள் நம்மையாளுடையார்கள் பண்டே" என்று இப்ப்ரபந்தத்தில் அந்வயித்தவர்களைத் தமக்கு சேஷிகளாக நினைத்து மிருக்கையாலும், க்யாதியிலும் லாபத்திலும் பூஜையிலும் அபேக்ஷையற்று, "நறிய நன்மலர் நாடி" என்கிறபடியே சேஷத்வ பரிமள யுக்தமாய் ச்லாக்யமான ஆத்ம புஷ்பங்களைத் தேடி "ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவன்" என்று கைங்கர்ய ரூபமாக உபதேசிக்கையாலே ஜகத்தாகத் திருந்துகையாலும்,

**விளக்கம்** - (க்யாதி அபேக்ஷை அற) – திருவாய்மொழி (3-3-4) - நீசனேன் நிறைவொன்றுமிலேன் - என்று தழ்வுகளுக்கு எல்லையாகத் தன்னை எண்ணியபடி உள்ளதால், புகழில் எந்தவிதமான விருப்பமும் இல்லாமல். (லாப அபேக்ஷை அற) – திருவாய்மொழி (4-9-4) - கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ் செல்வம் நெருப்பாக – என்று ஐச்வர்யங்களை அக்னிக்கு நிகராகக் காண்பதால், லாபத்தில் எந்தவிதமான விருப்பமும் இல்லாமல். (பூஜா அபேக்ஷை அற) - திருவாய்மொழி (8-9-11) - தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் - என்று பாகவதர்களுக்குத் தொண்டு செய்தல் என்னும் எல்லையில் உள்ளவர்களுக்குத் தன்னை அடிமையாகக் கொண்டிருப்பதாலும், திருவாய்மொழி (9-1-11) - ஓதவல்ல பிராக்கள்

நம்மையாளுடையார்கள் பண்டே - என்று இந்தத் திருவாய்மொழியில் ஈடுபட்டு நிற்பவர்களைத் தனது எஜமானர்களாகக் கொண்டிருப்பதாலும், பூஜையில் எந்தவிதமான விருப்பமும் இல்லாமல். (மலர் நாடி ஆள் செய்ய) – திருவாய்மொழி (5-5-11) - நறிய நன்மலர் நாடி – என்று அடிமைத்தனம் என்னும் பரிமளம் நிறைந்த சிறந்த ஆத்ம மலர்களைத் தேடியபடி, திருவாய்மொழி (4-10-11) - ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவன் – என்று ஆட்செய்தல் என்பதான உபதேசங்களைச் செய்வதன் மூலம் இந்த உலகம் முழுவதும் திருந்துவதால்.

**வ்யாக்யானம்** – "உம்மை யுய்யக்கொண்டு போகுறில்" என்று ஸம்ஸாரிகளுஜ்ஜீவந நிமித்தமாக வுண்டான இழவும், "ஆரைக்கொண் டென்னுசாகோ" என்று தமக்கு உசாத்துணை யில்லாமையால் வந்தவிழவும், "வாளும் வில்லும் கொண்டு பின் செல்வார் மற்றில்லை" என்று அவன் ஸௌகுமார்யமறிந்து பரிகைக்கொருவருமில்லை என்கிற விழவும் தீரப் பெற்றதென்கை. எல்லாருமுஜ்ஜீவித்து தமக்கு உசாத்துணையாய் அவனுக்கு மங்களாசாஸநமும் பண்ணுகையாலே மூன்றிழவும் தீருமிறே. "மலர் நாடி" என்கிறவிதுக்கு, "நறிய நன்மலர் நாடி" என்கிறவிது சொல்லும்போது ஸர்வவ்யாக்யாநங்களிலும் "பரிமளத்தையுடைத்தாய் ச்லாக்யமான புஷ்பங்கள் போலே ஆராய்ந்து சொன்னவாயிரம்" என்று ப்ரபந்த விசேஷணமாகச் சொல்லியிருக்கையால், இவர்க்கு நினைவு ஆத்ம புஷபங்களைத் தேடி என்கிறவிதென்று கொள்ளவேணும். அன்றிக்கே "மலர் நாடி" என்கிறவிது, "நாடாத மலர்" என்கிறத்தை நினைத்தருளிச் செய்தாரென்று கொள்ளில் ஒரு விரோதமுமில்லை. "வாடாத மலரடிக்கீழ்வைக்க" என்று கைங்கர்ய ப்ரஸங்க முண்டாகையாலே, "ஆட்செய்ய" என்றத்தோடே சேருமிறே.

**விளக்கம்** – (உய்யக் கொண்டு என்கிற இழவும்) - திருவாய்மொழி (4-10-9) - உம்மை யுய்யக்கொண்டு போகுறில் - என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரிகள் கரையேறுவதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு. (ஆரைக்கொண்டு என்கிற இழவும்) – திருவாய்மொழி (7-3-4) - ஆரைக்கொண் டென்னுசாகோ – என்பதற்கு ஏற்ப தனக்குப் பேச்சுத்துணை இல்லாமையால் ஏற்பட்ட இழப்பு. (வாளும் வில்லும் கொண்டு என்கிற இழவும்) - திருவாய்மொழி (8-3-3) - வாளும் வில்லும் கொண்டு பின் செல்வார் மற்றில்லை – என்பதற்கு ஏற்ப பகவானுடைய மென்மையை உணர்ந்து அவனிடம் அன்பு காண்பிப்பதற்கு யாரும் இல்லை என்ற இழப்பு. (தீரப் பெற்றது) - நீங்கியது என்று கருத்து.


Email:sridharan_book@yahoo.co.in

அதாவது அனைவரும் கரையேற்றப் பெற்று, தன்னுடைய பேச்சுத் துணையாக இருந்து, அவனுக்கு வாழ்த்து கூறியபடி உள்ளதால், இந்த மூன்றுவிதமான இழப்புகளும் இவருக்கு நீங்கின என்று கருத்து. சூர்ணையில் உள்ள "மலர் நாடி" என்பதற்கு திருவாய்மொழி (5-5-11) - நறிய நன்மலர் நாடி - என்ற பாசுர வரியை உரைக்கும்போது, அனைத்து வ்யாக்யானங்களிலும், "பரிமளத்துடன் கூடியதான உயர்ந்த மலர்கள் போன்று ஆராய்ந்து அருளிச்செய்த ஆயிரம்" என்று திருவாய்மொழிக்கு சிறப்பாக உரைத்த காரணத்தால், இவருடைய சிந்தனையானது ஆத்மமலர்களைத் தேடியே உள்ளது என்று கொள்ளவேண்டும். அல்லது "மலர் நாடி" என்ற சொற்றொடருக்கு, திருவாய்மொழி (1-4-9) - நாடாத மலர் நாடி - என்ற திருவாய்மொழியை எண்ணியபடி உரைத்தார் என்று கூறினாலும் எந்தவிதமான முரண்பாடும் இல்லை; காரணம், திருவாய்மொழி (1-4-9)- வாடாத மலரடிக்கீழ்வைக்க – என்று கைங்கர்யம் குறித்து உரைப்பதால், இது அடுத்து உள்ளதான் "ஆட்செய்ய" என்பதுடன் சேர்வதாகவே உள்ளது.

206. ப்ரஹ்மநிஷ்டரும் ஸம்வத்ஸர வாஸிகளுமாகில், ஏபாவம் பயனன்றாகிலுஞ் சேராது.

**அவதாரிகை -** இப்படியுபதேசம் பலித்ததாகில், "பரீக்ஷ்ய லோகாந்" இத்யாதிப்படியே கர்ம பலமான ஸாம்ஸாரிக போகங்களின் அல்பாஸ்திரத்வாதி தோஷத்தையும் நித்யனான பரமாத்மாவானவன் கர்மஸாத்யனல்லாமையையும் அநுஸந்திக்கையாலுண்டான நிர்வேதத்தோடே சமதமோபேதனாய் உபஹார பாணியாய்க் கொண்டு ச்ரோத்ரியனாய் ப்ரஹ்ம நிஷ்டனான ஆசார்யனை உபஸத்தி பண்ண, அவனும் "நாஸம்வத்ஸர வாஸிநே ப்ரப்ரூயாத்" என்கிறபடியே ஒரு ஸம்வத்ஸரம் பரீக்ஷித்துப் பின்னை யுபதேசிக்கக் கடவனாகச் சொல்லுகிற சாஸ்த்ர மர்யாதையிலே, ஸம்ஸாரிகளநுவர்த்திக்க இவர் உபதேசித்தாரானாலோ வென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் (ப்ரஹ்மநிஷ்டரும்) இத்யாதி.

**விளக்கம் –** இவ்விதம் நம்மாழ்வாருடைய உபதேசம் பயன் அடைந்தது என்றுபோதிலும், பரீக்ஷ்ய போகாந் - என்பது போன்றவைகளுக்கு ஏற்ப, கர்மங்கள்டுஜய பலன்களாக விளைவதான ஸம்ஸார இன்பங்களின் நிலையற்ற தன்மை என்னும் தோஷத்தையும், நித்யனாக உள்ள பரமாத்மா கர்மங்களால் அடைய இயலாதவன் என்பதையும் ஒரு சிலர் சிந்தித்தபடியே உள்ளனர். இதன் விளைவாக மிகுந்த வெறுப்புடன், ஐந்து புலன்களை

அடக்குதல் மற்றும் மனத்தினை அடக்குதல் போன்ற ஆத்மகுணங்களைக் கொண்டவர்களாக, தகுந்த உபசாரப் பொருள்களுடன் கூடியவர்களாக, ப்ரஹ்மத்தை அறிந்து அதிலேயே நிலைநிற்கும் ஒரு ஆசார்யனை அண்டுகிறார்கள். அந்த ஆசார்யனும், "நாஸம்வத்ஸர வாஸிநே ப்ரப்ரூயாத் - ஒரு வருடம் குருகுலவாசம் செய்யாதவனுக்கு உபதேசம் செய்யக்கூடாது – என்ற விதிக்கு ஏற்ப ஒரு வருடம் அவர்களை நன்றாகச் சோதித்து பின்னர் உபதேசிப்பானாக" என்ற சாஸ்த்ர விதிகளின்படி செய்கிறான். இது போன்ற விதிகளின் அடிப்படையில் இந்த உலகில் உள்ளவர்கள் இவரிடம் வந்து கேட்க, இதனைப் போன்றே இவரும் உபதேசித்தார் என்று கூறலாம் அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உபதேஷ்டாவான விவர் ஸக்ரமமாக உபஸத்தி பண்ணினவனுக்கொழிய உபதேசியோ மென்றிருக்கும் ப்ரஹ்மநிஷ்டராகில், அப்படி வந்து உபஸத்தி பண்ணினவர்களுக்கு ப்ரீதியோடே உபதேசிக்கை யொழிய அதிகாரிகளுக் குபதேசிக்கப் புக்கு, "ஏபாவம் பரமே" என்று "ஓ பாவம்! எனக்கிது பரமாவதே" என்று உபதேசோபக்ரமத்திலே வெறுத்துச் சொன்ன உக்தி சேராது; இவர் பக்கலுபதேசம் கேட்டவர்கள் ஸம்வத்ஸர வாஸிகளாகில், உபஹார பாணிகளாய் நாம் அநுவர்த்தித்தன்றோ பெற்றோ மென்றிருக்கை யொழிய, இவர்க்கு ப்ரதம சிஷ்யரானவர் "பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்" என்று ப்ரயோஜந சூந்யராகிலும், அவிதேயராகிலும் தம்முடைய செயலாலே எல்லாம் நன்றாம்படி திருத்திக்கொள்வா ரிவரென்று க்ருதஜ்ஞதையாலே உகந்து சொன்ன உக்தியும் சேராதென்கை. இப்படி ஆசார்யோக்தியும் சிஷ்யோக்தியுமாகையாலே முன் சொன்ன ஹேதுக்களாலே விமுகரைக் குறித்துபதேசிக்க உபதேசசுத்தியாலே ஸர்வரும் திருந்தி இவருடைய இழவுகளெல்லாம் தீர்ந்ததென்றே கொள்ளவேணுமென்ற தாய்த்து.

**விளக்கம்** – (ப்ரஹ்மநிஷ்டர் ஆகில்) - உபதேசம் செய்பவராகிய நம்மாழ்வார், தகுந்த முறையுடன் வந்து கேட்பவர்களுக்கு மட்டுமே உபதேசம் செய்தும், மற்றவர்களுக்கு உபதேசம் செய்யமாட்டேன் என்றும் இருக்கின்ற ப்ரஹ்மநிஷ்டை ஆசார்யன் போன்றவர் என்றால், (ஏ பாவம் சேராது) - அவ்விதம் தன்னைப் பணிவுடன் வந்து அண்டுகிறவர்களுக்கு மட்டுமே மகிழ்வுடன் உபதேசம் செய்தல் அல்லாமல், தகுதியில்லாதவர்களுக்கு உபதேசம் செய்ய முனையும்போது, திருவாய்மொழி (2-2-2) - ஏ

பாவமே – என்பதற்கு ஏற்ப “பாவமே! எனக்கு இது பரம் ஆவதே” என்று உபதேசத்தின் தொடக்கத்தில் இவர் வெறுப்புடன் உரைத்த பாசுரம் பொருந்தாமல் போகும். (ஸம்வத்ஸரவாஸிகள் ஆகில்) – நம்மாழ்வாரிடம் வந்து உபதேசம் பெற்ற அனைவரும் தகுந்த சாஸ்த்ர விதிகளின்படியே ஒரு வருடம் குருகுலவாஸம் செய்தவர்களே ஆவர் என்றால், தகுந்த தக்ஷிணை முதலானவை அளித்து அல்லவோ நாம் இவற்றை பெற்றோம் என்று எண்ணத் தொடங்குவர். இதன் விளைவாக, (பயன் அன்றாகிலும் சேராது) – நம்மாழ்வாருடைய முதன்மையான சிஷ்யராகிய மதுரகவியாழ்வார், “கண்ணிநுண் சிறுத்தாம்பு (10) - பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான் – என்று பயனற்றவர்களாக இருந்தாலும், தகுந்த குணங்கள் ஏதும் அற்றவர்களாக இருந்தாலும், தம்முடைய செயல்கள் மூலம் அவை அனைத்தும் சீராகும்படியாக நம்மாழ்வார் அவர்களைத் திருத்து, தனது அடிமையாகக் கொள்வார்”, என்று செய்ந்நன்றி அறிந்து உரைத்த பாசுரம் பொருந்தாமல் போகும். இப்படியாக நம்மாழ்வாருடைய பாசுரமும், மதுரகவியாழ்வாருடைய பாசுரமும் உள்ளதன் காரணமாக, முன்பு கூறப்பட்ட காரணங்களால் (அதாவது சூர்ணை 203ல் கூறப்பட்ட பந்த புத்தி, அநர்த்தம் கண்டு பொறுக்க இயலாமை, மிகுந்த கருணை), பக்தி இல்லாதவர்கள் குறித்து உபதேசிப்பதாகவே உள்ளன என்றும், அத்தகைய உபதேசங்களின் தூய்மை காரணமாக அனைவரும் திருந்தினர் என்றும், இதன் விளைவாக இவருடைய அனைத்து குறைகளும் நீங்கின என்றும் கொள்ளவேண்டும்.

207. மெய்ந்நின்று மங்கவொட்டுக்கு நடுவு அநுபவகர்ப்போபதேசம்.

**அவதாரிகை** - இனி இப்படி பரோபதேசபரரானபோது பகவதநுபவம் விச்சிந்நமாகாதோ வென்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (மெய்ந்நின்று) இத்யாதி.

**விளக்கம்** – இப்படியாக நம்மாழ்வார் மற்றவர்களுக்கு உபதேசம் செய்தபடி உள்ளதன் காரணமாக, பகவத் அனுபவம் தடையாகாதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “மெய்ந்நின்று கேட்டருளாயடியேன் செய்யும் விண்ணப்பம்” என்றது முதல், “மங்கவொட்டுன் மாமாயை” என்கிறதளவாக நடுவுள்ள நாலு ப்ரபந்தமும்,

அநுபவமுள்ளே செல்லா நிற்கச் செய்தேயுண்டான பரோபதேசமென்கை. இவர் தமக்கு அநுபவ கர்ப்பமான வுபதேசமும் உபதேச கர்ப்பமான அநுபவமுமாய்ச் செல்லுமென்றிறே நம் முதலிகளருளிச் செய்வது. ஆகையால் இவர்க்கநுபவ விச்சேத மொருக்காலு மில்லையிறே. ஆக இப்படியிவருடைய பரோபதேச விஷயங்களும் உபதேச ஹேதுக்களும் உபதேச ஸாபல்யமும், உபதேசந்தான் அநுபவத்தை விட்டிராதென்னு மிடமும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – (மெய்ந்நின்று மங்க ஒட்டுக்கு நடுவு) – திருவிருத்தம் (1) – மெய்ந்நின்று கேட்டருளாயடியேன் செய்யும் விண்ணப்பம் - என்பது தொடங்கி, திருவாய்மொழி (10-7-10) - மங்கவொட்டுன் மாமாயை – என்பது முடிய உள்ள பாசுரங்கள் நடுவில் அமைந்துள்ள நான்கு ப்ரபந்தங்களும். (அநுபவ கர்ப்ப உபதேசம்) - பகவத் அனுபவம் என்பது மனத்தில் நிலைத்து நின்றபடியே உள்ளபோது ஏற்பட்டதான “மற்றவர்களுக்கான உபதேசம்” என்று பொருள். நம்மாழ்வாருக்கு அனுபவம் மனதில் உள்ளபோதே உபதேசம் செய்தபடி இருத்தலும், உபதேசம் செய்தபடி உள்ளபோதே அனுபவம் ஏற்படுதலும் உண்டு என்று நம்முடைய பூர்வர்கள் கூறியுள்ளனர். ஆகவே இவருடைய பகவத் அனுபவத்திற்கு எந்தவிதமான தடையும் ஏற்படுவதில்லை. இவ்விதமாக நம்மாழ்வார் மற்றவர்களுக்கு உபதேசம் செய்கின்ற விஷயங்களும், அந்த உபதேசம் செய்வதற்கான காரணங்களும், அந்த உபதேசங்கள் பயன் அடைந்ததும், அத்தகைய உபதேசங்கள் பகவத் அனுபவத்தை விட்டு அகலாது என்பதும் விரிவாக உரைக்கப்பட்டது.

208. இவற்றுக்கு மந்த்ர வித்யநுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி.

**அவதாரிகை** - இப்படி இவ்வாழ்வாருடைய அநுபவோபதேச ரூபமான ப்ரபந்த சதுஷ்டயமும் ரஹஸ்யத்ரயார்த்த ப்ரதிபாதகமாயிருக்கும்படி ப்ரகாசிப்பிப்பதாக நினைத்து உபக்ரமிக்கிறார் (இவற்றுக்கு) இத்யாதி.

**விளக்கம்** – இப்படியாக நம்மாழ்வாருடைய அனுபவ ரூபமாக உள்ள நான்கு ப்ரபந்தங்களும், மூன்று ரஹஸ்யங்களுடைய (அதாவது திருமந்த்ரம், த்வயம் மற்றும் சரமச்லோகம்) ஆழ்பொருளை உரைப்பதாகவே உள்ளன என்பதை வெளிப்படுத்தத் திருவுள்ளம் கொண்டவராக அருளிச்செய்கிறார்.


Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – அதாவது, “மெய்ந்நின்று மங்கவொட்டுக்கு நடுவு” என்று கீழ்ப்ரஸ்துதமான இப் ப்ரபந்தங்கள் நாலுக்கும் ஸகல சாஸ்த்ர தாத்பர்யமான அர்த்த பஞ்சகத்தையும் ஸம்சய விபர்யயமற ப்ரதிபாதிக்குமவையாய், “ஸர்வமஷ்டாக்ஷ ராந்தஸ்த்தம்” என்னும்படி ஸகல சாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரமும், ஸித்தோபாய வரணத்தை ஸாங்கமாக விதிக்கிற சரமச்லோகமும், உபாயோபேய வரண ப்ரார்த்தனைகளை, ஸக்ரமமாக ப்ரகாசிப்பியா நின்று கொண்டு, காலக்ஷேபத்துக்கும் போகத்துக்குமாக ஸாரஜ்ஞராலே ஸதாநுஸந்தாநம் பண்ணப்படும் த்வயமுமாகிற ரஹஸ்ய த்ரயத்தோடே சேர்த்தி யென்கை.

**விளக்கம்** – (இவற்றுக்கு) “மெய்ந்நின்று மங்கவொட்டுக்கு நடுவு” என்று கடந்த சூர்ணையில் கூறப்பட்ட நான்கு ப்ரபந்தங்களுக்கு, (மந்த்ர ரஹஸ்யத்தோடு) - அனைத்து சாச்த்ரங்களிலும் கூறப்பட்டுவதான அர்த்தபஞ்சகத்தை எந்தவிதமான சந்தேகங்களும் ஏற்படாதவகையில் தெளிவாக வெளிப்படுத்தும் தன்மை கொண்டதும், ஸர்வம் அஷ்டாக்ஷர அந்தஸ்த்தம் - அனைத்தும் அஷ்டாக்ஷரத்தில் அடங்கியுள்ளன - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதும் ஆகிய, அனைத்து சாஸ்த்ரங்களின் சுருக்கமாக உள்ள திருமந்த்ரம். (விதி ரஹஸ்யத்தோடே) – ஸர்வேச்வரனையே உபாயமாகக் கொள்ளுதல் என்பதை அங்கமாக விதிக்கின்ற சரமச்லோகம். (அநுஸந்தாந ரஹஸ்யத்தோடே) - ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றும் முறை, அடைய உள்ள பேறான கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கும் முறை ஆறியவற்றை தெளிவாக உரைப்பதும், காலத்தைக் கழிப்பதற்காகவும் இனிமையை அளிப்பதற்காகவும் அனைத்தும் அறிந்த நம்முடைய முன்னோர்களால் எப்போதும் உச்சரிக்கப்பட்டபடி உள்ளதும் ஆகிய த்வய மந்த்ரம் என்பதான மூன்று மந்த்ரங்களுடன். (சேர்த்தி) - சேர்க்கை எப்போதும் உள்ளது.

209. அளிப்பானடியே னடைக்கலம் சூடிய பொய்யாதானுமழுந்தாரென்று ஸ்வரூப விரோதி நிவ்ருத்திகளையும், தாமரையுந்திப் பெருமாமாயன் ஆளாகவே வாழியவென்று ப்ராப்ய பலங்களையும், நெறிகாட்டி மனத்துக் கொண்டு கண்ணனாலடித்துக் கண்டிலமால் யாதாகிலென்று உபாயத்தையுஞ் சொன்னவை மந்த்ர ச்லோகங்களோடே சேரும்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - அதில் எந்த ப்ரபந்தத்துக்கு எந்த ரஹஸ்யத்தோடே சேர்த்தி என்னுமாகாங்க்ஷையிலே அத்தை வகையிட்டருளிச்செய்கிறார் (அளிப்பான்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அந்த ப்ரபந்தங்களில், எவற்றில் எந்த ரஹஸ்யம் கூறப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "உயிரளிப்பான்" என்று ப்ரணவத்தில் ப்ரதமாக்ஷரத்தில் தாத்வர்த்தமான பகவத்ரக்ஷகத்வத்தையும், "அடியேன்" என்று தத்ரக்ஷ்ய பூதமாய் சதுர்த்தி உகாரங்களில் சொல்லுகிறபடியே ததநந்யார்ஹ சேஷமாய் ப்ரக்ருதே: பரமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாக த்ருதீயாக்ஷரத்தில் சொல்லப்படுகிற ஆத்மஸ்வரூபத்தையும், ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தி ஸம்ப்ரதாநத்திலேயாய், "ப்ரஹ்மணேத்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத" என்கிறபடியே ப்ரணவத்துக்கு ஆத்மஸமர்ப்பணமும் அர்த்தமாகையாலே, விரோதி பயத்தாலே கலங்கின தசையிலே "அடியேனடியாவி யடைக்கலம்" என்று அந்த ஆத்மஸமர்ப்பணத்தையும்,

**விளக்கம்** - (அளிப்பான்) – திருவிருத்தம் (1) – உயிர் அளிப்பான் – என்பதன் காரணமாக, ப்ரணவத்தில் உள்ள முதல் எழுத்தான "அ" என்பதுடைய தாதுவானது, "ரக்ஷணம்" என்ற பொருளைத் தருவதால், பகவானுடைய காப்பாற்றும் தன்மையைக் கூறியதாகப் பொருள். (அடியேன்) - திருவிருத்தம்(1) – அடியேன் - என்பதன் மூலம், பகவானால் காப்பாற்றப்படும் பொருளாகவும், திருமந்த்ரத்தில் நான்காம் வேற்றுமையாக உள்ள "ஆய" என்பதாலும், ப்ரணவத்தின் இரண்டாம் எழுத்தான "உ" என்பதால் கூறப்படுவதாலும், அவனை அன்றி வேறு யாருக்கும் அடிமையல்ல என்னும் பொருளாகவும், சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதும், ஞானம் மற்றும் ஆனந்தம் போன்றவற்றை லக்ஷணமாகக் கொண்டதும், ப்ரணவத்தின் மூன்றாம் எழுத்தான "ம" என்பதால் கூறப்படும் பொருளாகவும் உள்ள ஆத்ம ஸ்வரூபத்தை உரைக்கிறார். (அடைக்கலம்) - ப்ரணவத்தில் உள்ள "அ" என்பதன் மீது ஏற்றிக் கழிக்கப்பட்ட நான்காம் வேற்றுமை என்பது, "அளித்தல்" என்ற பொருளில் வந்ததாக உள்ளது; மேலும் தைத்திரீயத்தில் - ப்ரஹ்மணேத்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத - ப்ரஹ்மத்தை அடைய "ஓம்" என்பதன் மூலம் தனது ஆத்மாவை அளிப்பானாக - என்று கூறப்படுகிறது; ஆகவே ப்ரணவத்திற்கு

"ஆத்ம சமர்ப்பணம்" என்பதும் பொருளாக உள்ளதால், விரோதி பயம் காரணமாக ஏற்பட்ட கலக்கமான நிலையில், திருவிருத்தம் (85) – அடியேன் அடியாவி அடைக்கலம் - என்று அந்த ஆத்ம சமர்ப்பணத்தைக் கூறினார்.

**வ்யாக்யானம்** – "திருமால் திருப்பேர் வல்லாரடிக்கண்ணி சூடிய மாறன்" என்று ப்ரணவோக்தமான பகவதநந்யார்ஹ சேஷத்வம் ததீய சேஷத்வ பர்யந்தமாயிருக்குமென்று நமஸ்ஸிலார்த்தமாகச் சொல்லப்படுகிற ததீய சேஷத்வத்தையும், "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்" என்றும், "யாதானு மோராக்கையில் புக்கங்காப்புண்டு மாப்பவிழ்ந்தும்" என்றும் ஷஷ்ட்யந்தமான மகாரத்தால் சொல்லப்பட்ட அஹங்கார மமகாரங்களாகிற அநாத்மந்யாத்ம புத்த்யாதி ரூபாவித்யையையும், தத்கார்யமான அக்ருத்யகரணாதிகளையும், தத்கார்யமாய் வரும் தேவ மநுஷ்யாதி ரூபமான ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும், "வன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தழுந்தார்" என்று தந்நிஷேத வாசியான நஞ்ஞாலே சொல்லப்பட்ட அவித்யை முதலாக ஸம்ஸார கர்தம மீறாகவுள்ள விரோதி நிவ்ருத்தியைச் சொல்லுகையாலே, ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹசேஷமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாக ததீய சேஷத்வ பர்யந்தமா யிருக்கும் ஆத்மஸ்வரூபத்தையும் ஸம்ஸார ஹேது பூதாவித்யாதிகளான விரோதிகளுடைய நிவ்ருத்தியையும் ப்ரதிபாதிக்கிற திருவிருத்தம், ப்ரதம மத்யம பதங்களிரண்டோடும் சேர்ந்திருக்கையாலும்;

**விளக்கம்** - (கூடிய) - ப்ரணவத்தில் கூறப்பட்டதான "பகவானுக்கு மட்டுமே அடிமை" என்ற நிலையானது அவனுடைய அடியார்கள் முடிய செல்வதாகும் என்பது, "நம" என்பதன் பொருள் ஆகும்; இதன் காரணமாக, அவனுடைய அடியார்கள் முடிய தான் அடிமை என்பதை திருவிருத்தம் (100) - திருமால் திருப்பேர் வல்லார் அடிக்கண்ணி சூடிய மாறன் – என்றார். (பொய் யாதானும்) – திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் – என்றும், திருவிருத்தம் (95) - யாதானும் ஓராக்கையில் புக்கு அங்காப்புண்டும் ஆப்பவிழ்ந்தும் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், "நம:" என்பதில் ஆறாம் வேற்றுமையை இறுதியில் கொண்டதாகிய "ம" என்பதால் கூறப்பட்ட அஹங்காரம் மற்றும் மமகாரம் என்பதாகிய "சரீரத்திலேயே ஆத்மா என்ற எண்ணத்தை வைத்தல்" முதலான அறியாமை, அதன் விளைவாக ஏற்படுவதான "செய்யக் கூடாதவற்றைச் செய்தல்" போன்றவை, இதன் விளைவாக ஏற்படுவதான தேவ மனிதச்

சரீரங்கள், இவற்றால் ஏற்படும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் கூறினார். (அழுந்தார்) - திருவிருத்தம் (100) – வன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தழுந்தார் - என்ற பாசுரத்தால், அவை அனைத்தையும் தள்ளுதல் என்பதை வெளிப்படுத்துகின்ற "ந" என்பதால் கூறப்பட்ட, "அவித்யை தொடங்கி இந்த ஸம்ஸார வாழ்வு முடிய உள்ள அனைத்து விரோதிகளும் விலகுதல்" என்பதை உரைத்தார். (என்று ஸ்வரூப விரோதி நிவ்ருத்திகளை) – இப்படியாக, காப்பாற்றுபவனாகிய ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாகவும், ஞானம் மற்றும் ஆனந்தம் போன்ற லக்ஷணங்களைக் கொண்டதாகவும், அவனுடைய அடியார்களுக்கு அடிமை என்பதாகவும் உள்ள ஆத்ம ஸ்வரூபம் குறித்தும், ஸம்ஸாரம் என்பதற்குக் காரணமாக உள்ளதான அவித்யை போன்ற விரோதிகள் விலகுவது குறித்தும் கூறுவதாக உள்ள திருவிருத்தம் என்ற ப்ரபந்தமானது, திருமந்த்ரத்தின் "ஓம்" மற்றும் "நம:" ஆகிய இரண்டு பதங்களுடைய பொருளைக் கொண்டதாக உள்ளது.

**வ்யாக்யானம் –** "தாமரையுந்தித் தனிப் பெருநாயக" என்று தொடங்கி, "எம்பெருமாமாயன்" என்று தலைக்கட்டுகையாலே, "நாராயண" பதத்தில் சொல்லப்படுகிற உபய விபூதி யுக்தமான ப்ராப்ய வஸ்துவையும், "தனிமாத்தெய்வத்தடியவர்க்கினி நாமாளாகவே யிசையுங்கொல்" என்றும், "ஊழிதோறூழியோவாது வாழியவென்றுயாந்தொழ விசையுங் கொல்" என்றும், அந்தப் பதத்தில் சதுர்த்த்யர்த்தமான பலஸ்வரூபத்தையும் சொல்லுகையாலே, ப்ராப்ய பலன்களிரண்டையும் ப்ரதிபாதிக்கிற திருவாசிரியம், ப்ரக்ருதி பரத்யயாம்சங்களாலே ததுபய ப்ரதிபாதகமான த்ருதீய பதத்தோடே சேர்ந்திருக்கையாலும், இரண்டு ப்ரபந்தமும் திருமந்த்ரத்தோடே சேரும்.

**விளக்கம் -** (தாமரை உந்திப் பெருமாமாயன்) – திருவாசிரியம் (1) – தாமரை உந்தித் தனிப் பெருநாயக - என்று தொடங்கி, திருவாசிரியம் (7) - எம்பெருமாமாயன் – என்று முடிப்பதால், திருமந்த்ரத்தில் உள்ள "நாராயண" என்பதால் கூறப்படுவதான நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் கொண்டதும், நம்மால் அடையப்படவேண்டியதும் ஆகிய உயர்ந்த வஸ்துவை உரைத்தார். (ஆளாகவே வாழிய என்று) – திருவாசிரியம் (3) – தனிமாத்தெய்வத்து அடியவர்க்கு இனி நாம் ஆளாகவே இசையுங்கொல் - என்றும், திருவாசிரியம் (4) – ஊழிதோறு ஊழியோவாது வாழியவென்று யாந்தொழ விசையுங் கொல் – என்றும் உள்ள பாசுரங்களால், "நாராயண" என்று சொல்லின் நான்காம் வேற்றுமைப்பொருளாக உள்ள கைங்கர்யம் என்ற பலனை


Email:sridharan_book@yahoo.co.in

உரைத்தார். ஆகவே திருவாசிரியமானது, அடையப்படவேண்டிய பொருளான நாராயணன் மற்றும் அவனுக்குச் செய்யவேண்டியதான கைங்கர்யம் ஆகிய இரண்டையும் கூறுகிறது. இப்படியாக இந்தத் திருவாசிரியம் என்பது திருமந்திரத்தின் மூன்றாவது சொல்லாகிய "நாராயண" என்பதுடன் ஸம்பந்தம் கொண்டதாக இருக்கிறது. எனவே திருவிருத்தமும், திருவாசிரியமும் திருமந்த்ரத்தை வெளிப்படுத்துவதாக (அல்லது அதன் பொருளாக) உள்ளன.

**வ்யாக்யானம்** – "நெறிகாட்டி நீக்குதியோ" என்று உபாயாந்தரங்களைக் காட்டி என்னை யகற்றப் பார்க்கிறாயோவென்கையாலே, "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்கிற உபாயாந்தரங்களினுடைய பரித்யாஜ்யதையையும்; "வெங்கோட்டேறேழுடனே கொன்றானையே மனத்துக் கொண்டு" என்று "மாமேகம் சரணம் வ்ரஜ" என்கிற மாநஸாத்யவஸாய ரூபமான உபாயஸ்வீகாரத்தையும்; "சீரார் மனத்தலை வன் துன்பத்தை மாற்றினேன் வானோரினத்தலைவன் கண்ணனால் யான்" என்றும், "எம்மிறையார் தந்தவருளென்னும் தண்டாலடித்து வல்வினையைக் கானும் மலையும் புகக்கடிவான்" என்று "அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று உபாய பூதன் பண்ணும் ஸர்வபாப விமோசநத்தையும்; "வானோமறி கடலோ" என்று தொடங்கி, "வன்துயரை - மருங்கு – கண்டிலமால்" என்று விரோதிகளானவை போனவிடம் தெரியாதபடி தன்னடையே விட்டுப் போய்த்து என்கையாலே, "நானும் வேண்டா, நீயும் வேண்டா, அவை தன்னடையே விட்டுப்போம்" என்கிற ஙிஜார்த்தத்தையும்; "அடர் பொன்முடியானை" என்று தொடங்கி, "யாதாகில் யாதே இனி" என்று "இனி கர்மமிருந்தென்? நசித்தென்? ஏதானால் நமக்கென் வரும்" என்று "மாசுச:" என்கிற பதத்தாலே பலிதமான நிர்ப்பரத்வாநுஸந்தாநத்தையும் சொல்லுகையாலே, உபாய ப்ரதிபாதகமாயிருக்கிற திருவந்தாதி, சரமச்லோகத்தோடே சேருமென்கை. (உபாயத்தையும் சொன்னவை) என்றது சொன்ன ப்ரபந்தங்களென்றபடி.

**விளக்கம்** - (நெறி காட்டி) – பெரியதிருவந்தாதி (6) - நெறிகாட்டி நீக்குதியோ – என்பதன் மூலம், "மற்ற உபாயங்களைக் காண்பித்து என்னை உன்னிடமிருந்து அகற்ற முயல்கிறாயோ" என்று கூறுவதால், கீதை (18-66) - ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய - அனைத்தையும் விட்டு – என்பதற்கு ஏற்ப, மற்ற அனைத்து உபாயங்களையும் விலக்குதல் என்பதைக் கூறினார். (மனத்துக் கொண்டு) - பெரியதிருவந்தாதி (48) – வெங்கோட்டேறு


Email:sridharan_book@yahoo.co.in

ஏழுடனே கொன்றானையே மனத்துக் கொண்டு – என்பதன் மூலம், கீதை (18-66) – மாம் ஏகம் சரணம் வ்ரஜ – என்னையே சரணமாகப் பற்றுவாயாக - என்பதான “மனத்தால் பற்றுதல்” என்னும் சரணம் புகுதலை உரைத்தார். (கண்ணனால் அடித்து) - பெரியதிருவந்தாதி (25) - சீரார் மனத்தலை வன் துன்பத்தை மாற்றினேன் வானோர் இனத்தலைவன் கண்ணனால் யான் - என்றும், பெரியதிருவந்தாதி (26) – எம் இறையார் தந்தவருளென்னும் தண்டாலடித்து வல்வினையைக் கானும் மலையும் புகக்கடிவான் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், கீதை (18-66) - அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - நான் உன்னை அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, பகவான் அனைத்துவிதமான பாபங்களிலிருந்து நம்மை விடுவிப்பதைக் கூறுகிறார். (கண்டிலமால்) - பெரியதிருவந்தாதி (54) - வானோமறி கடலோ – என்று தொடங்கி, பெரியதிருவந்தாதி (54) - வன்துயரை மருங்கு கண்டிலமால் - என்று கூறுவதால், “நானும் அவற்றை நீக்கவேண்டாம், நீயும் நீக்கவேண்டாம், அவை தானாகவே போய்விடும்” என்பதான பொருளைக் கூறினார். (யாதாகில் என்று) – பெரியதிருவந்தாதி (70) - அடர் பொன்முடியானை - என்று தொடங்கி, பெரியதிருவந்தாதி (70) - யாதாகில் யாதே இனி – என்று முடிப்பதன் மூலம், “இனி கர்மங்கள் இருந்தால் என்ன? அவை அழிந்தால் என்ன? அவை எப்படிப் போனால் நமக்கு என்ன நேரும்?”, என்று கூறுவதால், கீதை (18-66) – மாசுச: - வருந்தாதே – என்பதால் வெளிப்படுகின்ற “பாரம் நீங்கி இருத்தல்” என்பதைக் கூறினார். ஆகவே, உபாயத்தை வெளிப்படுத்துவதாக உள்ள பெரியதிருவந்தாதியானது, சரமச்லோகத்தின் பொருளை உணர்த்துகிறது. (உபாயத்தையும் சொன்னவை) - இப்படியாக இவற்றை வெளிப்படுத்திய ப்ரபந்தங்கள் என்று கருத்து.

210. த்வயார்த்தம் தீர்க்க சரணாகதி யென்றது ஸாரஸங்க்ரஹத்திலே.

**அவதாரிகை** - சரமப்ரபந்தமான திருவாய்மொழியின் த்வயார்த்த ப்ரதிபாதகத்வம் விஸ்தரேணோபபாதிக்க வேண்டுகையாலும், தத் விஷயமாகத் தம்முடைய திருத்தமையனார் பிள்ளை ஒரு ப்ரபந்தம் முன்பேயிட்டருளுகையாலும், அதிலே தர்சிப்பித்து விடக்கடவோமென்று (த்வயார்த்தம் தீர்க்க சரணாகதி யென்றது ஸாரஸங்க்ரஹத்திலே) என்கிறார்.

**விளக்கம்** - இறுதியாக உள்ள ப்ரபந்தமான திருவாய்மொழியானது த்வய மந்த்ரத்தின் ஆழ்பொருளை வெளிப்படுத்துகிறது என்பதை விரிவாக எடுத்துரைக்க வேண்டும் என்பதாலும், அது விஷயமாகத் தன்னுடைய திருத்தமையனாராகிய ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் ஒரு ப்ரபந்தத்தை முன்பே அருளிச்செய்துள்ளதாலும், “அதனையே இங்கு காண்பித்து நிற்போம்”, என்று திருவுள்ளம் கொண்டு, அதனை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, திருவாய்மொழி பத்துப்பத்தாலும், ச்ரிய:பதித்வம் முதலாக கைங்கர்ய விரோதி நிவ்ருத்தி பர்யந்தமாக த்வயத்தில் ப்ரதிபாதிதமான பத்தர்த்தத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, த்வயார்த்தமாய்க் கொண்டு தீர்க்க சரணாகதியாயிருக்கு மென்று சொல்லப்பட்டது, பிள்ளையருளிச் செய்த ஸாரஸங்க்ரஹமாகிற ப்ரபந்தத்திலே யென்கை.

**விளக்கம்** - (த்வயார்த்தம் தீர்க்க சரணாகதி என்றது) - திருவாய்மொழியில் உள்ள பத்து பத்துக்களால், த்வய மந்த்ரத்தில் வெளிப்படுவதாகிய மஹாலக்ஷ்மியின் நாதனாக இருத்தல் தொடங்கி, தன்னைத் தனது அடியார்கள் வந்து அடைவதற்கு அவர்களுக்குத் தடையாக உள்ள விரோதிகளை நீக்குதல் முடிய உள்ள பத்துக் கருத்துக்களை வெளிப்படுத்துவதால், திருவாய்மொழியை த்வய மந்திரத்தின் பொருளாகவே கொண்டு, தீர்க்க சரணாகதியாக இருக்கும் என்று, (ஸாரஹங்க்ரஹத்திலே) - ஸாரஸங்க்ரஹம் என்ற ப்ரபந்தத்தில் ஸ்வாமி பிள்ளைலோகாசார்யார் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - அந்த ப்ரபந்தமாவதுதானேதென்னில். “அகில ஜகத்திதாநுசாஸந பரமான வேதத்திலும் வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதி ஸமஸ்த சாஸ்த்ரங்களிலும் ப்ரஸித்தமாய், ஸர்வேச்வர ஸர்வஸ்வமாய், நம் ஆசார்யர்களுக்கு ஆபத்தநமாயிருந்துள்ள அர்த்த த்வயத்தை ப்ரதிபாதிக்கையாலே த்வயமென்று திருநாமத்தையுடைத்தாயிருந்துள்ள வாக்யத்வயம், பத்தர்த்தத்தை ப்ரதிபாதிக்கிறது. அதாகிறது – ச்ரிய:பதித்வமும், நாராயணத்வமும், நாராயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரணாரவிந்தயுகளமும், அதினுடைய ப்ராபகத்வமும், தத் கோசரமாய் சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநா கர்ப்ப விஸ்ரம்பமும், லஷ்மீ தத் வல்லபருடைய நிகிலாத்ம கைங்கர்ய ப்ரதாநார்த்தமான நித்யஸம்பந்தமும், கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியான ஈச்வரனுடைய நிரதிசய போக்யதையும், ஸர்வஸ்வாமித்வமும், நித்ய


Email:sridharan_book@yahoo.co.in

கைங்கர்யமும், கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணமுமாகிற அர்த்த விசேஷங்கள்; ஈத்ருசார்த்த விசேஷ ப்ரகாசகமான மந்த்ர விசேஷத்தினுடைய விவரணரூபமாய் பௌருஷேயோபநிஷத்தாயிருந்துள்ள திருவாய்மொழியில் பத்துப்பத்தாலும் இப்பத்தர்த்தத்தையும் நம் பூர்வாசார்யர்கள் அடைவே சேர்த்தநுஸந்தித்துப் போருவர்கள்.

**விளக்கம்** - அந்த ப்ரபந்தம் எது? (அடுத்து வருகின்ற பல வரிகளில் ஸாரஸங்க்ரஹத்தில் கூறப்பட்டவற்றுக்கான வ்யாக்யானத்தைச் செய்கிறார்) அனைத்து லோகங்களுக்கும் ஏற்றதான தன்மைகளை மட்டுமே உரைக்கின்ற வேதங்கள் மற்றும் அந்த வேதங்களில் கூறப்பட்டவற்றை விரிவாக உரைப்பவையாக உள்ள ஸ்ம்ருதி, இதிஹாஸம் மற்றும் புராணங்கள் என்பதான அனைத்துவிதமான சாஸ்த்ரங்களிலும் வெளிப்படுவதாக உள்ளதும், ஸர்வேச்வரனுக்கு அனைத்துவிதமான உடைமையாக உள்ளதும், நம்முடைய ஆசார்யர்களுக்கு ஆபத்தனமாக உள்ள இரண்டு அர்த்தத்தை உரைப்பதால் “த்வயம்” என்ற பெயர் கொண்டதும் - இப்படியாக உள்ள இரண்டு வரிகள் கொண்ட மந்த்ரமானது, பத்து அர்த்தங்களைக் கொண்டதாக உள்ளது. அவையாவன – (1) மஹாலக்ஷ்மியின் நாதனாக இருத்தல், (2) நாராயணத் தன்மை கொண்டிருத்தல், (3) அனைத்து லோகங்களும் சரணம் என்று புகத்தக்க இடமாக உள்ள நாராயணனுடைய இரண்டு திருவடித்தாமரைகள், (4) அத்தகைய திருவடிகளே உபாயமாக இருத்தல், (5) அந்தத் திருவடிகள் இரண்டையும் பற்றி நிற்கின்ற ஆத்மாவின் ப்ரார்த்தனையை உள்ளடக்கிய துணிவு, (6) அனைத்து ஆத்மாக்களுக்கும் ஏற்றதான கைங்கர்யத்தை அளிக்கும்விதமாக மஹாலக்ஷ்மி மற்றும் அவளுடைய நாதன் ஆகிய இருவருக்கும், ஆத்மாக்களுக்கும் இடையே உள்ள நித்யமான ஸம்பந்தம், (7) கைங்கர்யத்தை ஏற்பவனாகிய ஸர்வேச்வரனுடைய எல்லையற்ற இனிமை, (8) அனைத்திற்கும் எஜமானனாக இருத்தல், (9) நித்யமான கைங்கர்யம் மற்றும் (10) கைங்கர்யத்திற்குத் தடையாக உள்ள அனைத்தையும் நீக்குதல் என்பவை ஆகும். இப்படியாக ஆழ்பொருள் குறித்து தெளிவாக விளக்குகின்றதும், மந்த்ரங்களில் சிறப்பாக உள்ளதும் ஆகிய த்வய மந்த்ரத்தின் விவரண வடிவமாகவும், ஒருவரால் செய்யப்பட்ட உபநிஷத் என்பதாக உள்ளதும் ஆகிய திருவாய்மொழியில், பத்து பத்துக்கள் மூலம், இந்தப் பத்து சிறப்பான அர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன என்று நம்முடைய பூர்வாசார்யர்கள் சேர்த்து அனுபவித்தபடி இருப்பார்கள். அவையாவன:

**வ்யாக்யானம் -** அதில் முதல் பத்தால், “மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்” என்றும், “மலராள் மைந்தன்” என்றும், “திருமகளார் தனிக்கேள்வன்” என்றும், “திருவின் மணாளன்” என்றும், “பூமகளார் தனிக்கேள்வன்” என்றும், “மைந்தனை மலராள் மணவாளனை” என்றும் ச்ரிய:பதித்வம் ப்ரதிபாதிதமாய்த்து. இரண்டாம் பத்தால், “எம்பெருமான் நாரணற்கு” என்றும், “எம்பிரானெம்மான் நாராயணனாலே” என்றும், “நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்” என்றும் நாராயணத்வம் ப்ரதிபாதிதமாய்த்து. மூன்றாம் பத்தால் “நாண்மலராமடித் தாமரை” என்றும், “அங்கதிரடியன்” என்றும், “அவன் பாத பங்கயம்” என்றும், “அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல்” என்றும், “மூவுலகும் தொழுதேத்தும் சீரடியான்” என்றும் நாராயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரணாரவிந்த யுகளம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** – முதல் பத்தில், திருவாய்மொழி (1-3-1) - மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் – என்றும், (1-5-9) - மலராள் மைந்தன் – என்றும், (1-6-9) - திருமகளார் தனிக்கேள்வன் - என்றும், (1-9-1) - திருவின் மணாளன் - என்றும், (1-9-3) - பூமகளார் தனிக்கேள்வன் - என்றும், (1-10-4) - மைந்தனை மலராள் மணவாளனை - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், மஹாலக்ஷ்மியின் நாதனாக உள்ள தன்மை கூறப்பட்டது. இரண்டாம் பத்தில் உள்ள, (2-1-7) - எம்பெருமான் நாரணற்கு - என்றும், (2-7-1) - எம்பிரானெம்மான் நாராயணனாலே - என்றும், (2-7-2) - நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் – என்றும் உள்ள (3-3-9) - நாண்மலராமடித் தாமரை - என்றும், (3-4-3) – அங்கதிரடியன் - என்றும், (3-6-4) - அவன் பாத பங்கயம் - என்றும், (3-6-10) - அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல் - என்றும், (3-8-1) - மூவுலகும் தொழுதேத்தும் சீரடியான் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அனைத்து லோகங்களும் சரணம் என்று புகுவதற்கு ஏற்ப இடமாக உள்ள நாராயணனின் இரண்டு திருவடிகளும் கூறப்பட்டன.

**வ்யாக்யானம்** - நாலாம் பத்தால், “இலங்கை நகர் அம்பெரியுய்த்தவர்” என்றும், “வல்வினை தீர்க்கும் கண்ணனை” என்றும், “தொல்வினை தீர” என்றும், “வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே” என்றும், “மேவி நின்று தொழுவார் வினை போக” என்றும், “பிறந்தும் செற்றும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்” என்றும், “நோயே மூப்பிறப் பிறப்புப் பிணியே யென்றிவை யொழிய” என்றும், “வேட்கையெல்லாம் விடுத்து - கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை” என்றும், “அஃதேயுய்யப் புகுமாறு”


**Email:**sridharan_book@yahoo.co.in

என்றும், "உய்வுபாயம் மற்றின்மை தேறி" என்றும் அநிஷ்ட நிவ்ருத்தீஷ்ட ப்ராப்திகரத்வ லக்ஷணமான ப்ராபகத்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** - நான்காம் பத்தில் (4-2-8) - இலங்கை நகர் அம்பெரியுய்த்தவர் -என்றும், (4-4-11) - வல்வினை தீர்க்கும் கண்ணனை - என்றும், (4-4-11) - தொல்வினை தீர - என்றும், (4-5-2) - வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே - என்றும், (4-5-4) - மேவி நின்று தொழுவார் வினை போக - என்றும், (4-7-7) - பிறந்தும் செற்றும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன் - என்றும், (4-9-7) - நோயே மூப்பிறப் பிறப்புப் பிணியே யென்றிவை யொழிய - என்றும், (4-9-9) - வேட்கையெல்லாம் விடுத்து கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை - என்றும், (4-1-11) - அஃதேயுய்யப் புகுமாறு - என்றும், (4-3-11) - உய்வுபாயம் மற்றின்மை தேறி – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், விருப்பம் இல்லாத அனைத்தையும் விலக்கி, விருப்பமானவற்றை அடைதல் என்பதைச் செய்யும் தன்மை கொண்ட உபாயத்தன்மை கூறப்பட்டது.

**வ்யாக்யானம் –** அஞ்சாம்பத்தால் "தமியேனுக்கருளாய்" என்றும், "ஆரெனக்கு நின்பாதமே சரணாக" என்றும், "உன்னாலல்லால்" என்றும், "கழல்களவையே சரணாகக் கொண்ட" என்றும், "நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்றும், "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறுமேக சிந்தையனாய்" என்றும் தத் கோசரமாய் சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநா கர்ப்ப விஸ்ரம்பம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** - ஐந்தாம் பத்தில் (5-7-2) – தமியேனுக்கருளாய் - என்றும், (5-7-10) - ஆரெனக்கு நின்பாதமே சரணாக - என்றும், (5-8-3) – உன்னாலல்லால் - என்றும், (5-8-11) - கழல்களவையே சரணாகக் கொண்ட - என்றும், (5-9-11) - நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் - என்றும், (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறுமேக சிந்தையனாய் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், உபாயத்தை குறித்து உள்ள சேதநனுடைய ப்ரார்த்தனை என்பதான துணிவு கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – ஆறாம் பத்தால் “திருமாமகளிருந்தாம் மலிந்திருந்து” என்றும், “அடிமை செய்வார் திருமாலுக்கே” என்றும், “ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்” என்றும், “என் திருமார்வற்கு” என்றும், “கோலத் திருமாமகளோடுன்னை” என்றும் கைங்கர்ய ப்ரதாநார்த்தமான லக்ஷ்மீ தத் வல்லபர்களுடைய நித்ய ஸம்பந்தம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** – ஆறாம் பத்தில் (6-5-8) - திருமாமகளிருந்தாம் மலிந்திருந்து - என்றும், (6-5-11) - அடிமை செய்வார் திருமாலுக்கே - என்றும், (6-7-8) - ஒசிந்த ஒண்மலராள் கொழுநன் - என்றும், (6-8-10) - என் திருமார்வற்கு - என்றும், (6-9-3) - கோலத் திருமாமகளோடுன்னை – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், கைங்கர்யத்தை அளிப்பதற்கு ஏற்றதான மஹாலக்ஷ்மி மற்றும் அவளுடைய நாதன் ஆகியவர்களுடைய நித்யமான ஸம்பந்தம் கூறப்பட்டது .

**வ்யாக்யானம்** – ஏழாம் பத்தால் “கன்னலேயமுதே” என்றும், “கொடியேன் பருகின்னமுதே” என்றும், “அலைகடல் கடைந்தவாரமுதே” என்றும், “திருமாலின் சீர் இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ” என்றும், “இவ்வேழுலகை யின்பம் பயக்க” என்றும் கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியான வீச்வரனுடைய நிரதிசய போக்யதை ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** - ஏழாம் பத்தில் (7-1-2) – கன்னலேயமுதே - என்றும், (7-1-7) - கொடியேன் பருகின்னமுதே - என்றும், (7-2-5) - அலைகடல் கடைந்தவாரமுதே - என்றும், (7-9-9) - திருமாலின் சீர் இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ - என்றும், (7-10-1) - இவ்வேழுலகை யின்பம் பயக்க – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், கைங்கர்யத்தை ஏற்பவனாகிய ஸர்வேச்வரனுடைய எல்லையற்ற இனிமை கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – எட்டாம் பத்தால் “அடியனேன் பெரியவம்மானே” என்றும், “விண்ணவர்கோன் தங்கள் கோனை” என்றும், “அமர்ந்த நாதனை” என்றும், “மூவுலகாளி” என்றுமம், “நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன்” என்றும் ஸர்வஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** - எட்டாம் பத்தில் (8-1-3) - அடியனேன் பெரியவம்மானே - என்றும், (8-2-2) - விண்ணவர்கோன் தங்கள் கோனை - என்றும், (8-4-10) - அமர்ந்த நாதனை - என்றும், (8-

9-5) – மூவுலகாளி - என்றும், (8-9-11) - நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், அனைத்திற்கும் எஜமானனாக உள்ள தன்மை கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – ஒன்பதாம் பத்தால் "பண்டைநாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்து" என்றும், "நின் தீர்த்த வடிமைக் குற்றேவல்" என்றும், "தொடர்ந்து குற்றேவல் செய்து" என்றும், "கொடுவினையேனும் பிடிக்க" என்றும், "உறுவதிதுவென் றுனக்காட்பட்டு" என்றும், "ஆட்கொள்வானொத்து" என்றும், "நானும் மீளாவடிமைப் பணி செய்யப் புகுந்தேன்" என்றும் நித்ய கைங்கர்யம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** - ஒன்பதாம் பத்தில் (9-2-1) - பண்டைநாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்து - என்றும், (9-2-2) - நின் தீர்த்த வடிமைக் குற்றேவல் - என்றும், (9-2-3) - தொடர்ந்து குற்றேவல் செய்து - என்றும், (9-2-10) - கொடுவினையேனும் பிடிக்க - என்றும், (9-4-4) - உறுவதிதுவென் றுனக்காட்பட்டு - என்றும், (9-6-7) – ஆட்கொள்வானொத்து - என்றும், (9-8-4) - நானும் மீளாவடிமைப் பணி செய்யப் புகுந்தேன் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், நித்யமான கைங்கர்யம் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - பத்தாம் பத்தால் "துயர் கெடும் கடிது" என்றும், "கெடுமிடராய" என்றும், "எழுமையுமேதம் சாரா" என்றும், "தீரும் நோய் வினைகளெல்லாம்" என்றும், "இப்பிறப்பறுக்கும்" என்றும், "உன்றன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும் எம் பெண்மையாற்றோம்" என்றும், "பிணியொன்றும் சாரா பிறவி கெடுத்தாளும்" என்றும், "பிறவித்துயர் கடிந்தோம்" என்றும், "விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றும், "அமரா வினைகளே" என்றும், "கடுநரகம் புகலொழித்த" என்றும், "பிறவி கொடுத்தேன்" என்றும், "தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்" என்றும், "அந்திதொழுஞ் சொல்லு" என்றும், "அவாவற்று வீடு பெற்ற" என்றும் கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணம் ப்ரதிபாதிதமாய்த்து.

**விளக்கம்** - பத்தாம் பத்தில் (10-1-8) - துயர் கெடும் கடிது - என்றும், (10-2-1) – கெடுமிடராய - என்றும், (10-2-2) - எழுமையுமேதம் சாரா - என்றும், (10-2-3) - தீரும்


Email:sridharan_book@yahoo.co.in

நோய் வினைகளெல்லாம் - என்றும், (10-2-5) – இப்பிறப்பறுக்கும் - என்றும், (10-3-9) - உன்றன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும் எம் பெண்மையாற்றோம் - என்றும், (10-4-7) - பிணியொன்றும் சாரா பிறவி கெடுத்தாளும் - என்றும், (10-4-3) - பிறவித்துயர் கடிந்தோம் - என்றும், (10-4-9) - விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம் - என்றும், (10-5-9) - அமரா வினைகளே - என்றும், (10-6-11) - கடுநரகம் புகலொழித்த - என்றும், (10-8-3) - பிறவி கொடுத்தேன் - என்றும், (10-8-5) - தடுமாற்ற வினைகள் தவிர்த்தான் - என்றும், (10-8-7) - அந்திதொழுஞ் சொல்லு - என்றும், (10-10-11) - அவாவற்று வீடு பெற்ற - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், கைங்கர்யத்திற்குத் தடையாக உள்ள அனைத்தும் அடியுடன் நீங்குதல் குறித்து உரைக்கப்பட்டது.

**வ்யாக்யானம்** - இப்படி ச்ரிய:பதித்வ ப்ரமுகங்களாய் கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹண பர்யந்தங்களாயிருந்துள்ள உபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக் கடவதாயிருந்துள்ள வாக்யத்வயமும் திருவாய்மொழியும் பகவச்சரணார்த்திகளாய் அநந்யோபாயராயிருக்கு மதிகாரிகளுக்கு, காலக்ஷேப ஹேதுவாகவும், போக ஹேதுவாகவும், ஈச்வர ப்ரீதி ஹேதுவாகவும், யாவச்சரீரபாதமநுஸந்தேயம்" என்றருளிச் செய்த இப்ரபந்தமென்கை. இப்படி திருவாய்மொழியினுடைய த்வயார்த்த ப்ரதிபாதகத்வத்தை விசதமாக ஆசார்யர்களருளிச் செய்து வைக்கையாலே, ஸ்வப்ரபந்தத்தில் வக்தவ்யாம்சத்தை தத் ப்ரபந் தத்திலே தர்சிப்பித்தாராய்த்து.

**விளக்கம்** - இப்படியாக மஹாலக்ஷ்மியின் நாதனாக இருத்தல் என்பது தொடங்கி, கைங்கர்யத்திற்குத் தடையாக உள்ள அனைத்தும் அடியுடன் அழிந்த நிலை முடிய உள்ளதான, ஏற்கத்தக்க பல அர்த்தங்களை உரைப்பதாக உள்ள இரண்டு வாக்கியங்களான த்வயமந்த்ரமும் திருவாய்மொழியும், பகவானுடைய திருவடிகளை மட்டுமே விரும்புபவர்களாகவும், மற்ற உபாயங்கள் எதனையும் நாடாதவர்களாகவும் உள்ள அதிகாரிகளுக்கு பொழுதைக் கழிப்பதற்காகவும், இன்பத்திற்குக் காரணமாகவும், ஈச்வரனுடைய மகிழ்வைப் பெற்றுத்தரவல்லதாகவும், இந்த சரீரம் உள்ளவரை எண்ணியபடி உள்ளதாகவும் இருப்பவை ஆகும் என்று ஸாரஸங்க்ரஹத்திலே அருளிச்செய்தார். இவ்விதம் திருவாய்மொழியானது த்வயமந்த்ரத்தின் ஆழ்பொருளை உரைக்கிறது என்று தெளிவாக நம்முடைய பூர்வர்கள் அருளிச்செய்தனர். ஆகவே இங்கு

தமது இந்த ப்ரபந்தத்தில் கூறவேண்டிய விஷயத்தை, ஸ்வாமி பிள்ளை லோகாசார்யாருடைய ப்ரபந்தத்தில் உள்ளவை மூலமாகவே காண்பித்தார் என்று கருத்து.

211. மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர் திண்ணணை ஒன்று பயிலேறு கண்கரு வீடு சொன்னால் ஒருக்கொண்ட நோற்ற நாலும் எம்மாவொழிவில் நெடுவேய் என்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும், அருளினன் வீடு பெற்ற வென்கையாலே ஐந்திலு மிரண்டையும், தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் பணிசெய் என்கிற முக்த லக்ஷண வ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு ப்ரமேயமென்னும்.

211. ஆகவிப்படி த்வயார்த்த ப்ரதிபாதகதயா தீர்க்க சரணாகதியாயிருக்கிற திருவாய்மொழிக்கு மற்றுமாசார்யர்களருளிச் செய்யும் அர்த்தயோஜனைகளை யருளிச் செய்கிறார் (மூன்றில் சுருக்கிய) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் த்வய மந்த்ரத்தின் பொருளை உரைப்பதும், தீர்க்க சரணாகதியாக உள்ளதும் ஆகிய திருவாய்மொழிக்கு, மற்ற ஆசார்யர்கள் அருளிச்செய்த சிறப்பான ஆழ்பொருள்களை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மந்த்ரச்லோகங்களில் ஸங்க்ரஹேணோக்தங்களான அர்த்த விசேஷங்களை த்வயத்திலே விவரிக்குமாப்போலே, பூர்வ ப்ரபந்த த்ரயத்திலும் ஸங்க்ரஹேண சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தையும், ச்ருதிச் சாயையாலே அந்வயரூபேண ஸ்வாநுபவ முகத்தாலே பரத்வத்தில் பரத்வத்தை ப்ரதிபாதித்த "உயர்வறவுயர் நலமும்", இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே அந்வய வயதிரேகங்க ளிரண்டாலும் பரோபதேச முகத்தாலே அவதாரத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்த "திண்ணன் வீடும்", மோக்ஷ ப்ரதத்வ கதநத்தாலே பரத்வத்தை ப்ரதிபாதித்த "அணைவதரவணையும்", அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்த "ஒன்றுந் தேவுமா"கிற நாலு திருவாய்மொழியாலும் பர ஸ்வரூபம்.

**விளக்கம்** – (மூன்றில் சுருக்கிய ஐந்தையும்) - திருமந்த்ரம் மற்றும் சரம ச்லோகம் ஆகியவற்றில் சுருக்கமாக உரைக்கப்பட்ட ஆழ்பொருள் கருத்துக்களை, த்வயம்

விவரிக்கிறது; இது போன்றே முதல் மூன்று ப்ரபந்தங்களான திருவிருத்தம், திருவாசிரியம் மற்றும் பெரியதிருவந்தாதி ஆகியவற்றில் சுருக்கமாக உரைக்கப்பட்டதான அர்த்தபஞ்சகத்தை. (உயர்திண் அணை ஒன்று) - ச்ருதி சாயையாக உள்ளதால், தனது நேரடியான அனுபவம் காரணமாக பரத்வத்தில் உள்ள பரத்வத்தை வெளிப்படுத்துகின்ற திருவாய்மொழி (1-1-1) – உயர்வற உயர்நலம் - என்ற திருவாய்மொழியும்; இதிகாசம் மற்றும் புராணங்களில் கூறப்பட்ட பலவற்றுடன் ஒத்துப் போவதாலும், எதிர்மறையாக உரைப்பதாலும், மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்விதமாக அவதாரத்தில் உள்ள பரத்வத்தை வெளிப்படுத்துகின்ற திருவாய்மொழி (2-2-1) - திண்ணன் வீடு – என்ற திருவாய்மொழியும்; மோக்ஷத்தை அளிக்கின்ற தன்மையைத் தெளிவாக வெளிப்படுத்துவதால் பரத்வத்தை உரைக்கின்ற திருவாய்மொழி (2-8-1) - அணைவது அரவணை – என்ற திருவாய்மொழியும்; அர்ச்சாவதாரத்தில் பரத்வத்தை உரைப்பதான திருவாய்மொழி (4-10-1) - ஒன்றும் தேவும் - என்ற திருவாய்மொழியும் ஆகிய நான்கின் மூலம், அர்த்தபஞ்சகத்தின் முதல் கருத்தான "பர ஸ்வரூபம்" என்பது கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – பகவச்சேஷத்வத்திலும், தத்காஷ்டையான பாகவத சேஷத்வமே ஆத்மாவுக்கு உத்தேச்யமென்று ப்ரதிபாதித்த பயிலுஞ் சுடரொளியும், சேஷத்வ பஹிர்ப்பூதங்களான ஆத்மாத்மீயங்கள் த்யாஜ்யமென்கிற வயதிரேகத்தாலே சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்று ப்ரதிபாதித்த ஏராளுமிறையோனும், பகவானுக்கு இவ்வாத்ம வஸ்து ப்ரகாரதயா சேஷமாய் ப்ரக்ருதே: பரமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்குமென்னுமத்தை ப்ரதிபாதித்த கண்கள் சிவந்தும், அந்ய சேஷத்வ ப்ரஸங்கமும் அஸஹ்யமாம்படியான அதின் அநந்யார்ஹத்வத்தை ப்ரதிபாதித்த கருமாணிக்க மலையுமாகிற நாலு திருவாய்மொழியாலும் ஸ்வஸ்வரூபமும்;

**விளக்கம்** - (பயில் ஏறு கண் கரு) - ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ளதைக் காட்டிலும், அவனுடைய அடியார்களுக்கு அடிமையாக இருத்தலே ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்புடையது என்பதை வெளிப்படுத்துகின்ற திருவாய்மொழி (3-7-1) - பயிலும் சுடரொளி - என்ற திருவாய்மொழி; இப்படிப்பட்ட அடிமைத்தனத்தை ஏற்காத ஆத்மா, அந்த ஆத்மாவுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளவை ஆகிய அனைத்தும் கைவிடத்தக்கவையே ஆகும் என்று எதிர்மறையாக உரைப்பதன் மூலம், ஆத்மாவிற்கு அடிமைத்தனமே ஏற்புடையது என்பதை வெளிப்படுத்துவதான திருவாய்மொழி (4-8-1) - ஏறாளும்

இறையோனும் – என்ற திருவாய்மொழி; பகவானுக்கு அந்த ஆத்மா சரீரமாக உள்ளதால், அவனுக்கு அடிமையாகவும், சரீரத்தைக் காட்டிலும் வேறாக உள்ளதால் ஞானம் மற்றும் ஆனந்தமாகவும் உள்ளதையே லக்ஷணமாகக் கொண்டது என்பதை வெளிப்படுத்துகின்ற திருவாய்மொழி (8-8-1) - கண்கள் சிவந்து - என்ற திருவாய்மொழி; மற்றொரு பொருளுக்கு இந்த ஆத்மா அடிமை என்று கூறுவதும் கூடத் தவறு என்பதையும், இந்த ஆத்மா அவனுக்கு மட்டுமே அடிமை என்பதையும் வெளிப்படுத்துகின்ற திருவாய்மொழி (8-9-1) - கருமாணிக்க மலை போல் – என்ற திருவாய்மொழி என்பதான நான்கு திருவாய்மொழிகளும், அர்த்தபஞ்சகத்தில் உள்ள ஆத்மாவின் ஸ்வரூபம் இன்னது என்பது குறித்துக் கூறுகின்றன.

**வ்யாக்யானம்** - பகவத் வ்யதிரித்த விஷயங்களைப் பற்றுகைக் குடலான அஹங்கார மமகாரங்கள் த்யாஜ்யமென்ற வீடுமின் முற்றவும், அஸேவ்ய ஸேவை த்யாஜ்யமென்ற சொன்னால் விரோதமும், ஐச்வர்ய கைவல்யங்கள் த்யாஜ்யமென்ற ஒரு நாயகமும், சரீர ஸம்பந்த நிபந்தநமாக வரும் பரிக்ரஹங்கள் த்யாஜ்யமென்ற கொண்ட பெண்டிருமாகிற நாலு திருவாய்மொழியாலும் விரோதி ஸ்வரூபமும்.

**விளக்கம்** - (வீடு சொன்னால் ஒரு கொண்ட) - ஸர்வேச்வரனைத் தவிர உள்ள மற்ற பொருள்களைப் பற்றியிருப்பதற்குக் காரணமாக உள்ள அஹங்காரம் மற்றும் மமகாரம் போன்றவை கைவிடப்பட வேண்டியவை என்பதைக் கூறிய திருவாய்மொழி (1-2-1) - வீடுமின் முற்றவும் - என்ற திருவாய்மொழி; அடிமைத்தனம் செய்யத்தகாதவர்களுக்கு அடிமைத்தன்மை செய்தல் என்பது கைவிடப்பட வேண்டியதாகும் என்று கூறிய திருவாய்மொழி (3-9-1) - சொன்னால் விரோதம் - என்ற திருவாய்மொழி; ஐச்வர்யமும் கைவல்யமும் துறக்கப்பட வேண்டியவை என்பதைக் கூறுகின்ற திருவாய்மொழி (4-1-1) – ஒரு நாயகமாய் – என்ற திருவாய்மொழி; சரீரத் தொடர்பு காரணமாக ஏற்படுகின்ற உறவுகள் அனைத்துமே கைவிடவேண்டியவை என்று கூறுகின்ற திருவாய்மொழி (9-1-1) – கொண்ட பெண்டிர் - என்ற திருவாய்மொழி என்பதான நான்கு த்ருவாய்மொழிகளும் அர்த்தபஞ்சகத்தில் உள்ளதான விரோதி ஸ்வரூபத்தைக் குறித்துக் கூறுகின்றன.

 Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம்** – “நோற்ற நோன்பிலேன்” என்று ஆகிஞ்சந்ய பூர்வகமாக “ஆறெனக் சரணாகத் தந்தொழிந்தாய்” என்ற நோற்ற நோன்பும், “களைவாய் துன்பம் களையா தொழிவாய் களை கண் மற்றிலேன்” என்று அநந்ய கதித்வ பூர்வகமாக “கழல்களவையே சரணாகக் கொண்ட” என்ற ஆராவமுதும், “வைகலும் வினையேன் மெலிய” என்று பக்தி பாரவச்யம் முன்னாக “நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்” என்ற மானேய் நோக்கும், “எனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற” என்று தரித்து நின்று அவன் குணங்களை அநுஸந்திக்க மாட்டாத சைதில்யம் செல்லா நிற்க, “நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறு மேகசிந்தையனாய்” என்ற பிறந்தவாறுமாகிற நாலு திருவாய்மொழியாலும் உபாய ஸ்வரூபமும்.

**விளக்கம்** – (நோற்ற நாலும்) – திருவாய்மொழி (5-7-1) - நோற்ற நோன்பிலேன் – என்பதன் மூலம் “என்னிடம் எந்தவிதமான கைம்முதல் இல்லை (ஆகிஞ்சந்யம்)” என்பது தொடக்கமாக, ஆறெனக் சரணாகத் தந்தொழிந்தாய் – என்று கூறிய, (5-7) – நோற்ற நோன்பிலேன் - என்ற திருவாய்மொழி; (5-8-8) - களைவாய் துன்பம் களையா தொழிவாய் களை கண் மற்றிலேன் - என்று வேறு எந்த கதியும் இல்லாமை என்பதை முன்னிறுத்தி, (5-8-11) - கழல்களவையே சரணாகக் கொண்ட - என்று கூறிய, (5-8) - ஆராவமுதே – என்று திருவாய்மொழி; (5-9-1) - வைகலும் வினையேன் மெலிய – என்று பக்தியில் வசப்பட்டு நின்ற நிலையை முன்னிறுத்தி, (5-9-11) – நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் – என்று கூறிய, (5-9) – மானேய் நோக்கும் - என்ற திருவாய்மொழி; (5-10-1) - எனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற - என்று தரித்து நின்று அவனுடைய குணங்களை எண்ணியபடி இருக்க இயலாமல் நிலைகுலைந்து சென்றதை உரைத்து, (5-10-11) – நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறு மேகசிந்தையனாய் - என்று கூறிய (5-10-1) – பிறந்தவாறும் - என்ற திருவாய்மொழி ஆகிய நான்கு திருவாய்மொழிகளும், அர்த்தபஞ்சகத்தில் உள்ள உபாய ஸ்வரூபத்தைக் குறித்துக் கூறுகின்றன.

**வ்யாக்யானம்** – “தனக்கேயாக” என்று கைங்கர்யத்தில் ஸ்வார்த்ததா நிவ்ருத்தியை யபேக்ஷித்த எம்மா வீடும், ஸர்வகாலாவிசிஷ்டமான ஸகல சேஷ வ்ருத்திகளையும் பண்ண வேணுமென்று பாரித்த ஒழிவில் காலமும், அதுதான் பாகவத் கைங்கர்ய பர்யந்தமாக வேணுமென்று மநோரதித்த நெடுமாற்கடிமையும், அது தன்னில் பர


Email:sridharan_book@yahoo.co.in

ஸம்ருத்த்யேக ப்ரயோஜநத்வத்தைச் சொன்ன வேய்மரு தோளிணையுமாகிற நாலு திருவாய்மொழியாலும் பல ஸ்வரூபமுமாகக் கொண்டு.

**விளக்கம்** - (எம்மா ஒழிவில் நெடு வேய்) திருவாய்மொழி (2-9-1) – தனக்கேயாக - என்று கைங்கர்யம் செய்யும்போது என் பொருட்டுச் செய்வதாகிய இன்பம் ஏதும் இருத்தல் கூடாது என்று அதன் விலக்கத்தை விரும்பிய (2-9-1) – எம்மா வீடு - என்ற திருவாய்மொழி; (3-3-1) – ஒழிவில் காலம் எல்லாம் - என்று அனைத்து காலங்களிலும் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்று விண்ணப்பித்த (3-3-1) – ஒழிவில் காலம் எல்லாம் - என்ற திருவாய்மொழியும்; அத்தகைய கைங்கர்யம் என்பது, பாகவதர்கள் முடிய நீண்டிருக்க வேண்டும் என்று விண்ணப்பித்த (8-10-1) – நெடுமாற்கு - என்ற திருவாய்மொழி; அப்படிப்பட்ட பாகவத கைங்கர்யத்திலும் பகவானுடைய சிந்தனை என்பதே பேறாக இருத்தல் வேண்டும் என்பதைக் கூறிய (10-3-1) – வேய்மரு தோளிணை - என்று திருவாய்மொழி ஆகிய நான்கு திருவாய்மொழிகளும் அர்த்தபஞ்சகத்தில் உள்ள பலனின் ஸ்வரூபம் குறித்து உரைத்தன.

**வ்யாக்யானம்** - இருபது திருவாய்மொழியிலே விசதமாக ப்ரதிபாதித்து, மற்றை யெண்பது திருவாய்மொழியாலும் அது தன்னையே விஸ்தரிக்கையாலே, அர்த்த பஞ்சகத்தையும் இப் ப்ரபந்தத்துக்கு ப்ரமேயமென்றும்; “மயர்வற மதிநல மருளினன்” என்று தொடங்கி, “அவாவற்று வீடு பெற்ற” என்று தலைக்கட்டுகையாலே, அவ்வைந்திலும் வைத்துக் கொண்டு ப்ரதாநமான உபாயோபேயங்களிரண்டையு மிதுக்கு ப்ரமேயமென்றும்; “தொழுதெழென் மனனே”, “விருப்பே பெற்றமுதமுண்டு களித்தேன்”, “மேலைத் தொண்டு களித்து அந்தி தொழுஞ் சொல்லுப் பெற்றேன்” என்று சொல்லப்படுகிற “பத்தாஞ்ஜலிபுடத்வ ஹ்ருஷ்டத்வ நம இத்யேவ” வாதித்வங்களாகிற முக்த லக்ஷணத்தாலும், “விபத்யவா” என்கிறவர்களைப் போலே, “சொற்பணிசெயாயிரம்” என்று சொல்லப்படுகிற வாசிக வ்ருத்தியாலும், அவ்விரண்டிலும் வைத்துக் கொண்டு, உபேயமொன்றையுமே இதுக்கு ப்ரமேயமென்றும் சொல்லு மென்கை.

**விளக்கம்** – (இருபதிலே விசதமாக்கி) - இப்படியாக உள்ள இருபது திருவாய்மொழிகளில் அர்த்தபஞ்சகத்தை விரிவாக அருளிச்செய்து, (எண்பதிலே பரப்புகையாலே) - மீதம் உள்ள எண்பது திருவாய்மொழிகள் மூலம், அந்த அர்த்தபஞ்சகத்தைக் குறித்தே மேலும் விரிவாக

உரைப்பதால், (ஐந்தையும் இதுக்கு ப்ரமேயம் என்னும்) - அந்த அர்த்தபஞ்சகம் என்பது இந்தத் திருவாய்மொழியில் கூறப்பட்டவை என்று உரைப்பார்கள். (அருளினன் வீடு பெற்ற என்கையாலே ஐந்திலும் இரண்டை இதுக்கு ப்ரமேயம் என்னும்) – மயர்வற மதிநல மருளினன் - என்று தொடங்கி, அவாவற்று வீடு பெற்ற - என்று முடிப்பதன் காரணமாக, அர்த்தபஞ்சகத்தில் மிகவும் முக்கியமான உபாயம் மற்றும் உபேயம் ஆகிய இரண்டும் திருவாய்மொழியில் கூறப்பட்டவை என்று உரைப்பார்கள். (தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் என்கிற முக்த லக்ஷணத்தால்) – திருவாய்மொழி (1-1-1) - தொழுதெழென் மனனே - என்றும்; (10-8-6) – விருப்பே பெற்றமுதமுண்டு களித்தேன் – என்றும், (10-8-7) - மேலைத் தொண்டு களித்து அந்தி தொழுஞ் சொல்லுப் பெற்றேன் - என்றும் கூறப்படுவதான, பத்தாஞ்ஜலிபுடத்வ ஹ்ருஷ்டத்வ நம இத்யேவ – எப்போதும் கைகளைக் குவித்து, மகிழ்வுடன் “நம:” என்று உச்சரித்தபடி இருத்தல் - என்பதற்கு ஏற்ப உள்ள முக்தர்களுடைய லக்ஷணம்; (பணி செய் என்கிற விருத்தியால்) - விபந்யவ: - துதிப்பதையே பண்பாகக் கொண்டவர்கள் – என்றுள்ள நித்யஸூரிகள் போன்று, (1-10-11) - சொற்பணிசெயாயிரம் - என்று கூறும் திருவாய்மொழியை உரைப்பதான சொல்லால் செய்யப்படும் கைங்கர்யம்; (இரண்டில் ஒன்று இதுக்கு ப்ரேமேயம் என்னும்) - இந்த இரண்டின் மூலமும், அர்த்தபஞ்சகத்தில் உள்ள உபேயம் குறித்து உரைப்பதே திருவாய்மொழியாகும் என்றும் சிலர் கூறுவர்.

**வ்யாக்யானம்** - (இருபதிலே விசதமாக்கி யெண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும் இதுக்கு ப்ரமேயமென்னும்) என்றவிது, “இப்ப்ரபந்தங்களில் ஸூக்திகள், ப்ராப்யனான வெம்பெருமானுடைய ஸ்வரூப ப்ரதிபாதந பரமாயிருக்கும் சில; ப்ராப்தாவான ப்ரத்யகாத்ம ஸ்வரூப விஷயமாயிருக்கும் சில; ப்ராப்த்யுபாயத்தைச் சொல்லும் சில; பலத்தைச் சொல்லும் சில; ப்ராப்தி விரோதியைச் சொல்லும் சில; அவவிஷ்டமானவை இவற்றுக்கு உபபாதகங்களாயிருக்கும்”, என்று ஈட்டில் யோஜித்த க்ரமம்.

**விளக்கம்** - (இருபதிலே விசதமாக்கி யெண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும் இதுக்கு ப்ரமேயமென்னும்) - இப்படியாகக் கூறப்பட்டதன் கருத்து என்னவென்றால், “இந்த ப்ரபந்தங்களில் உள்ள சில பாசுரங்கள், அடையவேண்டிய இலக்காக உள்ள எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்கும்; ஒரு சில பாசுரங்கள், அடைபவனாகிய ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை

குறித்தே இருப்பதாகும்; ஒரு சில பாசுரங்கள், எம்பெருமானை அடைய வைக்கின்ற உபாயம் குறித்து உரைப்பதாக இருக்கும்; ஒரு சில பாசுரங்கள் பலன்களையும், ஒரு சில பாசுரங்கள் அடையவேண்டிய இலக்கை அடையவிடாமல் தடுக்கின்ற விரோதிகள் குறித்து உரைப்பதாக இருக்கும்; இவற்றில் மீதம் உள்ளவை, இவை அனைத்தையும் குறித்து மேலும் உதவும் விதத்தில் கூறுவதாக இருக்கும்", என்பதாக ஈடு வ்யாக்யானத்தில் கூறப்பட்டதையே உரைப்பதாகும்.

**வ்யாக்யானம்** - உபாயோ பேயங்களிரண்டையுமிதுக்கு ப்ரமேயமென்னு மென்றவிது, இவையிரண்டுமே ப்ரதாந ப்ரமேயம்; இவ்வுபாயோபேயங்களுக்கு அதிகாரி இன்னானென்கைக்காக ப்ரத்யகாத்ம ஸ்வரூபமும், உபாய பூதனும் உபேய விஷயமும் இன்னாரென்கைக்காக பர ஸ்வரூபமும், உபேய ப்ரதிபந்தகமாய் உபாய நிவர்த்யமாயிருக்குமது இன்னதென்கைக்காக விரோதி ஸ்வரூபமும் சொல்லுகிற வித்தனையென்று நினைத்து.

**விளக்கம்** - (உபாய உபேயங்கள் இரண்டையும் இதுக்கு ப்ரமேயம் என்னும்) – இப்படியாகக் கூறப்பட்டது என்ன? உபாயம் மற்றும் உபேயம் ஆகிய இரண்டுமே இந்த ப்ரபந்தங்களில் முக்கியமாகவும் முதன்மையாகவும் கூறப்பட்டவை ஆகும்; இத்தகைய உபாயம் மற்றும் உபேயம் ஆகியவற்றின் அதிகாரி இன்னவன் ஆனான் என்று விளக்குவதற்காகவே ஜீவாத்மாவின் ஸ்வரூபம் குறித்து உரைக்கப்படுகிறது; உபாயமாக உள்ளவனும், பலனின் விஷயமாக உள்ளவனும் இன்னவன் ஆவான் என்று கூறுவதற்காகவே பரமாத்மாவின் ஸ்வரூபம் உரைக்கப்படுகிறது; அடையவிடாமல் தடுப்பதும், உபாயத்தின் மூலம் விலக்கப்படுவதும் இதுவே ஆகும் என்று விளக்குவதற்காகவே விரோதி ஸ்வரூபம் கூறப்பட்டது. இந்தக் கருத்துக்களையே இங்கு அருளிச்செய்கிறார் என்று கூற எண்ணியே இவ்விதம் உரைத்தார்.

**வ்யாக்யானம்** – உபேயமொன்று மிதுக்கு ப்ரமேயமென்னுமென்றவிது "இவற்றி லுத்தேச்யம் பலம். ததர்த்தமாக மற்றுள்ள நாலர்த்தமும் சொல்லுகிறது" என்று ஈட்டில் சொன்னபடியே கைங்கர்யமே ப்ரதாநம். மற்றை நாலுஞ்சொன்னது கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும் ததாச்ரயத்தையும் தத்விரோதியையும் அவ்விரோதி


Email:sridharan_book@yahoo.co.in

நிவர்த்தகத்தையும் அறிவிக்கைக்காக வாகையாலே தச்சேஷமாகச் சொன்ன வித்தனையென்று நினைத்து.

**விளக்கம் -** (உபேயம் ஒன்றுக்கும் இதுக்கு ப்ரமேயம்) - இதன் மூலம் கூறப்பட்டது என்ன? "இந்த அனைத்திலும் கூற வந்தது பலன் குறித்தே ஆகும். அத்தகைய விஷயத்தை விளக்குவதற்காகவே, மற்றும் நான்கு விஷயங்களும் (அதாவது அர்த்தபஞ்சகத்தில் கூறப்படும் பலன் தவிர்த்துள்ள மற்ற நான்கு விஷயங்கள்) கூறப்பட்டன", என்று ஈட்டில் கூறுவதற்கு ஏற்ப, கைங்கர்யமே மிகவும் முதன்மையானது. மற்ற நான்கு விஷயங்கள் குறித்து ஏன் கூறப்பட்டது என்றால், "கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்பவன், கைங்கர்யத்தைச் செய்பவன், கைங்கர்யத்திற்குத் தடையாக இருப்பவை, அத்தகைய தடையை நீக்கவல்ல வழி" போன்ற பலவற்றையும் உணர்த்துவதற்காக என்பதால், அந்தப் பலன் என்பதற்கு உறுப்பாக இவை அனைத்தும் கூறப்பட்டது என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.

212. ரஹஸ்யத்துக்கு ஓரெழுத்தும் அதுக்கு ஓருருவும் போலேயானவற்றிலே, இமையோரதிபதி அடியேன் மனனே பொய் மயர்வு பிறந்தருளினன் விண்ணப்பம் தொழுதெழென்று பஞ்சகத்தோடே, அவித்யாதி ஸ்வரூப ஸ்வபாவ ஆத்மேச்வர பந்த ரக்ஷணக்ரம குண விக்ரஹ விபூதி யோக ததீயாபிமாந உபதேச விஷய அந்யாபதேச ஹேத்வாதிகளும் ஸங்க்ருஹீதம்.

**அவதாரிகை -** இனி ப்ரதம சரம ப்ரபந்தங்களினுடைய ஸங்க்ரஹங்களான முதல் பாட்டுக்களில் ப்ரதிபாத்யார்த்தங்களை ஸ்பஷ்டமாகவருளிச் செய்கிறார் (ரஹஸ்யத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடுத்து முதல் ப்ரபந்தம் (திருவிருத்தம்) மற்றும் இறுதி ப்ரபந்தம் (திருவாய்மொழி) ஆகியவற்றின் சுருக்கமாகவே, அவற்றின் முதல் பாசுரங்கள் உள்ளன என்பதால், அந்தப் பாசுரக்களின் மூலம் கூறப்படுவதை விளக்கமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "ஓரெழுத்தோருரு" என்னும்படி திருமந்த்ரமாகிற ரஹஸ்யத்துக்கு ஸங்க்ரஹமாய் "ஓமித்யேகாக்ஷரம்" என்று ஏகாக்ஷரமாயிருக்கிற

ப்ரணவமும், "தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய" என்கிறபடியே அந்த ப்ரணவந்தனக்கு ஸங்க்ரஹமாயிருக்கிற அகாரமும் போலே, திருவிருத்தம் திருவாய்மொழியாகிற ப்ரபந்தங்களுக்கு ஸங்க்ரஹங்களான முதல் பாட்டுக்களிலே,

**விளக்கம்** - (ரஹஸ்யத்துக்கு ஓர் எழுத்துப்போலே) – பெரியதிருமொழி (6-1-5) – ஓரெழுத்தோருரு - என்பதற்கு ஏற்ப திருமந்த்ரமாக உள்ள இரகசியத்தின் சுருக்கமாகவும், ஓமித்யேகாக்ஷரம் - ஓம் என்பது ஒரு அக்ஷரம் – என்பதற்கு ஏற்பவும் உள்ளதான ஒரு எழுத்து கொண்ட ப்ரணவம் போன்றும். (அதுக்கு ஓர் உருவும் போலே) - தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய – அதன் ஆதாரமாக உள்ளதான- என்பதற்கு ஏற்ப ப்ரணவத்தில் கூறப்பட்டதற்கு சுருக்கமாக உள்ள "அ" என்று எழுத்து போன்றும். (அவற்றிலே) – திருவிருத்தத்திற்குச் சுருக்கமான அதன் முதல் பாசுரத்திலும், திருவாய்மொழியின் சுருக்கமான அதன் முதல் பாசுரத்திலும்.

**வ்யாக்யானம்** - "இமையோர் தலைவா" என்றும், "அயர்வறுமமரர்க ளதிபதி" என்றும் ஸூரிஸேவ்யமாய் ஸர்வாதிகமாயிருக்கும் பரஸ்வரூபத்தையும்; "அடியேன்" என்றும், "என் மனனே" என்றும் சேஷபூதமாய் பரிசுத்தாந்த:கரணமாயிருக்கும் ஸ்வஸ்வரூபத்தையும்; "பொய் நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்" என்றும், "மயர்வு" என்றும் அவித்யாதிகளான விரோதி ஸ்வரூபத்தையும்; "உயிரளிப்பானெந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றும், "மதிநலமருளினன்" என்றும் லோக ரக்ஷணார்த்தமாக அநேகாவதாரங்களைப் பண்ணின ஸர்வேச்வரனுடைய க்ருபையே உபாயமென்று உபாய ஸ்வரூபத்தையும்; "செய்யும் விண்ணப்பம்" என்றும், "தொழுதெழு" என்றும் சேஷ விஷயத்தில் கரண த்ரயத்தாலும் பண்ணும் கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்று பல ஸ்வரூபத்தையுமாகக் கொண்டு ஸங்க்ரஹித்துச் சொன்ன அர்த்தபஞ்சகத்தோடே,

**விளக்கம்** – (இமையோர் அதிபதி) திருவிருத்தத்தில் (1) – இமையோர் தலைவா - என்றும், திருவாய்மொழியில் (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி - என்றும் நித்யஸூரிகளால் வணங்கப்படுவதும், அனைத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததாக உள்ளதும் ஆகிய பரஸ்வரூபத்தையும். (அடியேன் மனனே) - திருவிருத்தத்தில் (1) – அடியேன் - என்றும், திருவாய்மொழியில் (1-1-1) – என் மனனே - என்றும் உள்ளதன் மூலம், அத்தகைய பரஸ்வரூபத்திற்கு அடிமையாகவும், பரிசுத்தமான அந்தகரணத்தைக் கொண்டதாகவும்

உள்ள ஆத்ம ஸ்வரூபத்தையும். (பொய் மயர்வு) - திருவிருத்தத்தில்(1) - நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் – என்றும், திருவாய்மொழியில் (1-1-1) - மயர்வு – என்றும் உள்ளதன் மூலம், அறியாமை போன்றதான விரோதி ஸ்வரூபத்தையும். (பிறந்து அருளினன்) - திருவிருத்தத்தில் (1) – உயிர் அளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் - என்றும், திருவாய்மொழியில் (1-1-1) – மதிநலம் அருளினன் - என்றும் உள்ளதன் மூலம், இந்த லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பல அவதாரங்கள் செய்தருளிய ஸர்வேச்வரனுடைய க்ருபை என்பதே உபாயமாகும் என்று உபாய ஸ்வரூபத்தையும். (விண்ணப்பம் தொழுது எழு) – திருவிருத்தத்தில் (1) – செய்யும் விண்ணப்பம் – என்றும், திருவாய்மொழியில் (1-1-1) – தொழுது எழு – என்றும் உள்ளதன் மூலம், எஜமானனாக உள்ள அவன் விஷயத்தில் மூன்று கரணங்களாலும் செய்யப்படும் கைங்கர்யமே உயர்ந்த புருஷார்த்தம் என்று பலனின் ஸ்வரூபத்தையும். (என்ற பஞ்சகத்தோடே) – இப்படியாகச் சுருக்கமாக உரைக்கப்பட்ட அர்த்தபஞ்சகத்துடன் சேர்த்து.

**வ்யாக்யானம்** – "பொய்நின்ற ஞானமும்" இத்யாதியாலே அவித்யாதிகளைச் சொல்லுகிறவளவில், உத்பத்தி விநாசாதி யோகத்தாலே அஸத்ய சப்த வாச்யமான அசேதந விஷயத்தி லாத்ம ஜ்ஞாநமும், அந்த தேஹாத்மாபிமாந மடியான ஸாம்ஸாரிக துஷ்கர்ம ப்ரவ்ருத்தியும், அக்கர்மடியாக வரக்கடவதான மாம்ஸாஸ்ருகாதி மல ரூப தேஹ ஸம்பந்தமு மென்றவற்றினுடைய ஸ்வரூபங்களும். விப்ரதிபத்தி ஹேதுத்வம், ஸம்ஸார ஹேதுத்வம், ஸ்வரூப திரோதாயகத்வம், உத்தரோத்தரங்களில் பூர்வ பூர்வகாரணத்வம், "இனியாமுறாமை" என்கையாலே அவற்றின் அநாதித்வம், ஸோபாதிகத்வம், "மயர்வற மதிநலமருளினன்" என்கையாலே அவற்றின் ஜ்ஞாந நிவர்த்த்யத்வம் முதலான ஸ்வபாவங்களும்,

**விளக்கம்** – (அவித்யாதி ஸ்வரூபம் ஸ்வபாவம்) திருவிருத்தத்தில் (1) - பொய் நின்ற ஞானமும் – என்பது போன்றவை மூலம் அவித்யை முதலானவை கூறப்படும்போது, உற்பத்தி மற்றும் அழிவு ஆகிய இரண்டையும் கொண்டது என்பதால் "அஸத்யம்" என்று கூறலாம்படி உள்ளதான அசேதனமாகிய சரீரத்தையே ஆத்மா என்று தவறாக எண்ணும் ஞானமும், இவ்விதம் சரீரத்தையே ஆத்மா என்று எண்ணுவதால் ஏற்படுகின்ற ஸம்ஸாரத்தில் விளைவதான தீயவற்றைச் செய்தலும், அத்தகைய தீய கர்மங்கள்

காரணமாக ஏற்படக்கூடியதான மாமிசம் மலம் போன்றதால் ஆகிய சரீர ஸம்பந்தமும் என்பதாக உள்ள இவற்றுடைய ஸ்வருபங்களும்; இவ்விதம் சரீரமே ஆத்மா என்று எண்ணும் விபரீதமாம ஞானத்திற்குக் காரணமாக இருத்தல், ஸம்ஸாரத்திற்குக் காரணமாக இருத்தல், ஆத்மஸ்வரூபத்தை மறைத்தல், அடுத்தடுத்த வரக்கூடிய தாழ்வுகளுக்கு முன்பு செய்த பலவும் காரணமாக இருத்தல், திருவிருத்தம் (1) – இனி யாம் உறாமை - என்பதால் இவ்விதம் உள்ள பலவும் எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி இருத்தல், அவை ஒரு உபாதியால் ஏற்படுதல், திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் அருளினன் - என்பதால் சரியான ஞானம் மூலம் இவை அனைத்தும் விலகுவதாக இருத்தல் போன்ற பலவிதமான ஸ்வபாவங்களும்.

**வ்யாக்யானம்** – "இமையோர் தலைவா … அடியேன்", "அதிபதி … அடிதொழுது" என்கையாலே ஆத்மாவுக்கும் ஈச்வரனுக்குமுண்டான சேஷ சேஷி பாவ ஸம்பந்தமும்; "உயிரளிப்பானெந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றும், "மயர்வற மதிநலமருளினன்" என்றும் அநேகாவதாரங்களைப் பண்ணி ரக்ஷிக்கும்படியையும்; ஸம்ஸார ஹேதுவான அஜ்ஞாநத்தைப் போக்கி உஜ்ஜீவந ஹேதுவான ஜ்ஞாந பக்திகளைத் தன் க்ருபையாலே தந்தபடியையும் சொல்லுகையாலே ஈச்வரனுடைய ரக்ஷண க்ரமமும்,

**விளக்கம்** – (ஆத்ம ஈச்வர பந்தம்) – திருவிருத்தம் (1) - இமையோர் தலைவா … அடியேன் – என்றும், திருவாய்மொழி (1-1-1) - அதிபதி … அடிதொழுது – என்றும் கூறுவதன் மூலம், ஆத்மாவிற்கும் ஈச்வரனுக்கும் உல்ளதான "அடிமை - எஜமானன்" என்ற ஸம்பந்தமும். (ரக்ஷா க்ரமம்) – திருவிருத்தம் (1) - உயிரளிப்பானெந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் - என்றும், திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநலமருளினன் - என்றும் கூறுவதால், பலவிதமான அவதாரங்களை எடுத்து அனைத்தையும் காப்பாற்றும் விதமும், ஸம்ஸாரத்திற்குக் காரணமாக உள்ள அவித்யையை நீக்கி மேலே ஏறுவதற்குக் காரணமாக உள்ள ஞானம் மற்றும் பக்தி போன்றவற்றைத் தனது க்ருபையால் அளித்த விதமும் என்பதான ஈச்வரன் காப்பாற்றும் வழிகளும்.

**வ்யாக்யானம்** – "உயர்வறவுயர் நலம் … துயரறு சுடரடி", "இமையோர்", "அயர்வறுமமரர்கள்" என்று குணவிக்ரஹ விபூதிகளும், அந்த ஸூரிகளை

முன்னிடுகையாலே ததீயாபிமானமும், “நின்று கேட்டருளாய்”, “தொழுதெழென் மனனே” என்று நெஞ்சுபோலே பவ்யனான வீச்வரனும் அப்படி பவ்யரானாரு முபதேச விஷயமென்னுமதும்,

**விளக்கம்** - (குண விக்ரஹ விபூதி யோகம்) – திருவாய்மொழி (1-1-1) - உயர்வற உயர் நலம் - என்பதால் குணங்களும், திருவாய்மொழி (1-1-1) – துயர் அறு சுடரடி - என்பதால் திருமேனியும்; திருவிருத்தம் (1) - இமையோர் - என்றும், திருவாய்மொழி (1-1-1) - அயர்வறும் – என்றும் கூறுவதன் மூலம் நித்யஸூரிகளைக் கூறுவதால் அடியார்களுடைய விருப்பமும்; (உபதேச விஷயம்) - திருவிருத்தம் (1) - நின்று – என்றும், திருவாய்மொழி (1-1-1) - தொழுது எழு என் மனனே – என்றும் கூறுவதால் மனம் போன்று தனக்குள் நிற்கின்ற ஈச்வரனும், அவ்விதம் அடக்கியுள்ளவர்களும் தம்முடைய இந்த உபதேசத்திற்கு விஷயம் ஆகும் என்ற கருத்தும்.

**வ்யாக்யானம்** – “நலமருளினன்” என்று பக்தியைத் தந்தானென்கையாலே அந்யாபதேசத்துக்கு ஹேதுவான பக்தியும் முதலான அர்த்தங்களும் ஸங்க்ரஹேண சொல்லப்பட்டனவென்கை. (அந்யாபதேச ஹேத்வாதிகளும்) என்றவிடத்தில் ஆதி சப்தத்தாலே மற்றும் வேதாந்த ஸங்க்ரஹ தாத்பர்யங்களான அர்த்தங்கள் பலவுமிவற்றிலே ஸங்க்ருஹீதங்க ளென்னுமிடம் காட்டப்பட்டது.

**விளக்கம்** - (அந்யாபதேச ஹேத்வாதிகளும்) – திருவாய்மொழி (1-1-1) – நலம் அருளினன் - என்று பக்தியை அளித்தருளினான் என்று கூறுவதால், தாயாருடைய கூற்றாகவும், தோழியுடைய கூற்றாகவும், நாயகியின் கூற்றாகவும் எனப் பலவிதமான உபதேசங்கள் வடிவிலுள்ள திருப்பாசுரங்கள் வெளிப்படுத்துவதற்கு காரணமாக உள்ள பக்தி போன்ற பலவும், (ஸங்க்ருஹீதம்) - சுருக்கமாக உரைக்கப்பட்டன. “அந்யாபதேச ஹேத்வாதி” என்பதிலுள்ள “ஆதி” என்பதன் மூலம், வேதாந்தங்களில் சுருக்கமாக உரைக்கப்பட்ட பலவும் இவற்றிலும் சுருக்கமாக உரைக்கப்பட்டன என்பதும் கூறப்பட்டது.

213. அடிதொழுதெழென்றவிதிலே வஸ்து நிர்த்தேச நமஸ்கார ஆசீஸ்ஸுக்களுமுண்டு.

**அவதாரிகை** – அவிக்ந பரிஸமாப்தி ப்ரசயகமநார்த்தமாக ப்ரபந்தாரம்பத்திலே ஆசரிக்கப்படும் ஆசீர் நமஸ்க்ரியா வஸ்து நிர்தேசங்களாகிற மங்களாசாரங்கள் இதிலுமுண்டோ வென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (அடி தொழுது) இத்யாதி.

**விளக்கம்** - தொடங்கப்பட்ட ஒரு நூலானது எந்தவிதமான தடையும் இன்றி முழுவதுமாக நிறைவு பெறுவதற்காகவும், விரிவு பெறுவதற்காகவும் அந்த நூலின் தொடக்கத்தில் கூறப்படுகின்ற மங்கல ச்லோகம், நமஸ்காரம், கூறப்படும் பொருள் உரைத்தல் போன்ற மங்களகரமான பலவும் இந்த ப்ரபந்தத்திலும் உள்ளதோ என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "துயரறு சுடரடி" என்கையாலே வஸ்து நிர்தேசமும், "தொழுது" என்கையாலே நமஸ்காரமும், "எழு" என்கையாலே ஆசீஸ்ஸுமுண்டென்றபடி. இப்படி நாமொரு ப்ரபந்தம் பண்ணவேணுமென்று கருதியிருந்து இவர் செய்ததன்றிக்கே, நிரம்பினவேரி நெளிக்குமாபோலே நிமிகிற வாய்கரை மிடைந்து புறப்பட்ட சொற்கள் இவர் பாசுரத்தாலே லோகத்தைத் திருத்தக் கோலுகிற ஸர்வேச்வரன் நினைவாலே ஸர்வ லக்ஷணோ பேதமாய்த் தலைக்கட்டின ப்ரபந்தமாகையாலே, இம்மங்களாசாரங்களும் கோல்விழுக்காட்டாலே பலித்தன வித்தனை யாகையாலேயாய்த்து, "அடிதொழுதெழு என்றவிதிலே இவையும் பண்ணப்பட்டன" என்னாதே உண்டென்று விட்டது.

**விளக்கம்** – (எழு என்ற இதிலே வஸ்து நிர்த்தேம்) – "துயர் அறு" என்பதன் மூலம் இந்த நூலில் கூறப்படும் பொருள் உரைத்தல், (தொழுது என்ற இதிலே நமஸ்காரம்) - "தொழுது" என்பதன் மூலம் நமஸ்காரமும், (எழு என்ற இதிலே ஆசிஸ்) "எழு" என்பது மூலம் வாழ்த்தும், (உண்டு) - இதில் உள்ளது. "இப்படிப்பட்ட ஒரு ப்ரபந்தத்தை நாம் உண்டாக்கவேண்டும்" என்ற எண்ணம் கொண்டு நம்மாழ்வார் இந்த ப்ரபந்தத்தை ஏற்படுத்தவில்லை. எனவே நிரம்பிய ஏரி ஒன்று நிலை தடுமாறுவது போன்று, தவித்தபடி உள்ள இவருடைய வாய் என்றுள்ள கரையானது உடைந்து, சொற்கள் வெளிப்பட்டன; அந்தச் சொற்களே, "இவருடைய திருப்பாசுரங்கள் மூலம் இந்த உலகத்தைத் திருத்தவேண்டும்" என்று திருவுள்ளம் கொண்ட ஸர்வேச்வரனுடைய எண்ணத்தால், அனைத்துவிதமான இலக்கணங்களும் நன்கு பொருந்திய ப்ரபந்தமாக நின்றன. இதன்

விளைவாக வாழ்த்து, நமஸ்காரம் மற்றும் கூறப்பட்ட பொருளை உரைத்தல் ஆகிய மங்களங்கள் அனைத்தும் வெளிப்பட்டன என்றாகிறது. இதன் காரணமாகவே, "அடி தொழுது எழு என்ற இதிலே இவையும் சொல்லப்பட்டன", என்று கூறாமல், "உண்டு" என்று சூர்ணையில் கூறினார்.

214. சாதுசனம் நண்ணா மயர்வற மாசறுக்கும் தெருள் கொள்ளப் பத்தராவர் அடிமையறவுரிய நோய்களறுக்கும் உடைந்து ஏற்றரும் வானின் தாளின் கீழடிக்கீழ் இன்பக் கதி பயக்கும் ஊடு புக்கு மூவுலகுமுருகா நிற்பரென்னும் ஸாம்யத்தாலே வாச்யன் பத்தினாய தோற்றம் போலே தோற்றங்களாயிரத்தின் பத்துப்பத்தான விதின் ஆவிர்ப்பாவம்.

**அவதாரிகை** - இனிமேல் இப்ப்ரபந்தம் பத்துப்பத்தாக அவதரித்ததின் ப்ரயோஜநத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (சாதுசனம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்த இந்தத் திருவாய்மொழியானது பத்துப்பத்தாக அவதரித்ததன் பயனை உதாரணங்களுடன் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு", "பரித்ராணாய" இத்யாதிப்படியே ஸாது பரித்ராண துஷ்க்ருத் விநாசார்த்தமாக அவன் அவதரித்தாப்போலே, இதுவும், "நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த" என்று பகவத் ப்ரதிபக்ஷ பூதரான ஆஸுரப்ரக்ருதிகள் மண்ணுண்ணவும், பகவத் பக்திபரரான தேவப்ரக்ருதிகள் வாழவுமவதரித்த தென்றும்.

**விளக்கம்** – (சாதுசனம்) – திருவாய்மொழி (3-5-5) - சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு - என்றும், கீதை (4-8) - பரித்ராணாய – சாதுக்களைக் காப்பதற்காகவும், பாபங்கள் செய்பவர்களை அழிப்பதற்காகவும், தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்க்கிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பகவான் அவதரித்தான். இதே போன்று திருவாய்மொழியும், (நண்ணா) - திருவாய்மொழி (10-7-5) - நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த - என்பதற்கு ஏற்ப, பகவத் பக்தி

இல்லாத அசுரத்தன்மை கொண்டவர்கள் மடிவதற்காகவும், பகவத் பக்தி கொண்ட தெய்வீகமானவர்கள் வாழ்வதற்காகவும் அவதரித்தது.

**வ்யாக்யானம்** – "மயர்வற மதிநல மருளினன்" என்று அவன் அஜ்ஞானத்தைப் போக்கி ஜ்ஞாந பக்திகளைக் கொடுக்குமாபோலே, இதுவும், "ஒலி புகழாயிரத்திப் பத்து உள்ளத்தை மாசறுக்கும்" என்று மனஸ்ஸுக்கு மாசான அஜ்ஞாநத்தைப் போக்கி, "தெருள் கொள்ளச் சொன்ன வோராயிரம்" என்றும், "தூயவாயிரத்திப் பத்தால் பத்தராவர்" என்றுஞ் சொல்லுகிறபடியே ஜ்ஞாந பக்திகளைக் கொடுக்குமென்றும்;

**விளக்கம்** – (மயர்வற) – திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநல மருளினன் – என்பதற்கு ஏற்ப நம்முடைய அஜ்ஞானத்தை அவன் நீக்கி, ஞானம் மற்றும் பக்தியை அளிக்கிறான்; இது போன்றே இந்தத் திருவாய்மொழியும், (மாசறுக்கும் தெருள் கொள்ள பத்தர் ஆவர்) – திருவாய்மொழி (5-2-11) - ஒலி புகழாயிரத்திப் பத்து உள்ளத்தை மாசறுக்கும் - என்பதற்கு ஏற்ப, மனதிற்குத் தோஷமாக உள்ள அஜ்ஞானத்தை நீக்கி, திருவாய்மொழி (2-10-11) தெருள் கொள்ளச் சொன்ன வோராயிரம் - என்றும், திருவாய்மொழி (6-4-11) - தூயவாயிரத்திப் பத்தால் பத்தராவர் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஞானத்தையும் பக்தியையும் அளிக்கிறது.

**வ்யாக்யானம்** – "அடிமையறக் கொண்டாய்" என்று தனக்கு அநந்யார்ஹ சேஷமாக அவனங்கீகரிக்குமாபோலே, இதுவும், "உரிய தொண்டராக்கு முலகமுண்டாற்கே" என்று ததநந்யார்ஹ சேஷமாக்குமென்றும்; "நோய்களறுக்கும் மருந்தே" என்கிறபடியே அவன் ஸம்ஸார வ்யாதி பேஷஜமாமாப்போலே, இதுவும், "உடைந்து நோய்களை யோடுவிக்கும்" என்று ஸாம்ஸாரிக ஸகல துரிதங்களையும் உருமாய்ந்து போம்படி பண்ணுமென்றும்;

**விளக்கம்** - (அடிமையற) – திருவாய்மொழி (4-9-6) - அடிமையறக் கொண்டாய் – என்பதற்கு ஏற்ப அவன் நம்மை மற்றவர்கள் யாருக்கும் அடிமை என்று விடாமல், தனக்கு மட்டுமே அடிமை என்று ஏற்றுக்கொள்கிறான்; இது போன்றே இந்தத் திருவாய்மொழியும், (உரிய) – திருவாய்மொழி (6-9-11) - உரிய தொண்டராக்கு முலகமுண்டாற்கே – என்பதற்கு ஏற்ப, வேறு யாருக்கும் நம்மை அடிமையாக்காமல் அவனுக்கு மட்டுமே நம்மை

அடிமையாக்குகிறது. (நோய்கள் அறுக்கும்) - திருவாய்மொழி (9-3-3) - நோய்களறுக்கும் மருந்தே – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் ஸம்ஸாரம் என்னும் நோய்க்கு மருந்தாக உள்ளான்; இது போன்றே இந்தத் திருவாய்மொழியும், (உடைந்து) - திருவாய்மொழி (1-7-11) - உடைந்து நோய்களை யோடுவிக்கும் – என்பதற்கு ஏற்ப, இந்த ஸம்ஸாரம் மூலம் ஏற்படுகின்ற அனைத்துவிதமான பாபங்களையும் உருத்தெரியாமல் அழிக்கிறது

**வ்யாக்யானம்** – “ஏற்றரும் வைகுந்தத்தையருளும் நமக்கு” என்று ஸ்வயத்நத்தால் ப்ராபிக்கவரிதான பரமபதத்தை அவன் கொடுக்குமாபோலே, இதுவும், “வானின் மீதேற்றியருள் செய்து” என்று பரமபத ப்ராப்தியைப் பண்ணுவிக்குமென்றும்; “தன் தாளின்கீழ்ச் சேர்த்து” என்கிறபடியே அவன் பாதோபதாநம் போலே திருவடிகளின் கீழே சேர்த்துக் கொள்ளுமாபோலே, இதுவும், “அருளி யடிக்கீழிருத்தும்” என்று அவன் திருவடிகளின் கீழே சேர்த்து வைக்குமென்றும்,

**விளக்கம்** - (ஏற்றரும்) - திருவாய்மொழி (7-6-10) - ஏற்றரும் வைகுந்தத்தையருளும் நமக்கு – என்பதற்கு ஏற்ப நாம் நம்முடைய முயற்சியால் அடைய இயலாத பரமபதத்தை அவன் நமக்கு அளிக்கிறன்; இதே போன்று இந்தத் திருவாய்மொழியும், (வானின்) – திருவாய்மொழி (8-4-11) - வானின் மீதேற்றியருள் செய்து – என்பதற்கு ஏற்ப பரமபதத்தை அடையும்படிச் செய்கிறது. (தாளின் கீழ்) - திருவாய்மொழி (7-5-10) - தன் தாளின்கீழ்ச் சேர்த்து – என்பதற்கு ஏற்ப அவன் தன்னுடைய திருவடிக்கு ஏற்றதொரு அணை போன்று நம்மைத் தனது திருவடிகளின் கீழே சேர்ந்துக் கொள்கிறான். இதே போன்று இந்தத் திருவாய்மொழியும், (அடிக்கீழ்) - திருவாய்மொழி (8-8-11) – அருளி யடிக்கீழிருத்தும் - என்பதற்கு ஏற்ப அவனுடைய திருவடிகளில் சேர்க்கிறது.

**வ்யாக்யானம்** – “இன்பக்கதி செய்யும்” என்கிறபடியே அவன் தன்னோ டந்வயித்தார்க்குத் தன்னுடைய அநுபவமாகிற நிரதிசயாநந்த யுக்தமான ப்ராப்யத்தைக் கொடுக்குமாபோலே, இதுவும், “எங்ஙனே சொல்லிலுமின்பம் பயக்கும்” என்று ஸ்வாந்வித சேதநர்க்கு பகவதநுபவாநந்தத்தை யுண்டாக்குமென்றும்; “ஊடு புக்கெனது ஆவியை யுருக்கி யுண்டிடுகின்ற நின்றன்னை” என்கிறபடியே அவன் தன்னை அநுபவிக்கவிழிந்தாரை த்ரவ த்ரவ்யமாம்படி யுருக்குமாபோலே, இதுவும், “ஒன்பதோ டொன்றுக்கு மூவுலகுமுருகும்”

 Email:sridharan_book@yahoo.co.in

என்றும், “ஊற்றின்கண் நுண் மணல் போலுருகா நிற்பர் நீராய்” என்றும் சொல்லுகிறபடியே தன்னை யநுபவிக்கவிழிந்தாரை த்ரவ தரவ்யமாக்கு மென்றும்;

**விளக்கம்** - (இன்பக்கதி) - திருவாய்மொழி (7-5-11) - இன்பக்கதி செய்யும் - என்பதற்கு ஏற்ப, அவன் தன்னை அடைந்தவர்களுக்குத் தன்னுடைய அனுபவமாக உள்ள எல்லையற்ற ஆனந்தத்துடன் சேர்ந்த பேற்றினை அளிக்கிறான். இது போன்றே இந்தத் திருவாய் மொழியும், (இன்பம் பயக்கும்) - திருவாய்மொழி (7-9-11) - எங்ஙனே சொல்லிலுமின்பம் பயக்கும் – என்பதற்கு எற்ப, தன்னைக் கற்கின்றவர்களுக்கு பகவத் அனுபவம் என்ற எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கிறது. (ஊடு புக்கு) - திருவாய்மொழி (5-10-10) - ஊடு புக்கென தாவியை யுருக்கி யுண்டிடுகின்ற நின்றன்னை – என்பதற்கு ஏற்ப அவன், தன்னை அனுபவிக்கவேண்டும் என்று ஈடுபட்டபடி உள்ளவர்களை நீர்ப்பண்டம் போன்று மாற்றுகிறான். இது போன்றே இந்தத் திருவாய்மொழியும், (மூவுலகும் உருகா நிற்பர்) - திருவாய்மொழி (9-5-11) – ஒன்பதோ டொன்றுக்கு மூவுலகுமுருகும் - என்றும், திருவாய்மொழி (6-8-11) - ஊற்றின்கண் நுண் மணல் போலுருகா நிற்பர் நீராய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னை அனுபவிப்பவர்களை நீர்ப்பண்டமாக உருக்குகிறது.

**வ்யாக்யானம்** - இப்படி அவனோடு ஸாம்யமுடைத்தாகையாலே வாச்யனான ஸர்வேச்வரனுடைய “பத்தினாய தோற்றம்” என்கிற பத்தவதாரம் போலே, “தோற்றங்களாயிரம்” என்கிற விதினுடைய பத்துப் பத்தான ஆவிர்ப்பாவமென்கை. இத்தால் வாச்யனான ஈச்வரனோடு பலபடியாலும் ஸாம்யத்தையுடைத்தாகையாலே, அவன்தான் லோக ரக்ஷணார்த்தமாகப் பத்தவதாரமா யவதரித்தாப்போலே இதுவும் லோகரக்ஷணார்த்தமாக பத்துப்பத்தாக அவதரித்த தென்றதாய்த்து.

**விளக்கம்** – (என்னும் ஸாம்யத்தாலே) – இப்படியாகக் கூறப்படுகின்ற ஒப்புமைகள் காரணமாக, (வாச்யன் பத்தினாய தோற்றம் போலே) – திருச்சந்தவிருத்தம் (79) - பத்தினாய தோற்றம் – என்பதான அவனுடைய பத்து அவதாரங்கள் போன்று, (தோற்றங்கள் ஆயிரத்தின் பத்துப் பத்தான இதின் ஆவிர்ப்பாவம்) - திருவாய்மொழி (6-8-11) - தோற்றங்கள் – என்பதற்கு ஏற்ப இதன் பத்துப்பத்தாக உள்ள தோற்றம் உள்ளது. ஆகவே இதன் மூலம் கூறப்படுவதான ஸர்வேச்வரனுடன் பலவிதங்களிலும் ஒப்புமை

உடையதாக திருவாய்மொழி உள்ளதால், அவன் இந்த லோகத்தைக் காப்பதற்காகப் பத்து அவதாரங்கள் எடுத்தது போன்று, இந்தத் திருவாய்மொழியும் லோகத்தைக் காப்பாற்றுவதற்காக பத்துப் பத்தாக அவதரித்தது என்று கருத்து.

215. ஐந்தினோடு ஒன்பதோடு ஒருபத்தென்னுமவைபோலே நூறே சொன்ன பத்து நூறு ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்.

**அவதாரிகை** - இனி இப்பத்துக்களையும், இவற்றின் ஸமுதாயமான ப்ரபந்தத்தையும் ஆழ்வார் ச்லாகித்துப் பேசின பாசுரங்களில் ஸாபிப்ராயதையை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச் செய்கிறார் (ஐந்தினோடு) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து இந்த பத்துக்கள் மற்றும் இந்தப் பத்துக்களின் கூட்டமாக உள்ளதான இந்த ப்ரபந்தம் ஆகியவற்றை நம்மாழ்வார் சிறப்பித்து உரைத்த பாசுரங்களில் வெளிப்படுகின்ற அவருடைய திருவுள்ளத்தை, உதாரணத்துடன் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, முன்னிலைந்து பாட்டுக்கொரு கருத்தும், பின்னிலைந்து பாட்டுக்கொரு கருத்துமாகையாலே, "ஐந்தி னோடைந்தும் வல்லார்" என்றும், ஒன்பது பாட்டுக்கொரு கருத்தும் ஒரு பாட்டுக்கொரு கருத்துமாகையாலே "ஒன்பதோ டொன்றுக்கும்" என்றும், பத்துப்பாட்டுக்கும் சேரவொரு கருத்தாகையாலே "பாடலோராயிரத்துள் இவையுமொரு பத்து" என்றுஞ் சொன்னவைபோலே, "நூறே சொன்ன வோராயிரம்" என்று கிழிகிழியாகக் கொடுப்பாரைப் போலே நூறு நூறாகச் சொன்ன ஆயிரமென்றும், "பத்து நூற்றுளிப்பத்து" என்று பத்து நூறென்றும் இப்படிப் பத்துக்களைப் பிரித்துச் சொன்னதும், "தெரியச் சொன்ன வோராயிரம்", "மிக்கவோராயிரம்", "அவாவிலந்தாதிகளா லிவையாயிரமும்" என்று ஆயிரத்தையும் சேரச் சொன்னதும், பத்துக்கள் தோறும் வெவ்வேறு கருத்தாயும், ஆயிரத்துக்கும் சேர ஒரு கருத்தாயுமிருக்கும்படியை நினைத்தாகையாலே ஸாபிப்ராயமென்கை.

**விளக்கம்** – (ஐந்தினோடு என்னுமது போலே) ஒவ்வொரு திருவாய்மொழியிலும் உள்ள முதல் ஐந்து பாசுரங்களுக்கு ஒரு கருத்தும், பின்னர் உள்ள ஐந்து பாசுரங்களுக்கு ஒரு கருத்தும் உள்ளதால், திருவாய்மொழி (10-2-11) – ஐந்தினோடு ஐந்தும் வல்லார் - என்பது

போன்றும். (ஒன்பதோடு என்னுமது போலே) - ஒன்பது பாசுரங்களுக்கு ஒரு கருத்தும், ஒரு பாசுரத்திற்கு ஒரு கருத்தும் உள்ளதால், திருவாய்மொழி (9-5-11) – ஒன்பதோடு ஒன்றுக்கும் - என்பது போன்று. (ஒரு பத்து என்னுமது போலே) - பத்துப் பாசுரங்களுக்கும் ஒரே கருத்து என்பதால், திருவாய்மொழி (3-4-11) - பாடலோராயிரத்துள் இவையுமொரு பத்து - என்பது போன்றும். (நூறே சொன்ன என்றதும்) - திருவாய்மொழி (9-4-11) - நூறே சொன்ன ஓராயிரம் – என்று கிழிகிழியாக அளிப்பவர்கள் போன்று, நூறு நூறாக உரைக்கப்பட்ட ஆயிரம் என்றும், (பத்து நூறு என்றதும்) – திருவாய்மொழி (6-7-11) - பத்து நூற்றுள் இப்பத்து – என்று பத்து நூறு என்றும் இப்படியாகப் பத்துக்களைப் பிரித்து உரைத்ததும். (ஓராயிரம் என்றதும்) - திருவாய்மொழி (6-9-11) - தெரியச் சொன்ன ஓராயிரம் – என்றும், திருவாய்மொழி (7-6-11) - மிக்க ஓராயிரம் - என்றும், திருவாய்மொழி (10-10-11) – அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும் - என்றும் உள்ளது போன்று ஆயிரத்தையும் சேர்த்து ஒன்றாக உரைத்ததும். (ஸாபிப்ராயம்) - ஒவ்வொரு பத்துக்களிலும் வெவ்வேறு கருத்தாகவும், ஆயிரமும் சேர்த்து ஒரு உள்ளது என்று சிந்தித்து உரைத்தார்.

216. பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும் போலே நூற்றுக்கு உபதேசப்பத்து.

**அவதாரிகை** - இனி பத்துக்கள் தோறும் உபதேசபரமான ஒரொரு திருவாய்மொழி ப்ரதாநமாய், அவ்வோ பத்துக்களுக்கு அவ்வோ திருவாய்மொழியிலே நோக்காயிருக்கும்படியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (பாட்டுக்கு க்ரியையும்) இத்யாதி.

**விளக்கம்** - அடுத்து ஒவ்வொரு பத்துக்களிலும் உபதேசிக்கும்விதமாக உள்ள ஒவ்வொரு பாசுரம் முக்கியமானதாகவும், அந்தந்த பத்துக்களில் கூறப்பட்ட விஷயமே அந்த ஒரு பாசுரத்தின் நோக்கமாகவும் இருக்கும் என்பதை உதாரணத்துடன் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பாட்டானால் க்ரியையோடே தலைக்கட்ட வேண்டுமாகையாலே பாட்டுக்கள்தோறும் க்ரியாபதம் ப்ரதாநமாயிருக்குமாப் போலவும், ஒரொரு திருவாய்மொழிக்கு பரத்வம், பஜநீயதை, ஸௌலப்யம், அபராத ஸஹத்வம் என்றாப்போலே தனித்தனியே கருத்துக்களாகையாலே பத்துப்பாட்டுக்குக் கருத்தான


**Email:**sridharan_book@yahoo.co.in

நிதாநம் சொல்லும் பாட்டு ப்ரதானமாயிருக்குமாப் போலவும், நூறு பாட்டுக்கு பரோபதேசபரமான பத்துப் பாட்டு ப்ரதாநமாயிருக்குமென்கை.

**விளக்கம் -** (பாட்டுக்கு க்ரியை போலே) - ஒரு பாசுரம் என்றால் ஒரு குறிப்பிட்ட பயனிலையுடன் முடியவேண்டும் என்பதால், ஒவ்வொரு பாசுரத்திலும் பயனிலையை உணர்த்தும் சொல்லானது முக்கியமானதாக உள்ளவிதமாகவும். (பத்துக்குக் கருத்து போலே) - ஒவ்வொரு திருவாய்மொழியிலும் அவனுடைய உயர்ந்த தன்மை, அனைவராலும் போற்றப்படும் தன்மை, எளியவனாகவும் உள்ள தன்மை, குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை என்பது போன்ற தனித்தனிக் கருத்துக்கள் பொதிந்துள்ளது என்பதால், அந்தந்த திருவாய்மொழியில் உள்ள பத்துப் பாசுரங்களுக்கு உள்ள மையக் கருத்தை உரைக்கும் பாசுரம் முக்கியமாக இருக்கும் விதமாகவும். (நூற்றுக்கு உபதேசப் பத்து) - நூறு திருப்பாசுரங்களில் உள்ளவற்றை மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் விதத்தில் உள்ளதான பத்துப் பாசுரங்கள் மிகவும் முக்கியமாக இருக்கும் என்று கருத்து.

**வ்யாக்யானம் -** இத்தால் பாட்டுக்களுக்கு க்ரியையிலும், பத்துப் பாட்டுக்கு நிதாநம் சொல்லும் பாட்டிலும் தாத்பர்யமாயிருக்குமோபாதி, நூறு பாட்டுக்கும் பரோபதேசமான பத்துப்பாட்டிலே தாத்பர்யமாயிருக்கு மென்றதாய்த்து. "பிணங்கி யமரர் பிதற்றும்" என்கிறபடியே பேரளவுடையரான நித்யஸூரிகள் ஸ்வஸ்வாநுபூத குண தாரதம்யங்களைச் சொல்லி, ஸரஸ விவாத கோலாஹலம் பண்ணும்படியிருக்கிற அவனுடைய பரத்வ ஸௌலப்ய ப்ரயுக்தமான குண விசேஷங்களைத் தனித்துத் தம்மால் புஜித்துத் தலைக்கட்ட வொண்ணாமையாலே, "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ" என்று கூட்டரான ரஸஜ்ஞரைத் தேடினவளவில் கிடையாதபடி தூரஸ்த்தராக, ஸந்நிஹிதரான ஸம்ஸாரிகளுடைய அநாத்மகுணம் பாராதே, பகவத் குணங்களிலே மூட்டித் திருத்திக் கூட்டிக் கொள்கை தேட்டமாய் உபதேசத்திலே ஒருப்படுகையாலே அதிலே நோக்காக வேணுமிறே.

**விளக்கம் -** ஆகவே இதன் மூலம், பாசுரங்களுக்குப் பயனிலையும், பத்துப் பாசுரங்களுக்கு மையக்கருத்தும் உரைக்கின்ற பாசுரத்திலும் கருத்தாக உள்ளது போன்று, நூறு பாசுரங்களில் உள்ளவற்றை மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் பத்துப்பாசுரங்களில்

கருத்தாக இருக்கும் என்று கருத்து. திருவாய்மொழி (1-6-4) – பிணங்கி அமரர் பிதற்றும் - என்பதற்கு ஏற்ப, எண்ணற்றவர்களாகிய நித்யஸூரிகள், தாங்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்கின்ற குணங்களுடைய ஏற்றத்தாழ்வுகளை உரைத்து, "இதுவே சிறந்தது, இதுவே சிறந்தது" என்று விவாதம் செய்யலாம்படி உள்ளதான அவனுடைய அனைத்திலும் உயர்ந்த தன்மை மற்றும் எளிமை போன்றவற்றுடன் கூடியுள்ளதான குண விஷயங்களை, தனித்து நின்ற தன்னால் அனுபவித்து முடிக்க இயலாமல் உள்ளதால், திருவாய்மொழி (2-3-10) – அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ - என்பதற்கு ஏற்ப, தன்னுடைய கூட்டத்தைத் சேர்ந்தவர்களாகிய தன்னைப் போன்று உள்ளவர்களைத் தேடியபடி இருந்தார். ஆனால் அப்படிப்பட்டவர்களைத் தேடியபோது அவர்கள் கிடைக்காமல் தூரத்தில் இருந்தவர்கள் என்பதால், தனக்கு அருகில் உள்ளவர்களாகிய இந்த உலக மக்களின் தாழ்மையை ஆராயாமல், அவர்களைப் பகவத் குணங்களில் ஈடுபடுத்தி திருத்துவதற்காக உபதேசத்தில் நிற்பதால், உபதேசப்பத்து என்பது முக்கியமானதாகிறது.

## 217. பகவத் பக்த பரங்கள் ஆச்ரயண விதி சேஷங்கள்.

**அவதாரிகை** - இவற்றில் பகவத் பக்த பரங்களாய் வருமவற்றுக்குத் தாத்பர்ய மேதென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (பகவத் பக்த பரங்கள்) இத்யாதி.

**விளக்கம்** - திருவாய்மொழியில் பகவானுடைய பக்தர்களாக உள்ளவர்கள் குறித்துள்ள பாசுரங்களின் கருத்து என்ன என்பதற்கு விடை அருளிசெய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "பயிலுஞ் சுடரொளி" முதலான பாகவத பரங்களான திருவாய்மொழிகள், "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க காமோ யஜேத" என்கிற விதிக்கு ப்ரயாஜாதி விதிகள் சேஷமாய். அவற்றினுடைய அநுஷ்டாநத்தோடே அது பல பர்யந்தமாய்த் தலைக்கட்டுமாபோலே, "திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித் துய்ம்மினோ", " நலமந்தமில்லதோர் நாடு புகுவீர் பலமுந்து சீரில் படிமினோவாதே" என்று விதிக்கிற பகவதாச்ரயணம் பாகவதாச்ரயணத்தோ டொழியத் தலைக்கட்டாமையாலே, பகவதாச்ரயண விதிக்கு சேஷங்களென்கை. அதவா, பரோபதேசபரமானவிதில், பகவத் குணங்களையும் ஜீவகுணங்களையும் ப்ரதிபாதிக்கிறவற்றுக்கு விநியோகமேதென்ன

வருளிச்செய்கிறார் “பகவத் பக்த பரங்கள்” இத்யாதி. அதாவது, பகவத் பரங்களாயும், தத் பக்தரான ஜீவபரங்களாயும் அவ்வவகுணங்களை ப்ரதிபாதிக்கிறவை, ஆச்ரயண விஷயத்தையும் ஆச்ரயண கர்த்தாவையும் சொல்லுகிறதாகையாலே, ஆச்ரயண விதிக்கு சேஷங்களித்தனை யென்கை.

**விளக்கம்** – (பகவத் பக்த பரங்கள்) – திருவாய்மொழி (3-7-1) - பயிலும் சுடரொளி – என்பது போன்றதான பாகவதர்கள் குறித்து உரைக்கின்ற திருவாய்மொழிகள், ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க காமோ யஜேத - ஸ்வர்கத்தை விரும்பும் ஒருவன் ஜ்யோதிஷ்டோமம் என்ற யஜ்ஞத்தைச் செய்வானாக - என்று கூறப்படும் விதிக்கு, ப்ரயாஜம் முதலான யாகங்கள் குறித்து உரைக்கின்ற விதிகள் அங்கங்களாகவும், அவற்றை இயற்றுவதன் மூலம் பலனை அளிக்கிறது என்பதாகவும் உள்ளது போன்று, (ஆச்ரயண விதி சேஷங்கள்) – திருவாய்மொழி (4-1-1) - திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித் துய்ம்மினோ – என்றும், திருவாய்மொழி (2-8-4) - நலமந்தமில்லதோர் நாடு புகுவீர் பலமுந்து சீரில் படிமினோவாதே - என்றும் விதிக்கப்படுவதற்கு ஏற்ப, பகவானை அண்டுதல் என்பது, பாகவதர்களைச் சென்றடைதல் என்பதான விதிக்கு உட்படாதவரை நிறைவேறாது என்பதால், பகவானை அண்டுவதற்கு அங்கங்களாக உள்ளன. அல்லது, மற்றவர்களுக்கு ஏற்ற உபதேசங்களைச் செய்வதாகிய இந்தத் திருவாய்மொழியில், பகவத் குணங்கள் மற்றும் ஜீவாத்மாவின் குணங்கள் குறித்து உரைக்கின்ற திருவாய்மொழிகள், அடையப்படும் பொருளாகிய ஸர்வேச்வரன் மற்றும் அடையும் பொருள்களாகிய ஜீவாத்மா குறித்து உரைப்பதால், “அடையவேண்டும்” என்பதான விதிமுறைக்கு அங்கங்களாக உள்ளன என்று கருத்து.

218. பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்யகாமத்வ ஆபத்ஸகத்வ ஆர்த்திஹரத்வ விசிஷ்டன் மயர்வையறுக்க, தத்வ வேதந மறப்பற்று ஜ்ஞப்தி பல முக்தி தலை சேர நிஷ்கர்ஷித்து, மோக்ஷ பல வ்ருத்தி செய்ய அர்த்தித்து, புருஷார்த்த பலாந்யருசியொழிந்து, விரக்தி பலராகம் கழியமிக்கு, ப்ரேமபலோபாயத்தே புகுந்து, ஸாதந பலோபகாரக் கைம்மாறின்றி க்ருதஜ்ஞதா பல ப்ரதி க்ருதமானத்தை யுணர்ந்து, ஆத்மதர்சந பலப்ராப்தி மரணாவதியாகப் பெற்று, காலாஸத்தி பல கதிக்குத் துணை கூட்டின தம் பேற்றைப் பிறரறியப் பத்துத்தோறும் வெளியிடுகிறார்.

 Email:sridharan_book@yahoo.co.in

**வ்யாக்யானம் -** இப்படி பத்துத்தோறுமுள்ள வர்த்தங்களைப் பரோபதேசத்துக் குறுப்பாக ஒருங்கவிட்டு விஸ்தரேண மேல் யோஜிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, பரத்வாதி குண விசிஷ்டனான ஸர்வேச்வரன், தமக்குப் பிறப்பித்த தசா விசேஷங்களைப் பத்துத்தோறும் வெளியிடுகிறாரென்று ஸங்க்ரஹேண வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (பரத்வ) இத்யாதி சூர்ணையாலே.

**விளக்கம்** - இப்படியாக ஒவ்வொரு பத்திலும் காணப்படுகின்ற ஆழ்பொருளை மற்றவர்களுக்குச் செய்யப்படும் உபதேசமாகக் கொண்டு உரைத்து, இதனை மேலும் விரிவாக எடுத்துரைக்க திருவுள்ளம் கொண்டு, பரத்வம் முதலான குணங்களுடன் கூடியுள்ள ஸர்வேச்வரன், தனக்கு ஏற்படுத்திய நிலை வேறுபாடுகளை, ஒவ்வொரு பத்திலும் வெளியிடுகிறார் என்று சுருக்கமாக உரைக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது ஸர்வஸ்மாத் பரனாய், அந்த பரத்வம் ப்ரகாசகமாம்படி ஸர்வகாரண பூதனாய், லோகத்தில் கார்யகாரணங்கள் போலன்றிக்கே உபாதானக் காரணமும் தானேயாகையாலே கார்ய பூத ஸமஸ்த வஸ்துக்களுக்கும் வ்யாபகனாய், அந்த வ்யாப்திதான் ஆகாச வ்யாப்தி போலன்றிக்கே அந்தராத்மதயாவாகையாலே ஸர்வநியந்தாவாய், அந்த பரத்வாதிகளைக் கண்டு வெருவ வேண்டாதபடி பரமகாருணிகனாய், இப்படி க்ருபாவானாகையாலே ஸர்வசரண்யனாய், சரண்ய க்ருத்யமான அநிஷ்ட நிவ்ருத்தீஷ்ட ப்ராப்தி கரணத்துக் கீடாம்படி ஸர்வசக்தி யுக்தனாய், அந்த சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதிகளையுடையனாகையாலே ஸத்ய காமனாய், அந்த போகங்களில் அந்யபரனாயிருந்துவிடாதே ப்ரளயாத் யாபத்துக்களிலே யுதவி லீலாவிபூதியை ரக்ஷிக்கையாலே ஆபத்ஸகனாய், இப்படி ஆபத்ஸகனாகையாலே ஸம்ஸாரதா பார்த்தரான ஆச்ரிதர்க்கு ஆர்த்திஹரனாய், இப்படி பத்துப் பத்தாலும் ப்ரதிபாதிதமான பத்து குணத்தோடும் கூடியிருக்கிற ஸர்வேச்வரன், "மயர்வற மதிநலமருளினன்" என்கிறபடியே பக்திரூபாபந்ந ஜ்ஞாந ப்ரதாந் முகேந அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப் போக்க.

விளக்கம் - (பரத்வம்) - அனைத்து ஆத்மாக்களிலும் உயர்ந்தவன். (காரணத்வம்) - தனது மேன்மைத்தன்மை வெளிப்படும்விதத்தில் அனைத்திற்கும் காரணமாக இருத்தல். (வ்யாபகத்வம்) – இந்த லோகத்தில் உள்ள "உண்டான பொருள், உண்டாக்கும் பொருள்"

என்பவை போன்று அல்லாமல், அனைத்திற்கும் மூலகாரணப் பொருளாக தானே உள்ளதால், உண்டான பொருள்கள் அனைத்திலும் நிறைந்து நிற்கும் தன்மை. (நியந்த்ருத்வம்) - இவ்விதம் நிறைந்திருத்தல் என்பது ஆகாசம் போன்று அல்லாமல், அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ள நிலை என்பதால், அனைத்தையும் நியமித்தபடி இருக்கும் தன்மை. (காருணிகத்வம்) - இப்படியாக உள்ள, "மேலானவனாக இருத்தல்" முதலான தன்மைகள் காரணமாகக் கர்வம் கொள்ளாமல், மிகுந்த கருணையுடன் உள்ள தன்மை. (சரண்யத்வம்) - இவ்விதம் கருணையுடன் கூடியவன் என்பதால், அனைத்தாலும் அடைக்கலம் என்று அடையத்தகவனாக உள்ள தன்மை. (சக்தித்வம்) - அனைத்திற்கும் அடைக்கலம் அளித்து, அவற்றுக்கு விருப்பமானவற்றை கொடுத்து, விருப்பம் அல்லாதவற்றை விலக்குவதற்குத் தேவைப்படுகின்ற எல்லையற்ற சக்தி கொண்ட தன்மை. (ஸத்யகாமத்வம்) - அப்படிப்பட்ட சக்தியின் மூலமாக "எப்போதும் இருப்பவர்கள்" என்றுள்ள பிராட்டிமார்கள், நித்யஸூரிகள் போன்றவர்களைக் கொண்டவனாக இருப்பதால், தனது விருப்பங்கள் நிறைவேறப்பெற்ற தன்மை. (ஆபத்ஸகத்வம்) - எப்போதும் இத்தகைய இனிமையில் மூழ்கியபடி இருந்து விடாமல், ப்ரளயம் முதலான ஆபத்து காலங்களில் தகுந்த உதவிகள் செய்து இந்தப் பூமியைக் காப்பதால், ஆபத்து காலத்தில் உதவும் தன்மை. (ஆர்த்தி ஹரத்வம்) - இப்படியாக ஆபத்தான துன்பத்தில் சிக்கித் தவிக்கும் தனது அடியவர்களுக்கு இந்த துன்பத்தைப் போக்கும் தன்மை. (விசிஷ்டன்) – இவ்விதமாகப் பத்து பத்துக்களாலும் கூறப்படுகின்ற பத்து குணங்களுடன் கூடிய ஸர்வேச்வரன், (மயர்வை அறுக்க) – திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநலம் அருளினன் – என்பதற்கு ஏற்ப, பக்தி ரூபத்தை அடைந்த ஞானத்தை அளிப்பதன் மூலமாக அஜ்ஞானத்தை அதன் வாசனையுடன் நீக்க.

**வ்யாக்யானம் -** அத்தாலே தத் விஷய ஜ்ஞாநமாகிற தத்வ வேதநத்தில், "மறப்பனோவினி யானென்மணியை" என்கிறபடியே விஸ்ம்ருதியற்று, அந்த ஜ்ஞாந பலமான மோக்ஷத்தை "நின் செம்மாபாதபற்புத் தலை சேர்த்து" என்று ஸ்வரூபாநுரூபமாக நிஷ்கர்ஷித்து, அந்த மோக்ஷத்துக்கு பலமான கைங்கர்யரூப வ்ருத்தியை "வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்" என்று அர்த்தித்து, அந்த புருஷார்த்தத்துக்கு பலம் அந்யருசி நிவ்ருத்தியாகையாலே தத்பலமாக "ஐங்கருவி கண்டவின்பம் - சிற்றின்பம் – ஒழிந்தேன்" என்று அந்ய புருஷார்த்தங்களில் ருசியைத் தவிர்ந்து, அந்த இதர விஷய விரக்திக்கு பலமான பகவத் விஷயராகம் "கழிய மிக்கதோர் காதல்" என்னும்படி அதிசயித்து.

**விளக்கம்** – (தத்வ வேதந மறப்பு அற்று) - இந்தக் காரணத்தால் அவனைக் குறித்த ஞானம் என்னும் உண்மையான ஞானத்தைக் குறித்து, திருவாய்மொழி (1-10-10) – மறப்பனோ இனி யான் என் மணியை – என்பதற்கு ஏற்ப மறதி என்பது இன்றி. (ஜ்ஞப்தி பலமுக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து) - அத்தகைய ஞானத்தைப் பலனாகக் கொண்டுள்ள மோக்ஷத்தை, திருவாய்மொழி (2-9-1) – நின் செம்மாபாதபற்புத் தலை சேர்த்து – என்பதற்கு ஏற்ப ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக உறுதியாக உரைத்து. (மோக்ஷ பல வ்ருத்தி செய்ய அர்த்தித்து) - அத்தகைய மோக்ஷத்தின் பலனாக உள்ள கைங்கர்யத்தை திருவாய்மொழி (3-3-1) – வழுவிலா அடிமை செய்யவேண்டு நாம் - என்பதற்கு ஏற்ப விரும்பி நின்று. (புருஷார்த்த பல அந்ய ருசி ஒழித்து) - அத்தகைய கைங்கர்யம் என்ற புருஷார்த்தத்தின் பலன் என்பது, மற்ற விஷயங்களில் உள்ள ருசியானது நீங்குதல் என்பதால், கைங்கர்யத்தின் பலனாக, திருவாய்மொழி (4-9-10) - ஐங்கருவி கண்டவின்பம் சிற்றின்பம் ஒழிந்தேன் - என்பதற்கு ஏற்ப மற்ற புருஷார்த்தங்களில் உள்ள ஆசையை விலக்கி. (விரக்தி பல ராகம் கழியமிக்கு) - இவ்விதம் மற்ற விஷயங்களில் உள்ள ருசி கழிவதன் மூலம் கிட்டும் பலனாக உள்ள பகவானிடம் கொள்ளும் பக்தியானது, திருவாய்மொழி (5-5-10) - கழிய மிக்கதோர் காதல் - என்பதற்கு ஏற்ப மிகுதியாகி.

**வ்யாக்யானம்** - அந்த நிரதிசய ப்ரேம பலமான விளம்பாக்ஷமத்வத்தால் வந்த த்வரையாலே, "அலர்மேல்மங்கை யுறைமார்பா உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று உபாயவரணம் பண்ணி, அந்த ஸாதந பலமான உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக "உதவிக் கைம்மாறென்னுயிர்" என்று ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணத் தேடி, அவ்வாத்ம வஸ்து, ததீயமென்றறிகையாலே "அதுவுமற்றாங்கவன்றன்னது எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே" என்று ப்ரத்யுபகாரம் காணாமல் தடுமாறி, அந்த க்ருதஜ்ஞதைக்கு பலமான ப்ரத்யுபகாரமாக "தோள்களையாரத் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன்" என்று ப்ரீதியாலே கலங்கி ஸமர்ப்பித்த ஆத்மவஸ்துவை, "நின்ற வொன்றை யுணர்ந்தேன்" என்று தேஹாதிகளில் விலக்ஷணமாய் அவனுக்கு ப்ரகாரதயா சேஷமாய்க் கொண்டு அநந்யார்ஹமாயிருக்கு மென்றறிந்து, ஆத்ம தர்சந பலமான பகவத் ப்ராப்தியை "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்" என்கிறபடியே சரீராவஸாநத்திலே பண்ணித் தருகிறோமென்று அவன் நாளிட்டுக் கொடுக்கப் பெற்று, இப்படி ப்ராப்தி காலமணித்தானதுக்கு பலம் அர்ச்சிராதி மார்க்கத்தாலே தேச விசேஷத்தேறப்


Email:sridharan_book@yahoo.co.in

போவதாகையாலே, அவ்வர்ச்சிராதி கதிக்கு "காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதி" என்றும், "ஆத்தன் தாமரையடியன்றி மற்றிலமரணே" என்றும் பரமாப்தனானவன் தன்னையே துணையாகக் கூட்டின தம்முடைய பேற்றைப் பிறரறிந்து வாழும்படி முதல் பத்தே தொடங்கிப் பத்துப்பத்தாலும் ப்ரகாசிப்பித்தருளுகிறா ரென்றபடி. இத்தால் பரத்வாதி குண விசிஷ்டனான வீச்வரன் தமக்குப் பண்ணிக் கொடுத்த பேறுகளைப் பலருமறிந்து வாழவேணுமென்று பத்துப் பத்தாலும் ப்ரகாசிப்பிக்கிறாரென்று பத்து நிகமநத்துக்கு வாக்யார்த்தம் சொல்லப்பட்டதாய்த்து.

**விளக்கம்** – (ப்ரேம பல உபாயத்தே புகுந்து) - அத்தகைய எல்லையற்ற பக்தியின் பலனாக அவனை அடையும் காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத காரணத்தால் வந்த பதற்றத்தின் விளைவாக திருவாய்மொழி (6-10-10) - அலர்மேல்மங்கை யுறைமார்பா உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன் – என்று உபாயத்தைப் பற்றி நின்று. (ஸாதந பல உபகாரக் கைம்மாறு) – அந்த உபாயத்தின் பலனாக, உபகாரத்திற்கு ப்ரதி உபகாரமாக, திருவாய்மொழி (7-9-10) – உதவிக் கைம்மாறு என்னுயிர் - என்பதற்கு ஏற்ப ஆத்மாவை அவனிடம் சமர்ப்பணம் செய்வதற்காக முனைந்து தேடி, அப்போது அத்தகைய ஆத்மவஸ்துவும் அவனுக்கே உடைமையானது என்று அறிவதால், திருவாய்மொழி (7-9-10) – அதுவுமற்றாங்கு அவன்றன்னது எதுவும் ஒன்றுமில்லை செய்வதிங்குமங்கே - என்பதற்கு ஏற்ப ப்ரதி உபகாரம் செய்வதற்கான எதனையும் காண இயலாமல் தடுமாறியபடி. (க்ருத்ஜ்ஞதா பல ப்ரதி க்ருதமானத்தை உணர்ந்து) - அத்தகைய செய்ந்நன்றி அறிதல் என்பதற்குப் பலனாக உள்ள ப்ரதி உபகாரமாக திருவாய்மொழி (8-1-10) - தோள்களையாரத் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன் - என்பதற்கு ஏற்ப ப்ரீதியால் கலக்கம் அடைந்து சமர்ப்பணம் செய்த ஆத்மவஸ்துவை, திருவாய்மொழி ( 8-8-4) - நின்ற வொன்றை யுணர்ந்தேன் – என்பதற்கு ஏற்ப சரீரம் போன்றவற்றைக் காட்டிலும் வேறுபட்டது என்றும், அந்த ஆத்மா அவனுக்குச் சரீரமாக உள்ளதால் அவனுடைய அங்கமாக இருப்பதன் விளைவாக, வேறு யாருக்கும் அல்லாமல் அவனுக்கு மட்டுமே உரியதாக உள்ளது என்றும் அறிந்து. (ஆத்ம தர்சந பல ப்ராப்தி மரண அவதியாகப் பெற்று) – இவ்விதம் ஆத்மாவைக் குறித்து அறிந்து கொண்டதன் பலனாக உள்ள "பகவானை அடைதல்" என்பதை, திருவாய்மொழி (9-10-5) - மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் – என்பதற்கு ஏற்ப "சரீரம் முடியும்போது நாம் அளிப்போம்" என்று அவனால் தகுந்த நாள் குறித்துக் கொடுக்கப் பெற்று. (கால ஆஸத்தி பல கதிக்குத் துணை கூட்டின


**Email:**sridharan_book@yahoo.co.in

தன் பேற்றை) - இப்படியாக அவனை அடைவதற்கான காலம் நெருக்கி வருவதற்குப் பலனாக உள்ள அர்ச்சிராதி மார்க்கம் மூலம் பரமபதம் செல்வதால், அத்தகைய அர்ச்சிராதி மார்க்கத்திற்கு, திருவாய்மொழி (10-1-1) - காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதி – என்றும், திருவாய்மொழி (10-1-6) – ஆத்தன் தாமரையடியன்றி மற்றிலமரணே – என்றும் கூறுவதற்கு ஏற்ப, மிகுந்த நம்பிக்கையான ஒருவனையே துணையாகக் கொண்டு நின்று தனது பேற்றினை, (பிறர் அறியப் பத்துதோறும் வெளியிடுகிறார்) - மற்றவர்கள் அறிந்து கொண்டு, அதனைப் பின்பற்றி வாழ்வதற்காக, முதல் பத்து தொடங்கி, பத்து பத்துக்களாலும் விரிவாக அருளிச்செய்தார். இதன் மூலம், பரத்வம் போன்ற குணங்களுடன் கூடியுள்ள ஈச்வரன், தமக்குச் செய்தருளிய பேறுகள் அனைத்தையும், அனைவரும் அறிந்து கொண்டு, அதே போன்று அவர்களும் வாழவேண்டும் என்று பத்துப் பத்துக்களாலும் வெளிப்படுத்துகிறார் என்று பத்துப்பத்துக்களில் உள்ளவற்றுக்கு விளக்கம் கூறப்பட்டது.

ஆசார்யம் ஹ்ருதயம் மூன்றாம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்

ஸ்வாமி அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்


Email:sridharan_book@yahoo.co.in

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

அருளிச்செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

(நான்காம் ப்ரகரணம் : சூர்ணைகள் 219 – 234)

**(ஸ்வாமி மணவாள மாமுனிகள் வ்யாக்யான மூலம், எளிய நடை)**



(ஆசார்ய ஹ்ருதயத்தின் மூலப்பொருளாம் நம்மாழ்வார்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

# நான்காம் ப்ரகரணம்

நான்காம் ப்ரகரணம்

219. பரபரனாய் நின்ற வளவேழ்வைப்பா மவையுளும்பர் வானவரதிபதி, மயர்வற மன்னி மனம் வைக்கத் திருத்தி; மறக்குமென்று நல்கிவிடாதே மன்ன, அயர்ப்பில வறுத்தேன் என் சொல்லி மறப்பனோவென்னும்படி தத்வஜ்ஞானவர்; சுடரடி யெம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி; வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷ குண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பந மந்த்ரமாக வுபதேசித்து; எளிதாக அவதரித்துப் பிழைகளை ஸஹித்துப் புரையறக் கலந்து அல்ப ஸந்துஷ்டனாய் அம்ருதமே ஔஷதமாக்கி; நீர்புரையத் தன்னை நியமித்து போகத்தை ஸாத்மிப்பித்து பக்தி கணைநகளுக்கு ஒக்க வருமவனுடைய ஸேவைக்கு; எளிமையும் இனிமையுமுண்டு, தொழுதால் அரும்பயனாய தரும், உத்யோகத்தே வினைகளும் மாளும், அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வு கொண்டு நலஞ்செய்வதென்று தாம் மயர்வற மதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற்பத்தில்.

**அவதாரிகை** - இதில் முதல் பத்தாலே ஸர்வஸ்மாத் பரனான ஸர்வேச்வரன், தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே அஜ்ஞானத்தைப் போக்கி பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைக் கொடுத்து, இன்னமிவர் நம்மை விஸ்மரிக்கக்கூடுமென்று தம்பக்கல் அவன் தனக்குண்டான ஸ்நேஹத்தாலே விடாதே தம்முடைய ஹ்ருதயத்திலே நிரந்தரவாஸம் பண்ண, அத்தாலே ஸம்சய விபர்யய விஸ்ம்ருதி ரஹிதமான தத்வ ஜ்ஞாநத்தை யுடையரான ஆழ்வார் அவனுடைய குணங்களைத் தம்முடைய திருவுள்ளத்தோடே அநுபவித்து, அவ்விஷயம் தனியநுபவிக்க வொண்ணாமையாலே ஸம்ஸாரிகளையும் பார்த்து த்யாஜ்யமான ஸம்ஸாரத்தின் தோஷத்தையும், தத் த்யாக ப்ரகாரத்தையும், உபாதேயமான பகவத் விஷயத்தின் குணத்தையும், தத் பஜந ப்ரகாரத்தையும், பஜநாலம்பகமான மந்த்ரத்தையு முபதேசித்து, பஜநீயனானவவனுடைய ஸௌலப்யம், அபராத ஸஹத்வம், சீலவத்தை, ஸ்வாராததை, ஆச்ரயண ரஸ்யதை , ஆர்ஜவம், ஸாத்ம்ய போகப்ரதத்வம், பரபக்தி பரிகணனைகளுக்கொக்க முகங்காட்டும் ஸாம்யமாகிற


**Email:**sridharan_book@yahoo.co.in

குணங்களை தர்சிப்பியா நின்று கொண்டு, அவ்வழியாலே பஜநத்தினுடைய ஸுகரத்வ ரஸ்யதைகளையும், பஜிக்கவே ஸர்வபலங்களும் ஸித்திக்குமென்னுமத்தையும், பஜநோப க்ரமத்திலே பஜந விரோதிகளடைய நசிக்குமென்னுமத்தையும் அறிவித்து, ஆனபின்பு ஸ்ரீகீதையில் அவனருளிச் செய்த பக்திமார்க்கத்திலே நின்று தேவதாந்தரங்கள் பக்கல் பரத்வசங்கா நிவ்ருத்தி பூர்வகமாக அவன் விஷயமான ஜ்ஞானத்தைக் கொண்டு அவன் பக்கலிலே அநந்யப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்கோளென்று தமக்கு அவன் மயர்வற மதிநல மருளினாப்போலே தாமும் இவர்களுக்கு அஜ்ஞாந நிவ்ருத்தி பூர்வகமாக ஜ்ஞாநபக்திகளை உபதேசத்தாலே உண்டாக்கி பஜநத்திலே மூட்டுகிறாரென்கிறார்.

**விளக்கம்** – திருவாய்மொழி முதல் பத்தில் நம்மாழ்வார் அருளிச்செய்தது என்ன என்பதை உரைக்கிறார். அனைத்திற்கும் ஆத்மாவாகவும், அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவனாகவும் உள்ள ஸர்வேச்வரன், எந்தவிதமான காரணமும் இன்றி பெருகுகின்ற தனது க்ருபை காரணமாக, நம்மாழ்வாருடைய அஜ்ஞானத்தைப் போக்கி, பக்தி ரூபமாக உள்ள ஞானத்தை அளித்து, "இதனையும் மீறி இவர் நம்மை மறந்துவிடக்கூடும்" என்று எண்ணியபடி, அவ்விதம் இவர் மறக்காமலிருக்கும்விதமாக, அவர் மீது கொண்ட ப்ரேமை காரணமாக, நம்மாழ்வாருடைய இதயத்திலேயே எப்போதும் வசித்தபடி இருந்தான். இதன் காரணமாக நம்மாழ்வார், எந்தவிதமான ஐயமும், தவறாக உணர்த்தலும், மறதியும் இல்லாத உண்மையான ஞானத்தை அடைந்தவராக, அவனுடைய திருக்கல்யாண குணங்களைத் தனது திருவுள்ளத்துடன் அனுபவித்தார். இப்படியாக அனுபவித்த நம்மாழ்வார், இப்படிப்பட்ட உயர்ந்த விஷயத்தை தான் மட்டுமே தனியாக நின்று அனுபவிப்பதைப் பொறுக்க இயலாமல், இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகள் அனைவரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு அவனை அனுபவிக்க முனைந்தார். ஆகவே அவர் ஸம்ஸாரிகளை நோக்கி, கைவிடத் தக்கதாக உள்ள ஸம்ஸாரத்தின் தோஷங்களையும், அதனைக் கைவிடுவதற்கான வழிகளையும், அடையப்பட வேண்டியதான பகவத் விஷயத்தைக் கைகொள்ளத்தக்க வழிமுறைகளையும், அவனை ஆராதிப்பதற்கு ஏற்றபடி உள்ள மந்த்ரத்தையும் உபதேசித்தார். தொடர்ந்து ஆராதிக்கத்தக்கபடி உள்ள அவனுடைய எளிமைத்தன்மை, குற்றங்களைப் பொறுக்கும் தன்மை, தாழ்ந்தவர்களுடனும் கலந்து பழகும் தன்மை, எளிதாக ஆராதிக்கப்படுபவனாக உள்ள தன்மை, அவனை அண்டுதலில் உள்ள எளிமை, அனைத்துவிதங்களிலும் ஒரே போன்று உள்ள தன்மை, தனது இன்பத்தைப் படிப்படியாக முற்றிலுமாக அளிக்கும்

தன்மை, மிகவும் உயர்ந்த பக்தி மற்றும் பலனை எதிர்பார்த்தபடி இருத்தல் ஆகிய இரண்டிற்கும் ஒரே போன்று முகம் காட்டும் தன்மை என்பதான பலவிதமான திருக்கல்யாண குணங்களைத் தனது பாசுரங்களில் அருளிச்செய்தார். மேலும் இப்படியாக உள்ள ஆராதனையின் எளிமை மற்றும் இனிமை ஆகியவற்றையும், அவனை வணங்கும்போது அனைத்து பலன்களும் தாங்களாகவே கைகூடும் என்பதையும், இவ்விதம் வணங்கியபடி உள்ளபோது அவனை அடைவதற்குத் தடையாக உள்ள அனைத்தும் தானாகவே விலகும் என்பதையும் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து, "ஸ்ரீமத்பகவத்கீதையில் அவன் உணர்த்திய பக்தி பார்க்கத்தில் நிலையாக நின்று, மற்ற தேவதைகள் பரம்பொருளாகும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, அவனைக் குறித்த ஞானத்தை மட்டுமே கொண்டவர்களாக, அவனைக் குறித்த பக்தியை எந்த ஒரு பயனும் கருதாமல் செய்வீர்களாக", என்று உபதேசித்தார். அதாவது, அவன் தனக்கு மயர்வற மதிநலம் அருளியது போன்று, இவரும் ஸம்ஸாரிகளுக்கு, அவர்களுடைய அக இருளை நீக்கி, ஞானம் மற்றும் பக்தி முதலானவற்றை, தக்க உபதேசம் மூலம் ஏற்படுத்துகிறார் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (பரபரனாய் நின்ற வளவேழ்வைப்பாம் அவையுளும்பர் வானவரதிபதி) "வரன் முதலாயவை முழுதுண்ட பரபரன்", "ஆய் நின்ற பரன்", "வளவேழுலகின் முதலாய வானோரிறை", "வைப்பாம் மருந்தாம் நலத்தா லுயர்ந்துயர்ந்தப்பாலவன்", "அவையுள் தனிமுதல்", "உம்பர் வானவராதியஞ் சோதி", "அயர்வறு மமரர்களதிபதி" என்று ஸகல ஜகத் ஸர்க்காதி கர்த்ருத்வத்தாலும், உபயவிபூதி யோகத்தாலும், உபயவிபூதி நாதத்வத்தாலும், ப்ராப்ய ப்ராபகத்வத்தாலும், அபரிச்சேத்யாநந்த யுக்ததையாலும், ஸர்வ சரீரதயா ஸர்வ சப்த வாச்யத்வத்தாலும், நித்யஸூரி நிர்வாஹகத்வத்தாலும், நித்யாஸங்குசித ஜ்ஞாநரானவர்கள் நித்யானுபவம் பண்ணா நின்றாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையனாகையாலும் ஸர்வஸ்மாத் பரனானவன்.

**விளக்கம்** - (பரபரனாய் நின்ற வளவேழ் வைப்பாம் அவையுள் உம்பர் வானவர் அதிபதி) - திருவாய்மொழி (1-1-8) - வரன் முதலாயவை முழுதுண்ட பரபரன் - என்றும், (1-1-11) – ஆய் நின்ற பரன் - என்றும், (1-5-1) – வளவேழுலகின் முதலாய வானோரிறை - என்றும், (1-7-2) – வைப்பாம் மருந்தாம் நலத்தால் உயர்ந்து உயர்ந்தப்பாலவன் - என்றும், (1-9-1) -

அவையுள் தனிமுதல் - என்றும், (1-10-9) - உம்பர் வானவராதியஞ் சோதி - என்றும், (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி - என்றும் உள்ள பாசுரங்களில் கூறப்படுவது போன்று அனைத்து லோகங்களையும் ஸ்ருஷ்டித்து காப்பாற்றி அழித்தல் என்று செயல்களாலும், நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் உடையவன் என்பதாலும், அந்த இரண்டு விபூதிகளுக்கும் எஜமானன் என்பதாலும், அடையப்படும் பேறாகவும் அந்தப் பேற்றுக்கான வழியாகவும் உள்ளதாலும், எல்லையற்ற ஆனந்தத்துடன் கூடியுள்ளவன் என்பதாலும், அனைத்து பொருள்களையும் தனது சரீரமாகக் கொண்டுள்ளதால் அனைத்து சொற்கள் மூலம் குறிக்கப்படும் தன்மையுடன் உள்ளதாலும், நித்யஸூரிகளின் எஜமானன் என்பதாலும், எப்போதும் சுருக்கம் அடையாத விரிந்த ஞானம் கொண்ட நித்யஸூரிகள் எப்போதும் அனுபவித்தபடி இருந்தாலும், அவர்களால் கூட இவனுடைய பெருமையை எல்லை காண இயலாதபடி உள்ளதாலும், இப்படியாக அனைத்தைக் காட்டிலும் உயர்ந்து நிற்கும் ஸர்வேச்வரன்.

**வ்யாக்யானம்** - (மயர்வறமன்னி மனம் வைக்க திருத்தி) "மயர்வற மதிநல மருளினன்", "மயர்வற வென்மனத்தே மன்னினான்" என்று ஸ்வகேவல க்ருபையாலே ஜ்ஞாநாநுதய அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ரூபமான அஜ்ஞாநத்தை இவர்க்கு வாஸனையோடே போக்கி, பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநத்தைக் கொடுத்து, இவர் திருவுள்ளத்திலே புகுந்து, "சார்ந்த விரு வல்வினைகளும் சரித்து மாயப்பற்றறுத்துத் தீர்ந்து தன் பால்மனம் வைக்கத் திருத்தி" என்கிறபடியே பிரிக்கவொண்ணாதபடி இவரோடு பொருந்திக் கிடக்கிற ப்ரபலமான புண்ய பாப ரூப கர்மங்களையும் பாஹ்ய விஷய ருசி வாஸனைகளையும் போக்கி, அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகன்றவளவிலும், தன் சீலத்தைக் காட்டி யிவரை மீட்டு அல்லேனென்று அகலாதே தனக்கே தீர்ந்து தன்பக்கலிலே நெஞ்சை வைக்கும்படி, தரிசு கிடந்த நிலத்தைச் செய்காலாகத் திருத்துவாரைப் போலே திருத்தி.

**விளக்கம்** - (மயர்வற மன்னி) – திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநலம் அருளினன் - என்றும், (1-7-4) – மயர்வற என் மனத்தே மன்னினான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய க்ருபையை மட்டுமே வைத்துக்கொண்டு, "தகுந்த ஞானம் பிறக்காமல் இருத்தல், பொருள்களைக் குறித்து தவறாக அறிதல், ஒன்றை மற்றொன்றாக அறிதல்" போன்ற அஜ்ஞானங்களை நம்மாழ்வாரிடமிருந்து வாஸனையுடன் விலக்கி, பக்தியுடன் பொருந்திய ஞானத்தை அல்லது பக்தி ரூபமாகவே உள்ள ஞானத்தை நம்மாழ்வாருக்கு


Email:sridharan_book@yahoo.co.in

அளித்து, அவருடைய திருவுள்ளத்தில் தான் எப்போதும் நிலையாக நின்று, (மனம் வைக்க திருத்தி) – திருவாய்மொழி (1-5-10) - சார்ந்த இரு வல்வினைகளும் சரித்து மாயப்பற்று அறுத்துத் தீர்ந்து தன் பால்மனம் வைக்கத் திருத்தி - என்பதற்கு ஏற்ப, பிரிக்க இயலாமல் நம்மாழ்வாருடன் ஒன்றாகப் பிணைந்தபடி உள்ள வலியதான புண்ணிய பாபங்களின் வடிவில் உள்ள கர்மங்களையும், மற்ற உலகவிஷயங்களில் உள்ள ஆசையையும் அவற்றின் வாஸனையுடன் விலக்கி, “நான் மிகவும் தாழ்ந்தவன், தகுதி அற்றவன்” என்று எண்ணியபடி தன்னைவிட்டு விலகிச் செல்ல முயலும் நம்மாழ்வரைத் தனது சீல குணத்தைக் காண்பித்து தன்னிடம் அகப்படுத்தி, “இனி நான் எங்கும் செல்லமாட்டேன், நான் வேறு யாருக்கும் உரியவன் அல்லன்” என்பதற்கு ஏற்ப அவர் தன்னை விட்டு அகலாமல், தனக்காக மட்டுமே வாழ்ந்தபடி, தன்னிடம் மட்டுமே நெஞ்சத்தை வைக்கும்படி, தரிசாகக் கிடந்த நிலத்தை பயிர் விளையும்படிச் செய்பவர்கள் போன்று, இவரைத் திருத்தி.

**வ்யாக்யானம்** - (மறக்குமென்று நல்கிவிடாதே மன்ன) “மறக்குமென்று செந்தாமரைக்கண் ணொடு”, “நல்கி யென்னைவிடான்”, “மறப்பற வென்னுள்ளே மன்னினான்” என்கிறபடியே இவர் இன்னமும் நம்மை விஸ்மரிக்கக்கூடுமென்று நிரதிசய ஸ்நேஹத்தைப் பண்ணி இவரைவிடாதே அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக் கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணாதபடி இவர் திருவுள்ளத்திலே ஸ்தாவர ப்ரதிஷ்டை யாயிருக்க,

**விளக்கம்** - (மறக்கும் என்று நல்கி விடாதே மன்ன) - திருவாய்மொழி (1-10-10) – மறக்கும் என்று செந்தாமரைக்கண்ணொடு – என்றும், (1-10-8) - நல்கி என்னை விடான் - என்றும், (1-10-10) - மறப்பற என்னுள்ளே மன்னினான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “இவர் நம்மை மறந்து விடக்கூடும்” என்று எண்ணியவனாக, எல்லையற்ற ஸ்நேஹத்தை அவரிடம் காண்பித்து, அவரை விடாமல், தனது அழகான திருக்கண்களால் அவரைக் குளிர்ந்து நோக்கியபடி, அவர் தன்னை ஒருநாளும் மறக்க இயலாதபடி, அவருடைய திருவுள்ளத்தில் அசையாத மரம் போன்று நிலையாக அவன் இருக்க.

**வ்யாக்யானம்** - (அயர்ப்பில் னறுத்தேன் என் சொல்லி மறப்பனோ வென்னும்படி தத்வஜ்ஞரானவர்) “பெருநிலம் கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன்”, “தூயவமுதைப்

பருகிப் பருகியென் மாயப்பிறவி மயர்வறுத்தேன்", "எம்பிரானையென் சொல்லி மறப்பனோ" என்று குணாகுண நிரூபணம் பண்ணாதே பூமிப் பரப்பையளந்த பரம போக்யமான திருவடிகளை யொருகாலும் விஸ்மரியேன், நிரதிசய போக்யனானவனை நிரந்தரமநுபவித்து ஆச்சர்யமான ஜந்மமடியாக வரும் அஜ்ஞாநத்தைப் போக்கப் பெற்றேன், எனக்கு உபகாரகனானவனை எத்தைச் சொல்லி விஸ்மரிப்ப தென்னும்படி, ஸம்சய விபர்யாய விஸ்ம்ருதி கலசாத தத்வ ஜ்ஞாநத்தை யுடையரானவர்.

**விளக்கம்** - (அயர்ப்பிலன்) - திருவாய்மொழி (1-3-10) - பெருநிலம் கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன் – என்றும், (1-7-3) – தூயவமுதைப் பருகிப் பருகி என் மாயப்பிறவி மயர்வு அறுத்தேன் – என்றும், (1-10-9) - எம்பிரானையென் சொல்லி மறப்பனோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப, "நல்லவர்கள் தீயவர்கள் என்றும் ஆராயாமல், இந்த உலகம் முழுவதையும் அளந்த அவனது எல்லையற்ற இனிமையான திருவடிகளை நான் எப்போதும் மறக்கமாட்டேன். எல்லையற்ற இனிமையாக உள்ளவனை எப்போதும் அநுபவித்தபடி இருந்து, வியப்பான பிறவிகள் எடுக்கக் காரணமாக உள்ள அஜ்ஞானத்தை விலக்கப் பெற்றேன். எனக்கு உபகாரங்கள் பல செய்த அவனை நான் எந்தக் காரணம் கூறி மறப்பேன்", என்பதற்கு ஏற்ப, சந்தேகம் இன்றியும் மறதி இன்றியும் உள்ள உண்மையான ஞானத்தைக் கொண்ட நம்மாழ்வார்.

**வ்யாக்யானம்** - (சுடரடி யெம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி) "சுடரடி தொழுதெழென் மனனே", "எம்பிரானைத் தொழாய் மட நெஞ்சமே", "நெஞ்சமே நல்லை நல்லை", "மலராள் மணவாளனைத் துஞ்சும்போதும் விடாது தொடர் கண்டாய்", "கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று", "நீயும் நானுமிந்நேர் நிற்கில் மேல் மற்றோர் நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்" என்று நிரவதிக தேஜோ ரூபமான அவன் திருவடிகளிலே நித்ய கைங்கர்யத்தைப் பண்ணி யுஜ்ஜீவிக்கப்பாரா யென்நெஞ்சே, எனக்கு பவ்யமான நெஞ்சே, நமக்கு உபகாரகனானவனைத் தொழப்பாராய். நெஞ்சே, நீ செய்தபடி மிகவும் நன்று, நான் அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகலும்போதும் ச்ரிய: பதியானவனை விடாதேகிடாய், நெஞ்சே அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரமிருந்தபடி கண்டாயே; தொழச் சொல்லலாம்படியிருக்கிற நீயும் தொழச் சொல்லுகிற நானும் அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகலாமலிப்படியே நிற்கப் பெறில், அநாதி

காலார்ஜிதமான கர்மம், விஷய ப்ராவண்யம், ப்ரயோஜநாந்தர ச்ரத்தை ஸாதநாந்தர ஸங்கம் முதலான துரிதங்களொன்றையும் சேர விட்டுக்கொடான், நெஞ்சே உனக்கு இப்பரமார்த்தத்தைச் சொன்னேன் என்று இப்படி திருவுள்ளத்தைக் குறித்துபதேசித்து, திருவுள்ளமும் தாமும் கூடியநுபவித்த பகவதநுபவம் தனியே அநுபவிக்க வொண்ணாமையாலும், "ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத" என்கிறபடியே தனியநுபவிக்க வல்லரல்லாமையாலும், அவனோடுள்ள ஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாகையாலும் பராநர்த்தம் பொறாத பரமக்ருபையாலும், இவ்வநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாக வேணுமென்று ஸம்ஸாரிகளைப் பார்த்து,

**விளக்கம்** – (சுடரடி) – திருவாய்மொழி (1-1-1) - சுடரடி தொழுதெழென் மனனே – என்றும், (எம்பிரானை) – திருவாய்மொழி (1-10-3) - எம்பிரானைத் தொழாய் மட நெஞ்சமே – என்றும், (விடாது) – திருவாய்மொழி (1-10-4) - நெஞ்சமே நல்லை நல்லை மலராள் மணவாளனைத் துஞ்சும்போதும் விடாது தொடர் கண்டாய் – என்றும். (கண்டாய்) – திருவாய்மொழி (1-10-5) - கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று - என்றும், (நீயும் நானும்) – திருவாய்மொழி (1-10-6) - நீயும் நானுமிந்நேர் நிற்கில் மேல் மற்றோர் நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எல்லையற்ற தேஜோரூபமான அவனுடைய திருவடிகளில் எப்போதும் கைங்கர்யத்தைச் செய்தபடி இருந்து கரையேற முயற்சிப்பாயாக. எனக்கு அடங்கியபடி உள்ள எனது நெஞ்சமே! நமக்கு எப்போதும் உபகாரகனாக உள்ள அவனை நீ தொழுவதற்கு முனைந்தபடி இருப்பாயாக. எனது நெஞ்சமே! நீ செய்த செயல்கள் மிகவும் நல்லதே ஆகும். "நான் தாழ்ந்தவன்" என்று எண்ணியபடி அவனை விட்டு நான் அகன்றாலும், நீ அந்த மஹாலக்ஷ்மியின் நாயகனை விடாமல் இருப்பாயாக. எனது நெஞ்சமே! எந்தவிதமான காரணமும் இல்லாமல் அவன் நம்மை ஏற்றுக்கொள்வதை நீ கண்டாய் அல்லவோ? "நீ அவனைத் தொழுதபடி இருப்பாயாக" என்று என்னால் கூறலாம்படியுள்ள உள்ள நீயும், உன்னைத் தொழும்படி உரைக்கின்ற நானும், "தாழ்ந்தவன்" என்ற எண்ணம் மேலோங்கி அவனை விட்டு அகலாமல், இது போன்று அவன் அருகில் நிற்கப்பெற்றோம் என்றால், எல்லையற்ற காலமாக நம்மிடம் சேர்ந்தபடி உள்ள கர்மவினைகள், மற்ற உலக விஷயங்களில் உள்ள ஈடுபாடு, மற்ற பயன்களை அடைவதில் கைக்கொள்ளும் முயற்சிகள், மற்ற உபாயங்களை நாடுதல் போன்ற தோஷங்கள் எதுவும் நம்மிடம் சேராமல் அவன் பார்த்துக்கொள்வான். எனது நெஞ்சமே! உனக்கு நான் இத்தகைய

மிகவும் உயர்ந்த ஆழ்பொருளை உரைத்தேன். இப்படியாக நம்மாழ்வார் தனது திருவுள்ளத்தை நோக்கி அதற்கு உபதேசம் செய்தார். தொடர்ந்து தானும், தனது திருவுள்ளமுமாகச் சேர்ந்து நின்று பகவத் அனுபவத்தைப் பெற்றார். இப்படிப்பட்ட பகவத் அனுபவத்தை, தான் தனியே நின்று அனுபவிப்பதைப் பொறுக்க இயலாமல் உள்ளதாலும், ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத - இனிமையான ஒன்றைத் தனியே அனுபவிக்கலாகாது - என்பதற்கு ஏற்ப தனியே நின்று அனுபவிக்கவல்லவர் அல்லர் என்பதாலும், அவனோடு உள்ள ஸம்பந்தம் என்பது அனைவருக்கும் பொதுவானதே ஆகும் என்பதாலும், மற்றவர்களுடைய கேடு என்பதைப் பொறுத்துக் கொள்ள இயலாத உயர்ந்த கருணை நிறைந்தவர் என்பதாலும், அத்தகைய பகவத் அனுபவமானது இந்த உலகில் உள்ள அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்று எண்ணினார். ஆகவே இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகளை நோக்கி ...

**வ்யாக்யானம்** - (வீடுமினென்று த்யாஜ்யோபாதய தோஷ குண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பக மந்த்ரமாக உபதேசித்து) வீடுமின் முற்றத்திலே “வீடுமின் முற்றவும்” என்று த்யாஜ்ய ஸ்வரூபத்தையும், “மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்” என்று அதினுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷத்தையும், “நீர் நுமதென்றிவை வேர் முதல் மாய்த்து” என்று அதினுடைய பரித்யாக க்ரமத்தையும், “வீடுடையான்” என்று உபாதேயமான பகவத் ஸ்வரூபத்தையும், “எல்லையிலந்நலம்” என்று அவ்வஸ்துவினுடைய குணத்தையும், “வீடு செய்மினே”, “இறை சேர்மின்”, “இறை பற்று”, “திண்கழல் சேர்” என்று அவ்விஷயத்தில் ஆத்மாவை ஸமர்ப்பிக்கும் க்ரமத்தையும், “வண்புகழ் நாரணன்” என்று அந்த ஸமர்ப்பண ரூப பஜநத்துக்கு ஆலம்பகமான திருமந்திரத்தோடே யுபதேசித்து,

**விளக்கம்** - (வீடுமின் என்று த்யாஜ்யம்) - திருவாய்மொழி (1-2) - வீடுமின் முற்றவும் - என்ற திருவாய்மொழியில் உள்ளதான திருவாய்மொழி (1-2-1) – வீடுமின் முற்றவும் – என்பதன் மூலம், கைவிடவேண்டியவற்றின் தன்மைகளையும். (தோஷம்) - திருவாய்மொழி (1-2-2) – மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள் - என்று அவற்றினுடைய அற்பமானதும் உறுதியற்றதும் ஆகிய நிலையையும். (பரித்யாகம்) - திருவாய்மொழி (1-2-3) - நீர் நுமதென்றிவை வேர் முதல் மாய்த்து - என்று அவற்றைக் கைவிடும் முறையையும். (உபாதேயம்) – திருவாய்மொழி (1-2-1) – வீடுடையான் – என்று

பற்றத் தக்கதாக உள்ள பகவானுடைய ஸ்வரூபத்தையும். (குணம்) – திருவாய்மொழி (1-2-4) - எல்லையில் அந்நலம் - என்று அந்த பகவத் வஸ்துவின் குணத்தையும். (ஸமர்ப்பண க்ரமம்) – திருவாய்மொழி (1-2-1) - வீடு செய்மினே, திருவாய்மொழி (1-2-3) - இறை சேர்மின், திருவாய்மொழி (1-2-5) - இறை பற்று, திருவாய்மொழி (1-2-10) - திண்கழல் சேர் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அப்படிப்பட்ட பகவானிடம் ஆத்மாவை ஒப்படைக்கும் முறையையும். (ஸாலம்பந மந்த்ரமாக) திருவாய்மொழி (1-2-10) - வண் புகழ் நாரணன் – என்று அத்தகைய ஆத்ம சமர்ப்பணம் செய்வதற்கு ஏற்றபடி உள்ளதான நமஸ்காரம் செய்வதற்கு உறுப்பாக உள்ள திருமந்த்ரத்தை. (உபதேசித்து) - உபதேசம் செய்து.

**வ்யாக்யானம்** - (எளிதாகவவதரித்து) ஆச்ரயிப்பார் “அதீந்த்ரியன்” என்று இறாயாதபடி “பல பிறப்பாய் எளிவருமியல்வினன்” என்று ராமக்ருஷ்ணாத்யவதார முகத்தாலே அவர்களுக்கு ஸுலபனாய், (பிழைகளை ஸஹித்து) ஆச்ரயண தசையில் ஸுலபனாய் அபராதம் கண்டவாறே கைவிடாதே “என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு” என்னும்படி அபராதஸஹனாய், (புரையறக் கலந்து) அபராதம் கண்டு தான் இகழாதவளவன்றிக்கே, அயோக்யதாநுஸந்தாநத்தாலே தாங்களே அகல்வாரையும் “திசைகளெல்லாம் திருவடியால் தாயோன் – தானோருருவனே” என்று தன் குணத்தைக் காட்டி அணுகப் பண்ணி அவர்களோடே புரையறக் கலக்கும் சீலவானாய், (அல்ப ஸந்துஷ்டனாய்) ஆச்ரிதரோடு ஒரு நீராகக் கலக்குமேயாகிலும் அவனுக்கும்படி பச்சையிடப் போகாமையாலே ஆச்ரயணமரிது என்னாதபடி இவனிட்டது கொண்டு த்ருப்தனாக வேண்டாத பரிபூர்ணனாகையாலே “புரிவதுவும் புகைபூவே” என்று இவன் பக்கல் பெற்றது கொண்டு ஸந்தோஷிக்கும் ஸ்வாராதனாய். (அம்ருதமே ஔஷதமாக்கி) நேர்த்தியில்லையாகிலும் உள்ளது தேவையாயிருக்குமோ வென்னாதபடி அம்ருதத்தையே ஔஷதமாக்குமாபோலே, “தூயவமுதைப் பருகிப் பருகி யென் மாயப்பிறவி மயர்வறுத்தேன்” என்று நிரதிசய போக்யனான தன்னுடைய ஆச்ரயணமாகையாலே, மிகவுமினிதா யிருக்கிறவற்றையே ஸம்ஸார வ்யாதி பேஷஜமாக்கி,

**விளக்கம்** - (எளிதாக அவதரித்து) - தன்னை வந்தடையும் அடியார்கள், “இவன் நம் கண்களுக்கும் மற்ற இந்த்ரியங்களும் எட்டாதவன்” என்று எண்ணித் தவிக்காதபடி, திருவாய்மொழி (1-3-2) - பல பிறப்பாய் எளிவருமியல்வினன் – என்பதற்கு ஏற்ப இராமன்,

க்ருஷ்ணன் முதலான திருஅவதாரங்கள் மூலம் அவர்கள் தன்னை வந்து அண்டலாம்படி எளியவனாக. (பிழைகளை ஸஹித்து) - தன்னை அவர்கள் வந்து அண்டும்போது அவர்களுக்கு மிகவும் எளியவனாக, அவர்களுடைய குற்றங்களைக் கண்டு அவர்களைக் கைவிடாமல், திருவாய்மொழி (1-4-7) - என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு - என்பதற்கு ஏற்ப அவர்களுடைய அபராதங்களைப் பொறுப்பவனாக. (புரையறக் கலந்து) - அவர்களுடைய அபராதங்களைக் கண்டு, தான் அவர்களை இகழாமல் உள்ளபோதிலும், அவர்கள் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்று எண்ணியபடி தன்னை விட்டு அகல முயற்சித்தால், திருவாய்மொழி (1-5-3) – திசைகளெல்லாம் திருவடியால் தாயோன் தானோருருவனே – என்பதற்கு ஏற்ப, தனது உயர்ந்த திருக்கல்யாண குணங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் தன்னை அண்டும்படியாகச் செய்து, தான் அவர்களுடன் ஒன்றாகக் கலந்து நிற்கும் சீலம் கொண்டவனாக. (அல்ப ஸந்துஷ்டனாய்) - "அடியார்களுடன் அவன் ஒரே நீராகக் கலந்து நின்றாலும் அவன் மகிழும்படியான கைம்மாறு செய்ய இயலாத காரணத்தால் அவனை அடைவது அரிது" என்று நாம் எண்ண வேண்டாதபடியாக, நாம் அளிப்பதைக் கொண்டு மட்டுமே மனநிறைவு அடையவேண்டும் என்ற அவசியம் இல்லாதபடி, அனைத்தும் நிறைந்தவன் என்பதால், திருவாய்மொழி (1-6-1) - புரிவதுவும் புகைபூவே - என்பதற்கு ஏற்ப நம் மூலமாக எதனைப் பெற்றாலும் அதனைக் கொண்டு மகிழும்ம்படியாக, ஆராதனைக்கு மிகவும் எளியவனாக. (அம்ருதமே ஔஷதமாக்கி) - கைகளில் உள்ள பொருள் சிறந்ததாக இல்லை என்றாலும் தேவைப்படுவதாக உள்ளது போன்று, அமிர்தத்தையே மருந்தாக அளிப்பர்; இதனைப் போன்று திருவாய்மொழி (1-7-3) - தூயவமுதைப் பருகிப் பருகி யென் மாயப்பிறவி மயர்வறுத்தேன் – என்பதற்கு ஏற்ப எல்லையற்ற இனிமையுடன் கூடியவனாகிய தன்னைப் பற்றுதல் என்பததையே வைத்துக்கொண்டு மிகவும் இனிமையான தன்னையே ஸம்ஸாரம் என்ற நோய்க்கு ஏற்ற மருந்தாக்கியவனாக.

**வ்யாக்யானம்** - (நீர்புரையத் தன்னை நியமித்து) இனிதாயிருக்குமாகிலும், அவன் நினைவறிந்து பரிமாறுகை அரிதென்னாதபடி இவர்களைத் தன் நினைவிலே பரிமாறுவித்துக் கொள்ளப் பாராதே, "நீர்புரைவண்ணன்" என்று மேட்டிலே நீரை விரகாலேயேற்றுமாப்போலே இவர்கள் செவ்வைக்கேடும் செவ்வையாம்படி தன்னைச் செவ்வியனாக நியமித்து. (போகத்தை ஸாத்மிப்பித்து) இப்படியானாலும் குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே அஸாத்ம்யமாகப் பரிமாறுமோவென்னாதபடி, "என்னுடைச்

சூழலுளான்” என்று தொடங்கி, “உச்சியுளானே” என்னும்படி ஸாத்மிக்கத் தன்னை யனுபவிப்பித்து. (பக்தி கணனைகளுக்கொக்க வருமவனுடைய ஸேவைக்கு) இப்படி யனுபவிக்கைக்கீடாக முகங்காட்டுமளவில் இவன் பக்கல் ப்ரேமாநுகுணமாகவோ செய்வதென்னாதபடி “கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில் எண்ணிலும் வரும்” என்று பரமபக்திக்கும் பரிகணனைக்குமொக்க வந்து முகங்காட்டும் ஸ்வபாவனான வனுடைய பஜநத்துக்கு. (எளிமையுமினிமையுமுண்டு) எளிதாய் இனிமையற்றிருத்தல், இனிதாய் அருமையாயிருத்தலன்றிக்கே, கீழ்ச் சொன்ன குணவிசேஷங்களை யுடையவனுடைய ஆச்ரயணமாகையாலே யெளிதுமாய் இனிதுமாயிருக்கும்.

**விளக்கம்** - (நீர் புரையத் தன்னை நியமித்து) – “இனிமையானவனாக அவன் உள்ளபோதிலும் அவனுடைய குறிப்பறிந்து செயல் புரிதல் என்பது கடினமாகும்”, என்று எண்ணவேண்டிய அவசியம் இல்லாதபடியாக, நம்மைத் தன்னுடைய குறிப்பறிந்து செயலாற்றச் செய்யாமல், திருவாய் (1-8-11) - நீர்புரைவண்ணன் – என்பதற்கு ஏற்ப மேடாக உள்ள பகுதியில் நீரைத் தகுந்த வழியால் ஏற்றுவது போன்று, நம்முடைய ஒழுங்கீனத்தையும் நேர்மையாக மாற்றும்படியாகத் தன்னை நேர்மையாளனாக முன்னிறுத்துபவனாக. (போகத்தை ஸாத்மிப்பித்து) – “இவ்விதம் ஆனாலும் குளம்பு மூலம் ஏற்பட்ட சிறு குழியில் பெரிய கடலைப் புகுந்த முற்படுவது போன்று, பொறுக்க இயலாத செயலாக அமையுமோ?”, என்று எண்ணவேண்டிய அவசியமின்றி, திருவாய்மொழி (1-9-1) – என்னுடைச் சூழலுளான் – என்று தொடங்கி, திருவாய்மொழி (1-9-10) - உச்சியுளானே - என்பதற்கு ஏற்ப பொறுத்துக் கொள்ளும்படியாக மெதுவாகத் தனது அனுபவத்தை அளிப்பவனாக. (பக்தி கணனைகளுக்கு ஒக்க வரும் அவனுடைய) - “இவ்விதமாக அனுபவிப்பதற்கு ஏற்றபடியான அவன் தனது திருமுகத்தைக் காண்பிக்கும்போது, நம்மிடம் உள்ள பக்திக்கு ஏற்றபடியோ செய்கிறான்”, என்று எண்ண வேண்டிய அவசியம் இல்லாதபடி, திருவாய்மொழி (1-10-2) – கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில் எண்ணிலும் வரும் - என்பதற்கு ஏற்ப பரமபக்திக்கும் எண்ணிக்கைக்கும் ஒரே போன்று நின்று தனது திருமுகத்தைக் காண்பிப்பவனாக [இங்கு எண்ணிக்கை என்றால் என்ன? ஒன்று, இரண்டு என்று எண்ணியபடி சென்று, இருபத்து ஆறு என்று எண்ணும்போது, அந்த எண்ணிக்கையால் குறிக்கப்படும் ஈச்வரன் வந்து முகம் காண்பிப்பான் என்று எண்ணுதல்]. (ஸேவைக்கு) - இவ்விதமாக உள்ள அவனை வணங்குவதற்கு, (எளிமையும் இனிமையும் உண்டு) - எளிமையாக இருந்து இனிமை


**Email:**sridharan_book@yahoo.co.in

இல்லாமல் இருத்தல், இனிமையாக இருந்தாலும் அண்டுவதற்கு அரிதாக இருந்தல் என்பது போன்று அல்லாமல், இதுவரை கூறப்பட்ட அனைத்து குண சிறப்புக்களையும் உடையவனை அண்டி நிற்கும் செயல் என்பதால், அவன் அத்தகைய வணக்கத்திற்கு எளியவனாகவும் இனிமையானவனாகவும் இருப்பான்.

**வ்யாக்யானம்** – "பத்துடையடியவர்க்கெளியவன்", "அமுதிலுமாற்றவினியன்" என்கிறவன் தன்னைப் போலேயாய்த்து ததாச்ரயணமும். ஏவம்பூத பஜநத்தால் பல ஸித்தியிருக்கும்படி யென்னென்னில் (தொழுதால் அரும்பயனாய தரும்) "அவனைத் தொழுதால் வழி நின்ற வல்வினை மாள்வித் தழிவின்றியாக்கம் தரும்", "தருமவரும் பயனாய" என்று அவனை பஜித்தால் ப்ராப்தி ப்ரதிபந்தகங்களையும் நிச்சேஷமாகப் போக்கி அழிவில்லாத பெறுதற்கரிய ப்ரயோஜநங்களையும் தரும். பஜித்தாலன்றோ தருவது, பஜந விரோதிகளும் குவாலுண்டேயென்னில், (உத்யோகத்தே வினைகளும் மாளும்) "நாளு நின்ற நம் பழமையங் கொடுவினையுடனே மாளும்" என்று நாள்தோறும் நின்று இவ்வாத்மாவை முடிக்கிற அநாதியாய் அதிக்ரூரமான கர்மங்கள் பஜநோபக்ரமத்திலே நசிக்கும். ஆனால் பஜநோபாயமே தென்னில் (அவனுரைத்த மார்க்கத்தே நின்று இரு பசைமல மறவுணர்வு கொண்டு நலஞ் செய்வதென்று) "பிணக்கற" என்று தொடங்கி, "அம்பகவன் வணக்குடைத்தவநெறி வழி நின்று" என்று வைதிக ஸமயத்துக்கும் பாஹ்ய ஷட் ஸமயத்துக்கும் தன்னில் தானுண்டான பிணக்கறும்படி வேதமார்க்கத்தை யதா நிரூபணம் பண்ணியருளிச் செய்த நிரவதிக வாத்ஸல்ய யுக்தனாய், ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணனான க்ருஷ்ணன் திருத்தேர்த்தட்டிலே அர்ஜுந வ்யாஜேந ஸ்ரீகீதாமுகத்தாலே "பக்த்யா த்வதந்யயா சக்ய:" என்றும், "மந்மநா பவ மத்பக்த: மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத் பராயண:" என்றுமருளிச் செய்த பக்தி மார்க்கத்திலே நின்று,

**விளக்கம்** - திருவாய்மொழி (1-2-1) – பத்துடை அடியவர்க்கெளியவன் – என்றும், (1-6-6) – அமுதிலுமாற்றவினியன் - என்றும் கூறப்படுகின்ற அவனைப் போலே அவனை வணங்குதலும் உள்ளது. இவ்விதமாக உள்ள வணக்கத்தால் என்ன பயன் உள்ளது? (தொழுதால் அரும்பயனாய தரும்) – திருவாய்மொழி (1-6-8) – அவனைத் தொழுதால் வழி நின்ற வல்வினை மாள்வித் தழிவின்றியாக்கம் தரும் - என்றும், (1-6-9) - தருமவரும் பயனாய – என்றும் கூறுவதற்கு ஏற்ப அவனை வணங்கினால் அவனை அடைவதற்கான

தடைகள் அனைத்தையும் நீக்கி, அழிவற்றதும் பெறுவதற்கு அரியதாக உள்ளதும் ஆகிய பயன்களையும் அளிக்கும். வணங்கினால் மட்டுமே இவை அனைத்தும் கிடைக்கும்; சரி, ஆனால் வணங்குவதற்குப் பல தடைகள் ஏற்படும் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். (உத்யோகத்தே வினைகளும் மாளும்) – திருவாய்மொழி (1-3-8) – நாளு நின்ற நம் பழமையங் கொடுவினையுடனே மாளும் – என்பதற்கு ஏற்ப இந்த ஆத்மாவை அன்றாடம் அழிக்கவல்லதான, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள தீவினைகள் அனைத்தும் வணங்குவதற்குத் தொடக்கிய உடனேயே அழியும். சரி, வணங்கத் தொடங்குவதற்கான உபாயம் என்ன என்பதற்கு விடை அளிக்கிறார். (அவன் உரைத்த மார்க்கத்தில் நின்று) - திருவாய்மொழி (1-3-8) – திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்று தொடங்கி, (1-3-5) – அம்பகவன் வணக்குடைத்தவநெறி வழி நின்று - என்பதற்கு ஏற்ப வேதங்களின் வழி நிற்கும் மதங்களுக்கும், வேதங்களுக்குப் புறம்பாக உள்ள ஆறு மதங்களுக்கும் இடையே உள்ள பிணக்கு தீரும்விதமாக, வேதமார்க்கத்தை உள்ளது உள்ளபடியே நிரூபணம் செய்யும்விதமாக எல்லையற்ற வாத்ஸல்யம் கொண்டவனும், ஞானம் போன்ற குணங்களைப் பரிபூர்ணமாகக் கொண்டவனும் ஆகிய க்ருஷ்ணன் திருத்தேரில் வீற்றிருந்து அர்ஜுனனை ஒரு காரணமாக அமைத்துக் கொண்டு அருளிச்செய்த ஸ்ரீமத்பகவத் கீதை மூலமாக கீதை (11- 54) – பக்த்யா த்வதந்யயா சக்ய: – என்னிடம் உள்ள பக்தி மூலம் மட்டுமே அல்லாமல் வேறு எதனாலும் நான் உணரப்பட இயலாதவன் - என்றும், கீதை (9-34) – மந்மநா பவ மத்பக்த: மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத் பராயண: - என்னிடம் மனம் நிலை பெற்றவனாக, எனது பக்தனாக, என்னை வணங்குபவனாக நின்று என்னை வணங்குவாயக; இப்படியாக மனம் மற்றும் இந்த்ரியங்களுடன் கூடிய சரீரத்தை என்னிடம் ஈடுபடுத்தி, என்னை மட்டுமே அடையத்தக்க புகலிடமாகக் கொண்டு, என்னையே அடைவாயாக - என்றும் அருளிச்செய்த் பக்தி மார்க்கத்தில் நிலை நின்று.

**வ்யாக்யானம்** - “நும்மிரு பசையறுத்து” என்றும், “மனனகமலமறக்கழுவி” என்றும் தேவதாந்தரங்கள் பக்கல் உங்களுக்குண்டான ஸங்கத்தை யறுத்து “இவனோ அவர்களோ ஆச்ரயணீயர்” என்கிற ஸம்சயத்தையும் மநஸ்ஸினின்றும் ஸவாஸநமாகப் போக்கி, “அவனுடையுணர்வு கொண்டு” என்று தத் விஷய ஜ்ஞாநத்தைக் கொண்டு, “நன்றெனநலஞ் செய்வது” என்று அநந்ய ப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்கோளென்று. (தாம் மயர்வற மதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற்பத்தில்) அதாவது ஸர்வேச்வரன்


**Email:**sridharan_book@yahoo.co.in

தமக்கு மயர்வற மதிநலமருளினாப் போலே ஸம்ஸாரிகளுக்குத் தம்முடைய க்ருபையாலே தத்வஹித புருஷார்த்த விஷயமான அஜ்ஞாநத்தைப் போக்கி ஜ்ஞாந பக்திகளை யுபதேசித்து பகவத் பஜநத்திலே மூட்டுகிறார் முதற்பத்தாலென்கை.

**விளக்கம்** – (இரு பசை மலம் அற) – திருவாய்மொழி (1-3-7) - நும்மிரு பசையறுத்து – என்றும், (1-3-8) – மனனகமலமறக்கழுவி – என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்ற தெய்வங்களுடன் உங்களுக்கு ஏற்பட்ட ஸம்பந்தத்தை விலக்கிக் கொண்டு, “பற்றத்தகுந்தவர்கள் அவனா அல்லது இவர்களா” என்ற ஐயத்தை மனதிலிருந்து அதன் வாசனையுடன் விலக்கி. (உறணர்வு கொண்டு) – திருவாய்மொழி (1-3-5) - அவனுடையுணர்வு கொண்டு – என்பதற்கு ஏற்ப அவன் விஷயமான ஞானத்தை அடைந்து. (நலம் செய்வது என்று) – திருவாய்மொழி (1-3-7) - நன்றென நலஞ் செய்வது - என்று கூறுவதற்கு ஏற்ப வேறு எந்தப் பயனையும் எதிர்பாராமல் பக்தியுடன் இருப்பீர்களாக என்று, (தாம் மயர்வற மதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற்பத்தில்) - அதாவது ஸர்வேச்வரன் தனக்கு மயர்வற மதிநலம் அருளிச்செய்தது போன்று, ஸம்ஸாரிகளுக்குத் தனது கருணை மூலம், உண்மையானதும் நன்மை அளிக்கவல்லதும் ஆகிய புருஷார்த்தம் குறித்த விஷயத்தில் ஏற்பட்ட அறியாமையை நீக்கி, ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றை உபதேசம் செய்து, பகவானை வணங்குதல் என்பதில் ஈடுபடுத்துகிறார்; இதனை முதல் பத்தால் செய்கிறார் என்று கருத்து,

220. [1] சோராத மூவா வேர் முதலாய் உலகம் படைத்தவனென்கிற சிதசித் த்ரய த்ரிவித காரணமானவன் அறியாதனவறிவிக்க, உள்ளம் தேறித் தூமனம் மருளிலென்னும் ஜ்ஞாந பலமான வெளிக்கொண்ட மோக்ஷம் தேடி வாட, [2] உலராமலாவி சேர்ந்து சிக்கெனப் புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல் மாறினரென்ன வாழ்வித்து உபகரிக்கிற நீந்தும் கெடலில் எம்மாவீட்டை உபயாநுகுணமாக்கினவர், [3] ஆச்ரயணியனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற ஸகல பல ப்ரதத்வ காரணத்வ சேஷசாயித்வ ச்ரிய:பதித்வ ஸௌலப்யாதிகளைத் திண்ணனனைவதென்று வெளியிட்டு, [4] கள்வா தீர்த்தனென்று வசன ப்ரத்யக்ஷங்களுங் காட்டி, [5] புலனைந்தென்று ஸம்ஸார மோக்ஷ ஸாதந்துக்காநந்த ரஸம் முன்னாக விதிக்கிற அந்தர்கத குணோபாஸநத்தை [6] மதித்துப் பெருக்கி மூழ்கியழுந்திக் கீழ்மை வலஞ் சூதுஞ் செய்து இளமை கெடாமல் செய்யும் க்ஷேத்ர வாஸ ஸங்கீர்த்தநாஞ்ஜலி ப்ரதக்ஷிணகதி சிந்தநாத்யங்க யுக்தமாக்குகிறார் இரண்டாம் பத்தில்.


Email:sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - இரண்டாம்பத்தால் ஸர்வகாரணபூதனான ஸர்வேச்வரன் கீழில்பத்திலே தமக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ண அவனாலே தத்தஜ்ஞாநரானவிவர் அந்த ஜ்ஞாநத்துக்கு பலமான மோக்ஷத்தை அப்போதே பெறவேணுமென் றாசைப்பட்டுப் பெறாமையாலே அவஸந்நராக, இவருடைய அவஸாதமெல்லாம் தீரும்படி அவன் வந்து ஸம்ச்லேஷித்து, அந்த ஸம்ச்லேஷத்தால் வந்த ப்ரீதியையுடையனாய், அந்த ப்ரீதி இவரொருவரளவில் பர்யவஸியாதே இவரோடு பரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டு அந்த ப்ரீதியாலே பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தை இவர்க்கு அவன் கொடுக்கத் தேட, அந்த மோக்ஷத்தை அவனுடைய சேஷித்வத்துக்கும் தம்முடைய சேஷத்வத்துக்கும் அநுகுணமாம்படி நிஷ்கர்ஷித்தவர், ஆச்ரயணீயனான வவனுக்குக் கீழுக்தமான பரத்வத்தை நிலைபெறுத்துவனவான லக்ஷணங்களை வெளியிட்டு, ததநுகுணமான வசந ப்ரத்யக்ஷங்களையும் தர்சிப்பித்து, ஆச்ரயிப்பார்க்கு ருசி பிறக்கைக்காக த்யாஜ்யமான ஸம்ஸாரத்தினுடைய துக்கமும் ப்ராப்யமான மோக்ஷத்தினுடைய ஆநந்தமும் ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வக மோக்ஷ ப்ராப்திக்குறுப்பான ஸாதகத்தினுடைய ரஸமும் முன்னாக விதிக்கிற ஸகுண ப்ரஹ்மோபாஸநத்தை நிஷித்தாநுஷ்டாநங்களினுடைய த்யாக பூர்வகமாக க்ஷேத்ர வாஸாத்யங்கங்களோடே கூட்டுகிறா ரென்கிறார்.

**விளக்கம்** – இரண்டாம் பத்தில் செய்வது என்ன? அனைத்து வஸ்துக்களுக்கும் காரணமாக உள்ள ஸர்வேச்வரன், முதல் பத்தின் மூலம், தான் அறியாத பலவற்றையும் தனக்கு உணர்த்தப் பெற்ற நம்மாழ்வார், இவ்விதம் அவன் மூலமாக ஞானம் பெற்று, அத்தகைய ஞானத்தின் பலனாகிய மோக்ஷத்தை உடனேயே அடையவேண்டும் என்று ஆசை கொண்டார். ஆனால் அந்த நிலையை அடைய இயலாமல் துக்கம் அடைந்தார். அவருடைய அந்தத் துக்கம் அனைத்தும் தீரும்விதமாக அவன் வந்து இவருடன் கலந்து நின்றான். இந்தச் சேர்க்கையால் அவன் மகிழ்ந்தான். அத்தகைய மகிழ்ச்சியானது இவர் ஒருவருடைய அளவில் மட்டும் நிற்காமல், இவருடன் ஸம்பந்தம் கொண்டுள்ள அனைவரிடத்திலும் சூழ்ந்து நின்றது. அந்த மகிழ்ச்சி காரணமாக மிகவும் உயர்ந்த புருஷார்த்தத்தின் லக்ஷணமாக உள்ள மோக்ஷத்தை இவருக்கு அளிக்க அவன் முன்வந்தான். அத்தகைய மோக்ஷத்தை அவனுடைய எஜமானனாக உள்ள தன்மை மற்றும் தான் அடிமையாக உள்ள தன்மை ஆகியவற்றுக்குத் தகுதியாக உள்ளவிதத்தில்


**Email:**sridharan_book@yahoo.co.in

உறுதியாக்கினார். இதனைத் தொடர்ந்து, அனைவராலும் அண்டுவதற்கு ஏற்றபடியாக உள்ள அவனுக்கு, முதற்பத்தில் கூறப்பட்ட பரத்வத்தை நிலைநாட்டுவதாக உள்ள அடையாளங்களை வெளிப்படுத்தினார். அந்த நிலைக்கு ஏற்றபடியாக உள்ள வசனங்களையும் காட்சிகளையும் காண்பித்தார். அவனை அண்ட முயல்பவர்களுக்கு மேலும் ஆசை ஏற்படும்விதமாக, கைவிடத்தக்கதான இந்த ஸம்ஸாரத்தின் துக்கம், அடையத்தக்கதான உள்ள மோக்ஷத்தின் ஆனந்தம் மற்றும் ஸம்ஸாரத்தை விலக்குவதற்கு முன்பாக மோக்ஷத்தை அடைவதற்கு உறுப்பாக உள்ள உபாயத்தின் சுவை ஆகியவற்றை முன்னிறுத்தியபடி, அனைத்து குணங்களுடன் கூடிய ப்ரஹ்ம உபாஸனையை விதித்து, அதற்கு உதவுவதாக உள்ள தீயவற்றை விலக்குதல் மறும் திவ்யதேசங்களில் வசித்தல் முதலியவற்றைச் செய்யவேண்டும் என்கிறார்.

**வ்யாக்யானம்** - [1] (சோராத மூவா வேர்முதலா யுலகம் படைத்தவனென்கிற சிதசித் த்ரய த்ரிவித காரணமானவன்) "சோராத வெப்பொருட்குமாதியாஞ்சோதி", "மூவாத்தனி முதலாய்", "எப்பொருட்கும் வேர் முதலாய் வித்தாய்", "பொருளென்றிவ் வுலகம் படைத்தவன்" என்று லீலா விபூதியில் ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும், ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட வேஷத்தாலே உபாதாநமாயும், ஜ்ஞாந சக்த்யாதி குண விசிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரியாயும் நித்யவிபூதியில் இச்சா விசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும்; அப்ராக்ருதா சிஜ்ஜீவ விசிஷ்ட வேஷத்தாலே உபாதாநமாயும், விநியோகோபயோகி ஜ்ஞாநாதி விசிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரியாயும்; இப்படி பத்த முக்த நித்ய ரூபமான சித் த்ரயத்துக்கும் ப்ராக்ருதாப்ராக்ருத காலரூபமான அசித் த்ரயத்துக்கும் த்ரிவித காரணமும் தானேயான ஸர்வேச்வரன்.

**விளக்கம்** - (சோராத மூவா வேர்முதலா யுலகம் படைத்தவனென்கிற) - திருவாய்மொழி (2-1-11) - சோராத வெப்பொருட்குமாதியாஞ்சோதி - என்றும், (2-8-5) - மூவாத்தனி முதலாய் – என்றும், (2-8-10) - எப்பொருட்கும் வேர் முதலாய் வித்தாய் - என்றும், (2-10-11) - பொருளென்றிவ் வுலகம் படைத்தவன் - என்றும் உள்ள பாசுரங்களில் கூறப்படுவதான. (சித் அசித் த்ரய த்ரிவித காரணமானவன்) - இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் தனது ஸங்கல்பம் கொண்டு மட்டுமே ஸ்ருஷ்டிப்பதால் நிமித்தகாரணமாகவும், ஸூக்ஷ்மமான சித் மற்றும் அசித் ஆகியவற்றுடன் கூடியதால் உபாதான காரணமாகவும், விநியோகம் கொள்வதற்குத் தகுதியாக உள்ள ஞானம், சக்தி போன்றவற்றுடன்


Email:sridharan_book@yahoo.co.in

கூடியுள்ளதால் ஸஹகாரி காரணமாவும்; இப்படியாக பத்தர், முத்தர் மற்றும் நித்யர் என்பதான மூன்று சித் வஸ்துக்களுக்கும்; ப்ராக்ருதம், அப்ராக்ருதம் மற்றும் காலம் என்பதான மூன்று அசித் வஸ்துக்களுக்கும் மூன்றுவிதமான காரணமாக உள்ள ஸர்வேச்வரன்.

**வ்யாக்யானம்** - (அறியாதனவறிவிக்க வுள்ளம் தேறி) "அறியாதன அறிவித்த" என்று இவர்க்கு அஜ்ஞாதமான தத்வஹித புருஷார்த்தங்களை விசத தமமாக வறிவிக்க, "அடியை யடைந் துள்ளந்தேறி" என்று அத்தாலே இவருமவனைக் கிட்டி நெஞ்சில் தெளிவையுடையராய். (தூமனம் மருளிலென்னும் ஜ்ஞாந பலமான ஒளிக் கொண்ட மோக்ஷம் தேடிவாட) "தூமனத்தனனாய்", "மருளில் வண்குருகூர் வண்சடகோபன்" என்று மோக்ஷைகஹேதுதயா பரிசுத்தமான அந்தகரணத்தை யுடையராய், அவனுடைய கல்யாண குண விஷயமான அஜ்ஞாந கந்தமில்லாதபடி கீழில் பத்தில் பிறந்த தம்முடைய ஜ்ஞாநத்துக்கு பலம் மோக்ஷமாகையாலே "களிப்பும் கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதிமயமாய், அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்று ப்ராக்ருத விஷய லாபாலாபங்களால் வரும் கர்வ க்லேசங்களும் ஷட்பாவ விகாரங்களும் போய், சுத்தஸத்வமாகையாலே நிரவதிக தேஜோரூபமான விக்ரஹத்தை யுடையோமாய், நித்யஸூரிகள் திரளிலே கூடப் பெறுவதெப்போதோவென்று, அந்த மோக்ஷத்தைப் பெறுகையில் ஆசையாலே தேடி, அப்போதே கிடையாமையாலே, "வாடி வாடும்" என்று ஆச்ரயத்தை யிழந்த தளிர்போலே வாட.

**விளக்கம்** - (அறியாதனவறிவிக்க வுள்ளம் தேறி) – திருவாய்மொழி (2-3-2) - அறியாதன அறிவித்த - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வார் அறியாதவையாக இருந்த உண்மையாகவும் நன்மையாகவும் உள்ள புருஷார்த்தங்களை மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் இவருக்கு உணர்த்தினான். (உள்ளம் தேறி) - இதன் விளைவாக, திருவாய்மொழி (2-6-8) – அடியை யடைந் துள்ளந்தேறி – என்பதற்கு ஏற்ப இவரும் இவனை அண்டி நின்று உள்ளத்தில் தெளிவு கண்டவராக. (தூமனம் மருளில்) – திருவாய்மொழி (2-7-8) - தூமனத்தனனாய் – என்றும், (2-10-11) - மருளில் வண்குருகூர் வண்சடகோபன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மோக்ஷம் என்ற ஒன்றுக்கு மட்டுமே காரணமாக உள்ள தன்மையின் விளைவால், தூய்மை பெற்ற மனம் கொண்டவராக, அவனுடைய கல்யாணகுணங்களின் விஷயத்தில்

எந்தவிதமான அறியாமையும் அற்றவராக. (ஜ்ஞாந பலமான ஒளிக் கொண்ட மோக்ஷம் தேடிவாட) - முதல் பத்தில் தனக்கு ஏற்பட்ட ஞானத்தின் பலன் என்பது மோக்ஷம் என்பதால், திருவாய்மொழி (2-4-1) - களிப்பும் கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதிமயமாய், அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ - என்பதற்கு ஏற்ப இந்த உலக விஷயங்களை அடைதல் மற்றும் அடைய இயலாமை ஆகிய காரணமாக ஏற்படும் கர்வம் மற்றும் துக்கம் என்பதான ஆறுவிதமான மாற்றங்களும் விலகி, சுத்தஸ்த்வம் என்பதால் எல்லையற்ற தேஜஸ் ரூபமாகவே உள்ள திருமேனியை அடைந்து, நித்யஸூரிகளுடைய கூட்டத்தில் ஒன்றாகக் கலந்து நிற்பது எந்த நாளிலோ என்று ஏங்கி, அப்படிப்பட்ட மோக்ஷத்தைப் பெறும் ஆசை காரணமாகத் தேடி, அது உடனே கிட்டாத காரணத்தால், "வாடிவாடும்"என்பதற்கு ஏற்ப ஆதாரம் இழந்த கொடி வாடுவது போன்று வாடினார்.

**வ்யாக்யானம்** - (உலராமலாவி சேர்ந்து) "உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து" என்கிற தாபமாறும்படி "அந்தாமத்தன்பு செய்து என்னாவிசேரம்மானுக்கு" என்கிறபடியே பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை இவர் பக்கலிலே செய்து, கமர் பிளந்த தரையிலே நீர் பாய்ச்சுவாரைப் போலே இவரோடே நிரவதிக ஸம்ச்லேஷத்தைப் பண்ணி, (சிக்கெனப் புகுந்து) "சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே உலகுகளொக்கவே விழுங்கி சிக்கென புகுந்தான்" என்று அத்யல்பமாயிருப்பதொரு பதார்த்தமும் தன் பக்கல் நின்றும் பிரிகதிர்ப்பட்டு நோவுபடாதபடி தன் ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்திலே ஸர்வலோகங்களையு மொருக்காலே வைத்து இனிப்பேராதபடி புகுந்து. (ஸம்பந்திகளும் சேர்தல் மாறினரென்ன வாழ்வித்து) "எமர்கீழ் மேலெழு பிறப்பும் விடியா வெந்நரகத் தென்றும் சேர்தல் மாறினர்" என்று இவருடைய ஸம்பந்த ஸம்பந்திகளையும் ஸம்ஸாராந் முக்தராம்படி பண்ணி, அத்தாலே "எமரேழெழு பிறப்பும் கேசவன் தமர் மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா" என்று என்னோடு பரம்பரயா ஸம்பந்தமுடையாரும் என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக பகவததீயரானார்கள், நிர்ஹேதுக பகவத் க்ருபையாகிற பெரும் சதிரைப் பெற்று ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்தானது ஊற்று மாறாமல் பெருகுகிறபடியே! என்று இவர் தாமே ஆச்சர்யப்படும்படி இவரை வாழ்வித்து. (உபகரிக்கிற நீந்தும் கெடலிலெம்மாவீட்டை உபயாநுகுணமாக்கினவர்) இப்படி தம்முடைய ஸம்பந்தி பரம்பரையளவும் வெள்ளமிடுகிற தன் ப்ரீதியாலே தமக்கவனுபரிக்கத் தேடுகிற "நீந்துந்துயரில்லா வீடு", "கெடலில் வீடு", "எம்மாவீடு" என்று

துக்ககந்தரஹிதமாய் அநர்த்த கந்தமில்லாததாய், எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷத்தை எனக்கென்று, தரில் அந்த மோக்ஷம் அஹங்கார கர்ப்பமாகையாலே ஐச்வர்யாதிகளோபாதி ஸ்வரூப விருத்தமாகையாலே அதினுடைய ப்ரஸங்கமும் எனக்கஸஹ்யமான பின்பு எனக்கு மோக்ஷம் தரப்பார்த்ததாகில் "நின் செம்மாபாதபற்புத் தலை சேர்த்தொல்லை அம்மா அடியேன் வேண்டுவதீதே" என்று சேஷியான உன்னுடைய, அகவாய் சிவந்து புறவாய் ச்யாமமாய் பரம பூஜ்யமாய் பரமபோக்யமான திருவடிகளை சேஷபூதனான என் தலையிலே கொக்குவாயும் படுகண்ணியும் போலே சடக்கெனச் சேர்க்கவேணும். சேஷியான உன்பக்கல் சேஷபூதனான நான் அபேக்ஷித்துப் பெறுவதிதுவே யென்றும், "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே" என்றும் உபய ஸ்வரூபத்துக்கும் அநுகுணமாக நிஷ்கர்ஷித்தவர்,

**விளக்கம்** - (உலராமல் ஆவிசேர்ந்து) – திருவாய்மொழி (2-4-7) – உள்ளுள் ஆவி உலர்ந்து உலர்ந்து - என்பதற்கு ஏற்ப தாபம் ஆறும்விதமாக, திருவாய்மொழி (2-5-1) - அந்தாமத்தன்பு செய்து என்னாவிசேரம்மானுக்கு - என்று கூறுவதற்கு ஏற்ப பரமபதத்தில் இவன் காண்பிக்கும் மயக்கத்தை நம்மாழ்வாரிடமும் காண்பித்தான். வெப்பம் காரணமாக வெடித்த பூமியில் நீரைப் பாய்ச்சுவது போன்று நம்மாழ்வாருடன் எல்லையற்ற சேர்கையைச் செய்தான். (சிக்கெனப் புகுந்து) – திருவாய்மொழி (2-6-2) - சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே உலகுகளொக்கவே விழுங்கி சிக்கென புகுந்தான் - என்பதற்கு ஏற்ப மிகவும் சிறிய பொருள் கூட தன்னைவிட்டு அகன்று சென்று துன்பம் அடையாதபடி, தனது ஸங்கல்பத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கு மூலமே லோகங்கள் அனைத்தையும் ஒரே நிலையில் வைத்து, இனி இவர் அகலாதபடி இவருள் புகுந்தான். (ஸம்பந்திகளும் சேர்தல் மாறினரென்ன வாழ்வித்து) – திருவாய்மொழி (2-6-7) - எமர்கீழ் மேலெழு பிறப்பும் விடியா வெந்நரகத் தென்றும் சேர்தல் மாறினர் - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருடன் ஸம்பந்தம் கொண்டுள்ள அனைவரையும் இந்த ஸம்ஸாரத்திலிருந்து எழுப்பி, அவர்களையும் முக்தராக்கினான். இந்த காரணமாக, "திருவாய்மொழி (2-7-1) - எமரேழெழு பிறப்பும் கேசவன் தமர் மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா - என்பதற்கு ஏற்ப என்னுடன் பரம்பரையாகத் தொடர்பு கொண்டுள்ள அனைவரும், என்னுடன் கொண்ட அந்த ஸம்பந்தம் காரணமாக அவனுக்கு அடிமை என்றானார்கள். எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படுகின்ற பகவத் க்ருபை என்னும் பெரும் சதிரைப் பெற்ற ஸ்ரீவைஷ்ணவன் என்ற செல்வமானது, ஊற்று மாறாமல் இவ்விதம் பெருகியபடி

 **Email:**sridharan_book@yahoo.co.in

உள்ளதே” என்று நம்மாழ்வாரே வியந்து போகும்படியாகச் செய்தான். (உபகரிக்கிற) - இவ்விதம் தன்னுடைய ஸம்பந்தம் கொண்டுள்ள பரம்பரை முடிய உள்ளவர்கள் அனைவரையும் சூழ்ந்து நிற்கிற அவனுடைய ப்ரீதியால் தனக்கு அவன் அளிக்கத் தேடுவதாகிய, (நீந்தும்) - திருவாய்மொழி (2-8-2) - நீந்துந்துயரில்லா வீடு - என்பதற்கு ஏற்ப துக்கம் என்பது சிறிதும் இல்லாததாக. (கெடலில்) - திருவாய்மொழி (2-9-11) – கெடலில் வீடு - என்பதற்கு ஏற்ப அழிவற்றதாக. (எம்மா வீட்டை) - திருவாய்மொழி (2-9-1) – எம்மா வீடு - என்பதற்கு ஏற்ப அனைத்துவிதங்களிலும் மேன்மையாக உள்ள மோக்ஷத்தை. (உபய அநுகுணம் ஆக்கினவர்) - எனக்கென்று அளிக்க முற்பட்டால், அவ்விதம் அளிக்கப்படுகின்ற மோக்ஷமானது அஹங்காரத்தை உள்ளடக்கியது என்பதால், செல்வம் முதலானவற்றைப் போன்றே ஆத்ம ஸ்வரூபத்திற்கு விரோதம் ஆகிறது; ஆகவே அதனைக் குறித்த பேச்சு கூட எனக்குப் பொறுக்க இயலாதபடி உள்ளது. இவ்விதம் உள்ளபோது எனக்கு மோக்ஷம் அளிக்க முனைந்தால், திருவாய்மொழி (2-9-1) - நின் செம்மாபாதபற்புத் தலை சேர்த்தொல்லை அம்மா அடியேன் வேண்டுவதீதே - என்பதற்கு ஏற்ப எஜமானனாகிய உன்னுடைய உட்புறம் சிவந்தும் வெளிப்புறம் கருமையாகவும் உள்ளதும், உயர்ந்ததாகவும் பூஜிக்கப்பட வேண்டியதும், உயர்ந்த இனிமையானதும் ஆகிய உனது திருவடிகளை, உனது அடிமையாக உள்ள எனது தலை மீது, கொக்கின் வாய் மற்றும் அதற்கு ஏற்ற மீன் போன்று சட்டென்று சேர்க்கவேண்டும். எஜமானனாகிய உன்னிடம், அடிமையாக உள்ள நான், வேண்டி நின்று பெறுவது இதுவே ஆகும் என்றும், திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே – என்பதன் மூலமும் இவருடைய தன்மைகளுக்கும் ஏற்றபடி உறுதியாக உரைத்தார். இவ்விதம் உரைத்த நம்மாழ்வார் …

**வ்யாக்யானம்** - (ஆச்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற) ஆச்ரயணீயனானவனுக்கு, முதற்பத்தில் சொல்லப்பட்ட ஸர்வஸ்மாத் பரத்வத்தை நிலை பெறுத்துவனவான. (ஸகல பலப்ரதத்வ காரணத்வ சேஷசாயித்வ ச்ரிய:பதித்வ ஸௌலப்யாதிகளைத் திண்ணனனைவதென்று வெளியிட்டு) “வீடு முதல் முழுதுமாய்” என்று ஸகல பல ப்ரதத்வம், “தேவுமெல்லாப் பொருளும் கருத்தில் வருத்தித்த மாயப்பிரான்”, “ஆக்கினான் தெய்வவுலகுகள்” என்று ஸர்வகாரணத்வம், “ஆழியம் பள்ளியாரே” என்று லக்ஷணையாலே சேஷசாயித்வம், “பூமகள் தன்னை வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து” என்று ச்ரிய:பதித்வம்; “கண்ணன்கண்”, “கோபால


**Email:**sridharan_book@yahoo.co.in

கோளரியேறு" என்று அவதார ஸௌலப்யம், ஆதிசப்தத்தாலே "தகுங்கோலத் தாமரைக்கண்ணன்" என்று புண்டரீகாக்ஷத்வம், "ஏழுலகுங் கொள்ளும்", "வள்ளல் வல்வயிற்றுப் பெருமான்" என்று அகடிதகடநா ஸாமர்த்த்யம் என்கிறவிவற்றை, "திண்ணன் வீட்"டிலும்,

**விளக்கம்** - (ஆச்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற) - அனைவராலும் அண்டி நின்று வணங்கத்தக்கவனாக உள்ள ஸர்வேச்வரனுக்கு, முதற்பத்தில் கூறப்பட்டதான "அனைத்திலும் உயர்ந்தவன்" என்று உயர்ந்த நிலையை நிலை நாட்டுவதாகிய, (ஸகல பல ப்ரதத்வம்) – திருவாய்மொழி (2-2-1) - வீடு முதல் முழுதுமாய் – என்பதன் மூலம் அனைத்துவிதமான பலன்களையும் அளிப்பவனாக இருத்தல். (காரணத்வம்) – திருவாய்மொழி (2-2-8) - தேவுமெல்லாப் பொருளும் கருத்தில் வருத்தித்த மாயப்பிரான் – என்றும், திருவாய்மொழி (2-2-9) - ஆக்கினான் தெய்வவுலகுகள் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அனைத்திற்கும் காரணமாக இருத்தல். (சேஷசாயித்வம்) – திருவாய்மொழி (2-2-6) – ஆழியம் பள்ளியாரே – என்ற லக்ஷணை மூலம் ஆதிசேஷன் மீது சயனித்துள்ளவனாக இருத்தல். (ச்ரிய:பதித்வம்) – திருவாய்மொழி (2-2-3) - பூமகள் தன்னை வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து – என்பதன் மூலம் பெரியபிராட்டியின் நாதனாக இருத்தல். (ஸௌலப்யம்) – திருவாய்மொழி (2-2-1) - கண்ணன்கண் - என்றும், திருவாய்மொழி (2-2-2) - கோபால கோளரியேறு - என்றும் கூறுவதன் மூலம் அவதாரங்களில் எளிமையுடன் இருத்தல், "ஸௌலப்யாதி" என்பதில் உள்ள "ஆதி" சப்தம் மூலம் திருவாய்மொழி (2-3-5) - தகுங்கோலத் தாமரைக்கண்ணன் - என்பதான தாமரை போன்ற திருக்கண்கள் கொண்ட நிலை மற்றும் திருவாய்மொழி (2-2-7) – ஏழுலகுங்க் கொள்ளும் – என்றும், திருவாய்மொழி (2-2-7) – வள்ளல் வல்வயிற்றுப் பெருமான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப வேறு யாராலும் செய்ய இயலாதவற்றைச் செய்யும் தன்மை ஆகியவற்றுடன் கூடி இருத்தல் முதலானவை கூறப்பட்டது. இப்படியாக உள்ள பலவும், திருவாய்மொழி (2-2) - திண்ணன் வீடு - என்ற திருவாய்மொழியில் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – "அணைவதரவணை மேல்" என்று சேஷசாயித்வம், "பூம்பாவையாகம் புணர்வது" என்று ச்ரிய:பதித்வம், "இருவரவர் முதலும்தானே" என்று காரணத்வம், "இணைவனா மெய்பொருட்கும்" என்று அவதார ப்ரயுக்த ஸௌலப்யம், "வீடு முதலாம்" என்று ஸகல பல ப்ரதத்வம், ஆதி சப்தத்தாலே "பிறவிக்கடல் நீந்துவார்க்கு புணைவன்"


Email:sridharan_book@yahoo.co.in

என்று மோக்ஷோபாயத்வம், “ஆனையிடர் கடிந்த” என்கிற ஆபத்ஸகத்வம், “மூவுலகும் காவலோன்" என்கிற ஸர்வ ரக்ஷகத்வம் என்கிறவிவற்றை “அணைவதரவணையி”லும் ப்ரகாசிப்பித்து.

**விளக்கம்** - அல்லது வேறு விதமாகவும் கூறலாம். திருவாய்மொழி (2-8-1) - அணைவதரவணை மேல் - என்பதால் ஆதிசேஷன் மீது சயனித்துள்ள தன்மை. திருவாய்மொழி (2-8-1) – பூம்பாவையாகம் புணர்வது - என்பதன் மூலம் பெரியபிராட்டியாரின் நாதனாக இருத்தல். திருவாய்மொழி (2-8-1) – இருவரவர் முதலும்தானே - என்பதன் மூலம் அனைத்திற்கும் காரணமாக இருத்தல். திருவாய்மொழி (2-8-1) - இணைவனா மெய்பொருட்கும் – என்பதன் மூலம் அவதாரங்களில் ஸௌலப்யத்துடன் இருத்தல், திருவாய்மொழி (2-8-1) – வீடு முதலாம் – என்பதன் மூலம் அனைத்து பலன்களையும் அளிக்கவல்ல தன்மையுடன் இருத்தல். “ஸௌலப்யாதி” என்பதில் உள்ள “ஆதி” என்ற பதம் மூலம் திருவாய்மொழி (2-8-1) – பிறவிக்கடல் நீந்துவார்க்கு புணைவன் - என்பதான மோக்ஷத்திற்கு உபாயமாக இருத்தல், திருவாய்மொழி (2-8-2) – ஆனையிடர் கடிந்த - என்பதன் மூலம் ஆபத்து காலங்களில் துணையாக இருத்தல், திருவாய்மொழி (2-8-5) - மூவுலகும் காவலோன் - என்பதன் மூலம் அனைத்தையும் காப்பாற்றும் தன்மையுடன் இருத்தல் போன்றவை கூறப்பட்டது. இப்படியாக உள்ள பலவும், திருவாய்மொழி (2-8) – அணைவது அரவணை - என்ற திருவாய்மொழியில் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, “வீடு முதல் முழுதுமாய்” என்று மோக்ஷ ப்ரப்ருத்ய சேஷ புருஷார்த்த ப்ரதனாயென்கையாலே ஸகல பல ப்ரதத்வத்தையும், “மிகுந்தேவு மெப்பொருளும் படைக்க”, “கருத்தில் தேவுமெல்லாப் பொருளும் வருத்தித்த”, “தன்னுந்தியுள்ளே வாய்த்த திசைமுகனிந்திரன் வானவராக்கினான்” என்று காரணத்வத்தையும் “திண்ணன் வீட்”டிலும்; “அணைவதரவணை மேல்” என்றும், “பூம்பாவையாகம் புணர்வது” என்றும், “இணைவனாமெப்பொருட்கும்” என்றும் அடைவே சேஷசாயித்வ ச்ரிய:பதித்வ ஸௌலப்யங்களையும், ஆதி சப்தத்தாலே “வீடு முதலாம்” என்று மோக்ஷ ப்ரதத்வத்தையும், “நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர் பல முந்து சீரில் படிமின்” என்று முமுக்ஷுபாஸ்யத்வத்தையும் “அணைவதரவணையி”லும் வெளியிட்


Email:sridharan_book@yahoo.co.in

டென்னவுமாம். இந்த யோஜனை, இதன் பட்டோலையான க்ரந்தத்தில் இவரருளிச் செய்ததுக்குச் சேருவது.

**விளக்கம்** - அல்லது வேறுவிதமாகவும் கூறலாம். திருவாய்மொழி (2-2-1) - வீடு முதல் முழுதுமாய் - என்பதன் மூலம் மோக்ஷத்தைத் தவிர்த்து உள்ளதான மற்ற புருஷார்த்தங்களையும் அளிப்பவன் என்பதால், அனைத்து பலன்களையும் அளிப்பவனாக உள்ள தன்மையுடன் இருத்தல், திருவாய்மொழி (2-2-5) - மிகுந்தேவு மெப்பொருளும் படைக்க - என்றும், திருவாய்மொழி (2-2-8) - கருத்தில் தேவுமெல்லாப் பொருளும் வருத்தித்த – என்றும், திருவாய்மொழி (2-2-9) - தன்னுந்தியுள்ளே வாய்த்த திசைமுகனிந்திரன் வானவராக்கினான் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அனைத்திற்கும் காரணமாக இருத்தல் ஆகிய இரண்டையும், திருவாய்மொழி (2-2) - திண்ணன் வீடு – என்பதில் கூறினார். திருவாய்மொழி (2-8-1) – அணைவது அரவணை மேல் - என்றும், திருவாய்மொழி (2-8-1) - பூம்பாவையாகம் புணர்வது - என்றும், திருவாய்மொழி (2-8-1) – இணைவனாமெப்பொருட்கும் – என்றும் கூறுவதன் மூலம் முறையே ஆதிசேஷன் மீது சயனித்துள்ள நிலை, மஹாலக்ஷ்மியின் நாதனாக உள்ள தன்மை மற்றும் ஸௌலப்யம் ஆகியவற்றைக் கூறினார். “ஆதி” என்பதன் மூலம் திருவாய்மொழி (2-8-1) – வீடு முதலாம் – என்பதன் மூலம் மோக்ஷத்தை அளிப்பவனாக இருத்தல், திருவாய்மொழி (2-8-4) - நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர் பல முந்து சீரில் படிமின் – என்பதன் மூலம் முமுக்ஷுக்களுக்கு உபாயமாக இருத்தல் ஆகியவற்றைத் திருவாய்மொழி (2-8) - அணைவது அரவணை - என்ற திருவாய்மொழியில் கூறினார் எனலாம். இந்தக் கருத்தை இதன் பட்டோலையாக உள்ள நூலில் இவரே அருளிச்செய்தது காணலாம்.

**வ்யாக்யானம் -** முற்பட்ட யோஜனையில், “ஆழியம் பள்ளியாரே” என்று சேஷசாயித்வம் லக்ஷணையாலே கொள்ளவேண்டுகையும், “வீடு முதலாம்” என்று மோக்ஷத்துக்கு ஹேதுவாமென்கிறத்தை ப்ரகரண விருத்தமாம்படி மோக்ஷாதி புருஷார்த்த ப்ரதத்வமாகச் சொல்லுகையும், ஸகல பலப்ரதத்வம் என்று தொடங்கி இவரெண்ணின வடைவுக்குச் சேர இரண்டு திருவாய்மொழியிலும் சொல்லப் போகாமையுமாகிற அஸ்வாரஸ்யங்களுமுண்டு.

**விளக்கம்** - முதலாவதாக அருளிச்செய்த கருத்தில் உள்ளதான திருவாய்மொழி (2-2-6) – ஆழியம் பள்ளியாரே - என்பதற்கு “ஆதிசேஷன் மீது சயனித்துள்ளவன்” என்னும்

பொருளை லக்ஷணையாகக் கொள்ளலாம் என்றும், திருவாய்மொழி (2-8-1) - வீடு முதலாம் – என்பதன் மூலம் மோக்ஷத்திற்குக் காரணாமாக உள்ளவன் என்பதை இந்த இடத்திற்கு முரணாகாதபடி மோக்ஷம் முதலான புருஷார்த்தங்களை அளிப்பவன் என்று பொருள் கொள்ளலாம் என்றும், அனைத்து பலன்களையும் அளிப்பவன் என்பது தொடக்கமாக இவர் எண்ணிய கருத்திற்குச் சேரும்விதமாக "திண்ணன் வீடு" மற்றும் "அணைவது அரவணை" ஆகிய இரண்டு திருவாய்மொழிகளிலும் உரைக்காமல் விடுதல் போன்ற நயம் இன்மைகள் உள்ளன.

**வ்யாக்யானம்** - (கள்வா தீர்த்தனென்று வசந ப்ரத்யக்ஷங்களுங் காட்டி) "கள்வா" என்கிற பாட்டிலே, "அவதரித்து உன்னுடைய பரத்வம் தெரியாதபடி நின்றாயேயாகிலும் எங்களுக்குக் காரணபூதனான சேஷி நீயே", என்று தேவதாந்தரங்களில் தலைவரான ப்ரஹ்ம ருத்ராதிகளே தங்களுக்குக் காட்சி கொடுக்கைக்குப் பெரியதிருவடியை மேல் கொண்டு புறப்பட்டால் அவனுடைய திருவடிகளிலே விழுந்து கூப்பிடா நிற்பர்களென்று அவனே ஸர்வஸ்மாத் பரனென்னுமிவ்வர்த்தத்துக்கு தேவதாந்தரங்கள் வசனத்தையும், "தீர்த்தனுலகளந்த" என்கிற பாட்டிலே ஓரஸ்த்ர லாபத்துக்காக புஷ்பாதிகளுங்கொண்டு ருத்ரஸமாராதநம் பண்ணப்புகுகிற அர்ஜுநனைப் பார்த்து, "அந்த புஷ்பங்களை நம் காலிலே பொகடு" என்று க்ருஷ்ணனருளிச் செய்ய, அவனும் தீர்த்த பூதனானவனுடைய திருவுலகளந்தருளின திருவடிகளிலே அப்பூவைப் பணிமாற, "பார்த்தோ விஜேதா மதுஸூதநஸ்ய பாதாரவிந்தார்ப்பித சித்ர புஷ்பம், ததர்ச கங்காதர மௌலிமத்யே பபூவ வீர: க்ருத நிச்சிதார்த்த:" என்கிறபடியே தான் திருவடிகளில் சாத்தின புஷ்பங்களோடு ஸஜாதீயமானவற்றை யன்றிக்கே அவை தன்னையே பாடே பக்கேயன்றிக்கே ருத்ரன் தலைமேலே ஆப்த வாக்யத்தாலன்றிக்கே தானே ப்ரத்யக்ஷித்து, "ஸது பார்த்தோ மஹாமநா:" என்கிறபடியே பேரளவுடையனானவவன் நிர்ணயித்த பரத்வம் மந்தமதிகளாலே இன்றாராயும்படி யிருந்ததோவென்று ப்ரத்யக்ஷத்தையுங் காட்டி

**விளக்கம்** – (கள்வா என்று வசநம் காட்டி) - திருவாய்மொழி (2-2-10) – கள்வா - என்ற பாசுரத்தில், "திருஅவதாரம் செய்து உன்னுடைய உயர்ந்த தன்மை வெளிப்படாதபடி நீ நின்றாய் என்றாலும் எங்களுக்குக் காரணமாக உள்ளவன் நீயே", என்று தேவர்களுடைய தலைவர்களாக உள்ள நான்முகன், இந்த்ரன் முதலானவர்கள், தங்களுக்குக் காட்சி

அளிப்பதற்காகக் கருடன் மீது ஏறி புறப்பட்டு வந்தால், அவனுடைய திருவடிகளில் விழுந்து உரைப்பார்கள் என்று கூறினார். இதன் மூலம் அனைத்தைக் காட்டிலும் அவனே உயர்ந்தவன் என்று உணர்த்துவதற்கு, தேவர்களுடைய சொற்களைக் காண்பித்தார். (தீர்த்தன் என்று ப்ரத்யக்ஷம் காட்டி) – திருவாய்மொழி (2-8-6) - தீர்த்தன் உலகளந்த – என்ற பாசுரத்தில், ஒரு அஸ்த்ரத்தைப் பெறுவதற்காக மலர்கள் முதலானவை கொண்டு சிவனை ஆராதிக்க முயன்ற அர்ஜுனனிடம், "அந்த மலர்களை எனது திருவடிகளில் சேர்ப்பாயாக" என்று க்ருஷ்ணன் அருளிச்செய்ய, அர்ஜுனனும் மிகவும் தூய்மையான க்ருஷ்ணனுடைய அனைத்து லோகங்களையும் அளந்த திருவடிகளில் அந்த மலர்களைச் சமர்ப்பணம் செய்ய, பார்த்தோ விஜேதா மதுஸூதநஸ்ய பாதாரவிந்தார்ப்பித சித்ர புஷ்பம், ததர்ச கங்காதர மௌலிமத்யே பபூவ வீர: க்ருத நிச்சிதார்த்த: - வெற்றியுடன் கூடிய அர்ஜுனன், தான் க்ருஷ்ணனுடைய திருவடிகளில் இட்ட மலர்களை சிவனின் முடியில் கண்டான். தான் க்ருஷ்ணனுடைய திருவடிகளில் சமர்ப்பித்த மலர்கள் அல்லாமல் அதனைப் போன்று வேறு மலர்கள் எதும் இன்றி, அவற்றையே ஒன்றுவிடாமல் சிவனுடைய தலை மீது, மற்றவர்கள் கூறக் கேட்காமல், தானே நேரடியாகப் பார்த்து, கீதா பாஷ்யத்தில் ஸது பார்த்தோ மஹாமநா: - உயர்ந்த மனம் கொண்ட அந்த அர்ஜுனன் – என்பதற்கு ஏற்ப உயர்ந்த ஞானம் கொண்டவனாகிய அர்ஜுனன் உறுதிபட நிர்ணயம் செய்த க்ருஷ்ணனுடைய உயர்ந்த தன்மை என்பது, தாழ்ந்த அறிவு கொண்டவர்களால் இன்று ஆராயும்படி உள்ளதோ என்பதை உரைக்கும்விதமாக ப்ரத்யக்ஷத்தை காண்பித்தார்.

**வ்யாக்யானம்** - (புலனைந்தென்று ஸம்ஸார மோக்ஷ ஸாதத்துக்காநந்தரஸம் முன்னாக விதிக்கிற அந்தர்கத குணோபாஸநத்தை) "புலனைந்து" என்கிற பாட்டிலே ஆச்ரயணத்திலிழிகிறவர்களுக்கு த்யாஜ்யத்திலே ஜிஹாஸையும், ப்ராப்யத்தில் ப்ராவண்யமும், ஸாதநத்தில் ருசியும் விளையும்படி, "புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி" என்று பரிச்சிந்ந வஸ்துக்ராஹகமான இந்த்ரிய வச்யராகை தவிர்ந்தென்கையாலே, அல்பாஸ்திரத்வாதி தோஷ துஷ்டமான சப்தாதி போகங்களை அநுபவித்திருக்கும் ஸம்ஸாரத்தினுடைய துக்கமும்; "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று நன்மைக்கு முடிவில்லாத திருநாட்டிலே புகுவீரென்கையாலே மோக்ஷத்தினுடைய ஆநந்தமும், "பலமுந்து சீரில் படிமின்" என்று "ஸுஸுகம் கர்த்தும்" என்கிறபடியே ஸ்மர்த்தவ்ய விஷய ஸாரஸ்யத்தாலே பல தசையிற்போலே ஸாதந தசையிலும் இனிதாயிருக்கையாலே, பலம்

முற்பட்டிருக்கிற கல்யாணகுணங்களில் ப்ரவணராகுங்கோ ளென்கையாலே ஸாதகத்தினுடைய ரஸம் முன்னாக ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வமான மோக்ஷ ப்ராப்தி வேண்டியிருப்பார் அஸுர வர்க்கத்தைத் தடுமாறி முடிந்து போம்படி செற்றவனாகையாலே ப்ரபல ப்ரதிபந்தகங்களை அநாயாஸேந போக்கவல்லவனுடைய குணங்களிலே ப்ரவணராகுங்கோளென்று விதிக்கிற "தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம்" என்று ப்ரஹ்ம ஸ்வரூபாந்தர்கதமான அபஹதபாப்மத்வாதி குணோபாஸநத்தை.

**விளக்கம்** - (புலன் விதிக்கிற) - திருவாய்மொழி (2-8-4) – புலன் ஐந்து - என்ற பாசுரத்தில் அவனை அண்டி நிற்பவர்களுக்கத் தங்களால் கைவிடத்தக்கதாக உள்ளவற்றின் மீது வெறுப்பும், அடையப்போகும் பேற்றின் மீது ஆழ்ந்த விருப்பமும், உபாயத்தின் மீது ருசியும் ஏற்படும்படியாக, திருவாய்மொழி (2-8-4) - புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி – என்று அளவுபடுத்தப்பட்ட பொருள்களைப் பற்றுவதற்கு ஏற்றதாக உள்ள இந்த்ரியங்களுக்கு வசப்பட்டுள்ள நிலையைத் தவிர்ந்து என்கிறார்; ஆகவே அற்பமானவை மற்றும் நிலையற்றவை என்பது போன்ற தோஷங்களால் மூடப்பட்டபடி உள்ளதான ஸம்ஸாரத்தின் துக்கத்தை உரைத்தார். திருவாய்மொழி (2-8-4) - நலம் அந்தம் இல்லதோர் நாடு – என்று கூறுவதன் மூலம், நன்மைக்கு எல்லை என்பதே இல்லாமல் உள்ளதான பரமபதத்தில் புகுவீர் என்பதால், மோக்ஷத்தின் ஆனந்தத்தைக் கூறினார். திருவாய்மொழி (2-8-4) – பலமுந்துசீரில் படிமின் – என்று, கீதை (9-2) – ஸுஸுகம் கர்த்தும் - செய்வதற்குச் சுகமாக இருக்கும் - என்பதற்கு ஏற்ப எண்ணப்படுகின்ற விஷயத்தின் இனிமை காரணமாக, பேற்றின் நிலையைப் போன்றே உபாயநிலையிலும் இனிமையாக உள்ளதால் பலன் முன்பே வெளிப்படுவதாக உள்ள திருக்கல்யாண குணங்களில் ஆசை கொள்வீர்களாக என்று கூறுகிறார்; ஆகவே உபாயத்தை முன்னிறுத்தி அடையவேண்டும் என்று வேண்டியபடி உள்ளவர்கள், அஸுரர்களுடைய கூட்டமானது தடுமாறி முடிந்து போகும்படியாக அழித்தவன் என்பதால் எப்போதும் ஏற்படவுள்ள தடைகள் அனைத்தையும் மிகவும் எளிதாக நீக்கவல்லவனுடைய திருக்கல்யாண குணங்களில் ஈடுபட்டபடி இருப்பீர்களாக என்று விதிக்கப்படுவதான, (அந்தர்குண உபாஸனத்தை) – தைத்திரீயம் - தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம் - ப்ரஹ்மத்திடம் உள்ளவையே உபாஸிக்கத்தக்கவை - என்று ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் காணப்படுகின்ற பாபங்கள் அற்ற தன்மை போன்ற குணங்களுடைய உபாஸனத்தை.

**வ்யாக்யானம் -** (மதித்துப் பெருக்கி மூழ்கியழுந்திக் கீழ்மை வலம் சூதுஞ் செய்து இளமை கெடாமல்) “சதிரிள மடவார் தாழ்ச்சியை மதித்து திறமுடை வலத்தால் தீவினை பெருக்கி”, “வல்வினை மூழ்கி”, “நரகழுந்தி”, “கீழ்மை செய்து”, “வலங்கழித்து”, “சூதென்று களவும் சூதும் செய்து”, “கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்” என்று உபாஸந விரோதியான இதர விஷய ப்ராவண்யத்தைப் பண்ணி, அத்தாலே பாபங்களைக் கூடு பூரித்து, அவற்றிலே மறுநனைய மூழ்கித் தரைப்பட்டு தண்மையைச் செய்து பலத்தைப் பாழ் போக்கி பச்யதோஹரனாய் க்ருத்ரிமனாய் பால்யத்தைப் பாழே போக்காதே. (செய்யும் க்ஷேத்ர வாஸ ஸங்கீர்த்தநாஞ்ஜலி ப்ரதக்ஷிண கதிசிந்தநாத்யங்க யுக்தமாக்குகிறா ரிரண்டாம் பத்தில்) அதாவது, “பால்ய ஏவ சரேத் தர்மம்” என்றும், “தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதே ச்ரேயஸே ஸதா” என்றுஞ் சொல்லுகிறபடியே, பால்யத்திலே கர்த்தவ்யமான “மாலிருஞ்சோலை சார்வது சதிரே”, “போதவிழ் மலையே புகுவது பொருளே” என்கிற க்ஷேத்ர வாஸம், “பதியது வேத்தி” என்கிற ஸங்கீர்த்தநம் “தொழக் கருதுவதே” என்கிற அஞ்ஜலி, “வலஞ் செய்து நாளும் மருவுதல் வழக்கே” என்கிற ப்ரதக்ஷிணம், “நெறிபடவதுவே நினைவது நலமே” என்கிற கதி சிந்தனையாகிற இவை முதலான உபாஸநாங்கத்தோடே சேர்க்கிறார் இரண்டாம் பத்திலென்கை.

**விளக்கம்** - (மதித்து) – திருவாய்மொழி (2-10-2) - சதிரிள மடவார் தாழ்ச்சியை மதித்து, (பெருக்கி) - திருவாய்மொழி (2-10-2) - திறமுடை வலத்தால் தீவினை பெருக்கி, (மூழ்கி) - திருவாய்மொழி (2-10-9) – வல்வினை மூழ்கி, (அழுந்தி) – திருவாய்மொழி (2-10-7) – நரகு அழுந்தி, (கீழ்மை) – திருவாய்மொழி (2-10-6) – கீழ்மை செய்து, (வலம்) - திருவாய்மொழி (2-10-8) – வலம் கழித்து, (சூதும் செய்து) - திருவாய்மொழி (2-10-10) - சூது என்று களவும் செய்து, (இளமை கெடாமல்) - திருவாய்மொழி (2-10-1) – கிளரொளி இளமை கெடுவதன் முன்னம் - என்று உபாஸனைகள் செய்வதற்குத் தடையாக உள்ள மற்ற விஷயங்கள் மீது கொள்ளும் ஈடுபாட்டை அதிகரித்து, அதன் விளைவாக பாபங்கள் பலவற்றையும் மேன்மேலும் வளர்த்துக்கொண்டு, அவற்றில் மறுபடியும் மூழ்கியபடி இருந்து பல தாழ்வுகளையும் செய்து, அடையவேண்டிய பலனைப் பாழாக்கிக் கொண்டு, கள்வனாகவும் வஞ்சகனாகவும் நின்று, இளமைக்காலத்தை வீணடிக்காமல். (செய்யும்) – பால்ய ஏவ சரேத் தர்மம் - இளமையிலேயே தர்மம் செய்தல் வேண்டும் - என்றும், தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதே ச்ரேயஸே ஸதா - ஆகவே விவேகம் உள்ளவன்


Email:sridharan_book@yahoo.co.in

இளமையிலேயே கீர்த்தியைப் பெற முயல வேண்டும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, இளமைப் பருவத்திலேயே செய்யத்தக்கதாக உள்ள திருவாய்மொழி (2-10-1) - மாலிருஞ்சோலை சார்வது சதிரே - என்றும், திருவாய்மொழி (2-10-10) - போதவிழ் மலையே புகுவது பொருளே – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள திவ்யதேசத்தில் வசித்தல், திருவாய்மொழி (2-10-2) – பதியது வேத்தி - என்பதான ஸங்கீர்த்தனம், திருவாய்மொழி (2-10-9) - தொழக் கருதுவதே – என்பதான வணக்கம் செய்தல், திருவாய்மொழி (2-10-8) – வலஞ் செய்து நாளும் மருவுதல் வழக்கே - என்பதான ப்ரதக்ஷிணம் செய்தல், திருவாய்மொழி (2-10-6) - நெறிபடவதுவே நினைவது நலமே - என்பதான மோக்ஷ மார்க்கத்தை எப்போதும் சிந்தித்தல் ஆகிய இவை உள்ளிட்ட உபாஸன அங்கங்களுடன் இரண்டாம் பதத்தில் இணைக்கிறார்.

221. [1] முழுதுமாய் எங்கணுமொழிவற அருவாகி நின்று தோய்விலனாம் ஸர்வ வ்யாபகன் தீர்ந்தவடியார்களைத் தாளிணைக்கீழ்க் கொள்ளும் தன் படிக்கும், (2) நீ தந்த மாமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி அலமருகின்றேன் வேரறவரிந்து எந்நாளெங்கு வந்து தலைப்பெய்வனென்று கழித்துப் புகும் தங்காதலுக்கும் ஸத்ருசமாகக் கண்டு கொள்ளென்னும், [3] ஊனமில் மோக்ஷ பலமான முடிச்சோதியிலநுபவத்தாலே நித்ய வஸ்து நீடு பெற்று அவச்சேதமற்றவடிமை செய்யவேண்டும்படி ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து, [4] சொல்லிப் பாடியேத்திப் பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்ளிக் குதித்துத் தடுகுட்டக் கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதியுகளத் தம்மடியாரென்ன உடன்கூடும் ஸாத்யம் வளர, [5] பைகொள் பாம்பு போலே இந்த்ரிய வ்ருத்தி நியமமறப் பாடவந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோக க்ருத்தாய், [6] குறைமுட்டுப் பரிவிடர் துயர் துன்பமல்லல் துக்கம் தளர்வு கேடுகளின்றி அம்ருதாநந்த மக்நரானவர், செய்யதாமரைக் கண்ணன் அமரர் குலமுதலென்று அஞ்சாதபடி எளிவருமிணைவனா மென்றவை பரத்வமாம்படி, [7] அவனாகும் ஸௌலப்ய காஷ்டையைக் காட்டி, வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னாவது, வேண்டிற்றெல்லாம் தரும், தன்னாகவே கொள்ளும், கவி சொல்லவம்மினென்று, [8] முக்தைச்வர்யத்தை முன்னிட்டு ச்வவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம் பத்தில்.

**அவதாரிகை** - மூன்றாம் பத்தால், "தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத்" என்கிறபடியே கார்யபூத சேதநாசேதநங்களையடைய வ்யாபித்து தத்கத தோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனா

யிருக்கையாலே ஸர்வ வ்யாபகனான ஸர்வேச்வரன், கீழில் பத்தில் இவருபயாநுகுணமாக நிஷ்கர்ஷித்த மோக்ஷத்துக்கு பலமான ஸ்வவிக்ரஹாநுபவத்தை இவரைப் பண்ணுவிக்க; இவருமநுபவித்துத் தரித்து அவ்வநுபவ ஜநித ப்ரீதி ப்ரகாஷத்தாலே ஸர்வவித கைங்கர்யங்களும் செய்யவேண்டும்படியான அபிநிவேசத்தையுடையராய் தம்மபிநிவேசா நுகுணமாக அவன் காட்டிக் கொடுத்த அவனுடைய ஸர்வாத்ம பாவத்தைப் பேசி அத்தால் வந்த ப்ரீதியின் உகளிப்பையுடையராய், அந்த ப்ரீதி அவனளவிலே பர்யவஸியாதே பாகவத சேஷத்வத்தி லெல்லையளவும் சென்று அந்த பாகவதர்களுக்கு நிரூபகமான பகவத் வைலக்ஷண்யாநுஸந்தாநத்தாலே ஒன்றின் வ்ருத்தியை ஒன்றாசைப்படும்படி சேதந ஸமாதியையடைந்த கரணக்ராமமும் தாமும் தனித்தனி யநுபவிக்கவேண்டும் பெருவிடாயையுடையராய், இதர ஸ்தோத்ரத்துக்கு அநர்ஹகரணராய் அவ்வளவு மன்றிக்கே பகவத் ஸ்தோத்திரத்துக்கு அர்ஹகரணருமாய், பகவதநுபவத்துக்குத் தமக்கொரு ப்ரதிஹதி தொடக்கமானவையுமற்று நிரதிசயாநந்த யுக்தரானவர்,

**விளக்கம்** – தைத்திரீயத்தில் – தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் - அவை அனைத்தையும் ஸ்ருஷ்டித்து அவற்றுள் புகுந்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, கார்யங்களாக உள்ள அனைத்து சேதநங்கள் மற்றும் அசேதநங்கள் ஆகியவற்றை வ்யாபித்து நின்று, அவற்றுடைய தோஷங்கள் ஏதும் தன்னைத் தீண்டாதவனாக உள்ளதால், அனைத்திலும் பரவி நிற்கும் ஸர்வேச்வரன், கடந்த பத்தில், "அவனும் நம்மாழ்வாராகிய தானும்" என்று இருவருடைய ஸ்வரூபத்திற்கு ஏற்புடைய விதத்தில் நம்மாழ்வார் அறுதியிட்ட மோக்ஷத்தின் பலனாகிய தன்னுடைய திவ்யமங்கள திருமேனியை அவர் அனுபவிக்கும்படிச் செய்தான்; அதனை இவரும் அனுபவித்தார்; அதன் மூலம் உயிர் தாங்கும் நிலையில் நின்றார். அத்தகைய அனுபவத்தின் விளைவாக இவருக்கு ஏற்பட்ட அளவு கடந்த ப்ரீதி காரணமாக, அவனுக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்று மிகுந்த ஆசை கொண்டார். அத்தகைய ஆர்வத்திற்கு ஏற்புடைய விதத்தில் ஸர்வேச்வரன் தனக்குக் காட்டிக் கொடுத்த, "அனைவருக்கும் ஆத்மாவாக ஸர்வேச்வரனாகிய தானே உள்ள நிலை" என்பதைக் குறித்து உரைத்தார். அதன் வினைவாக ஏற்பட்ட ப்ரீதியால் மிகுந்த உகளிப்பு அடைந்தார். அத்தகைய ப்ரீதியானது ஸர்வேச்வரன் அளவில் மட்டுமே நின்றுவிடாமல், பாகவதர்களுக்கு அடிமை செய்தல் என்ற எல்லைவரை நீண்டது. அத்தகைய பாகவதர்கள் "இன்ன தன்மை கொண்டவர்கள்" என்பதை நிரூபிப்பதாகிய "எப்போதும் பகவானை

எண்ணியபடி இருத்தல்" என்பதன் மூலம் வெளிப்படுவதான, பகவானின் வேறுபட்ட சிறப்பைக் கூறுதல் என்ற காரணத்தால், தன்னுடைய ஒரு இந்த்ரியம் செய்யும் செயலை மற்றொரு இந்த்ரியம் செய்வதற்கு ஆசை கொள்ளும்படியாக, சேதநர்களின் தன்மையை அடைந்த தனது இந்த்ரியங்களும் தானும் தனித்தனியாக அவனை அனுபவிக்கவேண்டும் என்று ஆசை கொண்டார். ஸர்வேச்வரன் அல்லாது வேறு யாரையும் துதிக்கும் தகுதி அற்றபடி உள்ள இந்த்ரியங்களைக் கொண்டவராகவும், அது மட்டும் அல்லாமல் ஸர்வேச்வரனை மட்டுமே துதிப்பதற்காக தகுதி கொண்ட இந்திரியங்களைக் கொண்டவராகவும் இருந்தார்.

**வ்யாக்யானம்** – "புண்டரீகாக்ஷனாய் ஸூரிஸேவ்யனானவனை, நம்மாலாச்ரயிக்கப் போமோ" என்று ஸம்ஸாரிகள் அஞ்சிக்கை வாங்காமல் மேல் விழுந்தாச்ரயிக்கும்படி கீழிரண்டு பத்தாலுமுபதேசித்த அவதார ஸௌலப்யம் பரத்வ ஸ்தாநீயமாம்படி அர்ச்சாவதார ஸௌலப்யத்தை யுபதேசித்து, அர்ச்சிராதி கதியாலே பரமபதத்தை ப்ராபிப்பிக்குமவனை யொழிய இதர ஸ்தோத்ரத்திலே தாழவிழிகை நிஷ்ப்ரயோஜநம்; ஆன பின்பு நீங்கள், ஸகலபல ப்ரதனுமாய் ஸாம்யாபத்தி ப்ரதனுமான அவன் விஷயத்திலே வாசிகமானவடிமையைச் செய்யுங்கோளென்று நிஹீந வ்ருத்தியான இதர ஸேவையை நிவர்த்திப்பித்து, தம்முடைய வ்ருத்தியான வாசிக கைங்கர்யத்திலே மூட்டுகிறாரென்கிறார்.

**விளக்கம்** - அடுத்து மூன்றாம் பத்தில், "தாமரைமலர் போன்று அழகான திருக்கண்கள் கொண்டவனும், நித்யஸூரிகளால் எப்போதும் வணங்கப்படுபவனும் ஆகிய அவனை நம்மால் அண்ட இயலுமா?" என்று இந்த ஸம்ஸாரிகள் அச்சம் கொண்டு பின்வாங்காமல், அவனை வணக்கவேண்டும் என்று தீர்மானித்தார். ஆகவே முதல் இரண்டு பத்துக்களில் உபதேசித்த அவதாரத்தின் ஸௌலப்யம் என்பது மிகவும் உயர்ந்த நிலையிலேயே உள்ளது என்பதை உணர்த்தும்விதமாக அவதாரத்தின் எளிமையை உபதேசித்தார். மேலும், "அர்ச்சிராதி மார்க்கமாக பரமபதத்தை அடையும்படிச் செய்யும் பகவானை அல்லாமல் மற்ற விஷயக்களின் ஈடுபட்டு அவர்களைத் தொழுதபடி இருத்தல் என்பது பயனற்றது. ஆகவே அனைத்து பயன்களையும் அளிப்பவனும், தன்னைப் போன்றே ஸ்வரூபம் பெறுவதற்கு அருள் செய்பவனும் ஆகிய அவன் விஷயத்தில் சொற்கள் கொண்டு கைங்கர்யம் செய்வீர்களாக", என்று மற்றவர்கள் குறித்துச் செய்யப்படுவதான

தாழ்ந்த செயல்களை விலக்கி, தனது செய்கையான சொற்கள் மூலமான கைங்கர்யம் என்பதில் அவர்களை ஈடுபடுத்துகிறார்.

**வ்யாக்யானம்** - [1] (முழுது மாயெங்கணுமொழிவற அருவாகி நின்று தோய்விலனாம் ஸர்வவ்யாபகன்) "முழுதுமாய் முழுதியன்றாய்", "ஏழ்ச்சிக் கோடின்றி யெங்கணும் நிறைந்த வெந்தாய்", "எஞ்ஞான்றுமெங்கு மொழிவற நிறைந்து நின்ற", "அளவுடை யைம்புலன்க ளறியா வகையா லருவாகி நிற்கும்", " யாவையும் யாவரும் தானா யவரவர் சமயந்தோறும் தோய்விலன்" என்று தேசகால வஸ்துக்களால் பரிச்சேதிக்க வொண்ணாதபடி கார்ய பூத ஸகல சேதநா சேதங்களையும் வ்யாபித்து, "அநச்நந்நந்யோ அபி சாகசீதி" என்கிறபடியே தத்கத தோஷை ரஸம் ஸ்ப்ருஷ்டனாயிருக்கையாலே வ்யாபகனான ஸர்வேச்வரன். (தீர்ந்த வடியார்களைத் தாளிணைக் கீழ்க் கொள்ளும் தன் படிக்கும்) "தீர்ந்த வடியவர் தம்மை" என்று ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் தானேயாக அத்யவஸித்த ஆச்ரிதரை "சன்மசன்மாந்தரங்காத் தடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க்கொள்ளுமப்பன்" என்று ஜந்ம பரம்பரைகளில் புகாதபடி ரக்ஷித்து ஆரப்த சரீராவஸாநத்திலே அர்ச்சிராதிமார்க்கத்தாலே தேசவிசேஷத்திலே கொண்டு போய், ஸ்வஸ்வரூப ப்ராப்தியைப் பண்ணிக் கொடுத்து பாதோபதாநத்தோபாதியாகத் தன் திருவடிகளின் கீழேயிட்டுக்கொள்ளும் சேஷியான தன்னுடைய ஔதார்யத்துக்கும்.

**விளக்கம்** - (முழுவதுமாய்) – திருவாய்மொழி (3-1-8) - முழுதுமாய் முழுதியன்றாய் – என்றும், (எங்கணும்) - திருவாய்மொழி (3-2-4) - ஏழ்ச்சிக் கோடின்றி யெங்கணும் நிறைந்த வெந்தாய் - என்றும், (ஒழிவற) - திருவாய்மொழி (3-2-7) - எஞ்ஞான்றுமெங்கு மொழிவற நிறைந்து நின்ற - என்றும், (அருவாகி நின்று) - திருவாய்மொழி (3-10-10) - அளவுடை யைம்புலன்க ளறியா வகையா லருவாகி நிற்கும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இடம், காலம், பொருள் ஆகிய மூன்றாலும் அளவுபடுத்தி அறிய இயலாதபடி ஸ்ருஷ்டிக்கப்பட்ட அனைத்து சேதநம் மற்றும் அசேதநம் ஆகியவற்றில் வ்யாபித்து நின்று. (நோய்விலனாம் ஸர்வ வ்யாபகன்) - திருவாய்மொழி (3-4-10) - யாவையும் யாவரும் தானா யவரவர் சமயந்தோறும் தோய்விலன் – என்றும், கட உபநிஷத் - அநச்நந்நந்யோ அபி சாகசீதி – இவற்றைக் காட்டிலும் வேறுபட்ட அவன் ப்ரகாசித்தபடி - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவை அனைத்தின் தோஷங்களும் தன்னை தீண்டாதவிதத்தில் எங்கும் வ்யாபித்து நிற்கும் ஸர்வேச்வரன். (தீர்ந்த வடியார்களைத் தாளிணைக் கீழ்க் கொள்ளும் தன்

படிக்கும்) - திருவாய்மொழி (3-5-11) - தீர்ந்த வடியவர் தம்மை - என்பதற்கு ஏற்ப, அடைகின்ற பேறு மற்றும் அந்தப் பேறறை அடையும்படிச் செய்யும் உபாயம் ஆகிய இரண்டும் ஸர்வேச்வரனே ஆவான் என்று உறுதியாக எண்ணியபடி உள்ள தனது அடியார்களை, திருவாய்மொழி (3-7-7) - சன்மசன்மாந்தரங்காத் தடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க்கொள்ளுமப்பன் – என்பதற்கு ஏற்ப தொடர்ந்து வருகின்ற பிறைகளில் செல்லாதபடிக் காப்பாற்றி, இப்போது எடுத்துள்ள இந்தச் சரீரத்தின் முடிவில் அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதத்திற்குக் கொண்டு சென்று, தனது ஸ்வருபத்தை அடைகின்ற நிலையை அளித்து, தனது திருவடிகளுக்கு அணை போன்றுள்ளதாக அவர்களை தனது திருவடிகளின் கீழ் சேர்த்துக் கொண்டு நிற்கும் எஜமனனாகிய இத்தகைய வள்ளல் தன்மைக்கும்.

**வ்யாக்யானம்** - [2] (நீ தந்த மாமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி யலமருகின்றேன் வேரறவரிந்து எந்நாளெங்கு வந்து தலைப்பெய்வனென்று கழித்துப் புகும் தம் காதலுக்கும்) "அந்நாள் நீ தந்த வாக்கையின் வழியுழல்வேன்", "பல்மாமாயப் பல்பிறவியில் படிகின்ற யான்", "பொல்லாவாக்கையின் புணர்வினை", "வினையியல் பிறப்பழுந்தி", "கொடுவினைத் தூற்றுள் நின்று பாவியேன் பல காலம் வழி திகைத்தலமருகின்றேன்" என்று ஸ்ருஷ்டி காலத்திலே உன்னைப் பெறுகைக்கு உடலாக நீ தந்த சரீரத்தைக் கொண்டு உன்னைப் பெறப்பாராதே, நான் அதின் வழியே போய் அநர்த்தத்தைச் சூழ்த்துக் கொண்டு, குணத்ரய பேதத்தாலே பலவகைப்பட்டு துரத்யயையான ப்ரக்ருதி கார்யமான தேவாதி தேஹங்களிலே அவகாஹித்து, ஹேயமான சரீரத்துக்கடியாய் ஒன்றோடொன்று பிணைந்திருக்கிற கர்மமடியாக மீண்டும் பாபத்திலே கொண்டுபோய் மூட்டக்கடவதான ஜந்ம பரம்பரைகளிலே யழுந்தி; என்னாலடியறுக்கவும், அடிகாணவு மொண்ணாதே, புகுரவழி தெரியுமதொழியப் புறப்பட வழி தெரியாத பாபமாகிற மிடைந்த தூற்றிலே யகப்பட்டு நின்று உன்னை ப்ராபிக்கைக்கீடான வழிகாணாதே கூப்பிட்டலமாவா நின்றேன். "வினைகளை வேரறப் பாய்ந்து", "தொன்மா வல்வினைத் தொடர்களை முதலரிந்து" என்று அநாதியாய் அபரிச்சேத்யமாய் ஸ்வயத்ந நிவர்த்தியமல்லாதபடி அதிப்ரபலமான பாபங்களினுடைய அநுபந்தங்களை மறுகிளை வாராமல் வேரற்றுப் போம்படி ஊசிவேரோடே யறுத்துப் போகட்டு, "எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவன்", "எங்கு வந்தணுகிற்பன்", "எங்கினித் தலைப் பெய்வன்" என்று நானுன்னைக் கிட்டுவதொரு நாளறுதியிட்டுத் தரவேணும், நானுன்னை

யெங்கே வந்து கிட்டக்கடவேன், இனி கிட்டுகை யென்றொரு பொருளுண்டோவென்று சரீர ஸம்பந்தத்துக்கு நொந்து; அதிலுண்டான அருசியோடே "காயங்கழித்தவன் தாளிணைக்கீழ்ப் புகுங்காதல்" என்று பகவத்குணாநுபவத்தோடே காலக்ஷேபத்தைப் பண்ணி சரீரத்தை விட்டு அவன் திருவடிகளின் கீழே புகவேணுமென்னும்படியான சேஷ பூதரான தம்முடைய ஆசைக்கும். (ஸத்ருசமாகக் கண்டு கொள்ளென்னும்) இப்படியான இருவர்படிக்கும் தகுதியாக "வானவர் நாட்டையும் நீ கண்டு கொள்" என்றீச்வரன் காட்டிக் கொடுக்கிற.

**விளக்கம்** - (நீ தந்த) - திருவாய்மொழி (3-2-1) - அந்நாள் நீ தந்த வாக்கையின் வழியுழல்வேன் – என்று கூறுவதற்கு ஏற்ப ஸ்ருஷ்டியின்போது உன்னை வந்தடைவதற்கு ஏற்றபடியாக நீ எனக்கு அளித்த சரீரத்தைக் கொண்டு உன்னைப் பெறுவதற்கு முயலாமல், நான் அந்தச் சரீரம் மூலமாக எனக்குப் பல தீமைகளை வரவழைத்துக் கொண்டு. (மா மாய) – திருவாய்மொழி (3-2-2) - பல்மாமாயப் பல்பிறவியில் படிகின்ற யான் - என்பதற்கு ஏற்ப மூன்று குணங்களுடைய வேறுபாடு காரணமாகப் பலவகையாக உள்ளதும், தாண்ட இயலாதபடி உள்ளதும் ஆகிய ப்ரக்ருதியின் செயல்களாக உள்ள தேவர்கள் முதலான சரீரங்களில் புகுந்து. (புணர்வினை) - திருவாய்மொழி (3-2-3) - பொல்லாவாக்கையின் புணர்வினை - என்பதற்கு ஏற்ப இத்தகைய தாழ்ந்த சரீரத்திற்குக் காரணமாக உள்ளதும், ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததும், திருவாய்மொழி (3-2-7) - வினையியல் பிறப்பழுந்தி - என்பதற்கு ஏற்ப உள்ளதான கர்மங்களின் விளைவாக மீண்டும் பாபங்களில் சென்று சேர்ப்பதாக ஆழமாக அழுந்தி, (அலமருகின்றேன்) - திருவாய்மொழி (3-2-9) - கொடுவினைத் தூற்றுள் நின்று பாவியேன் பல காலம் வழி திகைத்தலமருகின்றேன் - எனபதற்கு ஏற்ப என்னால் வேரை அறுக்க இயலாமலும், அதன் வேர் எது என்று காண இயலாமலும், இத்தகைய நிலையில் உள்ளே வருவதற்கான வழியை மட்டுமே அறிந்து, இதிலிருந்து வெளியேற வழி அறியாமல் உள்ளதான பாபங்கள் நிறைந்த குழியில் அகப்பட்டுக் கொண்டு நின்று, உன்னை வந்தடைவதற்கு ஏற்ற வழியை அறியாமல், உன்னை அழைத்தபடி திகைத்து நின்றேன். (வேர் அற அரிந்து) – திருவாய்மொழி (3-2-1) - வினைகளை வேரறப் பாய்ந்து – என்றும், திருவாய்மொழி (3-2-2) - தொன்மா வல்வினைத் தொடர்களை முதலரிந்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதும், அளவிட்டு அறிய இயலாததும், நம்முடைய முயற்சியால் விலக்க இயலாததும், அனைவரும் அறிந்ததும் ஆகிய

பாபங்களுடைய சங்கிலியை, அவை மீண்டும் துளிர்க்காமல் அறுத்து. (எந்நாள் எங்கு வந்து தலைப்பெய்வன் என்று) - திருவாய்மொழி (3-2-1) - எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவன் – என்றும், திருவாய்மொழி (3-2-5) - எங்கு வந்தணுகிற்பன் - என்றும், திருவாய்மொழி (3-2-9) - எங்கினித் தலைப் பெய்வன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, நான் உன்னை எந்த நாளில் வந்து அடைவேன் என்று அந்த நாளைக் குறித்து உறுதியாக உரைக்கவேண்டும்; நான் உன்னை எங்கே வந்து அடைவேன், இனி நான் சென்று அடைவதற்கு ஏற்ப ஒரு இடம் உள்ளதோ என்று பலவிதமான சரீரத்தின் ஸம்பந்தத்தை எண்ணி மனம் நொந்து, அதில் ஏற்பட்ட வெறுப்புடன். (கழித்துப்புகும் நம் காதலுக்கும்) - திருவாய்மொழி (3-9-8) – காயங்கழித்தவன் தாளிணைக்கீழ்ப் புகுங்காதல் - என்பதற்கு ஏற்ப பகவத் குணங்களை அனுபவித்தபடி காலத்தைக் கழித்து, இந்தச் சரீரத்தை விட்டு நீங்கி, அவனுடைய திருவடிகளின் கீழே புகவேண்டும் என்பதாக உள்ள அடியாரான தனது ஆசைக்கும். (ஸத்ருசமாக) - இப்படியாக இருவருடைய நிலைக்கு ஏற்றவிதத்தில். (கண்டு கொள் என்னும்) – திருவாய்மொழி (3-9-9) – வானவர் நாட்டையும் நீ கண்டு கொள் - என்பதற்கு ஏற்ப ஈச்வரன் காண்பித்துத் தருகின்ற.

**வ்யாக்யானம்** - [3] (ஊனமில் மோக்ஷபலமான முடிச்சோதியில நுபவத்தாலே நித்ய வஸ்து நீடு பெற்று) “ஊனமில் மோக்க மென்கோ” என்று ப்ரகாரமான ஆத்மாநுபவமாத்ரத்தி லன்றிக்கே ப்ரகாரியளவும் செல்லவநுபவிக்கையாலே குறைவில்லாததாய், ஸ்வரூபாநு ரூபமாகக் கீழில் பத்தில் அறுதியிட்ட பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்துக்கு பலம் பகவதநுபவ கைங்கர்யங்களாகையாலே, “முடிச்சோதி” என்கிற திருவாய்மொழியிலே அவன் வடிவழகையும் ஆபரணச் சேர்த்தியையுமநுபவித்து, அவை பரிச்சேதித்த நுபவிக்க வொண்ணாமையாலே இது கரண ஸங்கோச நிபந்தருமென்று நினைத்து இவர் படுகிற க்லேசத்தை விஷய வைலக்ஷண்ய நிபந்தநமென்றறிவித்து ஈச்வரன் நிவ்ருத்தமாக்க, அவ்வநுபவத்தாலே “பெற்றது நீடுயிரே” என்று நித்ய வஸ்து ஸத்தை பெற்று.

**விளக்கம்** – (ஊனமில் மோக்ஷபலமான) – திருவாய்மொழி (3-4-7) - ஊனமில் மோக்க மென்கோ - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய சரீரமாக உள்ள ஆத்ம அனுபவம் என்பது மட்டும் அல்லாமல், அந்தச் சரீரத்தின் உயிராக நிற்கும் அவன்வரை சென்று அனுபவிப்பதன் விளைவாகச் சிறிதும் குறைவு அற்றதாகவும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக இரண்டாவது பத்தில் உறுதிபட உரைக்கப்பட்டதும், உயர்ந்த புருஷார்த்த

லக்ஷணத்தைக் கொண்ட மோக்ஷத்தின் பலனாக உள்ளதும் ஆகிய பகவத் அனுபவம் மற்றும் கைங்கர்யங்கள் என்பவையாக உள்ளதால், (முடிச்சோதி அனுபவத்தாலே) - திருவாய்மொழி (3-1-1) – முடிச்சோதி - என்ற திருவாய்மொழியில் அவனுடைய வடிவழகு மற்றும் ஆபரணங்களுடன் சேர்ந்த அழகு ஆகியவற்றையும் அனுபவித்து. (நித்யவஸ்து நீடு பெற்று) – அவற்றை அளவுப்படுத்தி அனுபவிக்க இயலாமல் உள்ளதால், இத்தகைய நிலையானது தனது இந்த்ரியங்களில் உள்ள குறைவு காரணமாக ஏற்பட்டது என்று எண்ணி இவர் வருத்தப்பட்டு நின்றார். அப்போது ஈச்வரன் ஆழ்வாரிடம், "இத்தகைய நிலையானது நம்முடைய மேம்பட்ட வேறுபாடு காரணமாக உள்ளதாகும்", என்று உரைத்து அவருடைய வருத்தத்தை விலக்கினான். அந்த அனுபவம் காரணமாக ஆழ்வாரும் திருவாய்மொழி (3-2-10) - பெற்றது நீடுயிரே – என்று நித்யமாக உள்ள ஆத்மாவின் இருப்பை அடைந்தவராக.

**வ்யாக்யானம் -** (அவச்சேதமற்ற வடிமை செய்ய வேண்டும்படி) ஸத்தாகார்யமும் பலிக்க வேண்டுகையாலே "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்" என்று தேசகாலாவஸ்தா ப்ரகாரங்களையிட்டு அவச்சேதியாதபடி ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களும் செய்ய வேண்டும்படியான அபிநிவேசத்தாலே. (ஸர்வாத்ம பாவத்தைப் புகழ்ந்து) தம்முடைய பாரிப்புக்கீடாகத் தம்மையடிமை கொள்ளும்படி கோலி, அவன் காட்டிக் கொடுத்த ஸர்வாத்ம பாவத்தை "புகழுநல்லொருவனிலே", பூதங்கள் பௌதிகங்கள் உஜ்ஜ்வலமான மாணிக்யாதிகள் ரஸவத் பதார்த்தங்கள், காநாதி சப்தராசிகள், மோக்ஷாதி புருஷார்த்தங்கள் ஜகத்ப்ரதாநரான ப்ரஹ்மருத்ராதிகள், இவற்றுக்கடைய காரணமான ப்ரக்ருதி புருஷர்கள், இவற்றையடைய விபூதியாகவுடையனாய், இவற்றிலே அந்தராத்மதயா வ்யாபித்து தத்கத தோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனா யிருக்கிறபடியைப் பேசி அவ்வநுபவத்தாலே ப்ரீதராய்.

**விளக்கம் –** (அவச்சேதமற்ற வடிமை செய்ய வேண்டும்படி) - உயிர் தரித்திருப்பதற்கான செயலும் நிறைவேறவேண்டும் என்பதால், திருவாய்மொழி (3-3-1) - ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம் - என்று இன்ன இடம், இன்ன காலம், இன்ன நிலை, இன்ன கைங்கர்யம் என்று ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குள் அடங்காதபடியாக, அனைத்து இடங்களிலும் அனைத்து காலங்களிலும்

அனைத்து நிலைகளிலும் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்று ஏற்பட்ட ஆசை காரணமாக. (ஸர்வாத்ம பாவத்தைப் புகழ்ந்து) - அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்ய வேண்டும் என்பதான தனது பாரிப்புக்கு ஏற்றபடி தன்னை அடிமையாகக் கொள்ளும்படியாக விண்ணப்பித்து, அவன் காண்பித்துக் கொடுத்ததான "அனைத்து சேதன அசேதனங்களுக்கும் ஆத்மாவாக இருத்தல்" என்ற தன்மையைத் திருவாய்மொழி (3-4) – புகழும் நல் ஒருவனில் - என்பதில் பஞ்சபூதங்கள், மற்ற பொருள்கள், ஒளியுடன் கூடிய மாணிக்கம், இசை போன்று ஓசைகள், மோக்ஷம் முதலான புருஷார்த்தங்கள், உலகில் முதன்மையானவராக உள்ள நான்முகன் மற்றும் ருத்ரன் போன்றவர்கள், இவை அனைத்திற்கும் காரணமாக உள்ள ப்ரக்ருதி மற்றும் புருஷன் முதலான அனைத்தையும் தனது செல்வமாகக் கொண்டவனாகவும், இவை அனைத்திலும் அவற்றுடைய தோஷங்கள் ஏதும் தன்னை வந்து தீண்டாதபடி உள்ளவனாகவும் இருக்கின்ற நிலையை உரைத்து, அந்த அனுபவத்தால் ப்ரீதி அடைந்தவராக.

**வ்யாக்யானம்** - [4] (சொல்லிப்பாடி யேத்திப் பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக் கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதிகள்) "எம்மானைச் சொல்லிப்பாடி", "பண்கள் தலைக்கொள்ளப்பாடி", "முனிவின்றியேத்தி", "பேர் பல சொல்லிப் பிதற்றி", "எழுந்தும் பறந்தும் துள்ளாதார்", "ஏத்திக் குனிப்பார்", "தடுகுட்டமாய்", "கும்பிடு நட்டமிட்டாடி", "உலோகர் சிரிக்க நின்றாடி", "நெஞ்சங் குழைந்து நையாதே" என்று வாசிக காயிக மாநஸ வ்யாபாரங்களாலே களிக்கும்படி அந்த ப்ரீதி தலைமண்டையிட்டுச் செல்ல, (தம்மடி யாரென்ன உடன் கூடும் ஸாத்யம் வளர) இப்படியுண்டான ப்ரீதி அவனளவில் பர்யவஸியாதே, "தம்மடியாரடியார் தமக்கடியா ரடியார் தம்மடியாரடி யோங்களே" என்று ததீய சேஷத்வத்தி னெல்லையிலே நிற்கிறவர்கள் நமக்குத்தேச்ய ரென்னும்படி, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்று கீழ்ப்பத்தில் ப்ரார்த்தித்த ஸாத்யம் அவர்களோடே கூடி அவனை யனுபவிக்குமளவன்றிக்கே அவனடியாருடைய சேஷத்வத்தி னெல்லையளவும் செல்ல வளர.

**விளக்கம்** – (சொல்லி) – திருவாய்மொழி (3-5-1) – எம்மானைச் சொல்லிப்பாடி – என்றும், (பாடி) - திருவாய்மொழி (3-5-2) – பண்கள் தலைக்கொள்ளப்பாடி – என்றும், (ஏத்தி) -

திருவாய்மொழி (3-5-6) – முனிவின்றி ஏத்தி – என்றும், (பிதற்றி) - திருவாய்மொழி (3-5-8) - பேர் பல சொல்லிப் பிதற்றி - என்றும், (எழுந்தும் பறந்தும் துள்ளி) - திருவாய்மொழி (3-5-1) - எழுந்தும் பறந்தும் துள்ளாதார் - என்றும், (குனித்து) - திருவாய்மொழி (3-5-6) – ஏத்திக் குனிப்பார் – என்றும், (தடுகுட்டம்) - திருவாய்மொழி (3-5-3) – தடுகுட்டமாய், (கும்பிடு நட்டமிட்டு) - திருவாய்மொழி (3-5-4) – கும்பிடு நட்டமிட்டாடி - என்றும், (சிரிக்க) - திருவாய்மொழி (3-5-3) – உலோகர் சிரிக்க நின்றாடி - என்றும், (குழைந்து நையும் ப்ரீதிகள்) - திருவாய்மொழி (3-5-7) – நெஞ்சங் குழைந்து நையாதே – என்றும் கூறுவதற்கு ஏற்ப வாக்கு, மனம் மற்றும் சரீரம் ஆகியவற்றின் செய்கைகள் மூலம் களித்திருக்கும்படியாக அந்த ப்ரீதியானது வளர்ந்தபடி இருக்க. (தம்மடி யாரென்ன உடன் கூடும் ஸாத்யம் வளர) - இவ்விதம் உண்டான ப்ரீதியானது அவன் வரை சென்று நின்று விடாமல், திருவாய்மொழி (3-7-10) – தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே – என்பதற்கு ஏற்ப, "அவனுடைய அடியார்களுக்கு அடிமையாக நிற்பது என்ற எல்லையில் நிற்பவர்களே நம்மால் ஏற்கப்படவேண்டியவர்கள்" என்பது வெளிப்படும்படியாக, திருவாய்மொழி (2-3-10) - அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ – என்று இரண்டாம் பத்தில் ப்ரார்த்தனை செய்த பேறானது, அவர்களுடன் சேர்ந்து நின்று அவனை அனுபவித்தல் என்பதுடன் மட்டும் நிற்காமல், அவனுடைய அடியார்களுக்கு அடிமை செய்தல் என்ற எல்லைவரை வளர்ந்தபடி உள்ளபோது.

**வ்யாக்யானம்** – [5] (பைகொள் பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்தி நியமமற) "பைகொள் பாம்பேறியுறை பரனே" என்று அவனுடைய ஸர்வாதிகத்வ ப்ரகாசகமான படுக்கையாயிருக்கும் திருவநந்தாழ்வான், "சக்ஷுச்ச்ரவா" என்கிறபடியே ஒரு கரணத்தாலே கரணாந்தர வ்ருத்தியையும் கொள்ளுமாபோலே, "நெஞ்சமே நீணகராகவிருந்த வென் தஞ்சனே", "வாசகமே யேத்தவருள் செய்யும் வானவர்தம் நாயகனே", "கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை", "கண்களால் காணவருங்கொல்" இத்யாதிகளாலே வாக் பாணி சக்ஷுச் ச்ரோத்ரங்களான இந்திரியங்கள் மநோ வாக் பாணி சக்ஷுர் வ்ருத்திகளை யாசைப்படும்படி யாகையாலே இந்த்ரிய வ்ருத்தி நியமமின்றிக்கே அவனை யநுபவிக்க வேண்டும்படியான பெருவிடாயையுடையராய். (பாடவந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோக க்ருத்தாய்) "வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேனல்லேன்" என்று இதர ஸ்தோத்ரத்துக்கு அநர்ஹகரணராய், "ஒன்றியொன்றியுலகம் படைத்தான்


Email:sridharan_book@yahoo.co.in

கவியாயினேற்கு” என்று ஜகத் ஸ்ருஷ்டி முகத்தாலே தம்முடைய உஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணின ஸர்வேச்வரன் விஷயத்திலே, “அஹம் ச்லோக க்ருத் அஹம் ச்லோக க்ருத்” என்கிற உபநிஷத்தின்படியே கவிபாடுமவருமாய்.

**விளக்கம்** - (பைகொள் பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்தி நியமமற) - திருவாய்மொழி (3-8-4) - பைகொள் பாம்பேறியுறை பரனே - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவனாக உள்ளவன் எனபதை வெளிப்படுத்தும்படியான படுக்கையாக உள்ள ஆதிசேஷன், சக்ஷுச்ச்ரவா – கண்களையே காதுகளாக – என்பதற்கு ஏற்ப ஒரு இந்த்ரியம் மூலம் மற்றொரு இந்த்ரியத்தின் செயல்ளைச் செய்வது போன்று, திருவாய்மொழி (3-8-2) - நெஞ்சமே நீணகராகவிருந்த வென் தஞ்சனே - என்றும், திருவாய்மொழி (3-8-3) – வாசகமே யேத்தவருள் செய்யும் வானவர்தம் நாயகனே – என்றும், திருவாய்மொழி (3-8-4) - கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை - என்றும், திருவாய்மொழி (3-8-5) - கண்களால் காணவருங்கொல் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் வாக்கின் செயலை மனமும், கைகளின் செயலை வாக்கும், கண்களின் செயலைக் கைகளும், காதுகளின் செயலைக் கண்களும் செய்ய விரும்புவதால், இந்த்ரியங்களுடைய செயல்பாடுகள் எந்த விதிமுறைகளுக்கும் உட்படாமல் அவனை அடைந்து அனுபவிக்கவேண்டும் என்ற பெருந்தாகம் மட்டுமே கொண்டவராக. (பாடவந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோக க்ருத்தாய்) - திருவாய்மொழி (3-9-9) - வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேனல்லேன் - என்று மற்ற எதனைக் குறித்தும் கவிப்பாடுவதற்கான தகுதி அற்ற இந்த்ரியங்களைக் கொண்டவராக, திருவாய்மொழி (3-9-10) - ஒன்றியொன்றியுலகம் படைத்தான் கவியாயினேற்கு - என்பதற்கு ஏற்ப ஜகத்தை ஸ்ருஷ்டித்த செயல் மூலமாக தான் கரையேறுவதற்கான செயல்களைச் செய்த ஸர்வேச்வரன் விஷயத்தில், அஹம் ச்லோக க்ருத் அஹம் ச்லோக க்ருத் - நான் கவி பாடுபவன், நான் கவி பாடுபவன் - என்றுள்ள உபநிஷத் வாக்கியத்தின்படி கவி பாடுபவராக.

**வ்யாக்யானம்** - [6] (குறை முட்டுப்பாவிடர்துயர் துன்பமல்லல் துக்கந்தளர்வு காடுகளின்றி அம்ருதாநந்த மக்நரானவர்) தேச விசேஷத்திலே போய் அநுபவிக்கப் பெற்றிலேனென்கிற குறைவில்லை, இவ்வநுபவத்துக்கு எனக்கொரு ப்ரதிஹதியில்லை, அவன் விஷயத்திலேயான பின்பு ஏகதேசமும் என் மநஸ்ஸில் துக்கமில்லை, வகுத்த சேஷியென்று பற்றுகையாலே எனக்கொரு துக்கமுமில்லை, ருசி முன்னாக தேசவிசேஷ


Email:sridharan_book@yahoo.co.in

ப்ராப்தி பண்ணுகிறவெனக்கு வைதிக புத்ரர்களைப்போலே மீளில் செய்வதென்னென்கிற துக்கமில்லை, இங்கே அவன் குணங்களை நெருங்க புஜித்தவெனக்கு பூர்ணாநுபவம் பண்ணலாம் தேசத்தில் போகப்பெற்றிலே னென்கிற துக்கமில்லை, இது அவன் லீலா விபூதியென்றறிந்தவெனக்கு இனி லீலாவிபூத்யந்வயமாகிற துக்கமில்லை, ஸ்வஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணவல்ல ஆச்சர்ய சக்தி யுக்தனானவனைப் பற்றின வெனக்கொரு துக்கமில்லை, அகடிதகடநா ஸமர்த்தனானவனைப் பற்றின வெனக்கொரு தளர்த்தியில்லை, விமுக தசையில் வ்யாப்தியாலும் அபிமுக தசையில் அவதாரத்தாலும் ரக்ஷிக்குமவனைப்பற்றின வெனக்கொரு கேடில்லை யென்றிப்படி, "சன்மம் பலபல"வில் பத்துப்பாட்டாலும் அடைவே தாமே பேசும்படி நிரஸ்த ஸமஸ்த க்லேசராய், அம்ருதரான முக்தர் பகவதநு பவத்தாலே ஆநந்திக்குமாப்போலே அவ்வாநந்த ஸாகர மக்நரானவர்.

**விளக்கம்** - (குறை முட்டுப்பாவிடர்துயர் துன்பமல்லல் துக்கந்தளர்வு காடுகளின்றி அம்ருதாநந்த மக்நரானவர்) – பரமபதத்தில் சென்று அவனை அனுபவிக்க இயலவில்லை என்ற குறையில்லை, அத்தகைய அனுபவத்திற்கு எனக்கு எந்தத் தடையும் இல்லை, அவனுக்கே என்று ஆன பின்னர் என் மனதில் சிறிதளவும் துக்கம் இல்லை, என்னுடைய இயல்பான எஜமானனைப் பற்றுவதில் எனக்கு எந்த ஒரு துக்கமும் இல்லை, அவன் மீது உள்ள ஆசை மற்றும் கைங்கர்ய ருசி ஆகியவற்றை முன்னிட்டுக் கொண்டு பரமபதத்திற்குச் செல்ல உள்ள எனக்கு வேதங்களை மட்டுமே உரைத்தபடி உள்ளவர்கள் எண்ணுவது போன்று "அங்கிருந்து திரும்ப நேர்ந்தால் என்ன ஆகும்" என்றுள்ள துக்கம் இல்லை, இங்கு உள்ளபோது அவனுடைய திருக்கல்யாண குணங்களை நன்றாக அனுபவித்த எனக்கு அத்தகைய குணங்களைப் பரிபூர்ணமாக அனுபவிக்கலாம் என்பதாக உள்ள பரமபதத்திற்குச் செல்ல இயலாது என்ற துக்கம் இல்லை, இந்த உலகமானது அவனுடைய லீலாவிபூதி என்று அறிந்த எனக்கு இனி இந்த உலகத்துடன் சேர்ந்து இருக்கவேண்டுமே என்ற துக்கம் இல்லை, தன்னுடைய நினைவு மூலம் மட்டுமே ஸ்ருஷ்டி போன்ற அனைத்தையும் செய்யவல்ல ஆச்சர்யமான சக்தி கொண்ட அவனைக் குறித்து எனக்கு எந்தத் துக்கமும் இல்லை, யாராலும் செய்ய இயலாதவற்றையும் செய்து முடிக்கும் திறமை கொண்ட அவனைக் குறித்து எனக்கு எந்தத் தளர்ச்சியும் இல்லை, அவனிடம் அன்பு என்பது இல்லை என்றாலும் எங்கும் பரந்து விரிந்துள்ள தன்மையாலும் பக்தி உள்ளபோது அவதாரம் மூலம் காப்பாற்றும் தன்மையாலும் அவனைப் பிடித்துக் கொண்ட


**Email:**sridharan_book@yahoo.co.in

எனக்கு எந்த கேடும் இல்லை என்று இவ்விதமாக திருவாய்மொழி (3-10) – சன்மம் பலபல - என்ற திருவாய்மொழியில் உள்ள பத்து பாசுரங்களாலும் முழுவதுமாக உரைத்து அனைத்து துயரங்களும் நீங்கியவராக, எப்போதும் அங்குள்ளவராகிய முக்தர்கள் பகவத் அனுபவம் மூலம் ஆனந்தம் பெறுவது போன்று, அத்தகைய ஆனந்தத்திற்கு நிகரான ஆனந்தக்கடலில் மூழ்கியவர்.

**வ்யாக்யானம்** - (செய்ய தாமரைக்கண்ணன் அமரர்குல முதலென் றஞ்சாதபடி) “செய்ய தாமரைக்கண்ணனாய்” என்று தொடங்கி “எஞ்சலிலமரர்குல முதல் மூவர் தமுள்ளுமாதியை யஞ்சி நீருலகத்துள்ளீர்கள்” என்று புண்டரீகாக்ஷத்வாதி பரத்வ சிஹ்நங்களை யுடையனானவன் ஜ்ஞாந ஸங்கோச ரஹிதரான நித்யஸூரிகள் திரளுக்கு நிர்வாஹகனன்றோ. ஸம்ஸாரிகளான நம்மாலவனை ஆச்ரயிக்கப்போமோ வென்றஞ்சாதபடி. (எளிவருமிணைவனா மென்றவை பரத்வமாம்படி) “எளிவரு மியல்வினன்”, “இணைவனா மெப்பொருட்கும்” என்று “பத்துடையடியவரிலும்”, “அணைவதரவணையிலும்” வெளியிட்ட வவதார ஸௌலப்யம் பரத்வஸ்தாநீயமாம்படி.

**விளக்கம்** – (செய்ய தாமரைக்கண்ணன் அமரர்குல முதல் என்று அஞ்சாதபடி) - அஞ்சாதபடி திருவாய்மொழி (3-6-1) - செய்ய தாமரைக்கண்ணனாய் – என்று தொடங்கி, திருவாய்மொழி (3-6-9) – எஞ்சலில் அமரர்குல முதல் மூவர்தம் உள்ளுமாதியை அஞ்சி நீருலகத்துள்ளீர்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப, தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவன் முதலான பரத்வத்திற்கே உரிய அடையாளங்களைக் கொண்டுள்ள அவன், ஞானத்தில் சுருக்கம் அடையாமல் உள்ள நித்யஸூரிகளுடைய நிர்வாஹகன் அல்லவோ? இவ்விதம் உள்ள அவனை ஸம்ஸாரிகளாகிய நம்மால் அண்ட இயலுமோ என்று அச்சம் கொள்ளாதபடியாக. (எளிவரும் இணைவனாம் என்றவை பரத்வமாம்படி) திருவாய்மொழி (1-3-2) - எளிவரும் இயல்வினன் – என்று திருவாய்மொழி (1-3) – பத்துடை அடியவர் - என்பதிலும், திருவாய்மொழி (2-7-1) – இணைவனாம் எப்பொருட்கும் – என்று திருவாய்மொழி (2-7) – அணைவது அரவணை – என்பதிலும் வெளியிட்ட அவதாரத்தின் எளிமை என்பது, பரத்வத்தையே வெளிப்பருத்துகிறது என்று கருத்து.

**வ்யாக்யானம்** – [7] (அவனாகும் ஸௌலப்ய காஷ்ட்டையைக் காட்டி) “நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள் கடல் வண்ணனே” என்று மநஸ்ஸாலே யாதொன்றைத்

திருமேனியாகக் கோலினிகோள், அபரிச்சேத்ய மஹிமனான ஸர்வேச்வரன் அத்தையே தனக்கு அஸாதாரண விக்ரஹமாக விரும்புமென்று “யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ் ததைவ பஜாம்யஹம்”, “அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணுர் அர்ச்சகபராதிகாகிலாத்ம ஸ்திதி” என்கிற அர்ச்சாவதாரமாகிற ஸௌலப்ய காஷ்டையைக் காட்டி, (வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னாவது) “ஒழிவொன்றில்லாத” என்று தொடங்கி, “இழியக் கருதியோர் மானிடம் பாடலென்னாவதே” என்று யாவதாத்மபாவி பகவதநுபவந்தான் ஒரு சிறாங்கை என்னும்படியான அர்ச்சிராதிமார்க்கத்தையும் தருகிறவன் தன்னையொரு சொல் சொல்லுவாராரோவென் றவஸர ப்ரதீக்ஷனாய் நிற்க, அவனை விட்டுப் புறம்பே கவிபாடுகைக்கு விஷயம் தேடிப்போய் ஒரு சொல்லுக்குப் பாத்தம் போராத க்ஷுத்ர மநுஷ்யரைக் கவி பாடி முன்பு நின்ற நிலையிலுங்காட்டில் தாழவிழிய நினைக்கிறவித்தால் என்ன பிரயோஜநமுண்டு? அத்தால் ஸ்வரூபம் பெற்றிலிகோள், அபிமதம் பெற்றிலிகோள். (வேண்டிற்றெல்லாம் தரும்) “ஸகல பல ப்ரதோஹி விஷ்ணு” என்கிறபடியே ஸர்வாபேக்ஷிதங்களையும் தரும். (தன்னாகவே கொள்ளும்) “பரமம் ஸாம்யமுபைதி” என்கிறபடி தன்னோடு ஸாம்யாபத்தியைக் கொடுக்கும். (கவிசொல்லவம்மினென்று) இதுக்கு நீங்கள் செய்யவேண்டுவ தொன்றுமில்லை; இதர ஸ்தோத்ரம் பண்ணி உங்கள் கரணங்களைப் பாழே போக்காதே, வாய் படைத்த ப்ரயோஜநம் பெறும்படி இவ்விஷயத்திலே கவி சொல்ல வாருங்கோளென்று.

**விளக்கம்** - (அவனாகும் ஸௌலப்ய காஷ்ட்டையைக் காட்டி) - திருவாய்மொழி (3-6-9) – நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள் கடல் வண்ணனே – என்று மனதினால் எதனை அவனுடைய திருமேனியாகக் கொள்கிறீர்களோ, எல்லையற்ற மஹிமை பொருந்தியவனாகிய ஸர்வேச்வரன் அதனையே தனக்குக் கிட்டுவதற்கு அரிய விக்ரஹமாகக் கொள்கிறான் என்று, கீதை (4-11) – யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ் ததைவ பஜாம்யஹம் – எந்த பக்தர்கள் என்னை எவ்விதம் ஆராதிக்கிறார்களோ நானும் அவர்களுக்கு அது போன்று உள்ளேன் - என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவம்(74) - அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணுர் அர்ச்சகபராதிகாகிலாத்ம ஸ்திதி – ஆராதிக்கத் தகுந்தவனாக, அனைத்து அபராதங்களையும் பொறுப்பவனாக, தனது நிலைகள் அனைத்தும் தன்னை உபாஸிப்பவர்களுக்கு அடிபணிந்தபடி - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான அர்ச்சாவதாரத்தில் காணப்படும் எளிமையின் எல்லையை உணர்த்தி. (வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னாவது) – திருவாய்மொழி (3-9-3) – ஒழிவு


Email:sridharan_book@yahoo.co.in

ஒன்றில்லாத - என்று தொடங்கி, திருவாய்மொழி (3-9-3) - இழியக் கருதியோர் மானிடம் பாடலென்னாவதே – என்பதற்கு ஏற்ப உயிர் உள்ளவரையில் பகவத் அனுபவத்துடன் வாழ்வதற்கு ஏற்ற ஒரு இடத்தையும், இத்தகைய அனுபவம் என்பதும் அற்பமானது ஆகும் என்பதாக உள்ள அர்ச்சிராதி மார்க்கத்தையும் அளிக்கும் ஸர்வேச்வரன், தன்னைக் குறித்து ஏதேனும் ஒரு சொல்லாவது உரைப்பார்களோ என்று தகுந்த நேரத்தை எதிர்ப்பார்த்தபடி உள்ளான். இவ்விதம் உள்ள அவனை விடுத்து, வேறு ஒரு விஷயம் ஏதேனும் நாம் கவி பாடத்தக்கபடி உள்ளதா என்று தேடிச்சென்று, ஒரு சொல்லுக்குக் கூடத் தகுதியற்றபடி உள்ள தாழ்ந்த மனிதர்களை குறித்துக் கவிபாடி, முன்பு உள்ள நிலையைக் காட்டிலும் தாழ்ந்து போக எண்ணுவதால் என்ன பயன் உள்ளது? அதனால் உங்கள் ஸ்வரூபம் அடையப்பெறுவீர்களோ? நீங்கள் விரும்பும் பயன்கள் அனைத்தையும் பெறுவீர்களோ? (வேண்டிற்றெல்லாம் தரும்) – ஸ்ரீவிஷ்ணுதர்மம் (4-3-47) – ஸகல பல ப்ரதோஹி விஷ்ணு – அனைத்து பலன்களையும் அளிப்பவன் விஷ்ணுவே – என்பதற்கு ஏற்ப உங்களுடைய அனைத்துவிதமான விருப்பங்களையும் அளிப்பான். (தன்னாகவே கொள்ளும்) - முண்டக உபநிஷத் – பரமம் ஸாம்யம் உபைதி - தனக்கு நிகரான நிலையை அளிக்கிறான் – என்பதும் காணலாம். (கவி சொல்ல வம்மின் என்று) - இதற்காக நீங்கள் ஏதும் செய்யவேண்டாம். மற்ற விஷயங்களைக் குறித்துத் துதித்து நின்று உங்களுடைய இந்த்ரியங்களை வீணாக்காமல், வாய் கொண்ட பயன் இதுவே ஆகும் என்று இந்த விஷயத்தில் கவிபாட வாருங்கள் என்று.

**வ்யாக்யானம்** – [8] (முக்தைச்வர்யத்தை முன்னிட்டு) "வழியைத் தரும் நங்கள் வானவரீசனை நிற்க" என்றும், "தன்னாகவே கொண்டு" என்றுஞ் சொல்லுகையாலே, இவ்விஷயத்தைக் கவி பாடினால் ஸித்திப்பது பகவதநுபவ பரமஸாம்யா பத்த்யாதிக ளென்று முக்தைச்வர்யமான பேற்றை முன்னிட்டு. (ச்வவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம் பத்தில்) அதாவது, இப்படி தம்முடைய உபதேசத்தாலே "ஸேவா ச்வவ்ருத்திராக்யாதா" என்று நிஹீந்தரதையாலே ச்வவ்ருத்தியாகச் சொல்லப்பட்ட அப்ராப்த விஷய ஸேவையை மாற்றி, "ச்சாயாவா ஸத்வமநு கச்சேத்", "ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே" என்று இவ்விஷயத்தை ஸேவிப்பானென்றும், எத்தைப் பற்ற இவ்விஷயம் ஸேவிக்கப்படாதொழிகிற தென்றும் விதிக்கும்படி ப்ராப்தமான இவ்விஷயத்திலே "புகழுநல்லொருவ"னிற்படியே தம்முடைய வாசிக வ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம் பத்திலே யென்கை.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** - (முக்த ஐச்வர்யத்தை முன்னிட்டு) – திருவாய்மொழி – வழியைத் தரும் நங்கள் வானவரீசனை நிற்க - என்றும், திருவாய்மொழி – தன்னாகவே கொண்டு – என்றும் கூறுவதால், இந்த பகவத் விஷயத்தைக் குறித்துக் கவிபாடினால் கிட்டுவது என்னவென்றால், பகவத் அனுபவம் மற்றும் அவனைப் போன்ற நிலையை அடைதல் முதலானவையே ஆகும் என்று முக்த ஐச்வர்யமாக உள்ள பேற்றை முன்னிட்டுக் கொண்டு. (ச்வவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம் பத்தில்) - இவ்விதமாகத் தன்னுடைய உபதேசம் மூலமாக, "மநுஸ்ம்ருதி – ஸேவா ச்வவ்ருத்திராக்க்யாதா - மற்றவர்களுக்குத் தொண்டு செய்தல் இழிவானதே ஆகும்" என்று தாழ்ந்ததாகக் கூறப்பட்டதால் தகுதி ஏதும் இல்லாத விஷயத்தில் தொண்டு புரிதல் என்பதை மாற்றி, ச்சாயாவா ஸத்வமநு கச்சேத் - நிழல் போன்று அவனைத் தொடர வேண்டும் - என்றும், ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே - வாஸுதேவன் என்று மரநிழலை ஏன் இன்னமும் அடையவில்லை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பகவத் விஷயத்தையே ஸேவிக்க வேண்டும் என்றும், எந்தக் காரணத்தால் பகவத் விஷயத்தை ஸேவிக்காமல் இருக்கிறார்கள் என்றும் விதிக்கும்படியாக, அடையப்படவேண்டிய இயல்பான இந்த விஷயத்தில் திருவாய்மொழி – புகழும் நல் ஒருவன் – என்று கூறுவதற்கு ஏற்ப, தான் செய்வதான வாக்கு கொண்டு செய்யும் கைங்கர்யத்தில் மூன்றாம் பத்து மூலம் ஈடுபடுத்துகிறார் என்று கருத்து.

222. (1) ஈசனையீச னீசன் பாலென்ன ஏர்கொள்வானத்தும் ஆயேயென்கிற வ்யாப்தி நிறம் பெறத் தனிக்கோல் செலுத்தும் ஸர்வ நியந்தா, ஒழிவில் காலத்துக்குச் சேரப் பூர்வபோகங்களை யோதுமாலெய்தின சபலத்துக்குச் சேர ஸமகாலமாக்கிப் [2] போதால் வணங்காமை தீர்த்த ப்ரணயித்வத்திலே காதல் மையல் ஏறிய பித்தாய், [3] தேசதூரத்துக்குக் கூவியுங் கொள்ளாயென்றது தீரக் கண்ட சதிரையும் ஒரு நிலமாகக் காட்ட, வீவிலின்பம் கூட்டினையென்று முக்தபோக மாநஸ ப்ராப்தி பலமான தேவதாந்தர ஆத்மாத்மீய லோக யாத்ரைச்வர்யாக்ஷரங்களில் வைராக்யம், உன்னித்து உயிருடம்பினால் கொடுவுலகம் வேட்கையெல்லாமொழிந்தே னென்னவுடையரானவர், [4] ஒரு நாயகமென்று ராஜ்ய ஸ்வர்க்காத்மாநுபவ அல்பாஸ்திரத்வ


Email:sridharan_book@yahoo.co.in

ஸாவதிகத்வாதிகளையும், [5] ஆடு கள்ளிறைச்சி கருஞ்செஞ்சோறாகிற நிந்த்யங்களாலே இளந்தெய்வத்துக்கு இழைத்தாடும் நிஹீநதையையும், [6] பேச நின்ற தேவதாஜ்ஞாநா சக்தி ஸாபேக்ஷத்வாதிகளையும் [7] இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோநிஷ்டதையையும் சொல்லி, ஓடிக்கண்டீர் (8) கண்டும் தெளியகில்லீர் அறிந்தோடுமின் ஆட்செய்வதே உறுவதாவதென்று விரக்தி பூர்வகமாக ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம்பத்தில்.

**அவதாரிகை** - நாலாம்பத்தால் கீழ்ச் சொன்ன வ்யாப்தி, ஆகாச வ்யாப்தி போலன்றிக்கே நிறம் பெறும்படி, "அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம்", "ய ஆத்மாநமந்தரோ யமயதி", "சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய ஜகத:", "சாஸ்தா சராசரஸ்யைக:" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, ஸ்வ வ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ஸ்வாதீநமாம்படி நியமித்துக்கொண்டு போருகையாலே ஸர்வநியந்தாவாயிருக்கிறவன்*, "ஒழிவில் கால"த்தில் கைங்கர்யாபிநிவேசம் போலே, தேச கால விப்ரக்ருஷ்டமான அபதாநங்களை தத் தத் தேச கால விசிஷ்டமாக அநுபவிக்க வேணுமென்று அதிசாபலம் பண்ணின விவர்க்கு, காலோபாதியைக் கழித்து ஸமகாலமாக்கி அநுபவிப்பித்து, இவருடைய இழவைத் தீர்த்து, இவருடைய கரணத்ரய வ்யாபாரத்தையும் போக்யமாகக் கொள்ள,

**விளக்கம்** - கடந்த பத்தில், அதாவது மூன்றாம் பத்தில் கூறப்பட்டதான, எங்கும் வ்யாபித்து நிற்கும் குணமானது, ஆகாசம் போன்று அல்லாமல் நிறம் பெறும் விதத்தை, அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் - ஆத்மாக்கள் அனைத்திலும் புகுந்து நியமனம் செய்து - என்றும், ய ஆத்மாநமந்தரோ யமயதி - ஆத்மவிற்குள் புகுந்து நியமிக்கிறான் - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-17-20) – விஷ்ணுரசேஷஸ்ய ஜகத: - அனைத்து ஜகத்தையும் நியமிப்பவன் விஷ்ணுவே - என்றும், சாஸ்தா சராசரஸ்யைக: - அசையும் மற்றும் அசையாப் பொருள்கள் அனைத்தையும் நியமிப்பவன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னைக் காட்டிலும் வேறுபட்ட அனைத்து வஸ்துக்களுடைய "அவை கர்மம் செய்தல், செய்யாமல் இருத்தல்" போன்றவை தனக்கு அடிபணிந்து நடக்கும்படியாக அவற்றை நியமித்துக் கொண்டு இருப்பதால், அனைத்தையும் நியமிப்பவனாக உள்ள ஸர்வேச்வரன், திருவாய்மொழி - ஒழிவில் காலம் - என்பதில் கூறப்பட்ட கைங்கர்ய ஆசை போன்று, வேறு இடம் காலம் ஆகியவற்றில் முடிந்து போன அவதாரங்களுடைய செயல்களை

அந்தந்த இடம் மற்றும் காலத்தைப் போன்றே அனுபவிக்கவேண்டும் என்று மிகுந்த ஆசை கொண்ட நம்மாழ்வாருக்கு, காலத்தால் ஏற்படும் வேறுபாட்டை நீக்கிக் கொடுத்து, சமகாலமாக மாற்றி, அவரை அனுபவிக்கும்படிச் செய்து, அவருடைய இழப்பை நீக்கி, அவர் தம்முடைய மனம் வாக்கு மற்றும் சரீரத்தால் செய்யும் அனைத்தையும் இனியதாகவே கொண்டான்.

**வ்யாக்யானம்** - அந்த ப்ரணயித்வத்திலே தோற்று விரஹதசையில் ஸத்ருச பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாகக் கருதும்படி பித்தேறி, தேச விசேஷத்தில நுபவத்தை யாசைப்பட்டுக் கூப்பிட, அவ்விழவு தீரும்படி, "வைகுண்டேது பரே லோகே" இத்யாதிப்படியே தேச விசேஷத்திலே பெரியபிராட்டியாரும் தானுமே போக்தாக்களாயிருக்கிற விருப்பைக் கிட்டியநுபவித்தாப் போலே ப்ரத்யக்ஷமாம்படி யநுபவிப்பிக்க வநுபவித்து, இப்படி முக்த போகத்யை மாநஸமாக ப்ராபித்து, அதுக்கு பலமான தேவதாந்தராதிகளில் வைராக்யத்தையுடையரான விவர் ஐச்வர்ய கைவல்யங்களின் அல்பாஸ்திரத்வ ஸாவதிகத்வாதி தோஷங்களையும், நிந்த்ய பதார்த்தங்களாலே க்ஷுத்ர தேவதா பஜநம் பண்ணுமதின் நிஹீநதையையும், ப்ரசம்ஸாபர வாக்யங்களாலே சொல்லப்பட்டு பகவத் விபூதிபூதராயிருக்கச் செய்தே, அவனோடே விகல்பிக்கலாம்படி அவன் கொடுத்த ஐச்வர்யத்தையுடையராயிருக்கிற ப்ரஹ்ம ருத்ரர்களுடைய அஜ்ஞாநாதிகளையும், பாஹ்ய குத்ருஷ்டி மதங்களின் தமோநிஷ்டதையையும் வெளியிட்டு,

**விளக்கம்** - இவ்விதம் அவற்றை இனிமையானதாக ஏற்றுக்கொண்டு அவனுடைய தடையற்ற காதலில் நம்மாழ்வார் தோற்றார்; ஆகவே காதலனை விட்டு பிரிந்த காதலியின் நிலையை அடைந்தார்; அந்த நிலையில் அவனைப் போன்றே உள்ள பொருள்கள் மற்றும் அவனுடன் தொடர்பு கொண்டுள்ள பொருள்கள் ஆகிய அனைத்தையும் அவனாகவே எண்ணும்படியாகப் பித்தரானார். இதனால் பரமபதத்தில் உள்ள அனுபவத்தையும் விருப்பம் கொண்டு அழைத்தார். அப்போது நம்மாழ்வாருடைய இந்தக் குறை நீங்கும்படியாக வைகுண்டேது பரே லோகே - அனைத்திற்கும் நாதனாக உள்ள விஷ்ணு ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளான் - என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் பெரியபிராட்டியாரும் தானுமாக அனைவரும் அனுபவிக்கும்படி உள்ள இருப்பை அங்கு வந்து அனுபவித்தது போன்று, காட்சி மூலமாக இவர் இங்கேயே அனுபவிக்கும்படியாகச் செய்தான். அதனை

நம்மாழ்வார் அனுபவித்து, இவ்விதம் முக்தர்கள் மட்டுமே அனுபவிக்கவல்ல இன்பத்தை மனதால் அடைந்து, அதன் பலனாக உள்ள "மற்ற தேவதைகளிடம் ஈடுபாடு கொள்ளாமை" என்ற நிலையை அடைந்தார். ஐச்வர்யம் மற்றும் ஆத்ம அனுபவம் என்ற கைவல்யம் ஆகியவற்றின் அற்பத்தன்மை, நிலையற்ற தன்மை, எல்லையுடன் கூடிய தன்மை முதலான தோஷங்களையும்; ஆராதிப்பதன் தாழ்வையும்; புகழ்வதற்காகவே கூறப்பட்ட வாக்கியங்கள் மூலம் உரைக்கப்பட்டு பகவானுடைய செல்வமாகவே உள்ளபோதிலும் அவனை காட்டிலும் முதன்மையானவர் என்று அவன் அளித்த ஐச்வர்யங்களைக் கொண்டுள்ள நாம்முகன் மற்றும் ருத்ரன் போன்றவர்களுடைய அஜ்ஞானத்தையும் மற்ற மதங்களும், வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் கூறுகின்ற மதங்களும் தாமஸ குணங்களில் ஊன்றியபடி உள்ளன என்பதையும் வெளிப்படுத்தினார்.

**வ்யாக்யானம்** - தேவதாந்தரங்களை யாச்ரயித்து தத் பலமும் கைகண்டிகோள் ஜகந்நிகரணாதி திவ்ய சேஷ்டிதங்களாலே, ஸர்வேச்வரனே ரக்ஷகன், அல்லாதாரடைய தத் ரக்ஷ்ய பூதரென்னுமர்த்தத்தை சாஸ்த்ர முகத்தாலே கண்டு வைத்தும் தேறமாட்டி கிறிலிகோள், இப்படி நீங்கள் தேறாமைக்கடி அவனிட்ட வழக்கான ப்ரக்ருதி ஸம்பந்தம், தத் விமோசநோபாயமும் அவன் திருவடிகளிலாச்ரயண மென்றறிந்து ததாச்ரயணத்தைப் பண்ணி இத்தைத் தப்பப்பாருங்கோள்; அவன் திருவடிகளிலே கைங்கர்யமே உங்களுக்குச் சீரிய புருஷார்த்தமென்று ப்ரயோஜநாந்தர தேவதாந்தர விரக்தி முன்னாக பரதேவதையும் பரமப்ரயோஜநமும் அவனே, அவன் விஷயத்தில் கைங்கர்யமுமே யென்றுபதேசித்து, பகவதாச்ரயணத்தை ருசிப்பிக்கிறா ரென்கிறார்.

**விளக்கம்** – "மற்ற தேவதைகளை அண்டி நின்று வணங்கி, அதன் மூலம் நீங்கள் பலன்களைப் பெற்றீர்கள். இந்த ஜகத் முழுவதையும் உட்கொள்பவன் போன்ற லீலைகள் கொண்ட ஸர்வேச்வரனே காப்பவன் ஆவான், மற்ற அனைவருமே அவனால் காப்பாற்றப்படுபவர்கள் என்பதைத் தகுந்த சாஸ்த்ரங்கள் மூலம் கண்டாலும் நீங்கள் உணராமல் உள்ளீர்கள். இவ்விதம் நீங்கள் உணராமல் உள்ளதற்குக் காரணம், அவன் அளித்த இந்தச் சரீர ஸம்பந்தமே ஆகும். இந்த சரீரத்தை விடுவதற்காக உபாயத்தையும், அது அவன் திருவடிகளை அடைதலே ஆகும் என்பதையும் அறிந்துகொண்டு, அதனை அண்டி நின்று, இதிலிருந்து தப்புவதற்கு முயல்வீராக. அவனுடைய திருவடிகளில் செய்யப்படும் கைங்கர்யம் மட்டுமே உங்களுக்கு மிகவும் உயர்ந்த பேறு என்று அறிந்து


Email:sridharan_book@yahoo.co.in

கொண்டு, மற்ற பயன்கள் மற்றும் மற்ற தேவதைகள் ஆகியவற்றை விரும்பாமை என்பதை முன்னிட்டுக்கொண்டு, மிகவும் உயர்ந்த தெய்வமும் மிகவும் உயர்ந்த பயனும் அவன் மட்டுமே ஆவான், அவன் விஷயத்தில் செய்யப்படும் கைங்கர்யமே உயர்ந்த பேறு", என்று பலவிதமாக உபதேசம் செய்து, அவனை அண்டி நிற்பதில் உள்ள ருசியை நான்காம் பத்தில் மூட்டுகிறார்.

**வ்யாக்யானம்** - [1] (ஈசனை யீசனீசன் பாலென்ன ஏர்கொள் வானத்துமாயே என்கிற வ்யாப்தி நிறம் பெறத் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா) "மறுகலிலீசனை", "ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த", "ஈசன் பாலோரவம் பறைதல்" என்று நியந்த்ரு வாசக சப்தத்தாலே சொல்லும்படி "ஏர்கொளேழுலகமும் துன்னிமுற்றுமாகி நின்ற சோதிஞான மூர்த்தியாய்", "வானத்தும் வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்தானத்து மெண்டிசையும் தவிராது நின்றான்", "ஆயே யிவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும் நீயே" என்கிற கீழில் பத்தில் ஸர்வ விஷயமாகச் சொன்ன வ்யாப்தி ஆகாச வ்யாப்தி போலாகாமே நிறம் பெறும்படியாக "வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல" என்கிறபடியே உபயவிபூதியும் தன் நியமநத்திலேயாம்படி தன்னாஜ்ஞை நடத்துகிற ஸர்வ நியந்தாவான ஸர்வேச்வரன்.

**விளக்கம்** – (ஈசனை) – திருவாய்மொழி (4-1-10) – மறுகல் இல் ஈசனை – என்றும், (ஈசன்) - திருவாய்மொழி (4-3-2) – ஈசன் ஞாலம் உண்டு உமிழ்ந்த – என்றும், (ஈசன்பால் என்ன) – திருவாய்மொழி (4-10-4) - ஈசன் பாலோரவம் பறைதல் – என்றும் உள்ள பாசுரங்களில் "நியமிப்பவன்" என்று பொருள் அளிக்கின்ற சொல்லால் கூறுவதற்கு ஏற்ப உள்ள. (ஏர் கொள்) - திருவாய்மொழி (4-3-8) – ஏர்கொள் ஏழு உலகமும் துன்னி முற்றுமாகி நின்ற சோதிஞான மூர்த்தியாய் – என்றும், (வானத்தும்) - திருவாய்மொழி (4-5-9) - வானத்தும் வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்தானத்து மெண்டிசையும் தவிராது நின்றான் - என்றும், (ஆயே என்கிற வ்யாப்தி) - திருவாய்மொழி (4-9-7) - ஆயே இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும் நீயே – என்றும் கடந்த பத்தில் கூறப்பட்டதான எங்கும் பரந்திருக்கும் நிலையானது. (நிறம்பெற) - ஆகாசத்தில் பரவுதல் போன்று எந்தவிதமான பயனும் இன்றிப் போகாமல், நிறம் பெறும்படியாக. (தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா) - திருவாய்மொழி (4-5-1) - வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல - என்பதற்கு ஏற்ப நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டும் தனது

ஆணைக்குட்பட்டு நடக்கும்விதமாகத் தனது ஆணையைச் செலுத்துபவனும், அனைத்தையும் நியமிப்பவனும் ஆகிய ஸர்வேச்வரன்.

**வ்யாக்யானம்** - (ஒழிவில் காலத்துக்குச் சேர பூர்வ போகங்களை யோதுமாலெய்தின சாபலத்துக்குச் சேர ஸமகாலமாக்கி) "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி" என்றடிமை செய்யப் பாரிக்கிறவளவில் ஸர்வதேச ஸர்வாவஸ்தைகளோபாதி ஸர்வகாலத்திலும் வேணுமென்று கீழ்க்கழிந்த காலத்தி லடிமையையு மாசைப்பட்டதுக்குச் சேரும்படி, "பாலனாயேழுலகுண்டு" என்று தொடங்கி தேச கால விப்ரக்ருஷ்டங்களான அவனுடைய அபதாநங்களை தத் தத் தேசகால விசிஷ்டமாக வநுபவிக்கையில் அபிநிவேசத்தாலே "ஆதியங்காலத்தகலிடங் கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொற்றுழாயென்றே ஓதுமா லெய்தினள்" என்று பூர்வகாலீந போகங்களையே வாய்புலற்றும்படி ப்ராந்தியையடைந்த சாபலத்துக்கு அநுரூபமாக காலத்தினுடைய பேதவ்யவஹாரத்துக்குடலான உபாதியைக் கழித்து ஒரு போகியாக்குகையாலே ஸமகாலமாக்கி யநுபவிப்பித்து.

**விளக்கம்** - (ஒழிவில் காலத்துக்குச் சேர) - திருவாய்மொழி (3-3-1) - ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி - என்று அடிமைத்தனம் செய்யவேண்டும் என விருப்பம் கொள்ளும்போது அனைத்து இடங்கள், அனைத்து நிலைகள் ஆகியவற்றில் அடிமைத்தனம் செய்யவேண்டும் என்று விரும்பியது போன்று, அனைத்து காலங்களிலும் செய்யவேண்டும் என்று கடந்து போன காலத்தில் செய்யவேண்டிய அடிமைத் தனத்தையும் விரும்பியதற்கு ஏற்கும்படியாக. (பூர்வபோகங்களை ஓதும் மால் எய்தின சாபலத்துக்குச் சேர) – திருவாய்மொழி (4-2-1) – பாலனாய் ஏழுலகுண்டு – என்று தொடங்கி காலத்தாலும் இடத்தாலும் அனுபவிக்க இயலாமல் போன மிகவும் அரிதான அவனுடைய உயர்ந்த லீலைகளை, அந்தந்த இடம் மற்றும் காலங்களில் சென்று அனுபவிக்கவேண்டும் என்று விரும்பி, அத்தகைய ஆசை காரணமாக, திருவாய்மொழி (4-2-6) – ஆதியங்காலத்தகலிடங் கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொற்றுழாயென்றே ஓதுமா லெய்தினள் - என்று கூறுவதற்கு ஏற்ப, முன்னர் இருந்த காலத்தின் இன்பத்தையே எண்ணி வாய் புலம்பும்படியான மயக்கத்தை அடைந்த விருப்பத்திற்கு ஏற்றபடியாக. (சமகாலம் ஆக்கி) - காலத்தில் உள்ள வேறுபாடுகளுக்குக் காரணமாக உள்ள அனைத்தையும் விலக்கி, இன்பத்தை அனுபவிக்கும்படிச் செய்வதால் ஒரே காலமாக மாற்றி இவரை அனுபவிக்கும்படியாகச் செய்து.

**வ்யாக்யானம்** – [2] (போதால் வணங்காமை தீர்த்த ப்ரணயித்வத்திலே காதல் மையலேறிய பித்தாய்) “பூவை வீயா நீர்தூவிப் போதால் வணங்கேனேலும் நின் பூவை வீயா மேனிக்குப் பூசுஞ் சாந்தென்னெஞ்சமே” என்று தொடங்கி, “ஏகமூர்த்திக்கே, பூத்தண்மாலை கொண்டுன்னைப் போதால் வணங்கேனேலும் நின் பூத்தண்மாலை நெடுமுடிக்குப் புனையுங் கண்ணியெனதுயிரே” என்று விரோதி நிரஸநம் பண்ணுகிற அவ்வவ காலங்களிலே யுதவி, புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு சிசிரோபசாரம் பண்ணப் பெற்றிலேனாகிலும், விலக்ஷண விக்ரஹ யுக்தனாய் ஸர்வேச்வரனா யிருக்கிறவன், என்னுடைய கரண த்ரய வ்யாபாராதிகளையே தனக்கு போக்ய வஸ்துக்க ளெல்லாமுமாகக் கொள்வதே என்றிவர் தாமே யீடுபடும்படி பண்ணி அவ்வோ காலங்களில் தனக்குதவி அடிமை செய்யப் பெறாதவிழவை, அவன் தீர்த்த ப்ரணயித்வ குணத்திலே “காதல் மையலேறினேன்” என்கிறபடியே ப்ரேமம் மேலிட்டு அறிவு கலங்கினவாறே வெள்ளக் கேடாகவொண்ணாதென்று அவன் அல்பம் பேரநிற்க, அவனோடு ஸத்ருச பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாகவே கருதிப் பேசும்படியாக “பேய்ச்சி முலை சுவைத்தார்க்கென் பெண்கொடி யேறிய பித்தே” என்னும்படி பித்தேறி.

**விளக்கம்** – (போதால் வணங்காமை) – திருவாய்மொழி (4-3-1) - பூவை வீயா நீர்தூவிப் போதால் வணங்கேனேலும் நின் பூவை வீயா மேனிக்குப் பூசுஞ் சாந்தென்னெஞ்சமே – என்று தொடங்கி, திருவாய்மொழி (4-3-4) - ஏகமூர்த்திக்கே, பூத்தண்மாலை கொண்டுன்னைப் போதால் வணங்கேனேலும் நின் பூத்தண்மாலை நெடுமுடிக்குப் புனையுங் கண்ணியெனதுயிரே - என்று கூறுவதற்கு ஏற்ப, “விரோதிகளை அழிக்கின்ற அந்தந்த காலகட்டங்களில் உதவி, மலர்களை அளித்தல் போன்றதான குளிர்ச்சி அளிக்கவல்ல உபகரணங்கள் கொண்டு அவனுக்கு நான் உதவி செய்யவில்லை; என்றாலும், மேன்மையான திருமேனியுடன் கூடிய ஸர்வேச்வரன் எனது மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றுடைய செயல்களையே தனக்கு இன்பம் அளிக்கவல்ல வஸ்துக்களாகக் கொள்கிறானே” என்று இவர் தானே அவன் விஷயத்தில் ஈடுபடுபடியாகச் செய்து, அந்தந்த காலங்களில் தனக்கு உதவி செய்து, அதன் மூலம் அவருடைய கைங்கர்யம் பெறாமல் இழந்த நிலையை, (தீர்த்த ப்ரணயித்வத்திலே) - அவன் விலக்கிக் கொண்ட ப்ரேமை குணத்தில், (காதல் மையல்) – திருவாய்மொழி (4-3-9)

- காதல் மையலேறினேன் – என்பதற்கு ஏற்ப ப்ரேமம் அதிகமாகி அறிவு தடுமாறி நின்றபோது “வெள்ளக்கேடாக மாறக்கூடாது” என்று அவன் எண்ணி, சிறிது விலகி நிற்க. (ஏறிய பித்தாய்) - அவனைப் போன்ற பொருள்களையும், அவனுடன் ஸம்பந்தம் கொண்ட பொருள்களயும் அவனாகவே எண்ணிப் பேசும்விதமாகத் திருவாய்மொழி (4-4-6) - பேய்ச்சி முலை சுவைத்தார்க்கென் பெண்கொடி யேறிய பித்தே - என்பதற்கு ஏற்ப பித்து ஏறி.

**வ்யாக்யானம்** - [3] (தேசதூரத்துக்குக் கூவியுங் கொள்ளாயென்றது தீரக் கண்ட சதிரையுமொரு நிலமாகக் காட்ட) தேச விசேஷத்திலநுபவத்தை யாசைப்பட்டு, தேசதூரத்தைப் பற்ற “கோலமேனி காண வாராய் கூவியுங் கொள்ளாயே” என்று உன் வடிவழகை நீ வந்து அநுபவிப்பித்தருளுதல், என்னை யங்கே யருளப்பாடிடுதல் செய்கிறிலை யென்று கூப்பிட்ட விழவுந்தீர, “ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர் கண்டு” என்று நித்யவிபூதியிலே பெரியபிராட்டியாரும் நீயுமே போக்தாக்களாய் அவ்விபூதியிலுள்ளாரடைய போகோபகரண கோடியாம்படி கண்டு வைத்த நேர்பாட்டை நான் கண்டேனென்னும்படி, கீழ் காலோபாதியைக் கழித்து ஸமகாலமாக்கினாப்போலே, அவ்விபூதியி லநுபவத்தையும் இங்கேயிருந்தே அநுபவிக்கலாம்படியொரு போகியாக ப்ரகாசிப்பிக்க.

**விளக்கம்** - (தேசதூரத்துக்குக் கூவியுங் கொள்ளாயென்றது தீர) - பரமபத அனுபவத்தில் விருப்பம் கொண்டு அந்த இடத்தின் தூரத்தை எண்ணி, திருவாய்மொழி (4-7-1) – கோலமேனி காண வாராய் கூவியுங் கொள்ளாயே - என்பதற்கு ஏற்ப, நீ இங்கு வந்து உன் திருமேனி அழகை நான் அனுபவிக்கும்படிச் செய்தல் அல்லது நான் அங்கே வரும்படியாக என்னை அழைத்தல் ஆகிய இரண்டையும் நீ செய்யவில்லை என்று இவர் கூப்பிட்ட இழந்த நிலை மாறும்படியாக. (கண்ட சதிரையும் ஒரு நிலம் ஆகக் காட்ட) – திருவாய்மொழி (4-9-10) - ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர் கண்டு - என்பதற்கு ஏற்ப பரமபதத்தில் உள்ள இருவரும் இன்பம் அளிப்பவர்களாக உள்ள நிலையை நான் இங்கிருந்தபடியே கண்டேன் என்றபடி, இனியுள்ள காலத்தின் காரணங்களை விலக்கி சமகாலம் என்று மாறியது போன்று, பரமபதத்தின் அனுபவத்தையும் இங்கேயே நின்று அனுபவிக்கலாம்படியாக ஒரு போகியாக வெளிப்பட்ட.

**வ்யாக்யானம்** - (வீவிலின்பம் கூட்டினை யென்று முக்த போக மாநஸ ப்ராப்தி பலமான) “வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்தனன் மேவியே”, “கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே” என்று அவனைக் கிட்டி நிரதிசயாநந்தியாகப் பெற்றேன், யாவர் சிலர்க்கும் தந்தாமால் சேர்த்துக் கொள்ள வரிய திருவடிகளை நான் சேரும்படி என்னைச் சேர்த்துக் கொண்டாய். நான் அநுபவிக்கப் பெற்றே னென்றாவது மாநஸாநுபவமாகையாலே, இப்படி முக்தருடைய போகமான அவ்வநுபவத்தில் மாநஸமாக உண்டான ப்ராப்திக்குப் பலமான, (தேவதாந்தராத்மாத்மீய லோகயாத்ரைச்வர்யாக்ஷரங்களில் வைராக்யம் உன்னித்துயிருடம்பினால் கொடுவுலகம் வேட்கையெல்லா மொழிந்தேனென்ன வுடையரானவர்) “உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்” என்று தன்னெஞ்சாலே மதித்து வேறொரு தைவத்தைத் தொழுதறியா ளென்னும்படி தேவதாந்தரங்களில் வைராக்யத்தையும், “உயிரினால் குறைவிலமே”, “உடம்பினால் குறைவிலமே” என்னும்படி ஆத்மாத்மீயங்களில் வைராக்யத்தையும், “கொடுவுலகம் காட்டேலே” என்னும்படி லோகயாத்ரையில் வைராக்யத்தையும், “வேட்கையெல்லாம் விடுத்து” என்று ஸமுதாயேநவும், “ஐங்கருவி கண்டவின்ப மொழிந்தேன் சிற்றின்ப மொழிந்தேன்" என்று ப்ருதக்த்வேநவும் சொல்லும்படி ஐச்வர்யத்திலும் அக்ஷர சப்தவாச்யமான ஆத்மாநுபவரூப கைவல்யத்திலும்முண்டான வைராக்யத்தையு முடையரானவர்.

**விளக்கம்** - (வீவில் இன்பம் என்று) – திருவாய்மொழி (4-5-3) - வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்தனன் மேவியே - என்றும், திருவாய்மொழி (4-9-8) - கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “அவனை நான் அடைந்து அழிவற்ற ஆனந்தத்தைப் பெற்றேன். அனைவருக்கும் அளிக்காததும், சேர்த்துக்கொள்ள அரியதும் ஆகிய திருவடிகளை நான் அடையும்படியாக என்னை நீ சேர்த்துக் கொண்டாய். நானும் அனுபவிக்கப் பெற்றேன்” என்ற பலவும் மனம் மூலம் ஏற்பட்ட அனுபவம் என்பதால், (முக்த போக மாநஸ ப்ராப்தி பலமான) – இவ்விதம் முக்தர்களுடைய இன்பமாகவே உள்ள அந்த அனுபவத்தில், மனம் மூலம் உண்டான பேற்றுக்குப் பலனாக உள்ள. (தேவதாந்தர வைராக்யம்) – திருவாய்மொழி (4-6-10) - உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் - என்பதற்கு ஏற்ப, “தனது நெஞ்சத்தால் மதித்து வேறு எந்த ஒரு தெய்வத்தையும் தொழுவதை அறியாள்”, என்று கூறுவதற்கு ஏற்ப, மற்ற

தெய்வங்களின் விஷயத்தில் வைராக்யத்தையும். (ஆத்ம ஆத்மீய வைராக்யம்) – திருவாய்மொழி (4-8-10) - உயிரினால் குறைவிலமே – என்றும், திருவாய்மொழி (4-8-9) - உடம்பினால் குறைவிலமே – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஆத்மா மற்றும் ஆத்மாவுடன் ஸம்பந்தம் கொண்ட பொருள்கள் ஆகியவற்றில் வைராக்யத்தையும். (லோகயாத்ரா வைராக்யம்) - திருவாய்மொழி (4-9-7) - கொடுவுலகம் காட்டேலே - என்பதற்கு ஏற்ப இந்த உலக வாழ்க்கையில் வைராக்யத்தையும். (ஐச்வர்ய அக்ஷரங்களில் வைக்ராக்யம்) - திருவாய்மொழி (4-9-9) - வேட்கையெல்லாம் விடுத்து – என்று கூட்டமாகவும், திருவாய்மொழி (4-9-10) - ஐங்கருவி கண்டவின்ப மொழிந்தேன் சிற்றின்ப மொழிந்தேன் - என்று தனித்தனியாகவும் கூறலாம்படியாக செல்வம் மற்றும் அக்ஷரம் என்ற சொல்லால் கூறப்படுவதான ஆத்ம அனுபவ வடிவில் உள்ள கைவல்யம் ஆகியவற்றில் வைராக்யத்தையும் கொண்டவராக உள்ள நம்மாழ்வார்.

**வ்யாக்யானம்** - [4] (ஒரு நாயகமென்று ராஜ்ய ஸ்வர்க்காத்மாநுபவால்பாஸ்திரத்வ ஸாவதிகத்வாதிகளையும்) "ஒருநாயகமாயோட வுலகுடனாண்டவர் பெருநாடு காண விம்மையிலே பிச்சைதாங் கொள்வர்" என்று தொடங்கி, "ராஜ்யம் நாம மஹாவ்யாதிர சிகித்ஸ்யோ விநாசநா: ப்ராதரம் வா ஸ்தம் வாபி த்யஜந்தி கலு பூமிபா" என்கிற ராஜ்யைச்வர்யத்தின் அல்பத்வத்தையும்; "குடிமன்னுமின் சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்" என்று "தே தம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம் க்ஷீணே புண்யே மர்த்த்யலோகம் விசந்தி" என்கிற ஸ்வர்க்காநுபவத்தினுடைய அஸ்த்திரத்வத்தையும்; "இறுகலிறப்பு" என்று ஆத்மாநுபவத்தினுடைய ஸாவதிகத்வத்தையும்; ஆதிசப்தத்தாலே துக்கமிச்ரத்வ துஸ்ஸாதத்வ நிஸ்ஸாரத்வங்களைச் சொல்லுகிறது.

**விளக்கம்** – (ஒரு நாயகம் என்று ராஜ்ய அல்பத்வத்தையும்) - திருவாய்மொழி (4-1-1) - ஒருநாயகமாயோட வுலகுடனாண்டவர் பெருநாடு காண விம்மையிலே பிச்சைதாங் கொள்வர் – என்று தொடங்கி, "ராஜ்யம் நாம மஹாவ்யாதிர சிகித்ஸ்யோ விநாசநா: ப்ராதரம் வா ஸ்தம் வாபி த்யஜந்தி கலு பூமிபா - இராஜ்யம் என்பது வைத்தியம் செய்து தீர்க்க இயலாத ஒரு பெரும்நோயாகும், அழிவை ஏற்படுத்தக்கூடிய அந்த நோய் காரணமாக மன்னர்கள் தங்களுடன் பிறந்தவர்களையும் புத்திரர்களையும் கூட விடுகிறார்கள் – என்பதற்கு ஏற்ப உள்ளதான இராஜ்யம் என்ற ஐச்வர்யத்தின் அற்பமான தன்மையையும். (ஸ்வர்க்க அஸ்திரத்வத்தையும்) - திருவாய்மொழி (4-1-9) -

குடிமன்னுமின் சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள் – என்று, கீதை (9-11) – தே தம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம் க்ஷீணே புண்யே மர்த்த்யலோகம் விசந்தி - பரந்து விரிந்துள்ள ஸ்வர்க்கத்தை அனுபவித்து, புண்ணியங்கள் தீர்ந்த பின்னர் இந்தப் பூமியை அடைகிறான் – என்பதற்கு ஏற்ப உள்ளதான ஸ்வர்க்க அனுபவத்தின் நிலையற்ற தன்மையையும். (ஆத்ம அனுபவ ஸாவதிகத்வத்தையும்) - திருவாய்மொழி (4-1-10) – இறுகல் இறப்பு - என்று ஆத்ம அனுபவத்தின் நிலையுடன் கூடியுள்ள தன்மையையும், (ஆதிகளையும்) “ஆதி” என்பதன் மூலம் துக்கம் கலந்து இருந்தல், மிகுந்த முயற்சி எடுத்துப் பெறுதல், இன்பம் இல்லாமை போன்றவற்றைக் கூறினார்.

**வ்யாக்யானம்** - [5] (ஆடு கள்ளிறைச்சி கருஞ்செஞ்சோறாகிற நிந்த்யங்களாலே இளந்தைவத்துக் கிழைத்தாடும் நிஹீநதையையும்) “த்ரவ்யம் நிந்த்ய ஸுராதி தைவதமதிக்ஷுத்ரஞ்ச பாஹ்யாகமோ த்ருஷ்டிர் தேவலகாச்ச தேசிகஜநா திக் திக் திகேஷாம் க்ரமம்” என்கிறபடியே “அங்கோராடுங்கள்ளும்”, “அங்கோர் கள்ளு மிறைச்சியும்”, “கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும்” என்கிற ஸுரா மாம்ஸாதி நிந்த்ய பதார்த்தங்களைக் கொண்டு “நீரணங்காடுமிளந் தெய்வம்” என்கிற க்ஷுத்ர தேவதைகளுக்கு “களனிழைத்து” என்று அவ்வோ தேவதைகள் ஸந்நிதி பண்ணும் ஸ்தலங்களிலே பலியிட்டு, “நீரணங்காடுதல் கீழ்மை” என்று தைவாவிஷ்டராயாடுமதின் தன்மையையும்.

**விளக்கம்** - (ஆடு கள்ளிறைச்சி கருஞ்செஞ்சோறாகிற நிந்த்யங்களாலே இளந்தைவத்துக் கிழைத்தாடும் நிஹீநதையையும்) - த்ரவ்யம் நிந்த்ய ஸுராதி தைவதமதிக்ஷுத்ரஞ்ச பாஹ்யாகமோ த்ருஷ்டிர் தேவலகாச்ச தேசிகஜநா திக் திக் திகேஷாம் க்ரமம் – பூஜைக்குப் பயன்படுத்தப்படுபவை அனைத்தும் மிகவும் தாழ்ந்தும் நிந்திக்கப்படுவதும் ஆகிய கள் போன்றவை, தெய்வமானது மிகவும் தாழ்ந்த தெய்வம், சாஸ்த்ரமானது வேதங்களுக்குப் புறம்பாக உள்ளவை, ஆசார்யர்களாக உள்ளவர்கள் பூசாரிகள் என்றுள்ள இப்படிப்பட்ட முறையானது பழிக்கப்பட வேண்டியது - என்று கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழி (4-6-7) – அங்கோர் ஆடும் கள்ளும் – என்றும், திருவாய்மொழி (4-6-3) – அங்கோர் கள்ளும் இறைச்சியும் – என்றும், திருவாய்மொழி (4-6-4) – கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள கள், மாமிசம் போன்ற நிந்திக்கத்தக்க பொருள்கள் கொண்டு, திருவாய்மொழி (4-6-4) – களனிழைத்து - என்பதற்கு எற்ப அந்தத் தேவதைகள்


Email:sridharan_book@yahoo.co.in

உள்ள இடங்களில் பலி கொடுத்து. திருவாய்மொழி (4-6-8) - நீரணங்காடுதல் கீழ்மை – என்பதற்கு ஏற்ப தெய்வம் தங்கள் மீது ஏறியவர்களாக இருந்து ஆடும் தாழ்வையும்.

**வ்யாக்யானம்** - [6] (பேசநின்ற தேவதாஜ்ஞாநாசக்தி ஸாபேக்ஷத்வாதிகளையும்) "தத: க்ரோதபரீதேந ஸம்ரக்தநயநேநச, வாமாங்குஷ்ட்ட நகாக்ரேணச்சிந்நம் தஸ்ய சிரோ மயா" என்றும், "யஸ்மாதநபராதஸ்ய சிரச்சிந்நம் த்வயா மம, தஸ்மாச்சாபஸமாயுக்த: கபாலீ த்வம் பவிஷ்யஸி" என்றும், "தத்ர நாராயண: ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:", "விஷ்ணு ப்ரஸாதாத் ஸுச்ரோணி கபாலம் தத் ஸஹஸ்ரதா, ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்ந லப்தம் தநம் யதா" என்றும் சொல்லுகிறபடியே, ப்ரஹ்மா ருத்ரனாலே தலையறுப்புண்டு சோச்யனாய் ருத்ரனை சபிக்க, ருத்ரன் குரு சிரச்சேதநத்தாலே பாதகியாய் ப்ரஹ்மசாபம் தன்னால் போக்கிக் கொள்ளப் போகாமையாலே ச்ரிய:பதியான ஸர்வேச்வரனை அர்த்திக்க, அவன் அந்த சாபத்தைப் போக்கினானாகையாலே, "பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டு கொண்மின்" என்று வேதத்தில் ப்ரசம்ஸாபரமான வாக்யங்களாலும் ராஜஸ தாமஸ புராணங்களாலும் பரத்வேந பேசலாம்படி முட்டுப் பொறுத்து நின்ற ப்ரஹ்ம ருத்ராதிகளாகிற தேவதைகளுடைய அந்யோந்யம் தங்களுக்கு வருகிற க்லேசமறியாமையும், அந்த க்லேசம் தாங்கள் தவிர்த்துக் கொள்ளமாட்டாமையும், அத்தைத் தவிர்த்துக் கொடுக்கைக்கு ஈச்வரன் வேண்டுகையுமாகிற அஜ்ஞாநாசக்தி ஸாபேக்ஷத்வங்களையும், ஆதிசப்தத்தாலே கர்ம வச்யதையையும்.

**விளக்கம்** – (பேசநின்ற தேவதாஜ்ஞாநாசக்தி ஸாபேக்ஷத்வாதிகளையும்) - தத: க்ரோதபரீதேந ஸம்ரக்தநயநேநச, வாமாங்குஷ்ட்ட நகாக்ரேணச்சிந்நம் தஸ்ய சிரோ மயா - தொடர்ந்து சீற்றம் கொண்டவனாகவும் சிவந்துள்ள கண்கள் கொண்டவனும் ஆகிய என்னால், எனது இடது கையின் கட்டைவிரல் நுனி மூலமாக நான்முகனுடைய தலையானது கிள்ளப்பட்டது - என்றும், யஸ்மாதநபராதஸ்ய சிரச்சிந்நம் த்வயா மம, தஸ்மாச்சாபஸமாயுக்த: கபாலீ த்வம் பவிஷ்யஸி - எந்த ஒரு தவறும் செய்யாத எனது தலையானது எந்தக் காரணத்தால் உன்னால் கிள்ளப்பட்டதோ அதே காரணத்தால் நீ சாபம் அமைந்தவனாக, அந்த மண்டை ஓட்டைக் கையில் ஒட்டப் பெற்றவனாக அலைவாயாக - என்றும், தத்ர நாராயண: ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித: - பெரியபிராட்டியுடன் சேர்ந்து நின்ற ஸ்ரீமந்நாராயணன் என்னால் யாசிக்கப்பட்டான் –

என்றும், விஷ்ணு ப்ரஸாதாத் ஸுச்ரோணி கபாலம் தத் ஸஹஸ்ரதா, ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்ந லப்தம் தநம் யதா - மஹாவிஷ்ணுவின் க்ருபை கரணமாக அந்த மண்டை ஓடானது ஆயிரம் துண்டுகளாக வெடித்து, கனவில் காண்கின்ற செல்வம் போன்று பலவிதமாகப் பறந்தது - என்று கூறுவதற்கு ஏற்ப நான்முகன் ருத்ரனால் தனது தலை அறுக்கப்பட்டு துன்பம் அடைந்த போது, அவன் ருத்ரனைச் சபித்தான்; தனது குருவாகிய நான்முகனுடைய தலையை அறுத்தல் காரணமாக மிகப் பெரிய பாபம் செய்த ருத்ரனால் நான்முகனுடைய சாபத்தைத் தனது சொந்த முயற்சியால் விலக்க இயலவில்லை; ஆகையால் அவன் மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸர்வேச்வரனை வேண்டி நின்றான்; அவன் அந்த சாபத்தைப் போக்கினான். ஆகவே திருவாய்மொழி (4-10-4) – பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டு கொண்மின் – என்று கூறுவதற்கு ஏற்ப வேதத்தில் புனைந்து கூறப்படும் வாக்கியங்களாலும், ராஜஸ தாமஸ புராணங்களாலும் பரம்பொருளாகக் கூறலாம்படி முட்டுப் பொறுத்து நின்ற நான்முகன் மற்றும் ருத்ரன் போன்று தேவர்கள், ஒருவருக்கு ஒருவரால் ஏற்படுகின்ற, துன்பங்களை அறியாமல் உள்ளவராகவும், அப்படிப்பட்ட துன்பத்தைத் தாங்களாகவே விலக்கிக்கொள்ள இயலாதவர்களாகவும், அதனை விலக்கித் தருமாறு ஈச்வரனை வேண்டுபவர்களாகவும் உள்ளதான அறியாமை, ஆற்றல் இன்மை மற்றும் ஈச்வரனை அண்டியிருத்தல் போன்றவற்றையும். “ஆதி” என்ற சொல் மூலம் கர்மங்களுக்கு வசப்பட்டு இருத்தலையும்.

**வ்யாக்யானம்** - (இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோ நிஷ்டதையையுஞ் சொல்லி) “இலிங்கத்திட்ட”, “விளம்புமாறு சமயமும்” என்கிற பாட்டுக்களில் சொல்லுகிற பாஹ்ய குத்ருஷ்டி மதங்களாவன, “யந் மயம் ச ஜகத் ஸர்வம்” என்று பொதுவிலே ப்ரச்நம் பண்ண, “விஷ்ணோஸ் ஸகா சாதுத்பூதம்” என்று கோல் விழுக்காட்டாலே உத்தரமாகை யன்றிக்கே எருமையை ஆனையாகக் கவிபாடித் தரவேணுமென்பாரைப் போலே, லிங்கமென்றொரு வ்யக்தியை நிர்த்தேசித்து இதுக்கு உத்கர்ஷம் சொல்லித் தரவேணுமென்று கேட்கிறவனும் தமோபிபூதனாய்க் கேட்க, சொல்லுகிறவனும் தமோபிபூதனாய்ச் சொல்ல, இப்படி ப்ரவ்ருத்தமான லைங்க புராணாதிகளான குத்ருஷ்டி ஸ்ம்ருதிகளும், சிலவற்றைச் சொல்லா நின்றால் தாங்களும் சில தர்க்கங்களைச் சொல்லா நிற்குமத்தனை போக்கி ப்ரமாணாநுகூல தர்க்கமல்லாமையாலே கேவலம் உக்தி ஸாரமேயாயிருக்கிற பாஹ்ய ஸமயங்களாறுமென்ற க்ஷபணக பௌத்தாதிகளுடைய

ஸ்ம்ருதிகளுமாகையாலே “யா வேதபாஹ்யாஸ் ஸ்ம்ருதயா யாச்ச காச்ச குத்ருஷ்டய: தாஸ்ஸர்வா நிஷ்ப்பலாப்ரேத்ய தமோ நிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா” என்கிறபடியே அவற்றினுடைய தமோ நிஷ்டதையையுஞ் சொல்லி. (ஓடிக் கண்டீர்) “ஓடியோடி” என்று தொடங்கி, “வழியேறிக் கண்டீர்” என்று, “கதாகதம் காமகாமா லபந்தே” என்கிறபடியே ஸ்வர்க்க நரகங்களில் போவது கர்ப்பத்தேற வருவதாய்க் கொண்டு அநேக ஜன்மங்களில் பிறந்து தேவதாந்தரங்களை த்ரிவித கரணங்களாலும் பல பர்யாயம் ததாச்ரயணத்தைச் சொல்லுகிற சாஸ்த்ர மார்க்கத்தாலே ஆச்ரயித்து அவ்வாச்ரயண பலமும் கண்டீர்கள்.

**விளக்கம்** – (இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோ நிஷ்டதையையுஞ் சொல்லி) – திருவாய்மொழி (4-10-5) - இலிங்கத்திட்ட – என்றும், திருவாய்மொழி (4-10-9) - விளம்புமாறு சமயமும் - என்றும் உள்ள பாசுரங்களில் கூறப்படுகின்ற வேதங்களுக்குப் புறம்பாகப் பொருள் உரைக்கின்ற மதங்கள் என்பவை, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-5) - யந் மயம் ச ஜகத் ஸர்வம் - பராசரரே! இந்த ஜகத் முழுவதும் எதனால் வ்யாபிக்கப்பட்டுள்ளது – என்று பொதுவாகக் கேள்வி கேட்கப்பட, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-41) – விஷ்ணோஸ் ஸகா சாதுத்பூதம் - இவை அனைத்தும் விஷ்ணுவில் உண்டாகி, அவனிடமே லயிக்கின்றன – என்று விடை தருதல் போன்று அல்லாமல், எருமையை யானை என்று உரைத்துக் கவிபாடித் தரவேண்டும் என்று கேட்பது போன்று, லிங்கம் என்ற ஒரு உருவம் கொண்ட பொருளைக் காண்பித்து இதற்கு உயர்த்தி கூறவேண்டும் என்று கேட்பவனும் தமோ குணத்தால் மூடப்பட்டவனாகக் கேட்க, அதற்குப் பதில் உரைப்பவனும் தமோ குணத்தால் மூடப்பட்டவனாக உரைக்க, இவ்விதம் வெளிப்பட்ட லைங்கபுராணம் என்பது போன்ற முரண்பாடு நிறைந்த ஸ்ம்ருதிகளும்; சிலவற்றை உரைத்தால் தாங்களும் சில தர்க்கங்களை உரைத்தல் என்பதைச் செய்யாமல், ப்ரமாணத்தை பின்பற்றுகிற தர்க்கம் அல்ல என்பதால் சொல்நயம் மட்டுமே நிறைந்து காணப்படும் தாழ்ந்த மதங்களாகிய ஜைனம், பௌத்தம் போன்றவற்றின் ஸ்ம்ருதிகளும் என்பதால், மநுஸ்ம்ருதி (12-95) - யா வேதபாஹ்யாஸ் ஸ்ம்ருதயா யாச்ச காச்ச குத்ருஷ்டய: தாஸ்ஸர்வா நிஷ்ப்பலாப்ரேத்ய தமோ நிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா – வேதங்களுக்குப் புறம்பான ஸ்ம்ருதிகள் எவையோ, தாழ்ந்த பொருள் கூறும் மதங்கள் எவையோ அவை ஏதும் மறுமையில் பலன்கள் அளிப்பவை அல்ல. அவை தமோ குணம் நிறைந்தவை என்றே கூறப்பட்டன - என்று கூறுவதற்கு ஏற்ப அவற்றுடைய தாமஸ நிலையை உரைத்து. (ஓடிக்கண்டீர்) - திருவாய்மொழி (4-10-7) – ஓடி ஓடி - என்று

தொடங்கி, திருவாய்மொழி (4-10-7) - வழியேறிக் கண்டீர் – என்று, கீதை (9-21) - கதாகதம் காமகாமா லபந்தே – ஸ்வர்கம் போன்றவற்றுக்குச் செல்வதில் விருப்பம் உள்ளவர்கள் வருவதும் போவதுமாக உள்ளனர் – என்பதற்கு ஏற்ப ஸ்வர்கம் மற்றும் நரகம் ஆகியவற்றில் புகுந்து, கர்ப்பத்தில் புகுவதன் காரணமாக, பலபல பிறவிகளில் பிறந்து, மற்ற தேவதைகளைத் தங்களுடைய மனம் வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றாலும் பலமுறை அவர்களை அண்டி நிற்பதற்கான சாஸ்த்ரங்கள் மூலம் அடைந்து, அத்தகைய அண்டுதலால் ஏற்படும் பலன்களைக் கண்டீர்கள் .

**வ்யாக்யானம்** - [8] (கண்டும் தெளியகில்லீர்) இவனுடைய ஜகந்நிகரணாதி திவ்ய சேஷ்டிதங்களை சாஸ்த்ர த்வாரா ப்ரத்யக்ஷித்தும் இவனே ஆச்ரயணீயனென்று தெளிய மாட்டுகிறிலிகோள். (அறிந்தறிந்தோடுமின்) உங்களை இங்ஙனே வைத்தது ஸதஸத் கர்மகாரிகளான ஜந்துக்கள் அவ்வோ கர்மாநுகுண பலங்களை அநுபவிக்கக் கடவதான சாஸ்த்ர மர்யாதை அழியுமென்று, அதுதான், “மம மாயா துரத்யயா” என்கிற ப்ரக்ருதியையிட்டு அவன் மயக்கி வைத்தபடி காணுங்கோள். ஆன பின்பு அது அவன் மாயையென்றறிந்து “மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே” என்கையாலே மாயாதரணோபாயமும் அவன் திருவடிகளைப் பற்றுகை என்றறிந்து அவனை யாச்ரயித்து இம்மாயையைத் தப்பப் பாருங்கோள். (ஆட் செய்வதே உறுவதாவதென்று) “நீள் குடக்கூத்தனுக்காட் செய்வதே உறுவதாவது” என்கையாலே நிரதிசய போக்யமான சேஷ்டிதத்தை யுடையவனுக்கு அடிமை செய்கையே இவ்வாத்மாவுக்குச் சீரியதும் ஸூசகமுமென் றிப்படி யுபதேசித்து. (விரக்தி பூர்வகமாக ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம் பத்தில்) அதாவது ப்ரயோஜநாந்தர தேவதாந்தர பாஹ்ய குத்ருஷ்டி மதங்களில் விரக்தி பூர்வகமாக, ஜகத்காரணத்வாதிகளான ப்ரமாணோபபத்திகளாலே பகவத் ஸமாச்ரயணத்தை ஸம்ஸாரிகளுக்கு ருசிப்பிக்கிறாரென்கை.

**விளக்கம்** - (கண்டும் தெளியகில்லீர்) - இவனுடைய “இந்த ஜகத் முழுவதையும் உட்கொள்ளுதல்” முதலான அதிசயமான லீலைகளைச் சாஸ்த்ரங்கள் மூலமாக நீங்கள் கண்ட பின்னரும், இவனே அண்டத்தக்கவன் என்று தெளிவடையாமல் உள்ளீர்கள். (அறிந்து அறிந்து ஓடுமின்) - உங்களை இவ்விதமாக வைத்தது எதுவென்றால், நல்வினை மற்றும் தீவினைகள் பலவும் செய்தபடி உள்ள ஜந்துக்கள் அந்தந்த கர்மங்களை பயன்களை அனுபவிக்கக் கடவதாக உள்ள சாஸ்த்ர மரியாதை அழியுமென்று, அது கீதை

(7-4) – மம மாயா துரத்யயா - எனது மாயை கடக்க அரியதாகும் - என்பதற்கு ஏற்ப ப்ரக்ருதியைக் கொண்டு அவன் உண்டாகிய மாயை என்று காண்பீர்களாக. இவ்விதம் உள்ளதால், அது அவன் மாயையே ஆகும் என்று அறிந்து கொண்டு, கீதை (9-4) – மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே - என்னையே சரணம் அடைபவர்கள் எனது இந்த மாயையைக் கடக்கிறார்கள் - என்று அவனுடைய திருவடிகளை அண்டுவதே ஆகும் என்று அறிந்து கொண்டு, அவனை அண்டி நின்று, இந்த மாயையிலிருந்து தப்புவதற்கு முயலுங்கள். (ஆள் செய்வதே உறுவது ஆவது என்று) - திருவாய்மொழி (4-10-10) - நீள் குடக்கூத்தனுக்காட் செய்வதே உறுவதாவது – என்று உரைப்பதால் எல்லையற்ற இனிமை அளிக்கின்ற குடக்கூத்து ஆடுதல் போன்றவற்றைச் செய்பவனுக்குக் கைங்கர்யம் செய்தலே இந்த ஆத்மாவிற்கு சீரியதாகவும் எளிதாகச் செய்யத்தக்கதாகவும் உள்ளது என்று உபதேசம் செய்து. (விரக்தி பூர்வகமாக ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம் பத்தில்) - வேறு பயன்களை விரும்பாமல் இருத்தல் என்பதை முன்னிறுத்தி, மற்ற தேவதைகளையும் வேதங்களுக்கு விரோதமாய் பொருள் உரைக்கும் மதங்களையும் தள்ளி, “அவனே ஜகத் காரணம்” என்பது போன்ற ப்ரமாண வாக்கியங்கள் மூலம் பகவானை அண்டி இருத்தல் என்னும் நிலையை ஸம்ஸாரிகளுக்கு இந்த நான்காம் பத்தில் ஏற்படுத்துகிறார்.

223. [1] ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடையவன் எவ்விடத்தானென்னும் பாவியர்க்கும் இருகரையுமழிக்கும் க்ருபா ப்ரவாஹமுடையவன் பொய்கூத்து வஞ்சக்களவு தவிர முற்றவுந்தானாய் உன்னை விட்டென்னப் பண்ணின விரக்தி பல பரமாத்ம ராகம், [2] பேரமர் பின்னின்று கழியமிக்கு யானேயென்ன வாய்ந்து ஆற்றகில்லாது நீராய் மெலிய ஊடு புக்கு வளர, [3] விஷ வ்ருக்ஷ பலங்கள் கைகூடினவர் அடிமை புக்காரையும் ஆட்செய்வாரையுங் காண லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு, ப்ரஹ்லாத விபீஷணர் சொற்கேளாத அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப் பிடித்து, [4] தேச கால தோஷம் போக எங்குமிடங் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள், நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனை, [5] மேவிப் பரம்புமவரோடொக்கத் தொழில் யுக தோஷமில்லையாமென்று விஷ்ணுபக்தி பரராக்கிக் கண்ணுக்கினியன காட்டலாம்படியானார். கண்ணிலே நோக்கிக் காணும் பக்தி ஸித்தாஞ்ஜனத்தை யிடுகிறார் அஞ்சாம்பத்தில்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - அஞ்சாம்பத்தால், கீழ்ச் சொன்ன பரத்வாதிகளால் வந்த தன்னுடைய உத்கர்ஷத்தையும், தந்தாமுடைய நிகர்ஷத்தையு மநுஸந்தித்து அகல்வாரளவிலும் மேல் விழுந்து விஷயீகரிக்கும்படி பரமகாருணிகனான ஸர்வேச்வரன், கீழிவர்க்குப் பிறப்பித்த விரக்திக்கு பலமான ஸ்வவிஷய பக்தியை பரம்பரயா அபிவ்ருத்தமாக்கி அந்த பக்தியையும் பாகவத ஸமாகமத்தையுமுடையரானவிவர் தாம் திருத்தத் திருந்தின ஶ்ரீவைஷ்ணவர்களையும், திருத்தின தம்மையும் காண்கைக்கு வந்த நித்யஸூரிகளையும் ச்வேத த்வீப வாஸிகளான ஸித்தரையுங் கண்டு மங்களாசாஸநம் பண்ணி, திருந்தாத அஸுர ராக்ஷஸ ப்ரக்ருதிகளையும் பகவத் பாகவத வைபவத்தை யுபதேசித்துத் திருத்தி பாகவத ஸமாஜ தர்சநமினிதாம்படியான ஜ்ஞாநம் பிறந்தார்க்கு ப்ராப்ய த்வரைக்கடியான பக்தியையு முபதேசித்துத் தலைகட்டுகிறாரென்கிறார்.

**விளக்கம்** - இதுவரை கூறப்பட்டவற்றில் உரைத்த பரத்வம் போன்ற பலவற்றாலும் வெளிப்படுத்தப்பட்ட ஸர்வேச்வரனாகிய தன்னுடைய உயர்வு மற்றும் தங்களுடைய தாழ்வு ஆகியவற்றை எண்ணியவர்களாக, ஸர்வேச்வரனாகிய தன்னை விட்டு அகன்று செல்ல முயல்பவர்கள் மீது விழுந்து அவர்களை ஏற்றுக்கொள்ளும் ஸர்வேச்வரன், கடந்த பத்தில் நம்மாழ்வாருக்கு ஏற்பட்ட விரக்தியின் பலனாக தன்னைக் குறித்த பக்தியானது அவருக்கு மேன்மேலும் வளரும்படிச் செய்தான். அப்படிப்பட்ட பக்தியையும், பாகவதர்களுடைய கூட்டத்தையும் கொண்டவராகிய நம்மாழ்வார், தான் திருத்தியதன் விளைவாகத் திருந்திய ஶ்ரீவைஷ்ணவர்களையும், இவ்விதமாகத் திருத்திய தன்னையும் காணபதற்காக வந்த நித்யஸூரிகளையும், ச்வேத த்வீபத்தில் வசிப்பவர்களாகிய ஸித்தர்களையும் கண்டு, அவர்களுக்கு மங்களாசாஸநம் செய்தார். இவ்விதம் திருத்தியபோதும் திருந்தாத அஸுரர்கள் மற்றும் ராக்ஷஸர்கள் ஆகியவர்களை உபதேசித்துத் திருத்தி, பாகவதர்களுடன் சேர்ந்து இருந்தல் என்பதை இனிமையாகக் காணும்படியாக உள்ள ஞானம் பிறந்தவர்களுக்கு, “பெறுகின்ற பேற்றை விரைவாக அடையவேண்டும்” என்ற பதற்றத்திற்குக் காரணமாக உள்ள பக்தியையும் உபதேசித்து ஐந்நாம் பத்தை நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம்** - [1] (ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளை யுடையவனெவ்விடத்தானென்னும் பாவியர்க்கு மிருகரையும் அழிக்கும்


Email:sridharan_book@yahoo.co.in

க்ருபா ப்ரவாஹமுடையவன்) "ஆவாவென்றருள் செய்து" என்று ஐயோ ஐயோ என்று என் பக்கலிலே க்ருபையைப் பண்ணியென்றும், "தானே யின்னருள் செய்து" என்று நான் அர்த்தியாதிருக்கத் தானே தன் பேறாக க்ருபை பண்ணியென்றும், "கலியுகமொன்று மின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும்" என்று தன்பக்கலிலே ந்யஸ்த பரரானவர்களுக்கு கலிதோஷங்களொன்றும் வாராதபடியாக க்ருபை பண்ணுமென்றும், "பெருமானது தொல்லருளே" என்று ஸர்வேச்வரனுடைய ஸ்வாபாவிக க்ருபையென்றுஞ் சொல்லுகிறபடியே, "அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான் யானார் எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்" என்று "கையும் திருவாழியுமானவழகை நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டு அங்குள்ளாருடனே பரிமாறியிருக்கிற ஸர்வேச்வரனானவன் எவ்வளவிலே! நித்ய ஸம்ஸாரிகளுக்கு மிவ்வருக்கான நான் எவ்வளவிலே!" என்று கீழ்ச் சொன்ன தன்னுடைய பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வாதிகளால் வந்த உத்கர்ஷத்தையும் தங்களுடைய நிகர்ஷத்தையும் அநுஸந்தித்து அகலும்படி யெத்தனையேனும் மஹாபாபிகளளவிலும், கர்மாநுகுண நிர்வாஹத்துக்குடலான தன் நிரங்குச ஸ்வாதந்த்ர்யமாகிற கரையும், தன்னநுக்ரஹம் தங்கள் பக்கல் வாராதபடி அபராதங்களையே பண்ணுமிவர்கள் ஔபாதிக ஸ்வாதந்த்ர்யமாகிற கரையும் அழியப் பெருகா நிற்குமான க்ருபா ப்ரவாஹத்தையுடைய ஸர்வேச்வரன், (பொய் கூத்து வஞ்சக்களவு தவிர) "பொய்யே கைம்மை சொல்லி", "என்றென்றே சில கூத்துச் சொல்ல", "உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனந் தவிர்ந்தே" என்று மெய்கலவாத பெரும்பொய்யைச் சொல்லி, ப்ரேம பரவசரைப் போலே பாவித்து, ஹ்ருதயம் ப்ராக்ருத விஷய ப்ரவணமாயிருக்க, அநந்ய ப்ரயோஜநரைப்போலே உன் ஔதார்யத்தையும் வடிவழகையும் ஸஹ்ருதயமாகச் சொல்லுகிறாரென்று தோன்றும்படி பலகாலுஞ் சொல்லா நின்று கொண்டு, ஸர்வஜ்ஞனானவுன்னையும் பகட்டும் க்ருத்ரிம யுக்தமான மனஸ்ஸைத் தவிர்ந்தென்று அவற்றை இவர் தவிரும்படி. (முற்றவும் தானாய் உன்னை விட்டென்னப் பண்ணின விரக்தி பல பரமாத்ம ராகம்) "என்னை முற்றவும் தானானான்" என்று இவர்க்கு ஸர்வவித போக்யமும் தானாய், "இனியுன்னை விட்டென் கொள்வனே" என்று நான் விட்டவன்றும் விடமாட்டாத வுன்னை யொழிய துராராதமாய், வருந்தியாராதித்தாலும் கிடைப்பதொன்றில்லாத விஷயங்களைப் பற்றவோவென்று இவர் தாமே பேசும்படி பண்ணின "கண்ட சதிர் கண்டொழிந்தேன்" என்கிறபடியே அவன் போக்யதையாலே

அந்ய விஷயங்களையடைய வுபேக்ஷிக்கும்படி கீழில் பத்தில் பிறந்த விரக்திக்கு பலமான "பரமாத்மநி யோ ரக்த:" என்கிற பரமாத்ம விஷயத்தில் ராகமானது.

**விளக்கம்** - (ஆஆ என்று) – திருவாய்மொழி (5-1-9) - ஆ ஆ என்றருள் செய்து - என்பதற்கு ஏற்ப "ஐயோ ஐயோ" என்று பதறியபடி என்னிடம் க்ருபை செய்து என்றும், (தானே) - திருவாய்மொழி (5-1-10) – தானே இன்னருள் செய்து - என்பதற்கு ஏற்ப நான் விண்ணப்பம் செய்யாமல் இருந்தபோதிலும் தானே தனது பேறு என்று எண்ணி எனக்கு க்ருபை செய்து என்றும், (தன் அடியார்க்குச் செய்யும்) – திருவாய்மொழி (5-2-11) - கலியுகம் ஒன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய தன்னிடம் தங்களுடைய பாரங்கள் அனைத்தையும் வைத்தவர்களுக்கு கலியின் தோஷங்கள் ஏதும் வராதபடியாக க்ருபை செய்த என்றும், (தொல் அருள் என்று) - திருவாய்மொழி (5-9-9) - பெருமானது தொல்லருளே – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய இயல்பாகவே அமைந்த க்ருபை என்றும் பலவிதமாகக் கூறுவதற்கு ஏற்ப, (பரத்வாதிகளை யுடையவனெவ்விடத்தானென்னும் பாவியர்க்கும்) - திருவாய்மொழி (5-1-7) - அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான் யானார் எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் - என்பதற்கு ஏற்ப, "திருக்கரமும் திருச்சக்கரமும் என்றுள்ள அழகை நித்யஸூரிகளுக்குக் காட்சி அளித்தபடி அங்குள்ள அனைவருடன் சேர்ந்து நிற்கின்ற ஸர்வேச்வரன் எத்தகையவன்! நித்யமான ஸம்ஸாரிகளுக்கு அருகில் எப்போதும் உள்ள நான் எத்தகையவன்!" என்பதாக இதுவரை உள்ள பத்துக்களில் கூறப்பட்ட ஸர்வேச்வரனாகிய தன்னுடைய பரத்வம், அனைத்திற்கும் காரணமாக உள்ள தன்மை, அனைத்திலும் வ்யாபித்துள்ள தன்மை, அனைத்தையும் நியமித்தபடி உள்ள தன்மை போன்ற பலவற்றால் தனக்கு உள்ள உயர்வினையும், ஸம்ஸாரிகளாகிய தங்களுடைய தாழ்வையும் எண்ணியபடி அகல்பவர்களாக எத்தனை மஹாபாபிகளாக உள்ளபோதிலும். (இருகரையும் அழிக்கும் க்ருபா ப்ரவாஹ முடையவன்) - ஸம்ஸாரிகளுடைய கர்மங்களுக்கு ஏற்றபடியாக அவர்களை நடத்துவதாக உள்ளதான தடையற்ற தனது சுதந்திரம் என்ற கரையும், ஸர்வேச்வரனுடைய க்ருபையானது தங்களை அண்டாதபடி அபராதங்களை மட்டும் செய்பவர்களுடைய செருக்கு என்பதற்குக் காரணமாக உள்ள "சுதந்திரமாக எண்ணுதல்" என்ற கரையும் அழியும்படியாகப் பெருகி வருகின்ற க்ருபை என்ற வெள்ளத்தைக் கொண்ட ஸர்வேச்வரன். (பொய் கூத்து வஞ்சக்களவு தவிர) - திருவாய்மொழி (5-1-1) – பொய்யே கைம்மை சொல்லி - என்றும்,

திருவாய்மொழி (5-1-2) - என்றென்றே சில கூத்துச் சொல்ல – என்றும், திருவாய்மொழி (5-1-3) - உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனந் தவிர்ந்தே – என்றும் கூறுவதற்கு ஏற்ப உண்மை என்பது சிறிதும் இல்லாதபடி பெரும் பொய்யை மட்டுமே உரைத்து, ப்ரேமை காரணமாகப் பரவசம் அடைந்தவர்கள் போன்று பாவித்து, உள்ளமானது எப்போதும் இந்த உலகியல் பொருள்களில் மட்டுமே ஈடுபாட்டுடன் இருக்க, உன்னை அல்லாமல் வேறு எந்தப் பயனையும் எண்ணாமல் உள்ளவர்கள் போன்று, உன்னுடைய ஔதார்யத்தையும், வடிவழகையும் ஆழ்ந்த உள்ளன்புடன் உரைக்கிறார்கள் என்பது வெளிப்படும்படியாகப் பலமுறை உரைத்தபடி நின்று, அனைத்தும் அறிந்தவனாகிய உன்னையும் பகட்டும் கள்ள மனத்தினைத் தவிர்ந்து என்று அவற்றை இவர் தவிரும்படியாக. (முற்றவும் தானாய்) – திருவாய்மொழி (5-1-10) – என்னை முற்றவும் தானானான் - என்று கூறுவதற்கு ஏற்ப நம்மாழ்வாராகிய இவருக்கு அனைத்துவிதமான இன்பம் அளிக்கின்ற பொருள்களும் தானே என்று, (உன்னை விட்டு என்னைப் பண்ணின) - திருவாய்மொழி (5-1-3) – இனியுன்னை விட்டென் கொள்வனே - என்பதற்கு ஏற்ப நான் விட்டாலும் கூட என்னை விடாமல் இருந்த உன்னைத் தவிர்த்து வருந்தி ஆராடதிக்கத் தக்கதாக; அதாவது வருந்தி ஆராதித்தாலும் அதன் மூலம் கிட்டவல்ல பயன் ஏதும் இல்லாத மற்ற விஷயங்களைப் பற்றவேண்டுமோ என்று இவர் தாமே உரைக்கும் விதமாகச் செய்த. (விரக்தி பலம்) - திருவாய்மொழி (4-9-10) - கண்ட சதிர் கண்டொழிந்தேன் - என்பதற்கு ஏற்ப அவனுடைய இனிமை காரணமாக மற்ற விஷயங்கள் அனைத்தையும் தவிர்க்கும்படியாகக் கடந்த பத்தில் ஏற்பட்ட விரக்தியின் பலனாக. (பரமாத்ம ராகம்) – பரமாத்மநி யோ ரக்த: - யார் ஒருவன் பரமாத்மாவிடம் மிகுந்த பக்தி கொண்டவனாக - என்பதாக உள்ள பரமாத்மா விஷயத்தில் ஏற்பட்ட விருப்பம் என்பது.

**வ்யாக்யானம்** - [2] (பேரமர் பின்னின்று கழியமிக்கு யானே யென்னவாய்ந்தாற்றகில்லாது நீராய் மெலியவூடு புக்கு வளர) "பேரமர் காதல்" என்று அபரிச்சேத்யமாய்ப் பொருந்தி, "பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடும்" என்று பிடரிபிடித்து நின்று நெஞ்சை முடிக்கும்படியாய், "கழியமிக்கதோர் காதல்" என்று பார்ச்வஸ்த்தர்க்குப் பேசும்படி மிகவும் கைகழிந்து, "கடல் ஞாலம் செய்தேனும் யானே" என்று தொடங்கி, "வாய்ந்த வழுதி வளநாடன்" என்று அவனுடைய ஜகத்காரணத்வாதி அத்புத கர்மங்களை நானே செய்தேனென்று அநுகார முகத்தாலே விஷயத்தைக் கிட்டிப் பேசும்படியாய், "உன்னை

விட்டொன்று மாற்றகிற்கின்றிலேன்” என்று அவனையொழிய ஒரு க்ஷணமும் தரித்திருக்க மாட்டாதபடியாய், “ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே நீராய்” என்று விஷய போக்யதாதிசயத்தால் வந்த ப்ராவண்யத்தாலே ஜ்ஞாநாச்ரயமான ஆத்மாவாதல் ஜ்ஞாந ப்ரஸரண த்வாரமான மனஸ்ஸாதலன்றிக்கே ஆத்மாவுக்கு ஆயதநமான சரீரமும் சிதிலமாம்படியாய், “வைகலும் வினையேன் மெலிய” என்று அந்த சைதில்யந்தான் காதாசித்கமன்றிக்கே ஸர்வகாலமும் மெலியும்படியாய், “நிறந்தனூடு புக்கெனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற” என்று பகவத்குணங்கள் மர்மத்திலே புகுந்து ஆத்மாவை யிடைவிடாமல் த்ரவ த்ரவ்யமாக்கும்படி அபிவ்ருத்தமாக.

**விளக்கம்** - (பேரமர்) - திருவாய்மொழி (5-3-3) – பேரமர் காதல் - என்பதற்கு ஏற்ப அளவிட இயலாதபடியாகப் பொருந்தி. (பின்னின்று) - திருவாய்மொழி (5-4-6) - பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடும் - என்பதற்கு ஏற்ப பிடரியைப் பிடித்து நின்று உள்ளத்தை முடிக்கும்விதமாக. (கழியமிக்கு) - திருவாய்மொழி (5-5-10) – கழியமிக்கதோர் காதல் – என்பதற்கு ஏற்ப அருகில் உள்ள அனைவரும் பேசும்படியாக மிகவும் கை கழிந்து. (யானே என்னவாய்ந்து) - திருவாய்மொழி (5-6-1) - கடல் ஞாலம் செய்தேனும் யானே - என்று தொடங்கி, திருவாய்மொழி (5-6-1) - வாய்ந்த வழுதி வளநாடன் - என்று முடிவதாக உள்ள பாசுரங்களில் அவனுடையதாக உள்ள ஜகத்காரணம் போன்ற வியக்கவைக்கும் செயல்களை நானே செய்தேன் என்று உரைக்கும்படியாக. (ஆற்றகில்லாது) - திருவாய்மொழி (5-7) – ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே நீராய் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய் இனிமையின் மிகுதியால் விளைந்த ப்ரேமையால் ஞானத்திற்கு ஆதாரமாக உள்ள ஆத்மாவும், ஞானம் வெளிப்படும் வழியாக உள்ள மனமும் அழியும்படியாக. (மெலிய) – திருவாய்மொழி (5-9) – வைகலும் வினையேன் மெலிய - என்பதற்கு ஏற்ப சரீரத்தில் அத்தகைய நிலை குலைதல் என்பது ஒரு காலகட்டத்தில் மட்டுமே என்பதாக இன்றி அனைத்து காலங்களிலும். (ஊடு புக்கு வளர) - திருவாய்மொழி (5-10) - நிறந்தனூடு புக்கெனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற - என்பதற்கு ஏற்ப பகவானுடைய குணங்கள் அனைத்தும் உட்புகுந்து ஆத்மாவை இடைவிடாமல் நீர்ப்பண்டம் போன்று உருக்கும்விதத்தில் வளர.

**வ்யாக்யானம்** - [3] (விஷவ்ருக்ஷ பலங்கள் கைகூடினவர்) இப்படி பகவத்ப்ரேமம் வருகையாலும் பாகவதர்களோடே கூடப்பெறுகையாலும், “ஸம்ஸார விஷ வ்ருக்ஷஸ்ய

த்வே பலே ஹ்யம்ருதோபமே, கதாசித் கேசவே பக்திஸ் தத் பக்தைர்வா ஸமாகமா" என்று ஸம்ஸாரமாகிற விஷ வ்ருக்ஷத்தில், அம்ருதோபம் பலங்களாகச் சொல்லப்பட்ட பகவத் பக்தியும் பாகவத ஸமாகமமுமாகிற பலத்வயமும் கைபுகுந்தவிவர். (அடிமைபுக்காரையும் ஆட் செய்வாரையுங் காண லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு) "ஒன்றுந்தேவி"லே "மற்றெத் தெய்வம் நாடுதிர்", "பாடியாடிப் பரவிச் சென்மின்கள்", "தெய்வம் மற்றில்லை", "நாயகனவனே", "ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே", "அறிந்தோடுமின்", "ஆதிமூர்த்திக்கடிமை புகுவதுவே", "மற்றைத் தெய்வம் விளம்புதிர்", "உளங்கொள் ஞானத்து வைம்மின்", "ஆட்செய்வதே உறுவதாவது" என்று தேவதாந்தராவரத்வ பூர்வகமாக பகவத் பரத்வத்தையும், பகவதாச்ரயண ப்ரகாரத்தையும் பகவத் கைங்கர்யமே புருஷார்த்தமென்னுமத்தையும் தெளிய வுபதேசிக்கக் கேட்டுத் திருந்தி யடிமை புக்க ஸ்ரீவைஷ்ணவர்களையும், "ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவன்" என்று இப்படி திருத்துகையாலே அடிமை செய்தாரான தம்மையும் காண்கைக்கு, "வைகுந்தன் பூதங்களேயாய்", "தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்", "தேவர்கள் தாமும் புகுந்து" என்னும்படி லோகாந்தரமான ஸ்ரீவைகுண்டத்திலுள்ளாரையும் த்வீபாந்தரமான ச்வேத த்வீபத்திலுள்ளராயும், "நேமிப்பிரான் தமர் போந்தார்" என்கிறபடியே வந்த நித்யஸூரிகளும் முக்தப்ராயருமான தேவர்களுடைய திரள்களை, "கண்டோம் கண்டோம்" என்று கண்ணுக்கினியதா யிருக்கையாலே கண்டோமென்று பலகாலும் சொல்லும்படி கண்டு, "பொலிக பொலிக" என்று அத்திரள் அபிவ்ருத்தமாயிடுகவென்று மங்களாசாஸநம் பண்ணி, (ப்ரஹ்லாத விபீஷணர் சொல் கேளாத அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப் பிடித்து) "த்வய்யஸ்தி மய்யஸ்திச" என்று ப்ரஹ்லாதனுபதேசிக்கக் கேட்டும் திருந்தாத வஸுரனான ஹிரண்யனையும், "ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ" என்று ஸ்ரீவிபீஷணாழ்வா னுபதேசிக்கக் கேட்டும் திருந்தாத ராக்ஷஸனான ராவணனைப் போலேயும், கீழ் தாமுபதேசித்ததில் திருந்தாமல் கிடந்த ராக்ஷஸ ப்ரக்ருதிகளும் ஆஸுர ப்ரக்ருதிகளுமாயுள்ளாரை "அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல்" என்று தேடிப்பிடித்து.

**விளக்கம்** - (விஷவ்ருக்ஷ பலங்கள் கைகூடினவர்) - இவ்விதம் பகவத் ப்ரேமை வளர்ந்தபடி உள்ளதாலும், பாகவதர்களுடன் சேர்ந்தபடி உள்ள நிலை கிட்டப் பெறுவதாலும், ஸம்ஸார விஷ வ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹ்யம்ருதோபமே, கதாசித் கேசவே பக்திஸ் தத் பக்தைர்வா ஸமாகமா - ஸம்ஸாரம் என்று விஷமரத்தில்

அமிர்தத்தைப் போன்று இரு கனிகள் உள்ளன; அவையாவன கேசவனிடம் பக்தி மற்றும் அவனுடைய அடியார்களுடன் சேர்ந்திருத்தல் என்பதாகும் - என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரமாகிற மரத்தில் அமிர்தம் போன்ற பலன்களாகக் கூறப்பட்ட பகவத் பக்தியும் பாகவத சேர்த்தியும் என்பதான இரண்டு கனிகள் கைகூடப்பெற்ற இவர். (அடிமை புக்காரையும்) – திருவாய்மொழி (4-10) ஒன்றும் தேவும் - என்ற திருவாய்மொழியில், திருவாய்மொழி (4-10-1) – மற்றெத் தெய்வம் நாடுதிர் – ஏ்றும், திருவாய்மொழி (4-10-2) – பாடியாடிப் பரவிச் சென்மின்கள் - என்றும், திருவாய்மொழி (4-10-3) – தெய்வம் மற்றில்லை - என்றும் திருவாய்மொழி (4-10-4) - நாயகன் அவனே – என்றும், திருவாய்மொழி (4-10-5) – ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே - என்றும், திருவாய்மொழி (4-10-6) - அறிந்து ஓடுமின் – என்றும், திருவாய்மொழி (4-10-7) – ஆதிமூர்த்திக்கடிமை புகுவதுவே – என்றும், திருவாய்மொழி (4-10-8) - மற்றைத் தெய்வம் விளம்புதிர் – என்றும், திருவாய்மொழி (4-10-9) – உளங்கொள் ஞானத்து வைம்மின் - என்றும், திருவாய்மொழி (4-10-10) - ஆட்செய்வதே உறுவதாவது - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், மற்ற தெய்வங்கள் உயர்ந்தவர்கள் அல்லர் என்பதன் மூலமாகப் பகவானுடைய உயர்த்தியையும், பகவானை அண்டுவதற்கான வழியையும், பகவானுக்குச் செய்யப்படும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்பதையும் மிகவும் தெளிவாக நம்மாழ்வார் உபதேசித்தார். இதனைக் கேட்டுத் திருந்தி பகவானுக்கு அடிமையான ஸ்ரீவைஷ்ணவர்களையும், (ஆட்செய்வாரையும்) - திருவாய்மொழி (4-10-11) – ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவன் - என்பதற்கு ஏற்ப இவ்விதம் திருத்துவதன் மூலம் அவனுக்கு அடிமையாகிய தன்னையும். (காண) - காண்பதற்காக. (லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களை) - திருவாய்மொழி (5-2-5) – வைகுந்தன் பூதங்களேயாய் – என்றும், திருவாய்மொழி (5-2-4) – தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய் - என்றும், திருவாய்மொழி (5-2-3) - தேவர்கள் தாமும் புகுந்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப அந்த லோகமான ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளவர்களாகவும், மற்ற த்வீபங்களான ச்வேதத்வீபத்தில் உள்ளவர்களாகவும், திருவாய்மொழி (5-2-6) – நேமிப்பிரான் தமர் போந்தார் - என்பதற்கு ஏற்ப வந்தவர்களான நித்யஸூரிகளையும், முக்தர்கள் போன்றவர்களான தேவர்களையும், திருவாய்மொழி (5-2-2) – கண்டோம் கண்டோம் – என்று கூறுவதற்கு ஏற்ப, கண்களுக்கு இனிமையாக உள்ளதால் “கண்டோம்” என்று பலமுறை உரைக்கும் விதத்தில் கண்டு, திருவாய்மொழி (5-2-1) - பொலிக பொலிக - என்று அந்தக் கூட்டமானது மேன்மேலும் வளரவேண்டும்


**Email:**sridharan_book@yahoo.co.in

என்று உரைத்து. (ப்ரஹ்லாத விபீஷணர் சொல் கேளாத அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப் பிடித்து) - த்வய்யஸ்தி மய்யஸ்திச - உன்னிடமும் என்னிடமும் உள்ளான் - என்று ப்ரஹ்லாதன் உபதேசித்தபோதிலும் அதனைக் கேட்டுத் திருந்தாத அஸுரனாகிய ஹிரண்யனையும், ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ - இராமனிடம் சீதையைச் சேர்ப்பாயாக – என்று விபீஷணன் உபதேசம் செய்ததைக் கேட்டும் திருந்தாத ராக்ஷஸனாகிய இராவணனையும் போன்று, நம்மாழ்வாராகிய தான் இதுவரை செய்த உபதேசங்கள் அனைத்தையும் கேட்டுத் திருத்தாத ராக்ஷஸர் மற்றும் அஸுரர் போன்ற பலரையும் திருவாய்மொழி ( 5-2-5) - அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் - என்று தேடிப் பிடித்து.

**வ்யாக்யானம்** - [4] (தேசகாலதோஷம் போக வெங்குமிடங் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள்) "கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான் தமர்போந்தார்", "திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து" என்கிறபடியே சரீரத்தை முடித்து ப்ராணாபஹாரம் பண்ணக் கடவதான வ்யாதி, அப்படி செய்யும் பகை பசி முதலான தேசதோஷமும், "பவிஷ்யத்யதரோத்தரம்" என்கிறபடியே பதார்த்த ஸ்வபாவங்கள் வேறுபடும்படியான கலி ப்ரயுக்தமான காலதோஷமும், தங்கள் ஸஞ்சாரத்தாலே போம்படி, "இரியப் புகுந்திசை பாடியெங்கு மிடங்கொண்டன" என்கிறபடியே பகவதநுபவ ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே பெரியவாரவாரத்தோடே புகுந்து ப்ரதிகூலர்க்கிடமில்லாதபடி ஸர்வப்ரதேசத்திலும் பரம்பினவர்களை, "மேவித் தொழுதுய்ம்மினீர்கள்" என்று நீங்கள் அநந்யப்ரயோஜாராய்க் கொண்டு ஆச்ரயித்துஜ்ஜீவியுங்கோள்; அவ்வளவு போகமாட்டாதே தேவதாந்தர ப்ராவண்யத்தாலே பகவத் வைபவமளிகைக்கீடான அளவிலிகளாகில், (நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனை) "நிறுத்தி நும்முள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள்" என்று அவை தனக்கு ஸ்வத: உத்கர்ஷமில்லாமையாலே வசநாபாஸங்களாலும் யுக்த்யாபாஸங்களாலும் நீங்கள் சேமம் சாத்தி நிறுத்திப் புறம்பே சிலரறியில் அபஹஸிப்பர்களென்று உங்கள் நெஞ்சுக்குள்ளே நீங்களறிந்ததாக வுபாஸிக்கும் தேவதைகளை, "நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே" என்று ராஜாவானவன் ஊர்தோறும் கூறு செய்வார்களை நிறுத்துமாபோலே உங்களுக்காச்ரயணீயராக நிறுத்தின ஸர்வேச்வரனை.


Email:sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – (தேச தோஷம் போக) – திருவாய்மொழி (5-2-6) – கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான் தமர்போந்தார் - என்பதற்கு ஏற்ப சரீரத்தை முடித்து உயிரை எடுக்கவல்ல நோய், அவ்விதம் செய்வதான பகை பசி முதலான இடத்தின் குற்றங்கள் ஆகிய அனைத்தும் தங்களுடைய ஸஞ்சாரம் மூலம் விலகும்படியும். (கால தோஷம் போக) - திருவாய்மொழி (5-2-3) - திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து - என்பதற்கு ஏற்ப பொருள்களின் இயல்புகள் வேறுபடும்படியாக கலிபுருஷனால் ஏற்படுகின்ற காலத்தின் தோஷங்கள் அனைத்தும் தங்களுடைய ஸஞ்சாரம் மூலம் விலகும்படியும். (எங்கும் இடம் கொண்டவர்களை) – திருவாய்மொழி (5-2-3) - இரியப் புகுந்திசை பாடியெங்கு மிடங்கொண்டன - என்பதற்கு ஏற்ப பகவானை அனுபவிப்பதன் காரணமாக ஏற்படுகின்ற மிகுந்த மகிழ்வின் விளைவாக பெரிய ஆரவாரத்துடன் புகுந்து பகவத்பக்தி இல்லாதவர்களுக்கு இடம் இல்லாதபடிச் செய்து, தாங்களே அனைத்து இடங்களிலும் பரவி நிற்பவர்களை (மேவித்தொழுது உஜ்ஜீவியுங்கோள்) - திருவாய்மொழி (5-2-9) - மேவித் தொழுதுய்மினீர்கள் - என்பதற்கு ஏற்ப வேறு எந்தப் பயனையும் எதிர்பாராமல் நீங்கள் அடைந்து பிழைப்பீர்களாக. (நீங்கள் நிறுத்துகிறவர்களை) - இவ்விதம் செய்யாமல் மற்ற தெய்வங்களிடம் நீங்கள் வைத்த ஈடுபாடு காரணமாக பகவானுடைய மேன்மையை அறிவதற்கான தகுதியுள்ள அறிவு அற்றவர்கள் என்றால், திருவாய்மொழி (5-2-7) - நிறுத்தி நும்முள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள் - என்பதற்கு ஏற்ப தங்களுக்கு இயல்பாகவே எந்தவிதமான உயர்வும் இல்லாமையால், போலியான சொற்களாலும் போலியான யுக்திகளாலும், நீங்கள் உங்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டு மற்றவர்கள் இது போன்று வழிபடுவதை அறிந்தால் பரிகாசம் செய்வார்கள் என்று எண்ணியபடி, உங்களுடைய உள்ளத்தில் மட்டுமே வைத்தபடி உபாஸிக்கும் தெய்வங்களை, திருவாய்மொழி (5-2-8) - நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே – என்பதற்கு ஏற்ப அரசன் ஒருவன் ஒவ்வொரு ஊரிலும் கூறு செய்பவர்களை நிறுத்துவது போன்று உங்களால் அடையத்தக்கவர்களாக நிறுத்திய ஸர்வேச்வரனை.

**வ்யாக்யானம்** - [5] (மேவிப்பரம்புமவரோடொக்கத் தொழில் யுகதோஷமில்லையா மென்று) "நக்கபிரானோ டயனுமிந்திரனும் முதலாகத் தொக்க வமரர் குழாங்கள் கண்ணன் திருமூர்த்தியை மேவி மிக்கவுலகுகள் தோறும் எங்கும் பரந்தன ஒக்கத்தொழகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லை" என்று ருத்ரனோடே ப்ரஹ்மாவுமிந்திரனும் முதலாகத் திரண்ட

தேவதா ஸமூஹங்கள் க்ருஷ்ணனுடைய அஸாதாரண விக்ரஹத்தை சுபாச்ரயமாகப் பற்றி விஸ்த்ருதமான லோகங்களெங்குமொக்கப் பரந்து விபூதி விஸ்தாரத்தை யுடையரானார்கள். அவர்களைப் போலே நீங்களும் அவனையாச்ரயிக்கப் பெறில் விபரீத ப்ரவர்த்தகமான கலியுக தோஷமுங்களுக்குத் தட்டாதென்றுபதேசித்து. (விஷ்ணு பக்தி பரராக்கி) "விஷ்ணு பக்திபரோ தேவ:" என்கிறபடியே "அரக்கரசுரர்" என்னுமது போய் தேவ சப்த வாச்யராம்படி பகவத்பக்தி பரராகத் திருத்தி. (கண்ணுக்கினியன காட்டலாம்படியானார் கண்ணிலே நோக்கிக் காணும் பக்திஸித்தாஞ்ஜநத்தை யிடுகிறார் அஞ்சாம்பத்தில்) அதாவது திருந்தாதாரைத் திருத்தினவளவன்றிக்கே முன்பே திருந்தி "கண்ணுக்கினியன் கண்டோம் தொண்டீரெல்லீரும் வாரீர்" என்னும்படி பாகவத ஸமாஜ தர்சநமினிதாம்படி அவ்விஷயத்தில் சாபலமுடையராய் உபாயாத்யவஸாய தசையிலே நின்று ப்ராப்ய தசையிலே நிற்கிற தம்மைப் பொடியும்படியானவர்களுடைய உபாயாத்யவஸாயஜ்ஞானத்தின் மேலே, "என்னெஞ்சினால் நோக்கிக் காணீரென்னை முனியாதே", "மநஸி விலஸ தாசக்ஷ்ணா பக்திஸித்தாஞ்ஜநேந" என்கிறபடியே ஸித்தாஞ்ஜநம் போலே கூடார்த்தத்தை ப்ரகாசிப்பிப்பதாய் ப்ராப்ய வைலக்ஷண்யத்தை விஷயீகரித்ததான பக்தியை உபதேசமுகேந உண்டாக்குகிறார் அஞ்சாம் பத்திலென்கை.

**விளக்கம்** - (மேவிப்பரம்புமவரோடொக்கத் தொழில் யுகதோஷமில்லையா மென்று) - திருவாய்மொழி (5-2-10) - நக்கபிரானோ டயனுமிந்திரனும் முதலாகத் தொக்க வமரர் குழாங்கள் கண்ணன் திருமூர்த்தியை மேவி மிக்கவுலகுகள் தோறும் எங்கும் பரந்தன ஒக்கத்தொழகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லை - என்பதற்கு ஏற்ப ருத்ரனுடன், நான்முகன் இந்த்ரன் போன்ற பலரும் ஒன்றாகத் திரண்ட தேவர்களுடைய கூட்டங்கள் அனைத்தும் க்ருஷ்ணனுக்கே உரியதான திருமேனியைத் தங்களுக்கு நன்மை அளிக்கவல்ல இடமாகப் பற்றி நின்று, பரந்து விரிந்துள்ள லோகங்கள் அனைத்திலும் இவர்கள் ஒரே போன்று பரந்து, அனைத்து லோகங்களிலும் நிறைந்துள்ளனர். அவர்களைப் போன்றே நீங்களும் அவனை அடைந்தால் தீமைகளை ஏற்படுத்துகின்ற கலியின் தோஷங்கள் உங்களைச் சிறிதும் அண்டாது என்று உபதேசித்து. (விஷ்ணு பக்தி பரராக்கி) – விஷ்ணு பக்திபரோ தேவ: - விஷ்ணுவிடம் பக்தி கொண்டவன் தேவனாகவே ஆகிறான் - என்பதற்கு எற்ப, திருவாய்மொழி (5-2-5) – அரக்கர் அசுரர் - என்னும் நிலை மாறி, தேவன் என்று கூறலாம்படியாக பகவானிடம் பக்தி கொண்டவராகத் திருத்தி. (கண்ணுக்கினியன காட்டலாம்படியானார் கண்ணிலே) - அதாவது திருந்தாதவர்களைத்

திருத்தியதுடன் மட்டும் நிற்காமல், முன்பே திருந்தி, திருவாய்மொழி (5-2-2) - கண்ணுக்கினியன் கண்டோம் தொண்டீரெல்லீரும் வாரீர் - என்பதற்கு ஏற்ப பாகவதர்களுடைய கூட்டத்தைக் காணுதல் என்பதே இனிமை என்று உணரும்படியாக பாகவதர்களிடம் மிகுந்த ஆசை கொண்டவர்களாக, உபாயத்தில் துணிவு என்னும்படியாக நின்று, பேற்றை அடையும் நிலையில் உள்ள தன்னையும் கூட பொடியும்படியாக உள்ளவர்களுடைய "உபாயத்தில் துணிவு" என்ற ஞானத்தின் மேலே, (நோக்கிக் காணும் பக்திஸித்தாஞ்ஜநத்தை யிடுகிறார்) - திருவாய்மொழி (5-5-2) – என்னெஞ்சினால் நோக்கிக் காணீரென்னை முனியாதே - என்றும், ஸ்ரீகுணரத்நகோசம் (12) - மநஸி விலஸ தாசஷ்ணா பக்திஸித்தாஞ்ஜநேந - பக்தி என்னும் ஸித்தாஞ்ஜனத்தைக் கொண்ட மனதில் விளங்கும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள ஸித்தாஞ்ஜநம் போண்று, மறைந்துள்ள ஆழ்பொருளை விளக்குவதாக பேற்றின் பெருமையை உள்ளடக்கியதான பக்தியைத் தகுந்த உபதேசம் மூலம் ஐந்தாம் பத்தில் வெளியிட்டார்.

224. [1] என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மினென்று கருணையாலே "ஸர்வலோக பூதேப்ய:" என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல் வெட்டாக்குகிற சரண்யன் [2] அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்களளவா லன்றிக்கே அங்குற்றேன் என்னான்புணரா யென்னும்படி மெய்யமர் பக்திபூம பலமாகவும் அநந்ய கதித்வமுடைய தமக்குப் [3] பாதமே சரணாக்க அவையே சேமங்கொண்டு ஏகசிந்தையராய் திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து விளம்ப ரோஷம் உபாயத்தாலேயழிய, [4] உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே ஸப்ரகாரமாக ஸக்ருத் கரணீயமென்று புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின [5] சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீய சேஷமாக்கியும், புறத்திட்டுக் காட்டியென்று, ப்ரஸங்கிக்கில் முடியும்படிவிட்டு, [6] தந்தை தாய் உண்ணுஞ்சோறு மாநிதி பூவையாவையு மொன்றேயாக்கி, [7] தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ வென்னுமார்த்தியோடே [8] திரிவிக்கிரமனாகக் குறள் கோலப்பிரானாய் அடியை மூன்றையிரந்த வன் கள்வன் கண்முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந்தாமரைகளை [9] இணைத் தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத்திலதத்தே கண்டு அகலகில்லேனென்று


Email:sridharan_book@yahoo.co.in

பூர்வவாக்யமநுஸந்தித்தவர், [10] பிணக்கறத் தொடங்கி வேதப்புனிதவிறுதி சொன்ன ஸாத்யோபாய ச்ரவண ஸசோக ஸஜாதீயர்க்கு, [11] தந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தேனென்று ஸ்வஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டாநங்களாலே காட்டுகிறார் ஆறாம் பத்தில்.

**அவதாரிகை** - ஆறாம்பத்தால், தன்னுடைய பரம க்ருபையாலே ஸர்வரும் வந்து ஆச்ரயிக்கும்படியிருக்கிற ஸர்வ சரண்யனான ஸர்வேச்வரன் பக்தி பாரவச்யத்தாலே அநந்யகதிகளான தமக்குத் தன் திருவடிகளையே நிரபேக்ஷோபாயமாகக் காட்டிக் கொடுக்க, அவ்வுபாயத்திலே விச்சேதமில்லாதபடி நடக்கிற வ்யவஸாயத்தையுடையராய் தம்முடைய வ்யவஸாயத்தை கடக முகத்தாலே யிவனுக்கறிவித்து வரவு தாழ்க்கையாலே தமக்கு விளைந்த ப்ரணயரோஷத்தை யவன் பரிஹரிக்க அவன் ஸாமர்த்யத்தை யநுஸந்தித்து குணாநுபவத்துக்குப் பண்ணின ப்ரபத்தியும் பலித்தவாறே ப்ராப்திக்கு ப்ரபத்தி பண்ணுவதாகக் கோலி, ஸித்தோபாயவரணம் இதர பரித்யாக பூர்வகமாகையாலே பௌராணிக வசந ப்ரக்ரியையாலே உபாய விரோதிகளான த்யாஜ்யாம்சங்களை ஸவாஸநமாக தத் ப்ரஸங்கமும் அஸஹ்யமாம்படி விட்டு, விட்டவையெல்லாம் தமக்குப் பற்றுகிற விஷயமேயாக நினைத்து பரமார்த்தியோடே தமக்குபாயமாக நினைத்திருக்கும் திருவுலகளந்தருளின் ஸர்வஸுலபமான திருவடிகளை நித்யஸூரிகளும் வந்து அனுபவிக்கும்படி நிற்கிற திருமலையிலே கண்டு கொண்டு, பூர்வ வாக்ய ப்ரக்ரியையாலே சரணம் புக்கவர் "பத்துடையடியவ"ரிலே தொடங்கி, அஞ்சாம் பத்தளவாக உபதேசித்த பக்த்யுபாயத்தின் துஷ்கரத்வாதி தோஷாநுஸந்தாநத்தாலே சோகம் ஜநிக்கும்படியான பாகம் பிறந்தவர்களுக்கு, தம்முடைய ப்ரபத்தி நிஷ்டையை ப்ரகாசிப்பிக்கிறாரென்கிறார்.

**விளக்கம்** – ஆறாம் பத்தால் கூறுவது என்ன? ஸர்வேச்வரன் தன்னுடைய உயர்ந்த கருணை காரணமாக அனைவரும் வந்து தன்னைச் சரணம் என்று புகுந்து நிற்கலாம்படி உள்ளான். பக்தியின் பரவசம் காரணமாக வேறு எந்த ஒரு புகலிடமும் இல்லாத நம்மாழ்வாருக்கு, தனது திருவடிகளை, வேறு எதனையும் எதிர்பாராத உபாயமாகக் காட்டிக் கொடுத்தான். அப்படிப்பட்ட உபாயத்திலிருந்து தனக்கு எந்தவிதமான மாறுபாடும் ஏற்படாமல் நம்மாழ்வார் இருந்தார். தனது அத்தகைய நிலையை தூது மூலம் அவனுக்கு அறிவித்தார். ஆனால் அவன் வராமல் காலம் தாழ்ந்தினான். இதன் காரணமாக

ப்ரணய தோஷம் கொண்டராக நின்ற ஆழ்வாருடைய ப்ரணய தோஷத்தை, அவன் விலக்கினான். இவ்விதம் விலக்கிய அவனுடைய சாமர்த்தியத்தை எண்ணியபடி, ஐந்தாம் பத்தில் அவனுடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும்அனுபவித்தபடி இருத்தல் வேண்டும் என்று செய்த ப்ரபத்தியானது பலித்தது. அதனைத் தொடர்ந்து அவனை அடைதல் என்ற பேற்றுக்கு ப்ரபத்தி செய்யவேண்டும் என்று தீர்மானித்தார். இவ்விதம் பேற்றுக்கான ப்ரபத்தியைச் செய்யவேண்டும் என்றால், அதற்கு முன்பாக மற்ற விஷயங்கள் குறித்த ஈடுபாடுகள் அனைத்தையும் துறக்கவேண்டும் என்பதால், புராணங்களை நன்றாக அறிந்தவர்களுடைய சொற்களின்படி, ப்ரபத்திக்கு விரோதிகளாக உள்ளவையும் துறப்பதற்கு ஏற்றவையும் ஆகிய அனைத்தையும் அவற்றின் வாசனைகளுடன் துறந்தார். துறந்தவை அனைத்தும் தமக்குப் பற்றுகின்ற விஷயமேயாக எண்ணி மிகுந்த துக்கத்துடன், தனக்கு ஏற்ற உபாயமாக எண்ணியுள்ளதும், அனைத்து லோகங்களையும் அளந்ததும், எளிதில் அடையலாம்படி உள்ளதும் ஆகிய அவன் திருவடிகளை, நித்யஸூரிகளும் வந்து நின்று அனுபவிக்கலாம்படியாக உள்ள திருவேங்கடத் திருமலையில் கண்டார். உடனே, த்வய மந்திரத்தின் முதல் வாக்கியம் கொண்டு சரணம் புகுந்தார். இவ்விதம் சரணம் புகுந்தவர், திருவாய்மொழி (3-1) – பத்துடை அடியவர் - என்பதில் தொடங்கி, ஐந்தாம் பத்து முடிய உள்ள அனைத்திலும் உபதேசித்த பக்தி உபாயத்தின் "செய்வதற்கு மிகவும் கடினமானது" என்ற நிலை ஏற்பட்டவர்களுக்கு, தனது ப்ரபத்தி நிஷ்டையை ஆறாம் பத்து மூலம் வெளிப்படுத்துகிறார்.

**வ்யாக்யானம்** - (என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மினென்று கருணையாலே "ஸர்வலோக பூதேப்ய:" என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல் வெட்டாக்குகிற சரண்யன்) "ஏறு சேவகனார்க் கென்னையுமுள்ளென்மின்களே" என்று ஆர்த்த ரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்கிறவனுக்கு ரக்ஷ்ய வர்க்கத்திலே நானுமொருத்தியுள்ளென்று சொல்லுங்கோளென்றும், "திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன் சரணே" என்று திருவிண்ணகரிலே நின்றருளினவன் திருவடிகளல்லது ஸர்வர்க்கும் வலிய புகலில்லையென்றும், "வன்சரண் சுரர்க்காய்" என்று தேவர்களுக்கு வலிய ரக்ஷகனாயென்றும், "அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மி னென்றென்றருள் கொடுக்கும்" என்று நமக்கு சேஷபூதராயுள்ளாரெல்லாரும் நம்மடிகளின் கீழே அநந்யப்ரயோஜநராய்ப்

புகுந்து உஜ்ஜீவியுங்கோளென்றென்று தன்னருளைப் பண்ணாநிற்குமென்றுஞ் சொல்லுகிறபடியே, தன்னுடைய க்ருபையாலே "ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம்" என்று வந்து சரணாகதனான ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸர்வலோக சரண்யனென்ற உக்தி ஸமுத்ர கோஷம் போலே நிரர்த்தமாகாதபடியாகவும், "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே அபயம் ஸர்வபூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம" என்று சரணாகத ரக்ஷணத்திலே தீக்ஷிதனாய் சரண்யனான தான் சொன்ன உக்தி கண்டாது பரியாகாதபடியாகவும் "வானவர் கோனொடும் நமன்றெழுந் திருவேங்கடம்" என்றும், "எழுவார் விடைகொள்வாரீன் துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார் வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம்" என்றும், "போதறிந்து வானரங்கள்", "கண்டு வணங்கும் களிறு" என்றும் நித்யஸூரிகள், நித்யஸம்ஸாரிகள், ப்ரயோஜநாந்தரபரர், அநந்யப்ரயோஜநர், மநுஷ்யர், திர்யக்குகள் என்கிற வாசியற ஆச்ரயிக்கலாம்படி ஸர்வ ஸமாச்ரயணீயனாய் நிற்கையாலே தன்னுடைய உபாயத்வம் சிலாலிகிதமாம்படி திருமலையிலே யெழுந்தருளி நிற்கிற அநாலோசித விசேஷ அசேஷலோக சரண்யனான ஸர்வேச்வரன்.

**விளக்கம்** – (என்னையும்) - திருவாய்மொழி (6-1-10) - ஏறு சேவகனார்க் கென்னையுமுள்ளென்மின்களே - என்பதில் துன்பத்தில் உள்ளவர்களைக் காப்பாற்றுதல் என்ற உறுதியில் உள்ளவனிடம் "காப்பாற்றப்பட வேண்டிய பொருள்களில் நானும் உள்ளேன் என்று உரைப்பீர்களாக" என்றும், (யாவர்க்கும்) - திருவாய்மொழி (6-3-7) - திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன் சரணே - என்பதில் திருவிண்ணகர் க்ஷேத்ரத்தில் நின்ற அவன் திருவடிகள் அல்லாமல் அனைவருக்கும் ஏற்றதொரு உறுதியான புகலிடம் வேறு இல்லை என்றும், (சுரர்க்கு ஆய்) - திருவாய்மொழி (6-3-8) – வன்சரண் சுரர்க்காய் – என்பதில் தேவர்களுக்கு உறுதியான ரக்ஷகன் என்றும், திருவாய்மொழி (6-10-11) – அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மி னென்றென்றருள் கொடுக்கும் - என்பதில் "நமக்கு அடியார்களாக உள்ள அனைவரும் நம்முடைய திருவடிகளின் கீழே வேறு எந்தப் பயனையும் எதிர்பாராமல் புகுந்து நின்று வாழீர்களாக" என்று தனது க்ருபையைச் செய்தபடி உள்ளான் என்றும் கூறுவதற்கு ஏற்ப. (கருணையாலே) - தன்னுடைய க்ருபையாலே. (ஸர்வலோக என்றது கடல் ஓசை ஆகாமல்) - இராமாயணம் யுத்தகாண்டம் (17-14) - ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம் – அனைத்து லோகங்களும்

சரணம் புகத்தக்கவனும் மஹாத்மாவும் ஆகிய இராமன் முன்பாக வந்து நிற்கும் விபீஷணனாகிய என்னைக் குறித்து விரைந்து சென்று உரைப்பீர்களாக - என்பதற்கு ஏற்ப, சரணம் புகுந்தவனாகிய விபீஷணன் இராமனைக் குறித்து உரைத்த சொற்களாகிய "ஸர்வ லோக சரண்யன் - அனைத்து லோகங்களும் சரணம் புகத்தக்கவன்" என்பவை கடலின் ஓசை போன்று பயனற்றுப் போகாமல், (பூதேப்ய: என்றது கழுத்துக்கு மேலே ஆகாமல்) – இராமாயணம் யுத்தகாண்டம் (18-33) - ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே அபயம் ஸர்வபூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம - ஒருமுறை ப்ரபத்தி செய்தவனுக்கும், "நான் உனக்காகவே உள்ளேன்" என்று யாசித்து நிற்பவனுக்கும் அனைத்து உயிர்களிடமிருந்தும் பயம் இன்மையை நான் ஏற்படுத்துகிறேன்; இது எனது விரதம் ஆகும் - என்று கூறுவதற்கு ஏற்ப தன்னைச் சரணம் புகுந்தவர்களைக் காப்பாற்றுதல் என்பதில் விரதம் பூண்டவனாக, இவ்விதம் அனைவருக்கும் புகலிடமாக உள்ள தனது சொற்கள் தனது கழுத்துக்கு மேல் சென்று கடனாக மாறாதபடி, (உபாயத்தை கல்வெட்டு ஆக்குகிற சரண்யன்) திருவாய்மொழி (3-3-7) - வானவர் கோனொடும் நமன்றெழுந் திருவேங்கடம் – என்றும், முதல் திருவந்தாதி (26) - "எழுவார் விடைகொள்வாரீன் துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார் வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம் - என்றும், இரண்டாம் திருவந்தாதி (72) - போதறிந்து வானரங்கள் - என்றும், மூன்றாம் திருவந்தாதி (70) – கண்டு வணங்கும் களிறு – என்றும் கூறுவதற்கு ஏற்ப நித்யஸூரிகள், நித்ய ஸம்ஸாரிகள், மற்ற பயன்கள் எதனையும் விரும்பாமல் உள்ளவர்கள், வேறு பயனை விரும்புபவர்கள், மனிதர்கள், விலங்குகள் என்பது போன்ற வேறுபாடு ஏதும் ஆராயாமல், அனைவரும் வந்து அண்டும்படியாக, அனைவர்க்கும் புகலிடமாக நிற்பதால், தன்னுடைய "உபாயமாக உள்ள தன்மை" என்பது கல்லில் செதுக்கி வைக்கலாம்படியாகத் திருமலையில் எழுந்தருளி நிற்பவனாகிய, சிந்திக்கவும் இயலாதபடியான சிறப்புகள் பலவற்றையும் கொண்டவனும், அனைத்து லோகங்களும் சரணம் புகத்தக்கவனும் ஆகிய ஸர்வேச்வரன்.

**வ்யாக்யானம்** - [2] (அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்களளவாலன்றிக்கே அங்குற்றேனென்னான் புணராயென்னும்படி மெய்யமர் பக்திபூம பலமாகவும் அநந்யகதித்வமுடைய தமக்கு) "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதிமந்யாமவிதுஷாம் கதிர்கம் யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் சௌநகமுநி:"

என்கிறபடியே உபாயாந்தரங்களை யறியவு மநுஷ்டிக்கவும் மீடான ஜ்ஞாந சக்திகளில்லாமையாலேயாதல் பகவதேக பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு ததேகோபாயத்வ மொழிய தத் வ்யதிரிக்தோபாயாந்வயமாகாதென்று, "உன்னாலல்லால் யாவராலு மொன்றும் குறைவேண்டேன்" என்னும்படியான ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்தாலே யாதல், அநந்யகதிகளாமள வன்றிக்கே, "அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லே னுன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனுமல்லேன்", "என்னான் செய்கேன்", "பூவார்கழல்களரு வினையேன் பொருந்துமாறு புணராய்" என்று ஸாதநமநுஷ்டித்து முக்தப்ராயனாயிருக்கிறே னல்லேன், ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமவர்களிலே ஒருவனா யிருக்கிறே னல்லேன்; மேலும் ஸாதநாநுஷ்டாநம் பண்ணவொண்ணாதபடி உன் ஸௌந்தர்யாதிகளிலே ஈடுபட்டு உன்னைக் காண வேணுமென்னுமாசையாலே பலஹீநனாய்த் தளர்ந்து இனியுபாயாநுஷ்டாந க்ஷமனல்லேன்; உன் திருவடிகளைப் பெறுகைக்கு என்னால் செய்யலாவதில்லை, எனக்கும் செயலுக்குமென்ன சேர்த்தியுண்டு, முன்பு பரிக்லுப்தமான உபாயங்களொன்றுமென் பக்கலில்லை; நிரதிசய போக்யமான உன் திருவடிகளை நான் கிட்டும் வழி கல்பிக்க வேணுமென்று சொல்லும்படி. "மெய்யமர் காதல்" என்று அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் குண ஜ்ஞாநத்தாலேயாதல் தரிக்கவொண்ணாதபடியாய் திருமேனியிலே அணைய வேண்டும்படியான காதலென் பக்த்யதிசயம். அதினுடைய பலமாகவும், உபாயாந்தரத்துக்காளன்றிக்கே "களைகண் மற்றிலேன்" என்னும்படி அநந்யகதித்வமுடையரான தமக்கு. ஸமாஸத்தில் பக்தி பூம பலமென்ன வேணும், பூமாபலமென்கிறவிது பாடஸ்கலநத்தாலே வந்ததாமித்தனை.

**விளக்கம்** - (அஜ்ஞாந அசக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்கள் அளவால் அன்றிக்கே) - அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதிமந்யாமவிதுஷாம் கதிர்கம் யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் ஸௌநகமுநி: - அஜ்ஞானத்தாலோ, அளவிட இயலாதவன் என்ற ஞானத்தாலோ, பக்தியின் மேன்மையாலோ, இந்த உலகில் ஸர்வேச்வரனைத் தவிர வேறு எந்த ஒரு உபாயமும் இல்லை என்று அறிபவர்களுக்கு [அல்லது வேறு உபாயம் உள்ளது என்று அறியாதவர்களுக்கு] அவனே உபாயமாகவும் உபேயமாகவும் ஆகிறான் என்று சௌநக மஹரிஷி ஜிதந்தை என்ற மந்த்ரத்தின் பொருளை விரிவாக உரைத்தார் - என்பதற்கு ஏற்ப மற்ற உபாயங்களை அறியத்தக்கதான ஞானம் இல்லை என்பதால், அவற்றை இயற்றுவதற்கான ஆற்றல் இல்லை என்பதால், பகவானுக்கு மட்டுமே

வசப்பட்டிருக்கும் ஆத்மாவிற்கு அவன் மட்டுமே உபாயமாக இருத்தல் அல்லாமல் அவனைக் காட்டிலும் வேறாக உள்ள எந்த ஒரு வஸ்துவும் உபாயம் என்று எண்ணுதல் கூடாது என்பதைத் திருவாய்மொழி (5-8-3) – உன்னாலல்லால் யாவராலு மொன்றும் குறைவேண்டேன் - என்று உரைக்கும்படியாக ஸ்வரூபத்தைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிதல் மற்றும் வேறு கதி இல்லாதவர் என்பது மட்டும் அல்லாமல். (அங்குற்றேன் என்னான்புணரா யென்னும்படி) – திருவாய்மொழி (5-7-2) - அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன் உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான் எங்குற்றேனும் அல்லேன் - என்பதற்கு ஏற்ப ஒரு உபாயத்தைக் கைக்கொண்டு முக்தனாகவில்லை, உபாயங்களைக் கைக்கொள்பவர்களில் ஒருவனாக இல்லை, எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ள இயலாமல் உனது திருமேனியின் அழகு போன்றவற்றில் ஈடுபட்டு நின்று உன்னைக் காணவேண்டும் என்ற மிகுந்த ஆசை காரணமாக பலம் இழந்து தளர்ந்து வேறு எந்த உபாயத்தையும் கைக்கொள்ளும் ஆற்றல் கொண்டவனும் இல்லை என்றும், திருவாய்மொழி (5-8-3) – என் நான் செய்கேன் – என்பதற்கு ஏற்ப உன்னுடைய திருவடிகளைப் பெறுவதற்கு என்னால் செய்ய முடிந்தது ஏதும் இல்லை, எனக்கும் அது போன்ற செயல்களுக்கும் என்ன ஸம்பந்தம் உள்ளது, முன்பு பலரால் உண்டாக்கப்பட உபாயங்கள் ஏதும் என்னிடம் இல்லை என்றும், திருவாய்மொழி (6-10-4) – பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராய் - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற இனிமை நிறைந்தவனாகிய உனது திருவடிகளை நான் அடையும் வழியை நீயே எனக்குக் கற்பிக்கவேண்டும் என்றும் கூறுவதற்கு ஏற்ப, (மெய்யமர் பக்தி பூம பலமாகவும்) – திருவாய்மொழி (6-8-2) – மெய்யமர் காதல் - என்பதற்கு ஏற்ப அவனுடைய ஸ்வரூபத்தை எண்ணியோ, குணங்களை எண்ணியோ மட்டுமே தரிக்க இயலாமல், அவனுடைய திருமேனியில் அணையவேண்டும் என்னும்படியான ப்ரேமையானது கடந்த பத்தில் தமக்குப் பிறந்த மிகுந்த பக்தியின் பயனாகவும், வேறு எந்த உபாயங்களிலும் ஈடுபடாமல். (அநந்யகதித்வமுடைய தமக்கு) – திருவாய்மொழி (5-8-8) - களைகண் மற்றிலேன் - என்பதற்கு ஏற்ப வேறு கதி இல்லாமல் உள்ள தனக்கு.

**வ்யாக்யானம்** - [3] (பாதமே சரணாக்க அவையே சேமங்கொண்டேக சிந்தையராய்) "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்னும்படி தன் திருவடிகளை ஸஹாயாந்தர நிரபேக்ஷ ஸாதநமாகக் காட்டிக்கொடுக்க; "கழல்களவையே சரணாகக் கொண்ட" என்றும், "அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்றும்,

"நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறுமேக சிந்தையனாய்" என்றும் சொல்லுகிறபடியே விரோதி நிரஸந சீலனானவவன் திருவடிகளையே நிரபேக்ஷோபாயமாகக் கொண்டு ஏகரூபமான வ்யவஸாயத்தையுடையராய், (திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து) "வைகல் பூங்கழிவாய் வந்து மேயுங்குருகினங்காள் கனிவாய்ப் பெருமானைக் கண்டு வினையாட்டியேன் காதன்மை கைகள் கூப்பிச் சொல்லீர்" என்று தொடங்கி, "ஏறு சேவகனார்க் கென்னையு முளளென்மின்கள்" என்னுமதளவாக பெற்றன்றித் தரியாத அதிமாத்ர ப்ராவண்யமுண்டா யிருக்கவும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயத்தை ஸஹியாத ஸ்வரூப பாரதந்த்ர்யத்தாலே ததேக ரக்ஷ்யத்வ வ்யவஸாய ரஹிதராயிருக்கிற தம்முடைய கருத்தை, "உபாப்யாமேவ பக்ஷாப்யாம்" என்கிறபடியே ஜ்ஞாநாநுஷ்டாந ரூப பக்ஷ த்வய யோகத்தாலே ப்ராப்யமான பகவத் விஷயத்தை சீக்கிரமாக ப்ராபிக்கைக்கீடான யோக்யதை யுடையரான கடகரையிட்டறிவித்து. (விளம்ப ரோஷமுபாயத்தாலே யழிய) இப்படி யறிவித்த வளவிலும் அவன் வரவு தாழ்க்கையாலுண்டான ப்ரணய ரோஷத்தாலே, வந்து மேல் விழுந்தவளவிலும், "போகுநம்பி", "கழகமேறேல் நம்பி" என்று பேஷித்து அவன் முகம் பாராமலிருப்போமென்று சிற்றிலிழைப்பது சிறு சோறடுவதாக, அது தன்னுடைய போக விரோதியாகையாலே "அழித்தாயுன் திருவடியால்" என்கிறபடியே அவனந்த அநாதராந்யபரதைகளை தனக்கும் சரமோபாயமான திருவடிகளாலே யுபலக்ஷிதமான விக்ரஹத்தினுடைய வைலக்ஷண்யத்தாலே குலைக்க அவனோடே பொருந்தி.

**விளக்கம்** – (பாதமே சரண் ஆக்க) - திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்பதற்கு ஏற்ப அவன் தன்னுடைய திருவடிகளை, மற்ற எந்தவிதமான உபாயங்களையும் எதிர்பார்க்காத ஸாதனமாகக் காட்டிக் கொடுத்தான். (அவையே சேமம் கொண்டு ஏக சிந்தையராய்) – திருவாய்மொழி (5-8-11) - கழல்களவையே சரணாகக் கொண்ட – என்றும், திருவாய்மொழி (5-9-11) - அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் – என்றும், திருவாய்மொழி (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறுமேக சிந்தையனாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அடியார்களுடைய விரோதிகளை அழிக்கின்ற தன்மை கொண்டவனாகிய திருவடிகளை மட்டுமே, வேறு எந்தவிதமான உதவியும் தேவையற்றதாக உள்ள உபாயமாகக் கொண்டு, அதிலிருந்து மாறுபட்டு நிற்காத திருவுள்ளம் கொண்டவராக. (திர்யக்குகளை இட்டு ஸ்வ அபிப்ராயத்தை நிவேதித்து) -

திருவாய்மொழி (6-1-1) - வைகல் பூங்கழிவாய் வந்து மேயுங்குருகினங்காள் கனிவாய்ப் பெருமானைக் கண்டு வினையாட்டியேன் காதன்மை கைகள் கூப்பிச் சொல்லீர் - என்று தொடங்கி, திருவாய்மொழி (6-1-10) - ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்கள் – என்பது முடிய உள்ள பாசுரங்களில், அவனை அடையாமல் தரிக்க இயலாதபடியான மிகுந்த ப்ரேமை ஏற்பட்டபோதிலும், தன்னைத்தானே காப்பாற்றுக் கொள்வதில் தான் ஈடுபடுவதைப் பொறுக்க இயலாதபடி உள்ளதான, “தனது ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றவனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல்” என்பதன் விளவாக, அவனால் மட்டுமே தான் காப்பாற்றப்படவேண்டும் என்று ஆழ்ந்த உறுதி கொண்ட தனது திருவுள்ளக் கருத்தை, உபாப்யாமேவ பக்ஷாப்யாம் – பறவையானது இரண்டு சிறகுகள் கொண்டு பறப்பது போன்று கர்மம் மற்றும் ஞானத்தினால் அவன் அடையப்படுகிறான் - என்பதற்கு ஏற்ப, ஞானம் மற்றும் கர்மம ஆகியவையாக உள்ள சிறகுகள் கொண்டு, அடையவேண்டிய இலக்காக உள்ள பகவானை, வெகு விரைவாக அடைவதற்குத் தகுந்த தகுதியைக் கொண்டவர்கள் மூலமாக அறிவித்து. (விளம்ப ரோஷம் உபாயத்தாலே அழிய) - இவ்விதம் அவர்கள் மூலமாகத் தனது நிலையை அறிவித்தபோதிலும் அவனுடைய வருகை என்பது தாமதமானதால் ஏற்பட்ட ப்ரணய ரோஷம் காரணமாக அவன் வந்தபோதிலும் திருவாய்மொழி (6-2-2) – போகு நம்பி - என்றும், திருவாய்மொழி (6-2-6) – கழகம் ஏறேல் நம்பி - என்றும் அவனைத் தள்ளி, “அவன் முகத்தை நாம் பார்க்காமல் இருப்போமாக” என்று தீர்மானித்து, சிற்றில் இழைத்தல் மற்றும் சிறு சோறு அடுதல் என்பது போன்ற செயல்களைச் செய்தபடி இருந்தார். அப்போது இவருடைய இந்தச் செயல்கள் தனது இன்பதிற்கு விரோதமாக உள்ளதை அறிந்த ஸர்வேச்வரன், திருவாய்மொழி (6-2-9) – அழித்தாய் உன் திருவடியால் - என்பதற்கு ஏற்ப, அவருடைய அத்தகைய “ஈடுபாடு இன்றி இருத்தல், மற்ற விஷயங்களில் ஈடுபடுதல்” போன்ற செயல்கலை, தனக்கும் இறுதியான உபாயமாக உள்ள திருவடிகள் மூலம், பல உப லக்ஷணங்களால் கொள்ளப்படும் தனது திருமேனியின் அழகு மூலம் அழித்தான். அப்போது இவர் மீண்டும் அவனுடன் பொருந்தி.

**வ்யாக்யானம்** - [4] (உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே) “பிறந்தவாற்”றிலே அவதாரானுபவம் பெறாத விழவாலே பதற, தத் குண சேஷ்டிதங்களை அநுஸந்தித்தாகிலும் தரிப்போமென்றிழிந்தவளவில், “நிறந்தனூடு புக்கெனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற”, “பையவே நிலையும் வந்தென் நெஞ்சையுருக்குங்கள்”,

“உள்ளமுள் குடைந்தென்னுயிரை யுருக்கி யுண்ணும்”, “ஊடுபுக்கென தாவியை யுருக்கி யுண்டிடுகின்ற” என்னும்படி அவை மிகவும் சைதில்ய ஹேதுவாகையாலே தரித்து நின்றனுபவிக்க வல்லேனாம்படி பண்ணியருள வேணுமென்று அவனை உபாயமாக வரித்ததும், “குரவையாய்ச்சி”யரிலே, “என்ன குறைவெனக்கு” என்று தொடங்கி, “நண்ணி நான் வணங்கப் பெற்றேனெனக்கார் பிறர் நாயகர்” என்று ப்ரீதி பூர்வகமாக அவதார குண சேஷ்டிதங்களை ஸர்வகாலமும் முறையிலே கிட்டியனுபவிக்கப் பெற்றவெனக்கு ஆர்தான் நியாமகரென்று கர்விக்கும்படி பலித்தவாறே. (ஸப்காரமாக ஸக்ருத்கரணீயமென்று) இதரோபாய த்யாக பூர்வகத்வமாகிற ப்ரகாரத்தோடே ஸித்தோபாயவரணம் “ஸக்ருதேவ” என்கிறபடியே ப்ராப்திக்காகவுமொருக்கால் பண்ண வேணுமென்று பார்த்து. (புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களை) “பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந், ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச, ஸர்வதர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ச்ச ஸாக்ஷராந், லோக விக்ராந்த சரணௌ சரணம் தே வ்ரஜம் விபோ” என்கிற வசநம், “ஆக்நேயமஷ்டமஞ்சைவ பவிஷ்யந்நவமம் ஸ்ம்ருதம்” என்கிறபடியே அஷ்டாதச புராணத்திலும் வைத்துக்கொண்டு ஒன்பதாம் புராணமாகச் சொல்லப்பட்ட பவிஷ்யத் புராண ஸித்தமாகையாலும், புராண வித்தமராகையாலே பௌராணிகரான பாஷ்யகாரர் கத்யத்திலே இவ்வசந ப்ரக்ரியையாலே த்யாஜ்யங்களினுடைய த்யாகபூர்வமான சரணவரணத்தைப் பண்ணுகையாலும் “புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின” என்கிறது. இங்ஙனன்றிக்கே, இவ்வர்த்தம் புராண ஸித்தமாகையாலும், அதுதான் புராதந புருஷாநுஷ்டாந ரூபமாகச் சொல்லப்படுகையாலும் இவையிரண்டையும் பற்ற “புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின” என்றருளிச் செய்தாராகவுமாம்.

**விளக்கம் -** (உருகாமல் வரித்ததும்) – திருவாய்மொழி (5-10-1) – பிறந்தவாறும் - என்பதில் அவனுடைய திரு அவதார காலத்தில் தான் இல்லாத காரணத்தால் அவற்றை அனுபவிக இயலவில்லையே என்று பதறினார். பின்னர் அந்த அவதாரங்களில் அவனுடைய குணங்களையும் லீலைகளையும் நம்முடைய சிந்தனையில் எண்ணியாவது நாம் தரிப்போம் என்று தீர்மானித்து அவற்றில் ஈடுபட்டார். ஆனால் அத்தகைய செயல் என்பது திருவாய்மொழி (5-10-1) – நிறந்தனூடு புக்கெனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற – என்றும், திருவாய்மொழி (5-10-3) - பையவே நிலையும் வந்தென் நெஞ்சையுருக்குங்கள் - என்றும், திருவாய்மொழி (5-10-4) - உள்ளமுள் குடைந்தென்னுயிரை யுருக்கி யுண்ணும் -

என்றும், திருவாய்மொழி (5-10-10) - ஊடுபுக்கென தாவியை யுருக்கி யுண்டிடுகின்ற - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஒருவரை நிலைகுலையச் செய்பவை என்பதால், "நான் தரித்து நின்று அவதாரங்களுடைய குணங்கள் மற்றும் லீலைகள் ஆகியவற்றை அனுபவிக்கும்படிச் செய்யவேண்டும்", என்றும் அவனையே அதற்கான உபாயமாக அழைத்தார். (நண்ணி வணங்கப் பலித்தவாறே) - திருவாய்மொழி (6-4) – குரவை ஆய்ச்சியர் - என்பதில் உள்ள திருவாய்மொழி (6-4-1) - என்ன குறைவெனக்கு - என்று தொடங்கி, திருவாய்மொழி (6-4-10) - நண்ணி நான் வணங்கப் பெற்றேனெனக்கார் பிறர் நாயகர் – என்பது முடிய, ப்ரீதியை முன்னிறுத்தி, "அவனுடைய அவதாரங்களில் வெளிப்பட்ட குணங்கள் மற்றும் லீலைகளை அனைத்து காலங்களிலும் சரியான விதத்தில் அடைந்து அனுபவித்தபடி உள்ள நிலையை அடைந்தேன். இவ்விதம் உள்ள எனக்கு வேறு எஜமானன் யார் உள்ளார்கள்?", என்று கர்வத்துடன் பேசுவது நிகழ்ந்தவுடன். (ஸ்ப்ரகாரமாக ஸக்ருத்கரணீயம் என்று) - மற்ற அனைத்து உபாயங்களையும் கைவிடுதல் என்பதை முதலில் செய்து, தகுந்த முறையுடன் ஸித்தோபாயமாக உள்ள அவனைச் சரணம் அடைதல் என்பது இராமாயணம் – ஸக்ருத் ஏவ - ஒரு முறை மட்டுமே - என்பதற்கு ஏற்ப அவனை அடைவதற்காகவும் ஒருமுறை செய்யவேண்டும் என்று பார்த்து, (புராண பௌராணிகர் த்யாஜ்ய அம்சம் ஆக்கின) - பவிஷ்ய புராணம் - பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந், ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச, ஸர்வதர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ச்ச ஸாக்ஷராந், லோக விக்ராந்த சரணௌ சரணம் தே வ்ரஜம் விபோ - தந்தை, தாய், மனைவி, புத்திரர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆசார்யர்கள், இரத்தினங்கள், செல்வங்கள், தானியங்கள், வயல்கள், வீடுகள், அனைத்து தர்மங்கள், அனைத்து விருப்பங்கள் போன்ற அனைத்தையும் முழுவதுமாகக் கைவிட்டு, அனைத்து லோகங்களையும் அளந்த திருவடிகளைச் சரணம் புகுந்தேன் – என்ற வாக்கியமானது, ஆக்நேயமஷ்டமஞ்சைவ பவிஷ்யந்நவமம் ஸ்ம்ருதம் - அக்னிபுராணம் எட்டாவது புராணம், பவிஷ்ய புராணம் ஒன்பதாவது என எண்ணப்படவேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, பதினெட்டு புராணங்களில் ஒன்பதாவது புராணமாகக் கூறப்பட்ட பவிஷ்ய புராணத்தில் உள்ளது என்பதாலும், புராணங்களை நன்றாக அறிந்தவர் என்பதால் எம்பெருமானார் தனது சரணாகதி கத்யத்தில் இந்தப் புராண வாக்கியத்தின் மூலமாகவே, கைவிடவேண்டியவற்றைத் துறத்தல் என்பதை முன்னிறுத்தி ப்ரபத்தி செய்தார் என்பதாலும், இங்கு சூர்ணையில் "புராண பௌராணிகர் த்யாஜ்ய அம்சம்" என்றார். அல்லது இவ்விதம் பொருள் கூறாமல், "இத்தகைய கருத்தானது புராணத்தில்

கூறப்பட்டதாலும், இதுவே முன்பிருந்த ஆசார்யர்களுடைய செயல்பாடு என்று கூறப்படுவதாலும் இவ்விதம் சூர்ணையில் அருளிச்செய்தார்", என்றும் பொருள் உரைக்கலாம்.

**வ்யாக்யானம் -** ஆக இப்படி புராணமும் பௌராணிகரும், "பிதரம் மாதரம்" என்று தொடங்கி, "ஸாக்ஷராந்" என்னுமதளவாக, "ஸந்த்யஜ்ய" என்கிறவிதுக்கு கர்மீபவிக்கையாலே வக்ஷ்யமாண ஸித்தோபாயவரணத்துக்கு அங்கமாக த்யஜிக்கப்படு மம்சமாக்கின சித் வஸ்துக்களும் அசித் வஸ்துக்களுமாயுள்ள ப்ராப்யாபாஸங்களையும், ப்ராபகாபாஸங்களையும், இதில் "ஸர்வதர்மாம்ச்ச"வுக்குக் கீழ் உபாயாந்தர ஸஹகாரியுமாய் ஸ்வயம் ப்ரயோஜநமாகையாலே உபேயமுமாய் இரண்டுக்கும் பொதுவாயிருந்துள்ளவற்றைச் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில், "மாத்ருதேவோ பவ பித்ருதேவோ பவ" என்று கொண்டு ஈச்வரனோபாதி மாதாபித்ரநுவர்த்தநத்தையும் உபாஸநாங்கமாக சாஸ்த்ரம் விதிக்கையாலே, மாதாபிதாக்கள் உபாயாந்தர ஸஹசாரிகளுமாய், அவ்வளவன்றியே இவர்களுடைய வியோகமஸஹ்யமா யிருக்கையாலே ஸ்வயம் ப்ரயோஜநமாயுமிருப்பர்கள். ஸ்த்ரீயும் ஸஹதர்மசாரிணியா யிருக்கையாலே உபாயாந்தர ஸஹகாரியுமாய் அபிமதையுமாகையாலே, உபேய பூதையுமாயிருக்கும். புத்ரனும் "புந்நாம்நோ நரகாத் த்ராயத இதி புத்ரா" என்கிறபடியே நரக தர்சநத்துக்கடியான பாப விமோசந ஹேதுவாகிற முகத்தாலே உபாயாந்தர ஸஹகாரியுமாய், தன்னுடைய வியோகம் அஸஹ்யமாம்படி யிருக்கையாலே உபேயமுமாயிருக்கும்; பந்துக்கள், இவனை குடிப்பழியாக வர்த்தியாதபடி நியமித்து நல்வழியே நடத்துவர்களாகையாலே உபாயாந்தர ஸஹகாரிகளுமாய், பெருங்குடிப் பாட்டத்தே பிறந்தோமென்கிற செருக்காலே உபேய பூதருமாயிருப்பர்கள்; தோழனும் இவனுக்கு ஹிதைஷியாய் ஹிதத்தையே ப்ரவர்த்திப்பிக்கையாலே உபாயாந்தர ஸஹகாரியுமாய், அபிமதனுமாயிருக்கையாலே உபேயமுமாயிருக்கும்; குருக்களாகிறார் உபாயாந்தரங்களை உபதேசித்துப் போருகையாலே உபாயாந்தர ஸஹகாரிகளுமாய், உபகாரகராகையாலே உபேய பூதருமாயிருப்பர்கள்; ரத்தங்கள், உபாயாந்தரங்களுக்கும் இதிகர்த்தவ்யதயா ஸஹகாரகமுமாய், மேற்சொல்லுகிறவற்றை யழிய மாறி ஸ்வீகரிக்கப்படுமவை யாகையாலே உபேயமுமாயிருக்கும்; தந தாந்யங்களும், க்ஷேத்ரங்களும் அப்படியே; க்ருஹங்கள், வாஸ ஸ்தாநமாகிற முகத்தாலே உபாயாந்தர

ஸஹகாரகமுமாய், மாடமாளிகையாக வெடுக்கும்படியான அபிமதத்வத்தாலே உபேயமுமாயிருக்கும்.

**விளக்கம் -** (சித் அசித் ப்ராப்ய ப்ராபக ஆபாஸங்களை) - ஆக, இவ்விதம் புராணமும், புராணங்களை நன்கு அறிந்தவரும், "பிதரம் மாதரம் – தந்தை தாய்" என்று தொடங்கி, "ஸாக்ஷாராந் – அனைத்தும் உட்பட" என்பது முடிய, "ஸந்த்யஜ்ய - முற்றிலுமாக விட்டு" என்பதற்குரியதான செய்யப்படவேண்டியவை என்பதால், மேலே கூறப்பட்டதான ப்ரபத்தியைக் கைக்கொள்வதற்கான அங்கமாக விடத்தக்கதாகக் கூறப்பட்ட சித் மற்றும் அசித் வஸ்துக்களாக உள்ளதான போலியான பேறுகளையும், போலியான உபாயங்களையும், மேலே கூறப்பட்ட புராண வாக்கியத்தில் உள்ள "ஸர்வதர்மாம்ச" என்பதற்குப் பின்னர் உள்ளவை அனைத்தும் மற்ற உபாயங்களுக்குத் துணையாகவும், தானே பயனாக உள்ளதால் பேறாகவும் இருந்து, இந்த இரண்டிற்கும் பொதுவாக உள்ளதைக் கூறுகின்றன. எப்படி? மாத்ருதேவோ பவ பித்ருதேவோ பவ – தாயைத் தெய்வமாகக் கொள்வாயாக, தந்தையைத் தெய்வமாகக் கொள்வாயாக - என்று கொண்டு, ஸர்வேச்வரனுக்குச் செய்யபடும் கைங்கர்யங்களைக் போன்றே தாய்தந்தையர்க்குச் செய்யும் தொண்டுகளையும் உபாஸனையின் அங்கமாகவே சாஸ்த்ரம் விதிக்கிறது; ஆகவே தாய்தந்தையர்கள் மற்ற உபாயங்களுக்குத் துணையாக உள்ளதுடன் மட்டும் அல்லாமல், அவர்களைப் பிரிதல் என்பது பொறுக்க முடியாமல் உள்ளதால், தாங்களே பயனாகவும் இருப்பார்கள். மனைவியானவள் இல்லறவாழ்க்கைத் துணையாக உள்ளதால், மற்ற உபாயங்களுக்குத் துணையாகவும், விருப்பமானவளாகவும் உள்ளதால், உபேயமாகவும் உள்ளாள். புத்திரன், "புந்நாம்நோ நரகாத் த்ராயத இதி புத்ரா – புத் என்ற நரகத்திலிருந்து காப்பாற்றுவதால் புத்திரன் எனப்படுகிறான்" என்று கூறுவதற்கு ஏற்ப நரகத்தை அடைவதற்குக் காரணமாக உள்ள பாபங்கள் நீங்குவதற்குக் காரணமாக உள்ளதால், மற்ற உபாயங்களுக்குத் துணையாகவும், தனது பிரிவு பொறுக்க இயலாதபடி உள்ளதால் உபேயமாகவும் உள்ளான். பந்துக்களாக உள்ளவர்கள், ஒருவன் தனது குலத்திற்குப் பழி ஏற்படாதவிதத்தில் அவனை நல்வழிப்படுத்தி வழி நடத்துவதால் மற்ற உபாயங்களுக்குத் துணையாகவும், "மிகவும் உயர்ந்த குலத்தில் பிறந்தோம்" என்ற செருக்கு காரணமாக உபேயமாகவும் உள்ளனர். நண்பன் ஒருவன், ஒரு மனிதனுக்கு ஏற்ற நன்மையைச் செய்பவனாகவும், அந்த மனிதனை நன்மையான செயல்களை மட்டுமே செய்யத் துண்டுபவனாகவும் உள்ளதால், மற்ற உபாயங்கள் குறித்து உபதேசிப்பதால்


Email:sridharan_book@yahoo.co.in

மற்ற உபாயங்களுக்குத் துணையாகவும், உதவிகளைச் செய்வதால் உபேயமாகவும் உள்ளான். இரத்தினங்கள், மற்ற உபாயங்களைச் செய்வதற்கும் அவற்றை இயற்றத் துணையாகவும் உள்ளதாலும், இதுவரை கூறப்பட்டவை அழிந்தாலும் கொள்ளப்படலாம் என்பதால் உபேயமாகவும் உள்ளன. தனம், தானியங்கள் மற்றும் வயல்களும் இது போன்றே ஆகும். வீடுகள் தங்குவதற்கு ஏற்ற இடமாக உள்ளதால் மற்ற உபாயங்களுக்குத் துணையாகவும், மாடமாளிகைகள் இருப்பதற்கான ஆசைக்கு ஏற்றதாக உள்ளதால் உபேயமாகவும் உள்ளன.

**வ்யாக்யானம்** – மேல் “ஸர்வதர்மாம்ச்ச” இத்யாதியாலே ஸாக்ஷாதுபாயாந்தரங்களையும், உபேயாந்தரங்களையும் சொல்லுகிறது. அதில், “ஸர்வதர்மாம்ச்ச” என்று கர்மயோகாத் யுபாயங்களைச் சொல்லுகிறது; “ஸர்வகாமாம்ச்ச” என்று ஐஹிக பாரலௌகிகைச்வர்ய விசேஷங்களைச் சொல்லுகிறது; “ஸாக்ஷராந்” என்று அக்ஷர சப்தவாச்யமான கைவல்யத்தையும் அவ்வோபாதி த்யாஜ்யமென்கிறது. ஆகவிப்படி உபாயத்வேகவும் உபேயத்வேகவும் வ்யவஸ்திதங்களன்றிக்கே, கீழ்ச் சொன்னபடியே உபாயந்தர ஸஹகாரித்வத்தாலும் அபிமதத்வாதிகளாலுமுண்டான ப்ராப்ய ப்ராபக பாவங்களையுடைய மாதாபித்ராதிகளும், ரத்ந தந தாந்யாதிகளுமானவற்றை சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களென்கிறது. அதவா “ஸர்வதர்மாம்ச்ச” இத்யாதிகள் தானும் பரமப்ராப்ய ப்ராபகங்களைப் பற்ற ஆபாஸங்களாகையாலே, அவை தன்னையும் கூட்டிக் கொண்டு சொல்லவுமாம். “கைவலிந்து” இத்யாதிக்கநுகுணமாக ஒதுக்குகிறதிறேயுள்ளது. மேற்சொல்லுகிற வரணத்துக்கங்கமான த்யாகம் உபாயவிரோதிகளான ஸர்வத்தையும் விஷயமாகவுடைத்தாகையாலே “கைவலிந்து” இத்யாதிகளால் சொன்னவை த்யாஜ்யமான ஸர்வத்துக்கு முபலக்ஷணமிறே; அப்படியானாலிறே ஸப்ரகாரமாக ஸக்ருத்கரணீயமென்றதுக்குச் சேருவது.

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட “ஸர்வதர்மாம்ச்ச” போன்றவை மூலம் நேரடியாகவே மற்ற உபாயங்களாக உள்ளவற்றையும், மற்ற இலக்குகளாக உள்ளவற்றையும் கூறுகிறது. அவற்றில் உள்ள “ஸர்வதர்மாம்ச்ச” என்றது கர்மயோகம் போன்ற உபாயங்களைக் கூறுகிறது. “ஸர்வகாமாம்ச்ச – அனைத்து விரும்பப்படும் பொருள்கள்” என்பதன் மூலம் இந்த உலகிலும், அந்த உலகிலும் உள்ள செல்வங்கள் கூறப்பட்டன. “ஸாக்ஷராந் - கைவல்யம் ஆகியவையும் சேர்த்து” என்பது, அக்ஷரம் என்ற சொல்லால் கூறப்படுகின்ற

கைவல்யத்தையும் அவற்றைப் போன்றே கைவிடத்தக்க ஒன்றாகவே கூறுகிறது. இவ்விதமாக, உபாயமாக உள்ள தன்மை மற்றும் உபேயமாக உள்ள தன்மை குறித்து ஒரு நிலை என்பது அல்லாமல், மேலே கூறப்பட்டபடி மற்ற உபாயங்களுக்குத் துணையாக உள்ள தன்மை மற்றும் உபேயமாகும் தன்மைகளுடன் கூடிய தாய்தந்தை, இரத்தினம், தனம், தான்யம் போன்ற அனைத்தையும் சித் மற்றும் அசித் பொருள்களாக உள்ளவையும் போலியாக உள்ளவையும் ஆகிய அடையவைக்கும் மற்றும் அடையப்படும் பொருள்களாகக் கூறப்பட்டன. அல்லது "ஸர்வதர்மாம்ச்ச" போன்றவைகள், ஸர்வேச்வரன் என்னும் உயர்ந்த உபாயம் மற்றும் உபேயத்தை நோக்கும்போது, போலிகளாக உள்ளதால், அவற்றையும் சேர்த்தே கூறுகின்றன எனலாம். "கைவலிந்து" முதலானவைகள் போன்ற இவையும் தள்ளப்பட வேண்டியவை என்றே ஆகின்றன. மேலே கூறப்படுகின்ற ப்ரபத்திக்கு அங்கமாக உள்ள துறத்தல் என்பது உபாயத்திற்கு விரோதமாக உள்ள அனைத்தையும் விஷயமாகக் கொண்டுள்ளதால் "கைவலிந்து" போன்றவைகளால் கூறப்பட்டவை, துறக்கப்பட வேண்டிய அனைத்திற்கும் உபலக்ஷணம் ஆகும். இவ்விதம் கொண்டால் மட்டுமே, "தகுந்த முறையுடன் ஒரு முறை இயற்றப்பட்ட வேண்டியதே ப்ரபத்தி" என்பது பொருந்தும்.

வ்யாக்யானம் - [5] ஆக, இப்படியிருந்துள்ள (சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும்) "நம்மைக் கைவலிந்து", "இழந்தது சங்கே", "இதெல்லாம் கிடக்கவினிப்போய்", "எம்மையொன்றும் நினைத்திலளே", "இன்றெனக்குதவாதகன்ற" என்று சிதசித் வர்க்கமான விவற்றைக் கைவிட்டு, உறங்குவான் கைப்பண்டம் போலே பகவத் ப்ரேம பாரவச்யத்தாலே தன்னடையே தன்கையில் நின்றும் நெகிழ்ந்து போகக்கண்டும், "ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய" என்கிறபடியே இவற்றை யொன்றாக நினையாமல் உபேஷித்தகன்று போயும்.

**விளக்கம்** – ஆக, இவ்விதமாக உள்ள (சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களை) - சித் வஸ்துக்களில் உபாயம் மற்றும் உபேயம் என்றும், அசித் வஸ்துக்களில் உபாயம் மற்றும் உபேயம் என்றும் உள்ளது போன்று காணப்படும் போலியான அனைத்தையும் (கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாது அகன்றும்) - திருவாய்மொழி (6-5-7) - நம்மைக் கைவலிந்து – என்றும், திருவாய்மொழி (6-6-1) -


Email:sridharan_book@yahoo.co.in

இழந்தது சன்கே – என்றும், திருவாய்மொழி (6-7-9) - இதெல்லாம் கிடக்கவினிப்போய் - என்றும், திருவாய்மொழி (6-7-9) - எம்மையொன்றும் நினைத்திலளே - என்றும், திருவாய்மொழி (6-7-6) – இன்று எனக்கு உதவாது அகன்று - என்றும் கூறுவதன் மூலம், சித் மற்றும் அசித் பொருள்களுடைய கூட்டமான இவை அனைத்தையும் துறந்து, உறங்குபவன் கைகளில் உள்ள பொருள் தானாகவே விழுவது போன்று ஸர்வேச்வரனிடம் கொண்ட ப்ரேமையில் வசப்பட்டதன் விளைவாக, தாங்களாகவே தனது கைகளிலிருந்து விலக்கிச் செல்வதைக் கண்டபோதிலும், சரணாகதிகத்யம் – ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய - அனைதுது இன்பங்களையும் முற்றிலுமாகத் துறந்து - என்பதற்கு ஏற்ப அவற்றைப் பொருட்படுத்தாமல் உதாஸீனம் செய்து அகன்று சென்றும்.

**வ்யாக்யானம்** - (ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீய சேஷமாக்கியும்) இதில் ததீயருக்கு போக்யமாக ஸமர்ப்பிக்கத் தக்கவற்றை, “பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ”, “நெய்யமரின் னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ”, “ஓடிவந்தென் குழல் மேலொளி மாமலரூதீரோ” என்று தமக்கு உபாதேயமான பரமபதத்தோடொக்க கடகர்க்குப் பரிசிலாக ஸமர்ப்பித்தும். (புறத்திட்டுக் காட்டி யென்று ப்ரஸங்கிக்கில் முடியும்படி விட்டு) “என்னைப் புறந்திட் டின்னம் கெடுப்பாயோ” என்று உனக்கசலாம்படி விஷயங்களிலே யென்னைத் தள்ளி இன்னங் கெடுக்கப் பார்க்கிறாயோவென்றும், “பல நீ காட்டிப் படுப்பாயோ” என்று நாட்டார் காணாவிடில் பிழையோமென்கிற விஷயங்கள் தமக்குக் காணில் முடிவனென்னும்படி அத்யந்தாஸஹ்யமா யிருக்கையாலே விஷயங்களைக் காட்டி என்னையும் முடிக்கப் பார்க்கிறாயோவென்றும் சொல்லுகையாலே, அவற்றின் ப்ரஸங்கத்திலே யேங்கி மூச்சடங்கும்படி பீதராய் அவற்றை விட்டு.

**விளக்கம்** - (ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீய சேஷமாக்கியும்) - மேலே கூறப்பட்ட பொருள்களில், ஸர்வேச்வரனுடைய அடியார்களுக்கு இன்பம் அளிக்கவல்லவை என்று சமர்ப்பிக்கத் தகுந்தவற்றை, திருவாய்மொழி (6-8-1) – பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ - என்றும், திருவாய்மொழி (6-8-2) – நெய் அமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ - என்றும், திருவாய்மொழி (6-8-3) – ஓடிவந்து என் குழல் மேல் ஒளி மாமலர் ஊதீரோ – என்றும் கூறுவதன் மூலம், தனக்குப் பேறாக உள்ளதான பரமபதம் போன்று, அவனிடம் கொண்டு சேர்ப்பவர்களுக்குப் பரிசாக அளித்தும். (புறத்திட்டுக் காட்டி யென்று ப்ரஸங்கிக்கில் முடியும்படி விட்டு) – திருவாய்மொழி (6-9-8) - என்னைப்

புறந்திட்டு இன்னம் கெடுப்பாயோ - என்பதற்கு ஏற்ப "உன்னைத் தவிர உள்ள மற்ற தாழ்ந்த விஷயங்களில் என்னைத் தள்ளி விட்டு மேலும் என்னைக் கெடுக்கப் பார்க்கிறாயோ" என்றும், திருவாய்மொழி (6-9-9) - பல நீ காட்டிப் படுப்பாயோ - என்பதற்கு ஏற்ப அற்பமான மனிதர்கள், "காண இயலவில்லை என்றால் முடிந்து விடுவோம்", என்று எண்ணும்படியாக உள்ள விஷயங்களைத் தனக்குக் காண்பித்தால் "நான் முடிந்துவிடுவேன்" என்னும்படி பொறுக்க இயலாதவராக உள்ளதால், "மற்ற விஷயங்களைக் காண்பித்து என்னையும் முடிக்க எண்ணுகிறாயோ" என்றும் கூறுவதால், அவற்றைக் குறித்து யாரேனும் பேசினால் கூட ஏங்கி, மூச்சு அடங்கும்படியாக, அச்சம் கொண்டவராக அவற்றைத் தவிர்த்து.

**வ்யாக்யானம்** - [6] (தந்தைதாயுண்ணுஞ் சோறுமாநிதி பூவையாவையுமொன்றேயாக்கி) "த்வமேவ மாதா ச பிதா த்வமேவ, த்வமேவ பந்துச்ச குருஸ்த்வமேவ, த்வமேவ வித்யா, த்ரவிணம் த்வமேவ, த்வமேவ ஸர்வம் மம தேவதேவ" என்கிறபடியே, "தேவபிரானையே தந்தை தாயென்றடைந்த" என்று அயர்வறுமமரர்களதிபதியே மாதாபித்ராதி ஸர்வவித பந்துவென்றும், "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று தாரக போஷக போக்யங்களெல்லாம் ஸர்வஸுபலபனான க்ருஷ்ணனே என்றும், "வைத்தமாநிதியாம் மதுசூதனையே" என்று ஆபத்ரக்ஷகமாகச் சேமித்து வைத்த அக்ஷயமான நிதியுமவனேயென்றும், "பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழும்" என்று லீலோபகரணங்களால் பிறக்கும் ரஸமெல்லாம் ச்ரிய:பதியினுடைய திருநாமங்களைச் சொல்லவே யுண்டாகா நிற்குமென்றும், இப்படி கீழ்விட்டவையெல்லாம் பற்றுகிற விஷயமொன்றுமேயாக நினைத்து.

**விளக்கம்** - (தந்தைதாய் உண்ணுஞ்சோறு மாநிதி பூவையாவையும் ஒன்றேயாக்கி) - கத்யத்ரயத்தில் – த்வமேவ மாதா ச பிதா த்வமேவ, த்வமேவ பந்துச்ச குருஸ்த்வமேவ, த்வமேவ வித்யா, த்ரவிணம் த்வமேவ, த்வமேவ ஸர்வம் மம தேவதேவ – தேவர்களின் தலைவனே! நீயே எனக்குத் தாய், நீயே எனக்குத் தந்தை, நீயே எனக்கு உறவினன், நீயே எனக்கு ஆசார்யன், நீயே என் கல்வி, நீயே என் செல்வம், நீயே எனக்கு எல்லாம் ஆகிறாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழி (6-5-11) - தேவபிரானையே தந்தை தாய் என்றடைந்த - என்ற பாசுரத்தில் உள்ளது போன்று அயர்வறும் அமரர்கள் அதிபதியாகிய


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸர்வேச்வரனே, தாய் தந்தை போன்ற அனைத்துவிதமான உறவினன் என்றும்; திருவாய்மொழி (6-7-1) - உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் - என்று உயிர்வாழத் தேவையான அனைத்தும், இன்பங்கள் அனைத்தும் அனைத்துவிதங்களிலும் எளிதாக அடையத்தக்கவனாகிய க்ருஷ்ணனே ஆவான் என்றும்; திருவாய்மொழி (6-7-11) – வைத்தமாநிதியாம் மதுசூதனையே - என்று ஆபத்து காலத்தில் காப்பாற்றுவதற்காகச் சேமித்து வைக்கப்பட்ட அழிவற்ற செல்வமும் அவனே என்றும்; திருவாய்மொழி (6-7-3) - பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழும் - என்று விளையாட்டுப் பொருள்கள் மூலம் ஏற்படும் சுவை போன்ற அனைத்தும் மஹாலக்ஷ்மியின் நாயகனுடைய திருநாமங்களை உரைப்பதற்காகவே ஏற்பட்டு நிற்கின்றன என்றும்; இப்படியாக மேலே துறக்கப்பட்ட அனைத்தும், தான் பற்றி நிற்கின்ற பகவத் விஷயமே ஆகும் என்று எண்ணியபடி.

**வ்யாக்யானம்** - [7] (தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோவென்னு மார்த்தியோடே) "கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே சாலப்பல நாளடியே னின்னம் தளர்வேனோ", "தீயோடுடன் சேர் மெழுகா யுலகில் திரிவேனோ", "கூவிக்கொள்ளுங்காலமின்னம் குறுகாதோ", "புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ" என்று ஜகத்துக்கு ஸர்வப்ரகார ரக்ஷகனாய், "ச்ரியா ஸார்த்தம்" என்கிறபடியே பெரியபிராட்டியாரோடே யெழுந்தருளியிருக்கிற உன்னைக் கிட்டப் பெறாதே, ஸம்ஸாரத்திலேயிருந்து இன்னமெத்தனை காலம் இப்படி அவஸந்நனாகக் கடவேன், த்ரிவிக்ரமாவதார முகத்தாலே நீயே வந்து எல்லார் தலையிலும் திருவடிகள் வைத்த உன்னைக் காணவாசைப்பட்டுக் கிடையாமையாலே அக்நிஸகாசத்தில் மெழுகுபோலே ஜீவிக்கவும் பெறாதே முடியவும் பெறாதே ஸம்ஸாரத்திலே இப்படி திரியக்கடவேனோ! ஸர்வஸ்ᵕபலபமாய் நிரதிசய போக்யமான திருவடிகளிலே என்னை யருளப்பாடிடுங் காலமின்னமணித்தாகாதோ! விரோதிகளின் கையிலகப்படாதே ஜகத்துக்கு வேர்ப்பற்றான உன்னை நோக்கித் தந்தவனே! மாநஸாநுபவ மாத்ரமன்றிக்கே உன் திருவடிகளை ப்ரத்யக்ஷமாகக் கிட்டுவதென்றோ வென்கிற வார்த்தியோடே.

**விளக்கம்** - (தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ என்னும் ஆர்த்தியோடே) - திருவாய்மொழி (6-9-3) – கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே சாலப்பல நாளடியே னின்னம் தளர்வேனோ - என்பதன் மூலம் இந்த ஜகத்திற்கு

அனைத்துவிதங்களிலும் ரக்ஷகனாக, ச்ரியா ஸார்த்தம் – ஸ்ரீவைகுண்டத்தில் பெரியபிராட்டியுடன் சேர்ந்துள்ள – என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியுடன் எழுத்தருளியுள்ள உன்னை வந்தடையாமல் ஸம்ஸாரத்தில் உழன்றபடி மேலும் எத்தனை காலம் இவ்விதம் துன்பப்படுவேன் என்றும்; திருவாய்மொழி (6-9-6) – தீயோடுடன் சேர் மெழுகா யுலகில் திரிவேனோ – என்பதன் மூலம் த்ரிவிக்ரம அவதாரத்தின் மூலமாக நீயே வலிய வந்து அனைவருடைய தலைகளிலும் உனது திருவடிகளை வைத்த உன்னைக் காணவேண்டும் என்று ஆசை கொண்டு நீ கிட்டாமையால், நெருப்பின் சேர்க்கையை அடைந்த மெழுகு போன்று வாழவும் இயலாமல் முடியவும் இயலாமல் இந்த ஸம்ஸாரத்தில் இவ்விதமாகத் திரிந்தபடியே இருப்பேனோ என்றும்; திருவாய்மொழி (6-9-9) - கூவிக்கொள்ளுங்காலமின்னம் குறுகாதோ - என்பதன் மூலம், அடைவதற்கு மிகவும் எளியதாக, அனைத்துவிதமான எல்லையற்ற இனிமை கொண்டதாக உள்ள திருவடிகளில் என்னைச் சேர்த்துக் கொள்ளும் காலம் நெருங்கி வராதோ என்றும்; திருவாய்மொழி (6-10-5) - புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ – என்பதன் மூலம் விரோதிகளுடைய கைகளில் அகப்படாமல் இந்த ஜகத்திற்கு ஆணிவேர் போன்ற உன்னை நோக்கித் தந்தவனே என்று கூறுவதற்கு எற்ப, மனதில் ஏற்படும் அனுபவம் மட்டும் அல்லாமல் உனது திருவடிகளை நேரடியாகக் கண்டு அடைவது எந்த நாளிலோ என்னும் மிகுந்த துக்கத்துடன்.

**வ்யாக்யானம்** – [8] (திருவிக்கிரமனாகக் குறள் கோலப் பிரானாய் அடியை மூன்றையிரந்தவன் கள்வன் கண்முகப்பே யகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந்தாமரைகளை) "லோக விக்ராந்த சரணௌ சரணம் தேவ்ரஜம் விபோ" என்று வஸிஷ்ட சண்டாள விபாகமற வரையாதே திருவடிகளை வைக்கையாலே ஸௌசீல்யமும் உறங்குகிற ப்ரஜையின் முதுகைக் கட்டிக் கொண்டு கிடக்கும் தாயைப் போலே விமுகரானார் தலையிலும் திருவடிகளை வைக்கையாலே வாத்ஸல்யமும், அவதரித்து முன்னே நின்று கார்யம் செய்கையாலே ஸௌலப்யமும், "தே" என்கையாலே தன் பேறாகச் செய்கைக்குறுப்பான ஸ்வாமித்வமும், "விபோ" என்கையாலே ஜ்ஞாந சக்த்யாதி குணபூர்த்தியும் சொல்லுகையாலே, த்ரிவிக்ரமாப தாநத்திலே ஆச்ரயணோபயோகியாயும் கார்யோபயோகியாயுமுள்ள குணங்களெல்லாம் ப்ரகாசிக்கையாலே, "தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமன்", "மாண்குறள் கோலப்பிரான்", "அடியை மூன்றையிரந்தவாறும்", "மின்கொள் சேர் புரிநூல் குறளாயகல் ஞாலங்கொண்ட வன்கள்வன்" என்று

ஸர்வேச்வரனாய் ஆச்ரித வத்ஸலனான தான், த்ரிவிக்ரமாபதாநம் பண்ணுகைக்காக பெருவிலையனானவழகைச் சிறாங்கித்தநுபவிக்கலாம்படி வாமந வேஷத்தைப் பரிக்ரஹித்துக் கொண்டு மஹாபலி யஜ்ஞவாடத்திலே சென்று, "மூன்றடி" என்றிரந்து, தான் சொன்னபடியே அவன் செய்யும்படி விநீதமாய் ஆகர்ஷகமான வடிவைக் காட்டி வசீகரித்து நின்ற மஹா வஞ்சகன், "காண்மின்களுலகீரென்று கண்முகப்பே நிமிர்ந்த" என்று நோக்குவித்யை காட்டுவாரைப்போலே இதோராச்சர்யம் பாருங்கோளென்று லௌகிகரெல்லாருடையவும் கண்ணெதிரே, "அகல் கொள் வையமளந்த மாயன்", "திசை ஞாலந்தாவியளந்ததும்", "வையமளந்த மணாளன்", "மண்ணும் விண்ணுங்கொண்ட மாயவம்மான்", "ஓரடியாலெல்லாவுலகும் தடவந்த", "தாவி வையங் கொண்ட தடந்தாமரைகள்" என்று விஸ்த்ருதமாய் திக்குக்களோடே கூடின பூமியையும் உபரிதந லோகங்களையும், தென்றலுலாவினாப்போலே ஸுககரமாம்படி யெங்குமொக்கப் பரப்பியளந்து கொண்ட ஸர்வ ஸுலபமாய் நிரதிசய போக்யமான திருவடிகளை.

**விளக்கம்** – (திருவிக்ரமனாக) - லோக விக்ராந்த சரணௌ சரணம் தேவ்ரஜம் விபோ - அனைத்து லோகங்களையும் அளந்த உனது திருவடிகளைச் சரணம் புகுந்தேன் - என்பதற்கு ஏற்ப, உயர்ந்தவன் மற்றும் சண்டாளன் என்னும் வேறுபாடுகள் ஏதும் ஆராயாமல் அனைவரது தலைகளிலும் திருவடிகளை வைத்ததால் சௌசீல்யமும், உறங்கும் குழந்தையின் முதுகைக் கட்டி அணைத்தபடி உள்ள தாய் போன்று தன்னிடம் பக்தி இல்லாதவர்கள் தலைகளிலும் திருவடிகளை வைத்ததால் வாத்ஸல்யமும், அவதாரம் எடுத்து முன்னே நின்று செயல்கள் செய்ததால் ஸௌலப்யமும், "தே" என்பதால் தனது பேறு என்று எண்ணிச் செயல்கள் செய்வதற்குக் காரணமாக உள்ள ஸ்வாமித்வமும், "விபோ" என்பதால் ஞானம் மற்றும் சக்திகளின் பரிபூர்ணத்வ நிலையையும் கூறுவதால், த்ரிவிக்ரமன் தனது செயல்களில் ஈடுபட்டு நிற்பதற்குக் காரணமாகவும், அந்தச் செயல்களைச் செய்வதற்குத் துணையாகவும் உள்ள கல்யாணகுணங்கள் அனைத்தும் வெளிப்படுவதால் திருவாய்மொழி (5-7-11) - தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமன் – என்றும். (குறள் கோலப்பிரானாய்) - திருவாய்மொழி (5-9-6) - மாண்குறள் கோலப்பிரான் - என்றும். (அடியை மூன்றை இரந்த) - திருவாய்மொழி (5-10-9) - அடியை மூன்றையிரந்தவாறும் – என்றும். (வன் கள்வன்) – திருவாய்மொழி (6-1-11) – மின்கொள் சேர் புரிநூல் குறளாயகல் ஞாலங்கொண்ட வன்கள்வன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகவும், அடியார்களிடம் மிகுந்த வாத்ஸல்யம் கொண்டவனாகவும் உள்ள

தான், த்ரிவிக்ரமனாக நின்று செய்கின்ற செயலைச் செய்வதற்காக, நீண்டு நெடியவனாக நின்ற தன்னுடைய அழகைச் சிறியதாக அனுபவிக்கலாம்படி ஒரு வாமன வேஷத்தை கைக்கொண்டு, மஹாபையின் யாகசாலைக்குச் சென்று, "மூன்றடி" என்று யாசித்து, தான் எண்ணியபடியே மஹாபலி செய்யும்படியாக, மிகவும் எளிமையாகவும் வசீகரிக்கும்படியாகவும் உள்ள தனது வடிவத்தைக் காண்பித்து அவனை வசீகரித்து நின்ற மஹாவஞ்சகன். (கண்முகப்பே) – திருவாய்மொழி (6-3-11) – காண்மின்கள் உலகீர் என்று கண்முகப்பே நிமிர்ந்த – என்பதற்கு ஏற்ப இந்த்ரஜால வித்யை காண்பித்து மயக்குபவன் போன்று, "இதோ! ஓர் ஆச்சர்யம் காண்பீராக" என்று உலகில் உள்ள அனைவருடைய கண்களுக்கு முன்பாகவும். (அகல்கொள்) - திருவாய்மொழி (6-4-6) - அகல் கொள் வையமளந்த மாயன் – என்றும். (திசை) - திருவாய்மொழி (6-533) – திசை ஞாலம் தாவியளந்ததும் - என்றும். (வையம்) - திருவாய்மொழி (6-6-1) – வையம் அளந்த பிரான் - என்றும். (விண்ணும்) - திருவாய்மொழி (6-9-2) – மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மான் – என்றும். (தடவந்த) - திருவாய்மொழி (6-9-6) – ஓரடியாலெல்லாவுலகும் தடவந்த - என்றும். (தடந்தாமரை) - திருவாய்மொழி (6-9-9) – தாவி வையங் கொண்ட தடந்தாமரைகள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப விரிவைக் கொண்டதாகவும், அனைத்து திசைகளுடன் கூடிய பூமியையும் மேல் லோகங்களையும், தென்றல் வீசுவது போன்று இனிமையாக உள்ளதாக எங்கும் ஒரே போன்று பரப்பி அளந்து எடுத்துக் கொண்ட மிகவும் எளியதான எல்லையற்ற இனிமை உள்ள திருவடிகளை.

**வ்யாக்யானம்** – [9] (இணைத்தாமரைகள் காண விமையோரும் வரும்படி சென்று சேர்ந்தவுலகத் திலதத்தே கண்டு) "எந்நாளே நாம் மண்ணளந்தவிணைத் தாமரைகள் காண்பதற்கென்று" இத்யாதிப்படியே திருவுலகளந்தருளின, ஸர்வஸுலபமாய் நிரதிசய போக்யமாய் சேர்த்தியழகையுமுடைத்தான திருவடிகளை நாம் காண்பதெப்போதோ வென்று நித்யஸூரிகளுமநுபவிக்க வாசைப்பட்டு வரும்படி, "அன்று ஞாலமளந்தபிரான் பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை" என்று திருவுலகளந்தருளின் செயலாலே ப்ரகாசிக்கிற ஸர்வஸ்மாத் பரத்வத்தையுடையவன், அந்த சிரமம் தீர, விடாயர் மடுவிலே சேருமாப்போலே உகந்து நிற்கிற "திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடம்" என்று லோகத்துக்கு முக்கியாபரணமான திருமலையிலே கண்டு. (அகலகில்லேனென்று பூர்வவாக்ய மநுஸந்தித்தவர்) "அகலகில்லே னிறையுமென்றலர்மேல் மங்கையுறை மார்பா" என்று புருஷகார பூதையான பெரியபிராட்டியாரை முன்னிட்டு, "நிகரில் புகழாய்"

என்று தொடங்கி "திருவேங்கடத்தானே" என்னுமதளவாக வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம் ஸௌலப்யமாகிற குணங்களை அடைவே அநுஸந்தித்துக் கொண்டு "புகலொன்றில்லா" என்றும், "அடியேன்" என்றும் தம்முடைய ஆகிஞ்சந்யாநந்யகதித்வ புரஸ்ஸரமாக "உன்னடிக்கீழ்" என்று "சரணௌ" என்கிற திருவடிகளையும், "அமர்ந்து புகுந்தேன்" என்று "சரணம் ப்ரபத்யே" என்கிற அர்த்தத்தையும் அநுஸந்தித் தருளுகையாலே, பூர்வவாக்ய ப்ரக்ரியையாலே பூர்ணப்ரபதநம் பண்ணினவர்.

**விளக்கம்** – (இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி) - திருவாய்மொழி (6-10-6) - "எந்நாளே நாம் மண்ணளந்தவிணைத் தாமரைகள் காண்பதற்கென்று - என்பது போன்று, "திருவுலகங்கள் அனைத்தும் அளந்தருளியதும், மிகவும் எளியதாகவும், எல்லையற்ற இனிமை கொண்டதாகவும், ஒன்றுக்கொன்று பொருந்தியதாகவும் உள்ள திருவடிகளை நாம் காண்பது எப்போதோ?" என்று நித்யஸூரிகளும், அனுபவிக்க ஆசை கொண்டு வரும்படியாக உள்ள திருவடிகளை. (சென்று சேர்ந்த) - திருவாய்மொழி (3-3-8) – அன்று ஞாலமளந்தபிரான் பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை – என்பதற்கு ஏற்ப அனைத்து லோகங்களையும் அளந்தருளிய செயல் மூலமாக வெளிப்படுவதான "அனைத்திற்கும் ஆத்மாவாக, அனைத்தைக் காட்டிலும் உயர்ந்த தயையைக் கொண்டவன்" என்னும்படி உள்ள அவன், தனது அத்தகைய உலகளந்த சிரமம் தீரும்விதமாக, அதிக தாகம் கொண்டவர்கள் மடுவை நோக்கி ஓடுவது போன்று, மகிழ்ந்து நிற்கின்ற. (உலகம் திலதத்தே கண்டு) – திருவாய்மொழி (6-10-1) - திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடம் – என்பதற்கு ஏற்ப உலகத்தின் முக்கியமான ஆபரணமாக உள்ள திருவேங்கடத்திருமலையில் கண்டு. (அகலகில்லேன் என்று பூர்வ வாக்கியம் அநுஸந்தித்தவர்) – திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லே னிறையுமென்றலர்மேல் மங்கையுறை மார்பா - என்று சிபாரிசு செய்யும் நிலையில் உள்ளவளாகிய பெரியபிராட்டியாரை முன்னே நிறுத்திக் கொண்டு, திருவாய்மொழி (6-10-10) – நிகரில் புகழாய் – என்று தொடங்கி, திருவாய்மொழி (6-10-10) - திருவேங்கடத்தானே – என்று முடிப்பது முடிய உள்ள வரிகளில் வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் போன்ற குணங்களை முழுவதுமாக எண்ணியபடி, திருவாய்மொழி (6-10-10) – புகல் ஒன்றில்லா - என்பதன் மூலம் தனது கைம்முதல் ஏதும் இல்லாத நிலையையும், திருவாய்மொழி (6-10-10) - அடியேன் - என்று கூறுவதன் மூலம் வேறு கதியின்றி உள்ள நிலையையும் உரைத்து, "சரணௌ" என்றுள்ள பொருள் வெளிப்படும்படியாக உள்ள


**Email:**sridharan_book@yahoo.co.in

திருவடிகளை, திருவாய்மொழி (6-10-10) - உன்னடிக் கீழ் - என்று கூறி, “சரணம் ப்ரபத்யே” என்பதைத் திருவாய்மொழி (6-10-10) - அமர்ந்து புகுந்தேன் – என்று உரைத்தார். இப்படியாக இந்தக் கருத்துக்களை எண்ணியபடி இந்தப் பாசுரத்தை உரைத்ததால், இதன் மூலம் த்வயத்தின் முதல் வாக்கியத்தில் கூறப்பட்ட பரிபூர்ணமான ப்ரபத்தியைக் கைக்கொண்டவர்.

**வ்யாக்யானம்** - [10] (பிணக்கறத் தொடங்கி வேதப்புனிதவிறுதி சொன்ன ஸாத்யோபாய ச்ரவண ஸசோக ஸஜாதீயர்க்கு) “பத்துடையடியவரி”லே, “பிணக்கற வறுவகைச் சமயமும்” என்கிற பாட்டிலே, “வணக்குடைத் தவநெறி வழி நின்று” என்றுபக்ரமித்து, “வேதப் புனித விருக்கை நாவில் கொண்டு ஞானவிதி பிழையாமே அச்சுதன் தன்னை மேவித் தொழுதுய்ம்மினீர்கள்” என்கிறதளவாக கீழுபதேசித்த ஸாத்ய ஸாதந பக்தி ச்ரவணத்தாலே அதினுடைய துச்சகத்வ ஸ்வரூப விரோதித்வங்களை நினைத்துப் பிறந்த சோகத்தோடே கூடி, அத்தாலே “எய்தக் கூவுதலாவதேயெனக்கு”, “என்னான் செய்கேன்” என்றிருக்கும் தம்மோடு ஸஜாதீயராம்படியான அதிகாரம் பிறந்தவர்களுக்கு.

**விளக்கம்** – ( பிணக்கறத் தொடங்கி) - திருவாய்மொழி (1-3) – பத்துடை அடியவர் - என்பதில் உள்ளதான திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற அறுவகைச் சமயமும் - என்னும் பாசுரத்தில், திருவாய்மொழி (1-3-5) – வணக்குடைத் தவநெறி வழி நின்று – என்று தொடங்கி, (வேதப் புனித இறுதி சொன்ன) - திருவாய்மொழி (5-2-9) – வேதப் புனித விருக்கை நாவில் கொண்டு ஞானவிதி பிழையாமே அச்சுதன் தன்னை மேவித் தொழுதுய்ம்மினீர்கள் - என்பது முடிய உபதேசித்த. (ஸாத்ய உபாய ச்ரவண ஸசோக ஸஜாதீயர்க்கு) - ஸாத்ய ஸாதன பக்தி குறித்துக் கேட்டதன் காரணமாக, அந்தப் பக்தியைக் கைக்கொள்வதில் உள்ள கடினத்தையும், அது ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ள தன்மையும் எண்ணிப் பார்ப்பதால் ஏற்பட்ட சோகத்துடன் நின்று, அதன் விளைவாகத் திருவாய்மொழி (5-7-5) - எய்தக் கூவுதலாவதேயெனக்கு – என்றும், திருவாய்மொழி (5-8-3) – என் நான் செய்கேன் – என்றும் உள்ள, தமக்கு ஒற்றுமையான அதிகாரம் ஏற்பட்டவர்களுக்கு.

**வ்யாக்யானம்** - [11] (தந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தேனென்று ஸ்வஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டாநங்களாலே காட்டுகிறார் ஆறாம்பத்தில்)

அதாவது, “தந்தனன் தனதாள் நிழல்”, “திருவிண்ணகர் மன்னுபிரான் கழல்களன்றி மற்றோர் களைகணிலங் காண்மின்களே” என்கிற தம்முடைய உக்தியாலும், “அடிக்கீழமர்ந்து புகுந்தேன்” என்கிற தம்முடைய அநுஷ்டாநத்தாலும் தமக்கிந்த ஸித்தோபாயத்திலுண்டான நிஷ்டையை ப்ரகாசிப்பித்தார் ஆறாம் பத்திலென்கை.

**விளக்கம்** - (தந்தனன்) – திருவாய்மொழி (6-3-9) - தந்தனன் தனதாள் நிழல் – என்றும், திருவாய்மொழி (6-3-10) - திருவிண்ணகர் மன்னுபிரான் கழல்களன்றி மற்றோர் களைகணிலங் காண்மின்களே - என்றும் உள்ள தம்முடைய சொற்கள் மூலமாகவும்; திருவாய்மொழி (6-10-10) – அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் - என்றும் உள்ள தனது செயலாலும், தனக்கு இந்த ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் விஷயத்தில் உண்டான நிஷ்டையை, ஆறாம் பத்து மூலமாக வெளிப்படுத்துகிறார்.

225. [1] எண்ணிலாக் குணங்கள் பால துன்பவேறவன் மாயாப் பல்யோகு செய்தியென்னும் ஆச்சர்ய சக்தியோகத்தாலே [2] தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தையருளும் ப்ராபகத்வம் புற்பாவெறும்பு பகைவனுக்கும் ஆக்கவல்ல ஸர்வ சக்தி, பாதமகலகில்லாத தம்மை [3] அகற்றுமவற்றின் நடுவேயிருத்தக் கண்டு நலிவான் சுமாடு தந்தாய் ஓவென்று ஸாதநபலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டுக் [4] கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறை கெட்ட கேள்வியாக்கித் [5] தேற்றவொண்ணாதபடி தோற்று ஒன்றி நிற்கப் பண்ணின பலாதாரம் மற்றுங் கற்பாரிழவிலே சுவறிப் [6] பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து, சூழவும் பகைமுகஞ்செய்ய, எடுப்புஞ்சாய்ப்புமான க்லேசம் நடக்க, உபாயாதிகாரதோஷமொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க, [7] ஐச்சமாக இருத்தி உறக்கொண்ட ஸ்வபர ப்ரயோஜனத்தை அருளிச்செய்ய, என் சொல்லி எந்நாள் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவும்மென்கிற உபகார ஸ்ம்ருதியோடே [8] தன் சரிதை கேள்வியாகாமல் இன்பம் பயக்கவிருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக காநகோஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர், [9] சரமோபாய பரரானார்க்கு நீணகரமது, துணித்தான சரணன்றி மற்றொன்றிலம் உள்ளித் தொழுமினென்று ப்ராப்யஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிறார் ஏழாம் பத்தில்.

 **Email:**sridharan_book@yahoo.co.in

**அவதாரிகை** - ஏழாம் பத்தால், உபாயக்ருத்யத்துக்கபேக்ஷிதமான விசித்ர சக்தி யோகத்தாலே யதாஜ்ஞாநம் பிறந்தவர்களுக்குக் கொடுக்கக் கடவதான பரமபதத்தைத் தானே யுபாயமாய்க் கொடுக்குமிடத்தில், திர்யக் ஸ்தாவரங்களுக்கும் சத்ருவுக்குமுட்படக் கொடுக்கவல்ல ஸர்வேச்வரன் திருவடிகளை க்ஷணகாலமும் பிரிய க்ஷமரன்றிக்கே ஸாங்கப்ரபதநம் பண்ணின தம்மை விஷயங்களிலே மூட்டி தன்பக்கல் சேராதபடி யகற்றுமவையான இந்த்ரியங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைக்கக் கண்டு விஷண்ணராய் கூப்பிட்டு, தம் தசை தாம் பேசமாட்டாதபடி தளர்ந்து பிறரால் மீட்கவொண்ணாதபடி அபஹ்ருத சித்தராக, அவன் தன் விஜயங்களைக் காட்டி யிவரைத் தரிப்பிக்க, அந்தத் தரிப்பும் ஸம்ஸாரிகளிழவை நினைத்துச் சுவறிப் பழைய வார்த்தியே தலையெடுத்து, அநுபாவ்ய விஷயம் ஸ்ம்ருதி விஷயமாயொருமுகம் செய்து நலிய நோவுபட்டு இப்படியெடுப்பும் சாய்ப்புமாக க்லேசம் செல்லச் செய்தே, “உபாய பூதனான உனக்கு ஜ்ஞாந சக்திகளில் குறைவற்றிருக்க, எனக்கு ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களிலும் ஆர்த்தியிலும் குறைவற்றிருக்க, என்னை ஸம்ஸாரத்திலே வைக்கைக்கடியென்”னென்று கேட்க; அவனும், “நமக்கும் நம்முடையார்க்கும் இனிதாகத் திருவாய்மொழி பாடுவிக்க வைத்தோங்காணும்” என்றருளிச் செய்ய; “வ்யாஸாதிகள், முதலாழ்வார்கள் கவிபாடுகைக்குண்டாயிருக்க நம்மைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்வதே” என்று அவன் பண்ணின உபகாரத்தை அநுஸந்தித்து அதுக்கு ப்ரத்யுபகாரம் தேடிக் காணாமையாலே, “இனி இதொழியச் செய்யலாவதொன்றில்லை” என்று திருவாறன்விளையிலே பெரியபிராட்டியாருடனே எழுந்தருளியிருக்கிற பேரோலக்கத்திலே திருவாய்மொழி கேட்பித்து அடிமை செய்வதாக மநோரதித்து அங்கே தம் திருவுள்ளம் ப்ரவணமாகையாலே, பரமபதத்திலிருப்பையும் உபேக்ஷிக்கும்படியானவர்; கீழ் தம்முடைய உபாயநிஷ்டை வெளியிடும்படி புகுர நின்றவர்களுக்கு “திருவாறன்விளையே ப்ராப்யம்; அங்கு எழுந்தருளி நிற்கிறவன் உபாயம்” என்று தாமறுதியிட்ட ப்ராப்ய ப்ராபகங்களினுடைய முடிவைத் தம்முகப்பாலே வெளியிடுகிறாரென்கிறார்.

**விளக்கம்** - உபாயம் என்ற செயலுக்கு அவசியமாகத் தேவைப்படுவதான வியக்கவைக்கும் சக்தி கொண்டதால், உண்மையான ஞானத்தைப் பெற்றவர்களுக்கு அளிக்கக்கூடியதான பரமபதத்தை, ஸர்வேச்வரன் தானே உபாயமாக நின்று அளிக்கிறான். இதனை அவன் தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும், பகைவர்களுக்கும்

கூட அளிக்கிறான். இப்படிப்பட்ட அவன், தனது திருவடிகளை நொடிப்பொழுது நேரம் கூடப் பிரிய இயலாதபடி ப்ரபத்தி செய்த நம்மாழ்வாராகிய தன்னை, இந்த உலகவிஷயங்களில் ஈடுபடுத்தி அவனிடம் சேர இயலாதபடி விலக்குகின்ற இந்த்ரிய விஷயங்கள் நிறைந்த இந்த ஸம்ஸாரத்தில் வைத்தபடி உள்ளதைக் கண்டு துக்கம் கொண்டார். அவனை அழைத்து தன்னுடைய நிலையை உரைக்க இயலாமல் தளர்ந்தார். மற்றவர்களாலும் இவரை மீட்க இயலாதபடி, ஸர்வேச்வரனிடம் மட்டுமே தனது சிந்தனையை வைத்தவராக இருந்தார். இவ்விதம் உள்ள இவரை ஸர்வேச்வரன் தனது வெற்றி நிறைந்த செயல்களைக் காண்பித்துத் தரிக்கும்படி செய்தான். ஆனால் அத்தகைய தரித்தல் என்பதும், ஸம்ஸாரிகள் அவனை இழந்து நிற்பதை எண்ணித் தளர்ந்ததால், மீண்டும் பழைய துன்பமே மேலோங்கியது. இது தவிர அவனுடைய திருமேனியின் ஒவ்வொரு அவயமும் இவருடைய நினைவுகளுக்கு இலக்காகி நின்று மேலும் இவரை நலியும்படிச் செய்தன. அதனால் இவர் மேலும் துன்பம் அடைந்தார். இவ்விதமாகத் துன்பமானது வெளியேறியும் உட்புகுந்தும் இருந்தபடி உள்ளபோது நம்மாழ்வார் அவனிடம், "அனைத்து உபாயமாக உள்ள உனக்கு ஞானம் மற்றும் சக்தி போன்ற எதிலும் எந்தக் குறைகளும் இல்லை. இது போன்றே எனக்கும் முதல் இல்லாமை, வேறு கதி இல்லாமை மற்றும் துக்கங்கள் ஆகியவற்றில் எந்தக் குறைகளும் இல்லை. இவ்விதம் உள்ளபோது என்னை இந்த ஸம்ஸாரத்தில் வைப்பதற்கு என்ன காரணம் உள்ளது?", என்றார். இதற்கு ஸர்வேச்வரன், "நமக்கும், நம்முடைய அடியார்களுக்கும் இனிமையாக உள்ளதான திருவாய்மொழியை நீவிர் பாடும்படிச் செய்வதற்காகவே ஸம்ஸாரத்தில் வைத்தோம்", என்றான். இதனைக் கேட்ட நம்மாழ்வார், "வ்யாஸர் உள்ளிட்ட மஹரிஷிகள் மற்றும் முதலாழ்வார்கள் போன்றவர்கள் இவனைக் குறித்துப் பாட உள்ளபோது, இவன் நம்மைக் கவிபாட வைத்துள்ளானே!", என்று அவன் தனக்குச் செய்த உபகாரத்தை எண்ணி மகிழ்ந்தார். அதற்கு என்ன கைம்மாறு செய்வது என்று தேடி, எதுவும் கிட்டாத காரணத்தால், "இனி இதனைத் தவிரச் செய்வதற்கு வேறு ஏதும் இல்லை" என்று தீர்மானித்து, திருவாறன்விளையில் பெரியபிராட்டியாருடன் எழுந்தருளியுள்ள பெரிய அவையில், திருவாய்மொழியைக் கேட்கும்விதமாகத் தனக்குக் கைங்கர்யம் கிட்டியதாக எண்ணினார். அங்கு தன்னுடைய திருவுள்ளம் மிகுந்த ஈடுபாட்டுடன் நிற்பதைக் கண்ட நம்மாழ்வார், பரமபதத்தையும் ஒதுக்கினார். தன்னுடைய ப்ரபத்தி குறித்து வெளியிடவேண்டும் என்று தன்னை அண்டி வந்தவர்களுக்கு, "திருவாறன்விளையே அடையவேண்டிய இலக்காகும். அங்கு எழுந்தருளியுள்ளவனே


**Email:**sridharan_book@yahoo.co.in

உபாயம் ஆவான்", என்று தான் தீர்மானித்த வைத்த உபாயம் மற்றும் பேறு ஆகியவை குறித்த தனது முடிவைத் தன்னுடைய மகிழ்ச்சி மூலம் ஏழாம் பத்தில் வெளியிடுகிறார் என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – [1] (எண்ணிலாக் குணங்கள் பாலதுன்ப வேறவன் மாயாப்பல்யோகு செய்தியென்னு மாச்சர்யசக்தி யோகத்தாலே) "எண்ணிலாப் பெருமாயனே" என்று எண்ணிறந்த ஆச்சர்யமான குணங்களையுடையவனேயென்றும், "குணங்கள் கொண்ட மூர்த்தியோர் மூவராய்ப் படைத்தளித்துக் கெடுக்கும்" என்று ஸத்வாதி குணாநுகுணமான மூர்த்திகளைக் கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுமவ னென்றும், "பால துன்பங்க ளின்பங்கள் படைத்தாய்" என்று இடமறிந்து ஸுகதுக்கங்களைக் கல்பித்தவனேயென்றும், "ஊழிதோறூழியுருவும் பேருஞ் செய்கையும் வேறவன் வையங்காக்கும்" என்று கல்பந்தோறும் ரூப நாம சேஷ்டிதங்களை வேறாகவுடையனாய்க் கொண்டு ஜகத்தை ரஷிக்குமென்றும், "மாயா வாமனனே" என்று ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடையவனேயென்றும், "உள்ளப் பல்யோகு செய்தி" என்று திருவுள்ளத்திலே பல ரக்ஷணோபாய சிந்தைகளையும் பண்ணி நிற்றியென்றும் இப்படி பஹுவிதாகச் சொல்லப்பட்ட உபாயக்ருத்யத்துக்கு அபேக்ஷிதமான ஆச்சர்ய சக்தி யோகத்தாலே.

**விளக்கம்** – (எண்ணிலா) - திருவாய்மொழி (7-1-1) - எண்ணிலாப் பெருமாயனே – என்று "எண்ணற்றதும் வியக்கவைப்பதும் ஆகிய திருக்கல்யாணகுணங்கள் கொண்டவனே" என்றும், (குணங்கள்) – திருவாய்மொழி (7-1-11) – குணங்கள் கொண்ட மூர்த்தியோர் மூவராய்ப் படைத்தளித்துக் கெடுக்கும் – என்று "ஸத்வம் முதலான குணங்களுக்கு ஏற்றபடி உள்ள மூர்த்திகளைக் கொண்டு ஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்பவன்" என்றும், (பால துன்பம்) - திருவாய்மொழி - (7-2-7) - பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய் – என்று "தகுந்த இடம் அறிந்து இன்ப துன்பங்களை ஏற்படுத்தி வைத்தவனே" என்றும், (வேறவன்) – திருவாய்மொழி (7-3-11) – ஊழிதோறூழியுருவும் பேருஞ் செய்கையும் வேறவன் வையங்காக்கும் – என்று "ஒவ்வொரு கல்பத்திலும் திருமேனி, திருநாமம் மற்றும் செயல்கள் ஆகியவற்றை வெவ்வேறாகக் கொண்டவனாய் இருந்து இந்த ஜகத்தைக் காப்பவன்" என்றும், (மாயா) - திருவாய்மொழி (7-8-7) – மாய வாமனனே – என்று "வியக்கவைக்கும் செயல்கள் பொருந்தியவனே" என்றும், (பல்யோகு செய்தி) -

திருவாய்மொழி (7-8-4) - உள்ளப் பல்யோகு செய்தி – என்று "தனது திருவுள்ளத்தில் பலவிதமான காப்பாற்றும் உபாயங்கள் குறித்து எப்போதும் சிந்தித்தபடி இருப்பவன்" என்றும், (என்னும் ஆச்சர்ய சக்தி யோகத்தாலே) - இவ்விதம் பலவிதமாக உரைக்கப்பட்ட உபாயங்களைச் செய்ய வேண்டியதற்கான வியக்கத்தக்க சக்தி கொண்டுள்ளதால்.

**வ்யாக்யானம்** - [2] (தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தையருளும் ப்ராபகத்வம், புற்பா வெறும்பு பகைவனுக்குமாக்கவல்ல ஸர்வசக்தி) "தெளிவுற்றுவீவின்றி நின்றவர்க்கின்பக் கதி செய்யும்", "ஏற்றரும் வைகுந்தத்தை யருளும்" என்று ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் தானே யென்றத்யவஸித்து, பின்னை நாட்டார்கள் செயல்கள் கண்டாதல் யுக்த்யாபாஸம் கொண்டாதல் பிற்காலியாதே நின்று அவர்களுக்கு நிரதிசயாநந்த யுக்தமாய் ஒருவராலும் ஸ்வயத்தத்தால் ப்ராபிக்க வொண்ணாதிருக்கிற ஸ்ரீவைகுண்டத்தைத் தன்னருளாலே கொடுக்கிற தன்னுபாயத்வத்தை "புற்பாமுதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன்", "நாட்டையளித்துய்யச் செய்து" என்றும், "சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன் திருவடிதாட்பாலடைந்த" என்றும் ஜ்ஞாநலேசமில்லாத திர்யக் ஸ்தாவரங்களுக்கும், ப்ராதிகூல்யத்தில் முதிர நின்ற சத்ருவுக்குமாம்படி பண்ணவல்ல ஸர்வசக்தியானவன். (பாதமகலகில்லாத தம்மை) "அடியேனுனபாதமகலகில்லேனிறையும்" என்று தன் திருவடிகளை க்ஷண காலமும் அகல சக்தரன்றியே "அடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று சரணம் புகுந்த தம்மை.

**விளக்கம்** - (தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் ப்ராபகத்வம்) - திருவாய்மொழி (7-5-11) - தெளிவுற்றுவீவின்றி நின்றவர்க்கின்பக் கதி செய்யும் – என்றும், திருவாய்மொழி (7-6-10) - ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப "உபாயம் மற்றும் பேறு ஆகிய இரண்டும் அவனே ஆவான்" என்று எப்போதும் தன்னைக் குறித்து எண்ணியபடி உள்ளவர்களுடைய செயல்களைக் கண்டோ அல்லது மற்ற தாழ்ந்த யுக்திகளைக் கண்டோ அவன் பின்வாங்காமல், அவர்கள் விஷயத்தில் உறுதியுடன் நின்று அவர்களுக்கு, "இதனைக் காட்டிலும் உயர்ந்த ஆனந்தம் எதும் இல்லை என்பதாக உள்ளதும், யாராலும் தங்களுடைய முயற்சியால் அடைய இயலாததும்" ஆகிய ஸ்ரீவைகுண்டத்தைத் தனது க்ருபை காரணமாக அளிப்பதான தனது உபாயம் என்ற தன்மையை. (புற்பா எறும்பு பகைவனுக்கு ஆக்கவல்ல ஸர்வசக்தி) - திருவாய்மொழி (7-5-1) - புற்பாமுதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன் - என்றும்,


**Email:**sridharan_book@yahoo.co.in

திருவாய்மொழி (7-5-2) - நாட்டையளித்துய்யச் செய்து – என்றும், திருவாய்மொழி (7-5-3) - சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன் திருவடிதாட்பாலடைந்த – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஞானம் என்பது சிறிதளவும் இல்லாத விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கும், விரோதத்தில் எப்போது நிற்கின்ற பகைவர்களுக்கும் கூடக் கிட்டும்படியாகச் செய்யவல்ல அனைத்து சக்திகளையும் கொண்டவன். (பாதம் அகலகில்லாத தம்மை) – திருவாய்மொழி (6-10-9) – அடியே உனபாதம் அகலகில்லேன் இறையும் - என்று ஸர்வேச்வரனாகிய தனது திருவடிகளை விட்டு ஒரு நொடிப்பொழுது கூட அகல்கின்ற சக்தி இல்லாதவராக, திருவாய்மொழி (6-10-10) - அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் – என்று சரணம் புகுந்த நம்மாழ்வாராகிய தன்னை.

**வ்யாக்யானம்** - [3] (அகற்றுமவற்றின் நடுவேயிருத்தக்கண்டு) "அகற்ற நீ வைத்த மாயவல்லைம் புலன்களாமவை" என்று தன் திருவடிகளைக் கிட்டாதபடி யகற்றவற்றான இந்திரியங்களின் நடுவே இவ்வுடம்பிலே யிருக்கும்படி வைக்கக்கண்டு. (நலிவான் சுமடுதந்தாய் ஓவென்று ஸாதந பலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டு) "நலிவானின்ன மெண்ணுகின்றாய்", "அன்புருகி நிற்குமது நிற்கச் சுமடு தந்தாய்", "விண்ணுளார் பெருமானேயோ", "முன்பரவை கடைந்தமுதங் கொண்ட மூர்த்தியோ" என்று விளம்ப ஹேதுவில்லாத உபாயத்தைப் பரிக்ரஹித்தால் அது பலப்ரதமாந்தனையுங் கிடந்து கூப்பிடுமித்தனை யாகையாலே கீழ் தாம் பரிக்ரஹித்த உபாயத்தின் பலமாய் வந்ததாய், "கலங்காப் பெருநகரம்" கலங்கி அவனுக்கங்குக் குடியிருப்பரிதாய் வந்து விழவேண்டும்படியான ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பால் வந்த பெரிய ஆக்ரோசத்தோடே கூடிக் கொண்டு தம் தலையால் வந்தத்தையும் அவன்தலையிலே யேறிடும்படியான ப்ராப்தியை யுணர்ந்தவராகையாலே இந்த்ரியங்களையிட்டு நலிவிக்கிறாய் நீ என்று அவன் மேலே பழியிட்டு.

**விளக்கம்** – திருவாய்மொழி (5-7-8) - அகற்ற நீ வைத்த மாயவல் ஐம்புலன்களாம் அவை - என்று ஸர்வேச்வரனாகிய தன்னுடைய திருவடிகளை அடையவிடாமல் அகற்றுக் கூடியதான இந்த்ரியங்களின் பிடியில் இந்தச் சரீரத்தை இருக்கும்படியாக அவன் வைக்க. (கண்டு) - இந்த நிலையைப் பார்த்து. (நலிவான்) – திருவாய்மொழி (7-1-1) – நலிவான் இன்ன மெண்ணுகின்றாய் - என்றும், (சுமடு தந்தாய்) - திருவாய்மொழி (7-1-10) – அன்புருகி நிற்குமது நிற்கச் சுமடு தந்தாய் – என்றும், (ஓவென்று) – திருவாய்மொழி (7-1-5)

- விண்ணுளார் பெருமானேயோ - என்றும், திருவாய்மொழி (7-1-10) - முன்பரவை கடைந்தமுதங் கொண்ட மூர்த்தியோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப, (ஸாதன பலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டு) – "தாமதம் ஆவதற்கு எந்தவிதமான காரணமும் இல்லாத உபாயத்தைப் பற்றினால், அது பலன் அளிக்கும் காலம் முடிய அழைத்தபடி இருக்க வேண்டும் அல்லாமல் செய்யவேண்டியது வேறு ஏதும் இலை என்பதால், தான் கைக்கொண்ட உபாயத்தின் பலனாக விளைந்ததாக உள்ளதும்" மற்றும் "கலங்காப் பெருநகரம் என்பதான பரமபதமும் கலங்கி, அவனுக்கு அங்கு அதற்கு மேலும் தங்க இயலாதபடி செய்து, இங்கு ஓடி வந்து தன் மீது விழவேண்டும்படியாக, இந்த ஸம்ஸாரம் என்பதில் உள்ளதால் ஏற்பட்ட அடிக்கொதிப்பால் விளைந்த பெரிய கூக்குரலுடன் கூடியபடி உள்ள தனது தலையால் ஏற்பட்டதும்" ஆகிய நிலையை அவன் மீது ஏறிடும்படியான ஸம்பந்தத்தை உணர்ந்தவர் என்பதால், "இந்த்ரியங்கள் மூலம் நீ என்னைத் துன்புறுத்துகிறாய்", என்று அவன் மீது பழி சுமர்த்தி.

**வ்யாக்யானம்** - [4] (கங்குலும் பகலுமடைவற்ற வார்த்தியைக் கோயில்திருவாசலிலே முறை கெட்ட கேள்வியாக்கி) இப்படி கூப்பிடத்தானும் க்ஷமரன்றிக்கே அவஸந்நராய்க்கொண்டு ஒரு பிராட்டி தசையையடைந்து, "கங்குலும் பகலும் கண்துயிலறியாள்", "இட்டகாலிட்ட கைகளாயிருக்கும்", "சிந்திக்கும் திசைக்கும்" இத்யாதிப்படியே திவாராத்ர விபாகமற, அழுவது தொழுவது மோஹிப்பது ப்ரலாபிப்பது அடைவுகெடப் பேசுவது நெடுமூச்செறிவது அதுதானும் மாட்டாதொழிவது ஸ்தப்தையாயிருப்பது இப்படி ஆர்த்தி விஞ்சிச் செல்லுகையாலே, "ஆசா சிந்தா ஸ்ம்ருதி: கீர்த்திர் விலாபோந்மாத விப்ரமா: மோஹோ வ்யாதிர் ம்ருதிச்சேதி விகாரா: காமஜா தச:" என்றாப்போலே அவஸ்த்தைகளுக்கு அடைவு பிடிக்கவொண்ணாதபடி நடக்கிற வார்த்தியை, பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிற கோயில் திருவாசலிலே பெண்பிள்ளையைப் பொகட்டுத் திருத்தாயார் கூச்சுமுறை தவிர்ந்து தானே இவள் தசையை அவர்க்குச் சொல்லி "திருவரங்கத்தாய் இவள் திறத்தென் செய்கின்றாய்", "என் செய்திட்டாய்", "என் சிந்தித்தாய்", "என் செய்கேனென் திருமகட்கு" என்று அவர் தம்மையே கேட்கும்படி அத்யாவஸாதம் பிறந்து. "அடைவற்ற அரதியை" என்று பாடமானபோது, "கங்குலும் பகலும்" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே திவாராத்ர விபாகமற அழுவது தொழுவது இத்யாதிகளாலே ஆசாசிந்தாதிகளிற்போலே

அவஸ்தைகளுக்கோரடைவு பிடிக்கவொண்ணாதபடி நடக்கிற அரதியையென்று யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** - (கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியை) - இவ்விதம் கூக்குரல் இட்டு அழைப்பதற்குச் சக்தியின்றி துன்பம் அடைந்தவராக நின்று, ஒரு பிராட்டியின் நிலையை அடைந்து, திருவாய்மொழி (7-2-1) - கங்குலும் பகலும் கண்துயிலறியாள் - என்றும், திருவாய்மொழி (7-2-4) - இட்டகாலிட்ட கைகளாயிருக்கும் – என்றும், திருவாய்மொழி (7-2-5) – சிந்திக்கும் திசைக்கும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பகல் மற்றும் இரவு என்ற வேறுபாடு அறியாமல், “அழுதல், தொழுதல், மயக்கம் அடைதல், புலம்புதல், முறையின்றிப் பேசுதல், பெருமூச்சுவிடுதல், அதனையும் செய்ய இயலாமல் இருத்தல், செயலற்றுக் கிடத்தல்” போன்ற அனைத்தையும் துன்பத்தின் மிகுதி காரணமாக அடைவதால். அதாவது, ஆசா சிந்தா ஸ்ம்ருதி: கீர்த்திர் விலாபோந்மாத விப்ரமா: மோஹோ வ்யாதிர் ம்ருதிச்சேதி விகாரா: காமஜா தச: - ஆசை, சிந்தை, நினைவு, பேச்சு, அழுகை, பித்துப்பிடித்தல், மயக்கம், தடுமாற்றம், நோய், இறப்பு என்று கூறப்படும் பத்து மாற்றங்களும் காமத்தால் ஏற்படுபவை ஆகும் - என்பதற்கு ஏற்ப இவன் அடைகின்ற நிலை மாறுபாடுகளுக்கு எந்தவிதமான எல்லையும் காண இயலாதபடி உள்ள துன்பமான நிலையை அல்லது துன்பத்தை. (கோயில் திருவாசலிலே முறை கெட்ட கேள்வியாக்கி) - பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன் திருக்கண் வளர்ந்தருளுகிற திருவரங்கம் பெரியகோயிலின் திருவாசலில் தனது பெண்ணைக் கொண்டு வந்து கிடத்தி, அவளுடைய திருத்தாயார் தன்னுடைய கூச்சங்கள் அனைத்தையும் விலக்கி தானே தனது பெண்ணின் நிலையை அரங்கனுக்கு உரைத்து, திருவாய்மொழி (7-2-1) - திருவரங்கத்தாய் இவள் திறத்தென் செய்கின்றாய் - என்றும், திருவாய்மொழி (7-2-3) - என் செய்திட்டாய் - என்றும், திருவாய்மொழி (7-2-4) - என் சிந்தித்தாய் – என்றும், திருவாய்மொழி (7-2-8) – என் செய்கேன் என் திருமகட்கு – என்றும் அரங்கனையே கேட்கும்படியான மிகவும் பெரிய துன்பத்தை அடைந்து. இங்குள்ள “அடைவற்ற ஆர்த்தியை” என்பதை “அடைவற்ற அரதியை” என்று கொண்டால், திருவாய்மொழி (7-2-1) – கங்குலும் பகலும் - என்பது போன்ற பாசுரங்களில் கூறப்பட்டபடி, பகல் மற்றும் இரவு என்ற வேறுபாடு அறியாமல், அழுதல் மற்றும் தொழுதல் போன்றவற்றால், “ஆசை, சிந்தை” என்ற ப்ரமாணத்தால் கூறப்பட்டது போன்று, இவள் அடையும் நிலைகளுடைய மாறுபாடுகளுக்கு ஒரு எல்லை காண இயலாதபடி நடக்கின்ற துன்பத்தை என்று கூறலாம்.

**வ்யாக்யானம்** - [5] (தேற்றவொண்ணாதபடி தோற்று) “அன்னையர்காளென்னைத் தேற்ற வேண்டா”, “கண்ணபிரானுக்கென் பெண்மை தோற்றேன்” என்று பார்ச்வஸ்தராலும் தேற்றித் தரிப்பிக்கவொண்ணாதபடி அபஹ்ருத சித்தராய்க் கொண்டு பாரதந்த்ர்யத்தையு மிழந்து, (ஒன்றி நிற்கப் பண்ணின பலாதாநம் மற்றும் கற்பாரிழவிலே சுவறி) இப்படி விரஹவ்யதையாலே மிகவும் தளர்ந்திருக்கிற இவரைத் தரிப்பிக்கைகாகத் தன் விஜய பரம்பரையைக் காட்டிக் கொடுக்கக்கண்டு ப்ரீதராய், “குன்றமெடுத்த பிரானடியாரோடு மொன்றி நின்ற சடகோபன்” என்று தன் விஜயத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடே பொருந்தி நிற்கும்படி பண்ணின பலாதாநமானது, “கற்பாரி ராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ” என்று அவதார ப்ரயுக்த ஸௌலப்யத்தை யுடையனாய் ப்ரியபரனுமாய் ஹிதபரனுமாய், தானங்கீகரிக்க நினைத்தாரை நிர்ஹேதுகமாக மோக்ஷபர்யந்தமாக நடத்துமவனுமாயிருக்கிற விவனையொழிய மற்றுமொரு விஷயத்தைக் கற்பரோ! இப்படி ஸுலபமான இவ்விஷயத்தை ஸம்ஸாரிகளிழப்பதே என்று அவர்களிழவை யநுஸந்தித்து அதிலே சுவறி.

**விளக்கம்** - (நேற்ற ஒண்ணாதபடி தோற்று) – திருவாய்மொழி (7-3-9) - அன்னையர்காளென்னைத் தேற்ற வேண்டா - என்றும், திருவாய்மொழி (7-3-5) – கண்ணபிரானுக்கென் பெண்மை தோற்றேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அருகில் உள்ளவர்களாலும் தேற்றிப் பிழைக்க வைக்க இயலாதபடி அவன் விஷயத்தில் தனது உள்ளத்தைப் பறி கொடுத்தவராக உள்ளதால் அவன் பக்கம் வசப்பட்டு நிற்பதையும் மறந்து. (ஒன்றி நிற்கப் பண்ணீன பலாதாநம்) - இவ்விதம் பிரிவாற்றாமை காரணமாக மிகவும் தளர்ந்து நிற்கும் நம்மாழ்வாரைக் காப்பாற்ற, தனது வெற்றி மிகுந்த செயல்களைக் காண்பித்தான். அதனைக் கண்டு மகிழ்ந்தவராக, திருவாய்மொழி (7-4-11) – குன்றமெடுத்த பிரானடியாரோடு மொன்றி நின்ற சடகோபன் - என்று தனது வெற்றிச் செயல்கள் கண்டு அவற்றில் தங்களை இழந்து நிற்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பொருந்தியவராகத் தன்னை அவன் வைத்த வலிமையானது, (மற்றும் கற்பார் இழவிலே சுவறி) - திருவாய்மொழி (7-5-1) – கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ – என்பதற்கு ஏற்ப திருஅவதாரத்தால் உண்டான எளிமையைக் கொண்டவனாக, ஸர்வேச்வரனாகிய தான் அங்கீகரிக்க எண்ணியவர்களை எந்த ஒரு காரணத்தையும் எதிர்பாராமல் ஸ்ரீவைகுண்டம் முடிய தானாகவே வழி நடத்துபவனாக உள்ள அவனை

அல்லாமல் வேறு ஏதேனும் ஒரு வஸ்துவைக் குறித்துக் கற்பார்களோ! இவ்விதம் மிகவும் சுலபமக உள்ள இவனை இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவர்கள் இழந்து நிற்கிறார்களே என்று இவர்களுடைய இழப்பை எண்ணுவதால் அதிலேயே நிலைதடுமாறி.

**வ்யாக்யானம்** - [6] (பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து) "பாமருமூவுலகும் படைத்த பற்பநாபாவோ" என்று தொடங்கி, "தனியேன் தனியாளா" என்று ஒரு துணையின்றிக்கே யிருந்து அவனுடைய ஜகத்காரணத்வாதிகளைச் சொல்லிக் கூப்பிடும்படி முன்புத்தை "உண்ணிலாவியில்" கூப்பீடே மீளவும் தலையெடுத்து. (சூழவும் பகை முகஞ்செய்ய) "சூழவும் தாமரை நாண்மலர்போல் வந்து தோன்றும்", "இணைக்கூற்றங்கொலோ வறியேன்", "கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றதே" என்று முன்பநுபவித்தவனுடைய முகாவயவ சோபையானது விசத ஸ்ம்ருதி விஷயமாய் பார்த்தவிடமெங்கும் தோன்றி நின்று நலிய. (எடுப்பும் சாய்ப்புமான க்லேசம் நடக்க) விஜயங்களைக் காட்டித் தரிப்பித்தபோது தலைசாய்ந்தும் மீளவும் கூப்பிடும்படி தலையெடுத்தும் இப்படி எடுப்பும் சாய்ப்புமாய்ச் செல்லுகிற க்லேசம் நடவா நிற்கச்செய்தே. (உபாயாதிகார தோஷமொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க) உபாயபூதனான உனக்கு அஜ்ஞாநாசக்திகளாகிற தோஷமின்றிக்கே யிருக்க சரணாகதனான வெனக்கு ஆகிஞ்சந்யாநந்ய கதித்வங்களும் ஆர்த்தியு முண்டாகையாலே அதிகார தோஷமின்றிக்கே யிருக்க, "பாசங்கள் நீக்கி" என்று தொடங்கி, "மாயங்கள் செய்து வைத்தி" என்று அவித்யா கர்ம வாஸநா ருசிகளை ஸவாஸநமாகப் போக்கி உனக்கு அநந்யார்ஹ சேஷமாகக் கொண்ட பின்பு ஜந்ம மரணாத் யாச்சர்யங்களை யுண்டாக்கி என்னை ஸம்ஸாரத்திலே வைத்த ஆச்சர்யத்தை யருளிச்செய்யவேணுமென்று கேட்க.

**விளக்கம்** - (பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து) - திருவாய்மொழி (7-6-1) – பாமருமூவுலகும் படைத்த பற்பநாபாவோ - என்று தொடங்கி, திருவாய்மொழி (7-6-1) - தனியேன் தனியாளா - என்பது முடிய உள்ள வரிகளில், தான் எந்தவிதமான துணையும் இல்லாமல், அவனுடைய "இந்த ஜகத்தின் காரணமாக இருத்தல்" முதலான பல தன்மைகளை உரைத்து அழைக்கும்படி, முன்பு திருவாய்மொழி (7-1-1) – உண்ணிலாவிய – என்பதில் அழைத்த அழைப்பு என்பதே மீண்டும் தலைதூக்கி. (சூழவும் பகைமுகம் செய்ய) – திருவாய்மொழி (7-7-1) - சூழவும் தாமரை நாண்மலர்போல் வந்து தோன்றும் -

என்றும், திருவாய்மொழி (7-7-1) – இணைக்கூற்றங்கொலோ வறியேன் – என்றும் திருவாய்மொழி (7-7-8) - கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றதே – என்றும் கூறுவதற்கு ஏற்ப முன்பு அனுபவித்தவனுடைய திருமுகத்தின் ஒளியானது தெளிவாக உள்ள நினைவிற்கு விஷயமாக நின்று, பார்க்கின்ற இடங்கள் அனைத்திலும் தென்பட்டு நின்று துன்புறுத்த. (எடுப்பும் சாய்ப்புமான க்லேசம் நடக்க) - தனது வெற்றிச் செயல்களைக் காண்பித்து இதுவரைக் காத்தபோது தலைசாய்ந்தும், மீண்டும் அழைக்கும்படியான நிலை ஏற்பட்டும் என இப்படியாக மேலே எழுவதும் விழுவதும் என்று உள்ள துன்பமானது உள்ளபோது. (உபாய அதிகார தோஷம் ஒழிய) – உபாயமாக உள்ள உனக்கு அஜ்ஞானம், சக்தி இன்மை முதலான தோஷங்கள் இல்லாமல் உள்ளபோதிலும்; உன்னைச் சரணம் புகுகின்ற எனக்குக் கைம்மாறு இல்லாமை, வேறு கதி இல்லாமை மற்றும் ஸம்ஸார துன்பம் ஆகியவை உள்ளதால் தகுதி இன்மை என்ற தோஷம் இல்லாமல் நான் உள்ளபோதிலும். (மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க) - திருவாய்மொழி (7-8-5) - பாசங்கள் நீக்கி - என்று தொடங்கி, திருவாய்மொழி (7-8-5) - மாயங்கள் செய்து வைத்தி - என்று கூறுவதற்கு ஏற்ப அவித்யை, கர்மங்கள், வாசனை மற்றும் ருசிகள் ஆகியவற்றை அடியுடன் விலக்கி, உனக்கு மட்டுமே என்னை அடிமையாகக் கொண்ட பின்னர், பிறப்பு மற்றும் இறப்பு முதலான வியப்புகளை ஏற்படுத்தி, என்னை எந்த ஸம்ஸாரத்தில் தொடர்ந்து நிறுத்தி வைப்பதற்கான காரணம் என்ன என்று அருளிச் செய்யவேண்டும் என வியந்து கேட்க.

**வ்யாக்யானம்** - [7] (ஐச்சமாக இருத்தியுறக்கொண்ட ஸ்வப்ரயோஜநத்தை யருளிச்செய்ய) அவன் “நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோக்காக வும்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள வைத்தோங்காணும்” என்று கர்மமடியாகவன்றிக்கே தன்னிச்சையாலேயிருத்தி “உறப் பலவின் கவி” என்கிறபடியே தனக்குத்தகுதியான கவிகளைப் பாடுவித்துக்கொண்ட ஸ்வப்ரயோஜநமும் பரப்ரயோஜநமுமான வித்தை வைத்ததுக்குஹேதுவாக வருளிச்செய்ய. (என் சொல்லி யெந்நாள் பார் விண்ணீரிறப்பெதிரெதுவு மென்கிற உபகார ஸ்ம்ருதியோடே) வ்யாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகள் முதலாழ்வார்களுண்டாயிருக்கத் தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட உபகாரத்தை யநுஸந்தித்து “என் சொல்லி நிற்பனோ”, “எந்நாள் சிந்தித்தார்வனோ”, “பார் விண்ணீர் முற்றுங்கலந்து பருகிலுமார்வனோ”, “இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ” என்று அவன் பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்தால் எங்ஙனே நான் தரையில் கால்பாவுவது; அவ்வுபகாரத்தை காலதத்வமுள்ளதனையுமநுஸந்தித்தாலும்

பர்யாப்தனாகிறிலேன், ஸகல ஸ்தலங்களிலுமுண்டான ஸகல சேதநருடையவும் வாகாத்யுபகரணங்களை நானொருவனுமேயுடையேனுமாய் காலத்ரயத்திலும் பேசியநுபவித்தாலும் த்ருப்தனாவேனோ! "உதவிக் கைம்மாறு" என்று தொடங்கி, "எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே" என்று இதுக்கு ப்ரத்யுபகாரமாக ஆத்மஸமர்ப்பணத்தைப் பண்ணுவோமென்னில் அதுவும் ததீயமாயிருக்கையாலே உபய விபூதியிலும் செய்யலாவதொன்றில்லை யென்னும்படியான உபகாரஸ்ம்ருதியோடே கூடிக்கொண்டு.

**விளக்கம்** - (ஐச்சகமாக இருத்தி) - ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் பொழுது போகவேண்டும் என்ற காரணத்திற்காகவே உம்மைக் கொண்டு இந்தத் திருவாய்மொழியைப் பாடும்படியாகச் செய்தோம். அதன் காரணமாகவே உம்மை இந்த ஸம்ஸாரத்தில் நிறுத்தினோம்", என்று கூறினான்; அதாவது கர்மம் காரணமாக நிறுத்தாமல், தனது இச்சை காரணமாக நிறுத்தி. (உறக்கொண்ட) – திருவாய்மொழி (7-9-9) – உறப் பலவின் கவி - என்பதற்கு ஏற்ப தனக்குத் தகுதியான உள்ள கவிகளைப் பாடும்படிச் செய்த. (ஸ்வ பர ப்ரயோஜநத்தை அருளிச்செய்ய) - தனது பயனும், மற்றவர்களுக்குப் பயனும் என்பதான திருவாய்மொழியை இந்த உலகில் வைத்ததற்கு காரணமாக அருளிச்செய்ய. (என் சொல்லி எந்நாள் பார் வீண்ணீர் இருப்பு எதிர்) - வேதவ்யாஸர், பராசரர், வால்மீகி போன்ற பல மஹரிஷிகள் உள்ளபோதிலும், முதலாழ்வார்கள் உள்ளபோதிலும், தன்னைக் கொண்ட கவி பாடும்படியாகச் செய்த உபகாரத்தை எண்ணியபடி, திருவாய்மொழி (7-9-2) - என் சொல்லி நிற்பனோ, திருவாய்மொழி (7-9-7) - எந்நாள் சிந்தித்தார்வனோ, திருவாய்மொழி (7-9-8) - பார் விண்ணீர் முற்றுங்கலந்து பருகிலுமார்வனோ, திருவாய்மொழி (7-9-9) – இறப்பு எதிர்காலம் பருகிலும் ஆர்வனோ - என்றும் உள்ள பாசுரங்களில், "அவன் செய்த உபகாரங்களை எண்ணினால் நான் எனது கால்களைத் தரையில் எப்படி வைப்பேன், அந்த உபகாரத்தை எண்ணினால் காலதத்வம் உள்ளது முடியவும் நிறைவு பெறாமல் உள்ளேன். அனைத்து இடங்களிலும் உள்ள அனைத்து மனிதர்களுடைய வாக்கு முதலான உறுப்புக்களை நான் ஒருவன் மட்டுமே பெற்றவன் என்றாகி, மூன்று காலங்களிலும் பேசி அனுபவித்தாலும் கூட மனநிறைவு அடைவேனோ?" என்கிறார். (ஏதும் என்கிற உபகார ஸ்ம்ருதியோடே) - திருவாய்மொழி (7-9-10) – உதவிக் கைம்மாறு – என்று தொடங்கி, திருவாய்மொழி (7-9-10) - எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே - என்பது முடிய

உள்ள வரிகளில் கூறுவதற்கு ஏற்ப, இதற்குக் கைம்மாறாக நம்முடைய ஆத்மாவை அவனுக்குச் சமர்ப்பணம் செய்துவிடுவோம் என்றால், அதுவும் அவனுடைய உடைமையாக உள்ளது; ஆகவே நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிலும் செய்யத்தக்க கைம்மாறு ஏதும் இல்லை என்று தீர்மானித்து, "செய்ந்நன்றி அறிதல்" என்பதை மனதில் நிலைநிறுத்தி.

**வ்யாக்யானம்** - [8] (தன் சரிதை கேள்வியாகாமல் இன்பம் பயக்கவிருந்த நிலத்தேவர்குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக காந கோஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர்) "செம்பவளத்திரள்வாய் தன் சரிதை கேட்டான்" என்கிறபடியே பிராட்டியையொழிய பெருமாள் தனியிருந்தவிருப்பிலே குசலவர்கள் ஸ்ரீராமாயணம் கேட்பித்தாப்போலன்றிக்கே, "இன்பம் பயக்க வெழில்மலர் மாதருந்தானு மிவ்வேழுலகை யின்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து" என்று ஆநந்தமயனான தனக்கும் ஆநந்தவர்த்தகையான பிராட்டியும் தானுமான சேர்த்தியிலே லோகமடங்க வாழும்படி உபய விபூதி நாதத்வத்தால் வந்த வேறுபாடு தோற்றவெழுந்தருளியிருந்த "நிலத்தேவர் குழு வணங்கும் சிந்தைமகிழ் திருவாறன்விளை"யில் அந்தபூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலே ப்ரத்யுபகாரமாகத் திருவாய்மொழி கேட்ப்பித்தடிமை செய்யப்பா(ரி)ர்த்து, திருவாறன்விளையிலே பரத்வவிமுகமாம்படி தம் நெஞ்சு ப்ரவணமாகையாலே "திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின் சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரானறியும்" என்று பகவதநுபவ ஜநித ஹர்ஷத்துக்குப் போக்குவீடாக "ஹாவு ஹாவு ஹாவு" என்று ஸாமகாநம் பண்ணும் பரமபதத்தில் கோஷ்டியையும், ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் நினைவுக்கு வாய்த்தலையிலே யிருந்து எல்லாருடைய நினைவுமறியும் அயர்வறுமமரர்க ளதிபதியறிய விஸ்மரித்தவர்.

**விளக்கம்** - (தன் சரிதை கேள்வி ஆகாமல்) - பெருமாள் திருமொழி (10-8) - செம்பவளத்திரள்வாய் தன் சரிதை கேட்டான் - என்பதற்கு ஏற்ப சீதை இன்றி இராமன் தனித்து நின்ற காலத்தில் குசலவர்கள் அவனை இராமாயணம் கேட்கும்படிச் செய்தது போன்று அல்லாமல், (இன்பம் பயக்க இருந்த) - திருவாய்மொழி (7-10-1) - இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும் இவ்வேழுலகை இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து - என்று ஆனந்தமயனாக பெரியபிராட்டியும் தானுமாக உள்ள சேர்த்தி நிலையில், அனைத்து லோகங்களும் வாழும்படியாக, "இரண்டு விபூதிகளுக்கும் நாதன்" என்று வேறுபாடு வெளிப்படும்படியாக எழுந்தருளியிருந்த. (நிலத்தேவர் குழுவிலே பாட்டுக்

கேட்பிப்பதாக) - திருவாய்மொழி (7-10-10) - நிலத்தேவர் குழு வணங்கும் சிந்தைமகிழ் திருவாறன்விளை - என்பதற்கு ஏற்ப உள்ள திருவாறன்விளையில் இந்தப் பூமியின் தேவர்களாகிய ஸ்ரீவைஷ்ணவர்கள் கூட்டத்தில், அவனுக்குக் கைம்மாறாகத் திருவாய்மொழியைக் கேட்கும்படிச் செய்து, இவ்விதமாக அடிமை செய்ய முனைந்து. (காந கோஷ்டியையும் தேவபிரான் அறிய மறந்தவர்) - பரமபதத்தில் அவன் உள்ள தன்மையில் சிந்தை செய்யாதபடியாக திருவாறன்விளையில் மட்டுமே தனது நெஞ்சம் ஈடுபட்டதால், திருவாய்மொழி (7-10-10) – திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின் சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரானறியும் - என்பதற்கு ஏற்ப பகவத் அனுபவத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு வெளிப்படும்படியாக, “ஹாவு ஹாவு ஹாவு” என்று ஸாமகானம் செய்தபடி உள்ள பரமபதத்தில் உள்ள கூட்டத்தைக் கூட, இயல்பாகவே அனைத்தும் அறிந்தவனும் நினைவுகள் தோன்றும் இடத்தில் நின்றபடி இருந்து அனைவருடைய நினைவுளையும் அறிபவனும் ஆகிய அயர்வறும் அமரர்கள் அதிபதி அறியும்போதே மறந்தவர்.

**வ்யாக்யானம்** - [9] (சரமோபாய பரரானார்க்கு) கீழ்த்தாமருளிச்செய்யக் கேட்ட ஸித்த ஸாதநத்திலே தத்பரரானவர்களுக்கு. (நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றொன்றில முள்ளித்தொழுமினென்று ப்ராப்ய ஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில்) அதாவது “நீணகரமதுவே மலர்ச்சோலைகள் சூழ் திருவாறன்விளை வாணனையாயிரந்தோள் துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம்”, “உள்ளித் தொழுமின் தொண்டீர்” என்று நிரதிசய போக்யமான திருவாறன்விளையாகிற மஹாநகரமே ப்ராப்யம்; அங்கெழுந்தருளி நிற்கிற உஷாநிருத்த கடகனானவனே அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகம். இவ்வர்த்தத்தில் மாறாட்டமில்லை ஆகையால் இவ்வர்த்தத்தில் ருசியுடையீர் புத்திபண்ணுங்கோள் என்று ப்ராப்யத்தினுடைய அவதி ததீயவிஷயமென்றும் ப்ராபகத்தினுடைய அவதி அர்ச்சாவதார ஸுலபனானவனே யென்று மிவ்வர்த்தத்தை தம்முடைய உகப்பாலே வெளியிட்டருளுகிறார் ஏழாம் பத்திலென்கை.

விளக்கம் - (சரமோபாய பரரானார்க்கு) - இதுவரை தான் அருளிச்செய்ததான ப்ரபத்தி குறித்துக் கேட்டு, அதில் ஈடுபட்டு நிற்பவர்களுக்கு, (நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றொன்றில) – திருவாய்மொழி (7-9-7) – நீணகரமதுவே மலர்ச்சோலைகள் சூழ் திருவாறன்விளை வாணனையாயிரந்தோள் துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம் -


**Email:**sridharan_book@yahoo.co.in

என்றும், (உள்ளித் தொழிமின் என்று) - திருவாய்மொழி (7-9-6) – உள்ளித் தொழுமின் தொண்டீர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எல்லையற்ற இனிமை பொருந்தியதான திருவாறன்விளை என்னும் உயர்ந்த இடமே அடையத்தக்க பேறாகும்; அங்கு எழுந்தருளியுள்ளவனும், உஷை மற்றும் அநிருத்தனைச் சேர்த்து வைத்தவனும் ஆகிய க்ருஷ்ணனே அந்தப் பேற்றை அடைவதற்கு வழியாவான். இந்தக் கருத்தில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஆகவே இந்தக் கருத்தில் ருசியைக் கொண்டவர்கள், உங்கள் புத்தியில் இதனை நிறுத்துங்கள் என்று. (ப்ராப்ய ஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில்) - பேற்றினுடைய எல்லை நிலம் என்பது அவனுடைய ஸம்பந்தம் கொண்ட விஷயம் என்றும், உபாயத்தின் எல்லை நிலம் என்பது அர்ச்சாவதாரமாக எளிதில் அடையலாம்படி நிற்கும் அவனே என்றும் உள்ள இந்தக் கருத்துக்களை, தன்னுடைய அளவற்ற மகிழ்வு காரணமாக ஏழாம் பத்தில் வெளியிட்டார்.

226. [1] தேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடு என்னும்படி சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதிளையுடைய ஸத்யகாமன் கொண்ட வ்யாவ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும்தீர, [2] தலைச்சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதா பலப்ரத்யுபகாரமாக வேந்தர் தலைவன் கந்யகா தாநம்போலே ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்ம லாபத்தாலே அடிவிளங்கிப் பணைத்து [3] ஜந்மபாசம்விட்டு ஆத்வாரம் ஆளுமாளாரென்று பரிந்து அநுரூபனோடே அமர்ந்து பிரிவில் க்ருபண தசையாகத் துவரும் ஸீதா குணங்களாலே ப்ரீதி வர்த்தித்து, [4] தித்திக்க வுள்ளே உறைந்து கண்டுகொண்டிருந்து அமாநுஷ போகமாக்கினவன் [5] மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக் காட்ட [6]தேஹாதிகளில் பரமாய் நின்று நினைக்கில் லக்ஷ்மீ துல்யமாய் அவர்க்கே குடிகளாம் பரதந்த்ர ஸ்வரூபத்தை யநுஸந்தித்தவர் [7] ஸ்வஸாதந ஸாத்யஸ்தர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்தென்று ப்ராப்யைக பரராக்குகிறார் எட்டாம்பத்தில்.

**அவதாரிகை** - எட்டாம் பத்தால் கீழ்ச்சொன்ன ஸர்வசக்தியோகத்தாலே நித்யமாகக் கல்பிதமா போக்யபோகோபகரண போகஸ்தாநங்களையுடையவனாகையாலே ஸத்யகாமனான ஸர்வேச்வரன், கீழ் தமக்குண்டான வாசிகமான வடிமையையும் விஸ்மரித்து தன்னனுபவாலாபத்தாலே கலங்கி, தன்னுடைய குணத்திலும் ஸ்வரூபத்திலும்

அதிசங்கை பண்ணி ஸம்ஸார தோஷாநுஸந்தாநத்தாலே அஞ்சின விவரை தரிப்பிக்கைக்காக பூர்வோக்தோபகாரத்தை ஸ்மரிப்பிக்க; அத்தாலே க்ருதஜ்ஞராய், அதுக்குப் பலமாக இவர் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ண அத்தாலே தான் பெறாப்பேறு பெற்றானாய் இவர்க்குண்டான ஆத்ம குணங்களாலே அதிப்ரீதனாய், இவர் திருவுள்ளத்திலேயிருந்து நிரதிசயமாக வநுபவிப்பித்து, இனி அயோக்யரென்றகலாதபடி ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை ப்ரகாசிப்பிக்க, அதினுடைய யாதாத்ம்யத்தை யநுஸந்தித்தவர் கீழ் தம்முடைய ப்ராப்யப்ராபகங்களைக் கேட்டு உகந்தவர்கள் ப்ராப்யமொன்றும் ப்ராபகமொன்றுமாய் இருகரையராகாதபடி ப்ராப்யமாகச் சொன்ன விஷயமொன்றிலுமே அவர்களைத் தத்பரராக்குகிறாரென்கிறார்.

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்ட அனைத்துவிதமான ஆற்றலுடன் கூடிய தன்மையால் எப்போதும் இருப்பதாக உரைக்கப்படுகின்ற இனிமையான பொருள், இன்பத்தை அனுபவிக்கவல்ல இடம் மற்றும் அதற்கான கருவிகள் ஆகியவற்றை உடையவன் என்பதால் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப்பெற்ற ஸர்வேச்வரன், ஆழ்வாரைப் பிழைக்க வைக்க எண்ணினான். அதாவது ஆழ்வார் தனக்கு ஏற்பட்டதான சொற்கள் மூலமாகச் செய்யவல்ல கைங்கர்யத்தையும் மறந்து, பகவத் அனுபவம் கிட்டவில்லை என்பதால் கலங்கி, பகவத் குணங்கள் மற்றும் அவன் ஸ்வரூபம் ஆகியவை குறித்து சந்தேகம் கொண்டு, இந்த ஸம்ஸார வாழ்வை எண்ணி அஞ்சினார். இப்படிப்பட்ட நிலையில் உள்ள இவரைக் காப்பாற்ற அவன் எண்ணினான். ஆகவே, தான் முன்பு ஆழ்வாருக்குச் செய்த உபகாரத்தை அவருக்கு ஞாபகப்படுத்தினான். அதன் விளைவாக ஆழ்வாரும் செய்ந்நன்றி அறிந்தவராக, அதன் பலனாகத் தனது ஆத்மாவை அவனிடம் சமர்ப்பணம் செய்தார். அதனைக் கண்ட ஸர்வேச்வரன், அதுவரை தான் பெறாத ஒரு பேற்றைப் பெற்றவன் போன்று நின்று, ஆழ்வாருடைய ஆத்ம குணங்கள் கண்டு மகிழ்ந்து, ஆழ்வாருடைய நெஞ்சத்தில் நின்று, மிகவும் உயர்ந்த அனுபவத்தை அவர் அடையும்படிச் செய்து, இனி ஆழ்வார் "தான் தாழ்ந்தவன்" என்று எண்ணிக் கொண்டு ஸர்வேச்வரனாகிய தன்னை விட்டு அகலாதபடி, ஆத்மஸ்வரூபத்தின் மேன்மையை அவருக்கு உணர்த்தினான். ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை உள்ளதுஉள்ளபடி அறிந்த ஆழ்வார், தான் இதுவரை உபதேசித்த பேறு மற்றும் அதனை அடைவதற்கான மார்க்கம் ஆகியவை குறித்துக் கேட்டு மகிழ்ந்தவர்கள், "பலன் ஒன்று, அதனைப் பெறும் வழி வேறு


**Email:**sridharan_book@yahoo.co.in

ஒன்று” என்று இரண்டு கரைகளாக அலையாதபடி, அடையவேண்டிய இலக்காக உரைத்த விஷயத்தில் மட்டுமே அவர்களை எட்டாம் பத்து மூலமாக நிலைநிறுத்துகிறார்.

**வ்யாக்யானம்** - [1] (தேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடென்னும்படி சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதிகளையுடைய ஸத்யகாமன்) “தேவிமாராவார் திருமகள் பூமியேவ மற்றமரராட் செய்வார் மேவியவுலகம் மூன்றவை யாட்சி”, “பணியாவமரர் பணிவும் பண்பும் தாமேயாம்”, “நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன்”, “நல்லகோட்பாட் டுலகங்கள் மூன்றினுள்ளும் தான் நிறைந்த” என்று லக்ஷ்மீ ப்ரப்ருதி திவ்யமஹிஷிகளுக்கு வல்லபனாய் நித்யஸூரிகள் ஏவிற்றுச் செய்ய அவர்கள் சேஷவ்ருத்திக்கும் ஜ்ஞாநாதிகளுக்கும் தானே விஷயமாய், தன்னோடே பொருந்தி பூர்ணமாய்க் கட்டளைப்பட்டிருக்கிற லோகத்ரயத்துக்கும் நிர்வாஹனா யிருக்குமென்னும்படி, கீழ்ச்சொன்ன தன் சக்தி தன்னாலே நித்யமாகக் கல்பிக்கப்பட்ட பத்நீ பரிஜந ஸ்தாந போக்யபோகோபகரணங்களை யுடையனாகையாலேஸத்யகாமனா யிருக்கிறவன். (கொண்ட வாக்வ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையுமச்சமும் தீர) “உம்மைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ள வைத்தோம்” என்று, தான் இவரைக் கொண்டு வாசிகமான வடிமையையும் விஸ்மரிக்கும்படியாக்கின, “காணுமாறருளா யென்றென்றே கலங்கி” என்று தன்னைக் கண்டால் கண்டனுபவிக்கப் பெறாமையால் வந்த கலக்கமும், அவ்வளவன்றியே “உமருகந்துகந்த” என்று தொடங்கி “அறிவொன்றும் சங்கிப்பன்” என்று தன்னுடைய ஆச்ரித பாரதந்த்ர்யமாகிய குணத்திலும்; “இறந்ததும் நீயே” என்று தொடங்கி “அறிவொன்றும் சங்கிப்பன்” என்று தன்னுடைய ஸர்வப்ரகாரித்வமாகிற ஸ்வரூபத்திலும் பண்ணின சங்கையும், “நன்றுமஞ்சுவன் நரகம் நானடைதல்” என்று ஸம்ஸார தோஷாநுஸந்தாநத்தால் வந்த அச்சமும் நிவ்ருத்தமாம்படியாக.

**விளக்கம்** - (தேவிமார்) - திருவாய்மொழி ( 8-1-1) – தேவிமார் ஆவார் திருமகள் பூமியேவ மற்றமரர் ஆட்செய்வார் மேவிய உலகம் மூன்று அவை ஆட்சி - என்றும், (பணியா) - திருவாய்மொழி (8-3-6) - பணியாவமரர் பணிவும் பண்பும் தாமேயாம் – என்றும், (நேர்பட்ட) - திருவாய்மொழி (8-9-11) - நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன் – என்றும், (நல்ல கோட்பாடு) - திருவாய்மொழி (8-10-11) – நல்லகோட்பாட்டு உலகங்கள் மூன்றினுள்ளும் தான் நிறைந்த – என்றும் கூறுவதற்கு ஏற்ப மஹாலக்ஷ்மி முதலான

பிராட்டிமார்களுக்கு நாயகனாய், தனது ஆணைக்கு ஏற்ப நடக்கின்ற நித்யஸூரிகளுடைய கைங்கர்யங்கள் மற்றும் ஞானம் ஆகியவற்றுக்கு விஷயமாய், தனது தன்னுடன் எப்போதும் பொருந்தியபடி உள்ளதும், முழுவதுமாகத் தனது ஆணைக்கு உட்பட்டபடி உள்ளதும் ஆகிய மூன்று லோகங்களுக்கும் நிர்வாஹகனாய் உள்ளவன் என்னும்படியாக. (சக்தியாலே) - எப்போதும் உள்ளனவாகக் கூறப்பட்ட. (பத்நீ பரிஜநாதிகளை உடைய) - பத்னிகள், நித்யஸூரிகள், பரமபதம், இனிமையான பொருள்கள், இனிமையான கருவிகள் போன்றவற்றை உடையவன் என்பதால். (ஸத்யகாமன்) - ஸத்யகாமனாக உள்ள ஸர்வேச்வரன். (கொண்ட வாக் வ்ருத்தியையும் மறப்பிக்கும்) - "உம்மைக் கொண்டு என்னைக் கவிபாடுவதற்காகவே உம்மை இங்கு யாம் வைத்தோம்", என்று ஆழ்வாரைக் கொண்டு சொற்கள் மூலமாகச் செய்யவல்ல கைங்கர்யத்தை அவர் செய்வதற்காக அவரை இங்கு நிறுத்தினான்; ஆனால் அதனையும் அவர் மறந்து போகும்படிச் செய்த. (கலக்கமும்) – திருவாய்மொழி (8-1-2) - காணுமாறருளா யென்றென்றே கலங்கி - என்பதற்கு ஏற்ப தன்னைக் கண்டு அனுபவிக்க இயலாத காரணத்தால் ஏற்பட்ட கலக்கமும். அது மட்டும் அல்லாமல், (சங்கையும்) – திருவாய்மொழி (8-1-4) – உமர் உகந்த - என்று தொடங்கி, திருவாய்மொழி (8-1-4) - அறிவு ஒன்றும் சங்கிப்பன் – என்பது முடிய உள்ள பாசுரம் மூலம் "அடியார்களுக்கு மட்டுமே வசப்பட்டு நிற்பவன்" என்ற தன்னுடைய குணத்திலும், திருவாய்மொழி (8-1-7) – இறந்ததும் நீயே – என்று தொடங்கி, திருவாய்மொழி (8-1-7) – அறிவு ஒன்றும் சங்கிப்பன் - என்று முடியும் பாசுரம் மூலம், "அனைத்தையும் தனது சரீரமாகக் கொண்டவன்" என்ற தன்னுடைய ஸ்வரூபத்திலும் ஏற்பட்ட சந்தேகமும். (அச்சமும்) - திருவாய்மொழி ( 8-1-9) - நன்றுமஞ்சுவன் நரகம் நானடைதல் - என்பதற்கு ஏற்ப இந்த ஸம்ஸாரத்தை எண்ணும்போது ஏற்பட்ட அச்சமும். (தீர) – விலகும்படியாக.

**வ்யாக்யானம்** - [2] (தலைச்சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதா பல ப்ரத்யுபகாரமாக) "தாள்களை யெனக்கே தலைத்தலைச் சிறப்பத் தந்த" என்னும்படி "மலரடிப்போதுகளென் னெஞ்சத் தெப்பொழுது மிருத்தி வணங்கப் பலரடியார் முன்பருளிய" என்று பராசராதிகள் முதலாழ்வார்க ளுண்டாயிருக்கத் தம்மைக் கொண்டு வாசிகமான அடிமையைக் கொண்ட பூர்வோபகாரத்தை ஸ்மரிப்பிக்க, அப்படி மிகச் சிறக்கும்படி யுபகரித்ததில் தமக்குண்டான க்ருதஜ்ஞதைக்கு பலம் ஸத்ருச ப்ரத்யுபகாரம் பண்ணுகையாகையாலே அதுக்கு ப்ரத்யுபகாரமாக. (வேந்தர் தலைவன் கந்யகா தாநம்போலே ஆரத்தழுவி யறவிலை செய்த

ஆத்மலாபத்தாலே) “உதவிக் கைம்மாறென்னுயிரென்ன வுற்றெண்ணில் அதுவுமற்றாங்கவன் தன்னது” என்று கீழ் ப்ரத்யுபகாரமாக ஆத்மாவை ஸமர்ப்பிக்கத் தேடி அதின் பகவதீயத்வாநுஸந்தாநத்தாலே நிவ்ருத்தரானமையுமறியாதபடி உபகார ஸ்ம்ருதியால் வந்த ஹர்ஷத்தாலே கலங்கி, “வேந்தர் தலைவன் சனகராசன்” என்கிறபடியே க்ஷத்ரியாக்ரேஸரனாய் ஜ்ஞாநாதிகனான ஜநகராஜன் மாஹேச்வரமான தநுர்ப்பங்கம் பண்ணின பெருமாளாண்பிள்ளைத்தனத்தைக் கண்ட ஹர்ஷத்தாலே கலங்கி, “விஷ்ணோச் சரீநபாயிநீ” என்கிறபடியே ததப்ருதக் ஸித்தையாய் “ராகவத்வே பவத் ஸீதா” என்று ததவதாராநுகூலமாக அவதரித்த பிராட்டியை, “இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ, ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா” என்று ஸமர்ப்பித்தாப்போலே, “பேருதவிக் கைம்மாறாத் தோள்களையாரத் தழுவி யென்னுயிரை யறவிலை செய்தனன்” என்று அமூர்த்தமா யிருக்கச் செய்தே உபகார ஸ்ம்ருதியாலே வந்த ஹர்ஷத்தாலே தாளும் தோளுமாய்ப் பணைத்துத் தோற்ற பாவநாப்ரகர்ஷத்தாலே யணைத்துக்கொண்டு அத்யாதரத்தோடே அநந்யார்ஹமாக ஸமர்ப்பித்த ஆத்ம வஸ்துவைப் பெறுகையாலே. (அதீவ விளங்கிப் பணைத்து) “அதீவ ராமச் சுசுபே” என்றும், “அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா” என்றும் அவளைப் பெற்று விளங்கினாப்போலே, “சோதி” என்றிவர் பேசும்படி இவர் தம்மதல்லாத தொன்றைத் தம்மதாக ப்ரமித்துக் கொடுத்தாப்போலே, அவனும் தன்னதல்லாத் தொன்றைப் பெற்றாப்போலே ப்ரமித்து அத்யுஜ்ஜ்வலனாய் “தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்க ளாயிரத்தாய் தாள்களாயிரத்தாய் பேர்களாயிரத்தாய்” என்னும்படி சதசாகமாகப் பணைத்து.

**விளக்கம்** - (தலைச்சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதா பல ப்ரத்யுபகாரமாக) – திருவாய்மொழி (7-10-5) – மலரடிப்போதுகள் என் நெஞ்சத்து எப்பொழுதும் இருத்தி வணங்கப் பலரடியார் முன்பருளிய - என்று கூறுவதற்கு ஏற்ப அவனைப் புகழ்வதற்கு பராசரர் போன்றவர்களும், முதலாழ்வார்களும் உள்ளபோதிலும் தன்னைக் கொண்டு “சொற்கள் மூலமாகச் செய்வதான கைங்கர்யத்தைச் செய்யும்படிச் செய்தான்” என்று ஸர்வேச்வரனாகிய தான் ஆழ்வாருக்குச் செய்த உபகாரத்தை அவர் எண்ணிப் பார்க்கும்படியாகச் செய்தான். அப்போது ஆழ்வார், திருவாய்மொழி (8-1-10) - தாள்களை யெனக்கே தலைத்தலைச் சிறப்பத் தந்த - என்பதற்கு ஏற்ப அதனை எண்ணிப் பார்த்தார். அவ்விதம் மிகவும் போற்றும்படியாக அவன் செய்த உபகாரத்திற்குத் தான்

செய்யவேண்டிய "செய்ந்நன்றி அறிதல்" என்பது, அத்தகைய உபகாரத்திற்கு ஏற்கும் விதத்தில் உள்ள கைம்மாறு ஆகும் என்பதால், அந்த உபகாரத்திற்கு ப்ரதி உபகாரமாக. (வேந்தர் தலைவன் கன்யகா தானம் போலே) - பெரியாழ்வார் திருமொழி (4-1-2) – வேந்தர் - என்பதற்கு ஏற்ப க்ஷத்ரியர்களின் தலைவனாகவும், ஞானிகளில் சிறந்தவனாகவும் உள்ள ஜனகராஜன் சிவனுடைய வில்லை உடைத்த இராமனுடைய ஆண்மைத்தன்மையைக் கண்ட மகிழ்ச்சியில் கலங்கி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-8-17) - விஷ்ணோச் சரீரநபாயிநீ - மஹாவிஷ்ணுவை விட்டு எப்போதும் பிரியாதவள் - என்பதற்கு ஏற்ப அவனை விட்டு அகலாதவளாகவும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-144) - ராகவத்வே பவத் ஸீதா - இராமனாக அவன் அவதரித்தபோது இவள் சீதையாக அவதரித்தாள் - என்பதற்கு ஏற்ப அத்தகைய இராமாவதாரத்திற்கு ஏற்றபடியாக அவதரித்தவளும் ஆகிய பெரியபிராட்டியை, இராமாயணம் பாலகாண்டம் (73-26) - இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ, ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா - எனது புத்ரியாக உள்ள இந்தச் சீதை உம்முடன் சேர்ந்து இருந்து அனைத்து தர்மங்களையும் செய்யவல்லவள் ஆவாள்; இவளை நீவிர் ஏற்கவேண்டும்; உம்முடைய திருக்கரங்களால் இவளுடைய கைகளை நீவிர் பிடிப்பீராக - என்பதற்கு ஏற்ப இராமனிடம் சமர்ப்பணம் செய்தான். அதே போன்று, (ஆரத் தழுவி அறவிலை செய்த ஆத்மலாபத்தாலே) – திருவாய்மொழி (7-9-10) – உதவிக் கைம்மாறென்னுயிரென்ன வுற்றெண்ணில் அதுவுமற்றாங்கவன் தன்னது - என்று ப்ரதி உபகாரமாகத் தனது ஆத்மாவை அவனுக்கு ஸமர்ப்பணம் செய்வதற்காகத் தேடினார். ஆனால் அப்போது, "இந்த ஆத்மாவும் அவனுடைய உடைமை அல்லவோ", என்று எண்ணம் ஏற்பட, அதனை அளிக்காமல் இருந்தார். ஆனால், தான் அவ்விதம் அவனுக்குத் தனது ஆத்மாவைச் சமர்ப்பணம் செய்யவில்லை என்பதைக்கூட அவன் அறியாமல், "செய்ந்நன்றி அறிதல்" காரணமாக ஏற்பட்ட மகிழ்ச்சியால் கலங்கி, திருவாய்மொழி (8-1-10) - பேருதவிக் கைம்மாறாத் தோள்களையாரத் தழுவி யென்னுயிரை யறவிலை செய்தனன் - என்பதற்கு ஏற்ப ஆத்மாவானது உருவம் அற்றதாக உள்ளபோதிலும், செய்ந்நன்றி அறிதலின் காரணமாக ஏற்பட்ட மட்டற்ற மகிழ்வால் அவன் செய்தது என்னவென்றால், தாளும் தோளுமாகப் பணைத்து நின்ற பாவனையின் மிகுதியால் அந்த ஆத்மாவை அணைத்துக் கொண்டு, மிகுந்த ஈடுபாட்டுடன் அவனுக்கே என்று அளித்த ஆத்மாவை அவன் பெறுவதன் காரணமாக. (அதீவ விளங்கிப் பணைத்து) – இராமாயணம் - அதீவ ராமச் சுசுபே – இராமன் நேர்த்தியாக விளங்கினான் – என்றும், இராமாயணம் - அப்ரமேயம் ஹி

தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா – சீதை யாருடைய பத்னியாக உள்ளாளோ அவனுடைய பராக்ரமம் யாராலும் அளவிட இயலாதது – என்றும் கூறுவதற்கு ஏற்ப, சீதையை மனைவியாகப் பெற்ற இராமன் விளங்கியது போன்று, திருவாய்மொழி (8-1-10) – சோதி – என்று இவர் உரைக்கும்படியாக, இவர் தன்னுடையது அல்லாத ஆத்மாவை "தன்னுடையது" என்று மயங்கிக் கொடுத்தபோது, ஸர்வேச்வரனும் தன்னுடையது அல்லாத ஒன்றைப் பெற்றது போன்று மயங்கி, மிகுந்த ஒளியுடன் கூடியவனாக நின்று, திருவாய்மொழி (8-1-10) - தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய் பேர்களாயிரத்தாய் – என்பதற்கு ஏற்ப பல நூறு கிளைகளாகப் பணைத்து.

**வ்யாக்யானம்** - [3] (ஜந்மபாசம் விட்டு ஆத்வாரமாளுமாளாரென்று பரிந்து அநுரூபனோடே யமர்ந்து பிரிவில் க்ருபண தசையாகத் துவரும் ஸீதா குணங்களாலே ப்ரீதி வர்த்தித்து) ஸ்ரீஜநகராஜன் திருமகள் பெருமாளைக் கைப்பிடித்தபின்பு அவரளவில் ப்ரேமத்தாலே ஜந்மபூமியான ஸ்ரீமிதிலையை நினையாதாப்போலே, இவரும், "பாதமடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டு" என்று திருவடிகளைக் கிட்டுகையில் ஸங்கத்தாலே புறம்புண்டான வலிய ஸங்கங்களை நிச்சேஷமாகவிட்டு; "ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ" என்று அவள் பெருமாளுடையவழகைக் கண்டு மங்களாசாஸநம் பண்ணினாப்போலே, இவரும், "ஆளுமாளாராழியுஞ் சங்கும் சுமப்பார்தாம்" என்று தமக்குப் பரிகைக்கு ஓராளுமாளுகிறிலர், மலைசுமந்தாற்போலே திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் தரிப்பார் தாமாயிரா நின்றது என்று அவன் ஸௌகுமார்யத்தைக் கண்டு பரிந்து; அவள் பெருமாளுடைய சௌர்யாதிகளை நினைத்து பயம் கெட்டு, "துல்யசீல" இத்யாதிப்படியே தனக்கநுரூபரான இவரோடே பொருந்தி யநுபவித்தாப்போலே, இவரும், "வார்கடாவருவி" என்று தொடங்கி அவன் சௌர்யாதிகளை அநுஸந்தித்து நிர்ப்பயராய், "அமர்ந்த மாயோனை முக்கணம்மானை நான்முகனை யமர்ந்தேனே" என்று அவனோடே பொருந்தியநுபவித்து, விச்லேஷ தசையில் அவள், "ஹிமஹதநலிநீவ நஷ்டசோபா வ்யஸந பரம்பரயாதி பீட்யமாநா, ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதா க்ருபணாம் தசாம் ப்ரபந்நா" என்று நிர்க்க்ருணரு மிரங்க வேண்டும்படியான தசையை ப்ராப்தையானாப்போலே, இவரும், "காணவாரா யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து" என்று அவனைக் காண வாசைப்பட்டு திக்குக்கள்தோறும் பார்ப்பது கூப்பிடுவதாகையாலே கண்ணும் வாயும் நீர்ப்பசையறும்படி

யாகையால், ஜநககுலஸுந்தரியின் குணங்களெல்லாம் இவர்பக்கலிலே காண்கையாலே "குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதிர்ப்பூயோப்ப்ய வர்த்தத" என்று குணதர்சநத்தாலே அவள்பக்கல் ப்ரீதி வர்த்தித்தாப்போலே, இவரளவில் ப்ரீதி வர்த்தித்து.

**விளக்கம்** - (ஜந்மபாசம் விட்டு) ஸ்ரீஜனகராஜனின் திருமகளான சீதை இராமனுடைய திருக்கரத்தைப் பற்றிய பின்னர், அவனிடம் கொண்ட அளவற்ற ப்ரேமை காரணமாக தனது பிறந்த இடமான மிதிலையை நினைக்கவில்லை; அது போன்றே நம்மாழ்வாரும், திருவாய்மொழி (8-2-11) - பாதமடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டு – என்பதற்கு ஏற்ப திருவடிகளைக் கிட்டுவதன் காரணமாக ஏற்பட்ட பக்தியின் விளைவாக மற்ற விஷயங்களில் ஏற்பட்ட வலிமையான சம்பந்தங்களை அடியுடன் கைவிட்டு. (ஆத்வாரம் ஆளுமாளாரென்று பரிந்து) - இராமாயணம் அயோத்யாகாண்டம் (16-21) – ஆத்வாரம் அநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ - சீதை மங்களங்களை உரைத்தபடி வாசல் படி முடிய இராமனைத் தொடந்தாள் - என்பதற்கு எற்ப இராமனுடைய திருமேனி அழகைக் கண்டு அவனுக்கு மங்களாசாசனம் செய்தாள்; அதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (8-3-3) – ஆளுமாளாராழியுஞ் சங்கும் சுமப்பார்தாம் - என்பதற்கு ஏற்ப, "தன்னிடம் பரிந்து நிற்பதற்கு யாரும் இல்லாதவனாக உள்ளான். மலையைச் சுமப்பது போன்று திருவாழி மற்றும் பாஞ்சஜன்யத்தைத் தானே சுமந்தபடி நிற்கிறானே", என்று அவனுடைய மென்மையைக் கண்டு பரிந்து. (அநுரூபனோடே அமர்ந்து) - சீதை இராமனுடைய வீரம் போன்ற அனைத்தையும் எண்ணி பயம் அகன்றவளாக, ஸுந்தரகாண்டம் (16-5) – துல்ய சீல - தகுந்த சீலம், வயது, நடத்தை, குலம், இலக்கணங்கள் ஆகியவற்றைக் கொண்டவளாக உள்ள சீதைக்கு இராமன் ஏற்றவன் ஆவான். இராமனுக்கு இந்தச் சீதை ஏற்றவள் ஆவாள் – என்று கூறுவதற்கு ஏற்ப சீதை தனக்கு ஏற்றவனாகிய இராமனுடன கூடி நின்று அனுபவித்தாள்; அதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (8-4-1) – வார்கடாவருவி - என்று தொடங்கி அவனுடைய வீரம் முதலானவற்றை எண்ணியவுடன் தனது பயம் முதலானவை நீங்கப் பெற்றவராக இருந்து. (பிரிவில் க்ருபண தசையாகத் துவரும்) - இராமனை விட்டுப் பிரிந்த நிலையில் சீதை ஸுந்தரகாண்டம் (16-30) – ஹிமஹதநலிநீவ நஷ்டசோபா வ்யஸந பரம்பரயாதி பீட்யமாநா, ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநகஸுதா க்ருபணாம் தசாம் ப்ரபந்நா - பனியால் பீடிக்கப்பட்ட தாமரைப்பொய்கை போன்ற தனது அழகை இழந்தவளாக, மிகுந்த துயரம் நிறைந்தவளாக, தனது துணையைப் பரிந்த சக்ரவாகப்பறவை போன்று


**Email:**sridharan_book@yahoo.co.in

வருந்தத்தக்க நிலையை அடைந்தாள் - என்பதற்கு ஏற்ப கருணை அற்றவர்கள் கூட இரக்கம் கொள்ளும்படியான நிலையை அடைந்தாள்; அதே போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழி (8-5-2) – காணவாராய் என்று என்று கண்ணும் வாயும் துவர்ந்து - என்பதற்கு ஏற்ப அவனைக் காணவேண்டும் என்ற ஆசை கொண்டு அனைத்து திசைகளிலும் பார்ப்பது மற்றும் அழைப்பது போன்றவற்றையும் செய்வதால் கண்ணும் வாயும் நீர்ப்பசை இன்றிப் போவதால். (ஸீதா குணங்களால் ப்ரீதி வர்த்தித்து) – ஜனககுலத்தின் சுந்தரியான சீதையின் குணங்கள் அனைத்தும் இவரிடம் காணப்படுகின்றன என்றாகிறது. ஆகவே பாலகாண்டம் (77-25) - குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதிர்ப்பூயோபப்ய வர்த்தத - உன்னதமான குணங்கள், திருமேனியின் அழகு, உயர்ந்தகுலப் பண்புகள் போன்றவற்றால் ப்ரேமை மேன்மேலும் வளர்ந்து - என்பதற்கு ஏற்ப சீதையின் உயர்ந்த குணங்களைக் கண்டதால் இராமனுக்கு அவளிடம் ப்ரேமையானது பன்மடங்கு வளர்ந்தது; அதே போன்று நம்மாழ்வாரிடம் அவனுக்கு ப்ரேமை வளர்ந்து.

**வ்யாக்யானம்** - [4] (தித்திக்க வுள்ளேயுறைந்து) "தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:" என்று எப்போதும் அவள் நெஞ்சுக்கினிதாம்படி யிருந்தாப்போலே, "உள்ளுந்தோறும் தித்திப்பான்", "ஒருக்கடுத்துள்ளேயுறையும் பிரான் கண்டீர்" என்று அநுஸந்திக்குந்தோறும் நிரதிசய போக்யனாய்க் கொண்டு இவர் திருவுள்ளத்திலே நித்யவாஸம் பண்ணி. (கண்டு கொண்டிருந்து அமாநுஷ போகமாக்கினவன்) "இருந்தான் கண்டுகொண்டு" என்று தரித்திரன் தந லாபமுண்டானால் பார்த்துக் கொண்டிருக்குமாபோலே இவரைப் பெற்ற ப்ரீதியாலே வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்து; "ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே, புஞ்ஜாநா அமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ" என்று விச்லேஷதசையிலும் வ்ருத்த கீர்த்தநம் பண்ணி தரிக்கலாம்படி அவளை, மாநுஷமன்றிக்கே திவ்யமாயிருந்துள்ள போகங்களை புஜிப்பித்தாப்போலே, இவரையும், "தரும் தானருள் தானினி யானறியேன்", "செவ்வாய் முறுவலோடெனது துள்ளத்திருந்த அவ்வாயன்றி யானறியேன் மற்றருளே" என்று வித்தராய்ப் பேசும்படி அப்ராக்ருத போகங்களை புஜிப்பித்தவன்.

**விளக்கம்** - (தித்திக்க உள்ளே உறைந்து) - பாலகாண்டம் (77-25) - தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித: - சீதையின் உள்ளத்தில் இராமன் எப்போதும் உள்ளான் – என்பதற்கு ஏற்ப,

எப்போதும் சீதையின் நெஞ்சத்திற்கு இனிமையாக உள்ளதற்குவேண்டி இராமன் அங்கேயே இருந்தான்; அதே போன்று நம்மாழ்வார் திருவாய்மொழி (8-6-3) - உள்ளுந்தோறும் தித்திப்பான் – என்றும், திருவாய்மொழி (8-6-2) – ஒருக்கடுத்துள்ளேயுறையும் பிரான் கண்டீர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவர் இவனை எண்ணும்போதெல்லாம் இவன் எல்லையற்ற இனிமையானவனாக அவருடைய திருவுள்ளத்தில் வசித்தபடி. (கண்டு கொண்டிருந்து) – திருவாய்மொழி (8-7-2) – இருந்தான் கண்டு கொண்டு - என்பதற்கு ஏற்ப வறியவன் ஒருவன் பெரும் புதையலை அடைந்தால், அதனையே பார்த்தபடி உள்ளது போன்று, இவரைப் பெற்ற ப்ரீதியாலே வைத்த கண் மாறாமல் இவரையே பார்த்தபடி. (அமாநுஷ போகம் ஆக்கினவன்) – ஸுந்தரகாண்டம் (33-17) – ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே, புஞ்ஜாநா அமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ - நான் அயோத்தியில் இராமனுடைய அரண்மனையில் பன்னிரண்டு ஆண்டுகள், மனிதர்களுக்கு கிட்டாத தேவலோக இன்பதை அனுபவித்தபடி அனைத்து விருப்பங்களும் நிறைவேறப் பெற்றவளாக இருந்தேன் - என்று இராமனைப் பிரிந்திருந்த காலத்தில் முன்பு நடந்தவற்றை உரைத்தபடியே தரித்துக் கொண்டிருந்த சீதையை, மனித இன்பம் மட்டும் அல்லாமல் தேவலோக இன்பங்களையும் அனுபவிக்கும்படி இராமன் செய்தான்; அதே போன்று நம்மாழ்வாரையும் திருவாய்மொழி (8-7-2) - தரும் தானருள் தான் இனியான் அறியேன் - என்றும், திருவாய்மொழி (8-7-7) - செவ்வாய் முறுவலோடு எனதுள்ளத்திருந்த அவ்வாயன்றி யானறியேன் மற்றருளே – என்றும் மகிழ்ந்து உரைக்கும்படி தேவலோக இன்பங்களை அனுபவிக்கும்படிச் செய்தவன்.

**வ்யாக்யானம்** - [5] (மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினைநோய் மறுவலிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக் காட்ட) “மருள்தானீதோ”, “பின்னையார்க்கவன் தன்னைக் கொடுக்கும்”, “அருள்தானினி யானறியேன்” என்கிற உகப்புச் செல்லா நிற்கச்செய்தே, “சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தார்” என்று தம் சிறுமையை அநுஸந்தித்தவாறே (1) வளவேழுலகிலே “களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வாவென்பன் அருவினையேன்”, “வணங்கினாலுன் பெருமை மாசூணாதோ”, “அடியேன் காண்பானலற்றுவனிதனில் மிக்கோரயர்வுண்டே” என்றும்; (2) பொருமாநீள் படையிலே “சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்” என்றும்; (3) அந்தாமத்தன்பிலே “அல்லாவியுள் கலந்த”, “என் முடிவு காணாதே என்னுள் கலந்தானை”

என்றும் இப்படி மூன்றிடத்திலே வந்து பரிஹ்ருதமானதாகையாலே மூன்று தத்துக்கு இவர் பிழைத்த அயோக்யதாநுஸந்தான வ்யாதி மறுவலிட்டு இன்னம் இவர் அகலில் செய்வதென் னென்றஞ்சி, இனியிவர்தாம் அகலுகிறது வந்தேறியான அசித் ஸம்பந்தத்தையிட்டு "இது நமக்கு அநர்ஹம்" என்றிறே, இதினுடைய யதாவஸ்தித வேஷத்தைக் கண்டால் அகலவொண்ணாதே என்று பார்த்து அது மறுவலிடாதபடியாக, "நமக்கு கௌஸ்துபம் போலவும், ஸ்ரீஸ்தநம் போலவும் தேஜஸ்கரமாய் போக்யமுமாயிருக்கும் அப்ருதக் ஸித்த விசேஷணமாய்க் காணுமும்முடைய ஆத்ம ஸ்வரூபமிருப்ப"தென்று சிறிதாக இவர் அநுஸந்தித்த ஆத்ம வஸ்துவின் வைலக்ஷண்யத்தை, "யானுந்தானா யொழிந்தான்", "தேனும் பாலும் கன்னலுமமுதுமாகித் தித்தித்து" என்று தனக்கு அப்ருதக் ஸித்த ப்ரகாரமாகவும் நிரதிசய போக்யமாகவும் அநுஸந்திக்கும்படி காட்டிக் கொடுக்க.

**விளக்கம்** - (மூன்று தத்துக்குப் பிழைத்த) – திருவாய்மொழி (1-5) – வலவேழ் உலகு - என்ற திருவாய்மொழியில், திருவாய்மொழி (1-5-1) - களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வாவென்பன் அருவினையேன் - என்றும், திருவாய்மொழி (1-5-2) – வணங்கினால் உன் பெருமை மாசூணாதோ – என்றும், திருவாய்மொழி (1-5-7) - அடியேன் காண்பான் அலற்றுவன் இதனில் மிக்கோர் அயர்வுண்டே – என்றும்; திருவாய்மொழி (1-10) – பொருமாநீள் படை - என்ற திருவாய்மொழியில், திருவாய்மொழி (1-10-7) – சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன் - என்றும்; திருவாய்மொழி (2-5) – அந்தாமத்து அன்பு – என்ற திருவாய்மொழியில், திருவாய்மொழி (2-5-5) - அல்லாவியுள் கலந்த - என்றும், திருவாய்மொழி (2-5-8) - என் முடிவு காணாதே என்னுள் கலந்தானை - என்றும் இவ்விதமாக உள்ள மூன்று இடங்களில் இவருக்கு ஏற்பட்டதான மூன்று கண்டங்களையும் ஸர்வேச்வரன் நீக்கினான்; இவ்விதம் நீங்கப் பெற்ற இவருக்கு. (அருவினைநோய் மறுவல் இடாமல்) – திருவாய்மொழி (8-7-3) - மருள்தானீதோ – என்றும், திருவாய்மொழி (8-7-6) – பின்னையார்க்கவன் தன்னைக் கொடுக்கும் - என்றும், திருவாய்மொழி (8-7-3) - அருள்தானினி யானறியேன் - என்றும் கூறுவவதற்கு ஏற்ப, உகப்புக்குச் செல்லா நிற்கச் செய்தபோதிலும்; திருவாய்மொழி (8-7-8) - சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தார் – என்று இவர் தம்முடைய சிறுமையை எண்ணியபடி தன்னை விட்டு மீண்டும் அகன்று சென்றால் என்ன செய்வது என்று அச்சம் கொண்டான். ஆகவே ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில், "இனி இவர் நம்மை விட்டு அகலுதல் என்பது

இவருக்கு வந்து சேர்ந்ததான சரீர ஸம்பந்தத்தை எண்ணி, இத்தகைய சரீர ஸம்பந்தம் ஏற்புடையது அல்ல என்று தீர்மானிப்பதால் அல்லவோ நடைபெறும்? ஆனால், இவர் ஆத்மாவின் உண்மையை அறிந்தால் நம்மை விட்டு அகலமாட்டார் அல்லவோ?", என்று தீர்மானித்தான். ஆகவே "நான் சிறியவன்" என்ற அந்தச் சிந்தை அவருக்கு மீண்டும் ஏற்படாதபடி, (சிறியேன் என்றதின் பெருமையைக் காட்ட) - "நமக்குக் கௌஸ்துபம் போன்று ஒளியை வீசுவதாகவும், மஹாலக்ஷ்மியின் ஸ்தனங்கள் போன்று மிகவும் இனியதாகவும், பிரிக்க இயலாத விசேஷணம் போன்று உம்முடைய ஆத்மாவின் ஸ்வரூபம் உள்ளது" என்று மிகவும் சிறியதாக இவர் எண்ணிய ஆத்மாவின் மேன்மையை, திருவாய்மொழி (8-8-4) – யானுந்தானா யொழிந்தான் – என்றும், திருவாய்மொழி (4-3-10) – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னை விட்டுப் பிரிக்க இயலாத வஸ்துவாகவும், எல்லையற்ற எனிமையாகவும் உள்ளதாக இவர் எண்ணும்படிக் காண்பித்துக் கொடுத்தான்.

**வ்யாக்யானம்** - [6] (தேஹாதிகளில் பரமாய், நின்று நினைக்கில் லக்ஷ்மீ துல்யமாய் அவர்க்கே குடிகளாம் பரதந்த்ரஸ்வரூபத்தை அநுஸந்தித்தவர்) "சென்று சென்று பரம்பரமாய்" என்கிறபடியே தேஹேந்த்ரியங்களில் வ்யாவ்ருத்தமாய் ஜ்ஞாநாநந்த மயமாய், "நினையும் நீர்மையதன்றிவட்கிது நின்று நினைக்கப்புக்கால்", "அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்", "அன்றி மற்றோருபாயமென்" என்று யதாநிரூபணம் பண்ணில் பிராட்டியோபாதி அநந்யார்ஹமாய், அவ்வளவுமன்றிக்கே, "மாகாயம் பூக்கொள்மேனி நான்குதோள் பொன்னாழிக்கை யென்னம்மான் நீக்கமில்லா வடியார்தம்மடியா ரடியாரடியா ரெங்கோக்களவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடே ஊழிதோறூழி வாய்க்கதமியேற்கு" என்று விலக்ஷண விக்ரஹ யுக்தனான ஸர்வேச்வரனை விச்லேஷிக்க க்ஷமரல்லாத பாகவதர்களுடைய சேஷத்வத்தி னெல்லையிலே நிற்கிறவர்கள் எனக்கு சேஷிகள், இருகரையரன்றிக்கே அவர்களுக்கே ஸபரிகரமாக அநந்யார்ஹனாய்ச் செல்லும் நல்ல கோட்பாடு கால தத்வமுள்ளதனையும் எனக்கு ஸித்திக்கவேண்டும், என்று இப்படி ததீய சேஷத்வ காஷ்டையளவும் செல்ல நிற்கும்படி பரதந்த்ரமான ஸ்வரூபத்தையநுஸந்தித்தவர்.

**விளக்கம்** - (தேஹாதிகளில் பரமாய்) - திருவாய்மொழி (8-8-5) – சென்று சென்று பரம்பரமாய் - என்பதற்கு ஏற்ப சரீரம், இந்த்ரியங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், ஞானம் மற்றும் ஆனந்தமயமாக உள்ளதாகவும். (நின்று) -

திருவாய்மொழி (8-9-5) - நினையும் நீர்மை அதன்றிவட்கிது நின்று நினைக்கப்புக்கால் – என்றும், திருவாய்மொழி (8-9-1) - அருமாயன் பேரன்றிப் பேச்சிலள் – என்றும், திருவாய்மொழி (8-9-10) – அன்றி மற்றோருபாயமென் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உண்மையை உள்ளதுஉள்ளபடி நிரூபித்துப் பார்த்தால் பெரியபிராட்டியைப் போன்றே அவளுக்கு மட்டுமே உரியதாகவும். (அவர்க்கே குடிகளாம் பரதந்த்ரஸ்வரூபத்தை அநுஸந்தித்தவர்) – அது மட்டும் அல்லாமல், திருவாய்மொழி (8-10-10) - மாகாயம் பூக்கொள்மேனி நான்குதோள் பொன்னாழிக்கை யென்னம்மான் நீக்கமில்லா வடியார்தம்மடியா ரடியாரடியா ரெங்கோக்களவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடே ஊழிதோறூழி வாய்க்கதமியேற்கு - என்பதற்கு ஏற்ப மேன்மையான திருமேனி கொண்டவனாகிய ஸர்வேச்வரனைப் பிரிந்திருக்க இயலாதபடி உள்ளவர்களான பாகவதர்களுடைய அடிமைத்தனத்தின் எல்லையில் நிற்பவர்களே எனது எஜமானர்கள்; பகவத் விஷயம் மற்றும் பாகவத விஷயம் என்ற இரண்டையும் பற்றி நிற்பவர்கள் அல்லாமல், “எனது எஜமானர்கள்” என்று மேலே கூறப்பட்டவர்களுக்கு மட்டுமே அடிமையாக நிற்கும் விதத்தில் உள்ள நல்ல நிலைமையானது, காலம் என்ற தத்வம் உள்ளவரையில் எனக்குக் கிடைக்கவேண்டும் என்று இவ்விதமாக அவனுடைய அடியார்களுக்கு அடிமை என்பதான எல்லை முடியச் சென்று நிற்கும்படியக அவர்கள் வசப்பட்டுள்ள தனது ஆத்மஸ்வரூபத்தை எண்ணியபடி உரைத்தவர்.

**வ்யாக்யானம்** - [7] (ஸ்வஸாதநஸாத்யஸ்தர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொள்மினுள்ளத்தென்று ப்ராப்யைகபரராக்குகிறார் எட்டாம்பத்தில்) அதாவது தம்முடைய ஸாதநஸாத்யங்களே தங்களுக்கு மென்றிருக்கிறவர்கள், தத் விஷயம் ப்ராபகமும் ததீயவிஷயம் ப்ராப்யமுமாய் இருகரையராகாதபடி “திருக்கடித்தானத்தை ஏத்த நில்லா குறிக்கொள்மினிடரே”, “கோவிந்தன் மண் விண் முழுதுமளந்த வொண்டாமரை மண்ணவர் தாம் தொழ வானவர் தாம்வந்து நண்ணு திருக்கடித்தான நகரே இடர்கெடவுள்ளத்துக் கொள்மின்” என்று திருக்கடித்தானத்தை ஸ்தோத்ரம் பண்ணினவளவிலே துக்கங்களெல்லாம் நிலைகுலைந்துபோம், இத்தைக் குறிக்கொள்ளுங்கோள், ஸர்வேச்வரனுடைய ஸர்வ ஸுலபமான திருவடிகளை உபயவிபூதியிலுள்ளாரும் வந்தனுபவிக்கும்படியான திருக்கடித்தான நகரை உங்கள் ஸமஸ்த துக்கங்களும் போம்படி நெஞ்சிலே கொண்டநுஸந்தியுங்கோளென்று கீழில் பத்தில் ப்ராப்யமாக உபதேசித்த அர்ச்சாவதார

பூமியே துக்கநிவர்த்தகமென்கையாலே, ப்ராப்யமான விஷயமே ப்ராபகமென்று தர்சிப்பித்து ப்ராப்யவிஷயமொன்றிலுமே தத் பரராக்குகிறார் எட்டாம் பத்திலென்கை.

**விளக்கம்** - (ஸ்வஸாதந ஸாத்யஸ்தர்) - அதாவது ஆழ்வாருக்கு உபாயம் மற்றும் உபேயம் எவையாக உள்ளனவோ அவற்றையே தங்களுக்கும் ஏற்ற உபாயமாகக் கொண்டுள்ளவர்கள். (இருகரையர் ஆகாமல்) – பகவத் விஷயத்தை உபாயமாகவும், அவனுடைய அடியார்கள் விஷயத்தை உபேயமாகவும் கொண்டு “இரு கரையர்கள்” என்று ஆகாதபடி, (மண்ணவரும் வானவரும் நண்ணும் அத்தையே குறிக்கொள்மின் உள்ளத்து என்று) - திருவாய்மொழி (8-6-6) - திருக்கடித்தானத்தை ஏத்த நில்லா குறிக்கொள்மினிடரே - என்றும், திருவாய்மொழி (8-6-7) – கோவிந்தன் மண் விண் முழுதுமளந்த வொண்டாமரை மண்ணவர் தாம் தொழ வானவர் தாம்வந்து நண்ணு திருக்கடித்தான நகரே இடர்கெடவுள்ளத்துக் கொள்மின் – என்றும் கூறுவதற்கு ஏற்ப திருக்கடித்தானத்தைத் துதித்த உடனேயே அனைத்து துக்கங்களும் நிலைதடுமாறிப் போகும்; இதனை மனதில் நிறுத்துங்கள்; ஸர்வேச்வரனுடையதும், அனைவருக்கும் எளிதானதும் ஆகிய இரண்டு திருவடிகளை, மண்ணுலகம் மற்றும் விண்ணுலகம் ஆகிய இரண்டிலும் உள்ள அனைவரும் வந்து அனுபவிக்கும்படியாக உள்ள திருக்கடித்தானத்தில் கண்டு கொண்டு, அனைத்து துக்கங்களும் நீங்கும்விதமாக உங்கள் உள்ளத்தில் எப்போதும் நினைத்து நிற்பீர்களாக என்று. (ப்ராப்ய ஏக பரர் ஆக்குகிறார் எட்டாம் பத்தில்) - ஏழாம் பத்தில் அடையப்படவேண்டிய பேறாக உபதேசித்த அர்ச்சாவதார பூமி என்பதே அனைத்துவிதமான துக்கங்களையும் போக்குவதாகும் என்பதால், அடையவேண்டியதான அந்தப் பொருளே அடைய வைக்கின்ற வழியாகவும் உள்ளது என்று உரைத்து, உபேய விஷயத்தில் மட்டுமே ஈடுபடும்படியாக எட்டாம் பத்தில் அருளிச்செய்கிறார் என்று கருத்து.

227. [1] எண்டிசையும் அகல்ஞாலம் எங்குமளிக்கின்ற ஆலின்மேலென்னும்படி நித்யபோகபாத லீலோபகரணத்தின் லயாதிகளைப் போக்கும் ஆபத்ஸகன் [2] ஆருயிரென்னப்படுத்தின ஆத்ம தர்சந பலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுகவிட்டு [3] ஏகமெண்ணிக் காணக் கருதி எழ நண்ணி நினைதொறு முருகியலற்றிக் கவையில் மனமின்றிப் பதினாலாண்டு பத்து மாஸமொரு பகல் பொறுத்தவர்கள் ஒரு மாஸ தின ஸந்த்யையில் படுமது க்ஷணத்திலேயாகவிரங்குகிற த்வரைக்கீடாக [4]

 Email:sridharan_book@yahoo.co.in

இனிப்பத்திலொன்று தசம தசையிலே பேறென்று நாட்கடலாகத் தம்பிக் கிட்டதாகாமல் நாளை வதுவைபோலே நாளிடப் பெற்றவர், [5] இம்மடவுலகர் கண்டதோடு பட்ட அபாந்தவாரக்ஷகாபோக்யாஸுகாநுபாய ப்ரதிஸம்பந்தியைக் காட்டி [6] மற்றொன்று கண்ணனல்லாலென்கிற வைகல் வாழ்தலான ஸித்தோபாயம், [7] அதில் துர்ப்பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலைமாலை விண்டு தேனை வாடா மலரிட்டு அன்பராம் ஸாங்கபக்தி, அதில் அசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி, [8]அதில் அசக்தர்க்கு உச்சாரண மாத்ரம், ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தெண்டனென்று கீதாசார்யனைப் போலே அதிகாராநுகுணம் நெறியெல்லா முரைக்கிறார் ஒன்பதாம்பத்தில்.

**அவதாரிகை** - ஒன்பதாம் பத்தால், இப்படி அவாப்த ஸமஸ்த காமனாகையாலே இத்தலையில் ஒன்றையும் அபேக்ஷியாமல் ப்ரளயாத்யாபத்துக்களிலே உதவி ரக்ஷிக்கும் ஆபத்ஸகனான ஸர்வேச்வரன், கீழ் ப்ரகாசிப்பித்த ஆத்ம தர்சநத்துக்குப் பலம், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை யனுபவிக்கையாகையாலே, அவ்வனுபவத்தி லுண்டான த்வரையாலே க்ஷணகாலம் விலம்பம் பொறுக்கமாட்டாமல் ஆர்த்தரான தமக்கு, ஆரப்த சரீராவஸாநத்திலே பேறாகக்கடவது என்று நாளவதியிட்டுக் கொடுக்கப் பெற்றவர், கீழ் தம்முபதேசத்தால் திருந்தினவர்களையொழிய அல்லாதாரையும் விடமாட்டாத பரமக்ருபையாலே யதாதிகாரம் ஸர்வோபாயங்களையும் அருளிச் செய்கிறாரென்கிறார்.

**விளக்கம்** - இவ்விதம் தன்னால் விரும்பப்படும் அனைத்து நிறைவேறப் பெற்றவன் எனப்தால், நம்மிடமிருந்து எதனையும் எதிர்பாராமல் , ப்ரளயம் முதலான ஆபத்துக்களில் நமக்கு உதவி செய்து காப்பாற்றுகின்ற துணையாகிய ஸர்வேச்வரன், இவருக்கு ஆத்ம ஸ்வரூபத்தை மேலே கூடியபடி உணர்த்தினான். அத்தகைய உண்மையை அறிந்ததன் பலன் என்பது "ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றதான பேற்றினை அனுபவித்தல் ஆகும்" என்று காரணத்தால், அத்தகைய அனுபவித்தால் தனக்கு உண்டான பரபரப்பின் விளைவாக, ஒரு நொடியும் காலம் தாழ்த்துதல் என்பதைப் பொறுக்க இயலாமல் துடித்தபடி நின்ற ஆழ்வாராகிய தனக்கு ஸர்வேச்வ்ரன், "இந்தச் சரீரத்தின் முடிவில் பேறு நிச்சயம் கிட்டும்", என்று உறுதியுடன் குறித்துக் கொடுத்தான். அத்தகைய வாக்கைப் பெற்ற ஆழ்வார், தம்முடைய உபதேசங்கள் கேட்டுத் திருந்தியவர்கள் தவிர உள்ள மற்றவர்களையும்


**Email:**sridharan_book@yahoo.co.in

கைவிட இயலாத தனது உயர்ந்த க்ருபை காரணமாக, அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப அனைத்து உபாயங்களையும் ஒன்பதாம் பத்தில் அருளிச்செய்கிறார் என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - [1] (எண்டிசையுமகல் ஞாலமெங்கு மளிக்கின்ற ஆலின் மேலென்னும்படி நித்யபோகபாதலீலோபகரணத்தின் லயாதிகளைப் போக்குமாபத்ஸகன்) "எண்டிசையும் கீழும் மேலும் முற்றவுமுண்டபிரான்", "அவனே யகல் ஞாலம் படைத்திடந்தான் அவனே அஃதுண்டுமிழ்ந்தானளந்தான்", "அகலிடம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந் தெங்கு மளிக்கின்ற வாயன்", "ஆலின் மேலாலமர்ந்தான்" என்று ஸகல லோகங்களையும் ப்ரளயங் கொள்ளாமல் ஏற்கவே திருவயிற்றிலே வைத்து நோக்கி அழிந்தவற்றை மீண்டு முண்டாக்கியும், ஹிரண்யாக்ஷனாலே தள்ளுண்டு அண்டபித்தியிலே சேர்ந்த பூமியை ஒட்டுவிடுவித்தெடுத்தும், மஹாபலி பலாத்கரித்தாளுகிற தசையிலே எல்லை நடந்து மீட்டும், இப்படி ப்ரளயாத்யாபத்துகளிலே உதவி ரக்ஷித்தவனென்னும்படி கீழ்ச்சொன்ன ஸத்ய காமத்வத்தால் வந்த நைரபேக்ஷ்யம் தோற்ற இத்தலையில் அபேக்ஷையற ப்ரத்யுபகாரம் நினையாமல் வரையாதே தன் பேறாக நோவுபடுமளவுகளிலேயுதவி, "பாதோஸ்ய விச்வாபூதாநி, த்ரிபாதாஸ்யாம்ருதம் திவி" என்கிறபடியே, அம்ருத சப்தத்தாலே சொல்லும்படி நித்ய போகமான த்ரிபாத் விபூதியைப் பற்ற அல்பமாகையாலே பாத சப்தத்தால் சொல்லப்பட்ட லீலோபகரணமான இவ்விபூதியின் லயாதிகளைப் போக்குமாபத்ஸகனானவன்.

**விளக்கம்** – (எண்டிசையும்) – திருவாய்மொழி (9-1-1) – எண்டிசையும் கீழும் மேலும் முற்றவுமுண்டபிரான் - என்றும், (அகல் ஞானம்) - திருவாய்மொழி (9-3-2) – அவனே யகல் ஞாலம் படைத்திடந்தான் அவனே அஃதுண்டுமிழ்ந்தானளந்தான் - என்றும், (எங்கும் அளிக்கின்ற) – திருவாய்மொழி (9-9-2) - அகலிடம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந் தெங்கு மளிக்கின்ற வாயன் - என்றும், (ஆலின் மேல் என்னும்படி) – திருவாய்மொழி (9-10-1) – ஆலின் மேலாலமர்ந்தான் – என்றும் கூறுவதற்கு எற்ப, ப்ரளயமானது அனைத்து லோகங்களையும் அழிந்துவிடாமல், முன்பே அவற்றை எடுத்துத் தனது திருவயிற்றில் வைத்துப் பாதுகாத்து, ப்ரளயம் முடிந்தவுடன் அழிந்த அனைத்தையும் மீண்டும் படைத்தும்; ஹிரண்யாக்ஷனால் அடியில் தள்ளப்பட்டு அண்டபித்தியின் அடியில் சென்று சேர்ந்த பூமியை அங்கிருந்து மீட்டு எடுத்தும்; மஹாபலி அனைத்தையும் தனது வலிமையால் ஆக்கிரமத்து ஆண்டபடி இருந்த நிலையில் அங்கு நடந்து சென்று மீட்டு எடுத்தும்; இவ்விதம் ப்ரளயம் போன்ற ஆபத்துக்கள் அனைத்திலிருந்தும் உதவி செய்து

 Email:sridharan_book@yahoo.co.in

காப்பாற்றியவன் என்று கூறப்பட்டதான, ஸத்யகாமத்வம் மூலம் ஏற்பட்டதான "எதனையும் விரும்பாமல் இருத்தல் " என்பது வெளிப்படும்படியாக நம்மிடமிருந்து எந்த ப்ரதிபலனையும் எதிர்பாராமல், தனது பேறாகவே தான் சிரமப்படும் விதத்தில் உதவிகள் செய்து. (நித்ய) – புருஷஸூக்தம் - பாதோஸ்ய விச்வாபூதாநி, த்ரிபாதாஸ்யாம்ருதம் திவி - பரமபுருஷனுக்கு இவை அனைத்தும் கால்பதம் மட்டுமே, பரமபதமானது முக்கால் பாதம் – என்று கூறுவதற்கு ஏற்ப "அம்ருதம்" என்ற சொல்லால் கூறும்படியாக அழிவற்ற இன்பமான பரமபதத்தை ஒப்பு நோக்கும்போது, இந்தப் பூமியானது மிகவும் சிறிது என்பதால், "பாதம்" என்ற சொல்லால் கூறப்பட்டதும், தனது விளையாட்டிற்கு ஏற்றபடி உள்ளதும் ஆகிய விளையாட்டுக் கருவி போன்றுள்ள இந்த உலகத்தினுடைய லயித்தல் போன்ற அனைத்தையும் நீக்குகின்ற "ஆபத்து காலத்தில் துணை நிற்பவனாகிய ஸர்வேச்வரன்".

**வ்யாக்யானம் -** [2] (ஆருயிரென்னப்படுத்தின ஆத்மதர்சநபலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுகவிட்டு) "இருத்தும் வியந்தி"ல் தம்மோடு கலந்த கலவியை ஸ்மரிப்பிக்க வித்தராய்ப் பேசுகிறவளவில் அவன் தட்டுமாறி நின்று பரிமாறின சீலத்திலே யீடுபட்டு "ஆருயிர் பட்டதெனதுயிர் பட்டது" என்று என்னாத்மாபட்டது நித்யாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகள் ஸ்வரூபந்தான் பட்டதோ வென்னும்படியாகத் தான் மேல்விழுந்தனுபவித்த ஆத்ம வைலக்ஷண்யத்தை கீழில் பத்தில் யாதாவாகக் காட்டக் கண்டதுக்குப் பலம் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை யநுபவிக்கையாகையாலே, "சோதி வாய் திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காய்", "பாத பங்கயமே தலைக்கணியாய்", "உன் தாமரை மங்கையும் நீயுமிடங்கொள் மூவுலகுந் தொழ விருந்தருளாய்", "கனிவாய் சிவப்ப நீ காணவாராய்", "நின்பன்னிலா முத்தம் தவழ்கதிர் முறுவல் செய்து நின் திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்" என்று திருப்பவளத்தைத் திறந்து ஒரு வார்த்தையருளிச் செய்யவேணும், திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேணும், திருவடிகளை என் தலையிலே வைத்தருள வேணும், தேவரீரும் பிராட்டியும் கூடவெழுந்தருளியிருக்கிற விருப்பை யெனக்குக் காட்டியருளவேணும், என் முன்னே நாலடி உலாவியருளவேணும், அநுகூல தர்சநத்தில் பிறக்கும் ஸ்மிதம் காணவேணும் என்று இப்படி அநுபவ பரம்பரையை யாசைப்பட்டு க்ரமப்ராப்தி பற்றாமையாலே, "கூவுதல் வருதல் செய்யாய்" என்று நிரதிசய போக்யமான உன் திருவடிகளிலே நானும்


Email:sridharan_book@yahoo.co.in

வந்தடிமை செய்யும்படி என்னை யங்கே யழைத்தல், நீ இங்கே வருதல் செய்தருளவேணுமென்று இப்படி முடுகவிட்டு.

**விளக்கம்** – (ஆருயிரென்னப்படுத்தின ஆத்ம தர்சந பல) – திருவாய்மொழி (8-7-1) – இருத்தும் வியந்த - என்ற திருவாய்மொழியில் தன்னுடன் ஆழ்வார் கலந்த சேர்க்கையை நினைவுபடுத்தியபோது, அதிலேயே ஈடுபட்டபடி நின்று உரைத்தார். அப்போது அவன் முறை மாறி நின்று கலந்த அவனது சீலகுணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக, திருவாய்மொழி (9-6-9) - ஆருயிர் பட்டதெனதுயிர் பட்டது - என்றுள்ள பாசுரத்தில், "எனது ஆத்மா பட்ட பாடுகளை, அவனை எப்போதும் அனுபவித்தபடி உள்ள நித்யஸூரிகள் பட்டனரோ" என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தன் மீது விழுந்து அனுபவித்த தனது ஆத்மாவின் தன்மையை கடந்த பத்தில் உள்ளது உள்ளபடி வெளிப்படுத்தியபோது அதனை உணர்ந்ததற்கான பலன் என்பது ஆத்மாவிற்கு ஏற்றதான பேற்றை அனுபவித்தல் என்ற காரணத்தால், (அநுபவ பரம்பரையை) - திருவாய்மொழி (9-2-1) - சோதி வாய் திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காய் - என்றும், திருவாய்மொழி (4-2-2) - பாத பங்கயமே தலைக்கணியாய் – என்றும், திருவாய்மொழி (9-2-3) – உன் தாமரை மங்கையும் நீயுமிடங்கொள் மூவுலகுந் தொழ விருந்தருளாய் – என்றும், திருவாய்மொழி (9-2-4) - கனிவாய் சிவப்ப நீ காணவாராய் – என்றும், திருவாய்மொழி (9-2-5) - நின்பன்னிலா முத்தம் தவழ்கதிர் முறுவல் செய்து நின் திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய் - என்றும் உள்ள பல பாசுரங்களில் கூறுவதற்கு ஏற்ப, "திருப்பவளத்தைத் திறந்து ஒரு செல்லாவது கூறவேண்டும், திருக்கண்கள் திறந்து என்னைக் குளிர நோக்கி அருளவேண்டும், உனது திருவடிகளை எனது தலை மீது வைத்தருள வேண்டும், நீயும் உனது துணைவியாரும் உள்ள இருப்பை எனக்குக் காண்பித்தருள வேண்டும், உனக்கு வேண்டியவர்களைக் காணும்போது உனது திருமுகத்தில் ஏற்படுகின்ற புன்முறுவலை நான் காணவேண்டும்" என்பதாக உள்ள பலவிதமான அனுபவங்களை அடைய ஆசை கொண்டு, "அவை அனைத்தும் அந்தந்த காலங்களில் நடக்கும்" என்று பொறுமையுடன் இருப்பதற்கு இயலாத காரணத்தால். (கூவுதல் வருதல் என்று முடுகவிட்டு) – திருவாய்மொழி (9-2-10) - கூவுதல் வருதல் செய்யாய் – என்று எல்லையற்ற இனிமையைக் கொண்ட உனது திருவடிகளில் நானும் வந்து கைங்கர்யம் செய்ய வேண்டும்படியாக என்னை அங்கே அழைக்கவேண்டும் அல்லது நீ இங்கே வருதல் வேண்டும் என்று உரைத்து.

**வ்யாக்யானம்** - [3] (ஏகமெண்ணிக் காணக்கருதி யெழ நண்ணி நினைதொறு முருகியலற்றிக் கவையில் மனமின்றி) “மாக வைகுந்தம் காண்பதற்கென் மனமேகமெண்ணு மிராப் பகலின்றியே” என்று அவன் நித்யவாஸம் பண்ணுகிற பரமபதத்தைக் காண்கையிலே ஸர்வ காலமுமேகரூபமாக மநோரதித்து, “காணக்கருது மென் கண்ணே” என்று பெரியபிராட்டியாரோடும் திவ்யாயுதங்களோடும் திவ்ய விக்ரஹத்தோடும் கூடியிருக்கிறவனைக் காணவேணுமென்றாசைப்பட்டு, “எழ நண்ணி நாமும் நம்வான நாடனோடொன்றினோம்” என்று ஸ்மாரக பதார்த்த தர்சநத்திலே நோவுபடுகையாலே முடிந்து போகையிலே யொருப்பட்டு, “திருக்காட்கரை மருவிய மாயன் தன் மாயம் நினைதொறு நெஞ்சம் உருகுமால்” என்று அவனநுபவ தசையில் பரிமாறின சீலாதிகளை நினைக்குந்தோறும் அநுபவோபகரணமான நெஞ்சு சிதிலமாய்க் கரைந்து. “தமரோடங் குறைவார்க்குத் தக்கிலமே கேளீரே” என்று தூத ப்ரேஷண முகத்தாலே, “கிளிமொழியா ளலற்றிய சொல்” என்று ஆற்றாமையாலே அக்ரமமாகக் கூப்பிட்டு “கவையில் மனமின்றிக் கண்ணீர்கள் கலுழ்வன்” என்று இரு தலைத்த நெஞ்சின்றிக்கே ஏகாக்ர சித்தராய், (பதினாலாண்டு பத்துமாஸ மொருபகல் பொறுத்தவர்கள் ஒருமாஸ திந ஸந்த்யையில் படுமது க்ஷணத்திலேயாக விரங்குகிற த்வரைக்கீடாக) பெருமாளைப் பிரிந்து பதினாலாண்டு பொறுத்திருந்த ஸ்ரீபரதாழ்வான், “பூர்ணே சதுர்த்தச வர்ஷே” என்ற அவதி கழிந்த ஒருநாளில் பட்ட க்லேசமும், பத்து மாஸம் பொறுத்திருந்த பிராட்டி, “மாஸாதூர்த்வம் ந ஜீவிஷ்யே” என்று திருவடியுடன் சொல்லிவிட்ட வநந்தரம் அவ்வொரு மாஸத்தில் பட்ட க்லேசமும், க்ருஷ்ணன் பசு மேய்க்கப் போக ஒரு பகலெல்லாம் பொறுத்திருந்த ஸ்ரீகோபிமார், அவன் பசுக்களின் பிற்குழையிலே வாராநிற்க, முற்கொழுந்தில் காணாமையாலே ஒரு ஸந்த்யையில் பட்ட க்லேசமுமெல்லாம் ஒரு க்ஷணத்திலேயாம்படி, “அவனை விட்டகல்வதற்கே யிரங்கி” என்றீடுபடுகிற த்வரைக்கீடாக.

**விளக்கம்** - (ஏகம் எண்ணி) – திருவாய்மொழி (9-3-7) - மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனமேகமெண்ணும் இராப் பகலின்றியே - என்று அவன் எப்போதும் வசிக்கின்ற பரமபதத்தைக் காணும்போது அனைத்து காலங்களிலும் ஒரே தன்மையாக எண்ணியபடி. (காணக்கருதி) திருவாய்மொழி (9-4-1) – காணக்கருதும் என் கண்ணே – என்று பெரியபிராட்டியாருடனும், திவ்யமான ஆயுதங்களுடனும், திவ்யமான திருமேனியுடனும்

கூடியுள்ள அவனைக் காணவேண்டும் என்று விருப்பம் கொண்டு. (எழ நண்ணி) - திருவாய்மொழி (9-5-10) – எழ நண்ணி நாமும் நம்வான நாடனோடு ஒன்றினோம் - என்று ஸர்வேச்வரனை ஞாபகப்படுத்துகின்ற பொருள்களைக் காணும்போது துக்கம் அடைத்து, “முடிந்து போகவேண்டும்” என்ற சிந்தனையில் நின்று, (நினைதொறும் உருகி) - திருவாய்மொழி (9-6-1) - திருக்காட்கரை மருவிய மாயன் தன் மாயம் நினைதொறு நெஞ்சம் உருகுமால் - என்று அவனை முன்பு அனுபவித்த காலங்களில் அவன் செய்த சீலம் முதலானவற்றை எண்ணும்போது, அத்தகைய அனுபவத்தை அடைந்ததாகிய நெஞ்சம் சிதிலம் அடைய கரைந்து. (அலற்றி) - திருவாய்மொழி (9-7-2) - தமரோடங் குறைவார்க்குத் தக்கிலமே கேளீரே - என்று தூது அனுப்பும் முகத்தால், திருவாய்மொழி (9-7-11) – கிளிமொழியாள் அலற்றிய சொல் - என்று ஆற்றாமை காரணமாக முறை தடுமாறி அழைத்து. (சுவையில் மனம் இன்றி) - திருவாய்மொழி (9-8-3) - சுவையில் மனமின்றிக் கண்ணீர்கள் கலுழ்வன் - என்று இரண்டுவிதமாகச் சிந்திக்கும் நெஞ்சம் அல்லாமல் ஒரே சிந்தனை கொண்டவராக. (பதினாலாண்டு பொறுத்தவர் ஒரு தினத்தில் படுமது) – இராமனைப் பிரித்து பதினான்கு ஆண்டுகள் பொறுமையுடன் காத்திருந்த ஸ்ரீபரதழ்வான், இராமாயணம் யுத்தகாண்டம் (127-1) - பூர்ணே சதுர்த்தச வர்ஷே – பதினான்கு ஆண்டுகள் நிறைவடைந்தபோது - என்று எல்லை கடந்து விட்ட ஒரே நாளில் அடைந்த துக்கமும். (பத்துமாஸம் பொறுத்தவர் ஒரு மாஸத்தில் படுமது) - இராமனின் வருகைக்காக இலங்கையில் பத்துமாதம் பொறுமையுடன் காத்திருந்த சீதை, ஸுந்தரகாண்டம் (40-10) – மாஸாத் ஊர்த்வம் ந ஜீவிஷ்யே - ஒரு மாதத்திற்கு மேல் நான் பிழைத்திருக்கமாட்டேன் - என்று அனுமனிடம் கூறிய பின்னர் அந்த ஒரு மாதத்தில் அனுபவித்த துக்கமும். (ஒரு பகல் பொறுத்தவர்கள் ஒரு ஸந்த்யையில் படுமது) – க்ருஷ்ணன் பசுக்களை மேய்ப்பதற்காகச் சென்றுபோது ஒருநாள் முழுவதும் அவன் வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருந்த கோபிகைகள், அவன் பசுக்களின் பின்னே வரும்போது, அவன் அந்தக் கூட்டத்தின் முன்பு காணாமல் உள்ளதல் அந்த ஒரு ஸந்த்யாகாலத்தில் அடைந்த துக்கமும். (க்ஷணத்திலேயாக இரங்குகிற த்வரைக்கு ஈடாக) – இந்தத் துக்கங்கள் அனைத்தும் ஒரு நொடிப்பொழுதே ஆகும் என்று கூறலாம்படியாக, திருவாய்மொழி (9-9-11) – அவனை விட்டகல்வதற்கே யிரங்கி - என்று ஈடுபடுகிற தவிப்பிற்குத் தகுதியாக.

**வ்யாக்யானம்** - [4] (இனிப் பத்திலொன்று தசமதசையிலே பேறென்று) “நயந ப்ரீதி: ப்ரதமம் சிந்தாபோகஸ் ததோநு ஸங்கல்ப:, நித்ராச்சேதஸ் தநுதா விஷய விரக்திஸ்

த்ரபாநாச:, உந்மாதோ மூர்ச்சா ம்ருதி ரித்யேதா: ஸ்மரதசா தசைவ ஸ்யு:" என்றும், "ப்ரதமஸ் த்வபிலாஷ: ஸ்யாத் த்விதீயம் சிந்தநம் பவேத், அநுஸ்ம்ருதிஸ் த்ருதீயந்து சதுர்த்தம் குணகீர்த்தனம் உத்யோக: பஞ்சம: ப்ரோக்த: ப்ரலாப: ஷஷ்ட உச்யதே உந்மாதஸ் ஸப்தமோ ஜ்ஞேய: அஷ்டமோ வ்யாதிருச்யதே நவமே ஜடாதசைவ தசமம் மரணம் ததா" என்றும் சொல்லுகிறபடியே காமுகராயிருப்பார்க்கு தசமாவஸ்தையிலே மரணமாமாப்போலே, நம்பக்கல் பரபக்தியுக்தரான உமக்கும் நம்மைப் பெறாவிடில் முடியும்படியான பரமபக்திதசை பத்தாம் பத்திலே பிறக்கத் தேடுகிறது. ஆகையால் கீழ்ச்சொன்ன விளம்பமில்லை, இனியுள்ளது பத்திலொன்று தசமதசையான மரணாவஸ்த்தையிலே பேறென்று. (நாட்கடலாகத் தம்பிக்கிட்டதாகாமல் நாளை வதுவைபோலே நாளிடப் பெற்றவர்) "நாட்கடலைக் கழிமினே" என்கிறபடியே விரஹ வ்யஸநத்தாலே ஒருநாள் ஒருகடல்போலே துஸ்தரமாம்படி, "பூர்ணே சதுர்த்தசே வர்ஷே" என்று தம்பியான பரதாழ்வானுக்கு நெடுக நாளிட்டுக் கொடுத்தாப்போலே யாகாமே, "நாளை வதுவை மணமென்று நாளிட்டு" என்று இன்றென்னில் வெள்ளக்கேடாம், சிலநாள் கழித்தென்னில் வறட்கேடாமென்று நினைத்து, நாளையென்று நாய்ச்சியார்க்கு நாளிட்டாப்போலே "மரணமானால்" என்று ஆரப்த சரீராவஸாநத்திலே பேறாக அவன்தானே நாளிட்டுக் கொடுக்கப் பெற்று ஹ்ருஷ்டரானவர்,

**விளக்கம்** - (இனி பத்தில் ஒன்று தசம தசையில் பேறு என்று) – நயந ப்ரீதி: ப்ரதமம் சிந்தாபோகஸ் ததோநு ஸங்கல்ப:, நித்ராச்சேதஸ் தநுதா விஷய விரக்திஸ் த்ரபாநாச:, உந்மாதோ மூர்ச்சா ம்ருதி ரித்யேதா: ஸ்மரதசா தசைவ ஸ்யு: - பார்த்த காரணத்தால் முதலில் எற்படும் ப்ரீதி, தொடர்ந்து சிந்தனை, தொடர்ந்து அதே சிந்தனை, உறக்கம் இன்மை, இளைத்துப் போதல், மற்ற பொருள்களில் வெறுப்பு, வெட்கம் இன்மை, பித்துப் பிடித்த நிலை, மயக்கம் மற்றும் இறப்பு ஆகியவை மன்மதனுடைய பத்து நிலைகள் ஆகும்- என்றும், ப்ரதமஸ் த்வபிலாஷ: ஸ்யாத் த்விதீயம் சிந்தநம் பவேத், அநுஸ்ம்ருதிஸ் த்ருதீயந்து சதுர்த்தம் குணகீர்த்தனம் உத்யோக: பஞ்சம: ப்ரோக்த: ப்ரலாப: ஷஷ்ட உச்யதே உந்மாதஸ் ஸப்தமோ ஜ்ஞேய: அஷ்டமோ வ்யாதிருச்யதே நவமே ஜடாதசைவ தசமம் மரணம் ததா - தொடக்கத்தில் ஆசை ஏற்படும், இரண்டாவதாக நினைவுகள் நீடிக்கும், மூன்றாவதாக அதே எண்ணங்கள் தொடரும், நான்காவதாக அவளுடைய குணங்கள் குறித்துப் பிதற்றுதல், ஐந்தாவதாக முயற்சி ஏற்படும், ஆறாவது பிதற்றுதல்,

ஏழாவது மனநிலை தடுமாற்றம் ஏற்படும், எட்டாவது மனநோய் ஏற்படும், ஒன்பதவது எந்தச் செயலும் அற்றிருத்தல் ஏற்படும், பத்தாவது இறத்தல் - என்றும் கூறுவதற்கு ஏற்ப காமத்தின் பிடியில் அகப்பட்டவர்களுக்கு பத்தாவது நிலையில் மரணம் ஏற்படுகிறது. ஸர்வேச்வரனாகிய நம்மிடம் ப்ரபத்தியைக் கொண்ட உமக்கு நம்மை வந்தடையாவிடில் முடிந்து போகும்படியாக உள்ள பரமபக்தி நிலை என்பது பத்தாம்பத்தில் பிறக்கும்படியாக உள்ளது; ஆகையால் இதுவரை கூறப்பட்டதாகிய காலதாமதம் என்பது இல்லை; இனி உமக்கு பத்து நிலைகளில் ஒன்றாகிய இறுதி நிலையாகிய மரணநிலை ஏற்படவுள்ள பேறு என்று. (நாள் கடலாகத் தம்பிக்கு இட்டது போல் ஆகாமல்) – திருவாய்மொழி (1-6-7) - நாட்கடலைக் கழிமினே – என்பதற்கு ஏற்ப பிரிவுத் துன்பம் காரணமாக ஒருநாள் என்பது ஒரு கடல் போன்று கடக்க இயலாதபடி, யுத்தகாண்டம் (127-1) - பூர்ணே சதுர்த்தசே வர்ஷே - பதினான்கு ஆண்டுகள் முழுவதுமாகக் கழிந்த பின்னர் - என்று தம்பியாக பரதாழ்வானுக்கு நீண்டநாள் குறித்துக் கொடுத்தது போன்று அல்லாமல், நாச்சியார் திருமொழி (6-2) – நாளை வதுவை மணம் என்று நாளிட்டு - என்று கூறுவதற்கு ஏற்ப, “இன்று என்றால் வெள்ளத்தால் ஏற்படும் கேடு, சில நாட்கள் என்றால் வறட்சியால் ஏற்படும் கேடு” என்று எண்ணி, “நாளை” என நாய்ச்சியாருக்கு நாள் அளித்தது போன்று, திருவாய்மொழி (9-10-5) – மரணம் ஆனால் – என்று கூறுவதற்கு ஏற்ப இந்தச் சரீரத்தின் முடிவில் பேறாக அவன் தானாகவே முன்வந்து நாள் குறித்துக் கொடுத்ததன் காரணமாக மகிழ்வு கொண்டவர்.

**வ்யாக்யானம்** - [5] (இம்மடவுலகர் கண்டதோடுபட்ட அபாந்தவாரக்ஷகா போக்யாஸுகாநுபாய ப்ரதிஸம்பந்தியைக்காட்டி) சரமோபாயோபேய பர்யந்தமாகத் தாமருளிச்செய்த ஹிதவசநம் கேட்டுத் திருந்தினவர்களை யொழிய அல்லாதாரையும் விடமாட்டாத தம்முடைய க்ருபையாலே “இம்மடவுலகர்” என்று ஸம்ஸாரத்தி லறிவு கேடரானவர்களுக்கு, “கொண்ட பெண்டிர்” என்று தொடங்கி ஸந்நிதியிலே ஸ்நேஹிக்குமதொழியக் காணாதபோது ஸ்நேஹமொன்றுமின்றிக்கே யிருக்கிற பார்யாபுத்ராதிகள் பந்துக்களன்று, ப்ரளயாபத்ஸகனானவனே பரமபந்துவென்றும், “துணையும் சார்வும்”, “பொருள் கையுண்டாய்”, “அரணமாவர்” என்ற பாட்டுக்களாலே அவனை யொழிந்தார் தாங்களுபகாரரைப் போலே ப்ரயோஜநமுள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி ஆபத்து வந்தவாறே கண்ணற்று உபேக்ஷிப்பர்கள்; ஆகையால் அவர்கள் ரக்ஷகரல்லர்; தன்னுடைய ரக்ஷணத்திலே அதிசங்கை பண்ணினாரையும் விச்வஸிப்பித்து ரக்ஷிக்குமவனாய் அவதார முகத்தாலே ஸுலபனாய்

ரக்ஷணாநுரூபமான குணங்களையுமுடையனானவவனை யொழிய வேறு ரக்ஷகரில்லையென்றும், “சதிரமென்று தம்மைத்தாமே சம்மதித்து” என்று தொடங்கி தங்களுக்கு போக்யைகளாக ஸம்பாதித்த ஸ்த்ரீகள் ஆபத்து வந்தவாறே உபேக்ஷிப்பர்கள், ஏக ப்ரகாரமாக ஸ்நிக்தனாயிருப்பானவனே, ஆனபின்பு அவர்கள் போக்யரல்லர், அவனே நிரதிசய போக்யனென்றும், “இல்லை கண்டீரின்பம்” என்று தொடங்கி, துக்கங்களிலே சிலவற்றை ஸுகமென்று ப்ரமிக்கிற வித்தனை போக்கி அவனை யொழிய ஸுகரூபமாயிருப்பதொன்றில்லை யென்றும், “யாதுமில்லை மிக்கதனில்” என்று தொடங்கி அவனையொழிய வேறொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள் பண்டைநிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப் போவர்கள். ஆன பின்பு அவனை யொழிய உபாயமில்லையென்றும் இப்படி அவனை யொழிந்தாருடைய அபந்துத்வத்தையும் அரக்ஷகத்வத்தையும் அபோக்யதையையும் அஸுகத்வத்தையும் அநுபாயத்வத்தையும், அதுக்கு ப்ரதிகோடியானவவனுடைய பரமபந்துத்வத்தையும் நிருபாதிகரக்ஷகத்வத்தையும் நிரதிசய போக்யதையையும் ஸுகரூபத்வத்தையும் நிரபேக்ஷோபாயத்வத்தையும் தர்சிப்பித்து இம்மடவுலகருடைய அபாந்தவாதிகள் ப்ரதிஸம்பந்தியை அவர்களுக்குக் காட்டி என்று வாக்ய யோஜநாக்ரமம்.

**விளக்கம்** - (இம்மடவுலகர்) - சரம உபாயம் மற்றும் சரம உபேயம் முடிய தான் அருளிச்செய்த நன்மை பயக்கும் விஷயங்களைக் கேட்டுத் திருத்தியவர்கள் தவிர மற்றவர்களையும் கைவிட இயாலாதபடி உள்ள தனது உயர்ந்த கருணையால், திருவாய்மொழி (9-2-7) – இம்மடவுலகர் - என்று இந்த ஸம்ஸாரத்தில் அறிவிழந்து நிற்பவர்களுக்கு. (கண்டதோடுபட்ட அபாந்தவ ப்ரதிஸம்பந்தியைக் காட்டி) - திருவாய்மொழி (9-1-1) – கொண்ட பெண்டிர் – என்று தொடங்கி, கண்களால் காணப்படும்விதமாக அருகில் உள்ளபோது அன்பு நிறைந்தவர்களாக நின்று, காணாதபோது எந்தவிதமான அன்பும் இன்றி உள்ள மனைவி, புத்திரர்கள் போன்று அல்லாமல் ப்ரளயத்தில் ஏற்பட்ட ஆபத்து காலத்தில் உதவிய அவனே உயர்ந்த உறவினன் என்றும். (அரக்ஷக ப்ரதிஸம்பந்தியைக் காட்டி) - திருவாய்மொழி ( 9-1-2) – துணையும் சார்வும் - என்றும், திருவாய்மொழி (9-1-3) – பொருள் கையுண்டாய் - என்றும், திருவாய்மொழி (9-1-4) – அரணமாவர் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலமாக அவனைத் தவிர உள்ள மற்றவர்கள் நமக்கு உதவி செய்பவர்கள் போன்று பயன் ஏற்படும்போது மட்டும் உறவினர்களாக நின்று, ஆபத்து வந்தபோது திரும்பிக் கூட நோக்காமல் வெறுப்பவர்கள் ஆவர். ஆகவே அவர்கள் காப்பாற்றுபவர்கள் அல்லர். ஆனால்

தன்னுடைய காக்கும் தன்மையில் சந்தேகம் கொண்டவர்களையும் கூட அவர்களுடைய சந்தேகத்தை நீக்கி, தன்னை நம்பும்விதமாகச் செய்து காப்பாற்றுபவனாகவும், அவதாரங்கள் காரணமாக மிகவும் எளிதாக அடையப்படுபவனாகவும், காப்பாற்றுவதற்குத் தேவையான அனைத்து குணங்களையும் கொண்டவனாகவும் உள்ள அவன் அல்லாமல் காப்பாற்றுபவர்கள் வேறு யாரும் இல்லை என்றும். (அபோக்ய ப்ரதிஸம்பந்தியைக் காட்டி) - திருவாய்மொழி (9-1-5) - சதிரமென்று தம்மைத்தாமே சம்மதித்து - என்று தொடங்கி, தங்களுக்கு இன்பத்தை அளிப்பவர்களாக எண்ணப்பட்ட பெண்கள், ஆபத்து காலத்தில் விட்டுவிடுவார்கள்; ஒரே போன்று அன்பு கொண்டவன் அவன் மட்டுமே ஆவான்; ஆகவே இந்தப் பெண்கள் இனியவர்கள் அல்லர்; அவனே அளவற்ற இனிமை கொண்டவன் ஆவான் என்றும். (அஸுக ப்ரதிஸம்பந்தியைக் காட்டி) - திருவாய்மொழி (9-1-6) – இல்லை கண்டீர் இன்பம் - என்று தொடங்கி துக்கங்கள் சிலவற்றையும் இன்பம் என்று எண்ணி மயங்குவதை விலக்கி, அவனைத் தவிர இன்பமயமாக இருப்பது வேறு எதுவும் இல்லை என்றும். (அநுபாய ப்ரதிஸம்பந்தியைக் காட்டி) - திருவாய்மொழி (9-1-9) - யாதும் இல்லை மிக்கதனில் – என்று தொடங்கி, அவன் அல்லாமல் வேறு அனைத்தையும் தங்களைக் காப்பாற்றும் பொருளாகப் பற்றி நிற்பவர்கள், தங்களுடைய முன்பு நிலையும் தாழ்ந்து விழுவார்கள்; ஆகவே அவனைத் தவிர வேறு உபாயம் ஏதும் இல்லை என்றும் உரைத்தார். அதாவது இப்படியாக அவனைத் தவிர உள்ளவர்கள் யாரும் உறவினர்களாக இல்லாத தன்மை, காப்பாற்றுபவர்கள் அல்லர் என்னும் தன்மை, இன்பம் அளிப்பவர்கள் அல்லர் என்னும் தன்மை, சுகம் அளிப்பவர்கள் அல்லர் என்ற தன்மை, உபயமாக உள்ளவர்கள் அல்லர் என்ற தன்மை ஆகிய பலவற்றையும் உரைத்தார்; இதற்கு மாறாக உள்ள அவனுடைய உறவினனாதல், காப்பாற்றுபவனாதல், இனியவனாக இருத்தல், ஸுகம் அளிப்பவனாக இருத்தல், உபாயமாக இருத்தல் போன்றவற்றை உணர்த்தினார்.

**வ்யாக்யானம்** - [6] (மற்றொன்று கண்ணனல்லாலென்கிற வைகல் வாழ்தலான ஸித்தோபாயம்) "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும் சிற்ற வேண்டா சிந்திப்பேயமையும் கண்டீர்கள்" என்று இதுக்குமேல் சொல்லலாவ தொன்றில்லை. இது தன்னை ஸுக்ரஹமாகச் சொன்னோம், மஹாப்ருதிவியில் ஸகலாத்மாக்களுக்கும் இது தனக்குப் பரக்க ஆயாஸிக்கவேண்டா, சிந்தாமாத்ரமேயமையும் கேளிகோள் என்கையாலே, தனக்கு மேலொன்றின்றியே

யிருப்பதாய், ஸங்க்ரஹேண உபதேசிக்கலாய், ஸர்வாதிகாரமாய் வரண ஸுகரமுமாயிருக்குமதாகவும்; "கண்ணனல்லாலில்லை கண்டீர் சரண்" என்று "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று க்ருஷ்ணனையொழிய வேறுபாயமில்லை யென்கையாலே ஸித்தமாய் பரம சேதநமாய் ஸர்வசக்தியாய் நிரபாயமாய் ப்ராப்தமாய் ஸஹாயாந்தர நிரபேக்ஷமாயிருக்குமதாகவும் சொல்லப்படுமதாய், "வடமதுரைப் பிறந்தான் குற்றமில் சீர் கற்று வைகல் வாழ்தல்" என்கிற யாவதாத்மபாவியான குணாநுபவத்துக்குடலான ஸித்தோபாயத்தை யுபதேசித்தும்.

**விளக்கம்** - (மற்றொன்று) – திருவாய்மொழி (9-1-7) – மற்றொன்று இல்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்து எவ்வுயிர்க்கும் சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும் கண்டீர்கள் – என்று, "இதற்கு மேல் கூறுவதற்கு என ஏதும் இல்லை; இதனையே சுருக்கமாக உரைத்தோம். இந்தப் பூமியில் உள்ள அனைத்து உயிர்களும் இதனைப் பெறுவதற்கு மிகுந்த முயற்சியில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை; சிந்தனை செய்தால் மட்டுமே போதுமானது" என்று கூறுவதால், தனக்கு மேல் வேறு ஏதும் இல்லை என்றுள்ளதாகவும், சுருக்கமாக உபதேசிக்க ஏற்றதாகவும், அனைவருக்கும் எளிதாகவும். (கண்ணன் அல்லால் என்கிற) – திருவாய்மொழி (9-1-10) – கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண் - என்பதற்கு ஏற்ப கீதையில் (18-60) – மாம் ஏகம் சரணம் வ்ரஜ – என்னை மட்டுமே சரணம் புகுவாயாக – என க்ருஷ்ணனைத் தவிர வேறு உபாயம் இல்லை என்று கூறுவதால், எப்போதுமே உள்ளதாகவும், மிகவும் உயர்ந்த சேதநனமாகவும், அனைத்து சக்தியாகவும், அபாயம் அற்றதாகவும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதாகவும், வேறு எந்தத் துணையும் அவசியம் அற்றதாகவும் கூறப்படுவதான. (வைகல் வாழ்தலான ஸித்தோபாயம்) - திருவாய் (9-1-19) - வடமதுரைப் பிறந்தான் குற்றமில் சீர் கற்று வைகல் வாழ்தல் - என்பதற்கு ஏற்ப உள்ளதும், இந்த உயிர் உள்ள காலம் முடிய குணங்களை அனுபவிக்கலாம்படி உள்ளதும் ஆகிய ஸித்தோபாயத்தைக் குறித்து உபதேசம் செய்தும்.

**வ்யாக்யானம்** - [7] (அதில் துர்பலபுத்திகளுக்கு மாலை நண்ணி காலை மாலை விண்டு தேனைவாடா மலரிட்டு அன்பராம் ஸாங்கபக்தி) "ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம், நராணாம் புத்தி தௌர்பல்யாதுபாயாந்தரமிஷ்யதே" என்கிறபடியே அந்த ஸித்தோபாயத்தில் மஹாவிச்வாஸம் பிறக்கைக்கடியான பாக்யமில்லாமையாலே இதரோபாய பரித்யாக பூர்வகமாக அதிலிழிகையில்

விச்வாஸமில்லாமையாகிற புத்தி தௌர்பல்யமுடையவர்களுக்கு, “மாலை நண்ணித் தொழுதெழுமினோ காலை மாலை கமலமலரிட்டு நீர்”, “விண்டுவாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின்”, “தேனைவாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின்”, “தனதன்பர்க்கு” என்று பக்தி யுக்தராய்க் கொண்டு ஸர்வகாலமும் புஷ்பாத்யுபகரணங்களாலே அவனை ஸமாராதநம் பண்ணி அவன்பக்கல் பக்தி நிஷ்டராகுங்கோளென்று அங்க ஸஹிதையான பக்தியை யுபதேசித்தும். (அதில் அசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி) அதில் துஷ்கரத்வம், விளம்ப பயம் ஆகிறவிவற்றாலே யநுஷ்டிக்க சக்தரல்லாதார்க்கு, “சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்” என்று நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரமுமாய் ஸர்வாதிகாரமுமாய் சரீராவஸாநத்திலே பலப்ரதமுமான ப்ரபத்தியை வெளியிட்டும்.

**விளக்கம்** - (அதில் துர்லப புத்திகளுக்கு) - ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம், நராணாம் புத்தி தௌர்பல்யாத் உபாயாந்தரமிஷ்யதே – இந்தச் சாஸ்த்ரத்தின் ஆழ்பொருளாக உள்ள ப்ரபத்தியானது ஒருமுறை மட்டுமே கைக்கொள்ளத்தக்கதாகவும், இதனை இயற்றும் ஒருவனை ஸம்ஸாரத்தைக் கடக்க செய்வதாகவும் உள்ளது. ஒருவனுக்குத் தனது சிந்தனையில் உறுதியில்லாத காரணத்தால் இதனைத் தவிர மற்ற உபாயங்களை அவன் விரும்புகிறான் – என்பதற்கு ஏற்ப, ஸித்தோபாயமான ஸர்வேச்வரனிடம் மஹாவிச்வாஸம் ஏற்படுவதற்குக் காரணமாக உள்ளதான புண்ணியங்கள் ஏதும் இல்லாததால், மற்ற உபாயங்களை அனைத்தையும் கைவிடுதல் என்பதற்கு முன்பாக ஸர்வேச்வரன் விஷயத்தில் ஈடுபடுவதற்கு மஹாவிச்வாஸம் இல்லாமை என்பதான தாழ்ந்த அறிவைக் கொண்டவர்களுக்கு. (மாலை) – திருவாய்மொழி (9-10-1) - மாலை நண்ணித் தொழுதெழுமினோ காலை மாலை கமலமலரிட்டு நீர் - என்றும், (விண்டு) – திருவாய்மொழி (9-10-3) - விண்டுவாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின் – என்றும், (தேனை) - திருவாய்மொழி (9-10-4) - தேனைவாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின் – என்றும். (அன்பராம் ஸாங்கபக்தி) - திருவாய்மொழி (9-10-5) - – தனது அன்பர்க்கு - என்றும் கூறுவதற்கு எற்ப பக்தி நிறைந்தவர்களாக நின்று அனைத்து காலங்களிலும் மலர்கள் போன்ற பலவற்றாலும் அவனை ஆராதித்து, அவனிடம் பக்தி நிறைந்தவர்களாக இருக்கக்கடவீர்கள் என்று அங்கங்களுடன் கூடிய பக்தியைக் குறித்து உபதேசம் செய்தும். (அதில் அசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி) - அத்தகைய பக்தியைக் கைக்கொள்வதில் உள்ள அரிய தன்மை, அதுவும் காலம்

தாழ்த்தியே பலன் அளிக்கும் என்ற அச்சம் ஆகியவை காரணமாக அதனைக் கைக்கொள்ளச் சக்தி அற்றவர்களுக்கு, திருவாய்மொழி (9-10-5) - சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் - என்பதற்கு ஏற்ப "அனைத்தையும் கைவிடுதல் என்பதன் மூலம் பெறுவது" என்பதால், கைக்கொள்வதற்கு மிகவும் எளியதாகவும், அனைவருக்கும் ஏற்புடையதாகவும், சரீரத்தின் முடிவில் பலனை அளிப்பதும் ஆகிய ப்ரபத்தியைக் குறித்து வெளிப்படுத்தியும்.

**வ்யாக்யானம்** - [8] (அதில் அசக்தர்க்கு உச்சாரணமாத்ரம்) உபாயபல்குத்வ பல கௌரவ விரோதி பூயஸ்த்வங்களாகிற சங்காத்ரயத்தாலே அதில் வ்யவஸாயத்துக்குடலான சக்தியில்லாதார்க்கு, "திருக்கண்ணபுரம் சொல்ல நாளுந்துயர் பாடு சாராவே" என்று வசநத்தைப் பற்றாசாகப் பிடித்து அவன் திருத்திக் கொள்ளும்படியான உச்சாரண மாத்ரத்தை வெளியிட்டும். (ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தெண்டனென்று) உச்சாரணந்தனக்கும் தாமாக ஒரு பாசுரமிட்டுச் சொல்ல க்ஷமரன்றிக்கே கீழ்ச்சொன்ன உபாயங்களெல்லாவற்றிலும் அயோக்யராயிருப்பார்க்கு, "இப்பத்தும் பாடியாடிப் பணிமினவன் தாள்களையே" என்று இத்திருவாய் மொழியை ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு பாடி அவன் திருவடிகளில் விழுங்கோளென்று. (கீதாசார்யனைப்போலே அதிகாராநுகுணம் நெறியெல்லா முரைக்கிறா ரொன்பதாம்பத்தில்) அதாவது கீதோபநிஷதாசார்யன் தன்னுடைய பரமக்ருபையாலே, "நெறியெல்லா மெடுத்துரைத்த" என்கிறபடியே சேதநருடைய ருச்யநுகுணமான உபாயங்களெல்லாவற்றையும் உபதேசித்தாப்போலே, இவரும், ப்ராப்தியணித்தானவாறே ஸம்ஸாரிகள் ஒருவருமிழக்க வொண்ணாதென்கிற க்ருபையாலே யெல்லாமெடுத்துரைத்து அவ்வவருடைய அதிகாராநுகுணமாக உபாயங்களை யெல்லாமுபதேசித்தருளுகிறார் ஒன்பதாம்பத்திலென்கை.

**விளக்கம்** - (அதில் அசக்தர்க்கு உச்சாரணமாத்ரம்) – "உபாயம் சிறியதாகவும், பலன் மிகவும் பெரியதாகவும், தடைகள் பல உள்ளதாகவும் இருப்பதால் எவ்விதம் கைக்கூடும்?" என்பதான மூன்றுவிதமான சந்தேகங்கள் காரணமாக இத்தகைய ப்ரபத்தியை நம்புவதற்குத் தேவையான சக்தி அற்றவர்களுக்கு, திருவாய்மொழி (9-10-10) – திருக்கண்ணபுரம் சொல்ல நாளுந்துயர் பாடு சாராவே - என்று அந்த திவ்யதேசத்தின் பெயரை மட்டும் கொள்கொம்பாகப் பிடித்துக்கொண்டு, அவன் திருத்தி ஏற்றுக் கொள்ளும்படியான சொல்லை மட்டுமே உபதேசம் செய்து. (ஸர்வ உபாய சூந்யர்க்கு

இப்பத்தும் பாடியிடும் தெண்டன் என்று) - அத்தகைய சொல்லை உரைப்பதற்கு தாங்களாகவே ஒரு பாசுரம் அமைத்துச் சொல்ல ஆற்றல் இன்றி, இதுவரை கூறப்பட்ட எந்தவிதமான உபாயங்களிலும் தகுதி இன்றி உள்ளவர்களுக்கு, திருவாய்மொழி (9-10-11) - இப்பத்தும் பாடியாடிப் பணிமினவன் தாள்களையே - என்று இந்தத் திருவாய்மொழியை அவன் மீது உள்ள அன்பினால் தூண்டப்பட்டவர்களாக நின்று பாடி, அவனுடைய திருவடிகளில் விழுவீர்களாக என்று உபதேசம் செய்தும். (கீதாசார்யனைப்போலே அதிகாராநுகுணம் நெறியெல்லா முரைக்கிறா ரொன்பதாம்பத்தில்) - ஸ்ரீமத்பகவத் கீதையில் ஆசார்யனாகிய க்ருஷ்ணன் தனது அளவு கடந்த கருணை காரணமக, திருவாய்மொழி (4-8-6) – நெறியெல்லாம் எடுத்து உரைத்த – என்பதற்கு ஏற்ப இந்த உலகில் உள்ளவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடியான அனைத்து உபாயங்களையும் உபதேசித்தான். அதே போன்று நம்மாழ்வாரும், “பேறு மிகவும் அருகில் உள்ளபோது இதனை இவர்கள் இழந்துவிடக் கூடாது” என்று தனது உயர்ந்த கருணை காரணமாக அனைத்தையும் எடுத்து உரைத்து, அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்றபடி அனைத்து உபாயங்களையும் ஒன்பதாம் பத்தில் அருளிச்செய்கிறார்.

228 [1] சுரிகுழல் அஞ்சனப் புனல் மைந்நின்ற பொல்லாப் புனக் காயாவென்னும் ஆபத்திற் கொள்ளும் காமரூப கந்தரூபத்தாலே ப்ரபந்நார்த்தி ஹரனானவன், [2] அருள்பெறும் போதணுகவிட்டதுக்குப் பலமான வானேறுங் கதிக்கு அண்ட மூவுலகும் முன்னோடிக் கால் விழுந்திடத்தே நிழல் தடங்களாக்கி அமுதமளித்த தயரதன் பெற்ற கோவலனாகையாலே வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சராசரம் இடைச்சி தயிர்த்தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன் மகனவன் தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்ற மைந்தனாகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்துமாத்தனை வழித்துணையாக்கி, [3] அறியச் சொன்ன ஸுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கொழித்து மீள்கின்றதில்லையென்று நிச்சித்திருந்தவர், ஸஞ்சிதங் காட்டும் தசையானவாறே [4] முந்துற்ற நெஞ்சுக்குப் பணி மறவாது மருளொழி நகு கைவிடேலென்று க்ருத்யாக்ருத்யங்களை விதித்து நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென்றழைத்து, [5] வலஞ்செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதுமென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ச்ரோதவ்யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டுப் [6] பிணக்கறச் சார்வாக நிகமித்து [7] எண்பெருக்கி லெண்ணும் திருநாமத்தின் சப்தார்தங்களைச் சுருக்கி மாதவனென்று

த்வயமாக்கிக் கரண த்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்துச் செஞ்சொற்கவிகளுக்குக் கள்ள வழி காவலிட்டு [8] மனம் திருத்தி வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம் தரவிரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்ட வாக்கையிலே புக்குத் தானநகர்களை அதிலே வகுத்துக் குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு தோஷமறிவித்து [9] மாயையை மடித்து வானே தரக் கருதிக் கருத்தின்கண் பெரியனானவனை இன்று அஹேதுகமாக வாதரித்த நீ அநாத்யநாதர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க, [10] "இந்த்ரிய கிங்கரராய்க் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீர் என்னில், அவை யாவரையும் அகற்ற நீவைத்தவை யென்பர்; அது தேஹயோகத்தாலே யென்னில், அந்நாள் நீ தந்த சுமடென்பர்; முன்செய்த முழுவினையாலேயென்னில், அது துயரமே உற்ற விருவினை உன் கோவமுமருளு மென்பர்; [11] ஈவிலாத மதியிலே னென்னு மும்மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களென்னில், ஆங்காரமாய்ப் புக்குச் செய்கைப் பயனுண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தாவென்பர்; [12] யானே எஞ்ஞான்று மென்றத்தாலே யென்னில்; அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழிலென்பர்; ஜீவப்ரக்ருதிசைதந்யம் நீங்கும் வ்ரத ஹேது: அகமேனியிலழுக்கறுக்கை அபிமாநி க்ருத்யம்; [13] தான் நல்கும் பந்தம் நிருபாதிகம். ஸௌஹார்தம் எஞ்ஞான்றும் நிற்கும்; பிணக்கிப் பேதியாத ஜ்ஞாநாதி வைகல்யமில்லை; ஏக மூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது; [14] நாம் தனி நின்ற ஸ்வதந்த்ரரென்று அறிந்தனமே யென்னும் ஸர்வஜ்ஞரிவர், [15] நெறி காட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்து நிற்க, [16] அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம் போலே ஏறப் பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற மேக ஸமுத்ர பேரீ கீத காஹள சங்காசீஸ் ஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்குத் [17] தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திருவாணையிட்டுக் கூசம் செய்யாத செய்திப் பிழை, [18] பற்றுக்கொம்பற்ற கதிகேடு, போரவிட்ட பெரும்பழி, [19] புறம்போனால் வருமிழவு, [20] உண்டிட்ட மூற்றீம்பு, அன்பு வளர்ந்த அடியுரம், உயிருறவு [21] முதலளவு துரக்கைகளாலே பேரவா குளப்படியாம்படி கடல் போன்ற ஆதரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம்பத்தில்.

**அவதாரிகை** - பத்தாம்பத்தில், இப்படி ஆபத்ஸகனாகையாலே அவ்வாபத் ரக்ஷணாநுரூபமாகப் பரிக்ரஹிக்கும் விக்ரஹங்களுக்கெல்லாம் மூலபூதமாய் நிரதிசய


Email:sridharan_book@yahoo.co.in

வைலக்ஷண்ய யுக்தமான திவ்யவிக்ரஹத்தோடே வந்து தோன்றி, தன்பக்கல் ந்யஸ்த பரரானவர்கள் ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பாலும் தன் திருவடிகளைக் கிட்டி அனுபவிக்கப் பொறாமையாலும் படுமார்த்தியை ஹரிக்கும் ஸ்வபாவனானவன், கீழில்பத்தில் தம்முடைய த்வராநுகுணமாக நாளிட்டுக் கொடுத்ததுக்குப் பலம் அர்ச்சிராதிகதியாலே தேச விசேஷத்திலேறப் போகையாகையாலே அதுக்கு ஆப்ததமனானவன் தன்னை வழித்துணையாகப் பற்றி, இனி ப்ராப்தியில் கண்ணழிவில்லை என்று தமக்கேற நிச்சயித்தவிவர், மறைத்து வைத்த அர்த்தமுள்ளதும் வெளியிடவேண்டும்படியான தசையானவாறே, ப்ரதமோபதேச பாத்ரமான தம் திருவுள்ளத்துக்கு க்ருத்யாக்ருத்யங்களை விதித்து, அப்படி பவ்யரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு கர்த்தவ்யாதிகளை வெளியிட்டு, முதலிலே உபக்ரமித்த பக்தி யோகத்தையும் நிகமித்து, ஸம்ஸாரிகளுக்கு ஸுகரமாக ஆச்ரயணத்தை உபதேசித்து, அநுபவ கைங்கர்யங்களிலே நிற்கிறவர்களுக்கு சீலகுணமாகிற ஆழங்காலையுங்காட்டி, தம்பக்கல் விருப்பத்தாலே தம் திருமேனியில் அதிவ்யாமோஹம் பண்ணுகிறவீச்வரனுக்கு அதின் தோஷத்தையுணர்த்தி, இப்போது தமக்குப் பரதந்தரனாய் தம்மைப் பரமபதத்திலே கொண்டு போவதாக அத்யாதரம் பண்ணுகிறவனை, அநாதிகாலம் தம்மை ஸம்ஸரிக்க விட்டு உபேக்ஷித்திருந்ததுக்கு ஹேது வென்னென்று கேட்க, அவனும் இந்த்ரிய வச்யதை முதலான ஹேது பரம்பரையை எண்ணி, அதுவும் மதாயத்த மென்றறியும் ஸர்வஜ்ஞரான விவர்க்குப் போக்கடி சொல்லுகையரிதென்று நிருத்தரனாய், அர்ச்சிராதி மார்க்கத்தையும் அங்குள்ளாருடைய ஸத்காரத்தையும் அவ்வழியாலே போய்ப் பெறும் ஸ்வசரண கமல ப்ராப்தி பர்யந்தமாகக் காட்டிக் கொடுக்க, அத்தை ஸாக்ஷாத்கரித்து, அது மாநஸாநுபவ மாத்ரமாய் பாஹ்யகரண யோக்யமல்லாமையாலே அத்தை யதாவாக ப்ராபிக்க வேணுமென்று பதறி அவனுக்கு மறுக்கவொண்ணாத திருவாணையிட்டுத் தடுத்து, அது பெறாவாணையல்லாமைக்கு ஹேதுக்களையும் சொல்லும்படியான தம்முடைய பரமபக்தியெல்லாம் குளப்படியாம்படியான அபிநிவேசத்தோடே வந்து தம்முடைய தாபங்களைப் போக்கின ப்ரகாரத்தை வெளியிடுகிறாரென்கிறார்.

**விளக்கம் –** இவ்விதம் அனைத்து ஆபத்து காலங்களில் துணையாக உள்ளவன் என்பதால், அத்தகைய ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றுவதற்கு ஏற்றவிதமாக எடுக்கின்ற திருமேனி வடிவங்கள் அனைத்திற்கும் மூலமாகவும், தனக்கு மேல் ஏதும் இலை என்ற மேன்மை கொண்டதாகவும் உள்ள திவ்யமான திருமேனியுடன் வந்து தோன்றுகிறான். தன்னிடம்

தங்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்படைத்தவர்கள், ஸம்ஸாரத்தின் துயரங்களாலும் தனது திருவடிகளைக் கிட்டி நின்று அனுபவிக்க இயலாமல் ஏற்படும் துன்பங்களாலும் அனுபவிக்கின்ற துக்கத்தைப் போக்கும் தன்மை கொண்டவனாக உள்ளான். இப்படிப்பட்ட அவன், நம்மாழ்வாராகிய தனது பதற்றத்துக்கு ஏற்றவிதமாக நாள் குறித்துக் கொடுத்தற்கான பலன் என்பது, அர்ச்சிராதி மார்க்கமாக பரமபதத்தில் ஏறுதல் என்பதாக உள்ளதால், அதற்கு உதவுபவனாக உள்ள அவனையே வழித்துணையாகப் பற்றி நின்று, இனி அந்தப் பேற்றில் கண்ணழிவில்லை என்று ஒன்பதாம் பத்தில் முடிவு செய்தார். இவ்விதமாகத் தீர்மானித்த நம்மாழ்வார், இதுவரை மறைத்து வைத்திருந்த விஷயங்களைக் கூட வெளியிடவேண்டும் நிலைமை ஏற்பட்டவுடன், தனது திருவுள்ளத்திற்கு, “இதனைச் செய்யவேண்டும், இதனைத் தவிர்க்கவேண்டும்”, என்று பலவற்றையும் விதித்தார்; இதுவே உபதேசத்தைப் பெறவதற்கான முதல் தகுதியாக அமைகிறது. இது போன்றே திருவுள்ளம் கொண்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் செய்யத்தக்கவை எவை என்று உணர்த்தினார். முதலில் தான் உரைக்கத் தொடங்கிய பக்தி யோகத்தை முழுவதுமாக உரைத்து முடித்தார். தொடர்ந்து இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவர்கள் மிகவும் சுலபமாக ஸர்வேச்வரனை அடையும் மார்க்கத்தை உபதேசித்தார். அவனுடைய அனுபவம் என்ற கைங்கர்யங்களில் நிலைநிற்பவர்களுக்கு, அவனுடைய சீல குணத்தைக் காண்பித்தான். நம்மாழ்வாராகிய தன்னிடம் உள்ள ப்ரேமை காரணமாக மிகுந்த ஈடுபாட்டுடன் நின்று ஸர்வேச்வரனுக்குத் தனது சரீரத்தில் உள்ள தோஷங்களைக் குறித்து உரைத்தார். அதன் பின்னர் ஸர்வேச்வரனாகிய தனக்கு மட்டுமே வசப்பட்டவராக நம்மாழ்வாரை மாற்றி, அவரைப் பரமபதம் கொண்டு செல்வதாக எண்ணி, அவரிடம் மிகுந்த ப்ரேமையை வெளிப்படுத்திய ஈச்வரனிடம், “எல்லையற்ற காலம் இந்த ஸம்ஸாரத்தில் என்னைத் தவிக்கும்படிச் செய்து, என்னை இத்தனை காலமாக மறந்தபடி இருந்த காரணம் என்ன?”, என்று கேட்டார். அப்போது ஸர்வேச்வரன், “இந்த்ரியங்களுக்கு வசப்பட்டிருத்தல் போன்ற பல காரணங்களால் ஸம்ஸாரத்தில் உள்ள நிலை உமக்கு ஏற்பட்டது”, என்று கூற எண்ணினான். “ஆனால் அந்த இந்த்ரியக்கள் அனைத்தும் ஸர்வேச்வரனாகிய நம்முடைய கட்டுப்பாட்டில் உள்ளதை இவர் அறிவார். ஆகவே அதனை அவருக்கு உரைத்து சமாதானம் செய்வது கடினமே ஆகும்”, என்று எண்ணி விடை ஏதும் கூறாமல் இருந்தான். மேலும் நம்மாழ்வாருக்கு அர்ச்சிராதி மார்க்கத்தையும், அந்த வழியில் செல்லும்போது ஆங்காங்கு உள்ளவர்கள் செய்யும் உபசாரங்களையும், அந்த மார்க்கத்தில் செல்வதன்


Email:sridharan_book@yahoo.co.in

மூலம் கிட்டவில்ல பேறாகிய தனது திருவடிகளை அடைதல் போன்ற பலவற்றையும் காண்பித்துக் கொடுத்தான். அவை அனைத்தையும் நேரடியாகவே உணர்ந்த நம்மாழ்வார், அவை மனதால் மட்டுமே அனுபவிக்கக் கூடியவை என்றும், வெளி இந்த்ரியங்களால் காண இயலாதவை என்றும் உணர்த்தபடியால், அவற்றை உள்ளது உள்ளபடி அடையவேண்டும் என்று தவித்தார். ஆகவே அவனால் மறுக்க இயலாதபடியான ஒரு ஆணையை இட்டுத் தடுத்து, அந்த ஆணையை மீற இயலாமல் இருப்பதற்கான காரணங்களை உரைப்பதான, தனது பரமபக்தி அனைத்தையும் ஸமுத்திரத்திற்கு முன்பு பசுவின் கால் குளம்பில் ஏற்படும் குழியில் தங்கும் நீர் போன்று ஆக்கும்விதமாக மிகுந்த ஈடுபாட்டுடன் ஸர்வேச்வரன் வந்து நின்று, தனது துன்பங்கள் அனைத்தையும் நீக்கிய விதத்தை பத்தாம் பத்தில் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - [1] (சுரிகுழலஞ்சனப் புனல் மைந்நின்ற பொல்லாப்புனக்காயாவென்னுமாபத்தில் கொள்ளும் காமரூப கந்தரூபத்தாலே ப்ரபந்நார்த்தி ஹரனானவன்) “சுரிகுழற்கமலக்கட் கனிவாய்”, “அஞ்சனமேனி”, “புனல்மைந்நின்றவரை போலும் திருவுருவம்”, “பொல்லாக் கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கம்”, “புனக்காயாநிறத்த புண்டரீகக் கட்செங்கனிவாய்” என்று அந்யோந்ய விலக்ஷணமாய் அதிமநோஹரமாய் அநுபவிதாக்களைத் தனித்தனியே ஆழங்கால் படுத்தவல்ல அவயவ சோபையையும் அதுக்குப் பரபாகமாய் அத்யுஜ்ஜ்வலமாய் விடாயர் முகத்திலே நீர் வெள்ளத்தைத் திறந்து விட்டாப்போலே ஸகல ச்ரமங்களு மாறும்படி யிருக்கும் திருநிறத்தையுமுடைத்தாகச் சொல்லப்படுமதாய், “காம ரூபங் கொண்டெழுந் தளிப்பான்” என்று ஆச்ரிதருடைய ஆபத்ரக்ஷணாநுரூபமாக வேண்டினபடி பரிக்ரஹிக்கும் விக்ரஹங்களுக்கெல்லாம் கந்தமாயிருக்கும் திவ்யவிக்ரஹத்தைக் கொண்டு தன்பக்கல் நிக்ஷிப்தபரரானவர்கள் அநிஷ்டமான ஸம்ஸாரத்திலிருப்பாலும் அபீஷ்டமான தன் திருவடிகளைக் கிட்டாமையாலும் படும் ஆர்த்தியைத்தீர்க்கும் ஸ்வபாவனானவன்.

**விளக்கம்** - (சுரிகுழல்) – திருவாய்மொழி (10-1-1) - சுரிகுழற்கமலக்கட் கனிவாய் – என்றும், (அஞ்சனம்) - திருவாய்மொழி (10-3-3) – அஞ்சன மேனி – என்றும், (புனல் மைந்நின்ற) - திருவாய்மொழி (10-6-8) - புனல்மைந்நின்றவரை போலும் திருவுருவம் – என்றும், (பொல்லா) - திருவாய்மொழி (10-10-1) - பொல்லாக் கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கம் - என்றும், (புனக்காயா என்னும்) – திருவாய்மொழி (10-10-6) -

புனக்காயாநிறத்த புண்டரீகக் கட்செங்கனிவாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஒன்றை ஒன்று விஞ்சும் மேன்மை கொண்டதாகவும், மனதைக் கவருவதாகவும், அனுபவிப்பவர்களைத் தனித்தனியே ஈடுபடுத்தவல்லதான அவயவங்களுடைய சோபையும், அதற்கு ஏற்றவிதமாக மிகுந்த ஒளி கொண்டதாகவும், மிகுந்த தாகம் எடுத்த ஒருவருக்கு அதிகமான நீரை அளித்தது போன்று அனைத்து துன்பங்களும் நீங்கும் விதத்தில் காணப்படுகின்ற திருநிறத்தையும் கொண்டதாகவும். (ஆபத்தில் கொள்ளும் காமரூப கந்தரூபத்தாலே) - திருவாய்மொழி (10-1-10) - காம ரூபம் கொண்டு எழுந்தளிப்பான் - என்று தனது அடியார்களைக் காப்பாற்றுவதற்காக அதற்குத் தகுதியான வடிவங்கள் அனைத்திற்கும் மூலகரணமாகவும் உள்ள திருமேனியைக் கொண்டு. (ப்ரபந்த ஆர்த்தி ஹரனானவன்) - அனைத்து பாரங்களையும் தன்னிடம் வைத்த தனது அடியார்களாக உள்ள ப்ரபந்நர்கள், தங்களுக்குச் சற்றும் விருப்பம் இல்லாமல் உள்ளதான ஸம்ஸாரத்தில் இருத்தல் மற்றும் தங்களுக்கு மிகவும் விருப்பமான தனது திருவடிகளை அடைதல் கிட்டாமை போன்ற துக்கங்களை விலக்கும் தன்மை கொண்டவன்.

**வ்யாக்யானம்** - [2] (அருள்பெறும்போதணுகவிட்டதுக்குப் பலமான வானேறும் கதிக்கு அண்டமூவுலகும் முன்னோடிக் கால்விழுந்திடத்தே நிழற்றடங்களாக்கி அமுதமளித்த தயரதன் பெற்ற கோவலனாகையாலே, வேடன், வேடுவிச்சி, பக்ஷி, குரங்கு, சராசரம், இடைச்சி, இடையர், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர், பிணவிருந்து, வேண்டடிசிலிட்டவர், அவன் மகன், அவன்தம்பி, ஆணை, அரவம், மறையாளன், பெற்றமைந்தன் ஆகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்து மாத்தனை வழித்துணையாக்கி) "அவனுடையருள் பெறும் போதரிதால்", "அவனருள்பெறுமளவாவி நில்லாது" என்று கீழில் பத்திலே க்ஷண கால விளம்பம் பொறாதபடி ஆர்த்தரான தமக்கு. "மரணமானால்" என்று ஆரப்த சரீராவஸாநத்திலே மோக்ஷம் தருகிறோமென்றணித்தாக நாளிட்டுக் கொடுத்ததுக்குப் பலம், "வானேற வழிதந்த" என்று ப்ராப்ய பூமியான பரமபதத்திலே சென்று புகுருகைக்கு வழியாக அவன் காட்டிக்கொடுத்த அர்ச்சிராதிகதியாலே போகப் பெறுகையாலே அவ்வர்ச்சிராதிகதிக்கு, ராஜகுமாரன் வழிபோம்போது வழிக்குக் கடவார் முன்னோடி நிலம் சோதித்து நிழலும் தடாகமும் பண்ணி பின்னை கொண்டுபோமாப்போலே, "அண்டமூவுலகளந்தவன்" என்று திருவுலகளக்கவென்றொரு வ்யாஜத்தாலே முன்னோடி நிலம் சோதித்து, "அவனடி நிழல்தடம்" என்று காளமேகமான தன் கால் விழுந்தவிடத்தே நிழலும் தடாகமுமாம்படி பண்ணி, அமுதமளித்த பெருமானாகையாலே, "பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" என்கிறபடியே


Email:sridharan_book@yahoo.co.in

பாதேயமாகத் தன் திவ்யகுணாம்ருதத்தை வர்ஷிக்குமவனாய், "தயரதன் பெற்ற மரதகமணித்தடம்" என்றும், "கூத்தன் கோவலன்" என்றும் சக்ரவர்த்தி திருமகனாயும் க்ருஷ்ணனாயும் வந்தவதரித்தவனாகையாலே,

**விளக்கம்** - (அருள் பெறும்போது) – திருவாய்மொழி (9-7-6) – அவனுடையருள் பெறும் போதரிதால் - என்றும், திருவாய்மொழி (9-9-6) – அவன் அருள்பெறும் அளவு ஆவி நில்லாது – என்றும் ஒன்பதாம் பத்தில், ஒரு நொடிப்பொழுது தாமதம் ஏற்படுவதைக்கூடப் பொறுக்க முடியாமல் துன்பம் அடைந்த நம்மாழ்வாரிடம் தனக்கு. (அணுகவிட்டதுக்குப் பலமான) – திருவாய்மொழி (9-10-5) – மரணமானால் - என்று கூறுவதற்கு ஏற்ப, "இந்தச் சரீரத்தின் இறுதியில் நாம் மோக்ஷம் அளிக்கிறோம்" என்று மிகவும் அருகாமையில் ஒரு நாள் குறித்துக் கொடுத்ததற்கான பலன் என்பது, (வானேறும் கதிக்கு) - திருவாய்மொழி (10-6-5) – வான் ஏற வழி தந்த – என்று கூறுவதற்கு ஏற்ப அடையத்தக்க இடமாக உள்ள பரமபதத்திற்குச் சென்று சேர்வதற்கு வழியாக அவன் காண்பித்துக் கொடுத்த அர்ச்சிராதி மார்க்கமாக சென்று சேர்தலே ஆகும் என்பதால், அந்த அர்ச்சிராதி மார்க்கத்திற்கு. (அண்ட மூவுலகும் முன்னேற) – அரசகுமாரன் ஒரு பாதையில் செல்லும்போது, அந்தப் பாதையைக் குறித்து நன்கு அறிந்தவர்கள் அவனுக்கு முன்பாகச் சென்று, போகும் வழியை நன்றாகச் சோதனை இட்டு, நிழல் மற்றும் தண்ணீர் கிடைக்க வழி செய்து சென்றபடி இருப்பர்; அவர்கள் பின்னே அரசகுமாரன் செல்வான்; இதே போன்று, திருவாய்மொழி (10-1-5) - அண்டமூவுலகளந்தவன் – என்பதற்கு ஏற்ப "திருவுலகத்தை அளத்தல்" என்ற ஒரு செயலை வாய்ப்பாக வைத்துக்கொண்டு, ஆழ்வார் போகும் வழியை நன்றாகச் சோதனை செய்து, (கால் விழுந்த இடத்தே நிழல் தடங்கள் ஆக்கி) - திருவாய்மொழி (10-1-2) – அவன் அடி நிழல் தடம் - என்பதற்கு ஏற்ப காளமேகமாகிய தனது திருவடி சென்ற இடத்தில் நீரும் தண்ணீரையும் ஏற்படுத்தி. (அமுதம் அளித்த பெருமாள் ஆகையாலே) - திருமோகூரில் எழுந்தருளியுள்ள காளமேகப்பெருமாள் அமுதம் அளித்தவன் என்பதால், கருடபுராணம் - பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தந அம்ருதம் – தாமரை போன்ற திருக்கண்கள் கொண்ட ஸர்வேச்வரனுடைய திருநாம ஸங்கீர்த்தனம் என்பதான அமிர்தமே வழியில் உண்ணும் உணவு - என்பதற்கு ஏற்ப வழியில் உண்ணும் உணவாகத் தனது திவ்ய குண அமிர்தத்தை மழை போன்று பொழிபவனாக. (தயரதன் பெற்றவன் ஆகையாலே) - திருவாய்மொழி (10-1-8) - தயரதன் பெற்ற மரதகமணித்தடம் – என்பதற்கு ஏற்ப சக்ரவர்த்தித்திருமகனாக அவதரித்தவன் என்பதால். (கோவலன் ஆகையாலே) -

திருவாய்மொழி (10-1-6) – கூத்தன் கோவலன் - என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணனாக வந்து அவதரித்தவன் என்பதால்,

**வ்யாக்யானம்** – "குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம்" என்னும்படி "மாழைமான் மடநோக்கி உன் தோழியும்பியெம்பி" என்று பிராட்டியையும் இளையபெருமாளையும் முன்னிட்டு, "உகந்த தோழன் நீ" என்று விஷயீகரிக்கப் பெற்ற ஸ்ரீகுஹப்பெருமாள்; "ஸோப்யகச்சந் மஹாதேஜாச் சபரீம்" என்கிறபடியே தானே சென்று கிட்டி விருந்துண்டு, "சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந" என்னும்படி தன் விசேஷ கடாக்ஷத்தாலே பூதையாக்கின சபரி; ஸ்ரீகார்யார்த்தமாக தேஹத்தையழிய மாறினவரென்னுமுகப்பாலே "யா கதிர் யஜ்ஞசீலாநாம் ஆஹிதாக்நேச்சயா கதி:, அபராவர்த்திநாம் யாச யாச பூமிப்ரதாயிநாம், மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந்நுத்தமாந்" என்று விஷயீகரிக்கப்பட்ட ஸ்ரீஜடாயு மஹாராஜர்; குரங்கென்றவிது ஜாத்யேக வசநமாகையாலே "ஸுக்ரீவம் நாதமிச்சதி" என்று அத்தலையித்தலையாய்ச் சென்றங்கீகரிக்கப் பெற்ற வாநராதிபதியான மஹாராஜரும், பரிகரமான வாநரவர்க்கமும்; "ஒன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன்" என்று ஒரு ஹேதுவுமின்றிக்கே யிருக்கச்செய்தே ஸ்வஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுகது:கராம்படியாக விஷயீகரிக்கப் பெற்ற அயோத்தியில் வாழும் சராசரம்.

**விளக்கம்** – (வேடன்) - பாலகாண்டம் (1-29) – குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம் - தர்மாத்மாவாகிய இராமன் தனது அன்பிற்குப் பாத்திரமானவனும் வேடர்களின் தலைவனும் ஆகிய குகனை அடைந்து - என்பதற்கு ஏற்ப, பெரியதிருமொழி (5-8-1) - மாழைமான் மடநோக்கி உன் தோழியும்பியெம்பி - என்னும்படியாக சீதையையும் லக்ஷ்மணனையும் முன்னிட்டுக்கொண்டு, பெரியதிருமொழி (5-8-1) - உகந்த தோழன் நீ - என்று ஏற்கப்பட்ட ஸ்ரீகுஹப்பெருமாள். (வேடுவிச்சி) - பாலகாண்டம்(1-58) – ஸோப்யகச்சந் மஹாதேஜாச் சபரீம் - மிகுந்த தேஜஸ் நிறைந்த இராமன் சபரியை அடைந்தான் - என்பதற்கு ஏற்ப தானே அங்கு சென்று விருந்தை உட்கொண்டு, ஆரண்யகாண்டம் (74-14) – சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந - ரகுகுலத்தில் வந்தவனே! உனது திருக்கண்களால் நான் தூய்மை அடைந்தேன் - என்று இராமனுடைய விசேஷமான கடாக்ஷத்தால் தூய்மை அடைந்த சபரி. (பக்ஷி) - கைங்கர்யத்திற்காகத் தனது சரீரத்தையே அழியும்படியாக மாற்றிக் கொண்டவர் என்னும்

உகப்பு காரணமாக, ஆரண்யகாண்டம் (68-29, 30) - யா கதிர் யஜ்ஞசீலாநாம் ஆஹிதாக்நேச்சயா கதி:, அபராவர்த்திநாம் யாச யாச பூமிப்ரதாயிநாம், மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந்நுத்தமாந் - யஞ்ஜம் இயற்றுதல் என்பதையே செய்பவர்களால் அடையப்படும் உலகம் ஏதுவோ, பஞ்சாக்னியின் நடுவில் நின்று தவம் செய்பவர்களால் அடையப்படும் உலகம் எதுவோ, என்னால் நியமிக்கப்பட்டவனாக நீ அந்த உலகத்தை அடைவாய் - என்று ஏற்கப்பட்ட ஸ்ரீஜடாயு மஹாராஜர். (குரங்கு) - இந்தச் சொல்லானது ஒரு கூட்டத்தைக் குறிக்கின்ற ஒருமைச் சொல்லாக வந்துள்ளது. கிஷ்கிந்தாகாண்டம் - (4-18) - ஸுக்ரீவம் நாதம் இச்சதி – உலகத்தின் நாதனாக உள்ள இராமன் சுக்ரீவனை விரும்புகிறான் - என்பதற்கு ஏற்ப அங்கீகாரம் பெற்ற சுக்ரீவனும் அவனுடைய சேனையான வானரங்களும். (சராசரம்) – திருவாய்மொழி (7-5-1) - ஒன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன் – என்பதற்கு ஏற்ப எந்தவிதமான காரணமும் இன்றி, தனது சேர்க்கையானது இனிமையாகவும், தனது பிரிவானது துக்கமாகவும் உள்ளபடியாக ஏற்கப்பட்ட அயோத்தியில் உள்ள அசையும் மற்றும் அசையாப்பொருட்கள்.

**வ்யாக்யானம்** – "சிந்தயந்தி ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம், நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்று விக்ரஹ வைலக்ஷண்யமே உபாயமாக வீடு கொடுக்கப் பெற்ற சிந்தயந்தி; வெண்ணெய் களவு காணப்புக்கவிடத்தே தொடுப்புண்டு வந்து தம்மகத்தே புகப் படலைத் திருகி வைத்து "மோக்ஷம் தராவிடில் காட்டிக்கொடுப்பேனெ"ன்று மோக்ஷம் பெற்ற ததிபாண்டர்; நாமரூபங்களுள்ளவற்றுக் கெல்லாம் ஒரு சேதநாதிஷ்டாநமுண்டாகையாலே இதுக்கு மோக்ஷம் கொடுக்கவேண்டுமென்கிற அவன் நிர்ப்பந்தத்துக்காக மோக்ஷம் கொடுக்கப் பெற்ற தயிர்த்தாழி; "ஸுகந்தமேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராந்நே, ஆவயோர் கரத்ர ஸத்ருசம் தீயதாமநுலேபநம்" என்று பூசும் சாந்தபேக்ஷிக்க அநந்ய ப்ரயோஜநமாகக் கொடுத்த ப்ரீதியாலே விசேஷ கடாக்ஷ விஷய பூதையான கூனி; "தந்யோஹமர்ச்சயிஷ்யாமி" என்று அநந்யப்ரயோஜநமாக பூவைக்கொடுத்த உகப்பாலே "தர்மே மநச்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி, யுஷ்மத் ஸந்ததி ஜாதாநாம் தீர்க்கமாயுர்ப்பவிஷ்யதி" என்று விசேஷ கடாக்ஷம் பண்ணப் பெற்ற ஸ்ரீமாலாகாரர்; "நவம் சவமிதம் புண்யம் வேதபாரகமச்யுத, யஜ்ஞசீல மஹாப்ராஜ்ஞ ப்ராஹ்மணம் சவமுத்தமம்" என்று "யதந்ந: புருஷோ பவதி"ப்படியே பிண விருந்திட்ட கண்டாகர்ணன்; "வேண்டடிசிலுண்ணும் போதீதென்று பார்த்திருந்து

நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனத்தில்” பக்தி புரஸ்ஸரமாக அடிசில் கொண்டு வந்திட்ட ருஷி பத்நிகள்.

**விளக்கம்** – (இடைச்சி) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-10-23) - சிந்தயந்தி ஜகத்ஸுதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம், நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா - பரமாத்மாவும் ஜகத்காரணமும் ஆகிய க்ருஷ்ணனை த்யானம் செய்தபடி மூச்சு இன்றி ஒரு கோபிகை மோக்ஷம் அடைந்தாள் - என்பதற்கு ஏற்ப திருமேனியின் அழகு என்பதே உபாயமாக இருந்து மோக்ஷம் தரப்பட்ட சிந்தயந்தி என்ற கோபிகை. (இடையர்) - வெண்ணெயைக் களவு செய்யப் போகும்போது அகப்பட்டு கொண்டதால், தனது வீட்டில் உள்ள கதவை அடைத்து, “எனக்கு மோக்ஷம் அளிக்காவிட்டால் நான் உன்னைக் காட்டிக் கொடுப்பேன்”, என்று உரைத்து மோக்ஷம் பெற்ற ததிபாண்டன். (தயிர்த்தாழி) - “பெயர் மற்றும் உருவம் கொண்ட அனைத்திற்கும் ஒரு சேதநனுடைய ஆதாரம் தேவைப்படுவதால், இதற்கும் மோக்ஷம் தரவேண்டும்”, என்று ததிபாண்டன் வற்புறுத்தியதால் மோக்ஷம் பெற்ற அவனுடைய தயிர்ப்பானை. (கூனி) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-20-6) - ஸுகந்தமேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராந்நே, ஆவயோர் கரத்ர ஸத்ருசம் தீயதாமநுலேபநம் – அழகான முகம் கொண்டவளே! மிகுந்த நறுமணம் கொண்டதும், அரசனுக்காக எடுத்துச் செல்லப்படுவதும், மனோகரமாக உள்ளதும், எங்கள் இருவருடைய சரீரத்திற்கு ஏற்றதாக உள்ளதும் ஆகிய இந்தச் சந்தனத்தை அளிப்பாயாக - என்று கூறுவதற்கு ஏற்ப பூசும் சந்தனத்தைக் கேட்க, வேறு எந்த ஒரு பயனையும் எதிர்பாராமல் தானாகவே அளித்த மகிழ்வால் சிறப்பான கடாக்ஷத்தைப் பெற்ற கூனி. (மாலாகாரர்) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-19-21) - தந்யோஹமர்ச்சயிஷ்யாமி – நான் பேறு பெற்றவன் ஆனேன், அவனைப் பூஜிக்கப் போகிறேன் - என்று எதனையும் எதிர்பாராமல் மலரைக் கொடுத்த மகிழ்வு காரணமாக, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-9-26) – தர்மே மநச்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி, யுஷ்மத் ஸந்ததி ஜாதாநாம் தீர்க்கமாயுர்ப்பவிஷ்யதி – மங்களம் நிறைந்தவளே! உனது மனமானது எப்போதும் தர்மத்திலேயே நிலை நிற்கக்கடவது. உனது குலத்தில் உள்ளவர்கள் நீண்ட ஆயுள் பெறுவர் - என்று சிறப்பான கடாக்ஷத்தைப் பெற்ற ஸ்ரீமாலாகாரர். (பிணவிருந்து) - ஸ்ரீஹரிவம்சம் – நவம் சவமிதம் புண்யம் வேதபாரகமச்யுத, யஜ்ஞசீல மஹாப்ராஜ்ஞ ப்ராஹ்மணம் சவமுத்தமம் – இந்தப் பிணம் புதியதாகும், வேதத்தை அறிந்ததாகும், வேள்வி செய்தலைத் தனது இயல்பாகவே கொண்ட அந்தணன் ஒருவனுடைய

உத்தமமான பிணம் – என்று கூறி, அயோத்யாகாண்டம் (102-30) – யதந்த: புருஷோ பவதி - எதனை ஒருவன் உண்கிறானோ அதனையே தேவதைகளும் ஏற்கும் - என்பதற்கு ஏற்ப பிணத்தை விருந்தாக அளித்த கண்டாகர்ணன். (வேண்டடிசில் இட்டவர்) – நாச்சியார் திருமொழி (12-6) – வேண்டடிசிலுண்ணும் போதீதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனத்தில் – என்பதற்கு ஏற்ப பக்தியை முன்னிறுத்தி அடிசில் கொண்டு வந்து அளித்த ரிஷிபத்தினிகள்.

**வ்யாக்யானம்** – "மீளவவன் மகனை" என்று ஹிரண்ய புத்ரனாய் வைத்துத் தன்னருளுக்கு விஷயமாம்படி பக்தனான ஸ்ரீப்ரஹ்லாதன்; "அவன் தம்பிக்கு" என்னும்படி ராவணாநுஜனாய் "அநுஜோ ராவணஸ்யாஹம்" இத்யாதிப்படியே ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டு, "ராகவம் சரணம் கத:" என்று திருவடிகளையடைந்த ஸ்ரீவிபீஷணாழ்வான்; "பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்தரிம், ஸது நாகவர: ஸ்ரீமாந் நாராயண பராயண:" என்று ஸ்வயத்நத்தை விட்டு ப்ரபந்நனாய் ஸ்வாபிலஷித கைங்கர்யம் பெற்ற ஸ்ரீகஜேந்திராழ்வான்; "நஞ்சு சோர்வதோர் வெஞ்சினவரவம் வெருவி வந்து நின் சரணென" என்கிறபடியே பெரியதிருவடிக்கஞ்சி வந்து திருவடிகளைச் சரணமாக வடைந்த ஸுமுகன்; "மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும் மலரடிக் கண்ட மாமறையாளன்" என்று க்ருஷ்ணாவதாரத்தில் தன்னுடைய பால்ய சேஷ்டிதாதிகளை ஸாக்ஷாத்கர்த்துகாமனாய் தபஸ்ஸு பண்ணி அப்படியே காட்டியருளக் கண்டு அனுபவித்தவநந்தரம் நித்யாநுபவத்தை அபேக்ஷித்த கோவிந்தஸ்வாமி; "மாமுனி பெற்ற மைந்தன்" என்று ம்ருகண்டு புத்ரனாய் மோக்ஷார்த்தமாகத் தன்னை வந்தடைந்த மார்க்கண்டேயன்; இவர்களாகிற நாநாஜாதிதையாலும் இப்படி பதினெட்டாக வெண்ணலாம்படி யிருக்கையாலும், "பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் போலே"யிருந்துள்ள வித்திரளை அர்ச்சிராதி மார்க்கத்தாலே தானே துணையாய்க் கொண்டு நடத்துமவனாய், "திருமோகூராத்தன் தாமரையடியன்றி மற்றிலமரண்", "காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதி" என்னும்படி திருமோகூரிலே நின்றருளின பரமாப்தனான காளமேகத்தை வழித்துணையாகக் கொண்டு.

**விளக்கம்** - (அவன் மகன்) – பெரியாழ்வார் திருமொழி (1-5-2) - மீள அவன் மகனை - என்பதற்கு ஏற்ற ஹிரண்யகசிபுவின் புத்திரனாக உள்ளபோதிலும் தனது க்ருபைக்கு விஷயமாக நின்ற பக்தனாகிய ஸ்ரீப்ரஹ்லாதன். (அவன் தம்பி) – பெருமாள்திருமொழி (10-7) - அவன் தம்பிக்கு – என்பதற்கு எற்ப இராவணனின் தம்பியாக உள்ளபோதிலும்,

யுத்தகாண்டம் (19-4) - அநுஜோ ராவணஸ்யாஹம் - நான் இராவணனுடைய தம்பி - என்று கூறிக் கொண்டு தனது தாழ்வினை முன்னிறுத்தியபடி, யுத்தகாண்டம் (17-14) – ராகவம் சரணம் கத: - இராமனைச் சரணம் புகுந்தேன் - என்று உரைத்து இராமனுடைய திருவடிகளை அடைந்த ஸ்ரீவிபீஷணாழ்வான். (ஆனை) – ஸ்ரீவிஷ்ணுதர்மம் - பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்தரிம், ஸது நாகவர: ஸ்ரீமாந் நாராயண பராயண: – மிகுந்த ஆபத்தில் நின்றவனாக, ஸ்ரீமந் நாராயணனை த்யானித்தபடி நின்ற அந்த கஜேந்த்ரன், தனது மனதால் அவனையே எண்ணியபடி இருந்தான் - என்பதற்கு ஏற்ப தனது முயற்சியைக் கைவிட்ட ப்ரபந்நனாக, தன்னால் விரும்பப்பட்ட கைங்கர்யத்தையே அடைந்த ஸ்ரீகஜேந்த்ராழ்வான். (அரவம்) – பெரியதிருமொழி (5-8-4) - நஞ்சு சோர்வதோர் வெஞ்சினவரவம் வெருவி வந்து நின் சரணென - என்பதற்கு ஏற்ப கருடனுடைய தாக்குதலுக்கு அஞ்சி திருவடிகளில் சரணம் புகுந்த ஸுமுகன். (மறையாளன்) – பெரியதிருமொழி (5-8-5) – மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும் மலரடிக் கண்ட மாமறையாளன் – என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணாவதாரத்தில் செய்த தன்னுடைய இளமைப்பருவ லீலைகள் அனைத்தையும் நேரே காணவேண்டும் என்று எண்ணி தவம் மேற்கொண்டு, அதற்கு ஏற்றபடியே அவற்றைக் காண்பித்தருளப் பெற்ற பின்னர், நித்யமான அந்த அனுபவத்தை எப்போதும் விரும்பிய கோவிந்தஸ்வாமி. (பெற்ற மைந்தன்) - பெரியதிருமொழி (5-8-6) – மாமுனி பெற்ற மைந்தன் - என்பதற்கு ஏற்ப ம்ருகண்டுவின் புத்திரனாக, மோக்ஷம் அடைவதற்காகத் தன்னிடம் வந்த மார்க்கண்டேயன். (ஆகிய பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்தும் ஆர்த்தனை வழித்துணையாக்கி) - இப்படியாக "பதினெட்டு நாடன் பெருங்கூட்டம்" என்பது போன்று காணப்படும் இந்தப் பெரிய கூட்டத்தை அர்ச்சிராதி மார்க்கத்தில் தானே துணையாக வந்து வழிநடத்துபவனாக, திருவாய்மொழி (10-1-9) - திருமோகூராத்தன் தாமரை அடியன்றி மற்றிலமரண் – என்றும், திருவாய்மொழி (10-1-1) - காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதி - என்றும் கூறுவதற்கு ஏற்ப திருமோகூரில் நின்று கடாக்ஷிப்பவனாக, மிகுந்த நன்மைகள் செய்யவல்லவனாகிய காளமேகத்தைத் தனது வழித்துணையாகக் கொண்டு.

**வ்யாக்யானம்** - [3] (அறியச்சொன்ன ஸுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கொழித்து மீள்கின்றதில்லை யென்று நிச்சித்திருந்தவர்) "நாமுமக்கறியச் சொன்ன நாள்களும் நணியவான" என்றும், "நாளேலறியேன்" என்றும், "மரணமானால்" என்றும் நானுங்களுக்குச் சொன்ன நாள் ஆஸந்நமாய்த்தென்று பிறர்க்கும் பேசும்படியாய்,

“ஸுப்ரபாதாச மே நிசா” என்றும், “ஸுப்ரபாதாத்ய ரஜநீ மதுராவாஸ யோஷிதாம்” என்றும் சொல்லுகிறபடியே, பகவத் ப்ராப்தி யணித்தானவாறே நல்விடிவான நாளிலே, “துணை பிரிந்தார் துயரமும் நினைகிலை”, “பசுமேய்க்கப் போகேல்”, “என் கைகழியேல்”, “அவன் பசு நிரை மேய்ப்பொழிப்பானுரைத்தன” என்று தமக்குத் துணையானவவனைப் பசு மேய்க்கையாகிற அபிமதத்தைப் பற்றவும் போகாதபடி பண்ணி, “மீள்கின்றதில்லைப் பிறவித் துயர் கடிந்தோம்”, “நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேன்” என்று ஸம்ஸார துரிதம் மறுவலிடாதென்று, “ந பிபேதி குதச்சந” என்கிறபடியே ஒன்றுக்குமஞ்சாதபடி நிச்சயித்திருந்தவர், (ஸஞ்சிதம் காட்டும் தசையானவாறே) மரண தசையானவளவிலே ஸஞ்சிதமாய்ப் புதைத்துக் கிடக்கும் மஹாநிதிகளைப் புத்ராதிகளுக்குக் காட்டுவாரைப்போலே, தமக்கு பகவத் ப்ராப்தியணித்தானவாறே, ஒருவருமிழக்க வொண்ணாது, எல்லார்க்கும் ஹிதாஹிதங்களறிவிக்க வேணும் என்று பார்த்து.

**விளக்கம்** - (அறியச் சொன்ன) – திருவாய்மொழி (10-2-9) – நாம் உமக்கறியச் சொன்ன நாள்களும் நணியவான – என்றும், திருவாய்மொழி (9-8-4) – நாளேல் அறியேன் - என்றும், திருவாய்மொழி (9-10-5) – மரணமானால் - என்றும் நான் உங்களுக்கு உரைத்த நாள் மிகவும் அருகாமையில் வந்தது என்று மற்றவர்களுக்கு உரைக்கும்படியாக, (ஸுப்ரபாதத்தே) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-17-3) – ஸுப்ரபாதாச மே நிசா - இரவுப்பொழுதும் எனக்கு நற்காலை போன்றே விடியப் போகிறது - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-18-24) - ஸுப்ரபாதாத்ய ரஜநீ மதுராவாஸ யோஷிதாம் - மதுராவில் உள்ள பெண்களுக்கு இந்த இரவுப்பொழுது நன்றாகவே விடியப் போகிறது - என்றும் கூறுவதற்கு ஏற்ப, மோக்ஷம் மிகவும் அருகில் வரும்போது நன்கு விடிந்த நாளில், (துணை பிரியாமல் போக்கு ஒழித்து) – திருவாய்மொழி (10-3-4) - துணை பிரிந்தார் துயரமும் நினைகிலை - என்றும், திருவாய்மொழி (10-3-9) - பசுமேய்க்கப் போகேல் – என்றும், திருவாய்மொழி (10-3-8) – என் கை கழியேல் – என்றும், திருவாய்மொழி (10-3-11) - அவன் பசு நிரை மேய்ப்பொழிப்பான் உரைத்தன – என்றும் தனக்குத் துணையாக உள்ள அவனைப் பசு மேய்த்தல் என்பதான அவன் விருப்பத்திற்கு ஏற்ப செல்லவிடாமல் செய்து. (மீள்கின்றதில்லை என்று நிச்சித்திருந்தவர்) - திருவாய்மொழி (10-4-3) – மீள்கின்றதில்லைப் பிறவித் துயர் கடிந்தோம் - என்றும், திருவாய்மொழி (10-4-4) - நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேன் - என்றும் இந்த ஸம்ஸார துக்கம் மீண்டும் வந்திடாமல், தைத்திரீயம் - ந பிபேதி குதச்சந – ப்ரஹ்மத்தை அறிந்தவன் அச்சம்

கொள்வதில்லை - என்று கூறுவதற்கு ஏற்ப எதற்கும் அச்சம் கொள்ளாமல் நிச்சயித்து இருந்தவர். (ஸஞ்சிதம் காட்டும் தசையானவாறே) - மரண காலம் வந்தபோது, தன்னால் சேமிக்கப்பட்டதாகவும் புதைக்கப்பட்டதாகவும் உள்ள புதையல்கள் அனைத்தையும் தனது புத்திரர்கள் முதலானவர்களுக்கு உரைப்பது போன்று, தனக்கு மோக்ஷ காலம் மிகவும் அருகில் வந்த போது, யாரும் இதனை இழந்துவிடக்கூடாது என்றும், அனைவருக்கும் நன்மை மற்றும் தீமைகளை உணர்த்தவேண்டும் என்றும் தீர்மானித்து.

**வ்யாக்யானம்** - [4] (முந்துற்ற நெஞ்சுக்குப் பணிமறவாது மருளொழி நகு கைவிடேலென்று க்ருத்யாக்ருத்யங்களை விதித்து) "தொழுதெழென் மனனே" என்று ப்ரதமத்திலே உபதேசிக்கும்படி, "முந்துற்ற நெஞ்சே" என்கிறபடியே தம்மிலும் பகவத் விஷயத்திலே முற்பட்டு நிற்கிற தம் திருவுள்ளத்திற்கு, "பணி நெஞ்சே நாளும் பரமபரம்பரனை", "வாழி யென்னெஞ்சே மறவாது வாழ்கண்டாய்", "மருளொழி நீ மடநெஞ்சே", "நரகத்தை நகு நெஞ்சே", "வாழி மனமே கைவிடேல்" என்று நம் ப்ரதிபந்தகங்களையெல்லாம் தானே போக்கியடிமை கொள்ளும் ஸர்வஸ்மாத்பரனை அநுபவிக்கப்பார். உனக்கு இஸ்ஸம்ருத்தி மாறாதே சென்றிடுக. கைபுகுந்ததென்னா இதர விஷயங்களில் செய்யுமத்தை இவ்விஷயத்திலும் செய்யாதேகொள்; "திருவாறன்விளை யதனை மேவி வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொல்" என்று ப்ராப்யவஸ்து கிட்டிற்றாகில் இங்கேயடிமை செய்யவமையாதோ வென்று உகந்தருளின நிலங்களில் நசையாலே ப்ரமிப்பதொன்றுண்டுனக்கு, அத்தைத் தவிரப்பார்; உத்தேச்ய வஸ்து ஸந்நிஹிதமாய்த்தென்று இத்தையே பார்க்குமித்தனையோ; நம்மையும் பார்க்க வேண்டாவோ; நான் பரமபதத்தேறப் போகா நின்றேன், நெடுநாள் நம்மைக் குடிமக்களாக்கி யெளிவரவுபடுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்துச் சிரித்துப் போருகிடாய்; நமக்கு இஸ்ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்ததாய்த்து. அத்திருமலையைக் கைவிடாதேகொள் என்று க்ருத்யாக்ருத்யங்களை அவச்யகரணீயமாம்படி விதித்து. (நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென்றழைத்து) தம் திருவுள்ளம் போலே அந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவர்களை "தொண்டீர் வம்மின்" என்று பகவத்விஷயத்தில் சபலரானார்! வாருங்கோளென்றழைத்து.

**விளக்கம்** – (முந்துற்ற நெஞ்சுக்கு) - திருவாய்மொழி (1-1-1) – தொழுது எழு என் மனனே - என்று தொடக்கத்தில் உபதேசிக்கும்படி, பெரியதிருவந்தாது (1) - முந்துற்ற நெஞ்சே -

என்பதற்கு ஏற்ப தன்னைக் காட்டிலும் அதிகமாக பகவத் விஷயத்தில் முற்பட்டு நிற்கின்ற தனது திருவுள்ளத்திற்கு. (பணி மறவாது மருள் ஒழி நடு கைவிடேல் என்று) – திருவாய்மொழி (10-4-7) – பணி நெஞ்சே நாளும் பரமபரம்பரனை - என்றும், திருவாய்மொழி (10-4-8) - பணி நெஞ்சே நாளும் பரமபரம்பரனை – எண்றும், திருவாய்மொழி (10-6-1) – மருள் ஒழி நீ மடநெஞ்சே – என்றும், திருவாய்மொழி (10-6-5) - நரகத்தை நகு நெஞ்சே - என்றும், திருவாய்மொழி (10-7-9) - வாழி மனமே கைவிடேல் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம், நம்முடைய தடைகள் அத்தனையும் தானே விலக்கிக் கொண்டு நம்மைத் தன்னுடைய அடிமையாக ஏற்றுக் கொள்பவனாகிய அனைத்திலும் உயர்ந்த ஸர்வேச்வரனை அனுபவிக்க முயல்வாயாக; உனக்கு இத்தகைய உயர்ந்து நிலை என்பது மாறாமல் செல்வாயாக; மற்ற அனைத்து விஷயங்களிலும் கை புகுந்ததைச் செய்வது போன்று இந்த விஷயத்தில் செய்யாமல் இருப்பாயாக; திருவாய்மொழி (7-10-9) – திருவாறன்விளை யதனை மேவி வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொல் – என்று அடையத் தகுந்த வஸ்து கிட்டியது என்னும்போது, இங்கேயே கைங்கர்யங்கள் செய்தபடி உள்ளது போதாதோ என்று அவன் விருப்பத்துடன் உள்ள திவ்யதேசங்களில் மயங்கி நிற்கும் நிலை உனக்கு ஏற்படுவதைக் காண்பாயாக; அதனை நீ தவிர்க்கவேண்டும்; நாம் எண்ணிய பொருள் நமக்கு மிகவும் அருகமையில் நிற்கிறது என்று அதனையே அனுபவித்தபடி உள்ள நாம், நம்மையும் பார்த்துக் கொள்ளவேண்டாமோ? நான் பரமபதத்திற்குச் செல்லத் தயாராக உள்ளேன்; நீண்டகாலமாக நம்மைக் குடிமக்களாக்கி மிகவும் வருத்தியபடி இருந்த ஸம்ஸாரத்தினைப் புரிந்து கொண்டு நோக்கி நீ சிரித்து நிற்பாயாக; நமக்கு இந்தச் செல்வம் முழுவதும் திருமலையால் வந்தது; அந்தத் திருமலையை நீ கைவிடாமல் பிடித்துக் கொள்வாயாக என்று. (க்ருத்ய அக்ருத்யங்களை விதித்து) - செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகியவற்றைச் செய்யவேண்டும் என்றும், தவிர்க்கவேண்டும் என்றும் விதித்து. (நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென்றழைத்து) – தன்னுடைய திருவுள்ளம் போன்று தமக்கு மிகவும் நெருக்கமாக உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை, திருவாய்மொழி – தொண்டீர் வம்மின் – என்று, “பகவத் விஷயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களே வாருங்கள்” என்று அழைத்து.

**வ்யாக்யானம்** - [5] (வலஞ்செய் தெண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுது மென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ச்ரோதவ்யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டு) “கொண்ட கோயிலை வலஞ்செய்திங்காடுதும் கூத்தே”

என்று அவனெழுந்தருளி நிற்கிற தேசத்தைக் குறித்து அநுகூலவ்ருத்தியைப் பண்ணி ஹ்ருஷ்டராவோம் வாருங்கோளென்கையாலே கர்த்தவ்யமும், "எண்ணுமினெந்தை நாமம்" என்று ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோளென்கையாலே ஸ்மர்த்தவ்யமும், "பேசுமின் கூசமின்றி" என்று உங்களயோக்யதை பார்த்துக் கூசாதே திருவனந்தபுரத்திலே ஸ்நேஹத்தைப்பண்ணி வர்த்திக்கிறவனைப் பேசுங்கோளென்கையாலே வக்தவ்யமும், "நமர்களோ சொல்லக் கேண்மின்" என்று நம்மோடு ஸம்பந்தமுடையீர்! நாம் சொல்லுகிறத்தைக் கேளுங்கோளென்கையாலே ச்ரோதவ்யமும், "படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதங்காண நடமினோ" என்று திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோளென்கையாலே த்ரஷ்டவ்ய கந்தவ்யங்களும், "அனந்தபுரநகர் புகுதுமின்றே" என்று இச்சை பிறந்தவின்றே திருவனந்தபுரத்திலே போய்ப்புக வாருங்கோளென்கையாலே வஸ்தவ்யமுமாகிறவை யெல்லாமவர்களுக்கு வெளியிட்டு.

**விளக்கம்** – (வலம் செய்து என்று கர்த்தவ்யம்) – திருவாய்மொழி (10-1-5) – கொண்ட கோயிலை வலஞ்செய்திங்காடுதும் கூத்தே – என்று, "அவன் எழுந்தருளியுள்ள திவ்யதேசத்தைக் குறித்து எப்போதும் அவனுக்கு ஏற்ற செயல்களைச் செய்து நாம் மகிழ்ச்சி கொண்டவர்களாக இருப்போம் வருவீர்களாக" என்பதன் மூலம், செய்யத்தக்க செயலையும். (எண்ணுமின் என்று ஸ்மர்த்தவ்யம்) - திருவாய்மொழி (10-2-5) எண்ணுமின் எந்தை நாமம் – என்று "எனது ஸ்வாமியுடைய திருநாமத்தை எப்போதும் எண்ணியபடி இருப்பீர்களாக" என்பதன் மூலம், எண்ணத்தக்க விஷயத்தையும். (பேசுமின் என்று வக்தவ்யம்) - திருவாய்மொழி (10-2-4) – பேசுமின் கூசமின்றி – என்று "உங்களுடைய தாழ்வுகளை எண்ணி வெட்கம் கொண்டு விலகாமல் திருவனந்தபுரத்தில் எழுதருளியுள்ளவனைக் குறித்துப் பேசுவீர்களாக" என்று கூறுவதன் மூலம், பேசத்தக்க விஷயத்தையும். (கேள்மின் என்று ச்ரோதவ்யம்) - திருவாய்மொழி (10-2-8) - நமர்களோ சொல்லக் கேண்மின் – என்று "நம்முடன் ஸம்பந்தம் கொண்டவர்களே! நாம் உரைப்பதை நீங்கள் கேட்பீர்களாக" என்று கூறுவதன் மூலம், கேட்கத்தக்க விஷயத்தையும். (காண்மின் நடமின் என்று த்ரஷ்டவ்யம் கந்தவ்யம்) – திருவாய்மொழி (10-2-1) - படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதங்காண நடமினோ – என்று "திருவனந்தபுரத்தில் கண்வளர்கின்ற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காண்பதற்குச் செல்வீர்களாக" என்பதன் மூலம் காணத்தக்கதும் சென்று அடையத்தக்கதும் ஆகிய விஷயத்தையும். (புகுதும் என்று

வஸ்தவ்யம்) - திருவாய்மொழி (10-2-1) – அனந்தபுரநகர் புகுதும் இன்றே - என்று "ஆசை ஏற்பட்ட இன்றே திருவனந்தபுரத்திற்குச் சென்று புகுவதற்கு வருவீர்களாக" என்பதன் மூலம் வசிப்பதற்கு ஏற்ற விஷயமாகவும் உள்ளதை. (எல்லாம் வெளியிட்டு) – எல்லாம் அவர்களுக்கு வெளிப்படுத்தி.

**வ்யாக்யானம்** - [6] (பிணக்கறவை சார்வாக நிகமித்து) உபக்ரமித்தவர்த்தத்தை உபஸம்ஹரிக்கை சாஸ்த்ரக்ரமமாகையாலே, "பிணக்கற" என்கிற பாட்டிலே "வணக்குடைத் தவ நெறி" என்று உபக்ரமித்த பக்தியோகத்தை, "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்ற ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி நிகமித்து. இதின் பட்டோலையான க்ரந்தத்திலே "வீடுமுன் முற்றவும் பத்துடையடியவரிலே உபதேசிக்கத் தொடங்கின ஸாத்யஸித்த ரூபமான ஸாதநத்வயத்தையும் தவநெறிக்குப் பரமன் பணித்த என்று நிகமித்து" என்றவர் இதிலே இப்படி அருளிச்செய்வானென்னென்னில், அது "வீடுமுன் முற்றம்" ப்ரபத்தி பரமாகவும் "பத்துடையடியவர்" பக்தி பரமாகவும் பூர்வர்கள் நிர்வஹித்த கட்டளையைப் பிடித்தருளிச் செய்தார். இது "வீடுமின் முற்ற"த்தையும் பக்திபரமாக்கி யோஜித்தருளின எம்பெருமானார் நிர்வாஹக் கட்டளையைப் பிடித்தருளிச் செய்தார். இதிறே ஸகல வ்யாக்யாந ஸித்தமுமாய் ஈட்டிலும் ப்ரதாந யோஜனையுமாயிருக்குமது; இந்த க்ரமத்திலேயிறே இவர்தாம் முதல்பத்தில் பக்தியை யுபதேசிக்கிறாரென்றருளிச் செய்ததும்; ஆகையால் அது முன்புள்ளாரருளிச் செய்தபடியைப்பற்ற வருளிச்செய்தார்; இது எம்பெருமானார் யோஜனையாய் பின்புள்ளாரெல்லாரும் அருளிச்செய்து கொண்டு போந்த மர்யாதையைப்பற்ற வருளிச்செய்தாரென்று கொள்ளுமித்தனை. "வணக்குடைத் தவநெறி" என்கிறவிது ப்ரபத்தி பரமாகவும் ஒரு யோஜனை ஈட்டிலே தோன்றியிருக்கையாலே "பிணக்கறவை" என்கிறவிதிலே பக்தி ப்ரபத்திகளிரண்டையும் கூட்டிக்கொண்டு, சார்வே தவநெறியிலே, "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்றும், "பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்றும் இரண்டையும் நிகமிக்கிறாரென்றாலோ வென்னில், அதுக்குமநுபபத்தியுண்டு, "பிணக்கற" என்கிற பாட்டிலே ப்ரபத்திபரமான யோஜனையுண்டானாலும் விகல்பமொழிய ஸமுச்சயம் கூடாமையாலே. ஆகையாலே ஸகல வ்யாக்யானங்களுக்குஞ் சேர, "பிணக்கற"வில் உபக்ரமித்த பக்தியை நிகமிக்கிறாரென்ன வமையும். ஆனால், பக்த்யுபதேசோபக்ரமம் "வீடுமின் முற்ற"த்திலேயாயிருக்க, "பிணக்கறவை" யென்பானென்னென்னில், "வீடுமின் என்று த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை

ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து” என்று அத்தையுமிதுக்கு சேஷமாக வொருங்கவிட்டுக் கொண்டு வந்து, “அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வு கொண்டு நலஞ்செய்வது” என்று தாம் யோஜித்த க்ரமத்தைப் பிடித்து முதல்பத்தில் தொடங்கின பக்தியோகத்தையென்றபடி. “பிணக்கற”த் தொடங்கி “வேதப்புனித விறுதிசொன்ன” என்றிறே கீழுமருளிச்செய்தது. ஆகவிப்படி முதல்பத்திலுபக்ரமித்த பக்தியை நிகமித்துக்கொண்டு.

**விளக்கம்** - (பிணக்கறவை சார்வாக நிகமித்து) - முதலில் தொடங்கப்பட்ட கருத்தை இறுதியாக முடித்தல் என்பதே சாஸ்த்ர விதிமுறை என்று காரணத்தால், திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற – என்ற பாசுரத்தில் “வணக்குடைத் தவநெறி” என்று தொடங்கி கூறப்பட்ட பக்தியோகத்தை, திருவாய்மொழி (10-4-1) - சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள் – என்று தன்னுடைய பேற்றுடன் சரியாகப் பொருந்தியவிதத்தை உரைத்து முடித்து. ஆனால் இந்த நூலின் பட்டோலையாக உள்ள நூலில், “திருவாய்மொழி (1-2-1) - வீடுமின் முற்றவும் – என்பதிலும், திருவாய்மொழி (1-3-1) – பத்துடை அடியவர் – என்பதிலும் உபதேசிக்கத் தொடங்கியதான ஸாத்யோபாயம் மற்றும் ஸித்தோபாயம் ஆகிய இரண்டு ஸாதனங்களையும் [அதாவது பக்தி மற்றும் ப்ரபத்தி என்ற இரண்டையும்], திருவாய்மொழி (10-4-9) – பரமன் பணித்த - என்று முடித்து” என்பதாக அருளிச்செய்தார்; இங்கு வேறுவிதமாக ஏன் அருளிச்செய்தார்? இதற்கு விடை அளிப்போம். திருவாய்மொழி (1-2-1) - வீடுமின் முற்றவும் – என்பதை ப்ரபத்தி வடிவமாகவும், திருவாய்மொழி (1-3) – பத்துடை அடியவர் - என்பதை பக்தி வடிவமாகவும் நம்முடைய பூர்வாசார்யர்கள் கொண்ட காரணத்தால், அந்த நூலில் இவ்விதமாக அருளிச்செய்தார். ஆனால் இங்கு, திருவாய்மொழி (1-2) - வீடுமின் முற்றவும் – என்பதை பக்தி வடிவமாக எம்பெருமானார் அருளிச்செய்தபடியே அருளிச்செய்தார். இவ்விதமாகவே அனைத்து வ்யாக்யானங்களில் கூறப்படுவதாகவும், ஈட்டின் தொடக்கத்தில் அருளிச்செய்யப்படுவதாகவும் உள்ளது. இதே முறையில் இவர் “முதல் பத்தில் பக்தியை அருளிச்செய்கிறார்” என்று கூறினார். ஆகவே அந்தப் பட்டோலையில், முன்பு உள்ள ஆசார்யர்கள் அருளிச்செய்தவிதமாக உரைத்தார்; இங்கு எம்பெருமானார் அருளிச்செய்ததாகப் பின்பு உள்ளவர்கள் அனைவரும் அருளிச்செய்து வந்த விதமாக உரைத்தார். ஆனால், “திருவாய்மொழி (1-3-5) - வணக்குடைத் தவநெறி - என்பது ப்ரபத்தி வடிவமாகவே உள்ளது”, என்று ஈட்டு வ்யாக்யானத்தில் கூறப்பட்டுள்ளது; எனவே

திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்பதில் பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டையும் சேர்த்துக்கொண்டு, திருவாய்மொழி (10-4-1) – சார்வே தவநெறி - என்பதில் உள்ளதான "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்பதன் மூலம் பக்தி நெறியையும், "திருவாய்மொழி (10-4-9) – பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்பதன் மூலம் ப்ரபத்தி நெறியையும் அருளிசெய்கிறார் என்று கொள்ளலாம் அல்லவோ? இதற்கு விடை அளிப்போம். இவ்விதம் கொள்வதில் பொருந்தாமை ஏற்படும். எப்படி? திருவாய்மொழி (1-2-5) – பிணக்கற - என்ற பாசுரத்தில் ப்ரபத்தியானது உள்ளது என்றாலும், இத்தகைய கருத்தானது தனியாகவே கூறப்பட்டது அல்லாமல் சேர்த்துக் கூறப்படவில்லை. எனவே அனைத்து வ்யாக்யானங்களுக்கும் பொருந்தும்விதமாக திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்பதில் தொடங்கப்பட்ட பக்தியையே, திருவாய்மொழி (10-4-1) – சார்வே – என்பதில் முடிக்கிறார் என்று கொள்ளலாம். ஆனால் பக்தி குறித்த உபதேசமானது திருவாய்மொழி (1-2-1) – வீடுமின் முற்றவும் - என்பதில் தொடங்கப்படுவதாக உள்ளபோது, திருவாய்மொழி (1-3-5) – பிணக்கற - என்பதில் தொடங்கப்படுவதாக ஏன் கூறவேண்டும்? ஆசார்யஹ்ருதயம் ( 219) - வீடுமின் என்று த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து – என்பதில் கூறப்பட்டபடி அந்தத் திருவாய்மொழியையும் இதற்கு உறுப்பாக ஒன்றாகச் சேர்த்து உரைத்துக் கொண்டு வந்து, ஆசார்யஹ்ருதயம் (219) – அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வு கொண்டு நலஞ்செய்வது – என்று தான் முன்பு அருளிச்செய்த அதே முறையைப் பின்பற்றி, "முதல் பத்தில் தொடக்கப் பெற்ற பக்தியோகத்தை" என்று அருளிச்செய்தார். ஆசார்யஹ்ருதயம் (224) என்பதில் "பிணக்கற" என்று தொடங்கி "வேதப்புனித விறுதிசொன்ன" என்று அல்லவோ அருளிச்செய்தார்? எனவே இப்படியாக முதல் பத்தில் தொடங்கப்பட்ட பக்தியை முடித்துக் கொண்டு.

**வ்யாக்யானம்** - [7] (எண்பெருக்கிலெண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி) "எண் பெருக்கந்நலத்தொண்பொருளீறில வண்புகழ் நாரணன்" என்று முதல் பத்திலே பஜநாலம்பநமாகச் சொல்லப்பட்டதாய், "எண்ணும் திருநாமம்" என்று பஜந தசையில் அநுஸந்திக்கப்படும் திருநாமமான திருமந்த்ரத்தினுடைய சப்தத்தையும் அர்த்தத்தையும், "நாரணம்" என்றும், "நாரணனெம்மான்" இத்யாதியாலும் ஸங்க்ரஹமாம்படி சுருங்கவுபதேசித்தும். (மாதவனென்று த்வயமாக்கி) பூர்வோத்தர வாக்யங்களில் ஸ்ரீமத்


Email:sridharan_book@yahoo.co.in

பதார்த்தங்களைத் திருவுள்ளம் பற்றிக்கொண்டு, “மாதவனென்றென்றோதவல்லீரேல்” என்று கீழ்ச்சொன்ன நாராயண சப்தத்தோடே மாதவனென்கிற வித்தை இரண்டு பர்யாயம் சேர்த்துச் சொல்ல வல்லீர்களாகி லென்கையாலே அந்தத் திருமந்த்ரத்தை அதினுடைய விசதாநுஸந்தாநமான த்வயரூபேண வெளியிட்டு. (கரண த்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து) ஈச்வரன் தம்மைக் கொண்டு போகையிலே த்வரிக்கிறபடியாலும் கேட்கிறவர்களுக்கு ப்ரதிபத்தி விஷயமாம்படியாகவும் சுருங்கக் கொண்டு, “தாள்வாய் மலரிட்டு நாள்வாய் நாடீர்”, “பாடீரவன் நாமம்”, “சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே” என்றிப்படி கரண த்ரயத்தாலும் ப்ரயோகிக்கப்படும் பகவதாச்ரயண வ்ருத்தியை, பரந்த சடங்குகளைச் சுருங்க அநுஷ்டேயார்த்த ப்ரகாசகமான ப்ரயோக வ்ருத்தியாக்கிக் கையோலை செய்து கொடுக்குமாப்போலே ஸம்ஸாரிகளுக்கு தர்சிப்பித்து. (செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவிழி காவலிட்டு) “செஞ்சொற்கவிகாளுயிர் காத்தாட் செய்மின்” என்று அவனுக்கடிமை செய்வீர்! அவனுடைய சீலாதிகளிலே அகப்பட்டழுந்திப் போகாமல் உங்களுயிரை நோக்கிக் கொண்டு அடிமை செய்யப்பாருங்கோளென்று உபதேசிக்கையாலே அநுபவ கைங்கர்யங்களோடே நடக்கிற ஸகோத்ரிகளுக்கு அரணழியாமல் கள்ளவழி காவலிடுவாரைப்போலே சீலகுணமாகிற ஆழங்காலில் இழியாதே கொள்ளுங்கோளென்று வஞ்சக்கள்வன் உள்கலந்தழிக்கும் வழிக்குக் காவலிட்டு.

**விளக்கம்** - (எண் பெருக்கில்) – திருவாய்மொழி (1-2-10) – எண் பெருக்கு அந்நலத்து ஒண்பொருள் ஈறு இல வண்புகழ் நாரணன் – என்று முதல் பத்தில் பஜனம் செய்வதற்கு ஏற்றபடியாகக் கூறப்பட்டதும், திருவாய்மொழி (10-5-1) - எண்ணும் திருநாமம் - என்று பஜனம் செய்யப்படுகின்ற இடத்தில் கூறப்படுவதும் ஆகிய திருநாமமான திருமந்த்ரத்தின் சொல் மற்றும் பொருள் ஆகியவற்றை, திருவாய்மொழி (10-5-2) – நாரணம் – என்றும், திருவாய்மொழி (10-5-2) - நாரணன் எம்மான் – என்றும் உள்ள இடங்களில் மிகவும் எளிதாக அறியும்விதத்தில் சுருக்கமாக உபதேசம் செய்தும். (மாதவன் என்று த்வயமாக்கி) - த்வயத்தின் முதல் வாக்கியம் மற்றும் இரண்டாம் வாக்கியம் ஆகியவற்றில் காணப்படும் “ஸ்ரீமதே” என்ற சொல்லுடைய அர்த்தத்தைத் தனது கடந்த பாசுரங்களில் கூறப்பட்டதான “நாராயணன்” என்ற சொல்லுடன் “மாதவன்” என்ற சொல்லை, இரண்டும் ஒரு பொருளை அளிப்பவையாகக் கொண்டு சேர்த்து உரைப்பீர்களாக என்பதை மனதில் நிறுத்தியவராக, அந்தத் திருமந்த்ரத்தை மிகவும் விரிவாகப் பொருள் தரவல்லதாக உள்ள த்வயரூபமாக வெளியிட்டும். (கரண த்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து


**Email:**sridharan_book@yahoo.co.in

கொடுத்து) - ஸர்வேச்வரன் நம்மாழ்வாராகிய தன்னை அழைத்துக் கொண்டு செல்வதற்கு விரைந்தபடி உள்ளதால், கேட்பவர்களுக்கு மிகவும் எளிதாக விளங்கும்படியாக சுருக்கமாகவே, திருவாய்மொழி (10-5-4) – தாள்வாய் மலரிட்டு நாள்வாய் நாடீர் – என்றும், திருவாய்மொழி (10-5-5) – பாடீர் அவன் நாமம் – என்றும், திருவாய்மொழி (10-5-10) – சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே – என்றும் இவ்விதமாகத் தனது மனம், சொல் மற்றும் சரீரம் ஆகிய மூன்று கரணங்களாலும் செய்யப்படுவதான "ஸர்வேச்வரனை அடைதல்" என்னும் செயலை, மிகவும் விரிவாக உள்ளதான செயல்முறைகளைச் சுருக்கமாக இயற்றலாம் என்பதை உணர்த்தும்விதமான "இவ்விதம் இதனைச் செய்தல் வேண்டும்" என்று மிகவும் எளிதாகச் செய்து காண்பிப்பது போன்று, இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்குக் காண்பித்து (செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவிழி காவலிட்டு) - திருவாய்மொழி (10-7-1) - செஞ்சொற்கவிகாளுயிர் காத்தாட் செய்மின் - என்று "அவனுக்கு மட்டுமே அடிமைத்தனம் செய்வீர்களாக. அவனுடைய சீலம் போன்ற குணங்களில் சிக்குண்டு ஏதும் செய்யாமல் நிற்காமல், உங்களுடைய ஆத்மாவை நோக்கியபடி அவனுக்குக் கைங்கர்யம் செய்ய முயலுங்கள்" என உபதேசம் செய்வதால், அனுபவ கைங்கர்யங்களுடன் வாழ்ந்தபடி உள்ளவர்களான ஒரு குலம் என்று பிறந்தவர்களுக்கு, அரண் அழிந்து போகாமல், மறைவான பாதைகளை நன்றாகப் பாதுகாப்பது போன்று, சீலம் முதலான குணங்களில் ஈடுபட்டு அசைவற்று நின்று விடாதீர்கள் என்று, வஞ்சக் கள்வனாகிய அவன் நம்முள் புகுந்து நம்மை அழிக்கின்ற வழிக்குக் காவல் செய்து வைத்து.

**வ்யாக்யானம்** - [8] (மனம் திருத்தி வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம் தரவிரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்டவாக்கையிலே புக்குத் தான நகர்களை அதிலே வகுத்து குரவை துவரைகளிலே வடிவு கொண்ட சபலனுக்கு தேஹ தோஷமறிவித்து) "தன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்று "வளவேழுல"கிலே அயோக்யரென்றகன்ற தம்மைத் தன் சீலவத்தையைக் காட்டி மனஸ்ஸைத் திருத்திச் சேர்த்துக் கொண்டு "இன்னமுமிவர் இங்கேயிருக்கில் அயோக்யரென்றகலுவர், அகலவொண்ணாத தேசத்தேறக் கொண்டு போகவேணும்" என்று "வீடுதிருத்துவான்" என்கிறபடியே பரமபதத்தைக் கோடிப்பதாகப்போய், அது செய்து மீளுவதற்கு முன்னே "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" என்கிறபடியே தம்முபதேசத்தாலே நாடெல்லாம் திருத்தி, தானிங்கே தம்மை வைத்துக் கொள்ள நினைத்த

காரியமும் தலைக்கட்டினவாறே வந்து, "இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்று மீள வந்து பரமபதத்தேறக் கொண்டு போகையிலே த்வரித்து, சரம சரீரமாகையாலே தம்முடைய திருமேனியில் தனக்குண்டான வ்யாமோஹத்தாலே கொண்டு போக விரைந்து, அத்தையுங்கூட மறந்து, "கோவிந்தன் குடிகொண்டான்" என்கிறபடியே ஸபரிகரனாய்க் கொண்டு, "என் மாயவாக்கையிதனுள் புக்கு" என்று த்யாஜ்யமென்று குந்தியடியிட்டுத் தாம் சரக்குக் கட்டிப் புறப்பட்டு நிற்கிற தேஹத்தினுள்ளே தான் புகுந்து, "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற பாட்டின்படியே "தான நகர்கள்" என்று தனக்கு வாஸஸ்தாநமான திவ்யநகரங்களில் பண்ணும் விருப்பத்தை யெல்லாம் ஓரோரவயவங்களிலே பண்ணி எல்லாமிதுக்குள்ளேயாக வகுத்து, "அங்கநா மங்கநாமந்தரே மாதவோ மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா" என்கிறபடியே திருக்குரவையில் பெண்களோடே அநேக விக்ரஹ பரிக்ரஹம் பண்ணி அநுபவித்தாப் போலவும், "ஏகஸ்மிந்நேவ கோவிந்த: காலே தாஸாம் மஹாமுநே, ஜக்ராஹ விதிவத் பாணீந் ப்ருதக் கேஹேஷு தர்மத:, உவாஸ விப்ர ஸர்வாஸாம் விச்வரூபதரோ ஹரி:" என்கிறபடியே ஸ்ரீமத் த்வாரகையில் தேவிமாருடனே பதினாறாயிரம் விக்ரஹம் கொண்டு அநுபவித்தாப்போலவும்; அநேக விக்ரஹம் கொண்டு தம்முடைய அவயவங்கள் தோறும் அநுபவிக்கும்படி தம் திருமேனியிலே அதிசபலனானவனுக்கு, "பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களான உன் மாமாயை மங்கவொட்டு" என்று ஸ்வதேஹ தோஷத்தை அறிவித்து, இத்தை விடுவிக்கவேணும் என்று கால்கட்டி.

**விளக்கம்** - (மனம் திருத்தி) - திருவாய்மொழி (1-5) - வளவேழ் உலகு – என்ற திருவாய்மொழியில், திருவாய்மொழி (1-5-10) - தன்பால் மனம் வைக்கத் திருத்தி – என்பதற்கு ஏற்ப, "நான் தாழ்ந்தவன்" என்று அகன்று சென்ற நம்மாழ்வாராகிய தன்னை, ஸர்வேச்வரனாகிய அவன் தன்னுடைய சீல குணத்தைக் காண்பித்து மனதைத் திருத்தித் தன்னிடம் சேர்ந்துக் கொண்டு. (வீடு திருத்தப்போய்) - தனது திருவுள்ளத்தில் ஸர்வேச்வரன், "இவர் மேலும் இந்த ஸம்ஸாரத்திலேயே இருந்தால், தன்னைத் தாழ்ந்தவராகவே எண்ணியபடி மீண்டும் நம்மை விட்டு அகன்றுவிடுவார். ஆகவே இவரை நாம் பரமபதம் கொண்டு செல்லவேண்டும்", என்று எண்ணினான்; ஆகவே திருவாய்மொழி (1-5-10) – வீடுதிருத்துவான் - என்று பரமபதத்தை இவருக்காக வைத்து, அதனைச் செய்து மீண்டும் இங்கு வருவதற்கு முன்பாக, (நாடு திருத்தினவாறே) - திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல் – என்பதற்கு ஏற்ப தனது

உபதேசம் காரணமாக அனைத்து உலகங்களையும் திருத்தி, அவன் இங்கு இவரை வைத்துக்கொள்ள எண்ணிய என்ணமும் நிறைவேறிய பின்னர் , (வந்து விண்ணுலகம் தர விரைந்து) - திருவாய்மொழி (10-6-3) - இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் - என்பதற்கு ஏற்ப மீண்டும் இங்கு வந்து இவரைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்வதற்காக விரைந்து வந்து, (அத்தை மறந்து) - இந்தச் சரீரம் இறுதியான சரீரம் என்பதால், நம்மாழ்வாருடைய திருமேனியில் அவனுக்கு ஏற்பட்ட மயக்கம் காரணமாகத் தன்னையும் மறந்து. (குடி கொண்டு தாம் புறப்பட்ட ஆக்கையில் புகுந்து) - திருவாய்மொழி (10-6-7) - கோவிந்தன் குடிகொண்டான் - என்பதற்கு ஏற்பத் தனது பரிவாரங்களுடன் சேர்ந்தவனாக, திருவாய்மொழி (10-7-3) - என் மாய ஆக்கை இதனுள் புக்கு - என்பதற்கு ஏற்ப உள்ளதான கைவிடத்தக்கது என்று அனைத்தையும் முன்னேற்பாடாகச் செய்து புறப்பட்டு நிற்கும் இந்தச் சரீரத்தில் தான் புகுந்து. (தான நகர்களை அதிலே வகுத்து) - திருவாய்மொழி (10-7-8) - திருமாலிருஞ்சோலைமலையே - என்ற பாசுரத்திற்கு ஏற்ப திருவாய்மொழி (8-6-8) – தான நகர்கள் - என்பதாகத் தான் வாசம் செய்யும் இடங்களாகிய திவ்யதேசங்களில் செய்கின்ற விருப்பங்கள் அனைத்தையும் இவருடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்களிலும் வைத்து, அனைத்தும் இவைகளுக்குள் என்று செய்து. (குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு) - அங்கநா மங்கநாமந்தரே மாதவோ மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா - ஒவ்வொரு கோபிகைக்கும் நடுவே ஒரு க்ருஷ்ணன், ஒவ்வொரு க்ருஷ்ணனுக்கு நடுவே ஒரு கோபிகை – என்பதற்கு எற்ப ஆய்ப்பாடியில் உள்ள கோபிகைகளுடன் பல திருமேனிகள் எடுத்து அனுபவித்தது போன்றும், ஸ்ரீவிபு (5-3-17) – ஏகஸ்மிந்நேவ கோவிந்த: காலே தாஸாம் மஹாமுநே, ஜக்ராஹ விதிவத் பாணீந் ப்ருதக் கேஹேஷு தர்மத: - க்ருஷ்ணன் ஒரே நேரத்தில் அனைத்து வீடுகளிலும் இருந்தபடி சாஸ்த்ரம் விதித்த முறைகளுக்கு ஏற்ப அவர்களைத் திருமணம் செய்துகொண்டான் - என்றும், ஸ்ரீவிபு (3-31-20) - உவாஸ விப்ர ஸர்வாஸாம் விச்வரூபதரோ ஹரி: - இரவுபொழுதில் பல திருமேனிகள் எடுத்த க்ருஷ்ணன் அவரவர்கள் வீடுகளில் வசித்தான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸ்ரீத்வாரகையில் தேவிமார்களுடன் பதினாராயிரம் திருமேனி கண்டு அனுபவித்தது போன்றும், பல திருமேனிகள் எடுத்து தனது அவயவங்கள் அனைத்தையும் அனுபவிக்கும்படியாகத் தனது திருமேனியில் மிகுந்த ப்ரேமை கொண்ட ஸர்வேச்வரனுக்கு, (தேஹ தோஷம் அறிவித்து) - திருவாய்மொழி (10-8-10) – பொங்கை ஐம்புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி

மானாங்கார மனங்களான உன் மாமாயை மங்கவொட்டு - என்று தனது சரீரத்தின் தோஷத்தை உணர்த்தி, இதிலிருந்து தன்னை விடுவிக்கவேண்டும் என்று அவன் நகராத விதத்தில் அவனுடைய திருவடிகளைப் பற்றி நின்று.

**வ்யாக்யானம்** - [9] (மாயையை மடித்து) அவனும் இத்தை விடுவிப்பதாக அநுமதிபண்ண, ப்ரீதராய் “மடித்தேன் மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை” என்று ஸம்ஸாரத்திலே நிற்கைக்கடியான மாயையுண்டு மூலப்ரக்ருதி, அத்தை திரிய விடுவித்தேனென்று செருக்கி. (வானே தரக்கருதிக் கருத்தின்கட் பெரியனானவனை) “வானே தருவானெனக்காய்” என்று தமக்குப் பரமபதத்தைத் தருவானாக வொருப்பட்டு, “கருத்தின் கட்பெரியன்” என்று உபயவிபூதியோகத்தால் வரும் அந்யபரதையடையத் தீர்ந்து, தம்மையவ்வருகே கொடு போகையிலும் ஆதிவாஹிகரை நியமிக்கையிலும் தான் முற்பாடனாய்க் கொண்டு போகையிலும் பெருக்கப்பாரியா நிற்கிறவனை. அன்றிக்கே, “மாயையை மடித்து” என்கிறத்தை மேலோடு சேர்த்து, “மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை மடித்தேன்” என்று தாம் பேசும்படி அசித் ஸம்பந்தத்தை யறுத்து, “வானே தருவான்” என்று தமக்குப் பரமபதத்தைத் தருவானாக உத்யோகித்த, “கருத்தின் கட்பெரியன்” என்று தம்மாலெண்ணி முடிக்கவொண்ணாதபடி தங்கார்யத்தில் த்வரிக்கிறவனை யென்றுமாம். ஆகவிப்படி தாம் சொன்னபடி செய்யக்கடவனாய், தம்மைக் கொண்டு போகையிலே மிகவும் பாரிக்கிறவனை. (இன்று அஹேதுகமாகவாதரித்த நீ அநாத்யநாதர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க) “இன்றென்னைப் பொருளாக்கி” என்று தொடங்கி இன்றிப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரித்த நீ அநாதிகாலமென்னை உபேக்ஷித்திருந்ததற்கு ஹேதுவை அருளிச்செய்யவேணுமென்று மடியைப் பிடித்துக் கேட்க, இதுக்குச் சொல்லலாமுத்தரமென்னென்று தன்னிலே நிரூபித்து, இவையொன்று மிவர்க்குச் சொல்லத்தகாதன வென்று அவன் நிருத்தரனாய் நின்றமையை நெடுக உபபாதிக்கிறார் மேல். ஈச்வரன் நிரூபித்த க்ரமந் தானிருக்கும்படி:-

**விளக்கம்** - (மாயையை மடித்து) - அவனும் இதிலிருந்து அவரை விடுவிப்பதாக ஏற்றுக்கொள்ள, இவர் மிகவும் மகிழ்ந்து, திருவாய்மொழி (10-8-3) - மடித்தேன் மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை - என்பதற்கு ஏற்ப, “இந்த ஸம்ஸாரத்தில் நிற்பதற்குக் காரணமான மாயையாக மூலப்ரக்ருதி உள்ளது. அதனை முற்றிலுமாக

விடுவித்தேன்”, என்று செருக்கு அடைந்து. (வானே தரக்கருதி) - திருவாய்மொழி (10-8-5) - வானே தருவான் எனக்காய் – என்பதற்கு ஏற்ப தனக்குப் பரமபதத்தை அளிப்பவனாகத் தீர்மானித்து. (கருத்தின்கண் பெரியனானவனை) - திருவாய்மொழி (10-8-8) - கருத்தின் கட்பெரியன் - என்று நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் கொண்டவன் என்ற காரணத்தால் ஏற்படுவதான, மற்ற அனைத்து ஈடுபாடுகளையும் விலக்கி, தம்மை அங்கு அழைத்துக் செல்வதிலும், ஆதிவாஹிகரை நியமிப்பதிலும் முனைந்து, அழைத்துச் செல்வதில் ஆழ்ந்து எண்ணுபவனை. அல்லது இங்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம்; “மாயையை மடித்து” என்பதை பின்னர் வருவதான “கருதி கருத்தின்கண் பெரியவன் ஆனவனை” என்பதுடன் சேர்த்துக் கொண்டு, திருவாய்மொழி (10-8-3) - மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை மடித்தேன் – என்று தான் கூறும் விதத்தில் சரீரத் தொடர்பை அறுத்து, திருவாய்மொழி (10-8-5) - வானே தருவான் - என்பதற்கு ஏற்ப தனக்குப் பரமபதத்தை அளிப்பதாக முயல்கின்ற, திருவாய்மொழி (10-8-8) - கருத்தின் கட்பெரியன் - என்று தன்னால் எண்ணி முடிப்பதற்கு நேரம் இல்லாதபடி விரைவாகச் செயலாற்றுபவனை என்றும் கூறலாம். இப்படியாகத்ததான் உரைத்தப்படிச் செய்யக்கடவனாக, தன்னைப் பரமபதத்திற்குக் கொண்ட செல்வதில் மிகவும் எதிர்பார்ப்பு கொண்டவனாக. (இன்று அஹேதுகமாகவாதரித்த நீ அநாத்யநாதர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க) - திருவாய்மொழி (10-8-9) – இன்றென்னைப் பொருளாக்கி - என்று தொடங்கி, “இன்று இவ்விதமாக இந்த ஒரு காரணமும் இன்றி அடியேனை ஏற்றுக் கொண்ட நீ, எல்லையற்ற காலங்களாக என்னை ஏற்காமல் இருந்ததன் காரணம் என்ன என்று கூறவேண்டும்” என மடியைப் பிடித்துக் கேட்டார். “இதற்கான விடை என்ன உரைப்பது?” ஸர்வேச்வரன் தனக்குள் ஆராய்ந்து நோக்கி, அதற்கான விடையைக் கூற இயலாதவாக அவன் நின்ற நிலையை அடுத்து வெளிப்படுத்துகிறார். ஸர்வேச்வரன் தனக்குள் சிந்தித்த விதம் இதுவாக இருக்கலாம் என்று அடுத்து உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - [10] (இந்த்ரிய கிங்கரராய் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீரென்னில், அவையாவையுமகற்ற நீ வைத்தவை யென்பர்) “யூயமிந்த்ரிய கிங்கரா:” என்கிறபடியே அநாதிகாலம் இந்த்ரியவச்யராய், “தூராக்குழி தூர்த்தெனைநாளகன்றிருப்பன்”, “அற்ப சாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்” என்று துஷ்பூரமான இந்த்ரியங்களுக் கிரையிட்டு எத்தனை காலமுன்னையகன்றிருக்கக் கடவேன். அல்பரஸங்களாய் அநேகவிதங்களா யிருக்கிற சப்தாதி விஷயங்களைப் பசையுண்டாக ப்ரமித்து எதிர்ப்பசை

கொடுத்துப் புசித்து ஸர்வசக்தியான உனக்குமெட்டாதபடி ஸம்ஸாரத்திலே கைகழியப்போனேனென்று நீர் தானே பேசும்படியான சப்தாதி விஷயப்ராவண்யமன்றோ நீர் அநாதிகாலம் ஸம்ஸரிக்கைக்கு ஹேதுவென்னில்; "ஓரைவர் யாவரையும் மயக்க நீ வைத்த" என்றும், "அகற்ற நீ வைத்த மாயவல்லைம்புலன்கள்" என்றும் விஷயங்களும், அவற்றில் ப்ராவண்ய ஹேதுவான இந்த்ரியங்களும் எத்தனையேனுமளவுடையாரே யாகிலும் கலங்கப் பண்ணி நீ வேண்டாதாரை அகற்றுகைக்கு வைத்தவையன்றோவென்பர். (அது தேஹ யோகத்தாலே யென்னில் அந்நாள் நீதந்த சுமடென்பர்) அந்த இந்த்ரிய வச்யதைக்கடி குண த்ரயாத்மகமான சரீர ஸம்பந்தமன்றோவென்னில், "அந்நாள் நீ தந்த வாக்கை", "அது நிற்கச் சுமடு தந்தாய்" என்று அதுவும் தந்தாய் நீயன்றோவென்பர். (முன்செய்த முழுவினையாலே யென்னில், அது துயரமேயுற்றவிருவினை யுன்கோவமுமருளு மென்பர்) அந்த தேஹ ஸம்பந்தத்துக்கடி, "முன் செய்த முழுவினை" என்று நீர் சொன்ன அநாதிகாலார்ஜித புண்யபாபரூபகர்மமன்றோ வென்று சொல்லுவோமாகில், "துயரமேதரு துன்பவின்ப வினைகளாய்", "உற்றவிருவினையாய்" என்று அசேதநமுமாய் அசக்தமுமாய் நச்வரமுமாயிருந்துள்ள புண்ய பாபரூப கர்மங்கள் உன்னுடைய நிக்ரஹாநுக்ரஹ ரூபேண பலிக்கு மவையாகையாலே கர்மமும் நீயிட்ட வழக்கென்பர்.

**விளக்கம்** – (இந்த்ரிய கிங்கரராய் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீரென்னில்) – யூயம் இந்த்ரிய கிங்கரா: – நீங்கள் இந்திரியங்களுக்காக செயலாற்றுபவர்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக இந்த்ரியங்களுக்கு வசப்பட்டவராக, திருவாய்மொழி (5-8-6) – தூராக்குழி தூர்த்தெனைநாளகன்றிருப்பன் - என்றும், திருவாய்மொழி (3-2-6) - அற்ப சாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, விட்டு அகல இயலாதபடி உள்ள இந்த்ரியங்களுக்கு எனது சரீரத்தை இரையாக அளித்து எத்தனை காலம் உன்னை அகன்று நான் நிற்கப் போகிறேன்? மிகவும் தாழ்ந்தவையாக, பலவிதமாக உள்ள புலன் விஷயங்களுக்கு ஈர்ப்பு உள்ளது போன்று மயக்கி, அதற்கு எதிர் ஈர்ப்பு அளித்து நிற்கின்ற அனைத்து சக்திகளையும் கொண்டவனாகிய உனக்கும்கூட எட்டாதவிதமாக ஸம்ஸாரத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளேன் என்று நம்மாழ்வாராகிய நீவிர் உரைக்கும்படியாக, புலன்களில் உள்ள இன்பங்களின் மீது கொள்ளும் ஆசை என்பதே நீவிர் எல்லையற்ற காலமாக இந்த ஸம்ஸாரத்தில் நீடிப்பதற்குக் காரணமாக உள்ளது என்று ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தின் மூலமாக

அருளிச்செய்தான். இதனைக் கேட்ட நம்மாழ்வார், “(அவை யாவையும் அகற்ற நீ வைத்தவை என்பர்) – திருவாய்மொழி (7-1-8) - ஓரைவர் யாவரையும் மயக்க நீ வைத்த – என்றும், திருவாய்மொழி (5-2-8) – அகற்ற நீ வைத்த மாயவல்லைம்புலன்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப புலன் விஷயங்களும், அவற்றில் ஈடுபடுவதற்குக் காரணமாக உள்ள இந்த்ரியங்களும், எத்தனை உறுதியுள்ளவர்களையும் கலங்கும்படிச் செய்து, உனக்கு வேண்டாதவர்களை அகற்றுவதற்காக நீ ஏற்படுத்தி வைத்தவை அல்லவோ?”, என்றார். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், “(அது தேஹ யோகத்தாலே என்னில்) - இவ்விதம் இந்த்ரியங்களுக்கு வசப்பட்டு நிற்கும் நிலையானது, மூன்று குணங்களுக்கு இடமாக உள்ள சரீர ஸம்பந்தம் காரணமாக ஏற்பட்டது அல்லவோ?” என்றான். இதற்கு நம்மாழ்வார், “(அந்நாள் நீ தந்த சுமடு என்பர்) - திருவாய்மொழி (3-2-1) - அந்நாள் நீ தந்த வாக்கை - என்றும், திருவாய்மொழி (7-1-10) - அது நிற்கச் சுமடு தந்தாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அத்தகைய சரீர ஸம்பந்தமும் நீ அளித்தது அல்லவோ?”, என்கிறார். இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், “(முன் செய்த முழுவினையாலே என்னில்) - அத்தகைய சரீர ஸம்பந்தம் என்பதும் நீவிர் கூறியதான திருவாய்மொழி (1-4-2) - முன் செய்த முழுவினை - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக ஈட்டப்பட்ட புண்ணியம் மற்றும் பாப ரூபமான கர்மங்கள் காரணமாக அல்லவோ ஏற்பட்டது?”, என்று உரைத்தான். இதற்கு நம்மாழ்வார், “(அது துயரமே உற்ற இருவினை உன் கோவமும் அருளும் என்பர்) - திருவாய்மொழி (3-6-8) - துயரமேதரு துன்பவின்ப வினைகளாய் - என்றும், திருவாய்மொழி (10-10-8) - உற்றவிருவினையாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அசேதநமாகவும், சக்தி அற்றதாகவும், அழியக்கூடியதாகவும் உள்ள புண்ணிய பாப ரூபமான கர்மங்கள் அனைத்தும் உனது கோபம் மற்றும் க்ருபை மூலமாகவே ஏற்பட்டது என்பதால் கர்மங்களும் உன்னால் ஏற்படுத்தப்பட்டவையே அல்லவோ?”, என்கிறார்.

**வ்யாக்யானம்** - [11] (ஈவிலாத மதியிலேனென்னு மும்மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களென்னில், ஆங்காரமாய்ப்புக்குச் செய்கைப்பயனுண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தா வென்பர்) “ஈவிலாத தீவினைகளெத்தனை செய்தனன் கொல்” என்று முடிவின்றிக்கே யிருக்கிற கொடிய பாபங்களிலே எத்தனை பண்ணினேனென்றும், “மதியிலேன் வல்வினையே மாளாதோ” என்று நான் பண்ணின பாபமேயோ அனுபவித்தாலும் மாளாதென்றும் நீரே சொல்லுகையாலே கர்த்ருத்வமும் போக்த்ருத்வமும் உம்மதன்றோ வென்று சொல்லுவோமாகில்; “தானாங்காரமாய்ப்புக்கு

தானே தானே யானான்" என்று தானபிமானியாய்ப்புக்கு ஆத்மாத்மீயங்களில் எனக்குண்டான அபிமானத்தைத் தவிர்த்துத் தானே அபிமானியானானென்றும், "செய்கைப் பயனுண்பேனும் யானே" என்று நம்முடையபடியை யநுகரித்துச் சொல்லுகிறவிடத்திலே ஸகல கர்மங்களினுடைய பலபோக்தாவும் நானே யென்றும், "கருமமும் கருமபலனுமாகிய" என்று புண்யபாபரூபமான கர்மங்களுக்கும் கர்மபலங்களுக்கும் நியாமகனாய் என்றும் சொன்னவராகையாலே, கர்மகர்த்தாவும் தத் பலபோக்தாவும் நீயிட்ட வழக்காகையாலே கர்த்தாவும் போக்தாவும் நீயேயென்பர். "கருமமும் கருமபலனுமாகிய" என்கிறவித்தால் கர்ம கர்த்த்ரு தத் பலபோக்த்ரு தாதநீயம் விவக்ஷிதமாகையாலே யாய்த்து இவ்விடத்தில் இவர் இச்சந்தையை யெடுத்தது.

**விளக்கம்** – இதனைக் கேட்ட ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "(ஈவிலாத மதியிலேன் என்னும் உம்மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் என்னில்) – திருவாய்மொழி (4-7-3) - ஈவிலாத தீவினைகளெத்தனை செய்தனன் கொல் - என்பதற்கு ஏற்ப முடிவற்ற பாபங்கள் எத்தனை செய்தேன் என்றும், திருவாய்மொழி (1-4-3) - மதியிலேன் வல்வினையே மாளாதோ – என்பதற்கு ஏற்ப நான் செய்த பாபங்கள் அனைத்தும் அனுபவிக்காமல் கழியாது என்றும் நீவிர் உரைக்கிறீர். ஆகவே கர்மங்களைச் செய்பவனாக உள்ள தன்மை, அதன் பலன்களை அனுபவிப்பவனாக உள்ள தன்மை ஆகிய இரண்டும் உம்முடையதே அல்லவோ?", என்றான். இதற்கு நம்மாழ்வார், "(ஆங்காரமாய்ப் புக்குச் செய்கைப்பயன் உண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தா என்பர்) - திருவாய்மொழி (10-7-11) – தானாங்காரமாய்ப்புக்கு தானே தானே யானான் – என்று தன்னுடையது எனக் கருதியபடி, ஆத்மா மற்றும் ஆத்மாவுடன் ஸம்பந்தம் கொண்ட பொருள்கள் ஆகியவற்றில் ஸர்வேச்வரனாகிய எனக்கு உள்ள உடைமை என்பதைத் தவிர்த்து, மனிதர்கள் அவற்றைத் தங்களுடையது என்று எண்ணுகிறார்கள்; ஸர்வேச்வரனாகிய எனது நிலையைக் கூறும்விதத்தில் திருவாய்மொழியில் (5-6-4) – செய்கைப் பயனுண்பேனும் யானே - என்று அனைத்து கர்மங்களுடைய பலன்களை அனுபவிப்பவன் நானே என்றும், திருவாய்மொழி (3-5-10) – கருமமும் கருமபலனுமாகிய - என்று புண்ணியபாப ரூபமாக உள்ள கர்மங்களுக்கும் அவற்றுடைய பலன்களுக்கும் நானே நியமிப்பானாக உள்ளேன் என்றும் நீ கூறுகிறாய். ஆகவே கர்மங்களை இயற்றுபவனும், அவற்றின் பலன்களை அனுபவிப்பவனும் நீயே ஆகிறாய்", என்கிறார். "கருமமும் கருமபலனுமாகிய" என்பதன் மூலம், கர்மங்களை இயற்றுதல் அவனுக்கு

வசப்பட்டது என்பதால், இவர் இந்தத் திருப்பாசுரத்தின் பகுதியை அருளிச்செய்தார் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - [12] (யானே எஞ்ஞான்று மென்றத்தாலே யென்னில், அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதஞ் செய்கை உன் தொழிலென்பர்) "யானே யென்னை யறியகிலாதே யானே யென்தனதே யென்றிருந்தேன்" என்றும், "எஞ்ஞான்றும்" என்று தொடங்கி, "மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி" என்றும் நீர் சொன்ன அஜ்ஞாநாந்யதா ஜ்ஞாநாதிகளாலே காணும் உமக்கந்த கர்த்ருத்வ போக்த்ருத்வங்களுண்டாய்த்தென்று சொன்னோமாகில்; "அயர்ப்பாய்த் தேற்றமுமாய்", "மாட்டாத பல சமய மதி கொடுத்தாய்", "உள்ளம் பேதஞ் செய்திட்டு உயிருண்ட வுபாயங்களும்" என்று ஜ்ஞாநாஜ்ஞாநங்களிரண்டும் நீயிட்ட வழக்காகையாலே அஜ்ஞாநாந்யதாஜ்ஞாநாதிகளை விளைக்கையும் உன் க்ருத்யமென்பர். (ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது, அக மேனியிலழுக்கறுக்கை அபிமாநிக்ருத்யம்) "யாதானுமோராக்கையில் புக்கு" இத்யாதிப்படியே ஸூக்ஷ்ம ப்ரக்ருதி விசிஷ்டனாய்க் கொண்டு ஸ்வகர்மாநுகுணமாக நாநாவித சரீரங்களிலே ஒன்றுவிட்டு ஒன்றைப் பற்றித் தடுமாறித் திரியும் ஜீவனுக்கு தேஹேந்த்ரியத்வேந போக்யத்வேநாவஸ்திதையான ப்ரக்ருதியைப் பற்றிக் கிடக்கிற சைதந்யம், "யாதானும் பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலே ஏதேனுமொன்றையவலம்பித்து நம்மை விட்டகலும் வ்ரதத்துக்கு ஹேதுவாயிருப்பதொன்று, "அகமேனியொழியாமே" என்று நமக்கந்தரங்க சரீரமான இவ்வாத்மாவைப் பற்றிக் கிடக்கிற ப்ரக்ருதி ஸம்பந்தரூப மாலிந்யத்தைப் போக்குகை, இவ்வாத்மாவுக்கபிமானியான நம்முடைய க்ருத்யமாயிருந்தது. அன்றிக்கே (ஜீவப்ரக்ருதி) இத்யாதிக்கு, "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம்" என்று சொல்லப்பட்ட ஜீவனாகிற ப்ரக்ருதியில் கிடக்கிற சைதந்யம், "யாதானும் பற்றி நீங்கும்" என்கிறபடியே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் ஏதேனுமொன்றைப் பற்றி நம்மை விட்டகலும் வ்ரத ஹேதுவாயிருப்பதொன்று; அசித்து சரீரமாயிருக்கச்செய்தே அப்படியன்றிக்கே, "அகமேனி" என்று நமக்கு அந்தரங்க சரீரமாயிருக்கிற இவ்வாத்ம வஸ்துவில் கிடக்கிற ப்ரக்ருதி ஸம்பந்த ரூபமான மாலிந்யத்தைப் போக்குகை இதுக்கு அபிமானியான நம்முடைய க்ருத்யமாயிருந்ததென்னவுமாம்.


**Email:**sridharan_book@yahoo.co.in

**விளக்கம்** – "(யானே எஞ்ஞான்றும் என்றத்தாலே என்னில்) – திருவாய்மொழி (2-9-9) - யானே என்னை அறியகிலாதே யானே என்தனதே என்றிருந்தேன் – என்றும், திருவாய்மொழி (3-2-7) – எஞ்ஞான்றும் - என்று தொடங்கி திருவாய்மொழி (3-2-7) – மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி - என்றும் நீவிர் உரைத்த அஜ்ஞானம் மற்றும் அந்யதா ஞானம் ஆகியவற்றால் அல்லவோ நீவிர் கூறிய அந்த இரண்டு தன்மைகளும் உமக்கு ஏற்பட்டன?", என்று ஸர்வேச்வரன் கேட்டான். இதற்கு நம்மாழ்வார், "(அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதஞ் செய்கை உன் தொழிலென்பர்) - திருவாய்மொழி (7-8-6) - அயர்ப்பாய்த் தேற்றமுமாய் - என்றும், திருவாய்மொழி (3-4-4) – மாட்டாத பல சமய மதி கொடுத்தாய் – என்றும், திருவாய்மொழி (5-10-4) - உள்ளம் பேதம் செய்திட்டு உயிருண்ட உபாயங்களும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஞானம் அற்றும் அஜ்ஞானம் ஆகிய இரண்டும் நீ உண்டாக்கும் நிலைகளே என்பதால், அஜ்ஞானம் மற்றும் அந்யதா ஞானம் ஆகியவற்றை ஏற்படுத்துவதும் உனது செயல்களே ஆகும்" என்றார்.

(ஜீவப்ரக்ருதி சைதந்யம்) – [குறிப்பு: இந்தப் பத்தி தொடங்கி, பதினான்காம் எண்ணுள்ள பத்தி முடிய உள்ள பலவும், ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில் நம்மாழ்வாரைக் குறித்து எண்ணும் விஷயங்களைச் கூறுவதாக உள்ளது] திருவிருத்தம் (95) – யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு - என்பதற்கு ஏற்ப ஸூக்ஷ்மமான சரீரத்தைக் கொண்டதாக உள்ள ஆத்மாவானது தனது கர்மங்களுக்கு ஏற்ப, பலவிதமான ஸ்தூல சரீரங்களில் ஒன்று விட்டு ஒன்று மாறியபடி தடுமாறித் திரிந்து நிற்கிறது. இப்படிப்பட்ட ஆத்மாவிற்கு சரீர வடிவமாகவும், இந்திரியங்களுடைய வடிவமாகவும், அனுபவிக்கப்படும் வடிவமாகவும் உள்ளதான சரீரத்தைப் பற்றி நிற்கின்ற அறிவானது, (நீங்கும் வ்ரதஹேது என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவிருத்தம் (95) - யாதானும் பற்றி நீங்கும் விரதம் - என்பதற்கு ஏற்ப, இந்த உலகில் உள்ள ஏதேனும் ஒன்றைப் பற்றியபடி நின்று, நம்மைவிட்டு அகலும் விரதத்திற்குக் காரணமாக உள்ளது என்று இவர் நன்கு அறிந்தவர் ஆவார். (அகமேனியில் அழுக்கறுக்கை அபிமாநி க்ருத்யம் என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) – திருவாய்மொழி (9-7-10) – அகமேனி ஒழியாமே – என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனாகிய நமக்கு மிகவும் அந்தரங்கமாக உள்ள சரீரமான இந்த ஜீவாத்மாவை அண்டி நிற்கின்ற சரீர ஸம்பந்தம் காரணமாக உண்டாகும் தோஷங்களை நீக்குதல் என்னும் செயலானது, இந்த ஜீவாத்மா மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட ஸர்வேவரனாகிய நம்முடையதே ஆகும் என்பதை இவர்

நன்கு அறிந்தவர் ஆவார். அல்லது “ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது, அக மேனியிலழுக்கறுக்கை அபிமாநிக்ருத்யம்” என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். கீதை (7-3) – இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் - ஜீவாத்மா என்ற சரீரமானது மகிவும் உயர்ந்தது - என்று கூறுவதற்கு ஏற்ப, ஜீவாத்மா என்ற சரீரத்தில் உள்ள ஞானமானது, திருவிருத்தம் (95) - யாதானும் பற்றி நீங்கும் - என்பதற்கு ஏற்ப, இந்த உலகில் உள்ள வஸ்துக்களில் ஏதேனும் ஒன்றை அண்டி நின்று, நம்மை விட்டு அகலும் விரதத்திற்குக் காரணமாக உள்ளது. ஸர்வேச்வரனாகிய நமக்கு அசித் வஸ்துக்களும் சரீரமாக உள்ளபோலும், திருவாய்மொழி (9-7-10) - அகமேனி - என்பதற்கு ஏற்ப, நமக்கு மிகவும் அந்தரங்கமான சரீரமாக உள்ள ஜீவாத்வாவின் மீது உண்டாகக் கூடியதான சரீரத் தொடர்பில் ஏற்பட்ட தோஷத்தை நீக்குதல் என்பது, இந்த ஆத்மாவை மிகவும் விரும்புகின்ற நம்முடைய செயலே ஆகும் என்பதை இவர் நன்றாக அறிந்தவர் ஆவார்.

**வ்யாக்யானம்** - [13] (தான் நல்கும் பந்தம் நிருபாதிகம்) “நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே, நல்கத்தானாகாதோ நாரணனைக் கண்டக்கால்” என்னும்படி நாம் ஸ்நேஹ பூர்வகமாக ரக்ஷிக்கைக்கடியான நாராயணத்வ ப்ரயுக்தமான ஸம்பந்தம் நிருபாதிகமாயிருந்தது. (ஸௌஹார்த்த மெஞ்ஞான்றும் நிற்கும்) “தனிமாப்புகழே யெஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான் தோன்றி” என்று நாமரூபங்களையிழந்து தமோபூதமான ஸமயத்திலே இவற்றையுண்டாக்க நினைத்த அத்விதீயமான மஹாகுணமென்கிற ஸௌஹார்த்தம், காலதத்வமுள்ளதனையும் ஒருவன் பண்ணுமுபகாரமேயென்று அத்தையே அநுஸந்திப்பார் ஹ்ருதயத்திலே நிற்கும்படியாக என்கையாலே அந்த ஸம்பந்தமடியாக ஸர்வர்க்கும் நன்மையை ஆசாஸிக்கைக்கடியான ஸௌஹார்த்த குணத்திலும் கண்ணழிவு சொல்லப்போகாது. (பிணக்கிபேதியாத ஜ்ஞாநாதிவைகல்யமில்லை) “பிணக்கியாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞான மூர்த்தியினாய்” என்னும்படி ஸம்ஹ்ருதி ஸமயத்திலே ஸகல சேதநாசேதநங்களையும் நாமரூபவிபாக ரஹிதமாம்படி கலசி, ஸ்ருஷ்டி தசையிலே ஒருவர் கர்மம் ஒருவர்க்குத் தட்டாதபடி பிரித்து ஸ்ருஷ்டித்தும், தனக்கொரு பேதமின்றிக்கேயிருக்கும் ஜ்ஞாநாதிகளையுடைய நமக்கு ஜ்ஞாந சக்திகளில் குறைவு சொல்லவிடமில்லை. (ஏக மூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது) “ஏகமூர்த்தி” என்கிற பாட்டிலே காரணங்களோடு கார்யங்களோடு வாசியற ஸகலத்தையும் ஸ்ருஷ்டித்து, அவற்றினுடைய தாரணார்த்தமாக அந்தராத்மாவாய்

ஸ்ருஷ்டமான பதார்த்தங்களினுடைய ரக்ஷணத்துக்காக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தருளி, இப்படி ஸர்வகாலமும் ஒருபடிபட்ட அநுக்ரஹ சீலனாகைக்கடியான ப்ராப்தியையுடையையான நீ உன் திருமேனிக்கு வேண்டும் போகோபகரணங்களெல்லாம் "பூசும் சாந்தி"ற்படியே என்பக்கலிலே யுண்டாக்கி நிர்த்துக்கனானாயேயென்று இவர் பேசினபடியே இவரைப் பெறுகைக்கு யத்னம் பண்ணுகையும் பெற்றாலுகக்கும் பலித்வமும் நமக்கேயுள்ள தொன்றாயிருந்தது.

**விளக்கம்** - (தான் நல்கும் பந்தம் நிருபாதிகம் என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவாய்மொழி (1- 4-5) - நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே, நல்கத்தானாகாதோ நாரணனைக் கண்டக்கால் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய நாம், நம்முடைய ஸ்நேஹத்தை முன்னிறுத்திக் காப்பாற்றுவதற்கு அடிப்படையாக உள்ளதான, நாராயணன் என்பதாக உள்ள தன்மையால், ஒரு ஸம்பந்தம் ஏற்படுகிறது. இத்தைய ஸம்பந்தமானது, நமக்கு எந்தவிதமான காரணத்தாலும் ஏற்படுவதில்லை; நமக்கு இயல்பாகவே உள்ளதாகும் என்பதை இவர் நன்றாக அறிந்தவர் ஆவார். (ஸௌஹார்த்தம் எஞ்ஞான்றும் நிற்கும் என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவாய்மொழி ( 8-10-7) - தனிமாப்புகழே யெஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான் தோன்றி - என்பதற்கு ஏற்ப, ப்ரளயத்தின்போது பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றை இழந்து, அனைத்தும் தமஸ் என்ற இருள் நிலையை அடைந்து நிற்கும்போது, "இவற்றை மீண்டும் முன்பு இருந்தது போன்றே உண்டாக்கவேண்டும்" என்று ஸ்நேஹம் ஏற்படுகிறது; காலம் என்ற தத்வம் உள்ளது முடிய, "இத்தகைய ஸ்நேஹம் என்பது, ஒருவன் நமக்கு செய்யும் பெரிய உபகாரம் ஆகும்" என்று அதனையே எண்ணியபடி இருப்பர்; "இவ்விதமாக உள்ளவர்கள் இதயத்தில் நிற்கும்படியாக நாம் உள்ளோம்" என்று உள்ளதால், அத்தகைய ஸம்பந்தத்தின் விளைவாக அனைவருக்கும் நமையை மட்டுமே விரும்புதல் என்பதற்கு அடிப்படையாக உள்ள ஸ்நேஹம் என்ற குணத்திலும் குறை ஏற்படாது என்பதை இவர் நன்கு அறிந்தவர் ஆவார். (பிணக்கி பேதியாத ஜ்ஞாநாதி கைவல்யம் இல்லை என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவாய்மொழி (6-2-8) - பிணக்கியாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞான மூர்த்தியினாய் – என்பதற்கு ஏற்ப "அனைத்தும் அழியும் நேரத்தில் சேதந அசேதநங்களை, பெயர் மற்றும் ரூபங்கள் என்பதான வேறுபாடுகள் அற்றதாக ஒன்றாகத் திரட்டி, ஸ்ருஷ்டி காலத்தில் ஒருவருடைய கர்மபலன்கள் வேறு ஒருவருக்குச் சென்று விடாதபடி பிரித்துப் படைத்து நிற்கும்போதிலும், தனக்கு எந்தவிதமான பேதமும் இன்றி உள்ளதான ஞானம், சக்தி

ஆகியவற்றைப் பரிபூர்ணமாகக் கொண்டவன்", என்று இவர் உரைத்தார்; ஆகவே ஸர்வேச்வரனாகிய நம்முடைய ஞானம் மற்றும் சக்தி போன்றவற்றுக்குக் குறைவு இல்லை என்று இவர் நன்றாக அறிந்தவர் ஆவார். (ஏக மூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) – திருவாய்மொழி (4-3-3) – ஏகமூர்த்தி என்னும் பாசுரத்தில், "காரணங்கள் மற்றும் கார்யங்கள் என்பதான வேறுபாடுகள் இன்றி அனைத்தையும் படைத்து, அவற்றைத் தாங்கவேண்டும் என்பதற்காக அவற்றின் அந்தராத்மாவாக, ஸ்ருஷ்டிக்கப்பட்ட பொருள்கள் அனைத்தையும் காக்கவேண்டும் என்பதற்காகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளி, இவ்விதம் அனைத்து காலத்திலும் ஒரே போன்ற க்ருபை உள்ளவனாக இருத்தலுக்கு அடிப்படையான ஸம்பந்தம் கொண்டுள்ள நீ, உனது திருமேனிக்குத் தேவையாக உள்ள இனிமையான அனைத்தையும், திருவாய்மொழி (4-3-2) – பூசும் சாந்து - என்பதில் உரைத்தபடி என்னிடம் உண்டாக்கி, நீ துக்கம் அற்றவனாக உள்ளாயே", என்று உரைத்தார்; ஆகவே இவரை நாம் பெறுவதற்குச் செய்யும் முயற்சியும், அத்தகைய முயற்சியால் ஏற்படும் பயனும் நமக்கே உள்ளது என்பதை இவர் நன்றாக அறிந்தவர் ஆவார்.

**வ்யாக்யானம்** - [14] (நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே யறிந்தனமே என்னும் ஸர்வஜ்ஞரிவர்) "தனி நின்ற சார்விலாமூர்த்தி" என்று கார்யவர்க்கமழிந்தவன்று ஸச்சப்தவாச்யனாய் நின்று "ருத்ரம் ஸமாச்ரிதா தேவா:" இத்யாதி ப்ரக்ரியையாலே உனக்கோர் அபாச்ரயமில்லாதபடி யிருக்கிறவனே! என்கையாலே நாம் வேண்டிற்றைச் செய்யும்படி நிரங்குச ஸ்வதந்த்ரனென்று அறுதியிட்டு, "அவனே அகல் ஞாலம் படைத்திடந்தான்" என்று தொடங்கி, "அவனே மற்றெல்லாமுமறிந்தனமே" என்று ஸகல கார்யங்களிலும் ஸஹகாரி நிரபேக்ஷனாய் ஸ்வாதீந ஸகல சேதநாசேதந ஸ்வரூபஸ்திதிகனா யிருக்குமவனென்றறிந்தோம் என்று சொல்லும்படியான ஸர்வஜ்ஞராயிருப்பாரொருவரிவர்.

**விளக்கம்** - (நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரர் என்று அவனே அறிந்தனமே என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) – "பெரிய திருவந்தாதி (71) – தனி நின்ற சார்விலா மூர்த்தி – என்பதற்கு ஏற்ப, படைக்கப்பட்ட கார்யம் அனைத்தும் அழிந்த நாளில் "ஸத்" என்று கூறப்படும் வஸ்துவாக நின்று, மஹாபாரதம் - ருத்ரம் ஸமாச்ரிதா தேவா: - தேவர்கள் ருத்ரனை அடைகிறார்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப, எந்த ஒரு பற்றுக்கொம்பும் அவசியம் இல்லாதபடி உள்ளவனே",

என்று இவர் உரைக்கிறார். இதன் மூலம், ஸர்வேச்வரனாகிய நாம், வேண்டியதைச் செய்யவல்ல சுருக்கம் அற்ற சுதந்திரம் கொண்டவன் என்பதை அறுதியிடுகிறார்; மேலும், திருவாய்மொழி (9-3-2) – அவனே அகல் ஞாலம் படைத்திடந்தான் - என்று தொடங்கி , திருவாய்மொழி (9-3-2) - அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே – என்று கூறுவதால், அனைத்து கார்யங்களிலும் எந்தவிதமான துணையையும் எதிர்பாராமல் உள்ளவனாக, தனக்கு வசப்பட்டதான அனைத்து சேதந அசேதநங்களுடைய ஸ்வரூபம் நிலைப்பதற்குக் காரணமாக உள்ளவன்" என்பதையும் கூறுகிறார். இவ்விதம் இவர் பலவற்றையும் நன்கு அறிந்தவர் ஆகிறார்.

**வ்யாக்யானம்** - [15] (நெறிகாட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்து நிற்க) "நெறிகாட்டி நீக்குதியோ" என்கிற பாட்டிலும், "அருகும் சுவடும் தெரிவுணரோம்" என்கிற பாட்டிலும், உபாயாந்தரத்தைக் காட்டி அகற்றப் பார்க்கிறாயோ? உன்னுடைய விலக்ஷணமான திருமேனியை நீயே காட்டியனு பவிப்பிக்கிறாயோ, பழையதாக அஜ்ஞனாய்ப் போருகிறவென்னை யென்செய்வதாக நினைத்தாய், இத்தையருளிச்செய்ய வேணுமென்றும்; உம்முடைய அருகு வருதல் உம்முடைய சுவடறிதல் செய்யாதிருக்க உம்மளவிலே ஸ்நேஹமானது அறமிக்கு வாராநின்றது, இதுக்கடி அருளச்செய்யவேணுமென்றும் முன்பு இவர் கேட்டவை நிருத்தரமானாப்போலே இப்பொழுது கேட்டவிதுவும் நிருத்தரமென்று நிலத்தைக்கீறாக் கவிழ்ந்து நிற்க.

**விளக்கம்** – (நெறிகாட்டி அருகில் சுவடும் போலே) - பெரியதிருவந்தாதி(6) - நெறிகாட்டி நீக்குதியோ - என்ற பாசுரத்தில், "மற்ற உபாயங்களை எனக்குக் காண்பித்து என்னை உன்னிடமிருந்து அகற்ற முயல்கிறாயோ? உனது சிறந்த திருமேனியை நீயே காண்பித்து நான் அதனை அனுபவிக்கப்படிச் செய்கிறாயோ? எல்லையற்ற காலமாக அறிவற்றவனாக இருந்து வரும் என்னை, என்ன செய்ய எண்ணுகிறாய்? இதனை நீ அருளிச்செய்யவேண்டும்", என்றும்; பெரியதிருவந்தாதி (8) - அருகும் சுவடும் தெரிவுணரோம் - என்ற பாசுரத்தில், "நான் உன்னை அருகில் வராமல் உள்ளபோதிலும், உன்னைக் குறித்து ஸ்நேஹம் எனக்கு அளவுக்கு அதிகமாகவே வளர்கிறது. இதற்கான காரணத்தை நீயே அருளிச்செய்ய வேண்டும்", என்றும், இவர் கேட்ட கேள்விக்கு அவன் விடை அருளிச்செய்யாமல் முன்பு நின்றதைப் போன்றே, (இதுவும் நிர் உத்தரம் என்று

கவிழ்ந்து நிற்க) - இந்தக் கேள்விக்கும் விடை கூற இயலாது என்று தனது திருவடிகளின் விரல்கள் கொண்டு நிலத்தைச் கீறியபடி அவன் கவிழ்ந்து நிற்க.

**வ்யாக்யானம்** - [16] (அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம்போலே யேறப்பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற மேகஸமுத்ர பேரீகீத காஹள சங்காசீஸ் ஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்கு) உத்ஸவங்களில் சடங்கு காட்டும் உபாத்யாயர் மந்த்ரம் தோன்றாவிட்டால் கொட்டச் சொல்லி வாத்ய கோஷத்தாலே அத்தை மறைத்துவிடுமாபோலே, தான் நிருத்தரானமை தோற்றாதபடி மறைக்கைக்காக இவனாலே ப்ரவர்த்திதமாய், “நானேறப் பெறுகின்றேன்” என்று தாம் கீழ்ச்சொன்னபடியே பரமபதத்திலே ஏறப்பெறுகிற எழுச்சியை ஸூசிப்பியா நின்றுள்ள, “சூழ்விசும்பணிமுகில் தூரிய முழக்கின ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின” என்று ராஜகுமாரர் போம்போது தூர்யாதி மங்களகோஷம் பண்ணுவாரைப்போலே பரமபதத்துக்குப் போமவர்களைக்கண்ட ப்ரீதியாலே முழங்குவது கோஷிப்பதாகாநிற்கும் மேகஸமுத்ரங்களாகிற பேரிகளுடையவும், “கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்கள்” என்கிற கீதங்களினுடையவும், “காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்” என்கிற காஹள சங்கங்களினுடையவும், “வாளொண்கண் மடந்தையர் வாழ்த்தினர்” என்கிற ஆசீஸ்ஸினுடையவும், “தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்” என்கிற ஸ்தோத்ரத்தினுடையவும் ஸம்மிச்ரகோஷமாகிற கோலாஹலம் செவிப்பட்டவாறே, அர்ச்சிராதி கதியையும் ஆதிவாஹிக ஸத்காரத்தையும் திவ்யதேச ப்ராப்தியையும் அங்குள்ளாருடைய பஹுமானத்தையும் ஆநந்தமயமான ஆஸ்த்தாநத்திலிருப்பையும் ஸ்வசரணகமல ப்ராப்தியையும் பெற்றாராகப் பேசும்படி ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்கு,

**விளக்கம்** - (அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம்போலே) - சில விசேஷங்களின்போது அங்கு சடங்குகள் செய்யும் உபாத்யாயர், தனக்கு மந்திரம் மறந்துவிட்டால், வாத்யத்தை வாசிக்கச் சொல்லி தனது தவறை மறைப்பது போன்று, (ஏறப் பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற) - ஸர்வேச்வரனாகிய தான் விடை கூட இயலாமல் நிற்பதை வெளிக்காண்பிக்காமல் மறைப்பதற்காக, தன்னால் செய்யப்பட்டதாக உள்ளதான திருவாய்மொழி (10-6-5) - நானேறப் பெறுகின்றேன் – என்று தான் கீழே உரைத்தபடியே பரமபதத்திற்குச் செல்வதான எழுச்சியைக் குறித்து மறைமுகமாக வெளிப்படுத்துகின்ற. (மேக ஸமுத்ர பேரீ) – திருவாய்மொழி (10-9-1) – சூழ்விசும்பணிமுகில் தூரிய முழக்கின ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின - என்பதற்கு ஏற்ப, அரசபுத்திரர்கள் செல்லும்போது


**Email:**sridharan_book@yahoo.co.in

மங்கள இசையை உண்டாக்குபவர் போன்று, பரமபதத்திற்குச் செல்பவர்களைக் கண்டால் அந்தக் காட்சியில் மகிழ்ந்து முழுங்குவதும் ஒலிப்பதாகவும் உள்ளதான மேகம் மற்றும் ஸமுத்ரம் என்பதான பேரி வாத்யங்களுடையதும். (கீத) – திருவாய்மொழி (10-9-5) - கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்கள் - என்பதான கீதங்களுடையதும், (காஹள சங்க) - திருவாய்மொழி (10-9-6) - - காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர் – என்பதான காஹள சங்குகளுடையதும். (ஆசீ) - திருவாய்மொழி (10-9-6) – வாள் ஒண்கண் மடந்தையர் வாழ்த்தினர் - என்பதற்கு ஏற்ப ஆசிர்வாதங்களுடையதும். (ஸ்துதி) - திருவாய்மொழி (10-9-7) - தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர் – என்பதற்கு ஏற்ப ஸ்துதிகளுடையதும். (கோலாஹலம் செவிப்பட்டவாறே) - ஆகிய கலவையாக உள்ளதான பெருத்த கோஷம் என்பதான கோலாஹலத்தைக் கேட்டவுடனே. (ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்கு) – அர்சிராதிமார்க்கத்தையும், ஆதிவாஹிகர்களுடைய உபாசாரங்களையும், பரமபதத்தை அடைதலையும், அங்குள்ளவர்களுடைய பரந்த எண்ணிக்கையையும், ஆனந்தமயமாக உள்ள திருமாமணி மண்டபத்தில் அவன் வீற்றிருப்பதையும், அவனுடைய திருவடித் தாமரைகளை அடைந்ததையும் தான் பெற்றுவிட்டதாக, தனது மானசீகமான ஞானத்தால் தரிசித்த உயர்ந்த அடைதல் என்பதற்கு.

**வ்யாக்யானம்** - [17] (தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திருவாணையிட்டு) அப்படி ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்தி மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்யஸம்ச்லேஷ யோக்யையல்லாமையாலே அத்தைப் பெறுகைக்காக, “தலைமிசையாய் வந்திட்டினி நான் போகலொட்டேன்” என்று, “தலைமேல் புனைந்தேன் சரணங்கள்”, “தலைமேலதாளிணைகள்” என்கிறபடியே மாநஸாநுபவ வைசத்யத்தாலே தம்தலைமேல் ஆகும்படிவந்த திருவடிகளைக் கட்டிக்கொண்டு, போகாமல் தடுத்து, “திருவாணை நின்னாணைகண்டாய்” என்று அவனுக்கு மறுக்கவொண்ணாத வாணையிட்டு, இப்படி ஆணையிட்டவாறே சேஷபூதரான நீர் சேஷியான நாம் செய்தபடி கண்டிருக்குமத்தனையொழிய நம்மை ஆணையிட்டுத்தடுக்கை உம்முடைய ஸ்வரூபத்தோடு விருத்தமாகையால் இதுபெறாவாணை காணுமென்ன.

**விளக்கம்** - (தலை மிசையாய் வந்த தாள்களைப் பூண்டு) இவ்விதம் தரிசித்ததான உயர்ந்த பேற்றுக்கு மனதில் கண்ட அனுபவம் மட்டுமேயாக, புறத்தில் கொண்டு

அனுபவிப்பதற்கான யோக்யதை இல்லாமையால் அதனைப் பெறுவதற்காக, திருவாய்மொழி (10-10-1) – தலைமிசையாய் வந்திட்டினி நான் போகலொட்டேன் - என்றும், திருவாய்மொழி (10-4-4) - தலைமேல் புனைந்தேன் சரணங்கள் – என்றும், திருவாய்மொழி (10-6-6) - தலைமேலதாளிணைகள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, மனதால் ஏற்பட்ட அனுபவத்தின் தெளிவு காரணமாகத் தனது தலை மீது சேர்வதாக வந்த அவனுடைய திருவடிகளைக் கட்டிக்கொண்டு, (திரு ஆணை இட்டு) - திருவாய்மொழி (10-10-2) - திருவாணை நின்னாணைகண்டாய் – என்று அவனால் மறுக்க இயலாத ஆணையைப் பிறப்பித்தார். இவ்விதம் அவர் ஆணை பிறப்பித்தவுடன் ஸர்வேச்வரன் அவரிடம், "நம்முடைய அடியவராகிய நீவிர் நாம் செய்தபடி அடங்கவேண்டும் அல்லாமல், நீவிர் நம்மை ஆணையைப் பிறப்பித்துத் தடுத்தல் என்பது உம்முடைய ஸ்வரூபத்திற்கு முரண்பட்டது ஆகும். ஆகவே உம்முடைய இந்த ஆணை செல்லாது", என்றான்.

**வ்யாக்யானம்** - (கூசஞ்செய்யாத செய்திப்பிழை) "கூசுஞ் செய்யாது கொண்டாய்" என்று ஸர்வஜ்ஞனான நீ என் பூர்வ வ்ருத்தத்தால் வந்த அயோக்யதை பார்த்துக்கூசி வாசி வையாதே உன்னோடு ஆத்மபேதமில்லாதபடி என்னைப்பரிக்ரஹித்தாய், ஆனபின்பு உன்னதன்றோ செய்திப்பிழையென்றும்.

**விளக்கம்** – இதனை கேட்ட நம்மாழ்வார் பதில் உரைக்கிறார். (கூசஞ்செய்யாத செய்திப்பிழை) - திருவாய்மொழி (10-10-2) - கூசுஞ் செய்யாது கொண்டாய் – என்று, "அனைத்தும் அறிந்தவனாகிய நீ, என்னுடைய முந்தைய செயல்களால் உண்டான தாழ்வை நோக்கிக் கூசி, என்னை வேறுபடுத்தி நோக்காமல், உன்னுடைய ஆத்ம பேதம் ஏதும் இல்லாதபடி என்னை ஏற்றுக்கொண்டாய். ஆகவே கார்யத்தின் தோஷம் என்பது உன்னுடையது அல்லவோ?", என்கிறார்.

**வ்யாக்யானம்** - [18] (பற்றுக் கொம்பற்ற கதிகேடு) "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்யான்" என்று கொடி கொள்கொம்பையொழியத் தரிக்கமாட்டாதாப்போலே என்னாத்மாவுக்கு ஜீவநஹேதுவாயிருப்பது உன்னையொழிய வேறு காண்கிறிலேன், ஆதலால் நான் அநந்யகதி என்றும். (போரவிட்டபெரும்பழி) "எம்பரஞ்சாதிக்கலுற்றென்னைப் போரவிட்டிட்டாய்" என்று என் கார்யம் நீ செய்வதாக ஏறிட்டுக்கொண்டு, உன்பக்கல்நின்றும் பிரித்து உன்குணங்கள் நடையாடாத


Email:sridharan_book@yahoo.co.in

ஸம்ஸாரத்திலே தள்ளியுபேக்ஷித்தாய், இது உனக்குப் பரிஹரிக்க வொண்ணாத பெரும்பழியன்றோவென்றும்.

**விளக்கம்** - (பற்றுக் கொம்பற்ற கதிகேடு) - திருவாய்மொழி (10-10-3) - ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்யான் - என்று, "ஒரு கொடியானது அதற்கு ஏற்றபடி உள்ள பற்றுக்கொம்பு இல்லையென்றால் பிழைக்காது என்பது போன்று எனது ஆத்மா கரையேறுவதற்கு உன்னை அல்லாமல் வேறு எதனையும் நான் காணவில்லை. ஆகவே நான் வேறு கதி அற்றவன் ஆவேன்", என்கிறார். (போரவிட்டபெரும்பழி) - திருவாய்மொழி (10-10-4) - எம்பரஞ்சாதிக்கலுற்றென்னைப் போரவிட்டிட்டாய் – என்று, "எனது செயல்களை நீ செய்வதாக எடுத்துக் கொண்டாய். ஆனால் உன்னிடமிருந்து பிரிந்து, உனது உயர்ந்த குணங்களை உணராதபடி உள்ளதான ஸம்ஸாரத்தில் என்னைத் தள்ளிவிட்டு என்னை மறந்தாய். இது உன்னால் விலக்க இயலாத பெரிய பழி அல்லவோ?", என்கிறார்.

**வ்யாக்யானம்** - [19] (புறம்போனால் வருமிழவு) "போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால் பின்னையானாரைக் கொண்டெத்தையந்தோ என தென்பதென் யானென்பதென்" என்று உன்பக்கல் நின்றும் பிரித்து அநந்யகதியான வென்னை ஸ்ருஷ்டியே தொடங்கி இவ்வளவும் புகுர நிறுத்தின நீ என் கார்யம் நான் செய்வானாகப்பார்த்து என்னை உபேக்ஷித்தால் ஸர்வசக்தியான நீ அநாதரித்த பின்பு அசக்தனான நான் எந்த உபாயத்தைக்கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது, எனக்குப் பரிஹரமாயிருப்பதொன்று உண்டென்பதோரர்த்தமுண்டோ? ப்ருதக் ஸ்திதியோக்யமாயிருப்பதொரு நானுண்டோ! ஐயோ! என்னை என்கையிலே காட்டித் தந்தால் இழவேயன்றோ உள்ளதென்றும்.

**விளக்கம்** - (புறம் போனால் வரும் இழிவு) – திருவாய்மொழி (10-10-5) - போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால் பின்னையானாரைக் கொண்டெத்தையந்தோ என தென்பதென் யானென்பதென் – என்று, "வேறு கதி ஏதும் இல்லாத என்னை உன்னிடமிருந்து பிரித்து, ஸ்ருஷ்டி காலம் தொடங்கி இதுவரை ஸம்ஸாரத்தில் என்னை புகும்படியாக நிறுத்திய நீ, எனது கார்யங்களை நானே செய்து கொள்வேன் என்று எண்ணி என்னை நோக்காமல் அலட்சியம் செய்தால், அனைத்து சக்தியும் கொண்டவனாகிய நீ என்னை ஒதுக்கிய பின்னர், சக்தி ஏதும் அற்றவனாகிய

நான் எந்த உபாயத்தைக் கைக்கொண்டு, எத்தகைய புருஷார்த்தத்தை அடைய முடியும்? எனக்கு உதவி செய்யலாம்படியாக உள்ள ஒரு பொருள் ஏதும் உள்ளதோ? உன்னைக் காட்டிலும் வேறுபட்டு நிற்கும் தகுதி எனக்கு உள்ளதோ? என்னை நீ என் வசப்படுத்தினால் எனக்கு கேடு மட்டுமே ஏற்படும்", என்கிறார்.

**வ்யாக்யானம்** - [20] (உண்டிட்ட முற்றீம்பு) "எனதாவியையின்னுயிரை மனக்காராமை மன்னியுண்டிட்டாயினி யுண்டொழியாய்" என்னுடைய ஹேயமான சரீரத்தையும் ஆத்மாவையும் மநஸ்ஸுக்கு பர்யாப்தி பிறவாமல் நிரந்தரமாக புஜித்த நீ தொடங்கினத்தைக் குறை கிடக்க விடாதே விஷயீகரித்து விடாய், புக்த சேஷமாக்கின உன்னதன்றோ முதல் தீம்பென்றும், (அன்புவளர்ந்த அடியுரம்) "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ" என்று பெரிய பிராட்டியார் பக்கல் ஸ்நேஹாதிசயத்தாலே அவள்பரிக்ரஹமான என்பக்கல் அதிப்ரவணனானவனே! நான் அந்த:புரபரிகரமன்றோ! என்பக்கல் உனக்குண்டான அன்புக்கு அடியில்லையோ! ஆகையால் அவள்பரிக்ரஹமென்கிற அடியுரமென்றும். (உயிருறவு) "பெற்றினிப் போக்குவனோ உன்னையென் தனிப்பேருயிரை" என்று அத்யந்த விஸஜாதீயனாயிருந்துவைத்து எனக்கு தாரகனான உன்னைப் பெற்றுவைத்து இனி விடுவேனோ; உயிரை விட்டு உடல் தரிக்கவற்றோவென்கிற சரீரசரீரிபாவ ஸம்பந்தமென்றும்.

**விளக்கம்** - (உண்டிட்ட முன் தீம்பு) - திருவாய்மொழி (10-10-6) - எனதாவியையின்னுயிரை மனக்காராமை மன்னியுண்டிட்டாயினி யுண்டொழியாய் – என்று, "எனது தாழ்ந்த சரீரத்தையும், ஆத்மாவையும் மனதிற்கு எத்தகைய நிறைவும் ஏற்படாதவிதமாக எப்போதும் பருகியபடி உள்ள நீ, தொடங்கிய செயலை முழுமையாகச் செய்யாமல் விடமாட்டாய். ஆனால் என் விஷயத்தில், உண்ட உணவை மீதம் வைத்த முதல் குற்றம் உன்னுடையது அல்லவோ"?, என்கிறார். (அன்பு வளர்ந்த அடி உரம்) - திருவாய்மொழி (10-10-7) - கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ - என்று, "பெரியபிராட்டியாரிடம் காண்பிக்கும் எல்லையற்ற ப்ரேமையால் அவளுடைய சிபாரிசு பெற்றவனாகிய என்னிடம் அளவற்ற அன்பு கொண்டவனே! நான் உனக்கு அந்தரங்கமான கைங்கர்யங்கள் செய்பவன் அல்லவோ? என்னிடம் உனக்கு ஏற்பட்டுள்ள அன்பிற்குக் காரணம் இல்லையோ? ஆகவே அவள் பரிகரம் என்பதான காரணமே உரமாக உள்ளது", என்கிறார். (உயிர் உறவு) - திருவாய்மொழி (10-10-8) – பெற்றினிப்

போக்குவனோ உன்னையென் தனிப்பேருயிரை - என்று, “மிகுந்த வேறுபட்டவனாக இருந்து, எனக்கு உயிராக உள்ள உன்னை நான் பெற்ற பின்னர் இனி விடுவேனோ? உயிரை விட்டு உடல் வாழுமோ? இப்படியாகவே ‘சரீரி – சரீரம்’ என்னும் ஸம்பந்தம் உள்ளது”, என்கிறார்.

**வ்யாக்யானம்** - [21] (முதலளவு துரக்கைகளாலே பெறாவாணையல்லவாக்கின பேரவா குளப்படியாம்படி) இப்படி “முதல் தனிவித்து” என்கிற பாட்டளவாக உத்தரோத்தரம் புகலற, துரக்கைகளினாலே தாமிட்டவாணை பெறாவாணையல்லாமையை ஸாதித்த “அதனில் பெரியவென்னவா” என்று தத்வத்ரயத்தையும் விளாக்குலைகொண்டு அவை குளப்படியாம்படி பெரிதான தம்முடைய பரமபக்தி குளப்படியாம்படி. (கடல் போன்ற வாதாரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில்) அதாவது, “என்னவாவறச் சூழ்ந்தாயே” என்று கீழ்ச்சொன்ன அபரிச்சேத்யமான தம்முடைய அபிநிவேசத்தையும் தன்னபிநிவேசத்தையும் பார்த்தால் இதொரு குளப்படியும் அதொரு ஸமுத்ரமுமென்னும் படியான அபிநிவேசத்தோடே வந்து ஸம்ச்லேஷித்து, “அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே” என்று மீண்டெழுந்தருளி ஸ்ரீபரதாழ்வானை மடியிலே வைத்தணைத்து உச்சிமோந்து உகந்தாப்போலே தம்முடைய விடாய் கெடும்படி யனுபவித்து அலாபநிபந்தந பரிதாபத்தாலே கூப்பிட்டவாயாலே, “அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்” என்று பேசும்படி, “அவாவறச்சூழரியை” என்று ஹரி என்கிற திருநாமத்திற்கு அநுகுணமாக தம்முடைய ஸகலதாபங்களையும் ஹரித்தமையை ஸர்வருமறியும்படி ப்ரகாசிப்பிக்கிறார் பத்தாம்பத்தில் என்கை.

**விளக்கம்** – (முதல் அளவு துரக்கைகளாலே பெறா ஆணை அல்ல ஆக்கின) - இவ்விதம் திருவாய்மொழி (10-10-9) - முதல் தனிவித்து – என்ற பாசுரம் முடிய ஸர்வேச்வரனால் மறுமொழி கூற இயலாதபடியாக, தம்முடைய பக்கம் உள்ள வாதங்கள் மூலம் தாம் இட்ட ஆணை என்பது “பெறா ஆணை” அல்ல என்பதை நிருபித்தார். (பேரவா குளப்படியாம்படி) – திருவாய்மொழி (10-10-10) – அதனில் பெரியவென்னவா - என்பதற்கு ஏற்ப தத்வ த்ரயத்தை உட்கொண்டு, அவையும் ஒரு குளப்படி நீரே என்றாகும்படியாக உள்ள பெரியதான தனது பரமபக்தியும் குளப்படி நீர் என்று ஆகும்படியாக, (கடல் போன்ற வாதாரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில்) - அதாவது, திருவாய்மொழி (10-10-10) – என் அவா அறச் சூழ்ந்தாயே – என்று உரைத்த அளவிட இயலாத தனது காதலையும், அவனுடைய


**Email:**sridharan_book@yahoo.co.in

காதலையும் ஆராய்ந்தால், தனது காதல் என்பது குளம்பு அளவு கொண்ட நீர் மட்டுமே என்றும், அவனுடைய காதல் என்பது ஸமுத்ரம் போன்ற அளவு கொண்டது என்றும் கூறலாம்படியாக பெருங்காதலுடன் அவன் வந்து தன்னுள் கலந்து, இராமாயணம் யுத்தகாண்டம் (134-39) - அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே – மிகுந்த மகிழ்வு கொண்ட இராமன் பரதனைத் தனது மடியில் அமர்த்திக் கொண்டான் - என்பதற்கு ஏற்ப, மீண்டும் அயோத்திக்கு வந்தவுடன் பரதாழ்வானைத் தனது மடியில் அமரவைத்து, அணைத்து, உச்சிமுகர்ந்து மகிழ்ந்தான் என்பது போன்று இவனும் நின்றான். இப்படியாகத் தம்முடைய தாகம் என்பது தீரும் விதமாகத் தன்னை அனுபவிக்கும்படிச் செய்து, அவனைப் பெறாத காரணத்தால் ஏற்பட்ட துன்பத்துடன் அழைத்த திருவாய் கொண்டு, திருவாய்மொழி (10-10-10) – அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன் – என்று தன்னை உரைக்கும்படியாகச் செய்தான். இப்படியாக, திருவாய்மொழி (10-10-10) – அவாவறச் சூழ் அரியை – "ஹரி" என்ற திருநாமத்திற்கு ஏற்றபடி தன்னுடைய அனைத்துவிதமான துன்பங்களையும் அவன் அழித்தான் என்ற விஷயம் அனைவரும் அறியலாம்படியாகப் பத்தாம்பத்தில் வெளியிட்டார்.

*229. உறாமையோடே உற்றேனாக்காதொழிந்தது நாடு திருந்த நச்சுப் பொய்கையாகாமைக்கு ப்ரபந்தம் தலைக்கட்ட வேர்சூடுவார் மண்பற்றுப்போலே யென்னுமிவற்றிலு மினியினியென்று இருபதின்கால் கூப்பிடும் ஆர்த்த்யதிகார பூர்த்திக்கென்னுமது முக்யம்.*

***அவதாரிகை*** *- இனிமேல், இவர் ப்ரதமத்திலே "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்று ஆர்த்தராய் சரணம் புக்கபோதே விரோதி நிவ்ருத்தி பூர்விகையான ஸ்வப்ராப்தியைப் பண்ணுவியாமல் இவ்வளவாக இவரை வைக்கைக்கடி யேதென்னுமாகாங்க்ஷயிலே, வைக்கைக்கு ஹேது பலவுமுண்டென்னுமத்தையும் அவையெல்லாவற்றிலும் முக்ய ஹேது இன்னதென்னுமத்தையு மருளிச்செய்கிறார் (உறாமையோடே) என்று தொடங்கி.*

***விளக்கம்*** *- அடுத்து நம்மாழ்வார் முதலில் திருவிருத்தம்(1) - இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - என்று துன்பம் அடைந்தவராக நின்று சரணம் புகுந்த அந்த நேரத்திலேயே, ஸர்வேச்வரனை அடைவதற்குத் தடையாக உள்ள அனைத்து விரோதிகளையும் விலக்கி, ஸர்வேச்வரனாகிய தன்னை அவர் அடையும்படியாகச் செய்யாமல், இந்த நாள் முடிய இவரை இந்த ஸம்ஸார உலகத்தில் வைத்தபடி உள்ளதற்குக் காரணம் என்ன என்ற சந்தேகம் எழுகிறது. இதற்குச் சமாதானம்*

கூறும்விதமாக, இவ்விதம் வைத்துள்ளதற்குத் தகுந்த காரணங்கள் உள்ளன என்றும், அவை அனைத்திலும் முக்கியமான காரணம் இன்னது என்றும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமிந்நின்ற நீர்மையினியாமுறாமை" என்று அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களாகிற ப்ராப்தி ப்ரதிபந்தகங்களை விடுவிக்கவேணுமென்று ஆர்த்தராய்த் திருவடிகளிலே விழுந்தபேக்ஷித்தபோதே அவற்றைப் போக்கி, "உற்றேனுகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன்" என்று திருவடிகளைக் கிட்டி ப்ரீதி பூர்வகமாக அடிமை செய்யப்பெற்றேனென்னும்படி யாக்காமல் இவரை வைத்தது, தன்னுடைய ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலும் திருந்தாத ஜகத்து இவருடைய உபதேசத்தாலே "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" என்னும்படி திருந்துகைக்காகவும், ப்ரபதநாநந்தரம் முக்தராம்படி பண்ணில் ப்ரபத்தியை நச்சுப்பொய்கையோபாதியாக நினைத்து பீதராயிழிவாரில்லையென்று அது அப்படியாகாமைக்காகவும், தானும் தன் விபூதியும் வாழும்படி இவரைக்கொண்டு கவிபாடுவிக்கத் தொடங்கின ப்ரபந்தம் பரிஸமாப்தமாகைக்காகவும், வேர்சூடுமவர்கள் பரிமளத்தில் லோபத்தாலே மண்பற்றுக் கழற்றாதாப்போலே, ஜ்ஞானிகளை சரம சரீரத்தோடே வைத்து அநுபவிக்குமவனாகையாலே, இவருடைய ஜ்ஞாந ப்ரேம பரிமளமெல்லாம் தோற்றும்படியிருக்கிற விக்ரஹத்தில் தனக்குண்டான விருப்பத்தாலேயுமென்று சொல்லுமவற்றிற்காட்டிலும், "இனியாமுறாமை" என்று தொடங்கி, "இனிவளை காப்பவரார்", "இனியுன் திருவருளாலன்றிக் காப்பரிதால்", "இனியவர் கண் தங்காது", "இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே", "இனியெம்மைச் சோரேலே", "எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவனே", "எங்கினித் தலைப்பெய்வேனே", "இனியென்னாரமுதே கூயருளாயே", "ஆவிகாப்பாரினியார்", "நெஞ்சிடர் தீர்ப்பாரினியார்", "இனியுன்னை விட்டொன்று மாற்றகிற்கின்றிலேன்", "தரியேனினி", "இனியாரைக் கொண்டென்னு சாகோ", "அத்தனையாமினி யென்னுயிரவன் கையதே", "நாரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி", "இனியிருந்தென்னுயிர் காக்குமாறென்", "இனி நான் போகலொட்டேன்", "உண்டிட்டாயினி யுண்டொழியாய்", "உன்னைப் பெற்றினிப் போக்குவனோ" என்று இப்படி இருபதின்கால் கூப்பிடும்படியான ஆர்த்தி பரம்பரையை விளைத்து பரமபக்தி பர்யந்தமான அதிகார பூர்த்தியையுண்டாக் குகைக்காக வென்னுமதுவே ப்ரதாநமென்கை. ஆர்த்த்யதிகார பூர்த்திக்கென்றது ஆர்த்தியால் வரும் அதிகாரபூர்த்திக்கென்றபடி. பரமார்த்தியாலேயிறே ப்ரபத்த்யதிகாரம் பரிபூர்ணமாவது; ஆகையாலே ஹேத்வந்தரங்களெல்லாம் அப்ரதாநங்கள். இவரை வைத்ததுக்கு ப்ரதாநஹேது இதுவென்றதாய்த்து.

**விளக்கம்** - (உறாமையோடே உற்றேனாக்காதொழிந்தது) - திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - என்று உரைப்பதன் மூலம், ஸர்வேச்வரனாகிய அவனை

அடைவதற்குத் தடையாக உள்ளவைகளான அவித்யை, கர்மவாசனை, ருசி, ஸம்ஸாரபந்தம் போன்ற பலவற்றையும் விலக்கித் தரவேண்டும் என்று மிகுந்த துன்பம் அடைந்தவராக, அவன் திருவடிகளில் விழுந்து விண்ணப்பம் செய்து நின்ற அப்போதே அவற்றை நீக்கி, திருவாய் (10-8-10) - உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம் பெற்றேன் - என்று கூறுவது போன்று, "அவனுடைய திருவடிகளை அடைந்து ப்ரீதியை முன்னிறுத்தியபடி கைங்கர்யம் செய்யும் நிலையை அடைந்தேன்" என்று செய்யாமல், இவரை இங்கேயே வைத்தது ஏனென்றால், (நாடு திருந்த) - தனது பல்வேறு ஸ்ருஷ்டிகளாலும், அவதாரங்களாலும் இந்த ஜகத்தானது திருந்தாமல் இருந்தது; ஆகவே இவருடைய உபதேசங்கள் மூலமாக திருவாய் (6-7-2) - ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் - என்னும்படியாகத் திருந்துவதற்காகவும். (நச்சுப் பொய்கையாகாமைக்கு) - ப்ரபத்தி செய்த உடனேயே முக்தர் என்று மாற்றினால், ப்ரபத்தியை நச்சு நிறைந்த பொய்கை என்று எண்ணி அச்சம் கொண்டு அதில் யாரும் ஈடுபடமாட்டார்கள் என்று சிந்திந்து, ப்ரபத்தியானது அவ்விதம் ஆகாமல் இருப்பதற்காகவும். (ப்ரபந்தம் தலைக்கட்ட) - தானும், தனது உடைமையாகிய இந்த ஜகத்தும் வாழும்படியாக இவர் மூலமாகக் கவிபாடுதல் என்பதைத் தொடங்கிய ப்ரபந்தங்கள் நிறைவு பெறுவதற்காகவும். (வேர் சூடுவார் மண் பற்றுப்போலே) - வேரைச் சூட்டிக் கொள்பவர்கள் அதன் வாசனை மீது கொள்ளும் விருப்பம் காரணமாக, அதில் உள்ள மண்பற்றை அகற்றாமல் உள்ளது போன்று, ஞானிகளை அவர்களுடைய இறுதியான சரீரத்துடன் சேர்த்து அனுபவிப்பவனாக ஸர்வேச்வரன் உள்ளான். ஆகவே இவருடைய ஞானம், ப்ரேமை, பரிமளம் போன்ற பலவும் வெளிப்படும் விதமாக உள்ள இவருடைய திருமேனியில் தனக்கு உள்ள விருப்பம் காரணமாகவும். (என்னும் அவற்றிலும்) - அது போன்று உரைக்கும் பல காரணங்களைக் காட்டிலும். (இனி இனி என்று இருபதின்கால் கூப்பிடும் ஆர்த்தி அதிகார பூர்த்திக்கு என்னும் அது முக்யம்) - திருவிருத்தம் (1) - இனி யாம் உறாமை - என்று தொடங்கி, திருவிருத்தம் (13) - இனிவளை காப்பவரார், திருவிருத்தம்(62) - இனியுன் திருவருளாலன்றிக் காப்பரிதால், திருவாய்மொழி (1-4-4) - இனியவர் கண் தங்காது, திருவாய்மொழி (1-4-8) - இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே, திருவாய்மொழி (2-1-10) - இனியெம்மைச் சோரேலே, திருவாய்மொழி (3-2-1) - எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவனே, திருவாய்மொழி (3-2-9) - எங்கினித் தலைப்பெய்வேனே, திருவாய்மொழி (4-9-6) - இனியென்னாரமுதே கூயருளாயே, திருவாய்மொழி (5-4-2) - ஆவிகாப்பாரினியார், திருவாய்மொழி (5-4-9) - நெஞ்சிடர் தீர்ப்பாரினியார், திருவாய்மொழி (5-7-1) - இனியுன்னை விட்டொன்று மாற்றகிற்கின்றிலேன், திருவாய்மொழி (5-8-7) - தரியேனினி, திருவாய்மொழி (7-3-4) - இனியாரைக் கொண்டென் னுசாகோ, திருவாய்மொழி (9-5-2) - அத்தனையாமினி யென்னுயிரவன் கையதே, திருவாய்மொழி (9-5-10) - நாரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி, திருவாய்மொழி (9-9-2) - இனியிருந்தென்னுயிர் காக்குமாறென், திருவாய்மொழி (10-10-1) - இனி நான் போகலொட்டேன், திருவாய்மொழி (10-10-6) - உண்டிட்டாயினி யுண்டொழியாய், திருவாய்மொழி (10-10-7) - உன்னைப்

பெற்றினிப் போக்குவனோ - என்றும் உள்ள பாசுரங்களில் இருபது முறை அழைக்கும்படியாகத் தன்னைப் பின்தொடர்ந்து வரும் துன்பத்தை ஏற்படுத்தி, பரமபக்தி வரை உண்டாவதான தகுதியின் பரிபூர்ண தன்மையை ஏற்படுத்துதல் என்பதே ஆழ்வாரை இங்கு நிறுத்தி வைத்ததன் முதன்மையான காரணம் ஆகும். இங்குள்ள "ஆர்த்தி அதிகார பூர்த்தி" என்பது "துன்பத்தால் உண்டாகும் பரிபூர்ணமான தகுதி" என்பதாகும். ஸம்ஸாரத்தில் உண்டாகும் மிகுந்த துக்கம் என்பது அல்லவோ ப்ரபத்திக்கான அதிகாரத்தை பரிபூர்ணமாகச் செய்கிறது! ஆகவே மற்ற காரணங்கள் எதுவும் முக்கியமானது அல்ல. இவரை இங்கு வைத்தபடி இருப்பதற்கான முக்கியமான காரணம் இதுவே ஆகும் என்று கருத்து.

*230. கமலக்கண்ணனென்று தொடங்கிக் கண்ணுள் நின்றிறுதி கண்டேனென்ற பத்தும் உட்கண்ணாலேயாய் காண்பானவாவுதல் அதிலிரட்டியாகையாலே கண்டு களிப்பவளவும் பரஜ்ஞாந கர்ப்ப பரபக்தி.*

**அவதாரிகை** - *அதில் இவ்வார்த்திக்கடியான பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளின் தசைகள் எந்தத் திருவாய்மொழிகளென்னு மபேக்ஷயிலே அவற்றை யருளிச்செய்கிறார் மேல் மூன்று வாக்யத்தாலே. அதுதன்னில் பரபக்த்யவஸ்தை யின்னதென்கிறார் (கமலக்கண்ணன்) என்று தொடங்கி.*

**விளக்கம்** - இத்தகைய துன்பம் ஏற்படுவதற்கு அடியாக உள்ளதான பரமபக்தி, பரஞானம் மற்றும் பரமபக்தி ஆகியவை எந்தெந்தத் திருவாய்மொழியிகளில் வெளிப்படுகின்றன என்ற கேள்வி எழலாம். இதற்கு அடுத்துள்ள மூன்று சூர்ணைகள் மூலம் விடை அருளிச்செய்கிறார். இந்தச் சூர்ணையில் பரபக்தி நிலை இன்னதாகும் என்று உரைக்கிறார்.

*வ்யாக்யானம் - அதாவது, "கமலக்கண்ணனென் கண்ணினுள்ளான்" என்று புண்டரீகாக்ஷனானவன் என் கண்ணுக்கு விஷயமானானென்று தொடங்கி, "கண்ணுள் நின்றகலான்" என்று என் கண்வட்டத்தில் நின்றும் கால்வாங்குகிறிலனென்னுமதளவாக, "என் கண்ணனை நான் கண்டேனே", "கலைப்பல் ஞானத்தென் கண்ணனைக்கண்டுகொண்டு", "நறுந்துழாயென் கண்ணியம்மா நானுன்னைக்கண்டுகொண்டே", "கைதொழவிருந்தாயது நானுங் கண்டேனே", "ஏரார் கோலந்திகழக் கிடந்தாய் கண்டேனெம்மானே", "திருவிண்ணகர்க் கண்டேனே", "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டு கொண்டேனே", "கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்று இப்பத்துச் சந்தையாலும் சொன்ன ஸாக்ஷாத்காரம், "நெஞ்சென்னுமுட் கண்ணெ"ன்கிற ஆந்தர சக்ஷுஸ்ஸான மநஸ்ஸாலே யுண்டானதாய், "கையபொன்னாழி வெண்சங்கொடுங் காண்பான் அவாவுவன் நான்", "அடியேன் காண்பானலற்றுவன்", "உம்மைக் காணுமாசையுள் நைகின்றாள்", "கூவுகின்றேன் காண்பான்", "மெய்கொள்ளக் காண*

விரும்புமென்கண்களே", "கூவியுங் காணப்பெறேனுன கோலமே", "உன்னை யெந்நாள் கண்டு கொள்வனே", "கோலமேனி காணவாராய்", "தடவுகின்றே னெங்குக் காண்பன்", "பாவியேன் காண்கின்றிலேன்", "உன்னைக் காண்பான் நானலப்பாய்", "உலகம் பரவக் கிடந்தாய் காணவாராயே", "என்று கொல் கண்கள் காண்பதுவே", "விளங்க ஒருநாள் காணவாராய்", "உன்னைக் காண்பான் வருந்தியெனை நாளும்", "அலைகடல் கடைந்தவப்பனே காணுமாறருளாய்", "ஒரு நாள் காணவாராய்", "தொண்டனேனுன் கழல்காண வொருநாள்வந்து தோன்றாயே", "உன்னையெங்கே காண்கேனே", "உன்னைக் காணக் கருதுமென் கண்ணே" என்று பாஹ்ய சக்ஷுஸ்ஸாலே அவனைக் காண வாசைப்பட்டுக் கூப்பிட்ட சந்தைகள் அதிலிரட்டி யுண்டாகையாலே, "கண்டுகளிப்பக் கண்ணுள் நின்றகலான்" என்கிற திருமாலிருஞ்சோலையளவாக ஆந்த்ராநுபவம் செல்லாநிற்க, பெற்றன்றித் தரியாத பாஹ்யாநுபவபேக்ஷை நடக்கையாலே பரஜ்ஞாநத்தை கர்ப்பித்துக் கொண்டிருக்கிற பரபக்தியென்கை.

**விளக்கம்** - *(கமலக்கண்ணன் என்று தொடங்கி) - திருவாய்மொழி (1-9-9) - கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான் - என்று, "தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவன் எனது கண்களுக்கு இலக்காகி நின்றான்", என்பது தொடங்கி. (கண்ணுள் நின்று இறுதி) - திருவாய்மொழி (10-8-8) - கண்ணுள் நின்றகலான் - என்று, "எனது கண் வட்டத்திலிருந்து அவன் அகலாமல் உள்ளான்", என்பது முடிய உள்ளதான. (கண்டேன் என்ற பத்தும்) - திருவாய்மொழி (2-8-10) - என் கண்ணனை நான் கண்டேனே, திருவாய்மொழி (3-2-10) - கலைப்பல் ஞானத்தென் கண்ணனைக் கண்டு கொண்டு, திருவாய்மொழி (4-7-7) - நறுந்துழாயென் கண்ணியம்மா நானுன்னைக்கண்டுகொண்டே, திருவாய்மொழி (5-7-5) - கைதொழவிருந்தாயது நானுங் கண்டேனே, திருவாய்மொழி (5-8-1) - ஏரார் கோலந்திகழக் கிடந்தாய் கண்டேனெம்மானே, திருவாய்மொழி (6-3-1) - திருவிண்ணகர்க் கண்டேனே, திருவாய்மொழி (9-4-8) - தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக்கண்டு கொண்டேனே, திருவாய்மொழி (10-4-9) - கண்டேன் கமலமலர்ப்பாதம் - என்று உரைத்த இந்தப் பத்துப் பாசுரங்களிலும் கூறப்பட்டதான காட்சி என்பது, பெரியதிருவந்தாதி (28) - நெஞ்சென்னும் உட்கண் - என்பதற்கு ஏற்ப அகக்கண் என்பதான மனதில் ஏற்பட்டதாக. (காண்பான் அவாவுதல் அதில் இரட்டி ஆகையால்) - திருவிருத்தம் (84) - கையபொன்னாழி வெண்சங்கொடுங்காண்பான் அவாவுவன் நான் - என்றும், திருவாய்மொழி (1-5-7) - அடியேன் காண்பானலற்றுவன், திருவாய்மொழி (2-4-2) - உம்மைக் காணுமாசையுள் நைகின்றாள், திருவாய்மொழி (3-2-8) - கூவுகின்றேன் காண்பான், திருவாய்மொழி (3-8-4) - மெய்கொள்ளக் காண விரும்புமென் கண்களே, திருவாய்மொழி (3-8-7) - கூவியுங் காணப்பெறேனுன கோலமே, திருவாய்மொழி (3-8-8) - உன்னை யெந்நாள் கண்டு கொள்வனே, திருவாய்மொழி (4-7-1) - கோலமேனி காணவாராய்,*


**Email:**sridharan_book@yahoo.co.in

*திருவாய்மொழி (4-7-9) - தடவுகின்றேனெங்குக் காண்பன், திருவாய்மொழி (4-7-10) - பாவியேன் காண்கின்றிலேன், திருவாய்மொழி (5-8-4) - உன்னைக் காண்பான் நானலப்பாய், திருவாய்மொழி (5-8-9) - உலகம் பரவக் கிடந்தாய் காணவாராயே, திருவாய்மொழி (5-9-5) - என்று கொல் கண்கள் காண்பதுவே, திருவாய்மொழி (6-9-4) - விளங்க ஒருநாள் காணவாராய், திருவாய்மொழி (6-9-6) - உன்னைக் காண்பான் வருந்தியெனை நாளும், திருவாய்மொழி (8-1-1) - அலைகடல் கடைந்தவப்பனே காணுமாறருளாய், திருவாய்மொழி (8-5-1) னு ஒருநாள் காணவாராய், திருவாய்மொழி (8-5-6) - தொண்டனேனுன் கழல்காண வொருநாள்வந்து தோன்றாயே, திருவாய்மொழி (8-5-10) - உன்னையெங்கே காண்கேனே, திருவாய்மொழி (9-4-1) - உன்னைக் காணக் கருதுமென் கண்ணே - என்றும் கூறுவதற்கு ஏற்ப புறக்கண்கள் கொண்டு அவனைக் காணவேண்டும் என்று விரும்பி அவனை அழைத் பாசுரங்களின் எண்ணிக்கையானது, அகக்கண்களால் காணவேண்டும் என்று கூறிய பாசுரங்களைக் காட்டிலும் இருமடங்காக உள்ளதால். (கண்டு களிப்பவளவும்) - திருவாய்மொழி (10-8-7) - கண்டு களிப்பக் கண்ணுள் நின்றகலான் - என்பதாகிய திருமாலிருஞ்சோலை முடிய. (பரஜ்நாந கர்ப்ப பரபக்தி) - உன் அனுபவம் என்பதைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால், அவனை அடைந்தால் அல்லாமல் தரிக்க இயலாது என்று உள்ளதான வெளி அனுபவத்தில் ஆசை அதிகமாக உள்ளதால், பரஞானத்தை உள்ளடக்கிய பரபக்தி என்று கருத்து.*

*231. இருந்தமையென்றது பூர்ண பரஜ்ஞாநம்.*

***அவதாரிகை** - அநந்தரம் பரஜ்ஞாநாவஸ்தையாகிறது இன்னதென்கிறார் (இருந்தமை) யென்று தொடங்கி.*

***விளக்கம்** - அடுத்ததாக பரஞானம் என்ற நிலையை உணர்த்தும் பாசுரத்தைக் கூறுகிறார்.*

***வ்யாக்யானம்** - அதாவது, "அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்று அடியார்கள் "குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ" என்றாசைப்பட்டபடியே அர்ச்சிராதி கதியாலே தேச விசேஷத்திலே போய் பகவத் ஸ்வரூபாதிகளைப் பரிபூர்ணாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகள் திரளிலே கூடியிருந்தாராக தர்சித்துப் பேசின "சூழ்விசும்பணிமுகில்", பூர்ணமான பரஜ்ஞாநமென்கை.*

***விளக்கம்** - அதாவது, "அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்று அடியார்கள், "குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ" என விரும்பியபடியே, அர்ச்சிராதி மார்க்கம் மூலமாக அடையப்படும் பரமபதத்திற்குச் சென்று, பகவானுடைய*


**Email:**sridharan_book@yahoo.co.in

ஸ்வரூபம் போன்றவற்றைப் பரிபூர்ணமாக அனுபவிக்கின்ற நித்யஸூரிகளுடைய கூட்டத்தில் சேர்ந்து நின்றவர் போன்று தரிசனம் செய்து உரைத்த திருவாய்மொழி (10-9-1) - சூழ்விசும்பணிமுகில் - என்பதே பூர்ணமான பரஞானம் ஆகிறது.

232. முடிந்த அவாவென்றது பரமபக்தி.

**அவதாரிகை** - அநந்தரம் பரமபக்தத்யவஸ்தையானது இன்னதென்கிறார் (முடிந்த) இத்யாதியாலே.

**விளக்கம்** - அடுத்த பரமபக்தியின் நிலை இப்படிப்பட்டது என்று உணர்த்தும் திருவாய்மொழியை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அப்படி தர்சித்தவதுதான் மாநஸாநுபவமாய் பாஹ்யாநுபவ யோக்யமல்லாமையாலே பெருவிடாய் பிறந்து கூப்பிட்டுத் தரிக்க மாட்டாமல் திருவாணையிட்டுத் தடுத்து பெறாவாணையல்லாமை ஸாதித்துப் பேற்றோடே தலைக்கட்டின "முடிந்தவவாவிலந்தாதி யிப்பத்து" என்கிற "முனியே நான்முகன்", பக்தியினுடைய சரமாவதியான பரமபக்தியென்கை.

**விளக்கம்** - அதாவது நித்யஸூரிகளுடன் சேர்ந்து நின்று பகவானை தரிசனம் செய்து பெற்ற அனுபவம் என்பது, மனதால் மட்டுமே அடைந்த அனுபவம் என்பதாகவும், அது புற இந்த்ரியங்களால் அனுபவிப்பதற்கு இயலாத ஒன்று என்பதாலும் மிகுந்த தவிப்பு ஏற்பட்டது. ஆகவே அவனை அழைத்து, தரித்து நிற்க இயலாமல், திரு ஆணை இட்டு அவனைத் தடுத்து நிறுத்தினார். இடக்கூடாத ஆணை அல்ல என்பதால், அதன் மூலம் தான் எண்ணியதை அடைந்தார். அப்படிப்பட்ட பேற்றுடன் நிறைவு செய்யப்பட்டதான திருவாய்மொழி (10-10-11) - முடிந்த அவாவில் அந்தாதி இப்பத்து - என்பதான திருவாய்மொழி (10-10-1) - முனியே நான்முகனே - என்னும் திருவாய்மொழி, பக்தியின் எல்லைநிலமான பரம பக்தியாகிறது.

233. இவை ஜ்ஞாநதர்சந ப்ராப்த்யவஸ்த்தைகள்.

**அவதாரிகை** - இந்த பரபக்தியாதிகளின் வேஷத்தை பகவத்வசநத்தாலே தர்சிப்பிக்கிறார் "இவை" என்று தொடங்கி.

**வ்யாக்யானம்** - அதாவது, இந்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள், "பக்த்யா த்வநந்யயா சக்ய: அஹமேவம்விதோர்ஜுந, ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரேவேஷ்டுஞ்ச பரந்தப" என்று அர்ஜுனனைக் குறித்துத் திருத்தேர்த்தட்டிலும், "பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ" என்று ப்ரார்த்தித்த


Email:sridharan_book@yahoo.co.in

பாஷ்யகாரரைக் குறித்து "மத்ஜ்ஞாந தர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சயஸ்ஸ் ஸுகமாஸ்வ" என்று சேரபாண்டியனிலு மவனருளிச்செய்த ஜ்ஞாந தர்சந ப்ராப்த்யவஸ்த்தைகளென்கை. இத்தால் பகவத் ஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுக துக்கராம்படியான பரபக்தி ஜ்ஞாநாவஸ்தையாகவும், பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை விசததமமாக ஸாக்ஷாத்கரிக்கிற பரஜ்ஞாநம் தர்சநாவஸ்த்தையாகவும் அப்படி ஸாக்ஷாத்கரித்த வஸ்துவை அப்போதே கிட்டியநுபவிக்கப் பெறாவிடில் முடியும்படியான பரமபக்தி ப்ராப்த்யவஸ்தையாகவும் சொல்லப்படுமென்றபடி.

**விளக்கம்** - இப்படிபட்ட பரபக்தி, பரஜ்ஞானம் மற்றும் பரமபக்தி ஆகியவை குறித்து கீதையில் (11-54) - பக்த்யா த்வநந்யயா சக்ய: அஹமேவம்விதோர்ஜுந, ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரேவேஷ்டுஞ்ச பரந்தப - அர்ஜுனா! இந்த ஜகத் ரூபமாகவே உள்ள நான் என்னிடம் வைக்கப்பட்ட பக்தியால் உண்மையாகவே அறிவதற்கும், காண்பதற்கும், அடைவதற்கும் ஏற்றவனாக உள்ளேன் - என்று அர்ஜுனனை நோக்கித் திருத்தேர்த்தட்டில் கூறப்பட்டது. மேலும் கத்யத்ரயத்தில் - பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ - பரமபக்தி பரஜ்ஞானம் மற்றும் பரமபக்தி ஆகியவற்றையே நான் எப்போதும் கைக்கொள்ளுப்படியாகச் செய்யவேண்டும் - என்று விண்ணப்பம் செய்த பாஷ்யகாரரை நோக்கி ஸ்ரீரங்கநாதன், "சேரபாண்டியன்" எனப்படும் ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்து, சரணாகதி கத்யத்தில் - மத்ஜ்ஞாந தர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சயஸ்ஸ் ஸுகமாஸ்வ - என்னைக் குறித்த ஞானம், என்னைக் காணுதல், என்னை அடைதல் போன்றவை குறித்து எந்தவிதமான சந்தேகமும் இன்றி ஸுகமாக வாழ்வாயாநு - என்று அருளிச்செய்தான். ஆகவே ஸர்வேச்வரனுடன் சேர்ந்தபடி இருத்தல் மற்றும் அவனைப் பிரிதல் என்பதால் "இன்பதுன்பங்கள் ஏற்படும்" என்ற நிலையை உண்டாக்கும் பரபக்தியானது ஞான நிலை ஆகிறது. ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள் மற்றும் விபூதிகள் ஆகியவை குறித்து மிகவும் தெளிவாக உணரச்செய்கின்ற பரஜ்ஞானம் என்பது நேரடியாகக் காணும் நிலையாகிறது. இவ்விதம் நேரடியாகவே அறிந்த அவனை அடைந்து அனுபவிக்க இயலவில்லை என்றால், அப்போதே முடிந்து போகும்படியாக உள்ள பரமபக்தியானது, அவனை அடைந்த நிலை என்றாகிறது.

*234. அவித்யா நிவர்த்தக ஜ்ஞாந பூர்த்தி ப்ரத பகவத் ப்ரஸாதாத் மோக்ஷ லாபமென்கை மயர்வற வீடுபெற்றவென்ற ப்ரபந்தைகார்த்த்யம்.*

**அவதாரிகை** - "நூறே சொன்ன பத்துநூறு ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்" என்றதில் நூறே சொன்ன பத்து நூறென்றதில் கருத்தை பத்து நிகமநத்திலே விஸ்தரேண ப்ரதிபாதித்து ப்ராஸங்கிகமாக அருளிச்செய்யவேண்டுமவையு மருளிச்செய்தாராய் நின்றார் கீழ். இனி "ஓராயிர" மென்றதின் கருத்தை விசதமாக்கா


Email:sridharan_book@yahoo.co.in

நின்று கொண்டு ப்ரபந்தத்தை நிகமித்தருளுகிறார் “அவித்யா நிவர்த்தக” என்று தொடங்கி.

**விளக்கம்** - சூர்ணை (215) - நூறே சொன்ன பத்துநூறு ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம் - என்பதில் கூறப்பட்டதான “நூறே சொன்ன பத்து நூறு” என்பதன் கருத்தை, சூர்ணைகள் 218 முதல் 228 முடிய உள்ளவற்றில் “பத்து” என்று விரிவாக அருளிச்செய்தார். அதன் பின்னர் நடுவில் கூறப்பட வேண்டிய விவரங்களாக உள்ளவற்றையும், சூர்ணைகள் 229 முதல் 233 முடிய அருளிச்செய்தார். அடுத்து சூர்ணை 215ல் கூறப்பட்ட “ஓராயிரம்” என்பதன் கருத்தை விளக்கமாக உரைத்து இந்த க்ரந்தத்தை முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, ஸம்ஸார காரணமான அஜ்ஞாநத்துக்கு நிவர்த்தகமான ஜ்ஞாநபூர்த்தியை உபகரித்த ஜ்ஞாநாதி குணபூர்ணனான பகவானுடைய நிர்ஹேதுகமான ப்ரஸாதத்தாலே ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வக பகவத் ப்ராப்தி ரூப மோக்ஷத்தினுடைய லாபமென்று ப்ரதிபாதிக்கை, “மயர்வற மதி நலமருளினன்” என்று தொடங்கி, “அவாவற்று வீடுபெற்ற” என்று தலைக்கட்டின இப்ப்ரபந்தத்துக் கொன்றான தாத்பர்யார்த்தமென்கை. இத்தால் ஜ்ஞாந ப்ரதமான பகவத் ப்ரஸாதமே மோக்ஷ ப்ரதமுமென்னுமிது இப்ப்ரபந்தத்துக்காக தாத்பர்யமா யிருப்பதோரர்த்த மென்றதாய்த்து.

**விளக்கம்** - (அவித்யா நிவர்த்தக ஜ்ஞாந பூர்த்தி ப்ரத பகவத் ப்ரஸாதாத் மோக்ஷ லாபம் என்கை) - இந்த ஸம்ஸாரத்திற்குக் காரணமா உள்ள அஞ்ஞானத்தை விலக்கவல்ல ஞானத்தின் முழுமை என்பதை அளித்தவனும்; ஞானம் என்றது போன்ற அனைத்து குணங்களிலும் பரிபூர்ணமாக உள்ளவனும் ஆகிய பகவானுடைய எந்தக் காரணமும் இன்றி வெளிப்பட்ட க்ருபையால், ஸம்ஸார விலகுதல் என்பது தொடக்கமாக உள்ளதான பகவானை அடைதல் என்ற மோக்ஷ லாபம் கிட்டியது என்பதை வெளிப்படுத்துதல் என்பதே, (மயர்வற வீடுபெற்றவென்ற ப்ரபந்தைகார்த்த்யம்) - திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநலம் அருளினன் - என்று தொடங்கி, திருவாய்மொழி (10-10-11) - அவாவற்று வீடு பெற்ற - என்று முடிவு செய்த இந்தத் திருவாய்மொழி ஏற்பட்டதற்கான தாத்பர்யம் ஆகும் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஆக இப்ப்ரபந்தத்தால் ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே அஜ்ஞரான சேதநர் தத்வஜ்ஞராய் ஸாராஸாரவிவேகம் பண்ணுகைக்கு சாஸ்த்ரப்ரதாநம் பண்ணினபடியையும், அந்த சாஸ்த்ரமுகேந தத்வஜ்ஞாநம் பிறக்குமளவிலுண்டான அருமையை நினைத்து தாத்பர்யமான திருமந்த்ரத்தைத் தன் பரமக்ருபையாலே வெளியிட்டபடியையும், அந்த சாஸ்த்ர தாத்பர்யங்களின் விஷய பேதாதிகளையும், ததுபயநிஷ்டரான அதிகாரிகளுடைய ப்ரகாரங்களையும், அந்த வ்யாஜத்தாலே ப்ரஸ்துதமான திருவாய்மொழியினுடைய வைபவத்தையும், அதுக்கு வக்தாக்களான ஆழ்வார்களுடைய ப்ரபாவத்தையும் அந்த ப்ரபாவத்துக்கு மூலமான பகவந் நிர்ஹேதுக கடாக்ஷத்தையும், அதடியாக இவர்க்குண்டான ஜ்ஞாந பக்திகளையும், அந்த ஜ்ஞாநபக்தி தசைகளில் இவர் பேசும் பேச்சுகளையும்,

**விளக்கம்** - ஆகவே “ஆசார்ய ஹ்ருதயம்” என்ற இந்த க்ரந்தத்தின் மூலம் கூறப்பட்டவை இவையே ஆகும் : ஸர்வேச்வரன் தனது க்ருபயால், அறியாமையில்

மூழ்கிக் கிடக்கும் சேதநர்கள் அனைவரும் உண்மையான ஞானத்தை அடையப்பெற்று, நன்மை மற்றும் தீமை ஆகியவற்றைப் பிரித்து அறிகின்ற விவேகம் கொண்டவர்களாக இருப்பதற்கு ஏற்றபடி சாஸ்த்ரங்களை அளித்ததையும்; அப்படிப்பட்ட சாஸ்த்ரங்கள் மூலம் உண்மையான ஞானம் ஏற்படுவதில் இருக்கின்ற கடினத்தை எண்ணி, அந்த சாஸ்த்ரங்களின் தாத்பர்யமாகவே உள்ள திருமந்த்ரத்தை தனது உயர்ந்த க்ருபையால் வெளியிட்டதையும்; அத்தகைய சாஸ்த்ரங்களில் உள்ள ஆழ்பொருள் வேறுபாடுகளையும்; அப்படிப்பட்ட சாஸ்த்ரங்கள் மற்றும் திருமந்த்ரம் ஆகியவற்றில் ஈடுபட்டு நிற்கும் அதிகாரிகளின் வைபவங்களையும், அவ்விதம் அதிகாரிகளின் பெருமைகளைக் கூறுவதை ஒரு காரணமாகக் கொண்டு வெளிப்பட்ட திருவாய்மொழியின் வைபவத்தையும்; அதனை அருளிச்செய்த ஆழ்வார்களுடைய மேன்மைகளையும்; அத்தகைய மேன்மைக்குக் காரணமாக உள்ளதான எந்தவிதமான காரணமும் இன்றி வரும் பகவத் கடாக்ஷத்தையும்; அதன் விளைவாக நம்மாழ்வாருக்கு ஏற்பட்ட ஞானம் மற்றும் பக்திகளையும்; அப்படிப்பட்ட ஞானம் மற்றும் பக்தி நிலைகளில் நம்மாழ்வார் உரைக்கும் சொற்களையும்;

**வ்யாக்யானம்** - அந்த பக்திதசையில் பகவத் ப்ரேம யுக்தரெல்லாரோடு மிவர்க்குண்டான ஸாம்யத்தையும், அந்த பக்தி தசையில் பேசும் அந்யாபதேசங்களுக்கு ஸ்வாபதேசங்களையும், அந்த பக்தி விஷயமான திவ்யதேசங்களில் நிற்கிற ஈச்வரனுடைய குண விசேஷங்களையும், அந்த குண விசிஷ்ட வஸ்துவிலுண்டான அநுபவ ஜநித ப்ரீதி ப்ரேரிதமாய்க் கொண்டு இப்ப்ரபந்தங்கள் அவதரித்தபடியையும், ப்ரதிபாத்யார்த்த ஸாம்யத்தாலே ஸ்ரீகீதையோடு திருவாய்மொழிக்குண்டான ஸாம்யத்தையும், தத் வ்யாவ்ருத்தியையும், இதில் இவருபதேசிக்கிற விஷய பேதத்தையும், அவ்வோ விஷயங்கள் தோறும் உபதேசிக்கிற அர்த்த விசேஷங்களையும்,

**விளக்கம்** - அப்படிப்பட்ட பக்தி நிலையில் பகவானிடம் ப்ரேமை கொண்டவர்களுடன் இவருக்கு ஏற்பட்ட ஒப்புமையும்; அப்படிபட்ட பக்தி நிலையில் உள்ளபோது மற்றவர்களுக்கு உரைக்கும் உபதேசங்களில் உள்ளதான தனக்கே கூறிக்கொள்ளும் உபதேசங்களையும்; அந்தப் பக்திக்கு ஆதாரமாக திவ்யதேசங்களில் நிற்கும் பகவானின் குணசிறப்புகளையும்; அந்தக் குணங்களுடன் கூடிய எம்பெருமானிடம் ஏற்பட்ட அனுபவங்களால் உண்டான ப்ரேமையால் இந்த ப்ரபந்தங்கள் வெளிப்பட்டதையும், இவற்றில் வெளிப்பட்ட ஆழ்பொருளின் ஒப்புமை காரணமாக ஸ்ரீமத்பகவத்கீதை மற்றும் திருவாய்மொழி ஆகியவற்றுக்கு உள்ள ஒப்புமையையும்; அதன் வேறுபாடுகளையும்; இந்த திருவாய்மொழியில் நம்மாழ்வார் கூறுகின்ற விஷய வேறுபாட்டையும்; ஒவ்வொரு விஷயங்களிலும் உபதேசிக்கும் ஆழ்பொருள் சிறப்பையும்;

**வ்யாக்யானம்** - அந்த வ்யாஜத்தாலே உபதேச விஷயமான சிஷ்யலக்ஷத்தையும், அந்த லக்ஷணமில்லாதார்க்கும் இவருபதேசிக்கைக்கு ஹேதுக்களையும், க்யாதி லாபாதி நிரபேக்ஷராய் பகவத் கைங்கர்ய புத்த்யா உபதேசிக்கையாலே உபதேசம் ஸபலமானபடியையும் உபதேசிக்கிற இப்ப்ரபந்தங்கள் தான் ரஹஸ்யத்ரயார்த்த மென்னுமத்தையும், அந்தரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கப் படுகிற அர்த்த பஞ்சகமும் இப்ப்ரபந்தங்களிலே ஸங்க்ரஹ விவரண ரூபேண சொல்லப்படுகிற ப்ரகாரத்தையும், ப்ரபந்தாரம்பங்களில் அபேக்ஷிதமான மங்களாசரணங்கள்

இப்ப்ரபந்தாதியிலுண்டானபடியையும், ஸாது பரித்ராணாதிகளிலே ஜகத் ரக்ஷணார்த்தமான ஸர்வேச்வராவதாரம்போலே இப்ப்ரபந்தாவதார மென்னு மத்தையும், இதில் பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட வீச்வரனுடைய பரத்வாதி குணங்களையும், அக்குண விசிஷ்டனானவன் இப்பத்துப் பத்தாலு மிவ்வாழ்வாருக்கு, தத்வஜ்ஞாநம் முதலாக ப்ராப்தி பர்யந்தமாகப் பிறப்பித்த தசா விசேஷங்களையும், பத்துத்தோறு மிவர்தாம் பிறர்க்குபதேசித்த ப்ரகாரங்களையும், இவர்க்கு ப்ரதமத்திலே ஆர்த்தி பிறந்திருக்கச்செய்தே ஈச்வரனிவரை வைக்கைக்கு ப்ரதாநாப்ரதாந ஹேதுக்களையும், இவர்க்குப் பிறப்பித்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாகிற தசாவிசேஷ ஸ்தலங்களையும் அஜ்ஞாந நிவர்த்தக ஜ்ஞாந பூர்த்திப்ரத பகவத் ப்ரஸாதமே அநிஷ்டமான ஸம்ஸாரத்தை யறுத்து அபீஷ்டமான மோக்ஷலாபத்தையுண்டாக்குமென்கை இப்ப்ரபந்தத்துக்கொன்றான தாத்பர்ய மென்னுமத்தையும், ஆஸ்திகராய் ஆழ்வாரபிமானத்திலே யொதுங்கி அவருடைய திவ்ய ஸூக்திகளில் ப்ரவணராய் அநந்யபரராயிருப்பார் எல்லாருமநுஸந்தித்து வாழும்படி அதிஸ்புடமாக வருளிச்செய்து தலைக்கட்டினார்.

**விளக்கம்** - அந்தக் காரணத்தால் உபதேசம் பெறுவதற்கு ஏற்ற சிஷ்யனுடைய இலக்கணத்தையும்; அப்படிப்பட்ட இலக்கணம் இல்லாதவர்களுக்கு இவர் உபதேசிக்கும் காரணங்களையும்; புகழ் மற்றும் பொருள் ஆகியவற்றில் ஈடுபாடு இல்லாமல் பகவத் கைங்கர்யம் என்ற எண்ணத்தால் மட்டுமே உபதேசிப்பதால் இந்த உபதேசமானது பலன் அளித்ததையும்; உபதேசித்த இந்த ப்ரபந்தங்களானவை ரஹஸ்ய த்ரயத்தின் பொருள் என்பதையும்; அத்தகைய ரஹஸ்ய த்ரயத்தால் கூறப்படும் அர்த்தபஞ்சகமானது இந்த ப்ரபந்தங்களின் சுருக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்ட விதத்தையும்; ப்ரபந்தங்களின் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்படும் மங்கள ச்லோகம் போன்றவை இறுதியில் உள்ளதையும்; சாதுக்களைக் காப்பாற்றுவதற்கு ஸர்வேச்வரன் எடுக்கும் அவதாரங்கள் போன்று இந்த ப்ரபந்தங்களுடைய தோற்றம் உள்ளதையும்; இதில் உள்ள பத்துப் பத்தாலும் வெளிப்படுத்தப்பட்டதான ஈச்வரனுடைய பரத்வம் போன்ற குணங்களையும்; அப்படிப்பட்ட குணங்களுடன் கூடியுள்ள ஸர்வேச்வரன் இந்தப் பத்துப்பத்தாலும் நம்மாழ்வாருக்குத் தத்வஞானம் தொடக்கமாக மோக்ஷம் முடிய உள்ள அனைத்தும் ஏற்படும்படிச் செய்த நிலையையும்; ஒவ்வொரு பத்துக்களிலும் நம்மாழ்வார் மற்றவர்களுக்கு உபதேசித்த விதத்தையும்; இவருக்குத் தொடக்கம் முதலாகவே ஸம்ஸாரத்தில் துக்கம் இருந்தாலும், ஈச்வரன் இவரை ஸம்ஸாரத்தில் வைத்திருந்ததற்கான முதன்மையானதும் மற்றதும் ஆகிய காரணங்களையும்; இவருக்கு ஏற்படுத்திய பரபக்தி, பரஜ்ஞானம் மற்றும் பரமபக்தி நிலைகள் காணப்படும் திருவாய்மொழிகள் உள்ள இடங்களையும்; அறியாமை நீக்குவதான பரிபூர்ணமான ஞானத்தை அளித்தருளிய ஸர்வேச்வரனுடைய க்ருபை மட்டுமே, விருப்பம் இல்லாத இந்த ஸம்ஸாரத்தை அறுத்து, மிகவும் விரும்புகின்ற மோக்ஷ லாபத்தை ஏற்படுத்தும் என்பதே இந்த ப்ரபந்தத்தின் திரண்ட ஆழ்பொருள்களில் ஒன்றாகும் என்பதையும்; ஆஸ்திகர்களாக நின்று நம்மாழ்வாரின் நிழலில் ஒதுங்கி, அவருடைய ப்ரபந்தங்களில் எப்போதும் ஈடுபட்டவர்களாக, மற்ற எதனையும் எதிர்பாராதவர்களாக அனைவரும் வாழும்படியாக மிகவும் தெளிவாக அருளிச்செய்து நிறைவு செய்கிறார்.


**Email:**sridharan_book@yahoo.co.in

ஆசார்ய ஹ்ருதயம் நான்காம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்

ஆசார்ய ஹ்ருதயம் ஸம்பூர்ணம்

ஸ்வாமி அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்
நம்மாழ்வார் திருவடிகளே சரணம்


Email:sridharan_book@yahoo.co.in